
3m211,N16JN
N162
161141

# ஜனோபகாரி.

கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில் ஆகிய இவைகளைக்குறித்த பல விஷயங்கள் அடங்கிய ஓர் தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

12 FEB 1918

# JANOPAKARI.

A HIGH CLASS ILLUSTRATED TAMIL MONTHLY REVIEW DEVOTED MAINLY TO SOCIAL, LITERARY, EDUCATIONAL, ECONOMIC AND OTEHR TOPICS OF INTEREST.


புஸ்தகம் 2

நள ௵ தைமீ முதல் பிங்கள ௵ மார்கழிமீ வரை.

**Vol. II**

**January - December 1917.**

ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

**1917**

**THE JANOPAKARI OFFICE,**

**VELLORE.**

உள்நாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 3—0—0

வெளிநாடுகளுக்கு வருஷ சந்தா ரூ. 4—8—0

# CONTENTS.

## பொருளடக்கம்.


| வியாசங்கள். | வியாசமெழுதியவர்களின் பெயர்கள். | பக்கம். |
|---|---|---|
| தாமஸ் எடிஸன் | என். ஆர். கேதாரி ராவ் பி. ஏ. (ஆனர்ஸ்) | 3 |
| மிளகாய் பயிர்செய்தல் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 1 |
| போகிபண்டிகை | ஷை | 9 |
| துருவன் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 14 |
| லீலாதேவி | ஸ்ரீமதி பாலசுந்தரிதேவி | 5, 36, 80, 114, 140 |
| நீதிமொழிகள் | ஓர் பண்டிதர் | 11, 51, 71, 137, 164, 232, 264 |
| தகரமும், துத்தநாகமும் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 35 |
| கர்ணபாரம் | இ. ஆர். கிருஷ்ணமாச்சாரியர் | 43 |
| விபீஷணனடைக்கலம் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 49, 76 |
| கிண்டர்கார்டன் அல்லது விளையாட்டுப்பள்ளிக்கூடம் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 65 |
| அறையணிநல்லூர்ச் சாஸனம் | "ஆராய்ச்சி செய்வோன்" | 69 |
| இராஜநிவாஸ வாழ்த்து | எம். வி. சபாபதி முதலியார் | 85 |
| பழக்கப்பட்ட மிருகங்கள் | கே. எம். நரசிம்மாச்சாரியர் | 97 |
| வியவசாயம் | எம். எம். நாராயணசாமி ஐயர் | 101 |
| கனம்திவான்பஹதூர் பி. இராஜகோபாலாசாரியர் அவர்கள் ஸி. ஐ. இ. | எம். வி. ஆனையப்ப முதலியார் | 108 |
| விஜயநகரம் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 110 |
| நூல்களைப் படித்தல் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 129 |
| கூட்டுறவும், வியவசாயமும் | பு. சின்னசாமி ஐயர் | 147, 161, 200 |
| கிருஷ்ணதேவராயன் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 150, 295 |
| கோபமும், அதனாலாகிய தீமைகளும் | "ஜனவிநோதினி" | 151, 174 |
| தமிழ் நூல்களும் அவற்றின் படிப்பும் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 169 |
| ஹம்மீர்சிங் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 196, 225 |
| தமிழ் வசனநடை | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 204, 243 |
| இந்திய சங்கீதத்தின் பெருமை | ஸ்ரீ. வி. நடராஜன் | 221 |





| வியாசங்கள். | வியாசமெழுதியவர்களின் பெயர்கள். | பக்கம். |
|---|---|---|
| மீனு | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 236 |
| இந்தியர்களும், ரெயில்வே உத்தியோகங்களும் | என். ஆர். கேதாரி ராவ் பி. ஏ. (ஆனர்ஸ்) | 258 |
| மார்க்கண்டேயர் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 261 |
| திருமலைராயன் | ஸி. கு. நாராயணசாமி முதலியார் | 270 |
| நவராத்திரி | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 273 |
| இராப்பள்ளிக்கூடங்கள் | பி. எஸ். நடேச ஐயர் பி. ஏ. | 276 |
| மனிதனின் சில தீயகுணங்கள் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 299 |
| சோம்பல் வியாதி | டாக்டர். எஸ். சந்திரசேகர் | 302 |
| குகப்பெருமாள் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 304, 332 |
| எதிரொலியின் சாபம் | ஸி. பி. சேஷாத்திரி ஐயங்கார் | 323 |
| அசுசிகள் | பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் | 328 |
| இந்தியக் கைத்தொழில் கான்பரென்ஸ் | | 20 |
| இந்தியாவில் வித்தியா விஷயமாய்ச் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள் | | 33 |
| இந்தியாவில் குங்கிலியத்தொழில் | | 68 |
| மைசூரின் பொருளாதார நிலைமை | | 104 |
| குழந்தைகளைப் போஷிப்பது | | 105 |
| காலராவும், அதைத் தடுக்கும் முறைகளும் | | 106 |
| டியூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகத்தைப்பற்றிய விஷயங்கள் | | 132 |
| இந்திய ஸ்திரீகளின் லக்ஷியங்கள் | | 134 |
| டென்மார்க்கில் ஐக்கிய முயற்சி | | 136 |
| குடிக்கும் தண்ணீர் | | 146 |
| தொற்று வியாதிகளைத் தடுப்பதற்கான முறைகள் | | 163 |
| மைசூரில் சந்தனக்கட்டைத் தொழில் | | 167 |
| டாக்டர் தாதாபாய் நௌரோஜி | | 168 |
| கிராம சுகாதாரம் | | 171 |
| சென்னையில் கைத்தொழில் அபிவிருத்தி | | 173 |
| நமது தேசபாஷைகளின் தற்காலத்திய நிலைமை | | 189 |
| கால்நடைகளை வார்த்தையுடன் பேயவிடுவதன் கெடுதிகள் | | 191 |
| நமது ஸ்திரீகளின் கல்வி | | 192 |
| மிஸ்டர். வி. பி. மாதவராவ் ஸி. ஐ. இ. | | 207 |
| மரவள்ளிக்கிழங்கு பயிர்செய்தல் | | 223 |
| கால்நடைகளை வளர்த்தல் | | 231 |
| இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தி | | 253 |
| தொழு எருவைச் சேர்க்கும் வழிகள் | | 256 |
| சவுக்குப் பயிர்செய்தல் | | 268 |

## பொருளடக்கம்.


| வியாசங்கள். | பக்கம். |
|---|---|
| முருங்கை ... | 275 |
| வியவசாயக்கல்வி ... | 278 |
| வேடிக்கையான விஷயங்கள் ... | 280 |
| ஜப்பானில் சுரங்கத்தொழிலின் அபிவிருத்தி ... | 291 |
| வியாதிப்பட்ட கால்நடைகளைப் போஷித்தல் ... | 293 |
| பப்பாளிமரம் பயிர்செய்தல் ... | 301 |
| ஈக்களைப்பற்றிய சில விஷயங்கள் ... | 310 |
| ஏழைகள் குடியிருப்பதற்கு வீடுகளை நிர்மாணித்தல் ... | 321 |
| ஆமணக்குப் பயிர்செய்தல் ... | 330 |
| பயிர்களை நாசமாக்கும் பூச்சிகள் ... | 339 |
| பத்திரிகை ஆராய்ச்சி | 23, 53, 86, 120, 157, 179, 215, 249, 286, 315, 346 |
| பொருளாதாரக் குறிப்புக்கள் | 25, 55 |
| பொதுக் குறிப்புக்கள் | 31, 61 |
| நாநாவித சங்கதிகள் | 32, 63, 94, 160, 187, 219, 252, 318 |
| புஸ்தக விமர்சனம் | 89, 123, 160, 220, 252, 290, 319, 350 |
| குறிப்புக்கள் | 92, 126, 159, 183, 218, 251, 289, 317, 348 |
| ஓர் கடிதம் | 96 |
| ஸ்திரீகள் பகுதி | 175, 209, 245, 281, 311, 342 |
| சிறுவர் பகுதி | 177, 212, 246, 283, 313, 343 |


161441

OFFICE OF THE R... 17 FEB 1918 MADRAS



*H. E. Lord Chelmsford.*

எச். இ. செம்ஸ்போர்டு பிரபு.


# ஜனோபகாரி.

**(JANOPAKARI)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. } நளஸு தைமீ JANUARY, 1917. { சஞ்சிகை 1. No. 1.


## Cultivation of Chillies.

By Mr. K. P. Seshadri Ayangar,
*Author of Saroja, Nalinakshi etc, etc.*

### மிளகாய் பயிரிடுதல்.

இச்சென்னை ராச்சியத்தில் ஜனங்கள் தங்கள் போசனோபயோகார்த்தம் விருத்தி செய்யும்படியான தோட்டப்பயிர்களில் மிளகாய்ப்பயிர் மிகவும் முக்கியமானது. இந்த ராஜதானியில் சுமார் மூன்றுலக்ஷம் ஏக்கராக்களுக்குக் குறைவில்லாமல் மிளகாய் பயிரிடப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

### எத்தனை விதம்?

மிளகாய்கள் அநேகவிதமானவை. அவைகளில் முக்கியமானவை இரண்டு : ஒன்று நீளமானது; மற்றொன்று குட்டையானது. குட்டை மிளகாய் சாதாரணமாகப் பச்சையாகவே உபயோகப்படுத்தப்படுகிறது. நீள மிளகாய் செடிகளிலேயே பழுக்கவிடப்பட்டு உலர்ந்தபிறகு சடைகளில் விற்கப்படுகிறது. நீளவகையிலேயே இரண்டு தினுசுகள் இருக்கின்றன : ஒன்று மெல்லிய தோலுடனும், மற்றொன்று தடித்த தோலுடனும் ஆக இரண்டு விதங்கள் இருக்கின்றன. தடித்த தோலுள்ள மிளகாய் காரக்குறைவானது என்று கருதப்படுகிறது. இவைகள் தவிர, மற்றொரு தினுசு இருக்கிறது. அது மிகவும் சிறியது. அதை அதிகமாகப் பயிரிடுவதில்லை. அதை பம்பாய் ராச்சியத்தில் "லாவன்ஜி" என்பார்கள். அது மிகவும் காரமுள்ளது. மற்றொரு விதமான "குடைமிளகாய்" என்பது சர்வசாதாரணமாகத் தஞ்சாவூர் ஜில்லாவில் பயிரிடப்பட்டு வருகிறது. அது எல்லாவற்றிலும் காரம் மட்டாக இருக்கிறது. ஜனங்கள் அதை வெகுவாகக் காய்கறிகளைப்போல உபயோகப்படுத்துகிறார்கள். முன்சொன்ன மிளகாய் வகைகளெல்லாம் வீசை மணங்காக விற்கப்பட்டுவர, இந்தக் குடைமிளகாய் மாத்திரம் ஆயிரத்திற்கு இவ்வளவு என்று எண்வகையாக விற்கப்படுகிறது.

### நாற்றுநட ஏற்ற நிலம் எது?

மிளகாய்ச்செடி நாற்றுவிடப்பட்டு, பிறகு நடப்படுகிறது. நாற்றுவிடுவதற்கு ஏற்ற நிலம் மேட்டுப்பூமியாக இருக்கவேண்டும். அந்த நிலம் நன்றாகக் கொத்தியும் சமப்படுத்தியும் பாத்திகளாகப் பகுத்தும் இருக்கவேண்டும். சாதாரணமாக அந்தப் பாத்திகள் 6-அடி நீளமும், 3-அடி அகலமும் உடையனவாக இருக்கவேண்டும்.

ஒவ்வொரு பாத்தியிலும் ஒவ்வொரு கூடை குப்பை யெருவையும், ஒவ்வொரு கூடை சாம்பலையும் ஒன்றாய்ச் சேர்த்துப் போடுகிறார்கள்.

## விதைகள் விதைக்கும் விதம்.

ஒன்று அல்லது ஒன்றரை ராத்தல் எடையுள்ள விதைகளின் நாற்றுக்கள் ஒரு ஏகர் நிலத்தில் நடுவதற்குப் போதுமானவை. ஒரு ராத்தல் எடையில் 80,280-விதைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. விதைகளை நன்றாக நிலம் முழுதும் பரவும்படி விதைத்து, புழுதியில் அவைகளை மறையும்படி செய்து, பாத்திகளைப் பிறகு பதுக்கவேண்டும். காலை மாலை இரண்டு வேளைகளிலும், விதைக்கப்பட்ட பாத்திகளெல்லாம் வைக்கோற்கூளத்தினால் சாதாரணமாக மூடப்படுகின்றன. பாத்திகளிலுள்ள ஈரமும் முளைகளும் சூரிய வெப்பத்தினால் தகிக்கப்படாதிருப்பதற்காக அந்தமாதிரி மூடிவைக்கவேண்டியது அவசியம்.

## நாற்று நடப்படும் விதம்.

நாற்றுக்கள் நடப்படவேண்டிய நிலத்தை ஆழமாகவும், கட்டி உருண்டை இல்லாமல் நன்றாகப் புழுதி கிளம்பும்படியாகவும் அநேக சால்கள் உழுதிருக்கவேண்டும். புன்செய் நிலத்தில் மிளகாய் நாற்றை நடும் சமயத்தில், ஒரு கை நன்றாக மட்கின எருவை அடியில் வைத்து, அதன்மேல் நாற்றை நடவேண்டும். நன்செய் நிலத்தில் நடும் மிளகாய்ப் பயிருக்கு எருவு புழுதியிலேயே கலந்துவிடவேண்டும், நிலத்தை உழுவதற்கு முன்னமேயே எருவை அதில் கொட்டவேண்டும். அப்படிச் செய்வதுதான் சிறந்தது; ஏனெனில், உழும்போது நிலம்முழுவதற்கும் எருவு பரவுகிறதல்லாமலும், புழுதியிலும் கலந்துகொள்ளுகிறது. ஒவ்வொரு ஏகருக்கும் 20-வண்டி குப்பை எருவாவது, அல்லது 20-வண்டி நகர் எருவாவதுகொட்டவேண்டும். நன்செய்நிலத்தில் பயிரிடுவதற்குப் பாத்திகளாகவாவது; அல்லது வெற்றிலைக்கிடங்கு மாதிரியாகவாவது ஏற்படுத்தினால்தான் நீர் பாய்ச்சுவதுமிகவும் சுலபமாகவிருக்கும். நாற்றுக்களெல்லாம், விதைத்த 4 வாரமுதல் 6 வாரத்திற்குள் நடுவதற்குத் தகுந்த பக்குவத்தை அடைகின்றன. அவைகள் அப்பொழுது 6 அங்குலமுதல் 8 அங்குலம் வரையில் நீளமுள்ளவையாக இருக்கும். நாற்று நடுவதற்கு ஒரு மந்தாரமான நாளாவது, அல்லது குளிர்ந்தநேரமான சாயங்காலமாவது ஏற்றசமயமாகும்.

ஒரு அடிமுதல் மூன்றடிவரையில் இடம் விட்டுவிட்டு ஒவ்வொரு நாற்றாக நடவேண்டும். அப்படி இடம் விடுவது, நிலத்தையும் எருவையும் பொறுத்தது. நன்செய் நிலத்தில் நீர்பாய்ச்சிப் பயிரிடவேண்டுமானால், பாத்திகளைக் காட்டிலும் கிடங்குகளே சிலாக்கியமானவை. நாற்றுக்களெல்லாம் அந்தக்கிடங்குகளின் வரம்புகளுக்குப் பக்கங்களில் நடப்படவேண்டும். நடவு நட்ட பிற்பாடு களைபிடுங்கவேண்டும். புழுதியை இளகும்படி செய்ய ஏருப்போடவேண்டும். மழை அடிக்கடி பெய்யாதிருந்தால், புன்செய்ப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவது அவசியம். நன்செய்ப்பயிருக்குக் குழையாவது, அல்லது கடலைப் பிண்ணாக்கையாவது, பூ அதிகமாக எடுப்பதற்காகப் போடவேண்டும். எவ்வளவு அதிகமாகப் பூவெடுக்கின்றதோ, அவ்வளவு அதிகமாகப் பலன் கிடைக்கும். நீர் கிரமமாகப் பாய்ச்சவேண்டும். வாரத்திற்கு ஒருமுறையாவது, அல்லது 10-நாளைக்கு ஒருமுறையாவது பாய்ச்சவேண்டும். தென்னாற்காடு, சித்தூர், சேலம் முதலிய ஜில்லாக்களில் நீர் பாய்ச்சும் முறை அடிக்கடி வரும்.

## பலன்தரும் சமயம்.

நாற்றுநட்ட மூன்றுமாதமானபிறகு மிளகாய் பறிப்பதற்குப் பக்குவதசையை அடைந்திருக்கும். புன்செய்நிலங்களில் பயிர்செய்த செடிகள் ஐந்துமுறை காய்கள்கொடுக்கும். நன்செய் நிலத்தில் அதைவிட அதிகமான தடவை காய்கள் பறிக்கலாம். இந்த மிளகாய்ச் செடிக்கு



ஒரு வியாதி உண்டு. அந்த வியாதிகண்ட செடிகளின் இலைகள் சுருண்டுவிடும். இதற்குப் பரிகாரம் என்னவென்றால், நீர் பாய்ச்சாமலிருப்பதுடன், நன்றாகக்காயவிட்டுவிடுதலேயாம். பிறகு நீர் பாய்ச்சினால், நன்றாகக் கிளைக்கும்.

## செலவின் மதிப்பு.

பம்பாய் விவசாய டிபார்ட்மெண்டிலிருந்து 1914-ம் வருஷம் வெளிவந்த 7-இலக்கமிட்ட சிறுபுத்தகத்தில் மிளகாய்பயிரிடுவதற்குச் செலவாகும் தொகையை மதிப்பிட்டிருக்கிறார்கள்: புன்செய் நிலத்திற்கு 40-ரூபாய் செல்லுமென்றும், நன்செய் நிலத்திற்கு 75-ரூபாய் முதல் 175-ரூபாய் வரையில் செல்லுமென்றும் மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இந்தமதிப்பு நமது ஜில்லாக்களுக்கு அதிகம்தான். இந்த மதிப்பில் 100-க்கு 30-வீதம் குறைத்துப் பார்ப்பதுதான் இந்த ஜில்லாக்களில் மிளகாய்ப் பயிர்செய்வதற்குத் தகுந்த மதிப்பாகும். 2,000 முதல் 2,500 ராத்தல் வரை நன்செய் நிலத்தில் மிளகாய் எடுக்கலாம். ஆனால், புன்செய் நிலத்தில் இதிலும் பாதிதான் எடுக்கலாம். பட்டணம்படியில் மிளகாயை அளந்து பார்த்தால், ஒருபடி மிளகாய் 7-பலம் மிளகாய்க்குச் சமானமென அறியலாம்.

கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

---

## Thomas Edison.

By Mr. N. R. Kedari Rao B. A., (Hons.)

## தாமஸ் எடிஸன்.

இலெக்டிரிஸிடி விஷயத்தில் பலவிதமான நூதன இயந்திரங்களைக் கண்டுபிடித்து அவைகளால் உலகமுழுவதும் புகழ்படைத்த 'எடிஸன்' என்பவரைப்பற்றிச் சில விநோதமான வர்த்தமானங்கள் தெரியவருகின்றன.

அவர் ஏதோ ஒரு பெரியமருமத்தைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தால், அவருக்குக் காலை மாலை, பகல் இரவு முதலிய வேளை ஒன்றும் தெரியாது. பெரும்பாலும் ஜனங்களெல்லாரும் சூரியோதயத்தில் எழுந்திருப்பதும், சூரியன் தலைக்குமேல் வரும்போது புசிப்பதும், சூரியாஸ்தமனகாலத்தில் வேலைவிட்டொழிந்து வெளியே உலாவிக்களைதீர்ப்பதும், மறுபடி இரவில் சிறிது நேரம் தம்வேலைகளைப் பார்த்துவிட்டுத் தூங்குவதும், இம்மாதிரியாகத் தங்கள் வாழ்நாட்களைக் கழித்துவருகின்றனர். எடிஸனுக்கோ, சூரியோதயமும், சூரியாஸ்தமனமும், ஒன்றும் லக்ஷியமேயில்லை. சிலநாட்களில் சூரியன் உதயமேயாகாமலிருந்தாலும், அவரது வேலைக்கு ஒரு விதத்தடையும் வராது. அவர் சாதாரணமாய்ப் பகலிலும் இரவிலும் வித்தியாஸமில்லாமல் தம் யோசனையைச் செய்துகொண்டேயிருக்கிறார். நாமெல்லோரும் குறைந்த பக்ஷம் ஏழுமணிநேரமாவது எட்டுமணிநேரமாவது தூங்குகிறோம். எடிஸனோ, ஐந்துமணிநேரம்தான் தூங்குவார். இதுவும் வேலையில்லாத சமயத்தில்தான். ஏதாவது அவசியமான காரியத்தைச் செய்யவேண்டியிருந்தால் அவ்வளவு கூடத் தூங்குவதில்லை.

ஆதலால், எடிஸன் தமக்கு இப்பொழுது வயது எழுபதுஆனாலும், ஒருமனிதன் நூற்றைம்பது வருடகாலத்தில் எவ்வளவு ஞானம் சம்பாதிப்பானோ அதைப்பார்க்கிலும் அதிகமாக ஞானம்சம்பாதித்து உலகத்துக்கு உதவி புரிந்திருக்கிறார்.

யாராவது ஒருவர் எடிஸனிடம் போய் "இது எப்படி உனக்குச் சாத்தியமாயிருக்கிறது?" என்று கேட்டால், "நாம் எப்படிப் பழக்கம்

செய்கிறேமோ அவ்வாறே நமது தேகமும் சொன்னபடி கேட்கிறது” என்று சொல்லுவார்.

இவ்வளவுசரியாய் வேலைசெய்துவருவதற்கு எடிஸன் சில தேகாரோக்கியத்துக்குரிய நியம முறைகளை வைத்துக்கொண்டிருக்கிறார்.

முதலாவது: மதுபானம் முதலியவை மிகவும் கெட்டவையாதலால், அவற்றை எவரும் நன்கு விலக்கவேண்டும். இரண்டாவது: இரவில் கண்விழிப்பதற்காகக் காபிசாப்பிட்டால் அதில் வேண்டியவளவு உஷ்ணமான பால்சேர்த்துச் சாப்பிடவேண்டும். மூன்றாவது: மிதமிஞ்சி நாம் உணவை உட்கொள்ளக்கூடாது. நமக்கு எவ்வளவு ஜீரணமாகுமோ அவ்வளவே போதுமானது. ஒருகவளம் குறைந்தாவது இருக்கலாமேதவிர, அதிகமாயிருக்கலாகாது. நான்காவது: நாம் எப்பொழுதும் பரிசுத்தமான காற்றை உட்கொள்ள வேண்டும். நாம் இருக்கும் வீடுகளிலும் அறைகளிலும் வெளிச்சம் நன்றாய்ப் பரவும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். அதாவது: அதிகமாகக் கண்கூசும்படியான சூரிய வெளிச்சமும், இருக்கலாகாது; இருட்டாகவும் இருக்கக்கூடாது. மிதமாய் நமது கண்களுக்கு எவ்வளவுவெளிச்சம் இருந்தால் நாம் கஷ்டமில்லாமல் சிறிய வஸ்துக்களையும் பார்க்கக்கூடுமோ அவ்வளவுவெளிச்சம் இருக்கவேண்டும். ஐந்தாவது: நாம் தூங்கப் போகும்போது, ஒருவிதக்கவலையு மில்லாமல் படுக்குமிடமடைந்து நன்றாய்ப் படுத்துறங்க வேண்டும். நாள்முழுவதும் நமக்கு மனக்கவலையிருந்து கொண்டேயிருக்கிறது. ஒரு நிமிஷங்கூடக் கவலையில்லாமலிருப்பது அபூர்வம். ஆகையால், நாம் தூங்கும் சமயத்திலாவது கவலையற்றுச் சுயேச்சையாய்த்தூங்கவேண்டும். சிலர்க்குப் படுக்கையில் படுத்தும் அரைமணி நேரம்வரையில் தூக்கம்வராமலிருக்கும்; ஏனென்றால், அவர்கள் தூங்கும்பொழுதும் கவலையை விட்டுவிடுகிறதில்லை. எடிஸனோ, படுக்கையில் படுத்து அரைநிமிஷத்துக்குள் தூங்கிவிடுவார்.

இவைகளெல்லாவற்றைப்பார்க்கிலும் முக்கியமானது எதுவென்றால், நாம் செய்யும் வேலையானது, அதாவது நாம்ஜீவனார்த்தமாக வைத்துக்கொண்டிருக்கும் தொழிலானது நமக்குச் சந்தோஷத்தைத் தரத்தக்கதாயிருக்கவேண்டும். நாம் யோசிக்கும் விஷயமும், நாம் செய்யும் காரியமும் நமக்குப் பூர்ணமான மனமகிழ்ச்சியைக் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்ட காரியத்தை இன்னும்செய்யவேண்டும், இன்னும் செய்யவேண்டும் என்ற ஆசை மேன்மேலும் கிளம்பவேண்டும்.

எடிஸன் காரியத்தில் பூர்ணமாய்க் கவனத்தைச் செலுத்துகிறார்; களைப்பதல்லாமலும், அதற்காகத் தம் உயிரையே கொடுத்துவிடவும் சித்தமாயிருக்கிறார்.

அளவற்ற இவரது சக்தியைக் கண்டு ஆச்சரியமுற்று, இவரிடம் இந்த மர்மங்களைக் கற்பதற்காகப் பலசிஷ்யர்கள் சேர்ந்திருக்கிறார்கள். “பூவோடுகூடிய நாரும் மணம்பெறும்” என்பது போல, அவருடைய சகவாசத்தினால் அவர்களும் முழுமனதுடன் தங்கள் வேலையைக் களைப்பாய்ப் பார்த்துவருகின்றனர். அவர்களும் இவரைப்போல் அவசியமான காலத்தில் நாள் முழுதும் தூங்காமலிருப்பதால், அவர்களுக்குத் ‘தூக்கமற்ற கோஷ்டி’ என்ற பெயர் இடப்பட்டிருக்கின்றது.

ஏதாவது ஒருபெரிய விஷயத்தைப்பற்றி யோசிக்கும் சமயத்தில் சின்ன சமாசாரங்கள் இவருக்குத் தோன்றினால், எடிஸன் தம் சிஷ்யர்களைக் கூப்பிட்டு, ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருபிரஸ்தாபம் செய்வார்; செய்தவுடனே, அவர்களில் ஒவ்வொருவரும் தத்தம்வேலையைச் சரிவரப்பார்த்துப் பகலில் பசிதாகம்பாராமலும், இரவில் கண்கொட்டாமலும் வேலைசெய்து, அவர் சொன்ன விஷயத்தை முடித்துத் தம் அபிப்பிராயத்தை அவரிடம் சொல்லித்தான் மறுவேலை பார்ப்பார்கள்.



இப்படி களைப்பு என்பதேதெரியாமல் உழைப்பவராதலால், பதினைந்து நிமிஷம் வேலையில்லாமலிருந்தாலும், அவர் கீழே படுத்துக்கொண்டு தூங்கிவிடுவார். பலநாள்வரையில் தாம் போட்டிருந்த சொக்காயைச் சுழற்றித் தலையணையாய் வைத்திருந்தார். இப்பொழுது ஒருவர் அவருக்கு ஒரு தலையணை கொடுத்திருக்கிறார். அதை இப்பொழுது உபயோகிக்கிறார். அதுவும் சொக்காய் கழற்றுவதற்குக் காலதாமதமாகின்றதே என்ற காரணத்தினாலேயே தவிர வேறன்று. இது என்ன ஆச்சரியம்! பாருங்கள்!!

தம் யோசனைகளில் பலவும் நிறைவேறாமற் போனாலும், அவர் அதைரியப்படுவதில்லை. ஒருதரத்துக்குப் பத்துதரமாய்ப்பார்ப்பார். அதற்கு உதாரணமாக, ஒருசமயம் இரண்டுநாள் முழுவதும் தூக்கமென்பதேயில்லாமல் இராப்பகலாய் வேலைசெய்தும், தம் மனோபீஷ்டம் நிறைவேறவில்லை; தம் யோசனை தப்பாய்ப்போய்விட்டது என்று தெரியவந்தது. அருகேயிருந்த சினேகிதரொருவர் “ஐயோ பாவம்! நாம் இவ்வளவு கஷ்டப்பட்டு வீணாய்ப் போய்விட்டதே!” என்று பரிதபித்தார்.

அதற்குஅவர் “யோசனையில்லாமல் பேசாதேயும். நான் இந்தவிஷயத்தில் தவறிப்போனாலும் வேறு பல நவீனவர்த்தமானங்களைக் கற்றிருக்கிறேன். ஆகலால், இது வீண்காலமன்று; இப்பொழுதில்லாவிடினும் மற்றொருசமயத்தில் இது எனக்குப் பிரயோஜனகரமாயிருக்கும்” என்று சமாதானம்சொன்னார். இது என்ன பொறுமை! என்ன பொறுமை!!

இந்தியாவில் எடிஸனைப்போல் பொறுமையாய் வேலைசெய்பவர் ஜே. ஸி. போஸ் என்பவரே. இவர் தாவரசாஸ்திரத்திலும் இன்னும் அதற்குச் சம்பந்தமான சாஸ்திரங்களிலும் இவ்வுலகத்துக்கு இதுவரையிலும் தெரிந்திராத சமாசாரங்கள் பலவற்றைக் கண்டுபிடித்து, ஐரோப்பா அமெரிக்கா முதலிய மேல்நாடுகளெல்லாவற்றிற்கும் போய், அந்தந்தச் சாஸ்திரங்களில் மேதாவிகள் யார்யாரோ அவர்களின் முன்பாகவே ருசுப்படுத்தி, அழியாப்புகழைப் பெற்றிருக்கின்றார்.

இப்பூவுலகில் இருக்கும் மானிடர்களின் தொகை அநேகம்கோடியாக உள்ளது. ஆயினும், புத்தியிலும், குணசீலத்திலும் மேன்மையுற்றவர் மிகச்சிலரே என்பது நன்கு விளங்கும். அவர்களிலும் அதிகமேன்மையுள்ளவர் எடிஸன், போஸ் முதலியவர்களே.

இனி நமது ஜனனபூமியாகிய இந்தியாவில் அவதரிக்கும் புருஷர்களிற் பலரும் இவரது விருத்தாந்தங்களை நன்றாக உணர்ந்து, இவர்களைப்போல் புத்திக்கூர்மையிலும், ஞானம்சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசையிலும் சிறந்து விளங்குவாராக!

என். ஆர். சேதாரிராவ்.

---

## Leela Devi.

By Srimathi Balasundari Devi.

## லீலாதேவி.

### முதல் அத்தியாயம்.

கல்கத்தாநகரத்துக்குப் பத்துமைல்தூரத்தில் விஜயநகரம் என்னும் ஒரு கிராமம் இருக்கிறது. பெயர் இவ்வளவுசிறப்பாய் இருக்கிறபடியால், ஊர் எவ்வளவுபெரியதாய் இருக்குமோ என்று இதைப் படிக்கிறவர்களுக்குத் தோற்றக்கூடுமானாலும், விஜயநகரம் மிகவும் சிறிய ஊரே. பத்துப் பன்னிரண்டு பிராமணர்அகங்களும்,

ஒன்பதுபத்து வேளாளர் வீடுகளும், மற்றவல்ல ஜாதியார்களின் வீடுகளும் எண்ணிப்பார்த்தால், முப்பது வீடுகளிருந்தால் அதிகம். கிராமம் எவ்வளவு சிறியதானாலும், பார்ப்பதற்குச் சுத்தமாயிருக்கும். வீடுகள் மாடிவீடுகளே தவிர குட்டோடுவீடுகளல்ல. அந்த மாடிவீடுகளுக்குள் அழகான உயர்ந்த மாளிகைகளும் சில இருந்தன. ஊரிலுள்ள குடித்தனக்காரர்களெல்லாரும் பணக்காரர்களாகவே இருந்தாலும், அவர்களுக்குள் லோகநாதன் என்பவனுக்கு மாத்திரம் லக்ஷ்மீகடாக்ஷம் உண்டாகவில்லை. அவன் ஓர் உயர்ந்த வேளாளர்குலத்திற் பிறந்தவன். அவனுடைய நிலைமை பார்ப்பவர்களுக்கு மிகவும் பரிதாபமாயிருந்தது. பூஸ்திதியிலிருந்து வரும் ஆதாயங்களையெல்லாம் கணக்குப்போட்டுப் பார்த்தால், வருஷத்துக்கு முப்பது ரூபாயிற்கு அதிகம் இராது. ஆனாலும், லோகநாதன் அவ்வளவு தரித்திரதசையிலும் சுகமாகவே இருந்தான். ஏனென்றால், அவன் தனக்கு ஏற்பட்டிருந்த நிலைமையிலேயே திருப்தியடைந்து, கடவுள் இவ்வளவாகிலும் கொடுத்திருக்கிறாரே; இதுவே போதுமென்று சந்துஷ்டியோடிருந்தான். அதைவிட அதிகமாகச் சம்பாதிக்க வேண்டுமென்கிற ஆசையும் அவனுக்கு உண்டாகவில்லை. அந்த ஆசை இருந்தாற்றானே ஸம்ஸாரியாகிய அவன் எப்பொழுதும் ஏக்கமோ வியாகுலத்துடன் இருப்பான்! நிராசையாய் இருக்கும் அவனுக்கு விசனம் எப்படி உண்டாகும்? பிறர்வாழ்வைக் கண்டு பொறாமைப்படுவது, துவேஷம் முதலிய துர்க்குணங்கள் அவனிடத்தில் சொப்பனத்திற்கூடக் கிடையா. அவன் அரைவயிறு கஞ்சி குடித்தாவது காலங் கழித்தால் அதுவே போதுமென்று சந்தோஷப்படுவான்; ஊரில் என்ன விசேஷங்கள் நடந்தாலும், தனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களுக்குப் போகவேமாட்டான். தன் சொந்தக் காரியங்களையே சமாளிக்கமுடியாதவனுக்கு ஊரைச் சேர்ந்த பெரியகாரியங்களை நடத்த எப்படி முடியும்?

லோகநாதனுடைய பிரியபத்தினிக்குச் சுவர்ணவல்லி என்று பெயர். சுவர்ணவல்லி என்றிராமல் ஆனந்தவல்லியென்று அவளுக்குப் பெயரிட்டிருந்தால், அவளது குணத்துக்குப் பொருந்தியிருக்கும். அவள் எப்பொழுதும் ஆனந்தம் நிறைந்து மந்தஹாஸம் தவழ்ந்த முகத்துடன் விளங்குவள். நிஷ்காரணமாகவோ காரணசகிதமாகவோ இல்லாத பொல்லாத கோபத்தை வரவழைத்து, முகத்தைக் கடுமையாய் வைத்துக்கொண்டு, தமக்கும் தம் பர்த்தாக்களுக்கும் சுகமில்லாதபடி இக்காலத்து ஸ்திரீகளைப்போலச் சம்சாரத்தைத் துக்கசாகரமாகப் பண்ணுவதென்பதைச் சுவர்ணவல்லி எள்ளளவும் அறியாள். கட்டத்துணியும் உண்ணச்சோறும் இல்லாத லோகநாதனுடைய மனைவிக்கு இவ்வளவு ஆனந்தமும் இவ்விதமான சிரித்தமுகமும் எப்படி உண்டாயிற்றென்று அவ்வூரில் அநேகர் ஆலோசித்துப்பார்த்தும், காரணம் தெரிந்து கொள்ள முடியவில்லை. அதற்கு முக்கியகாரணம் உள்ளதைக்கொண்டு திருப்தியடைந்திருப்பதே யென்று இதைப் படிப்பவர்கள் தாமே அறிந்து கொள்வார்கள். சுவர்ணவல்லியின் முகத்தில் விளங்கும் மந்தஹாஸமே லோகநாதனுடைய சந்தோஷத்துக்குக் காரணமாய் இருந்தது. வறுமையென்னும் அந்தகாரத்தினால் கண்தெரியாமல் தவிக்கும் லோகநாதனுடைய சிறுவீட்டை ஸதாகாலமும் ஆனந்தமயமாய்ப் பிரகாசிக்கும்படி செய்தது, அவளுடைய மந்தஹாஸ முகத்தின் சந்திரகாந்தியே.

சுவர்ணவல்லி வெறும் சிரிப்பும் வேடிக்கையுமாய்க் காலங்கழிக்கவில்லை. குடும்பவேலைகளையெல்லாம் தானாகவே செய்துகொள்வதோடு, வீட்டில் இது இல்லை, அது இல்லை என்று முணுமுணுத்து எரிந்து விழாமல், இருக்கிறஅளவில் சரிப்படுத்திக்கொண்டு குடித்தனத்தைச் சீராய் நடத்திவந்தாள். ஆகையினாலேயே, லோகநாதனுக்கு அவளுடைய மந்தஹாஸம் அவ்வளவு மதுரமாயும் சகலஆயாசங்களையும் தீர்ப்பதாயும் காணப்பட்டது. அதுவுமன்றி, வீட்டுக்குப்



பின்பக்கத்திலிருக்கும் புறக்கடையில் ஒரு சிறிய தோட்டம் ஏற்படுத்தி, அதில், ஒழிந்தவேளையில் வீட்டுக்குவேண்டிய கறிகாய்ச்செடிகளை வைத்து, அவைகளுக்குத் தினந்தோறும் தவறாமல் தண்ணீர்வார்த்து வளர்த்து, அவைகளிலிருந்து கிடைக்கும் காய்வகைகளை வீட்டுக்கு உபயோகப்படுத்திவந்தாள். இன்னும் பொழுது போனபிறகு, பஞ்சுகடைந்து, இராட்டினத்தில் செண்டுசெண்டாய் நூல்நூற்று, சந்தையில் விற்று அதனால் கிடைக்கும் காசைத் தன்கணவனுக்குக்கொடுத்து உதவிசெய்துவந்தாள். சுருங்கச்சொன்னால், சுவர்ணவல்லி ஒருகணப்பொழுதாகிலும் வீண்போக்குவதில்லை. கைநிறையச் செய்வதற்கு வேலை இருக்கும்பொழுதெல்லாம், அவள் அதைச் சந்தோஷமாய்ச் செய்வாள். வேலையில்லாவிட்டால், நிலைகொள்ளாமல் விசனப்படுவாள். ஏழைகள்வீட்டில் வேலையில்லாமலிருப்பது அபூர்வமன்றோ? சிலசமயங்களில் அலைச்சலினால் உடம்பில் அசக்தி உண்டானால், வேலைசெய்ய முடியாமல் சும்மா இருக்கவேண்டி வரும். அப்பொழுதுகூட அவளுக்கு நோயினால் உண்டாகும் வாதையைவிட வேலைசெய்யாமலிருப்பதனால் உண்டாகும் வேதனையே சகிக்க முடியாமலிருக்கும். அந்தக் குடும்பத்தில் அந்தத் தம்பதிகள் இருவரைத்தவிர வேறே யாருமில்லை: மிகவும் ஏழைகளாயினும், மனமொத்த அந்தச் சதிபதிகள் இருவரும் மனமகிழ்ச்சியுடன் சுகதுக்கங்களை ஸமானமாகப் பாராட்டிக் காலங்கழித்துவந்தார்கள். அதைத் தவிர வேறு எவ்வித ஆசையும் அவர்கள்மனதில் உதிக்கவில்லை. மனிதர்களுக்குப் பொதுவாய் உண்டாகும் சந்தானவிருப்பமும் அவர்கள்மனதில் அவ்வளவாக ஊன்றியிருக்கவில்லை. நமக்கு நேரிடப்போகும் நன்மைதீமைகள் நாம் விரும்பாவிட்டால் உண்டாகா என்கிற ஏற்பாடு இல்லையன்றோ? அப்படியே இப்பொழுது இந்தத் தம்பதிகளுக்கும் சம்பவித்தது. முப்பது வயதுக்குமேல் சுவர்ணவல்லி ஒரு பெண்குழந்தையைப் பெற்றாள். அருமையாய்ப் பிறந்த அந்தக் குழந்தைக்கு அந்தத் தம்பதிகள் லீலாதேவி என்று பெயரிட்டார்கள். அழகே உருவெடுத்ததுபோல் இருந்த அச்செல்வக் குழந்தையின் இளமுகத்தைக் காணும்பொழுதெல்லாம் சுவர்ணவல்லியின் மனதில் சுரந்தெழுந்த ஆசைப்பெருக்கை வர்ணித்துரைக்க யாரால் முடியும்? அந்த வாஞ்சை இவ்வளவென்பதை அறிந்த சுவர்ணவல்லியைப்போல் வெகு காலத்துக்குப்பின் லீலாவைப்போன்ற புதல்வியைப் பெற்ற புண்ணியவதிகள் யாராவதிருந்தால் அவர்களுக்குத் தெரியுமேயொழிய மற்றவர்களுக்கு அதன் அருமை எப்படி விளங்கும்? லோகநாதனுக்கும் அப்பெண்குழந்தையின்மேல் ஆசை அதிகமாகவே இருந்தாலும், அவனுடைய ஆசையையும் சுவர்ணவல்லியின் ஆசையையும் ஒப்பிட்டுப்பார்த்தால், அதிக பேதம் காணப்படும். எப்படியென்றால், லோகநாதனுக்கு இனி எவ்விதமாகக் குழந்தையை வளர்த்து விருத்திக்குக் கொண்டுவருவது என்னும் விஷயத்தைப்பற்றி அதிகயோசனை உண்டாயிற்று. இதுவரையில் அவன் வறுமையினால் உண்டாகும் கஷ்டம் இப்படிப்பட்டதென்பதையே அறியாமலிருந்தான். உள்ளதைக் கொண்டு திருப்தியடைந்தவனுக்கு வறுமையினால் உண்டாகும் கஷ்டம் எப்படித் தெரியும்? இதுவரையிலும் எவ்விதக்கவலையும் இல்லாதிருந்தவனுக்கு இப்பொழுது தன் எதிர்காலத்தைக் குறித்து விசாரம் உண்டாயிற்று. அந்த விசாரம் நாளேறவேற அவன்மனத்தில் நிலையாய் ஊன்றிவிட்டது. அதனால், அவன் உள்ளத்தில் தன் குழந்தையின்மேல் அன்பு வளர்வதற்கு அந்த விசாரம் தடையாய் ஏற்பட்டது. இனி சுவர்ணவல்லிக்கோ அப்படிப்பட்ட விசாரம் ஒன்றும் இல்லாமையால், தன் மகளின்மேல் அன்பு என்னும் ஆறு தங்குதடையின்றிப் பெருகிக்கொண்டிருந்தது. வேறு சுகதுக்கங்களுக்கு எள்ளளவாயினும் இடங்கொடாமல் மகளின் மேலுண்டான ஆசையே அவள்மனத்தில் குடிகொண்டு தனியரசுபுரிந்து வரும்போது, நெஞ்சைத்துளைக்கும்படியான விசாரம் அதில் பிரவேசிக்கவும் முடியுமோ?

நாளாகவாக, லீலாதேவிக்கு ஐந்துமாதம் நிறைந்தது. ஒருநாள் சாயங்காலம் சுவர்ணவல்லி வீட்டுமுற்றத்திலுள்ள சிறுதிண்ணையில் உட்கார்ந்துகொண்டு குழந்தையைச் சீராட்டிக் கொண்டிருந்தாள். அந்தச் சிறுகுழந்தையும் தன் தாயின் கையிலிருந்துகொண்டு, அவள் செய்கிற படியெல்லாம் தானும் செய்து, மெல்லிய குரலாய்க் கத்தி, இளந்தளிரைப்போன்ற தன் உதடுகளில் புன்சிரிப்புதோன்ற விளையாடிற்று. அக்குழந்தையின் மதுரமான மழலைமொழிகளும் அச்சின்னஞ்சிறுகைகளும், அவ்வினிய புன்சிரிப்பும் இவையெல்லாவற்றையும் பார்க்கப் பார்க்கச் சுவர்ணவல்லி ஆநந்தம் பொங்கி, இவ்வுலகத்தின் ஞாபகமேயில்லாமல் மெய்ம்மறந்திருந்தாள். அவளது பக்கத்தில் லோகநாதன் உட்கார்ந்துகொண்டு எதைப்பற்றியோ ஆலோசித்துக்கொண்டிருந்தான். மேலும் மேலும் பொங்கிவரும் ஆநந்தத்தை அடக்கமுடியாதவளாய், அந்த ஆநந்தத்தில் தன் புருஷனுக்கும் பாகம் கொடுக்கவேண்டுமென்று நினைத்து, சுவர்ணவல்லி அவனைப்பார்த்து, "உட்கார்ந்துகொண்டு என்ன யோசிக்கிறீர்கள்? இப்படி ஒருமுறை திரும்பிப்பார்க்கலாகாதா? நம் செல்வக்கண்மணி எவ்வளவு அழகாய் விளையாடுகிறது! பாருங்களேன்" என்றாள்.

அதைக்கேட்டு லோகநாதன், தன் விசாரத்தையெல்லாம் விட்டு, குழந்தையை ஒருதடவை அன்புநிறைந்த கண்ணால் நோக்கினான். அக்குழந்தை தகப்பனைப் பார்த்து மறுபடியும் கத்திச் சிரித்தது. அந்தப் புன்சிரிப்பு லோகநாதனுடைய மனத்தில் நன்றாய்ப் பதிந்ததுபோல் தோற்றியது. அவன் ஆநந்த பரவசனாகி, குழந்தையின் செந்தாமரை முகத்தில் மெதுவாய் முத்தமிட்டான். இனி அதைப் பார்த்தபிறகு சுவர்ணவல்லி சும்மா இருப்பாளா? சந்தோஷத்தை அடக்கமுடியாதவளாய், அவளும் குழந்தையின் மிருதுவான முகத்தை முத்திட்டாள். இப்படி அவர்களிருவரும் ஒருவர்மாறி ஒருவர் பலமுறை அக்குழந்தையை முத்தமிட்டுக்கொண்டு மகிழ்ந்திருக்கையில், சுவர்ணவல்லி தன் புருஷனைப் பார்த்து, "இந்த மாணிக்கம் யார்வீட்டில்பிரகாசிக்கிறதோ அவர்களுக்கு என்ன குறை? நீங்கள் என்னவோ பிரமாதமாய் யோசனையில் மூழ்கி உட்கார்ந்திருக்கிறீர்களே?" என்று கேட்டாள்.

அதைக்கேட்ட லோகநாதன்கண்களிலிருந்து நீர் ததும்பிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, "சொர்ணம்! வேறென்ன யோசனை? உன் மாணிக்கத்தைப்பற்றிய யோசனைதான். இன்றைக்கு ஏதாவது உன் சின்ன மாணிக்கத்துக்குக் கொஞ்சம் பால்கிடைக்குமா என்றே யோசிக்கிறேன்" என்றான்.

சுவர்ணம்—சரிதான். குழந்தைக்கு இப்போது பால்போதாது. இன்னும் பால்வேண்டும். இப்படியே சிந்தித்துக்கொண்டு நீங்கள் உட்கார்ந்துகொண்டிருந்தால் நடவாது. பிரயத்தனப்பட்டு எங்கிருந்தாவது இன்னம் கொஞ்சம் பால்கொண்டுவாருங்கள்.

லோக—எங்கே போய்க் கொண்டுவருவது? காசில்லாமல் யார் பால்கொடுப்பார்கள்? அவ்வளவு பாவமான காரியத்தைச் செய்கிறவர்களும் இந்த ஊரில் உண்டா?

சுவர்ணம்—சுவாமிகிருபையால், நம் லீலா வளர வளர எனக்கும் பால் அதிகமாய்ச் சுரந்தால் எவ்வித கஷ்டமும் இராது.

லோக—உனக்குப் பால் அதிகமாவதெப்படி? அவ்வளவு உபகாரம் நான் உனக்கு எங்கிருந்து செய்யப்போகிறேன். பிள்ளைபெறும்வரையில் உனக்குத் தினந்தோறும் அரைவயிற்றுக் கஞ்சியோடே காலம் கழிந்தது.

சுவர்ணம்—அது கிடக்கட்டும், என் கண்மணிக்கு ஒரு குறையும் இல்லாதிருந்தால், எனக்குக் கால்வயிறானாலும்கூட விசாரப்படமாட்டேன். என் செல்வக்குழந்தைக்கு வேண்டியபால் கொடுப்பவர்களுக்கு அந்த அளவுக்குச் சரியாக என் உடம்பிலிருந்து அவ்வளவு இரத்தம் கேட்டாலும் எடுத்துக்கொடுப்பேன். என் தங்கக்கட்டி யாதொரு குறையுமில்லாமல் சந்தோஷமாய் விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டிருந்தால், எனக்குச் சாப்பாடு கூட அவசியமில்லை; எல்லா உபசாரமும் ஆனது போலவே.

லோக—சரிதான். இப்பொழுது நடக்க வேண்டிய காரியத்துக்கு என்ன வழி?

சுவர்ணம்—எனக்கு ஒருயோசனை தோற்றுகிறது: வீட்டில் இருப்பதை விற்று அதைக் கொண்டு பால்வாங்கிக் காலங்கழிப்போம்.

லோக—வீட்டில்மாத்திரம் என்ன இருக்கிறது? இரண்டொரு பாத்திரங்களைத் தவிர வேறே என்ன இருக்கிறது? அவைகளையும் விற்றுவிட்டால், சம்சாரம் நடக்கிறதெப்படி?

சுவர்ணம்—சம்சாரம் நடப்பதற்கென்ன? பித்தளைப் பாத்திரத்தில் நீர் குடித்தால் எந்த ருசியோ அந்த ருசிதான் மண்கலத்தில் குடித்தாலும். இன்னம் குளத்திற்குச் சென்று இரு கையாலும் அள்ளிக்குடித்தாலும் அந்த ருசிதானே? சம்சாரம் நடப்பதற்கு இவையெல்லாம் தடையாகுமா?

லோகநாதனுக்குச்சுவர்ணம் இப்படிசொன்ன ஆலோசனையானது, நடுக்கடலில் விழுந்து முழுகிப்போகிறவனுக்கு ஒரு சிறுபலகை ஆதரவாய் அகப்பட்டதுபோலாயிற்று. உடனே அவன் மேல்பேசாமல், வீட்டிலிருக்கும் ஓர் பித்தளைப் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு வெளியிற் சென்றான்.

சிங்கப்பூர். ஸ்ரீமதி பாலஸுந்தரிதேவி.

## Bhogi Festivel.

BY MR. K. P. SESHADRI AYANGAR.

## போகி பண்டிகை.

ஹிந்துக்களில் கோட்டிமுதல் தொண்டைமான்வரையிலுமுள்ள சகல சாதியாரும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகின்றார்கள். இது, ஒவ்வொருவருடமும் "சூனியமாத" மென்கிற மார்கழிமாதத்தின் கடைசிதினத்தன்று வருகின்றது. மகாசங்கராந்தியென்னும் புண்ணிய காலத்துக்கு முந்தினநாள்தான் போகி பண்டிகைத்தினம். அன்று விடியற்காலையிலேயே யாவரும் நித்திரைநீத்து எழுந்திருந்து தங்கள் வீட்டுக்கெதிரில் "போகிமுட்டம்" மூட்டுவார்கள். அந்த மூட்டத்தில் உதவாத அசுத்தமான கந்தல்களையும் கூடைகளையும் போட்டுக் கொளுத்துவார்கள்; இம்மாதிரி செய்வதால் வீட்டிலுள்ள "பீடை"களைக் கழிக்கிறார்கள். நமது முன்னோர்கள் ஏற்படுத்திய ஒவ்வொரு விரதமும் பண்டிகைகளும் ஏதோ ஒரு நன்மையை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன.

அந்தமூட்டத்திற்கு அருகே கொஞ்சநாழிகையுட்கார்ந்து குளிர்காய்வார்கள். பிறகு எல்லோரும் எண்ணெய்தேய்த்து ஸ்நானஞ்செய்வார்கள். அன்றைத்தினம் எல்லோர்வீட்டிலும் சாப்பாடு விசேஷமாக இருக்கும். பிராமணரல்லாத சிலர் கொஞ்சமேனும் ஈரநெஞ்ச இளநெஞ்சில்லாமல் இராட்சசர்கள்போல அநேகம் ஆடு முதலிய பிராணிகளைக் கொன்றுதின்னுவார்கள். போகி பண்டிகையென்றால் முக்கியமாக ஆடுமாடுகளுக்குப் படுகொலைநாள்போலும். அன்றைக்கு எத்தனையோலக்ஷம் ஆடுகள் நமது இந்தியாவில் மாண்டுபோம். பாவம்! அவைகளை மாய்க்காமலிருக்க மருந்தில்லையோ?

'போகி' என்ற பெயருக்குக் காரணம்.

தேவர்களுக்கு அரசனான இந்திரனுக்குப் 'போகி'என்ற பெயர்உண்டு. அவன் சதா போக

சாகரத்திலேயே அழுந்திபிருப்பவன். ஆகையினால், அவனுக்குப் போகி என்ற காரணப் பெயர் வழங்கிவருகின்றது. இந்தப்பண்டிகை, போகி என்று சொல்லப்பட்ட இந்திரனுக்கு உரியது.

## இதன் ஐதீகம்.

துவாபரயுகத்தில் 'பிருந்தாவனம்' என்னும் ஸ்தலத்தில் கோபாலர்கள் அனேகரிருந்தனர். அவர்கள் ஒவ்வொரு வருடமும் தேவேந்திரனுக்குப் பூஜைசெய்வது வழக்கம். விவசாயம் செய்வதற்கும், அவர்கள் உயிர்போன்ற பசுமாடுகள் ஜீவிப்பதற்கும் மேகமே முக்கிய ஆதாரமாயிருக்கிறது. அந்த மேகத்திற்கெல்லாம் அதிபதி இந்திரனே. ஆகவே, அவர்கள் காலத்தில் மழையைத் தந்து தங்களுக்கு க்ஷேமத்தை அளிக்கவேண்டுமென்று இந்திரனைப் பக்தியுடன் பூசைமுதலியவைசெய்து பிரார்த்திப்பார்கள்.

இப்படி அனேகவருடகாலங்கள் சென்றன. ஒருவருஷம் ஸ்ரீகிருஷ்ணபகவான் போகிப் பண்டிகையை இந்திரனுக்குச் செய்யாமல் பக்கத்திலிருந்த ஒருமலைக்குச் செய்யச்சொன்னார். அவரது ஆஞ்ஞையை உல்லங்கனம்பண்ணாமல் அப்படியே செய்ய ஆயர்கள் சம்மதித்தார்கள்.

இந்தச் சங்கதியைத் தெரிந்துகொண்ட தேவேந்திரன் வெகுகோபங்கொண்டான்; "நமக்குச் செய்யவேண்டிய பூசையை அந்தக் கிருஷ்ணன் சொன்னவிதம் அசேதனமான பருவதத்திற்குச் செய்யச் சம்மதித்தார்களல்லவா? நல்லது: அந்தக்கோபாலர்களையும், கோக்களையும், வற்சங்களையும் அந்தக் கிருஷ்ணன் காப்பாற்றுவதையும், அந்தப் பருவதம் காப்பாற்றுவதையும் அறிகிறேன்" என்று கருவத்துடன் சொன்னான். பிறகு தன் ஆளுகையில் அடங்கியுள்ள * சப்தமேகங்களையும் அழைத்து, பிருந்தாவனத்தில் சென்று பிரளயகாலமழைபோல் ஓயாமல்வர்ஷித்துப்பருவதபூசையை நிறைவேறவொட்டாமல் தடுக்கும்படி ஆஞ்ஞாபித்தான். அந்த ஆஞ்ஞையை மேற்கொண்டவைகளாகிச் சப்தமேகங்களும் ஆயர்பாடியில் அகோராத்திரியாக மழையை வருஷித்தன; வாயுவும் மேகங்களோடு சேர்ந்துகொண்டான்; இடிகள் கர்ச்சித்தன; பெரியபெரிய மாளிகைகள் தரையோடு தரையாக்கப்பட்டன; சனங்கள் நிற்பதற்குக் கூட இடமில்லை; பசுமாடுகளெல்லாம் கதறின; ஆயர்களெல்லோரும் ஸ்ரீ கிருஷ்ணனிடம் சென்று, தங்களையும் தங்களுக்குச் ஜீவாதாரமான கோக்களையும் இந்தச் சமயம் காப்பாற்ற வேண்டுமென்று முறையிட்டார்கள். இந்தக் கஷ்டத்திற்கு ஆதிகாரணமானவன் இந்திரனே யென்று கண்ணபிரான் தெரிந்துகொண்டார்; அவனது கருவத்தை அடக்கவேண்டுமென்று எண்ணினார்.

## இந்திர சருவபங்கம்.

சப்தமேகங்களுடன் இந்திரனும் பிருந்தாவனத்திற்கு வந்திருந்தான். கண்ணபிரான் ஆயரெல்லாரையும் அவர்களுடைய கோவினங்களையும் தாம் காப்பாற்றுவதாக உறுதிமொழி கூறினார்; எந்தப்பருவதத்திற்குப் பூசைசெய்யச் சொன்னாரோ, அந்தப் பருவதமாகிய கோவர்த்தனத்தைத் தம் ஒருவிரலினால் தூக்கிக் குடையாகப் பிடித்தார். அதனிழலில், எல்லாக்கோபாலர்களும் கோவினங்களும் வந்தடைந்தன. சப்தமேகங்களும் வச்சிராயுதனது ஆணையினால் பலங்கொண்டமட்டும் வருஷித்தன; அதற்குமேலும் வருஷிக்கச் சக்தியில்லாமல் ஓய்ந்துபோன தேவேந்திரன், தன் பலமொன்றும் கிருஷ்ணனிடம் சாயாதுபோகவே கருவபங்கமுற்றான்; கிருஷ்ணபகவானது பாதத்தில் நமஸ்கரித்துத் தான் அறியாமையால் செய்த அபசாரத்தைப் பொறுக்கவேண்டுமென்று மன்றாடினான். பகவான் அவனை க்ஷமித்து, கருவப்படக்கூடாதென்ற நன்மதியைப்

* சப்தமேகங்களின் பெயர்: சும்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காலமுகி, நீலவர்ணம் என்பன.



புகட்டினார்; மீளவும் போகிப்பண்டிகையை மேகத்தலைவனான இந்திரனுக்கே செய்யவேண்டுமென்று ஆயர்களுக்குக் கட்டளையிட்டார். அதன்பிரகாரம் ஆயர்களும் இந்திரனுக்கே செய்யத் தலைப்பட்டார்கள்.

## "மாட்டுப் பொங்கல்."

மழைபொழிந்து ஓய்ந்தவுடனே, ஆயர்களெல்லோரும் சந்தோஷமாகத் தங்கள் பசுமாடுகளை ஓட்டிக்கொண்டுபோய்த் தங்களுடைய இருப்பிடத்தை நாடிச்சென்றார்கள்; பெரிய ஆபத்தினின்றும் மீண்டுவந்ததனால், ஒவ்வொருவரும் போய்த் தங்கள்தங்கள் பந்துமித்திரர்களைப் பார்த்துச் சந்தோஷமடைந்தார்கள். இப்படி சந்தோஷமாகப் பசுமாடுகளை ஓட்டிச்சென்ற தினத்தை மாட்டுப்பொங்கல் என்ற ஒருபண்டிகையாக ஆண்டுதோறும் நாம் கொண்டாடிவருகிறோம். இந்த மாட்டுப்பொங்கல் போகி பண்டிகையையடுத்த இரண்டாம்நாள் வருகிறது.

கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

---

# Moral Sayings.

BY A PANDIT.

# நீதிமொழிகள்.

ஆதிசேஷன் பலகைபோன்ற தன் படவரிசைகளில் பதினன்கு உலகங்களையும் தாங்குகின்றான். அவ்வாதிசேஷனைக் கூர்மராசனை திருமால் தம் முதுகின்மேல் தாங்குகின்றார். அத்திருமாலையும், சமுத்திரராசன் அலட்சியமாய்த் தன் தோளில் தாங்குகிறான். பெரியோர் சரித்திரங்கள் எல்லையற்றன!

28. கொழுந்துவிட்டெரியும் தீயைக் கக்குகின்றதும், மதயமிடித்த இந்திரனால் பிரயோகிக்கப்படுவதுமான வச்சிராயுதத்தால் இமயமலையானது அடிபடுங்காலத்தில், அதன் புத்திரனாகிய மைநாகமலையானது ஸமுத்திரத்தினுள் புகுந்தொளித்தது நியாயமன்று. சௌரியமுள்ளவர்கள் பிராணனைவிட்டாயினும் மானத்தைக் காப்பாற்றுவார்கள். அஃதில்லாதவர்கள் வேறொன்றையும் கவனியாது, தம்மைமட்டும் காப்பாற்றிக்கொள்வார்கள்.

29. சிங்கமானது குட்டியாயிருப்பினும், மதநீரால் நனைந்த சுவர்போன்ற கன்னங்களையுடைய யானைகளின்மீது பாய்கின்றது. இதுவே பலசாலிகளின் சுபாவம். தேஜஸ்விகளுக்குத் தம் பராக்கிரமத்தைக் காட்டுவதற்கு பாலியம் முதலியன காரணமல்ல.

## செல்வர்களியல்பு.

30. சாதிவித்தியாசமென்பது பாதாளலோகத்துக்குத் தொலையட்டும்; நற்குணங்கள்யாவும் அதற்குங்கீழே அடிபடட்டும்; நல்லொழுக்கமும் மலைமேலிருந்து உருண்டுபோகட்டும்; பந்துஜனங்களெல்லாம் நெருப்புப்பற்றி எரியட்டும்; நமக்கே பகைவன்போல் கெடுதல்செய்யும் சௌரியத்தின்மீது திடீரென இடி விழட்டும். நமக்குப் பணமட்டுமிருந்தால் போதும்! பணமொன்றுமாத்திரம் இராவிடில், முற்கூறியவையாவும் துரும்புபோல் அற்பந்தானே? பொருளைத் தேடுவது, காப்பாற்றுவதுமுதலியவெல்லாம் துன்பமென்று கூறியது வலைமையற்றவர்களைக் குறித்தேயாம்.

31. இவ்வுலகில் எவன் செல்வமுள்ளவனோ, அவன்தான் நற்குலத்துதித்தவன்; அவனே எல்லாமறிந்த பண்டிதன்; அவனே தருமசாஸ்திரங்களை உணர்ந்தவன்; மகாகுணசாலி; பெரியோர் சபையில் அழகாய்ப் பேசத்தகுந்தவன்; அவனே யாவராலும் பார்க்கத்தக்கவன்; ஆதலின், பூமியில் சகலகுணங்களும் செல்வத்தை ஆச்ரயித்திருக்கின்றன.

32. துர்மந்திரியால் வேந்தனும், லாலனையால் (செல்வங்கொடுப்பதனால்) புதல்வனும்

வேதாத்தியனம் செய்யாமையால் வேதியரும், கெட்ட புதல்வரால் குலமும், தீயோர்சேர்க்கையால் நற்குணங்களும் கெடும். இலச்சைபானது கள்ளுண்டலாலும், பயிர்செய்வது உடையவன் கண்ணோட்டமில்லாமையாலும், நட்பானது நெடுந்தூரம் விட்டுப்பிரிந்திருப்பதனாலும், சிநேகம் விசுவாசமின்மையாலும், செல்வம் அநியாயத்தினாலும் சூதாட்டத்தினாலும் கவனியாமையினாலும் கெடும்.

33. தானம், போகம், நாசம் என்று பணத்திற்கு மூன்றுவழிகள் இருக்கின்றன. எந்தமனிதன் பிறருக்குக் கொடுக்காமலும் தானும் அநுபவியாமலுமிருக்கின்றானோ, அவனது பணம் மூன்றாவதுவழியாகத் தானே போகின்றது.

34. கொடையாளிகளின் பொருளானது கொடையினால் செலவாகி அதனால் மெலிந்துபோனாலும், அப்போழ்தும் அவர்களுடைய சோபை அதிகப்படுகின்றது: சாணைக்கல்லில் விட்டுக் கடைந்த இரத்தினமும், ஆயுதங்களால் அடிபட்டு முடிவில் வெற்றிபெற்ற வீரனும், மதஜலப்பெருக்கினால் இளைத்த வேழமும், சரத்காலத்தில் கொஞ்சம் காய்ந்த மணல்மேடுகளையுடைய நதியும், ஒருகலைமட்டும் மிச்சமாகவுடைய சந்திரனும், வறியார்க்குக் கொடுத்துச் செல்வமிழந்த மனிதர்களும் குறைவினாலும் பிரகாசிக்கின்றனர்.

35. உலகில் ஒருமனிதன் வறுமையால் வருந்தும்போது, சிந்திக்கிடக்கும் சிறுதானியங்களையும் சேர்க்க விரும்புகிறான். அம்மனிதனே பிறகு ஒருசமயம் சம்பூர்ணனாகும்போது, பூமியைத் திருணத்திற்குச் சமமாக எண்ணுகின்றான். ஆதலால், வஸ்துக்களில் சிறுமை பெருமை என்ற பேதம் இல்லை. செல்வர்களது நிலைமையானது வஸ்துக்களை அதிகமாகவும் கொஞ்சமாகவும் செய்கிறது.

36. மன்னவரே! நீர் பசுவைப்போன்ற இப்பூமியைக் கறக்க விரும்பினால், பசு கன்றைப் போஷிப்பதுபோல நீர் உலகத்தைப் போஷிக்கக்கடவீர். அவ்வாறு உலகத்தை நீர் நன்கு போஷித்துவந்தால், பூமியானது கற்பக தருவைப்போல நாநாவிதமான பலன்களைக் கொடுக்கும்.

37. இராஜ நீதியானது, வேசைகளைப்போல, மெய்பேசுவது, பொய்யாக நடப்பது, பிரியமாய்ப் பேசுவது, கடுஞ்சொற் கூறுவது, தயையுடைமை, திரவியத்திலாசை, தானங்கொடுப்பது, எப்போதும் திரவியத்தைச் செலவிடுவது, எப்பொழுதும் மிகுந்த பொருளைச் சம்பாதிப்பது என்றிவ்விதம் பலவிதமான நிலைமைகளையுடையது.

38. பிரஜைகளைக் காப்பாற்றவேண்டிய அதிகாரங்கள், புகழ், அந்தணர்களைக் காப்பாற்றுதல், சற்பாத்திரத்தில் கொடுத்தல், உலக சுகங்களை அநுபவித்தல், மித்திரர்களைக் காப்பாற்றுதல் ஆகிய இவ்வாறு குணங்களும் எந்த அரசர்களிடம் இல்லையோ, அவ்வரசர்களை அண்டியிருப்பதனால் யாது பயன்?

39. பொருள் கொஞ்சமானாலும் அதிகமானாலும், நமது நெற்றியில் பிரமன் எழுதியபடி மனிதன் எங்கிருப்பினும் அடைகின்றான்; மகாமேருபருவதத்திற்குச் சென்றாலும், அதிலும், அதிகமானபொருளை அடைவதில்லை. ஆதலின், யாவரும் தைரியமாயிருக்கவேண்டும். செல்வர்களது முன்னிலையில் கேவலம் தரித்திரர்களைப்போல் பல்லெல்லாந் தெரியக்காட்டித் திரியவேண்டாம்; ஏனெனில், ஒருகுடத்தைக் கிணற்றில் அமுக்கினாலும், கடலில் அமுக்கினாலும் ஒரேஅளவான நீரையே கொள்ளுகின்றது, பார்!

## தீயோரியல்பு.

40. தயையில்லாமை, காரணமில்லாமலே கலகம், பிறருடைய பொருளிலும் பிறருடைய ஸ்திரீகளிடமும் ஆசை, நல்லோரிடமும் பந்துக்களிடமும் பொறையின்மை ஆகிய இக்குணங்களெல்லாம் தீயோர்க்குக் கூடப்பிறந்தவையாம்.



41. தீயோன் எவ்வளவு கலைகளைக் கற்றுப் பிரகாசித்தாலும், நாம் அவனோடு சேரலாகாது. சிவப்பு பச்சை முதலிய இரத்தினமிழைத்த நகைகளை அணிந்திருந்தாலும், நல்ல பாம்பு அஞ்சத்தக்கதன்றோ?

42. தீயோரால் தூஷிக்கப்படாத குணம் உலகில் ஒன்றுமில்லை. அவர்கள் பிறர் நிந்திக்கக்கூடிய காரியங்களைச் செய்யக் கூச்சப்படுகின்றவர்களை மந்தர்களென்றும், தவம் சாந்திராயணம் முதலியவற்றால் பரிசுத்தமானவர்களை டாம்பீகர்களென்றும், சுத்தமாயிருப்பவர்களைக் கபடமுள்ளவர்களென்றும், சூரனைத் தயைபற்றவனென்றும், மௌனமாயிருப்பவர்களைப் புத்தியில்லாதவர்களென்றும், பிரியமாகப் பேசுகின்றவரைத் தரித்திரர்களென்றும், தேஜஸ் உள்ளவனைக் கர்வியென்றும், சபையினிடையில் நன்கு பேசுந் திறமுள்ளவனைப் பட்டிவாயனென்றும் சொல்வார்கள். தீயோர் எல்லோரையும் நிந்திப்பார்களாகையால், அவர்களால் கொண்டாடத்தக்க குணம் ஒன்றுமேயில்லை.

43. அதிக ஆசையிருந்தால் வேறு கெட்ட குணம் எதற்கு? கோட்சொல்லுங் குணமிருப்பின் வேறு பாபம் ஏன்? உண்மையிருந்தால் வேறு தவம் எதற்கு? பரிசுத்த மனமிருந்தால் வேறு தீர்த்தயாத்திரை எதற்கு? நற்குணங்களிருந்தால் வேறபலம் ஏன்? மஹிமையிருந்தால் வேறு ஆபரணம் ஏன்? நல்ல கல்வியிருந்தால் வேறு பொருள் எதற்கு? கெட்டபேருண்டாகிவிட்டால் வேறு மரணந்தான் எதற்கு?

44. பகலில் ஒளிமழுங்கிய சந்திரன், தாமரையில்லாத ஓடை, அழகான புருஷனது அக்ஷரமற்ற முகம், பணத்தாசைபிடித்த பிரபு, எப்போதும் வறுமையையே அநுபவிக்கும் நல்லோர், இராச கிருகத்தை அடைந்துள்ள துஷ்டர் ஆகிய இவ்வேழும் என் மனதிற்குக் கஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன.

45. மிகுந்த கோபமுடைய மன்னவர்களுக்குத் தம்மைச் சேர்ந்தவர் என்று ஒருவருமிலர். தனக்கு நெய் முதலிய உணவளிக்கும் புரோகிதரைக்கூட, தீயானது, தவறித் தொட்டுவிட்டால் சுட்டுவிடுகின்றது.

46. இராஜசேவையானது மிகவும் கஷ்டமானது; எவ்வாறெனில், எந்தக் காரியத்திலும் பிரவேசியாமல் மௌனமாயிருப்பவனை ஊமையனென்றும், நன்றாகப் பேசுந்திறமுள்ளவனை அதிகப் பிரசங்கியென்றும், வீண்பேச்சுப் பேசுபவனென்றும், எப்பொழுதும் பக்கத்திலேயே வஞ்சரிப்பவனைப் பயமில்லாதவனென்றும், தூரத்திலிருப்பவனைச் சாமர்த்தியமற்றவனென்றும், பொறுமையுள்ளவனைப் பயமுடையவனென்றும், கெட்ட காரியங்களைக் கண்டு சகிக்காதவனை நற்குலத்தி லுதித்தவனல்லனென்றும் சொல்வார்களாகையால், அரசர்களைச் சேவிப்பது யோகிகளுக்குக்கூட மிகவும் அசாத்தியம்.

47. துஷ்டர்களுக்கெல்லாம் பெரிய உத்தியோகம் கொடுத்துக் காப்பவனும், தரும நியாயங்களுக்குக் கட்டுப்படாதவனும், தன்னுடைய ஒழுக்கம் மிகவும் கேவலமென்பதை முற்றிலும் மறந்தவனும், ஆனாலும் முன்செய்த நல்வினையால் செல்வமடைந்தவனும், நற்குணங்களுக்குப் பகைவனுமாயிருக்கும் அரசனுடைய தேசத்திலிருக்கும் மனிதன் எவன்தான் சுகம் பெறுவான்?

48. தீயோர் நட்பு, காலைநிழல் தொடக்கத்தில் மிகுதியாக இருந்து நாழிகை ஏறஏறக் குறைவதுபோலத் தொடக்கத்தில் மிகுதியாக இருந்து வரவரக் குறையும். நல்லோர் நட்போ, மாலைநிழல் தொடக்கத்தில் சொற்பமாகவிருந்து வரவர வளர்வதுபோல ஆரம்பத்தில் சொற்பமாகவிருந்து வரவர வளரும்.

49. உலகத்தில் வேடர்கள், செம்படவர்கள், கோட்சொல்லுவோர் இம்மூவரும், பிறருக்கு எவ்விதமான ஹிம்சையும் செய்யாமல் முறையே புற்கள், நீர், சந்தோஷம் இவற்றால் வாழ்ந்துவரும் மிருகங்கள், மீன்கள், நல்லோர் இம்மூவரையும் காரணமின்றியே துவேஷித்து, பலவிதமான உபாயங்களால் துன்புறுத்துகின்றனர்.

நல்லோரியல்பு.

50. நல்லோரிணக்கத்தில் விருப்பமும், பிறரிடம் தினையளவு குணமிருப்பினும் அதைப்பனையளவாக்கக் கொண்டாடுவதும், ஆசிரியரிடம் வணக்கமும், கல்வியில் வியசனமும், தன் மனையாளிடம் விருப்பமும், லோகாபவாதத்தில் பயமும், கடவுளிடம் அன்பும், தன்னைத்தான் அடக்கியாளும் சக்தியும், தீயோரின் கூட்டுறவை நீக்குதலும், இன்னும் இவைபோன்ற மேலான குணங்களும் எவர்களிடம் இருக்கின்றனவோ, அவர்களுக்கு நமஸ்காரம்.

51. ஆபத்துக்காலத்தில் தைரியத்தைக் கைவிடாமையும், செல்வம் வந்தபோது அடக்கமும், சபையில் கசடறப் பேசுதலும், போர்க்களத்தில் சௌரியத்தைக்காட்டலும், புகழைப் பெறுவதில் ஆசையும், வேதசாஸ்திரங்களைக் கல்லாமைக்கு வியசனமுறுதலும் ஆகிய இவைகள் மகான்களுக்குச் சுவபாவமானவை.

52. கைகளுக்குக் கொடையும், தலைக்குப் பெரியோர் திருவடி வணக்கமும், முகத்திற்கு மெய்யான வார்த்தையும், தோள்களுக்குவெற்றியும் நிகரற்ற பராக்கிரமமும், மனதிற்கு நன்னடக்கையும், செவிகளுக்கு மேலான சாத்திரங்களைக் கேட்டலும் அணியாகும். செல்வம் படைத்தவர்களாயிராவிடினும் பெரியோராயிருப்போர்க்கு இலக்கணம் இவைகளேயாம்.

53. ஜீவகாருண்யம், பிறர்பொருளைக் கவராமை, உண்மையுரைத்தல், சமயம்வந்தபொழுது ஏழைகளுக்குத் தன்னால் இயன்றவளவு கொடுத்தல், பரஸ்திரீகளைப்பற்றிப் பேசுவதின்றி ஊமையாயிருத்தல், அதிக ஆசைக்கு இடங்கொடாதடக்குதல், குருஜனங்களை வணங்குதல், சகலப் பிராணிகளிடமும் இரக்கம், எல்லோரையும் சமமாக நினைப்பது, சகல சாஸ்திரங்களையும் அப்பியசித்து அவைகளை அனுசரித்து நடப்பது ஆகிய இவைகள், மனிதர்களுக்கு மேன்மையைக் கொடுக்கக்கூடிய உத்தமமான மார்க்கங்களாம்.

51. நல்லோர் மனம், செல்வம் வந்தடைந்தபோது, கருநெய்தல்மலர்போல மிருதுவாயிருக்கும்; ஆபத்து வந்துற்றகாலத்திலோ, அதைரியமடையாமல், பெரிய மலைபோல மிகவும் கடினமாயிருக்கும்.

ஓர் பண்டிதர்.

---

## Thruvan.

By. P. K. Sreenivasachariar,
*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## து ரு வ ன்.

முன்னொருகாலத்தில் அரசர்பலரால் வணங்கப்பெற்றவனாகிய உத்தானபாதன் என்னும் சக்கரவர்த்தி, ஒற்றைவெண்கொற்றக்குடைநிழலின்கீழ் மண்ணுலகமனைத்தையும் பரிபாலித்து வந்தான். அவன், குலத்தாலும் குணத்தாலும் அழகாலும் சிறந்த சுநீதி என்பவளையும், சுருசி என்பவளையும் மணஞ்செய்துகொண்டான். சுருசிக்குப் பிறந்தவன் துருவன். சுநீதிக்குப் பிறந்தவன் உத்தமன்.

ஒருகால், உத்தானபாதமன்னவன், இரத்தின சிங்காதனத்தின்மீது, பலவகைச் சிறப்புக்களுடன், மழலைச்சொற்களுடைய உத்தமனென்னும் மகன் தன் தொடையில் இருக்க, களிப்புற்று வீற்றிருந்தான். அங்ஙனம் உத்தமன் மன்னனது தொடையில் இருக்கும் சமயத்தில் அதைத் துருவன் கண்டு, தானும் தன் தந்தையின் தொடையிலேறியிருக்க விரும்பி அணுகினன். அப்போது சுருசி சொல்வாள்:—



"பிள்ளாய்! நீ, நல்வினைபுரியாதவனும், என் சக்களத்தியுமாகிய சுநீதியின் வயிற்றினின்றன்றோ பிறந்தவன்? எம் அரசிளங்குமரனாகிய உத்தமனாவாயோ? நீ பேருக்குமாத்திரம் ராஜகுமாரன்; இராஜகுமாரன் பெறக்கூடிய யாதொரு சிறப்பும் பெற உனக்கு யோக்கியதை இல்லை. பல புண்ணியங்களைச் செய்து என் வயிற்றில் நீ வந்து தோன்றவேண்டும். அத்தகைய நோன்பொன்றும் செய்யாத தௌர்ப்பாக்கியமுள்ளவனே! நீ அரசரேறுகிய என் காதலரது தொடையில் ஏறுமாறு என்? மகனே! உலகமெல்லாம் பாதுகாக்கும் இச்செங்கோற் சக்ரவர்த்தியின் தொடையில் நீ ஏறி வீற்றிருக்கவேண்டினால், திருமகள்கொழுநனை நோக்கிநின்று பெருந்தவம் புரிந்து வந்து என் வயிற்றிற் பிறக்கவேண்டும்.',

அம்மடந்தையின் சொல் விஷத்தைச் சொரிந்தாற் போலச் செவியினுள் நுழைந்தவளவில், மைந்தன், தாமரைமலர்போன்ற கண்கள் சிவக்கவும், நெஞ்சில் கோபம் வந்து தோன்றவும், மன்னனது முகத்தை நோக்கலுற்றான். மைந்தன் அப்போது வேந்தன்முகத்தில் அருள் சிறிதுங் காணானாகி, செவி சுடும்படி தன் மாற்றாந்தாயாகிய சுருசி அறைந்த சொல்லுக்கு ஆற்றாமல், சிவந்த தன்கண்ணிரண்டும் மழைபோல நீரைப் பொழிய, தன் அன்னையாகிய சுநீதியினிடம் சென்று, அழகிய இதழ் துடிக்க நின்றான். மெல்லியலாகிய சுநீதி, தன் இளங்குழந்தை செந்தாமரைமலர்போன்ற கண்களில் நிரம்பிய நீர் முத்துமுத்தாக மார்பில் சிந்திவழிய நிற்பதை நோக்கி, 'என் ஆருயிரே! என் கண்ணே! என் அரசே! நீ என் அழுகின்றாய்?' என்று வினவினாள். நடந்த வரலாறனைத்தும் கண்டவர்கள் கூற, கேட்ட சுநீதியும், கொழுந்துவிட்டெரிகின்ற கொடிய காட்டுநெருப்புப் படர்ந்து முற்றிச் சுட்ட பூங்கொடிபோல வாடி, பெருமூச்சுவிட்டு, தன் சிவந்த கண்களினின்று முத்துப்போல நீரைச் சிந்தி நின்றாள்.

'தெள்ளமுதம்போலவும், தேன்போலவும் இனிய மழலைச்சொற்பேசும், மெல்லிய, பவழம்போற் சிவந்த வாயையுடைய குழந்தாய்! நல்வினையில்லாத எனது இழிவான வயிற்றினுள் பொருந்தி வந்தாய்! துன்பமுற்றுப் புலம்பவேண்டாம். முதலைவாயில் அகப்பட்ட கஜேந்திரனைக் காத்த ஆதிமூலக்கடவுளாகிய திருமால் தன்னருளால் உன்னைக் காப்பார். சுநீதி சொன்னபடியே, குற்றமின்றி மனத்தால் ஆராய்ந்தறிந்து, தம்மை வணங்கித் துதிக்கும் அடியார்களின் விருப்பங்களைத் தந்தருளுகின்ற ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்து, அருந்தவத்தை முறைப்படி நின்று புரிந்து, அடைதற்கரிய பதத்தையே அடைக. கலங்காதே. பிரமன் தான் சிறந்த பதத்தை அடைந்ததெங்ஙனம்? உன் குலத்து முன்னோனாகிய மனு, மிக்க மேன்மையைப் பெற்றதெங்ஙனம்?—மாயனைத் தியானித்துப் பூஜித்ததனாலன்றோ? பகவான் நாராயணனைத் தியானித்தால் கிட்டாததென்?' என்று சுநீதி உரைத்து அப்பாலனது உள்ளத்தைத் தேற்றினாள்.

அன்னை தேற்ற, அம்மைந்தன் நெஞ்சு நன்கு தெளிந்தானாகி, தவஞ்செய்வதற்கு, குரவம் கோங்கு சுரபுன்னை அகர் முதலிய விருக்ஷங்கள் உயர்ந்து தோன்றும் காட்டை அடைந்தான். "தீயினாற் சுட்ட புண் உள் ஆறும்; ஆறாதே நாவினாற் சுட்ட வடு" என்பவாதலால், சுநீதியின் சொல் உள்ளத்திற் கிடந்து தாபமூட்ட, அழகிய பொற்சதங்கை ஒலிக்கப்பெற்ற சின்னஞ்சிறிய மெல்லிய கால்களால் நடந்து சென்றபோது, நாரதமகாமுனிவர் அக்குமாரன் முன்னம் வந்தடைந்து, அவனது தலையின்மீது தம் கையை வைத்துச் சொல்வார்:—

'பிள்ளாய்! உனக்கு ஐந்துபிராயமும் நிரம்பவில்லை. பாலன் நீ தவம் எவ்வாறு புரிவாய்? மகாதவசிகளும் இன்னமும் புலப்படக் காணமாட்டாத திருமாலை எங்கே காணுவாய்? கொடிய கோபமிக்க சிங்கம் புலி கரடி முதலிய விலங்குகள் சஞ்சரிக்கும் கானகஞ்செல்வது செம்மையானதன்று. தாழ்பவரைக் கண்டால் தலையுயர்ந்திருக்கவேண்டும். நல்வினை வினைவி

னால் செல்வமுயர்ந்தவர்களைக்கண்டால், 'நாமும் அவ்வாறு வாழப்பெற்றோமில்லையே!" என்று ஏங்குவது ஓர் சிறப்பன்று' என்று இங்ஙனம் பலவற்றை முனிவரர் கூற, பிறைச்சந்திரன் போன்ற அந்தப் பச்சிளங்குழந்தை கேட்டு, 'முக்குறும்பெறிந்த முனிவரே! தேவரீருடைய திருவாக்குச் சிறந்ததேயானாலும், இன்று என் மனத்திற்கு இனியதாயிற்றில்லை. மற்றென் செய்யும்விதம்? மிகவும் உயர்ந்ததொரு பதத்தில் ஏறியிருக்க விரும்புகிறேன். அதற்கு என்ன செய்க?' என்று அடிதொழுது நின்றான்.

அப்பொழுது, முனிவர் மகிழ்ந்து, அப்பாலனைப் பரிவுடன் தழுவி, 'உன் தாய் எடுத்துரைத்த வண்ணமே, தவத்தை நிரம்பச்செய்க' என்று திருவாய்மலர்ந்து, மற்றும் உரைப்பவராகி, 'ஒப்பில்லாத மதுரைமாநகரின் ஓர்புறத்தில் மதுவனமென்ற ஓர் அரண்யம் உள்ளது. அங்கே ஓடும் யமுனையாற்றின் தெளிந்த தண்ணீரிலே ஸ்நானஞ்செய்து, பகவான் வாசுதேவனை உள்ளத்தில் உணர்ந்து வைத்துத் தவஞ்செய்க' என்று, பன்னிரண்டெழுத்தாலாகிய திருமாலின் திவ்விய மந்திரமொன்றை மைந்தனது அழகிய செவியிலே உபதேசித்து நீப்பினார்.

திருமாலின் துவாதசாக்ஷரமகா மந்திரத்தைக் கேட்டுக்கொண்ட அப்பிள்ளை, மனம் மிகவும் தெளிந்தவனாகி, அழகிய தளிர்போன்ற சிறிய அடியிணை சிவக்க, பசுமையான தளிர்களையெல்லாம் குழையச்செய்கிற வெம்மையான கானகத்தை மெள்ளமெள்ள நடந்துசென்றடைந்தான்.

இஃது இங்ஙனமிருக்க. அங்கு உத்தானபாத மகாராசன், 'நெருப்புத்திரள் வளர்ந்த கானகத்திற்கு என் இளங்குழந்தை செல்லப் பார்த்திருந்தேன்! என்ன பாவம்!" என்று உருகிக் கவலையுற்றிருந்தான். அவ்வாறு கவலைப்படும் மன்னனை நாரதமுனிவர் அணுகி, 'காவலனே! கவலற்க: உனது புதல்வனைக் கண்டேன்; திருமால் அவனைக் காப்பார். மைந்தன் இனிமையாகத் தவத்தை இயற்றி வரம்பெற்று வந்து சேர்வன்' என்றுகூறிச் சென்றார். மன்னவன் சகல ஐசுவர்யங்களுடனும் இருப்பினும் மகிழ்வின்றி, குமாரனை நினைத்து மனம்வருந்தினான்.

துருவன், ஒருகாலத்தில் கண்ணன் விளையாடிய பூஞ்சோலைசூழ்ந்த மதுவனமென்னும் இடத்திற் போய்ச்சேர்ந்தான். சேர்ந்த அவன், யமுனாநதியில் நீராடி, கண்ணனைக் கண்ணில் வைத்து, அப்பூங்காவில் தவஞ்செய்யத் தொடங்கினான்; ஒருமாதம் இரண்டுநாள் இடைவிட்டு இனிய கனிகளை உண்டிருந்தான்; பின், ஒருமாதம் ஆறுதினம் இடைவிட்டு, ஆங்காங்கு உதிர்ந்து விழுந்துள்ள சருகுகளைத் தின்று கொண்டிருந்தான்; பிறகு, ஒருமாதம் ஒன்பது பகல் இடைவிட்டு, தண்ணீரையே பருகியிருந்தான்; பின்பு, ஒருமாதம் பன்னிரண்டுநாள் இடைவிட்டு, காற்றையே உட்கொண்டிருந்தான். நான்குமாதம் இங்ஙனம் செல்ல, அந்தப் பாலனாகிய துருவன், ஐந்தாமாதம் ஒன்றையும் அருந்தாமல், மூச்சை அடக்கி, செந்தாமரை மலர்போலும் பாதத்து விரலொன்றைத் தரையில் ஊன்றிநின்று, பரமாத்மாவைக் கருதித் தவம்புரிந்தான்.

திருவயிற்றில் எல்லாவுலகங்களும் ஆழ்ந்து கிடக்கப்பெற்ற ஸ்ரீமந்நாராயணன் நெஞ்சிற் பொருந்தியிருப்பதனால், மைந்தன் ஒருவிரல் ஊன்றிநின்றானாலும், பெரிய நிலவுலகம் பொறுக்கமாட்டாமல், அலைவீசும் கடல்வெள்ளத்தில் அகப்பட்ட தெப்பம்போல அலைந்தது! அக்கினிமயமாகிய சுதரிசனமென்னும் சக்கரத்தை வலத்திருக்கையிலேந்திய திருமால் அந்தத்துருவனது உள்ளத்தில் அமர்ந்திருந்தபடியால், அவனது தவக்கனல் மிகுதியாகப் பொங்கி, அதனால் பூலோகம்முற்றும் கனலாய்விட்டது. அப்பொழுது துருவன் தன்மூச்சை அடக்கியதனால், எந்தத்தேவர்களும் மூச்சுவிடமாட்டாதவராய்க் கலங்கினார்கள்.

அவர்கள் மிரண்டு திருமாலையடைந்து, 'காத்தற்றொழிற்கடவுளே! காத்தருள்க' என்று தங்



கள் வருத்தத்தை விண்ணப்பஞ்செய்ய, அப்போது திருமால் திருவாய்மலர்ந்தருள்வாராய், "துருவன் தவம்புரிதலால், மூச்சைவிடவில்லை. அதனால் உமக்கும் மூச்சுத் தடுமாறிற்று. நாம் இரட்சிப்போம்" என்று, உடனே கருடன் மீது ஏறித் துருவன்முன்பு சென்றடைவாரானார். தன்முன்னே வந்துநிற்கும் திருமாலை, கண்மூடி இடைவிடாது தவம்புரியும் துருவன் காணவில்லை அப்போது, ஸ்வாமி, அவனது உள்ளத்தில் விளங்கும் தமது உருவத்தை மறைத்தருளினார். அவ்வளவில், துருவன் ஸ்வாமியை அகக்கண்ணிற் காணப்பெறானாய்த் திடுக்கிட்டு, கண்மலர் விழித்தான்.

அக்காலையில், பூர்ணசந்திரன்போன்ற திருமுகமண்டலமும், செந்தாமரைமலர்போன்ற திருக்கண்களும், குண்டலம் ஒளிவீசப்பெற்ற திருச்செவிகளும், புன்னகை தவழப்பெற்ற திருப்பவளவாயும், திருத்துழாய்மாலை அசைந்து விளங்கும் திருமார்பும், நான்குதிருக்கைகளுமாக, வேதமுங் காணாத திருமாலின் திருவுருவத்தைத் துருவன் கண்டான்; கண்ணாற் பருகுவான்போலப் பகவானை நோக்குவான்; இருகைகளாலும் தழுவிக்கொள்ளுவான்போல ஸ்வாமியின் அருகிற் சென்றடைவான்; தொழுவான்; கண்ணீர்சொரிந்து அழுவான்; உருகுவான்; உள்ளம் உவப்பான்; மனம் வருந்துவான்; துள்ளுவான்; சந்தோஷசமுத்திரத்தில் மூழ்கித் திளைப்பான்.

அப்போது, உலகத்தவரனைவரும் போற்றத்தக்க அவ்வரசக்குழந்தையின் அழகிய கன்னத்தில், திருமால் தம் திருக்கையிலேந்தும் பாஞ்சஜந்யம் என்னும் திருச்சங்கினால் நன்றாகத் தடவியருளினார். அங்ஙனம் தடவியதனால், மழலைச்சொற்பேசும் பாலனாகிய அத்துருவன், தன் வாய்மொழி மிகுதியாகத் தோன்ற, மகிழ்ச்சி பொங்கி, பழமறைகளும் அறிந்து துதிக்கமாட்டாத பரமனை அறிந்து துதிக்கலுற்றான்:—

"திருமகளுக்கும் நிலமகளுக்கும் கொழுநனே! உனது உந்தித்தாமரை பெற்றெடுத்த பிரமன். உனது செந்தாமரைக்கண்களின் திருவருள்பெற்றன்றோ, உலகங்களையெல்லாம் தான் படைத்தான்? திருத்துழாய்மாலை மார்பனே! தாமரைமலர்க்காடுபோலத் திருவவயவங்கள் பூத்திருக்கப்பெற்ற நீர்கொண்ட மேகம்போல்வாய்! நீலமலையே! உனது திருவடித்தாமரைகளை மலர்கொண்டு முறைகெடத் தூவி வணங்கப்பெற்றார்க்கன்றி, மற்றையோர்க்கு, உயர்ந்த வீட்டின்பம் கிடைப்பது உண்டோ? கிடைக்காது. இஃது உண்மை. ஆலோசித்தால், பெறுதற்கரிய முத்தியைத் தந்தருளும் முதல்வனே! உன்னைக் காணப்பெற்றும் மற்றொருபொருளை விரும்பிப் பெறுவது, பொன்னுலகில் உள்ள பொன்மயமாகிய அழகிய கற்பகதருவைக் காணப்பெற்றும், நல்லதொன்றைவேண்டாமல், எட்டிக்காய்போன்ற குணமற்றதொன்றை வேண்டிப் பெற்றதுபோலாம் அன்றோ? வானமே! காற்றே! தீயே! நீரே! மண்ணே! இந்த ஐந்தின் உடலே! உயிரே! உயிர்க்கு உயிரே! தியானிக்கின்ற முனிவரது உள்ளத்தில் ஊறுகின்ற தேனே! எங்கள் பெருவாழ்வே! சிவனே! மலரவனே! இவ்விருவர்க்கும் தலைவனே! உன்னைக் குணமில்லாத நான் குறித்து என்னசொல்லித் துதிப்பேன்? மூப்பில்லாத முதற்பொருளே! ஆக்கல், அளித்தல், அழித்தல் என்னும் முத்தொழிலும் அயன், அரி, அரன் என்னும் மூவராகி இனிமையாக முறையே இயற்றுகின்ற தேவா! தேவசிகாமணியே! சிந்தாமணியே! தெள்ளமுதமே! ஒருமுதலாகி, இருசுடராகி, முக்காலமாகி, நால்வேதமாகி, ஐவேள்வியாகி, ஆறங்கமாகி, எழுகடலாகி, எட்டுவரையாகி, நவக்கிரகமாகி, தசாவதாரமாகிய குணக்கடலே! என் புல்லிய நாவால் உனது திருக்கல்யாணகுணகணங்களை எங்ஙனம் யான் சொல்லிமுடிப்பேன்!" என்று துதித்தான்.

அப்போது, பகவான் அருளினாற் புன்னகை பூத்து, 'என் அருமைக்குழந்தாய்! தேவர்களும் இன்னும் அடைதற்கு ஏங்கியிருப்பதும், உயர்ந்த மகாமேருகிரியின் உச்சியில் விளங்குவதும்

உலகின்மேலதும், என்றைக்கும் சாச்வதமாயிருப்பதுமாகிய ஒப்பற்ற ஒரு பதத்தை யாம் உனக்குத் தந்தருள்வோம். வாழ்க. நிலவுலகத்தை இருபத்தாறாயிரம் ஆண்டு ஒற்றைவெண்கொற்றக்குடைநிழற்கீழ் வைத்து அரசாண்டு அத்துருவபதத்தை நீ அடைவாய்' என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

'மாற்றாந்தாய் உரைத்த தீச்சொல் நெஞ்சில் நின்று சுடப் பெரும்பதம் ஒன்றை விரும்புகின்றேன் நான்; நீலமேகம்போலும் நிமலனைக் கண்ணுற்கண்டும் முத்தியைக் கேட்டிலனே!" என்று துருவன் பச்சாத்தாபமுற்று, மிக்க மகிழ்ச்சி கொள்ளாமல் நகரம்போய்ச் சேர்ந்தான்.

'வந்தான் துருவன்' என்று சொன்னவளவில், உத்தானபாதமன்னன் வாராத மகிழ்ச்சி வந்து பொங்க, தேன்சிந்தும் மெல்லிய மழலைமொழி பேசும் பிள்ளையின் வருகையைச் சொன்னவர்க்குத் தன் மார்பில் அணிந்துள்ள இரத்தினவாரத்தை எடுத்து வெகுமதியாகக் கொடுத்து, வாழைமரங்களை நிரைநிரையாக வைத்து, முத்துமாலைகளை அழகாகத் தொங்கவிட்டு, கனகமணித் தோரணங்களை அலங்காரமாகக் கட்டி, வானுறவோங்கிய மாடமாளிகை கூடகோபுரங்களைப் புதுமைசெய்து, நறுமலர்மாலைகளை வனைந்து, தேவேந்திரநகரமென்று உரைப் பட்டணத்தைத் துலக்கி, யாவரும் கடல்போலப் பரந்து ஆரவாரித்து உடன்வர எழுந்து, வேந்தர்பலர் வணங்க, மிருதங்கம் சத்திக்க, வலம்புரிச்சங்குகள் ஒலிக்க, உத்தமனும் தேவியரும் செம்பொற் சிவிகையின்மீது வர, அழகிய இரதத்தை விரைவாக ஓட்டி, பாலசூரியன் ஒளி மழுங்கும்வண்ணம் சாந்தி செழித்து வருகின்ற அழகிய புதல்வனைக் கண்டான்.

அப்போது துருவன், உருகும் காதலானது உள்ளத்தில் ஓங்கவும், ஸந்தோஷவெள்ளம் பெருகி அலையெறியவும், இருகரங்களையும் கூப்பி அஞ்சலிசெய்து தந்தையைத் தாள்தொழுதான். மந்தஹாஸத்தோடு விளங்கும் அக்காதலனை, அரசன், பருகுவான்போல நோக்கி, தனது மலர்க்கரத்தால் தழுவியெடுத்துக் கொண்டு, உச்சிமோந்து, விழிநீராட்டினான். பின்பு துருவன், கள்ளக்கண்களையுடைய சுருசியையும் கைகளால் அஞ்சலிசெய்து வணங்கினான். அவளும், பள்ளத்திற் பாயும் தண்ணீர்போலப் பழுத்த அன்பு தலைக்கூட, உள்ளத்தில் உவகைகூர்ந்தாள். திருமகள்கொழுநனுடைய பவானது திருவருள்வாய்த்தால் யார்தாம் ஸந்தோஷமடையமாட்டார்? பின்பு, துருவன் தன்னைப் பெற்ற அன்னையின் மலர்ப்பதங்களை வணங்கினான். அவள் அவனை வாரியணைத்து, ஈன்றபொழுதினும் முகமலர்ந்தாள். அப்போது, அவளுக்கு ஆனந்தக்கண்ணீர் பெருகிற்று; அன்பு மிகுதியால் முலைப்பால் ஊறி வழிந்தது.

உத்தமன் அருகிலிருந்து கையால் அடிதழுவிக் கொள்ளவும், நிலவேந்தர்கள் நின்று வணங்கவும், சங்கங்கள் முழங்கவும், நகரத்து மஹாஜனங்கள் களிப்புறவும், துருவன் உத்தம கஜத்தின்மேல் பிறைமதிபோல இருந்து இனிதுசென்று, அரண்மனையடைந்தான். உத்தானபாதன், துருவனுக்குக் காளைப்பருவம் வந்தவளவிலே, உலகேழும் ஒற்றைவெண்கொற்றக்குடைநிழற்கீழ் வைத்து அரசாளும்படி அவனுக்கு மணிமுடி புனைந்து, தான் கானகமடைந்து தவம்புரிவானாயினன்.

துருவன் அரசுபெற்றபின்னர், எழுதீவிலுள்ள மன்னரனைவரும் வந்து பணிந்து திறையிடும்படி பூலோகமுழுவதும் ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்தினன். சக்ரவர்த்தியாகிய அவன், கல்வியறிவொழுக்கங்களில் மிகமேம்பட்டு விளங்கிய இருமகளிரை மணம்புரிந்து கொண்டு இன்புற்று வாழ்க்கையில், அவர்களிடத்து மக்கள்மூவரைப் பெற்றுக் களிப்புற்றனன்.

இங்ஙனமிருக்குங்கால், உத்தமன் ஒருகால் இமயமலையையடுத்ததொரு காட்டிற்கு வேட்டையாடச் சென்று, அங்கு இயக்கனொருவனால் அடிபட்டு இறந்தனன். அவனுடைய அன்னையும், வேட்டையாடச்சென்று காட்டில் மாண்ட தன் தனயனைக் காணுதற்கு நாடிச் சென்றவள், காட்டுத்தீயில் அகப்பட்டிறந்தனள். தன் தம்பியும் சிற்றன்னையும் மாண்ட செய்தியை அறிந்த துருவன், துயரமுற்று, இயக்கர்பலத்தை வேரறுத்துத் தொலைத்து மீள்வேனென்று, பற்பல போர்க்குரிய வாத்தியங்கள் முழங்க யுத்தஞ்செய்யப் புறப்பட்டான்: அப்போது, யானைகள் மலைகள்போலத் திரண்டன; குதிரைகள் கடல்போலப் பரந்தன; வீரர்கள் புலிகள்போல அடர்ந்தனர். இங்ஙனம் சைனியங்கள் நெருங்க, துருவன் தேரின்மீதேறிச் சென்றனன்; இயக்கர்களுக்குத் தலைவனான குபேரனது அளகைநகரினருகிற்சேர்ந்து, அனைவரும் அஞ்சும்படி சங்கநாதஞ்செய்தான்.

அப்போது, இயக்கர்கள், மலைகளையொத்த பருத்த புயங்களில் வில்லெடுத்து, மேகங்கள்போலத் திரண்டார்கள். அதனைக் கண்ட துருவன், அவர்கள்மீது பலவகையாயுதங்களை வீசி, அவர்களை வேறுவேறாகப் பிரித்து, சின்னபின்னமாக அழிக்கத்தொடங்கினான். இயக்கர்பலர் அவனது போர்த்திறத்துக்கு அஞ்சிப் புறங்காட்டினர். போர்க்களத்தில் இரத்தப்பெருக்கு அலைவீசி ஓடலாயிற்று. எஞ்சிநின்ற இயக்கர்கள் பலவகைமாயைகளைக் கொண்டு போர்செய்ய, அவர்கள் மாயையொழியத் துருவன் நாராயணாஸ்திரத்தைப் பிரயோகிப்பானாகி, களிறுகளைப் பிளக்கும் அரியேறுபோல இருகண் சிவக்க, வில்லை வளைத்து நிற்கையிலேயே, அவர்கள் மாயைகளெல்லாம் அழிந்தொழிந்தன. அப்போது இயக்கவீரர் பலர் தொலைந்தனர்.

அச்சமயத்தில், இச்செய்தியை உணர்ந்து அவனது பிதாமகனான சுவாயம்புவமனு அவன் முன் வந்துநின்று சொல்வான்:—"அப்பனே! நல்லனவும் தீயனவுமாகிய பலன்களைக் கொண்டுவந்து விடுவதற்குக் காரணம்: சிலர் காலமென்பர்; சிலர் ஈசனென்பர்; சிலர் நிலையில்லாத கானல் நீர்போன்ற மாயையென்பர்; வாற்சாயனாதி சிலர், மலரம்புகொண்ட மதனென்பர். விளையாததொன்றும் விளையாது. எதுவும் ஊழின் வரும் விளைவேயாகும். உத்தமனது உயிரை ஓர் இயக்கன் கவர, நீ வையகத்து இயக்கருயிரனைத்தையும் கவர்தல் அறமோ?" என்று உறுதிமொழியுரைத்திட, அப்போது துருவன் போரொழிந்து நின்று தொழுதான். அதுகண்டு மகிழ்ந்து ஆசிகூறி மனு சென்றார்.

பிறகு, திவ்ய விமானத்தின்மீதேறிக் குபேரன் அங்கு வந்தணுகி, 'உன் தம்பி உத்தமனை இயக்கன் கொன்றிலன்; உத்தமனது வினையே அவனைக் கொன்றது. பெருந்தகையோய்! முனியற்க. நீ விரும்பி நின்ற வரம் யாதேனும் தருவேன் மொழிவாய்' என்று கூற, அக்காலையில் துருவன், மலர்க்கரங்களைக் குவித்து, 'இருநிதிக் கிழவனே! ஸ்ரீமந்நாராயணனது திருவருளல்லது யான் பெறுதற்கு உரியது வேறு யாது?' என்றான். அதுகேட்ட குபேரன், உள்ளமுவந்து, 'அங்ஙனமே ஆக' என்று வரந்தந்து போயினான்.

பின்பு, துருவன் மீண்டு நகர்வந்தடைந்து, "இருப்பினும், நிற்கும்போதும், இரவுகண் துயிலும்போதும், பெருக்கென நடக்கும்போதும், பொருந்தி ஊண் துய்க்கும்போதும், முருக்கிதழ்க் கனிவாயாரைத் தழுவி நெஞ்சழியும்போதும்" திருமாலைத் தியானித்துத் தொழுதுகொண்டேயிருப்பவனாய், பற்பல யாகங்களை விதிப்படி நடத்தி முடித்து, இருபத்தாறாயிரம்வருடம் ஆஜ்ஞாசக்கரத்தை எல்லாவுலகமும் செலுத்தினான்.

இங்ஙனம் நெடுங்காலம் சென்றபின் துருவன், தன் மைந்தனை உலகங்காக்கும்படி அணிமுடி சூட்டி, அரசாக்கிவிட்டு, விசாலமிக்க நீர்வளமுள்ள விசாலையென்னுமிடத்தை அடைந்து, திருமாலை உள்ளத்தில் வைத்துச் சிறந்த தவம் புரிவானாயினன்.

அப்போது, திருமாலின் திருவடிகளுக்குப் பாத்திரராகிய சுநந்த, நந்தர் என்பவர், செம்பொன்னிரதமொன்றேறி, அவ்விடத்துக்கு, சந்திரன்போல இனிது ஒளிவீசும் ஒரு விமானத்தைக் கொண்டு வந்து, துருவனை நோக்கித் துதித்து, திருமாலின் தேஜோரூபமாகிய இவ்வியபதத்தை நீ அடைதல்வேண்டும். நீ வருக; வருக" என்று கூறினர்.

அவர்வேண்டுகோளின்படி அப்போது துருவன், பசும்பொன்போல எல்லாத்திசையிலும் காந்திவிரியும் ஓர் திவ்வியரூபத்தைக் கொண்டு அவ்விமானத்தின்மீது ஏறினன். ஏறியதும், அச்சமயத்தில், அவ்விராஜசிகாமணி, தன்னை ஈன்ற அன்னையை மனத்தில் நினைத்தான். மன்னவன் உள்ளத்தில் உன்னியதைத் திருமாலின் அன்பர்களாகிய அவர்கள் உணர்ந்து, துருவனை வைத்துக்கொண்டு விமானத்தைச் செலுத்திப்போகுங்கால், 'அரசனே! விசும்பின்மேல் உன் அன்னையும் செல்லுதல் காண்பாய்' என்று உரைத்தனர்.

அங்ஙனமே அவன் அன்னையைக் கண்டு களித்து, அவளுடன் வானுலகங்கடந்து சூரியபதத்தை நீங்கிச் சந்திரமண்டலத்தை மகிழ்வுறக் கண்டு, விண்ணவர்கள் ஆங்காங்கு மலர்மழை பொழிந்து வாழ்த்த, சிறந்ததொரு பதத்தை அணுகினன். அப்பதம், எக்காலத்தும் அழியாததாய், வானில் ஓங்கிய பதங்களெல்லாம் கருவதாய், ஒளிசெறிந்து திப்பதாய், எல்லாவுலகங்களுக்கும் சிகாமணிபோல மேலே நெடுந்தூரத்தில் பிரவுபர்த்துள்ளதொன்றாகும். அதிற்சென்று புகுந்து அவ்வேந்தர்பிரான் விளங்கினன். அவனது புகழை எவர் புகல வல்லவர்?

துருவன் ஒளிமுடிசூட்டப் பெற்ற அவனது மைந்தன்,* தன் தந்தைபோலவே சக்ரபாணியினிடத்துப் பொருந்திய மனத்தனாய் எல்லாம் வெறுத்துவிட, அவனது தம்பி † ஏழுலகங்களையும் காப்பாற்றினன்.

ஒழிவில்லாமல் வருகிற ஊழிதோறூழி அழிவில்லாத பதத்தைச் சென்றடைந்த கெடாத புகழையுடைய துருவனது சரித்திரத்தைப் படிப்பவரும், கேட்கப்பெற்றவரும், செல்வத்தினை அடைந்து, மக்கட்பேறு வாய்ந்து, புன்சிரிப்புள்ள கொவ்வைப்பழம்போன்ற இதழுள்ள இனிய அரிவையரின் மழலைமொழியைப் பருகி மகிழ்ந்து, இங்ஙனம் இம்மையின்பமுற்று, மறுமையில் வீட்டின்பத்தையும் அடைவரென்பர் ஆன்றோர்.

முற்றிற்று.

* இவன்பெயர் உற்கலன் என்று காணப்படுகின்றது.
† இவன்பெயர் வற்சரன் என்று காணப்படுகின்றது.

## The Indian Industrial Conference.
## இந்தியக் கைத்தொழில் கான்பரென்ஸ்.

இந்தியக் கைத்தொழில் கான்பரென்ஸ் சென்றமாதம் 30-ம் தேதியன்று லக்னௌ நகரில் கூடியது. அப்போது, கனம் ஸீதா நாதராய் பகதூர் அக்கிராசனம் வகித்தார். அச்சமயம் அவர் செய்த பிரசங்கத்தின் முக்கிய சாராமிசம் வருமாறு:—

"இந்தியாவின் ஜனத்தொகை நாளுக்குநாள் பெருகிக்கொண்டேவருகிறது. மற்ற நாடுகளைப் போல் இந்தியாவானது தொழிலபிவிருத்தியில் முன்னேற்றமடையாமல் நிற்கின்றது. ஆகவே, பெரும்பாலும் ஜனங்கள் தங்கள் தங்கள் ஜீவனோபாயத்திற்காக வியவசாயத்தையே எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. 1871-ம் வருஷத்துக் கணக்குப்படி, இந்தியாவில் வியவசாயத் தொழிலை அநுசரித்து வந்தவர்கள் 100க்கு 62 என்றும், 1901-ம் வருஷத்தில் 100க்கு 68 என்றும், 1911-ம் வருஷத்தில் 100க்கு 71 என்றும், மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால்,



இங்கிலாந்திலோ, வியவசாயத்தொழிலை அநுசரிப்பவர்கள் 100க்கு 9-என்றும், தொழில் முயற்சிகளில் ஜீவிப்பவர்கள் 100-க்கு 58-பேர்களென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இதனால், இந்தியாவில் தொழில் முயற்சி எவ்வளவு குறைந்திருக்கிறதென்றும், தொழில் முயற்சியைப்போல் வியவசாயத்தை நம்பியிருந்தால் எள்ளளவும் லாபமில்லையென்றும் நன்கு விளங்கும். மற்ற தேசத்தவர்களைக்காட்டிலும் நாம் மிகவும் ஏழைகளாயிருப்பதற்கு இஃது ஒரு காரணமாகும்.

"இந்தியாவின் பூர்வகாலநிலைமையை உற்று நோக்கின், இத்தேசமானது பணம்பெருத்த தேசமென்றும், பொன்விளையும் தேசமென்றும் மேனாட்டாரால் கருதப்பட்டதென்றும், அவர்கள் இங்குப் படையெடுத்து வந்ததற்குக் காரணம் இவையேயென்றும் தெரிகின்றது; மற்றும், இங்கிருந்து கைத்தொழிற்பண்டங்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தனவென்றும் தெரிகின்றது. இவ்வளவு சிறப்புப் படைத்த இந்தியாவின் தொழில்கள் வரவர க்ஷீணித்துப்போனதற்குக் காரணம்: சென்ற 18-ம் நூற்றாண்டின் கடைசியில் ஐரோப்பாவில் தொழில் விஷயமாய் மிக்க முயற்சிகள் செய்யப்பட்டதும், அந்தந்தத் தொழில்களுக்கு ஏற்றவாறு ஏராளமாக இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டதும். இன்னும், இந்தியச்சரக்குகள் அங்கு இறக்குமதியாகாதபடி வரிகள் போடப்பட்டதுமாம். இம்மாதிரியான பல காரணங்களினாலும் இந்தியாவின் பூர்வீகத்தொழில்கள் நசித்தும் போய்விட்டன.

பிறகு, தொழிலபிவிருத்திக்குரிய தேவைகளைப்பற்றி ஒவ்வொன்றாய்ப் பின்வருமாறு பேசினார்:—

"இந்தியாவில் இயற்கைப்பொருள்கள் ஏராளமாக இருப்பதனால் தொழிலபிவிருத்திக்குரிய சௌகரியங்கள் நிரம்ப இருக்கின்றன. ஆனால், இந்த இயற்கைப்பொருள்கள் பெருவாரியாக அன்னியதேசங்களுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டு, அங்குத் தொழில் முறையில் பண்டங்களாக மாறி, பிறகு இந்தியாவுக்கே திரும்பி வருகின்றன. இந்தியாவிலோ, பலவித வியவசாயப் பொருள்களும் தாதுப்பொருள்களும் இருக்கவும், அவைகளைக்கொண்டு தொழில்கள் ஸ்தாபிக்கப்படாமலிருப்பது இந்தியாவுக்குப் பெருத்த நஷ்டமேயாகும்.

"இந்தியத்தொழிலாளிகளுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுத்து அவர்களைச் சேர்க்கவேண்டும். அவர்களைப் பற்பல தொழில்களுக்கு உதவும்படி பழக்கவேண்டும். அவர்களுக்குத் தொழிற்கல்வி புகட்டுவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் பாடசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டும். தொழிற்கல்விக்கு அஸ்திவாரமாக ஆரம்பக்கல்வியைப் புகட்டத்தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்.

"இந்தியாவின் தொழிலபிவிருத்திக்கு முக்கியமான இன்னுமொரு தேவையுண்டு. அதாவது: தொழில் நிபுணர்கள். இப்படிப்பட்டவர்கள் நம் தேசத்தில் அதிகமாக இல்லாததனால், தொழிலின் அபிவிருத்திக்கு ஒரு பெருந்தடை இருக்கின்றது. இதை நிவிருத்திக்க ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு தொழிற் கல்விச்சாலை ஏற்படுத்தப்படவேண்டும். அதோடு, தொழிலபிவிருத்தியில் உயர்தர அம்சங்களைப் போதிக்கத் தொழிலாராய்ச்சிச்சாலையொன்று ஸ்தாபிக்கப்படவேண்டும்.

"இந்தியாவில் தொழில்களுக்கு மூலதனம் கிடைப்பது கஷ்டமாயிருக்கின்றது. தொழில் முயற்சிகளில் ஜனங்கள் பணத்தைப்போடப் பயப்படுகிறார்கள். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவற்றில் ஒன்று, ஜனங்களுக்கு தொழில் ஸ்தாபிப்பவர்களிடத்தில் நம்பிக்கையில்லாமை. இரண்டாவது, பணத்தையுடையவர்கள் பூமிகளிலும், நிரம்ப வட்டி கிடைக்கும் வியாபாரங்களிலும் தங்கள் பணத்தைப் போடுவது. இந்த இரண்டு இனங்களிலுமுள்ள பணத்தைத் தொழின்முயற்சியில் திருப்ப

வேண்டுமானால், கவர்ன்மெண்டார் தொழில் முயற்சிகளுக்குத் தகுந்த ஆதரவளித்து, முதலாளிகளுக்கு "நம்பிக்கையை உண்டுபண்ண வேண்டும்." இவ்வாறு மூலதனத்தைப்பற்றிப் பேசினார்.

தொழிற்சாலைகளுக்கு வேண்டிய யந்திரசாதனங்களைப்பற்றிப் பேசுகையில்: தொழில்களுக்கு யந்திரசாதனங்கள் ஒருவகையில் மூலதனமாகுமென்றும், ஆகலால், அவை வெகு ஜாக்கிரதையுடன் நன்கு உபயோகப்படுத்தப்படவேண்டுமென்றும், தொழிற்சாலைக்கு மட்டமான யந்திரங்களை வாங்கிவைப்பதனால் பலவழிகளிலும் நஷ்டங்கள் ஏற்படுகின்றனவென்றும், யந்திரங்கள் எவ்வளவுக்கெவ்வளவு புதியவையாயிருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு செலவு குறைவாகுமென்றும், இதை முதலாளிகள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டுமென்றும் கூறி, மற்றும் உரைத்தது யாதெனில்,—

“தொழிற்சாலைகள் நன்கு விருத்தியடைந்து லாபம் தருவதற்கு அங்கு அனுஷ்டிக்கப்படும் ஒழுங்குகளே ஒருகாரணமாகும். பெரிய தொழிற்சாலைகள் பல முதலாளிகளின் கூட்டுறவினாலேதான் நடத்தப்படவேண்டியிருக்கின்றன. இவர்களுக்குப் போதுமான தொழில் ஞானம் இல்லாததனால் தொழில்முயற்சிகளை நடத்தக்கூடியவர்கள் மிகவும் அவசியம். அப்படிப்பட்டவர்கள் அர்த்தசாஸ்திர ஞானமுள்ளவர்களாயும், தம் தேசத்தின் மூலப்பொருள்களின் பல விவரங்களும் தெரிந்தவர்களாயும், வியாபாரச்சட்டம், லேவாதேவிமுறைகள், ஏற்றுமதி இறக்குமதிமுறைகள் முதலியன தெரிந்தவர்களாயும் இருக்கவேண்டும். அன்னியநாடுகளில் வியாபாரப்படிப்பில் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பட்டமளிக்கப்படுகின்றது. பம்பாய் யூனிவர்ஸிடியிலும் வியாபாரப்படிப்பில் தேர்ச்சிபெற்றவர்களுக்குப் பட்டமளிக்கப்படுகிறது. அதேமாதிரி மற்ற மாகாணங்களிலும் செய்யப்படவேண்டும்.”

இன்னும், தொழிற்பட்ட சாமான்களை ஏற்றிக்கொண்டு போவதற்கான கட்டணங்கள் மலிவாயிருக்கவேண்டுமென்றும், அவைகள் சேதப்படாமல் சீக்கிரத்தில் கொண்டுபோகப்படவேண்டுமென்றும், ரெயில்வே கம்பெனியார்கள் தங்கள் லாபத்திலேயே கண்ணாயிராமல் தொழிலபிவிருத்திக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கூறி, ரெயில்வேக்களின் நிர்வாகத்தைப்பற்றிப் பின்வருமாறு அபிப்பிராயப்பட்டார்.

“ரெயில்வேக்களின் நிர்வாகத்தைக் கவர்ன்மெண்டாரே ஏற்கவேண்டுமென்று சில ஜனத்தலைவர்கள் அபிப்பிராயப்படுகின்றார்கள். அவ்விதம் செய்யக் கவர்ன்மெண்டாருக்குச் சௌகரியமேற்படாவிட்டால் வேறு ஏற்பாடுசெய்யலாம்; ரெயில்வே கம்பெனியின் நிர்வாகம் தேசநன்மையையொட்டி நடத்தப்படுவதற்காக ஒரு கமிடியைச் சாசுவதமாக ஏற்படுத்தலாம். அக்கமிடியில் ஹைகோர்ட்டு ஜட்ஜிகள் இருவரும், நிபுணர்களான ஐரோப்பியர் ஒருவரும், இந்தியர் ஒருவரும் நியமிக்கப்படவேண்டும். இக்கமிடிக்குத் தேசநன்மையின்பொருட்டு ரெயில்வே கட்டணங்களை மாற்றவோ, வேறுதிருத்தங்களைச் செய்யவோ அதிகாரம் இருக்கவேண்டும். இதுதவிர, மூலப்பொருள்கள், யந்திரங்கள் முதலியவைகளைக் கொண்டுபோவதற்கு ரெயில்வே கட்டணங்களைக் குறைவாக ஏற்படுத்தவேண்டும். இப்படிச்செய்தால், தேசத்தில் திரவிய அபிவிருத்தி ஏற்படுமென்பதற்கு ஐயமில்லை.

“தொழிலபிவிருத்திக்கு இராஜாங்கவுதவி அவசியமென்பது எவராலும் மறுக்கமுடியாது. தொழில் முயற்சியில் அபிவிருத்தியடைந்த எல்லாத்தேசங்களிலும் தொழிலின் முற்போக்குக்கு இராஜாங்கத்தார் உதவிசெய்துவருகிறார்கள். ஜப்பானில் தொழில்செய்பவர்களுக்கு இராஜாங்கத்தார் உதவிசெய்வதுடன், அவர்களே தொழில்களை நடத்திக்காட்டியும் வருகிறார்கள். இப்படிச் செய்வதனால், முதலாளிகளுக்குத் தைரியமுண்டாகிறது. உள்நாட்டுத் தொழிற்சாலைகளில் செய்யப்படும் பண்டங்கள் கூடியவரை நன்றாயிருக்குமாயின், அவைகளையே கவர்ன்மெண்டார் வாங்குவதாக வாக்குறுதி செய்யவேண்டும்.”

பிறகு, கூட்டுறவுச் சங்கங்களைப்பற்றிப் பேசும்போது; தொழிலபிவிருத்திக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மிகவும் அவசியமென்றும், இந்தியாவில் கூட்டுறவுச்சங்கங்கள் வியவசாய விஷயமாகவே உழைத்துவருவதனால், அவைகளைக் கைத்தொழிலபிவிருத்திக்கும் உழைக்கும்படி செய்யவேண்டுமென்றும் கூறி, இன்னும் இதுஸம்பந்தமாய்ப் பலவிஷயங்களைச் சொல்லித் தமது பிரசங்கத்தை முடித்தார்.



# Review of the Press.

# பத்திரிகை ஆராய்ச்சி.

## Constipation.

### மலச்சிக்கல்.

மனிதர்களுக்கு மலச்சிக்கல் ஏற்படுவதற்கான காரணங்களைப்பற்றியும், அதற்காகச் செய்யவேண்டிய பரிஹாரத்தைப்பற்றியும் “ஜனாபிமானி” பின்வருமாறு எழுதுகிறது:—

மலச்சிக்கல் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானவை: வெளிக்குப் போகத் தோன்றும்போது அதை அடக்குவதும், கிரமமாய் மலப்பிரவிருத்தியாவதற்காகவென்று அடிக்கடி மருந்துகள் சாப்பிடுவதுமே.

சிலர், வேலையில் கவனமாயிருந்துகொண்டு மலத்தை அடக்கிக்கொள்ளுகிறார்கள். வேறு சிலர், காலம் சரியாயிராததால் அடக்கிக்கொள்ளுகின்றார்கள். பெரிய ஆபீசுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் கக்கூஸுகளுக்குப் போகிறவர்கள் அதிகம். அவ்விடங்களில் அதிகமான ஜனங்களுக்கு வேண்டியபடி கக்கூஸுகள் போதாமலிருப்பது சகஜம். அதனால் பலர் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அப்படி காத்திருப்பவர்களுக்குச் சிறிது நேரம் சென்றதும் மறுபடி வெளிக்குப்போக அவசரமில்லாமல் காலக்கிரமத்தில் மலச்சிக்கல் ஏற்படுகிறது.

தினந்தோறும் கிரமப்படி மலப்பிரவிருத்தி ஏற்படுவதற்காக மருந்து சாப்பிடுவதனால், பிற்பாடு குடல் சம்பந்தமாக வியாதிகள் ஏற்படக்கூடும்.

சாப்பாட்டு நேரத்தில் போதுமான அளவு ஜலம் குடிக்காமலிருப்பதாலும், அதிகமான அளவில் ஜலம் குடிப்பதாலும் மலச்சிக்கல் ஏற்படுவதுமுண்டு. குறைவாய் ஜலம் குடித்தால் மலம் கெட்டியாய்ப்போய்விடும். அதிக ஜலம் குடிப்பதனால் குடலிலுள்ள உணவை ஜீர்ணம்செய்ய உதவும் காஸ்ட்ரிக் ஜூஸ் என்னும் பாசகநீர்வேகம் குறைந்துபோய் உணவைச் சரியாய் ஜீர்ணம் செய்வதில்லை. இதனால் ஜீர்ணமாகாத ஆகாரம் அடிக்குடலில் போய் உபத்திரவமுண்டாக்கி, சரியாய் மலப்பிரவிருத்தியாகாமல் செய்துவிடுகிறது.

குடலின் உட்பாகமானது அமைப்பில் மாறுபாடு அடைவதாலும், அதில் தசைகள் அதிகமாக வளருவதாலும், அன்னியவஸ்துக்கள் தங்குவதாலும் மலம் தடைப்படக்கூடும். மலச்சிக்கலைப் போக்கடிக்க முதன்முதலில் செய்ய வேண்டிய காரியம் என்னவென்றால், மலப்பிரவிருத்திக்காக மருந்து சாப்பிடும் வழக்கமிருந்தால் அதை முதலில் நிறுத்திவிடுவதே. மேலும், மலப்பிரவிருத்திக்காக ஆசனத்துவாரத்தில் குழாய் வைத்துப் பீச்சும் வழக்கத்தையும் நிறுத்திவிடவேண்டும். இந்த மருந்துகளையும் குழாய்களையும் உபயோகிப்பதால், தற்கால சாந்தியாகச் சுவற்ப நன்மை ஏற்படுகிறதென்றாலும், அவைகள் மலச்சிக்கலின் காரணத்தைப் போக்குகிறதில்லை. காலம் செல்லச்செல்ல, இவைகளை மேன்மேலும் உபயோகிக்கும்படி ஏற்பட்டுவிடுகிறது. கடைசியில், மிகவும் வீரியமுள்ள மருந்துகளை உபயோகித்தாலொழியச் சரியாய் மலப்பிரவிருத்தியாவதில்லை. குழாயை உபயோகிப்பதனால் காலக்கிரமத்தில் குடல் கோளாறடைந்து பலமிழந்துவிடுகிறது.

ஒவ்வொருவரும் தமது தேகநிலைமையைத் தக்க வைத்தியர்களைக்கொண்டு பரிசீலனை செய்து, தமக்கு ஏற்ற ஆகாரம் இன்னதென்று தெரிந்து, அவைகளையே புசித்துவரவேண்டும். ஆனால், பொதுவாய்ச் சொல்லுமிடத்து, மலச்சிக்கலுள்ளவர்கள், காய்கறிகள், தானியங்கள், பழங்கள், நெய், எண்ணெய் முதலிய கொழுப்பு வஸ்துக்களை உபயோகிக்கவேண்டும். எண்ணெய் நெய் இவைகளை அதிகமாய் உபயோகிப்பது நல்லது.

காலையில் சாப்பிடுவதற்குமுன் ஒரு சிட்டிகை உப்புப்போட்ட வெந்நீரைக் குடிப்பதால் மலச்சிக்கல் நீங்கக்கூடும். வேறு கோளாறுகள் ஏற்படாமலிருந்தால், சாப்பாட்டு நேரத்துக்கு இடையில் தண்ணீரை யதேஷ்டமாய்க் குடிக்கலாம்.

தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளிக்குப்போவதென்று வைத்துக்கொண்டு, அந்தநேரத்தில் கக்கூஸுக்குள் போய்விட்டாவது வரவேண்டும்.

மலச்சிக்கலுள்ளவர்கள் தினம் தேகப்பயிற்சி செய்துவந்தால் வியாதி நீங்கக்கூடும். தேகப்பயிற்சியால் குடல் சுறுசுறுப்படைந்து தனது வேலைகளைச் சரிவரச் செய்யும். ஆனால், தேகத்தின் ஒருபாகம்மட்டும் அபிவிருத்தியடையும்படி தேகப்பயிற்சி செய்யக்கூடாது.

தேகத்தின் எல்லாப்பாகங்களுக்கும் சரிவரப் பயிற்சி ஏற்படவேண்டும். மேலும், எவ்வளவு தாங்கக்கூடுமோ அவ்வளவு தேகப்பயிற்சிதான் செய்யவேண்டுமே யொழிய, தேகத்தைச் சிரமப்படுத்திக்கொண்டு அதிகமாகத் தேகப்பயிற்சி செய்யக்கூடாது.

தேகத்தில் வேறு ஏதாவது கோளாறு இருக்கிறதாவென்று வைத்தியர்களைக்கொண்டு சோதிக்கச்செய்து தக்க சிகிற்சைகள் செய்யவேண்டும். தக்க வைத்தியர்களைக்கொண்டு தேகநிலைமையைத் தெரிந்துகொள்ளாமல் கண்ட பேதி மருந்துகளையும் சாப்பிடுவது உசிதமன்று.

## Agriculture : Past and Present.

### முற்கால தற்கால வியவசாயம்.

சமீபத்தில் வெளிவந்த "விவேகபோதினி"யில் ஸ்ரீமான் ஜே. ஆர். ரங்கராஜு அவர்கள், முற்கால தற்கால வியவசாய நிலைமையைப்பற்றி ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். அதில் அவர், தற்காலத்தில் பயிரிடப்பட்டுவரும் நிலங்களில் கிடைக்கும் மாசூலைவிட அதிக மாசூல் கிடைக்கும்படி செய்வது எப்படி என்பதையும், அதற்காக அநுஷ்டிக்கவேண்டிய முறைகள் இன்னவென்பதையும்பற்றி ஆராய்ச்சி செய்து எழுதுகிறார். வியவசாயத்துக்கு இன்றியமையாத சாதனங்கள் மூன்று. அவை : 1. நிலவளம், 2. நீர்வளம் 3. குடிவளம்.

1. நிலவளம்: முற்காலத்தில் தரிசாயிருந்த நிலங்கள் பயிரிடப்பட்டதாலும், அநேக வருஷங்களாய் நிலத்தில் இயற்கையாய்ப் பயிருணவுப்பொருள்கள் சேர்ந்திருந்ததாலும் பயிர்கள் வீரியமாய் வளர்ந்து நல்ல மாசூலைக் கொடுத்துவந்தன. வருஷந்தோறும் அதே நிலம் பயிரிடப்பட்டுவந்ததால் நிலவளம் குன்றி, நிலத்திலுள்ள சத்துக்கள் வருஷா வருஷம் குறைந்துகொண்டேவந்தன. ஆகையால் தான், முற்காலத்தில் கிடைத்த மாசூல் தற்காலத்தில் நமக்குக் கிடைப்பதில்லை.

2. நீர்வளம்: மேய்ச்சல் நிலங்களெல்லாம் கைப்பற்று நிலங்களாகிவிடவே, கால்நடைகள் மேய்வதற்கு இடமில்லாததனால் (காடுகளை ரிஸர்வ்செய்வதற்குமுன்) காடுகளில் விட்டு மேய்த்ததாலும், புதியவையாய் முளைக்கும் மரங்கள் முதலியவை முளைக்காமற்போனதாலும், காடுகளிலுள்ள மரங்களைக் கவர்ன்மெண்டார் விற்றுவிடும்படி செய்ததாலும், அநேகமாய்க் காடுகள் நாசமாய்விட்டதாலும், தற்காலத்தில் போதிய மழை பெய்வதில்லை. மழை பெய்யாமற்போகவே கிணற்று நீர் அருநீராய்விட்டதனால், ஏரிகுளங்களில் போதிய தண்ணீரில்லாமற் போய்விட்டதனாலும், பயிர்களுக்குத் தண்ணீர்த்தட்டு உண்டாகிவிட்டது.

3. குடிவளம்: தற்காலத்தில் வியவசாயம் செய்வது அகௌரவமென்று நினைத்துப் புத்திசாலிகளல்லாத படியாத அறிவீனரிடம் வியவசாயத்தை ஒப்பித்துவிட்டு இருப்பதால், வியவசாயம் சரியானவர்களால் நடத்தப்படாமலிருப்பதோடு, உண்மையான உழைப்பாளிகளும் பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், கொழும்பு முதலிய அயல் நாடுகளுக்குப் போய்விடுவதால் குடிவளமும் குறைந்துவருகிறதென்பதில் சந்தேகமில்லை. குடிகளும் வயிறுக்குப் போதிய சாப்பாடில்லாததால், முன்போல வேலைசெய்ய முடிவதில்லை.

நமது கவர்ன்மெண்டார் வியவசாய அபிவிருத்திக்காகப் பலவிடங்களிலும் வியவசாயப்பண்ணைகளை ஸ்தாபித்து, அவைகளில் நவீனமுறைகளால் வியவசாயம் செய்தும், அவற்றால் ஏற்படக்கூடிய நன்மைகளை ஜனங்களுக்கு நிரூபித்துக்காட்டியும் வருகிறார்கள். அவ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு அவைகளின்படி நடப்பது அவசியமேயாயினும், கீழ்க்கண்டவற்றைக் கிருஷிகர்கள் கவனிக்கவேண்டுமென்று இக்கிருபர் எழுதுகிறார்.

1. தற்காலத்தில் நாம் உபயோகிக்கும் நாட்டுக்கலப்பையைவிட, ஆழமாய் உழக்கூடியதும், மண்ணைப் புரட்டித் தள்ளக்கூடியதுமான சீர்திருத்திய நாட்டுக்கலப்பையை உபயோகித்தல்.

2. சால்விதைக் கலப்பையால் விதைகளைப்போடல்.

3. ஒற்றை நாற்று நடவு செய்தல்.

4. விதை தெரிந்தெடுத்தல்.

5. பசுந்தாள் பயிர் நிலத்திலேயே உண்டாக்கி, அதிலேயே உபயோகப்படுத்தல்.

6. ஆடுமாடுகளின் மலமூத்திரங்களை அவம் போகாமல் சரியானபடி சேகரித்து மட்கவைத்து உபயோகித்தல். வறட்டி தட்டாமல் சாணத்தை எருவாகவே உபயோகித்தல்.

7. ஒரு நிலத்தில் ஒரேபயிர் வருஷாவருஷம் செய்துகொண்டிராமல் பயிர்மாற்றல்.

8. ஒருவன் தனக்கிருக்கும் எல்லா நிலங்களிலும் ஒரேஇனசுப் பயிரிட்டுவிட்டு, தண்ணீர்த் தட்டாலாவது, நோய்நொடிகளின் பாதைகளாலாவது, அல்லது வேறு எந்தக்காரணத்தினாலாவது அப்பயிர் விளையாவிட்டால், ஜீவிக்கமுடியாமல் கஷ்டப்படாதபடி பலவிதமாகப் பயிரிடல்.

9. கால்நடைகளுக்கு வேண்டிய சோளமாற்றுவது, கினிப்புல் முதலியவைகளாவது பயிர்செய்து அவைகளைச் சரியானபடி போஷித்துவரல்.

10. நமது தேசத்தில் விளைவாகும் பிண்ணாக்கு முதலிய எருப்பொருள்களை நமது தேசத்திலுள்ள நிலங்களுக்கே உபயோகப்படுத்தல்.



# Economic Notes.

# பொருளாதாரக் குறிப்புக்கள்.

## Education.

### வித்யா விஷயம்.

**Duties of a Teacher.**

உபாத்தியாயரின் கடமைகள்!—உபத்தியாயர்கள் தங்கள்கடமைகளைச் சரிவரச்செய்வதற்கு இருக்கவேண்டிய யோக்கியதைகள் இரண்டு. அவை: ஞானம், நன்னெறி. உபாத்தியாயர்களின் முக்கியஉத்தேசம் மாணாக்கர்களுக்கு சன்மார்க்கம் கற்பித்தல்; அவர்கள் தங்களிடத்தில் அடையவேண்டிய வித்தையை யடைந்தபிறகு அவர்கள்தொழில் ஏதோ அதை நன்றாய்ச் செய்யும்படியான ஒரு திறன் ஏற்படுத்துதல்வேண்டும். ஆகையால், இவை இரண்டும் நிறைவேறுமாறு உபாத்தியாயர்கள் எப்பொழுதும் கவனத்துடன் முயலவேண்டும்.

மாணாக்கர்க்குச் சன்மார்க்கம் போதிக்கும் உபாத்தியாயர்கள் தாங்களே அம்மார்க்கத்தில் ஒழுகுவது அவசியமன்றோ? பிள்ளைகளுக்கு நற்குணங்கற்பித்துத் தங்களுடைய குணம் தர்க்குணமாயிருந்தால் யாதுபயன்?

ஆதலால், உபாத்தியாயர்களுக்குத் தங்கள் வேலையை நன்றாய்ச்செய்யும்படி பொருந்தியிருக்க வேண்டிய அம்சம் நல்லொழுக்கமே யாகும். அதுவின்றேல், அவர் தொழில் சாரமற்ற கோதும்போலிருக்கும்.

உபாத்தியாயர்கள் போதிக்கப்புகும் விஷயத்தில் நல்ல ஞானத்தைப் படிக்கும் மாணாக்கர் மனதில் பசுமரத்தில் அடித்த ஆணிபோல் ஐயமறப் பாயச் செய்யும் திறமும் இருக்கவேண்டும். எந்த விஷயங்களைக் கற்பிப்பதில் அவர்களுக்குப் போதுமான பயிற்சியில்லையோ அந்த விஷயங்களைக் கற்பிப்பதைக் காட்டிலும் கற்பிக்காமலிருப்பது நல்லது. அப்படித் தெரியாமல் உபாத்தியாயர்கள்செய்வது குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதாகும்.

ஆனால், தெரியாத விஷயங்களை நன்றாய்த்தெரிந்துகொண்டு உபாத்தியாயர்கள் கற்பிக்கவேண்டும். இந்த விஷயமாக உபாத்தியாயர்களுக்கு விருத்தாப்பியம் இல்லை; அவர்கள் என்றும் மாணாக்கரே. தாம் அடைந்த கல்வி போதுமென்று இருக்கப்பெற்ற உபாத்தியாயன் பிரயோஜனப்படமாட்டான். கல்விக்கு அளவில்லை. தற்காலத்தில் எவ்வளவோ புதிய புதிய விஷயங்களும், முக்கியமாய்ச் சாஸ்திர சம்பந்தமான விஷயங்களும் வெளியாவதைப் பிள்ளைகளுக்குக் கற்பித்து, அவர்கள் ஞானத்தைத் தற்கால விசேஷங்களுக்குத் தகுந்தபடி விகஸிக்கச்செய்யவேண்டும். ஆகையால், தன் கடமையைச் சரியாய்ச் செலுத்தும் உபாத்தியாயன் நாளுக்குநாள் தன்னுடைய ஞானத்தை விருத்திசெய்துகொண்டு, மாணாக்கர்களுக்குக் காலத்துக்குத் தக்க அறிவை உண்டுபண்ணவேண்டும்.—விவேகபோதினி.

**Tamil and its progress.**

தமிழும், அதன் அபிவிருத்தியும் :—ஆங்கிலத்திலுள்ள "என்ஸைக்ளோ பீடியா பிரிட்டானிகா" என்னும் நிகண்டுவைப்போல் தமிழிலும் ஒரு கிரந்தம் வெளியிடப் பணவுதவிசெய்வதாய் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களில்ஒருவரும், ஆண்டிபட்டி ஜமீன்தாருமாகிய ஸ்ரீமான் பெத்தாச்சிசெட்டியார் முன்வந்திருக்கிறாரென்று கேட்டுச் சந்தோஷமடைகிறோம். இதன் பதிப்பாசிரியராக ஸேதுபதி சம்ஸ்தான வித்துவான் ஸ்ரீமான் ராகவய்யங்காரவர்கள் ஏற்படுத்தப்படுவாரென்றும் அறிகிறோம். இந்த நிகண்டானது ஆங்கிலத்திலுள்ளவைகளைப்போலவே பல அம்சங்களையும் கொண்டிருக்கவேண்டுமானால் அய்யங்காரவர்கள் அவ்விஷயங்களில் தேர்ச்சியடைந்த பல பிரமுகர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும். இப்போது தெலுங்கிலும் ஒரு நிகண்டு ஆந்திரஅபிமானிகளால் வெளியிடப்படுகிறது.

**Another Samskrit College at Madras.**

சென்னையில் மற்றொரு சம்ஸ்கிருத காலேஜ்:—சென்னை நகரவாசியாகிய ராவ் சாகேப் வீ. கண்ணன் செட்டியார் அவர்கள், மைலாபூரில் ஓர் சம்ஸ்கிருத காலேஜை ஏற்படுத்தப்போகிறாரென்று அறிந்து சந்தோஷப்படுகிறோம். அது விசிஷ்டாத்வைத சம்ஸ்கிருத காலேஜ் என்று பெயர் பெறும். இங்கு மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்கப்படும். இதோடு, இக்காலேஜைச் சேர்ந்த ஹோஸ்டலில் மாணவர் கட்டணமில்லாமல் சாப்பிடவும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அடுத்த பிப்ரவரி௴ 15-ந் தேதிவரை அப்ளிகேஷன் ரிஜிஸ்தர் செய்யப்படுமென்றுத் தெரிகிறது.

# Agriculture.

## வியவசாயம்.

### A new disease for paddy.

நெற்பயிரில் ஓர் புதுவியாதி:—நெற் பயிருக்குப் பல வியாதிகள் சம்பவிக்கின்றன. இந்தவியாதிகள் பூச்சிகளினாலேயே ஏற்படுகின்றனவென்று தெரிகிறது. நன்செய்யில் ஒவ்வொரு வருஷமும் குருத்துப் பூச்சியால் பயிர் சேதப்படுகிறது. கதிர் பூராவும் சாவியாவதற்கு இப்பூச்சியேதான் காரணம். யானைக்கொம்பு என்னும் பூச்சியானது குருத்தைத் தின்று கதிர்விடுவதையே நிறுத்திவிடுகிறது. இவ்வாறு பூச்சிகளினால் பயிர் நாசமாவதை வியவசாயிகள் அறியாமல், இவ்வியாதி கிராமதேவதையின் கோபத்தினாலும் இன்னும் பல காரணங்களினாலும் வருகிறதென்றும், இதைத்தடுக்க அவர்கள் செய்யக்கூடியது ஒன்றுமில்லையென்றும் எண்ணுகிறார்கள். "சுதேசமித்திரனில்" ஒரு நிருபர் இப்பூச்சிகளைப்பற்றி எழுதியிருக்கிறார். அது: ஆனைக்கொம்பு விழுந்த பயிர் ஒன்றை வேருடன் பிடுங்கி அதை நடுவே கிழித்துப் பார்த்தால், அத்தண்டின் நடுவே வளர்கிற பாகத்தை ஒரு சிறு புழு தின்பதைக் காணலாம். இதனால் குருத்தானது கதிர்விடும் தண்டாக வளராமல் இலைக்காம்பின் கீழே ஒரு சிறு அறையாக மாறுகிறது. சில விருட்சங்களில் இலையில் புடைப்புகளிருக்கக்காணலாம். அப்புடைப்புகள் சில ஈக்களால் உண்டாகிறது. ஒரு ஈ அவ்விலையில் முட்டையிடும். முட்டையினின்று வரும் புழு அவ்விலையின் நடுவே இருக்க அதைச்சுற்றி வீக்கம் கண்டதுபோல் ஒரு புடைப்பு காணும். இப்புடைப்பான அறைக்குள் அப்புழுவரும். பிறகு ஈயாக மாறி வெளியே போய்விடும். அதேமாதிரியாக ஆனைக்கொம்பு புழு வளரவளர அதன் அறையும் நீண்டு வளர்கிறது. வளர்கிற பாகம் தின்னப்படுவதால், மேலே பயிருணவு ஏறுகிறதில்லை. ஆகையால், அந்த அறை வெளுத்துக்கொண்டே வருகிறது; முற்றிலும் முழு சிவப்பு நிறமுள்ளதாய் கால் அங்குலத்திற்குச் சற்றுக் குறைவான நீளமுள்ளதாயிருக்கும். வெங்காயமான நீண்ட குழாய் மாதிரி இருக்கிற இதன் அறையை ஆனைக்கொம்பென்று சொல்லுவார்கள். சிலர் வெண்தண்டென்றும், தண்டீத்தென்றும் சொல்லுவது வழக்கம். பிறகு கதிரும் உண்டாவதில்லை. இப்படி வளர்ந்த சிவப்புப்புழு ஸ்தம்பித்து உருமாறவிருக்கிறது. அப்போது அது உண்பதில்லை. இக்காலந்தான் அது புழு உருவிலிருந்து ஈயாக மாறுகிற சமயம். ஆறுகால்களுடன் நீண்ட இரண்டு மீசை மயிர் இதற்குண்டாகி இறகும் முளைக்கின்றது. பிறகு, அறையின் உச்சியில் ஒரு பாகத்தைத் தின்று ஓட்டை செய்து அதன் வழியே கொசுப்போன்ற இந்த ஈ வெளியே பறந்து போகிறது. ஈ தன் முட்டைகளை ஒவ்வொன்றாய் இடுகின்றது. இம்முட்டைகளிலிருந்து மேலே சொன்ன புழு உண்டாகிறது.

இந்தவியாதியை உண்டாக்கக் காரணமாயிருக்கிற ஈக்களைத் தொலைக்க வேறு ஈக்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஈ ஒரு எள்ளின் அளவு பெரியதாயிருக்கும். இது ஆனைக்கொம்பு புழுவின் உடலில் 20, 30 முட்டைகள் உண்டாகும். முட்டைகளிலிருந்து சிறு டமக்கள் கிளம்பி அப்பெரும்புழுவின் தோலைத்தவிர உள்ளே குடல் முதலியவைகளைத் தின்று கடையில் அதைக் கொன்றுவிடுகிறது. பிறகு, இச்சிறு புழுக்கள் தனித்தனி சிறு கூடுகள்கட்டி தோற்கூட்டிலுள் தாங்களும் உருமாறவிருக்கின்றன. சிலநாள் கழித்து அக்கூட்டினின்று 20, 30 சிறு ஈக்கள் கிளம்பி வெள்ளைத்தண்டின் உச்சியில் ஒரு துவாரம் செய்து அதன் வழியே எல்லாம் பறந்து போகின்றன.

### Agriculture and Education.

வியவசாயமும், கல்வியும்:—இந்தியாவின் க்ஷேம அபிவிருத்திக்கு வியவசாய முற்போக்கு மிகவும் அவசியமென்றும், சர்மாணிய வியவசாயிகளுக்கு ஆரம்பக்கல்வி கொடுக்கப்பட்டாலொழிய வியவசாயம் அபிவிருத்தியடைவது தடைப்படும் என்றும் கனம் J. மெகன்னா என்பவர் இம்மாதம் ஸெனட் சபை மண்டபத்தில் "வியவசாய அபிவிருத்தி" என்னும் விஷயத்தைப் பற்றி பிரசங்கித்தபோது குறிப்பிட்டார். அச்சமயம் கனம் இராஜகோபாலாசாரியர் இவ்விஷயத்தைப்பற்றிப் பேசியபோது: நிருவாங்கூரில் வியவசாயம் அபிவிருத்தியடைந்திருப்பதற்குக் காரணம் அந்த ஏறக்குறைய எல்லோரும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பதனாலேயேதானென்றும், பிரிட்டிஷ் இந்தியாவில் அவ்வாறு அபிவிருத்தியடையாமலிருப்பதற்குக் காரணம் போதுமான கல்வியறிவு இல்லாமையேயென்றும் குறிப்பிட்டார். ஆகலால், தேசமுற்போக்குக்குக் கல்வியே அடிப்படையாக இருக்கிறதென்பது கவனிக்கத்தக்கது.

### Protecting cattle from Flies.

கால்நடைகளை ஈக்கள் தொந்தரை செய்யாமல் பாதுகாப்பது:—கால்நடைகளை ஈக்கள் தொந்தரை செய்யாமலிருப்பதற்குச் சில பரீக்ஷைகள் அமெரிக்கா ஐக்கியநாடுகளின் கவர்ன்மெண்டார் செய்து பார்த்திருக்கிறார்கள். சில திரவப்பொருள்களை கால்நடைகளின்பேரில் தடவிவிட்டால், பிறகு ஈக்கள் அவைகளை அணுகுவதுகூட இல்லை.



# Industry.

## கைத்தொழில்.

### Government Aid to Industries.

கைத்தொழில்களுக்குக் கவர்ன்மெண்டார் உதவி செய்தல்:—சென்றமாதம் லக்னௌ நகரில் இந்தியக் கைத்தொழில் கான்பரென்ஸ் கனம் வீதநாதராய் பஹதூர் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் கூடிற்று. அப்போது அவர் இந்தியக்கைத்தொழிலின் அபிவிருத்தியைப்பற்றிப் பேசிய பலவிஷயங்களும் வேறொரு பத்தியில் எழுதப்பட்டிருக்கின்றன. அவர் கைத்தொழில்களுக்குக் கவர்ன்மெண்டார் உதவிசெய்வதைப்பற்றிப்பேசியது வருமாறு:—

"ஒரு தேசத்தின் தொழில்கள் அபிவிருத்தியடைவதற்கு அந்தத்தேசத்து இராஜாங்கத்தாரின் உதவி அவசியம் வேண்டும். மேனாடுகள் பலவற்றிலும் இராஜாங்கத்தாரின் உதவியைக்கொண்டே ஏராளமாகக் கைத்தொழில்கள் முற்போக்கடைந்து வருகின்றன. ஜப்பான் தேசத்திலேயும் இராஜாங்கத்தவர்களின் உதவியால் கைத்தொழில்கள் விருத்தியடைந்திருக்கின்றன; தொழில்களுக்கு நஷ்டம்வருவதாயிருந்தாலும், போதிய சகாயமின்றி நசித்துப்போவதாயிருந்தாலும் இச்சமயங்களில் இராஜாங்கத்தார் அவைகளுக்கு உதவிசெய்து தொழில்களை விருத்திக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். மிகுந்தலாபம் தரக்கூடிய பலதொழில்களை ஜப்பான் கவர்ன்மெண்டாரே முதலில் நடத்தி ஜனங்களுக்குக் காட்டி, பிறகு அவர்களுக்கு ஒப்பிக்கிறார்கள். இதோடு, கவர்ன்மெண்டாருக்குவேண்டிய எல்லாச்சாமான்களும் அத்தேசத்திலேயே செய்யப்பட்டவைகளாக இருக்கவேண்டுமென்ற நிபந்தனைகள் ஏற்படுத்தியிருப்பதோடு, இன்னும் தொழில் அபிவிருத்திக்கு அநுகூலமான பல சட்டங்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

"இந்தியாவில் தொழிலபிவிருத்திக்காக,கவர்ன்மெண்டார் பல பிரயத்தனங்கள் செய்துவருகிறார்கள். இவைகளை எவ்வாறு விருத்திசெய்வது என்பதையும், இவை சம்பந்தமாய்ப் பல ஆராய்ச்சிகளைச் செய்வதையுங்குறித்துக் கவர்ன்மெண்டார் 'கைத்தொழில் கமிஷன்' என்ற ஒரு கமிஷனை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதில் தொழில் நிபுணர்களான இந்தியர்சிலர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இம்முயற்சியினால் இந்தியத்தொழில்களுக்கு நற்காலம் பிறக்குமென்றே நம்புகிறேன்.

"கவர்ன்மெண்டார் தொழில்களை விருத்திசெய்ய வேண்டுமானால், தொழில் சம்பந்தமாய் அவர்களுடைய நோக்கம் விசாலமாயிருக்கவேண்டும். கவர்ன்மெண்டு பாங்கிகள் தகுந்த ஜாமீன்பேரில் குறைந்தவட்டிக்குக் கைத்தொழில்களின் அபிவிருத்திக்காகக் கடன்கொடுக்க வேண்டும். தொழிற்பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவதற்குவேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுக்கவேண்டும். க்ஷீணித்துப்போகும் தொழில்களை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டு அவைகளை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரவேண்டும்.

"கவர்ன்மெண்டார் தொழில்களுக்குப் போதுமான உதவிசெய்ய முன்வரும் விஷயத்தில், அவைகளுக்கு வேண்டிய முதல் சேகரிப்பதும் கஷ்டமில்லை. சில தொழில்களைக் கவர்ன்மெண்டாரே ஆரம்பித்துநடத்திக் கொண்டுவந்தால், அவைகளைப்பார்த்து ஜனங்களும் தங்கள் முதலைக்கொண்டு அவ்வாறே செய்யக்கூடும்.

"கைத்தொழில் அபிவிருத்திக்காக ஐக்கிய நாணயச் சங்கங்களை உழைக்கச்செய்தால், ஆங்காங்கு இந்தியர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தொழில்கள் அபிவிருத்தியடையும்."

### Paper from Cotton Stalks.

பருத்திக் காம்பிலிருந்து காகிதஞ்செய்தல்:—இப்போது நடக்கும் மகாயுத்தத்தின் காரணமாக மேனாடுகளிலிருந்து ஏராளமாகக் காகிதம் முதலியன வாராததுபற்றி அவற்றின் விலை பலமடங்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. எலிச்பூர்வாசியான மிஸ்டர் ஜி. என். ஸஹஸ்ரபுத்தி என்ற ஒருவக்கீல பருத்திக்காம்பிலிருந்து காகிதம் செய்யும் தொழிலைக் கண்டுபிடித்திருக்கிறார். பருத்திக் காம்புகளைத் துண்டுதுண்டாக வெட்டி ஓர்விதக்காரம் போட்டுத் தண்ணீரில்பிசைந்து உஷ்ணமான அறையில் வேகவைத்து, பிறகு, வெந்தவுடன் காம்புகளைச் சுத்தம் செய்து, இன்னும் பல முறைகளைச்செய்து காகிதம் செய்யப்படுகிறது. எவ்விதமாவது இந்தியாவில் இச்சாமான் செய்யப்பட்டு அன்னியநாட்டை எதிர்பாராமல் இருக்கவேண்டும். இந்தியாவில் ஏராளமாகப் பருத்தி சாகுபடிசெய்யப்படுவதால், வேண்டியவளவு பருத்திக்காம்புகள் அகப்படுமென்பதற்கு ஐயமில்லை.

# Commerce.

## வியாபாரம்.

### Hints for a Business Man.

வியாபாரி கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—வர்த்தகம்செய்ய விரும்புகிறவர்கள், தங்களுக்கு அத்தொழிலில் நிரம்பப் பழக்கம் இருக்கிறதாவென்று கவனிக்கவேண்டும். அதற்காக ஒரு வியாபாரியிடத்தில் பழகியிருப்பது நல்லது. வியாபார விஷயங்களை அறிந்துகொள்வதற்கு அனுபவமே சிறந்தது. தங்கள் அனுபவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும், விசாலப்படுத்திக்கொள்ளவும் பலபத்திரிகைகளையும் புத்தகங்களையும் படிப்பது அவசியமாகும்.

ஒருதொழிலை ஆரம்பிக்குமுன் அதைப்பற்றித் தீர்க்கமாக ஆலோசிக்கவேண்டும். வீண்மனோராஜ்யம் பண்ணுவதில் யாதுபயன்? தனது யோசனைகளை பிறர்க்குத் தெரிவித்து, அவர்களுடைய அபிப்பிராயங்களையுந் தெரிந்துகொள்ளவேண்டும். இவ்விரண்டிலும் எது நன்மையைப் பயக்கக்கூடியதோ, எது சாதகமானதோ அதையே நன்கு ஆலோசனைசெய்து கைப்பற்றவேண்டும். வியாபாரிகள் பலவிஷயங்களையும் கவனிக்கவேண்டியிருப்பதால், அவர்கள் அப்போதைக்கப்போது அவசியம் செய்யவேண்டியவேலைகளைக் குறித்துவைத்திருந்து அதன்படி செய்துவரவேண்டும்.

சிறுவர்கள் வர்த்தகத்தில் நுழைவதாயிருந்தால், முதலில் அவர்கள் ஒரு வியாபாரியினிடத்தில் பழகவேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு வியாபாரத்திலுள்ள லாபநஷ்டங்களும், இன்னும் பலவிஷயங்களும் நன்கு புலப்படும்.

வியாபாரிகளுக்கு இன்றியமையாத குணங்கள் சில பொருந்தியிருக்கவேண்டும். அவர்கள் எப்போதும் சந்தோஷமுகத்தையுடையவர்களாகவேயிருக்கவேண்டும். தங்களிடம் வருபவர்களிடத்தில் இனிமையாயும் அவர்களுக்குத் திருப்திகரமாயும் நடந்து, அவர்களைச் சிநேகர்களாக்கிக்கொள்ளவேண்டும். வியாபாரிகள் மிகுந்த பொறுமையுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியம். சரக்குவாங்கவருகிறவர்கள் எல்லோரும் சாந்தகுணமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். ஆதலால், அவர்களுக்குத் தகுந்தபடி நடந்துகொள்ளவேண்டும். வியாபாரிகள் கோபக்காரர்களாயிருந்தால், அவர்களிடம் கிராக்கிகள் வருவது கஷ்டம். வருபவர்களிடம் வேடிக்கையாகப்பேசி அவர்களை இன்புறச்செய்யும்சக்தி வியாபாரிகளுக்கு இருக்கவேண்டும். வியாபாரத்தில் லாபம்வந்த காலத்தில் சந்தோஷப்படுவதும், நஷ்டம்வந்தகாலத்தில் அதைரியப்படுவதும் ஒருபோதும்கூடாது. இவ்விரண்டையும் சமமாகப்பாவிக்கவேண்டும். அப்பொழுதுதான் லாபம்காண ஹேதுவாகும். இப்படி இரண்டையும் சமமாகப்பாவிக்கப்போதுமான சக்தியும் மனவலிமையும் இல்லாவிட்டால், அப்படிப்பட்டவர்கள் வியாபாரம் செய்யாமல் சும்மாயிருப்பது நலம். இவ்விஷயத்தை வியாபாரிகள் ஆழ்ந்த கருத்துடன் ஆராய்ச்சிசெய்து அறியவேண்டும்.

ஒருதொழிலைச் செய்கிறவர்கள் அதிலேயே தங்கள் முழுக்கவனத்தையுஞ் செலுத்தி அதை வெற்றிகரப்படுத்தவேண்டும். ஒன்றைச் செய்துகொண்டு பலவற்றைக் கவனிக்கமுயன்றால், ஒன்றிலும் போதுமான பயிற்சி பெற முடியாமற்போய்விடுகின்றது. மேலும், ஒருதொழிலில் நஷ்டம்வருங்காலத்தில் அதைவிட்டு வேறு தொழிலை ஆரம்பித்தால், முதலிற்செய்த தொழிலில் லாபம்வரும்சமயத்தை எதிர்பார்க்கமுடியாமற்போய் விடுகிறது. ஆதலால், ஒருதொழிலை ஆரம்பித்து அதிலேயே தம்முழுக்கவனத்தையும் செலுத்திவந்தால், கடையில் தம்மனோபீஷ்டம் நிறைவேறுவது திண்ணம்.

### Trade in Japan.

ஜப்பான்தேசத்தில் வியாபாரம்:—இம்மகாயுத்தம் ஆரம்பித்தபிறகு ஜப்பான்தேசமானது தனது கைத்தொழிலையும், வியாபாரத்தையும் பலமடங்கு விருத்திசெய்துகொண்டதென்பது வெளிப்படை. நிலக்கரியிலிருந்து சில சாயவகைகள் செய்யப்படுகின்றன. இத்தொழிலானது ஜப்பான்தேசத்தில் 1½-கோடி ரூபாய் மூலதனத்துடன் ஒருகம்பெனியால் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இக்கம்பெனிக்கு ஜப்பான் கவர்ன்மெண்டார் போதுமான ஆதரவுகொடுத்திருக்கிறார்கள். இத்தொழிலில் 100-க்கு 8-வீதம் லாபம் கிடைக்காவிட்டால், அந்த நஷ்டத்தைக்கவர்ன்மெண்டாரே கட்டிக்கொடுப்பதாய் வாக்களித்திருக்கிறார்கள். ஒரு டன் நிலக்கரியிலிருந்து ஒரு ராத்தல் சாயம் கிடைக்குமாம். இச்சாயமானது நூல் தோல் முதலியவைகளுக்குப் போட உதவுமாம். இந்தியாவில் ஒவ்வொருவருஷமும் சுமார் 2 கோடி டன் நிலக்கரி வெட்டி எடுக்கப்படும். இவ்விதமான முயற்சிகள் இங்கு ஒன்றையும் காணோம்.



# Co-operation.

## கூட்டுறவு.

### Madras Provincial Co-operative conference.

மதராஸ் மாகாண ஐக்கிய நாணயகான்பரேன்ஸ்:—இந்த கான்பரென்ஸானது சென்றமாதம் 22-ந்தேதியில் சென்னைப் பச்சையப்பன்காலேஜ் மண்டபத்தில் கூடிற்று. அப்போது, கனம் மிஸ்டர். கில்மான் அக்கிராசனம் வகித்தார். வரவேற்புக் கமிடியின் சேர்மெனை மிஸ்டர். கே. பி. ராமநாதன், கான்பரென்ஸ் பிரதிநிதிகளை வரவேற்று உபசரித்துப் பின்வருமாறு பேசினார்:

"ஐக்கிய நாணயச்சங்கங்களின் முற்போக்குக்காக உழைத்து வந்தவர்களில் சிலர் காலமாய்விட்டபடியால், அது நம்முடைய முயற்சிக்கு ஒருபெரிய நஷ்டமேயாகும். இவ்வருஷம் கூட்டுறவுமுயற்சிச்சங்கங்கள் 250க்குமேல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவென்றும், நாளுக்குநாள் அதிகமெம்பர்கள்சேர்ந்துவருகிறார்களென்றும், அதில் மூலதனம் 100-க்கு 20-வீதம் உயர்ந்திருக்கிறதென்றும் கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் கூறுகிறார். ஆதலால், இச்சங்கங்களின் மெம்பர்கள் பொருளாதார விஷயத்திலும் மற்றும் பலதுறைகளிலும் அபிவிருத்தியடைந்து வருகிறார்களென்பதற்கு ஐயமில்லை.

"கூட்டுறவுச்சங்கங்கள் பலவிசேஷ நன்மைகளைப் பயக்கக்கூடிய சாதனங்களாயிருக்கின்றன. இச்சங்கங்களை மேன்மேலும் விருத்திபெறும்படி செய்ய நாமெல்லோரும் முயலவேண்டும். மாகாணப்பாங்குகள் ஏற்படுத்துவதைப்பற்றியும், கூட்டுறவுமுயற்சிச் சங்கங்களின் மேற்பார்வைபார்க்கும் விஷயத்தைப்பற்றியும் ஆலோசனைசெய்து தீர்மானிக்கவேண்டியிருக்கின்றது. கூட்டுறவுச்சங்கங்களின் பல விசேஷ நன்மைகளைப்பற்றிய விஷயங்களை ஜனங்களுக்குள் பரவச்செய்யவேண்டும். இதற்காக 'கோவாபரேடிவ்புல்லடின்' என்ற ஒருபத்திரிகை இருக்கிறது. அது நான்குமாதத்திற்கு ஒருதடவை வெளிவருகிறது. அதைக்கூடியசீக்கிரத்தில் மாதத்திற்கு ஒருமுறை வெளிவர முயற்சிசெய்யவேண்டும். இப்படிச்செய்தால், இச்சங்கங்களின் நன்முயற்சி நாடெங்கும் பரவி மிகுந்த அபிவிருத்தி ஏற்படும்." பிறகு பம்பாய் ராஜதானியில் இச்சங்கங்களின் அபிவிருத்தியைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள்பேசியபின் அக்கிராசனாதிபதியான மிஸ்டர். கில்மான் பேசியதன்முக்கிய சாராம்சம் வருமாறு:—

ஐக்கிய நாணயச்சங்கங்களின் அபிவிருத்தி சென்ற ஆறு வருஷங்களாகத் திருப்திகரமாகவே யிருக்கிறது. 1910-11-ம்வருஷத்தில் 44,000 மெம்பர்களுடன் 596 சங்கங்கள் இருந்தன. ஆனால், 1915-16-ம் வருஷத்தில் 136,000 மெம்பர்களுடன் 1,800 சங்கங்களுக்கு அதிகப்பட்டன. இவைகளால் கையாளப்பட்ட மூலதனம் ரூ. 24 லட்சத்திலிருந்து ரூ. 45 லட்சத்துக்கு அதிகப்பட்டது. இதனால், ஜனங்கள் ஐக்கியச்சங்கங்களின் அவசியத்தை எவ்வாறு உணருகிறார்கள் என்பது விளங்கும்.

கவர்ன்மெண்டு சிப்பந்திகளைப் பிரதம சங்கங்களின் மேற்பார்வையைப் பார்க்கவிடக்கூடாது. இதைப் பொது ஜனங்களே பார்த்துவரவேண்டும். சங்கங்களைச் சோதனைசெய்ய இன்னும்பல யூனியன்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இந்த யூனியன்கள் தங்கள் கடமைகளை பக்ஷபாதமன்றி நடத்திவரவேண்டும்.

இம்மாகாணத்தில் கடன் கொடுத்து வாங்கும் சங்கங்களே அதிகமிருக்கின்றன. ஆனால் வியவசாய சம்பந்தமாய், அதாவது: வியவசாயப்பொருள்களை வாங்கவும், விற்கவும், விதைகளை வாங்கி வியவசாயிகளுக்குக் கொடுக்கவும், கால்நடைகளை இன்ஷியூரென்ஸ் செய்யவும் ஆகிய பல விஷயங்களைக் கவனிக்க ஐக்கியச் சங்கங்கள் ஏராளமாக இல்லை.

இவ்வாறு அக்கிராசனாதிபதி பேசிவிட்டு, இந்த யுத்தம் முடிந்த பிறகு இந்தியாவின் வியவசாயப் பொருள்களுக்கு மிகுந்த கிராக்கியிருக்குமென்றும், ஆகையால் வியவசாய சம்பந்தமாய் உழைக்க ஐக்கியச்சங்கங்கள் முற்படவேண்டுமென்றும் கூறித் தமது பிரசங்கத்தை முடித்தார்.

### Supply of Agricultural Implements.

வியவசாயக் கருவிகளை ஸப்ளை செய்தல்:—மேனாடுகளில் விசேஷமாய் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் வியவசாய சம்பந்தமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் பல இருக்கின்றன. இச்சங்கங்கள் தங்கள் மெம்பர்களின் உபயோகத்துக்காக வியவசாயக்கருவிகளை வாங்கி வாடகைக்குக் கொடுக்கின்றன. வாடகை விகிதமானது அதிக லாபம் தரக்கூடியதாகவேயிருக்கும். இப்படி வாடகைக்கு விடுவதனால் கொஞ்சகாலத்திற்குள் வியவசாயக்கருவிகளுக்குப் போட்ட பணம் வந்து விடுகிறது. அவ்வப்போது கிடைக்கும் லாபப்பணத்தைச் சேர்த்து இன்னும் புதிய கருவிகளை வாங்குவார்கள். இவ்வாறு கொஞ்சகாலத்திற்கு வேலை செய்துவந்தால் சங்கத்துக்கு ஏராளமாக வியவசாயக் கருவிகள் சேர்ந்துவிடுகின்றன. வியவசாயிகளும் அவ்வப்போது கிடைக்கும் நூதனகருவிகளைக் கொண்டு தங்கள் நிலங்களைப் பயிர் செய்து மிக்க லாபத்தையடைய ஹேதுவாகிறது. வியவசாய தேசமாகிய இந்தியாவிலும் இவ்வித முறைகளை எல்லாவிடங்களிலும் அநுஷ்டிப்பது அவசியமாகும்.

## Sanitation and Medicine.
## சுகாதாரமும், வைத்தியமும்.

### Neuralgia.

ஒற்றைத் தலைவலி :—ஒரு வைத்தியர், தாம் ஒற்றைத் தலைவலிக்குச் செய்த சிகித்சையை, 'வைத்திய கலா நிதியில்' பின் வருமாறு எழுதுகிறார்:—

இந்த வியாதிஸ்தர் பல ஆஸ்பத்திரிகளிலும் நாட்டு வைத்தியர்களிடத்திலும் சிகித்சைசெய்து கொண்டு பலனில்லாமற்போகவே, கடைசியில் என்னிடம் வந்தார். முன்னால் நான் அவரைப் பார்த்திருக்கும்போது இருந்த தேகதார்ட்யம் பெரும்பாலும் குன்றிப்போய் மிகவும் இளைத்திருந்தார். அவருடைய முகம் ஏங்கி விசாரமுற்றிருந்தது. கண்கள் பாழிபோல் ஆழ்ந்து விட்டன. உதடுகறுத்து முகம் வெளிறி, நாக்கு வெளுத்துத் தடித்திருந்தது. ஆகாரத்தில் வெறுப்பு விசேஷித்திருந்தது. இத்துர்க்குணங்கள் யாவும் பொறுக்க முடியாமல், தமக்குண்டாயிருக்கும் தலைவலியினாலேயே என்று அவர் சொன்னார். தலைச்சுற்றலும் மயக்கமும் சில சமயம் உண்டாவதுண்டு. சிலநாள் மிகவும் கறுத்துத்திரிபோலவும் சிலநாள் குழம்பாகவும், சிலசமயம் தண்ணீரும் சக்கையுமாகவும் மலம் வெளியாவது வழக்கம் என்று சொன்னார். இவைகளையெல்லாம் நான் கருத்துடன் கவனித்தேன். இவர்க்குத் தலைவலி ஒன்று முக்கியமான வியாதியாகக் குறிப்பிடக்கூடிய நிலைமையில் உண்டாயிருந்தபோதிலும், முற்கூறிய மற்றகுறிகளில் தலைவலியும் ஒருகுறியாக இருக்கவேண்டுமென்றும், இவற்றிற்கெல்லாம் ஆதாரமாக வியாதியொன்று பிரத்தியேகமாயிருக்கவேண்டுமென்றும் யோசித்து, எனக்குள் ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். பிறகு முதல்நாள் அடியில் குறிப்பிடப்படும் ஔஷதத்தைக் கொடுத்தேன்.

| | | |
|---|---|---|
| வாய்விடங்க சூர்ணம் | குன்றுமணி எடை | 10. |
| குராஸானி ஓமம் | ஷை | 10. |
| பலாசவித்துச்சூர்ணம் | ஷை | 5. |
| பூரபஸ்மம் | அரைக்கால் நெல் எடை. | |

இவற்றைக் கலந்து, வேளை ஒன்றுக்கு இதே அளவாக மூன்றுவேளை உட்கொள்ளச் செய்தேன். மறுநாள் தங்களுடைய சார்ங்கதரசம்ஹிதையில் கூறப்பட்டுள்ள அபயாமோதகம் என்னும் ஔஷதத்தை விரேசனத்திற்குக்கொடுத்தேன். எழெட்டுத்தடவை வெகு நன்றாகப் பேதியாய்விட்டது. ஒவ்வொரு விரேசனத்தோடும் இரண்டு மூன்று பூச்சிகள் வீதம் 17 அல்லது 18 பூச்சிகள் வயிற்றிலிருந்து விழுந்தனவென்றும், அப்பிணியாளி மிகவும் களைத்துப்போய்ப் பேசவும் முடியாமல் விழுந்திருக்கின்றார் என்றும், பேதியை நிறுத்தி அவரைக் களைதீரச் செய்யவேண்டுமென்றும் ஒரு ஆள் என்னிடம் ஓடிவந்து சொன்னான். பிறகு அப்பிணியாளியிருக்குமிடஞ் சென்று, அவரைப் பார்வையிட்டதில் அவ்வளவு பூச்சிகளும் பதனழிந்த மலங்களும் அதிகமாய் வெளியானதால், அவர்க்கு மயக்கமுண்டாயிருப்பதாகவும், வேறுவிதத்தில் கெடுதலான குறி ஒன்றுமில்லையென்பதாகவும் உணர்ந்து, அன்னத்தைக் கொஞ்சம் மோரில் கரைத்து மெதுவாக உட்கொள்ளச்செய்தேன். பிறகு உடம்பிலும் நெற்றியிலும் வெந்நீரைத் தெளித்துக் கழுவவும்சொன்னேன். பிணியாளி களைதீர்ந்து கண்விழித்துப் பார்த்தார். பிறகு சற்றுநேரத்திற்கெல்லாம் எழுந்துட்கார்ந்தார். இதற்கு மறுநாள்முதற்கொண்டு அவர்க்குத் தலைவலி பெரும்பாலும் குறைந்துவிட்டது. மறுபடியும் இரண்டுநாள் கழித்து முன்கொடுத்த ஔஷதங்களையே பாதியளவில் கொடுத்து விரேசனத்திற்கும் கொடுத்தேன். மறுபடி 6 பூச்சிகள் வெளியாய்விட்டன. அவருக்குப் பலம் நன்றாக உண்டாவதற்காக இப்பொழுது கூஷ்மாண்ட லேகியம் கொடுத்துவருகிறேன். தலைவலி முற்றிலும் நீங்கி, முன்னிருந்த எல்லாவித துர்க்குணங்களும் மறைந்து, அன்னத்தில் விருப்பமும், வேலைசெய்வதில் உத்ஸாஹமும் உண்டாய் அவர் மிகவும் சௌக்கியமான நிலைமையில் இருந்துவருகிறார்.

### Water.

தண்ணீர்:—தண்ணீரானது மனிதர்களுக்கு இன்றியமையாதது. அது ஆகாயத்தினின்று வரும்பொழுது அசுத்தமான தூசி முதலியவற்றால் கெட்டுப்போகின்றது. ஆதலால், மழைத்தண்ணீரை அப்படியேபருகுவது உசிதமன்று. ஆழமாக வெட்டப்பட்ட கிணற்றுநீரைப் குடிப்பது நல்லது. கிணற்றுக்கருகில் மரங்களாவது, மாட்டுத்தொழுவங்களாவது அல்லது சாக்கடையாவது இருந்தால், அத்தகையகிணற்றுநீரை ஒருபோதும் சாப்பிடக்கூடாது. ஆற்றுநீரைக் காய்ச்சிச் சாப்பிடவேண்டும். ஏனெனில், அதில் மீன்பிடிப்பதாலும், ஆடுமாடுகளைக் குளிப்பாட்டுவதாலும் இன்னும் பல விஷயங்களாலும் அசுத்தமாய் விடுகின்றது. குழாய்த் தண்ணீர் பானத்திற்கு நல்லது. தண்ணீர் அசுத்தப்பட்டால் அதில் காலராகிருமிகள் சேருகின்றன. ஆதலால், குடிக்கும் ஜலத்தை எப்போதும் காய்ச்சியே குடிக்கவேண்டும் இவ்வாறு தண்ணீரைப்பற்றி கனம் டாக்டர் சுப்பையா எம். டி. திருக்காட்டுப்பள்ளியில் உபந்யசித்தார்.



# General Notes.
# பொதுக் குறிப்புக்கள்.

## Ladies' Column.
## பெண்கள் பத்தி.

### Hints on Rearing Children.

குழந்தைகளை வளர்ப்பதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—குழந்தைகளுக்குத் தாய்பால்தான் மிகவும்சிறந்தது. தாய் தன் குழந்தைக்குப் பால் கொடுப்பதனால் குழந்தை சௌக்கியமடைவதோடு அவள்தேகமும் வியாதியற்றிருக்கின்றது. குழந்தைகளுக்குத் தாய்பால் ஒத்துக்கொள்ளாவிட்டால், தாய் சாப்பிடும் ஆகாராதிப் பொருள்களில் ஏதாவது தப்பு இருக்கவேண்டுமென்று அறியவேண்டும். ஆதலால், தாய்மார்கள் ஆகாராதிவிஷயங்களில் வெகு ஜாக்கிரதையாயிருந்து, குழந்தைக்குத் தன்பாலையே புகட்டவேண்டும் குழந்தையினுடைய ஆகாரத்துக்கு ஓர்திட்டம் இருக்கவேண்டும். அது அழும்போதெல்லாம் பால் புகட்டுவதுகூடாது.

குழந்தைபிறந்து இரண்டு மாதங்கள்வரையில் பகலில் இரண்டு மணிக்கு ஒருதடவையிலும், இரவில் நான்கு மணிக்கு ஒருதடவையிலும் ஆகாரம் கொடுக்கப்படவேண்டும். பிறகு, மூன்றுமாதங்களுக்கப்பால் பகலில் மூன்றுமணிக்கு ஒருதடவை ஆகாரம் கொடுக்கப்படவேண்டும்.

தாயானவள் பிரஸவித்த நாலைந்து மாதங்கள் வரையில் தன்தேகத்தைச் சிரமப்படுத்திக்கொள்ளாமலிருக்கவேண்டும். தகுந்தபடி புஷ்டி கொடுக்கக்கூடிய ஆகாரங்களைப்புசிக்கவேண்டும். குழந்தைக்குத் தாய்பால்தான் ஒன்பதுமாதங்கள்வரை கொடுக்கப்பட்டுவரவேண்டும். அப்படித் தாய்பால் இல்லாவிட்டால், நல்ல பசுவின் பாலைக் கொடுக்கலாம். அப்பாலானது வியாதியில்லாத மாடுகளினின்று கறக்கப்படுகிறதாவென்பதைக் கவனிக்கவேண்டும். குழந்தைகள் தாகத்தினால் அழுதால், நன்றாய்க் கொதித்த வெந்நீரைஆற்றி வேண்டிய அளவு கொடுக்கலாம். குழந்தைகளுக்கு எம்மருந்துகளைக் கொடுக்க வெண்ணினாலும் வைத்தியர்களுடைய அநுமதியின்றி ஒன்றும் செய்யக்கூடாது.

குழந்தைகளின் உடம்பு எப்போதும் சூடாகவேயிருத்தல் அவசியம். அதற்காக, கம்பளித்துணிமுதலியவற்றால் சொக்காய்தைத்து அவைகளைப் போட்டு வைக்கவேண்டும்.

நல்ல காற்றோட்டமுண்டாவதற்கு, படுக்கையறையில் ஜன்னல்கதவுகளைத் திறந்தேவைத்திருக்கவேண்டும். குழந்தைகளை அதிகமாக இரவில் வெளியே கொண்டு போகக்கூடாது.

## Boys' Column.
## சிறுவர் பத்தி.

### Good Advice.

நற்போதனை:—"கீழோராயினும் தாழவுரை" என்பதை நீ சிந்தித்து மனதில் வை. எவரிடமும் அமைதியாயிருப்பதனால் அபகீர்த்திவராது. அது உன்னை மேன்மைப்படுத்தும். உன் பெற்றோர்களை மேன்மைப்படுத்தும். உனது குலத்தைமேன்மைப்படுத்தும்.

பிறருடைய குற்றங்களைப் பாராட்டிப் பேசுவதனால் உனக்கு லாபமொன்றுமில்லை; அபகீர்த்தியைச் சம்பாதித்துக்கொள்ளுகிறாய். அது உன் அபிவிருத்திக்குப் பெரியதடையாயிருக்குமென்பதை நீ அறி.

உன்னுடைய சிநேகிதனைக்கொண்டு உன்னுடைய குணங்களை அறியலாம். ஆதலால், நீ நற்குணமுள்ள சிநேகிதனையே தேடு.

அருள் என்பதை நீ சிந்தனைசெய். இரக்கமில்லாதவர்கள் எவ்வளவு மேன்மையானகுலத்தில் உதித்திருந்தாலும் அவர்கள் கீழ்மக்களாகவே கருதப்படுவார்.

நீ உன்னைப்பற்றி அதிகமாய் நினைத்துக்கொள்வாயானால், அது உனது அபிவிருத்தியைத் தடைசெய்யும். அதுவிஷயத்தில் நீ ஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

### Wooden Horse.

மரக்குதிரை:—சிறியோர் பெரியோர் யாவரும் வேடிக்கையாக ஏறிச்செல்லக்கூடிய ஒருமரக்குதிரை அமெரிக்காவில் செய்யப்பட்டு உபயோகத்திலிருந்து வருகிறது. இக்குதிரையின் கால்கள் முன்னும் பின்னும் போகத்தக்கவிதமாய் இணைக்கப்பட்டுள்ளன. குதிரையின் மேற்பக்கத்திலுள்ள ஒரு பிடியைத்திருப்புவதால், அதன் கால்கள் ஒன்வொன்றாய் எழும்பி முன்னே போகின்றன ; இதனால் குதிரை செல்லுகின்றது. இன்னும் வேறுவிதமாய்த் திருப்புவதனால், குதிரை பின்னேபோகவும், தலையசைக்கவும் கூடியதாயிருக்கின்றது. இக்குதிரையின்மேல் பெரியவர்களும் ஏறலாம்; விடுமுறை நாட்களில் பலர் இதை வேடிக்கையாக உபயோகிக்கிறார்கள்.

## Curiosities.

## வேடிக்கைகள்.

### Patriotism.

தேசாபிமானம்:—லண்டன் நகரில் ஆஸ்பத்திரியின் டாக்டர் ஒருவருக்கு அப்பட்டணத்திலிருந்து ஒருசிறுமி பின்வருமாறு எழுதியிருக்கிறாளென்று ஒரு பத்திரிகை கூறுகிறது:—

யுத்தத்தில் காயம்பட்ட வீரர்களின் காயத்திற்கு மனிதர்களின் தோல்கள் தேவையென்றும், அவைகளைக்கொண்டு அக்காயங்கள் சொஸ்தம் செய்யப்படுகின்றனவென்றும் தெரிகிறது. தேசக்ஷேமத்தை யொட்டி என்னுடைய தேகத்தை நான் ஒரு பொருட்டாக எண்ணாமல் அத்தோல்கொடுக்கும் விஷயத்தில் என் தேகத்தை அர்ப்பணம்செய்கிறேன். நான் நல்லசித்தத்துடன்தான் இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய சகோதரர்கள் அறுவர் யுத்தமுனையிலிருக்கின்றார்கள். அவர்களாலான சகாயத்தை அவர்கள் யுத்தமுனையிலிருந்துகொண்டு செய்துவருகின்றார்கள். நான் மேற்கூறியவழியிலாவது என்னுடைய தேசத்திற்கு உதவிசெய்யலாமென்று எண்ணியிருக்கிறேன். ஆதலால், அம்மாதிரி உதவுவதற்கு என்னை எப்போது வரவேண்டுமென்று எழுதுகிறீர்களோ அப்போதுவரச் சித்தமாயிருக்கிறேன்.

### Curious Stones.

விநோதமான கற்கள்:—பாலக்காடு தாலூக்காவைச் சேர்ந்த மான்ஹலூர் என்னுமிடத்தில் ஓர்வித விநோதக்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம். அவற்றைப் பரிசோதிக்குமிடத்து, முற்காலத்தில் சில சவக்குழிகளில்கிடைக்கும் ஓர்வகை மணிகள்போலக் காணப்பட்டனவாம். அவற்றின் குணங்களில் ஒன்று: ஒரு கல்லை ஒரு துணியில் மூடி நெருப்பில்போட்டால் அத்துணி தீப்பிடிப்பதில்லையாம். அவைகளின் மாதிரிகள் சென்னை கவர்ன்மெண்டு பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனவென்று 'வைசிய மித்திரன்' எழுதியிருக்கிறது.

---

பிரபஞ்சமித்திரன் :—(ஜனோபகாரி) இப்பத்திரிகையில் கைத்தொழில், வியாபாரம், ராஜாங்கம் முதலிய விஷயங்களைப்பற்றியும், சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பயன்படும்படியான அநேக அரிய விஷயங்களைப் பற்றியும், பலவியாசங்கள் எளிய நடையில் எழுதப்பட்டு வெளிவருகின்றன. இது ஒரு முதற்றரமான மாதப் பத்திரிகையே யாகும்.

## நாநாவிதக் குறிப்புக்கள்.

## Miscellaneous Notes.

### In the Place of coal.

நிலக்கரிக்குப் பதிலாக:—ஸ்வீடன்தேசத்தில் ஒரு எஞ்சினியர் நிலக்கரிக்குப்பதிலாக ஒரு மாற்றுப் பொருளைக் கண்டுபிடித்திருப்பதாகத்தெரிகிறது. அங்குக் காகிதச்சாலைகள் அநேகம் இருக்கின்றன. காகிதங்கள் கந்தகத்தைக்கொண்டும் மரக்கட்டைகளைக்கொண்டும் தயாரிக்கப்படுகின்றன. மரக்கட்டையில் பாதிதான் காகிதம் செய்ய உபயோகப்படுகின்றது. மீதியானவை வீணாய்ப் போகின்றன. இப்படி வீணாய்ப்போகும் மரத்திலிருந்து ஒருவிதப் பொடியைத் தயாரிக்கும் முறையை மிஸ்டர் ஸ்டிரிலெனர்டு கண்டுபிடித்திருக்கிறார். அப்பொடியானது எரியும் குணத்தில் சிறந்த நிலக்கரிக்குச் சமானமாயிருக்கின்றதாம். இத்தொழிலை ஆரம்பித்துச் செய்வதற்காக நார்வேதேசத்தில் 85 லக்ஷம் பவுன் மூலதனத்துடன் ஒரு கம்பெனி ஏற்பட்டிருக்கின்றது. அங்கு நிலக்கரி வெளிதேசங்களிலிருந்து வந்துகொண்டிருந்ததால், இத்தொழில் நன்றாய் ஸ்தாபிக்கப்பட்டுப் போகும்விஷயத்தில் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் நிலக்கரியில் 100-க்கு 20 பாகம் குறைந்து போகுமென்று தெரிகிறது.

### Physical Training.

தேகப்பயிற்சி:—இந்தியாதேசத்தில் மாணவர்கள் பெரும்பாலும் தங்கள் கல்வி மட்டும் வெகு ஜாக்கிரதையுடன் கவனித்துவருகிறார்களேயொழிய, தேகாப்பியாசக்கல்வியை ஒருபோதும் கவனிப்பதில்லை. இதனால் இவர்கள் எப்போதும் துர்ப்பலமுள்ளவர்களாயும், அடிக்கடி பலவியாதிகளால் பீடிக்கப்படுகிறவர்களாயும், இருக்கிறார்கள். ஆனால், அமெரிக்கா தேசத்திலோ பிள்ளைகள் தங்கள் கல்வியை வெகு ஜாக்கிரதையோடு கவனிப்பதுடன், தேகப்பயிற்சியையும் கைவிடாமல் அப்பியசித்து வருகின்றார்கள். இதனால்அவர்களுடைய தேகசௌக்கியம் குன்றாமலிருந்து, கல்விப்பயிற்சிக்கு மிகுந்த ஆதாரவாயிருக்கின்றது. இவ்விஷயத்தை இந்திய வாலிபர்கள் சிரத்தையுடன் கவனிப்பார்களாக. இவ்வாறு சென்னைத் துரைத்தனத்தாருக்குத் தேகாப்பியாசக் கல்வியில் ஆலோசனை சொல்லும் டைரெக்டர் ஒரு சமயம் சொன்னார்.


# ஜனோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.


3 - MAR 1917

புத்தகம் 2. Vol. II. } நளஹு மாசிமீ FEBRUARY, 1917. { சஞ்சிகை 2. No. 2.

## The Education and its Reforms in India.

## இந்தியாவில் வித்தியாவிஷயமாய்ச் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள்.

சென்ற ஜனவரிமீ 22௳ டில்லிமாநகரில் வித்தியாதிகாரிகளின் கான்பரென்ஸ் ஒன்று கூடியது. அப்போது இந்தியாவின் பல பாகங்களினின்றும் வித்தியா இலாகாத் தலைவர்கள் பிரஸன்னமாயிருந்தார்கள். இக்கான்பரென்ஸை நமது அரசப்பிரதிநிதி திறந்து வைத்தார். அப்போது அவர் : வித்தியாதிகாரிகள் இங்குக் கூடியிருப்பதன் நோக்கம் என்னவென்பதைப் பற்றியும், அவர்கள் இப்போது செய்து முடிக்க வேண்டிய காரியங்களைப்பற்றியும் பேசிப் பிறகு வெளியிட்ட விஷயங்களின் சாராம்சம் வருமாறு:—

### உபாத்தியாயர்களின் திறமை.

"பாடசாலைகள் மிகவும் திறமைபாக நடந்தப்படுவதற்குப் போதகாசிரியர்களே காரணமாயிருக்கிறார்கள். பாடசாலைகள் திறமைபாக நடத்தப்படாமற்போனால், அவைகளுக்காகச் செலவிட்ட பணம் வியர்த்தமேயாகும். ஆதலால், இங்குக் கூடியிருக்கும் வித்தியாதிகாரிகள் இவ்விஷயத்தைப்பற்றி நன்கு ஆலோசிக்கவேண்டும்.

### உபாத்தியாயர்களின் அந்தஸ்து.

"போதகாசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்த வேண்டுமென்றும், அதில் அவர்களுக்கு ஆசையிருக்கும்படி செய்யவேண்டுமென்றும், ஜனங்கள் அதிலேயே தங்கள் வாணாள் முழுவதையும் செலவழிக்கப் பிரியப்படவேண்டுமென்றும் நான் முன்னொருசமயத்தில் சொன்னேன். உபாத்தியாயர்களின் சம்பள விகிதத்தை உயர்த்தும் விஷயத்தைப்பற்றி இங்குக்கூடியிருக்கும் வித்தியாதிகாரிகள் யோசிக்கவேண்டும்.

### உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி.

"உபாத்திமைத்தொழிலுக்காக மனிதர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைப் பயிற்சிசெய்விக்க வேண்டும். இந்தியாவில் இப்போது உபாத்திமைத்தொழில்புரிந்து வருபவர்கள் 267,000 பேர்கள். அவர்களில் பயிற்சிபெற்றவர்கள் 80,000 பேர்கள்தாம். பாடசாலைகள் திறமையாக நிர்வகிக்கப்படுவதற்கும், பிள்ளைகளுக்குத் தகுந்தபடி கல்வி புகட்டுவதற்கும் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் வேண்டியிருப்பதால், இத்தொகையை அதிகப்படுத்துவது அவசியமேயாகும்.

### தொழிற்கல்வியும், வியாபாரக்கல்வியும்.

"இந்தியாவின் தொழில்களை விருத்திசெய்யத் தொழிற்கமிஷன் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுத் தொழில் சம்பந்தமாய்ப் பல விஷயங்களையும் அறிந்து வருகிறது. தொழிற்கல்வியை அபிவிருத்தி செய்வதற்கான அம்சங்களைப்பற்றி அவர்கள் ஆலோசித்துத் தீர்மானிக்கவேண்டும். இதோடு வியவசாயம், வியாபாரம் ஆகிய இவைகளைப்பற்றிய கல்வியையும் விருத்திசெய்ய நீங்கள் முயற்சிசெய்யவேண்டும். இந்தியாவில் வியாபாரம் நாளுக்குநாள் அபிவிருத்தியடைந்து வருகிறது. எனினும், வியாபாரக்கல்வியைப் பரவச்செய்வதற்கான கலாசாலைகள் போதுமானவரை இல்லாமலிருப்பது குறிப்பிடத்தக்கது. இக்குறையை நிவிருத்திக்க இந்தியாவிலுள்ள ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும் வியாபாரக் கலாசாலைகள் ஸ்தாபிக்கப்படுவது அவசியமாகும். சிறுவர்களுக்குத் தொழிற்கல்வியை அனுபவபூர்வமாகக் கொடுக்கவேண்டும். இம்முறையில் பல கஷ்டங்கள் இருப்பினும் இதுதான் சிறந்தது.

### சாஸ்திரீயமுறையில் வியவசாயம்.

"உலகத்தில் பல பாகங்களிலும் நவீனசாஸ்திரமுறையில் வியவசாயம் செய்யப்பட்டு வருகிறது. வியவசாயதேசமாகிய இந்தியாவிலும் வியவசாயக்கல்வியைப் போதிக்கப் பலசாதனங்களை ஏற்படுத்துவது அவசியமேயாகும்.

### பெண்கல்வி.

"ஆண்மக்கள் கல்விகற்று வருவதுபோலப் பெண்மக்களும் கல்விகற்கவேண்டும். ஆண்மக்கள் கல்வி கற்பதற்குத் தகுந்தபடி பெண்மக்களும் கல்வி கற்காவிடின், தேசத்தில் கல்வி பரவச் செய்வதனாலாகிய பலன் யாதொன்றும் உண்டாகாது. இது ஒவ்வொருவருக்கும் தெரிந்தவிஷயமே. பெண்கல்வி விஷயத்தில் நாம் தகுந்தபடி முயற்சிசெய்யவேண்டும். இம்முயற்சியில் இந்தியர்களும் பாரம்பெற்று உழைக்கவேண்டும். ஸ்திரீகளும் இவ்விஷயத்தில் உழைப்பது அவசியமாயிருக்கிறது. ஏனெனில், கல்வி பெண்மக்களைப் பற்றியிருப்பதனால், அவர்களுடைய அபிப்பிராயங்களும் கலந்திருப்பது, அவசியமேயாகும்.

### ஸ்வபாஷை.

"ஸ்வபாஷையில் கல்வி கற்பிக்கப்படாமல் ஆங்கிலத்திலேயே பெரும்பாலும் கல்விபோதிக்கப்படுகிறது. அதனால் பலகஷ்டங்கள் உண்டாகின்றன. உயர்தரக்கல்வி பெறுவதற்கு ஆங்கிலபாஷையே ஏற்றதாயிருக்கின்றது. ஏனெனில், ஸ்வபாஷைகளில் போதுமான பாடபுத்தகங்கள் கிடையா. ஆங்கில ஞானம் நிரம்பப்பெறாத இந்திய மாணவர்கள், விஷயங்களைக் கிரகிக்க முடியாமல் சிரமப்பட்டு மனப்பாடம் செய்யவேண்டி வருகிறது. இது விரும்பத்தகாத விஷயமேயாகும். ஆதலால், எவ்வளவுவரை ஸ்வபாஷையில் கல்வி கற்பிக்கவேண்டுமென்பதையும், அல்லது ஸ்வபாஷையை விட்டு ஆங்கிலபாஷையில் தக்க முயற்சிகள் செய்யவேண்டுமென்பதையும் நன்கு ஆலோசித்தறியவேண்டும்." இவ்வாறு இராஜப்பிரதிநிதி பேசி முடிந்தபின், கல்வி மெம்பராகிய கனம் ஸர் சங்கரன்நாயர் அக்கிராசனம் வகித்து நடவடிக்கைகளை நடத்தினார்.

---

சுதேச பரிபாலினி:—(ஜனோபகாரி.) பொதுஜனப்பிரயோஜனமான விஷயங்களும், வியாபாரம், கைத்தொழில், வியவசாயம் முதலானவைகளைப்பற்றி அறிவை யூட்டத்தக்க குறிப்புக்களும், நீதிமொழிகளும், நவீன ஸங்கல்பங்களும் செறிந்து நிறைந்திருக்கின்றன. "நமது பலசரக்குக்கடை" என்ற தலைப்பின்கீழ் உலக நடவடிக்கையைப் பற்றிய பல ரஸமான விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. பத்திரிகை முழுவதும் தீவிரமான எளிய தமிழ்நடையிலே எழுதப்பட்டு படிப்பவரது கவனத்தைக் கவர்ந்திழுக்கின்றது. இவ்விதமான பத்திரிகைகள்தோன்றி நீண்ட ஆயுசுடன் உலாவிவருவது, தேசத்துக்கும் ஜனஸமூஹத்துக்கும் அதிக நன்மையைத் தருமாகையால், மூன்று ரூபாய்மாத்திரம் வருஷச் சந்தாவுள்ள இந்த ஜனோபகாரி பத்திரிகையைத் தமிழுலகத்தார் ஆதரித்து விருத்திசெய்து கொண்டுவருவார்களென்று எண்ணுகிறோம்.



## Tin and Zinc.

By Mr. K. P. Seshadri Ayangar,

## தகரமும், துத்தநாகமும்.

தகரம் என்பது எல்லோருக்கும் தெரிந்துள்ள அதிஸாதாரணமான வஸ்து. அது அதிக உபயோகமானதென்றும், அதனால் பெட்டி ஜாடி முதலிய எண்ணிறந்த உபயோகமான சாமான்கள் செய்யப்படுகின்றனவென்றும் எல்லாருக்கும் தெரியும். ஆனால், ஜனங்கள் அடிக்கடி பார்த்துப் பழகும் தகரத்தகடு எப்படி செய்யப்படுகின்றது என்று கேட்டால் அநேகருக்குத் தெரியாது. தகரமென்பது வெள்ளீயம் பூசின இரும்புத்தகடே தவிர வேறன்று. தகரத்தில் மெல்லிய தகடு, கெட்டித்தகடு என்று இரண்டுவிதம் உண்டு. மெல்லிய தகட்டுக்கு "ஷீட் டின்" (Sheet Tin) என்பதும், கெட்டித் தகட்டுக்கு "ப்ளேட் டின்" (Plate Tin) என்பதும் இங்கிலீஷ் பெயர்கள். முதலிற் சொன்ன தகரம் தாழ்ந்த சாமான்கள் செய்யவும், பாக்கிங்பெட்டிகள்போன்ற கொஞ்சகாலத்துக்கு உபயோகமான பாண்டங்கள் செய்யப்படுவதற்கும், பின் சொன்ன தகடு கைப்பெட்டி, கெட்டிப் பாத்திரங்கள் முதலியவை செய்யப்படுவதற்கும், உபயோகப்படுகின்றன.

### தகரத்திற்காக இரும்புத்தகடுகள் தயார் செய்வதெப்படி.

கெட்டியும் நல்ல மிருதுவான முதல்தர இரும்பைக் காய்ச்சிச் சுத்தப்படுத்திப் பாளம்பாளமாகத் தயார்செய்துகொண்டு, அவைகளை எஃகு உருளைக்கிடையில் கொடுத்து யந்திரத்தினால் சுற்றித் தகடுகளாக்கி, வரவர நெருங்கியுள்ள உருளைகளுக்கிடையே கொடுத்துச் சுற்றுவதால், அது வேண்டிய அளவுக்கு மெல்லிய தகடாய்விடும். இரும்புப் பாளம் யந்திரத்தில் உருளைகளுக்கிடையே கொடுத்துச் சுற்றப்படுவதால், கடினமாய்ப் போவதை மாற்றி அதை மிருதுவாக இருக்கும்படி செய்ய இடைக்கிடையே அதைத் தீயிலிட்டுக் காய்ச்சி மிருதுவாக்கி வருவார்கள். இரும்புத்தகடுகள் தயாரானதும் அவைகளுக்கு ஈயம்பூசவேண்டியதுதான்பாக்கி. பெட்டிகள், கெட்டிப் பாத்திரங்கள் முதலியவை செய்வதற்கான கெட்டித் தகடுகள் சாதாரணமாகச் சதுரத்துண்டுகளாக வெட்டப்பட்டு அப்புறம் ஈயம் பூசப்படுவது வழக்கம். பெரிய தகடுகள் எந்த அளவு வேண்டுமோ அந்த அளவுக்குத் தகடுகளைத் தயார்செய்துகொண்டு ஈயம் பூசுகிற முறைப்படி ஈயம் பூசுவார்கள். இரும்புத் தகடுகளுக்கு ஈயம் பூசுமுன் அவைகளின் மேற்புறங்களை நன்றாகச் சுத்திசெய்யும்பொருட்டுத் தண்ணீர்கலந்த புளிப்புத் திராவகத்தில் தோய்த்தெடுத்து மணலைப்போட்டுத் தேய்த்து ஜலத்தில் கழுவி, மேலே கொழுப்புப் பூசிவைப்பார்கள். மேற்புறங்களிரண்டிலும் கொழுப்புப் பூசி வைப்பதனால், அத்தகடுகள் உபயோகிக்குங்காலம் வருமளவாயில் தேய்த்த பளபளப்புக் கெடாமல் அப்படியேயிருக்கும். பிறகு உருக்கின ஈயம் இருக்கும் தொட்டியில் அத்தகடுகளை அமிழ்த்திச் சற்றுநேரமிருக்கவிட்டு எடுத்து, ஓரங்களிலிருக்கும் அதிகப்படி ஈயத்தைச் சணலினால் செய்ததுடைப்பத்தினால் துடைத்துவிடுவார்கள். உருக்கின ஈயம் பஸ்மமாக மாறிவிடாவண்ணம், அதன்மேல் உருக்கின கொழுப்பை வார்த்து மூடிவைப்பார்கள். உருக்கின ஈயத்தில் இரும்புத் தகடுகள் அமிழ்த்து எடுக்கப்பட்டதன்பின், அதன்மேலிருக்கும் கொழுப்புப் பசைபோக, உலர்ந்த தவிட்டினால் தேய்த்துச் சுத்தம் செய்வார்கள். அதோடு தகரத்தகடு வேலை முடிந்தது.

### இப்படி இரும்புத்தகட்டிற்கு ஈயம்பூசுவதன் பயன் என்ன?

ஈயம் பூசி உபயோகிப்பதனாலுண்டாகும் பயன்கள் இரண்டு: முதலாவது பார்வைக்கு

அழகு அதிகரிக்கிறது. இரண்டாவது தகட்டின் மேற்புறம் துருப்புப்பிடியாமலும் ஒட்டையாகாமலும் இருக்கக் காப்பது.

### செம்பு பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசும்விதம்.

நமது பாத்திரங்களுக்குக் களிம்பு பிடியாமலிருக்க ஈயம் பூசுகிறோமென்பது எல்லாப் புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் தெரிந்ததுதான். ஆனால், ஈயம் பூசும்விதம் சிலருக்குத்தான் தெரியும். ஈயம் பூசப்படவேண்டிய பாத்திரங்களின் உட்புறத்தை நன்றாகத் தேய்த்துவிட்டு, அவைகளுக்குச் சூடேற்றி நவாச்சாரத்தைச் சுட்டுப் போட்டுப் பொடியாக்கி, ஈயத்தையும் கொஞ்சம் போட்டு உருக்கித் துணியைப் பந்தாகச்சுற்றிக் கொண்டு எங்கும் தடவினால் அந்த ஈயம் எங்கும் சமமாகத் தடவப்பட்டுவிடுகிறது.

### இரும்புத்தகடும், துத்தநாகமும்.

இரும்புத்தகடுகளின்மேல் ஈயம் பூசுவதற்குப் பதிலாகத் துத்தநாகம் பூசும் முறையொன்று கண்டுபிடித்து, அந்தப்படி துத்தநாகம் பூசிய தகடுகளை உண்டுபண்ணியிருக்கிறார்கள். இவைகள் காற்றுமழைக்கு இலக்காகும் இடங்களில் உபயோகிக்கப்படுகின்றன. வீடுகள் கட்டும்பொழுதும், கிணறு தோண்டும்பொழுதும் பக்கத்திலிருக்கும் மண் கிணற்றில் விழாவண்ணம் தடுப்பதற்கும், மழை நீர் தெறிக்காமல் குழாய்மூலமாய்ச் சாக்கடையில் போகும்படி செய்யவும் உபயோகிக்கும் தகடுகள் இந்தத் துத்தநாகம் பூசிய தகடுகளே. இந்தத் தகடுகளுக்கு "ஜிங்க் ஷீட்" (Zinc Sheet) என்றும், "கால்வனைஸ்ட் ஐரன்" (Galvanised Iron) என்றும் இங்கிலீஷில் பெயர்களாம். அன்றியும், ரெயில்வேஸ்டேஷன்களிலும், ஆட்டக்கொட்டகைகளிலும் மடிப்புத் தகடுகளால் கூரைகள் போட்டிருக்கக் காண்கிறோம். அவைகளும் துத்தநாகம் பூசிய இரும்புத்தகடுகளே.

கி. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

---

## Leela Devi.

BY SRIMATHI BALASUNDARI DEVI.

## லீலாதேவி.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

இப்படி கஷ்டமென்றும் சுகமென்றும் பாராமல் அந்தத் தாய்தந்தையர்கள் லீலாவை வளர்த்து வந்தார்கள். ஆனால், அந்தப் பாலிகை மாத்திரம் பிறந்தநாள்தொடங்கிக் கஷ்டமென்பது எப்படிப்பட்டதோ அறிந்தவளல்லள். அந்தத் தம்பதிகளிருவரும் தங்கள் குழந்தைக்காக எவ்விதப்பாடாகிலும் படுவதற்குச் சித்தமாயிருந்தார்கள். அப்படியிருக்க, அந்தக் குழந்தைக்கு எவ்விதமான குறைவாவது எப்படி உண்டாகும்? ஒருவேளை தரித்திரத்தினால் அப்படி ஏதாவது நேரிட்டாலும், சுவர்ணவல்லி அதைக் காட்டாமல் சந்தோஷமாகவே யிருப்பாள். பரம ஏழையான லோகநாதனுடைய பெண் அவ்வளவு செல்வமாய் வளர்க்கப்பட்டு வந்தாளென்பதைக் கேட்டு யாராவது பரிகாசம் செய்யக்கூடுமானாலும், அந்த ஏழைப்பெண் எவ்வளவு சுகமாய் வளர்ந்தாளோ அவ்வளவு சுகமாய் ஆயிரமாயிரம் பாங்கிமார்களுடன் கூடிய ராஜபுத்திரிகூட வளர்ந்திருக்கமாட்டாளென்று வாய்விட்டுச் சொல்வோம். லீலா ஒரு வருஷத்துக் குழந்தையாகி 'ம்மாமா' 'ப்பாபா' என்று கொச்சைசொச்சையாய்ப் பேசலானாள். அதைக்கேட்ட தாய்தந்தையரிருவரும் சகல கஷ்டங்களையும் மறந்து கரையற்ற ஆநந்தக்கடலில் மூழ்கினார்கள். சுவர்ணவல்லி இடுப்பில் குழந்தையை எடுத்துக்கொண்டே எல்லாவேலையும் செய்வாள். சில வேளைகளில் லோகநாதனும் குழந்தையை எடுத்துக்கொள்வான். அவனிடுப்பில் இருக்கும்போது லீலா இன்னும் அதிகமாய்ச் சிரிப்பாள், அப்படிப்பட்ட சிரிப்பைப் பார்த்துக் களிக்கவேண்டுமென்றே சுவர்ணவல்லி குழந்தையைத் தன் நாயகன் கையில் கொடுப்பாள். ஆனால் அந்தக் குழந்தை வெகுநேரம் தகப்பனிடத்தில் இராமல் உடனே தாயினிடம்போகக் குதிக்கும். அவன் விட்டவுடனே தாயினிடம்போய்த் தகப்பன்பக்கமாய்த் திரும்பிப்பார்த்துக் கூச்சலிட்டுச் சிரிக்கும். இப்படியே அடிக்கடி தாய்தந்தையர்களின் இடுப்பிலிருந்து மாறிமாறித்தாவிச்சென்று கூச்சலிட்டுக்கொண்டு, கொச்சையான இனிய மழலைச்சொற்பேசி ஆனந்தமடையும். இவ்வளவு ஆநந்தத்துக்கும் ஏது காரணமோ அது அந்தக் குழந்தைக்கன்றோ தெரியும்! லீலாவுக்குக் கிட்டத்தட்ட இரண்டு வயதாயிற்று. மெல்ல ஒரு அடி இரண்டடி வைத்து நடக்க ஆரம்பித்தாள். இப்பொழுது லீலாவை அவள் தாயார் எப்பொழுதும் இடுப்பில் தூக்கிக்கொண்டு திரிய வேண்டிய அவசியமே இல்லை. வீட்டில் தாயார் வேலைசெய்துகொண்டிருக்கும்போது, லீலா அவளுடைய சேலைத்தலைப்பைப் பிடித்துக்கொண்டு முன்னும்பின்னுமாகத் திரிந்துகொண்டிருப்பாள். தாயார் பருத்தி நூல்நூற்கும் வேளையில் தானும் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு இராட்டினம் சுழல்வதைப் பார்த்து, அதன் மனோஹரமான ஓசையை உற்றுக்கேட்டுப் பரவசமடைவள். எந்தக்காரணத்தைக்கொண்டும் அந்தக்குழந்தை அழுவேமாட்டாள். அவள் அழுவதை எவரும் இதுவரையில் கேட்டதேயில்லை. பசிவேளையிற்கூட அழுதலறியாள். அசாதாரணமான அந்தப் பாலிகையின் தன்மையைப்பார்த்துத் தாய்தந்தையர்கள் ஒவ்வொரு சமயம் கண்ணீர்விடுவார்கள். அவர்கள் அப்படி கண்ணீர்விடுவதைக்கண்டு தானும் கண்ணீர் விடுவள். அவர்கள் திரும்பித் தன்னைப்பார்த்துச் சந்தோஷித்துத் தழுவிக்கொண்டு முத்தங் கொடுத்தால், தானும் மலர்ந்த முகத்துடன் மந்தஹாசம்செய்வள். இதைத்தவிர மற்றெந்தக் காரணத்தினலாவது அந்தப் பாலிகையின் கண்களில் நீர் வருவதில்லை.



கிரமமாய் லீலாவுக்கு ஐந்துவயது நிறைந்து ஆறும்வயது ஆரம்பமாயிற்று. அப்பொழுது நடந்த ஒரு சங்கதியை இதைப் படிப்பவர்கள் அறியவேண்டியது அவசியம்: சாதாரணமாக நாட்டுப்புறத்து ஸ்திரீகள் சாயங்காலத்தில் தாங்கள் வளர்க்கும் செடிகளுக்கு நீர்கொட்டுவது வழக்கமன்றோ? அப்படியே சுவர்ணவல்லியும் அன்று அந்திவேளையில் தன் வீட்டுத் தோட்டத்திலுள்ள செடிகளுக்கு நீர்கொட்டிக்கொண்டிருந்தாள். அதைப்பார்த்து லீலாவும் இடுப்பில் ஒருசிறிய பாத்திரத்தை வைத்துக்கொண்டு தாயாருடன் தானும் செடிகளுக்கு நீர்வார்க்கத் தொடங்கினாள். அப்படி செய்வதைச் சுவர்ணவல்லி பார்த்துப் பரிவுடனே, "அம்மா! உனக்கேன் இந்த வேலை? செடிகளுக்கு நான் நீர் வார்க்கிறேன். நீ ஒன்றும் வார்க்கவேண்டாம்" என்றாள். லீலா அந்த வார்த்தையைக் கேட்டு, மலர்ந்த முகத்துடன், "நான் ஒருத்திமாத்திரம் உட்கார்ந்துகொண்டு என்னசெய்யவேண்டும் அம்மா?" என்றாள்.

சுவர்ண:—குழந்தாய், நீ பக்கத்துவீட்டிலுள்ள உன் ஈடான பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிரு.

லீலா:—நான் போகமாட்டேனம்மா! அவர்கள் நல்லவர்களல்ல. நான் அவர்களோடு விளையாடமாட்டேன். நான் உன்னோடு விளையாடுகிறேன்; செடிகளுக்கு நீர்வார்க்கிறேன்.

சுவர்ணவல்லி குழந்தையின் வார்த்தைகளைக் கேட்டு ஆச்சரியமடைந்து, சிறிதுநேரம் ஒன்றும்தோன்றாமல் அப்படியே நின்று திகைத்துப் போய்விட்டாள். பிறகு கண்களில் நீர் ததும்ப "ஐயோ! என் கண்ணே! தௌர்ப்பாக்கியமுள்ள என் வயிற்றில் பிறந்ததற்கு இதுவா

உனக்கு விளையாட்டு? எளியவர்களின் வீட்டில் பிறந்தாயென்று பகவான் உனக்கு இந்தப் புத்தியைக் கொடுத்தாரா?" என்று சொன்னாள்.

லீலா:—(ஆவலாத்துடன்) — அம்மா! நீயும் அப்பாவும் அடிக்கடி தரித்திரம், கஷ்டம், துக்கம் என்று சொல்லுகிறீர்களே. அப்படியென்றால் என்ன?

ஒன்றுமறியாத அந்தச் சிறுகுழந்தையின் வாயினால் அவ்வளவுவார்த்தைகளைக் கேட்ட கனகவல்லி பின்னும் திகைத்தாள். அக்குழந்தை கேட்ட கேள்விக்குச் கனகவல்லி உத்தரம் என்ன சொல்வாள்? "அம்மா! நீ பெரியவளானபிறகு உனக்கே எல்லாம் தெரியவரும். இப்பொழுது உனக்கு ஒன்றும் விளங்காது" என்றாள்.

லீலா:—அப்படியானால் நான் இப்பொழுது பெரியவளே. நேற்று அப்பா 'எங்க லீலா பெரியவளாய்விட்டாள்.' என்று சொன்னாரல்லவா!

கனகம்:—அப்படி அன்று அம்மா! இன்னமும் பெரியவளாகவேண்டும். அப்பொழுது நீயும் என்னைப்போல் செடிகளுக்கு நீர்வார்க்கலாம். வீட்டுவேலைகளெல்லாம் செய்யலாம். இப்பொழுதே செய்யத்தொடங்கினால் உனக்குக் கஷ்டம் உண்டாகும்.

லீலா:—அம்மா, உனக்குக் கஷ்டமில்லையா?

கனகம்:—இல்லையம்மா! எனக்கு யாதொரு கஷ்டமும் இல்லை.

லீலா:—அப்படியானால் எனக்கு மாத்திரம் ஏன் கஷ்டமுண்டாகும்?

கனகம்:—அம்மா! உனக்கு இப்பொழுது கஷ்டம் தோன்றாது. நீரில் அலைந்தால் ஜலதோஷம் பிறந்து ஜ்வரம் உண்டாகும்.

ஜ்வரமென்று அந்த நான்கு எழுத்துக்களையும் லீலா நிதானமாய் உச்சரித்தாள்.

இதற்குமுன் ஒருதரம் அப்பெண் ஜ்வரத்தினால் பாதைப்பட்டிருந்ததனால், அந்தக் கஷ்டத்தை நினைத்து உடனே கண்களில் நீர்விட்டு, "அம்மா! அப்படியானால் ஜலத்தில் அலைந்தால் உனக்கும் ஜ்வரம் வருமே" என்றனள்.

கனகம் மன்தாளைப்பால் அக்குழந்தையின் கண்ணைத் துடைத்து, குழந்தாய்! இதனால் எனக்கு ஜ்வரம் வராது என்றாள். லீலா வியப்புற்று, "அப்படியானால் எனக்குமாத்திரம் ஏன் ஜ்வரம் வரும்?" என்று கேட்டாள்.

ஸாதாரணமாய் எப்படிப்பட்ட தர்க்கசாஸ்திர நிபுணர்களானாலும் அவர்களுக்கும் அஞ்ஞானிகளும் சிறுபிள்ளைகளும் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிப்பது மஹாகஷ்டம். அப்படியிருக்க, பேதையான கனகவல்லி இச்சிறு குழந்தையின் கேள்விகளுக்கு எவ்வாறுதாம் விடையளிப்பாள்? யாதொருபதிலும் சொல்லாமல் கனகவல்லி மௌனமாய்ச் செடிகளுக்கு நீர்வார்க்கத் தொடங்கினாள். தான் கேட்ட கேள்விகளுக்குத் தாயார் சரியாய் விடையளிக்கவில்லை; அப்பெண் என்னசெய்வாள்? தானும் தாயைப்போல் மௌனம்வஹித்து வேலைசெய்ய ஆரம்பித்தாள். பிறகு இருவருமாய்ச் செடிகளுக்கு நீர் வார்த்தார்கள்.

இவ்விதம் லீலா சிறுவயதுமுதல் தன் அன்னைக்கு உதவியாக வீட்டுவேலைகளையெல்லாம் செய்துவந்தாள்; சிறுபிள்ளைகள் விளையாட அழைத்தாலும் போகமாட்டாள்; அவர்களைப்போல் வீண்காலம்போக்கவுமாட்டாள்; தன் தாயாரைத் தழுவி சம்ஸாரஸம்பந்தமான விளையாட்டையே விளையாடுவாள்.

மத்தியானவேளையில் தாயார் உட்கார்ந்து இராட்டினத்தில் நூல்நூற்கும்பொழுது, லீலா பக்கத்திலுட்கார்ந்துபஞ்சுபன்னிக்கொடுப்பாள். சில நாட்களுக்குப்பிறகு நூல்கண்டுகளையெல்லாம் அருகிலிருக்கும் சந்தையில் கொண்டுபோய் விற்றுவரத்தொடங்கினாள். இந்த வித்தையை இவளுக்கு அடுத்தவீட்டுப்பெண் கற்றுக் கொடுத்தாள்.



## மூன்றாவது அத்தியாயம்.

மேற்சொல்லியபடி லீலா நாளுக்குநாள் தாயின் உபதேசத்தினால் வீட்டுச்சிறுவேலைகளில் மிகவும் தேர்ந்தவளானாள். தாய் தனக்கு ஒன்றும் வேலைசொல்லாவிட்டால், அக்கன்னிகையின் மலர்ந்த முகம் பிரகாசம் குறைந்து வாடிப் போகும். தாயோடு கூடிச் சிறிதுநேரம் வேலை செய்யாமலிருந்தாலும், அவள் வெகுவாகத் துயரப்படுவாள். பெண்குழந்தைகள் எல்லாக் குணங்களிலும் தாயைப்போலல்லவா இருக்கும்? கனகவல்லி இதற்குமுன் தான் திரித்த நூற்கண்டுகளையெல்லாம் அடுத்தகத்து ஸ்திரீயினிடம் கொடுத்துச் சந்தையில் விற்று வரும்படி சொல்வாள்; அப்படி வந்த பணத்தில் அவளுக்குச் சிறிதுபாகம் கொடுப்பாள். இப்பொழுது அந்த வேலையை லீலா தானே செய்துவந்ததனால், கனகவல்லிக்கு அடுத்த வீட்டுப்பெண்ணுக்குக் கொடுக்கவேண்டிய பணம்லாபமாயிற்று. ஒருநாள் சாயங்காலத்துக்கு முன்பே லீலா நூல்கண்டுகளைச் சந்தையில் விற்றுவிட்டு, வானம் மேகம்மூடி மழைவரும் போலிருந்ததனால், சீக்கிரமாய் வீட்டுக்குத் திரும்புகையில், மேகம் அதிகமாகிக் கறுத்துக் காற்றும் மழையும் கலந்தடிக்கத் தொடங்கியது. அப்பொழுது சந்தையிலிருந்து தன்னோடு வந்தவர்கள் ஊரை ஸமீபித்துவிட்டார்களென்றாலும் மழை அதிகமாவதைக்கண்டு அவர்களெல்லோரும் வேகமாய்ச் சென்றார்கள். சந்தையிலிருந்து வாங்கின ஸாமான்கள் மழையில் நனைந்தால் கெட்டுவிடுமென்று பயந்து அவர்கள் கடைபைவிட்டு ஓட ஆரம்பித்தார்கள். பாபம் குழந்தை லீலாவும் அவர்களுடன் தானும் ஓடப் பிரயத்தனப்பட்டாள்! அவர்களது ஓட்டமெங்கே? குழந்தையின் ஓட்டமெங்கே? அவர்களெல்லாரும் இச்சிறுமியைப் பின்னால் விட்டுவிட்டுத் தங்கள் பாட்டைப் பார்த்துக்கொண்டு அகப்பட்ட இடத்தில் போய் ஒளித்துக்கொண்டார்கள். லீலா, ஊருக்கு வந்தும் வீட்டிற்குச் செல்லமுடியாமல் மழை பின்னும் அதிகமாவதைக் கண்டு, அருகிலிருக்கும் ஓர் மாடிவீட்டையடைந்து அந்தவீட்டுச் சுவர்மறைவில் நின்றாள்.

மழை அதிகமாயிற்று. காற்றும் பலமாய் வீசத்தொடங்கியது. அப்பொழுது அந்த வீட்டிலுள்ள திவ்வியமங்கள விக்ரஹம்போன்ற யௌவனபுருஷனொருவன் வீட்டுவாசல்சன்னல் கதவுகள் மூடவந்து, வெளியில் சுவர்மறைவில் மழையினால் உடல்முழுவதும் நனைந்து குளிர் தாங்கமுடியாமல் நடுநடுங்கிக்கொண்டு கைகால்கள் முடக்கியொடுக்கி உதரிக்கொண்டு நிற்கும் எட்டுவயதுபாலிகையைக் கண்டான். அவன் வரும் கால்அரவம்கேட்டு லீலா அவர் எங்கே தன்னைக் கோபித்துத் துரத்தப்போகிறாரோ என்று பயந்து, பின்னும் சுவரோடுசுவராய் ஒடுங்கிக்கொண்டு அவனைப் பார்த்தாள். ஆஹா! என்ன அழகு! ஸஹஜமாகவே அழகுடன் விளங்கும் அச்சிறுமியின் இளமுகத்தில் காற்றுக்குச் சிதறிவிழுந்த கறுத்த தூசிகளிலிருந்து வெவ்வேறொன்று மழைத்துளிகளில் ஒவ்வொன்று முத்துக்களைப்போல் சரிந்துவிழும்போதுகூட லீலா ஒரு புதிய நிறத்துடன் தோன்றினாள். அந்த யௌவன புருஷன் இவளைக்கண்டு, நின்றவன் நின்றபடியே அசையாமல் கண்இமைக்காமல் பார்த்துக்கொண்டு ஸ்தம்பித்துவிட்டான். ஜன்னற்கதவுகளை மூடவந்தவன், காற்றினால் ஸ்வயமாய்ச் சிறிது மூடியிருப்பதைக்கூட நன்றாய்த் திறந்துவிட்டான்.

அந்தக்ஷணம் அவன் மனதில் என்னென்ன யோசித்துக்கொண்டானோ, நம்மால் சொல்ல முடியாமற்போனாலும், உடனே அக்கன்னிகையை உள்ளே வரும்படி அழைத்தான். பாவம் அந்தப்பெண் பின்னும் அதிகமாய்த் திகிலடைந்தாள்! அவ்வளவு பெரிய மாடிவீட்டில் நுழைவதற்கு அவள் மனம் துணியாதவளானாள். அதற்குள் அந்த ஸுந்தரபுருஷனுடைய சேவ

கர்களில் ஒருவன் வெளியே வந்து, நமது லீலாவை உள்ளேவரும்படி அழைத்தான். லீலாவுக்குத் தெரிந்தவனாகையால், அந்த சேவகன், அவனை நம்பி லீலா அவன் பின்னர் உள்ளே சென்றாள். அவளைக் கண்டதும் அந்த ஸுந்தர புருஷன் "பாபம் துணிமுழுவதும் தெப்பமாய் நனைந்து போயிற்று; நல்ல உலர்ந்த வஸ்திரமொன்றுகொண்டுவந்து கொடு" என்று வேலைக்காரனிடம் சொன்னான். ஆனால், அந்த ஸேவகனும் ஸுந்தரபுருஷனுமாய்க் கூடி எவ்வளவு சொன்னபோதிலும், லீலாமாத்திரம் தான் கட்டிய வஸ்திரத்தை மாற்றமாட்டாதவளானாள்.

இதற்குள் அவ்விடத்துக்கு வேறொருவாலிபன் வந்து லீலாவைக் கண்டு வியப்புற்று முதல் வாலிபனை நோக்கி, "ஸோமநாதா! லீலா உனக்கு எங்கே அகப்பட்டாள்." என்று கேட்டான்.

ஸோமநாதன் சென்னைக்கலாசாலையில் கல்வி கற்றுவரும்பொழுது இரண்டாவது வாலிபனும் அவனும் தோழர்களாயிருந்தார்கள். இவன் பெயர் நரேந்திரன். பிரிய நண்பனாகிய நரேந்திரனைக் கண்டுவிட்டுப்போவதற்காக ஸோமநாதன் சென்னையிலிருந்து வந்திருந்தான்.

நரேந்திரன் கேட்ட கேள்விக்கு அவன் "நீ இந்தப் பெண்ணை அறிவாயா?" எனக்கேட்டான்.

நரே:—"அறியாமலென்ன? இந்தப் பெண் இந்த ஊரிலிருக்கும் லோகநாதன் புத்திரியல்லவா? பாபம், லோகநாதன் மிகவும் எளியவன்! இந்த ஊரில் அவனைப்போன்ற உத்தமபுருஷன் யாருமில்லை. அவனைவிட அவன் பத்தினி இன்னும் உத்தமி. அத்தம்பதிகளுக்கு இவள் ஒரே பெண்" என்றுரைத்து, அந்தப்பாலிகையைப் பார்த்து, "லீலா! இந்தமழையிலும் காற்றிலும் எவ்விடம் சென்றிருந்தாய்?" என்று கேட்டான்.

லீலா:—சிறிது தைரியத்துடன் "சந்தைக்குப் போயிருந்தேன்" என்றனள்.

நரே:—ஆம்: இன்றைத்தினம் சீதாபுரம்சந்தை. அவ்வூர் இவ்விடத்திலிருந்து நான்கு மைல் தூரமாயிற்றே! அங்கு ஏன் சென்றாய்?

லீலா:—நாற்கண்டுகளை விற்று வருவதற்காக.

லீலாவின் சொற்களைக் கேட்ட ஸோமநாதன் மிகவும் திகைத்து, "இவ்வளவு சிறியபெண்ணா நூல்விற்பதற்காக அவ்வளவு தூரம் சென்றிருந்தாள்! இவர்கள் எக்குலத்தைச்சேர்ந்தவர்கள்?" என்று நரேந்திரனைக் கேட்டான்.

நரே:—புன்னகையுடன், "இவர்கள் வேளாளர்கள்; உங்களுக்கு அயல்ஜாதியைச் சேர்ந்தவர்கள்."

ஸோம:—இச்சிறுமியைச்சேர்ந்தவர்கள் இன்னும் யாரிருக்கிறார்கள்.

நரே:—முன்னமே சொன்னேனல்லவா! தாய் தந்தைகளைத்தவிர வேறு யாருமில்லையென்று. அவர்கள் இக்குழந்தையை மிகவும் அலக்ஷ்யமாய் வளர்க்கிறார்கள்.

ஸோம:—இவ்வளவு சிறியபெண்ணை நூல் விற்பதற்காக இவ்வளவுதூரம் அனுப்பியதிலிருந்தே அவர்களது குணம் தெரியவில்லையா?

நரே:—அப்படி சொல்லக்கூடாது. சிறியவள் வெகுகஷ்டப்படும் ஸ்வபாவமுடையவள். அதிக சுறுசுறுப்பு. இப்பொழுதே வீட்டுவேலைகளெல்லாம் தானே செய்துவருகிறாள்.

இப்படி இவர்களிருவரும் பேசிக்கொண்டிருக்க, லீலா திகைத்தவளாய், ஸோமநாதன் முகத்தையே பார்த்துக்கொண்டுநின்றாள். ஸோமநாதனும் அச்சிறுமியின்ஒப்பற்ற அழகைக்கண்டு வெகுவாய்ப் புகழ்ந்துகொண்டு நின்றான்; இப்பொழுது அந்தப்பெண்ணின் ஸ்வபாவத்தையும் நற்குணங்களையும் கேட்டுப் பின்னும் அதிகமாக ஆச்சரியப்பட்டான். அவர்களது ஏழ்மையைக்குறித்து விசனப்பட்டுக் கருணை



புடன் லீலாவைப்பார்த்து 'இன்றைத்தினம் நூல்விற்றதில் எவ்வளவு வந்தது?' என்று கேட்டான்.

அதைக்கேட்ட அச்சிறுமி, தன் சேலையின் தலைப்பில் பத்திரமாய் முடித்துக்கொண்டிருந்த சில அணாக்களையும் பைசாக்களையும் காண்பித்தாள்.

ஸோமநாதன் அதைக்கண்டு, தன் சட்டைப் பையிலிருந்து ஐந்துரூபாயை எடுத்து அச்கன்னிகையின் தலைப்பில் முடியப்போனான். ஆனால், அவள் அதற்கு இடங்கொடுக்கவில்லை. ஸோமநாதன் தன்னாலானமட்டும் அவளை ரூபாயை எடுத்துக்கொள்ளச்சொன்னான்; பயன்படவில்லை. இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த நரேந்திரன், "லீலா! அவர் அன்புடன் கொடுப்பதைத் தவிர்த்தல் கூடாது. இதனால் ஒருதப்புமில்லை. வாங்கிக்கொள்" என்றான்.

லீலா:—"என் தாயார் நூல்விற்ற பணத்தை மாத்திரம் கொண்டுவரும்படி சொன்னாள். அதனால் நான் யாரிடத்திலிருந்தும் இனாமாக ரூபாய் பெற்றுக்கொள்ளக்கூடாது". இதைக்கேட்ட ஸோமநாதன், கொஞ்சம் சிரித்து, "லீலா! அப்படியானால், எனக்குச் சிலநூலுருண்டைகள் வேண்டும். உன்னிடமிருந்தால் கொடுக்கிறாயா?" என்று கேட்டான்.

உடனே, லீலா மிக்கஸந்தோஷத்துடன் தனது மடியில் வைத்திருந்த, சந்தையில் விற்று மிகுந்த நூற்கண்டுகளை எடுத்து ஸோமநாதனிடம் கொடுத்தாள். அவனும் அவைகளை மந்தஹாஸத்துடன் கைக்கொண்டு, ஐந்துரூபாய்களை அவளிடம் கொடுக்கச்சென்றான். அப்பெண் அதை வாங்காமல், "நூலின் விலைமுழுதும் நான்குஅணாதான். ஐந்துரூபாய்கள் எனக்கேன்?" என்றனள்.

ஸோம:—பெண்ணே! நீ சிறியவள். உனக்குத் தெரியாது. இதன் விலை ஐந்து ரூபாய்தான்.

லீலா:—இல்லை! இல்லை!! எனக்கு அதன் விலை நன்றாய்த் தெரியும், நான்குஅணாதான்; வாங்குபவர்கள் அதிகமாயிருந்தால் ஐந்தணாவைவிட அதிகமில்லை. நூல்விற்பவர்கள் என்றைக்கும் ரூபாய்க்கு விற்றதேயில்லை. மேலும், ரூபாய் எங்களுக்கு எதற்கும் அவசியமில்லை. அணா பைசாக்களுடனே எங்கள் செலவெல்லாம் முடிந்துவிடும்.

ஸோம:—உன் தாய்தகப்பனாரிடங் கொடு.

லீலா:—அவர்களுக்குமாத்திரம் எதற்கு ரூபாய்? அவர்களிடம் ரூபாய் இருந்ததை என்றைக்கும் நான் கண்டதில்லை. வாய்தாவிற்கு மாத்திரம் சில்லரைகளை ரூபாயாக மாற்றுவார்கள்.

ஸோம:—அப்படியானால், இந்த ரூபாயை உன் தந்தையிடம் வரிகட்டும்படி கொடு.

லீலா:—வரி முன்னமே கட்டியாய்விட்டது. இன்னும் ஒருவருஷம் வரையில் கட்டவேண்டிய அவசியம் இல்லை.

ஸோம:—"அப்படியானால், உன் நூலை நீயே எடுத்துக்கொள்; எனக்கு வேண்டாம்" என்று சொல்லி, அந்த நூல்களையெல்லாம் ஒன்றுப்சேர்த்துக் கட்டிக்கொடுத்தான்; கட்டும்பொழுது லீலாவிற்குத் தெரியாமல் ஒருநோட்டையும் வைத்துக்கட்டினான். அதைக் கண்ட நரேந்திரன், அவன்பக்கமாய்த் திரும்பி ஏதோ சொல்லப் போக, அவன் கண்சாடை காட்டவே பேசாமலிருந்துவிட்டான். இதற்குள் மழையும் நின்றுவிட்டது. லீலாவும் எழுந்து வீடுநோக்கிச் சென்றாள். ஸோமநாதன் அச்சிறுமி கண்ணுக்கு மறையும்வரையில் இமைகொட்டாமல் பார்த்துவிட்டு ஆனந்தக்கண்ணீர்சொரிந்தான். "இந்தகைய ஸௌந்தரியமும், லாவண்யமும் உள்ள பெண்ணை இப்படிப்பட்ட வேலைசெய்வதற்காகவா நான்முகன் சிருஷ்டித்தான்? இதே அவள், உயர்குலத்தவளானால் எந்நிலைமையிலிருப்பாள்?

அந்தோ!" என்று ஸோமநாதன் நரேந்திரனிடம் சொன்னான்.

"அவரவர்கள் செய்த புண்யபாபங்களுக்குத் தக்கவாறு கடவுள் பொருளைக் கொடுக்கிறார். எல்லாம் அவர் செயல்தானே" என்று நரேந்திரன் பதில் கூறினான். இப்படி இருவரும் வெகு நேரம் வரையில் லீலாவைப்பற்றி வார்த்தையாடிக்கொண்டிருந்தார்கள்.

லீலா அவர்களை விட்டுப் போகும்பொழுதே அஸ்தமிக்கக் கொஞ்சநாழிகைதான் இருந்தது. ஆனால், ஆகாயம் முழுவதையும் மேகங்கள் கவர்ந்து கொண்டன; எங்கும் இருளும் வெளிச்சமும் கலந்திருந்தன; அடிக்கடி, பளிச் பளிச் என்று மின்னும் மின்னல்களும், காதுகள் செவிடுபடும்படியாய் இடிக்கும் இடிகளும், வழியில் போகும் ஜனங்களை நடுங்கச்செய்தன; தூறிக் கொண்டே இருந்தது.

இந்த ஸமயத்தில், மற்கூறியவாறு ஸோமநாதனும், நரேந்திரனும் ஸ்ரோமனதுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்படியிருக்கும்பொழுது, லோகநாதனும் லீலாவும் அவ்விடம் வந்தார்கள். அவர்களைக்கண்டு, பேசிக்கொண்டிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

அவர்களை "எங்கு வந்தீர்கள்?" என்று கேட்பதற்குமுன்பே, லோகநாதன், "ஐயா! என் பெண் கொண்டுவந்த நாலுருண்டைகளில் பத்துரூபாய்நோட்டு ஒன்று காணப்பட்டது. இக்குழந்தை சொன்ன சொற்களால், அது உங்களுடையதென்று தெரியவந்தது: பாருங்கள்" என்று, நோட்டைக் கையில் வைத்துக்கொண்டு, திரும்பவும், "நாலுருண்டைகள் மழையில் நனைந்திருந்ததனால் இதுவும் நனைந்து போய்விட்டது. அதனால் ஏதாவது நஷ்டம் உண்டா? வெயிலில் உலரவைத்திருப்பேன். ஆனால், இப்பொழுது வெயில் இல்லை; அடுப்பிலாவது தீபத்திலாவது காண்பிப்பதற்குத் தைரியம் வரவில்லை" என்று மிக்க வினயத்துடன் கூறினான்.

அவ்வார்த்தைகளைக் கேட்ட நரேந்திரன், ஸோமநாதன்முகத்தைப் பார்க்க, அவன் லோகநாதனைப்பார்த்து, "அந்த நோட்டை உன் பெண்ணுக்காக நான்தான் கொடுத்தேன்" என்றான்.

லோகநாதனுக்குப் பேச நா எழும்பவில்லை: சிறிதுநேரம் அவர்களது முகத்தைப் பார்த்துவிட்டு, "ஐயா! நாங்கள் எளியவர்கள் என்பது உண்மையே. ஆனாலும், நான் இதுவரையில் எவரையும் பணம்கேட்டதில்லை" என்றுரைத்தான்; தனது புத்திரியைப் பார்த்து "அம்மா! நீ எதாகிலும் பணம்வேண்டுமென்று இவர்களைக் கேட்டாயா?" என்று வினவினான்.

லீலாவின் முகம் திடீரென்று பிரகாசம் குறைந்து வாடிவிட்டது. அப்பொழுது இளங்காற்று வீசவே, மழையில் நனைந்திருந்த அச்சிறுமியின் கறுத்த மயிர்க்கீற்றுகளும், நீலோற்பலம்போன்ற விழியினமும் அவள்முகவாட்டத்தை மறைத்துவிட்டன. அப்பெண் தனது இடதுகையினால் தலைமயிரைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டே, கனஸ்வரத்துடன் 'இல்லை : நான் இவர்களை ஒன்றும் கேட்கவில்லை' என்றனள்.

ஸோம:—இல்லை : லீலா உண்மையாய் ஒன்றும் கேட்கவில்லை; கேட்காவிடில் கொடுக்கக்கூடாதா?

லோக:—இப்பொழுது அறிந்துகொண்டேன். தாங்கள் எங்கள் ஏழ்மைக்காகத் தயவுடன் கொடுத்ததுபோலிருக்கிறது. ஆனாலும், மன்னிக்க வேண்டும்: நான் ஏழையானாலும் கஷ்டப்பட்டு உழைத்து ஜீவிப்பவன். என்னைவிட எளியவர்களான கூன் குருடு முதலியவர்களுக்குக் கொடுத்தால் உங்கள் தர்மம் பயன்படும்.

ஸோம:—நாங்கள் அப்படி நினைக்கக்கூடாது: அப்பணத்தைத் தங்கள் குமாரிக்குக் கொடுத்தேனேதவிர, தங்களுக்குக் கொடுக்கவில்லை.

லோக:—என் பெண்ணுக்குக் கொடுத்தால் எனக்குக்கொடுத்ததுபோல் ஆகவில்லையா?



ஸோம:—அப்படியாகமாட்டாது: தாங்கள் அப்பணத்தைச் செலவுசெய்யக்கூடாது.

லோக:—அப்படியானால், அதை என்னசெய்வது?

ஸோம:—உன் பெண்ணின் அழகுக்கேற்ற ஆபரணம் ஏதேனுமொன்று செய்து அவளுக்குப் போடேன்!

லோக:—ஆபரணம் செய்வதில் என்னலாபம்? கேவலம் கள்ளர்களுக்கு ஆசைகாட்டினதுபோலாகிறது. இப்பொழுதோ, இரவில் யாதொரு சிந்தனையுமின்றிச் சுகமாக நித்திரைசெய்கிறோம். இது முதற்கொண்டு அதுவும் இல்லாமற்போய்விடும்.

நரே:—ஐயா! லீலாவுக்காகக் கொடுத்த நோட்டைத் வாங்கிக்கொண்டால் யாதொரு கெடுதியும் நேரிடாது. சிறிது யோசியுங்கள். இப்பொழுதுதான் கள்ளர்பயமென்று நகைசெய்யாதிருந்துவிடுகிறீர்கள். நாளைக்கு லீலாவுக்கு விவாஹம்செய்யும்பொழுது அலங்காரஞ்செய்யாவிடில் ஸரியான கணவன் அகப்படுவானா?

'லீ—லா—வி—வா—ஹ—ம்' என்று லோகநாதன் உச்சரித்து ஏதோ யோசிக்கலாயினான்; பிறகு, நரேந்திரனைப் பார்த்து, 'அப்படியானால், இந்த நோட்டு உங்களிடமே இருக்கட்டும். இதை என்னால் காப்பாற்ற முடியாது. லீலாவின் விவாஹசமயத்தில் எனக்குக்கொடுக்கலாம்.'

ஸோமநாதன் அதற்கு ஒப்பவில்லை. பிறகு நரேந்திரன் அதைத் தன்னிடத்தில் வைத்துக் கொண்டான். லோகநாதன் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு லீலாவுடன் வீடுநோக்கிச்சென்றான். ஸோமநாதன்மாத்திரம் அந்த நள்ளிருளில் அவர்கள் போனவழியையே பார்த்துக்கொண்டிருந்தான்.

சிங்கப்பூர். ஸ்ரீமதி பாலசுந்தரிதேவி.

---

## Karnabaram.

By Mr. E. R. Krishnamachariar,
*Sanskrit Pandit, Government Oriental Library, Madras.*

### கர்ணபாரம்.

சூத்திரதாரன் வாழ்த்து உரைக்கின்றான்:—

"நரசிங்க ரூபமாகி வச்சிராயுதம்போன்ற நகங்களால் இரணியனென்னும் கொடிய அசுரனது மார்பைப் பிளந்த கொடிய அவ்வடிவத்தைப் பார்த்து, ஸ்திரீகள், மனிதர்கள், தேவர்கள், அசுரர்கள், பாதாளவாசிகள் முதலியோர் வியப்புறும்படி, மகாலக்ஷ்மியுடன் விளங்கிய விஷ்ணுவானவர், நமக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவாராக."

வாழ்த்துரை முடிந்தவுடன் சூத்திரதாரன்:—

"நான் சபையோர்களிடம் விஜ்ஞாபனம் செய்துகொண்டிருக்குந் தருணத்தில், திரைக்குள் சப்தமொன்று கேட்கின்றது; அதைச் சற்று உற்று நோக்கி, ஆ! ஆ!! சப்தம் இன்னதென்று அறிந்தேன்.

"துரியோதன மகாராஜன் ஒரு தூதனை அனுப்பி, தனக்கும் பாண்டவர்களுக்கும் கடுமையான போர் விரைவில் நடைபெறப்போகிறபடியால் அதற்கு உதவிசெய்யச் சித்தமாயிருக்கும்படி அங்கதேசாதிபனான கர்ணனுடன் சொல்லச் செய்திருக்கிறான். ஆயினும், நன்கு கவனிக்கிறேன்." (என்று சொல்லித் திரைக்குள் மறைகிறான்.)

#### பிரஸ்தாவனை.

தூதன் (பிரவேசித்து), "யார் அங்கே? கோரமாக யுத்தம்செய்யத் திரண்ட சேனைகளுடன்

பாண்டவர்கள் வந்திருப்பதைக் கேட்ட நம் அரசாகிய அரவக்கொடியோன், சத்துருக்களின் ஆரவாரங்களைப் பொறுக்காதவனாய், யானை, குதிரை, தேர், காலாள் முதலாகப் பலதிறப்பட்ட சேனைகளுடன் புறப்பட்டு யுத்தகளத்திற்கு வந்து, சிங்கநாதஞ்செய்து, அர்ச்சுனனுக்கு எதிராக வந்திருக்கிறான். இவ்விஷயத்தைக் கர்ணமகாராஜனுக்குத் தெரிவிக்கவந்தேன்" என்று சொல்லி, நான்குபக்கங்களிலும் சுற்றிப்பார்த்து "ஆ! புகழ்பெற்ற கர்ணனும் சல்யராஜனும் போர்க்கோலம்பூண்டு சேனைகளுடன் தங்கள் அரண்மனையிலிருந்து புறப்பட்டுவருகின்றனர். இவர்களோ, போர்செய்வதில் முதன்மைபெற்ற மிக்கவல்லமையுள்ளவர்கள். ஆயினும், மேகங்களால் மறைப்புண்ட கோடைக்காலத்துக் கதிரவன்போல் விளங்குகிறார்கள்; மிக்க கோபத்துடன் இருக்கிறார்கள்." (என்று சொல்லித் திரைக்குள் மறைந்தான்.)

### பின்பு கர்ணனும் சல்யனும் பிரவேசித்தல்.

கர்ணன்:—சல்யா? நான் கௌரவர்களுக்கு எப்போதும் எவ்விதத்திலும் நன்மையைச் செய்கிறவன். யுத்தகளத்தில் பகைவர் என்னால் விடப்படுகிற அம்பிற்கு வீணில் இரையாவர். சரி!! சீக்கிரம் அர்ச்சுனனுக்கு எதிரில் தேரை ஓட்டிப் போ. அவனைப் பார்க்கவேண்டும்.

சல்லியன்:—அப்படியே. (என்று சொல்லித் தேரைச் செலுத்துகிறான்.)

கர்ணன்:—சல்லியா! 'யமன்போன்ற எனக்குக் கோபம்வந்தால், சத்துரு அரசர்களும், அவர்களுடைய சேனைகளும் பாணத்தால் கைவேறு, கால்வேறு, தலைவேறாகப் பிளக்கப்பட்டு வீணே இறந்துவிடுவார்களே!" என்னும் இரக்கம் மிகுதியாக இப்பொழுது உண்டாகிறது. ஆ! ஆ!! நான் குந்திவயிற்றில் முதலிற் பிறந்து, "ராதேயன" எனப் பெயர்பெற்று, பகைவர்களாகிய பாண்டவர்களின் சகோதரனாயினும், வீரர்களாகிய அவர்களுடன் சண்டை செய்யவேண்டுமென நெடுங்காலம் எனக்கிருந்த எண்ணம் இப்பொழுது கைகூடிற்று. ஆயினும் என்? நான் இவ்வளவு காலம் பயிற்சிசெய்து வந்த வில்வித்தைகளெல்லாம் பயனில்லாமற் போனதற்குக் காரணம், என் தயார் வேண்டுகோளும், பரசுராமரின் சாபமுமே. இவ்விஷயங்களெல்லாம் உனக்குத் தெரியாவா? சொல்லுகிறேன்.

சல்லியன்:—தெரியாது. நானும் கேட்பதில் ஆவலுள்ளவனாகவே இருக்கிறேன்.

கர்ணன்:—சல்லியா! நான் வில்வித்தைகற்பதற்காகப் பரசுராமரிடம் சென்றேனன்றோ?

சல்லியன்:—ஆம். பிறகு என்ன நடந்தது?

கர்ணன்:—பிருகுகுல திலகரும், மின்னற்கொடிபோன்ற சிவந்தசடையை உடையவரும், 'பரசு' என்னும் ஆயுதத்தால் க்ஷத்திரியர்களை நாசஞ்செய்தவருமாகிய பரசுராமரிடம் சென்று நமஸ்கரித்து அவரெதிரில் அசையாது நின்றேன்.

சல்லியன்:—அதற்குமேல்.

கர்ணன்:—பிறகு அவர் ஆசீர்வாதம்பண்ணி, 'நீ யார்? எங்கே வந்தாய்?' என்று வினவினர்.

சல்லியன்:—அப்புறம்.

கர்ணன்:—'சுவாமி! தங்களிடம் அஸ்திராப்பியாசஞ் செய்துகொள்ள வந்தேன்' என்றேன்.

சல்லியன்:—அதற்குமேல்.

கர்ணன்:—அவர், க்ஷத்திரியகுலத்திற் பிறந்தவர்களுக்கு வில்வித்தைகளைக் கற்பிக்கமுடியாதென்றும், பிராமணகுலத்திற் பிறந்திருந்தால் மட்டும் கற்பிக்கக்கூடுமென்றும் சொன்னார்.

சல்லியன்:—அவருக்கு வெகுகாலமாய் க்ஷத்திரியர்களிடம் பகைமையுண்டன்றோ! அதன் பின்.



கர்ணன்:—பின்பு, நான், ராஜவம்சத்திற் பிறந்தவனல்லனென்றும், பிராமணகுலத்திற் பிறந்தவனென்றும் சொல்லி, அவரிடம் வில்வித்தை கற்க ஆரம்பித்தேன்.

சல்லியன்:—அதற்குமேல்.

கர்ணன்:—சிலகாலம் கழித்தவுடன் ஒருநாள் தருப்பை, சமித்து, கிழங்கு, பழம் முதலியவற்றைக் கொண்டுவருவதற்சென்று அவருடன் காட்டிற்குச் சென்றேன். காட்டில் அலைந்து திரிந்த சிரமத்தால் அவர் களைத்து, என்மடியில் படுத்துத்தூங்கினர்.

சல்லியன்:—அதன்பின்.

கர்ணன்:—அந்தச் சமயத்தில், வச்சிராயுதம் போன்ற கூரிய மூக்குள்ள புழுவொன்று விரைவில் என் தொடைகளிரண்டையும் துளைக்க, நான் 'குருவுக்கு நித்திராபங்கம் வருமே!' என்று, மிக்க தைரியத்துடன் அந்த வேதனையைப் பொறுத்துக்கொண்டிருந்தேன். சிறிது பொழுதிற்குள் எனது ஆசாரியர் விழித்துக்கொண்டு, தம் சரீரத்தில் இரத்தம் வழிந்திருப்பதைப் பார்த்து, அதன் விவரத்தை ஞானதிருஷ்டியால் உணர்ந்து, மிக்க கோபத்தை அடைந்து, 'என்னால் கற்பிக்கப்பட்ட வித்தைகளெல்லாம் யுத்தகளத்தில் நல்ல சமயத்தில் பயன்படாமற்போகட்டும்! என்று சாபமிட்டார்.

சல்லியன்:—அந்தோ! இதைக் கேட்டால் எனக்கு மிக வருத்தமாக இருக்கின்றதே!

கர்ணன்:—ஆனாலும் இப்போது பரீக்ஷிப்போமென்று பாணங்களை எடுக்க, அஸ்திரங்களெல்லாம் வீரியமற்றன; குதிரைகளெல்லாம் தடுமாறி விழுந்து கண்களைமூடிக்கொண்டு அடங்காமற்போயின; யானைகளெல்லாம் ஏழிலைம்பாலைபோன்ற மதஜலத்தைப் பெருக்கித் திரும்பி ஊருக்குச்சென்றன; சங்கம் முதலிய வாத்தியங்கள் சப்தஞ்செய்யாமலிருக்கின்றன; பார்த்தாயா இந்த விந்தையை!

சல்லியன்:—இது தாங்கக்கூடாத கஷ்டந்தான். (என்று துக்கித்தான்.)

கர்ணன்:—சல்லியராஜனே? துக்கப்படவேண்டாம். பகைவர்களுடன் யுத்தஞ்செய்து இரணகளத்தில் இறந்தால் வீரசுவர்க்கமும், ஜயித்தால் கீர்த்தியும் உண்டாவது நிச்சயம். இவ்விரண்டும் ஒருவர் பங்கல்ல. தவிர, காம்போஜதேசத்தில் உண்டானவையும், வேகத்தில் கருடனை வெல்லக்கூடியனவும், முன் வைத்தகாலைப் பின் வைக்காதனவுமான இக்குதிரைகள், நமது பட்டணத்துக்குத் திரும்பிச்செல்ல விரும்புகின்றனவே! ஆயினும், இவைகளை நமக்கு உதவியாக வைத்துக்கொள்வோம். அந்தணர், பசுக்கூட்டம், கற்புடைப்பெண்டிர் முதலானவர்களுக்கும் தேர்ச்சியடைந்துள்ள வீரர்களுக்கும், எனக்கும், அக்ஷயம் உண்டாகட்டும். நான் தைரியமுடையவனைப் இந்த யுத்தத்தில் பாண்டவசேனைக்குள் பிரவேசித்து, குணவானான தர்மபுத்திரனைக் கட்டி, அர்ச்சுனனையும் கொன்று, சிங்கமில்லாத காட்டிற் பயமில்லாமற் செல்வதுபோல் திரிவேன். சல்லியமகாராஜனே! தேரில் ஏறுவோம்.

சல்லியன்:—அப்படியே. (என்று சொல்ல, இருவரும் தேரில் ஏறினார்கள்.)

கர்ணன்:—சல்லியராஜனே! நம்முடைய தேரை அர்ச்சுனனெதிரிற் கொண்டுபோய் நிறுத்துவீராக.

(திரைக்குள்)

கர்ணமகாராஜனே! பெரியபிச்சை கொடுக்கவேண்டும்! பிச்சைகொடுக்கவேண்டும்!!

கர்ணன்:—(அந்தச் சத்தத்தைக் கேட்டு,) அடா! இந்த ஒலி மிக்க கம்பீரத்துடன் இருக்கின்றதே! இச்சத்தம் சாமானிய மனிதர்களுடையதன்று: ஸ்ரீமானும், பெருமைபொருந்தியவனுமாகிய ஒருவனுடையதாக இருக்கவேண்டும்; ஏனென்றால், இந்தச் சத்தத்தைக் கேட்டவுடனே, குதிரைகளெல்லாம் பயமடைந்தும்,

காதுகளை நெறித்துக்கொண்டும், தலையைத் தொங்கவிட்டுக்கொண்டும், பிரமித்து, அசையாமல் சித்திரம்போல் நிற்கின்றன! இப்படிச்செய்யும் வன்மையுடைய பெரியோரைக் கூப்பிடுக. (என்று சொல்லி, சற்று ஆலோசித்து, 'சீச்சீ! நானே கூப்பிடுவேன்' என்று நினைத்து,) சுவாமி! இங்கு விஜயம் செய்யவேண்டும்.

### பிறகு பிராமண வடிவத்துடன் இந்திரன் பிரவேசித்தல்.

இந்திரன்:—(என் வாகனமான மேகங்களே! நீங்கள் விரைவாக உங்களிருப்பிடத்திற்குத் திரும்பிப் போவீர்களாக. என்று சொல்லி அனுப்பிவிட்டு, கர்ணனிடம் வந்து, மீட்டும்,) பெரியபிட்சை தரவேண்டும் (என்றுகேட்டான்.)

கர்ணன்:—பகவானே! அரசர்களால் வணங்கப்பட்டவனும், பிராமணோத்தமர்களின் பாத தூளிகளால் பரிசுத்தமான சிரசுடையவனும், தானசீலர்களுள் ஒருவனுமாக இப்பொழுது சேர்க்கப்பட்டவனும் ஆனேனென்னும் சந்தோஷமுடையவனாகி நான் வந்தனஞ்செய்கின்றேன்.

இந்திரன்:—(மனத்துக்குள்) நான் என்னவென்று ஆசீர்வதிக்கலாம்? 'சிரஞ்சீவியாக இருப்பாயாக' என்று சொன்னால், தீர்க்காயுளையடைவான்; ஆசீர்வதிக்காமலிருந்தால், மூடன் என்று இகழ்வான். ஆகையால், இவ்விரண்டையும்விட்டு வேறு எவ்விதம் ஆசீர்வதிக்கலாம்? (என்று தனக்குள் ஆலோசித்து, வெளியில்) கர்ணமகாராஜனே? சூரியன், சந்திரன், இமயமலை, சமுத்திரம் இவைகளைப்போல் உன்கீர்த்தி இப்புவியில் நிலைத்து நிற்கட்டும். (என்றான்)

கர்ணன்:—சுவாமீ! "விதிமுறைப்படி தீர்க்காயுளுடையவனாய் இருப்பாயாக" என்று ஏன் ஆசீர்வதிக்கவில்லை? ஆயினும், இதுவே மங்களகரமாக இருக்கட்டும். ஏனென்றால், ராஜ்யலக்ஷ்மியானவள் பாம்பின் நாக்கைப்போல் சஞ்சலப்படுபவளாதலாலும், ஒவ்வொருவனும் தானதர்மங்களைச் செய்யவேண்டியது ஆவசியமாகையாலும், தன் சரீரத்தை விட்டாவது ஜனங்களைப் பாதுகாத்து அதனாலுண்டாகும் கீர்த்தியை அடைவதுதான் சாசுவதமாதலாலும். சுவாமி! என்னிடமுள்ள பொருள்களில் தங்களுக்கு வேண்டுவது யாது?

இந்திரன்:—(மறுபடி) பெரிய பிட்சையிட வேண்டும்.

கர்ணன்:—சுவாமீ! என்னிடமுள்ள பொருள்களைச் சொல்லுகிறேன். வேண்டுவனவற்றைக் கேளுங்கள். கொடுக்கின்றேன். சாதுத்தன்மையுள்ளனவும், அமிருதம்போல் இனிமையுள்ள பாலைச் சொரியத்தக்கனவும், இளங்கன்றுகளை உடையனவும், தருணவயதுள்ளனவும், பார்த்தவர்களால் ஆசைப்படத்தக்கனவும், தங்கப்பூண் கட்டின கொம்புகளை உடையனவுமாகிய அனேகம் பசுக்கள் உள்ளன. அவைகளிடம் விருப்பமிருக்குமாயின் தருகின்றேன்.

இந்திரன்:—ஆயிரம் பசுக்களை நீர் எனக்குக் கொடுத்தாலும் ஒருமுகூர்த்தகாலம் பால்குடிப்பதற்குத்தான் அவை உபயோகப்படும். பிறகு என்செய்வது? அவை வேண்டாம்.

கர்ணன்:—வேறு என்ன வேண்டும்? சூரியனது குதிரையை ஒத்தனவும், ஜயலக்ஷ்மிக்குச் சாதனமாயுள்ளனவும், எல்லாராலும் புகழத்தக்கனவும், காம்போஜதேசத்தில்,உண்டானவையும், பொறுமைக்குணம் மிக்கனவும், வேகத்தில் வாயுவை ஒத்தனவும், யுத்தகளத்தில் பாகனது குறிப்பை அறிந்து நடக்கக்கூடியனவுமான பல் குதிரைகளைத் தருகின்றேன்.

இந்திரன்:—குதிரையா! அவை ஒரு முகூர்த்தவளவு சவாரிசெய்ய உதவும். வேறு எதற்குப் பிரயோஜனப்படும்? ஆகையால், அவை வேண்டாம்.

கர்ணன்:—ஆனால், நீங்கள் நினைத்திருப்பது என்ன? (மனத்தில் ஆலோசித்து) மற்றொன்று சொல்லுகின்றேன். கேட்கவேண்டும்; எப்பொழுதும் மதஜலம் பெருகுவதனால் அதை உண்டு களிக்கும் வண்டுகள் நீங்காத கபோலத்தை உடையனவும், மலைபோன்றனவும், மேகம் போன்ற சப்தத்தை உடையனவும், வெண்மையான தந்தம், நகம் ஆகிய இவற்றை உடையனவும், ஜயிக்கக்கூடியனவுமான ஆயிரம் யானைகளைத் தருகிறேன்.



இந்திரன்:—யானையைச் சில நாழியளவு ஏறிச் சவாரிசெய்யலாம். பின்பு என்செய்வது? ஆகையால், அதையும் நான் விரும்பவில்லை.

கர்ணன்:—யானை வேண்டாமா! ஆயினும் என்ன? அளவில்லாத சுவர்ணங்களைத் தருகிறேன்.

இந்திரன்:—'கொடு'(என்று வாங்கிக்கொண்டு, கொஞ்ச தூரம் சென்று, திரும்பிவந்து,) இந்தப் பொருள் எனக்கு வேண்டாம்; வேண்டாம்.

கர்ணன்:—என்னால் ஜயிக்கப்பெற்ற ராஜ்யத்தைத் தருகிறேன்.

இந்திரன்:—பிராமணனுக்கு இராஜ்யம் எதற்காக?

கர்ணன்:—ஆனால், யான் செய்த அக்னிஷ்டோமம் முதலிய யாகங்களின பலனைத் தருகின்றேன்.

இந்திரன்:—மறுமையில் ஏதோ மிக்க சுகம் அனுபவிக்கலாமென்று சிலர் சொல்லுகிற யாகத்தின் பலத்தால் இம்மையில் யான் அடையக் கூடிய பிரயோசனம் யாதுளது?

கர்ணன்:—ஆனால், என் தலையைக் கொடுக்கிறேன்; தயைசெய்து பெற்றுக்கொள்ளுங்கள்.

இந்திரன்:—சீச்சீ! அது வேண்டாம் வேண்டாம்!

கர்ணன்:—பயப்படவேண்டாம். ஆனால், அசுரர்களாலும் பகைவர்களாலும் பிளப்பதற்கு அரியதாய், என் தேகத்தைப் பாதுகாப்பதற்கென்றே நான் பிறந்த காலத்தில் என் சரீரத்துடன் ஒன்றுபட்டுள்ள கவசகுண்டலங்கள் இருக்கின்றன. வேண்டுமானால் மிக்க ஸந்தோஷத்துடன் அவற்றைத் தருகிறேன்.

இந்திரன்:—(மனத்தில் மிகுந்த ஸந்தோஷத்துடன்) அதுதான் வேண்டும்.

கர்ணன்:—(மனதில் நன்கு ஆலோசித்து) கவசகுண்டலம் வேணுமென்கிறார். இப்படிக் கேட்பது கிருஷ்ணனுடைய மாயையே. இது நிச்சயமாம். இனி வருத்தமடைவதிற் பயனில்லை. (வெளியில்) சுவாமி! தருகிறேன். பெற்றுக்கொள்ளுங்கள்.

சல்லியன்:—அங்கதேசத்தரசே! கொடுக்க வேண்டாம்! கொடுக்கவேண்டாம்!!

கர்ணன்:—சல்லியராஜரே! தடைசெய்யாதீர். பழகிவந்த வித்தைகளெல்லாம் க்ஷீணத்தை அடைகின்றன; உறுதியுள்ள மரங்கள் வேருடன் சாய்ந்து விழுகின்றன; ஒருபொழுதும் வற்றாத சமுத்திரஜலம் இப்பொழுது வற்றுகின்றது. யாகபலனையும் தத்தம் செய்தேன். ஆகையால், இவை எல்லாம் காலவித்தியாஸமே! அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். (என்று சொன்னான்.)

பின்பு கர்ணன், பிராமணவடிவுடன் வந்திருக்கும் இந்திரனைப் பார்த்து, 'சுவாமி! பெற்றுக்கொள்ளவேண்டும்' (என்று சொல்லி, கவசகுண்டலங்களைத் தன் சரீரத்தினின்று அறுத்தெடுத்துக் கொடுத்தான்.)

இந்திரன்:—(அதைப் பெற்றுக்கொண்டு, மனதில் யோசித்து) முன் தேவர்களால் அர்ச்சுனன் ஜயத்தையடைவதற்கு எவைகள் இடையூறாக இருந்தனவோ, அவற்றை இந்தக் கர்ணனிடத்தினின்று பெற்றுக்கொண்டேன். வந்த காரியம் ஆய்விட்டது. இனி நானும் ஐராவதத்தின்மேல் ஏறிக்கொண்டு, கர்ணார்ச்சுனர்

களின் யுத்தத்தைப் பார்ப்பேன். (என்று நினைத்துப் போய்விட்டான்.)

சல்லியன்:—அங்காதிபரே? நீர் ஏமாற்றப்பட்டீரே!

கர்ணன்:—யாரால்?

சல்லியன்:—இந்திரனால்.

கர்ணன்:—அப்படியன்று: அசுரர்களை நாசஞ்செய்பவனும், அர்ச்சுனனுக்குச் சகாயஞ்செய்பவனும், ஐராவதத்தை வாகனமாகவுடையவனும், யாகத்திற் சொரியும் ஆகுதியாலேயே திருப்தியடைபவனுமாகிய தேவேந்திரன், என்னால் பெரு சந்தோஷமடைந்தான்! ஆகையால், நானே அவனை வஞ்சித்தேன்.

(தேவதூதன் பிராமணவடிவத்துடன் பிரவேசித்தல்.)

தூதன்:—கர்ணமகாராஜனே! உன் சரீரத்தை விட்டு நீங்காதனவும், உன் உயிர்நிலை போன்றனவுமான கவசகுண்டலங்களை மிக்க சந்தோஷத்துடன் கொடுத்து உதவியதற்காகத் திருப்தியடைந்த தேவேந்திரர், பகைவர்மேல் பிரயோகித்தால் வீணாகாத 'விமலை' என்னும் இந்தச் சக்தியைப் பாண்டவர்களில் எவரேனும் ஒருவர்மேல் பிரயோகிப்பதற்காகக் கொடுத்தனுப்பியிருக்கிறார். அன்புடன் இதைப் பெற்றுக்கொள்.

கர்ணன்:—சீச்சீ! எல்லாவற்றையும் தானம் கொடுத்த நான் தானம்பெற்றுக்கொண்டவரிடத்திலிருந்து வேறுபொருளைப் பெற்றுக்கொள்வேனோ?

தூதன்:—பிராமண வார்த்தைக்குத் தடை சொல்லாமல் வாங்கிக்கொள்ளவேண்டும்.

கர்ணன்:—சுவாமி! தங்கள் ஆணையின்படி செய்கிறேன். ஆனால், அந்தச்சக்தி எனக்கு எப்பொழுது கிடைக்கும்?

தூதன்:—நீ நினைத்தமாத்திரத்திற் கிடைக்கும்.

கர்ணன்:—சரி: தங்கள் அனுக்கிரகத்திற்குப் பாத்திரனானேன். சரி: எனக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

தூதன்:—அப்படியே. (என்றுசொல்லிச் சென்றான்).

கர்ணன்:—சல்லியா? தேரில் ஏறுவோமா?

சல்லியன்:—அங்ஙனமே. (என்றுசொல்ல இருவரும் தேரில் ஏறினார்கள்.)

கர்ணன்:—சல்லியராஜரே? சப்தமொன்று கேட்கிறதே! கவனித்தீரா? அது பிரளயகால சமுத்திரத்தின் சப்தம்போல் இருப்பதனால், அது அருச்சுனனது சங்கத்தொனிதான்; கிருஷ்ணனுடையதன்று: ஏனென்றால், தர்மபுத்திரர் அபஜயமடைந்தமையால், மிக்க கோபத்தை அடைந்த விஜயன், கடுமையாக யுத்தஞ்செய்யும் போது ஊதுகிறான். ஆகையால், அவன் சண்டை செய்யுமிடத்தை நோக்கி நம் தேரைச் செலுத்துக.

சல்லியன்:— அப்படியே செய்கிறேன். (என்று சொல்லித் தேரைச் செலுத்தினான்.)

(வாழ்த்து)

இவ்வுலகத்திலுள்ள பிராணிகளெல்லோருக்கும் சம்பத்துக்கள் மேன்மேலும் உண்டாகிப் பெருகவேண்டும்; குணநிதியாகிய நம் அரசர் ஏகாதிபத்தியத்தை அடைந்து ஒற்றைவெண்கொற்றக் குடை நிழலின்கீழ்ப் பூமியைப் பரிபாலிக்கவேண்டும். (என்று வாழ்த்தித் திரையினுள் பிரவேசித்தார்கள்.)

முற்றிற்று.

இ. ப. கிருஷ்ணமாச்சாரியர்.



# Vibheeshana's refuge.

BY. MR. P. K. SREENIVASACHARIAR,
*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## விபீஷணனடைக்கலம்.

இங்ஙனம் தன் தம்பியாகிய விபீஷணன் கொடிய இரணியனது வதையைக்குறித்துச் சொல்லிப் பரிசுத்தமான சிறந்த நீதியையும் தருமத்தையும் உபதேசிக்க, இராவணன் கேட்டிருந்தும், சீதையினிடத்தில் தான் வைத்துள்ள மோகத்தினால் தீயசிந்தையை உடையவனாய், நன்மைதருவனவாகிய அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் உபேக்ஷித்து, செவ்வாக்கூட்டியவை போலக் கண்கள் சிவந்து, மூட்டிய தீப்போல வேகமாகச் சீறினான்.

"மரணமென்ற ஒருவிஷயத்தை மாற்றும் வல்லமையுள்ளவனே! இரணியனென்பவன் நம்மைக் காட்டிலும் மிக்கபலமுடையவன். அப்படிப்பட்டவனைத் திருமால் கொன்றுவிட்டானென்று அம்மனிதனிடத்தில் அன்புகொண்டாய். அந்த இரணியனால் பெற்று வளர்க்கப்பெற்ற பிரகலாதன், 'வளர்த்தகடா மார்பிற்பாய்ந்தது'போன்று தன் தந்தையின் மார்பை மாயவனாகிய திருமால் கல்லிக் கொல்லுதற்பொருட்டு விசனமென்பது எள்ளளவுமின்றித் தான் பெருங்களிப்புற்றிருந்தான். அந்த இரணியனது மைந்தனும், கொடிய நம் பகைவனாகிய இராமனென்னும் மனிதனிடத்து இனிமையாக நட்புச்செய்கிற நீயுமே நிகரானவர்கள். துரோகசிந்தையுடைய வர்களாகிய உங்களிருவரில் ஒருவர் மற்றொருவரை ஒப்பதன்றி, உங்களுக்குப் பிறர் ஒப்பாகப்பெறுவரோ? வலிமைமிக்க இரணியனுடைய புதல்வனான பிரகலாதனது குணம் போலச் செய்பக்கருகிய தந்திரச்செயல்களை நீ செய்துமுடித்து, நான் அவ்விராமலக்ஷ்மணரென்கிற மனிதர்க்குத் தோற்றொழிந்தபின்பு, ஏழையாகிய நீ எனது பெரிய ஐசுவரியத்தை அடையாகிய நீ இனிதுவாழவோ கருத்துள்ளது? அந்நினைவு கைகூடிவரவல்லதோ? அம்மனிதர்களிடத்தில் முன்னமேதொடங்கிப் பழைய நண்பர்களிடத்திற்போலப் பூர்ணமான நட்பைக் கொண்டுள்ளாய்; அதனை எனது முன்னிலையில் தெரிவித்தலும் செய்கிறாய்; வலிய கொடிய நம் ஜன்மவிரோதிகளாகிய மனிதரிடத்து மிக்க அன்பு வைத்திருக்கிறாய்; அவர்கள்விஷயத்தில் எலும்புவரையில் உருகுகிறாய்; அழுகிறாய்; அவர்களைத் துதிக்கிறாய். உனக்கு அடைக்கலம் அவர்களே. வேறு சொல்லவேண்டியது உண்டோ! எங்கிருந்தோ வந்துசேர்ந்த மனிதரிடத்து நட்புக்கொண்டாய்; அங்ஙனம் சிநேகம்செய்துகொண்டு புதற்குரிய தந்திர வினைகளையெல்லாம் நன்றாகத் தேர்ந்து எண்ணிக் கொண்டாய்; என்னை வென்றிடவேண்டுமென்றும் கருதியிருக்கின்றாய்; இந்த எனது அரசின் மீதும் ஆசையூன்றியிருக்கின்றாய். உனது செய்கை கொடுமையில் வலியதாயுள்ளது. உன்னைக் காட்டிலும் எனக்கு வேறுபகைவர்வேண்டுமோ? ஒருகுரங்கு வந்து நமது அசோகவனத்தை அழிக்க, 'அதைக் கொன்றுதின்றிடுங்கள்' என்று நான் ஏவலாளர்கட்குக் கட்டளையிட்டேன். அப்போது, நீ, மேல்விளைவுகளைக் கூர்ந்துகருதி, 'தூதரைக் கொல்வது வெற்றியன்று' என்று விலக்கிவிட்டாய்; இனி நடக்கவேண்டிய காரியத்தைக்குறித்து நினைத்துக்கொண்டு, வெற்றி மாலையை அணிந்து வந்திருக்கிற இராமனை உனக்குத் துணையாகக் கொள்ளுதலையே துணிந்துவிட்டாய்; நீ அஞ்சினையாதலால், பகைவர்களோடு போர்புரியத்தக்க ஆளல்லாமலிருக்கிறாய்; * தஞ்சமென்று மனிதர்களிடத்தில் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கிறாய்; வஞ்சனைமனத்தை

* நீ அஞ்சினையாதலால் யுத்தத்தில் இறவாய் என்ற ஒருகருத்தும் இங்குக் கம்பர் வைத்துள்ளார். 'அஞ்சினையாதலினமர்க்கு மாளலை' என்பது காண்க.

யுடையாய்; அரக்கர்குலத்தில் உதித்தும், அப்பிறப்பிற்குரிய குணஞ்செயல்களை மாற்றிவிட்டாய். விஷத்தைக் கூடவைத்திருப்பதுபோல, உன்னையும் என்னுடன் வைத்துகொண்டு வாழ்தல் நன்று! இராவணன் தன் தம்பியைக் கொன்றனனென்னும் லோகாபவாதம் வருமேயென்பதை உணர்ந்து உன்னைக் கொல்லவில்லை. மேன்மேல் எதிர்வாதஞ்செய்தலை ஒழிகிறாயில்லை. ஒன்றும் பேசாமல் விரைவில் வெளியே போய்விடு. அப்பாற் செல்லாமல் என் கண்முன் நிற்பாயேல் சாவாய்'' என்று "கேடுவரும் பின்னே; மதிகெட்டுவரும் முன்னே'' என்றபடி, அழிவை அடைதற்காக அறிவுநீங்கப்பெற்றவனாகிய இராவணன், தன் தம்பியாகிய விபீஷணனை நோக்கிக் கூறினான்.

இங்ஙனம் இராவணன் சினந்து கூறியவளவில், அவன் தம்பியாகிய விபீஷணன், அந்தச் சபையைவிட்டு எழுந்து சென்று, ஆகாயத்தைச் சேர்ந்து, தானும் தன் மந்திரிகளுமாகச் சிந்தித்து நின்று, பின்னும் நீதிகள் மிக்க ஒன்றல்ல, பற்பல உறுதிமொழிகளை உரைப்பான்:— "செல்வவாழ்க்கையுடன் கூடிய அண்ணா! நான் சொல்வதைச்சற்றுக் கேள்: வாழ்வு மிகவும் அதிகமாகக் கற்பாந்தகாலத்தையுங் காணத்தக்கதாய் நீடித்திருக்கும் உனது உயிர்வாழ்க்கையைக்குறித்து நீ நினைக்கிறாயில்லை; கீழோர் சொல்வதைக்கேட்டுக்கொண்டு கெடுதற்கே வேண்டினையோ? அங்ஙனம் கெடுதல் நேர்மையா? தருமம் தப்பியவர்களுக்கும் ஆண்மையுண்டோ? புத்திரர்களும், குருக்களும், ஒப்பில்லாத உறவினர்களும், நண்பர்களும், சரணமடைந்துள்ளவர்களும், பலஹீனர்களும், பலவான்களும் ஆகிய இத்தனை பேரையும் ஸ்ரீராமனது கொடிய அம்பு சித்திரவதைசெய்யக் கண்டு இறப்பாயோ? நான் பற்பல வகையாலும் உனக்கு நன்மைதருவனவற்றையும், நல்ல யுக்திக்கும் புத்திக்கும் ஒத்தவற்றையும், உன் மனத்துக்கு இசையுமென்று உணர்த்தினேன். நீயோ அவற்றை அறியமாட்டிலை. அண்ணா! இங்ஙனம் நான் உபதேசித்தது குற்றமென்று உனக்குப்படின் பொறுத்தருள்க'' என்று சொல்லிவிட்டு, உத்தமனான விபீஷணன் அந்நகர் ஒழியப் போய்விட்டான்.

அப்போது, காரியத்தில் நிபுணர்களும், ஒலிக்கிற வீரக்கழலணிந்த கால்களை உடையவர்களும், காரியத்தைத் தந்திரமாக முடிக்கத்தக்கவர்களும், எக்காரியத்திற்கும் விபீஷணனுக்கு ஆலோசனை சொல்லுகின்ற மந்திரிகளுமாகிய அனலன், அனிலன், அரன், சம்பாதி என்னும் பெயர்பூண்ட அரக்கர்நால்வரும் விரைவாக வந்து விபீஷணனோடு கூடினார்கள். அங்கு அப்பொழுது விபீஷணனென்னும் அரசனும், அமைச்சர் ஒருநால்வரும், குரங்கினத்தவர்களோடு இராமலக்ஷ்மணர் என்னும் மனிதரிருவர் கடற்கரையில் வந்து தங்கியிருக்கிறார்களென்ற செய்தியைக் கேள்வியுற்றபொழுது, சட்டென்று செல்வோமென்று எண்ணிப் புறப்பட்டுப் போனார்கள்.

வருங்காரியமுணர்ந்த விபீஷணன், தன் துணைவர்களுடன் கடலைக் கடந்து, விசாலமான கடற்கரையில் தங்கியுள்ளதும், போர்க்களத்தைச் சிறப்பிக்கத்தக்கதுமான வானர சைனியத்தைக் கண்களால் நோக்கி, அதில் ஆங்காங்கு விளக்கொளி பரவியுள்ளமையால், வெண்மையான பாற்கடல் வளப்பமுள்ள பெரிய செந்தாமரை மலர்பெற்றுள்ளதாமெனக் கருதினான். "இந்த வானரங்களை ஒருபக்கமும், மாமிசமயமான உடம்பு படைத்த மற்ற ஜீவராசிகளெல்லாவற்றையும் ஒருபக்கமும் நிறுத்தி எண்ணினால், வானரத்தொகையே பெரிதாகும்'' என்று, குற்றமற்ற சிந்தையை உடையவனான விபீஷணன், சுத்தமுள்ளதாய் விளங்குகிற கொடிய படையேந்திய தன் துணைவர்களுக்குச் சொன்னான். "அன்பர்களே! தருமத்தில் தலைமையாக நின்றவர்களாகிய இராமலக்ஷ்மணர்களிடத்தில் அன்புபூண்டேன்; மறந்தும், சிறந்த நிலைமையுள்ள புகழையன்றி நிலைபற்ற வாழ்வை நான் வேண்டேன். 'உன்னுடன் பிறந்தவனான எனது



உறுதிமொழியை நீ ஏற்றுக்கொள்ளுகிறாயில்லை' என்று என் தமையனைத் துறந்தேன். இனிநான் செய்யத்தக்க செய்கை இன்னதென்று நீங்கள் சொல்லுங்கள்'' என்றுவிபீஷணன் தன் அமைச்சரை நோக்கிச் சொன்னான்.

தருமசாஸ்திரஞானம் மிக்க நிபுணர்களும், நுண்ணறிவினால் ஆராய்ந்து தக்கபடிஆலோசனை சொல்வதற்கு உரியவர்களும், உபாயமுணர்ந்தவர்களுமாகிய அவ்வமைச்சர்கள் நால்வரும் தம் தலைவனை நோக்கி, 'ஐயனே! விபீஷணமஹாராஜனே! தன்னையடைந்தார்க்குக் குறைவில்லாத சதுர்வித புருஷார்த்தங்களையும் தாவல்ல தருமமூர்த்தியாகிய ஸ்ரீராமனைத் தரிசித்தலே இனி நமக்குக் கடமை. இதனினும் சிறப்புப்பொருந்திய செயல் வேறில்லை' என்று துணிந்துசொன்னார்கள்.

அதனை விபீஷணன் கேட்டு, "துணைவர்களே! நீங்கள் நல்லதே சொன்னீர்கள். இராவணனையரைப்போல இனி வேறு தகுதியில்லாத செயலை நாமும் செய்வோமாயின், நாமும் அரக்கரே யாவோமன்றோ? அநந்த கல்யாணகுணகணங்களோடுகூடிய ஸ்ரீராமனது திருவடியிணையைத் தழுவி அடைக்கலம் புகுவோம்; அங்ஙனம் சரணமடைந்து, நீசமான இந்தப் பிறப்பைப் போக்கிக்கொள்வோம். இந்த இராமனை முன்பு நான் கண்டதேயில்லை; இவனைக்குறித்து முன்பு கேள்வியுற்றதுமில்லை. ஆயினும், இவனிடத்தில் எனக்கு அன்பு மிகுதியாகப் பெருகுகின்றது. அதற்குக் காரணம் அறியக்கூடவில்லை. எனது உடல் காசிப்பென்றும் கடலிற் குளித்து எலும்புவரையில் மிகக் குளிர்ச்சியுறுகின்றது. எனது நெஞ்சு உருகுகின்றது. எனில், அவ்விராமன் எனது இழிவாகிய அறிவுள்ள பிறவிநோய்க்குப் பகைவன்போலும்! பிரமனைக்குறித்து முன் நான் தவம்புரிந்தகாலத்தில், அவர் என்முன் பிரசன்னமானபொழுது, 'முதன்மைபெற்ற அழகிய பரம்பொருளாகிய ஸர்வேச்வரனிடத்தில் பக்தியும், சிறந்த தருமநீதிகளில் தவறி நடவாமையும், உயிர்களிடத்தில் நேயமும், வேதமுணர்ந்த அந்தணர்களது அருளும் எனக்குக் கிடைக்கவேண்டும்' என்று விரும்பிக்கேட்க, அவர் 'அவ்வாறே யாகுக' என்று வரம் அருளப்பெற்றேன்.

(தொடரும்.)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## Moral Sayings.

### By A Pandit.

## நீதிமொழிகள்.

(14-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஜனங்களுக்கு அப்பிரியமும் நியாயவிரோதமும் இல்லாத மார்க்கத்தால் ஜீவனஞ்செய்வது, உயிரை இழக்கக்கூடிய காலம் நேர்ந்தாலும் கெட்டகாரியத்தைச்செய்யாதொழிதல், நல்லோரல்லாதாரிடம் இரவாதொழிதல், நண்பனிடமும் ஏழைமைபேசாதிருத்தல், ஆபத்துக்காலத்தில் திண்மையோடிருத்தல், நல்லோர் சென்ற வழியைப் பின்பற்றுதல் என்ற அஸாதாரண விரதத்தை நல்லோர்க்கு உபதேசித்தவர் யார்?

56. ஏழைகளுக்குத் தானங்கொடுத்துப் பிறகு அதைத் தானே சொல்லிக்கொள்ளாது மறைத்தலும், விருந்தினர் வீட்டுக்கு வந்தால் பரபரப்புடன் எழுந்து அவர்களை எதிர்கொண்டழைத்து முகமன்கூறி அவர்களை உயர்ந்தநேராசனத்தில் இருத்தி அவர்களுடன் பிரியமாய் வசனித்திருந்து அவ்விஷயத்தைப் பெருமையாய்த் தானே வெளியிடாது மௌனமாயிருத்தலும், பலபேர்களுக்கிடையில் பிறர் தனக்

குச் செய்தவுதவி தினையளவாயினும் அந்தப் பனையளவாகச் சொல்லிக் கொண்டாடுவதும், தனக்குக் கிடைத்திருக்குஞ் செல்வத்தால் கர்வமடையாமையும், பிறரைப் பற்றிப் பேசும்பொழுது நிந்தையாக ஒருசொல்லேனும் கூறாமையும் ஆகிய மிகக் கஷ்டமான "அஸாதாரண" விரதத்தை நல்லோர்க்கு ஏற்படுத்தினவர் யார்?

57. பழுக்கக் காய்ச்சிய இரும்புத்துண்டில் ஒருதுளி தண்ணீரை விட்டால், அத்தண்ணீரின் பெயர்கூடத் தெரியாமற்போய்விடுகிறது. அந்தத் துளியே ஒருதாமரையிலையினிடையில் இருப்பின் ஒருமுத்துப்போலக் காணப்படுகிறது. அதேதுளியானது கடல்மத்தியிலுள்ள ஒரு முத்துச்சிப்பியில் விழுந்தால் உண்மையான முத்தே ஆகின்றது. ஆதலின், கடை, இடை, தலையாய குணங்களை அடைந்தவர்களின் நடைகள் இவ்விதமாகவே இருக்கின்றன.

58. உலகில் தனது நடவடிக்கைகளால் தந்தையை மகிழ்விப்பவனே புதல்வனாவன். தன் கணவனுக்கு நன்மையே எப்பொழுதும் கோருகின்றவளே குலமகள். இன்பம் நேர்ந்தகாலத்தும் துன்பம் நேர்ந்தகாலத்தும் நம்மிடம் சமமாய் நடந்துகொள்பவனே மெய்ந்நண்பனாவன். ஆதலின், இம்மூவரையும் உலகத்தில் புண்ணியம் செய்தவர்களே பெறுகின்றனர்.

59. நல்லோர்கள் வணக்கத்தினால் மேன்மையை அடைகின்றனர்; பிறர்குணங்களைப் புகழ்ந்து பேசுவதனால் தம் குணங்களை வெளிக்காட்டுகின்றனர்; பிறர்நலத்தை விரும்பி அதற்குரிய முயற்சியைச் செய்கின்றமையால் தமது நன்மையையும் பெறுகின்றனர்; கெட்டவார்த்தைகளால் ஓயாது தூஷிக்கும் தீயோரைப் பொறுமையினாலேயே அவமானஞ்செய்கின்றனர். இத்தகைய நல்லொழுக்கமுள்ள நல்லோரை உலகமே துதிக்கின்றது. இப்படிப்பட்டவர்களைப் பூஜைசெய்தார் யாவர்?

60. மா, பலா முதலிய மரங்கள் இனிய கனிகளைச் சுமந்து பிறர்க்கு உதவுகின்றனவேயன்றி, தாமே தின்று மகிழ்வதில்லை. நீருண்ட கார்மேகமானது ஆகாயத்தில் உலாவிக்கொண்டு மழைபெய்து உலகத்தைக் களிப்பிக்கிறதேயன்றி, தான் ஒன்றும் பயனடைவதில்லை. அதுபோலவே, நல்லோர் மிகுந்த செல்வத்தைப் பெற்றிருந்தாலும், இரவலர்க்கு உதவுவதிலேயே நோக்கமுடையவர்களேயன்றி, சுயநலத்தைக் கருதார்கள். இதுதான் பரோபகாரிகளின் சுபாவம்.

61. கருணைநிறைந்தவர்களுடைய செவிகள் வேதசாஸ்திரங்களைக் கேட்பதனால் விளங்குகின்றனவேயன்றி, குண்டலம் முதலிய ஆபரணங்களால் விளங்கா. அவர்களது கைகள் கொடையாலன்றி, கங்கணம் முதலியவற்றால் பிரகாசியா. அவர்களுடைய சரீரம் பரோபகாரத்தினால் பிரகாசிக்குமேயன்றி, சந்தனம் முதலியவற்றால் பிரகாசியாது.

62. சூரியன் வேண்டப்படாமலே தாமரையோடையைப் பிரகாசிக்கச்செய்கிறான். சந்திரன் தானாகவே கருநெய்தல்மலர்களையும், சக்கரவாகபக்ஷிகளையும் களிப்பிக்கிறான். மேகமானது யாரும் வேண்டாமலே உலகத்திற்கு வேண்டிய நீரைத் தருகின்றது. அதுபோலவே, நல்லோர் பிறரால் வேண்டப்படாமலே, உலகத்திற்குத் தங்களாலான உதவியைச் செய்வார்கள்.

63. தங்கள் நன்மையையும் பாராமல் பிறருக்கு நன்மையையே செய்ய முயல்பவர்கள் உத்தமராவர். தமது காரியத்திற்கு இடையூறின்றிப் பிறருக்கும் உதவிசெய்ய முயல்பவர் மத்திமராவர். சுயநன்மையையே எண்ணிப் பிறர்நன்மையைக் கெடுப்போர் மானுஷராக்ஷஸராவார்கள். ஆனாலும், எவ்விதப்பிரயோஜனமுமின்றிப் பிறரது நன்மையைக் கெடுப்போர் என்னபெயருடையவர்களென்று அறியக்கூடமுடியவில்லை.

ஓ. பஞ்சநதி.

---



# Review of the Press.

# பத்திரிகை ஆராய்ச்சி.

## The position of Education in India.

### இந்தியாவில் கல்வியின் நிலைமை.

"இந்தியாவின்கல்வி" என்றவிஷயத்தைப்பற்றி ஒரு நிருபர் "சுதேசமித்திரன்" அநுபந்தத்தில் எழுதியிருக்கும் வியாசத்தில், இந்தியாவில கல்விநிலைமையைப் பற்றிய சில குறிப்புக்கள் வெளியிட்டிருக்கிறார். அவை வருமாறு:—

சுமார் 1,802,657 சதுரமைல்கொண்ட இந்தியாநாட்டில் சற்றேறக்குறைய $31\frac{1}{2}$ கோடி ஜனங்களுக்கு சுமார் $1\frac{3}{4}$ கோடிதான் படித்தவர்கள். அதாவது: எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை, ஆண்களில் 1,000-க்கு 106. (அதாவது 100-க்கு $10\frac{1}{2}$) பெண்களில் 1,000-க்கு 10. (அதாவது 100 க்கு 1) இதர நாடுகளிலோ இங்ஙனமன்று. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மெனி, ஜப்பான்முதலிய நாடுகளில் அந்தந்த கவர்ன்மெண்டார் இலவசப்படிப்பைக்கட்டாயப் படிப்பாக்கினதால், 100-க்கு ஒருவரிருவரே படியாதவர்களாயிருக்கின்றனர். மேனாடுகளில் பிள்ளைகளுக்கு ஆரம்பப்படிப்பிலேயே தேசசரித்திரம், சுகாதாரம் முதலிய விஷயங்களைப் போதிக்கின்றனர். இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியவருமானத்திலிருந்து சற்றேறக்குறைய கல்விக்காக $3\frac{3}{4}$ கோடி செலவழிக்கின்றனர். அதாவது: சராசரி நபர் 1-க்கு $1\frac{1}{2}$ அணா. அமெரிக்காவில் நபர் 1 க்கு 12-ரூபாயும், ஆஸ்டிரேலியாவில் நபர் 1-க்கு 9 ரூபாயும், இங்கிலாந்தில் நபர் 1 க்கு 8 ரூபாயும், ஜெர்மனியில் நபர் 1 க்கு $8\frac{1}{2}$ ரூபாயும், பிரான்சில் நபர் 1 க்கு 5 ரூபாயும், ஜப்பானில் நபர் 1-க்கு 3 ரூபாயும், ருஷியாவில் நபர் 1 க்கு முக்கால் ரூபாயும் ஆகச் செலவுசெய்கின்றனர். இந்திய நாட்டைச்சேர்ந்த பரோடாவிலும் நபர் 1 க்கு $7\frac{1}{2}$ அணா செலவுசெய்யப்படுகின்றது. பிரபஞ்சத்திலுள்ள நாடுகளையும் நம்நாட்டையும் கல்விவிஷயமாகப் பார்த்தால், யானைக்கும் எறும்புக்குமுள்ள வித்தியாசத்தையொக்கும். நமது நாட்டில் பள்ளிக்கூடங்களுக்குச் சென்று கல்விபயிலும் மாணவர்களின் தொகை 7,531,515. ஆண்பிள்ளைகள் 6,427,726. பெண்பிள்ளைகள் 1,103,789. கல்விச்சாலைகளோ மொத்தம் 1,85,584. ஆண்பிள்ளைகளுக்குரிய கல்விச்சாலைகள் 1,67,211. பெண்பிள்ளைகளுக்குரிய பாடசாலைகள் 18,370. மேற்கூறிய பாடசாலைகளில் பிரைமரிபாடசாலைகள் 1,31,444. இவைகளில் பாலர்களுக்கு 116,713 பாடசாலைகளும், பாலிகைகளுக்கு 14,731 பாடசாலைகளுமுண்டு. ஸெகெண்டெரி பாடசாலைகள் மொத்தம் 6,876. இவைகளில் ஆண்பிள்ளைகளுக்கு 6,303. பெண்பிள்ளைகளுக்கு 573. சாஸ்திரகலாசாலைகளோ 197. ஆண்பிள்ளைகளுக்கு 183. பெண்பிள்ளைகளுக்கு 14. இதுதவிர, இதரப் பள்ளிக்கூடங்களான ஸர்வே பள்ளிக்கூடம், வைத்தியப் பள்ளிக்கூடம், சித்திரவேலைப் பள்ளிக்கூடம் ஆகிய இவைகள் 7,208. இவைகளில் ஆண்பிள்ளைகளுக்கு 6,261. பெண்பிள்ளைகளுக்கு 947. பொதுஜனசமுதாயத்தார்களால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிக்கூடங்கள் 39,859. இவைகளில் ஆண்பிள்ளைகளுக்குஉரியது 37,754. பெண்பிள்ளைகளுக்கு உரியவை 2,105. இந்தியா கவர்ன்மெண்டார்கல்விக்குச் செலவழிப்பது $3\frac{3}{4}$ கோடி. இதரவழிகளால் செலவழிக்கப்பட்டுவரும் தொகை சற்றேறக்குறைய 10 கோடி.

| | |
|---|---|
| மாகாண வருமானத்திலிருந்து ... | 3,64,54,418 |
| லோகல் முனிஸிபாலிடி வழியாக... | 1,85,80,317 |
| பிள்ளைகளின் சம்பளம் மூலதனம். | 2,67,07,253 |
| இதரவழிகள்மூலமாய் ... | 1,87,06,811 |
| | 10,04,48,799 |

நமது சென்னை இராஜதானி 141,075 சதுரமைல் விஸ்தீர்ணங்கொண்டது. ஜனத்தொகை 4,14,02,000. சென்னை இராஜதானியில் 279 பட்டணங்களும், 53,835. கிராமங்களுமிருக்கின்றன. மொத்த ஊர்கள் 54,114. பள்ளிக்கூடங்களின் மொத்தம் 33,833. இவைகளில் பிரைமரிபாடசாலைகள் 32,803. படிக்கும்பிள்ளைகளோ 13,78,460. ஸெகண்டரி ஸ்கூல்கள் 824. மாணவர்கள் 1,48,048. ஸ்பெஷல் ஸ்கூல்கள் 40. மாணவர்கள் 1,611. உபாத்தியாயத் தொழிற்கற்பிக்கும் ஸ்கூல்கள் 126. மாணவர்கள் 5,523. ப்ரொபேஷனல் காலேஜ்கள் 3. மாணவர்கள் 1,029. சாஸ்திரகாலேஜ்கள் 37. மாணவர்கள் 8,284.

மேற்கூறிய மாணவர்களில் 8,278 ஐரோப்பியர்களும், யூரேஷியர்களும், 1,04,121 கிறிஸ்தவர்களும், 1,70,129 பிராமணர்களும், 9,96,890 பிராமணரல்லாதவர்களும், 1,28,967 மகமதியர்களும், 104 புத்தமதஸ்தர்களும், 96 பார்ஸிகளும், 9253 இதரஜாதியார்களுமாகக் கல்விகற்கின்றனர். சென்னை இராஜதானியிலுள்ள கல்விக்காகச் செலவழிக்கப்படுந் தொகை சற்றேறக்குறைய $1\frac{3}{4}$ கோடிரூபாய்.

## The Teaching of geography in schools.

### பள்ளிக்கூடங்களில் பூகோளம் கற்பித்தல்.

கிராமாந்தரப் பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்குப் பூகோளங்கற்பிப்பதில் அநுசரிக்கவேண்டிய சிலமுறைகளை ஒருநிருபர் "பெண்கல்வி"யில் எழுதுகிறார்:—

கிராமாந்தரப் பள்ளிக்கூடங்களில் அவ்வூரிலுள்ள ரஸ்தாக்கள் ரெயில்வே மார்க்கங்கள், அவ்வழியாய் நடக்கும் வியாபாரங்கள் இவைகளை எடுத்துச்சொல்லவேண்டும். கிராமங்களிலுள்ள பல தொழிலாளிகள், அவர்களுடைய ஒற்றுமை, அவர்களுக்கு ஜீவனத்திற்காக விடப்பட்டிருக்கிற மான்யங்கள் ஆகிய இவைகளைப் பிள்ளைகளுக்குப் புரியும்படி விரிவாய் எடுத்துச் சொல்லவேண்டியது. பலபயிர்களைச் சாகுபடிசெய்கிற விதமும், அவைகளின் காவல்களும் தெரியவேண்டியது அவசியம். கிராமங்களில் உண்டாகிற தான்யங்களில் மிகுந்தவைகளையெல்லாம் சமீபத்திலிருக்கும் பட்டணங்களுக்குக் கூடைகளில்வைத்துத் தலைமேல் சுமந்தோ, அல்லது எருதுகளின்மேல் போட்டோ கொண்டுபோய் வியாபாரஞ்செய்கிற விஷயங்களையும் தெரிவிக்கவேண்டியது. இதனுடன், ஊரிலுள்ள குளம், குட்டை, ஆறுகள், அவைகளுக்கு ஜலங்கிடைக்கக்கூடிய வழிகள், அவற்றின் உபயோகங்கள் ஆகிய இவைகளைப்பற்றிக் குழந்தைகளுக்கு ஸந்தர்ப்பம் நேர்ந்தபொழுதெல்லாம் அவர்களை வெளியில் அழைத்துக்கொண்டுபோய்க் காட்டி, இயற்கைச் சம்பவங்களையும் கவனிக்கும்படி செய்தல் அவசியமாகும்.

முக்கியமாய், சீதோஷ்ணஸ்திதி அதாவது வருஷத்தில் பல ருதுக்களைக் கவனிப்பிக்கவேண்டும். அப்படி ருதுக்கள் மாறும்பொழுதெல்லாம் இயற்கைப் பதார்த்தங்களிலேயும் மாறுதல்கள் ஏற்படுகிறதையும் கவனிக்கச் செய்யவேண்டும். சூரியோதய அஸ்தமன திக்குகளையும், எந்த எந்த மாதங்களில் சூரியன் வடக்கேயும் தெற்கேயும் தள்ளி உதிக்கிறதோ அவ்விஷயத்தையும் எப்பொழுது சூரியன் மத்தியானத்தில் தலைக்குமேல் நேராக நிற்கிறது என்பதையும், அவர்களைக் கவனிக்கச் செய்யவேண்டும். பற்பல மாதங்களில் அடிக்கிற காற்றுக்களும், எந்தத்திக்கிலிருந்து அடிக்கின்றன என்பதும் அறிவிக்கவேண்டியது. மேற்கிலிருந்து காற்று அடித்தவுடன் ஆறுகளில் பிரவாகம் வருவதையும் கவனிக்கச்செய்யவேண்டும். அக்டோபர் நவம்பர் மாதங்களில் வடகிழக்கு மூலைகளிலிருந்து காற்று அடித்தால் மழைக்கு ஆர்ப்பாடமென்பதையும் குழந்தைகளுக்குத் தெரிவித்தல் அவசியம். ஆறுகள் ஓடும் திசைகளையும், அவற்றால், தேசத்தில் மேடுபள்ளங்கள் எப்படி உண்டாகும் என்பதையும் இவைபோன்ற பலவிஷயங்களையும் பிள்ளைகளுக்குக் கற்பிக்கவேண்டும்.

## Songs of God Murugur.

### முருகன் பாட்டு.

வீரத் திருவிழிப் பார்வையும் - வெற்றி
வேலு மயிலுமென் முன்னின்றே - எந்த
நேரத்திலும் மெனைக் காக்குமே - அன்னை
நீலி, பராசக்தி தண்ணருட்-கரை
யோரத்திலே புனை கூடுதே-கந்தன்
ஊக்கத்தை யென்னுள நாடுதே-மலை
வாரத்திலே விளையாடுவான்-என்றும்
வானவர் துன்பத்தைச் சாடுவான். (1)

வேடர் கனியை விரும்பியே-தவ
வேடம் புனைந்து திரிகுவான்-தமிழ்
நாடு பெரும்புகழ் சேரவே-முனி
நாதனுக் கிம்மொழி கூறுவான்-சூரர்
பாடு விடிந்து மகிழ்ந்திட-இருட்
பார மலைகளைச் சீறுவான்-மறை
யேடு தரித்த முதல்வனும்-குரு
வென்றிட மெய்ப்புக ழேறுவான். (2)

தேவர் மகளை மணந்திடத்-தெற்குத்
தீவி லசுரனை மாய்த்திட்டான்-மக்கள்
யாவருக்குந் தலைபாயினன்-மறை
யர்த்த முணர்ந்து நல் வாயினன்-தமிழ்ப்
பாவலர்க் கின்பங்கள் செய்குவான்-இந்தப்
பாரி லறமழை பெய்குவான்-நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான்-நித்தம்
ஆண்மையும் வீரமு மூட்டுவான். (3)

தீ வளர்த்தே பழ வேதியர் நின்றன்
சேவகத்தின் புகழ் காட்டினர்-ஒளி
மீ வளருஞ் செம்பொ னாட்டினர் நின்றன்
மேன்மையினு லற நாட்டினர்-ஐய
நீ வளருங் குரு வெற்பிலே-வந்து
நின்று நின் சேவகம் பாடுவேன்-வர
மீவள் பராசக்தி யன்னை தான்-உங்கள்
இன்னருளை யென்று நாடுவேன். (4)

நின்றன்

வீரத் திருவிழிப் பார்வையும் வெற்றி
வேலு மயிலு மென் முன்னின்றே.

"சுதேசமித்திரனில்" சி. சுப்பிரமணிய பாரதி.



# Economic Notes.

# பொருளாதாரக் குறிப்புக்கள்.

## Education.

### வித்தியாவிஷயம்.

**Excursion Lesson.**

உல்லாச சஞ்சாரபாடம்:—உல்லாச சஞ்சாரம் பிள்ளைகளுக்கு எவ்வாறு பயன்படும் என்பதைப்பற்றியும், இதில் உபாத்தியாயர்கள் கைக்கொள்ளவேண்டிய முறைகளைப்பற்றியும் "சற்குரு" சில குறிப்புக்கள் எழுதியிருக்கிறது. அவை வருமாறு:—

நோக்கம்:—பிள்ளைகள் ஆழ்ந்த யோசனையுடன் உற்று நோக்கும் வழக்கத்தை விருத்திசெய்தல்.

பயன்:—(1) பள்ளிக்கல்வியைப் பூர்த்திசெய்யும். (2) ஸ்கூலில் குழந்தைகட்கு நேரில் காட்டமுடியாத பொருள்களைக்காட்ட ஏதுவாகிறது. (3) உற்றுநோக்கும் சக்தியும், வழக்கமும் விருத்தியாகிறது. (4) ஸ்கூலில் கற்றுக்கொள்ளும் விஷயங்கள் பல இருப்பதுபோல், வெளியிலும் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றனவென்றுணர்ந்து வெளிவிஷயங்களை அறிய முயற்சிகொள்வார்கள். (5) உபாத்தியாயரிடம் ஒற்றுமை ஏற்படும். (6) குழந்தைகளுக்கு உபாத்தியாயர்மேலுள்ள அன்பும், அன்பின்மையும் உபாத்தியாயர் உணரலாம். (7) குழந்தைகளுக்கு இன்னின்ன குணமென்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

முறைகள்:—(1) உலாவப்போகையில் குழந்தைகளின் மனம் பலவிஷயங்களிலும் சென்று அலையாமலிருப்பதற்காக முன்னதாகவே விஷயங்களை ஏற்படுத்திக்கொள்வது. (2) பிள்ளைகள்யோசித்து யுக்தியாய் விடைசொல்லும்படியான கேள்விகேட்டு விடைபெறுவது. (3) உபாத்தியாயர் தாம்கொண்ட நோக்கத்திலேயே கண்ணுயிருப்பது. (4) குழந்தைகள் ஆச்சரியப்படுகிறார்களாவென்று கவனிப்பது. (5) சுறுசுறுப்பை விருத்திசெய்வது. (6) ஒருதடவையில் ஒரு வகுப்புத்தான் கொண்டுபோவது. ஒருவருஷத்தில் 20 சஞ்சாரத்துக்கு அதிகம் வேண்டியதில்லை. $1\frac{1}{2}$-மணிக்குக் குறைந்த சஞ்சாரம் பயன் தருவதில்லை. (7) உபாத்தியாயர் உல்லாசசஞ்சார விஷயமாய்ப் பல ஆராட்சிகள் செய்வது. (8) குழந்தைகளுக்குச் சஞ்சாரத்தில் அவா எழுப்புதல். ஒரேதடவையில் பலபாடங்களின் விஷயங்களைப்பற்றிக் கவனிக்காமல் ஏற்பாடத்திற்கனுகூலமான விஷயங்களைமட்டும் கவனித்தல் நலம். (9) சஞ்சார காலத்தில்காணும் விஷயங்களைப் பிள்ளைகள் தாமே ஆராய்ந்து யோசித்துக் காரணகாரியங்களையறியும்படி செய்யவேண்டுமேயொழிய, உபாத்தியாயர் சொல்லித்தரக்கூடாது. ஆனால், ஆராய்ச்சிக்குச் சிறிது உதவி செய்யலாம். (10) திரும்பிவந்தபின், கவனித்துவந்த விஷயங்களைக் குழந்தைகள் வியாசமாய் எழுதிக்காட்டச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். (11) மேற்கண்டபடி குழந்தைகள் வியாசமெழுதுவதுடன், உபாத்தியாயரும் தவறாமல் வியாசம் எழுதவேண்டும். (12) எழுதாத சிறு கீழ்வகுப்புப்பிள்ளைகளை வாய்மொழியாய் வியாசமாய்க் கூறச்செய்யவேண்டும். இதனால் பேசுந்திறமை விருத்தியாகும்.

**Education in England and India.**

இங்கிலாந்திலும் இந்தியாவிலும் கல்வி:—இங்கிலாந்தில் மொத்த ஜனத்தொகை 36 மிலியனில், 6 மிலியன் பள்ளிக்கூடத்திலிருக்கிறார்கள். இவர்களுக்காக 1914-15 வருஷத்தில் செலவான தொகை 20 மிலியன் பவுன். ஆனால், பிரிட்டிஷ் இந்தியாவிலோ மொத்த ஜனத்தொகை 260 மிலியனில், 7 மிலியனுக்குக் குறைவாகத்தான் ஜனங்கள் கல்விகற்றுவருகிறார்கள். இவர்களுக்காக 1913-14 வருஷத்தில் செலவான தொகை 3 மிலியன் பவுன்கள்.

**Higher Education in India.**

இந்தியாவில் உயர்தரக்கல்வி:—இந்தியா முழுவதும் சுமார் 36,000 பேர்கள்தான் உயர்தரக்கல்வி கற்றுவருகிறார்கள். நமது சென்னை மாகாணத்தில் இப்போது $4\frac{1}{2}$ கோடி ஜனங்கள் இருக்கின்றனர். அவர்களுள் 8,000 பேர்களே உயர்தரக்கல்வி கற்றுவருகின்றனர்.

# Agriculture.

## வியவசாயம்.

### Scientific Manure.

சாஸ்திர உரம்:—தேசக்ஷேமத்துக்கு வியவசாயமே முக்கியமானது. இந்தியாவின் ஜனத்தொகையில் மூன்றிலிரண்டுபாகம் வியவசாயிகள். வியவசாயமானது இதர தொழில்களுக்கு ஆதாரமாயிருப்பதனால், முதன் முதல் வியவசாய அபிவிருத்தியில் தக்க கவனம் செலுத்துவது அவசியமேயாகும். சாஸ்திர உரத்தைப் பயிர்களுக்குப்போட்டு வியவசாயம்செய்தால் மிகுந்த பலனை அடையலாமென்று மிஸ்டர் மீனாட்சி சுந்தரம் பி. ஏ. "சுதேசமித்திரனில்" எழுதுகிறார். சாஸ்திரீய உரமாவது: விசேஷசாகுபடியால் பூமியிலிருந்து எடுபட்டிருக்கும் பயிருணவுசத்துக்களை மறுபடி கொடுத்த உரங்களின்மூலமாய் பூமிக்குச்சேர்த்துச் செழுமையை குறைவுபடாமல் பாதுகாப்பதே.

நமது தேசத்து நிலங்கள் அடிக்கடி சாகுபடியாவதால், அதிலிருக்கும் பயிருணவுகள் அற்றுப்போய் நிலம் பீடாகி முன்போலத் தக்கபலன் கிடைக்கவில்லையென்பது வெளிப்படை. இதற்கு உதாரணமாக: தற்காலத்தில் ஏக்கருக்கு 840 பவுண்டு கோதுமைவிளையும் நிலத்தில் அக்பர் சக்ரவர்த்திநாளில் ஏக்கராவுக்கு 1,140 பவுண்டு கோதுமை விளைந்ததாகத் தெரிகிறது. தற்காலத்தில் இங்கிலாந்தில் ஏக்கர் 1-க்கு 1,700 பவுண்டு கோதுமை விளைகிறது. இப்போது நெற்பயிரின் வருமானம் இந்தியாவில் ஏக்கர் 1-க்கு 800 பவுண்டென்றும், பவேரியா(Bavaria)வில் 2500 பவுண்டென்றும் அமெரிக்கா (America)வில் அதிலும் அதிகமென்றும் நாம் அறிகிறோம். இப்படி வருமானத்தை விருத்தி செய்வது சாஸ்திரீய உரமே.

தொழு எரு, சாம்பல், பசுந்தாள் உரங்கள் ஆகிய இவைகளையே இந்திய வியவசாயிகள் தொன்று தொட்டு உபயோகித்து வருகிறார்கள். சமீபத்தில் மேற்கூறிய எருக்களிலிருந்து பயிர்கள் உணவாக உட்கொள்ளும் சத்துக்கள் நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட் பொடாஷ் என்றும், அவைகள் மேற்கூறியநாட்டெருக்களில் நிரம்பச்சொல்பமாக இருக்கின்றனவென்றும், அந்தச் சத்துக்கள் மிகவும் விசேஷமாயுள்ள கொழுத்த இரசாயன உரங்களைத் தனியாகவாவது கலப்பாகவாவது பூமிக்குச் சேர்த்தால் விசேஷபலன் கிடைக்கிறதென்றும் இரசாயனசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால், நிலத்தின்வருமானம் அதிகரிப்பதுடன், அந்த நிலத்தில்சாகுபடியாகும் தான்யங்களும் நயமாயிருக்கின்றன. இந்தப்படிக்குமேல் நாட்டில் உபயோகமாகிவரும் விசேஷ சத்துள்ள இரசாயன உரங்களாகிய எலும்புத்தூள், சூபர்பாஸ்பேட் முதலியவைகளின் அநுபவம் இந்தியாவில் தெரியாமையால், இவைகள் விசேஷமாய் அன்னியதேசங்களுக்கு ஏற்றுமதியாகின்றன.

### Cummin seed and its diseases.

சீரகமும், அதன் வியாதிகளும்:—சீரகம் 2½ மாதம் அல்லது 80 நாள் பயிர். இது ஒன்றுமுதல் இரண்டடி வரை வளரும். புஷ்பிக்கும்வரை நோய்நொடிகள் நேரிடா. புஷ்பித்தபின் 'அக்னிமண்டை' நோய் என்ற ஓர்விதநோய் உண்டாகும். இதனால் செடிகள் தீயில்வாட்டி எடுத்ததுபோல் கருகி சுருண்டு, கறுத்து, உருமாறி இருக்கும். இவ்வியாதி பயிர் புஷ்பித்தவுடன் காணுமானால், அதில் மாசூல் ஒன்றும் அகப்படாது. சிலநாட்கள்கழித்து உண்டானால், கொஞ்சம் மாசூல் கிடைக்கலாம். இவ்வியாதிஉண்டான உடனே தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்திவிடவேண்டும்; ஏனென்றால், வியாதி தண்ணீரின்வழியாய் ஒரு செடியிலிருந்து வேறொருசெடிக்குத் தொற்றக்கூடும். சீரகப்பயிரைத் தாக்கும் மற்றொரு வியாதிக்கு 'மோர்நோய்' அல்லது 'சாம்பல்'நோய் என்றுபெயர். ஏனெனில், இவ்வியாதி தாக்கினசெடிகள் மூழுதும், மேபிரல் அல்லது சாம்பல் தெளித்ததுபோல் நிறங்கெட்டுத் தோன்றும். இந்த வியாதி அநேகமாய்க் காய்கள் விளைவாகும் தருணத்தில் உண்டாகிறது. சில சமயங்களில் பயிர் அறுவடைசெய்து களமேட்டில் கொண்டுபோய் வைத்திருக்கும்போதுகூட வைத்த ஒருநாளைக்குள் வந்தாலும் வரும். இதனால், சீரகமாசூலின் தரம் குறைவாகும். நிலத்தில் பயிர்நிற்கும்போது இவ்வியாதி உண்டானால், உடனே அறுவடைசெய்துவிடவேண்டும். இந்தப் பயிருக்கு இன்னொரு வியாதியும் உண்டாகிறது. அந்த நோயால் தண்ணீர்பாய்ச்சும்போது செடிகள் அடியோடு சாய்ந்துவிடும். ஆனால், இந்த வியாதியால் நஷ்டமடையும் செடிகள் கொஞ்சமே. அப்படிசாயும் செடிகளைத் தலைதூக்கி நிறுத்தி மண்ணணைத்து வைக்க வேண்டும். மழையும், கடும்பனியும் மூடுமேகமும், மந்தாரமும்தான் இந்நோய்க்குக் காரணமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள்.—"கிருஷிகன்."



# Industry.

## கைத்தொழில்.

### Industrial Requisists.

கைத்தொழிலின் தேவைகள்:—தொழில் முயற்சியில் மிகுந்தலாபம் உண்டென்று தோன்றினால், அப்போது இந்திய முதலாளிகள் தங்கள் பணத்தைப்போட முன்வருவார்கள். இந்தியாவில்,தொழில் முயற்சிகளில், ஐரோப்பியரோடு இந்தியரும் கலந்துகொள்ளும்படியிருந்தால், அப்போது இந்தியர்களுக்கு அம்முயற்சிகளில் தங்கள் முதலைப்போட நம்பிக்கைபிறக்கும். இந்தியர்களில் 100-க்கு 90 பேர்கள் கல்வி பெறாமலிருப்பதால், அவர்கள் கைத்தொழிலின் அவசியத்தை உணராமலிருக்கிறார்கள். ஆதலால், கைத்தொழில், வியாபாரம், லேவாதேவி முதலியவைகளைப் போதிக்கக் கலாசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இந்தியக் கைத்தொழிலை விருத்திசெய்ய கவர்ன்மெண்டார் பலவிதங்களிலும் உதவிசெய்யலாம்: இயந்திரசாதனங்களையும், நூதனஆராய்ச்சிகளையும், தொழில் முயற்சிகளையும் விருத்திசெய்யப் பணவுதவிசெய்தல், இந்தியர்களின் பூர்வீகத்தொழில்களுக்கு ஆதரவளித்தல்; இந்தியாவில் செய்யப்படும் சாமான்களைத் தங்கள் உபயோகத்துக்கு வாங்குவதென்று உறுதிகூறல்.

ஆங்கிலோ இந்தியர்களால் நடத்தப்படும் தொழில் வியாபாரங்களுக்கு எப்படி இலகுவில் பணவுதவி கிடைக்கின்றதோ, அவ்விதமே இந்தியர்களால் நடத்தப்படும் தொழில்களுக்கும் பணவுதவி கிடைக்கவேண்டும். இந்தியாமந்திரியிடமிருக்கும் இந்தியாவின்பணம் லண்டனிலுள்ள பாங்குகள் சொற்பவட்டிக்குப் பெறுகின்றன. அப்பணமானது இந்தியருக்குக் கொடுக்கப்பட்டால், மிகுந்த உபகாரமாயிருக்குமென்பதைக் கவனிக்கவேண்டும்.

இந்தியாவில் சாஸ்திரக் கல்வியை அபிவிருத்தியடையச்செய்ய கவர்ன்மெண்டார் முன்வரவேண்டும். இந்தியாவில் எங்கும் சாஸ்திரக்கல்வி பரவச்செய்ய 20 சாஸ்திர கலாசாலைகள் வேண்டும். அவைகள் ஒவ்வொன்றுக்கும் 3 லட்சம் ரூபாய் செலவு செய்ய வேண்டும். முதல்தர சாஸ்திர கலாசாலைகளாக 8 வேண்டும். அவைகள் ஒவ்வொன்றுக்கும் 20 லட்சம் ரூபாய் செலவுசெய்யவேண்டும். ஒவ்வொன்றுக்கும் 5 லட்சம் ரூபாய் செலவுள்ள 24 இரண்டாந்தர கலாசாலைகள் வேண்டும்.

தொழிலை அபிவிருத்திசெய்வதற்காக இம்மாகாணத்தில் ஒருசபை ஏற்படுத்தப்படவேண்டும். அதில் உத்தியோகஸ்தரல்லாதவர்கள் அதிகமாயிருக்கவேண்டும். இச்சபையானது: வியாபாரப் பொருட்காட்சி, தொழிற்பொருட்காட்சி ஆகிய இவைகளை ஏற்படுத்துதல், தொழில் வியாபார சம்பந்தமாகப் பத்திரிகைகளையும் புத்தகங்களையும் பிரசுரம் செய்தல், தொழில் முயற்சிகளை நடத்துபவர்களுக்கு உதவி வேண்டுமாயின் அவர்களுக்குச் சகாயம்செய்தல் ஆகிய இவைகளைக் கவனித்து வரவேண்டும். தொழில்விஷயத்தில் மிகுந்த முற்போக்கடைந்த அன்னியநாடுகளுக்கு இந்தியர்கள் போய்த் தொழில் சம்பந்தமான பல விஷயங்களைக்கற்க அவர்களுக்கு உதவிபுரியவேண்டும். தொழில்முறைகளைக்கற்கச் சொந்தச்செலவில் போகும் இந்தியர்களுக்கும் கவர்ன்மெண்டார் சௌகரியங்களைச் செய்துகொடுக்கவேண்டும்.

சாஸ்திரம் தொழில் ஆகிய இவைகளைக்குறித்த புஸ்தகங்களடங்கிய வாசகசாலைகள்பல தேசமெங்கும் ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு சாலையும் 5 லட்சம் ரூபாய் செலவுபிடித்ததாயிருக்கவேண்டும். இவ்வாறு 20 வாசகசாலைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

இந்தியத்தொழிலாளிகளுக்கும், மற்ற பொதுஜனங்களுக்கும் உபயோகமாகும்படி தொழில் வியாபாரம் ஆகிய இவைகளைக்குறித்த பலமுக்கியமான புள்ளிகளை கவர்ன்மெண்டார் வெளியிட்டு இலவசமாகக் கொடுக்க வேண்டும். தொழில் வியாபார சம்பந்தமாய்ப் பல சஞ்சிகைகள் பொதுஜனங்களுக்கு உபயோகப்படுமாறு தேசபாஷைகளில் கவர்ன்மெண்டார் பிரசுரம்செய்ய வேண்டும். அவ்விதம் செய்யாமற்போனால், இவ்வாறு பிரசுரம் செய்வோருக்காவது உதவிபுரியவேண்டும். —இவ்வாறு, சென்னையில்நடந்த தொழிலபிவிருத்தி கமிஷன் விசாரணையில், சென்னை இந்தியன் பாங்கியின் காரியதரிசியான மிஸ்டர் வித்தியா சாகரபாண்டியா சாட்சியம் சொன்னார்.

### Paper Industry in India.

இந்தியாவில் காகிதத்தொழில்:—இப்போது நடக்கும் யுத்தத்தினால் இந்தியாவில் எங்கும் காகிதத்தட்டு ஏற்பட்டு, பத்திரிகைகள் பல கஷ்டங்களுக்கு உட்பட்டிருக்கின்றனவென்பது வெளிப்படை. அமெரிக்கா போன்ற மேனாடுகளில் காகிதம் செய்யும்முறைகள் பல புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இப்போது பருத்தித் தண்டுகளிலிருந்து காகிதக்கூழ் செய்யக்கூடுமென நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. நாகபூர் வியவசாய இலாகா ரஸாயன சாஸ்திர நிபுணர் அந்நகரிலுள்ள ஆராய்ச்சிச்சாலையில் இம்முறையை அநுஸரித்துக் காகிதக்கூழ் செய்து பார்த்ததில், திருப்திகரமான முடிவுக்கு வந்திருக்கிறாரெனத் தெரிகிறது. இவ்வாராய்ச்சி அநுகூலமாய் முடிந்திருப்பதால், இத்தொழில் இந்தியாமுழுவதும் அபிவிருத்தியடையுமென நம்புகிறோம். பர்மா தேசத்திலும், வங்காள மாகாணத்திலும் கவர்ன்மெண்டார் இத்தொழிலின் அபிவிருத்திக்காக வேண்டிய முயற்சிகள் செய்கிறார்களெனத் தெரிகிறது.

## Commerce.
## வியாபாரம்.

### Expansion of Japanese Trade with India.

இந்தியாவோடு ஜப்பான்தேசத்தின் வியாபார அபிவிருத்தி:—இந்த யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு தொழிற்செய்த பண்டங்கள் கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, ஆஸ்டிரியா முதலான இடங்களினின்றும், இன்னும் பல தேசங்களிலிருந்தும் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தன. யுத்தம் ஆரம்பித்தபிறகு எதிரி தேசங்களிலிருந்து சாமான்கள் வருவதே நின்றுபோய் விட்டது. இத்தருணத்தை ஜப்பான் கைப்பற்றிக் கொண்டு, தனது தொழிற்பண்டங்களை ஏராளமாக இந்தியாவுக்கு அனுப்பத் தலைப்பட்டது. சென்ற 40 வருஷங்களுக்குள் இந்தியாவில் ஜப்பான்தேசத்து வியாபாரம் எவ்வளவு பரவியிருக்கிறதென்பது கீழே குறிக்கப்பட்டிருக்கும் கணக்கால் தெரியவரும்.

ஜப்பானிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியானது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1877 | ... | ... | ரூ | 499,122 |
| 1890 | ... | ... | ,, | 885,179 |
| 1900 | ... | ... | ,, | 13,056,477 |
| 1910 | ... | ... | ,, | 28,069,377 |
| 1913 | ... | ... | ,, | 44,810,121 |
| 1914 | ... | ... | ,, | 39,072,565 |
| 1915 | ... | ... | ,, | 63,303,630 |

மேலேகண்ட விவரப்படி 1877-ம் வருஷத்தில் இந்தியாவோடு ஜப்பானின் வியாபாரம் 5 லட்சமாயிருக்க, 1915-ம் வருஷத்தில் 64 லட்சத்துக்குப் பெருகியிருப்பதிலிருந்து, அத்தேசத்துத் தொழிலின் ஊக்கமும், கவர்ன்மெண்டார் இது விஷயமாய்ச் செய்துவருகிற பலவிதமுயற்சிகளும் நன்கு வெளியாகும்.

ஜப்பான்தேசமானது இந்த யுத்தகாலத்தை நல்ல சமயமாக ஏற்றுக்கொண்டு, தனது தொழில்களைப் பல மடங்கு விருத்திசெய்யத் திறமையுள்ளதாயிருந்ததற்குப் பல காரணங்கள் உண்டு. அவை: அத்தேசத்துக் கவர்ன்மெண்டார் அநேக நாட்களுக்குமுன்னமே பிரைமரி கல்வியை இலவசமாயும் கட்டாயமாயும் செய்துவிட்டார்கள். இதனால், அத்தேசமுழுவதும் கல்வி நன்குபரவி, ஜனங்கள் பல தொழில்களைக்கற்று தங்கள் நிலைமையை உயர்த்திக்கொண்டார்கள். தேசமெங்கும் கைத்தொழில், வியாபாரம், வியவசாயம் ஆகிய இவைகளுக்குவேண்டிய பலவித பாடசாலைகள் ஏராளமாக ஸ்தாபிக்கப்பட்டன. ஆதலால், சிறுவர்கள் தொழில்கற்க அன்னிய நாடுகளுக்குப் போவதைத் தவிர்த்து இப்பாடசாலைகளிலேயே தொழில்பயின்றுவந்தார்கள். அநேக பிரபலமான இடங்களில் முதல்தரமான பலவித டெக்னிகல் இன்ஸ்டிடியூட்டுகள் நூதன யந்திரசாதனங்களுடன் ஸ்தாபிக்கப்பட்டன. இவற்றில் அனேகர் தொழில் முயற்சியில் பல உயர்தர விஷயங்களைக் கற்றுவந்தனர்.

இவைதவிர, திறமையுள்ள வாலிபர்கள் அன்னிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டுத் தொழில் கற்றுவரும்படி செய்கிறார்கள். தொழிலானது பணத்தட்டு, கஷ்டம் முதலியவற்றால் க்ஷீணித்துப் போவதாயிருந்தால் அத்தொழிலை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டு, நசித்துப் போகாதபடி நடத்திவருகிறார்கள். பல புதியதொழில்களை இராஜாங்கத்தாரே ஆரம்பஞ்செய்து, நடத்தி, பிறகு முதலாளிகளிடம் ஒப்பிக்கிறார்கள். அநேகம் தொழில்கள் இராஜாங்கத்தாரின் ஆதரவுபெற்று இன்னும் நடந்து வருகின்றன. உயர்தர வகுப்பாரும், தாழ்ந்த வகுப்பாரும் ஒருமனப்பட்டுத் தேசாபிவிருத்தியின் பொருட்டு உழைத்துவருகிறார்கள். இப்படிப்பட்ட விஷயங்களிலெல்லாம் ஜப்பான் அபிவிருத்தியடைந்து வருவதனால்தான், இந்த யுத்தசமயத்தில் தன் வியாபாரத்தையும் தொழில்களையும் ஏராளமாகப் பெருக்கிக்கொள்ளச் சாத்தியமாயிற்று.

ஜப்பான்தேசத்தில் தொழில் செய்யப்படுவதற்காக இயற்கைப் பொருள்கள் பெருவாரியாக இந்தியாவினின்று ஏற்றுமதிசெய்யப்படுகின்றன. அவ்வேற்றுமதியானது ஒவ்வொருவருஷமும் எவ்வளவு என்பது கீழே குறிக்கப்பட்டிருக்கும் கணக்கால் விளங்கும்.

இந்தியாவிலிருந்து ஜப்பானுக்கு ஏற்றுமதிசெய்தது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1877 | ... | ... | ரூ. | 285,792 |
| 1890 | ... | ... | ,, | 13,366,338 |
| 1900 | ... | ... | ,, | 35,271,526 |
| 1910 | ... | ... | ,, | 159,542,245 |
| 1913 | ... | ... | ,, | 259,760,791 |

இப்படி இயற்கைப்பொருள்கள் அன்னியநாடுகளுக்கு ஏற்றுமதியாவதைத் தடுத்து அவைகளை இங்கேயே தொழிற்செய்து இந்தியாவின் வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டுமென்பது இந்தியர்களின் கவனத்தைக் கவரச் செய்யவேண்டும்.

### Advertising.

விளம்பரஞ்செய்தல்:—விளம்பரமே வியாபார அபிவிருத்திக்கு மூலாதாரம். பற்பல வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தை விளம்பரம்செய்து, அதன் பலனாக மிகுந்த செல்வவான்களாய் இருப்பது பிரசித்தம். நாம்செய்யும் விளம்பரமானது ஜனங்களின் கண்களைக் கவரத்தக்கதாயிருக்கவேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் வியாபாரத்தில் அவர்களுக்கு ஒருவிதமான பற்றுண்டாகும். விளம்பரம் செய்வது பலஜனங்களுக்கும் தெரிகிறதா வென்பதைக் கவனிக்கவேண்டும்.



## Co-operation.
## கூட்டுறவு.

### Co-operative grain Banks.

கூட்டுறவு முறையில் தான்ய பாங்கிகள்:—இக்காலத்தில் பலவிடங்களிலும் ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளில் பணலேவாதேவியே செய்யப்பட்டு வருகின்றது. வடக்கே பேஹாரில் கோவாப்ரேடிவ் நாணய பாங்கிகள் பல பணலேவாதேவி செய்வதற்குப்பதிலாக தானியங்களிலேயே கொடுக்கல்வாங்கல் செய்துவருவதையும், அவைகளின் நோக்கங்களையும்பற்றி "ஜனோபிமானி" ஒரு குறிப்பு எழுதியிருக்கிறது.

இந்த பாங்கிகளின் முக்கியநோக்கம் பஞ்சகாலத்தில் ஜனங்களுக்கு உதவிசெய்வதே. கிராமத்திலுள்ள ஜனங்கள் நன்றாய் விளையுங்காலங்களில் தங்களுடைய சக்திக்கு இயன்றவாறு அதிகமாகவோ குறைவாகவோ தான்யத்தைப் பாங்கியிடம் ஒப்பிக்கிறார்கள். விளையாத காலங்களில் பாங்கியிலுள்ள தானியத்திலிருந்து வேண்டியவர்களுக்குக் கடன்கொடுக்கிறார்கள். கடன் வாங்குகிறவர்கள் வாங்கின தான்யத்துக்கு ஒரு குறிப்பிட்ட அளவு தானியம் வட்டியாகக் கொடுக்கிறார்கள். இந்த வட்டி தானியம் வருஷாவருஷம்சேர்ந்து நாளடைவில் அதிகமாகி பஞ்சம்நேர்ந்த காலத்தில் ஜனங்களுக்கு உபயோகப்படுகிறது.

இந்த பாங்கியின் சௌகரியங்கள் வருமாறு:—

1. இதை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தலாம். இதற்கு அன்னியர்களிடத்திலிருந்து உதவியை எதிர்பார்க்கவேண்டாம்.

2. ஒவ்வொருவரும் ஸ்வல்ப தானியமே பாங்கியில் சேர்ப்பதால் எவருக்கும் மிகுத்துவைப்பதில் கஷ்டம் கிடையாது.

3. சங்கத்தை நடத்திவருவதில் செலவு அதிகம் ஏற்படாது.

4. நாணயபாங்கிகளில் அதிகமாகக் கடன் வாங்குவதுபோல் இந்தத் தானியப்பாங்கிகளில் கடன் அதிகமாக வாங்க இடம் ஏற்படாது.

5. புதுதானியம் அறுவடையானவுடன் பழைய தானியத்தை விற்றுவிட்டுப் புதுதானியத்தை வாங்கிக் களஞ்சியத்தில் கொட்டிவைக்கலாம். அதனால் லாபமேற்படும். மேலும், பழைய தானியம் கிடைக்காமல் புதுதானியம் சாப்பிடுகிறவர்களுக்கு நோய் ஏற்படுவதுண்டு. அதைத் தடுத்துவிடலாம்.

6. வியவசாயிகள் சாப்பிடுவதற்கு நல்ல தானியம் பாங்கியிலிருந்து பெறக்கூடுமாதலால், தங்களுடைய மாசூலை நல்ல விலை கிடைக்கும்வரையில் காத்திருந்து விற்கலாம்.

7. தானியபாங்கியானது கிராமத்துக்குப் பொதுவில் சொந்தமாதலாலும், அதில் உள்ள தானியத்தை விற்க யாருக்கும் அதிகாரமில்லையாதலாலும், கிராமத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு தானியம் இருந்துகொண்டே இருக்கிறது.

8. கிராமதானிய பாங்கிகள் தேசமெங்கும் ஏற்பட்டால், பஞ்சகாலத்தில் கஷ்டமிராது.

9. பஞ்சமேற்பட்டகாலத்தில் ரெயில்வே இல்லாத ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்குத் தானியம் கொண்டுபோவதென்றால் மிகவும் கஷ்டமாயிருக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் மேற்சொன்ன தானிய பாங்கிகள் ஏற்படுத்திவிட்டால் யாதொரு கஷ்டமும் ஏற்படாது.

### Co-Operation in Villages.

கிராமாந்தரங்களில் கூட்டுறவு முயற்சி:—இந்தியாவில் ஆங்காங்கு ஜனங்கள் கூட்டுறவு சங்கங்களின் அவசியத்தை உணர்ந்து, அவைகளைக் கிராமங்கள் உள்பட எல்லாவிடங்களிலும் ஸ்தாபித்து நிர்வகித்து வருகிறார்கள். கிராமபாங்கிகளின் நிர்வாக விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய முறைகள் சில வருமாறு:—

1. ஒவ்வொரு பாங்கிக்கும் ஒவ்வொரு ரிஸர்வ் பண்டு ஏற்படுத்தவேண்டும். இப்படி ரிசர்வ் பண்டு வைப்பது சமயத்துக்கு மிகுந்த உதவியாயிருக்கும்.

2. இந்த ரிஸர்வ் பண்டின் பணத்தை வேறே எந்த பாங்கியிலும் போடாமல், தகுந்த சொத்துக்களின் மேலேயே போட்டுவைக்கவேண்டும்.

3. இப்பாங்கிகளில் மெம்பர்களாயிருப்பவர்களும், மற்றும் எல்லோரும் தங்கள் வீட்டுச் செலவுகளில் மிகுந்த சிக்கனமாயிருக்கவேண்டும். குடும்பங்களில் அவ்வப்போது நேரும் விசேஷங்களுக்குத் தாராளமாய்ச் செலவிடுவது அக்குடும்பங்களுக்கு நஷ்டமேயாதலால், இவ்வித காரியங்களுக்கு பாங்கியிலிருந்து கடன்கொடுக்கக்கூடாது.

4. கிராம பாங்கிகளில் போடப்படும் வட்டிவிகிதத்தை வரவரக் குறைத்துவரவேண்டும். இப்பாங்கிகள் கிராமவாசிகளின் சௌகரியத்துக்கென்றே ஸ்தாபித்து நடத்தப்பட்டு வருவதால், சமூஹ அபிவிருத்திக்கேற்ற பாங்கியின் விதிகளை உண்டாக்கவேண்டும்.

# Sanitation and Medicine.

## சுகாதாரமும், வைத்தியமும்.

### Consumption.

க்ஷயரோகம்:—இவ்வியாதியானது ஒருவிதச் சிறு புழுக்களாலேயே பரவுகின்றன. இவை மிகவும் சிறியவையாயிருக்கும். சில நீளமாயும், சில கோணலாயும், சில வளைவாயும் ஆகப் பல வடிவத்தையுடையவையாயிருக்கும். இவைகள் க்ஷயரோகியின் எச்சிலில் ஏராளமாக நிறைந்திருக்கும். இந்நோய் மற்றவர்களுக்கும் பரவுவது எவ்வாறெனில்: க்ஷயரோகி தன் எச்சிலையாவது மூக்குச்சளியையாவது வெளியே துப்பினால், ஈக்கள் அதன்மேல் வந்து உட்கார்ந்துகொள்ளுகின்றன, அச்சமயத்தில் இப்புழுக்கள் ஈக்களின் கால்களிலும், இறகுகளிலும் தொற்றிக்கொள்ளுகின்றன. பிறகு நமது போஜனங்களிலும் பானங்களிலும் அவை வந்து உட்கார்ந்து புழுக்களைச்சேர்த்துவிடுகின்றன. பிறகு நாம் உண்ணும்போது இப்புழுக்கள் நமது தேகத்தில் குடிபெயர்கின்றன. இது தவிர, இன்னும் பலவிதங்களிலும் இப்புழுக்கள் நம்மை வந்தடைகின்றன. க்ஷயரோகியின் எச்சில் வெய்யிலில் உலர்ந்துபோன பிறகு அதிலிருக்கும் புழுக்கள் காற்று வீசுவதனால் நம்மைவந்தடைந்து சிரங்கு புண் முதலியவற்றின்மூலமாய் நம் தேகத்துக்குள் சென்றுவிடுகின்றன. க்ஷயரோகி தான் உடுத்திருக்கும் உடைகளிலுங்கூட இப்புழுக்கள் இருக்கக்கூடுமாதலால், அவர்களை அணுகுவதும் கெடுதியை விளைவிக்கும்.

இப்புழுக்களால் தாக்கப்பெற்ற பசுமாடு, எருமைமாடு ஆகிய இவைகளின் பாலைக் காய்ச்சாமல் ஒருபோதும் சாப்பிடக்கூடாது. அவைகளின் சாணத்தையும் வீடுசுத்திசெய்ய உபயோகிக்கக்கூடாது. வீடுகளில் குழந்தைகள் அதிகமாக நடமாடும் இடங்களில் க்ஷயரோகிகள் எச்சில் துப்பக்கூடாது. அப்படிச்செய்தால் இந்நோய் குழந்தைகளுக்கும் பரவஹேதுவாகும்.

தேகத்திற்குள் புகும் இப்புழுக்கள், உயிருக்கு ஆதாரமான சுவாசாசயத்தைப் பல துவாரங்கள்செய்து பாழாக்கிவிடுகின்றன. இதனால் சுவாசம் முறைதப்பிப் பல கேடுகள் சம்பவிக்கின்றன.

இந்நோய் விருத்தியாவதற்குப் பல சாதனங்களிருக்கின்றன. மதுபானம் செய்வதும், அசுத்தமாயிருப்பதுமே, இந்த வியாதி பரவுதற்கு ஆதாரமென்று நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

இந்த வியாதி பரவாமலிருப்பதற்கு நாம் அனுசரிக்கவேண்டிய சிலமுறைகள் உண்டு அவை: உடுத்திக்கொள்ளும் துணிமுதலியனவற்றை வெகு சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். சயனித்துக்கொள்ளும் படுக்கை முதலியனவற்றை எப்போதும் சுத்தமாகவே வைத்திருக்கவேண்டும். அவைகளை அடிக்கடி வெய்யிலில் உலர்த்திவைக்கவேண்டும். படுக்கும் அறைக்குள் காற்று தாராளமாய் வீசும்படி அதன் ஜன்னல்களைத் திறந்து வைத்திருக்கவேண்டும். பட்டணங்களில் ஜன நெருக்கமுள்ள இடங்களில் உள்ளவர்கள், நல்ல காற்றோட்டமுள்ள இடங்களுக்கு உலாவப்போகவேண்டும்.

### Medicinal qualities of Date Palm.

பனையின் ஔஷதத்தன்மைகள்:—பனை இந்தியாவில்மட்டுமன்று; உலகமெங்கும் ஏராளமாய் உண்டு. வைத்தியத்தைப் பொருந்தியமட்டிலும் அதன் ஔஷதத்தன்மைகளைக் கவனித்துப் பார்ப்போம்:—

(1) பதிதாக அப்பொழுதே இறக்கப்பட்ட பனஞ்சாறு மிகவும் இனியசுவையுள்ளது. அனைவரும் அதை அதிகமாகக் குடிக்கவேண்டிய அவசியமில்லையாயினும், மலபந்தமுள்ளவருக்குமாத்திரம் அது அமுதமெனத்தகுந்தது. தினந்தோறும் தொடர்ந்தாற்போலும் அநேகம்நாட்கள் அதைக்குடித்துவந்தால், மலசோதனை விஷயத்தில் அது நன்கு உபயோகப்படுகிறது. 2. பனஞ்சாறு மிகவும்குளிர்ச்சிபொருந்தியதும், மூத்திரபேசனம் (Diuretic) செய்யத்தகுந்ததுமான வஸ்து. ஆகவே, வெள்ளை மேகத்தினாலும், குதகதோஷத்தினாலும் (Syphilsi) துன்பப்படுபவருக்குப் பனஞ்சாறு மிகவும் உபயோககரமாகவிருக்கும். மூத்திரத்தைத் தாராளமாய் வெளிப்படுத்துங் குணம் இதற்கு இருப்பதனால்,மஹோதரம் சோகை இவற்றிற்கும் பனஞ்சாறு மிகவும் பயன்தரக்கூடியது. 3. புளித்துக் கொதித்துப்போன சாறானது (கள்) வெறியையுண்டுபண்ணும்; விரேசனகுணமும் இதற்கு உண்டு. ஆனால், விரேசகமாவதற்குக் கட்குடிப்பது விவேகமன்று. இவ்விஷயத்தில் இதன் ஔஷதத்தன்மை உபயோகமற்றது. 4. பனஞ்சாற்றிலிருந்து ஒருவித வெல்லமும் கற்கண்டும் தயார் செய்யப்படுகின்றன. இக்கற்கண்டையும் வாதாங்கொட்டையையும் ஒன்றாகமென்று தின்றால், மிகவும் தொந்தரவு தரும் இருமலும், மற்றுஞ்சில சுவாஸாசயக் கோளாறுகளும் குறைவதுண்டு. முக்கியமாய்ச் சிறுவர்களுக்கு இது உபயோகிக்கத்தகுந்தது. 5. கள்ளானது மிகவும் உபயோககரமான பொட்டலிகையாகப் (Toddy Poultice) பிரயோகிக்கப்படுவதுவழக்கம். அப்பொழுதே இறக்கிய கள்ளை அரிசிமாவில்வார்த்து, மிருதுவாக நன்றாய்க் குழையும் வரையில் கலந்து மந்தாக்கினியில் வைத்துக்கிளறவேண்டும்; புளித்த கொதிப்புக் காணும் வரையில் காய்ச்சிக்குழைத்து எடுத்துக்கொண்டு, ஒரு வஸ்திரத்துண்டில் இதைப்பரப்பி,வீக்கங்களின்மேலும், வித்ரதிகள்என்னும் கீழ்க்கட்டிகளின்மேலும் பிரமேஹபிடகைகள் என்னும் மேகக்கட்டிகளின்மேலும் இந்தப் பொட்டலிகையை வைத்துக் கட்டுவதால் நல்ல உபயோகம் உண்டு. (6) நன்றாகக்கனிந்த இதன் பழத்தின் உட்புறமுள்ள கதுப்புப்போன்ற வஸ்துவானது (Pulp), சர்மவியாதிகளின் மேலுக்கு உபயோகிக்கப்படுவதுண்டு.—'வைத்தியகலாநிதி.'



# General Notes.

## பொதுக் குறிப்புக்கள்.

# Ladies' Page.

## பெண்கள் பக்கம்.

### Women ought to Know.

ஸ்திரீகள் கவனிக்கவேண்டியவைகள்:—இந்தியாவில் சிசுமரணம் அதிகம் என்பது வெளிப்படை. இங்கிலாந்தின் ஜன நெருக்கமுள்ள இடங்களைக்காட்டிலும் சென்னையில் சிசுமரணம் அதிகம். அதற்குக் காரணம், இந்தியாவில் பெண்கள் சிறுவயதிலேயே தாய்மார்களாய்விடுவதுதான். பெண்களுக்கு இளம்வயதில் பிரசவ அவயவங்கள் வேண்டிய பிரபலத்தையடைவதில்லை. ருதுவான சில வருஷங்களுக்குப் பிறகே அந்த அவயவங்கள் பிரசவமாவதற்கு வேண்டிய சக்தியைப் பெறுகின்றன. ஆதலால், ஸ்திரீகளுக்கு இப்பருவத்தில் பிறக்கும் குழந்தைகள் மிகவும் பலமுள்ளவைகளாக இருக்கும். ஸ்திரீகள் அதிக பாலியப்பருவத்தில் பிரசவிப்பதனால் பல கேடுகள் சம்பவிக்கின்றன. அவர்களுக்குப்பிறக்கும் குழந்தைகள் துர்ப்பலத்தினால் வெகு சீக்கிரத்தில் இறந்துபோவதுடன், அவர்களும் க்ஷயம் முதலான பலவித நோய்களுக்கு ஆளாகிறார்கள். இந்தியர்கள் மற்ற நாட்டு ஜனங்களைவிட வெகு சீக்கிரத்தில் இறந்துவிடுவதற்கு இது ஒருகாரணமாகும். இந்தியப் பெண்களுக்குச் சுகாதாரம், பிள்ளைகளை வளர்த்தல் முதலிய பல விஷயங்களைப்பற்றிப் போதிக்கவேண்டும். இந்தியத் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைக் கருத்துடன் வளர்ப்பதில்லை. குழந்தைகளுக்குத் தாய்ப்பால்தான் ஒன்பதுமாதங்கள்வரை கொடுக்கப்படவேண்டும். கர்ப்பவதிகளுக்கு நேரும் வியாதிகளை அவ்வப்போது பரிகாரம்செய்யவேண்டும். இவ்வாறு கனம் ஸர்ஜன் ஜனரல் பானர்மாமென் சேலம் விட்டோரி சங்கத்துக் கட்டிடத்தில் உபந்யசித்தார்.

### Ahathi Keeral.

அகத்திக்கீரை:—ஏகாதசியில் உபவாசமாயிருக்கும் பிராமணர்களும் மற்ற வகுப்பார்களும் அகத்திக்கீரையைத் துவாதசிதினம் அவசியம் சமையல்செய்து உபயோகிப்பதில் தவறமாட்டார்கள். முதலில், அகத்திக்கீரையில் பழுப்புக்களை நீக்கி, பூச்சி புழு இல்லாமல் ஆராய்ந்து, அவைகளை நறுக்கி வைத்துக்கொள்ளவும். பின்பு, அவற்றை ஜலத்தில் அலம்பியெடுத்துத் தக்க பாத்திரத்திலிட்டு வேகவைத்துக்கொள்ளவேண்டும், அதை நன்றாக வெந்தபதம்பார்த்துத் தனியாக எடுத்துவைத்தபிறகு, சங்குபோலத்தேய்த்த வாணலியை அடுப்பில்வைத்துத் தக்கபடி நெய் அல்லது எண்ணெய்விட்டுக் காயவைத்து, சிறிது பெருங்காயம், சிறிது மிளகாய் உளுத்தம்பருப்பு முதலியவற்றை வறுத்துக்கொண்டு, தக்கபடி கடுகுவிட்டுத் தாளித்துக்கொள்ளவேண்டியது. அந்தத் தாளித்ததில் பொடித்த உப்புடன் வெந்த அகத்திக்கீரை தக்கபடி வெந்தபருப்பு, தேங்காய்த்துருவல், வறுத்த முந்திரிப்பருப்பு முதலியவைகளையும்போட்டுக் கிளறி, கடைசியாக நல்லபாத்திரத்தில் எடுத்துவைத்து, போஜனத்துடன் உட்கொள்ள, அது வாய்க்கு மிகுதியும் ருசியையும் தேகாரோக்கியத்தையும் தரும்.—"பெண்கல்வி."

* * * *

மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களிலும் புண்ணியமாகிற அமுதம் நிறைந்தவர்களும், தாங்கள் செய்யும் உதவியால் மூவுலகையும் களிக்கச்செய்கின்றவர்களும், பிறரிடமுள்ள அணுவளவு குணத்தையும் மலையாக நினைத்து உள்ளங்களிப்பவர்களுமான நல்லோர் உலகத்தில் மிகச்சிலரே.

---

செந்தமிழ்:—கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய பல விஷயங்களைக்கொண்டு, மாதம் ஒருமுறை வெளிவரும் தமிழ்ப்பத்திரிகை. இதன் முதற்பெருகுதியின் பத்தாம் பகுதி நமது பார்வைக்கு வந்தது. இதில் ஜெர்மானியரின் வியாபாரவிதிகள், தியாகராஜஸ்வாமிகள், கைத்தொழில்கமிஷன், ஔவை மாணவர்களும்; ஜனஸமூஹ உழைப்பும், இந்தியாவைப் பற்றிய சில கணக்குவிவரங்கள் என்ற தலைப்பெயரிட்ட வியாசங்களும் பிறவும் சேர்க்கப்பட்டுள்ளன. வியாசங்களின்நடை எல்லோருமறியும்படி அமைந்துள்ளது. உள்நாடுகளுக்கு இதன் வருடச்சந்தா ரூ. 3. தனிப்பிரதி அணா 5. மாதிரிக்காப்பி அணா 1. வெளிநாடுகளுக்கு வருடச்சந்தா ரூ. 4—8—0. தனிப்பிரதி அணா 6. மாதிரிக்காபி அணா 2. வேண்டுவோர், மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர் என்னும் விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

## Boys' Page.
### சிறுவர் பக்கம்.

**New Words.**

புதுவார்த்தைகள்.—ஷேக்ஸ்பியர் என்னும் கவியினது பல காவியங்களிலும் பலவித வார்த்தைகளாக 15 ஆயிரம் இருக்கின்றன. மில்டன் கவிராயர் 8000 வார்த்தைகளைத்தான் தனது காவியங்களில் உபயோகப்படுத்தியிருக்கின்றார். பழைய ஏற்பாட்டில் 5642 வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. சிறந்த கல்விமான்கள், தாங்கள் பேசும்போது 4000 வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். சாதாரணக் கல்வியை யுடையவர்களோ 300 வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள்.

**Flies.**

ஈக்கள்:—பச்சை, மஞ்சள், ஆரெஞ்சு ஆகிய பல வர்ணமுள்ள கண்ணாடிகளின்மேரில் ஈக்கள் உட்காருகின்றன. ஆனால், இவை தவிர மற்ற வர்ணமுள்ள கண்ணாடிகளின்மேல் முக்கியமாய் நீலநிறக்கண்ணாடிமேல் ஈக்கள் அணுகுவதில்லையாம். ஆஸ்பத்திரிகளிலும், பலாஹாரக் கடைகளிலும் இந்நிறமுள்ள கண்ணாடிகளை உபயோகித்தால் ஈக்களின் தொந்தரை குறையும்.

**A captain of a German Submarine.**

ஓர் ஜெர்மன் சப்மரீன் தலைவன்.—ஜெர்மன் சப்மரீனின் தலைவர்களில் ஒருவராகிய காப்டன் வாலண்டினர் என்பவர் இதுவரை சுமார் 128 கப்பல்களைக் கடலுக்குள் அமிழ்த்தியிருக்கிறாராம். இதற்காக அவருக்கு உயர்ந்த மெடலொன்று அளிக்கப்பட்டிருக்கிறதாம்

**Burried Alive.**

உயிருடன் புதைக்கப்பட்டான்:—நாகப்பூரில் லபன்யா என்பவன் பேதிகண்டு இறந்தான். இந்தப் பிரேதத்தை, சோமா என்பவனும் இன்னும் ஒன்பது பேருமாகச்சேர்ந்து புதைக்குமிடத்திற்குக் கொண்டுபோனார்கள். சோமாவென்பவன் மந்திரவாதியென்று கருதப்பட்டிருந்ததனால், இவனே பேதியாதிக்குக்காரணமாயிருக்கலாமென்றெண்ணி மற்றவர்கள் ஒன்றுசேர்ந்து இவனை அங்கு ஒருகுழிதோண்டிப்புதைத்துவிட்டார்களாம்.

**Matches.**

நெருப்புக்குச்சி:...உலகத்தில் ஒவ்வொரு நிமிஷத்திலும் 3,000,000 நெருப்புக்குச்சிகள் கிழிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்படுகின்றனவாம். இந்தியாவில் வருஷா வருஷம் 16,000,000 நெருப்புப் பெட்டிகள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதில் இந்தியாவில் 1,000,000 நெருப்புப் பெட்டிகள் செய்யப்படுகின்றன.

**A Curious punishment.**

ஓர் அதிசயத்தண்டனை:-அமெரிக்காவில் மெஸாசஸெட்ஸ் என்னும் நகரில், ஒருசிறுவன்மேல் கல்லெறிந்த மற்றொருவனுக்குப் பின்வருமாறு தண்டனைவிதிக்கப்பட்டதாம். அத்தண்டனையானது மிகவும் புத்திசாலித்தனமாகவும், அவனுக்கு வேறுவிதமான அவமானத்தை உண்டாக்காமலும், அவன் மறுபடியும் இம்மாதிரிகுற்றத்தைச்செய்யாமல் தடுப்பதற்காகச் செய்யப்பட்டதாம். அத்தண்டனையாவது:—அவன் எவ்வளவு அளவான கல்லை யெடுத்து எறிந்தானோ அவ்வளவு அளவான ஆயிரம் கற்களை ஒரேகாலத்தில் ஒவ்வொன்றாக எறியவேண்டும் என்று தண்டனை விதிக்கப்பட்டதாம்: அவ்வாறே செய்த அச்சிறுவன் இனி எப்போதும் ஒருவர்மேலும் கல்லெறியமாட்டேனென்று சொல்லிப்போய்விட்டானாம்.

**Moral Sayings for Boys.**

சிறுவர்கட்கான நீதிமொழிகள்:-ஆசையென்ற கயிற்றை அறு; பொறுமையை அடை; கர்வத்தை அடக்கு; தீச்செயல்களில் பணம்செல்லாவாறு தடு; மெய்பேசு; நல்வழியில்நட; கற்றோரை அடுத்து அவருக்கு உபகாரஞ்செய்; மரியாதை யாருக்குச் செய்யத்தக்கதோ அவருக்குச் செய்; பகைவனை நயந்துகொள்; ஆசிரியர் முதலியோரிடம் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்; புகழைச் சம்பாதி; துக்கமடைந்த எளியோரிடம் இரக்கங்கொள். இவைகள் நல்லோரது ஒழுக்கமாகும். இவற்றை நீ அனுசரி.

நீசர்கள் ஒருகாரியத்தைத் தொடங்கினால், அதற்கு இடையில் ஏதாவது இடையூறு நேருமோவென்ற பயத்தினால் ஆரம்பிக்காமலேயிருந்து விடுகின்றனர். மத்தியமர்கள், ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கி, இடையில் ஏதையேனும் இடையூறுகள் நேர்ந்தால், உடனே அதை விட்டுவிடுகின்றனர். உத்தமர்கள், தாங்கள் தொடங்கிய காரியங்களுக்கு எவ்விதமான இடையூறுகள் நேர்ந்தாலும், சிறிதும் மனச்சோர்வடையாது, அக்காரியங்கள் முடிவு பெறும்வரையில் விடா முயற்சியுடனிருக்கின்றனர்.—செல்வத்திற்கு அழகு நன்னடக்கை. குலனுக்கு அழகு நாவடக்கம். புத்திக்கு அழகு பொறுமை. படிப்புக்கு அழகு வணக்கம். நற்செல்வத்திற்கு அழகு நற்காரியமும், அறிந்து செலவிடலும். தவத்திற்கு அழகு சினமின்மை. வல்லவனுக்கு அழகு பொறையுடைமை. தர்மத்திற்கு அழகு ஒன்றையும் எதிர்பாராமற்செய்தல். இவற்றிற்கெல்லாம் முக்கிய காரணமாய்ப் பிரகாசிக்கும் குணமே யாவருக்கும் சிறந்த ஆபரணம்.—எம். எம் என். ஐயர்.



# Miscellaneous Notes.
## நாநாவிதக் குறிப்புக்கள்.

**Notro-Energy.**

உப்புவாயுவின் சக்தி:—சுரங்க வேலைகளில் நிபுணரான அமெரிக்காதேசத்தவர் ஒருவர் நிலக்கரிக்குப் பதிலாக மிகவும் குறைந்தசெலவில் கிடைக்கக்கூடிய சக்தியைக் கண்டு பிடித்திருப்பதாகவும், இந்நூதன சக்தி ஆகாயத்தில் 4000 மிலியன் டன் அளவுகள் வியாபித்திருப்பதாகவும் "இந்துநேசன்" எழுதுகிறது. மற்றும் இச்சக்தியைப்பற்றி இப்பத்திரிகை எழுதுவதாவது:--

மண் எண்ணெய், பெட்ரோல் எண்ணெய் ஆகிய இவைகள் எந்தெந்தவிதமாக உபயோகிக்கப்படுகின்றனவோ அவ்வளவு விதமாக இந்நூதன சக்தியை உபயோகிக்கலாம்; இரும்புமுதலிய உலோகங்களை உருக்குவதற்குக்கூட பிரயோஜனப்படுத்தலாமாம். இந்நூதன உப்புவாயுவின் சக்தியில் ஒருடன், 1,300 டன் நிலக்கரிக்குச் சமானமாகும் உபயோகிப்பதற்கு பெட்ரோல் எண்ணெயவ்வளவு அபாயகரமும் இல்லாதது. இந்தச் சக்தியிலிருந்து மின்சார சக்தியைச் சுலபமாகஉண்டாக்கிக் கொள்ளலாம். சாதாரணமாக மின்சார சக்தியை உண்டாக்க இப்பொழுது நமக்கு எவ்வளவு செலவு பிடிக்கிறதோ அதில் 50 ல் ஒருபங்குதான் ஆகும். ஐந்தாறு இடங்களில் இந்நூதன சக்தியை உண்டாக்க ஸ்தலங்களைஏற்படுத்திவிட்டால், அவ்விடங்களிலிருந்து தேசத்தின் எல்லாப்பாகங்களுக்கும் இச்சக்தியைப் பிரயோஜனப்படுத்திக்கொண்டு, விளக்கு, அடுப்பு முதலானவைகளுக்குத் தேவையான அக்கினியை உண்டாக்கிக் கொள்ளலாம்.

சண்டையில் உபயோகப்படுத்தும் விஷயத்தில் இந்நூதன சக்தியை இன்னும் மூன்றுமாதங்களுக்குள் சண்டைக்கப்பல்களில் பிரயோஜனப்படுத்த இடமிருக்கிறதென்றும், ஆறு அங்குல பீரங்கிகளை ஏற்றிச் செல்லும் சப்மெரின்கள் இந்நூதன சக்தியின் ஒரே பிரயோசத்தால் உலகத்தை இரண்டுதடவை சுற்றிவரக்கூடுமென்றும், சப்மெரீன்களிலிருக்கும் மனிதர்களுக்குத் தேவையானபிராணவாயு (oxygen) இருக்கும்வரையில் சப்மெரீன்கள் இந்நூதன சக்தியினால் ஜலத்தின் கீழேயிருக்கலாமென்றும், கீழே இருக்கும்காலத்தில் ஜலத்தின் மேல்மட்டத்தில் ஒருவிதமான குமிழிகளும் உண்டாகாவென்றும், ஆகையால் அவைகளிலிருக்குமிடத்தை எதிரிகள் சுலபமாய் அறியமுடியாதென்றும், இந்நூதன சக்தியைப் பிரயோகித்தால் ஒருவிதமான மின்சார யந்திரமும் (Battery) அவசியமில்லையென்றும், அவைகளிருக்குமிடத்தில் கப்பல்களை உடைக்கும் யந்திரங்களை (Torpedo) சப்மெரீன்களில் அமைக்கலாமென்றும், 35 மைல்வேகத்துடன் சப்மரீன்கள் அச்சக்தியால் செல்லக்கூடுமென்றும் அவர் சொல்லுகிறார்.

ஒருவருஷம் வரையில் ஒருசண்டைக்கப்பல் இச்சக்தியால் ஜலத்தில் ஓடும். புகைபோவதற்கு ஒருவிதமான புகைப்போக்கியும்வேண்டியதில்லை. (Nitro-Energy) உப்புவாயு சக்தியில் அரை டன் இருந்தால், அது 600டன் நிலக்கரி செய்யும் வேலையைச் செய்யக்கூடும். கப்பலை நடத்துவதற்கு 1 அல்லது 2 மனிதர் இருந்தால் போதும்.

**Punalur Paper Factory.**

புனலூர் காகிதத்தொழிற் சாலை:—இத்தொழிற்சாலையானது புனலூரில் 1887-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இச்சாலையின் மூலதனம் 3 லட்சரூபாயாகும். ஒவ்வொரு பங்குக்கும் ரூ. 500 வீதம் 600 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, இவற்றில் 50 பங்குகளைத் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் எடுத்துக்கொண்டார்கள். மேலும் 15 வருஷகாலத்துக்கு, 100 க்கு 4 வீதம் வட்டிகட்டிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். தொழிற்சாலையின் நிர்வாகத்துக்கு இம்மூலதனம் போதாமல் மறுபடியும் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் 1889-ம் வருஷத்தில் 100-க்கு 8 வீதம் $1\frac{1}{2}$ லட்சம் ரூபாய் உதவிசெய்தனர். இப்பணமானது யந்திரங்களிற் செலவாய்விட, மறுபடியும் 25 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கும்படியாயிற்று. சாலையின் வேலையானது 1890-ம் வருஷம் நவம்பர் வரை ஆரம்பிக்கப்படவில்லை. இதுவரை ரூ. 25,716 வரை நஷ்டம் உண்டாகிவிட்டது. மறுபடியும் திருவான்கூர் கவர்ன்மெண்டார் முறையே ரூ. 63 ஆயிரமும் ரூ. 23ஆயிரமும் கடன் கொடுத்தனர். இதன் பிறகு அக்கவர்ன்மெண்டாரிடமிருந்து கடன் பிறக்காமற்போகவே 1893-ம் வருஷம் சாலை மூடப்பட்டுப் போயிற்று. சாலையானது விலைக்கு விடப்பட திருவான்கூர் கவர்ன்மெண்டார் ரூ. 32 ஆயிரத்துக்கு எடுத்துக்கொண்டார்கள்.

# காரைக்காலம்மை சரிதை.

வேலூர் ஊரீஸ் காலேஜ் பிரதம தமிழ்ப்பண்டிதர்

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்

எழுதியது.

சுதேசமித்திரன்:—காரைக்காலம்மையார் சரித்திரம் என்ற புத்தகத்தின் பிரதியொன்றினை இன்று "ஜனோபகாரி" ஆபீஸிலிருந்துவரப்பெற்றோம். சுமார் 24 பக்கங்கள்கொண்ட இச்சிறு புத்தகத்திற்காணப்பட்ட காரைக்காலம்மை சரித்திரம் பெரிய புராணத்திற் செய்யுள் ரூபமாகக் காணப்படும். இதனை எளிய நடையில் வேலூர் ஊரீஸ் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் மிஸ்டர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதியிருக்கிறார். இப்படிப்பட்ட கதைகள் நம்நாட்டுப் பெண்பாலர்கள் பலர் கையில் இருக்கத்தக்கது. இதன் விலை அணா 1. வேண்டுவோர் வேலூர் "ஜனோபகாரி" பத்திரிகை ஆபீஸுக்கு எழுதித் தருவித்துக்கொள்ளவும்.

பிரபஞ்சமித்திரன்:—காரைக்காலம்மை சரித்திரம் என்ற பெயர்கொண்ட ஒரு சிறிய புத்தகம் வேலூர் "ஜனோபகாரி" கார்யஸ்தலத்திலிருந்து வரப்பெற்றோம். நல்ல தமிழில் எளிய நடையில் எழுதப்பட்டு எல்லாருக்கும் பயன்படக்கூடியதாயிருக்கிறது. விலை அணா ஒன்றுதான்.

---

# Bound Volume of the "JANOPAKARI"

**Vol. 1. Pages 356.**

The Volume contains excellent contributions from well-known writers on various topics.

**From January—December 1916.**

**The Editor's Notes are unique.**

**Price Rs. 4.**

---

மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.



# ஜனோபகாரி.

**(JANOPAKARI)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.



2 APR 1917



புத்தகம் 2. Vol. II. | நளஷூ பங்குனிமீ MARCH, 1917. | சஞ்சிகை 3. No. 3.


## Kindergarten.


By Mr. K. P. Seshadri Aiyangar.


### "கிண்டர்கார்டன்" அல்லது விளையாட்டுப் பள்ளிக்கூடம்.

'கிண்டர்கார்டன்' என்பது, ஜெர்மன் வார்த்தை. 'கிண்ட்' என்பதற்குக் குழந்தை என்பது பொருள். 'கிண்டர்' என்பது குழந்தைகள் என்று பன்மைப்பொருள்படும். 'கார்டன்' என்பது தோட்டம். ஆனால், கிண்டர்கார்டன் என்னும் பதத்திற்குப்பிள்ளைகளுடைய அல்லது பிள்ளைகளுக்காக நிருமிக்கப்பட்ட தோட்டம் என்பது அர்த்தமன்று. பிள்ளைகளாகிய தோட்டம் என்றே பொருள் அறியவேண்டும். குழந்தைகளை மிக்க கவலையுடன் ஆதரிக்கப்படவேண்டிய செடிகளாகவும், உபாத்தியாயர்களை அச்செடிகளைக் கண்ணை இமை காப்பதுபோல் பாதுகாக்கும் தோட்டக்காரர்களாகவும் பாவனை செய்யவேண்டும். ஒரு தோட்டத்திலுள்ள செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிப் பாதுகாத்து வளர்ப்பது எப்படித் தோட்டக்காரனது வேலையோ, அப்படியே, பிள்ளைகளின் மனதாகிய தோட்டத்தைப் பரிஷ்கரிசெய்து அபிவிருத்தியடையச்செய்வது உபாத்தியாயர்களது கடமை. இந்த அர்த்தம் விளங்கும் பொருட்டும், பிள்ளைகள் ஓடியாடிக் குதூகலத்துடன் குதித்து விளையாடும்படிக்கும் ஒவ்வொரு 'கிண்டர்கார்டனை'ச் சுற்றிலும் பெரிய தோட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. கிண்டர்கார்டனிலிருக்கும் பிள்ளைகள், தாம் விளையாடிக்கொண்டிருக்கிறதாக எண்ணம் கொண்டிருப்பார்களாகையால், கிண்டர்கார்டனை நாம் தமிழில் 'விளையாட்டுப்பள்ளிக்கூடம்' என்று சொல்லலாம்.

அதில் மூன்று வயது முதல் ஆறு பிராயம் வரையுள்ள குழந்தைகளைத்தான் சேர்த்துக் கொள்வர். சிறு குழந்தைகளுடன் புருஷர்கள் பழகுவதினும் ஸ்திரீகள் பழகுவது சகஜமாயிருக்கும். சுபாவத்திலேயே பெண்களுக்குக் குழந்தைகளின்மீது அன்பும், ஆசையும் அதிகம். இளகிய மனதும், இன்சொல்லும், கருணை சொரியும் பார்வையும், வசீகரிக்கும் தன்மையும், சாந்தமும், ஆடவர்களைவிட அரிவையர்கட்கு இயற்கையிலேயே அதிகமாக அமைந்துள்ளன. ஆகவே, குழந்தைகளை அவர்களுக்குத் தகுந்த விதமாகப் பழக்குவதில் ஸ்திரீகள் தான் ஏற்றவர்கள்.

சாதாரணமாக, கிண்டர்கார்டனுக்கு ஸ்திரீகளை உபாத்தியாயினிகளாக நியமித்துவருகிறார்கள். அவர்கள் தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட குழந்தைகளிடத்தில் தன்பெற்ற அன்னை போல அன்பு பாராட்டுகிறவர்களாயிருக்கவேண்டும். பிள்ளைகள் இயற்கையில், எப்பொழுதும் குதூகலமும் உல்லாசமுமுள்ளவர்களாயிருப்பார்கள். அவர்கள் நடையென்பதே இன்னதென்று அறியார்கள்; துள்ளித் துள்ளியோடும் சுபாவம் மேலிட்டுள்ளவர்கள். அவர்கள் கொண்டிருக்கும் உல்லாசத்தில் கொஞ்சங்கூடக் குறையாமலிருக்க அவர்களுக்கு முக்கியமாய் வேண்டியவை இரண்டு. அவை, அன்புள்ள தாயும், தங்களைப்போல் குதித்து விளையாடும் சுபாவமுள்ள பிள்ளைகளின் சகவாசமுமாம். இவையிரண்டும் கிண்டர்கார்டனில் உண்டு. ஆகையினால்தான், எங்கெங்கே கிண்டர்கார்டன் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ, அங்கங்கேயெல்லாம் பிள்ளைகள் அதிகமாகச் சேர்ந்து வருகிறார்கள்.

மூன்று வயது வரையில் பிள்ளைகளை, வீட்டில் தாயார் சரிவரப் பார்த்துவரவேண்டும். அந்த வயதுக்குள் தாயைவிட்டுப் பிரிந்திருப்பது குழந்தைகளால் முடியாது. அந்த வயதுக்கு மேற்பட்டுப் பிள்ளைகளை நல்வழிக்குக் கொண்டுவரவேண்டிய முறை, எல்லா ஸ்திரீகளுக்கும் தெரியாதாகையால், தெரிந்தவர்களைக் கிண்டர்கார்டன் உபாத்தியாயர்களாக நியமித்து, அவர்களிடத்தில் குழந்தைகளை ஒப்பித்து வருகிறார்கள்.

கிண்டர்கார்டன், வீட்டுக்கும் பள்ளிக்கூடத்திற்கும் நடுத்தரம். வீட்டிலுள்ள தாயின் அன்பும், சாதாரணமாய்ப் பள்ளிக்கூடங்களிலுள்ள சட்டதிட்டங்களில் சிலவும், கிண்டர்கார்டனில் இருக்கின்றன. ஆயின், வீட்டில் குழந்தையின் படிப்புக்கு அடிக்கடி நேரிடும் விகாதங்களும், பள்ளிக்கூடத்திலுள்ள கடுமையான நிர்ப்பந்தமும் இதில் இல்லை. வீட்டை விட்டு கிண்டர்கார்டனிலிருப்பதும், பிறகு அதைவிட்டுச் சாதாரணபாடசாலைக்குப் போய் அதன் நிபந்தனைகளுக்கு உட்படுவதும் சகஜமாயிருக்கும்.

## இம்முறையை உண்டாக்கினவர் யார் ?

இந்த கிண்டர்கார்டன் முறையை முதன் முதலில் 'பிரடரிக் பிரோபல்' என்னும் ஜெர்மானியர் ஏற்படுத்தினர். அவர் தம் வாணாளெல்லாம் குழந்தைகளுக்குப் போதிக்கும் முறையைக் கண்டுபிடிப்பதிலேயே கழித்தார்; இயற்கைப் பொருளை நுட்பமாகக் கவனிப்பார்; அவைகளைப்பற்றிக் கொஞ்சம் ஐயம் ஏற்பட்டால், கற்றறிந்த நிபுணர்களைக்கொண்டு சந்தேகங்களை நீக்கிக்கொள்வார். தற்காலத்தில் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் அநேக தேசங்களில் அந்தந்தத் தேசத் துரைத்தனத்தார்கள் பால சிக்ஷை விஷயத்தில் பிரோபல், மான்டிஸோரி என்னும் இருவர்களின் கொள்கைகளையும், முறைகளையுமே முக்கியமாகக் கையாடி வருகின்றார்கள். நமது துரைத்தனத்தாரும், வித்தியா நிபுணர்களும் அதே முறையை நமது சிறுவர்கள் விஷயத்தில் அநுஷ்டிக்க முயற்சி செய்து வருகின்றார்கள்.

பிரோபல் என்பவர், பிள்ளைகளுடைய மனப் பயிற்சிக்கு அநுகூலமாகச் சில ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றார். பிள்ளைகளுக்கு இந்திரிய ஞானம் விருத்தியாகும்படி, சில சாமான்களைக் கொண்டு செய்யக்கூடிய விளையாட்டுக்களை ஏற்படுத்தியிருக்கிறார். இந்தச் சாமான்களுக்கு (Gifts) 'கொடைகள்' என்றும், அவைகளைக் கொண்டு பிள்ளைகள் ஆடுகிற விளையாட்டுக்களுக்கு (Occupations) 'அகுபேஷன்ஸ்' என்றும் பெயர். இவைதவிர, பிள்ளைகளுக்கு அர்த்தமாகக்கூடிய நடையில் சில விளையாட்டுப்பாட்டுக்கள் உண்டு. "நடப்போம், நடப்போம், நாமெல்லாரும் நடப்போம்" என்றிம்மாதிரி பொருள் படும்படியான பாட்டுக்களை உபாத்தியாயர் சொல்லி, அவற்றிலடங்கிய விஷயங்களைத் தெளிவாய்ப் பிள்ளைகளுக்குத் தெரியும்படி அபிநயித்துக்காட்டவேண்டும். இந்தப்பாட்டுக்களுக்கு 'அபிநயப்பாட்டுக்கள்' என்று பெயர். நம்முடைய பெண்குழந்தைகள் பாடிக்கொண்டு போடுகிற கோலாட்டம், அடிக்கிற கும்மி, ஆடுகிற அம்மானை, அடிக்கும் பந்து இவையெல்லாம் ஒருமாதிரியான அபிநயப்பாட்டுக்கள்தாம். நம்மவர்களுக்கு இவ்விதமான (Action Songs) அபிநயப்பாட்டுக்கள் புதியவையல்ல; தொன்று தொட்டு நம் பெண்பாலர் கையாடிவரும் புராதனப்பழக்கமேயாகும்.

## கிண்டர்கார்டனால் பெறப்படும் நன்மை.

சிறுவர்களின் மனமானது ஒரு கண்ணாடிக்குச் சமானம். எந்த உருவத்தையும் பிரதிபலிக்கும் தன்மை கண்ணாடிக்கு உண்டு. அது போல, குழந்தைகள் நல்லதையும் கெட்டதையும் பகுத்தறியச் சக்தியற்றவர்களாயிருப்பதனால், எதையும் மனதிற்பதித்துக்கொள்கின்றனர்; அதன் பிரகாரம் அப்பியாசமும் செய்கின்றனர். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்னும் பழமொழிக்கொப்ப, தீய ஒழுக்கத்தைச் சிறுவயதில் பழக்கத்தின்கீழ்க் கொண்டுவருவார்களானால், அவர்களது ஆவி உடலைவிட்டு நீங்கிப்போகும்வரை அந்தத் துரப்பியாசமும் போகாது. ஆகையினால், குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே நற்குணங்களைப் போதிக்க, நன்மார்க்கத்தை அநுசரிக்கும்படி பழக்கவேண்டும். அப்படி பழக்குவதற்கு, இந்த கிண்டர்கார்டன் முறைதான் சிறந்தது. கிண்டர்கார்டன் வகுப்பிலுள்ள சிறுவர்களைப் பாகுபாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பாகுபாட்டிற்கும் ஒவ்வொரு தலைவனை அவர்களிலேயே ஏற்படுத்தி, அவன் சொல்வதற்கு மீறி மற்றவர்கள் ஒன்றும் செய்யக்கூடாது என்று திட்டம் செய்து பழக்கினால், கீழ்ப்படியுந்தன்மை, ஒற்றுமை முதலிய நற்குணங்கள், குழந்தைகள் தாம் அறியாமலேயே அவர்களது மனதில் வேரூன்றி விடுகின்றன. செடிகளை நடுதல் என்பதைச் சிறுவர்கள் செய்வதாக வைத்துக்கொள்வோம். அதில், போதகாசிரியர் குழந்தைகளைச் சில பாகுபாடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வேலையைச் செய்யச்சொல்கிறார்; ஒருபகுதி நிலத்தைக் கொத்தவும், மற்றொருபகுதி விதை நடவும், மற்றொருபகுதி நீர் பாய்ச்சவும், பிறிதொருபகுதி களைபிடுங்கவும், இன்னொருபகுதி எருவிடவும், இம்மாதிரியே ஒவ்வொருவனும் ஒவ்வொரு வேலையைச் சரிவரச்செய்தால்தான், எல்லோரும் ஒன்றுகூடிச் செய்வதன்பலன் காணப்பெறலாம். ஒருவன் தன் வேலையிற் செய்யவேண்டியதைத் தவறினால், பொதுவாக அடையக்கூடிய பலன் இல்லாதொழியும். இதனால் குழந்தைகளுக்கு, 'அவனவன் வேலையைச் சரிவரசெய்யவேண்டும்; அப்படிச் செய்யாமற் போனால், அவனுக்குக் கெட்டபெயர் வருவதுடன், பொதுவாகச் செய்யும் காரியம் நிஷ்பிரயோஜனமாகிவிடும்' என்னும் பயமும் ஏற்படுகிறது. அந்தச் சிறுவயதிலேயே இம்மாதிரியான ஸத்குணங்களைப் போதகாசிரியர் குழந்தைகளின் மனதிற் படும்படி செய்வதற்கு, கிண்டர்கார்டன் முறையே இலாக்கியமானது. அத்தகைய எண்ணம் குழந்தைகளுக்கு அந்த வயதிலேயே உண்டாக்கிவிட்டால், அவர்கள் பிற்காலத்தில் ஸத்குணசிகாமணிகளாயும், ஜனோபகாரிகளாயும், தேசாபிமானிகளாயும், மதாபிமானிகளாயும் விளங்குவார்களென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமுண்டோ?

ஸி. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

---

சுதேச பரிபாலினி:—"(ஜனோபகாரி.) பொதுஜன பிரயோஜனமான விஷயங்களும், வியாபாரம், கைத்தொழில், வியவசாயம் முதலானவைகளைப்பற்றி அறிவை யூட்டத்தக்க குறிப்புக்களும், நீதிமொழிகளும், நவீன ஸங்கல்பங்களும் செறிந்து நிறைந்திருக்கின்றன. பத்திரிகை முழுவதும் திவ்யமான எளிய தமிழ்நடையிலே எழுதப்பட்டு, படிப்பவரது கவனத்தைக் கவரத்தக்கதாயிருக்கின்றது."

## The Resin Industry in India.

## இந்தியாவில் குங்கிலியத் தொழில்.

இப்போது இந்தியாவில் கைத்தொழிலின் அபிவிருத்திவிஷயத்தில் பற்பல இடங்களிலும் ஊக்கம் நாட்டப்பட்டுவருகின்றது. கைத்தொழிலின் அபிவிருத்தியைக் கோரி இராஜாங்கத்தார் ஓர் கமிஷனை ஸ்தாபித்து, பற்பல தொழில்களின் விஷயங்களை ஆராயுமாறு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இக்கமிஷன், இந்தியாவின் பற்பலபாகங்களிலும் சென்று, தொழில்நிபுணர்களின் அபிப்பிராயத்தை அறிந்துவருகிறது. இமயமலைச்சாரலில் வியாபித்திருக்கும் குங்கிலியத் தொழிலைப்பற்றிய பலவிஷயங்களையும் இக்கமிஷன் நன்கு விசாரித்தறியக் கடமைப்பட்டதாகும். இமயமலைச்சாரலிலிருக்கிறதாகும் தேவதாரு என்னும் மரத்தைத் துளைத்து, அதினின்றும் வடியும் திரவத்தைக் காய்ச்சி இறக்கினால், குங்கிலியம் (Resin) என்றும், கற்பூரத்தைலம் (Turpentine) என்றும் இரண்டுவஸ்துக்கள் பெறப்படுகின்றன. இக்கைத்தொழிலானது, சிறுக, சுமார் இருபது வருஷங்களுக்கு முன் முதன்முதலாக 'குமான்' என்று சொல்லப்படும் குன்றுகளிலும், அதன்பிறகு பஞ்சாபில் பலவிடங்களிலும் பரிக்ஷார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், அதிக ரெயில்வேகட்டணத்தினாலும், குறைந்த விலையில் அன்னியநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்கினாலும் இத்தொழில் விசாலிப் பரவ ஹேதுவில்லாமற் போய்விட்டது. சென்ற 1908-ம்வருஷத்தில் பல நூதனயந்திரங்களைக்கொண்டு இத்தொழிலை அபிவிருத்திசெய்யப் பிரயத்தினங்கள் செய்யப்பட்டன. உலகத்தில் குங்கிலியம் உற்பத்தியாகும் தேசங்களுக்கெல்லாம்—அமெரிக்கா, பிரான்ஸ்—போய் இத்தொழிலைப்பற்றிய பல விஷயங்களையும் அறியுமாறு மிஸ்டர் கிப்ஸன் ஐ. எப். எஸ். (Gibson I. F. S.) என்பவர் அனுப்பப்பட்டார். பிறகு, டேராடூன் (Dehra Dun) என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஆராய்ச்சிச்சாலையிலும், குமான் குன்றுகளிலும் நவீனமுறைகளில் பல பரீக்ஷைகள் செய்யப்பட்டன. இப்பரீக்ஷைகளெல்லாம் அநுகூலமாகவே முடிந்தன. இப்போது பஞ்சாபில் லாகூருக்கருகில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் தொழிற்சாலையில் இக்காலத்திற்கு ஏற்றவாறு நவீனமுறையில் கற்பூரத்தைலமும், குங்கிலியமும் செய்யப்படுகின்றன. இவை, அன்னியநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சரக்கைவிடப் பலவிதத்திலும் உயர்ந்ததாகவே காணப்படுகின்றது. இந்தியாவில் ஏறக்குறைய வருஷமொன்றுக்குப் பத்துலட்சம் ரூபாய் மதிப்புள்ள கற்பூரத்தைலமும், குங்கிலியமும் செலவாகின்றன. ஆனால், இந்தியாவில் ஏறக்குறைய ஆறுலட்சம் ரூபாய் மதிப்புள்ள கற்பூரத்தைலமும் குங்கிலியமும் உற்பத்தியாகின்றன. ஆகலால், இத்தொழில் இன்னும் பலதுறைகளிலும் விருத்தியடைந்து, தேவைகளை அநுசரிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இமயமலைச்சாரலைச் சேர்ந்த பிராந்தியங்களில் தேவதாருகாடுகள் பின்வருமாறு வியாபித்திருக்கின்றன:—

| | ஏக்கர்கள். |
|---|---|
| காஷ்மீர், ஜாமு, பூச் | 690,000 |
| குமான், கார்வால் | 650,000 |
| ஜான்ஸார், டெஹ்ரி, கார்வால் | 420,000 |
| பஞ்சாப் | 240,000 |
| மொத்தம் | 2,000,000 |

இந்தியாவுக்குத் தேவையான குங்கிலியமும், கற்பூரத்தைலமும் 200,000 ஏக்கர் தேவதாருகாடுகளிலிருந்து கிடைத்துவிடுகின்றன. மீதியான இடங்களில் உற்பத்தியாகும் சரக்குக்களை அன்னியநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் அதாவது: 100-க்கு 90 வீதம் இக்காடுகளிலிருந்து பெறப்படும் சரக்குக்களை ஏற்றுமதி செய்யலாம். இக்காடுகளிலிருந்து பதன்படாத சரக்குக்களைக் கைத்தொழிற் சாலைகளுக்குக் கொண்டுபோகப் பாதைகள் முதலியன சரியாக இல்லாததனால், கூலிவிகிதங்கள் அதிகப்படுகின்றன. இது காரணம்பற்றி, இக்காடுகளில் பலவிடங்களிலும் வேலைகள் செய்யப்படாமலிருக்கின்றன.

காட்டு இலாகா அதிகாரிகள் இக்கஷ்டங்களை ஒழிக்கப் பல பிரயத்தினங்களைச் செய்துவருகிறார்கள். இக்கஷ்டங்கள் ஒருவாறு ஒழியுமானால், சரக்குக்கள் அன்னிய நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படலாம். தொழிற்சாலைகளுக்கும் கப்பல்துறைமுகங்களுக்கும் தூரம் சுமார் 800 முதல் 1000 மைல்கள் வரை இருப்பதனால், ஏற்றுமதி விஷயத்தில் மிகவும் சிரமமேற்படும். தேவதாரு காடுகளை உடைய மற்ற நாடுகளில் இக்காடுகள் சமுத்திரக்கரையோரங்களில் இருப்பதால், சரக்குக்கள் ஏற்றுமதி செய்யப்படுதல் சௌகரியமாயுள்ளது; அநாவசியமான ரெயில்வேகட்டணம் இல்லாமலுமிருக்கின்றது. இதனால், வேற்றுநாட்டுச் சரக்குக்களோடு போட்டிபோட முடிகின்றது.

இந்தியாவில் தொழில் செய்யப்படும் இச்சரக்குக்களுக்கு ரெயில்வேகட்டணம் முதலானவற்றில் சௌகரியமேற்பட்டால், வெகு மலிவாக அன்னிய நாடுகளுக்கு இவற்றை ஏற்றுமதி செய்யலாம்.



## Araiyaninallore Inscription.

By A Researcher.

## அறையணிநல்லூர்ச்சாஸனம்.

அறையணிநல்லூர்க்கிராமம், திருக்கோவலூர்க்கு வடகிழக்கே முக்கால்மயிலில் பெண்ணையாற்றின் வடகரையில் இருக்கிறது. இந்த ஊரில்தான், திருக்கோவலூர் ரயில்வே ஸ்டேஷன் உள்ளது; இதை அறைகண்டநல்லூர் என்று ஜனங்கள் இப்பொழுது வழங்கிவருகிறார்கள். இதில், திருஞானசம்பந்தமூர்த்திநாயனரால் பாடப்பெற்றதும், * கௌரி, நந்தி, முருகக்கடவுள், பாணாசுரன், மன்மதன், ராவணன், பரசுராமன், மாவலி, தசரதன், கிருஷ்ணன், வீமசேனன், தேவேந்திரன் முதலியவர்கள் வழிபட்டுப் பேறுபெற்றதுமான சிவக்ஷேத்திரம் ஒன்றுண்டு. இந்த க்ஷேத்திரம் ஒரு பெரிய பாறையின்மேல் உள்ளது. கோவிலுக்குச் சமீபத்தில் பஞ்சபாண்டவர்கள் வசித்ததாகக் கூறப்பெறும் ஐந்து குகைகளும், வீமனால் உண்டானதாகச் சொல்லப்படும் என்றும் வற்றாத தீர்த்தமுள்ள சுனையும் உள்ளன. இப்பாறையின் அடியில் தென்பெண்ணையாறு ஓடுகிறது. இவ்வரிய க்ஷேத்திரத்தில் கோயில்கொண்டிருக்கும் சிவபிரானுக்குப் பெயர் ஒப்பொருவருமில்லாதநாயனார் [அதுல்யநாதேச்வரர்] அறையணிநாதர் என்றும், அம்பிகைக்குப் பெயர் அழகிய பொன்னம்மை [ஸௌந்தர்ய கநகாம்பிகை] அருணபகி என்றும் பெயர் வழங்குகிறது. கவனித்துப் பரிபாலிப்பாரில்லாமையால், வௌவால்கள் இக்கோயிலைத் தங்கள் உறைவிடமாகக் கொண்டுள்ளன. கோயில் பல இடங்களில் சிதைந்திருக்கின்றது. ஆயினும், இதில் பல பழைய தமிழ்ச்சாஸனங்கள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்றை 'ஜனோபகாரி'யைப் படிக்கும் நண்பர்களுக்கு விருந்தாகக் கீழே எழுதுகின்றேன்:—

1

* "கௌரீ நந்தீ குஹச்சைவ பாணோ மந்மத ஏவச, ராவணோ ரேணுகாபுத்ரோ பலோ தசரதஸ் ததா. (க) க்ருஷ்ணச்ச பீமஸேநச்ச தேவேந்த்ரோ இதி பூஜிதா:" (உ)

* ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு ௩௨-வது, ராசராசவளநாட்டுப் பெண்ணை வடகரை உடைக்காட்டுக்கோட்டத் திருவறைபணி நல்லூருடையான் ஒப்பொருவருமில்லாத நாயனார் கோயில் [இத்] திருக்கற்றளிசாத் [தி] (ந) வி [ற்று] (த்தா)ன் பாண்டிமண்டலத்து வடவெள்ளாற்றுக்கூற்றத்து ஆற்றூம்பூரில்ஆற்றூம்பூருடையான் திருக்காளத்தியுடையான்.

இது பன்மாஹேச்வரரக்ஷை தூடுவானான பட்டன் சுவாமி.

இவ்வரிய சாஸனத்தால், பாண்டிமண்டலத்தில் வெள்ளாற்றுக்கூற்றத்தில் உள்ள ஆற்றூம்பூர் திருக்காளத்தியுடையான் இவ்வூர் கோயிலை கற்றிருப்பணிசெய்வித்தான் என்பதும் பிறவும் விளங்குவதாகிக.

உ

சிவமயம்.

§ ஸ்வஸ்திஸ்ரீ

புகழ் சூழ்ந்த புணரி
அகழ் சூழ்ந்த புவியிற்
பொன் னேமி யளவுந்
தன் னேமி நடப்ப.
விளங்கு ஜயமுக விளங்கோர் பருவத்துச்
சக்கர(க்) கோட்டத்து விக்(கி)ரமத்
[தொழிலாற்
புதுமலம் புணர்ந்து, மதவரை யீட்டம்
வயிரா கரத்து வாரி யயின்முனைக்
கோந்தள வரசர் தந்தள மிரிய
வாளுன்ற கழித்து(க்), தோள்வலி
காட்டிப்
போர்ப்பரி நடத்திக், கீர்த்தியை நிறுத்தி,
வடதிசை வாகை சூடி(க்), தென்றிசை
தேமரு கமலப் பூமகள் பொதுமையும்,
பொன்னி யாடை(ப்) நன்னிலப்
பாவையின்
றனிமையுந் தவிர்த்துப், புனிதத்திருமணி
மகுட முரிமையிற் சூடித்,
தன்னடி யிரண்டுந் தடமுடியாகத்
தொன்னில வேந்தர் சூட, முன்னை
மநுவாறு பெருகக், கலியாறு வறப்ப(ச்),
செங்கோ றிசைதொறுஞ் செல்ல,
[வெண்குடை
யிருநில வளாக மெங்கணுந் தணந்து
திருநில வெண்ணிலாத் திகழ்த்திகழ,
வொருதனி மேருவிற் புலிவிளை........
வந்தரத் துப்பூ பாலர் திறைவிடுத்
தந்த கலஞ்சொரி களிறுமுறை நிற்ப,
விலங்கிய தென்னவன் கருந்தலைப்
பருந்தலைத் திடத்தன் (?)
பொன்னகர்ப் புறத்திடைக் கிடப்ப,
[விக்காட்
டிற்குலப் பிறையோ னிறம்பின்ற
[யென்றுந்
சொல்லெதிர் சோடிற் றல்லது, தன்னை
வில்லெதிர் சோடா வேழ்குலைத் தரு
அளத்தியி லிட்ட களிற்றின தீட்டமும்,
பட்டவெம் பரியுங் கெட்டதன் மானமுங்
கூறின வீரமுங் கெடப்ப, வேறின
மலைகளு முதுகு கொளிப்ப,
விழுந்த நதிகளுஞ் சுழன்றடைந் தோட,
விழுந்த கடல்களுந் தலைவிரித் தலமரக்,
குடதிசைக் காடுவகுந்ததாயுந் தாதைபு
பன்று ளிட்ட பல்பல முதலும்,
பயந்தெதிர் மாறிய சயப்பெருந் திருவும்,
பழிபுகுந்த தொடுத்த புகழின் செல்வியும்,
வாளா றொண்கண் மடந்தைய ரீட்டமும்,
மீளாது கொடுத்த வெங்கரி நிரையுஞ்,
சங்கமண் டலமுந், சிங்கண மென்னும்
பாணி யிரண்டு மொருவிசை கைக்கொண்
டெண்டிய புகழொடு பாண்டிமண் டலமுங்

* இச்சாஸனம், ஒப்பொருவருமில்லாத நாயனார் தேவாலயகர்ப்பகிருகத்தின் தென்புறத்தில் கீழண்டை வச்சிரப்படையில் உள்ளது.

§ இது, திருக்கழுக்குன்றம் பக்தவத்ஸல சுவாமி கோயில் பிராகாரத்துத் தென்மேண்டை சுவரில் எழுதியிருக்கும் சிலாசாஸனம்.



கொள்ளத் திருவுள்ளத் தடைத்து,
வெம்புரித் தரங்கமும், பொருகரிக்
[கலங்களுந்,
தந்திர வாரியு முடைத்தாய்ப் பரந்து,
வடகடல் தென்கடற் பாய்வது போலத்,
தன்பெருஞ் சேனையை யேவிப், பஞ்சவ
ரைவரும் பொருந்தப் பொருத போர்க்
[களந்தஞ்சி
வெரினெளித் தோடி யரணெனப் புக்க
காடறத் துடைத்து, நாட்டிப் படுக்க
மற்றவர் தம்மை வனசர ராக்கிக்,
கொற்ற வெஞ்சுர மேற்றிக் கொற்ற
விசயத் தம்ப மெழில் பெற நிறுத்தி,
முத்தின் சிலாபமு முத்தமிழ்ப் பொதியிலு
மத்தவெங் கரிபடி மய்யச் சையமுங்
கன்னியுங் கைக்கொண் டருளித்,
[தென்னாட்
டெல்லை காட்டிக், குடமலை நாட்டுள்,
வரசவே றெல்லாந் தனி........
மாவே றியதன் வருஉதினித் தலைவரைந்
துறுகலர் குலைய கோட்டா றட்பட
நெறிதொறு நிலைகளிட் டருளி யப்புலத்
தலங்களுங் கோங்கமண் டலமுங்
[கைப்படுத்தருளித்,
திறைகொ ளாரமுந் திருப்புயத் தலங்கலும்
போல்வீரமுந் தியாகமும் விந்த........
சிவனிடத் துமையெனத் தியாகவல்லி
யவனிமுழு துடையா ளுடனிருப்
[பவவளுடன்
கங்கை வீற்றிருந்தென மங்கையர்திலத
மேழிசை வல்லவி யேழுலக முடையாள்
வாழிரும் பொன்னினி திருப்ப வூழியு
மவனிமுழு துடையாளோடும்
வீரசிம் மாசனத்து வீற்றிருந் தருளிய
கோவிராச கேசரி வர்மரான

சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பத்திரண்டாவது ஜயங்கொண்ட சோழமண்டலத்து *ஆமூர்க் கோட்டத்துக் குமிழி நாட்டு வானவன் மஹாதேவிசதுர்வேதி மங்கலத்து மகாசபையோம்: இவ்விலை யாவணக் கையெழுத்து.

அராய்ச்சி செய்வோர்.

## Moral Sayings.

By A Pandit.

## நீதிமொழிகள்.

நண்பன் தீச்செயல்களைச் செய்யுங்கால் அவற்றினின்றும் அவனைத் தடுப்பதும், நன்மையைத் தரவல்ல காரியங்களைச் செய்யும்படி தூண்டுவதும், இரகசியமான விஷயத்தை வெளியிடாது காப்பாற்றுவதும், நற்குணங்களைப் பலரறியக் கொண்டாடுவதும், ஆபத்து வந்த பொழுது வேண்டும் உதவியைச் செய்வதும், வேண்டியபோது தன்னிடமுள்ள பொருளை ஒளியாது கொடுத்துதவுவதும் மெய்நண்பர்களின் இலக்ஷணங்களாகும். குணங்கள் யாவும் அறிக்கப்பட்டன. பிறகு நெருப்பில் வைத்துக் காய்ச்ச, பாலுக்குற்ற தாபத்தைக் கண்டு அகற்று ஆற்றாத நீரானது தீயிற் சுண்டி ஆவிபோக்கலாயிற்று. அவ்வளவில், பால் தன் மித்திரனாகிய நீருக்குற்ற விபத்தினைக் கண்டு, தீயிற் குதித்து அதனை அவிக்கா நிற்ப, உடனே, மித்திரனாகிய தண்ணீர் தன்னுடன் சேரக்கண்டு அடங்கிநிற்கின்றது. நல்லோர்தம்மில் உண்டாகும் நட்பு இத்தன்மையதன்றோ?

* * *

அடுத்துவந்து தன்னிற்புகுந்த நீரின்பொருட்டாக, முதலிலே, பாலினால் தன்னிடமுள்ள அங்கே ஓரிடம் ஸ்ரீமந்நாராயணர் யோக நித்திரைசெய்துகொண்டிருக்கின்றார். மற்றோ

ரிடம் அவருடைய சத்துருக்களான இரணியாக்ஷன், இராவணன் முதலியவர்களின் சைனியங்கள் மறைந்துகொண்டிருக்கின்றன. வேறோரிடத்தில் தன்னை அண்டின மலைகளெல்லாம் மறைந்துகொண்டிருக்கின்றன. இன்னோரிடம் வடவாமுகாக்கினி வசிக்கின்றது. ஆஹா! என்ன ஆச்சரியம்! இக்கடலின் சரீரம் எவ்வளவு பெரியது! எவ்வளவு பலமுள்ளது! எவ்வளவுதான் தாங்கக்கூடியது!

***

இந்தப் பெரிதான பூமியைத் தன் முதுகின்மேல் பாதாளத்தில் தாங்கிக்கொண்டிருக்கும் ஆமையின் பிறப்பே பிறப்பு! ஆகாயத்தில் எல்லா நக்ஷத்திரமண்டலமும் தன்னைச் சுற்றி வரும்படியான பெருமையைப் பெற்றிருக்கும் துருவனுடைய ஜன்மமே மேலானது! ஆகாயத்தில் துருவனைப்போலாவது பாதாள லோகத்தில் ஆதிகூர்மம்போலாவது பரோபகாரம்செய்யமுடியாத இதரபிராணிகள், இப்பிரம்மாண்டமென்னும் அத்திப்பழத்திலுள்ள கொசுக்கள்போலப் பிறந்தும் பிரயோஜனமில்லாதவர்களே.

***

## முயற்சியுடையோரியல்பு.

தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபொழுது இடையில் கிடைத்த இரத்தினங்களாலும் சந்தோஷமடையவில்லை; பயங்கரமான ஹாலாஹல விஷத்தைக்கண்டும் அச்சமடையவில்லை; அமிருதத்தை அடையும்வரையில் சலிப்பின்றிக் கடலைக் கடைந்து, முடிவில் அதைப் பெற்றனர். ஆதலால், தீரர்கள் ஒருகாரியத்தில் பிரவேசித்தால், அது முடிவுபெறும்வரையில் அதைக் கைவிடவேமாட்டார்கள்.

***

சிலவிடத்தில் விரிப்பில்லாது பூமியிற் படுப்பதும், சிலவிடத்தில் உயர்ந்த கட்டில்மெத்தையிற் படுப்பதும், சிலவிடத்தில் காய்கனிகளைத் தின்பதும், சிலவிடத்தில் அறுசுவையுண்டியுண்பதும், சிலசமயம் கிழிந்த உடையுடுப்பதும், சிலசமயம் நல்லவஸ்திரத்தை உடுப்பதும் ஆகிய சுகதுக்கங்களை, தமது காரியத்திலேயே கண்ணுயுள்ளவர்கள் கவனிக்கமாட்டார்கள்.

***

நீதிசாஸ்திரவித்துவான்கள் நிந்தித்தாலும் தூஷித்தாலும், செல்வம் எவ்வளவு வந்தாலும் போனாலும், மரணம் இன்றே ஏற்பட்டாலும் அல்லது இன்னும் ஒருயுகமானபின் வருவதாயிருந்தாலும், தைரியபுருஷர்கள் நியாயம் என்ற மார்க்கத்தினின்று ஒரு அடிகூடச் சாலெடுத்து வைக்கமாட்டார்கள்.

***

எவன்மனமானது மாதர்களின் கூரிய கண்பார்வையாகிற அம்புகளால் மாறுதலடையவில்லையோ, எவனுடைய ஹிருதயம் சினமென்னும் தீச்சுடரால் பற்றியெரியவில்லையோ, சிற்றின்ப நுகர்ச்சியாவது பேராசையாகிற கயிறுவது எவன்மனதில் ஆசையை உண்டாக்கவில்லையோ, அத்தகைய தீரன்தான் இம்மூவுலகங்களையும் ஜயிக்கவல்லவன்.

***

மனவலிமை சிறப்புக்குணமாய் அமையப்பெற்ற மனிதன், எத்தகைய தாழ்வான நிலைமையைப் பெற்றாலும், அவனுடைய தைரியகுணத்தைமட்டும் நாசஞ்செய்யமுடியாது. நெருப்பைத் தலைகீழாக எறிந்தாலும், அதனது ஜ்வாலையானது ஒருகாலத்திலும் கீழ்நோக்கிப்போவதில்லை.

***

தங்கள் நற்பாவங்களினின்று விலகுவதிலும், மிக்க உன்னதமான மலையினின்று கரடுமுரடான பூமியில் விழுந்து இவ்வுடலைச் சின்னபின்னமாக்குவதும், மிக்க குரூரமான பற்களையுடைய ஆதிசேஷனது வாயில் கையையிடுவதும், நெருப்பில் விழுவதும் மேலாகும்.

***



ஸகலலோகங்களாலும் கொண்டாடப்படும் நற்குணமென்பது எவனிடம் இருக்கிறதோ, அவனுக்குத் தீயானது தண்ணீருக்குச் சமமாகும்; விரிந்த கடல் சிறுகுட்டையாகும்; மகாமேருமலை சிறுகல்லாகும்; சிங்கம் மான்போலாகும்; பாம்பு பூமாலையாய்விடும்; காளகூடவிஷமும் அமுதமாகும். அவனுக்கு அசாத்தியம் ஒன்றுமில்லை.

***

மரங்கள் வெட்டப்பட்டாலும் மீண்டும் துளிர்க்கின்றன. சந்திரன் குறைந்தாலும் மறுபடி வளர்கின்றது. இவ்விதம் யோசித்து, நல்லோர் தாம் துன்பமநுபவிக்கும்போதும் மனம் வருந்தார்கள்.

***

## விதியின் வலிமை.

இந்திரனுக்கு யோசனை சொல்பவரோ பிரகஸ்பதிபகவான்; சைனியங்களோ தேவர்கள்; கோட்டையோ சுவர்க்கம்; அநுக்ரஹமோ திருமாலுடையது; வாகனமோ ஐராவதம். இத்தகைய அற்புதமான பலத்தோடு கூடிய தேவேந்திரன், போர்க்களத்தில் பகைவர்களால் அவமானமடைந்தானென்றால், விதியே மேன்மைக்கும் தாழ்மைக்கும் காரணமென்பதற்கு வேறு அத்தாட்சியும் வேண்டுமோ? இதுவே போதுமன்றோ? வலிமையால் ஆவதென்ன? சீ! சீ!! அப்பௌருஷத்தைத் சுடு!!!

***

பாம்பாட்டியொருவன் ஒருபாம்பைப் பிடித்துப் பெட்டியில் அடைத்துவைத்திருந்தான். அது, தான் இனி அவனிடத்திலிருந்து தப்பமுடியாதென்று தன் ஆசைகளையெல்லாம் ஒழித்து, தன் உடலை மண்டலாகாரமாகச் சுற்றிக்கொண்டு, மிகுந்த பசியுடன் அப்பேழைக்குள் படுத்திருந்தது. அப்பொழுது எலியொன்று அப்பெட்டிக்குள் ஏதோ தின்பண்டம் இருக்கிறதென்றும், அதைத் தின்று பசிதீரலாமென்றும் நினைத்து, அப்பெட்டியைப் பற்களால் துவாரஞ்செய்து உள்ளே நுழைந்தது. இதைக்கண்டதும், பாம்பு மிக்க பசியோடு இருந்தமையால், அவ்வெலியைத் தின்றுவிட்டு, அதுவந்த துவாரவழியாகவே வெளியே சென்று தப்பிக்கொண்டது. இதனால், புருஷப்பிரயத்தனம் வீணென்று தெரிகிறது.

***

தெய்வபக்தியுள்ளவன் யாதேனும் ஓர் காரணத்தினால் தாழ்வை அடைந்தாலும், பந்தானது கீழே விழுந்து மேலே கிளம்புவதுபோல, மறுபடியும் மேன்மையடைவான். தெய்வபக்தியில்லாதவனோ, மண்ணாங்கட்டிபோல ஒருபோதும் மேன்மையடையமாட்டான்.

***

மயிரற்ற வழுக்கைத்தலையனொருவன், கதிரவனொளியால் தன் தலையெல்லாம் தவிக்க, நிழலைத் தேடி வேகமாய்ச் சென்று, முடிவில் ஒரு பனைமரத்தடியில் வந்துசேர்ந்தான். அப்பொழுது அந்தப் பனைமரத்திலிருந்து ஓர் பெரிய பனம்பழம் அவனது தலைமீது விழவே, தலையானது பட்டென்று வெடித்தது. ஆதலின், விதிவலிமைக்குட்பட்டவன் எங்கே சென்றாலும் அவனது கஷ்டகாலமும் கூடவே வருகின்றது.

***

யானை, ஸர்ப்பம், பறவை இவைகளுங்கூடக் கட்டுப்படுகின்றன. சந்திரசூரியர்களுக்கு இராகு, கேது என்ற கிரகங்களால் பீடை ஏற்படுகின்றது. அறிஞர்கட்கும் வறுமை உண்டாகின்றது. இவற்றையெல்லாம் யோசித்துப் பார்த்தால், விதிதான் பலமுள்ளதாகத் தோன்றுகின்றது.

***

பிரமன், உலகத்தில் ஸகலகுணங்களுக்கும் இருப்பிடமானவனும், பூமிக்கே ஓர் ஆபரணம் போன்றவனுமான ஓர் புருஷனைப் படைத்து, அவன் க்ஷணகாலத்திலேயே அழியும்படியும்

செய்துவிட்டால், அப்பிரமனது அறிவின்மையை என்னென்று சொல்வது?

* * *

அமுதத்திற்கு இருப்பிடமும், சகல மூலிகைகட்கும் தலைவனும், நூறு வைத்தியர் (சதபிஷக் என்கிற நக்ஷத்திரத்தால்) சூழப்பெற்றவனும், சிவபெருமானுக்கு ஓர் ஆபரணமாகப் பிரகாசிப்பவனும், ஆகிய சந்திரனையே க்ஷயரோகமானது விட்டுநீங்குவதில்லையென்றால், கர்மத்தின் விளைவை யாரால் தடுக்கமுடியும்?

* * *

என் அருமை நண்பா! துஷ்டனான பிரமதேவன் மிகவும் சாமர்த்தியசாலியான குயவன் போல என்மனதை மண்ணைப்போல் வறுமையில் பிண்டமாகப் பிடித்து, தண்டத்தினால் அடிப்பதைபோல ஆபத்துக்களாகிறபெருங்காற்றுடன் கூடிய சிந்தையென்னும் சக்கிரத்திலிட்டுச் சுற்றுகிறான். இவ்விதமாகச் சுற்றி, பிறகு என் மனதை என்னசெய்வானோ?

* * *

அறிவில்லியான பிரமனே! ஆபத்துக்காலங்களில் மஹான்கள் தங்கள் தைரியத்தை இழந்துவிடுவார்களென்று வேடிக்கை பார்க்க நினைக்கின்றனையே! இவ்வெண்ணத்தை விட்டுவிடு; அது ஒருபோதும் முடியாது. பிரளயகாலத்தில் குலபர்வதங்களும் ஸமுத்திரங்களும் தங்கள் எல்லையைவிட்டு விலகினாலும், அவர்கள் தைரியத்தை விடமாட்டார்கள்.

* * *

இவ்வுலகில் எல்லா அதிகாரமும் பெற்ற கடவுளால் ஒவ்வொரு மனிதனுக்கும் எவ்வளவு கிடைக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறதோ, அவ்வளவுதான் அவன் அடைகிறான். பெரிய பிரபுக்களை அண்டியிருப்பதால் யாதும் பயனில்லை. மேகமானது எல்லாத்திசைகளிலும் மழையைப் பொழிந்தாலும், சாதகம் என்ற பறவையின் வாயில் விழுவது இரண்டுமூன்று நீர்த்துளிகள்தாமே! சந்திரன் இரவில் எந்த வஸ்திரத்தினால் மூடப்படுகின்றானோ, அதே வஸ்திரத்தினாலேயே பகலில் சூரியனும் மூடப்படுகிறான். இவர்களுடைய துர்க்கதியைப் பார்க்கப் பரமாச்சரியம் உண்டாகிறது.

* * *

## வினையின் வலிமை.

தேவர்களை வணங்குவோம் என்று பார்த்தால், அவர்களும் அந்தப் பாவிவிதிக்கு உள்ளாகியிருக்கின்றனர். விதியையே நமஸ்காரம் செய்வோமென்று பார்த்தால், நாம் வினையால் உண்டாக்கியவற்றையே அது கொடுக்கின்றது. இவ்விதம் நாம் பெறும் பயனெல்லாம் கர்மத்திற்கு ஸ்வாதீனமானால், இதரதேவர்களால் ஆவதென்ன? விதியால் (படைப்போனால்)தானென்ன? ஆகலால், கர்மத்தையே நமஸ்கரிப்போம். கர்மத்தினும் விதி எவ்விதத்திலும் மேம்பட்டதாகாது.

* * *

எந்த வினையினால் பிரம்மாவானவர் பிரம்மாண்டமாகிற பானையின் மத்தியில் குயவன் போல நியமிக்கப்பட்டிருக்கின்றாரோ, விஷ்ணுவானவர் மிகவும் கஷ்டமான தசாவதாரமென்னும் காட்டிற் பிரவேசிக்கும்படி நேர்ந்ததோ, சிவபெருமான் கையிலே பிரமகபாலமேந்திப் பிச்சையெடுக்கும்படி ஆயிற்றோ, சூரியன் அரைநிமிஷமேனும் ஓய்வின்றி ஆகாயத்தில் எப்பொழுதும் திரிந்துகொண்டேயிருக்கும்படி நேர்ந்ததோ, அந்த வினைக்கு நமஸ்காரம்.

* * *

நல்வினையானது தீயோரை நல்லோராக்குகின்றது; மூர்க்கர்களைப் பண்டிதர்களாக்குகின்றது; பகைவர்களை நண்பர்களாக்குகின்றது; மறைந்திருப்பதை எதிரிலிருப்பதாகச் செய்கின்றது; விஷத்தையும் அமிருதமாக்குகின்றது. ஆதலின், இவ்விதஸம்பத்தைப் பெறுவிக்கூடிய நல்வினையை, கோரிக்கை நிறைவேறவேண்டிய நிமித்தம்



ஆராதிக்கவேண்டும். துன்பம் நிறைந்த ஸத்வ ரஜஸ் தமோ குணங்களில் ஆசை வேண்டாம்.

* * *

சுபத்தைக் கொடுக்கக்கூடிய கர்மமானது வெகுகாலம் இடைவிடாமல் ஏற்பட்டுக்கொண்டிருந்தால், அழகான மாடமாளிகைகள் அனுபவிக்கப்படும். அழகுவாய்ந்த யுவதிகளை அடையலாம். வெண்குடையால் விளங்கும் லக்ஷ்மியைப் பெறலாம். அந்நல்வினைக்கு ஏதேனும் இடையூறு நேர்ந்துவிட்டால், நாலாபக்கமும் சிதறிவிடுகின்றது.

* * *

புத்திமானாயுள்ளவன் எந்தக்காரியத்தையும் செய்வதற்குமுன், அது நல்லதா, கெட்டதாவென்று கவனித்துச் செய்தல்வேண்டும்; ஏனெனில், பரபரப்பாய்ச் செய்யும் காரியம் முடியாமற்போவதோடு, முடிவுவரை ஈட்டிபோல் புண்ணைச் செய்துகொண்டேயிருக்கும்.

* * *

கர்மபூமியிற் பிறந்து எவன் நற்கருமங்களைச் செய்யவில்லையோ, அவன் துரதிருஷ்டமுடையவனாவன். அவன், வைடூரியத்தாலாகிய எள்ளைப் போட்டுச் சந்தனக்கட்டைகளை விறகாக உபயோகித்து, அந்த எள்ளைப் பக்குவம்செய்பவனுக்கும், எருக்கம்பஞ்சுக்காகப் பொற்கலப்பையால் பூமியை உழுகின்றவனுக்கும், கற்பூரவாழையை வெட்டி அத்துண்டுகளால் வரகுக்கு வேலிகட்டுகின்றவனுக்கும் சமானமாவான்.

* * *

சரீரத்தின் அழகாவது, தன் வம்சமாவது, நல்லொழுக்கமாவது, கல்வியாவது, சிரமப்பட்டுச் செய்யும் வேலையாவது ஒரு மனிதனுக்கு அவன் வேண்டிய பயனை அளிப்பதில்லை. ஆனால், முற்காலத்தில் தான் செய்த நற்காரியங்களாற் சேர்ந்த பாக்யந்தான், மரங்கள் காலந்தப்பாது பழங்களைக் கொடுக்கும் முறைமைபோலப் பயனளிக்கின்றன.

* * *

நீருக்குள் முழுகினாலும், உயர்ந்த மகாமேருமலையின் உச்சியில் ஏறினாலும், யுத்தத்தில் பகைவரை வென்றாலும், வாணிபம், விவசாயம், சேவித்தல் முதலியவற்றைச் செய்யினும், மற்றும் அறுபத்துநான்குகலைகளைக் கற்றாலும், மிகவும் பிரயாசைப்பட்டுப் பறவைபோல ஆகாயத்திற் பறந்தாலும், கர்மவசத்தினால் எது நடக்குமோ, அதுதான் நடக்கும். அஃது ஒருபொழுதும் குறையாது.

* * *

கானகத்திலும், போர்க்களத்திலும், பகைவர், நீர், நெருப்பு இவைகளின் மத்தியிலும், ஸமுத்திரத்தினிடையிலும், மலையினுச்சியிலும், தூங்கிக்கொண்டிருக்கும் நிலையிலும், மதம்பிடித்த நிலையிலும், வேறு எவ்வித அவஸ்தையிலும் இருப்பவனை அவன் முன் செய்த நல்வினையானது காப்பாற்றுகின்றது.

* * *

உலகத்தில் எந்த மனிதனுக்குப் பயங்கரமான காடு தனது முக்கிய பட்டணமாகின்றதோ, அம்மனிதனுக்கு ஸகல ஜனங்களும் இஷ்டர்களாயிருக்கின்றனர். மேலும், எவன் முற்பிறப்பில் நற்கருமங்களை விரிவாய்ச் செய்திருக்கின்றானோ, அவனுக்குப் பூமியானது சமீபத்திலேயே வேண்டிய இரத்தினத்தைக் கொடுக்கின்றது.

ஓர் பண்டிதர்.

---

**பிரபஞ்சமித்திரன்** :—(ஜனோபகாரி) இப்பத்திரிகையில் கைத்தொழில், வியாபாரம், ராஜாங்கம் முதலிய விஷயங்களைப்பற்றியும், சிறுவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் பயன்படும்படியான அநேக அரிய விஷயங்களைப் பற்றியும், பலவியாசங்கள் எளிய நடையில் எழுதப்பட்டு வெளிவருகின்றன. இது ஒரு முதல்தரமான மாதப் பத்திரிகையே யாகும்.

## Vibheeshana's refuge.

By. Mr. P. K. Sreenivasachariar,
*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## விபீஷணனடைக்கலம்.

(51-ம் பக்கத் தொடர்ச்சி.)

அங்ஙனம்பெற்ற வரம் ஸபலமாகத் தக்க ஒப்பற்ற நற்காலம் வந்துவிட்டது. நாம் நினைத்தது பரிசுத்தமானது. அனைவர்க்கும் நாதனாகிய அனாதியாயுள்ள ஸ்ரீராமனது செந்தாமரை மலர்போலும் திருவடிகளைச் சரணமடைந்து, நம் மனத்திற் பொருந்திய கருத்தை முடித்துக் கொள்வோம்' என்று கருதி இன்பமுற்றான்.

உண்மைப் பொருள்களை நன்குணர்ந்தவர்களும், விஷயங்களைக் கூர்மையாக விரைவில் அறியவல்ல அதிமேதாவிகளுமாகிய அவர்கள், 'இப்போது இராத்திரி காலமாயிருப்பதனால் இவ்விருளிற் சென்றுசேர்வது உசிதமானது அன்று' என்று, உயர்ந்த பொருள்பட ஆலோசனை செய்தவர்களாய், மிக்க இருளுள்ள ஓரிடத்தில் மறைந்திருந்தார்கள். சூரியனும் உதயமாயினன்.

இஃது இங்ஙனம் இருக்க, அங்கு அப்பொழுது, ஸ்ரீராமன் கடலைக் கடத்தற்கு உரிய உபாயங்கருதுவானாய், அங்ஙனம் கருதுமிடத்து, நீலோற்பலமலர்போலுந் திருக்கண்களையுடைய சீதாபிராட்டியின் பவழத்தினும் மிகச் சிவந்து விளங்குகின்ற திருவிதழின் நினைவு வந்துவிட, அவளைப் பிரிந்த வருத்தத்தினாற் சோர்வுற்றவனாய், அந்நினைவை மறக்கவும், அச்சோர்வை நீக்கிக்கொள்ளவும், பெரிய கடற்கரைப் பக்கத்தில் வந்தடைந்தான்.

அங்கு, கடற்கரைச்சோலைகளையும், கழிகளையும், மணல்வெளியையும், தாழைமரங்களையும், கருங்குவளைமலர்களையும், நீலோற்பலமலர்களையும், பரவியுள்ள புன்னைமரங்களையும், மேன்மைமிக்க ஆணன்னங்களும் பெண்ணன்னங்களும் ஆசைகூர்ந்து விளையாடப்பெற்ற விளங்குகின்ற பூஞ்சோலைகளையும் இராமபிரான் விரும்பிக் கண்டான்; மற்றும், அங்கு, அலைகள் கொழிக்கப் பெற்ற முத்துக்குவியல்களையும், பவழக்குவியல்களையும், மற்றுமுள்ள திரண்ட இரத்தினங்களின் குவியல்களையும், பொன் மிகுதியாகப் பரவிய கரையையும், உள்நுழைந்தவர் திசை தெரியாது மயங்கப்பெற்ற அழகிய அடர்ந்த தோப்புக்களையும், மணற்குன்றுகளையும், அவற்றின்மேற் புரண்டுவருகின்ற பெரிய கடலலைகளையும் விரும்பி நோக்கினான்; இனிய புன்னகையுடைய நுளைச்சியென்ற கடற்கரையில் உள்ள பெண்கள் கடலில் மரக்கலம் செலுத்திச்சென்ற தங்கள் கணவர்கள் 'விரைவில் வருவார்களா' வென்று சகுனம் பார்ப்பதற்கு, மின்னல்போல் விளங்குகின்ற அழகிய விரல்தேய்வுறக் கூடுதற்கு அரிய பெருஞ்சுழிகள் சுழிக்குமளவில், கணவர்களைப் பிரிந்த வருத்தத்தினால் தங்கள் கண்களினின்று வீழ்ந்த நீர்த்துளிகள் அவற்றை அழிக்க, அவை அழிந்ததைக்குறித்துச் சோர்வுற்றவர்களாய் மீண்டும் இட்ட வட்டச்சுழிகள் மிகுதியாகவுள்ள அழகிய புன்னைமரச் சோலைகளையும் புகுந்துபார்த்தான்; காற்று மோதுதலால், கடலின் வெண்மையான அலைகளினின்று, நுண்ணியவையும் சிறியவையுமாகிய குளிர்ந்த கரும் பனித்திவலைபோலும் நீர்த்துளிகளின் கூட்டங்கள் வருதலால், அவற்றினின்று காத்தற்பொருட்டு, வளைந்த தாழைமரங்களின் மேல் ஆணன்னங்கள் அழகிய தம் பாதிச்சிறகுகளினால் தம் பெட்டைகளைப் பக்கத்தில் அணைத்துக்கொண்டு தூங்குவனவற்றைக் கண்டு, சானகியைப் பிரிந்த வருத்தம் தோன்றிப் பெருமூச்சுவிட்டான்; பெரிய விசாலமான ஒரு மரக்கிளையிலிருந்த ஓர் ஆண் நாரை, உண்ணுதற்கினிய மீனைக் கொணர்தற்பொருட்டு அக்கிளை



யைவிட்டுப் பிரிந்து செல்ல, அது வரும் திக்கையே நோக்கிக்கொண்டு, மழலைச்சொல்லையுடைய வெண்ணிறமுள்ள இளைய ஒரு பெண் நாரை இருந்ததுகண்டு, அசைவற்றுநின்று, சீதாபிராட்டி விஷயமான நினைவு வந்துவிடத் துன்பமுற்றான்; மிக்க வலிமையையுடைய குருகு என்னும் பறவைகளிரண்டு, தன்னந்தனியேயுள்ள ஒப்பற்ற பெண்குருகினிடத்துக் காதலோடு உள்ளம் ஓடுதலால், அவ்விரண்டும் பெண்குருகு உள்ள அவ்விடத்தை விட்டுப் போகாமல், மாறுபாட்டுடன்கூடிய கொடிய கோபத்தை உடையவையாயும், கண்கள் நெருப்புப்பொறி சிந்தப்பெற்றவையாயும், பின்னிடையாமல் ஒன்றோடொன்று போர்புரிய, அவற்றை இராமபிரான் கண்டு, அவற்றின்மீது சினங்கொண்டு, வில்லை வளைப்பதுபோலப் புருவத்தை வளைத்து நெறித்தான். கருத்தில் அன்பு நிறைந்து செய்யும் ஊடலில் பெண்ணன்னத்துக்குத் தோற்ற ஆணன்னம், அன்புமிக்க கூடலினால் அப்பெண்ணன்னத்தை வென்றுவிட, அதனைக் கண்ட ஸ்ரீராமன், தான் ஜானகியைப் பிரிந்திருத்தலைக்குறித்த நினைவு தோன்றி, குளிர்ந்து நிறம் விளங்குகின்ற பவழம்போன்ற வாயின் இதழை வெண்ணிற முத்துக்கள்போலும் பற்களினால் அதுக்கித் துயரமடைந்தான்.

இங்ஙனம் துயரமுற்றிருந்த சமயத்தில், அவனது அருகிலிருந்த இலக்குமணன், சுக்கிரீவ மஹாராஜன், ஜாம்பவான், அனுமான், அங்கதன் முதலிய புத்திமான்கள் உரைத்த தேறுதல் மொழிகளால் வருத்தம் நீங்கி ஒருவாறு உணர்வு தெளிந்தமைந்த பித்தர்போல ஸ்ரீராமன், அவ்விடத்தைவிட்டு நடந்துசென்று, இருப்பிடத்தைச் சேர்ந்தான். பின்பு, கல்வி கேள்வித்துறைகள்முற்றும் அறிந்த சதுரர்களான துணைவர்களோடு, ஸ்ரீராமன் இருந்த இடத்தில், அணியணியாக முறையிற்பொருந்திய வானரசேனையிடையில், வீரக்கழல் ஒலிக்குங் கால்களையுடைய விபீஷணன், ஸந்தேகமில்லாத மனத்தையுடையவனாய்ப் போய்ச்சேர்ந்தான். அப்போது மற்றொருசெய்தி நடந்தது என்னவுள்ளது! [யாதுமில்லையென்றபடி.]

'நினக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வெற்றியுடைய இராகவனே! சரணம்' என்று கூவியதோருரை இராமபிரானது திருச்செவியிடத்திற் சேர்ந்தது. ஐயன் சட்டென்று தனது நல்ல துணைவர்களின் முகத்தை விரும்பி நோக்கி, "எமது ஸ்வாமீ! இராகவனே! சரணம்' என்ற சொல்லைச் சொன்னவர் யாரோ? சொல்லுங்கள்" என்று கூறி, இரகசிய ஆலோசனையில் இருக்கையில், வலிமையுள்ளதும், பகைவர்களுக்குக் கொடியதுமான வானரசேனையால் அங்கு வந்தடைந்த விபீஷணனாகியோர்க்கு உண்டானதைச் சொல்வோம்:—

முழங்குகிற வானரசேனையினிடத்துத் துணைவர்களோடு வந்து சேர்ந்த ஆண்மக்களிற் சிறந்தோனாகிய விபீஷணனை வானரவீரர்கள் கண்டு மயங்கி, இராக்கதர்கள் வந்துவிட்டார்களென்று அனைவரும் ஒருங்குதிரண்டு அதட்டும் பற்பல சொற்களை உடையவர்களாய், 'தாக்குங்கள்; குத்துங்கள்; வெட்டுங்கள்; பிடியுங்கள்; அடியுங்கள்; உதையுங்கள்; கல் மரம் முதலியவற்றை எறியுங்கள்; கொல்லுங்கள்' என்று பேரிடியொலிபோலக் கர்ச்சித்து, அவர்கள் நின்ற இடத்தைச் சுற்றிக்கொண்டார்கள்; 'தருமதேவதையே இவனை நம்மிடம் கொணர்ந்துவிட்டது. இவன் கொடிய பாபத்தொழில்களைச் செய்வதில் மேன்மையடைந்தவனாகிய புண்ணியஜனன்; ஐசுவரியமுள்ள; இலங்கையிலுள்ளார்க்குத் தலைவன் இராவணனாகும்; இதோ இங்கு வந்தவன். இவன் ஏதோ ஒரு தீங்குபுரிதற்கு இங்கு வந்திருக்கிறான்; இஃது உண்மை. நம் கருத்துக்கள் முடிந்தன' என்று எண்ணினார்கள். "பாபியும், மூதேவிபிடித்தவனுமாகிய இராவணனுக்கு இருபதுகைகளும், பத்துத்தலைகளும் உண்டு' என்பார்கள். அவனுக்கு அவை அறுந்தழிந்து போய்விட்டனவோ?" என்பார்கள்; 'ஆற்றலுண்டானால், போர்த் தொழிலில் வல்ல எங்க

ளோடு போர்புரி' என்பார்கள்; இங்ஙனம் ஆறுக்கு ஒருவார்த்தையாகக் கூறி, ஒருவரினும், ஒருவர் குதித்து விரைந்து சென்று, மிக்க சினத்தோடு அதட்டி நெருங்கி அவன்முன்னே ஊன்றி நிற்பார்கள்; 'இவனைப் பிடித்துச் சிறைச்சாலையில் வைத்து, பிறகு லோகநாயகனாகிய நம் விஜயராகவப் பெருமானுக்கு இவனது வரவை உணர்த்துவோம்' என்று சொல்லுவார்கள்; 'சொல்வதன்றியே,' இவனைக்கண்டும் வேறு கருதிக் கணப்பொழுதேனும் நாம் வெறுமை நிற்றலேன்?' என்று நெருங்கி எதிர்க்கப்போவார்கள். 'இவர்கள் கண்ணிமைப்பொழுதின்முன் ஆகாயத்திற் கிளம்பி மறைந்து போய்விட்டபிறகு, அப்பொழுது நாம் வேறாகருதிப் புரிவது என்னுள்ளது? இவர் அரக்கரல்லரோ? 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்றோ?' "வெள்ளம் வருவதற்குமுன்னர் அணைகோலிவையார், பெருகுதற்கண் என்செய்வார்?" நாம் செய்யவேண்டியது இவர்களைக் கொல்லுதலேயன்றி வேறு தக்கது யாதுள்ளது? இவர்களைத் தொலைத்து அழிப்பதே நலம்'' என்று வேகத்தோடு கூறினார்கள்.

இங்ஙனம் அவரவர்கள் தம்தமக்குத் தோன்றிய இப்படிப்பட்டவற்றைக் கூறியவளவிலே, நற்குண நல்லொழுக்கமுள்ளவர்களும், குறைத்தை அறியவல்லவர்களுமாகிய மயிந்தன், துமிந்தன் என்னும் இருவர் வாநரத்தலைவர்கள், ஸூத்ரவியாகரணஞானம் நிறைந்த பண்டிதனாகிய அநுமனது சிறந்த கட்டளையினால் அங்கு வந்தடைந்தனர். வேதங்களையும், நீதிநூல்களையும், சாமுத்திரிகலக்ஷணமுரைக்கும் நூல்களையும் அறிந்த நற்குணமமைந்தவர்களாகிய அவ்வாநர வீரர்கள், விபீஷணனுடைய அறிவின் தன்மையையும் குறிப்பையும் தருமமார்க்கத்தை அநுஸரித்து ஆராய்ந்துபார்த்து, அவர்கள் கோபக்குறியும் பொய்க்குறியும் இல்லாதவர்களென்று துணிந்து, அவர்களைக் கொல்லுதற்கு விரைகின்ற வாநரசேனைத்தலைவர்களை விலக்கி, அவர்களருகிற் சேர்ந்தார்கள். அவர்கள் அவர்களை நோக்கி, 'நீங்கள் யார்? இங்கு வந்தடைந்த காரியம் யாது? போர்புரிய வந்தீர்களோ? அல்லது, வேறொரு எண்ணம்பற்றி வந்தீர்களோ? இவ்வாநரசைனியத்தை அடுத்து வந்து நின்றநீர், நுமது வரவிற்குரிய காரணங்களையெல்லாம் ஒளியாமல் தவறின்றி மெய்யாகச் சொல்லுங்கள்' என்றான். அப்பொழுது அதற்கு, சத்தியவானான விபீஷணனது தோழர்நால்வரில் ஒருவனாகிய அனலன் கூறுவான்:—

'இவன், நடுநிலைமைபொருந்திய சிந்தையுள்ளவன்; தருமநீதியுடையவன்; பிரமனது புத்திரராகிய புலஸ்தியரது குமாரரான விச்ரவசின் மைந்தன்; சத்தியவான்; சூரியவம்ச சிரேஷ்டனும், லோகநாயகனும், ஸர்வலோக சரண்யனுமாகிய இராமபிரானது திருவடிகளைச் சரணமடைந்து உஜ்ஜீவிக்க வந்துள்ளான்.

"பொய்யும் களவும் பாதகமும் பொல்லா வொழுக்கும் அவைகடிந்து
மெய்யும் தபாவும் தருமமுடன் விளங்கும் பொறையும் இவைபூண்டு
செய்யும் செயல்களவையெல்லாம் சிட்டர் செய்யும் செயலாகி
அய்யன் புகழ்வீடணன் மறைகள் அறைந்த தவத்தின் வழிநின்றான்." (1)

"நல்லாய் அறத்தைக் கைவிட்டு நடுங்கும் இடும்பை வரினும் நான்
பொல்லாதன செய்யாதொழிக போரிற் பிரமாதிகள் என்னை
வெல்லாதொழிக இவ்வரங்கள் வேண்டு மென்ன விரிஞ்சனவை
எல்லாம் பெறுதி நீயென்றும் இறவாதிருத்தி யெனவுரைத்தான்." (2)

இவன் பிரமனைக்குறித்துப் பெருந்தவம்புரிந்து, தருமநிலைமை தவறாமையும், ஆதிமூலமாகிய ஸ்ரீமந்நாராயணனிடத்தில் மிகுந்த பக்தியும், உறுதியாய் நிலைபெற்ற சத்தியமும், வேதப்பொருளுணர்ந்த அந்தணர்களிடத்தில் அன்பும் என்ற இவைமுதலிய நற்குண நற்செயல்களையெல்லாம் தரப்பெற்றான்; 'சுடுகின்ற தீயை வஸ்திரத்தில் இட்டு முடிந்து மறைத்த துர்ப்புத்தியே! ஸர்வேச்வரனுடைய தேவியாராகிய சீதாபிராட்டியைச் சிறைச்சாலையில் இட்டனையோ? அவளை விட்டிட்டால் பிழைப்பாய்; விடாமல் காதலிப்பாயானால் நாசமடைவாய்' என்று உறுதிமொழிகள்பற்பலவும் எடுத்துரைத்தான். அதற்கு, அதருமத்தைக் கருதும் மனமுடைய இராவணன், "விநாசகாலே விபரீதபுத்திః," "கேடுவரும் பின்னே, மதி கெட்டு வரும் முன்னே," "நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல், பக்கத்தார்யாரையும் ஐயுறுதல்,—தக்கார், நெடுமொழி கோறல், குணம் பிறிதாதல், கெடுவதுகாட்டுங் குறி" என்றவாறு புத்தியீனனாய், இவனை நோக்கி, 'எனக்குப் பின்னே பிறந்தாய்; [தம்பியாயிருக்கிறாய்] ஆதலால் பிழைத்தாய்; இவ்விடம்விட்டு வெளியேபோய்விடு; போகாமல் இங்கு என் கண்முன்னே நின்றாயாயின் இறந்தாய்' என்றுகூற, இவன் அவ்விராவணனைத் துறந்துவந்தான்'' என்று நிகழ்ந்தவைகளை விவரித்துச் சொன்னான். மயிந்தனும் அவன் கூறிய வார்த்தையை மனத்திற்கொண்டு, 'நீ உரைத்ததை எம்பெருமானாகிய இராமபிரானுக்குச் சொல்வேன்' என்று, இளைய பெருமாளையும், அசைவில்லாதிருக்கிற வாநரசேனையையும், அஜாக்கிரதையும் சோர்வுமில்லாமற் காத்திருங்கள்' என்று காவலாய்ச் சூழ்ந்துநிற்கச்செய்து திரும்பிச்சென்றான்.

அவன், தருமமும் ஞானமும் தவமும் வேலியாகவும், சிறப்புப்பொருந்திய பெருந்தன்மையும் (அல்லது கீர்த்தியும்) பொறுமையும் வாயில்களாகவும், அழகிய கிருபையாகிய கோயிலில் எழுந்தருளியிருந்த ஸ்ரீராமனை, அவனது * அருளாகிய அவனை அடைதற்குரிய உபாயத்தைப் பற்றிப் பெற்றுச்சென்று திருவடிவணங்கினான். அங்ஙனம் வணங்கியவன், 'நித்தியப்பொருளே! அடியேனது விண்ணப்பச்சொல் ஒன்றுள்ளது' என்றுகூற, தாமரைமலர்த் தடாகத்தைப் போன்ற திருமேனியையுடைய ஸ்ரீராமன், வட்டமாகச் சடைமுடிபொருந்திய தமது திருமுடியை அசைத்து ஆமோதித்து, 'மெய்யுரைப் போய்! நீ கண்டதையும் கேட்டதையும் சொல்' என்று உரைத்தான். "மேல் வினையும் செயலை அறியோம். குளிர்ந்த செந்தாமரைமலர் போலும் கையையுடைய விபீஷணனென்னும் ஒருவன்; திருட்டுத்தன்மையும் வஞ்சனையுமுள்ள இலங்காதிபதியாகிய இராவணனுக்குத் தம்பியாம். அவன் தன்னுடன் நால்வர்அரக்கரோடு நம் வாநரசேனையின் நடுவில் வந்துசேர்ந்தான். அப்படி வந்து சேர்ந்தவனை அநேகர் வாநரசேனை வீரர்கள் 'கொல்லுங்கள், பிடியுங்கள்' என்று சொல்லிக்கொண்டு சென்று யுத்தஞ்செய்தற்கு நெருங்கியதைப் பார்த்த அடியோம், அவர்களை 'நில்லுங்கள்' என்று அடக்கி, அவனை நோக்கி, 'நீ யார்? உனது நிலைமையைச் சொல்' என்று கேட்க, அவனது துணைவர்களில் ஒருவன் அனலனென்பவன் சொன்னான்:—'தகாத கொடிய வலிய தீச்செயல்களைச் செய்துமுடித்த தன் தமையனாகிய இராவணன் கான் போய்ச்சேர்ந்த இடத்தையே மனம்விரும்பிச் செல்ல, தான் கண்டடையத்தக்க பாதுகாவலிடம் வேறு இல்லையென்று இவ்விபீஷணன் அருட்கடலாகிய இராமபிரானைச் சரணம்புகுந்தனன்' என்று அவ்வனலன் முன்பு சொன்னான்; மற்றும், 'இவ்விபீஷணன், தருமமும், தேவாதிதேவனாகிய ஸ்ரீமந்நாராயணனிடத்தில் இடைவிடாது பொருந்திய மனமும், சத்தியமும், வேதமுணர்ந்த அந்தணர்களுக்குத் தலைவனாகிய பிரமதேவன் தரும்படி அவனை நோக்கிப் பெருந்தவம்புரிந்து அடைந்த பரிசுத்தன்' என்ற ஒருவிஷயமும் சொன்னான்; மேலும், "பதிவிரதாசிரோமணியாகிய சீதாதேவியை நீ விட்டிடாமல் சிறையில் வைத்துக் காத்திருப்பாயாயின், பேதாய்! உனது அழகிய கிரீடங்களை அணிந்துள்ள தலைகள் துணிக்கப்பட்டுக் கீழ்விழ்ந்து புரளும்' என்று ஓருறுதி

* ஸ்ரீராமன் வரலாமென்று அருளியமையின் என்னவுமாம்.

மொழியையும் உணர்த்தினன்' என்றும் சொன்னான். அதற்கு மிக்க வலிமையுடைய இராவணன் சினங்கொண்டு, 'இவற்றைச் சொன்ன நீ என் அருகில் இனி நிற்பையேயாயின், உன்னைக் கொன்றிடுவேன். இங்கு நில்லாமல் கணப்பொழுதில் அப்புறம்போய்விடு' என்று சொல்ல, தேவரீரைக்காண்பதற்கு இங்குஇவ்விபீஷணன் வந்துவிட்டான்' என்றும் அனலன் கூறினன். நடந்த விஷயம் இது'' என்று மயிந்தன் இராமபிரானிடத்தில் விஜ்ஞாபனம் செய்தான்.

அப்பொழுது, அதனைத் திருச்செவிசாத்தியருளிய சக்கரவர்த்திதிருமகனும், தன் அருகில் உள்ள நண்பராகிய சுக்கிரீவமஹாராஜரையும், மற்றுமுள்ள வானரமுதலிகளையும்நோக்கி, 'இம்மயிந்தன் உரைத்த விஷயங்களையெல்லாம் நீங்கள் கேட்டீர்களன்றோ? இவ்விபீஷணன் நாம் ஏற்றுக்கொள்ளத்தக்கவனோ? அன்றேல்ஏற்றுக்கொள்ளாமல் தள்ளத்தக்கவனோ? நீர் தகுதியாக நும் அறிவால் ஆராய்ந்துசொல்லுங்கள்' என்று வினவினர்.

(தொடரும்.)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

## Loela Devi.

BY SRIMATHI BALASUNDARI DEVI.

## லீலாதேவி.

(43-ம் பக்கத் தொடர்ச்சி.)

காலம் மிகவும் வேகமாய்ச் செல்லுகின்றது. நாம் நேற்றோ முன்னாளோ நடந்தனவென்றிருக்கும் ஸங்கதிகள் நம்மையறியாமலே நாட்கள், வாரங்கள், மாதங்கள், வருஷங்களெனப் பழையனவாய்விடுகின்றன. லீலா லோமநாதனைப் பார்த்து ஐந்துவருஷங்களாய்விட்டன. லோமநாதன் பார்த்தபோது லீலா எட்டுவயது பாலிகை; இப்போது பதின்மூன்று வயதுடைய ஸுந்தர வனிதையாய்விட்டாள்; இன்னமும் ஸரியாய் மங்கைப்பருவம் வரவில்லை. அந்திவேளைக்குமுன் மலரும் புஷ்பங்கள் சிறிதுகுவிந்திருக்கும் இதழ்களைப்போல, தன்னிடத்திலுள்ள பரிமளமெல்லாவற்றையும் ஒரேதடவையில் வெளிவிட்டுமுடியாத ஜாதிப்புஷ்பத்தைப்போல், அந்த லாவண்யஸுந்தரி பூர்த்தியில்லாத மங்கைப்பருவத்தினால் நவயௌவனமும் நிறைந்திராமல், நாளுக்குநாள் அதிகரித்து அளவிலடங்காமல் வரும் ஸௌந்தர்யப்ரவாஹம் இன்னும் பூர்ணஸ்திதியை அடையவில்லை.

விசேஷமாயில்லாமல் ஒருபட்டைப்போல் பளபளவென்று மின்னும் கறுத்த குழலும், எப்போதும் சஞ்சலமின்றிக்களங்கமில்லா ஹ்ருதயமும், விசாலமான வேல்போன்ற கூர்விழிகளும், அழகான சம்பகப்பூவைப்போன்ற நாவிகளும், அழகிய சந்திரபிம்பம்போல் களையுடன் துலங்குகின்ற முகமும், பசுமைபான பொன்தகட்டைப்போல மின்னும் மேனியுமாக, அந்தச் சிறிய வயதிற் கூடஅந்தப்பெண் காண்போர்மனதைக் கவரும்படியான ஸௌந்தர்யத்துடன் விளங்கினாள். அந்த ஸுந்தரி ஸாதாரணமாக நற்குணத்தைத்தவிர வேறுயாதொரு அலங்காரமுமின்றி ஒப்பற்ற அழகுவாய்ந்திருந்தாள்.

இக்காலத்தில் ஹிந்துக்கள்வீடுகளில் பெண்குழந்தைகளுக்கு விவாஹம் நடப்பது வெகு கஷ்டம். கன்னிகையைக் கொள்பவர்கள் தமது பிள்ளைகளுக்குச் சீதனமும் வரதக்ஷிணையும் எவ்வளவுகொடுப்பீர்களென்றுகேட்பார்களேயன்றி,



பெண்ணின் நலத்தைக்குறித்து விசாரிப்பதில்லை. கன்னிகை எவ்வளவு அழகுடையவளாயிருந்தபோதிலும், அவள்தந்தை தரித்திரனாயிருந்தால், அவளுக்கு நல்லவன் கிடைப்பது வெகுதுர்லபம். எப்பொழுதும் நம்முடையலீலா ஒப்பற்ற அழகில் தன்ஜாதிகன்னிகைகளைவிட மிஞ்சியிருக்கிறாளென்பது உண்மையே. ஆனால், என்ன பிரயோஜனம்? லோகநாதன் வெகுதரித்திரனாதலால், அவளது ஸௌந்தரியத்தை யாரும்லக்ஷியம் செய்யமாட்டார்கள். அப்படியிருக்க, நாம்மாத்திரம் ஏன் வீணாகச் சிரமப்பட்டு அவளது அழகை அதிகமாய் விஸ்தரிக்கவேண்டும்?

லோகநாதனுக்கு நாளுக்குநாள் விசாரம் அதிகமாயிற்று. வரவர, தனது ஜாதிதர்மத்தைக் காப்பாற்றிக்கொள்வதே அவனுக்கு வெகுகஷ்டமாகத் தோன்றிற்று. அந்த ஊரிலும் சுற்றுப்பக்கத்திலிருக்கும் கிராமங்களிலுமுள்ள கிழவர்களாயும் குரூபிகளாயும் உள்ள சிலர் லோகநாதனுக்கு ஏதோ உபகாரஞ் செய்வோர்களைப்போல் வந்து, லீலாவைத் தாம் விவாஹம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டனர். ஆனாலும், வெகுகாலம் இல்லாமல் பிறந்த தான் அத்யந்தப்ரீதியுடன் வளர்த்த தன்குமாரியை அப்படிப்பட்ட இடங்களில் தள்ளுவதற்கு அவனுக்கு எவ்வளவும் இஷ்டமில்லை. கொஞ்சம் நல்லஸ்திதியிலுள்ளவர்களுக்குக் கர்வமதிகம். இனி வயதுவந்த குழந்தையை அப்படியே விவாஹம் நடத்தாமல் வீட்டில் வைத்துக்கொள்வதும் உசிதமாகத் தோன்றவில்லை. இந்த உபயஸங்கடத்தில் லோகநாதன் யாதொன்றையும் நிச்சயிக்கமாட்டாமலிருந்தான். இரவில் நித்திரைவராது; பகலில் உணவின்மேல் இச்சையில்லை; ஸம்ஸாரத்தைச் சேர்ந்த வேறெந்த வேலையிலும் மனம்போகாது. இத்தனைநாள் வெகுசெல்வமாக வளர்க்கப்பட்ட குமாரியே, இப்பொழுது அவனது கண்களுக்கு எரியும் நெருப்பிற்கு ஒப்பாகத் தோன்றினாள்.

இவ்வளவுநாட்களுக்குப்பிறகு கனகவல்லியின் மனம் சஞ்சலப்படத்தொடங்கிற்று. எப்பொழுதும் லோகநாதன் எவ்வளவுமனோவ்யாகுலத்துடன் அவஸ்தைப்படுவானோ, அதைவிட, கனகவல்லி இரண்டுபங்கதிகமாக மனோவ்யாதியுடன் அவஸ்தைப்பட்டாள். தனது உயிரைவிட அதிகமாயிருந்து நேத்ரானந்தத்தைக் கொடுக்கும் லீலாவுக்குத் தகுந்த மணவாளன் கிடைக்காமற்போனதை நினைக்குந்தோறும், அவள்நெஞ்சம் குபீரென்று நெருப்பைக் கொட்டினதுபோலாகும். இவ்வளவுநாள் வரையில் எல்லாலோகத்திற்கும் மனோஹரமாய் ஸதா லோகநாதன்வீட்டையே ப்ரகாசிக்கச்செய்துகொண்டிருந்த அவளது மந்தஹாஸமானது இப்பொழுது கிரமப்படி கொஞ்சங்கொஞ்சமாய் எங்கேயோ அந்தர்த்தானமாய்ப்போக ஆரம்பித்தது. எப்பொழுதேனும் வேலையில்லாமலிராத அவளுக்கு இப்பொழுது விசித்ரமாக ஓர் அசிரத்தை உண்டாயிற்று. வேலைசெய்யாமல் உட்கார்ந்துகொண்டு எதைக்குறித்தோ சிந்தித்துக்கொண்டு இருப்பாள். முதலிலிருந்து கனகவல்லி லீலாவின் விவாஹப்ரஸ்தாபத்தை எடுக்கும்பொழுதெல்லாம் ஆனந்தத்திற்கு இடங்கொடுக்காமலிருக்கமாட்டாள். தனது செல்வக்குமாரிக்கு விவாஹத்தைச்செய்து, பிறகு மாப்பிள்ளையை வீட்டிலேயே வைத்துக்கொண்டு, அவனையே புத்திரனாகப் பாவித்துக்கொள்ள வேண்டுமென்றும், அப்பொழுது தௌஹித்ர ஸந்ததியினாலாவது தனது வம்சம் விருத்தியாகும், தானும் கடைத்தேறலாமென்றும் சில கோரிக்கைகளைக் கோரிக்கொண்டு, இரவும் பகலும் தான் சுகப்படலாமென்னும் ஆசையினால் சிறிதுநாள் காலங்கழித்தாள். இப்பொழுதோ அப்படி சுகப்படவேண்டுமென்ற ஆசை அடியோடு ஒழிந்துபோய்விட்டது.

இனி, லீலா இத்தனைநாள்போல் சிறுபிள்ளையல்லள்; விவரந்தெரிந்தவள்; ஆனாலும், தாய்தந்தையர்களின் மனோவியாதியின் காரணத்தை மாத்திரம் அறியமாட்டாள். அவளெதிரில் அவர்கள் இந்தவிஷயத்தைப்பற்றிப் பேசுவதே இல்லை. அவளுக்கு எவ்வளவு வயதுவந்த

போதிலும் அவள் பெண்பிள்ளைதானே? அப்படியிருக்க, அந்தச் சிறியபெண் இந்தத் துக்கமயமான ஸம்ஸாரத்தின் சிக்கல்களை எப்படி அறிவாள்? வீட்டுவேலைகளெல்லாம் அவர்களுக்கு ஒன்றும் காட்டிக்கொடுக்காமல், அவர்களுக்கு யாதொரு கஷ்டமும் வைக்காமல், எல்லாவற்றையும் தானேசெய்து, அவர்களை எப்படி சந்தோஷிப்பிக்கமுடியுமோ அப்படிச் செய்துவந்தாள். ஆனால், அவர்களுக்கு மாத்திரம் ஸந்தோஷம் உண்டாகாது. தான் யாதொருதப்பும் செய்யாமலிருந்தபோதிலும், அவர்களிடத்தில் பெரிய குற்றவாளியைப்போல் தோன்றினாள். தான் எந்தக்குற்றம் செய்ததனால் அவர்கள் மனவேதனைபடுகிறார்கள் என்பதை அறிந்துகொள்ள அவள் எவ்வளவு முயற்சிசெய்தபோதிலும், அவளது மனதிற்கு ஒருகாரணமும் புலப்படவில்லை.

அப்படியிருக்கும்பொழுது, ஒருநாள் கனகவல்லி, சிந்தாக்ராந்தனாயிருக்கும் தன்பதியை நோக்கி, "உங்களுக்கு ஞாபகம் இல்லையா? இந்த ஊரில் எவனோ ஒருவன் லீலாவின் விவாஹத்திற்காக ஐம்பதுரூபாய் நரேந்திரநாதசக்ரவர்த்தியினிடம் கொடுத்ததாகத் தாங்களே ஒருநாள் என்னிடம் சொன்னீர்களல்லவா?" என்று சொன்னாள்.

லோகநாதன் அந்தப்பேச்சைக் கேட்டுப் பெருமூச்செறிந்து, "ஐயோ! அதனால் என்ன முடியும்? ஐம்பதுரூபாயில் விவாஹம் முடியுமா?" என்றான்.

கனகம்:—அப்படியானால், இன்னுமெவ்வளவு வேண்டும்?

லோக:—சாமான்களெல்லாம் விலைகிராக்கியாயிருக்கின்றன. குறைந்தபக்ஷம் ஐந்நூறுரூபாயாவது வேண்டும். அதற்குக் குறைந்தால் விவாஹம் நடத்தமுடியாது.

கனகம்:—ஐந்நூறுரூபாயா? ஐந்நூறு ரூபாயிருந்தால் எத்தனை ஐம்பது ஆகும்?

அவ்வளவு கவலையுடனிருந்தபோதிலும், லோகநாதன் கனகவல்லியின் மொழியைக் கேட்டுச் சிரித்தான்.

ஐந்நூறு ரூபாயென்றால் வெகு அதிகமாகின்றது. நமது வீடு, வாசல், காணி, பூமி எல்லாவற்றையும் விற்றாலுங்கூட அவ்வளவு ரூபாய் கிடைக்காது.

கனக:—அப்படியானால், என்னசெய்வது? வேறுவழி ஏதாகிலும் இருக்கிறதா?

லோக:—அப்படி ஏதாவது வழியிருந்தால், இதுவரையில் இப்படி பேசாமலிருப்பேனா?

கனக:—நாம் ஒன்றும் கேட்காதபோதே லீலாவின் விவாஹத்திற்கென்று ஐம்பதுரூபாய் கொடுத்தவன், நாம் வாய்திறந்து கேட்டால் இன்னும் ஏதாவது கொஞ்சம் அதிகமாய்க் கொடுக்கமாட்டானா?

லோகநாதன், உட்கார்ந்திருந்தவன், திடீரென்று எழுந்துநின்றான். கனகவல்லி திடுக்கிட்டுப் பதியின் முகத்தை நோக்கினாள்.

லோக:—கனகா! இத்தனைநாட்களுக்குப் பிறகு துக்கசமுத்ரத்தில் மூழ்கியிருந்த எனக்கு ஒரு ஆதாரம் அகப்பட்டது. வெகுகஷ்டப்பட்டேன். ஆனால், இதுவரையில் யாரையும் வாய்விட்டுக் கேட்கவில்லை. கடைசியாக, லீலாவை யாராவது ஒரு நல்லபிள்ளைக்குக் கொடுத்துச் சுகப்படச்செய்வதற்காக யாரையாவது பணம் யாசிக்கவேண்டுமென்று இருந்தேன். ஆனால், யாரிடம் போய்க் கேட்பதென்பதைத்தான் இதுவரையில் நிச்சயிக்கவில்லை. இப்பொழுது உன் வார்த்தையைக் கேட்கவும், அந்த உதாரகுணமுள்ள மகாராஜனைப்பற்றி நினைவு வந்தது. அவனிடம் போய் வேண்டிக்கொண்டால்தான் நாம் கிருதார்த்தர்களாவோம். இப்பொழுது நரேந்திரனிடம்போய், அந்த மஹானுபாவன் இருக்கும் இடத்தை விசாரித்துக்கொண்டு வருகிறேன்.



இப்படி உரைத்து லோகநாதன், நரேந்திரனிடத்திற்கு விரைவாய்ச் சென்றான். நரேந்திரன் கச்சேரிஹாலில் தனியாய் உட்கார்ந்திருந்தான். லோகநாதன் அவனிடம் தனது கஷ்டக்தையெல்லாம் சொல்லிமுறையிட்டுக் கண்ணீர்விட்டழுது, 'உன்நண்பனை விட்டால் பிறகு எனக்கு வேறுகதி கிடையாது. நீ அவனோடு எனக்கு ஸகாயம்செய்யும்படி சொல்லவேண்டும்' என்றான்.

நரேந்திரன் லோகநாதனை ஸமாதானப்படுத்தி, "இதுவரையில் இந்த ஸங்கதியைச்குறித்து என்னிடம் ஒன்றும் சொல்லாத காரணம் என்ன? ஸோமநாதன் லீலாவை நேசித்திருப்பதும், அவள்விவாகத்திற்காக அவன் ஸகாயம்செய்வானென்பதும் நான் நிச்சயமாய் நம்புகிறேன். அவன் எழுதுகிற ஒவ்வொருகடிதத்திலும் லீலாவைப்பற்றி அவள் க்ஷேமமாயிருக்கிறாளா என்றும்; அவளுக்கு விவாஹமாயிற்றா? என்றும், இன்னமும் விவாஹமாகாத காரணம் என்ன? என்றும் கேட்டுக்கொண்டேயிருக்கிறான். இப்பொழுது அவன் சென்னையிலேயேஇருக்கிறான். இப்பொழுது அவனுக்கு வரையப்போகும் கடிதத்தில் இந்த ஸங்கதிகளெல்லாவற்றையும் ஸவிஸ்தாரமாகத் தெரியப்படுத்துகிறேன். லீலா விவாஹத்திற்காக அவன் கொடுத்த ஐந்நூறு ரூபாய்க்குப் பத்திரம் என்னிடம் இருக்கிறது. வேண்டுமானால் இப்பொழுதே வாங்கிக்கொள்ளுங்கள்" என்று சொன்னான்.

லோகநாதனுக்கு நரேந்திரனுடைய பேச்சைக் கேட்டவே உண்டான ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவன் ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, "அப்படியானால், நான் இந்த ருணத்தை மறுபடியும் தீர்ப்பது எப்பொழுது? என் லீலாவைச் சுகப்படச்செய்வேனா? அந்தப் பெரியமனுஷ்யர் எங்களுக்கு எவ்விதத்திலும் ஸம்பந்தமுடையவரல்லர். அவர் எங்கள் லீலாவுக்காக அவ்வளவு உதவிபுரிவாரா?" என்றான்.

நரே:—லோகநாத மஹாபுருஷா! இந்தக் கிராமத்தில் உன்னைப்போன்ற உத்தமபுருஷர் வேறயாரும் இல்லை.

உங்களுக்கு உபகாரம்செய்யும் விஷயத்தில் நான் என்னால் கூடியவரையில் எல்லாப்பிரயத்தனமும் செய்கிறேன். லீலாவுக்கு விவாஹம்செய்யும் பாரம் என்னுடையது. அதைக்குறித்து இனி நீங்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை.

அப்பொழுது லோகநாதனுக்கு ஸ்வர்க்கத்தையே எட்டிப்பிடித்ததுபோலாயிற்று. அவன் அதிகநேரம் நிற்கமாட்டாமல், அந்தச் சுபசமாசாரத்தைத் தெரிவித்தற்காக உள்ளே போனான்.

### 5-வது அத்தியாயம்.

"முதலியார் இருக்கிறாரா? முதலியாரவாள்?" என்று ஒருநாள் விடியற்காலத்தில் லோகநாதன் வீட்டு வாசலில் நரேந்திரன் வந்து அழைத்தான். நாரேந்திரநாதனொருவனே வரவில்லை. அவனுக்குப்பின்னால் நமது பழைய நண்பனாகிய சோமநாதனும் வந்திருந்தான். லோகநாதன் அந்தச்சப்தங்கேட்டுத் திடீரென்று வெளியில் வந்து, அவர்களிருவரையும் கண்டு திகைத்தவனாய், எதிர்பாராவண்ணமாய் அதிக உபசாரத்துடன் வீட்டிற்குள் அழைத்துக்கொண்டு போனான்; வீட்டிலுள்ள ஓர் பழைய கந்தற்பாயைவிரித்து அதில் உட்காரச்சொல்ல,ஸோமநாதன், "தாங்கள் அவ்வளவு சிரமப்படவேண்டியதில்லை" என்றுசொல்லி, நரேந்திரனோடு அந்தப் பாயின்மீது உட்கார்ந்துகொண்டான். பிறகு "உங்கள் லீலா அதிருஷ்டம் பலித்தது! என் மித்ரன் தான் எழுதிய கடிதத்தில் உங்கள் விசாரத்தையெல்லாம் படித்து, அதற்கு யாதொன்றும் மறுமொழிகூறாமல் தானே நேரில் வந்துவிட்டான். தங்கள் லீலாவின் விவாஹத்திற்குப் பிடிக்கும் செலவையெல்லாம் தானே ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டான். இனி நீங்கள் அந்தவிஷயமாய் யாதொருகுறையும் பட

வேண்டிய அவசியமில்லை” என்று உரைத்தான். லோகநாதனுக்கு நரேந்திரன் கூறிய மொழியைக் கேட்டு யாதொரு பதிலும் சொல்லத்தோற்றவில்லை. தான் செய்யவேண்டிய கடமைகளை எந்தவழியாகச் செய்யவேண்டுமோ அந்தவழியே தெரியாமற்போயிற்று. மரப்பிரதிமைபோல் அவர்களையே கண் இமைக்காமற் பார்த்துக் கொண்டிருக்கின்றான். பலாத்காரமாய் வீட்டிற்கு யாரோ வந்துவிட்டார்களென்று நினைத்த கனகவல்லி, நரேந்திரன் சொல்லிய வசனத்தைக் கேட்டு, வெளியில் வந்து அவர்கள் முன்பாக நின்று, சோமநாதனை நோக்கி ‘ஐயா, தாங்கள் யாரோ? எங்களை இரக்ஷிக்கும் குலதெய்வமாக வந்தீர்கள். எளியவர்கள்மேல் தங்களுக்கு எவ்வளவு கருணை! ஐயா, தாங்கள் யாரோ!” என்று மெதுவாகக் கூறினாள். சோமநாதன் தலையெடுத்துப்பார்க்கவும், லோகநாதனுக்கும் கனகவல்லிக்கும் கண்களில் நீர் தாரைதாரையாய்ப் பெருகிற்று. அதைக் கண்ட சோமநாதனுக்கும் கண்களில் நீர் வரத் தொடங்கிற்று. அவன் பிறகு அதை அடக்கிக் கொண்டு, ‘அம்மா! நானும் உங்களைச் சேர்ந்தவனே.’—இந்த சந்தர்ப்பத்தில் சுத்தஜலம் கொண்டுவருவதற்குப்போயிருந்த லீலா, தீர்த்தக்குடத்தை இடுப்பில் வைத்துக்கொண்டு, வழியில் வரும்பொழுது, வீட்டிற்குள் யாரோ அயல்மனிதர்கள் இருப்பதைக் கண்டு, நாணத்தினால் மெதுவாக கடிமுற்றத்திற்கு வந்து தடுமாறிப்போனாள். அதைக்கண்ட கனகவல்லி, “அம்மா! ஏன் வெட்கப்படுகிறாய்? இவர்கள் உனக்குத் தமையன்மாராக வேண்டுமம்மா” என்று சொல்ல, அந்தப் பெண்மணியும் தலை குனிந்துகொண்டு, புன்சிரிப்புடன் குடத்தை வீட்டிற்குள் வைப்பதற்காக உள்ளே போனாள். குடத்தை வைத்துவிட்டு மறுபடியும் அவர்களிருக்கும் பக்கமாக அடுத்த அறைக்குள் நுழையும்போது, காமன் கூர்மையான புஷ்ப பாணத்தை இரகசியமாய் சோமநாதன்மீது விட்டான். பிறருக்குத் தெரியாவிட்டாலும் அவனுக்குமாத்திரம் நன்றாய்த்தெரிந்துவிட்டது. எப்படியென்றால், அதே சமயத்தில்தான் அவனும் லீலாவை இரகசியமாய்க் காண யத்தனித்தான். இருவருடைய கண்களும் தற்செயலாய் ஒன்றையொன்று சந்திக்க, இருவரும் பரஸ்பரம் ஒருவர்மனதில் ஒருவர் ஆசைப்பட்டுக் கொண்டார்கள். ஆசைப்பட்டபோதிலும், நாணத்தினால் லீலா அங்கு நிற்காமல், தீவிரமாய் அந்தச்சிறிய அறையில் புகுந்து அந்த அறையைப் பெருக்க ஆரம்பித்தாள்.

மறுபடியும் அவள் அவனைக் காண யத்தனிக்கவில்லை. ஆனாலும் சோமநாதன் அந்தப் பெண்ணின் ஹ்ருதயத்தில் நன்றாய்ப் பதிந்துவிட்டான். ஒரேதரம் கண்டாலும் அவனது சுந்தரரூபத்தை யாரும் மறக்கமாட்டார்கள். லீலா மறுபடியும் தன்னைக் காணாமலிருப்பது சோமநாதனுக்கு அனுகூலமே ஆயிற்று. அவன் பிறருக்குத் தெரியாமல் பலதடவை அவளைக் காண முயன்றான். எத்தனைதரம் கண்டபோதிலும் இன்னமும் காணவேண்டுமென்ற ஆவல் அதிகரிக்குமேயன்றிக் குறையாது. இந்த சமயத்தில் நரேந்திரன் லோகநாதனைப் பார்த்து, ‘விவாஹகாரியம் எப்படி நடக்கவேண்டும்? எப்படிப்பட்டவன் கிடைத்தால் அனுகூலமாயிருக்கும்?’ என்னும் விஷயத்தைக்குறித்துப் பேசிக்கொண்டிருந்தான். அந்த வசனங்களையெல்லாம் வெகுகவனத்துடன் சோமநாதன் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்று நினைக்கக்கூடும். உண்மையில் அவனது செவியில் ஒரு சொற்கூட விழவில்லை. அப்பொழுது அவன் லீலாவின் வதனத்தைப் பார்த்துக்கொண்டு, “அந்த முகத்தில் ரத்னகாந்தி வீசுகின்றதே! அது என்ன! லஜ்ஜையினால் அப்படி தோற்றுகிறதா? இல்லாவிட்டால், அதிக சிரமத்தினால் அப்படி காண்கிறதா?’ என்று, இன்னும் இத்தன்மையான அநேக விஷயங்களைப்பற்றித் தன் மனதிற்குள்ளேயே யோசித்துக்கொண்டிருந்தான். நரேந்திரன் தன் பிரசங்கம் முடிந்த பிறகு, சோமநாதனைப் பார்த்து, ‘அப்படியானால், நாம் இப்பொழுதே வெளியே செல்வோம். இப்பொழுதே காரியங்களை ஸ்திரப்படுத்திக்கொள்ள வேண்டும்.

(தொடரும்.)

ஸ்ரீமதி பால[illegible]



# On Loyalty

By Mr. M. V. Sabhapathi

**Tamil Pandit, Muhamadan Secondary School, Vellore.**

## இராஜ விசுவாச வாழ்த்து.

(முத்திநெறி யறியாத—என்ற வர்ணமெட்டு)

அன்னைபோல் அன்புடையான் அப்பன்போல் முறையுடையான்
மன்னுயிரின் வாழ்வனைத்தும் தன்வாழ்வாய் மதித்திடுவான்
பின்னையினின் பேறனைத்தும் வேணளவு பெற்றுள்ளான்
அன்னவனும் அஞ்சாத ஜார்ஜென்னும் ஐந்தாங்கோ.

ஆதித்தன் அருங்கிரணம் அடிகொள்ளும் அகிலமெலாம்
வாதிக்கும் மதமெல்லாம் வளர்ந்தோங்கி வாழ்வுறவே
சோதித்தன் மயமான தூய்நெறித்த நாகரிகம்
போதித்த புங்கவனும் ஆங்கிலநம் புரவலனே.

தானனும் தனிக்கோல்போல் தாரணியில் மன்னுயிரும்
ஊனமிலா ஒருகோலை உவந்தோச்சக் கருணையுடன்
மேனாட்டுக் கல்வியெல்லாம் மேன்மையுடன் உவந்தளித்தே
சேனாதி பத்தியமும் சேர்ந்தளிக்கும் சீர்க்கோவே.

தருமந்தான் தப்பாது தாரணியில் தனித்தியக்கும்
கருமந்தான் கண்கண்ட கடவுளெனக் காட்டவுமே
பொருகின்ற போரேறே புரவலனே பூவுலகில்
செருவோரைத் தேய்த்தொழிக்கத் தேவனடி சிந்திப்பாம்.

நந்தம்பால் நலஞ்செய்யும் நல்லெண்ணம் முந்துறவே
இந்தியரின் எழில்நகரம் டில்லியிலே முடிசூட்டிப்
பந்தமுற நம்மனத்தில் பரிவையுமே பாலிக்க
வந்தவனை மன்னவனீ வாழியவே வாழியவே.

எம். வி. சபாபதி.

## Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### The Care of Infants.

### குழந்தைகளின் பாதுகாப்பு.

குழந்தைகள் பெரும்பாலும் வெகு சீக்கிரத்திலேயே இறந்துபோவதற்குக் காரணம்; அவைகளுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லாமையேயாம். இவைகள் மாந்தம், இசிவு, குடல் நோய், நுரைஈரல் முதலான நோய்களால் பீடிக்கப்பட்டு வேண்டிய சிகிச்சைகளைப் பெறாமல் கஷ்டப்படுகின்றன. ஸ்ரீமான் ஆர். ராகேந்திரராவ் பி. ஏ; எம்.வி. எம். "விவேகபோதினி"யில் குழந்தைகளுக்கு மருந்துகளினால் பரிஹாரம் செய்வதைக்காட்டிலும், சுகாதார விதிகளைக் கவனித்தல், தக்க உணவைக் கொடுத்தல், நல்ல வஸ்திரங்களை உபயோகப்படுத்தல், காற்று வசதி ஆகிய இவைகளைக் கவனித்தால் குழந்தைகளுக்கு சௌக்கியம் எளிதில் ஏற்படும் என்று எழுதுகிறார்.

ஸ்நாநம்:—நாள்தோறும் ஒருதடவையாவது மிதமான நல்ல உஷ்ணஜலத்தில், எரிப்பு மூட்டாதது நுரை அதிகமாகக் கொடுக்கும் ஸோப்பை உபயோகித்து ஸ்நாநம் செய்விக்கவேண்டும். ஒரு நாள்விட்டு ஒரு நாள் நம்தேசத்தில் செய்விக்கும் எண்ணெய்க்காப்பு குழந்தைகளுக்கு ஆரோக்கியத்தைத்தரும்.

வஸ்திர உபயோகம்:—ஸ்நாநம் செய்வித்ததும், சுத்தமான உலர்ந்த துணியைக்கொண்டு துடைத்து, குழந்தையின் தேகத்திலுள்ள ஈரத்தைப் போக்க வேண்டியது. பிறகு ஈரமில்லாத நல்ல மெல்லிய வஸ்திரத்தால் உடம்பை நன்றாய்ப் போர்த்தவேண்டும். துணிகளை அதிக அடர்த்தியாக உபயோகித்து, குழந்தையின் உடம்பிற்கு ஹிம்சை கொடுக்கும்படியாகச் செய்யக்கூடாது; அதிக தளர்த்தியாகவும் இருக்கலாகாது. குளிர்வாடை படும்படியாகக் குழந்தையை விடக்கூடாது. அதுவும், முக்கியமாக, ஸ்நாநம் செய்வித்ததும் கூடவே கூடாது. அவ்வாறு செய்வதால் குழந்தைக்கு ஜலதோஷமுண்டாகக் காரணமாகும்.

நல்ல காற்று:—எவ்வளவு நல்லகாற்று வேண்டுமோ அவ்வளவுகாற்றை நடமாடச்செய்வது அவசியம். இருட்டறைகளிலும், காற்றடைப்பட்ட விடங்களிலும் குழந்தைகளை விடலாகாது. குழந்தைகள் கைகால்களை எவ்வளவு ஆட்டவிரும்புகின்றனவோ அவ்வளவிற்கும் இடந்தரவேண்டும். அவை உருண்டு, புரண்டு, தவழ்ந்து, உட்கார்ந்து, எழுந்து, விழுந்து செய்யும் செயல்களுக்கெல்லாம் இடந்தரவேண்டும்.

நித்திரை:—குழந்தைகள் முதலில் அதிக நேரம் தூங்கும், குறைந்தபக்ஷம் முதல் மூன்று மாதம் அவ்வாறிருக்கும். இரண்டு வருஷம் ஆகும் வரையும், அவை ஒரு நாளுக்குப் பன்னிரண்டு முதல் பதினொன்று மணி நேரம் தூங்கவேண்டும். இரண்டு வருஷமானதும், குழந்தைகள் பகலில் சிறுதுயல்செய்யவேண்டும். நல்லகாற்று நித்திரையை ஆனந்தமடையச்செய்யும். குழந்தைகளை ஆட்டாமலே தூங்கச்செய்யவேண்டியது; கைகளில் தூங்கும்படி செய்யக்கூடாது.

தூக்கமின்மை உடம்பின் அசௌக்கியத்தைக் காட்டும். அஜீர்ணம் அல்லது அதிக உணவு குழந்தையை இரவில் தூங்காமலிருக்கச்செய்யும். அழுகையும், தூக்கமின்மையும் சில வேளைகளில் வயிற்றுவலியால் உண்டாகலாம். அவ்வாறிருக்குங் காலத்தில், தூக்கத்திற்காக மருந்து, அல்லது அபினி, அல்லது மயக்கத்தைத் தரக்கூடிய ஔஷதங்கள் இவற்றைக் கொடுப்பதைக் காட்டிலும் குழந்தைகளின் ஆகார விஷயத்தில் கவனம் செலுத்துவது மிக்க பயனைத்தரும்.

அழுகை:—குழந்தைகள் பால் குடிப்பதற்குமுன் அழுவது ஸகஜம். பலமாக ஒருமுறை அழுதல் குழந்தைகளின் நுரையீரல்களுக்கு அப்பியாசம் கொடுத்துப் பலம் கொடுக்கும்; தேகமுழுவதும் ரத்த ஓட்டம் செம்மையாகப் பரவும்படிக்குத் தூண்டும்.

பலமாக உரத்து அழுதல் குழந்தைகளின் தேகசௌக்கியத்தின் லக்ஷணம். நெடுநேரம் அழுது, வரவர ஹீனஸ்வரம் அடையும்படி அழுவது குழந்தையின் தேகசௌக்கியத்தின் குறையைக் காட்டும்; அக்காலங்களில் சிறிதும்காரணமில்லாமல் அழ ஆரம்பித்து ஓயாமல் அழும்.



வலியினால் அழும்பக்ஷத்தில், குழந்தை திடீரென்று அதிர்ச்சியுடன் அழும், வலி நின்றதும் அழுகையும் நின்றுவிடும். ஏக்கத்தால் அழுதால் உரக்க அழும். அப்போது, உடம்பை முரண்டிக்கொண்டு, தலையைப் பின்தள்ளும். அச்சமயம் குழந்தையின் முகம் சிவந்துவிடும், வயிற்றுவலியிருக்கும்போது அழுகை கடுமையாகவிருக்கும். அப்போது கால்களைச் சேர்த்துப் பாதத்தின்மேல் பாதத்தைத் தேய்த்து அழும். அந்தச் சமயம் வயிறு உப்பிக்கொண்டு குடலில் மலம் பந்தமடையும். சிலவேளைகளில் வழித்தாற்போல பேதியும் ஆகலாம். காதுவலி தாங்காமல் அழும்போது குழந்தைகள் தமது சிறு கரங்களால் காதை அடித்துக்கொண்டு உரத்துக்கத்தும். பசியால் அழும்போது வெடுவெடுத்துக் கோபத்துடன் அழும். செலுகையும் பழக்கமுமே குழந்தைகளின் அழுகைக்குக் காரணங்கள். குழந்தைகளின் இஷ்டம் பூர்த்தியானதும் அழுகையும் நின்றுவிடும். முரட்டுத்தனத்தாலாவது, அதிக செலுகையாலாவது குழந்தைகள் அழும்பக்ஷத்தில், முழுதும் அழும்படி விடுவதே அவ்வழுகையை ஒழிக்க நல்வழி. அது முரண்டு கொண்டு இரண்டு மூன்று மணிநேரம் ஹடத்துடன் அழுதாலும், இரண்டு மூன்று நாட்களுக்குள் அந்தப்பழக்கம் தொலைந்துவிடும். பெற்றோர்கள் இம்மாதிரிக் குழந்தைகளை அடக்குவதில் திடச்சித்த முள்ளவர்களாயிருக்கவேண்டும்.

### The Dietetic Value of Orange.

### கமலாக்கிச்சிலியின் ஆகார சம்பந்தமான மேன்மை.

கமலாக்கிச்சிலியை உணவுப் பொருளாக உபயோகப்படுத்துவதைப்பற்றி ஒரு நிருபர் "ஆரோக்கிய கலாநிதியில்" ஒரு வியாசம் எழுதியிருக்கிறார். அது வருமாறு:—

கமலாக்கிச்சிலியில் உணவுப்பொருளுக்கு வேண்டிய எல்லாவிதமான ஸத்துவங்களும் அடங்கியிருக்கின்றன. மேனாட்டு வஸ்துதத்துவஞ்ஞர்களின் பரிசோதனையின்படி விஷய முணர்ந்தவருக்கு இது நன்றாகத்தெரியும். இக்கனியில் ஸிட்ரிக் ஆஸிட் என்னும் ஒருவித அம்ல ஸத்துவம் அடங்கியிருக்கிறது; ஸிட்ரிக் ஆஸிட் என்பது கல்லீரலைத் தூண்டி சுருசுருப்பாகச் செய்யுமென்பது பிரசித்தம். இது சுகமாக மலத்தை இளகச் செய்து வெளிப்படுத்தும். இதில் பாஸ்வர சம்பந்தமான ஸத்துவங்கள் (Phosphates) விசேஷமாயுண்டு. அதனால், நரம்பு மண்டலங்களுக்கும் மூளைக்கும் போஷணையைத் தருவதில் கமலாக்கிச்சிலி நிகரற்ற வஸ்து; ஆனால், இவ்விஷயம் ஜனங்களால் புறக்கணிக்கப்படுவது விரும்பத்தக்கதல்ல. பாஸ்வர ஸத்துவம் அடங்கியிருப்பதால் நரம்புத் தளர்ச்சியிலும், பித்தம் பிடித்த நிலைமையிலும் இப்பழம் மிகவும் பிரயோஜனகரமானதாகும். இவ்வுண்மையைக் குறிப்பிட்டுக் கவனிப்பவர் அரிது. சுருங்கச்சொல்லின் : கமலாக்கிச்சிலி தினப்படி உணவாக மதிக்கப்பட்டு அன்னம் முதலியதைப்போலவே வழங்கப்படவேண்டுமென்று வற்புறுத்திவரவேண்டும்.

காலைப்போஜனத்திற்கு இதன் உபயோகம் ஒப்பற்றதாகும்; ஆனால் வேறு உணவுகளையும் புஜிக்கவேண்டுமானால், அதற்கு அரைமணி நேரம் முன்னதாக இக்கனியை உபயோகிப்பது நலம். ஏனெனின், இக்கனியின் சாறானது இனி உபயோகிக்கப்போகிற உணவை ஏற்றுக்கொள்வதற்குத் தகுந்தவாறு இரைப்பையைப் பதன்படுத்தி, அங்கிருந்து சிறு குடலில் விழுந்து இதன் ஸத்துவங்கள் ஜீர்ணமாவதுடன், பித்த நீரையும் மற்றும் ஜீர்ணவுருப்புக்களிலிருந்து உண்டாகக் கூடிய திரவங்களையும் நன்றாகக் கசியச் செய்து, வரப்போகிற உணவுகளை நன்கு ஜீர்ணம் செய்வதற்கு ஜீர்ணகோசத்தை ஆயுத்தமாயிருக்கச்செய்கின்றது. காலையில் கமலாக்கிச்சிலியில் இரண்டொரு கனிகள் உபயோகித்துவிட்டு. அப்பால் அரைமணி நேரத்திற்கெல்லாம் ரொட்டியும் வெண்ணெயுமாவது, பூரியும் பாலுமாவது உபயோகிக்கலாம். முதலில் கமலாக்கிச்சிலியை உபயோகிப்பதால் சிறு குடல் முதலியவற்றில் ஏதேனும் அழுக்குகளும் வாயுவும் இருந்தால், அவையும் ஒருவாறு கழுவப்பட்டு அடுத்து வரும் உணவை நன்றாக ஏற்றுக்கொள்ளும்படி குடலின் உட்புறங்கள் சுத்தமாகவும் ஆகின்றன.

கமலாக்கிச்சிலியானது காண்பதற்கு எவ்வளவு மனோஹரமாயிருக்கிறதோ, உண்பதற்கும் அவ்வளவு நற்சுவையுடையது. கைகளால் எடுப்பதாலும், துணி முதலியவற்றால் மூடுவதாலும், காற்றில் திறந்து வைப்பதாலும், ரொட்டியும் மற்றும் பணியாரங்களும் பதனழிவதுபோல் இக்கனியானது எவ்விதமான கெடுதலையும் அடைவதில்லை. இதன் மேற்போர்வையாயுள்ள சர்மம் கனமாயிருப்பதால், இதற்குள் வியாதிக்குக்காரணமான நுண்ணுயிர்கள் சிறிதும் பிரவேசிக்கமுடியாது. ரொட்டி வே பணியாரம்முதலியதைப் புசித்தால்

அடுத்தாற்போல் தண்ணீரோ, பாலோ, வேறுகுடிவகை யோ அவசியம் உபயோகிக்கவேண்டிவரும். கமலாக் கிச்சிலியைப்போதுமாறு புஜித்துவிட்டால், பசியும் தாகமும் ஒருமிக்க நிவிருத்திபடைவதோடு உடலும் உள்ளமும் உரே சீராகக் குளிர்ந்துவிடுமென்பது அனை வருக்கும் அனுபவஸித்தமான விஷயம்.

கமலாங்கிச்சிலியில் புறணிகளைக்கழற்றிவிட்டு அதன் இரஸத்தைப்பிழிந்து, இரண்டொரு சுடிக்கையளவு மிளகுத்தூளைப்போட்டு உபயோகித்தால் அக்னிமாந்திய மும், அரோசகமும் நிவிருத்தியாகும்; மலச்சிக்கலிலும் இது சிறந்த உணவாகவும் ஔஷதமாகவும் உபயோகப் படும். இக்கனியின் சாற்றைப்பிழிந்து அத்துடன் ஸோடாநீரையும் கலந்து ஆங்கிலேயர் வெகுருசிகர மாகப் பானம்செய்வதுமுண்டு.

பகற்போஜனத்திலும், இராப்போஜனத்திலும் இக் கனியை அன்னம் முதலியதைப்புஜித்த பிறகு இரண்டு மூன்று உபயோகிக்கலாம். பகற்போஜனத்திற்குப் பிறகு உபயோகிப்பதால், ஆகாரம் நன்கு ஜீரணம் செய் யப்பட்டு, இராப்போஜனத்திற்குமுந்தி குடலைச்சுத்த மாகவும் சுறுசுறுப்பாகவும்செய்து தேகத்திற்கும் போஷணையையுண்டுபண்ணும்.

## Advice for Women.

### ஸ்திரீகளுக்கான புத்திமதி.

1. புருஷனே தெய்வம், புருஷனே பூஷணம், புருஷனே ஆஸ்தி, அவனே ஸகலமும் என்பதாக நினைத்து அவனையே கொண்டாடு.

2. உன்புருஷனுக்கு உன்பேரில் கோபமுண்டாகும் படி நடந்துகொள்ளாதே.

3. உன்புருஷனுடைய மனோபாவத்தைத்தெரிந்து அதற்குத் தகுந்தமாதிரியாக நடந்துகொள்.

4. உன்புருஷனுடைய நடவடிக்கைகள் மற்றவர் களைவிட நன்றாய் உனக்குத் தெரியுமாதலால், எந்த வித மாய் நடந்தால் அவனது கோபம் மாறுமோ அம்மாதிரி நடந்துகொள்.

5. புருஷன் களைத்துவரும்போது அவனை உன்னு டைய சிரித்தமுகத்தினால் உபசரித்து அவனது சிரமம் நீங்கியபின்பு உனக்கும் கேட்கவேண்டியதைக்கேள். அப்படிக்கில்லாவிடில் அவனுக்கு உன்பேரில் கோப மும் அசூயையும் ஏற்படும்.

6. புருஷன் அவனது சிநேகிதர்களிடத்திலோ அல் லது பந்துக்களிடத்திலோ பேசிக்கொண்டிருக்கும் போது நீ பின்புறமாக நின்றுகொண்டு அவர்கள் பேசு வதைக்கேளாதே. அல்லது, நீயோ அல்லது குழந்தை களைக்கொண்டோ அவனைக் கூப்பிடாதே. அச்சமயத் தில் குழந்தைகளை அழவிட்டு அவனிடத்திற்கு அனுப் பாதே. ஏனென்றால், குழந்தையின் சேஷ்டையினா லோ அல்லது குழந்தை அப்பா, அப்பா, என்று கூப் பிடுவதனாலோ, அவர்கள் சம்பாஷணைக்கு இடைஞ்சல் ஏற்படும். அப்போது குழந்தையின்பேரிலும் உன் பேரிலும் உன்புருஷனுக்குக் கோபமுண்டாக்கக் கூடும்.

7. புருஷன் ஏவும் பணிவிடைகளைச் சிரத்தையோ டும் மனப்பூர்வமாயும் செய். அவனுக்குச்செய்ய நீ கட மைப்பட்டிருக்கிறாய். அவனே உனக்குத் தெய்வம்.

8. புருஷன்வந்து உன்னைக்காணாமல் தேடும்படியாக நீ கதவைப்பூட்டிக்கொண்டு பக்கத்து விட்டுக்குப் போகாதே.

9. புருஷனுடைய சகோதரர் சகோதரி ஆகிய இவர் கள்பேரில் பொய்வார்த்தைகளைச்சொல்லி அவனுக்குக் கசப்புண்டாகும்படி செய்துவைக்காதே.

10. குழந்தைகளை அடிப்பது, பாத்திரங்களைச் சத்த மாகும்படிவைப்பது, கீழே போடுவது, கடிந்துபேசுவது இவைகளினால் நீ கோபமாயிருக்கிறாயென்று உன் புருஷனுக்குக்காட்டிக் கொள்ளாதே.

11. உன்புருஷன் ஏதாவது காரியம்சொன்னால் அதைச்செய்வதற்கு முன்னாடியே எதற்காக? யார்? என்? என்பதாகிய கேள்விகளைக் கேட்காதே.

12. உன்புருஷன் உன்னைச் செய்யக்கூடாதென்று சொல்லும் காரியங்களை மனதில் வைத்திருந்து அதைத் திரும்பவும் நீ செய்யாமல் பார்த்துக்கொள்.

13. புருஷன் முன்னிலையில் யாரிடத்திலும் உரத் துப் பேசாதே.

14. புருஷனுக்குத் தெரியாமல் நீ வியாபாரம் செய்யாதே. இவைகளையும், இன்னும் இவைபோன்ற வைகளையும் கவனித்து நடப்பாயானால் உன் புருஷன் நட்புக்குப் பாத்திரமாகி, சகலராலும் நீ கொண்டாடப் பட்டு, ஊரார் பெருமைக்கும், கடவுளின் பிரியத்துக் கும் பாத்திரமாவாய்.—பெண்கல்வி.



## Books Received

### புத்தக வரவு.

நம்மையாளும் இராஜமகிமை வாழ்த்து.

திருவையாற்று ஸென்ட்ரல் ஹை ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் மிஸ்டர் C. V. குமாரசுவாமிப்பிள்ளை யவர்கள் இயற்றிய "நம்மையாளும் இராஜ மகிமை வாழ்த்து" என்னும் செய்யுள் நூலொன்று வரப்பெற்றோம். இந்நூல், சிறுவர் சிறுமியர்க ளும் மாணாக்கர்களும் விருப்பத்தோடு படிக்கத் தக்க சொல்நயம் பொருள்நயம் பொருந்திய அரிய படித்தற்கினிய செய்யுள்களினால், நம்மை ஆளும் மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியாருடை யவும், சக்ரவர்த்தினியாருடையவும் பலவகைச் சிறப்புக்களையும், பிரிடிஷ் ராஜாங்கத்தால் நாம் பெற்றுள்ள பற்பல நன்மைகளையும் செவ்வனே வெளியிடுவதாகும். இந்நூற்செய்யுள்களை மாண க்கரனைவரும் கற்றறிந்து இசையோடு பாடுதல் உசிதமாகும். இராஜவிசுவாசத்தைப் போதிக் கும் இந்நூல் ஒவ்வொரு ஸ்கூலிலும் உபயோகிக் கப்பட்டால் நன்மை விளையுமென்பது எமது துணிபு. நமது நேயர்கள் அந்நூலின் அருமை பெருமையை உணர்தற்காகச் சிலசெய்யுள்களை இங்குக் குறிப்போம்:—

சொல்லருந்தெய்வ ஆலயந் தொண்டர்கள்
பல்லரும்மடம் பல்கலைச் சாலைகள்
தொல்லை நோய்தவிர் சாலைகள் சோறிடும்
எல்லையில்லன்ன சாலைகள் யாண்டுமே. 1

யாண்டும் நீதிதேர் மன்றங்கள் யாற்றுக்குத்
தாண்டு பாலங்கள் தந்தி யந்திரம்
ஈண்டு தந்திகள் எந்திர வண்டிகள்
மூண்டு வான்செலும் நாவாயு முந்துமே. 2

முந்து மேல்வரு மன்னலர் தானைகள்
வந்து மாண்டிட வாகுள தம்பமட
குந்து பாசறைக் கோட்டங்கள் மக்கள்சேர்
சந்து நன்னலச் சாலைகள் ஆர்ந்தவே. 3

தெய்வம் மங்கைக்குக் கொண்டவன்
சேயர்க்குத்
தெய்வம் ஈன்றவர் தேற வோர்க்குத்
தெய்வம் சற்குரு தேசத்தில் யாருக்கும்
தெய்வம் வேந்தனே சிந்தித்து வாழ்கவே. 4

வாழ்வு தந்திடு மன்னரில் அன்பிலர்
வீழ்வர் துன்பத்து மெய்யன்பு கொள்ளுநர்
ஆழ்வர் இன்பத்துச் சாற்றவும் ஆகுமோ
மாழ்கல் இன்றியே மன்னுவர் வானமே. 5

வானம் இன்றியில் மாநிலம் வானமும்
மான மாதவர் இன்றியில் மாதவம்
ஆன வேந்தின்றி இல்லையம் மன்னவன்
தான இல்லறத் தாரின்றித் தங்குமோ. 6

தங்கும் எழ்கடல் வற்றினும் தண்மதி
பொங்கு மாகதிர் மாறினும் பூதலம்
இங்கு மாறுமோ எழுல கும்புகழ்
திங்கள் வெண்குடை ஜியார்ஜெனும்
மன்னர்க்கே. 7

சருநலர்க்கும் முகிலெனவே கருணைபொழி
கண்ணே
பொருசமரில் சிவந்துகனல் பொருந்துகருங்
கண்ணே
அருமைதரு பெருங்கலைகள் அறியமலர்
கண்ணே
திருமருவு ஜார்ஜரசர் செங்கமலக் கண்ணே. 8

சம்பியர்தங் கைபுனையும் கழலசைக்குந் தாளே
தெம்மனவர் முடிமணிகள் சிதறிநிற்குந் தாளே
இம்மெனவே பாதகண்டம் இலகவந்த தாளே
செம்மைபற நெறியொழுகும் ஜியார்ஜரசர்
தாளே. 9

மன்னுயிரைத் தன்னுயிரா மதிக்குநல நெஞ்சே
பன்னுகலைப் பாங்குணர்ந்து படிபுரக்கும்
நெஞ்சே

உன்னுபரம் பொருளைநினைந் துருகிநிற்கும் நெஞ்சே
துன்னுபகை கடந்துமகிழ் தோன்றலவர் நெஞ்சே. 10

காவி யக்க மின்றி யன்று
கடலி லூரா வங்கமே
கோவி யென்று நீரி லூருங்
கூம்பு மின்றி வானிலே
சூலி யங்கு கொண்டல் போன்று
தூங்கி யூரும் பச்சையால்
மேலு றங்கு சிங்க மன்ன
வேந்தர் ஜார்ஜு நாளிலே. 11

பால்வாய் மக்கள் பால்வாய் தாய்போல்
சேல்வாய் வேலை சூழ்பா ராளும்
நூல்வாய் ஜார்ஜு வேல்வேய் வேந்து
மால்பாய் ராணி சால்பாய் வாழ்கவே. 12

முந்து பாவு சிந்து தாவி
இந்தி யாவி லந்த மோவி
கந்த ளைவு வந்து சூடி
விந்தை மேரி மைந்தர் வாழ்கவே. 13

கொள்ளை யாவி கொள்ளு வோரை
யெள்ளி நூறு சள்ளை யாவும்
தள்ளி யோகை துள்ளி யாளும்
தெள்ளு ஜார்ஜு வள்ளல் வாழ்கவே. 14

தேங்குங் கருணைப் பெருங்கடலாம்
தெய்வத் தருளால் ஜியார்ஜரசர்
வாங்குங் கடற்பா ரதில்வாழும்
வாய்மை தவறாத் தன்குடிகள்
ஓங்கா நிதமே பொருந்திடவே
எதிர்த்தே போரில் ஜெயமருவிப்
பாங்கா யொருகோ லோச்சிமுனி
பாலன் போல வாழ்ந்திடவே. 15

தத்தித்திரைகட - லைந்திக்கரைவரு - செப்பப்பதிபல - தக்குப்படவொளி - தழைமேரு — எத்தப்படமொரு - தெற்குந்திசையதி - லொத்துச்குலவுறு - மிச்சைப்படிதல - மினிதேறி — நத்தப்படிவி - தித்தித்திடு தொடை - சுற்றப்படுமுடி - நட்டுக்கொடிபுனை - நவிராள — மொத்துப்படவரு - குற்றப்படுதள - மற்றப்பரனருள் - முற்றிக் களிவர - முனைவாழ்க. 16

கஞ்சந்தருமக - னங்கந்தழுவுறு - மஞ்சநதிரு வுரு - கந்தஞ் செறிகுழல் - கனமேரிமா — கொஞ்சுங்கிளிமொழி - குன்றம்புயமன - னெஞ்சங்குழைதரு - குந்தங்கொடுபொரு - கொடியாரொடே — வஞ்சங் கொலைபுரி - வஞ்சங்கொடுதிரி - வஞ்சஞ்சலமிகு - மங்கங்கமர்முனை - யடையிரெனு — மஞ்சன்றாவுரை - கொஞ்சங் சகபர - துங்கன்றிருவருள் - மண்டும்படியிலை - மகிழ்வார்குமே. 17

எற்றி யுழக்கி யெதிர்ப்படையைச் சார்ஜரசர்
வெற்றி முழக்கம் விரைந்தளிக்கச் — சுற்றியே
யானிடர்கள் நாமகிழ்ந்து வாழ மிகுந்து தொலைப்
பானிடரைத் தேவன் பரிந்து. 18

முற்றித் தழைக்கும் முடிபொளி காலும்
முழுமதி வெண்
கொற்றக் குடைமேவி திடுக்கிட்டு முட்டும்
குலவுசெங்கோல்
ஒற்றிக் கடற்புவி தாங்கு நம் ஜார்ஜிறை
பொன்கொடியும்
வெற்றிப் பணில முழக்க மும் வானத்து
வீறிடுமே. 19

பொருந்திய ஜார்ஜுமன் பொன்னடி வாழ்க
புதுவிரைத்தேன்
அருந்திய வண்டுளர் தார்கமழ் செங்கோல்
அருங்குடைவேல்
திருந்திய சேமி யொளிர்கொடி வாழ்க
சிவச்சுடரின்
குருந்தியல் வீரம் படையொடு வாழ்க
குவலயத்தே. 20



வாழ்க வானவர் மாதவர் வேதியர்
வாழ்க ஜார்ஜிறை வைஸிராய் தேவியர்
வாழ்க நூல்வளம் வாய்மைசெங் கோல்வளம்
வாழ்க மானவர் வானமும் வாழ்கவே. 21

இப்புத்தகத்தின் விலை அணு 3. வேண்டுவோர், நூலாசிரியர்க்கு எழுதிப் பெறலாம்.

## * குசேலர்.

காரைக்குடி, கம்பராமாயண ப்ரசாரகர் ஸ்ரீமோ. வெ. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்களால் இயற்றப்பெற்ற "குசேலர்" என்னும் அரிய புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். இது நாடக ரூபமாக இயற்றப்பெற்றுள்ளது. சிறுவர் சிறுமியர் முதலிய யாவரும் மிகவெளிதில் படிக்கக்கூடியது. புத்தகம் விலை ரூபா 1. வேண்டுவோர் ஆசிரியரிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## * பல தீபிகை.

பாங்கிப்பேட்டை சு. வ. குமாரஸ்வாமியாசாரியரால் பதிக்கப்பெற்ற "பலதீபிகை" என்னும் அரிய நூல் ஒன்று வரப்பெற்றோம். இது வடமொழியில் ஸ்ரீ மந்திரேசுவர முனிவரால் இயற்றப்பெற்றது. வடமொழிப் பயிற்சியில்லார்க்கு உபயோகப்படும்பொருட்டுத் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஜோதிட சாஸ்திரத்தைப் பயில்பவர்களுக்கு இவ்வரிய நூல் ஓர் பெரிய உபகாரியாயிருக்கு மென்பதில் ஐயமில்லை. புத்தகம் விலை ரூ. 1-4-0. வேண்டுவோர், சு. வ. குமாரஸ்வாமி யாசாரியார், பாங்கிப்பேட்டை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## * சோதிட கணிதம்.

இது, ஸ்ரீமான் சு. வ. குமாரஸ்வாமி யாசாரியார் அவர்களால் பரிசோதிக்கப்பெற்று, ஸ்ரீமான் ப. அ. கிருஷ்ணஸ்வாமிபிள்ளை அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது. புத்தகம் விலை அணு 6. வேண்டுவோர், சு. வ. குமாரஸ்வாமி யாசாரியார், பாங்கிப்பேட்டை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## * புட்ப பந்தம்.

இது, பாங்கிப்பேட்டை ஸ்ரீமான் சு. வ. குமாரஸ்வாமி யாசாரியார் அவர்களிடமிருந்து வரப்பெற்றோம். விலை அணு 4. வேண்டுவோர் மேற்படியாரிடத்திருந்து பெற்றுக்கொள்ளலாம்.

## காலண்டர் வரவு.

சென்னையில் பிரபல வியாபாரிகளான மெஸர்ஸ். எஸ். வைத்யா அண்டு கம்பெனியாரிடமிருந்து அழகிய ஜிண்டான் காலண்டர் ஒன்று வரப்பெற்றோம். இது, பார்ப்போர் மனதைக் கவரும்படியாய் வெகு அழகாக அச்சிடப்பட்டு, பிரதிமைக்கேற்ப வெட்டப்பட்டுள்ளது. தேதிகளைக்காட்ட மாதம் ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தியில் இக்கம்பெனியாரின் முயற்சிகள் மிகப் பாராட்டத்தக்கன. பற்பல வியாதிகளுக்குத் தேவையான மருந்துகளைத் தயார் செய்வதிலும், உயர்ந்த காண்டில் ஸ்டாண்டுகள் செய்வதிலும், எவர்க்கும் அவசியம் தேவையான பலவர்ணமுள்ள இங்கிகளைத் தயார் செய்வதிலும் இக்கம்பெனியார் மிகவும் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். இந்தியக்கைத்தொழிலின் அபிவிருத்தி விஷயத்தில் அபிமானமுள்ள நம்மவர்கள், இவர்களால் தயாரிக்கப் பெறும் பண்டங்களை வாங்கி ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளவர்களாவர்.

---

* இப்புத்தகங்களைப்பற்றிய விமர்சனம் விஸ்தாரமாகப் பின்னர் வெளிவரும்.

சுலோசனி :—(ஜனோபகாரி) கல்வி, கைத்தொழில், வியவசாயம் வர்த்தகம் முதலிய பலவேறு அம்சங்களைக் கொண்டதாய்த் தன் பெயருக்கேற்பப் பொது ஜனங்களுக்கு உபகாரியாகவே விளங்குகின்றதென்பதில் ஐயமில்லை.

# Notes.

## குறிப்புக்கள்.

**சென்னை மாகாணத்தில் கல்வி அபிவிருத்தி.**

சென்னை மாகாணத்தில் சென்ற 1915-16ம் வருஷத்தில் மாணவர்க்கென்று ஏற்பட்டுள்ள பற்பலவிதமான கல்வி ஸ்தாபனங்களின் மொத்தம் 33, 208. இவைகளில் கல்வி பயின்றுவந்த மாணவர்களின் தொகை 1, 301, 844. பெண்களுக்கென்று ஸ்தாபிக்கப்பட்ட ஸ்தாபனங்களின் தொகை 1875; அவைகளில் கல்விபயின்றுவந்த பெண்களின் தொகை 313, 315. ஆதலால், மொத்தக் கல்வி ஸ்தாபனங்கள் 35,083 க்கு 1,615,159 பேர்கள் கல்வி பெற்றுவந்திருக்கிறார்கள். இவைகளுக்காகச் செலவிடப்பட்ட பணத்தின்தொகை ரூபாய் 20 லட்சத்து 65 ஆயிரத்து 468. தொழிற் கல்வியைப்போதிப்பதற்காக இம்மாகாணத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் மொத்தம் 38. அவைகளில் கல்விபயின்று வந்தவர்களின் தொகை 1922. இப்பாடசாலைகள் பலவற்றிலும் தச்சுவேலை, சரிகைவேலை முதலியன போதிக்கப்பட்டுவந்தன. கும்பகோணத்திலுள்ள சாஸ்திர பாடசாலையில் படிக்கும் மாணவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு ஒரு மார்க்கம் கிடைப்பதற்காகவும், அப்பாடசாலையினால் மிகுந்த நன்மை ஏற்படுவதற்காகவும், தச்சுவேலை போதிக்கப்படுவதற்கு ஒரு வகுப்பு ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாகவும், அதற்காக சுமார் நூறு ரூபாய்க்கு உபகரணங்கள் வாங்கியிருப்பதாகவும் ரிபோர்ட்டில் காணப்படுகிறது.

*
* *

**சவுக்கு.**

சவுக்கானது சமுத்திரக்கரை ஓரங்களிலும், உள்நாட்டில் ஆற்றோரங்களிலும் விசேஷமாய் வளர்கின்றது. இது கிளைகளில்லாமல் ஒழுங்காய் வளரக்கூடியது. இதை அடுப்புக்கு விறகாகவும், ஸ்தம்பங்களாகவும் உபயோகப்படுத்தப்படுகின்றது. இம்மரத்திலிருந்து உதிரும் தழையானது மணற்பாங்கான பூமிகளை நாளாவட்டத்தில் செழுமையாக்குகின்றது. இதன் நாற்றுக்கள் சென்னைக்கு அருகிலுள்ள திருவொற்றியூர் முதலானவிடங்களில் விலைக்குக் கிடைக்கின்றன. அவற்றை வைக்க இரண்டு கஜத்துக்கு ஒரு சிறு குழி தோண்டி அவைகளில் நடலாம். ஒரு ஏக்கராவுக்குச் சுமார் 1200 நாற்றுக்களை நடலாம். சிலவிடங்களில் இன்னும் அதிகமாகவும் வைக்கப்படுகின்றது. நாற்றுக்களை நட்டவுடனே அவைகளின் ஒவ்வொன்றின் பக்கத்திலும் ஒரு சிறு பனைஓலையை நட்டு, அவைகளுக்கு நிழலைக் கொடுக்கும்படி செய்யவேண்டும். சிலர் ஒவ்வொரு நாற்றுக்கும் மத்தியிலிருக்கும் இடங்களில் முத்துக்கொட்டை முதலான பயிர்களைச் செய்கிறார்கள். நாற்றுநட்ட மூன்று வருஷத்திற்குள் செடிகள் வளர வளர, அடிக்கிளைகளை வெட்டி அவற்றை அப்புறப்படுத்தலாம். சுமார் ஐந்து வருஷங்கள் கழிந்த பிறகு மரங்களின் வளர்ச்சிக்குத்தக்கபடி ஒவ்வொன்றும் சராசரி அரை ரூபாய் வரை விலைபோம். சவுக்கு விதைகள் வேண்டுமானால், நன்றாய் முற்றிப் பழுத்த காய்களைச் சேகரித்து உலர்த்தி அவற்றினின்று விதைகள் எடுக்க வேண்டும். விதைகளைப் பாத்திகளில் விட்டவுடன், அவைகளை எறும்புகள் தின்றுவிடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும்.

*
* *

**பம்பாயில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலை.**

சென்னையிலும் கல்கத்தாவிலும் கண்ணாடிச் சாமான்களின் பிரபல வியாபாரிகளாகிய இப்ராஹீம் பீர் முகம்மது கம்பெனியார், பம்பாயில் ஒரு கண்ணாடித் தொழிற்சாலையை ஸ்தாபித்து நடத்தி வருகிறார்களாம். அங்குச் செய்யப்படும் கண்ணாடிச் சாமான்கள் மேனாட்டுச் சாமான்களுக்குப் பின் வாங்காமல் அவ்வளவு சிறந்தவையாயிருக்கின்றனவாம்.



*
* *

**வேடிக்கையான கிணறுகள்.**

கனடா தேசத்தில் சில வருஷங்களுக்கு முன் ஒரு கிணறு தோண்டப்பட்டது. அதில் ஜலத்திற்குப் பதிலாய் மணல் சுரந்துகொண்டிருக்கிறதாம். ஊற்று ஜலம் எப்படி அடியிலிருந்து புறப்படுகிறதோ அவ்விதமே மணல் மணிகள் ஓயாமல் அடியிலிருந்து கிளம்பிக்கொண்டிருக்கின்றனவாம். நூறு அடி ஆழத்திலிருந்து மணலை மேலுக்குக் கொண்டுவரும் சக்தி என்னவென்று சாஸ்திர நிபுணர்களால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

பசிபிக் மகா சமுத்திரத்திலிருக்கும் நியூகினி என்ற தீவில் ஓர் கிணறு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். அந்த ஜலத்தில் அயக்காந்தம் வியாபித்திருக்கிறதென்றும், அதில் இரும்பு அல்லது எஃகுச் சாமான்களை நனைத்தால், அவற்றில் காந்தமானது உடனே ஏறிக்கொள்ளுகிறதென்றும் சொல்லப்படுகிறது.

*
* *

**சிறுவர்க்கான குறிப்புக்கள்.**

"அறிவைத் தேடிக்கொள்; அது தன்னை உடையவர்க்கு நன்மை தீமை இன்னவின்னதென்பதைப் பகுத்தறியுந்திறத்தை உண்டாக்குகிறது. அது முக்திமார்க்கத்தை விளங்கச்செய்கிறது. அது பாழ் நிலத்தில் பெருந்துணையாயுள்ளது. அது தன்னந்தனியிடத்தில் நமது நேசக்கூட்டமாயிருக்கிறது. அது சிநேக மற்றுள்ள காலத்தில் மித்திரனாயுதவுகிறது. அது நமக்கு இன்பவழியைக்காட்டி நமது சிறுமைக்காலத்து நம்மைப்பரிக்கிறது. அது சிநேகிதர் நடுவில் ஓர் பூஷணமாயுள்ளது. மேலும், அது விரோதிகள் முன்பு நமக்கொரு கவசம்போல் உபயோகப்படுகிறது.

"வாழ்விலும் தாழ்விலும் நியாயபூர்வமாய் மெய்ம்மையே பேசவேண்டும்.

"நம் உற்றார் உறவினர் நமக்கு உதவாவிட்டாலும், நாம் அவர்களுக்கு உபகாரம் புரிவதே உசிதமான தர்மம்.

"வயோதிகரான பெற்றோர்களுக்கு சிச்ருஷை பண்ணாத வொருவர் ஒருநாளும் முக்தியடையமாட்டார்.

"ஆபத்காலத்தில் ஜீவஜந்துக்களுக்குச் சகாயம் பண்ணுகிறவரும், இடுக்கண் உற்றவர்களுக்கு இன்பந்தேடுகிறவருமாயிருக்கிறவருக்குக் கஷ்டம் நேர்ந்த காலத்துக் கடவுள் துணை புரிவார்.

"யார் யார் உடம்பை உழைத்து வேலைசெய்து ஜீவிக்கிறார்களோ அவர்களே ஈசுவரனுக்குச் சமீபதாசர்கள்.

"காலையிலும், மாலையிலும், குறித்த காலங்களிலும் கடவுளை வணங்கி, மற்றைச்சமயங்களை நும் பிரயத்தனத்திற் செலுத்துக.

"உனது சகோதரர்களுக்கு வறுமைவந்த சமயம் கைக்கொடுத்து, அவர்கள் சிதைவுற்றுப் போகாவண்ணம் காப்பாயாக."—மஹாத்மா முஹம்மது நபி அவர்களின் உபதேசரத்னம்.

*
* *

**இந்தியாவில் எண்ணெயாட்டுந் தொழில்.**

இந்தியாவில் கோடி டன்கள் கணக்காக எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாகின்றன. ஆனால், இவ்வித்துக்களிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுந் தொழிலானது எங்கும் முயற்சிக்கப்படாமலேயிருக்கின்றது. கல்கத்தாவில் கூட்டுறவு முறையில் எண்ணெயாட்டுந் தொழிலை நடத்தும் கம்பெனி ஒன்றுதான் இருந்தது. சில வருடங்களுக்கு முன் பெங்களூரில் இத்தொழிலை நடத்தப் பெரிய கம்பெனியொன்று ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அது பிறகு எடுபட்டுப்போயிற்று. தேச

த்தில் ஆங்காங்குப் பலர் ஸ்வல்ப சக்தியுள்ள யந்திரங்களைக்கொண்டு இத்தொழிலை நடத்தி வருகிறார்கள். இந்த யந்திரங்கள் எண்ணெய் வித்துக்களிலிருந்து சரியானபடி எண்ணெயை வெளிப்படுத்த முடியாததனால், பொருள் சேதமாகின்றன. பெருவாரியாக நமது தேசத்திலிருந்து வேர்க்கடலை, ஆமணக்குவிதை, தேங்காய்ப்பருப்பு, ஆளிவிதை, பருத்திக்கொட்டை, எள்ளு முதலியன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவ்வாறு ஏற்றுமதி செய்யப்படுவதனால் இந்தியாவுக்குக் கொஞ்சமும் லாபமில்லை.

* * *

**சோப்புத் தொழில்.** சோப்புத் தொழிலானது நமது தேசத்திற்குப் புதிதென்றே சொல்லவேண்டும். எனினும், நாளுக்குநாள் இத்தொழில் வெகு விரைவாக அபிவிருத்தியடைந்து வருகிறது. தேசத்தில் வரவரக் கல்வி பரவுவதனாலும், சுகாதாரத்தின் அவசியத்தை ஜனங்கள் ஒருவாறு உணருவதனாலும், தொழிலுக்குத் தேவையான இயற்கைப் பொருள்கள் வேண்டியவளவு கிடைப்பதனாலும், இத்தொழில் வெகு சீக்கிரத்தில் அபிவிருத்தியடையுமென நம்பப்படுகிறது. பற்பலவிதமான ஸோப்புகள் கீழ்கண்டவாறு 1913-14 ம் வருஷத்தில் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

| | அந்தர்கள். | மதிப்பு பவுன்கள். |
|---|---|---|
| 1. துணி முதலியன வெளுக்கவேண்டிய ஸோப்புகள் | 3,01,369 | 3,14,511 |
| 2. வாசனை ஸோப்புகள் | 45,339 | 1,66,194 |
| 3. இதர வகைகள் | 16,152 | 9,695 |

ஸோப்பு வகைகளின் மொத்த இறக்குமதி 362,860 அந்தர்களில் 350,703 அந்தர்கள் யுனைடெட் கிங்கடத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. அதாவது 100-க்கு 97 என்று கணக்கிடப்படுகின்றது. இந்தியாவில் ஏராளமாகப் பலவித எண்ணெய் வித்துக்களும் இயற்கைப் பொருள்களும் இருந்தும், இத்தொழில் அபிவிருத்தியடையாததைப்பற்றிப் பல விஷயங்கள் கவனிக்கத்தக்கன.

* * *

**வியவசாயக் கருவிகளின் டெப்போக்கள்.** வியவசாயக் கருவிகளின் டெப்போக்கள் மைசூர் இராஜ்யத்தில் ஏராளமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நூதன வியவசாயக் கருவிகளுக்குப் பிரியம் நாளுக்குநாள் அதிகப்படுகின்றது. சென்ற 1914-15 ம் வருஷத்தில் ரூ. 16,678 மதிப்புள்ள வியவசாயக் கருவிகள் விற்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முந்திய வருஷத்திலோ, ரூ 12,022 க்கு விற்கப்பட்டிருக்கின்றன.

## Miscellaneous News.
## நாநாவித சங்கதிகள்.

பரோடாவில் சவுக்காரத் தொழிலை விருத்தி செய்யப் பலவிதமுயற்சிகள், செய்யப்பட்டு வருகின்றன. இதற்காக பரோடா கவர்ன்மெண்டார், பாரிஸ் யூனிவர்ஸிடியில் இரஸாயனத் தொழிலில் தேறிய மிஸ்டர் ஜே சக்ரவர்த்தியைத் தொழில் ஆலோசனை சொல்லும் நிபுணராக நியமித்திருக்கிறார்கள்.

∴ ∴ ∴

ஸர் அஷுதோஷ் முகர்ஜி அவர்களுக்கு, இலங்கையிலுள்ள அமராபுரம் வகுப்பைச் சார்ந்த மகா குருவினால் "ஸம்புத்தாகம சக்கரவர்த்தி", என்னும் கௌரவப்பட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது. சந்தோஷமான இச்செய்தியை அவருக்கு அறிவிக்கும் பொருட்டு, கார்மைகேல் பிரபு அவர்கள், கல்கத்தா யூனிவர்ஸிடி கட்டிடத்தில் கூடிய கூட்டத்திற்கு அக்கிராசனம் வகித்துத் தமது சந்தோஷத்தை யறிவித்தார். அச்சமயம் "கீழ்நாட்டுப் பரிசீலனைச் சங்கம்" என்று ஒன்றை ஸ்தாபித்து, அதற்குத் தாம் போஷகராகவும், ஸர் முகர்ஜி அக்கிராஸனாதிபதியாகவும் இருக்கச் சம்மதித்தார்கள்.



∴ ∴ ∴

சாம்பல் காரம் என்னும் சத்தானது சாம்பலில் விசேஷமாயிருக்கிறபடியால், அதற்குச் சாம்பல்காரம் என்று பெயர் வந்தது. எருவிலும் இச்சத்து இருக்கின்றது. இது இல்லாத நிலங்களில் செடிகள் வளரா. மண்ணிலும் இச்சத்து உண்டு. ஆற்று வண்டல்படியும் இடங்களில் இது விசேஷமாயிருக்கின்றது.

∴ ∴ ∴

இந்தியாவில் 1909-ம் வருஷத்தில் 2,736 அச்சுக்கூடங்கள் இருந்தன. 1915-16 ம் வருஷத்தில் 3784 அச்சுக்கூடங்களுக்கு அதிகப்பட்டன. 1909-ம் வருஷத்தில் 726 பத்திரிகைகள் இருந்தன; ஆனால், 1915-16 ம் வருஷத்தில் அவை 857 க்கு அதிகப்பட்டன. 1909-ம் வருஷத்தில் 828 சஞ்சிகைகள் இருந்தன; ஆனால், 1915-16 ம் வருஷத்திலோ 2,927 க்கு அதிகப்பட்டன.

∴ ∴ ∴

ஜெர்மன் சக்கிரவர்த்தியின் பெயரில் மொத்தம் பதின்மூன்று எழுத்துக்கள் இருக்கின்றன. (Kaiser Wilhelm) ஜெர்மன் கக்ஷியைச்சேர்ந்த மற்ற அரசர்களின் பெயர்களிலும் அவ்வெண்ணிக்கையே யிருக்கின்றதாம். (Francis Joseph, Czar Ferdinand, Sultan Mahomed V) மற்றும் யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஜெர்மன் முக்கியஸ்தர்களின் பெயர்களிலும் பதின்மூன்று எழுத்துக்களேயுள்ளன. (Von Hindenburg, Van Falkenhayn, Count Zeppelin.)

∴ ∴ ∴

சென்னை இராஜதானியின் ஜெயில்களில் நடத்தப்படும் தொழில்களின் மூலமாக 1915-ம் வருஷத்திற்கிடைத்த வருமானம்; ரூ. 162,653—அதாவது : 1914-ம் வருஷத்தில் கிடைத்ததைவிட ரூ. 7332 அதிகம் கிடைத்திருக்கிறது.

∴ ∴ ∴

சிறு குழந்தைகளைப் பூனையினிடத்தில் விளையாடவிடக்கூடாது என்று ஒரு வைத்திய நிபுணர் கூறுகிறார். அதன் காரணம் பின்வருமாறு:—பூனையின் மயிரில் ஏராளமாக வியாதிக்கிருமிகள் இருக்கின்றனவாம். அவை பற்பல வியாதிகள் பரவுவதற்குக்காரணமாயிருக்கின்றனவாம்.

∴ ∴ ∴

பினாங்கு, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலிருந்து புதுச்சேரிக்குச் சர்க்கரையை இறக்குமதிசெய்ய விரும்பும் வியாபாரிகள் அதற்காக பிரிட்டிஷ் கான்ஸலின் அனுமதியைப் பெறவேண்டுமென்று பிரெஞ்சு கவர்ன்மெண்டார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

∴ ∴ ∴

பிரான்ஸில் மார்ன் நதிக்கரையில் நடந்த சண்டையில் ஜேக்ஸ்ராய்மான் என்ற பிரான்சுப் போர்வீரன் ஒருவன் காயமடைந்து அதனால் பிரஜ்ஞை தப்பி ஒருவித தூக்க நிலைமையை அடைந்தானாம். சென்ற 29 மாதங்களாக அவன் படுத்த படுக்கையிலேயே தூங்கின வண்ணமாய் இருந்தானாம். பல வைத்திய சிரேஷ்டர்கள் வந்து அவனுக்குச் சிகிச்சை செய்தார்களாம். ஆனால், சில தினங்களுக்குமுன் அவனுக்கு ஆகார மூட்டிய பிறகு, அவன் படுக்கையில் புரண்டானாம். ஆதலால், அவன் முழுதும் சொஸ்தமடைவதற்கு ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறானென்று சொல்லப்படுகிறது.

## Correspondence

### ஓர் கடிதம்.

(கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.)

கனம்பொருந்திய "ஜனோபகாரி" பத்திராதிபருக்கு வந்தனம்.

ஐயா,

சென்னைமாநகரில் சென்ற 46 வருடங்களுக்கு முன் அரிய ஞானவிஷயங்களைத் தன்னகத்தின்கண் கொண்டு வெளிவந்துலவா நின்ற "ஞான பாநு" என்னும் அரிய ஓர் மாதாந்தப்பத்திரிகையின்கண் ஓர் நிருபர் ஓர் ஐயவினா பொறித்துள்ளார். அதைக் கண்ணுற்ற நாள்தொட்டு யான் விடையறியப் பற்பலவாறு முயன்றும், வன்மையற்றவனாயுள்ளேன். இத்தகைய அரிய வினாவுக்குத் தக்க விடையிறுக்கும் பான்மையுடைய வித்வான்கள் பலரிருப்பார்களாகையால், ஈண்டு அவ்வாசகத்தைக் குறித்துள்ளேன். இதைக் கண்ணுறும் அன்பர்கள் ஜனங்களுக்கு உபகாரமாய் விளங்கும் இந்த "ஜனோபகாரி" என்னும் பத்திரிகையின்மூலமாய்ப்பொருள் விளங்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அம்மொழிகளாவன:—"ரவுத்திரி ௵ நா அதைமீ சாஸ்திரமே நிகதி ஸ்ரீமது ஆ ஆ ஆ முதலியார் திருவல்லிக்கணியாருக்கும் எழுதிய திருமுகம் என்னையோவெனின்,—

"முன்துறையும் பின்துறையுமான ஊரில் அத்தியில் ஆசுமுளைத்து 'எக்குப்பலகையிலேறி மாவிலநம்பிப் பன்னிரண்டுராசியி லொருராசி முழுகிப் பன்னிரண்டுராசியில் ஒருராசி நிற்காணிக்கை கொண்டு ஒரு பாவுக்குப் பதினாறும் பாகத்தின் கீழே படுத்துத் தூங்குகையில், ஆண்டோர் கன்னிகைபானவள் அடையிலே......வாயிலே கையும் கையிலே சோறும் கழுத்தினிற் பாடகமும் கொண்டுவந்தாள். அக்கன்னிகையை அவர் கண்டு மனதிலுட்கொண்டு, 'உன் தோட்டத்தில் பூவுண்டோ?' என்றுகேட்க, 'ஆம் : பூவுண்டு. உமக்கு வேண்டுமானால், முதுகிலே ........, வயிற்றிலே காலும், கையிலே கண்ணும், காலிலே பின்னலுமாக வந்தால், என் தோட்டத்திலே பூவுண்டு' என்றாள். 'ஆனால், பூத்தநாள் சொல்' என்றார். அதற்குக் கன்னிகை, 'பூப்பது நேற்று; பறிப்பது நாளை; முடிப்பது மறுநாள்; மனதிருந்தால் வரலாம்' என்றாள். 'ஆம் : மனதுண்டு; உன் தெருவின் அடையாளமென்ன?' என்று கேட்க, அப்பெண், 'என் தெருவிற்குச் சிவப்பும், கறுப்பும், மஞ்சளும், பச்சையும் கலந்திருக்கும்' என்றாள். 'ஆனால், உன்வீட்டுக்கு நெறி எப்புறத்தில்?' என்றார். 'ஊசிக்கும் நூலுக்கும் நடுவே, நாருக்கும் பூவுக்கும் நடுவே, பாலுக்கும் பானைக்கும் நடுவே, பாய்க்கும் பஞ்சசுத்திற்கும் நடுவே' என்றாள். 'உன்வீடு எத்திசையின்?' என்றார். 'கூட்டிக் குவித்துக் கொள்ளிவைப்பாள் வீட்டுக்குக் கிழக்கு, குடியிருப்பாரைக் குலைத்துவிடுவான்வீட்டிற்கு மேற்கு, தண்ணீர்க்கும் பகையான மரத்திற்குங் கீழை, சாஞ்செடிக்கு வேலி போடுவான் வீட்டிற்குத் தெற்கு, அறியாப் பிள்ளையை அழவைப்பாள் வீட்டுக்கு வடக்கு, ஆகிய இந்நான்கெல்லைக்கு நடு' என்றாள். 'உன் வீட்டிற்கு இன்னுமடையாளம் யாது? சொல்' என்றார். அக்கன்னிகை சொல்லத் தொடங்கி, 'என் வீட்டுவாசலில் பேய்போல நிற்கும்; பிறைபோலப் பூப்பூக்கும், ஆகாயத்திலே கன்னியத்தைநீட்டிக்கொண்டு நீளக்காய்க்கும்' என்றாள். 'அப்படியே நான் வருகிறேன். உனக்கு எஜமானி உண்டோ?' என்றார். 'எஜமானி உண்டு' என்றாள். 'அவளைக் காணாமல் வர உபாயமேது' என்றார். 'என் எஜமானியைக் காணாமல் வர உபாயமே, பன்னிரண்டுராசியில் ஒரு இராசி முழுகி, பன்னிரண்டு இராசியில் ஒருராசி தூங்கி பன்னிரண்டு ராசியில் ஒருராசி நிற்காணிக்கை கொண்டு, ஆகாயத்திலே சாட்டிட்டு, அந்தரத்திற் கைகழுவி, வீடில்லா வீட்டிலே காலில்லாப் பந்தல்வழி கண்ணைப் பொத்திக்கொண்டு வந்தால் வரலாம்' என்றாள்."

இதன் கருத்தை விளக்குக.

காஞ்சீபுரம் - வாசுதேவ ஐயர்,
தமிழ்ப்பண்டிதர்,
ஐக்கியக் கிறிஸ்தவ சங்கத்துப் பயிற்சிக் கலாசாலை,
வேலூர்.

# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

OFFICE OF THE REGISTRAR
7 - JUN 1917
MADRAS.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. } பிங்கள ௵ சித்திரை௴ APRIL, 1917. { சஞ்சிகை 4. No. 4.

## Tamed Animals.

By Mr. K. M. Narasimhachariar.

### பழக்கப்பட்ட மிருகங்கள்.

பூர்வத்தில் மனிதர்களும் பிராணிகளும் ஒருவர்க்கொருவர் இயற்கையில் ஒற்றுமையின்றி இருந்தார்கள். பிறகு காலஞ் செல்லச்செல்ல, அவ்வப்போதுண்டான சந்திப்பினால் ஒருவர்க்கொருவர் இயற்கையாகவே யாதொரு காரணமுமின்றி விசுவாசம் கொண்டனர். உதாரணமாக: அனேகர் கிளி, மான் முதலிய பிராணிகளை வளர்ப்பதும், சிறுபிள்ளைகள் சிறுபக்ஷிகள், மிருகங்கள் முதலியவைகளைப் பிடிப்பதும் இயற்கையபிமானத்தினாலன்றோ? இம்மாதிரி ஆதிகாலத்திலேயே அபிமானம் ஏற்பட்டவுடன், மனிதர்கள் சிலமிருகங்களைத் தங்களுக்கு உதவியாகக் கொண்டார்கள். மற்றுஞ் சிலமிருகங்கள், மனிதருடன் பழகாமல் அவர்களைத் தங்களின் விரோதிகளென்று எண்ணின. பிறகு நாட்கள் செல்லச்செல்ல, துணைகொண்ட மிருகங்களாகிய நாய், ஆடு மாடுகள், குதிரை முதலிய அந்தந்தத் தேசத்துச் சீதோஷ்ணத்திற்கு இசைந்தனவும், பழக்கக் கூடியனவுமான மிருகங்களைக்கொண்டு மனிதர்கள் தங்களுக்கு வேண்டிய சாதனங்களை முடித்துக்கொள்ளத் தலைப்பட்டார்கள். பிராணிகளின் உதவியினால் ஜனங்கள் சுலபமாய்ப் பிழைப்பதற்கு வழி தேடிக்கொண்டவுடன், உணவின்பொருட்டு வேட்டையாடுதலானது நின்று, நாகரிகமுதிர்ச்சியினால், வேடிக்கைக்காகவும் தேகப்பயிற்சிக்காகவுமே அவற்றைக் கைக்கொள்ளத் தலைப்பட்டார்கள்.

ஆசியாக்கண்டத்தில் சைபீரியா தேசத்தில் லாப்லண்டு, பின்லண்டு ஆகிய நாடுகள் மிகுந்த பனியால் உறைந்து கிடக்கின்றன. அவ்விடங்களில் ரீயன்டீர் (Reindeer) என்கிற கலைமான்களையும், நாய்களையுந்தவிர மனிதர்கள் துணைகொள்ளக்கூடிய மிருகங்கள் வேறில்லை. அத்தேசத்தவர் இம்மிருகங்களைக்கொண்டு ஸ்லெட்ஜெஸ் (Sledges) என்கிற சக்கரமில்லாத வண்டிகளை இழுக்கச்செய்கிறார்கள். ஆனால், நாய்களானவை கலைமான்களவ்வளவு உபயோகப்படக் கூடியவைகளாகக் காணப்படவில்லை. இக்கலைமான்களின் மாமிசத்தையே அத்தேசத்தவர் முக்கிய ஆகாரமாகக் கொள்ளுகிறார்கள்; அவற்றின் பாலைப் பருகுகிறார்கள்; அவற்றின் சர்மத்தை உடுப்புகளாகவும், படுக்கைகளாகவும், பாதரக்ஷைகளாகவும் செய்துகொள்ளுகிறார்கள்; எலும்பினின்றும் கொம்பினின்றும் வீட்டிற்

சூரிய நீர்த்தபாத்திரம் முதலியன செய்து கொள்ளுகிறார்கள். லாப்லாண்டு தேசத்தவர் கலைமான்களின்மேல் ஏறிச்சவாரிசெய்கிறார்கள். கிர்கிஸ் (Kirghiz) தேசத்தவர் எப்படி தங்களுடைய ஆடுமாடுகளைப் புல்பூண்டுகளுள்ள இடத்திற்கு ஓட்டிச்செல்லுகிறார்களோ, அம்மாதிரியே, ஓஸ்டியக் தேசத்தவரும், தங்களுடைய மான்களை, சக்கரமில்லாவண்டிகளையிழுக்கச்செய்துகொண்டு மேய்ப்பிற்காகச் செல்லுகின்றார்கள்.

சுமார் 1000 வருட காலமாகத்தான் மனிதர்களுக்கும் அத்தேசத்துக் கலைமான்களுக்கும் இயற்கையான விசுவாசம் உண்டானதாக ஏற்படுகிறதனால், ஆடுமாடுகளைப்போல் அவ்வளவு பழக்கக்கூடியனவாகக் காணப்படவில்லையென்று இயற்கைப்பொருள்களின் அற்புதத்தையறிந்த நிபுணர்கள் கூறுகிறார்கள். பழக்கப்பட்ட ஒரு கலைமானானது, திடீரென்று தனது எஜமானனுக்குக் கீழ்ப்படியாமல், பழகாத காட்டுமிருகத் தன்மையையடைந்து தன்போக்கையே நாடிச் செல்லுகிறது.

இம்மிருகங்கள் அத்தேசத்து உஷ்ணகால ஆரம்பத்தில் கொசுக்களின் உபத்திரவமின்றி வாசஞ்செய்யக்கூடியவையும், குளிர்ந்த காற்றையும் இளம்புற்களையும் அடையக்கூடியவையுமான மலைப்பிரதேசங்களை நோக்கி, சக்கரமில்லா வண்டியையும் தங்கள் எஜமானனுடன் இழுத்துச்செல்லுகின்றன. ஆனால், இலையுதிர்காலத்திலோ, அவைகள் மலைப்பிரதேசங்களினின்றும் சமுத்திரக்கரையை நோக்கி இறங்க ஆரம்பிக்கின்றன. அவைகள் இறங்கும்பொழுது, வண்டியையும் யஜமானனுடன் இழுத்துக்கொண்டு, அவனிஷ்டப்படி கீழ்ப்படியாமல், பழக்கப்படாத காட்டுமிருகத்தையொப்ப, சமுத்திரக் கரையைப்போய்ச் சேரும்வரை ஒரேபிடிவாதத்துடன் செல்கின்றன.

ஆசியா கண்டத்தின் தென்பாகத்திலுள்ள அரேபியாவின் பாலை வனங்களைப் பார்ப்போமானால், முக்கியமாய் ஒட்டகங்களின் உபயோகமே மிகுதியாகக் காணப்படுகின்றது. இந்த ஒட்டகங்களில் இரண்டுவிதமுண்டு: ஒன்று ஒருதிமிலுள்ளது; மற்றொன்று இரண்டு திமில்களுள்ளது. வெகுகாலந் தொடங்கியே ஒருதிமிலுள்ள ஒட்டகமானது மனிதருடன் பழகிவருவதால், அதனிடம் யாதொரு மூர்க்ககுணமும் இப்பொழுது காணப்படவில்லை. இவைகள் யதேச்சையாய்க் காட்டில் திரிந்துகொண்டிருந்த காலத்தில், இவைகளின் குணங்களெம்மாதிரியிருந்திருக்குமென்பது இப்பொழுது பகருவது அசாத்தியம். இரண்டு திமில்களுள்ள ஒட்டகங்களானவை, மத்திய ஆசியாவின் மைதானங்களில் கூட்டங்கூட்டமாய்ச் சஞ்சரிக்கின்றன. இவைகள் ஒருதிமிலுள்ள ஒட்டகங்களைப்போல் அவ்வளவு சாந்தமானவைகளல்ல. ஆனால், இச்சாதி ஒட்டகங்களையும் மனிதர்கள் பிடித்துப்பழக்குகிறார்கள். அனேக நூற்றாண்டுகளின் மாறுதல்களில், ஒட்டகங்களானவை, அவைகள் வசிக்குந் தேசத்திற்குத் தக்கபடியும், வேலைக்குத் தக்கபடியும், பாலை வனங்களில் இன்றியமையாதவைகளாய்க் காண்கின்றன.

அவைகளின் பாதங்கள் அகன்று தட்டையாக இருக்கின்றன. ஆனால், அவைகளுக்குக் குளம்புகள் இல்லை. அவற்றிற்குப்பதிலாக, விரியக்கூடிய, மெத்தைபோன்ற சதையுள்ள, மேல்பக்கம் உரத்த தோலினால் மூடப்பட்ட உள்ளங்கால்களிருக்கின்றன. இவைகள் வெய்யிலினால் பற்றி எரிகின்ற மணற்தரைகளில் நடந்து செல்லினும், உஷ்ணம் இவைகளின் கால்களில் தாக்குவதில்லை.

இம்மாதிரியான பாதங்கள் ஒட்டகங்களுக்கு இருப்பதனாலேயே, அவைகள் பாரமான சுமைகளையுஞ் சுமந்துகொண்டு, கால் மணலில் புதையாமல், பாலை வனங்களிற் சுலபமாய்ச் செல்லுகின்றன. குளம்புகளுள்ள மற்றெந்த மிருகம் அம்மணலிற் செல்லினும் கால்புதையுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஒட்டகங்களின் மூக்கின் நுனியில் சிறிது சதைவளர்ந்து தொங்கும். அவைகள் பாலைவனங்களில் ஸஞ்சரிக்கும்போது மணற் காற்றடிக்கநேரிடுமானால், நாசித் துவாரங்களுள்



மணல்புகாமல் அப்போதைக்கப்போது மூடியும் திறந்தும் காக்கின்றன. ஒட்டகங்களின் திமிலைக் கொழுப்பு நிறைந்த ஒரு பண்டசாலைக்குச் சமமாகச் சொல்லலாம். பாலை வனங்களில் நினைத்தபொழுது ஆகாரங் கிடைப்பது கஷ்டம். இம்மிருகங்கள் தங்களுக்கு தீனியகப்படாத போது, தங்கள் திமில்களிலுள்ள ஆகாரத்தைக் கொஞ்சங்கொஞ்சமாய்த் தீனிப்பைக்கு ஏற்றுக்கொள்ளும். அப்பொழுது அத்திமில்கள் சிறுசிறுகக் குறைந்துவிடும். மறுபடியுந் தங்களுக்கு ஆகாரங் கிடைத்தபொழுது அத்திமில்களை நிரப்பிக்கொள்ளும். ஆகாரத்தைச் சேமித்து வைத்துக்கொள்ளும் பைகளைப்போலவே, ஜலம் நிரப்பி வைத்துக்கொள்ளும் பைகளுமுண்டு.

ஒட்டகங்கள் மனிதருடன் வெகுகாலந் தொடங்கிப் பழகினபோதிலும், யஜமானனிடம் நாய்களைப்போலாவது குதிரைகளைப்போலாவது பிரியமுடையவைகளாயிருப்பதில்லை. எஜமானனும் அவைகளின்மேல் அவ்வளவாகப் பிரியம் பாராட்டுவதில்லை. "அவலக்ஷணமுள்ள மிருகத்தைக்கண்டால் அருவருப்புச்சொல்வது சகஜம்" என்று ஒரு கவியும் எழுதியிருக்கிறார். சில சமயங்களில் எஜமானன் அவைகளைக்கொஞ்சம் குரூரமாய் நடத்தினால், உடனே அப்பழியை அவைகள் தீர்த்துக்கொள்வதாகச் சொல்லப்படுகிறது. அவைகளுக்கு ஒரு யானையைப்போலாவது குதிரையைப்போலாவது சாதுரியத்துடன் வேலைசெய்யப் புத்தி இல்லை. அவைகள் எச்சுமையையுஞ் சுமந்துசெல்லும். எப்பக்கமோட்டினும் போகும். சுமையைச் சுமந்து செல்லும்போது பக்கங்களிலுள்ள புல்பூண்டுகளை மேயும். போனவழியே புறப்பட்ட இடத்திற்குத் திரும்பிவர அவற்றிற்குத்தெரியாமல் முட்டாள்தனமாய் வழிதப்பி அலைந்துதிரியும்.

இரட்டைத்திமில்களுள்ள ஒட்டகங்கள் சீதளமான நாடுகளுக்குத் தகுந்தவைகளாயிருக்கின்றன. மலைப்பிரதேசங்களிலுள்ள நாடுகளில் இரட்டைத் திமில்களுள்ள ஒட்டகங்களே மிகுதியான பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கின்றன.

தென் அமெரிக்காவின் மலைப்பிரதேசங்களில் சில ஒட்டகங்களுண்டு. அவைகளை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். ஒரு வகைக்கு அல்பாகா வென்றும், மற்றொன்றிற்கு லாமா வென்றும் பெயர். அவைகளின் பாலையும் மாமிசத்தையும் ஜனங்கள் உபயோகிக்கிறார்கள்; அல்பாகா இனத்தைச்சேர்ந்தவைகளை அவைகளின் நீண்ட சிறந்த உரோமத்திற்காகவும், லாமா இனத்தைச் சேர்ந்தவைகளை மூட்டைகள் சுமந்து செல்வதற்காகவுமே விசேஷமாக உபயோகிக்கிறார்கள். அவைகள் மிகவும் மந்தமான பிராணிகள். ஆகையால், பாரத்தையேற்றிய ஒரு மந்தை யொட்டகங்களையும் ஒரே மனிதன் வியாபார நிமித்தம் சுலபமாய் நடத்திச் செல்லலாம். அவைகள் மனிதர்களுடைய பாதுகாப்பை அதிகமாக விரும்புவதில்லை. அவைகள் பிரயாணப்பட்டுப் போகும்பொழுதே, தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை வழியில் தாங்களே தேடிக்கொள்ளுகின்றன. அம்மலைப் பிரதேசங்களில் இவ்வொட்டகங்களே மிகுதியாக உபயோகப்படுவதால், ஒவ்வொரு வியாபாரியும் ஒவ்வொரு ஒட்டக மந்தையை வைத்திருக்கிறான்.

மற்றும், ஆசியா கண்டத்தில் திபெத்து போன்ற மலையடர்ந்த நாடுகளிலுள்ள ஜனங்களுக்கு உபயோகப்படுகிற மிருகம் ஒன்றுண்டு. இம்மிருகத்திற்கு 'யாக்' என்று பெயர். அத்தேசத்தவர் இம்மிருகத்தையே தங்களின் முக்கியத் தொழில்களுக்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறார்கள். மம்மேலியா இனங்களில் மிகுந்த பலமுள்ளவையும், சடைபற்றியவையுமானவற்றில் இதுவுமொன்று. இவைகளின் இயற்கையாயுள்ள வாசஸ்தானமானது சமுத்திர மட்டத்திற்கு சுமார் 6000 அடி உயரத்தில் உள்ள தேசமாம். இம்மிருகங்களுக்குக் கற்பாறை மிகுந்த மலைப்பிரதேசங்களிலும் பனி மிகுந்த சாரல்களினூடேயும் சுமைகளைச் சுமந்து செல்ல விருப்பமதிகம்.

அத்தேசங்களில் இம்மிருகங்களுக்கு வேண்டியவுணவு ஏராளமாயிருப்பதாலும், சுலபத்தில் கிடைப்பதாலும், அவைகளை [illegible]

வேண்டிய ஆகாரத்தைக் குடிகளினின்றும் எதிர்பாராமல் தேடிக்கொள்ளுகின்றன. ஆகையினாலேயே, அத்தேசத்தில் மிகுந்த ஏழைகளிடங்கூட இம்மிருகங்கள் ஏராளமாய்க் காணப்படுகின்றன. இவைகளின் பால் குடிப்பதற்கும், மிருதுவாயும் உருசியாயுமுள்ள மாமிசம் ஆகாரமாகக் கொள்வதற்கும், சரீரத்திலுள்ள நீண்ட மயிர் முரட்டு வஸ்திரங்கள் நெய்வதற்கும் உபயோகப்படுகின்றன. வடசைனாவிற்கும் திபெத்திற்குமுள்ள வியாபாரம் யாவையும் இவ்யாக்கென்னும் மிருகங்களின் மூலமாயே நடந்தேறிவருகின்றன. ஆனதுபற்றியே, இம்மிருகங்கள் அத்தேசத்தவர்க்கு மிகவும் இன்றியமையாதவையாய்க் காணப்படுகின்றன. இவைகள் பழக்கப்படாத புது மனிதர்களிடத்தும் சாந்தமாயும் அமைதியாயுமிருக்கின்றன.

நமது வாழ்நாட்களில் நம்முடன் பழகிவரும் பிராணிகளைக் கணக்கெடுப்பின் அளவிறந்து மிஞ்சும். நாம் நம்முடன் பழகிவரும் பிராணிகளைக் கொண்டு நமக்குவேண்டிய உணவுகளைத் தேடிக்கொள்ளுகிறோம்; அல்லது, அப்பிராணிகளையே சிற்சில சமயங்களில் வதைத்து ஆகாரமாக உபயோகித்துக்கொள்ளுகிறோம்.

இம்மாதிரி மனிதர்களுக்கு ஊத்தாசை செய்யக்கூடியவை முதுகெலும்பில்லாத பிராணிகளிலும் காணப்படுகின்றன. அவைகளில் முக்கியமானவை தேனீயும், பட்டுப்பூச்சியுமே. அவைகளில் முதலிற்சொல்லிய தேனீயை விருத்திசெய்து நமது தேசத்தவர்கள் அதிகமான ஊதியம்பெற முயலவில்லை. ஆனால், மேல்நாடுகளில் இதைக் கையாண்டு வருகிறார்கள். இரண்டாவது சொல்லிய பட்டுப்பூச்சிகள் சீதோஷ்ணஞ் சமமாய் உள்ள நாடுகளிலேயே மிகுதியாகக் காணப்படுகின்றன; ஏனெனில், இப்பூச்சிகள் ஆகாரமாகக் கொள்ளும் மரங்களானவை, சீததேசங்களிலாவது உஷ்ணதேசங்களிலாவது விசேஷமாக வளராமல், கொஞ்சம் ஏறக்குறைய ஸமசீதோஷ்ணமாயுள்ள இடங்களிலேயே மிகுதியாக வளருவதனால், அவ்விடங்களிலேயே இப்பூச்சிகள் ஏராளமாய்க் காணப்படுகின்றன. உலகத்தில் வழங்கிவரும் பட்டுயாவும் இந்தச்சிறு பிராணிகளாலானவையே.

மனிதர்களிடம் இப்பட்டுப்பூச்சிகளின் சேர்க்கையானது, அவைகளுக்கு முற்றும் நாசத்தையே உண்டுபண்ணுகிறது. அவைகள் புழுவாயிருக்கும்பொழுது தங்களைத்தாங்களே காத்துக்கொள்ளும் நிலைமை வரும்வரையில் மனிதருடைய உதவியையே எதிர்பார்க்கின்றன. உதாரணமாக: இப்புழுக்கள் தங்களின் ஆகாரமாகிய இலைகளினின்றுந்தவறிக் கீழே விழுந்துவிட்டால், மற்ற புழுக்களைப்போல் மறுபடியும் நகர்ந்துகொண்டு அடிமரத்தில் ஏறிக்கொள்ள முயற்சி செய்வதில்லை. அப்படி தவறி விழுந்தவை அவ்விடத்திற்றானே சாகவேண்டியதொழிய வேறில்லை. ஆனால், அப்படிப்பட்டவைகளை அவைகளைப் பாதுகாப்போர் எடுத்துவிட்டும், அத்தன்மையில் சத்துருக்களினின்று காப்பாற்றியும் வருகிறார்கள். ஜனங்கள் பட்டுப்பூச்சிகளின் கூடுகளைப் பூச்சிகள் உள்ளிருக்கும்பொழுதே அவற்றைச் சாகச்செய்து பட்டெடுக்கிறார்கள். இப்படிசெய்தும் அப்பட்டுப்பூச்சிகள் ஏராளமான முட்டைகளிட்டுக் குஞ்சு பொரிப்பதனால் முழுதும் நசித்துப்போவதில்லை.

நாம் பேசின அல்லது நம்முடன் பழக்கப்பட்ட மிருகங்கள் யாவும் மனிதருடன் வெகுகாலந் தொடங்கியே பழகிவருகின்றன. இப்பொழுதோ, புது மிருகங்களைப் பழக்கப்படுத்துந் தொழிலானது முற்றும் க்ஷீணதசையை அடைந்திருக்கிறது; ஏனெனில், கொஞ்சகாலமாகப் பழக்கப்பட்டுவரும் நீர்ப்பறவையைத் தவிர வேறெந்தப் புதிய பிராணியும் பழக்கப்பட்ட பிராணிகளின் கணக்கில் சேர்க்கப்படவில்லை. ஆனால், ஒரு தேசத்தில் பழகியிருக்கின்ற பிராணியை மற்றொரு தேசத்திற்கொண்டு பழக்கி விருத்தி செய்கிறார்கள். உதாரணமாக: ஆசியா கண்டத்தில் வெகுகாலந் தொடங்கியே வியாபாரம் நடந்துவரும் நீண்ட வெளுத்த உரோமத்தையுடைய அங்கோரா ஆடுகளை, கேப்காலனி யென்று சொல்லப்பட்ட நாடுகளிற் கொண்டுபோய் விருத்தி செய்திருக்கிறார்கள்.



அவைகளின் ரோமங்களும் அவ்விடத்தில் சிறந்தவையாகவே காணப்படுகின்றன. பேர்பெற்ற இங்கிலீஷ் இயற்கை சாஸ்திரியான சார்லஸ் டார்வின் என்று சொல்லப்பட்டதுரையானவர் அதற்குமுன் இயற்கைப் பொருள்களின் அற்புதத்தை வெளியிட்டவர்களைக் காட்டிலும் தெளிவாக வெளியிடுபவர். அவர், பிராணிகள் பிறப்புத்தோறும் காலத்திற்கும் சீதோஷ்ணத்திற்கும் ஏற்றவாறு அவைகளின் இயற்கைக் குணமும் மாறிக்கொண்டே வருகிறது என வெளியிட்டிருக்கிறார்.

நா[illegible]சாரியார்.

161441

---

## Agriculture.

BY PANDIT M. M. NARAYANASAMY IYER.

## விவசாயம்.

கடலாடையுடுத்த இந்நிலவுலகில் மனிதர்கள் யாவரும் ஏதாவதொரு தொழிலைச் செய்தே தீரவேண்டும். "எந்தப்பிராணியும் எப்பொழுதும் ஏதேனும் தொழில்செய்துகொண்டேயிருக்கும்" என்று சாஸ்திரமும் கூறுகின்றது. தொழிலில்லாமல் ஜீவனஞ்செய்யமுடியாது. எவரைப்பார்த்தாலும் அவரவர் தத்தம் சக்திக்கியன்ற ஒரு தொழிலைச் செய்துவருவதை நாம் பார்க்கின்றோம். தொழிலில்லாதவன் சோம்பேறியென்று இகழப்படுகின்றான். ஆதலின், யாவரும் ஏதேனும் தொழில் செய்வது அவசியம். பலவகைப்பட்ட தொழில்களில் சிறந்தது யாதென்று ஆராய்வோம்.

நாம் இகலோகசுகம், பரலோகசுகம் முதலியவற்றை அடைவதற்கு முறையே, விவசாயம், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம் முதலியனவும், ஆலயந்தொழுவது, சாஸ்திரவிசாரஞ்செய்வது, அதிற்கூறியபடி ஒழுகுதல் முதலியனவும் சாதனங்களாயிருக்கின்றன. இகலோகத்தில் ஒழுங்காக வாழத்தெரியாதார்க்கு யாதொரு நன்மையுமுண்டாவதில்லையாதலின், நாம் இகலோகத்திற்குரிய சாதனங்களுள் முக்கியமானவற்றை மேற்கொண்டொழுகவேண்டும். இகலோக சாதனங்களில் விவசாயமே முக்கியமாயிருக்கின்றது. விவசாயம் ஒழுங்காக நடைபெறாவிடில், வியாபாரம், கைத்தொழில், உத்தியோகம், முதலியவை நடைபெறுவது எவ்வாற்றானும் இயலாது. இது மனிதர்களுடைய அபிவிருத்திக்கும், நாகரிகத்திற்கும் காரணமாயிருப்பதன்றியும், மானிடர்கள் உலகில் உயிருடனிருப்பதற்கும், அவர்களுடைய வாழ்விற்கு இன்றியமையாத மனைவி, மக்கள், புதல்வர் முதலிய குடும்பத்தாரோடு கூடிவாழ்வதற்கும், பலவிதமான தர்மங்களைச்செய்து உயர்பதவியை அடைவதற்கும், ஆரோக்கிய திடகாத்திரமாயிருப்பதற்கும், கவலைகளையொழித்து மனோல்லாசமாகக் காலங்கழிப்பதற்கும் முக்கியமான சாதனமாயிருக்கிறது.

நாம் பசியென்னும் பிணியைத் தீர்த்துக்கொள்ளாத பக்ஷத்தில், நம்மிடம் மானம், குடிப்பிறப்பு, கல்வி, ஈகை, பகுத்தறிவு, தானம், தவம், மேன்மை, முயற்சி, சிற்றின்பப் பிரியம் ஆகிய பத்தும், கதிரவனைக் கண்ட காரிருள் போலத் தொலைந்துபோம். இதுபற்றியே,

"மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை,
தானந்தவமுயர்ச்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்துபோம்."

என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். இத்தகைய பசிப்பிணியை உணவினாலன்றி மற்றெதனாலும் ஒழித்தல் இயலாது. அத்தகைய உணவைப் பெறுதற்குச் சிறந்த சாதனம் விவசாயமே. ஆதலின், அதனை நாம் எவ்விதத்திலும் கைப்பற்றி ஒழுகவேண்டும். உணவில்லாமையால் இரத்தம் குறைகின்றது; உதிரம் குறைவதனால் நடமாடுவதற்கும், பேசுவதற்கும், கேட்-

பதற்கும், மற்றும் எவ்விதமான காரியங்களைச் செய்வதற்கும் இயலாது. அத்தகைய உணவும் விவசாயத்தினாலேயே கிடைக்கின்றது.

> பொருளிலார்க்கின்பமில்லை; புண்ணியமில்லை; என்றும்
> மருவியகீர்த்தியில்லை; மைந்தரிற் பெருமையில்லை;
> கருதிய கருமமில்லை; கதிபெறவழியுமில்லை;
> பெருநிலத்தினிற் சஞ்சாரப் பிரேதமாய்த்திரிகுவரே."

என்று பெரியோர் சிறப்பித்துக் கூறியதும், யாவற்றிற்கும் மூலகாரணமாயுள்ளதுமான பொருளைப் பெறுதற்கும் இது சாதனமாயிருக்கின்றது.

"கலப்பைகளைக் கட்டி, நுகத்தடிகளை நகரச் செய்து, உழுத நிலத்தில் விதைகளை விதைக்க, நமது கீதங்களின் பலத்தால் கதிர்கள் விளையும்; அப்பால், குவிந்திருக்கும் கதிர்களை அரிவாளால் அறுப்பீர்களாக" என்று வேதமும் கூறுகின்றது.

உழுது பயிர்செய்வது ஆரம்பத்தில் சிறிது வருத்தமாயிருந்தாலும், அதைவிடச் சிறந்த தொழில் வேறில்லை. விவசாயம் செய்பவர்கள் தாம் கிருஷி செய்வதனால், பிழைக்க வழிதெரியாமல் அலைந்து திரிகின்றவர்களை ஆதரிக்கின்றனர். ஆதலால், அவர்கள் உலகத்தாராகிய தேருக்கு அச்சாணியைப்போலிருக்கின்றனர். பயிர்செய்து ஜீவனஞ் செய்கின்றவரே சுதந்திர ஜீவிகளாவார். மற்றவர்கள் பிறர்பின் சென்று கெஞ்சிப் பிழைப்பாராவார். தேசாபிமானமுடைய விவசாயிகள் மற்ற ராஜ்யங்களையும் தமது அரசாடிக்குக் கொண்டுவரும் சக்தியையுடையவர். உழவர்கள் தமது தொழிலாகிய கிருஷியைச்செய்யாது நிறுத்திவிடுவார்களாயின் வியாபாரிகள், தொழிலாளிகள், உத்தியோகஞ் செய்பவர்கள், துறவிகள் முதலியோரின் கதி மிகவும் கஷ்டத்துக்குள்ளாகிவிடும். அதனால், அவர்கள் இம்மைப்பயனையும் மறுமைப்பயனையும் பெறாது நொந்து தவிக்கும்படி நேரிடும்.

மேன்மையையடைய விரும்புவோர் எவ்விதத்திலும் பயிரிடுந்தொழிலையே மேற்கொள்ளவேண்டும். பிறரிடம் சேவித்து ஜீவனஞ் செய்வதைக் காட்டிலும் உழுது பயிர்செய்து ஜீவிப்பது மேலானதாம். இவ்வுலகத்தில் பல சிறந்த வாழ்வுகளுக்கும் ஒருசமயம் நஷ்டமுண்டாகக்கூடும். ஆனால், உழுது பயிரிடும் வாழ்வுக்கு நஷ்டமுண்டாகமாட்டா தென்பதைப்பற்றி, ஔவையார்,

> "ஆற்றங்கரையின் மரமும் அரசறிய
> வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்ற
> முழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு."

என்று கூறியுள்ளார்.

கல்வியிற் பெரிய கம்பர்,

> "பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
> ஏர்வேந்தர் பெருஞ்செல்வ மழிவுபடா திருத்தலினால்
> தேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர் வெல்வர் சிலர் தோற்பர்
> ஏர்வேந்தர் போர்க்களத்துளிரப்பவருந் தோலாரே." என்றும்,

> "வளம்பாடும் குடைமன்னர் மதயானை படப் பெருக
> களம்பாடும் பெருஞ்செல்வங் காவிரியிற் சிறந்த தன்று,
> தளம்பாடும் தாரகலத் தாடாளர்தம் முடைய
> களம்பாடும் பெருஞ்செல்வம் காவிரியிற் சிறந்ததே."

என்று விவசாயத்தை வியந்து கூறியுள்ளார்.

இந்தியாதேசம் ஆதிமுதலே விவசாயத்தொழிலில் சிறந்ததென்று கூறப்படுகின்றது. இத்தேசத்திற்கு 'ஆர்யாவர்த்தம்' என்று பெயர் ஏற்பட்டிருப்பதே இதன் உண்மைக்கு அத்தாட்சியாகும். மன்னவர்களும் விவசாயத்தைப் பெரிதும் பாராட்டியிருக்கின்றனர்.

அழகிற்சிறந்த சீனதேசத்துச் சக்கரவர்த்தியார், தம் தேசத்தில் பிரதி வருஷமும் பருவகாலத்தில் பொன் கலப்பைகொண்டு முதலில் தாமே பூமியை உழுவாராம். பிறகு, மந்திரி, பிரதானி முதலிய உத்தியோகஸ்தர்களும் உழுவார்களாம். பிறகு, சாதாரணக்குடிகளும் உழுது பயிரிடல் வழக்கமாம்.



ஆதியில் மநுஷ்ய ஜாதியார் சீர்திருத்தமடைவதற்கு முன்பு தம் வயிற்றை வளர்ப்பதற்காக வேட்டையாடி வந்ததில், நிரந்தரமான உணவு அகப்படாமல் பசியினால் வருந்திக் கஷ்டப்பட்டு இயற்கையால் அறிந்துகொண்ட தொழில் விவசாயமேயாம். பகுப்பிரகிருதிகளான பிரஜைகளை மனுஷ்யத்தன்மைக்கு மாற்றிய சாதனமும், ஸகல பிராணிகளுக்கும் ஜீவாதாரமாயிருப்பதும், மானிடர்களுக்கு இன்றியமையாத ஸகல சாதனங்களையும் கொடுப்பதும், எக்காலத்திலும் எந்நாட்டாரையும் இதில் புத்தியைச் செலுத்தச்செய்வதும், வேளாண்மையே. இதில் கோடிக்கணக்கான ஜனங்கள் உல்லாசமாக உழைத்து வருகின்றனர்.

ஐரோப்பாவைச்சேர்ந்த பிராஞ்சு, ஹங்கேரி, இடாலி, ஜெர்மனி, பிரத்தானியா, ஸ்பெயின், பல்கேரியா, ரொமேனியா, ஆஸ்திரியா, ருஷ்யா, தேசத்தார்களும், அமெரிக்கா கண்டத்தைச் சேர்ந்த பல தேசத்தவர்களும் தற்காலம் விவசாய வித்தையைப் பிரத்தியக்ஷசாஸ்திரோக்தமாகக் கற்றுக்கொண்டு, அவ்வாறே செய்து வருவதால், மிகுந்த சம்பத்தை அடைந்து இன்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

நாம் ஏராளமாகச் செல்வமடைந்தவர்களாயிருப்பினும், புகழ்பெற்றவர்களாயிருப்பினும், நமக்கும் பூமிக்கும் உள்ள சம்பந்தத்தைச் சிறிதும் குறைத்துக்கொள்ள முடியாது. நமது சரீரமே பார்த்திவாம்சம் மிகுந்துள்ளது. அன்றியும், நமக்கு அத்தியவசியமாகவேண்டிய உணவு உடை, மரங்கள், உலோகங்கள், சோளமை, உளுந்து, துவரை, எள்ளு, கடுகு, மிளகு முதலிய நவதானியங்களும், மருந்துகள் முதலியனவும் பூமியிலிருந்தே கிடைக்கின்றன. ஆதலால், ஓர்தேசம் முன்னேற்றமடைவதற்குக் காரணம் நிலவளமேயாம்.

இவ்விவசாயத்தைப்பற்றி வழங்கும் பழமொழிகள் பின்வருமாறு:—

1. அழியாச் செல்வம் விளைவேயாகும்.
2. அழிவேயழியினு முழவேயுழு.
3. உழுவா னுலகுக்குயிர்.
4. உழவின் மிகுந்த ஊதியமில்லை.
5. எரையிகழ்ந்தார் பேரையிழந்தார்.
6. ஏர்நடந்தால் போர்நடக்கும்.
7. ஓதுவாரெல்லாரும் உழுவார்தம்தலைக் கடையில்.
8. குடிஉற நெல்உயரும்.
9. குடிஉயர முடி உயரும்.
10. குடித்தனமே துரைத்தனம்.
11. குடியானவனே முடியானவனும்.
12. குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்.
13. பயிரையிட்டுப் பாவத்தைத் தொலை.

கிருஷிகர்கள் நிலத்தை ஆழமாக உழுதல், வயலிலுள்ள மேடுபள்ளங்களைச் சீர்திருத்துதல், நல்ல விதைகளைச் சேகரித்தல், நிலத்துக்குத் தக்கபடி எருவிடல், தக்ககாலத்தில் நீர்பாய்ச்சுதல், களைபிடுங்கல், பிரதிதினமும் சுற்றிப்பார்த்தல், மாடு முதலியன மேயாவாறு காத்தல் என்பவற்றை மேற்கொண்டு ஒழுகவேண்டும். நாம் பயிர்த்தொழிலை விருத்திசெய்து வருவோமாயின், பெரும்பான்மையும் வறுமைப்பிணி நம்மைப்பீடிக்காது. கிருஷிசெய்கின்றவர்கள் நன்மையென்று சொல்லப்படுவனவனைத்தும் பெறுவர். இத்தகைய சிறப்பு வாய்ந்த பயிர்த்தொழிலைச் செய்யா தொழிவதினும் பேதைமை வேறில்லை. ஆதலின், நாம் கிருஷிசாஸ்திரத்தின் தத்துவங்களைக் கசடறக்கற்று, நமதுதேசத்தில் விவசாயம் இன்னும் மேன்மையடையுமாறு முயற்சிசெய்வது நமது கடமையேயாகும்.

எம். எம். நாராயணசாமி அய்யர்.

---

சுதேசமித்திரன்:—எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டுவரும் இப்பத்திரிகையில், தக்கவர்கள் விஷயங்கள் எழுதிவருகிறார்கள். * * விஷயங்கள் தற்கால ஜனங்களுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கின்றன. கல்வி, வியவசாயம், வியாபாரம், கைத்தொழில் முதலிய விஷயங்களைப்பற்றியே எழுதப்பட்டுவரும் இப்பத்திரிகை இன்னும் அருமையான விஷயங்களைத் தாங்கிவருமென்பதற்குள்ள அறிகுறிகள் காணப்படுகின்றன.

## Economic Position of Mysore.
## மைசூரின் பொருளாதார நிலைமை.

மைசூர் ராஜ்யமானது பலவிஷயங்களிலும் இதரநாடுகளைவிடத் தாழ்ந்தநிலைமையிலுள்ளது. நாளுக்குநாள் ஜனங்களும் தங்கள் நிலைமையை உணர்ந்து கல்வியிலும் மற்றும் இதரவழிகளிலும் முற்போக்கடைய யத்தனித்து வருகிறார்கள். மைசூர் இராச்சியத்தின் பொருளாதார நிலைமை மற்றநாடுகளைக்காட்டிலும் எவ்வாறு உள்ளதென்பது கீழே குறிக்கப்பட்டிருக்கின்றது.

. மைசூர் இராஜ்யத்தில் 100-க்கு 11·3 பேர்கள் பட்டணங்களில் வசித்துவருகிறார்கள். ஆனால், இங்கிலாந்து, வேல்ஸ் முதலான இடங்களில் 100-க்கு 78 பேர்களும், ஸ்காட்லண்டில் 69·8 பேர்களும், ஐர்லண்டில் 100-க்கு 31 பேர்களும் பட்டணங்களில் வசித்து வருகிறார்கள்.

மற்ற நாடுகளைக்காட்டிலும் மைசூர் இராஜ்யத்தில் ஜனங்களுக்கு ஆயுள் குறைவாயும், இறப்பு அதிகமாயும் இருக்கின்றது. இங்குப் பிரதி 1000 பேர்களுக்கும் 37 பேர்கள் இறந்துவிடுகிறார்கள். ஆனால், ஐரோப்பிய நாடுகளில் இவ்வெண்ணிக்கை 14 லிருந்து 24 க்கு அதிகமில்லை. மைசூர் இராஜ்யத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சராசரி ஆயுள் 25 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆனால், ஐரோப்பிய நாடுகளிலோ, சராசரி ஒவ்வொருவருக்கும் ஆயுள் 45 முதல் 55 வரை என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

இந்த இராஜ்யத்தில் ஒவ்வொரு 16 பேர்களுக்கும் ஒருவன்தான் எழுதப்படிக்கத் தெரிந்துள்ளவனாயிருக்கின்றான். ஆண்மக்களில் ஒவ்வொரு 9 பேர்களுக்கும் ஒருவனும், பெண்மக்களில் பிரதி 77 பேர்களுக்கும் ஒருத்தியும் படிப்புள்ளவர்களாயிருக்கின்றார்கள். அதாவது: மொத்த ஜனத்தொகையில் 100 க்கு 6 என்று கணக்கிடலாம். இதை இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கின், ஆஸ்ட்ரேலியாவிலும் கனடாவிலும் படிப்புள்ளவர்கள் 100க்கு 80 முதல் 90 வரை என்றும், ஜெர்மனியிலும் யுனைடெட் கிங்டத்திலும் 90 என்றும், ஜப்பானில் 80 என்றும், மைசூர் இராஜ்யத்திலுள்ள படிப்பாளிகளின் எண்ணிக்கையானது இதரநாடுகளைக் காட்டிலும் பலமடங்கு குறைவு என்றும் விளங்குகின்றது. இங்கு மொத்த ஜனத்தொகையில் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் நூற்றுக்கு இரண்டேயாம். கனடாவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் முறையே 100-க்கு 8·6 ம் 14·7 ம் இருக்கின்றன. மைசூர் இராஜ்யம் முழுவதுக்கும் ஒரே யூனிவர்ஸிடிதான் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய இதே ஜனத்தொகையுள்ள யுனைடெட் கிங்டத்தில் 20-ம், 45 மிலியன் ஜனத்தொகையுள்ள கனடாவில் 20 யூனிவர்ஸிடிகளும், 65 மிலியன் ஜனத்தொகையுள்ள ஜெர்மெனியில் 20-ம், ஆஸ்ட்ரேலியாவில் 6 ம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மைசூர் முழுவதிலும் வர்த்தமானப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஆக 47 தான் உள்ளன. இதர நாடுகளிலோ, ஆஸ்ட்ரேலியாவில் 1200ம், இங்கிலாந்தில் 3000 ம், யுனைடெட் ஸ்டேட்ஸில் இதைவிட இரண்டு மடங்கும் உள்ளன.

அடியிற்கண்ட தேசங்களில் சராசரி ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள ஆஸ்தியின் மதிப்பு விவரம் வருமாறு:—

| | |
|---|---|
| யுனைடெட் கிங்டம் | 6000 |
| பிரான்ஸ் | 3875 |
| இட்டலி | 1486 |
| கனடா | 4140 |
| ஆஸ்ட்ரேலியா. | 3960 |
| ஜப்பான் | 1087 |
| மைசூர் | 264 |

மைசூர் இராஜ்யத்தில் ஒவ்வொருவனும் சராசரி வருஷம் 1-க்கு ரூ. 30 சம்பாதிக்கின்றான். கனடாவிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் ஒவ்வொருவனும் சராசரி வருஷம் 1-க்கு ரூ. 400 முதல் 700 வரை சம்பாதிக்கிறான். இங்கிலாந்தில் பிரதி மனிதனும் சராசரி வருஷம் 1-க்கு ரூ. 600 முதல் 700 வரை சம்பாதிக்கின்றான்.



அமெரிக்கா ஐக்யமாகாணத்தில் சராசரி ஒவ்வொருவனுக்கும் கல்விக்காகச் செலவழிக்கப்படும் தொகையானது ரூ. 14. மைசூர் இராஜ்யத்திலோ, ஒவ்வொருவனுக்கும் சராசரி செலவழிக்கப்படும் தொகை அணா 6-க்கும் குறைவாகவே இருக்கின்றது.

கீழே குறிக்கப்படும் தேசங்களில் மொத்த ஜனத்தொகையில் ஒவ்வொருவருக்கும் சராசரி வியவசாயத்திலிருந்து எவ்வளவு வரும்படி என்பதைக் குறிப்பிடுவோம்:—

| | | |
|---|---|---|
| கனடா | ரூ. | 342 |
| ஆஸ்ட்ரேலியா | ,, | 372 |
| மைசூர் | ,, | 24 |

இங்கிலாந்து, ஸ்காட்லாண்ட், ஐயர்லண்ட், வேல்ஸ் ஆகிய இந்நான்கும் சேர்ந்த யுனைடெட் கிங்டத்தில் கைத்தொழில் செய்யப்பட்ட பண்டங்களின் மொத்த மதிப்புத்தொகையில் சராசரி ஜனங்களில் ஒவ்வொருவருக்கும் ரூ. 326 என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. அதாவது: மைசூர் இராச்சியத்தில் தொழில் செய்யப்படும் பண்டங்களின் மதிப்பைவிட 30 மடங்கு அதிகம்.

மைசூரில் பிரதிவருஷமும் வியவசாய அபிவிருத்திக்காக ரூ. $1\frac{1}{2}$ லட்சம்வரை செலவழிக்கப்படுகின்றது. ஏறக்குறைய இதே ஜனத்தொகையையுடைய கனடாவிலும், 1909-10 ம் வருஷத்தில் வியவசாய அபிவிருத்திக்காகவும், வியவசாயிகளின் நிலைமையை உயர்த்துவதற்காகவும் ரூ 30 லட்சம் செலவிடப்பட்டிருக்கின்றது.

கீழே குறிக்கப்படும் அட்டவணையில் பிரதி 10,000 பேர்களுக்கும் எத்தனை பேர்கள் பற்பல தொழில்களைச்செய்து ஜீவிக்கிறார்களென்பது குறிக்கப்பட்டிருக்கின்றது.

| | |
|---|---|
| கைத்தொழில் | 764 |
| நெய்தற்றொழில் | 175 |
| வியாபாரம் | 406 |
| இதரத் தொழில் | 53 |

மேலே குறிப்பிட்டுள்ளபடி மைசூர் இராச்சியத்தின் பொருளாதார நிலைமை மற்ற நாடுகளைக்காட்டிலும் தாழ்ந்த நிலைமையில் இருப்பதனால், ஜனங்களும் இராஜாங்கத்தாரும் ஒத்துழைத்துத் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்ளவேண்டுவது அவசியமாகும்.

---

## Feeding of Children.
## குழந்தைகளைப் போஷிப்பது.

குழந்தைகள் சிறுவயதிலேயே பலவிதநோய்களுக்கு உள்ளாவதன் காரணம், அவைகள் சரிவரப் போஷிக்கப்படாமையேயாம். குழந்தைகளின் ஜீரணசக்தியில் பல கோளாறுகள் ஏற்படுவதனால், அவைகள் வெகுசீக்கிரத்திலேயே இறந்துவிடுகின்றன.

மிகவும் பலஹீனமுள்ள குழந்தைகள் முறையே போஷிக்கப்படுவதனால், காலக்கிரமத்தில் தேஹாரோக்கியத்தை அடைந்து, மிகுந்த சந்தோஷத்துடன் ஜீவித்திருக்கின்றன. குழந்தைகளுக்கு வேண்டியவளவு ஆகாரத்தைக் கொடுக்கத் தாய்மார்கள் தயாராயிருந்தாலும், அவைகளுக்கு ஜீர்ணமாகக் கூடியது எது என்று தெரிந்துகொள்வது முதன்மையான காரியமாகும்.

குழந்தைகளுக்கு அடிக்கடி பலவஸ்துக்களைத் தின்னக்கொடுப்பது மிகவும் கொடிய வழக்கம். அதனால், பல கேடுகள் சம்பவிக்கின்றன. குழந்தைகளைப் போஷிக்கும் விஷயத்தில் ஒருமுறையை அநுசரிக்கவேண்டும். அப்படி அடிக்கடி

ஆகாரம்கொடுக்கும்படி நேரிட்டால், குழந்தையின் தேகாரோக்கிய நிலைமையைக் கவனித்து, அதற்குத் தகுந்தபடி செய்யவேண்டும்.

சில குழந்தைகள் பசியினால் அழுகின்றன; சில, தாய்மார்களின் அறியாமையால் அதிகமான ஆகாரம் ஊட்டப்பட்டு, அதனாலுண்டாகும் நோய்கொண்டு வலியின் மிகுதியால் அழுகின்றன. ஆகலால், எப்போதும், குழந்தைகளுக்கு எவ்வளவு ஜீர்ணிக்கமுடியுமோ அவ்வளவு ஆகாரமே கொடுப்பது அவைகளுக்கு நன்மையை விளைவிக்கும்.

குழந்தைகளுக்கு மிகவும் சிறந்த ஆகாரம் அவற்றின் தாய்ப்பாலேயாம்; அவைகளுக்குப் பத்துமாதகாலம்வரையிலும் அடிக்கடி பாலூட்டி வருவது உத்தமம். நல்ல திடகாத்திரமுள்ள குழந்தைகளுக்குத் தினமொன்றுக்கு ஐந்துதடவைக்குமேல் ஆகாரம்வேண்டியதில்லை. அதாவது: முதல் இரண்டுமாதங்கள் தவிர்த்து, பிறகு பகலில் நாலுதடவையும், இரவில் ஒருதடவையும் பாலூட்டவேண்டும். குழந்தைக்கு ஒருவயதாகுங்கடையில், பகலில் மூன்றுதடவை மாத்திரம் ஆகாரம்கொடுத்து இராத்திரி காலங்களில் தூங்கும்படி செய்யவேண்டும்.

நல்ல தேகாரோக்கியமுள்ள குழந்தைகளைக் காட்டிலும் பலஹீனமுள்ள குழந்தைகளுக்கு அடிக்கடி ஆகாரம் கொடுக்கவேண்டும்.

குழந்தைகளை எப்போதும் தாயினிடத்தில் பாலுண்டவண்ணமாகவே தூங்கும்படி விடக்கூடாது. சில தாய்மார்கள் அழுகிற குழந்தைகளைச் சமாதானப்படுத்த, அவற்றினிடம் சர்க்கரைப்பண்டங்களைக் கொடுத்துவிடுகிறார்கள்.

இதனால், அவைகள் பலகஷ்டங்களுக்குள்ளாகின்றனவென்பதைக் கவனிக்கவேண்டும். சுத்தமான தண்ணீரே குழந்தைகளுக்கு உத்தமமான பானமாகும்.

குழந்தைகளுக்குப் போதுமான பால் தாயினிடத்தில் கிடைக்காவிடில், அதற்குப்பதிலாகப் பசுவின்பாலை உபயோகிப்பது நல்லது. பசுவின் பாலில் கொஞ்சம் சுத்த ஜலம் கலந்து காய்ச்சி, பிறகு குழந்தைகளுக்குப் புகட்டவேண்டும். குழந்தைகளுக்குப் பால்புகட்ட உபயோகிக்கப்படும் 'நிப்பில்ஸ்' முதலியவற்றில் விஷக்கிருமிகள் தங்கக்கூடுமாதலால், அவைகளைக்கொண்டு பால்புகட்டாமல், ஸ்பூன்களைக்கொண்டே பால்புகட்ட வழக்கஞ்செய்வது நல்லது.

குழந்தைகளுக்குப் பால் மறக்கடிப்பதைப் பத்துமாதங்களுக்குப் பிறகுதான் செய்யவேண்டும். இதற்குப்பதிலாக வேறு ஆகாரத்தை காலக்கிரமத்தில் கொடுத்துப்பழக்கம்செய்யவேண்டும். அவைகளுக்குப் பன்னிரண்டுமாதங்கள் ஆனவுடன், பால்கொடுப்பதையே நிறுத்திவிடலாம். குழந்தைகளுக்கு வேறு ஆகாரம் கொடுக்கும் வகையில், அவற்றால் ஜீர்ணித்துக்கொள்ளக் கஷ்டமான வஸ்துக்களை ஒருபோதும் கொடுக்கக்கூடாதென்பதைத் தாய்மார்கள் கவனிக்கவேண்டும்.

குழந்தைகள் பழவர்க்கங்களைக் கண்டால் அவற்றைப் பெற விரும்பி அழுவது சகஜம். அப்படி பழங்களை அவைகளுக்குக் கொடுக்க விரும்பினால், கொடுக்கப்படும் பழமானது நன்கு பழுத்திருக்கின்றதாவென்று கவனிக்கவேண்டும். ரஸசத்துள்ள பழுத்த பழங்களைக் குழந்தைகள் தின்பதால் அவைகளுக்கு யாதொருகெடுதியும் ஏற்படுவதில்லை.

---

## Cholera and its Prevention.

## காலராவும், அதைத் தடுக்கும் முறைகளும்.

கொள்ளைநோய்களுக்குள் காலராவானது மிகவும் கொடியது. வெயிற்காலங்களில் இக் காலராக்கிருமிகள் ஏராளமாகப்பரவ ஆரம்பித்து, ஜனங்களை நாசமாக்குகின்றன. இந்நோயானது அவ்வளவு கொடியதாயிருந்தாலும், வெகு இலகுவாகத் தடுக்கக்கூடியதாயிருக்கின்றது.



காலராநோயானது நாம் குடிக்கும் தண்ணீர் அசுத்தமாயிருந்தால், அதன்மூலமாய் ஜனங்களுக்குள் பரவுகின்றது. கீழே குறிக்கப்படுவனவற்றைக் கவனித்தால், காலராநோயை ஒருவாறு தடுக்கலாம்.

(1) ஜனங்கள் அசுத்தமான தண்ணீர், பால் முதலியவற்றைக் குடிப்பதாலும், மாசுபடிந்த ஆகாரத்தை உண்பதாலும், இவற்றின் மூலமாய் காலராக்கிருமிகள் அவர்களின் தேகத்தினுட்சென்று, அவர்களுக்குத் தீங்கு செய்கின்றன. ஆதலால், ஜனங்கள் பருகும் பானங்களை நன்கு காய்ச்சிக் குடிக்கவேண்டும். உண்ணும் உணவைச் சூடுள்ளதாய்ப் புதியதாகஉபயோகிக்கவேண்டும். சுத்தமாக இல்லாத எவ்வித பானத்தையும் ஆகாரத்தையும் உட்கொள்ளக்கூடாது.

(2) இரைப்பையிலிருக்கும் காஸ்ட்ரிக் ஜூஸ் என்னும் நீரானது காலராக்கிருமிகளை வரவொட்டாமல் தடுப்பதால், வயிற்றில் ஆகாரமில்லாமல் ஒருபோதும், வெளியே போகக்கூடாது; ஏனெனில், நாம் உண்ணும் உணவின் காரணமாக காஸ்ட்ரிக் ஜூஸானது இரைப்பையில் உற்பத்தியாகின்றது. நாம் காலையில் வெளியே போகும்போது, கொஞ்சம் உணவு உண்டு, பிறகு போவதே உசிதம். காஸ்ட்ரிக் ஜூஸ் உற்பத்தியாவதற்கு அநுகூலமாயிருக்கும் சில பழவர்க்கங்களை அதிகமாக உபயோகப்படுத்துவது மிகவும் நல்லது.

(3) காலராநோய் பரவியிருக்கும் காலங்களில் விரேசனத்திற்காக மருந்து உட்கொள்ளக்கூடாது. அஜீர்ணத்தை உண்டாக்கக்கூடியவையும், ஜீர்ணவுறுப்புக்களைச் சிரமப்படுத்துவனவுமான காய் கனிகளை ஒருபோதும் உண்ணக்கூடாது.

(4) களைப்பாயிருப்பதும், நேரம்கழித்து உண்பதும், உறங்குவதும் கூடாது. கொள்ளைநோயால் தாக்கப்படுவோமோ என்ற பயம் ஒருபோதும் மனத்தில் இருத்தல் கூடாது.

(5) சாதாரணமாக வீட்டிலிருக்கும் ஈக்களே, காலராநோயைப் பரவச்செய்வதற்குக் காரணமாயிருக்கின்றன. இவ்வீக்கள் ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கும், ஒருமனிதனிடமிருந்து மற்றொரு மனிதனிடத்திற்கும், போவதால், இந்நோய் பரவ ஹேதுவாகின்றது. ஆகலால், நாம் உண்ணும் உணவுகளில் ஈக்கள் வந்து உட்காராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். காலரா நோய்கண்ட பிணியாளிகளின் மேல் உட்கார்ந்த ஈக்கள், நமது உணவுகளின் மேலும் வந்து உட்கார்ந்து, அவற்றில் விஷக்கிருமிகளைக் கொணர்ந்து விடுகின்றன.

(6) அழுக்கானது எல்லா வியாதிகளுக்கும் தாய். ஒவ்வொருவரும் தம்மைத்தாம் சுத்தி செய்துகொள்வதோடு, தாம் வசிக்கும் இல்லத்தையும் சுத்தியாக வைத்துக்கொள்ளுதல் இன்றியமையாதது.

(7) காலராநோய் கண்ட பிணியாளியைப் பராமரிப்பவர்களும் நோயாளிவசிக்கும் வீட்டிலுள்ளவர்களும் கீழ்க்கண்டவாறு நடந்துகொள்ளவேண்டும்:—

உண்பதற்கு முன் தங்கள் கைகளைச் சுத்தி செய்துகொள்ளல் வேண்டும்.

காலரா நோய்கண்ட பிணியாளியிருக்கும் அறையில் ஒன்றும் உண்ணலாகாது.

இந்தப் பிணியாளிக்காக உபயோகப்படுத்தின பாத்திரங்களை நன்கு சுத்திசெய்வதற்குமுன் வேறுகாரியங்களுக்கு உபயோகிக்கலாகாது.

பிணியாளி கழிக்கும் மலஜலங்கள் முதலியவற்றை மிக்க ஜாக்கிரதையுடன் அப்புறப்படுத்தி, அவ்விடங்களை பினைல் முதலியவற்றைக்கொண்டு சுத்தி செய்தல்வேண்டும்.

பிணியாளியால் உபயோகிக்கப்பட்ட படுக்கை துணிமுதலியவற்றை மிகவும் சூடான ஜலத்தில் போட்டாவது, அல்லது கொஞ்ச நாளைக்கு வெய்யிலில் உலர்த்தியாவது சுத்திசெய்யாமல் உபயோகிக்கக்கூடாது.

(8) குடிதண்ணீர் வசதிகளை அவ்வப்போது பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ் என்பதைக் கொண்டு சுத்திசெய்து, மிக்க ஜாக்கிரதையுடன்

காத்துவரவேண்டும். குடிதண்ணீரை நிரப்பி வைக்கும் பாத்திரங்களைத் தினமும் பெர்மாங்கனேட் பொட்டாஷைக்கொண்டு சுத்திசெய்து கொள்ளவேண்டும்.

(9) குடிதண்ணீர் எடுக்கும் கிணறுகளில் ஜனங்கள் ஸ்நாநம் செய்வதாவது அல்லது துணிகளைச் சுத்தி செய்துகொள்ளவாவது கூடாது.

(10) காலராநோய் பரவியிருக்கும் காலங்களில், அதைத் தொலைப்பதற்கான மருந்துகளைக் கைவசம் வைத்திருப்பது அவசியமாகும்.

---

## * The Hon'ble Dewan Bahadur P. Rajagopalachariar Avl, C. I. E.,

By Mr. M. C. Anaiappa Mudaliar,
*Tamil Pandit, Board High School, Namakal.*

## கனம் திவான்பஹதூர் பி. ராஜகோபாலாசாரியர் அவர்கள் ஸி. ஐ. இ.

ஆசிரியப்பா.

மலர்தலை யுலகின் அலர்முக மாகும்
பல்சீர் மல்கிய பரத கண்டம்
கண்ட மிதற்கு கண்போற் காண்பன
மூன்றைத யோர்புகழ் வடதென் விந்தியா
சீர்பல புனைந்த தென்னிந் தியாவில்
கார்வளர் காக்கள் ஏர்பெற மிகுந்து
நீர்வளர் நிலவள முதல்பல வளங்கள்
தன்னைச் சூழ்ந்த மன்னுபல் லூரினும்
பேர்பெற அமைந்த பெருங்கா வூரில்
கங்கைத்தாய் செய்த முந்திய தவத்தால்
பிறந்து தவழ்ந்துமற் றெழுந்து நடந்து
நாளொரு மேனியும் பொழுதொரு
வண்ணமாய்ப்
பிறையின் வளர்ந்து கலையிற் சிறந்து
ஆய்ந்ததன் பயனினல் லொழுக்கம்
வாய்ந்து
எம்மே பியெல் பட்ட மெடுத்து
ஆங்கில ஆட்சிக் கருந்துணை யாகத்
தாங்குந் தொழிலைத் தான்மேற் கொண்டு
டிப்டி கலெக்டருத் தியோக மேற்று
நாமகள் பூமகள் நாளும் விளங்கும்
நாமக் கல்லில் நயம்பெற விருந்து
அகத்தியர் பத்தினி யாயமர்ந் திருந்து
தென்றமி ழின்சுவை தேங்கப் பெற்ற
காவிரி யிதன்சுவை காணப் பொருளாய்க்
காதற் றப்பால் கடிதி லோடக்
கன்னானை மணக்கக் கமலைசெய் தவத்தால்
கமலா லயமெனக் காணுமூ ருனிக்கு
நீர்வர வாய்க்கால் பெருநயப் புகுத்தி
ஊரார் தம்மால் பேரிசை பூண்டும்
ஈரோ டதனில் பேர்பெற விருந்தும்
சேலம் ஜட்ஜாய்ப் பாலனஞ் செய்தும்
பாலக் காட்டிலும் வேலை நாட்ட
நாலா பக்கமும் நல்லிசை பரவலும்
பேருப காரி யெனப்பே ரடைய
திவான்ப ஹதூர்சீ ஐஈ யென்னும்
கௌரவப் பட்டம் கிடைத்தது கொண்டு
கொச்சியில் திவானாய் மெச்சப் பலரும்
செல்வ விருத்தி பல்குறச் செய்தும்
திருவாங் கூரினும் திவானா யிருந்து
சீர்திருத் தம்பல செய்துகாட் டியதுடன்
பண்டிக ரிடத்தில் பரிவு கொண்டு
ஆங்கவர் நிலையை யோங்கச் செய்தும்
ஜுடிஷியல் காரியம் துலங்கச் செலுத்தி
மறுவிலா தொழுகி மாண்புட
னிருக்கையில்
அயல்நாட் டியல்பு மறிய விரும்பி
இங்கிலாந் தாதித் தேயபல வியந்து
அங்குள விருப்பெலா மறிந்து திரும்பி
கலத்தி லிவர்ந்து வருங்கால் அக்கலம்

* நாமக்கல் பொது ஜனங்களின் வேண்டுகோட்கிணங்கி இச்செய்யுள் இயற்றப்பெற்று, இவர் சென்னை நிர்வாக சபையில் அங்கத்தினராய் நியமிக்கப்பெற்ற விஷயத்தைக்குறித்துக் கொண்டாடுவதற்குக் கூடிய நாமக்கல் மஹாஜனசபையில் வாசிக்கப்பெற்றது.



நடுச்சா கரத்தினி லிடியொலி போல
டீர் டீரென டார்ப்பிடோ பட்டு
ஒன்னலர் சூழ்ச்சியால் ஓட்டை யாகி
துள்ளித் துள்ளிக் குதித்துக் குதித்து
திடுதிடு டெனப்பலர் தடமா றியோடவும்
கிடுகிடு டனச்சிலர் கிடந்து தயங்கவும்
குபீர்குபீ ரெனப்புகை கொள்ளக் கிடக்கத்
திடீரெனக் கவிழ்தலும் தியங்கித் தியங்கிப்
பற்பல திசையும் பாழ்பட நோக்கியும்
மனமெனும் வயமா தன்வயப் படாமல்
ஐம்புல னுந்த மறிவு சலங்கவும்
கேட்டிடு துதிகூட் டிறுமை மையெனக்
கற்ற கல்வி கைவசக் தாகவும்
தெய்வந் தன்னைச் சிந்தையி லிருத்தி
கார்முகில் மேனிக் கண்ணா போற்றி
ஆதி மூலமென் றோலமிட் டாற்றிய
அத்திக் குவந்தவந் தருளினை போற்றி
எத்திக் கும்புகழ் எந்தாய் போற்றி
சரண மடைந்தோ ரரணே போற்றி
மாதவ கேசவ ஆதி ஆதிய
ஆயிர நாமத் தண்ணல் போற்றி
என்றுபற் பலவகை ஏத்த வாங்கே
பிறவிப் பெருஞ்சுழி பேதுறு வோர்க்குக்
குருவெனு நாவாய் கூடியே வரல்போல்
சென்னையைச் சேர்ந்தோர் முன்செய்
தவமும்
அன்னையை யொப்ப ஆதுலர்க்க ளித்ததும்
தண்ணீ ரிலாது கண்ணீர் விட்டோர்க்
குண்ணீர் தரும்வகை யோங்கச் செய்ததும்
ஆபத் தாவேளையில் அடைக்கலந் தந்ததும்
ஆவதல் லறமெலா அம்பி யாக
வலிய வாறும் வகையுட னேறி
தேறுதல் பெற்றுந் தெய்வம் போற்றி
துன்புற் றவர்க்கலா தின்பில தென்றும்
முந்தைத் தவத்தால் வந்தவிப் பதவியைச்
சிந்தனை செய்துஞ் செல்லும் பொழுது
கரையைக் காண்டலுங் கரையி லானந்தத்
திரையில் மூழ்கிச் சென்னை சேர்ந்து
முன்னைத் தொழிலில் பின்னு மமர்கையில்
தந்நலங் கருதா பிறநலங் கருதியும்
கொற்றவன் முறையும் குடிகளின் குறையும்
தெற்றென ஆய்ந்து சீர்பெற வியற்றலில்
முன்னவ னென்னும் முறைமை பிறழின்
மற்றவற் குறைதிறற் புறத்திக் காட்டவும்
கல்வித் துறையும் கைத்தொழில் மாண்பும்
விவசா யகருக்கு வேண்டுவ செய்தும்
செல்வ விருத்தியில் பல்கரத் தறவும்
இன்னுந் தன்னால் இயன்ற வியற்றவும்
சென்னையைச் சேர்ந்தோர் செழிப்பு
மன்னவும்
தெய்வத் திருவரு ளான்வந் துறவும்
சென்னை மன்னுடன் மன்னிய மன்றில்
உன்னத நபர்களி லொருவ ராக
தேர்ந்தெடுத் தனரெனச் செவியுணா
வுகொண்டு
குதூக லத்துடன் கூடிக் குலாவினோம்
இவன்பெயர் யாதெனில் அறைகுதுஞ்
சேண்மிசை
இராஜனை யன்றி யுயிரெனுங் கோச்சனை
பாலிப் பதனால் இராஜகோ பால
ஆசா ரியனெனும் அருந்தவத் தோனும்
உயிருக் குயிரா யிருப்பவ னொருவன்
உயிரைப் புரத்தல் உண்மைத் தவமாம்
இவற்கித் தவத்தை யென்றுஞ் செய்யவும்
நீண்ட ஆயுளும் ஓங்கிய குணமும்
திருமா லின்னருள் செழித்தோங் குகவே.

ம. சி. ஆனையப்ப முதலியார்.

---

ஔவை.

நம் அருந்தமிழ்மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம், பலநூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ண பரம்பரையை அநுசரித்தும், வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் இனிய எளிய வசனநடையில் இயற்றப்பட்டது; சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியது; வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. இது முன்பு நம் ஜநோபகாரி பத்திரிகையில் சிலமாதங்களாக வெளி வந்துகொண்டிருந்தது; இப்போது புத்தகரூபமாக நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா—6.

ஜநோபகாரி சந்தாதார்களுக்கு மாத்திரம் விலை அணா—5.

ஜநோபகாரி ஆபீஸ், வேலூர்.

# Vijayanagar.

By Mr. K. P. Seshadri Aiyangar.

## விஜய நகரம்.

(கி. பி. 1336—1564.)

### தற்கால நிலைமை.

விஜயநகரம் முன்னொரு காலத்தில் வெகு விசித்திரமாயும் விஸ்தாரமாயுமிருந்தது; இப்பொழுதோவெனில், பாழாய்ப்போன இடமாயிருக்கிறது. அந்த இடத்தில் இப்பொழுது ஒன்றுமே கிடையாது. நரி நரிகளும், சிறுத்தைப் புலிகளுந்தான் அங்கு வசிக்கின்றன. கோட்டான் கூக்குரலும், ஆந்தையின் அழுகுரலும், நரி ஊளையிடுஞ் சத்தமும், சிறுத்தையின் உறுமலும், புலியின் வெருட்டுங் கர்ச்சனையும் அவ்விடத்தில் எப்பொழுதும் கேட்டுக்கொண்டிருக்கும். அங்கே ஒரு நம் இல்லை. ஹம்பி என்கிற கிராமத்திலிருந்துகொண்டுதான் விஜயநகரம் என்று பெயர் வழங்கும் இந்தப் பாழ்பட்ட ஊரை நாம் காணவேண்டும்.

பல்லாரிக்கு மேற்கே 32 மைல் தூரத்தில் இந்த ஊரிருக்கின்றது. ஹோஸ்பெட் என்னும் ரயில் ஸ்டேஷனில் இறங்கி ஆறுமைல் தூரம் சென்றால், விஜயநகரம் போய்ச்சேரலாம். இந்த ஊரை முதன்முதலில் பார்ப்பவர்க்கு இம்மாதிரியான ஊரும் எந்தக்காலத்திலாவது இருந்திருக்குமா என்று தோன்றும். சுற்றிலும் பருவதங்களும், கரடுமுரடான பாறைகளும், அந்த சாரமே குடிகொண்டிருக்கும் அரண்யங்களும், சப்பாத்திகளும் பார்க்கிறவனது மனத்தைப் பயப்படச்செய்யும். இவ்வூரின் மத்தியில் துங்கபத்திரை நதி ஓடிக்கொண்டிருக்கின்றது. அதன் இருகரைகளிலும் எருமைக்கன்றுகள் போல ஆயிரம் முதலைக்குட்டிகள் படுத்துக்கொண்டிருக்கும். காலடிச்சத்தம் கேட்குமாயின், அவைகளெல்லாம் 'பொத் பொத்' தென்று தண்ணீரில் குதித்துவிடும். வெகு பயங்கரமான பிரதேசம். சுற்றிலும் சப்பாத்திக்காடு. நீரில் நீந்திச் செல்லலாம் என்றாலோ, அங்கே முதலை; ஒற்றையடிப் பாதையைத் தப்பி நடந்தாலோ, பாம்போ புலியோ என்று நடுங்கவேண்டும். இந்தக் காட்டிலும் பருவதப் பிரதேசத்திலுந்தான் புராதன விஜயநகரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. லக்ஷணமாயிருந்த காலத்தில் கட்டின கோவில்களும், மண்டபங்களும், தெருக்களும் பாழாய்ப்போயிருப்பதை இப்போதும் காணலாம்.

இந்த நகரத்தை எத்தேசத்து மன்னர்கள் ஏற்படுத்தினார்கள்? போயும் போயும் எவ்வளவோ இடங்களிருக்க இந்தக்காட்டிலும், கள்ளியிலும், குன்றிலும், மலையிலுந்தானா ஒரு பட்டணத்தைக் கட்டவேண்டும்? என்ற கேள்வி ஒவ்வொருவருக்கும் பிறக்கலாம். இம்மாதிரி கட்டினதற்கு அநேகவித காரணங்கள் உண்டு. அவை பின் வருவன:—

ஜல சௌகர்யம், மலைகாடு முதலியவைகளை யோசித்து நல்ல இடமாகவே எண்ணி ஆராய்ந்து பார்த்துக் கட்டியிருக்கவேண்டும். இவைகளில்லாமல் விஜயநகரம் அப்படி காட்டிலும் மலையிலும் துங்கபத்திரைக் கரையிலும் அமைக்கப்பட்டிருப்பதற்கு ஜனங்கள் மற்றொரு முக்கிய காரணம் சொல்லுகிறார்கள். அதுதான் உண்மையான காரணமாகத் தோன்றுகின்றது. ராஜாங்க முறையை அனுசரித்துப் பார்க்கும்பக்ஷத்தில், அந்தவூர் அமைக்கப்பட்டிருக்கும் ஸ்தானமானது, அதன் மன்னர்களுக்கு ஆயிரம் யானைப் பலத்தை அளிக்க வல்லதாகக் காணப்படுகிறது. அந்நகரத்தைச் சுற்றி மலைகளும் காடுகளும் உண்டு. பகைவர்கள் படையெடுத்துவரின் ஒருவழியாகத்தான் வரவேண்டும். இதை உத்தேசித்து அக்காலத்திய அரசர்கள் விஜயநகரத்தைத் தங்கள் ராஜதானியாகச் செய்திருக்கவேண்டுமென்று எண்ணவேண்டியதாயிருக்கிறது.



### இந்நகரத்தை ஸ்தாபித்தவர் யார்?

இந்த நகரத்தை நிர்மாணஞ்செய்தவர் யார்? எந்தவம்சத்து அரசர்கள் இதை ஆண்டார்கள்? இவைகளைப்பற்றிச் சற்று விசாரிப்போம்:— இந்நகரத்தைப் பரிபாலனஞ்செய்த அரசர்களின் வம்சத்தை 'விஜயநகரவம்சத்தார்' என்று சரித்திரங்களிற் கூறுவது வழக்கம். பதினான்காம் நூற்றாண்டின் மத்தியில் புக்கராயர், ஹரிஹரராயர் என்னும் இருராஜ சிம்மங்களால் முதன்முதல் விஜயநகர ராஜ்யமானது ஸ்தாபிக்கப்பட்டது. சரியாக விஜயநகரம் சாலிவாகன சகம் 1258 க்குச்சரியான கி. பி. 1336-ஆம் வருஷம் நிர்மாணிக்கப்பட்டது. இந்தக் கால வரையறை ஒரு செப்புச்சாசனத்தால் தெரியவருகிறது. ஹரிஹரராயர் சிம்மாசனமேறின வருஷம் அதுவேயென்றும் அதிற் குறிக்கப்பட்டிருக்கிறது. * ஆனால், பெர்குஸன் (Ferguson) என்னும் ஆங்கில மேதாவி கி. பி. 1118-ஆம் வருஷத்தில் விஜயராயலு என்னும் அரசனால் விஜயநகரம் ஏற்படுத்தப்பட்டதென்று ஸீவெல் (Sowell) எழுதியிருப்பதாகக் கூறுகிறார். ஆனால், பர்குஸன் அதைக் கர்ணபரம்பரையாக வந்த விஷயம் என்று அநுமானிக்கிறார்.

14 ஆம் நூற்றாண்டில் இந்த விஜயநகரவம்சம் உண்டாயிருந்ததற்கு ஏதாவது ஆதாரமுண்டா? என்ற கேள்வி பிறக்கலாம். இதற்கு ஆதாரங்கள் உண்டு. அவைகளைக் கீழ் உரைப்போம். 14 ஆம் நூற்றாண்டின் முதலிலேயே தென்னாட்டில் முகம்மதியர்கள் நுழைய ஆரம்பித்தார்கள். இதே நூற்றாண்டின் தொடக்கத்தில் காகதீய வம்சத்தார்கள் ஆண்டுவந்த ஓரங்கல் (Warangal) என்ற பட்டணத்தை, சகம் 1244 அதாவது கி. பி. 1322-வருஷத்தில் பிடித்து, அரசர்களைப் புறங்காட்டியோடச் செய்தார்கள். அந்தச் சமயத்தில் முகம்மதியர்கள் தக்ஷிணதேசத்தில் முற்றிலும் நுழைய ஆரம்பித்தார்கள்; வெகு ராஜாக்களை உபத்திரவமும் செய்யத் தலைப்பட்டார்கள். அநேக ஹிந்துவரசர்கள் ஒன்றுசேர்ந்து முகம்மதியர்களைத் தென்தேசத்திலிருந்து வேரோடு களைந்தெறியப் பிரயத்தனப்பட்டார்கள். அப்படி முயன்றவர்களில் முக்கியமானவர்கள் புக்கராயன், ஹரிஹரராயன் என்ற இரண்டு அரசர்கள். இவ்விருவர் முகம்மதியர்களை ஜயித்த பிறகு, விஜயநகர ராஜ்யத்தை ஸ்தாபித்து அரசாண்டார்கள். ஆகையினால், இந்த விஜயநகரம் என்பது புக்கமஹாராஜனால் முதன்முதலில் உண்டாக்கப்பட்டது. *புக்கராயன்தான் முதன்முதலில் ஆட்சிபுரிந்ததாக ஜனங்கள் கூறுகின்றார்கள். இந்த வம்சம் உண்டான காலம் சாலிவாகனசகம் 1258. அதாவது கி. பி. 1336. ஒரு செப்புச்சாசனத்தில் அந்த வருஷமேதான் ஹரிஹரராயனுடைய ஆளுகையின் முதல் வருஷமாகக் குறிப்பிட்டிருப்பதனால், ஒருவாறு சரியாக நாம் இதை ஒப்புக்கொள்ளலாம். இவருக்கு முன்னால் புக்கராயன் என்ற அரசன் ஆண்டதாக நாம் சொல்லியிருக்கிறோம். ஆகலால், கி. பி. 1336-வருஷத்திற்கு முன்னமேயே இந்த வம்சம் உண்டாயிருக்கவேண்டுமென்பதற்கும், மேலே ஆதாரம் காட்டப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் விஜயநகர சாசனங்களில் ஹரிஹரனைத்தான் முதல் ராஜாவாக வைத்திருக்கிறது. அநேக சாசனங்கள் அவனைத்தான் முதல்மன்னனாக எடுத்துக்கூறுகின்றன. அவனுக்குப் பிறகு ஒரு புக்கன் ஆண்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகையால், முதலில் ஒரு புக்கன் ஆண்டபோதிலும் அவன் அவ்வளவு புகழ்பெற்றவனல்லனென்றும், ஹரிஹரனேதான் விஜயநகரவம்சம் தொடங்கினனென்றும், அப்புறம் இரண்டாவது புக்கன் ஒருவன் பட்டத்திற்கு வந்தானென்றும் நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது.

### இரண்டாவது புக்கராயன்: கி. பி. 1350—1379.

ஹரிஹரனுக்குப்பின் 1350 கி. பி. யில் இரண்டாம் புக்கராயன் அரசனானான். அவனுக்கு மந்திரி வித்யாரண்யர். அவர் பிரஸித்தி ...

* Sowells' Lists, Vol. II, p. 11, No. 79.

* Kelsat's Bellary manual p. 109.

பெற்றவர். கல்வியில் அவருக்கு இணையானவர் ஒருவரும் உலகத்திலேயே இல்லை. அவர் துங்கபத்திரைக்கரையிலுள்ள பம்பா என்னும் சிறிய கிராமத்தில் ஒரு தெலுங்கு பிராமண குலத்தில் அவதரித்தார். அவர் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர். அவர் சதுர்வேதங்களையும் நன்றாக வாசித்து, அவைகளுக்கு உரை முதன்முதலில் எழுதினார். அவர் எழுதிய உரையை யாவரும் கொண்டாடுகிறார்கள்.

புக்கமகாராஜனுக்கு மனைவி கௌராம்பிகை* இந்த ராஜதம்பதிகளுக்கு ஹரிஹரநாதன் என்பவன் புத்திரன். புக்கராயர் காலம்முதலே அவர்கள் முகம்மதியர்களோடு அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். கி. பி. 1364-வருஷத்தில் புக்கராயர் முகம்மதியர்களோடு சமர்புரிந்து வெற்றிமாலை தரித்தார். அவர்க்குப்பிறகு ஹரிஹரநாதன் சிம்மாசனமேறினான். அவன் 1379-ஆம் வருஷம்முதல் 1401 கி. பி. வரையில் ராஜ்யபரிபாலனம் செய்தான். இவனும் தன் தகப்பனைப்போல் முகம்மதியர்களை ஜயித்தான். கோவா என்னும் இடத்திலிருந்து முகம்மதியர்களை அடியோடு கி. பி. 1380-ல் துரத்திவிட்டான். இந்த ஹரிஹரநாதமகாராஜன் அநேக தேவாலயங்களுக்காக மானியங்கள் அதிகமாகக் கொடுத்தான். அவனுக்கு ஒரு குமாரன் உண்டு. அந்தப்பிள்ளையின் பெயர் மல்லதேவி விரப்பிரௌட தேவராயன். அவன் கி. பி. 1412 வரையில் குடிகளின் நன்மையே நோக்கமாகக் கொண்டு ராஜ்யபரிபாலனஞ்செய்தான். அவனுக்கு ஒரேயொரு பிள்ளை இருந்தான். அவன்தான் விஜயபூபதி. அவன் 1418-ஆம் வருஷம்வரையில் ஆண்டான். அவனுடைய பிள்ளை தேவராயன். அவன் கி. பி. 1422 முதல் 1447 வரையில் அரசனாக இருந்தான். இந்த விஷயங்களெல்லாம் சாசனமூலமாகத் தெரிந்துகொள்ளப்பட்டன. அவர்கள் இன்ன வருஷம் பிறந்தார்கள், இன்ன வருஷம் இறந்தார்கள், இன்ன வருஷம் சிம்மாசனமேறினார்கள் என்று நிச்சயமாகச் சொல்வதற்குப் போதிய ஆதாரமொன்றுங் கிடைக்கவில்லை. ஆனால், இவர்களெல்லோரும் அடிக்கடி முகம்மதியர்களுடன் யுத்தம் புரிந்துகொண்டிருந்தார்கள் என்பதுமட்டும் தெரிகின்றது.

ஹரிஹரநாதன் ராஜ்ய பரிபாலனஞ்செய்து வரும் காலில், அவருக்குச் சாலுவ குண்டன் என்னும் மந்திரி இருந்தான். இந்தச் சாலுவ குண்டன் மந்திரிவேலையையும் சேனாதிபதி வேலையையும் பார்த்து வந்தான். ஆகவே, ராஜ்யத்தை ஜயித்துத் தானே கைப்பற்றிக்கொண்டான். இதுமுதல் விஜயநகரத்தை மந்திரிவம்சத்தார் ஆள ஆரம்பித்தார்கள். இந்தச்சாலுவ குண்டனுக்குச் சாலுவ நரசிம்மராயன் என்ற பிள்ளை இருந்தான். அவன் கர்நாடகத்திற்கு அரசனானான். இந்த நரசிம்மனுக்குத் தம்மய ஸிம்மராயன் என்பவன் ஒருவனிருந்தான். அவன் விஜயநகரத்தை ஆண்டான். அவன் பரமயோக விலாசம் என்னும் நூலை எழுதியிருக்கின்றான். அவனுக்குப் பின்னால் அவன்பிள்ளை ஈசுவராயன் அரசனானான். வாராஹபுராணத்தின் முகவுரையினால் திம்மராயனுடைய புத்திரனை ஈசுவராராயன் சாலுவ நரசிம்மன் இறந்தபிறகு கர்நாடகத்திற்கும் அரசனானென்று தெரிந்துகொள்ளுகிறோம். சாலுவ நரசிம்மன் தேவாலயங்களுக்காக மானியங்கள் அதிகமாக அளித்தான், வந்தவாசிக்குமேற்கே பத்துமைல் தூரத்திலுள்ள வெள்ளாம் என்னும் ஊரிலுள்ள தேவாலயத்துக்குச் சாலிசகம் 1391 அதாவது கி. பி. 1409-ல் மானியம் விட்டதாகச் சாசனத்திலிருந்து அறிகிறோம். அவருடைய ஆட்சியிலேயே வடஆற்காடு ஜில்லாவில் யாலூர் என்னும் க்ஷேத்திரத்திலுள்ள சிவாலயத்திற்குச் சகம் 1393 அதாவது 1471 ல் மானியம் விட்டதாகவும் தெரிகிறது.

ஈசுவராயன் கி. பி. 1487 முதல் 1509-ஆம் வருஷம்வரை அரசாண்டான் என்று சாசனசர்க்கையினால் தெரிகிறது. சிலர் கி. பி. 1505 ஆம் வருஷம்வரையில் இருந்தான் என்கின்றனர். பிறகு அவனது புத்திரனை நரசராயன் சிம்மாசனமேறினான். அவன் சிலவருஷங்

* Epigraphia Indica Vol. IV P. P. 36 & 228.



களே ஆண்டான். இவனுக்குப்பிறகு கிருஷ்ண தேவராயன் 1509 முதல் 1530 வரையில் இராச்சியபாரம் வகித்தான். அப்புறம் அச்சுத ராயன் 1530 முதல் 1842 வரையில் ஆண்டான். இவனுக்கும் இவனுடைய தம்பிமார்களுக்கும் அநேகவிதமான கலகங்கள் நேர்ந்தன. இவனது தம்பிகள் இவனைப்பிடித்துச் சிறையில் வைத்தார்கள். அவர்கள் ஆண்டுகொண்டிருக்கையில், முகமதியர்கள் இதுதான் சமயமென்றெண்ணி ஒன்றுசேர்ந்து, இவர்களைத் தலைக்கோட்டை என்னுமிடத்தில் சண்டையில் ஜயித்து, கி. பி. 1564-ஆம் வருஷத்தில் விஜயநகர ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள்.

இவ்வளவு அரசர்களுக்குள் கிருஷ்ணதேவராயரும் சதாசிவருந்தான் நம்நாட்டுக் கோயில்களுக்கு வெகு தருமங்களைச் செய்திருக்கிறார்கள். கிருஷ்ணதேவராயரது சரித்திரத்தைப் பற்றி மறுசமயம் சொல்லவேண்டியதாக இருக்கிறது.

## விஜயநகரச் சிறப்பு.

விஜயநகர வம்சத்தின் சாசனங்கள் அபரிமிதம்; வெகு அழகாய்த் தாம்பரத் தகட்டிலும் கல்லிலும் வெட்டப்பட்டுக் கோவில்கள் தோறும் கண்ணைப் பறித்து நிற்கும். நமது தென்னாட்டுக்கோவில்களில் ராமேச்வரம்முதல் துங்கபத்திரைக்கரைவரையில் ஒரு கோவிலாவது விஜயநகர சாஸனமில்லாதது இல்லை. அப்படியிருக்க, இந்த வம்சத்தவர்கள் வெகு கீர்த்தி பெற்றவர்கள், வெகு மகிமை பொருந்தியவர்கள், தென்னிந்தியா முழுதும் ஆளுகை செலுத்தினவர்கள் என்று நன்றாய் ஏற்படுகிறது. அப்பேர்பெற்ற மன்னவர்களின் பட்டணத்தின் அழகையும் அலங்காரத்தையும் சிறப்பையும் செல்வாக்கையும் சொல்லவும் வேண்டுமோ? அப்துல் ரஜாக் என்ற மகமதிய வித்துவான்தான் கி. பி. 1443-ஆம் வருஷத்தில் விஜயநகரத்தைப் பார்த்தபோது அதன் சிறப்பைப்பற்றி வெகுவாய் வர்ணித்திருக்கிறார்: கட்டிடங்கள் வெகு சிங்காரமானவைகளென்றும், தெருக்கள் வெகு சிறப்புற்றவைகளென்றும், ஏழு கோட்டைச் சுவர்கள் இருந்தனவென்றும், ஊரிலிருந்த ஒவ்வொருவனும் பணக்காரன் பிறபுவென்றும், இந்த விஜயநகரத்தைப்பற்றி அதிகமாக வர்ணித்திருக்கிறார். இவ்வளவு சிறப்பிலிருந்த இந்த ஊர் இப்போது பாழாய்ப்போய், நாயும் நரியும் புலியும் சிறுத்தையும் வாசஞ் செய்யும்படி ஆவானேன்? என்பதைப்பற்றி யோசித்து ஒரு சரித்திரம் எழுதுகிறவர், ஒருகால் இவ்வளவு பணத்தில் கொழுத்துக் கொஞ்ச நாளைக்கெல்லாம் அங்கிருந்த ஜனங்கள் சுகவாசிகளாகிப் பலமிழந்து பின்பு மகமதியர்கள் வந்தகாலத்தில் அவர்களை எதிர்க்கச் சக்தியில்லாமல் அவர்களால் நாசஞ்செய்யப்பட்டார்களோ? என்னவோ? என்று ஊகித்துப் பரிதாபத்துடன் கூறுகிறார்.

பாழாய்க்கிடக்கும் இந்த விஜயநகரத்திற்குச் சமீபத்தில் ஹம்பி என்ற கிராமம் இருப்பதாகச் சொன்னோமன்றோ? அதுதான் இராமாயணத்தில் பம்பை என்று வர்ணிக்கப்பட்ட பிரதேசம். வால்மீகிமஹரிஷியால் வெகுவிசித்திரமாய் வர்ணிக்கப்பட்ட பம்பாஸரஸ் என்ற குளம் அங்குதானிருக்கிறது. எவ்வளவு பாழடைந்த ஸ்திதியிலிருந்தாலும், இப்போதும் நம் தென்தேசத்தில் அழகிலும் காத்திரத்திலும் முதல்தரமான தாமரைப்புஷ்பம் இந்தப் பம்பாஸரஸில்தான் உண்டாகிறது.

---

சுதேச பரிபாலினி:—(ஜனோபகாரி,) பொதுஜன பிரயோஜனமான விஷயங்களும், வியாபாரம், கைத்தொழில், வியவசாயம் முதலானவைகளைப்பற்றி அறிவை யூட்டத்தக்க குறிப்புக்களும், நீதிமொழிகளும், நவீன சங்கல்பங்களும் செறிந்து நிறைந்திருக்கின்றன. பத்திரிகை முழுவதும் திவ்யமான எளிய தமிழ் நடையிலே எழுதப்பட்டு, படிப்பவரது கவனத்தை கவரத்தக்கதாயிருக்கின்றது.”

# விஜயநகர வம்சாவளி.

| | |
|---|---|
| புக்கன் I. | கி. பி. 1336 ்க்குக் கொஞ்சம் முன்னால். |
| ஹரிஹரன் | ,, 1336 முதல் 1350 வரை. |
| புக்கன் II. | ,, 1350 ,, 1379 ,, |
| ஹரிஹரராதன் | ,, 1379 ,, 1401 ,, |
| ப்ரௌடதேவராயன் | ,, 1401 ,, 1412 ,, |
| விஜயபூபதி | ,, 1412 ,, 1418 ,, |
| தேவராயன் | ,, 1418 ,, 1447 ,, |
| மல்லிகார்ஜுனராயர் | ,, 1418 ,, 1447 ,, |
| நிம்மராயர் | ,, 1418 ,, 1447 ,, |
| ஈச்வரராயர் | ,, 1487 ,, 1505 ,, |
| நரஸிம்மராயர் | ,, 1505 ,, 1509 ,, |

வீரநரஸிம்மர் — கிருஷ்ணதேவராயர் 1509—1530

அச்சுதராயர் 1530—1542

சாஸனசர்ச்சையினால் தெரிந்துகொள்ளப்பட்ட விஜயநகரத்து வம்சாவளி.

கி. பி. சேஷாத்ரி ஐயங்கார்

---

## Leela Devi.

By Srimathi Balasundari Devi.

## லீலாதேவி.

(84-ம் பக்கத் தொடர்ச்சி.)

அவர்களுடைய ஸம்பாஷணையின் கருத்து இன்னதென்று ஸோமநாதனுக்கு எள்ளளவேனும் தெரியாது. அப்பொழுது அவனுக்கு அந்த இடத்தைவிட்டுப் போவதற்கே இஷ்டமில்லை. லீலா வீட்டைக் கூட்டிக் குப்பையைப் வெளியே போடுவதற்காக வெளியே சென்றிருந்தாள். ஸோமநாதன் அந்த அழகிய ஸுந்தரியைத் திரும்ப ஒருதரமாவது காணாமல் எப்படி போகமாட்டுவான்? இன்னும் சிறிது நாழிகை தாமஸிக்க ஒரு காரணத்தை நினைத்துக்கொண்டு, நரேந்திர



னைப் பார்த்து "அப்படியானால், விவாஹம் இந்த மாதத்திலேயே நடத்தும்படியாக நிச்சயமாய் விட்டதன்றோ?" என்றான்.

நரே.—ஆம்: அப்படியே நிச்சயித்தோம். வரன் கிடைத்துவிட்டால் உடனே விவாஹத்தை நடத்தவேண்டும்.

லோக.—அதற்கென்ன? வரன் இன்றைக்கு அகப்பட்டால் நாளைக்கே கன்னிகாதானம் செய்துவிடுகிறேன். இனி வயதுவந்த பெண்ணை விவாஹம் செய்யாமல் வீட்டில் வைத்துக் கொள்ளமுடியுமா?

கனக.—"ஐயா! நீங்கள் மகாராஜராய் இருக்கவேண்டும். உங்கள் வீடுநிறையப் பொன் மலையாய்க் குவியவேண்டும். உங்கள் வீடுநிறையப் பத்துக்குழந்தைகள் பிறந்து நீங்களெல்லோரும் நீடூழிகாலம் சுகமாக வாழ்வீர்களாக!" என்று ஆசிர்வதித்தாள். கனகவல்லியின் மனப்பூர்வமான ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொண்டு ஸோமநாதன் அவளை நமஸ்கரித்தான். இதற்குள் வெளியிற்போயிருந்த லீலாவும் உள்ளே வந்தாள். வந்த பெண்ணை ஸந்தோஷமாய்ப் பார்த்துவிட்டு நரேந்திரனுடன் ஸோமநாதனும் வீட்டைவிட்டகன்றான். இருவரும் வெகுதூரம் வரையில் மௌனமாய் நடந்தார்கள். வழியில் நடந்துகொண்டே நரேந்திரன் என்ன யோசனை செய்தானோ அதை நாம் அறியமாட்டோம். ஸோமநாதன் மாத்திரம் லீலாவின் கபோலத்தின் பளபளப்பையும் காந்தியையும் குறித்து ஆலோசித்தானென்று நமக்கு நன்றாய்த் தெரியும். அவர்கள் சற்றேறக்குறைய வீட்டினருகில் வரும்பொழுது நரேந்திரன் ஸோமநாதனைப் பார்த்து, "ஸோமநாதா! என்ன! என்னவோ யோசிக்கிறாயே?" என்று கேட்டான்.

ஸோமநாதன் சற்று நிதானித்துப் பிறகு, "ஒன்றுமில்லை: நம் ஹிந்துக்களிடத்திலுள்ள வழக்கங்களைக்குறித்து யோசித்தேன்" என்றான்.

நரேந்தி—என்ன வழக்கம்?

ஸோம.—தரித்திரனுடைய பெண் எவ்வளவு அழகுடையவளாயிருந்தபோதிலும் அவளுக் குத்தகுந்த கணவன் கிடைப்பது துர்லபம். வரதக்ஷிணை கொடுக்கச் சக்தியற்றவர்களின் புத்திரிகளுக்குக் கல்யாணம் அவசியமே இல்லையா? இதைவிட இன்னும் என்ன மூடத்தனமான வழக்கம் வேண்டும்?

நரே.—ஆம்: அது உண்மையே. இப்பொழுது இருக்கும் வழக்கத்தினால் ஏழைகளின் பெண்களுக்கு விவாஹம் நடப்பது வெகு கஷ்டமாயிருக்கிறது. இந்த ஊரிலேயே நவீனசந்திரனென்பவனுடைய குமாரன் இருக்கின்றான். பார்வைக்கு என்னவோ குரூபியாய்த்தானிருக்கிறான். ஆனால், இந்தவருஷம் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப் போயிருக்கிறான். அவனுக்குக் கொடுத்து விவாஹம் நடத்தலாமென்று லோகநாதன் என்னோடு சொன்னான். ஆனால், நவீனசந்திரன் மாத்திரம் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைந்து கொடுக்கும்பக்ஷத்தில் விவாஹத்திற்கு ஒப்புக்கொள்ளமாட்டானென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். பின்னும் பார்த்து "அதோ! பார்: அவனைத்தான் நான் சொன்னது. கொஞ்சம் நின்று அவனை ஒரு வார்த்தை கேட்டுவிட்டுப் போவோம்."

இதற்குள் எவ்விடத்திற்கோ போய்க்கொண்டிருந்த நவீனசந்திரன் இவர்கள் ஸமீபத்தில் வந்தான். உடனே ஒருவரையொருவர் நமஸ்காரபூர்வம் யோகக்ஷேமங்களை விசாரித்த பிறகு நரேந்திரன் அவனைப்பார்த்து, "நவீனசந்திர முதலியாரே! உமது புத்ரனுக்கு ஒரு கன்னிகையை ஏற்படுத்தியிருக்கிறேன். தங்களுடைய அபிப்ராயம் என்ன?" என்று கேட்டான்.

நவீனசந்திரன் சிறிது மந்தஹாஸத்துடன் நரேந்திரனைப்பார்த்து, "ஓ! அப்படியானால் மிக்க ஸந்தோஷம், சிறிது ஆலோசித்து, "அவன் சிறியவன். இப்பொழுதுதான் பிரவேச பரீக்ஷையில் தேறினான். இந்த வருஷமே கல்யாணம் செய்தால் இரண்டு அல்லது மூன்று ஆயிரத்தைவிட அதிகலாபம் காணமுடியாது. எப். ஏ. பரீக்ஷையில் தேறினபிறகு செய்தால்

இன்னும் அதிகம்வரும். ஆனால், என் அபிப்ராயம் என்னவென்றால்,—

நரே,—ஸரி ஸரி: நீங்கள் ஆசாயத்தைப்பார்க்கிறீர்கள். இந்தவருஷம் குமாரனுக்கு விவாகம் செய்ய இஷ்டமில்லையென்று சொல்லிவிடலாகாதா? இவ்வளவு என்ன அதற்கு?

நவீ—எனக்கு ஒரு இஷ்டமுமில்லை.—வீட்டில் பெண்கள் மாத்திரம் நாட்டுப்பெண்ணைக் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். அதிககாலம் கல்யாணம் செய்யாமலிருப்பது நல்லதென்று தோன்றவில்லை. தகுந்த பெண்ணாய்த் தேடிக்கொண்டிருக்கிறேன்.—ஆகட்டும்! நீங்கள் சொல்வது யாரைப்பற்றி? வரதக்ஷிணையைப்பற்றி யென்ன? சொல்லுங்கள் பார்ப்போம்.

நரே—வரதக்ஷிணை அதிகம் எங்கிருந்து வரும்? நமது ஊர் லோகநாதன் பெண்ணைக் குறித்துச் சொன்னேன்.

நவீனசந்திரன் அதைக்கேட்டு உரக்கச் சிரித்தான். "என்ன? நீங்கள் என்னைப் பரிஹாசம் செய்வதுபோலிருக்கிறதே!" என்றான்.

நரே—பரிஹாசமென்ன? லோகநாதன் உங்கள் ஸ்வஜாதி, பந்து. பெண்ணோ அழகிற் சிறந்தவள். இதைச்சொன்னால் பரிஹாஸமா?

நவீ—என்ன, இப்படி சொல்லுகிறீர்கள்! ஸ்வஜாதி, பந்து, அழகு இவை இருந்தால் மாத்திரம் இந்தக்காலத்தில் விவாஹமாகுமா? மதனப்பூர் முனிஸீப் இரண்டாயிரம் ரூபாய் தருகிறேனென்று ஒப்புக்கொண்டார். அப்படிப்பட்டவர்களின் வீட்டுப்பெண்ணையே நான் வாங்கிக்கொள்ள ஒப்புக்கொள்ளவில்லை.

நரே—(மனதிற்குள்) உன் பிள்ளைக்குக் கொடுப்பதைவிடப் பெண்ணை ஒரு பாழ்ங்கிணற்றில் தள்ளுவதுமேல். (வெளியில்) நல்லது லோகநாதன் இரண்டாயிரம் கொடுத்தால் ஒப்புக்கொள்வீரா?

நவீ—ஸரி: எங்கிருந்து திருடிக்கொண்டுவந்து கொடுப்பான்? அவனுக்குத் தின்பதற்கே கதியில்லையே? அப்படிப்பட்டவன் பெண் விவாஹத்திற்கு இரண்டாயிரம் கொடுப்பனென்றால் யாராவது நம்புவார்களா? நீங்கள் சொல்லும் வார்த்தையைக் கேட்டால் எனக்குச் சிரிப்பு வருகிறது.

நரே—அப்படியன்று: லோகநாதன் தரித்திரனாதலால் அவன் பெண்ணின் விவாஹத்திற்குப் பிடிக்கும் செலவு முழுவதும் நான் தருகிறேனென்று ஒரு பெரியமனுஷன் ஒப்புக்கொண்டிருக்கிறான். இதைத்தவிர லோகநாதனுக்கும் பெண்ணைத் தங்கள் குமாரனுக்கே கொடுக்க வேண்டுமென்ற எண்ணம். இப்பொழுது ஒப்புக்கொள்வீர்களா.

நவீ—என் குமாரனைப்போன்ற வரன் வேறு எங்கு அகப்படும்? நீங்கள் சொல்லும் ஸம்பந்தத்திற்கு என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. இப்பொழுதுதான் எவனோ பெரிய மனுஷ்யன் செலவு முழுவதும் தாங்குகிறான். இதற்கப்புறம் பண்டிகை, பருவம், விருந்து மருந்து இவைகளுக்கெல்லாம் என்ன வழி?

நரே—அவைகளோடு என்ன? லோகநாதன் ஏழையானாலும் உத்தமன்.

நவீ—உத்தமனாயிருந்தால் என்ன பலன்? ஹிந்துக்களுக்கு வருஷத்திற்குள் பத்துப் பண்டிகை. அப்பொழுது லோகவழக்கப்படி நடந்துகொள்ள இவனாலாகுமா?

நரே—ஸம்பந்தமே செய்தபிறகு இவையெல்லாம் கூடியமட்டில் செய்வானேயொழியச் செய்யாதிருக்கமாட்டான். இன்னும் என்ன குறைவு?

அவன்கையில் ஒன்றுமில்லாததும் அவன் பிழைப்பும் நான் அறியமாட்டேனா?

நரே.—ஸரி: அப்படியானால் நீங்கள் ஒப்பமாட்டீர்கள்? நவீனன் ஸம்மதியில்லாத குறிப்பைக்காட்டி மீசையைமுறுக்கிக்கொண்டு அங்கு விட்டகன்றான்.

அதுவரையிலும் அவர்கள் ஸம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த ஸோமநாதன் நவீனன் போனபிறகு நரேந்திரனோடு "இந்த நவீன சந்திரனுக்கு ஏதாகிலும் அஸ்தி இருக்கிறதா?" என்று கேட்டான்.



நரே—இவனுக்கென்ன அஸ்தி! ஒரு உத்யோகம், ஒரு வீடு.

ஸோம—என்ன உத்யோகம்?

நரே—சென்னையில் ஒரு பள்ளிக்கூடத்தில் 25-ரூபாய் சம்பளத்தில் ஒரு உபாத்தியாயர் வேலை.

ஸோம—இதற்கு இவ்வளவு டம்பமா?

நரே.—பின் என்ன! நமது ஹிந்துக்களின் லக்ஷணம்? இன்னும் ஒரு விசித்திரம் உனக்குத் தெரியாது. இவன் சென்னையில் ஆங்காங்கு நடக்கும் சபைகளில் பிள்ளையின் விவாஹத்திற்காகத் தகப்பன் பணம் வாங்கக்கூடாதென்று ஒரு முழ நீளம் பிரஸங்கம் செய்வான். அப்படி செய்வது ஸ்வதேச அபிவிருத்திக்குப் பெரிய கேடு என்றும் சொல்வான்?

ஸோ.—இப்படிப்பட்டவர்தானா ஆசாரச்சீர்திருத்தக்காரர்!

நரே.—ஏபா? இன்னும் இவர் ஸாமாசாரமெல்லாம் கேட்டால் வெகு விசித்ரம். இவர் ஸ்கூலில் சத்ரம்போது கேட்டால் சிரிப்பு வரும். பிள்ளை விவாஹத்திற்குப் பணம் வாங்கக் கூடாது என்பது ஒன்றேயன்று. ஸ்திரீகளுக்குப் புருஷர்களைப்போல் ஸ்வதந்திரம் கொடுக்க வேண்டுமாம்? விதவைகளுக்குப் புனர் விவாஹம் செய்ய வேண்டுமாம்? ருதுமதி விவாஹமாம்? ஹிந்துக்களில் ஒற்றுமை உண்டாகவேண்டுமாம்? அப்படியென்றால் என்ன அர்த்தமோ தெரியாது. இவைகளெல்லாம் இவர் அநுசரிக்க வேண்டும்பொழுதுமாத்திரம் ஏதாவது இடையூறு சம்பவித்ததென்பார். தாய் தந்தையர்களுக்குச் சிராத்தம் செய்யவேண்டிய தினத்தில் தான் ப்ராஹ்மஸமாஜத்திற் சேர்ந்தவன்? பிள்ளை விவாஹத்தினத்தன்று தான் முதல்தரமான ஹிந்து! எவனோடு சேர்ந்தாலும் அந்தப்பாட்டை பாடுவார்கள்? வீதியில் போகும்பொழுது பார்த்தால் வாயில் பீடி, சுருட்டு! இப்படிப்பட்டவர்கள்தான் நமது ஸமாஜத்தைச் சீர்படுத்துபவர்கள்? இவர்களோ நமது தேசத்திற்கு ஸ்வதந்திரம் கொடுத்து உத்தரிப்பவர்கள்! இக்காலத்தில் இவர்களுக்கே பூஜ்யதை?

போகட்டும்! அது அப்படி இருக்கட்டும். யாருக்கு வேண்டும்? இது வரையிலும் லீலாவுக்குத்தகுந்த வரன் ஸம்பாதிப்பது ஸுலபமென்று எண்ணியிருந்தேன். இப்பொழுது பார்த்தால் அது அவ்வளவு சுலபமாகக் காணவில்லை.

கன்னிகையின் தகப்பன் ஏழையாயிருந்தால் அவன் எந்தப்பாடாவது பட்டு அதிக வரதக்ஷிணை கொடுத்தால்கூட வரன் அகப்படுவது கஷ்டம். பாவம்! லோகநாதன் கதியென்ன! ஐயோ! லீலாவுக்குத் தகுந்த கணவனே பிறக்கவில்லையா?

நரேந்திரனது கடைசிமொழியைக் கேட்டு ஸோமநாதன் இருந்தபடியே திடீரென்று நின்றுவிட்டான். அவன் கோபக்குறியுடனும் கம்பீரமான குரலுடனும் என்ன? லீலாவுக்குத் தகுந்த கணவனே இல்லையா? இவ்வளவு விசாலமான பூமண்டலத்தில் லீலாவை அடைந்து இல்லறச்சுகம் அனுபவிப்போம் என்று எண்ணுபவனே இல்லையா? ஐயோ! அவ்வளவு ஸௌந்தரியத்திற்கும் ஆதாரமே இல்லையா? என்ன அஸந்தர்ப்பம்!" என்றான்.

நரேந்திரநாதன் அகஸ்மாத்தாய் ஸோமநாதனுக்குண்டான கோபத்தைக் கண்டு திடுக்கிட்டான், "எங்கே? அப்படிப்பட்டவன் எவனிருக்கிறான்? காட்டு என்றான். மறுபடியும் அதே கம்பீரமான தொனியுடன் ஸோமநாதன் "நான்தான்" என்று விடையளித்தான். நரேந்திரனுக்கு வாயெழும்பவில்லை. அவன் முதலில் தனது செவியை நம்பாதவனாய்த்திரும்பவும் அப்படிப்பட்டவன் யார்? என்றுகேட்டான்.

மறுபடியும் அதேரீதியாக "நான்தான்" என்று விடையளித்தான்.

நரேந்திரனுக்கு ஒன்றும் சொல்லத் தோன்றாமல் வெகு நாழிகைவரையில் ஸோமநாதன்

முகத்தை உற்று நோக்கிப் பிறகு, "இது உன் மைத்துனு?" என்று வினவினான்.

ஸோம.—(ஸம்மதக்குறிப்புடன்) நரேந்திரா? வழியில் இந்தப்பேச்செல்லாம் என்னத்திற்கு? வீட்டிற்குச் செல்லலாம். பிறகு எல்லாம் சொல்கிறேன்.

நரேந்திரனும் வேறொன்றும் பேசவில்லை, இருவருமாய் வீட்டிற்கு விரைந்து சென்றார்கள்.

6-வது அத்தியாயம்.

ஒவ்வொரு மனிதனுடைய ஸ்வபாவத்தையும் நாம் ஒரேதரத்தில் அறியமுடியும். நற்குணமாகிலும் துர்க்குணமாகிலும் ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொருதரம் ஒவ்வொரு காரணத்தினால் வெளிப்படும். நமக்கு ஸோமநாதனைப் பரிசயஞ்செய்யும்பொழுது அவன் நல்ல ரூபவான் என்று மாத்திரம் அறிந்துகொண்ட பிறகு நாளடைவில் அவன் தயாளுவென்றும், உதாரகுணமுடையவனென்றும் அறிந்துகொண்டோமன்றோ? இன்றைக்கு நடந்த விருத்தாந்தத்தினால் அவனுடைய இன்னுமொரு நற்குணத்தையும் அறியலாயிற்று. அப்படிப்பட்ட நற்குணம் எதுவென்றால், பிறருக்குத் துக்கம் வந்தால் தானும் துக்கித்தல்.

ஸோமநாதன் முதன்முதல் லீலாவை அந்தச் சாலை மடையில் நின்றிருக்கும்போது கண்டு அவனுக்கு அந்தப் பெண்ணின்மேல் கருணையுண்டானது விசித்ரமன்று. அந்தப் பெண்ணின் ஒப்பற்ற அழகைக் கண்டு அவன் வியப்புற்றிருந்தான். அதற்குள் அந்தப் பெண்ணின் ஒப்பற்ற குணத்தையுங்கண்டு, பின்னும் மிகவும் ஆனந்தபரவசனானான். அவ்வளவு தரித்திரர்களாயிருந்தும் கொடுத்த பணத்தை வாங்கவில்லை. அவ்வளவு ஏழைகளாயிருந்தும் தான் விற்கும் நால்கண்டின் விலையைவிட அதிகம் வாங்கப் பின்வாங்கினாள்? அந்தச் சிறிய குழந்தைக்கு இந்த அற்புதகுணம் இருப்பது ஆச்சரியமன்றோ? ஸோமநாதனைப்போன்ற குணபக்ஷபாதிகளானவர்களின் மனதில் இப்படிப்பட்ட விஷயங்கள் வேரூன்றாமலிருக்கச் செய்யுமா? அந்த ஒரு நாளில் நடந்த விஷயத்திலேயே அந்தச் சிறிய பெண் ஸோமநாதனது ஹ்ருதயத்தில் நன்றாய்ப் பதிந்துவிட்டாள். பிறகு நான்கு, ஐந்துவருஷம் புனர்தரிசனம் இல்லாமற்போனபோதிலும், ஸோமநாதன் மாத்திரம் அந்தக் கன்னிகையை மறந்துபோகவில்லை. இந்த ஐந்து வருஷத்திற்குள் அவள் ரூபத்தையும் மீறி லீலா முற்றிலும் வேறாக மாறியிருந்தாள். நரேந்திரநாதன் அவனுக்கு எழுதியிருந்த கடிதத்தில் லீலாவின் விவாஹத்திற்கு ஏதாகிலும் ஸஹாயம் செய்யவேண்டுமென்று மாத்திரம்தான் எழுதியிருந்தான். அதற்குப் பதில் எழுதுவதற்கு மாறாக அவனே நேராக விஜயபுரத்திற்கு வந்திருந்தான். வந்தவன் சில வியவஹாரத்தை முன்னிட்டு நரேந்திரனோடு லோகநாதன் வீட்டிற்குச் சென்றான். அவன் அழைக்காமல் இவனுப் ஏன் வருகிறானென்பதை அவன் தோழனாகிய நரேந்திரனும் சிறவயது முதற்கொண்டு அவன் குணத்தை நன்றாய் அறிந்தவனாயிருந்தாலும் தெரிந்துகொள்ளவில்லை?

பிறகு லோகநாதன் வீட்டில் அவனுடைய ஸந்நிதி தநிதி ஸகலாவற்றையும் கண்டறிந்து கொண்டு திரும்பிவரும்பொழுது வழியில் லீலா சந்திரனுடைய நடத்தையைச் சந்தேகிப்பதாய்ப் பிறகு கத்தியைக் கண்டு துக்கப்படும் தன்னுடைய மைத்துனலால், வெகு வியஸனமடைந்தான். அந்தக் குணத்தினுடைய மேன்மையினால் தான் இதுவரையில் தன் மித்திரனிடத்திலும் வெளியிடாத தனது மனக்கருத்தை இப்பொழுது அகஸ்மாத்தாய் நடுத்தெருவில் வாய்விட்டுச் சொல்லிவிட்டான்.

இருவரும் வீட்டை அடைந்து உள்ளே பிரவேசித்தார்கள். உள்ளே யாரையும் விடவேண்டாமென்று வாயில் காவலாளருக்குச் சட்டையிட்டு ஸோமநாதன் தனது நண்பனுக்குத் தன் மனக்கோட்டையின் கவாடத்தைத் திறந்து காண்பிக்க நினைத்த அந்த அறையின் கவாடத்தைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டான். நரேந்திரன் பேசத்தொடங்கினான்:—



"ஸோமா! நீ சொல்லிய வார்த்தை உண்மையானால் நீ தேவதைக்கு ஸமானம்.

ஸோம.—சிறிது வெறுப்புடன் ஸாமான்ய மாகிய என்னோடு தேவதைகளை ஒப்பிட்டு அவர்களை ஏன் அவமானப்படுத்துகிறாய்?

நரே.—கட்டத் துணியும் தின்னச் சோறுமில்லாத பரமதரித்ரனுடைய பெண்ணைப் பட்டமஹிஷியாக்க நினைத்தாயே உன்னைத் தேவதையென்று சொல்லாமல் என்னவென்று சொல்லுகிறது.

ஸோம.—அது அப்படியிருக்கட்டும்: நரேந்திரநாதா! இப்பொழுது பார்: எனக்குத் தாய் தந்தை ஒருவருமில்லை. விவாஹ விஷயமாக நான் யாருடைய ஸம்மதத்தையும் பெறவேண்டிய அவசியமில்லை. கேவலம் பிராண மித்ரனாகிய உன் ஒருவனுடைய ஸம்மதத்தைக் கோருகிறேன். நீ இந்த விவாஹத்திற்கு இசைப்படுவாயா? என்று கேட்டான்.

நரே.—நான் சொல்வதென்னவென்றால், கேள்: இந்த விவாஹம் நீ செய்துகொண்டால் யாரும் உன்னை மனுஷ்யனென்று சொல்லத் துணியார்கள். தேவதையாக எண்ணி எல்லோரும் உன்னை புகழ்வார்கள். அதுவுமன்றி, நமது ஹிந்து ஸங்கத்திற்கும் ஓர் அனுகூலம் செய்தவனுகிறாய்.

ஸோம.—இன்னும் ஒன்று: நரேந்திரா! நான் இந்த ஊருக்கு ஒன்று அல்லது இரண்டு தரம்தான் வந்திருக்கிறேன். ஆகையினால், என்னுடைய உண்மையான விருத்தாந்தத்தை இந்த ஊரிலுள்ளோர் யாரும் அறியமாட்டார்கள். இப்பொழுது என் பரிசயமெல்லாம் தெரியப்படுத்தவேண்டாம். தெரியப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. லோகநாத முதலியாருக்கு மாத்திரம் என்னுடைய குலகோத்திரத்தைப் பற்றி ஏதாகிலும் ஸந்தேஹமிருந்தால் அவருக்கு விவரமாகத் தெரியப்படுத்து. அதிகம் சொல்ல வேண்டாம்.

நரே.—நிஜந்தான். ஒரேதடவையில் உன் ஸமாசாரமெல்லாம் சொல்லிவிட்டால், யார் நம்புவார்கள்? கிரமக்கிரமமாய்த் தெரியட்டும்.

அவ்வசனம் கேட்டு வெகுகாலமாகத் தன்னை மறைத்துக்கொண்டிருக்கும் கருப்பு முகிற்கூட்டங்கள் அகஸ்மாத்தாய்த் தன்னை விட்டகன்றால் பளிச்சென்று பிரகாசிக்கும் பூர்ணசந்திரபிம்பத்தைப்போல் ஸோமநாதன் முகம் இப்பொழுது களங்கமின்றி பிரகாசித்தது. ஸோமநாதன் சிறிது மந்தஹாஸத்துடன் நரேந்திரன் முகத்தைப் பார்த்து, ஏதோ சொல்ல யத்தனித்து மறுபடியும் வெட்கத்தினால் முன்னும் பின்னும் பார்த்துவிட்டுப் பேசாமலிருந்துவிட்டான்.

அதைக் கண்டு இதுவரையில் ஒன்றுமறியாமலிருந்த நரேந்திரனுக்குக் கண்ணைத் திறந்துவிட்டதுபோல் எல்லா சங்கதியும் அவன் மனதிற்குத் தெளிவாய்த் தெரிந்துவிட்டது. அவன் சிரித்துக்கொண்டு "இப்பொழுதே லோகநாதன் வீட்டிற்கு ஓடிப்போகட்டுமா? இல்லாவிட்டால் நீயும் என்னோடு வருகிறாயா? என்னத்திற்கு, வேண்டாம் நான்மாத்திரம் போகிறேன்?" என்று சொல்லி எழுந்திருக்க முயன்றான்.

ஸோம.—வேண்டாம் அதுவல்ல.

நரே.—பின் எந்தப்பேச்சு? உனக்கு இப்பொழுது லீலாவின் பேச்சைத்தவிர வேறொன்றும் அவசியமில்லை. லீலாவின் விஷயமாக நீ இவ்வளவுநாள் செய்த லீலைகளெல்லாம் எனக்கு இப்பொழுது நன்றாய் விளங்கிற்று. ஆஹா? என்ன ஆச்சரியம்! என் கண்களில் நன்றாய் மண்ணைத் தூவிவிட்டாய்! இதற்குமுன் எனக்கு அணுவளவேனும் ஸந்தேகத்திற்கு இடங் கொடுக்கவில்லையல்லவா?

ஸோம.—(சிரித்து) லீலாவிஷயமாகவே உன்னை ஒரு வார்த்தை கேட்க எண்ணியிருந்தேன். நான் லீலாவை ஒருதரம் இரகசியமாய்க் காண அனுகூலம் செய்ய முடியுமா?

நரே.—(சிரித்து) என்ன? இப்பொழுதே "கோர்ட்ஷிப்" (Court-Ship) பத்ததியை ஏற்படுத்தப் புகுந்துவிட்டாயா?

ஸோ.—அதுவல்லடா! போகட்டும்! நீ யாதொரு ஏற்பாடும் செய்யவேண்டாம்.

ஆனாலும் நரேந்திரன் மாத்திரம் எழுந்திருந்தான். ஸோமநாதன் அவன் முகத்தைப் பார்த்து எவ்விடத்திற்கு எழுந்திருந்தாய்? என்று கேட்டான்.

நரே.—வேறெவ்விடத்திற்கு? உன் லீலாவிடத்திற்கே.

ஸோம.—இப்பொழுதேவா? இவ்வளவு சீக்கிரம் போகவேண்டிய அவசியமென்ன?

நரே.—அந்தக் கேள்விக்கு விடை உன் ஹ்ருதயத்தையே கேள் என்று சொல்லி, மறுபடியும் சிரித்து "இந்தச் சுபஸமாசாரத்தை அவர்களுக்குத் தெரிவிக்காமல் எப்படி பேசாமலிருப்பேன்?—என்று சொல்லி அவனுடைய உத்தரவை எதிர்பார்க்காமல் வெகுவிரைவாய் எழுந்து சென்றான். ஸோமநாதன் வெகுநேரம் அவ்விடத்திலேயே மௌனமாய் உட்கார்ந்திருந்தான்.

(தொடரும்)

ஸ்ரீமதி பாலசுந்தரிதேவி

---

## Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### Hints on School Excursion.

### மாணவர்களின் உல்லாச சஞ்சாரத்தைப்பற்றிய குறிப்புக்கள்.

சமீபத்தில் வெளிவந்த "ஜனாபிமானி"யில் மாணவர்களின் உல்லாச சஞ்சாரத்தைப்பற்றிய சில குறிப்புக்கள் வெளிவந்திருக்கின்றன. அவை, உபாத்திமார்கள் கவனிக்கும் பொருட்டுக் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

பையன்களை வெளியில் கூட்டிக்கொண்டு போகும்போது அவர்கள் பசியுடனிருக்கக்கூடாது; வயிறு நிறையச் சாப்பிட்டவுடனே கூட்டிக்கொண்டு போவதும் சரியன்று. சாப்பிட்டுச் சற்று நேரமானபின் புறப்படவேண்டும். பையன்கள் திரும்பிவர மிகுந்த நேரமாகும்போலிருந்தால், அவர்களுக்கு நடுவில் பசியெடுக்குமாதலால், அவர்கள் சுலபமாய் எடுத்துக்கொண்டு போகக்கூடிய ஏதாவது ஸ்வல்ப ஆகாரம் கையில் கொண்டுவரச் சொல்லவேண்டும்.

பையன்களை வேறு ஊர்களுக்கு ரெயில் மூலமாய் அழைத்துப் போவதாயிருந்தால், முன்னாடியே ரெயில்வே அதிகாரிகளுக்குக் குறைந்த சார்ஜுகளுக்கு எழுதிக்கொள்ளவேண்டும். அதிகமான மாணவர்கள் போவதாயிருந்தால், சாதாரணமாய் வண்டியில் இடங்களை ரிஸர்வ் செய்துகொள்ளவுங் கூடும். கூடிய மட்டும் இரவில் பிரயாணம் செய்யாதபடி விலக்கிவிடவேண்டும்.

மாணவர்களை வெளியில் கூட்டிக்கொண்டு போகுமுன், அவர்கள் எதைப் பார்க்கப்போகிறார்களோ, அதைப்பற்றி அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். சரித்திர சம்பந்தமான ஸ்தலங்களைப் பார்ப்பதாயிருந்தால், அவர்களுக்கு அந்த ஸ்தலங்களினுடைய சரித்திரங்களைக் கற்பிக்கவேண்டும். தொழிற் சாலைகளைப் பார்ப்பதானால் அவர்களுக்குத் தொழில்முறையை மேலெழுந்தவாறு தெரிவிக்கவேண்டும். பெரியோர்களின் சமாதிகளைப் பார்ப்பதானால், அவர்களுடைய ஜீவிய சரித்திரத்தைக் கற்பிக்கவேண்டும். அவைகளைப் பார்க்கும்போது, உபாத்தியாயர் அவைகளைப்பற்றி அதிகம் பேசுவது உசிதமன்று. மிகுந்த நெருக்கமும் சத்தமும் உள்ள இடங்களில் இருக்கும்போது, உதாரணமாக யந்திரங்களில் வேலை நடந்துகொண்டிருக்கும்போது, உபாத்தியாயர்கள் பையன்களுக்குக் கற்பிக்க முயலுவது நல்லதன்று. எதைப்பற்றிப் பேசவேண்டுமானாலும் வெளியில் வந்த பிறகுதான் பேசவேண்டும்.

பையன்கள் வெளியில் போகையில், அவர்கள் ஒழுங்காய் நடக்கும்படி பயிற்சி செய்யவேண்டும். ஒரு கட்டிடத்தில் ஏதாவது ஒரு அறையைப் பார்க்கவேண்டியிருந்தால், ஒவ்வொருவராய் வரிசையாக உள்ளே நுழையச் செய்யவேண்டும். கூட்டமாய் நுழையவிடக்கூடாது. முதலில் நுழைந்த பையன் அறையின் கோடிக்குப்போக அவன் பின் மற்றவர்களும் வரிசையாகப் போகவேண்டும். பிறகு பையன்கள் உபாத்தியாயரைச் சுற்றி வட்டமாக



நிற்கவேண்டும். யாதொரு ஒழுங்குமின்றிக் கும்பலாய் உபாத்தியாயரைச்சுற்றிக் கூடியிருக்கக்கூடாது. உபாத் தியாயர் எந்த விஷயத்தைப்பற்றியாவது பேசினால் பையன்களெல்லாரையும் பார்த்துப் பேசவேண்டுமேயொழிய, தமக்குப் பக்கத்திலிருக்கும் பையன்களை மாத்திரம் பார்த்துப் பேசக்கூடாது. யந்திரங்கள், விநோதப் பொருள்கள் முதலியவைகள் இருக்கும் அறைகளில் பையன்கள் கண்டபடி அலையாமல் வரிசையாகப் போகவேண்டும்.

ஒரேதடவையில் பலவிஷயங்களைப் பார்க்க முயலுவது கூடாது. ஆனால், நாட்டுப்புறத்திலுள்ள பையன்கள் பட்டணங்களுக்குப் போகும்போது மாத்திரம், அவர்கள் ஒரே சந்தர்ப்பத்தில் பலவிடங்களையும் பார்த்துவருவதுதான் நல்லது. அப்படிப் பார்ப்பதில், ஒரு பட்டணத்தில் ஒரே விஷயமாய்ப் பலவிடங்களிருந்தால் அவைகளுள் ஏதாவது ஒன்றைப் போய்ப் பார்வையிட்டால் போதும். உதாரணமாக: பற்பல கைத்தொழிற் சாலைகளிருந்தால் ஏதாவது ஒன்றைப் பார்த்தால் போதும்; பெரிய பட்டணங்களுக்குப் போனால், பட்டணம் முழுமையும் பொதுவாய் எப்படிக் காணப்படுகிறதென்பதைக் காட்டப் பையன்களைப் பட்டணத்தின் முக்கியமான ரஸ்தாக்களில் நடத்தியழைத்துக்கொண்டு போகவேண்டும்.

பையன்களைக் கடற்கரைக்குக் கூட்டிக்கொண்டு போனால், கடல் நீரின் ஏற்றப்பெருக்கைக் காட்ட ஜலம்மட்டம் உயர்ந்திருக்கும்போதும் ஜலம்மட்டம் தாழ்ந்திருக்கும்போதும் பையன்களைக் கொண்டுவந்து காட்டவேண்டும்.

உல்லாஸ சஞ்சாரத்துக்குப் போகும் மாணவர்கள் கூடியமட்டும் ஒரேவிதமான புத்தியபிவிருத்தியுடையவர்களாயிருப்பதுதான் சிறந்தது. அவர்கள் ஒரேவயதுடையவர்களாயிருக்கவேண்டுமென்பதன்று; ஆனால், அப்படி ஒரேவிதமான அறிவு நிலைமையுள்ள மாணவர்களைத் தெரிந்தெடுப்பது கஷ்டமானதால், ஒரே வகுப்பிலிருப்பவர்களை ஒரு கூட்டமாகக் கூட்டிக்கொண்டு போகவேண்டும்.

உல்லாஸ சஞ்சாரத்திற்கு எத்தனை மாணவர்களை அழைத்துப்போகலாமென்பது, போகுமிடத்தின் தன்மையைப் பொறுத்தது. கைத்தொழிற் சாலைகளையும் பாடசாலைகளையும் பார்க்கப் போகும்போது, அதிகமான மாணவர்களை அழைத்துப்போவது உசிதமன்று. அப்படிப்பட்ட இடங்களுக்கு இருபது பேர்களுக்குமேல் கூட்டிக்கொண்டு போகக்கூடாது. அதிகமான மாணவர்களைப் பெரிய பட்டணங்களைக் காட்ட அழைத்துக் கொண்டுபோனால், அந்தப்பட்டணங்களுக்குப் போனதும், மாணவர்களைச் சிறு தொகுதிகளாகப்பிரித்து, பட்டணங்களைச் சுற்றிப்பார்க்கச் செய்யவேண்டும்.

ஆபீசுகளையும் ப்ரைவேட் கம்பெனிகளையும் போய்ப் பார்ப்பதாயிருந்தால், முன்னாடியே ஆபீஸ் அல்லது கம்பெனிகளின் எஜமானர்களுக்குக் கடிதமெழுதி அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டும். கடிதமெழுதும்போது, இத்தனை பையன்களைக் கூட்டிக்கொண்டுபோக உத்தேசமென்பதைத் தெரிவிக்கவேண்டும். கடிதத்தில் தெரிவித்த எண்ணுக்கு மேற்பட்டுப் பையன்களைக் கூட்டிக்கொண்டு போகக்கூடாது. பையன்களை அடிக்கடி ஒரே ஆபீஸுக்குக் கூட்டிக்கொண்டு போவது ஆபீஸ் அதிகாரிகளுக்கு அருவருப்பையுண்டாக்கும். ஆகையால், ஒரு தடவை ஒரு பட்டணத்திலுள்ள ஆபீஸுக்கும், இன்னொருதடவை இன்னொரு பட்டணத்து ஆபீசுக்குமாக அடிக்கடி மாற்றிப் போகவேண்டும்.

பையன்களுக்கு வழியில் தேக அசௌக்கியம் அல்லது வேறு ஏதாவது காயம் முதலிய உபத்திரவங்கள் ஏற்பட்டால் வைத்தியம்செய்ய உபாத்தியாயருக்குத் தெரிந்திருக்கவேண்டும்.

இந்த உல்லாச சஞ்சாரங்களின் நோக்கம் மாணவர்களுடைய கல்வியபிவிருத்தியாகையால், அதற்கேற்ப நடப்பது அவசியமாகும். உல்லாச சஞ்சாரம் வெட்டிக்கு அலைந்ததாக இருக்கக்கூடாது. மாணவர்கள் ஏதாவது கல்வி சம்பந்தமான விஷயத்தைக் கற்றுக்கொண்டிருக்கவேண்டும். இதற்காக முன்னாடியே இன்ன இடத்திற்குப் போவதால் இன்ன வித்தியா பலன் ஏற்படும் என்பதைத் தீர்மானித்துக்கொண்டு, அதற்குத் தகுந்தபடி மாணாக்கர்களை உல்லாச சஞ்சாரத்தில் நடத்தவேண்டும். உல்லாச சஞ்சாரம் போய் வந்த பிறகு தாங்கள் பார்த்தவைகளைப்பற்றிச் சங்கிரகமான வியாசமெழுதும்படி மாணவர்களுக்குச் சொல்லவேண்டும். பாழாய்ப்போன கோயில் முதலிய கட்டிடங்களைப் பார்க்கப் போகும்போது, பையன்களைக்கொண்டு அக்கட்டிடங்களை அகல நீள விஸ்தீரணங்களை அளக்கச் சொல்லலாம். அவைகளுக்குப் பிளான்களும் தயாரிக்கச் சொல்லலாம்.

முதன் முதல் ஏதாவது ஒரு இடத்துக்குப்போனால் அந்தவிடத்தைப்பற்றிய விவரங்கள் எங்குக்கிடைக்கும் அவ்விடத்துக்குப் போக என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டும்; அதற்காகும் செலவு, அங்குள்ள விசேஷங்கள் ஆகிய இவைகளைப்பற்றி ஒரு ரிகார்டு எழுதிவைத்துக்கொள்ளவேண்டும். இது இருப்பது பின்னால்

அவ்விடங்களுக்குப் போகிறவர்களுக்குச் சாதகமாகும். இந்த ரிகார்டுகளைப் பள்ளிக்கூடங்களின் அதிகாரிகள் பரஸ்பரம் கொடுத்து உதவுவது நல்லது.

பையன்களை வெளியில் கூட்டிக்கொண்டு போகையில் இரண்டு விஷயங்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். பையன்கள் எந்தப் பொருளை அல்லது கட்டிடத்தைப் பார்ப்பதானாலும் அதற்கு வேண்டிய மட்டும் அவகாசம் கொடுக்கவேண்டும். பார்த்தது போதுமென்று அவசரமாகப் பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு வந்துவிடக்கூடாது.

பையன்கள் எந்த இடத்தில் நடந்து போகும் போதும் அவர்கள் தாராளமாய்ப்பேசிக்கொண்டு போக இடங்கொடுக்க வேண்டும். உபாத்தியாயர் பிள்ளைகளிடம் பேசும்போது மாத்திரம் அவர்கள் பேசுவதை நிறுத்திவிடவேண்டும். உபாத்தியாயர் கையில் ஒரு ஊது குழல் வைத்திருப்பது நல்லது. இதனால் பையன்கள் பேசுவதை வேண்டும்போது நிறுத்துவதும், உபாத்தியாயர் பேசுவதைக்கவனிக்கும்படி செய்வதும் சுலபமாகும்.

## Paper Industry.

### காகிதத் தொழில்.

காகிதத்தொழிலைப்பற்றி "சுதேசமித்திரன்" அநுபந்தத்தில் வெளியாயுள்ள வியாசத்தின் முக்கிய அம்சம் வருமாறு:—

காகிதம் மூலப்பொருளுக்குத் தக்கவாறு பலவகை குணங்கள் ஸ்வீகரிக்கும். ஆதியில் பருத்தித்துணி சம்பந்தப்பட்ட பேபரே செய்யப்பட்டது. ஆனால், சமீபகாலமாய் மலிந்த பொருளுக்கே மிகுந்த கிராக்கி ஏற்பட்டு, காகிதத்தின் விசேஷ குணங்கள் குறையத் தலைப்பட்டன. வியாபாரிகள் கண்ணுக்கு நன்றாயும் விலை சகஸமாயும் உள்ளவைகளையே மதிக்கிறார்கள். இப்படிப்பட்ட காகிதம் நீடித்தகாலம் நிற்காது. நாட்பட்டால் அச்சடித்தது மறைந்து கையில் மளமளவென்று முறிந்துவிடும். ஆகவே, இன்னின்ன வேலைக்கு இன்னின்னமாதிரி காகிதம் உபயோகிக்க வேண்டுமென்பதை அறிந்துகொள்ள வேண்டும். பேபரில் பகிரங்கமாய்ப் புலப்படும் குணங்களையும் அந்தரங்கமாய் உள்ள குணங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும். அதாவது: பேபரின் கலர், அழுத்தம், மழமழப்பு முதலியனவும், பேபர் மூலப்பொருள், சாயச்சரக்கு, ரஸாயனச்சேர்க்கை முதலியனவும் கவனிக்க வேண்டும். முதல் தரமான பேபர் பருத்திநூல்களிலிருந்தே செய்யப்படுகின்றன. அடுத்தபடி இதர சாதனங்களுடன் நால்பசை எவ்வளவுக்கெவ்வளவு சம்பந்தப்பட்டிருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு பேபர் நன்றாயிருக்கும். பேபருக்கு மூலசாதனங்களாவன:—நால்பசை: இது ஆதியிலிருந்து உபயோகப்பட்டுவருகின்றது. ஸ்பார்டோ கூழ்: ஸ்பார்ட்டோ என்பது ஒருவகைப்புல்; வைக்கோல்களிலிருந்தும், கோரைகளிலிருந்தும் இவ்விதக்கூழ் தயாரிக்கக் கூடும். மட்டிமரக்கூழ்: இது மிருதுவான மரங்களைக் கண்டனம்செய்து காய்ச்சித் தயாரிக்கப்படுகின்றது. ரஸாயனமரக்கூழ்: இது சாதாரணமரக்கூழ் காய்ச்சும் போது சிற்சில ரஸாயனங்களைச் சேர்த்து மரத்தின் இயற்கைக்குணங்களைக் கழித்தல். சாதாரணமாய் சோடாவையாவது, ஸல்பைட்டையாவது ரஸாயன சாதனமாக உபயோகிப்பதால், சோடாமரக்கூழ் என்றும் ஸல்பைட் மரக்கூழ் என்றும் இருவகைப்படுகிறது.

ஒவ்வொருவிதக்கூழ் ஒவ்வொருவித பேபர் செய்ய உபயோகப்படுகின்றது. சாதாரணமாய்ச் சுத்திசெய்யாத சோடா மரக்கூழிலிருந்து சிறிதளவு சணல்கூழ் கலந்தோ, கலக்காமலேயோ ப்ரௌன் பேபர், ராபர் பேபர் முதலியன செய்யப்படுகின்றன. சோடா மரக்கூழைச் சுத்திசெய்து கொஞ்சம் ஸ்பார்டோகூழ் கலந்து ப்ளாட்டிங் பேபர்தினுசுகள் செய்யப்படுகின்றன. சுத்திசெய்யாத ஸல்பைட் மரக்கூழுடன் சாதாரண மரக்கூழ் அல்லது சணல்கூழ் கலந்து பத்திரிகை காகிதங்கள் கவர்கள் முதலானவை செய்யப்படுகின்றன. இது சுத்திசெய்யப்பட்டு நால்பசையுடனாவது ஸ்பார்டோகூழுடனாவது கலந்து சாதாரண பிரிண்டிங்பேபர்ரகங்கள் செய்யப்படுகின்றன. சாதா மரக்கூழுடன் சணல்கூழ் கலந்து அட்டைக்கடிதாசிகள் பெட்டிதாள்கள் முதலியன செய்யப்படுகின்றன. பேபருக்கு கனம் கொடுக்கவும் மினுமினுப்புஏற்றவும் சீனகளிமண் தினுசுகள் உபயோகிக்கப்படுகின்றன.

ஆர்ட் பேபரானது சீனகளிமண்ணை லேசான பசையுடன் கலந்து காகிதத்தின்மீது ரஸாயனமுறைப்படி பரப்பப்பட்டுச் செய்யப்படுகின்றது. மூலப்பொருள் குறைந்தவளவு உபயோகிக்கப்படுகிறபடியால் இது நீடித்து நிற்காது. கொஞ்சகாலம் நிலையாயிருக்கவேண்டுமானால் நால்பசை அல்லது ஸ்பார்டோகூழ் சம்பந்தப்பட்டுள்ள பேபரையே உபயோகிக்கவேண்டும்; மரக்கூழ் சம்பந்தப்பட்டிருக்கக்கூடாது. அவ்விதபேபர்களுக்கே "ப்ரீபேபர்" என்று சொல்லப்படுவது. 'ப்ரீ' என்றால் மரக்கூழ் சம்பந்தப்படாதது என்பதாம். இன்னின்ன பேபரில் இன்னின்ன கூழ் சம்பந்தப்பட்டிருக்கிறதென்று அநுபவசாலிகள் காகிதத்தைத் தொட்டுப் பார்த்தே சொல்லக்கூடும்.



ஐரோப்பா கண்டத்தில் தயாரிக்கப்படும் காகிதங்கள் நார்வே, ஸ்வீடன் முதலிய தேசங்களிலுள்ள 'பைன் டோட்ளாம்' முதலான விருக்ஷங்களிலிருந்து கிடைக்கும் மரக்கூழிலிருந்து செய்யப்படுகின்றன. இவ்விருக்ஷங்கள் இலேசாயும், சீக்கிரத்தில் வளரக்கூடியவையாயும் இருக்கின்றன. அவை சாதாரணமாகத் தென்னை, பனை, அளவுக்குச் சுமார் 50 அடி உயரம் வளர்கின்றன. இவ்விருக்ஷங்கள் காகிதக்கூழ் செய்வதில் ஏராளமாக உபயோகப்படுகின்றன.

## Castor Oil Preparation.

### ஆமணக்கெண்ணெய் வடித்தல்.

ஆமணக்கு வித்துக்களைச் சோதித்து அவற்றின் மேலுள்ள ஓடுபோன்ற கவசங்களை நீக்கி, அவற்றின் மேல் எவ்வித அழுக்கும் ஓட்டின் துண்டுகளும் பற்றியிராதபடி முற்றிலும் நிர்மலமாக எடுப்பார்கள். பிறகு ஆழமில்லாத அகன்ற இரும்பு பாணலியில் போட்டு, சூடேற்றி அவை கீழும் மேலுமாக இடைவிடாமல் கிளறப்படும். ஆனால், அந்தச் சூடு கையை ஒன்றோடொன்று அழுத்தித் தேய்ப்பதால் உண்டாகும் சூட்டைவிட மேலானதாயிராதாகையால், அவ்வித்துக்கள் அதிகமாய் வாடி வதங்கவும் முடியாமல் ஒருவாறு பக்குவம் செய்யப்படும். அவ்வித்துக்களில் அடங்கியுள்ள தைலத்தின் அம்சங்கள் யாவும் திரவமாகப் போய், வெகு சாதாரணமாய் நசுக்கினாலும், அவற்றிலிருந்து எளிதில் பிழியப்படுவதற்கு ஸௌகரியமான பக்குவத்தை உண்டுபண்ணுவதற்கே இவ்வாறு மிகவும் மிருதுவான சூட்டில் அவை வறுக்கப்படும். பிறகு இவ்வித்துக்களை ஒரு பலமான ஆலையில் போட்டுவிடுவார்கள். அந்த ஆலை, எண்ணெயை யெல்லாம் பிழிந்து, எண்ணெயை ஒரு எனத்தில் வடியச்செய்து சிறுதுமின்றியுள்ள பிண்ணாக்கை மற்றொரு பக்கத்தில் தள்ளிவிடும். ஆலையிலிருந்து வடியும்போது எண்ணெய் மிகவும் வெளுப்பாயிருக்கும். சுத்தமான ஒரு இரும்புக்கொப்பரையில் இவ்வெண்மையான எண்ணெயையும் வேண்டியவளவு தண்ணீரையும் கொட்டிச் சில நேரம் காய்ச்சுவார்கள். அத்தைலத்திலிருந்த அசுத்தமான அம்சங்கள் மேலே நீர்மட்டத்தில் வந்துமிதக்கும்; அப்பொழுது அந்த அழுக்குகள் யாவும் அப்புறப்படுத்தப்படும். அப்பால் கொப்பரையில் ஜலத்தின்மேல் நிர்மலமான எண்ணெய்மட்டும் மிதந்துநிற்கும். எண்ணெயில் அடங்கிய வேறு சில பசைகளும் மாப்பண்டமும் ஜலத்தில் கரைந்துவிடும்; அல்ப்யூமன் என்னும் கருப்பொருள் கூட்டினால் ஒருவாறு தோய்ந்து கொள்ளும். இறுதியிற் கூறிய இச்சரக்கு ஜலத்திற்கும் எண்ணெய்க்கும் இடையில் படிந்திருக்கும். அப்பொழுது ஜாக்கிரதையாக மேலே மிதக்கும் சுத்தமான எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டு, மிகச் சொற்பமான ஜலத்தை மீண்டும் வடித்தெடுத்த அவ்வெண்ணெயுடன் கூட்டி, மற்றொரு சுத்தமான பாத்திரத்தில் காய்ச்சுவார்கள். அதிலிருந்து ஜலபாகம் முடிய ஆவியாகப்போனதும் ஒரு வாயகன்ற பாத்திரத்தில் தைலத்தைச் சேர்த்து வைப்பார்கள். எண்ணெய் ஆறின பிறகு குளிரக்குளிர, பார்ப்பதற்கு மிகவும் தெளிவாகவும், ஒளியூடுருவக்கூடியதாகவும் ஆய்விடும். கடைசியிற் கூறியவிதமாகப் பக்குவம் செய்தால், எண்ணெயிற் கலந்திருந்த நுட்பமான அசுத்தங்கள் நீங்கி எண்ணெய் எவ்விதமான அழற்சியையும் உண்டுபண்ணாமல், குணத்திற் சிறந்ததாகும்; ஒருவிதமான வெகுட்டலை உண்டாக்கும் வாஸனையும் குறையும். ஆனால், தீயை அதிகமாகப் போடாமல் அவ்விஷயத்தில்மட்டும் விசேஷ கவனஞ் செலுத்தவேண்டும். தீ அதிகரித்தால், எண்ணெயில் வெகுட்டும் வாஸனையும், ஒருவிதச் சிவந்த நிறமும் ஏற்பட்டு, பார்ப்பதற்கு நிர்மலமாகவும் தோற்றாது.—வைத்தியகலாநிதி.

---

## Books Received.

### புத்தக வரவு.

**மனத்திற்குறுத்தும் மதிவிளக்கம்.**

ஸ்ரீமான் பிரம்பை பொன்னுவேற்பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற மனத்திற்குறுத்தும் மதிவிளக்கம் என்னும் அரியநூல் ஒன்று வரப்பெற்றோம். நூலாசிரியர், தமது நுண்ணிய அறிவைக்கொண்டு சிறந்த பல புத்தகங்களை ஆராய்ச்சி செய்து அவைகளின் கருத்துக்களை ஒன்று திரட்டிப் பொது ஜனங்களுக்கு உபயோகப்படுமாறு புத்தக ரூபமாக வெளியிட்டுள்ளார். இதைப் படிக்கும் நமது சகோதர சகோதரிகளின் அறிவு விசாலித்து அவர்களின் நல்லொழுக்கம் நாளுக்குநாள் அபிவிருத்தியடைய

மென்பதில் ஐயமில்லை. இவ்வரிய நூலின் பெருமையை நமது அபிமானிகள் அறியும் பொருட்டு, சிலவற்றைக் கீழே குறிப்பிடுகிறோம்.

அதிகாரி, தாய்தந்தை, குரு, யஜமானன், மூத்தோன் என்னும் இவர்கள் உனக்கிட்ட கட்டளையை வருத்தத்திற்கஞ்சாது சோம்பலின்றிச் செய்து முடித்து, அவர்கட்கு திருப்தியை உண்டாக்கு. அந்த உனக்கு உள்ள படியே செய்ய முடியாதாயின், வணக்கமிகு வார்த்தைகளால் உன்னெண்ணத்தைத் தெரிவாய் தெரிவிப்பாய், தெரிவிப்பாய்.

∴

உண்ணும் உணவிற்கும், உடுக்கும் உடைக்கும் உள்ளபடியே வழியில்லாத ஏழைகட்கும், ஆதரவற்ற அநாதிருந்தர், அதிபால்யர், கிராமிணியானர், கூன், குருடு, நொண்டி, சப்பாணி முதலாயினோர்க்கும் உன்னாலியன்ற உதவியைச் செய்வதற்கு முந்துவாய், முந்துவாய்.

∴

சிலர் மனிதவுருவத்தை மாத்திரம் பெற்று குணத்தாலும், செய்கையாலும் மிருகத்திலுந் தாழ்ந்த முழுமூர்க்க மூடர்களாயிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களின் விரோதமுண்டாய காலத்துத் தனித்துத் திரிவதும், வீட்டின் புறத்து உறங்குவதும், ஆபத்தெனவே அறிவாய், அறிவாய்.

∴

உனக்குத் தெரியாதவர்கள், சேர்ந்திருக்கும் கூட்டத்தில், உனக்குத் தெரிந்த ஒருவனிடம் உனக்கு ஆகாதவனைச் சுட்டிக் காழ்வாகப் பேசுவது தகாதாம், தகாதாம்.

∴

ஒருவனுடைய சொல்லைக் கொண்டு நல்லவனென்பதைவிட அவன் செய்கையைக்கண்டு நல்லவனென்பது நன்றாம், நன்றாம்.

∴

அதிருஷ்டமும், ஆயுளும், ஆரோக்கியமும், ஜனவழியும் எப்படிப் பார்க்கினும் உன் பார்வைக்கெட்டாமல் வெகு தூரத்திலிருப்பதால், உன்வசமாக நின்ற பணமொன்றினையே நம்பி, ஆகாத காரியங்களையே இடைவிடாது செய்வதை விடுவாய், விடுவாய்.

∴

மந்திரியால் மன்னனுக்கும், மனைவியால் மணாளனுக்கும், தனயனால் தந்தைக்கும், தன் தம்பியால் தமையனுக்கும், மாணாக்கனால் குருவிற்கும், வேலைக்காரனால் யஜமானனுக்கும், பெருமையை உண்டாகக் கூடுமாதலால், யாவரையும் அலட்சியஞ் செய்யாதிருத்தலே அழகாம், அழகாம்.

∴

உன்வீட்டில் இருப்பவர்களுடன் நீ மரியாதைக்குறைவாகப் பேச நேரிடின் வெளியே நயமைக் கௌரமாக நினைத்திருப்பவர்களின் செவியிற்பட்டால் என்ன நினைப்பார்கள் என்னும் ஞாபகத்துடன் பேசுவது தகுதியாம், தகுதியாம்.

∴

புகழ்ச்சிப்பிரியர், தம்பெருமையாளர் முற்கோபிகள், கொடையாளர் என்னும் இவர்கள் கோபத்திற்கு அடங்கிப் போவார்க்குப் பலனுண்டாமென்று பார்வாய், பகர்வாய்.

∴

பறக்கும் பக்ஷிகள் எதனாலுந் தடைப்படாமல் குறித்த இடத்தைச் சேருவதுபோல சாமர்த்தியத்தாலாகாத காரியமும் பிரியமானவார்த்தையுடையவர்கட்குப் பகையும் இல்லையென்று என்னுவாய், என்னுவாய்.

∴

ஆயுதங்கள், வாத்தியங்கள், ஸ்திரீகள், உத்தமர்கள், புத்தகங்கள், பூமி ஆகிய இவைகள் பரிபாலனம் செய்பவர்களால் பிரகாசிக்குமென்பது பிரசித்தமாம், பிரசித்தமாம்.

∴

உனக்குள்ள வியாதிகளின் தன்மைகளை விரிவாய் வைத்தியனிடம் சொன்னால் அதிகப்பணம் கேட்பானென்று பயந்து உள்ள வியாதிகளை ஒளித்துச் சொல்லல் ஈனமாம், ஈனமாம்.

∴

தெய்வ பக்தியில்லாதவனுக்கு ராஜபக்தியும், விநய அங்கீகாரஞ் செய்யாதவனுக்கு விதி



விலக்கும், உலக வியவகாரம் முதலிய சகதத்துவங்களைச் சுபாவமென்று உணராதவனுக்குத் தர்க்க நிவர்த்தியும் இல்லையாம், இல்லையாம்.

∴

கல்வி, செல்வம், ஜாதி, ஒழுக்கம், அன்பு, வல்திரம் இவைகளேயன்றி, இன்னும் பல உனக்கு இருப்பினும், ஒவ்வொன்றால் ஒவ்வோரிடத்தில் மதிப்புண்டாமாதலால், எல்லாவிடத்திலும் ஒன்றையே காரணமாகக் காட்டிக் கொண்டு போவது தனமன்று என்பதைக் கடைப்பிடி, கடைப்பிடி.

இப்புத்தகத்தின் விலை அணா 4. வேண்டுவோர், சென்னை சோமசேச்வரன் பேட்டை, "ஞானோபகாரி" ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குசேலர்:

இந்நூல், வித்துவான் மொ. வெ. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்களால் இயற்றப்பெற்றது. வல்லூர்த் தேவராஜ பிள்ளையவர்களால் காவிய ரூபமாகப் பாடப்பெற்ற 'குசேலோபாக்கியானம்' என்னும் நூலை ஆதாரமாகக்கொண்டு மிக எளிய நடையில் சிறுவர் சிறுமியர் யாவரும் படித்தறியும் பொருட்டு நாடக ரூபமாக எழுதப்பட்டுள்ளது. இதில், ஆங்காங்கு பொது ஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்வதற்கான விஷயங்கள்: ஈசுவரபக்தி, உலகத்தின் போக்கு, நட்பின் மேன்மை, ஞானிகளின் உயர்வு, முதலியன மிகவும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்நூலை நமது பெண்கள் படிப்பதால், அடக்கம், கற்பொழுக்கம் முதலியவை வருமென்பதில் ஐயமில்லை. இதில் ஆங்காங்குக் காணப்படும் பல நீதிகள் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றன.

* ஏழைகளை ஏழைகள் தாம் மதித்து உபசரிப்பார்கள்; செல்வர் சிறிதும் மதிக்கமாட்டார்கள்; அதுவும் அல்லாமல் அவமரியாதையும் செய்வார்கள்; யாசிக்கப்போனவர் மானமுள்ளவராயிருந்தால் உடனே உயிரைவிடுவர். உலகத்தில் ஏழைகளைத் தாய்தந்தையர்களும் வெறுக்கிறார்களென்றால்; விவரித்துச் சொல்லவும் வேண்டுமோ? யாதொரு விருப்பமும் இல்லாமலே பணக்காரரிடத்தில் ஒருவர் போனால், எதையோ உத்தேசித்துத் தங்களிடம் வந்திருப்பதாக அவர்கள் எண்ணிக்கொண்டு, ஏழைகள் மனம் புண்ணாகும்படி பலவிதமான குறிப்புச் சொற்களைச் சொல்லி ஏளனம் செய்வார்கள். * * பாழான செல்வம் பெற்றவுடனே கர்வம் தோன்றி வாயுள்ளவர் ஊமைகளாகவும், கண்ணுள்ளவர் குருடராகவும், காதுள்ளவர் செவிடராகவும் ஆகிவிடுகிறார்கள். செல்வத்தின் செயல்களோ அளவிடமுடியா; பலவிதமான ஆசைகளையும் உண்டுபண்ணும்; தெய்வ பக்தியை முற்றிலும் ஒழிக்கும்; நல்லவரையும் பகைவராக எண்ணச்செய்யும்; மாதர்களின் கற்பை அழிக்கும்; இன்னும் இவைபோன்ற பல தீம்புகளையும் செய்யும்.

∴

* * பலர் தமக்குச் செல்வம் வந்தவுடனே தெய்வத்தை நிந்திப்பவராயும் பெரியவரை அவமதிப்பவராயும், வம்புக்கும் தோளுக்கும் தாவிக்கும் செலவு செய்பவராயும் இருக்கின்றார்கள்.

∴

ஒருவன் செல்வனாயிருக்கும் வரையிலும் அவனுடன் கூடியிருந்து சுகித்து அவன் இளைத்துப் போனவுடன் தாமும் அவனது சிநேகத்தை மறந்து அவனிடம் போவதையே நிறுத்திவிடுவது இழிந்தவர்களின் தொழிலன்றோ?

∴

* * ஒழுக்கமுடையவர்கள் எங்கிருந்தாலும் சிலராகவே இருப்பார்கள். அவர்கள் தங்கள் கடமைகளைத் தூங்கியெழுந்தது முதல் படுக்கும்வரையிலும் கிரமமாகச் செய்து கொண்டிருக்கிறார்களாதலால், எங்கே போனாலும் அந்தப் பழக்கத்துக்குத் தவறி நடக்கமாட்டார்கள்.

∴

"ஒருவன், தான் எண்ணிமுடித்த செயல் நல்லதென்று ஆரம்பித்து, அதிலேயே ஆழ்ந்திருந்துவிட்டானானால், பகவான் அந்தப் பர்த

வித்தியாபாநு:—(ஜ்ஞானோபகாரி)* இதனுள் தொழிலைப் பற்றியவிஷயங்கள் அருமையாக எழுதப்பெறுகின்றன.

ஞுடைய குடும்பயோகக்ஷேமங்களைத் தான் கவனித்துக்கொள்ளுகின்றேன்" என்று கீதை முறையிடுகின்றது.

பெரியவர்கள் மற்றவருக்குத் துன்பந்தரக் கூடாதென்று எண்ணிச் சிறிய சொல்லைப்பற்றி மயங்குவார்கள். ஆனாலும், அவர்களுடைய உள்ளக்கருத்தை அறிந்த நல்லவர்கள், அப் பெரியவர்களை நன்றாய் உபசரித்துக் குளிரவைப்பார்கள்.

'பிறரை உபசரித்தல்' என்பதனை விரதமாகக் கொண்ட பெரியவர் எக்குலத்தும் பிறந்திருப்பார்கள். 'அவருக்கு ஏற்றம், இழிவு, நல்லவர், கெட்டவர் என்னும் வேறுபாடே தோற்றாது; எல்லாரையும் ஒருங்கே உபசரிப்பார்கள்.

---

## Notes.
## குறிப்புக்கள்.

இந்தியாவில் அபிரகச் சுரங்கங்கள்.

அபிரகம் என்பது ஒருவகை தாதுப்பொருளைச் சேர்ந்தது. இது பாத்திரவகைகள் சிம்மினிகள் முதலியன செய்யவும், ஆகாய விமானங்களைக் கட்டவும், இன்னும் பலவிதமான சாமான்கள் செய்யவும் உபயோகப்படுகின்றது. தென்னிந்தியாவில் நெல்லூர் போன்ற இடங்களிலும், வடக்கே ஹஸாரிபாக் மான்பூம் முதலான இடங்களிலும் இச்சுரங்கங்கள் உண்டு. 1914-ம் வருஷத்தில் 2¼ லட்சம் பவுன் மதிப்புள்ள அபிரகம் இந்தியாவிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றது. ஹஸாரிபாக் என்னும் சுரங்கமானது மிகவும் பெரியதென்றும் அது அந்த ஜில்லாவில் 1000 மைல் விஸ்தீர்ணத்திற்கு வியாபித்திருக்கின்றதென்றும், மிஸ்டர் எஸ். வி. ருத்திர என்பவர் கூறுகிறார். மேலும் மான்பூம் என்னுமிடத்தில் தங்கமும் கிடைக்குமென்று இவர் அபிப்பிராயப்படுகிறார்.

* * *

காகிதக் கூழ்.

இந்தியாவில் காகிதம் செய்வதற்கான கூழும் இதரச் சரக்குகளும் 1913-14ம் வருஷத்தில் 247, 636 அந்தர்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றின் மதிப்பு 115,800 பவுன்களாகும். அவை இந்தியாவிலிருக்கும் சில மில்லுகளுக்கே செலவாய்விட்டன. காகிதம் செய்வதற்கான இப்பண்டப் பொருள்கள் இந்தியாவில் ஏராளமாக இருக்கின்றன. எனினும், இப்பொருள்களுடன் சேரும் சில இராஸயன வஸ்துக்கள் மலிவாகக்கிடைக்காததனால் இத்தொழில் சீக்கிரம் பரவுவதற்கு இல்லாமலிருக்கின்றது.

* * *

விஷபேதி காலத்தில் செய்யவேண்டிய குறிப்புகள்.

சுத்தமான தண்ணீரை உபயோகிக்கவேண்டும். மதுபானங்களை நீக்கவேண்டும். அஜீர்ணத்தை உண்டாக்கும்படியான பதார்த்தங்களை முற்றிலும் நீக்கவேண்டும். பசித்திருத்தல் நித்திரைக்குறைவு, அசுத்த வஸ்திரம், கடின முயற்சி முதலிய காரணங்களை நீக்கவேண்டும். சரீரத்தில் அனல் குறையாமலிருக்கும்படி வயிற்றைச் சுற்றி சம்பளி அல்லது பிளானலைச் சுற்றிவைக்கவேண்டும். வீட்டிற்குச் சமீபத்திலுள்ள கொட்டங்கள், சாக்கடைகள், கக்கூஸுகள் முதலியன சுத்தமாயிருக்கவேண்டும். வீடுகள் சரியாக வெள்ளையடிக்கப்படவேண்டும். வியாதி கண்ட பிணியாளிகளுடைய படுக்கை வஸ்திரம் முதலானவைகளைச் சுட்டெரிக்கவேண்டும். அல்லது கெந்தகப்புகையைக் காட்டித் தண்ணீரில் துவைக்கவேண்டும். பேதிகண்ட வீட்டைப் பத்துநாள் வரையில் காலியாக வைத்திருக்கவேண்டும். பேதி நடமாடுங் காலங்களில் சடை சந்தை முதலிய ஜனக்கூட்டமான இடங்களுக்குப் போகக்கூடாது. அதிக மனக்கவலைக்கும்



பயத்துக்கும் இடங் கொடுக்கக்கூடாது.
—பெண்கல்வி.

* * *

புகையிலை விதையிலிருந்து எண்ணெய்.

புகையிலை விதையிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கப்படுகின்றது. அந்த எண்ணெயானது ஆளிவிதை எண்ணெயைப்போல் வார்னீஷ்கள் செய்ய உபயோகப்படுகின்றது. ஒரு ஏக்கருக்கு ஏறக்குறைய மூன்று அந்தர்கள் விதைகிடைக்கும். இதிலிருந்து 1¼ அந்தர் எண்ணெய் எடுக்கலாம் அதன் பிண்ணாக்கில் நைட்ரோஜன் இருப்பதால் அது உபயோகமற்றதென்று சொல்லுவதற்கில்லை.

* * *

இந்தியரின் அருங்குணங்கள்.

லண்டனிலிருக்கும் ஈஸ்டு இந்தியன் அஸோஸியேஷன் என்ற சங்கத்தின் மீடிங் ஒன்றில் லார்டு ரோனல்ட்ஷே அக்கிராசனம் வகித்து ஓர் பிரசங்கம் செய்தார். அப்போது அவர் இந்தியருடைய அருங்குணங்களைப்பற்றி பின்வருமாறு சொன்னார்.

"இந்தியர்களிடம் மரியாதையான உபசாரம், மனமார்ந்தபட்சம் ஆகிய பல நற்குணங்கள் இயற்கையில் அமைந்திருக்கின்றன. அவ்விஷயத்தை நான் அநுபவத்தில் கண்டிருக்கிறேன். இந்தியரின் நட்பை எவனாவது உண்மையில் அடைய விரும்பினால் அதற்கு இந்தியர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை. ஆங்கிலேயர் இந்தியரிடம் சிறிது பட்சமும் மரியாதையும் காட்டினால், உடனே இந்தியர்கள் பலமடங்கு பட்சமும் மரியாதையும் காட்டுவது உண்மை.

* * *

பெண்கள் படிப்பு.

பெண்களுக்குக் கல்வியின் அவசியத்தைப் பற்றியும், அவர்களுக்கு எப்படிப்பட்ட கல்வி வேண்டுமென்பதைப்பற்றியும் "கலைமகள்" பின்வருமாறு எழுதுகிறது.

பெண்களுக்குரிய பாடங்களனைத்தும், பலவிதத்தும் அவர்களுக்குப் பயன்படத்தக்கதாகவே அமைதல்வேண்டும். உணவு அமைத்தல் அவர்கட்கு உரிய செயலாதலின், சமையல் இப்படிச் செய்தல்வேண்டும்? காய்கறிகள் இப்படிச் சமைத்தல் வேண்டும்? பலகார வகைகள் இப்படிப் பண்ணல்வேண்டும்? இன்னின்ன பொருள்கள் இன்னின்ன அளவாக அவற்றிற்குச் சேர்த்தல்வேண்டும்? என்பதை அவர்கள் கல்வி வாயிலாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இல்லறம் அவர்களாலேயே இனிது நடைபெற வேண்டியிருத்தலின், இல்வாழ்க்கையை இப்படி நடத்தல்வேண்டும்? கணவனை உண்டி முதலியவற்றால் இவ்விதம் பாதுகாத்தல் வேண்டும்? மாமனார் மாமியார் முதலியவரிடத்து இப்படி நடந்துகொள்ளல் வேண்டும்? குழந்தைகளை இப்படி வளர்த்தல்வேண்டும்? என்பது முதலியவற்றையும் அக்கல்வி அவர்களுக்குத் தெரிவிக்கவேண்டும். சுகாதாரத்தைப் பெண்கள் பெரிதும் தெரிந்துகொள்ளவேண்டும். தையல், இசைப்பாட்டு முதலியவற்றையும் பயில வேண்டும்.

---

காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

விவேகபாநு:—(டர்பன்) * * * இனிமையாயும், உருக்கமாயும், புராணக்கருத்தை விளக்குவதாயும் கோர்த்தியான எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. * * இம்மாதிரியான சமயஞானம்புகட்டும் புத்தகங்கள் ஒவ்வொரு தமிழ்ப் பெண்மணிகளிடத்தும் இருத்தல் அவசியமாகும்.

சுதேசமித்திரன்:—* * * இப்படிப்பட்ட கதைகள் நம்நாட்டுப் பெண்பாலர்கள் பலர்கையில் இருக்கத்தக்கது.

பிரபஞ்சமித்திரன்:—* * * நல்ல தமிழில் எளிய நடையில் எழுதப்பட்டு எல்லாருக்கும் பயன்படக் கூடியதாயிருக்கின்றது.

மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

# Bound Volume of the "JANOPAKARI"

**Vol. 1. Pages 356.**

The Volume contains excellent contributions from well-known writers on various topics.

**From January—December 1916.**

**The Editor's Notes are unique.**

## Price Rs. 4.

---

## ஔவை.

நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிகளையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம், பலநூல்களைத் தழுவியும், புலவர்களின் கர்ண பரம்பரையை அநுசரித்தும், வேலூர் ஊர்ஹீஸ்காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டது. சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்து கொள்ளக்கூடியது; வித்துவான்கள் பலராலும் மெச்சப்பட்டது. இது முன்னம் நம் "ஜனோபகாரி" பத்திரிகையில் சில மாதங்களாக வெளிவந்துகொண்டிருந்தது; இப்போது புத்தக ரூபமாக நல்லகாகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை அணா 6.

ஜனோபகாரி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணா 5.

## காரைக்காலம்மை சரிதை.

கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக்கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம், சேக்கிழார் நாயனார் அருளிச்செய்த பெரிய புராணத்தில் உள்ளபடி மேற்குறித்த பு. க. ஸ்ரீநிவாஸாசாரியராலேயே எளிய நல்ல வசன நடையில் இயற்றப்பட்டது; பற்பல பத்திரிகைகளாலும் பாராட்டப்பட்டது. இதுவும் நமது ஜனோபகாரி பத்திரிகையில் முன்பு வெளிவந்தது; இப்போது புத்தக ரூபமாக அச்சிடப்பட்டுள்ளது; நல்ல கிளேஸ் பேபரில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது.

விலை அணா ஒன்று.

**மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.**



# ஜனோபகாரி.

**(JANOPAKARI)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. | பிங்கள ௵ வைகாசி௴ MAY, 1917. | சஞ்சிகை 5. No. 5.


## Study of Books.


By Mr. P. K. Sreenivasachariar,

*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*


### நூல்களைப் படித்தல்.

அறிவெல்லாம் இன்பம். அறியாமையெல்லாம் துன்பம். நாம் ஏதேனும் அரிய பெரிய விஷயம் ஒன்றைக் கண்டறியும்போது உண்டாகும் ஆனந்தமும், அறியவேண்டிய ஒன்றை அறியமுடியாதபோதும் ஒன்றை மறந்துவிட்டபோதும் உண்டாகும் கஷ்டமும் அநுபவத்தில் நாம் கண்டிருக்கின்றோம். இந்த அறிவு இருவகைப்படும். அவை இயற்கையறிவும், செயற்கையறிவுமாம். மக்களுக்கு இயற்கையில் அறிவு இருப்பினும், அதனைச் சீர்ப்படுத்துவதும், வளர்ப்பதும் செயற்கையறிவேயாம். அதனையே கல்வியறிவென்பர். கல்வியறிவில்லாதபோது இயற்கையறிவு சிறப்புறாது. அதனாலேயே, தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார்,

"கல்லாதா னொட்பம் கழியநன் றாயினும்,
கொள்ளார் அறிவுடையார்"

என்றார். இதன் கருத்து—படியாதவனது அறிவுடைமை நல்லதாகாது; அஃது ஒருகால் மிக நன்றாயிருப்பினும், நீர்மேல் எழுத்துப் போல்வதோர் விழுப்பாடாதலால், நிலைபெற்ற நூலறிவுடையார் அதனை மதிக்கமாட்டார் என்பதாம். சிறந்த நூல்களைக் கற்றல் மிக்க இன்பந்தருவதாகும். அதனாலேயே நாயனார்,

(1) "தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்." என்றும்,

(2) "நவில்தொறும் நூல்நயம்போலும், பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு." என்றும்

கூறினார். இவற்றின் பொருள் :—(1) (கற்றறிந்தார்) தாம் இன்பமடைவதற்குக் காரணமாகிய கல்விக்கு உலகத்தவர் இன்பமடைதலால், அந்தச் சிறப்பை நோக்கி, அவர்கள் பின்னும் அக்கல்வியையே விரும்புவர். (2) (நற்குணமுடைய மனிதர் தம்மில் செய்த சிநேகம் பழகுந்தோறும் இன்பஞ்செய்யும்.) அது நூல்களின் பொருள் படிக்குந்தோறும் படிப்பவர்க்கு இன்பஞ்செய்தலை ஒக்கும் என்பதாம்.

நல்ல நூல்களைப் படியாது வீணாகக் கழிக்கும் நாள் நல்லோரிடம் இல்லை. இதனை நாலடியாரில்:

"கல்லாது போகிய நாளும், பெரியோர்கண்
செல்லாது வைகிய வைகலும்,—ஒல்வ
கொடாஅ தொழிந்த பகலும், உரைப்பின்,
படாஅவாம் பண்புடையார் கண்."

என்றார். அதாவது:—படிக்காமல் வீணே சென்ற தினமும், பெரியோரிடத்துப் போகாது கழிந்த தினமும், இயன்றவற்றைக் கொடாதொழிந்த தினமும் மேன்மக்களிடம் இல்லையென்பதாம். கற்பவர்கள் இவ்விடத்திலல்லாமல் வெவ்வேறு தூரதேயங்களிலுள்ளவற்றையும், அதாவது எல்லாவிடத்துப்பொருள்களையும், இக்காலத்திலல்லாமல் வெவ்வேறுகாலத்திலுள்ளவற்றையும் அதாவது எல்லாக்காலத்திலுள்ளவற்றையும் காணும் ஞானக்கண்ணுடைமையால், அவர்களையே 'கண்ணுடையவர்' என்னவேண்டும். கல்லாதவர் அப்படிப்பட்ட ஞானக்கண்ணில்லாமல் நோய் முதலியவற்றால் துன்பஞ்செய்யும் ஊனக்கண்ணையுடைமையால், அவர்களைப் 'புண்ணுடையவர்' என்னவேண்டும். யாவரையும் அவர்கள் மகிழும்படி கலந்து அளவளாவி இனி நாம் இவரை எவ்வாறு எவ்விடத்தில் எப்பொழுது சேர்வோம் என்று நினைக்கும்படி கல்வியறிவுடையவர் நல்லொழுக்கமுடையவராய், அப்பொழுதும் பிற்பொழுதும் இன்பந்தரும்படி பிரியமும் இதமுமான சொற்களைச் சொல்வர். அதனால் அவரிடத்தில் எல்லாரும் அன்புடையவராவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சிலர் சிறிதே கற்றுப் பெருமிதம் பாராட்டுகின்றார்கள். அஃது அமையாது: மேன்மேல் கற்கவேண்டும். மணலிலுள்ள சிறுகுளம் தோண்டிய அளவாக நீர் சுரப்பதுபோல, மனிதர்க்கு அறிவும் கற்ற அளவாகத்தான் வளரும். பேரறிவைச் சம்பாதிப்பதற்கு மிகுதியாகக் கற்கவேண்டும். அறியவேண்டியவைகளையெல்லாம் அறிந்து நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாமல் ஒருவன் கற்றோர்சபையில் ஒன்றைச் சொல்லப்போனால், அவன் சொல்லும் வார்த்தையில் சொல்லும் சரியாயிராது; பொருளும் சரியாயிராது. ஆதலால் அவன் தனது பேதைமை வெளிப்பட்டு அவமானமுறுவன்.

"கல்லாது நீண்ட வொருவ னுலகத்து
நல்லறிவாள ரிடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந்தற்றே; இராஅது
உரைப்பினும் நாய்குரைத்தற்று."

என்னும் நாலடியாராலும் கல்வியறிவில்லாதவன் சபையில் இகழ்ச்சியுறுவனென்பது விளங்கும். நூல்களைக் கல்லாத ஒருவன் தான் அறிவுடையவனென்று தன்னைத் தானே மதிக்கும் மதிப்பு, தன்னை வந்து கண்ட அறிவுடையவனொருவனோடு தான் ஏதாவது ஒரு வார்த்தை சொல்லும் வரையிலுமே நிற்கும்; சொன்னால், தனது அறியாமை வெளிப்பட்டு அம்மதிப்புப் போய்விடும். இதனாலேயே, சிவப்பிரகாசசுவாமிகள், தமது நன்னெறியில்,

"எழுத்தறியார் கல்விப்பெருக்க மனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம்:—எழுத்தறிவார்
ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை"

என்றார். கற்றவன் சொல்லும் சொல்லுக்குக் கல்லாதவன் ஏற்ற உத்தரஞ் சொல்ல அறியாது விழிப்பனென்க. விளைவுக்கு ஏலாத களர்நிலமானது தானும் உழுதல் முதலிய தொழில்களால் விரும்பிச் சிறப்பிக்கப்படுதலன்றி உயிர்களுக்கும் உணவு முதலியவற்றை உதவாததுபோல, கல்லாதவர் தாமும் கௌரவமடைந்து மற்றவர்க்கும் அறிவு முதலியவற்றை உதவார். ஆதலால், உலகத்தில் வடிவத்தோடு காணப்பட்டு 'இவர்கள் இல்லாதவரல்லர்; சீவித்திருக்கிறார்கள்' என்று சொல்லுமளவினராதலன்றி, பயன்படும்படி சீவித்திருப்பவரல்லர்: கல்லாதவர் பிறந்தும் பிறவாதவர் போல்வர் என்க. விஷயங்களை விரைவில் சூக்ஷ்மமாய்க் காணுதலும், மறவாமையும் முதலியன அறிவிற்குச் சிறப்பாகும், அஃது இல்லாதவனுடைய உடம்பின் வளர்ச்சியும், அழகும், சிறப்பில்லாதனவாம். இதனாலேயே,

"குஞ்சி யழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,
மஞ்ச ளழகும் அழகல்ல;—நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவுநிலைமையால்
கல்வி யழகே யழகு." என்றும்,

"மயிர்வனப்பும், கண்கவரும் மார்பின் வனப்பும்,
உகிர்வனப்பும், காதின் வனப்பும்,—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல; நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு." என்றும்



கூறினார் புலவர். இதனால் கல்லாதவரது உடலழகு, சுண்ணச்சாந்தினால் மாட்சிமைப்பட அலங்கரித்துச்செய்யப்பட்ட சித்திரப்பிரதிமையினுடைய எழுச்சியும் அழகும்போலும் என்பதில் ஆக்ஷேபமென்ன?

செல்வத்தைச் சம்பாதித்தலும், காத்தலும், பயன்கொள்ளுதலும் அறிவுடையார்க்கே கூடுவன; ஆதலால், கற்றவரே செல்வத்திற்கு உரியவர்; அங்ஙனம் சம்பாதித்தல் முதலியன அறிவில்லாதவர்க்கு இயலாவாதலால், அவரே தரித்திரத்திற்கு உரியவரும் ஆவர். அங்ஙனமன்றி, கற்றோர் தரித்திரராயினும், ஒழுக்கம் முதலிய எவ்வகையினும் கெடார்; கல்லாதவரோ, செல்வமுடையவராயின், செருக்கு முதலியவற்றால் பலவகையினும் கெடுவர்.

படித்தவர்கள் தாழ்ந்த சாதியில் பிறந்தவரானாலும், பெருமையுடையவரே. இவரது பெருமையளவாகிய பெருமை, உயர்ந்தசாதியில் பிறந்த படியாதவர்க்கு இல்லை. திருவள்ளுவர் தாழ்ந்தசாதியாராயினும் சிறிய புலவராதலால், உயர்ந்தசாதியிற் பிறந்தும் அவ்வளவு கல்வியறிவில்லாத சங்கப்புலவரினும் மேற்பட்டார். இது பற்றியே, சோமேசர் மொழிவெண்பாவில்,

"மெய்த்த திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார்;கல்விநலம்
துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார்;சோமேசா!-உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார், கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு." என்றார்.

"கடைநிலத்தோ ராயினும் கற்றறிந்தோரைத்
தலைநிலத்து வைக்கப்படும்." (நாலடியார்).

"தோணி யியக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டா னென்றிகழார்:-காணாய்;
அவன் துணையா வாறுபோயற்றே: நூல்கற்ற
மகன் துணையா நல்ல கொளல்." (நாலடியார்)

"வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்,
மேற்பா லொருவனும் அவன்கண் படுமே."
(புறநானூறு)

"நாற்பாற் குலத்தின் மேற்பாலொருவன்
கற்றில னாயின் கீழிருப்பவனே." (நறுந்தொகை)

"எக்குடி பிறப்பினும், யாவரே யாயினும்,
அக்குடியிற் கற்றோரை வருக வென்பர்."
(நறுந்தொகை)

"ஆக்க மறிவா னலது பிறப்பினுல்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க:—நீக்குப்
பவரார்? அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு." (நன்னெறி)

என்பனவும், சாதியினும் கல்வியே சிறப்பென்பதை வற்புறுத்தும்.

மிருகங்களுக்கும் மனிதர்க்கும் உணவு, தூக்கம், அச்சம், ஆசை முதலியன பல பொதுப்பட்ட குணங்களாக இருப்பினும், மிருகங்களினும் மனிதர் சிறந்தவரென்பதற்கு ஏற்ற விவேகமுதிர்ச்சி கல்விகற்றவர்க்கே உள்ளது.

நூல்களைக் கற்றலே பெரும்பான்மைத்தொழிலாகவுடையவர் நம்நாட்டில் மிகச்சிலரே. மற்றைநாடுகளிலோ, நூற்கல்வியே தொழிலாகவுடையவர் பலர் உள்ளார். நம்நாட்டில் இப்பொழுது உள்ள சிறிது கல்வியும் பெரும்பாலும் இராஜாங்கத்தார் பரீக்ஷைக்காகவே ஏற்பட்டதாயிருக்கிறது. எனவே, நம் நாட்டுக்கல்வி ஜீவனார்த்தமாக ஏற்பட்ட கல்வியென்று சொல்வது தவறாகாது. படிக்கிறவர்களின் தொகை இங்கிலாந்து முதலிய பிறநாட்டில் அதிகமென்பதற்கு, அந்நாட்டில் வெளிவரும் நூல்களின் தொகையும், அவை விரைவாக அடுத்தடுத்துப் பிரசுரமாவதும் சாக்ஷியாகும். ஷேக்ஸ்பியர் மில்டன் முதலிய மகாகவிகள் இயற்றிய நூல்கள் எத்தனைபதிப்புக்கள் எத்தனையெத்தனை உருவங்களுடன் வெளிவந்துள்ளன! நம்நாட்டில் தெய்வப்புலவர்களாகிய கம்பர், திருவள்ளுவர் ஆதியோர் இயற்றிய அரிய பெரிய நூல்கள் எத்தனைபதிப்புக்கள் வெளிவந்துள்ளன?—மிகவும் சொற்பமேயென்பதை வெளியிடவும் வேண்டுமோ? பிறநாட்டிலுள்ளார் சபைகளிலும் சங்கங்களிலும் கல்வியறிவை நாடிப் பழகுவதில் உருசியுடைமைபோல, நம் நாட்டவர்கள் உடையவர்களா? அவர்கள் ஒருவரையொருவர் சந்திக்குங்கால், நூல்களைப்பற்றியும், பத்திரிகைகளைப்பற்றியும் வெகுவாகப் பேசுவது வழக்கமின்று செவியுறு

கிரும். நம் நாட்டவர்களோ அங்ஙனமின்றி, பின்வார்த்தைகளையே பேசுவது வழக்கமாக இருக்கிறது. நம் நாட்டவர்கள் கல்வியறிவை மிகுதியாகச் சம்பாதிக்காதொழியப் பொருஞ் செல்வமும், அதிகாரமும் மிகுதியாகப் பெறுரென்பது, அறிவுடையவர்வார்த்தையாக இருக்கிறது. அருங்கலைவினோதர்களாலேயே நம்நாடு முற்காலத்தில் பெருமை பெற்றது. அத்தகைய பெருமையை மீட்டும் பெறவேண்டுமாயின், கல்வியறிவைப் புருஷர்களும் ஸ்திரீகளும் மிகுதியாகச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும்.

"அறம், பொருள், இன்பமும், வீடும் பயக்கும்;
புறங்கடை நல்லிசையும், நாட்டும்;-உறுங்கவலொன்று
உற்றுழியும் கைகொடுக்கும்; கல்வியினூங்கில்லை;
சிற்றுயிர்க் குற்ற துணை." (நீதிநெறிவிளக்கம்)

"எல்லாவுயிர்க்கும் இறைவனே யாயினும்,
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண்ணாதே."—
(திருமந்திரம்)

ப. சு. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## Facts about Tuberculosis.

## டியூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகத்தைப்பற்றிய விஷயங்கள்.

டியூபர்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகமானது டியூபர்கில் பாஸில்லி என்னும் நுண்ணிய கிருமியால் உண்டாகின்றது. இது மனிதர்களுக்கு வரும் வியாதிகளுள் மிகவும் கொடியது. இந்த நோயானது ஆண்களைக்காட்டிலும் பெண்களினிடத்தே அதிகமாகப் பரவியிருப்பதைக்காணலாம். ஏனெனில், பெண்கள் ஆண்களைப்போல் அவ்வளவு நல்ல காற்றோட்டமுள்ள வெளிகளில் வந்து உலாவக்கூடாமல் வீட்டிற்குள்ளே அடைபட்டிருப்பதால், அவர்களே இந்த வியாதிக்கு அதிகமாக ஆளாகிறார்கள். நல்ல செங்கல் கட்டடத்தில் வசிப்பவர்களைக்காட்டிலும், தரித்திரத்தினாலும், சுகாதாரகுறைவாலும், எப்போதும் ஈரமாயிருக்குமிடத்தில் வசிக்கநேர்ந்துகொண்டிருப்பவர்களிடத்தில் இந்நோய் அதிகமாகப் பரவியிருக்கிறது. இக்கொடிய நோயால் உலகத்தில் ஏராளமாக உயிர்ச்சேதங்கள் நேரிடுகின்றன. உலகத்தில் பிரதி வருஷமும் இந்நோயால் 5,000,000 ஜனங்கள் மாண்டுபோகிறார்கள். இந்தியாவைப்பற்றிக் கவனிக்கின்: இங்கு மொத்தஜனத்தொகையில் ஏறக்குறைய பத்துலட்சம் பேர்கள் இந்நோய்க்கு இரையாகிறார்கள். அதாவது: பிரதிவருஷமும் இந்தியாவானது, பம்பாய் அல்லது கல்கத்தாவின் ஜனத்தொகைக்குச் சமானமான ஜனங்களை க்ஷயரோகம் காரணமாக இழந்துவிடுகின்றது.

### வியாதி பரவும் விதம்.

இந்த க்ஷயரோகமானது ஒருவித நுண்ணிய கிருமியால் உண்டாகின்றதென்று முன்னமே குறிப்பிட்டோம். இந்தக் கிருமியானது தூசியோடு கலந்து காற்று உடலுக்குள் சேர்ந்துவிடுகின்றது. இன்னும், இக்கிருமிகளுள்ள வஸ்துக்களின் மீது ஈக்கள் உட்காருவதனால், அவை இவ்வீக்களின் கால்களில் ஒட்டிக்கொள்ளுகின்றன. அப்படியே அந்த ஈக்கள் நாம் உண்ணும் ஆகாரங்களில் வந்து உட்கார்ந்து இவ்வியாதியைப் பரவச்செய்கின்றன.

க்ஷயரோகி இருக்குமிடத்தில் வீட்டிலுள்ள சிறுபிள்ளைகளை அடிக்கடி போகவிடுதல் கூடாது. இந்த வியாதியால் க்ஷயரோகியின் நுரையீரல் சிதிலமடைந்து அங்குக்கிருமிகளும் அதிகமாக உற்பத்தியாகின்றன. வியாதியஸ்தர் இருமும்போது கோழையுடன் இக்கிருமிகள் வெளிவருகின்றன. வெளியே உமிழப்பட்ட கோழையானது உலர்ந்து போனவுடன் அக்கிருமிகள் மறுபடியும் பக்கத்து அறைக்குள்ளேயே உலாவுகின்றன. அப்போது கிருமிகளின் வீரியம் குறைவதில்லை. அறையில் நல்ல காற்றோட்டமுண்டாகும்படி ஜன்னல் கதவுகளைத் திறந்து அறையைச் சுத்தப்படுத்தினால் கிருமிகள் வெளியேபோகும். அப்போது சூரியவெளிச்சத்தினால்



அவை வீரியமிழந்து கெடுதியற்றவைகளாகிவிடுகின்றன.

### வியாதி பரவுவதற்கான சில காரணங்கள்.

முக்கியமாக க்ஷயரோகமானது சுகாதாரக் குறைவால்தான் உண்டாகிறதென்று கூறலாம். மனிதன் திடசரீரத்தோடும், சமவெளியாயுள்ளதும் நல்ல காற்றோட்டமுள்ளதும், ஜனநெருக்கமில்லாததுமான இடத்தில் வசித்துவந்தால் க்ஷயரோகமென்னும் வியாதியானது கிட்ட அணுகவே அணுகாது. ஆனால், நல்ல காற்றோட்டமில்லாததும், அதிக ஜனநெருக்கமுள்ளதும், சுகாதாரக் குறைவுள்ளதுமான இடத்தில் வசிப்பவர்கள், தங்களுக்கு ஏற்கனவேயிருக்கும் தேகவன்மை குறைந்து பலஹீனப்பட்டு, கடைசியில் இந்நோய்க்கு ஆளாவார்களென்பதில் ஐயமில்லை.

நாகரிக வளர்ச்சிக்கும் க்ஷயரோகத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப்பற்றிக் கவனிப்போம்:—

**கைத்தொழில் முயற்சி**:—நாட்கள் செல்லச் செல்ல ஆங்காங்குப் பலவிதக் கைத்தொழில்கள் ஸ்தாபிக்கப்படுகின்றன. ஜனங்கள் தாங்கள் ஏற்கனவே அனுஷ்டித்துவரும் வியவசாயத் தொழிலை ஒழித்துக் கைத்தொழில் வியாபாரம் ஆகிய இவைகளில் வேலைசெய்ய முன்வருகிறார்கள். இதனால் பலவிடங்களில் புதிய பட்டணங்களும் தொழிற்சாலைகளும் நூதனமாக ஏற்படுகின்றன. தொழிற்சாலைகள் நடைபெறுவதற்கு ஏராளமாக ஜனங்கள் தேவை. ஆதலால், அவ்விடங்களில் ஜனநெருக்கம் அதிகமாகிச் சுகாதாரக்குறைவு ஏற்படுகின்றது. இன்னும், ஜனங்களுக்குத் தங்கள் வேலைகளுக்குள்ள போட்டி, அதிக நேரம் வேலை செய்தல், குறைந்த கூலி, தரித்திரம், சிலசமயங்களில் வேலையில்லாமல் கஷ்டப்படுவது ஆகிய பல விஷயங்களினாலும் ஏற்கெனவே இருக்கும் தேக ஆரோக்கியம் கெட்டு, கடைசியில் பலவித நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

**சுகாதாரக்கேடு**:—ஜனங்கள் பட்டணங்களில் அதிகமாகச் சேரச்சேர அவர்களுக்குக் குடியிருக்கப் போதுமான இடங்கள் கிடைப்பதில்லை. ஒரே இடத்தில் பல குடும்பங்கள் வசிக்க நேரிடுவதனால், சுவாசிக்க நல்ல காற்று இல்லாமையாலும், வீட்டின் அறைகளில் போதுமான வெளிச்சக் குறைவாலும் ஜனங்கள் சுகாதாரம் கெட்டு நோய்க்கு உட்படுகிறார்கள்.

**நாகரிகமும், க்ஷயரோகமும்**:—நாகரிக வளர்ச்சிக்கும் க்ஷயரோகத்துக்கும் எவ்விதமான சம்பந்தமிருக்கின்றதென்பதைக் கவனிப்பது அவசியமாகும். நாகரிகமானது மனிதவாழ்க்கையில் சிலமாறுதல்களைச் செய்திருக்கின்றது. கிராமங்களிலுள்ளவர்களும் பட்டணங்களிலுள்ளவர்களும் இம்மாறுதலுக்கு உட்பட்டு இருக்கின்றார்கள். கிராமாந்தரங்களில்: அந்நிய நாடுகளின் போட்டியால் பல கைத்தொழில்கள் அழிந்துபோயின; ஜனங்கள் ஏராளமாகப்பட்டணங்களில் குடியேறி விட்டார்கள்; சுகாதார முறைகள் நன்கு கவனிக்கப்படுவதில்லை; அசுத்தமான தண்ணீர் பானத்திற்கு உபயோகப்படுத்தப்படுகின்றது; இவ்விதமான பல விஷயங்களினாலும் கிராம வாழ்க்கையானது மாறுதலடைந்து சுகங்கெட்டினால் ஜனங்கள் பல நோய்களுக்குள்ளாகிறார்கள். பட்டணங்களில் வசிப்பவர்களின் வாழ்க்கையானது நாகரிக வளர்ச்சியினால் எவ்வித மாறுதலடைந்திருக்கிறதென்பது கவனிக்கத்தக்கது: பட்டணங்களில் ஜனநெருக்கம் மிகவும் அதிகம்; வாழ்க்கைக்குரிய போட்டிகள் பல இருக்கின்றன; குடியிருப்பதற்கான வீட்டுவாடகையும் உணவுபதார்த்தங்களின் விலையும் பலமடங்கு உயர்ந்திருக்கின்றன; சுகாதாரக்குறைவு; நல்ல காற்றோட்டமில்லாமை; குடிவகைகளின் மிகுதி; தேக ஆரோக்கியக் குறைவு ஆகிய இவ்விஷயங்களினால் பட்டணவாசிகள் நோய்களால் வருந்துகிறார்கள்.

### வியாதிகளின் சிகித்ஸைகள்.

க்ஷயரோகமானது அதிகமாக ஜனங்களுக்குள் பரவாமலிருக்கும்படி செய்யப்பொது ஜனங்களின் கூட்டுறவு வேண்டும். க்ஷயரோகத்திற்குக் காரணமான டியூபர்கில் பாஸில்லி என்னும்

கிருமிகள் நல்ல தேகாரோக்கிய முள்ளவர்களை அவ்வளவாகத் தாக்குவதில்லை. தேகத்தளர்ச்சியுள்ளவர்களிடத்திலோ இக்கிருமிகள் நன்கு வேரூன்றி அவர்களிடத்தில் க்ஷயரோகத்தை விருத்தி செய்கின்றது.

நல்ல வெளிச்சமும் காற்றோட்டமு மில்லாத அறைகளில் தங்கியிருத்தல் கூடாது. இரவும் பகலுமாக எப்போதும் வீட்டிலுள்ள அறைகளின் ஜன்னல்களைத் திறந்து வைத்திருக்கவேண்டும்.

நாம் வேலைசெய்யும் இடங்களிலும், நல்ல வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கின்றனவா வென்பதைக் கவனிக்கவேண்டும்.

ஈக்கள் அநேக வியாதிகளைப் பரவச்செய்கின்றன. அவைகளில் க்ஷயரோகம் ஒன்று. இவ்வீக்கள் வியாதிஸ்தர்களிடத்திலிருந்து விஷக்கிருமிகளை மற்றவர்களிடத்திற் கொணர்ந்து சேர்க்கின்றன. ஆதலால், வீட்டில் அதிகமாக ஈக்கள் சேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். ஈக்கள் சேரும்படியான அழுகின பதார்த்தங்களை வீட்டில் வைக்கக்கூடாது.

உண்ணும் உணவு முதலியவற்றின் மீது ஈக்கள் வந்து உட்காராதபடி அவைகளை மூடி வைக்கவேண்டும்.

வீட்டில் பெரியோர்கள் யாராவது க்ஷயரோகத்தால் பீடிக்கப்பட்டால், அவர்களுடன் சிறுவர்களைக் கூடியிருக்கும்படி விடக்கூடாது. சிறுவர்களின் தேகாரோக்கியம் சற்றும் கெடாமல் சுகாதாரமுறைகளை நன்கு அநுசரித்துப் பாதுகாக்க வேண்டும்.

ஜனங்கள் ரோட்டில் போகும்போது வழியில் எச்சில் துப்புவது சகஜமாயிருக்கின்றது; அது மிகவும் கொடிய வழக்கம். அவர்கள் அவ்வாறு செய்யாமல் சாக்கடையில் துப்புவது நல்லது.

---

## Ideals of Indian Women.

## இந்திய ஸ்திரீகளின் லக்ஷியங்கள்.

பெர்ஹாம்பூரிலிருக்கும் ஸ்திரீகளின் சங்கத்து வருஷாந்த மீட்டிங்கில் அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று மிஸஸ் குமுதினி பாஸு கேட்டுக்கொள்ளப் பட்டதன்மேல், அவர் மேற்குறித்த கூட்டத்திற்கு அக்கிராசனம் வகித்து "இந்திய ஸ்திரீகளின் லக்ஷியங்கள்" என்ற விஷயத்தைப்பற்றி ஒரு வியாசம் வாசித்தார்.

மிஸஸ் குமுதினி பாஸு வியாச ஆரம்பத்தில், தன்னை இக்கூட்டத்திற்கு அக்கிராசனாதிபதியாக நியமித்ததைப்பற்றி மிக்க சந்தோஷப்படுவதாயும், சங்கத்தின் முற்போக்குக்கான பல விஷயங்கள் நன்கு கவனிக்கப்பட்டிருப்பதைப் பற்றி மிகவும் திருப்தியடைவதாயும், சங்கத்தில் போதுமான மெம்பர்கள் சேராதிருக்கிறதைப் பற்றி வியசனிக்கிறதாகவும், இக்குறையானது நாளாவட்டத்தில் நிவிருத்தி செய்யப்படவேண்டுமென்றுஞ் சொல்லி, மேலே குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிப் பின்வருமாறு சொன்னார்.

### சமூகத்தில் ஸ்திரீகளின் நிலைமை.

"சகோதரிகளே! இவ்வுலகத்திலிருக்கும் இயற்கைப் பொருள்கள் அனைத்தும் ஸ்திரமாக ஒரே இடத்தில் நின்றுகொண்டிருக்கிறதில்லை. ஒவ்வொன்றுக்கும் சலனம் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சலனத்தைத்தான் சாஸ்திரவல்லோர் கதிவிதி (Law of Motion) என்று சொல்லுகிறார்கள். இவ்வித முக்கியவிதியை அநுசரித்து வரும் இயற்கைப்பொருள்களில் ஒன்றுபோல மெதுவும் அமைதியுமான நமது கீழ்நாடுங்கூட நகர்ந்துகொண்டிருக்கிறது. 20 வருஷங்களுக்கு முந்தி இவ்விதச் சலனத்தையும் மாறுதல்களையும் கண்டறிவது கஷ்டமாக இருந்தது. இப்பொழுதோ இந்த விஷயம் ஸ்கூல்களிலும், கோயில்களிலும், சமாஜங்களிலும், சங்கங்களிலும், நமது சொந்த வீடுகளிலும் மாறுதலின் அடையாளம் பிரத்தியக்ஷமாய்த் தோன்றியிருக்கின்றது. இந்த மாறுதலைத்தான் ஜனங்கள்



"புதிய உணர்ச்சி" அல்லது "நவீன ஊக்கம்" என்று சொல்லுகிறார்கள். தேசம் முழுவதையும் இப்புதிய ஊக்கம் பிடித்து ஆட்டி வருகிறது. அதனால் நாங்கள் நவீன ஜனனத்தை எடுத்திருக்கிறோம் என்ற விஷயத்தை ருஜுப்படுத்துவதற்கு உலகத்தின் பல பாகங்களில் பல உறுதியான அடையாளங்கள் தோன்றியிருக்கின்றன. நமது ஜனங்கள் ஜனசார முறையில் அபிவிருத்தியடையும் வழியைச் சுறுசுறுப்பின்மையினாலும், உதாசீனமாயிருந்ததனாலும் கவனித்து வாராததனால் ஸ்திரீகளின் நிலைமை உயர்த்தப்படாமல் தாழ்ந்திருந்தது. பூர்வகாலத்து ஸ்திரீகளின் உத்தமமான நடவடிக்கைகளை இப்பொழுதிருக்கும் ஸ்திரீகள் அநுஷ்டிக்காததனால், நமது ஸ்திரீகளின் நிலைமை இவ்வளவு தாழ்ந்த ஸ்திதிக்கு வந்துவிட்டதென்று இப்பொழுதுதான் நமது ஜனங்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள். பூர்வகாலத்து ஸ்திரீகளினால் நமது இந்தியா மகோன்னத ஸ்திதியை அடைந்திருந்தது. வேதம் உபநிஷத்துக்கள் ஏற்பட்ட சிறந்த காலத்தில் இந்திய ஸ்திரீகளின் நிலைமை, மகோன்னத ஸ்திதியிலிருந்தது. அவ்வளவு உன்னத பதவியை உலகத்திலுள்ள எந்தத்தேசத்து ஸ்திரீகளும் அடைந்ததில்லை. அக்காலத்தில் கார்க்கி, ஆத்ரேயி, லீலாவதி இவர்களைப் போன்ற உத்தம ஸ்திரீகள் இருந்து வந்தார்கள். இப்பெயர்கள் உலகத்திலிருக்கும் எல்லா ஜாதியாருக்கும் பெருமையைக் கொடுக்கத்தக்கனவாயிருக்கின்றன. கணவனை இழந்த ஸ்திரீகளைக் கணவனுடன் உடன்கட்டை ஏறி மடியும்படியாகக் கட்டாயப்படுத்தும் காலத்தைப் பற்றியாவது, சிசுவதை செய்துவந்த காலத்தைப் பற்றியாவது, கணவன் இறந்துபோனால் வேறு விவாகம் செய்துகொள்ளாமல் சாகும்வரையிலும் விதவையாக இருக்கவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்ட அவ்விதக்காலத்தைப்பற்றியாவது, பால்யவிவாகமுறை அநுஷ்டித்துவரும் காலத்தைப் பற்றியாவது நான் பேசவரவில்லை. மேற்கண்ட முறைகள் நிரம்பக் கொடுமையானவை; இந்திய ஸ்திரீகளை ஹிம்சைக்குள்ளாக்கும் முறைகளாகும். முகத்தை மூடிக்கொள்ளும் படுதா முறையையும் நாம் வெறுக்கிறோம். கார்க்கி, ஆத்ரேயி, லீலாவதியைப் போன்ற பெண் இரத்தினங்களை ஜனிக்கும்படி செய்த அவ்விதச்சிறந்த காலத்தைத்தான் நாம் விரும்புகிறோம். சீதை, சாவித்திரி, அருந்ததி, காந்தாரி ஆகிய இவர்களைப்போன்ற உத்தம பதிவிரதா சிரோமணிகள் வாழ்ந்த காலத்தில் அநுஷ்டிக்கப்பட்டு வந்த ஸ்திரீகளின் நடவடிக்கைகளை இக்காலத்து ஸ்திரீகள் அநுஷ்டித்து வரவேண்டுமென்பதைதான் கோருகிறேன்.

### புதிய ஊக்கம்.

"சகோதரிகளே! பலனற்றவையும் குறைகூறத்தக்கவையுமான ஜனசார முறைகள் தாமாகவே அழிந்து போய்க்கொண்டிருக்கின்றன. புதிய ஊக்கம் தோன்றியிருக்கிறது. இனி நாங்கள் வீட்டின் சுவர்க்குள்ளே அடைபட்டிருக்கும் காலம் போய்விட்டது. கதவுகள் பலமாகத் தட்டப்படுகின்றன. நாம் கதவைத்திறந்து விடவேண்டும். இல்லாவிட்டால் தட்டப்படும் வேகத்தினால் சுவர்கள் கீழேவிழுந்துவிடும். நாங்கள் ஒரே இடத்தில் அசையாமலிருக்கமுடியாது; நாம் நகரவேண்டும். மாறுதல்களுக்கும் உட்படவேண்டும். நகரவேண்டிய இடம் இதுதான் என்பதை நிச்சயப்படுத்திக்கொண்ட பிறகு நகர வேண்டும். அதைத் தெரிந்துகொள்ளாமல் நகருவோமானால் குழியில் கொண்டுபோய் இறக்கிவிடும். உயர்தரப்படிப்பை அவசியம் கற்றுவரவேண்டும். அப்படிச் செய்வதில், நற்குணங்களையும் நன்னடக்கைகளையும் கைவிடக்கூடாது. நல்லொழுக்கங்களையும் தேசசுதந்திரங்களையும் நழுவவிடும் பேர்வழிகளைப் போல, (ஆணானாலும் சரி, பெண்ணானாலும் சரி) கொடுமையானவர்களை நான் மனதிலுங்கூட ஸ்மரிக்கமாட்டேன். ஸ்திரீகளுக்குள் உயர்தரப் படிப்பு பரவினால்தான் நமது ஜாதியும் சீராக அமைக்கப்படும்; நமது சமூகம் திருத்தியமைக்கப்படும்; மேலுக்குப்பாவனை காட்டிவருவதில், நாம் நல்ல காரியங்களைச் செய்து முடிக்கலாம் என்ற தப்பெண்ணம் நமக்குள் பரவியிருக்கிறது. அதில்

பிரயோஜனமில்லை. ஸ்திரீகளுக்கு உயர்தரப் படிப்பைக்கொடுத்தால், அவர்கள், ஆசார சம்பந்தமும், மத சம்பந்தமும், ராஜீயசம்பந்தமுமானகாரியங்களில் புருஷருடன் கலந்து உழைப்பார்கள்.

இந்திய ஸ்திரீகளின் உத்தமமான குணம்.

"சகோதரிகளே! ஒவ்வொரு ஜாதியிலும் நற்குணங்களும் துர்க்குணங்களும் உண்டு. மேனாட்டார்களின் உத்தம குணங்களை நாம் அனுஷ்டிக்க வேண்டும். அவர்களிடமிருக்கும் துர்க்குணங்களை அனுஷ்டிக்கக்கூடாது. மேனாட்டாரிடம் தோன்றும் படிப்பில் பிரியம், கடமைகளைச்செய்து முடிப்பதில் சிரத்தை, தன்னலம் பாராட்டாத ஊக்கம் முதலிய பல நற்குணங்களை நாம் அனுஷ்டித்து வரவேண்டும். இந்திய ஸ்திரீகள் பூர்விக ஸ்திரீகளின் வம்சத்தில் பிறந்தவர்கள் என்ற பெருமையும், வேறு பல நற்குணங்களையும் பெற்றிருக்கிறார்கள். அவைகளை உலகத்தார் பலர் அநுசரித்து வரவேண்டும்.

நமது வீடுகள்.

"சகோதரிகளே! நமது வீடுகளை மையமாக வைத்துக்கொள்ளுவோம். சமூகமும் தேசமும் அந்த வட்டத்தின் சுற்றளவாக வைத்துக் கொள்ளுவோம். நாங்கள் எப்பொழுதும் மையத்திலிருந்து சுற்றளவுக்குச் செல்லவேண்டும். இப்படி செய்தால்தான் நமது கடமைகளை முற்றும் செய்து முடித்தவர்களாவோம். ஒரு பறவை கொல்லப்பட்டுப் போனபிறகு அதன் இறகை ஒழுங்குபடுத்துவதில் பிரயோஜனமென்ன?

குழந்தைகளை வளர்த்தல்.

"ஸ்திரீகளுக்குரிய சிறந்த கடமையாகிய குழந்தைகளை வளர்க்கும் முறைக்கும், படிப்பு அவசியமென்பதை நான்வற்புறுத்துகிறேன். இந்த விஷயந்தான் நமக்கு ஏற்பட்டிருக்கும் பெரிய பொறுப்பாகும். தாய்மார்கள் படித்தவர்களாக இருந்தால்தான், பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளை முடிப்பவர்களாவார்கள். ஆகையால், வீட்டுக் காரியங்களை ஒழுங்காக முடிப்பதற்கும், உயர்தரப்படிப்பு ஸ்திரீகளுக்கு அவசியம் என்று மறுபடியும் வற்புறுத்துகிறேன்."

## Co-Operation in Denmark.

## டென்மார்க்கில் ஐக்கியமுயற்சி.

டென்மார்க் என்னும் தேசமானது ஐரோப்பா கண்டத்திலுள்ளது. அது ஒரு பெரிய வியவசாய தேசமாகும். அங்கு ஜனங்களுக்குள் ஐக்கியமுயற்சியானது நன்கு வேரூன்றிப் பற் பல தொழில்களும் ஐக்கிய சங்கங்களினாலேயே நடத்தப்பட்டுவருகின்றன.

அத்தேசத்தில் வியவசாயிகளில் பெரும்பாலோர்க்குக் கோழி வாத்து முதலான ஜந்துக்களை வளர்த்து முட்டைகளை உற்பத்தி செய்வதே தொழிலாக இருக்கின்றது. 1870-ம் வருஷம் வரையில் இம்முட்டைகள் உள்ளூருக்குள்ளேயே விற்பனை செய்யப்பட்டு வந்தன. பிறகு, கொஞ்சங்கொஞ்சமாக இத்தொழிலானது பல அம்சங்களிலும் அபிவிருத்தியடையத் தலைப்பட்டது. 1875-ம் வருஷ முதல் 1878-ம் வருஷத்திற்குள் அதாவது சுமார் மூன்று வருஷகாலத்திற்குள் சாஸ்திரீய முறையில் முட்டைகள் உற்பத்தி செய்வதான அனுஷ்டிக்கப்பட்டு, வெளிநாடுகளுக்கு அவை ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனால், ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் அவ்வளவு திருப்திகரமாக அமைக்கப்படாமலிருந்தன.

இந்த வியவசாயிகள் தங்களிடத்தில் சேரும் முட்டைகளைத் தகுந்த லாபத்திற்கு விற்கமுடியாமல் கஷ்டப்பட்டுவந்தார்கள். வியவசாயிகளிடத்தில் சேரும் முட்டைகளை உள்ளூர் வியாபாரிகள் வாங்கி மொத்த வியாபாரிகளுக்கு விற்பார்கள். பிறகு இவர்கள் தம்மிடத்தில் அதிக



ஸ்டாக்கு சேர்ந்தவுடன் வெளியூர் வியாபாரிகளுக்கு ஏற்றுமதி செய்வார்கள். இதனால் வியவசாயிகள் தங்களுடைய முட்டைகளுக்குக் குறைந்த விலையே பெற்றுவந்தார்கள். அவர்களுக்கு அப்போதைக்கப்போது மார்க்கெட்டுகளில் ஏற்படும் விலை விவரங்கள் தெரிய ஹேதுவில்லாமலிருந்தது. வியாபாரிகளையே நம்பியிருக்க வேண்டியதாயிற்று. வெளியூர்களுக்கு மொத்தமாக ஏற்றுமதி செய்யப்படும் முட்டைகளானவை அங்குப் போய்ச் சேருவதற்குள் தன்மையில் கெடுதலடைந்துவந்தன. சில சமயங்களில் உண்பதற்கும் லாயக்கில்லாமல் போய்விடுவதுண்டு.

இவ்வித கஷ்டங்களை நிவிருத்தி செய்யும் பொருட்டுப் பலசீர்திருத்தங்கள் செய்யப்பட்டன:— (1) வியவசாயிகளிடமிருந்து முட்டைகளைக் காலதாமதமின்றிச் சேர்க்கவும், (2) முட்டைவியாபாரிகளுக்கு, அவைகளை உடனுக்குடன் ஏற்றுமதி செய்வதற்கான சௌகரியங்களைச் செய்துகொடுக்கவும், (3) முட்டைகளைத் தரம்வாரியாகப் பிரித்துப் பரிசோதனை செய்து பாக் செய்யவும் ஆகிய பலவிஷயங்களைக் கவனிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வியவசாயிகளுக்கும் ஏற்றுமதி வியாபாரிகளுக்கும் மத்தியில், தரகர்கள் வேலைசெய்வதனால் முட்டைகள் உண்பவர்களுக்கு உடனுக்குடனே போகக்கூடாமல் தடைப்பட்டிருந்தன. இந்நிலைமையானது வியவசாயிகளுக்குச் சௌகரியப்படாமல் இருந்ததனால், இவர்களுள் பலர் ஒன்றுகூடி முட்டைகளை நல்லவைகளாகப் பொறுக்கியெடுக்கவும், காலதாமதமில்லாமல் ஏற்றுமதி செய்யவும், உண்பவர்களுக்கு நேரே விற்கவும் ஆகிய பல விஷயங்களைக் கவனிக்க ஓர் ஐக்கியச் சங்கம் ஸ்தாபிக்க முயன்றார்கள்.

முதன் முதல் 1891-ம் வருஷத்தில் இத்தகைய சங்கம் ஒன்று ஸ்தாபிக்க யோசனை செய்யப்பட்டது. உடனே 1895-ம் வருஷ ஆரம்பத்திலேயே ஓர் ஐக்கியச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு, கொஞ்ச காலத்திற்குள்ளாக சுமார் 14,000 மெம்பர்கள் சேர்ந்துவிட்டார்கள். இதன்பிறகு இன்னும் பல சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பொழுது ஐக்கிய முறையில் முட்டைகளை ஏற்றுமதி செய்வதற்கான சங்கங்கள் ஏழு இருக்கின்றன. இச்சங்கத்தார், அன்னிய நாடுகளிலுள்ள உண்பவர்களுக்கு முட்டைகளைப் பதன்கெடாமல் கொடுக்க உத்தரவாதம் செய்வதுடன், முட்டைகளை உற்பத்திசெய்யும் வியவசாயிகளுக்கு ஆதரவு கொடுக்கவும், முட்டைகள் கெட்டுப் போகாமல் காக்கவும், கோழி வாத்து முதலிய பிராணிகளை சாஸ்திரீய முறையில் வளர்க்கவும் முன்வருகிறார்கள்.

முட்டைகளைச் சேகரிப்பதற்காக அங்காங்கு வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு முட்டைகள் சேர்க்கும் வட்டங்கள் என்று பெயர். ஒவ்வொரு வட்டத்திற்கும் பத்து மெம்பர்கள் சேரலாம். இவர்கள் தான் சங்கத்தில் மெம்பர்களாகக் கூடியவர்கள். அந்தந்த வட்டங்களில் இருக்கும் மெம்பர்கள் தங்களுக்குக் கிடைக்கும்வரை முட்டைகளை வாங்கிச்சங்கத்தாலேற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பவேண்டும்.

## Moral Sayings.

By A Pandit.

## நீதிமொழிகள்.

உலகில் தீயோன் தற்புகழ்ச்சிசெய்துகொள்வதுபோல, பிறர் குற்றங்களையும் கூறுகின்றான். நல்லோன் தன் குணங்களையும் பிறர்குற்றங்களையும் நிச்சயமாகக் கூறுவதில்லை.

அறிஞராயிருப்பவர், ஆயுள், பொருள், வீட்டுச்சண்டை, மந்திரம், ஔஷதம், கொடை, பெருமை, சிறுமை ஆகிய எட்டையும் வெளியிடக்கூடாது.

மரத்திலும் கல்லிலும் மண்ணிலும் கடவுள் இல்லை; எண்ணத்திலேயே இருக்கின்றார். ஆதலின், நல்லெண்ணமே உயர்சிறப்புக்குக் காரணம்.

* * *

மந்திரத்திலும், புண்ணியதீர்த்தத்திலும், அந்தணரிடத்திலும், கடவுளிடத்திலும், சோதிடனிடத்திலும், வைத்தியனிடத்திலும், குருவிடத்திலும் நாம் வைத்திருக்கும் பக்திக்குத் தக்கபடி ஸித்தியுண்டாகும்.

* * *

இவன் நம்மைச்சேர்ந்தவன், இவன் பிறரைச் சேர்ந்தவன் என்னும் பேதபுத்தி கடையர்களிடமே உண்டாகின்றது. உதாரசித்தமுடையவர்கட்குப் பூமிமுழுவதும் குடும்பமேயாகும். முயற்சி, பிடிவாதம், தைரியம், அறிவு, ஆண்மை, ஆகிய இவ்வாறும் எவனிடமிருக்கின்றனவோ, அவனுக்குத் தேவனும் அஞ்சுகின்றான்.

* * *

உற்சாகமுள்ளவனும், முயற்சியுள்ளவனும், காரியஞ்செய்யவேண்டிய விதத்தை அறிந்தவனும், சிற்றின்பத்தில் விருப்பமற்றவனும், சூரனும், காரியத்தை அறிந்தவனும், திடமான நிச்சயமுள்ளவனுமான புருஷனைத் திருமகள் தனது வாஸஸ்தலமாகத் தானே விரும்பியடைகின்றாள்.

* * *

செல்வம் மிகுதியாயிருந்தால் பிறருக்குக் கொடுக்கவேண்டும்; மேன்மேலும் சேர்த்துவைப்பது கூடாது; ஏனெனில், உலகத்தில் தேனீக்கள் சேர்த்துவைத்த தேனைப் பிறர் பலவில் கொள்ளையடிப்பதைக் கண்கூடாகக் காண்கின்றோமன்றோ?

* * *

கொடுப்பது, வாங்குவது, இரகஸ்யத்தைக் கூறுவது, கேட்பது, புசிப்பது, புசிக்கச்செய்வது ஆகிய இவ்வாறு குணங்களும் பந்துத்துக்கு இலக்ஷணமாகும்.

* * *

ஆகாயத்தில் மேகங்களிருக்கின்றன; மலையில் மயில்களிருக்கின்றன; இலக்ஷமைல்களுக்கு அப்பால் சூரியனிருக்கிறான்; நீரில் தாமரையிருக்கின்றது; இரண்டுலக்ஷமைல்களுக்கப்பால் சந்திரனிருக்கின்றான்; ஆம்பல்மலர்கள் பூமியிலிருக்கின்றன. ஆயினும், அவைகளில் ஒன்றுக்கொன்று நட்பு இருக்கின்றமையின், தூரத்திலிருப்பது தெரிவதில்லை.

* * *

இராமன் காட்டிற்குச் சென்றதையும், பலி சக்ரவர்த்தி பாதாளத்தில் அடங்கினதையும், பாண்டவர்கள் வனத்திற்குச் சென்றதையும், யாதவர்கள் நாசமடைந்ததையும், நளன் ஆபத்தையடைந்ததையும், பீஷ்மர் அம்புப்படுக்கையில் படுத்ததையும், விஷ்ணு வாமனாவதாரம் செய்ததையும், அர்ஜுனனது நிலைமையையும், இராவணனுடைய இருப்பையும் சிந்தித்துப் பார்த்து, இராஜ்யமென்னும் பெயர்கொண்டதொக்கத்தை எவரும் விரும்பக்கூடாது.

* * *

இவ்வுலகில் செல்வத்தால் கிடைக்காதது ஒன்றுமில்லை. அறிவுடையோன் இதனை அறிந்து, செல்வமொன்றை இடைவிடாது சேர்க்கவேண்டும்.

* * *

பிராணிகளுக்கு உணவு ஜீவாதாரமாக ஏற்படுத்தப்பட்டது. ஆதலின், அறிவுள்ளவன் அதை அவமதித்து மற்றொன்றை விரும்பக்கூடாது.

* * *

தாய்மை, ஸௌபாக்கியம், ஆயுள்விருத்தி இவைகளைப் பெறவேண்டியதற்காகத் தன் செல்வத்துக்குத் தக்கபடி ஆபரணங்களால் தன் சரீரத்தை அலங்காரஞ் செய்துகொள்ளுதல் வேண்டும். உத்ஸவகாலத்தில் அலங்கரித்துக்கொள்வது; நண்பர்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஆபரணங்களை அணிந்துகொள்வதனால் தேவதைகளுக்குத் திருப்தி உண்டாகின்றது.

* * *



புதல்வனற்றவனுக்குக் கதியே கிடையாது: சுவர்க்கமும் இல்லை; ஆதலின், புதல்வன்முகத்தைப் பார்த்தபின்பே தவஞ்செய்தல்வேண்டும். சூரியன் பகலையும், சந்திரன் இரவையும், தருமம் மூவுலகத்தையும் விளங்கச்செய்யும், ஆனால், நல்ல புதல்வனோ குலத்தை விளங்கச்செய்கின்றான்.

* * *

வேழம் மதநீராலும், நீர் தாமரைமலர்களாலும், இரவு பூர்ணசந்திரனாலும், பெண்டிர் நற்குணத்தாலும், குதிரை வேகத்தினாலும், வீடு உத்ஸவங்களாலும், சொல் இலக்கணத்தாலும், ஆறுகள் அன்னப்பறவைகளாலும், ஸபை பண்டிதர்களாலும், குலம் நல்லபுதல்வனாலும், பூமி நல்ல அரசனாலும், மூவுலகும் சூரியனாலும் விளங்குகின்றன. யுக்தியோடு கூடிய வார்த்தையைக் குழந்தை கூறினாலும், கிளி கூறினாலும் கேட்கவேண்டும். அயுக்தமான வார்த்தையைப் பிரகஸ்பதி கூறினாலும் கேட்கக்கூடாது.

* * *

நல்லோர் தமக்குச் செய்த உபகாரத்தை ஒருபொழுதும் மறக்கமாட்டார்கள். தென்னை மரங்கள், இளமைப்பருவத்தில் தாம் பருகிய சொற்பநீரை நினைத்து, சுவை நிறைந்த நீரைத் தலையினால் சுமந்து மனிதர்க்கு ஆயுளுள்ளளவும் அளிக்கின்றன.

* * *

அறிஞன் கர்மவசத்தினால் எதைத்தான் செய்யவில்லை? மனிதர்களுடைய புத்தியானது முதலில் கர்மத்தை அநுஸரிக்கின்றது.

* * *

குறைவடைகின்றவனும், இயற்கையிலேயே வக்ரமான சரீரத்தை உடையவனும், களங்கமுள்ளவனும், தோஷாகரனுமான சந்திரன் மித்திரனு (சூரியனு)டைய ஆபத்துக்காலத்தில் பிரகாசிக்கிறான். ஆயினும், சிவபெருமான் அவனை எப்பொழுதும் தலையில் தரிக்கிறான். ஆகையால், பெரியோர் தம்மை அடைந்தவர்களிடம் குணதோஷங்களைப் பாராட்டுவதில்லை.

* * *

உபகாரஞ்செய்தவனிடம் ஸாதுவாயிருப்பவனிடத்து என்ன குணமிருக்கின்றது? அபகாரஞ்செய்தவனிடம் ஸாதுவாயிருப்பவனே நல்லோரால் ஸாதுவென்று கூறப்படுகிறான்.

* * *

தந்தையோ திருமால்; தாயோ திருமகள்; ஆயினும், மன்மதன் சிவபெருமானால் எரிக்கப்பட்டான். ஆதலின் விதியை வெல்லவல்லவர் யார்?

* * *

பிரம்மசரியத்தினால் ரிஷிகளையும், வேள்வியினால் தேவர்களையும், புதல்வரைப் பெறுதலால் பிதிருக்களையும் திருப்தி செய்வித்தலென்னும் கடன்களை முடித்தபின்பே மனிதன் மனதை மோக்ஷத்தில் செலுத்தவேண்டும். இக்கடன்களை முடிக்காமல் மோக்ஷத்திற்காக முயன்றால் பதனத்தை அடைவான்.

* * *

மங்கையரது சேர்க்கையானது வான்நகரத்திற்கு நிகரானது; யௌவனமும் பொருளும் மேகக்கூட்டம்போன்றது; சுற்றத்தார், பெண்டிர், பிள்ளைகள், சரீரம் முதலியவை மின்னல்போல் நிலையற்றவை; ஸம்ஸாரவிருத்தாந்தம்பூராவும் நிலையற்றனவென்று அறியவேண்டும்.

* * *

கொடையாளி நல்லாரிடம் கொடுத்த பொருளானது, மேகம் முத்துச்சிப்பியில் வைத்த நீர் முத்தாக மாறுவதுபோல மிகவும் பெருமையை அடைகின்றது. நல்ல பூமியில் விதைக்கப்பட்ட நுண்ணிய ஆலின் விதை, மிகவும் விஸ்தாரத்தை அடைவதுபோல, நல்லோரிடம் கொடுக்கப்பட்ட பொருள் பெருமையையடையும்.

* * *

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவை ஒருதடவை வணங்கினாலும், அது பத்து அசுவமேதயாகங்களின் அவபிருதஸ்நானத்திற்குச் சமமானது; பத்து அசுவமேதயாகங்கள் செய்தவன் மீண்டும் பிறக்கின்றான்; கிருஷ்ணபரமாத்மாவை வணங்கியவன் மீண்டும் பிறப்பதில்லை.

* * *

வேந்தனையும், கடவுளையும், ஆசிரியனையும், பிரபுவையும், நண்பனையும், அன்புள்ள மனைவியையும், பிரியனான நண்பனையும், இளைய குமாரனையும் பகைத்தை விரும்புவோன் வெறுங்கையோடு பார்க்கக்கூடாது.

***

பசுக்கள் வாசனையாலும், பிராமணர்கள் வேதங்களாலும், மன்னவர்கள் ஒற்றர்களாலும், இதரஜனங்கள் கண்களாலும் விஷயத்தை அறிகின்றனர்.

***

தீயோனைத் தண்டித்தலும், நல்லோனைப் பூஜித்தலும், நியாயமாகப் பொருள்சேர்த்தலும், இரவலர்களிடம் பக்ஷபாதமுடைமையும், இராஜ்யத்தைக் காத்தலும் ஆகிய ஐந்துவேள்விகளே மன்னவனுக்குக் கூறப்பட்டுள்ளன.

***

நூறுவருஷங்கள் வாழ்ந்தாலும் முடிவில் நாசமடைவது நிச்சயம். ஆகலின், மோக்ஷமென்னும் காரியத்தை விரும்புவோர், துன்பங்கள் நிறைந்ததும், அறிவாளிகளால் மிகவும் இகழப்பட்டதுமான இவ்வுடலில் எனதென்னும் அபிமானத்தைப் பாராட்டுவதில்லை.

ஓர் பண்டிதர்.

---

## Leela Devi.

### By Sreemathi Balasundari Devi.

### லீலாதேவி.

(120-ம் பக்கத்தொடர்ச்சி)

#### 7-வது அத்தியாயம்.

அதற்கு மறுதினம் விஜயபுரமெங்கும் பெரிய கூச்சல் ஆரம்பமாயிற்று. லோகநாதன் வெகு தரித்ரன்! அப்படிப்பட்டவனுடைய பெண்ணுக்குத்தகுந்த வரன் கிடைத்துவிட்டானென்றால், ஹிந்துக்களின் கர்மமே க்ஷீணித்த மாதிரியன்றோ? அந்தக்கிராமத்தில் ஸோமநாதனை அநேகர் அறிவார்கள். அவன் வெகு அழகுடையவனென்றும், அன்னவஸ்திரத்திற்குக் குறைவின்றி இருப்பவனென்றும் எல்லோருக்கும் தெரியும். அப்படிப்பட்டவன் தரித்ரனாகிய லோகநாதனுடைய பெண்ணுக்குப் பதியானானென்பதைக் கேட்டு யார்தாம் சும்மா இருப்பார்கள்? லோகநாதன் இதுவரையிலும் எந்த விஷயத்தைக் குறித்தும் பிறரை யாசிக்காமல் காலங்கழித்துவந்தான். பெண்ணின் விவாஹத்திற்காவது நமது காலைக் கட்டாவிட்டால் விதியில்லையல்லவா? என்று அந்த ஊரிலுள்ள மஹாஜனங்களெல்லோரும் நினைத்திருந்தார்கள். இடியிடித்ததுபோல் இந்த ஸங்கதி ஊர்முழுவதும் பரவிவிடவே, அவர்களுக்குண்டான மனோவியாதிக்கு அளவேயில்லை. வீதிகள்தோறும் புருஷர்கள் ஒன்றாய்க்கூடி இந்த விஷயத்தைப்பற்றிப் பிரஸங்கஞ்செய்யத்தொடங்கினார்கள்: "ஸோமநாதனுடைய குலமென்னவோ? கோத்ரமென்னவோ? அவன் எவனோ? எவ்விடத்தில் பிறந்தவனோ? யாருக்கும் தெரியாது. அவன் அழகுடையவனாயிருந்தாலும், வித்வானாயிருந்தாலும், ஊர்பேர் தெரியாதவனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க நிச்சயித்தது, லோகநாதனுக்குத்தகுதியன்று. நம்முடைய குலகோத்ரத்தைத் தான் காப்பாற்றிக்கொள்ளவேண்டும்" என்று இவ்விதமாக எங்கு பார்த்தாலும் பிரஸங்கஞ்செய்ய ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்ட பிரஸங்கங்களும், பரிஹாஸவார்த்தைகளும், கொஞ்சங்கொஞ்சமாய்க் கனகவல்லிக்கும் லோகநாதனுக்கும் செவியில் விழுந்தன.

அகஸ்மாத்தாய் அவர்களுக்கு அமிர்தபானத்தில் விஷம்கலந்ததுபோல் இந்தப்பேச்சுக்கள் உபயசித்தன. முதலிலிருந்த அதிகதரித்திரத்தையினால் விவாஹம் நடப்பதே வெகு பிரயாஸமாயிருந்து, திரும்பவும் ஏதோ ஜன்மாந்தரத்தில் செய்த மலைபளவு பாபத்தின் நடுவில் கடுகளவு புண்ணியம் செய்த பலனாக ஒரு திரப்தி



கரமான வரன் அகப்பட, அந்த ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில் மத்தியில் பானம் பருகும்பொழுது சுக்குத் தொண்டையில் அகப்பட்டுக்கொண்டதுபோல், இந்த அதமர்களாகிய ஜனங்கள் சொல்லிக்கொள்ளும் பேச்சுக்களைக் கேட்கும்படியாக வந்தபொழுது அவர்கள் மனம் எப்படி கொதிக்குமோ அதை வேறு எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? அன்று கனகவல்லி சும்மா யோசித்து, ஒருவழியும் காணாமல் தவிக்கும்புருஷனை நோக்கி, "நாம் இப்படி மனம் வருந்தித் துக்கப்படுவதில் என்ன பயன்? அவ்வளவு தயாளகுணமுள்ளவன் பிறருடைய குலதர்மத்தைக் கெடுப்பானா? அது தங்களுக்குத் தெரியாதா?—இனி இந்த ஊரிலுள்ளோர் சொல்லிக்கொள்ளும் பேச்சிற்கா வருந்தப்படுவது? இந்த ஊரார் பிறருடைய க்ஷேமத்தைக் கண்டு மனம் பொறாமல் வயிற்றில் புளி கரைத்து உப்பி வெடிப்பவர்கள் என்னும் ஸங்கதி நமக்குத் தெரிந்தேயிருக்கிறது. பிறர் ஸங்கடப்படும்படியாக இல்லாத ஸங்கதிகளையெல்லாம் கற்பித்துச் சொல்வது அவர்களுடைய ஸகஜமான குணமே. இதற்காக நாம் யோசித்துக்கொண்டு சும்மா இருந்தால், காரியம் நடப்பது எங்ஙனம்?" என்று கூறினாள்.

லோக.—(பெருமூச்சுவிட்டு) அவையனைத்தும் நான் அறிவேன் கனகா! ஆகட்டும்: உலகநிந்தைக்கும் உட்படவேண்டுமல்லவா? அதுவுமன்றி, சோமநாதன் தன்னுடைய குல கோத்ரத்தைப் பற்றி ஒருஸங்கதியும் சொல்லவில்லை. அந்தப் பேச்சை எடுத்தால் வெறுப்புற்று வேறுவிஷயத்தை எடுத்துக்கொள்கிறான்!

கனக.—நான் வேளாளனென்று சொன்னானல்லவா? இந்தக்காலத்துப் பிள்ளைகள் அதைவிட அதிகம் என்ன சொல்லப்போகிறார்கள்? அதுவுமன்றி, அவனைச்சேர்ந்த பந்துக்கள் ஒருவரும் அவனுக்கு இல்லையாம்! ஒருவேளை இவையெல்லாவற்றையும் நம்மிடம் சொல்வதற்கு வெட்கப்படுகிறானோ, என்னவோ?

இப்படி இவர்கள் ஸம்பாஷித்துக்கொண்டிருக்கையில், லீலா கைபூஜைக்காக அக்ஷதைக்கு அரிசி பொறுக்கிக்கொண்டிருந்தாள். லோகநாதன் வேடிக்கையாக லீலாவைப் பார்த்து அம்மா? "இந்தவிஷயத்தில் உன்னுடைய இஷ்டமென்ன?" என்று கேட்டான். அதற்கு லீலா பதில் ஒன்றும் சொல்லாமல், நாணத்தினால் தலைகுனிந்துகொண்டு சும்மா இருந்தாள். லோகநாதன் சிறிது யோசித்து, கடைசியில், "கனகா: ஸோமநாதனென்னவோ நல்லவனென்பது நிஜமே! ஆனால், இவ்வளவுபேச்சு வந்தபிறகு அவனுக்குப் பெண்ணைக் கொடுக்காமலிருப்பதே உசிதமென்று தோன்றுகிறது. அப்படிப்பட்ட குற்றம் ஒன்றும் இல்லாதபக்ஷத்தில் இவ்வளவு வயதானவனுக்கு இதுவரையில் கல்யாணம் ஆகாமலிருந்ததற்குக் காரணமென்ன?" என்றான்.

கனக.—இக்காலத்துப் பிள்ளைகள் சிறுவயதிலேயே விவாஹஞ்செய்துகொள்ள ஒப்புக்கொள்ள மாட்டார்களன்றோ? லோகநாதன் சிறிது யோசித்து, பிறகு, "இல்லை: நான் இவ்விவாஹம் செய்ய ஒப்புக்கொள்வதில்லை" என்றுசொன்னான்.

அப்பொழுது கனகவல்லி பெண்ணின் முகத்தைப் பார்த்தாள். லீலா தாய்தந்தைகளிருவருடைய ஸம்பாஷணையையும் காது கொடுத்துக் கேட்டாள். கனகவல்லி பார்த்துக்கொண்டிருக்கையிலேயே லீலா பொறுக்கிக்கொண்டிருந்த அரிசியின்மேல் நீர்த்துளிகள் விழுந்து அவை ஊறியிருந்ததைக் கண்டாள். அந்தக்ஷணமே கனகவல்லிக்கு ஸங்கதி தெரிந்துவிட்டது. "நீர் எங்கிருந்து விழுந்தது? வேறெங்கிருந்தது? லீலா கண்களிலிருந்துதான் விழுந்திருக்கவேண்டும். அப்படியானால் தன்னை ஸோமநாதனுக்குக் கொடுக்கமாட்டேனென்ற சொல்லைக் கேட்டு லீலா துக்கித்தாளா என்ன? என்று முதலில் கனகவல்லிக்கு மனதில் தோன்றிற்று.

கனகவல்லி கணவனைப் பார்த்து, "பார்த்தீர்களா? இந்தக் கண்ணீர் தங்கள் குழந்தையின் கருத்தை நன்றாய்த் தெரிவிக்கின்றது" என்றாள்.

தாயின்பேச்சைக்கேட்ட லீலா அவ்விடத்திலிராமல் எழுந்து, சின்ன அறைக்குள் புகுந்து, கதவைத் தாளிட்டுவிட்டாள். அதைக்

கண்ட லோகநாதனுக்கு மதியழிந்துபோய்விட்டது.

தன் குமாரிக்கு இவ்விதமான எண்ணம் உண்டானதைக்குறித்துக் கனகவல்லி ஆச்சரியப்படவில்லை. தான் இப்பொழுது கிழவியானாலும், கனகவல்லியும் ஒருகாலத்தில் இப்படிப்பட்ட அவஸ்தைகளெல்லாம் பட்டவளல்லவா? அதனால்தான் லீலாவின் மனக்கருத்தைக் கனகவல்லி எவ்வளவு சீக்கிரத்தில் அறிந்துகொண்டாளோ, அவ்வளவு சீக்கிரத்தில் லோகநாதன் அறிந்துகொள்ள மாட்டாதவனாயினான். லீலாவின் மனக்கருத்திற்கும் தன் பர்த்தாவின் எண்ணத்திற்கும் வெகு விபரீதமாக வேறுபாடு இருப்பதைக் கண்டு கனகவல்லி மிகவும் வேதனைப்பட்டாள். திருப்பவும் கணவனைத் தனதிஷ்டத்திற்கு அநுகூலமாகத் திருப்பிக்கொள்ள யத்தனித்து, ஏதோ ஒன்றை நினைத்துக்கொண்டவள்போல் அபிநயித்து, "நல்லது! இந்த ஊரில் இருப்பவர்களெல்லாரைக்காட்டிலும் நரேந்திரன் மிகவும் நல்லவன். அவனுக்கு ஸோமநாதனுடைய குலகோத்ரமெல்லாம் நன்றாய்த் தெரிந்திருக்குமன்றோ? அவன் இந்த விஷயத்தில் எள்ளளவேனும் ஸந்தேகம் வேண்டியதில்லை என்று மிகவும் உறுதியாய்ச்சொன்னான். அவனைக்கூட நம்பமாட்டீர்களா?" என்று சொன்னாள்.

லோக.—(உடனே) கனகா! ஆம்: அதுபோகட்டும்! இனி எனக்கு இந்தவிஷயத்தில் ஒன்றும் ஸந்தேகமில்லை. அடுத்த திங்கட்கிழமையன்றே லீலாவை ஸோமநாதனுக்குக் கன்னிகாதானம் செய்துவிடுகிறேன். அதற்குமேல் அதிருஷ்டத்தின்படி நடக்கட்டும்."

இவ்வசனம் கெட்டியாயுரைத்தபடியால், இது சின்ன அறைக்குள் சோகத்துடனிருந்த லீலாவின் செவியில் விழுந்தது.

## எட்டாவது அத்தியாயம்.

இன்றையதினம் திங்கட்கிழமை. லீலாவுக்கும் ஸோமநாதனுக்கும் விவாஹம் நடக்கப்போகிறது. ஸோமநாதன் தன் பந்துக்களுக்காகிலும் சிநேகிதர்களுக்காகிலும் லக்னபத்திரிகை அனுப்பாதபடியால், அவர்களில் ஒருவரும் வரவில்லை. மாப்பிள்ளைவீட்டுப் பக்கத்து உற்றார் உறவினர் எல்லோருக்கும் பதிலாய் நரேந்திரநாத சக்ரவர்த்தி யொருவனே இருந்தான். பெண்வீட்டுப் பக்கத்திற்கும் பிள்ளைவீட்டுப் பக்கத்திற்கும் நரேந்திரனே போய் ஊர்முழுவதும் போஜனத்திற்கும், தாம்பூலத்திற்கும் அழைத்திருந்தான். போஜனத்திற்குப் போகவேண்டுமோ? அல்லது வேண்டாமா? என்னும் குழப்பத்திலேயே பொழுது மத்தியானத்திற்கு மேலாயிற்று. பிறகு லோகநாதன்வீட்டில் சித்தமாயிருக்கும் பக்ஷியபோஜன பதார்த்தவகைகளும், போஜனமானபிறகு எல்லோருக்கும் இரண்டு ரூபாய்வீதம் ஸம்பாவனை யளிப்பதும் ஊர் முழுவதும் விளம்பரமாகவே, பிராம்மணர்களெல்லோரும், என்னவோ பாவம் எளியவனாகிய லோகநாதன்மேல் அனுக்கிரஹித்துப் போஜனவேளைக்கு ஸரியாக இரண்டாவது தரம் அழைக்காமலேயே திரள்திரளாக விஜயம் செய்தார்கள். ஆரவாரமெல்லாம் அடங்கிவிட்டது.

சுப லக்னத்தில் கிரமப்படி லீலா ஸோமநாதன் இருவருக்கும் விவாஹம் மங்களமாய் நிறைவேறிற்று.

கனகவல்லி லோகநாதனும், லீலா ஸோமநாதனும், நரேந்திர சக்ரவர்த்தியும் சுபகாரியம் நிறைவேறினதற்காக அபரிமிதமான ஆனந்தத்தை அடைந்தார்கள்.

* * * *

விவாஹமானபிறகு இரண்டுதினம் இருந்துவிட்டு ஸோமநாதன் லீலாவுடன் கூடித் தனது சொந்தவூருக்குப் பிரயாணம் செய்ய யத்தனித்தான். அவனது வேண்டுகோளின்படி அவனுடன் கனகவல்லி லோகநாதன் இருவரும், நரேந்திரனும் பிரயாணமானார்கள். எல்லோரும் ரயிலேறி வெகு சீக்ரத்தில் ஊர்வந்து சேர்ந்தார்கள். அநேகம்பேர் ஸ்டேஷனில் வந்திருந்தார்கள். அநேகம் வண்டிக்காரர்களும், மற்றும் அநேகர் பெரியமனுஷ்யர்களும் ஸ்டேஷனில் நிறைந்திருந்தார்கள்: ரயில்வண்டி வந்ததும் அவர்கள் உல்லாஸசித்தர்களாய் ஸோமனைக்



கண்டுகொண்டார்கள். லோகநாதன் அப்படிப் பட்டவர்களை என்றைக்கும் கனவிலும் கண்டதில்லை. அவன் திக்பிரமையடைந்து, அவர்களை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தான். வண்டிவந்து நின்றவுடனே, அந்த அளவற்ற ஜனஸமூகத்தின் நடுவிலிருந்து நூற்றுக்கணக்கான வந்தனமும், நமஸ்காரமும் கிளம்பின. அவையெல்லாம் தங்களுக்கே செய்யப்பட்டவையென்று அறிந்துகொண்டு ஆச்சரியமடைந்தார்கள். ஸோமநாதனே அந்த மரியாதைகளெல்லாம் ஏற்றுக்கொண்டு பிரதி வந்தனமளித்தான். பார்த்துக்கொண்டேயிருக்கையில், அநேகம் சிப்பாய்களோடு கூடின அதிகவிலைபெற்ற பட்டுத்திரைகள் போடப்பட்ட இரண்டு பல்லக்குகள் வந்துநின்றன. அப்பொழுது, ஸோமநாதன் லீலாவைத் தனது கையினால் வண்டியிலிருந்து இறக்கிப் பல்லக்கில் உட்காரவைத்தான். அப்பொழுது, லீலா கனகவல்லி இவர்களுடைய மனம் எப்படியிருந்ததோ! அதைச் சொல்ல யாரால் தாம்? பல்லக்குக்களைப் போயிகள் தூக்கும்பொழுது அவர்களுக்கு உடல் முழுவதும் வியர்வையினால் நனைந்துவிட்டது. பிறகு என்னென்னவோ யோசித்துக்கொண்டு முன்னே லோகநாதனும், பின்னே நரேந்திரனும் வண்டியை விட்டு இறங்கினார்கள்.

லீலாவையும் கனகவல்லியையும் முன்னே பல்லக்கில் அனுப்பிவிட்டு, பிறகு ஸோமநாதன் அங்கு வந்திருந்த பெரியமனுஷ்யர்களோடு யோகக்ஷேமங்களை விசாரித்துக்கொண்டிருந்தான். அவர்களெல்லாரும் அதிவிநயமாய் ஸம்மானித்து, அவனோடு பேசுவதைக் கண்ட லோகநாதன், ஆனந்த ஸாகரத்தில் முழுகிவிட்டான், இப்படி எல்லோரும் பேசிக்கொண்டே ஸ்டேஷனை விட்டு வெளியில் வந்தார்கள். அவ்விடத்தில் கன்றுக்கெட்டிய தூரம்வரையில் ஜனங்கள் நிறைந்திருந்தார்கள். நானாவிதமான ப்ரூஹாம், பீடன், கோச்சு, மோடார்கார் முதலிய விசித்ரமான வண்டிகள் அநேகம் நின்றுகொண்டிருந்தன. இன்னும் அநேகவித வாத்தியங்களின் முழக்கம் அந்த ஊர்முழுவதும் பரவிற்று. எண்ணிறந்த குதிரைகளும் யானைகளும் பங்க்திபங்க்தியாய் நின்றன. இவையனைத்தையும் கண்ட லோகநாதன் மரப்பிரதிமைபோல அசைவற்று நின்றான். அவன் ஒன்றும் தோன்றாமல் 'இத்தனை யானைகளும் குதிரைகளும் இந்தச்சேனைகளும் யாருடையவை?' என்று நரேந்திரனைக் கேட்டான்.

நரேந்திரன் இவையெல்லாம் இந்தவூரரசனைச் சேர்ந்தவை. அரசனுக்கு உம்முடைய மருமகன் மேல் அதிகவிசுவாசம். ஆகையினால்தான் ஸோமநாதன் புதிதாய் விவாஹம்செய்துகொண்டு வருகிறானென்று அவனை எதிர்கொண்டு அழைத்துப்போவதாக அவரே நேரில் வந்திருக்கிறார். இந்தப் பரிஜனமெல்லாம் அவருடையதே. நாம் இப்பொழுது அரசனைக்காண்பதற்கே போகவேண்டும்.

அவ்வசனம் கேட்டபிறகு லோகநாதனுக்குப் பயம் சற்றுத் தெளிந்தது. பின்பு ஸோமநாதன், நரேந்திரன் லோகநாதன் இருவரையும் அழைத்துக்கொண்டு சேனைகள் வழிகாட்ட அவ்விடத்திலிருந்த மிகச்சிறந்த ஒருவண்டியில் ஏறினார்கள். வண்டியும் மெல்ல மெல்ல நகர்ந்தது.

லோகநாதன் அரசனை இதற்குமுன் எப்பொழுதும் கண்டதேயில்லை. இப்பொழுது இந்த அற்புத பரிவாரங்களைக் கண்டவுடன் இன்னும் அரசன் எப்படி இருப்பானோ அவனைச்சீக்கிரம் காணவேண்டுமென்னும் ஆவல் மனதைத் தூண்டிற்று. நான்குதிசையும் சுற்றிப்பார்த்து, ஸோமநாதா (நரேந்திரரையும் பார்த்து) உங்களரசன் எவ்விடத்திலிருக்கிறார். நான் எப்பொழுதும் அரசரைப்பார்த்ததேயில்லை; என்றான்.

ஸோம.—அரண்மனைக்குச் சென்றபிறகு தாங்கள் ராஜாவைக்காணமுடியும். இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் ரதம் அரண்மனைக்கருகில் வந்தது. அந்தப் பெரிய அரண்மனையின் அழகை வர்ணிப்பதற்கு நம்மால் தாமன்று. ஸோமநாதன் நரேந்திர லோகநாதரோடு, ரதத்தை விட்டிறங்கி, பின்னால் வந்தவர்களுக்கெல்லாம் வழக்கப்படி மரியாதைசெய்து,

பின்னும் சில பரிஜனங்களோடு அரண்மனையினுட் பிரவேசித்து, கிருஹதேவதையை நமஸ்கரித்து, அந்த அரண்மனையிலுள்ள விசித்ரங்களையெல்லாம் லோகநாதனுக்குத் தானே நேரில் அழைத்துக்கொண்டுபோய்க் காண்பித்தான். பிறகு லீலாவையும் கனகவல்லியையும் அந்தப்புரத்திற்கு அனுப்பினன்

அப்புறம் ஸோமநாதன் லோகநாதனைப்பார்த்து, "நேற்று இரவெல்லாம் புகைவண்டியில் நித்திரையில்லாமல் வெகு சிரமப்பட்டீர்கள். இப்பொழுது கொஞ்சம் ஆயாஸம் தீர்த்துக் கொள்ளுங்கள், பிறகு ஸ்நானம் சாப்பாடு முதலியவைகளைச் செய்து கொள்ளலாம். பிறகு அரசனும் அரசியும் வந்து தங்களை நமஸ்கரித்துத் தங்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று மகிழ்வார்கள்" என்று கூறினன்.

லோகநாதன் ஒன்றும் தோன்றாமல் அவர்கள் முகத்தையே பார்த்துக்கொண்டு நிற்கையில் நரேந்திரன் "என்ன ஸந்தேஹிக்கிறீர்கள்? தாங்கள் ஸோமநாதனுக்கு மாமனல்லவா? அவனுக்கும் அரசனுக்கும் பிராணஸ்நேகமாதலால் அரசனுக்கும் தாங்கள் பிதா ஸ்தானத்திலிருக்கிறீர். தங்களை அவர் நமஸ்கரிப்பதில் என்ன ஆச்சரியம்" என்று சொன்னன்.

லோ.— என்னைப்போன்றவர்களை அரசர் நமஸ்கரிப்பாரா!

நரே.—தாங்கள் ஸோமநாதனுக்கு மாமனென்று சொன்னேனே!

லோ.—ஆனாலும், அவர் அரசரென்பதை நான் எப்படி மறக்க முடியும்?

நரே.—தங்களுக்கு யாதொரு பயமுமில்லை. இந்த அரசனும் அரசியும் உம்மைத் தாய் தந்தைகளைப்போல் நினைத்து ஸேவிப்பார்கள்.

லோ.—ராணி, அந்தப்புரம் விட்டு வெளியில் வருவாளோ?

நரே.—அவள் வெளியே வராவிட்டாலும் அந்தப்புரத்திலேயே தங்களைக் காணக்கூடும்.

லோ.—(பின்னும் அதிகத் திகைப்புடன்) அது எப்படி? நாங்கள் அந்தப்புரத்திற்குப் போகலாமா? உள்ளே கால் வைத்தால் கழுத்தில் கை போட்டு வெளியில் தள்ளமாட்டார்களா? எனக்கு அந்த அவதி வேண்டாம்.

நரே.—வெகு நாழிகையாய்விட்டது? ஸ்நானத்திற்கு எழுந்திருங்கள்! இவைகளெல்லாம் பிறகு தாங்களே அறிந்துகொள்ளக்கூடும்.

லோகநாதன் வேறொன்றும் உரையாடாமல் நரேந்திரனோடு ஸ்நானத்திற்குச் சென்றான்.

## 9-வது அத்தியாயம்.

இனி அவ்விடம் கிருஹதேவதையை நமஸ்கரித்தபிறகு. சில தாதிகள் வந்து, லீலாவையும் கனகவல்லியையும் வெவ்வேறு அறைக்குள் இருக்கச்செய்தார்கள்; அவர்கள் அந்த அறையின் அழகைக்கண்டு பிரமிக்கலானார்கள்; கண்களை விரித்து விழித்துத் துடைத்துக்கொண்டு பார்க்கத் தொடங்கினார்கள். இந்தப்பொன்னால் செய்யப்பட்ட அம்சதூளிகா மஞ்சமும், வெள்ளி நாற்காலிகளும், வெள்ளிச்சட்டம் போட்ட நிலைக்கண்ணாடியும் தந்தத்தினால் செய்த கதவுகளும், வாசற்படிகளும், மற்ற முள்ள ஒவ்வொரு வஸ்துவும் காண்பதற்கு இரண்டு கண்களும் போதாதவையாயின? கனகவல்லி ஒன்றும் தோன்றாமல் இவையெல்லாம் யாருடையவை—என்று அங்கிருக்கும் தாதிகளை வினவினாள். அவர்களெல்லோரும் லோகநாதனுக்கு நரேந்திரன் கூறியதுபோலவே விடையளித்தார்கள்.

லீலா மரப்பிரதிமைபோல் ஸ்தம்பித்து நின்றாள். பேச நா எழவில்லை. அதுவுமன்றி, புதிதாய் விவாஹமான பெண்ணைக் காண்பதற்கு வந்தஸ்திரீகள் காணிக்கையாகவும் ஆசீர்வாதமாகவும் ஸமர்ப்பித்த வெள்ளி பொன் நாணயங்கள் ராசிராசியாய்க் குவிந்தன. அவற்றையெல்லாம் கண்ட லீலா, இது ஒரு பிரமையேயன்றி வேறென்று என்று நிச்சயித்தாள். பிறகு இரண்டு தாதிகள் வந்து, அந்தப்பெண்ணுக்கு ஸுகந்த தைலமிட்டுத் தேய்த்து நீராட்டினார்கள்; சிலர் வெகு ருசியான பக்ஷணங்களைப் பொன் தாம்பாளத்தில் கொண்டுவந்து வைத்தார்கள்.) சிறிது நேரத்திற்கெல்லாம் பின்னும் சிலர்வந்து, லீலாவுக்கு அதிக விலையுயர்ந்த உத்தமமான பட்டாடையுடுத்தினார்கள். வேறு சில தாதிகள் ஒரு பெட்டி நிறைய ரத்னம், கெம்பு, பச்சை முதலிய ரத்னங்களிழைக்கப்பெற்ற விதவித நகைகளைக் கொண்டு வந்து லீலாவை அலங்கரித்தார்கள். இவைகளையெல்லாம் கண்டு, அச்சிறுபெண் ஒன்றுந்தோன்றாமல் திகைத்து நிற்பது ஸகஜந்தானே! அத்தகைய ஆடையாபரணங்களை அவ்வணிதை கனவிலாவது நனவிலாவது கண்டதேயில்லை.

லீலாவுக்கு அவர்கள் பூட்டிய நகைகளெல்லாம் பாரமாகத்தோன்றின. இதர்களுடைய அங்கங்களைச் சுமப்பது போலிருந்தது. வாய் திறந்து பதில் வார்த்தையொன்றும் சொல்லாமல் லீலா அவர்கள் செய்ததையெல்லாம் பொறுத்துக்கொண்டிருந்தாள்.

திடீரென லீலா இருந்த அறையின் கதவு திறக்க யாரோ ஒரு யௌவன புருஷன் உள்ளே வந்தான். அவனைக்கண்டவுடன் தாஸி ஜனங்களெல்லாரும் எழுந்து நின்றார்கள். ராஜன புருஷன் போலிருந்த அவனைக் கண்டு லீலா தன் கோஷாவஸ்திரத்தால் முகத்தை மூடிக்கொண்டாள். தாதிமார்களெல்லாம் நாலா பக்கமாய்ப் போய்விட்டார்கள். அந்த ஸுந்தர புருஷன் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு லீலாவுக்கருகே வந்து உட்கார்ந்து கொண்டான். லீலா பெண்ணாகையால் அச்சமுற்று ஒன்றும் செய்யத் தோன்றாமல் பின்னும் கொஞ்சம் தூரமாக ஒதுங்கினாள். அவன் மறுபடியும் அந்தப் பெண்மணியின் கரத்தைப்பற்றிக் கொண்டான். அந்தப் புதிய மனிதன் தன் கையைப்பிடித்துக் கொள்ளவே, லீலா நடுக்கமுற்று கையைத் திமிறிக்கொண்டு "தாங்கள்யார்?" என்று கேட்டாள்.

திரும்ப அவன் யாதொன்றும் பேசாமல் லீலாவின் முகத்தை மூடியிருக்கும் கோஷா வஸ்திரத்தை நீக்கிவிட்டான். அப்பொழுது லீலா அவனை நிதானித்துப்பார்த்தாள். "அந்தோ! என்ன ஆச்சரியம்! பதிதியகாரப்பெண்! வீணாய்ப் பிரமையடைந்தாள். அவன் வேறு எவருமல்லன்: தனது பிரிய நாயகனாகிய ஸோமநாதனே!

ஆனாலும், அவனை லீலா அடையாளம் கண்டு பிடிக்காததற்குக் காரணமில்லாமற்போகவில்லை: அவன் இத்தனை நாள்போல் சாமான்யமான உடை தரித்துக்கொள்ளவில்லை; ராஜாங்க உடைகளாலும் பூஷணாதிகளினாலும் அலங்கரித்துக் கொண்டிருந்தான். ஒருபக்கம் தான் அவனைக் கண்டு பிடிக்க அவமானம்; ஒருபக்கம் அவனைக் கண்டு லஜ்ஜை; மற்றொரு பக்கம் அவனுடைய ராஜ வேஷத்தைக்கண்டு ஆச்சரியம்; லீலாவுக்கு ஒன்றுந் தோன்றவில்லை; அவள் அவன் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தாள். ஸோமநாதன் சிறிது புன்சிரிப்புடன் 'லீலா நீ என்னைக்கண்டு கொள்ளாததென்ன." என்று கேட்டான்.

லீலா அதற்கு விடையளிக்காமல், ஈன ஸ்வரத்துடன் "இவ்வளவு பெரிய பட்டணமும் இந்த ஐசுவரியமும் இந்தப் பூஷணங்களும் யாருடையவை?" என்று வினவினாள்.

ஸோ.—(சிறிது சிரித்து) பெண்மணி! இவையெல்லாம் உன்னைச் சேர்ந்தவையே.

சகோதரிகளே! இவ்வசனங் கேட்ட லீலாவின் மனம் எப்படியிருக்குமோ, அதை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டுமேயன்றி, சிறுமொழிகளால் இப்படி இருந்ததென்று வர்ணிக்க நம்மால் ஸாத்தியமா?

ஸோமநாதன் லீலாவின் நிலைமையைக்கண்டு கருணைகொண்டு, மந்தஹாஸத்துடன் அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து, ஒரு கையால் அவளை இறுகத்தழுவி, "பெண்மணி! என்பேச்சில் உனக்கு நம்பிக்கையில்லையா?" என்று கேட்டான்.

லீலா.—நான் ஒன்றையும் அறிந்துகொள்ள மாட்டாதவளாயிருக்கின்றேன். எனக்குத் தலை சுற்றுகிறது.

என்று சொல்லிக் கண்களை மூடிக்கொண்டு அவன்மேல் சாய்ந்தாள். ஸோமநாதன்

அப்பொழுது அங்கிருந்த விசிறியினால் விசிறி, அவளது களைப்பை ஆற்றமுயன்றான். சிறிது நேரத்துக்கெல்லாம் களை தெளிந்து லீலா திடீரென்று எழுந்து நின்றாள். அதைக்கண்ட ஸோமநாதன் லீலாவின் முகத்தைக்காண அவள் "என் தந்தையர்கள் எங்கே? அவர்களைக் காணவேண்டுமென்று என் மனம் ஆத்திரப்படுகிறது" என்று கூறினாள்.

ஸோமநாதன் சிறிது தைர்யத்துடன் அந்தக் கன்னிகையைத் திரும்ப உட்காரவைத்துக்கொண்டு "உன் தாய்தந்தையர்கள் இப்பொழுதே வருவார்கள்; சொல்லி அனுப்பியிருக்கிறேன்" என்று உரைத்தான்.

அந்த க்ஷணத்திலேயே அந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. அங்கிருந்து முன்பு நரேந்திரனும் பிறகு கனகவல்லியும் லோகநாதனும் உள்ளே பிரவேசித்தார்கள். முன்னே வந்த நரேந்திரன் அவர்களைப் பார்த்து தம்மைக் குதூகலத்துடன் காணவேண்டுமென்று ஆவல்கொண்ட அரசனும் அரசியும் இவர்கள்தான் பாருங்கள்" என்றான். அவர்களிருவரும் உடல்பூரித்து நரேந்திரன் காண்பித்த அரசனையும் அரசியையும் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தார்கள்.

அவர்களைப் பார்த்தவுடன் அரசனானவன் ராணியினுடைய கரத்தைப் பிடித்துக்கொண்டு அவர்களுக்கு நமஸ்காரம்செய்தான்.

லோகநாதனும் கனகவல்லியும் தாங்கள் காண்பது வாஸ்தவமா? அல்லது, மனத்தோற்றமா? என்று ஸந்தேஹித்தார்கள். தங்களை நமஸ்கரித்து நின்ற அரசனும் அரசியும் தங்கள் மருமகனும் பெண்ணும் தான் என்று அவர்களால் நம்பக்கூடவில்லை.

வாசகர்களே! பார்த்தீர்களா, அதிர்ஷ்டத்தின் மஹிமையை!!

முற்றிற்று.

## Drinking Water.

## குடிக்கும் தண்ணீர்.

நாம் ஜீவித்திருப்பதற்குத் தண்ணீர் அவசியமாயிருக்கின்றது. அது சுத்தமாயும் அழுக்கில்லாமலும் இருத்தல் வேண்டும். மனிதர்கள் உணவில்லாமல் பலநாட்கள் இருக்கக்கூடும்; ஆனால் தண்ணீரில்லாமல் இருப்பது அசாத்தியம். தேகத்தில் ஏறக்குறைய 90 பாகம் தண்ணீராகும். நல்ல வயதுள்ள ஒருமனிதனது தேகத்திலிருந்து தண்ணீரெல்லாம் எடுத்துவிட்டால் மீதியானவை ஏழுசேர்கள்தான் இருக்கக்காணலாம். குடிக்கும் தண்ணீரானது நமக்குப் பலவழிகளிலும் உபயோகப்படுகின்றது: தேகத்தினுள் ஒருபக்கத்திலிருந்து மற்றொருபக்கத்திற்கு அவசியமான பொருள்களைக் கொண்டுபோகவும், உண்ணும் உணவுகளை ஜீர்ணிக்கச்செய்யவும், கழிக்கப்பட்ட பொருள்களை வெளிப்படுத்தவும், இவை போன்ற இன்னும் பலகாரியங்களைச் செய்யவும் தண்ணீர் உதவுகின்றது.

இந்தியாவில் குடிதண்ணீரானது ஆறுகள் வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், கிணறுகள் முதலானவைகளிலிருந்து கிடைக்கின்றது. ஆறுகள், வாய்க்கால்கள் குளங்கள் ஆகிய இவைகளிலிருந்து கிடைக்கும் தண்ணீரானது பொதுவாக அசுத்தமானதென்றே கூறலாம். ஆற்றின் இருகரைகளிலும் பலவித அசுத்தங்கள் இருப்பதால் மழைபெய்யுங்காலங்களில் அவை ஆற்றோடு அடித்துக்கொண்டு போகப்படுகின்றன; இவற்றோடு வியாதிபட்டு இறந்துபோன பிராணிகளின் உடல்களும் இன்னும் பலவித அசுத்தங்களும் அடித்துக்கொண்டு போகப்படுவதால் ஆற்றுநீர் அவ்வளவு சுத்தமானதென்று சொல்லுவதற்கில்லை. ஆறு உற்பத்தியாகுமிடத்தை நோக்கிச் செல்லச் செல்லச் சுத்தமான தண்ணீர் கிடைக்கக்கூடும். வாய்க்கால் தண்ணீரும் ஆற்றுநீரைப்போல் அசுத்தமாகக் கூடுமாதலால் அதையும் சுத்தமானதென்று கூறுவதற்கில்லை.



இனி குளத்துத்தண்ணீரைப்பற்றிக் கவனிப்போம்: இந்தியாவில் பலவிடங்களிலும் குளத்துத் தண்ணீரே ஸ்நாநத்திற்கும் பானத்திற்கும் உபயோகப்படுகின்றது. குடிதண்ணீர் எடுக்கும் குளங்களில் ஸ்நாநம் செய்வதால் தண்ணீர் அசுத்தப்பட்டுப்போகின்றது. பலவித அசுத்தங்கள் தண்ணீரில் கலந்துபோவதனால் கொள்ளைநோய்கள் உண்டாவதற்குக் காரணமான கிருமிகள் சேருகின்றன. தொற்று வியாதியால் பிடிக்கப்படுபவர்கள் குளங்களில் ஸ்நாநம் செய்வதனால் வியாதிக் கிருமிகள் தண்ணீரில் கழுவப்பட்டு, பிறகு ஸ்நாநம் செய்பவர்களுக்குத் தொற்றிக்கொள்ளுகின்றன.

நமது தேசத்தில் தோண்டப்பட்ட கிணறுகளிலிருந்தே ஜனங்கள் பெரும்பாலும் தண்ணீர் எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஆங்காங்குக் கிராமங்களில் ஜனங்களின் சௌக்கியத்துக்காகக் குடிதண்ணீர்க்கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன. இவ்விதக்கிணறுகள் ஊருக்கு மத்தியில் வெட்டப்பட்டிருப்பதனால், கிணற்றுத் தண்ணீர் அசுத்தமாவதற்கு ஹேதுவாயிருக்கின்றது. கிணற்றைச்சுற்றி வீடுகள் கட்டப்பட்டிருப்பதும் கால்நடைகள் அதிகமாக நடமாடுவதுமே, இதற்குக் காரணமென்று கூறலாம். கிராமாந்தரங்களில் குடிதண்ணீர்க் கிணறுகள் எவ்வாறு அமைக்கப்படவேண்டுமென்பதைப் பற்றிக் கீழே கூறுவோம்:—

கிராமாந்தரங்களில் குடிதண்ணீர்க் கிணறானது கிராமஎல்லைக்கப்பால் முப்பது அல்லது நாற்பது கஜம்தூரத்தில் வெட்டப்படவேண்டும். கிணற்றின் லெவலானது கிராமத்தின் மட்டத்திற்குமேல் உயர்ந்ததாக இருக்கவேண்டும். ஏனெனில், கிணற்றுக்கருகில் சிந்தும் அல்லது கொட்டப்படும் தண்ணீரானது அங்கேயே ஊறி மறுபடியும் கிணற்றுக்குள்ளே போகாமல் வெளியேபோய்விடும். மற்றும், கிணறு தோண்டப்படும்போது பல சுகாதாரமுறைகளைக் கவனித்து வெட்டப்படவேண்டும். கிணற்றைச்சுற்றிக் கைப்பிடிச்சுவர் கட்டப்படவேண்டும். இது, கிணற்றுக்கருகில் சேரும் அசுத்தஜலம் மறுபடியும் கிணற்றிலேயே விழாதபடி தடுப்பதோடு, கால்நடைகள் தவறிக்கிணற்றில் விழாமலிருக்கும்படிக்கும் தடுக்கின்றது. கிணற்றுக்கருகில் மரங்கள் எவையேனும் இருக்கக்கூடுமாதலால் அவற்றின் இலைகள் கிணற்றில் விழாதபடி பாதுகாத்துக்கொள்ளவேண்டும். ஊற்றுத்தண்ணீரைப்பற்றியும் அசுத்தமான தண்ணீரினால் உண்டாகும் பலவித வியாதிகளைப் பற்றியும் பிறகு எழுதுவோம்.

## Co-Operation and Agriculture.

BY MR. P. CHINNASAWMY IYER.

## கூட்டுறவும், விவசாயமும்.

நம்முடைய தேசத்து ஜனங்களுக்குள்ளே 100-க்கு சுமார் 80-க்கு மேலாகவே விவசாயத்தை ஜீவனாதாரமாகக் கைக்கொண்டிருப்பவர்களென்பது எல்லோரும் அறிந்த விஷயம். என்றாலும், சாகுபடி வேலை முற்காலங்களில் இருந்தபடி அவ்வளவு லாபகரமாயிருப்பதில்லை. இதற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன. இக்காலத்தில் பருவமழை வெகு அபூர்வமாய்விட்டதோடு, விவசாயிகளுக்கு ஏர் கலப்பை முதலிய கருவிகளுக்கு வேண்டிய மரங்கள் முன்போலச் சௌகரியமாய்க் கிடைப்பதில்லை. கால்நடைகளின் விலையும் ஒன்றுக்கு எட்டுமடங்கு அதிகமாய்விட்டது. எல்லாவித விவசாயச் செலவுகளும் முன்விகிதங்களைவிட அதிகமாய்விட்டன.

இவ்விதச் செலவுகளுக்காக வேண்டிய தொகையை ராயத்தானவன் மாசூல் அறுவடையானவுடன் திருப்பிக்கொடுத்துவிடலாமென்கிற எண்ணத்துடன், உள்ளூர் சவுகாரிகளிடம் கடன்

வாங்குகிறான். ஒன்று அல்லது இரண்டு வருஷங்களில் சரியான மாசூல் கிடைக்காமற்போனால், மேற்படி கடனுக்காக ஒன்றும் செலுத்துவதற்கில்லாமற்போய்விடுகிறபடியால், கடன்தொகை ஏறிக்கொண்டே வருகிறது. லேவாதேவிக்காரர்கள் வாங்கும் வட்டிவிகிதங்களின் அநியாயம், கணக்குப்போட்டுப்பார்த்தால்தான் நன்றாய்த் தெரியும். விவசாயத்திற்கு ஆரம்ப காலமாகிய ஆனி, ஆடி மாதங்களில் குடியானவர்களுக்குப் பணம் தேவையாயிருக்கிறது. அப்போதுதான் சாவுகாரி "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழியைச் சரியானபடி அநுஷ்டிக்கிறான்; அதிகவட்டி கேட்கிறான். விதியில்லாமல் வாங்கவேண்டியிருக்கிறது. சில லேவாதேவிக்காரர்கள் நெல்வட்டிக்காகப் பணங்கொடுக்கிறதுண்டு. ஆனி மாதத்தில் 50-ரூபாய் கடன் கொடுத்தால், அறுவடைக்காலமாகிய தை மாதத்தில் ரூபாய்க்கு 3 படி நெல்வீதம் வட்டி சேர்த்துக்கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்கிறான். இன்னும் சில சவுகாரிகள், மேற்சொன்ன வட்டி விகிதத்தைச் சேர்த்துக் கடன்தொகைக்கு நெல்லாகவே கொடுத்துவிடவேண்டுமென்றும் ஏற்பாடுசெய்துகொள்ளுகிறார்கள். இரண்டாவது சொல்லிய வழக்கத்தினால் அந்தச்சாவுகாரி இரண்டுவித லாபமடைகிறான். மாசூல் காலத்தில் அதாவது அறுவடையான உடன் விற்கும் விலையைவிட இரண்டு மூன்று மாதங்கழித்து விற்பதனால் சாவுகாரிக்குக் கிடைத்த நெல்லின்பேரில் அதிகலாபம் கிடைக்கிறது. இவ்வளவோடு குடியானவனை விட்டுவிட்டால் போதுமே! லேவாதேவிக்காரனிடத்தில் ஒரு குடியானவன் கடன் வாங்கிவிட்டால் அந்தக் கடன் தீருகிறவரையில் ஒரு அடிமைமாதிரியாக எத்தனையோ வேலைகளையெல்லாம் செய்ய நேரிடுகிறது. அன்றியும், இந்த ஏழைக்குடியானவன் வீட்டில், அவன் பெண்சாதி கஷ்டப்பட்டுத் தோட்டத்தில் பயிராக்கியிருக்கும் காய்கறிகள் தனக்குச் சொந்தமானவைபோலவே சாவுகாரி பாவிப்பது வழக்கம். இதனடியில் இரண்டுவருஷம் மாசூல் கெட்டுப்போகும் கஷ்டத்தோடே ஏதாவது கலியாணம் முதலிய சடங்குகள் செய்யவேண்டி நேர்ந்துவிட்டால், முன்வாங்கிய கடன் இன்னங்கொஞ்சம் அதிகமாகிறது. வரவர, 50 ரூபாயில் ஆரம்பித்த கடன், சிலவருஷ காலத்தில் 500 ரூபாயாக ஆய்விடுகிறது. குடியானவனுக்குக் கிடைக்கிற மாசூல் வட்டிசெலுத்துவதற்கே போதாமற்போய்விடுகிறது. ஏதாவது வட்டிக்குப்போய் மிஞ்சினால் அச்சிறிய தொகையை அசலுக்காக வாங்கிக்கொள்ளுகிற வழக்கம் லேவாதேவிக்காரரிடம் இல்லை. அசல் பூராவும் ஒரேமொத்தமாய்க் கொடுத்தால்தான் வாங்கிக்கொள்வார்கள். 5 அல்லது 10 ரூபாய் மிச்சமாயிருந்து கையில் வைத்துக்கொண்டிருந்தால், எத்தனையோ விதச் செலவுகளில் அதுவும் செலவழிந்துவிடுகிறது. கடன் 50 ரூபாயாக இருந்தபோது வெள்ளையாக இருந்தது. 500 ரூபாய்க் கடனாக ஆய்விட்டவுடன் அடமானக்கடனாக மாறிவிடுகிறது. அடமானக்கடனாக மாறினபிறகு, அடமானச்சொத்து, லேவாதேவிக்காரருக்குச் சேர்ந்துவிடுகிறது மிகவும் சுலபமாயிருக்கிறது.

நிலத்தை இழந்த குடியானவன், உள்ளூரில் கூலிவேலைசெய்து பிழைக்கும் ஸ்திதிக்கு வந்து, பிறகு, பினங்கு, சிங்கப்பூர் முதலிய தூரதேசங்களுக்குப் போய், கடைசியில் தன் உயிரையும் இழக்கிறான். இப்படி இருக்கிறது நமது தேசத்துக் குடியானவர்களின் நிலைமை.

விவசாயிகளின் நிலைமையைச் சீர்ப்படுத்தவேண்டுமென்னும் எண்ணத்துடன் நமது கவர்ன்மெண்டார் 'ஐக்கியநாணயச்சங்க ஆக்ட்' என்னும் விதியை ஏற்படுத்தி, ஐக்கியநாணயச் சங்கங்களைக் கிராமங்களில் ஸ்தாபித்து, ஏழைக்குடியானவர்களுக்கு உதவிபுரிவதற்காக ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். டிபார்ட்மெண்டு சென்ற பதின்மூன்று வருஷங்களாக நடந்துவருகிறதென்பது தெரிந்த விஷயம். தற்காலம் சுமார் 2200 சங்கங்களுக்கு மேலாகவே இச்சென்னை ராஜதானியில் ஸ்தாபிக்கப்பட்டு, சுமார் 8000 கிராமங்களிலிருக்கும் குடிகளுக்கு உதவி



செய்கின்றன. ஐக்கிய நாணயச் சங்கங்களின் நோக்கங்களில் முக்கியமானவை இரண்டு:— (1) சங்கத்தில் சேர்ந்திருக்கும் மெம்பர்களுக்குத் தேவையானபோது அவசியமும், உபயோகமுமான காரியங்களுக்கு ஒரேவிதமான வட்டிக்குக் கடன்கொடுப்பதும், (2) மெம்பர்களைச் சிக்கனமாகச் செலவுசெய்து, வரும்படியில் கொஞ்சமாவது பிரதிவருஷமும் மிச்சம் பிடித்துச் சேர்த்துவைத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்துவைத்தலுமாம். முன் சொல்லியபடி குடியானவனுக்கு அவசியமான காலத்தில் லேவாதேவிக்காரனிடம் பணம் வாங்கப்போனால் அதிகவட்டிகொடுக்க நேரிடுகிறது. ஆகையால், பணம் வேண்டியதற்கு இரண்டு மூன்றுமாதங்களுக்கு முன்னடியே வாங்கிவைத்துக்கொள்ளவேண்டியிருக்கிறது. ஐக்கியநாணயச்சங்கங்களில் எப்பொழுது தேவையோ அப்பொழுது கடன் வாங்கிக்கொள்ளலாம். எப்பொழுது வாங்கினாலும், ஒரேவிதமான வட்டிதான். லேவாதேவிக்காரனிடத்து வாங்கின கடனை ஒரேமொத்தமாய்த் தீர்க்க வேண்டுமென்பதைப்போல இந்தச்சங்கங்களில் நிர்ப்பந்தம் இல்லை: கொஞ்சங்கொஞ்சமாய் வருஷவாரியில் கொடுத்துக் கடனைத் தீர்த்துவிடலாம். இதனால் ஏழைக்குடியானவர்கள் கெட்டுப்போகாமல் விருத்தியடைகிறார்கள். ஐக்கியநாணயச்சங்கம், அதிற்சேர்ந்த மெம்பர்களெல்லாருக்கும் பொதுவாதலால், கடன்வாங்குகிறவன், கடன்கொடுப்பவன் என்கிற பேதமும், ஒருவருடைய தயவை எதிர்பார்க்கவேண்டுமென்கிற அசௌகரியமும் இல்லை.

இந்தச்சங்கத்திற் சேர்ந்த மெம்பர்கள் அநாவசியமான காரியங்களுக்குக் கடன்வாங்கமுடியாது; ஏனென்றால், சங்கமானது உபயோகமான காரியங்களுக்கன்றி அநாவசியமான காரியங்களுக்குக் கடன்கொடுப்பதில்லை. லேவாதேவிக்காரர்கள், குடியானவர்களுக்குக் கடன் கொடுத்தால் பணத்திற்குத் தகுந்த ஜாமீன் இருக்கிறதா என்கிறதையும், கொடுத்த சிலகாலம் பொறுத்தாவது நம்மிடமே வந்து சேர்ந்துவிடுமா என்பதையும் கவனிப்பார்களேயொழிய, குடியானவன் பணத்தைச் சரியானவழியில் செலவிடுகிறானா என்பதைப்பற்றிக் கவனிப்பதில்லை. இவ்வளவு சௌகரியங்களுடன் ஐக்கியச்சங்கத்தில் கடன்வாங்குகிற மெம்பர்கள் எழுதிக்கொடுக்கும் அடமானபத்திரம் முதலியவைகளுக்கு ஸ்டாம்புசெலவு, ரிஜிஸ்டர்செலவு முதலானவை ஒன்றும் கொடுக்கவேண்டியதில்லையென்றும் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கடன்வாங்காமல், சிறுதொகைகளை மிச்சம் பிடித்துவைப்பதற்கும் சௌகரியமான "சேவிங்ஸ் டிபாசிட்டு" முதலிய மார்க்கங்களும் சங்கத்தில் ஏற்படுத்திக்கொள்ளலாம். சாதாரணமாய், கிராமாந்தரங்களில் எவனாவது ஒருகுடியானவனிடம் கொஞ்சம் பணம்மிச்சமாயிருந்தால் அதைப் பிறருக்கு வட்டிக்குக் கொடுத்தாவது, நிலம், வீடுமுதலியவை வாங்கியாவது விருத்தி செய்யவேண்டியிருக்கிறது. இவைகளெல்லாம் அதிகத்தொகை கையிலிருப்பவர்களுக்குத்தான் சௌகரியம். கூலிவேலைக் கைத்தொழிலாளி முதலான மாதவரும்படி தினவரும்படியுள்ள ஏழைஜனங்களுக்குச் சரிப்படாது. அப்படிப்பட்டவர்கள் ஐக்கியநாணயச்சங்கத்தில் தங்கள் கையிலிருக்கும் சொற்பத்தொகையும் டிபாசிட்டாகப் போட்டுவைத்து வட்டியுடன் மொத்தமாய் வாங்கிக்கொள்ளலாம்.

ஐக்கியநாணயச்சங்கங்களினால், சுலபவட்டிக்குக் கடன்கிடைப்பதும், சொற்பத்தொகைகளையும் டிபாசிட்டாகச் சேர்த்துவைக்கும் அநுகூலமும்தவிர, வேறு எத்தனையோவித உபயோகங்களும் அடையலாம். ஐக்கியநாணயச்சங்கங்கள் ஸ்தாபிப்பதைப்பற்றியும், அவை கவனிக்கவேண்டிய முறைகளைப்பற்றியும், லேவாதேவி தவிர வேறே எந்தக்காரியங்களுக்குக் கூட்டுறவு முயற்சியை உபயோகப்படுத்தலாமென்பதைப் பற்றியும் அடுத்த விபாகங்களில் எழுதப்படும்.

பூ. சின்னசாமி ஐயர்.

# Krishnadevaraya.

A. D. 1484 — 1524.

BY MR. K. P. SESHADRI AIYANGAR,

## கிருஷ்ணதேவராயன்.

நரசிம்மராயனுக்கு இரண்டு குமாரர்கள் உண்டு. அவர்களின் மூத்தவன் பெயர் வீரநரசிம்மன். இளையவன் பெயர் கிருஷ்ணதேவன். மங்கையர்க்கரசியும் பட்டமகிஷியுமான திப்பாம்பாள் மூலமாய் வீரநரசிம்மன் ஜனித்தான். ஆனால், கிருஷ்ணதேவனோ எனின் அப்படியல்லன்; க்ஷத்திரிய ஸ்திரீக்குப் பிறந்தவனல்லன்; திப்பாம்பாள் எளிய வேலைசெய்யும் தாதியான நாகமாம்பாவிற்குப் பிள்ளையாகப் பிறந்தான். நரசிம்மராயனுக்குக் கிருஷ்ணதேவன்மீது அதிகப்பிரியம். அவனது முகாரவிந்தத்தை அரசன் காணுமின் சூரியனைக் காணுந் தாமரைபோல் வாங்கிவாடிவான். கிருஷ்ணதேவன்மீது அதிகமாக அன்பும் ஆதரவும் வைத்துள்ளார் அரசர் என்று அறிந்து திப்பாம்பாள் அழுக்காறுகொண்டு கிருஷ்ணதேவனைக் குழந்தையாயிருக்கும் பொழுதே கொலைசெய்துவிடவேண்டுமென்று மனங்கொண்டாள். நரசிம்மராயனிடம் திப்பாம்பா மிகவும் நயமாகப் பேசிக் கிருஷ்ணதேவனைக் கொலைசெய்துவிடும்படி வேண்டினாள். தன் உடல் பொருள் ஆவி மூன்றினையும்விட அதிகமாக எண்ணிவந்த தன் இருகண்மணியனைய கிருஷ்ணதேவனைக் கொல்ல நரசிம்மனுக்கும் மனம்வருமோ? அத்தகைய உத்தரவைப் பிறப்பிக்கத் தன் நாத்தான் எழுமோ? அதே சமயத்தில் தன் மனைவியின் வேண்டுகோளை நிராகரிக்க முடியவில்லை. ஆகவே, அன்றைத்தினம்முதல் கிருஷ்ணதேவனை வேறொருவர்க்கும் தெரியாதபடி மந்திரி வீட்டில் இரகசியமாக வளர்த்துவர ஏற்பாடுசெய்தான். அம்மந்திரியின்பெயர் திம்மரசு. அந்தச் சுமந்திரிக்கு அப்பாஜி என்ற பெயரும் உண்டு.

### சிங்காதனமேறிய விதம்.

நரசிம்மராயன் மரணமடையுந்தருவாயிலிருக்கும்போது தன் ஆவியைபோன்ற கிருஷ்ணதேவனைக்காண அவாக்கொண்டான். அப்பாஜி தன் அரசனது அபீஷ்டத்தை நிறைவேற்ற எண்ணங்கொண்டு, கிருஷ்ணதேவனை அழைத்துவந்து அரசன்முன்னிலையில் நிறுத்தினான். தன் மைந்தனைக் கண்டதும் தான் பெறக்கூடிய எல்லாப் பேற்றினையும் பெற்றதுபோல் களிப்படைந்து தனக்குப்பின் ராஜ்யபாரத்தைக் கிருஷ்ணதேவனே வகிக்கவேண்டும் என்று கடைசியாக மொழிந்தான். கண்ணும் பஞ்சமடைந்தது; காலனும் நெருங்கினான். நரசிம்மன் இவ்வுலக வாழ்க்கையைத் துறந்தான். நரசிம்மராயனது முத்திரைமோதிரத்தை வெகுசாமர்த்தியமாய் அவனது விரலினின்றும் தன்கட்கத்தைவீசி எடுத்துக் கிருஷ்ணதேவன் தன் விரலில் அணிந்துகொண்டான். கிருஷ்ணதேவன் அரசனானான்.

அவன் ராஜ்யத்தை அதிகமாக விசாலப்படுத்தினான்; வடக்கிலுள்ள அடில்ஷாஹி அரசர்களை வென்று, அவர்களது ராஜ்யத்தையும் கைப்பற்றிக்கொண்டான். கிழக்கில் கோண்டவீடு, ஓரங்கல் முதலியவைகளையும் கைக்கொண்டு கட்டக் என்கிற ராஜ்யத்தின்மீது படையெடுத்தான். அதன் அரசன்புத்திரியைச் சமாதானத்தின்மீது விவாகம் செய்துகொண்டான்.

தெற்கில் அவனது உத்தியோகஸ்தர்கள் ஸ்ரீரங்கபட்டணத்தை ஆண்டுவந்தார்கள் அவன் மதுராநகரிலும் திருச்சிராப்பள்ளியிலும் ஓர் புதிய வம்சத்தை உண்டாக்கினான். மேற்கில் போர்த்துகேசியர்க்குச் சொந்தமாயிருந்த சால்சட்டைத் தன் ராஜ்யத்தோடு சேர்த்துத் தென்னிந்தியா முழுவதையும் தன் வெற்றித் தனிக்குடையின் கீழ்க் கொண்டுவந்தான். தென்னிந்தியாவின் சரித்திரத்தில் கிருஷ்ணதேவராயனது விஜயநகரத்தைப்போன்ற விஸ்தீர்ணத்திலும், வளமிகுதியிலும் இணையான ராஜ்யம் கிடையவே கிடையாது என்று வில்ஸன் என்று



(Wilson) ஆங்கிலமேதாவி அபிப்பிராயப்பட்டு எழுதியிருக்கிறார்.

கிருஷ்ணதேவன் இன்னவருஷம் இன்ன மாதம் இன்னதேதியில் பிறந்தான் என்று சொல்ல நம்மால் முடியாது. அவன்பிறந்த நாள் தேதியும் இறந்தநாள் தேதியும் என்னவாயிருந்தபோதிலும், அவரது சாசனங்கள் யாவும் கி. பி. 1510-1529 வரை குறிக்கின்றன. *

அவன் கி. பி. 1465 ஆம் வருஷம் பிறந்தானென்று சிலர் சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், அவன் 1487 ஆம் வருஷத்தில் பிறந்தானென்று அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் எது வாஸ்தவம் என்பதற்கு ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால், 1829ஆம் வருஷத்தில் கல்கத்தாவில் காவாலி வேங்கடராமசுவாமி என்பவரால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட தக்ஷிணத்துப் புலவர்களின் சரித்திரம் என்ற நூலில், கிருஷ்ணதேவராயன் இறந்த தேதி குறிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சாலிவாகன சகம் 1446 சரியாகக் கி. பி. 1524 ஆம் வருஷம் இறந்தார். அதே நூலில் கிருஷ்ணதேவராயன் நாற்பதாவது வயதில் இறந்தார் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இதனால், நாம், கிருஷ்ணதேவராயன் கி. பி, 1484 ஆம் ஆண்டில் பிறந்திருக்கவேண்டுமென்று நிஷ்கர்ஷையாகச் சொல்லலாம்.

### கிருஷ்ணதேவராயனது முதல் விவாகம்.

கி. பி. 1513-ல் கிருஷ்ணராயன் திக்விஜயம் செய்யப் புறப்பட்டான்; மைசூர் ராஜ்யத்தையும், காவேரி தீரத்திலுள்ள நாடுகளையும் ஜயித்தான்; பீஜப்பூர், கோல்கொண்டா முதலிய மகம்மதிய சேனைகளைத் தோற்கடித்து, ஒரிஸ்ஸாவின் மீது படையெடுத்து அதனது அரசனான கஜபதியைத் தனக்குக் கப்பம் கட்டும்படி செய்தான். அதே வருஷத்தில் நெல்லூரிலுள்ள உதயகிரி என்னும் மலைக் கோட்டையைக் கைப்பற்றிக்கொண்டான். இது நடந்த சில மாதங்கள் கழிந்த பின்னர், அவனது மந்திரியான அப்பாஜி, நெல்லூரிலுள்ள கனிகிரியின்மீது படையெடுத்தான். வீரருத்ர கஜபதி என்பவன் அதற்கு அரசன். அப்பாஜி அவ்வரசனுக்குச் செய்தி சொல்லியனுப்பினான். சமாதானம் வேண்டியிருப்பின் அவன் தன் புத்திரியைக் கிருஷ்ண தேவராயனுக்கு அளிக்கவேண்டும். இன்றேல், சமாதானமடைய வியலாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான். கிருஷ்ண தேவனோ ஓர் இழிகுலத்தவளுக்குப் பிறந்தவன்; தாதியின் பிள்ளை. ஆகவே, ஒருவரும் அவனுக்கு பெண் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. இவ்வளவு ஆபத்தான நிலையிலுங்கூட அப்பாஜி கேட்டபொழுதும் கஜபதி தன் பெண்ணை விவாகம் செய்து கொடுக்கச் சம்மதிக்கவில்லை. சம்மதிக்காமற் போனால் பின்னால் இவ்வளவு பராக்கிரமுடையவனை எதிர்க்கவேண்டி வருமே என்ற பயம் உள்ளூற இருந்தது. ஆகவே, வேண்டா வெறுப்பாகத் தன் குமாரியைக் கிருஷ்ணதேவராயனுக்குக் கல்யாணஞ்செய்து கொடுப்பதாய் ஒத்துக்கொண்டான். கிருஷ்ணராயனையும் அவனது மந்திரி அப்பாஜியையும் தன் அரண்மனைக்கு அழைத்தான்; அப்படி வரவழைத்து, கிருஷ்ணதேவனைக் கொல்லவேண்டுமென்று எண்ணினான். இந்த உளவை அறிந்துகொண்ட அப்பாஜி, தானே கிருஷ்ணதேவராயன்போல் ராஜவுடை தரித்துக்கொண்டான்; கிருஷ்ணதேவனைத் தன்பின்னே வேலைக்காரனைப்போல் வேஷந்தரித்து வரச்சொன்னான். துரதிருஷ்டமோ என்னவோ தெரியவில்லை: அவர்கள் பின்னால் வரும் வேலைக்காரன் கையில் அணிந்துள்ள முத்திரைமோதிரத்தினால் அவனே அரசன் என்று தீர்மானித்துவிட்டார்கள். இந்த ஆபத்தான நேரத்தில் மனோதைரியத்தை விடாது அப்பாஜி தன் சாகசத்தினால் கிருஷ்ண தேவனை அரண்மனையினின்றும் வெளியேற்றினான். அவர்கள் அபாயத்தினின்றும் மீண்டுவிட்டோமென்று தெரிந்துகொண்டும், மறுபடியும் கனிகிரியின்மீது படையெடுத்துச் சண்டையில் தோற்கடித்து, கஜபதியின் குமாரியான சின்னதேவி என்பவளைத் தூக்கிக்கொண்டு

* Epi. Indi. Vol. VI P. 6.

சென்றார்கள். ராஜ குடும்பத்தினரை விந்திய மலைக்கு அப்பால் துரத்தி விட்டனர்.

### பழிவாங்கும் சூழ்ச்சி.

இவ்வளவு சாமர்த்தியம் வாய்ந்த அரசனது சமசார வாழ்க்கை சந்தோஷமற்றதாக விருந்ததைக் கவனிக்க மிகவும் பரிதாபமாயிருக்கிறது. என்றைத்தினம் தனது நாள்வந்துசேர்ந்தானோ, அன்றைத்தினமே தன் மனைவி தன்னுயிர்க்கே உலைவைக்கலானாள். சின்னதேவியுடன் சில பெண்கள் வந்திருந்தனர். அவர்களது தூண்டுதலின்மேல் இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. விவாகமாய்ப் பள்ளியறைக்குப் போகும்போது தாதிகள் சின்னதேவிக்குத் துர்ப்போதனைகள் செய்தார்கள். தாய்தந்தையரை நாசஞ்செய்த பாதகனைப் பழிவாங்கவேண்டும்; உன்னை மோசமாகத் தூக்கிவந்தவனைக் கொலைசெய்யவேண்டும் என்று சொல்லி அனுப்பினார்கள்; அலங்காரஞ்செய்யும்போதே சேலைக்குள் ஒருகத்தியையும் மறைவாக வைத்து, பள்ளியறைக்குள் அனுப்பிக் காரியத்தை முடிக்கும்படி தைரிய வார்த்தைசொல்லி அனுப்பினார்கள். முதலில் சின்னதேவிக்குத்தன் கணவனைக் கொல்லவேண்டும் என்ற எண்ணம் கனவிலும் இல்லை. பின்னால் தாதிகளின் வார்த்தையைக் கேட்டுப் பழிவாங்க எண்ணினாள்; மறைத்துவைத்த கத்தியுடன் பள்ளியறைசென்றாள். கிருஷ்ணராயன், அவளைப் பார்த்ததும் பயங்கொண்டான். தன் மந்திரியும் ஆப்தமித்திரனுமான அப்பாஜியைக் கூப்பிட்டான். அப்பாஜி ஏதேனும் நடக்குமென்று முன்னமே அறிந்தோனாகையால், இக்குரல்கேட்டு, 'பயப்படாதே; தைரியமாயிரு; அஞ்சுவதற்குக் காரணமில்லை' என்று துணிவான மொழிகளைச் சொன்னான். இதற்குள் தாதிகளெல்லாம் கூட்டமாக வந்தனர். தன் சேனையொன்றைக் கூட்டி, சின்ன தேவியை, அவள் பெற்றோரிடம் கிருஷ்ணராயன் அனுப்பிவிட்டான்.

அன்றயிரவே, அவர்கள் போகப் புறப்பட்டார்கள். மாமகள், வஞ்சகமே குடிகொண்டதன் நெஞ்சிற்கும், மன்னனது தூய்மையான அந்தயத்திற்கும் உள்ள வித்தியாசங்களைத் தானே அறிந்து, இம்மகானுபாவனைக் கணவனாகப் பெற்றும் பலனநுபவியாது போனபின், தாய்தந்தையரைப் பார்ப்பதேன்? ஒருவர் முகத்திலும் விழிக்காது போக்குவேன் என்வினை வாழ்வை என்று தீர்மானித்து, சன்னியாசினியாகச் கடப்பை ஜில்லாவிலுள்ள காட்டில் காலத்தைக் கழிக்கலானாள். இம்மாதிரி தான் தீர்மானஞ் செய்திருப்பதை, கிருஷ்ணதேவராயனுக்குத் தாதிமூலமாக இவள் தெரிவித்தாள். தெரிவித்ததற்கிணங்க, கிருஷ்ணதேவராயன் அவளுக்கு வேண்டிய உதவிகளைத் தான் செய்வதாக வாக்குறுதி செய்தான்.*

### கம்பம் ஏரியின் சரித்திரம்.

அவள் ஒரு பெரிய அழகிய ஏரியை உண்டாக்கியிருக்கிறாள். அந்த ஏரி பன்னிரண்டு சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. அவளது கீர்த்தி ரகம் பக்கத்திலுள்ள சாசனங்களில் செதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மத்தியில் சிறுசிறு திட்டுக்கள் இருக்கின்றன. அவைகளுக்கு லங்கைகள் என்று பெயர்வழங்கும். ஒவ்வொரு லங்கையும் வளமாயிருக்கிறது.

இந்த ஏரியைப்பற்றி ஒரு கதை உண்டு:—ஏரிக்குக் கரை அவசியம். இக்கரைக்கு எதிரெதிரே இரண்டு கணவாய்கள் இருந்தன. இந்தக் கணவாயை மூடுவதற்கு எவ்வளவோ காலத்தையும் பணத்தையும் செலவழித்தாள். அப்படியும் முடிந்தபாடில்லை. இதை எப்படி மூடுவதென்று ஆழ்ந்த யோசனையிலிருந்தாள். அப்பொழுது தன்னிடம் அடிக்கடி வந்துபோய்க்கொண்டிருந்த

* கிருஷ்ணதேவராயன் தன் மனைவியான திருமலையம்மாவிற்குச் செய்த விதமே சின்ன தேவிக்கும் செய்திருக்கிறார். சிம்மாசலத்திலுள்ள சாசனத்தால் இவ்விருவர்களும் திருப்பதி, திருவண்ணாமலை இந்தத் தேவாலயங்களுக்கு வேண்டிய தானங்களைச் செய்திருக்கிறார்கள். திருப்பதி தேவஸ்தானத்தில் இவ்விருவர்களின் சிலைகள் கிருஷ்ணதேவராயனது சிலைக்கு இருபுறங்களிலும் இருக்கின்றன.

Madras Christian College Magazine Vol 10. P. 674.



கிழ இடைச்சியொருத்தி வந்தாள். அவள் வருத்தத்தின் காரணத்தை வினவினாள். அவளிடத்தில் இவள் ஆதியோடந்தமாகச் சொன்னாள். எல்லாவற்றையும் அவள் கேட்டுவிட்டு, கடைசியில், "அம்மா! ஒவ்வொரு கணவாய்க்கும் ஒவ்வொரு நரபலி கொடுத்தால் மூடிவிடும். நரபலி கொடுக்காதமட்டும் ஏரி முடியாது. நரபலிக்காகத் தாங்கள் விசனப்படவேண்டாம். என்னிடம் இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை இந்த நல்ல காரியத்திற்காகப் பலிகொடுக்க நான் சித்தமாயிருக்கிறேன். இதற்காக நீங்கள் பயப்படவேண்டாம். கணவாய்க்குப்பக்கத்தில் இவர்களை நிறுத்தி மண்ணால் மூடிவிடுங்கள்." என்று சொன்னதைக் கேட்ட ராணி, பயத்தினால் சில நிமிஷம் ஸ்தம்பித்து, "உலகத்திலே இப்படி பேசும் மாதர்களுமுளரோ? தன் பிள்ளைகளைப் பலிக்காகக் கொடுத்தல் ஸ்திரீகளுக்கும் தருமமோ? கணவாய்கள் மூடாமற்போனாலும் பாதகமில்லை. உன்னுடைய பிள்ளைகளைப் பலிக்காகக் கொடுக்கும் எண்ணத்தை அடியோடுவிட்டுவிடு." என்று உரைத்தாள். அந்த இடைமாது, இவளது வார்த்தைகளையெல்லாம் காதில் ஏற்றுக்கொள்ளாமல் உலகத்திற்குப் பிரயோஜனமில்லாத ஜன்மம் இருந்தென்ன? இறந்தென்ன? நீங்கள் வருந்தவேண்டாம்.' என்று சொல்லி, தன் வீடு சென்று, தன் இரு புத்திரர்களை அழைத்து, தனக்கும் ராணிக்கும் நடந்த சம்பாஷணையைச் சொல்லி, உங்களுக்கு "உலகத்தில் சாச்வதமான கீர்த்தி உண்டாகும் காலம் நெருங்கியிருக்கிறது. சந்தோஷமாக அக்கீர்த்தியை ஏற்றுக்கொள்ளுங்கள்; தைரியமாயிருங்கள்." என்று சந்தோஷ வார்த்தைகளைச் சொன்னாள். இவ்வார்த்தைகளைக் கேட்டதும், தாயை இழுத்துக்கட்டிக் கொண்டு, தாயார் சொன்னவிதம் நடக்கத் துணிந்து, தங்கள் விவாகத்திற்கு எவ்வளவுசந்தோஷமாகச்செல்வார்களோ, அதனினும் அதிகசந்தோஷமாக வரதராஜம்மாளிடம் சென்றனர். சின்ன தேவிக்கு அந்த இடத்தில் வரதராஜம்மாள் என்று பெயர். "தாயே! எங்களுடைய பெயர் காருள்ளளவும், கடல் நீருள்ளளவும், பாருள்ளளவும் சாச்வதமாக இருக்கத் தாங்கள் எங்களை ஆசீர்வதிக்கவேண்டுகிறோம்." என்று சின்ன தேவியம்மாளை வேண்டிநின்றார்கள். அவள் இந்தத் திவ்வியமான வார்த்தைகளைக் கேட்டதும், ஆச்சரியமடைந்து, அவர்களுக்குக் கைம்மாறாக கொடுக்கத் தான் சக்தியற்றிருப்பதைத் தெரிவித்தாள். இரண்டுபைநிறையப் பணத்தை எடுத்துக்கொடுத்து, 'இந்தப் பணத்தைத் தருமத்திற்காக உபயோகப்படுத்துங்கள்.' என்று சொல்லிக்கொடுத்தாள். அவர்கள் அப்பணத்தைக் கைக்கொண்டு, தங்கள்பேரில் இரண்டு கிராமங்கள் கட்டச்சொன்னார்கள். வரதராஜம்மா மிக்க சந்தோஷத்துடன் அவர்களது இஷ்டத்திற்கு இணங்கினாள். வருணன்மீது சண்டைக்குச் செல்பவர்கள்போல் அவர்கள்தைரியமாக நீரில் இறங்கிப் பரமேச்வரைத் தியானஞ்செய்தவண்ணமே சிரமேற் கைகூப்பி, கணவாயினுள் நுழைந்தார்கள். ஏரிவெட்டுவோர்கள் கூடைகளில் மண்ணை வாரிவாரி அவர்கள்தலைமீது கொட்டினார்கள். பிறகு எல்லாம் சரியாக நடந்தது. வரதராஜம்மா வாக்குக்கொடுத்தமாதிரி அவர்கள்பேரிலேயே இரண்டு கிராமங்கள் கட்டினாள். அச்சகோதரர்கள் பெரிய கம்பன், சிறிய கம்பன் என்ற பேருள்ளவர்கள். அந்த இரண்டு ஊர்களுக்கும் அவள் பெரிய கம்பம், சின்ன கம்பம் என்ற பெயரையே யிட்டாள். இவ்விரண்டும் பிற்பாடு ஒன்றாகச் சேர்க்கப்பட்டுக் கம்பம் என்ற பெயராலேயே சென்னைராஜதானியிலுள்ள ஜனங்களால் வழங்கப்பட்டுவருகிறது. இப்பொழுது இருக்கும்படியான கம்பம் ஏரியின் சரித்திரம் இது. கிருஷ்ணதேவராயனது முதல் விவாகத்தின் சரித்திரம் இதுவரை சொல்லிவந்தோம். அவரது பிற்காலத்துச்சரித்திரம் வருகிறமாதத்துப் பத்திரிகையில் எழுதப்படும்.

கே. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

## Anger and its Evils.

## கோபமும், அதனாலாகிய தீமைகளும்.

பிறர் நம்மிலும் மிக்கவராயிருப்பினும், நமக்குச் சமானமானவராயிருப்பினும், நம்மிலும் குறைந்தவராயிருப்பினும் ஒருகாரியத்தைச் செய்தவிடத்து அது நம்முடைய மனதுக்கு ஒவ்வாவிட்டாலும், நமக்குத் தீங்கை விளைவித்தாலும், அவர்களை அந்தக் காரியத்திற்காகத் தண்டிக்க நம்மைத் தூண்டும் துர்க்குணமே கோபம் என்று சொல்லப்படும். இந்தக் குணம் எப்படிப்பட்ட சத்புருஷனுக்கும் ஒருகாலத்தில் உண்டாகும் என்று மனோதத்துவலட்சணசாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

சகல உணர்ச்சிக்கும் மூலாதாரஸ்தானமாகிய மூளையினின்றும் பற்பல நரம்புகள் தேக முழுவதும் வியாபித்திருக்கின்றன. இந்நரம்புகள், ஆன்மநிலையாகிய மூளைக்கு உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக் கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகளென்றும், மூளையினிடத்து உண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் நரம்புகளென்றும் இருவகையாயுள்ளன.

ஒருவன் திடீரென்று நமது தோளிற் குத்தினானென வைத்துக்கொள்வோம். நம்மை அப்படி குத்தினவனை மறுபடியும் நாம் அதேமாதிரி குத்தவேண்டுமென்று நாம் எண்ணங்கொள்ளுவதற்கு முன்னமே, அவனைக் குத்தவோ வேறேதேனும் செய்தற்கோ வெகு சீக்கிரத்தில் நம்முடைய கை எழுகின்றது. இதற்குக் காரணம் யாது? அவன் நம்மைக் குத்தியவுடனே அதிசீக்கிரத்தில் அவ்விஷயத்தை ஆன்மநிலையாகிய மூளைக்குச் சில நரம்புகள் தெரிவிக்கின்றன. அங்கு நிகழும் உணர்ச்சியை வெளிக்குத் தெரிவிக்கும் வேறே சில நரம்புகள் அத்யற்புதமான வேகத்துடன் இயங்கி நம்முடைய கரத்தைத் தூக்குகின்றன. ஸ்மரணை தப்பித் தூங்கிக்கொண்டிருக்கும் ஒருவனுடைய காதை நாம் கிள்ளினால் அவன் தன்னுடைய கரத்தை உடனே மடக்கிக்கொள்ளவேண்டுமென்று எண்ணங்கொள்ளாதிருந்தும் அவனுடைய கரம் உள்ளுக்கு வாங்கிக்கொள்வதையாகிலும், முன்னிருந்த நிலையிலிருந்து வேறே நிலைக்குத் திரும்புவதையாகிலும் நாம் பிரத்தியக்ஷமாகக் காண்கிறோம். உணர்ச்சியுண்டாகும்படி விஷயங்களை உள்ளுக்குக்கொண்டுபோய்த் தெரிவிக்கும் நரம்புகள், மூளையினிடத்து உண்டாகும் உணர்ச்சியை வெளிக்குத்தெரிவிக்கும் நரம்புகள் என்னும் இருவகை நரம்புகளின் அதிவேகமான இயக்கமே மேலே எடுத்துக் காட்டப்பட்டதற்குக் காரணம்.

ஒருவன் தன் மொழிகளினாலாவது செய்கைகளினாலாவது நமக்கு அருவருப்பான உணர்ச்சியை உண்டாக்குங்காலத்து, உடனே அவனைத் திட்டவாகிலும் அடிக்கவாகிலும் வேறே யாதொரு தீங்கைச் செய்யவாகிலும் எழுகின்ற மனநிலைக்குத்தான் கோபமென்று பெயர். மேற்கண்ட இருவகையான நரம்புகளின் இயக்கமே அதற்குக் காரணம். ஒவ்வொருவனுக்கும் அவ்விருவகையான நரம்புகளும் அமைந்திருக்கிறபடியினால் எல்லோருக்கும் கோபமென்பது இயல்பில் உதிக்கத்தக்கதோர் குணமாயிருக்கிறது. இவ்விருவகையான நரம்புகளும் தாழ்ந்த ஜீவராசிகளுக்கும் அமைந்திருக்கிறபடியால், அவற்றிற்கும் கோபம் என்னுங் குணம் இயற்கையாயிருக்கிறது. இக்குணத்தை 'முழுதும் போக்குவது சாத்தியமல்லாத காரியமாயிருக்கினும், ஒவ்வொருவனும் அதைத் தன்னுடைய புத்தியினால் அடக்குதல்கூடும். அப்படி அடக்காது விடுவானாயின், பெருத்த தீமைகள் அவனுக்கும் ஏனையோர்க்கும் எப்போதும் உண்டாய்க்கொண்டே வரும்.

நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் தத்தம் மனதுக்கிசைந்தவாறு பற்பல காரியங்களைச் செய்துகொண்டு வருகையில் 'அபிப்பிராய பேதத்தினால் நம் மனதுக்கு அவை ஒவ்வாவிடத்து நம்மிடத்தில் கோபம் பிறந்துகொண்டேயிருக்கும். அதைக் கூடியவரையில் அடக்க முயலவேண்டியது நம்முடைய கடமை.



அறுவது (முழுவதும் அற்றுப்போவது) சினம் என்று கூறாமல், "ஆறுவது (தணியத்தக்கது) சினம்" என்று ஔவையார் கூறிய அருமையை யோசித்துப் பார்க்கையில், மனிதனுடைய மனோதத்துவலட்சணத்துக்குச் சினம் இயற்கையான குணமென்பதையும், அதை அறவே போக்குவது எப்படிப்பட்டவனுக்கும் அசாத்தியமென்பதையும், அதை ஒவ்வொருவனும் தன்னுடைய மனோதிடத்தைக்கொண்டு தணிக்கவேண்டியதென்பதையும் அறிவிக்கவே அம்மாது சிரோமணி அங்ஙனம் கட்டளையிட்டிருக்கிறதாகத் தெரியவருகிறது.

ஒருபெரியவர் ஓரூரில், 'யார் என்ன சொன்னபோதிலும் கோபிக்கிறதேயில்லை' என்று விருது கூறிக்கொண்டிருந்தார். அதைக் கேள்வியுற்ற ஓர் ஆசியக்காரன் அவரிடத்திற் சென்று, "சுவாமி! தங்களுக்கு எப்போதும் கோபம் வருகிறதேயில்லையா?" என்றான்.

அவர் அவனை நோக்கி அதிசாந்தமாய், "அப்பா! எப்போதும் வருகிறதேயில்லை" என்றார்.

மறுபடியும் அவன் அப்படியே கேட்டான். அவர் அதற்கும் அம்மாதிரியே விடை பகர்ந்தார்.

மீண்டும் மீண்டும் முப்பது நாற்பதுதரம் அவன் அந்த கேள்வியைத் திருப்பித்திருப்பி மூச்சுவிடாமற் கேட்டுக்கொண்டிருந்தான்.

அப்போது அப்பெரியவர் "சீ! சீ!! நீ முட்டாளாயிருக்கிறாய், எத்தனைதடவை உனக்கு நான் உத்தரம் சொல்லுகிறது? போ" என்று முகங்கடுத்துக் கூறினார்.

அதைக்கண்டமாத்திரத்தில் அவன் "சுவாமீ இதோ தங்களுக்கு இப்போது கோபம்பிறந்ததே! எப்போதும் கோபிப்பதில்லை யென்னும் பிரதாபம் வெட்ட வெளிச்சமாயிற்றே"! என்று பரிகாசம் செய்துகொண்டே போய்விட்டான்.

ஆகையால், எப்படிப்பட்டவனிடத்தும் ஒருகாலத்தில் கோபம் தன்னையறியாமலே உதிக்கும்.

காமக்குரோதாதிகளை அறவே விட்டொழித்த துறவிகளுக்கும் சினம் ஒவ்வொரு காலத்தில் உண்டாதல் இயற்கை. ஆனால், அவர்களுடைய கோபம் பிறருக்கு நன்மையையே விளைக்குமென்றும், ஆதலால் அது மறக்கருணையென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

கோபம் பெரும்பாலும் மனோதிடமற்றவனுக்கும் அகங்காரிக்குமே அடிக்கடி உண்டாகும். பாலர்களுக்கும் வயோதிகர்களுக்கும் அடிக்கடி சொற்ப விஷயங்கள் காரணமாகவும் கோபம் உண்டாகின்றதை யோசிக்கையில், கோபத்தை அடக்குவதற்கு மனோதிடமும் தேகதிடமும் அத்தியாவசியகமென்று தெரியவருகிறது.

கோபம் உண்டாகும்போது மாத்திரம் அதைச் சற்றே அடக்கிவிட்டால் அதன் வேகத்துவம் வெகு லேசாகக்குன்றும்.

"ஒருவரைக் கோபிக்க மனம் எழும்போது நெடுங்கணக்கை ஒருதரம் முகபாடமாகச் சொல்லிவிட்டுப்பிறகு கோபித்துக்கொள்" என்று ஒரு சாஸ்திரியார் கூறுகிறார். அதை ஒருதரம் சொல்லி முடிப்பதற்குள்ளாகக் கோபம் தணிந்தே விடுமென்பது அனுபவ பிரசித்தம்.

"கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாம்;
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்;
கோபமே தாயையுங் கொல்லுந் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ."
"கோபத்தாற் *கௌசிகன் தவத்தைக் கொட்டினான்;
கோபத்தாற் ‡நகுடனுங் கோல மாற்றினான்;
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்;
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே."

என்று கோபத்தால் விளையும் பெருங்கேட்டைக் குறித்து மூதறிஞர் பலவாறாகக் கூறியுள்ளார்கள். உலகசரித்திரமும் அதற்குச் சாட்சி பகரத்தக்கதாயிருக்கிறது.

ஒருவன் நமக்குத் தீங்கான காரியமொன்றை செய்கையில் அவனை அதற்காகத் தண்டிக்க

* கௌசிகன்—விசுவாமித்திரன்.

‡ நகுடன்—இவன் சந்திரவமிச அரசன். (பாரதம் பார்க்க.)

வேண்டுமென்று எண்ணங்கொண்டன்றோ நாம் அவனைக் கோபிக்கின்றோம்? நாம் அந்தச் சமயத்தில் கோபியாது பொறுமையுடன் சும்மா இருந்து விடுவோமாயின், நமது பொறையுடைமையே அவன் மனச்சான்றுடையவனாயிருந்தால் அவனது மனதை அறுக்கும்; இது மனிதத்துவலட்சணம். அச்சமயத்தில் நாம் கோபித்துக்கொண்டு அவன் செய்ததற்குப் பிரதிபலனாக ஒரு தீங்கைச் செய்வோமானால், அப்பொழுது எவ்வளவு நமக்கு மனச்சந்துஷ்டி உண்டாகுமோ அதைவிடப் பொறையுடைமையால் ஆயிரமடங்கு அதிகமாய்ப் பெருமகிழ்வு பின்பு உண்டாகும். இக்கருத்தை அமைத்தே,

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம் தகுதியான் வென்று விடல்" என்றும், "ஒறுத்தார்க் கொருநாளை யின்பம்; பொறுத்தார்க்கும், பொன்றுந் துணையும் புகழ்." என்றும், தெய்வப் புலவர் தமது தமிழ் மறையிற் கூறியுள்ளார். அன்றியும், மனிதனிடத்திலுள்ள ஒவ்வொரு துர்க்குணமும் பிறர்க்கும் அவனுக்கும் தீமையைத் தரத்தக்கனவாயிருக்கின்றன. அவற்றுட் சில அவனுக்கே பெரிய ஹானியைத் தரத்தக்கனவாகவும் மற்றுஞ்சில பிறர்க்கே பெரிய ஹானியைத் தரத்தக்கனவாகவும் இருக்கின்றன.

இவ்விருவகைக் குணங்களுள் தனக்கே பெரிய ஹானியைத் தரத்தக்கனவற்றிற்கெல்லாம் கோபம் நடுநாயகம். ஆகையாற்றான்,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால், தன்னையே கொல்லுஞ் சினம்"

என்று நாயனார் தமது உத்தர வேதத்திற் சட்டையிட்டிருக்கின்றனர்.

தன்னிலும் மிக்காரிடத்தில் ஒருவன் கோபங்கொள்ளக்கூடாதென்று நாம் வற்புறுத்திக்கூற வேண்டுவதில்லை; ஏனெனில், அதனால் விளையும் பலப்பிராப்தியே அவனுக்கு வெகு சீக்கிரத்தில் புத்தி கூறத்தக்கது.

ஒருவன் தன்னிலும் கல்வி, செல்வம், பலம், முதலியவற்றிற் குறைந்தவனிடத்துச் சினங்கொள்ளாதிருத்தலே பெருமையாகும். அது தான் பொறையுடைமைக்கு அழகு. "எல்லாமொருக்கு மதுகை யுரனுடையான், பொறுக்கும்பொறையே பொறை" என்று மேலோர் கூறியிருக்கின்றார்கள்.

"ஜனவிநோதினி."

---

## ஔவை.

நம் அருந்தமிழ்மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம், பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ண பரம்பரையை அநுசரித்தும், வேலூர் வூரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு.சு. ஸ்ரீநிவாஸாசாரியரால் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டது; சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக் கூடியது; வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது விலை அணா—6.

"ஜனோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் விலை அணா—5.

## காரைக்காலம்மை சரிதை;

கற்பிலும் ஈசுரபக்தியிலும் சிறந்த பெண்மணியும் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம்.

விலை அணா 1.

விவேகபாநு:—(டர்பன்) * * * இனிமையாகவும், உருக்கமாயும், புராணக்கருத்தை விளக்குவதாயும் கோர்த்தியான எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. * * இம்மாதிரியான சமய ஞானம்புகட்டும் புத்தகங்கள் ஒவ்வொரு தமிழ்ப் பெண்மணிகளிடத்தும் இருத்தல் அவசியமாகும்.

சுதேசமித்திரன்:—* * * இப்படிப்பட்ட கதைகள் நம் நாட்டுப் பெண்பாலர்கள் பார்வையில் இருக்கத்தக்கது.

பிரபஞ்சமித்திரன்:—* * * நல்ல தமிழில் எளிய நடையில் எழுதப்பட்டு எல்லாருக்கும் பயன்படக்கூடியதாயிருக்கிறது,

மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.



# Review of the Press.
# பத்திரிகை ஆராய்ச்சி.

## Essentials of good Teachers.
## உபாத்தியாயர்களின் தேவைகள்.

உபாத்திமைத் தொழிலானது மிகவும் பொறுப்புடையது. சிறுவர்களை நல்ல வழியில் சீர்திருத்தி அவர்களை முன்னுக்குக் கொண்டுவருவது உபாத்தியாயர்கடமையாகும். பிள்ளைகளின் தாய் தந்தையர்களைப்போல் இருந்து அவர்களுடைய க்ஷேமத்தைக் கோருபவர்கள் உபாத்தியாயர்களே. இத்தொழிலில் நுழைகிறவர்கள் தங்களிடத்தில் ஒப்பிக்கப்பட்ட கடமைகளை நன்கு உணர்ந்து, பிள்ளைகளின் மனதிற் படியும்படி விஷயங்களைப் போதிக்கவேண்டும். உபாத்திமைத் தொழிலில் நுழைகிறவர்களிடத்தில் அவசியம் காணப்படவேண்டிய சில குணங்களை ஒரு நிருபர் 'பெண்கல்வி" யில் பின்வருமாறு எழுதுகிறார்:

புதிதாக உபாத்திமைத்தொழிலில் புகுகிறவர்களுக்குப் பொதுவாகப் பிள்ளைகளிடத்தில் ஆழ்ந்த அன்பும், அவர்களின் க்ஷேமத்தில் ஆசையும் இருக்கவேண்டும். பிள்ளைகளிடத்தில் அவர்களுக்கு இயற்கையன்பு இல்லையாகில், அவர்கள் உபாத்திமைத் தொழிலுக்குப் போகப் பிரயத்தனப்படாமலிருப்பதே உசிதம். உபாத்திமைத் தொழிலில் கீர்த்திபெற இருப்பவர்கள் பொறுமையுடையவர்களாயும், தேகாரோக்கியமுடையவர்களாயும், சந்தோஷமுடையவர்களாயும் இருக்கவேண்டும். மேலும், ஸ்பஷ்டமாக மனதிற் பதியும்படி போதிக்கும் தன்மையும், போதிப்பதற்கு ஆதாரமான சாமர்த்தியமும், உயர்ந்த குணங்களும், கூர்மையான கண்ணும், காதும், பக்ஷம் நிறைந்த சித்தமும் உடையவர்களாயிருக்கவேண்டும். பாடசாலைக்கு வரும்போது குறித்த காலத்தில் லக்ஷணமாக வரவேண்டும். அவர்கள் சுத்தமான உடைகளை உடுத்திருக்கவேண்டும்.

மேலும், உபாத்தியாயர்கள், தங்கள் அந்தஸ்துக்குத் தக்கவிதம் ஆடை தரித்தல் அவசியம். அவர்களுக்குச் சம்பளம் கொஞ்சமானதால், அதற்குத் தகுந்த விதம் ஆடையும் இருக்கவேண்டும். ஆடையினால்தான் ஒருவனுக்கு மதிப்பு ஏற்படும். ஆகவேதான் 'ஆடையில்லாதவன் அரைமனிதன்' என்னும் பழமொழி வழங்குகின்றது. அழுக்கு வஸ்திரமும், க்ஷவரம் செய்துகொள்ளப்படாத முகமும் இவருடைய உயர்ந்த பதவியையும் மதிப்பான வார்த்தைகளையும் கெடுத்துவிடும். அவர்கள் சுறுசுறுப்புள்ளவர்களாயிருக்கவேண்டும். வகுப்பில் நிற்றல் முதலிய செய்கைகளில் அவயவங்களை வைத்துக்கொள்ளும் ரீதியைப்பற்றி உபாத்தியாயர்கள் கொஞ்சம் கவனக்குறைவாகவேயிருக்கிறார்கள். சோம்பலாய்ப் படுத்தமாதிரியாக நாற்காலியில் உட்கார்ந்திருப்பது மனம் சோம்பலாயிருப்பதை முன்னமேயே யெடுத்துக்காட்டும். உபாத்தியாயர்கள் நாற்காலியில் உட்காருவதைவிட அதிகநேரம் அதை விட்டு வகுப்பில் நடந்து பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பது நலம். அவர்கள் மேஜையின்மீது காலைவைத்தோ அல்லது அதன்மீது சாய்ந்துகொண்டோ மற்றும் எந்தவிதமாகவோ நிற்கக்கூடாது. நாற்காலியில் இரண்டு கால்களையும் தூக்கிவைத்துக் கொள்வதும், புஸ்தகத்தை முழங்காலின்மீது வைத்துக்கொள்வதும், சுவரின்மீது தன்தலையைச் சாய்த்துக்கொள்வதும் எப்படியிருக்கிறதென்றால்:'நான் சோம்பலாயிருக்கிறேன், நீங்களும் அப்படியிருக்க இஷ்டப்பட்டால் இருக்கலாம்' என்று சொல்வதுபோலாகும். பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பும் கவனிப்பும் இருக்கவேண்டுமென்று எண்ணுகிறவரானால், தமக்கு அவைகளிருப்பதாகத் தாமே நேரில் பிள்ளைகளுக்குச் சுறுசுறுப்பாகவிருந்து காட்டவேண்டும்.

உபாத்தியாயர்கள் காலை பத்து மணி அடித்தால் தங்களவேலை ஆரம்பிக்கிறதென்றும், பகல் ஒருமணியடித்தால் காலைவேலை முடிந்துவிடுகிறதென்றும், மத்தியானம் இரண்டு மணியடித்ததும் மறுபடியும் வேலை ஆரம்பமாகிறதென்றும், மாலை ஐந்துமணியடித்ததும் ஒருநாள் வேலை முடிந்துவிடுகிறதென்றும் நினைக்கக்கூடாது. பள்ளிக்கூடத்திற்கு வெளியிலும் தம்மிடம் படிக்கும் பிள்ளைகளைப் பற்றிச் சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு உபாத்தியாயர்க்கும் கடமையாகும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்தை விட்டுப் போய்விட்டால் தங்களுடைய பொறுப்பும் அப்போதே போய்விடுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்பது கூடாது. உபாத்தியாயர் பிள்ளைகளின் தகப்பன்மார்களையோ அல்லது பந்துக்களையோ தெரிந்துகொண்டு, அவர்களுடன் பிள்ளைகளைப்பற்றி சம்பாஷிக்கவேண்டும். உபாத்தியாயர் சொல்லும் வார்த்தைகளை அவர்கள் யாவரும் கேட்டு நடப்பார்கள். பிள்ளைகள் படியாமலோ அல்லது கவனத்தப்பியோ துஷ்டத்தனம் செய்துவந்தால் அவர்களைச் சரியானபடி திருத்தவேண்டும்.

உபாத்தியாயர் பூரண ஞானமுடையவராயிருக்கவேண்டும்; பலவிதமான புத்தகங்களைப் படித்தவராயிருக்கவேண்டும். பிள்ளைகளுக்கு எதைக்கற்பிக்கவேண்டும்?

எப்படிகற்பிக்கவேண்டும்? ஏன் கற்பிக்கவேண்டும்? முதலியவிஷயங்களை ஒன்றுகூட விடாமல் முழுமையும் தெரிந்துள்ளவராயிருத்தல் அவசியம். தமக்குத்தாமே மனக்கற்பனை செய்வதைப் பிறருக்கு மனதிற் பதியும் வண்ணம் வர்ணித்துச் சொல்லும் சக்தியையும் உடையவராயிருக்க வேண்டும்; சம்பாஷிப்பதில் தேர்ந்தவராயும் கதைசொல்வதில் சமத்காரமுள்ளவராயுமிருக்க வேண்டும்.

## Female Education.

### பெண் கல்வி.

பெண்களுக்கு அவசியம் கற்பித்துக் கொடுக்கவேண்டிய சிலவிஷயங்களை மிஸடர். டி. என். கிருஷ்ணசாமி ஐயர் எம். ஏ; எல். டி. "ஜனாபிமானியில்" பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—

(1) ஸ்வதேச பாஷையில்.—ஸாதாரணமாய் எழுதவும், படிக்கவும். இக்காலத்து படிப்பினால் ஸ்வதேச பாஷைகளே க்ஷீண திசைக்கு வரும்போலிருக்கிறது. இங்கிலீஷ்படித்த புத்திமான்கள் தங்கள் தாயாரிடத்திலும் மனைவியிடத்திலும் இங்கிலீஷிலேயாவது அது கலந்தாவது பேசாமலிருக்க முடிகிறதில்லை. இது போதாமல், பெண்களும் சிறுவயது முதல் கொண்டே ஆங்கிலேய பாஷையில் பாடங்கள் கற்றுக்கொண்டால், ஸ்வதேசபாஷைகள் சீக்ரத்தில் நாசத்தை அடைந்துவிடும். இந்த விஷயத்தில் நம்தேசத்து மகா கவியாகிய ரபீந்த்ரநாத் டாகூர் (Rabindra Nath Tagore) என்னும் வங்காள கனவானிடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஸமாசாரம் ஒன்றிருக்கிறது: அவருக்கு இங்கிலீஷில் விசேஷப்பயிற்சி உண்டென்றாலும் அவர் ஸ்நேகிதர்களோடு பேசுவது ஸ்வதேசபாஷையில்தான். முன்னால் வெங்காளி பாஷையில் கவனங்கள் எழுதிக்கொண்டுதான், பின்பு ஆங்கிலத்தில் மாற்றுவதாக நமக்கு தெரிவருகிறது.

(2) கணிதம்.—சாதாரணமாய் கூட்டல் கழித்தல் முதலியவும் இந்தியநாணய கடைக் கணக்குகளும்.

(3) ஸுகாதார விளக்கம்.—இதின் தத்வங்கள் ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரிந்திருக்கவேண்டியது. தங்கள் வீடுகளை சுத்தமாய் வைத்துக்கொள்ளுதல்; ஊரில் காலரா, ப்ளேக் முதலிய கொள்ளைநோய்கள் வரும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள்; இன்னும் தேகஸுகத்தைப்பற்றி அநேக ஸமாசாரங்கள்.

(4) தேகலக்ஷண சாஸ்திரம்.—மானிட தேக சாஸ்திரத்தின் முக்கிய விஷயங்களும், குழந்தைகளை வளர்த்துப் பாதுகாக்கும் முறைகளும்.

(5) குடித்தனமுறை.—சமையல் வேலையும் ஸாதாரண தையல்வேலைகளும், துணிமணிகள் நன்றாய் வெளுக்கிறவிதமும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்தில் சொலித்தர ஏற்பாடு இருக்கவேண்டியது. ஐரோப்பிய தேசத்து பெண்களுக்கு மேல் சொன்ன ஒவ்வொரு ஸமாசாரங்களிலும் தேர்ச்சியடைய ஏற்பாடுகளுண்டு. அவைகளை தெரிந்துகொள்வதனால் நம்தேசத்தில் மத்திய ஸ்திதியிலிருக்கும் ஜனங்களுக்கு (Middle class families) ரொம்ப பயன் உண்டாகும்.

(6) ஸங்கீதம்.—இந்தக் காலத்தில் ஆங்கிலேய துரைசானிகள் ஸங்கீதம் என்கிற வ்யாஜத்தில் தங்களுக்கு தெரிந்த ஆபாஸமான பாட்டுக்களையும் நோட்டுகளையும் ரம்பம்போட்டு அறுப்பதுபோல் ஹார்மோனியத்தை வைத்துகொண்டு கற்றுக்கொடுக்கிறார்கள். இது எல்லாவற்றிலும் துக்கிக்கவேண்டிய விஷயம் நமது பெண்களுக்கு கர்நாடக ஸங்கீதத்தில் ஸாதாரண தேர்ச்சி உண்டாவதற்கு ஒவ்வொரு பாடசாலையிலும் ஏற்பாடிருக்கவேண்டும்.

(7) தேகப்பயிற்சி.—இந்தியர்களாகிய நாம் பலஹீனர்கள் என்று பெயர் வாங்கியிருக்கிறோம். அதிலும் இந்திய ஸ்திரீகள் மிகவும் சேவலம். சராசரி உயரம் 4½ அடிக்குமேல் காண்பது அரிது ஒருமாது இரண்டு பிள்ளை பெற்றுவிட்டால் பலமெல்லாம் ஒடுங்கிப்போகிறது. சிறுவயதில் பள்ளிக்கூடங்களில் தகுந்த சிரத்தையோடு தேகப்பயிற்சி செய்து வந்தால் பெரியவர்களாகும்போது அவர்கள் வீட்டுக்காரியங்களை பரிசாரகன் ஒத்தாசையில்லாமல் சுறுசுறுப்பாய் செய்வார்கள். தேகத்தில் தகுந்த ரத்தஓட்டமும் பலமுமிருக்கும்.

(8) ப்ரக்ருதி விஷயங்கள்.—பக்ஷி மிருகவர்க்கங்களைப்பற்றியும், செடி கொடி மரங்களைப்பற்றியும் இயற்கையில் காணப்படும் அநேக விஷயங்களைப்பற்றியும் நாம் வஸிக்கும் பூமி, சந்திரன், சூரியன், கிரஹணம், வால் நக்ஷத்திரம் போன்ற முக்கிய ஸமாசாரங்களைப்பற்றியும்.

(9) சித்திர வரைதல்.—சித்திரவேலை செய்யவும், பார்த்து ஆனந்திக்கவும்.

(10) பொது அறிவு.—ராஜாங்க ஸமாசாரங்களும், உலகத்தின் தினஸரி நடவடிக்கைகளும், கோர்ட்டு தபாலாபீஸ் முதலியவைகளைப்பற்றியும், பூகோள சாஸ்திரமும்.

(11) மதபோதனை.—அநேக பள்ளிக்கூடங்களில் நமது மதத்தின் விஷயங்களைப்பற்றிக் கற்பிப்பதேயில்லை. இதுவுமல்லாமல் மிஷன் பள்ளிக்கூடங்களில் கிறிஸ்தவ சுவிசேஷங்களும் பாட்டுக்களும் சொல்லித்தருகிறார்கள். நம்முடையமதம் ஸ்வதேச பாஷைகள் போல் நாசம் அடைகிறது. படித்தவர்கள் நாஸ்திகர்களாகவும் அநாசார படிந்தவர்களாகவும் திரும்புகிறார்கள். ஆகையால் ஸநாதன தர்மத்தைப்பற்றி பாடங்கள் கட்டாயம் சொல்லித்தர ஏற்பாடு இருக்கவேண்டியது.



## Notes.

### குறிப்புக்கள்.

**Mr. Edison.**

மிஸ்டர் எடிஸன்:—மிஸ்டர் எடிஸன் என்பவர் மின்சார சாஸ்திரத்தில் மிக்க தேர்ச்சி பெற்றவர். அவர் அமெரிக்கா தேசத்தைச் சேர்ந்தவர். கிராமபோன் பொனகிராப் முதலான வாத்தியக்கருவிகள் இவராலேயே கண்டுபிடிக்கப்பட்டன. இப்போது நடக்கும் யுத்தத்தில் ஸப்மரீன்களால் ஏராளமாக சேதங்கள் நேரிடுவதால், அவற்றின் சேஷ்டைகளை ஒழிக்கப் பல ஆராய்ச்சிகளை இவர் செய்துவருகிறார். இவருடைய ஆராய்ச்சிச் சாலையில் அன்னியர் எவரும் புகக்கூடாது. சாலையைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் அரைமைல் வரை எவரும் புகாதபடி பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கின்றது. டார்பிடோ வெடிகுண்டுகளினால் ஸப்மரீன்கள் தாக்குவதால், அவ்வெடிகள் தாக்குமுன்பே மின்சாரவிசையினால் அவைகள் பயனற்றுப் போகும்படி செய்ய இச்சாலையில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**A Palm Tree Phenomenon.**

ஓர் பனைமரத்தைப்பற்றிய அதிசயம்:—பாரீட்பூர் என்னும் ஜில்லாவில் ஒருவகை பனைமரம் உள்ளது. அது காலை முதல் சாயந்திரம் வரை தலைநிமிர்ந்து நேரே நிற்கின்றது. சாயந்திரமானவுடன் அம்மரம் தலைகுனிந்து விடுகின்றது. அப்போது அதன் மட்டைகளும் தாழ்ந்து விடுகின்றன. இவ்விதம் பிரதிதினமும் நடக்கின்றது. இம்மரத்தின் தலைப்பாகுவானது 100 க்கணக்கான அந்தர்கள் உள்ளதென்று சொல்லப்படுகின்றது. இதன் விளைவுகளையும், செயல்களையும் அளக்க ப்ரொபஸர் J. C. போஸ் ஒரு கருவியை அனுப்பியிருக்கிறார். அக்கருவியானது அம்மரத்தின் செயல்களையெல்லாம் கணக்கெடுத்துவருகின்றது. இதனால் மரத்திற்கும் உணர்ச்சியுண்டென்பது நிதர்சனமாகின்றது

**Copper Vessels.**

தாமிரப் பாத்திரங்கள்:—நம்முடைய கண்ணுக்குத் தெரியாமல் தேகத்தில் விஷத்தைக் கொடுக்கக்கூடிய கிருமிகள் தீர்த்தத்தில் இருக்கின்றன. அந்தத் தீர்த்தத்தைத் தாமிரப்பாத்திரத்தில் எடுத்தால் கிருமிகளெல்லாம் செத்து ஜலம் சுத்தமாய்விடுகின்றது. மேலும், தாமிரத்தில் தீர்த்தம் அருந்தினால் காலரா மலேரியா முதலிய வியாதிகள் அணுகா. இங்கிலாந்தில் அநேக சாஸ்திர விற்பன்னர்கள் தாமிரச்செம்புக்கு இன்னும் என்ன சக்தி யிருக்கிறதென்பதைப் பார்க்கவேண்டி, அநேக விதமான வியாதிகளை சுவஸ்தப்படுத்த அதில்திராவகம் செய்துகொடுத்து அதற்குண்டான குணங்களை வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். சீனர்கள் எவ்வளவு அசங்கியமாய்க் குடியிருந்தபோதிலும், அவர்களைக் காலரா அணுகாததற்குக் காரணம்: அவர்கள் தீர்த்தத்தைத் தாமிரபாத்திரங்களில் வைத்துக்கொள்வதேயாம்—பெண்கல்வி.

**Importance of Education.**

கல்வியின் அவசியம்:—கொஞ்சம் நாட்களுக்கு முன் லண்டன் நகரத்தில் சாஸ்திரசங்கத்தின் வருஷாந்த மீடிங்கு ஒன்று நடந்தது. அப்பொழுது கல்வி இலாகாவின் மந்திரியான டாக்டர் பிஷர்; யுத்தத்துக்குப்பிறகு திரவிய நிலைமையையும், தொழில் நிலைமையையும் சீர்திருத்திக்கொள்ள சாஸ்திர ஞானம், தொழில் முயற்சி, கல்வியறிவு ஆகிய இம்மூன்றையும் துணையாகக் கொள்ளவேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார். மற்றொரு சமயத்தில் லார்டு ஹாலிடேன் சொல்லியிருப்பதாவது:—"யுத்தத்திற்குப் பிறகு நமக்கு ஏராளமாகப் பணம் தேவையாயிருக்கும். அவற்றை ஜனங்களிடமிருந்துதான் பெறவேண்டும். அதற்காக அவர்களின் வருமானத்தை அதிகப்படுத்தவேண்டும். வருமானம் அதிகமாவதற்கு ஜனங்களின் அறிவை விசாலப்படுத்தவேண்டும். இதற்குக் கல்வியே ஆதாரமாயிருக்கின்றது இவ்வளவு ஆதாரமாயிருக்கும் கல்வியை நாம் விருத்தி செய்யாவிட்டால் நாம் முன்னேற்றமடைவது வெகுசிரமம்," இவ்வாறு இரண்டு கல்விமான்கள் கல்வியின் அவசியத்தைப்பற்றி சொல்லியிருப்பதை நாம் சிந்தித்து இந்தியாவில் கல்வியின் நிலைமையைச் சற்று கவனிக்கவேண்டும்.

**Ship driven by Electricity.**

மின்சார சக்தியினால் ஓடும் கப்பல்:—கப்பல்கள் ஆதியில் பாய்மரங்களைக்கொண்டே செலுத்தப்பட்டன; இப்போது பலவித மோட்டார் பவரைக்கொண்டு செலுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் மின்சார சக்தியினால் இதுவரை கப்பல்கள் ஓட்டப்படவில்லை. அமெரிக்காவில் இப்போது மின்சார சக்தியைக்கொண்டு ஓட்ட ஒரு பெரிய சண்டைக்கப்பல் கட்டப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது. அது 600 அடி நீளமும் 97 அடி அகலமும் உள்ளதாம். அதில் 14 அங்குலம் பீரங்கிகள் பன்னிரண்டும், 15 அங்குலம் பீரங்கிகள் இருபத்திரண்டும் ஏற்றப்பட்டிருக்கின்றனவாம்.

**An Agricultural school in Pudukotah.**

புதுக்கோட்டையில் ஒரு வியவசாயப் பள்ளிக்கூடம்:—புதுக்கோட்டையில் வருகிற ஜூலை மாதம் முதல் ஒரு வியவசாயப் பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்படுமெனத் தெரிகின்றது. இப்போது அதில் 12 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொருவருக்கும் மாதம் 1-க்கு ரூபா 6 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும்.

## Miscellaneous News.

### நாநாவித சங்கதிகள்.

அயர்லாந்து தேசத்து எஞ்சினியர் ஒருவர் அமெரிக்காவில் பெட்ரோல் கிணறுகளிலிருந்து பெட்ரோலை கடலின்கீழ்க் குழாய்களின் வழியாக இங்கிலாந்துக்குக் கொண்டு வரலாமென்று கூறுகிறார். அட்லாண்டிக் மகாசமுத்திரத்தின்கீழ் குழாய்ப்போட நூறு லட்சம் பவுன் தேவை என்றும், 18 அங்குலம் குழாய் போதுமென்றும், அதன் மூலமாய் நிமிஷம் ஒன்றுக்கு 700 காலன் பெட்ரோல் தருவிக்கலாமென்றும் அவர் கூறுகிறார்.

∴ ∴ ∴

கொச்சியில் டாடா அண்டு சன்ஸ் கம்பெனியார், தேங்காயிலிருந்து முத்துச்சிப்பிபோன்ற திரவப் பொருளை இறக்குவதற்காக 23 லட்சம் ரூபாய் செலவில் கிளையந்திரசாலை ஒன்று ஸ்தாபிக்கப்போகிறார்கள். அவ்வியந்திர சாலையை ஸ்தாபிப்பதற்காக ஒரு இடம் பணமில்லாமல் கொடுப்பதாகவும், இன்னும் அதற்கான உதவிகளைச் செய்வதாகவும் கொச்சி சமஸ்தானத்தார் சொல்லியிருக்கின்றார்கள்.

∴ ∴ ∴

இத்தாலியாவில் ஒரு புதுமாதிரி கப்பல் கட்டப்பட்டிருக்கிறதாம், அது மணி ஒன்றுக்கு 100 மைல் ஓடக்கூடியதாம். இக்கப்பல் செல்லும் வேகத்தினால் உண்டாகும் அலைகள் பலமைல்கள் தூரம் பரவுகின்றதாம். அதனால் ஸப்மரீன்கள் இக்கப்பலைத் தாக்கக்கூடாதாம்.

∴ ∴ ∴

திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் கல்வி இலாகாவினால் அங்கீகாரம்பெறாத 1500 திண்ணைப்பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. இவற்றை அங்கீகரித்து சொற்ப பணவுதவி செய்து வந்தால், பிறகு முற்றிலும் அங்கீகாரம் பெறுவதற்கு மதிப்பேற்படும் என்று கவர்ன்மெண்டு உத்திரவு பிறந்திருக்கின்றது.

∴ ∴ ∴

கூடலூரில் ஸ்திரீ உபாத்தியாயர்களுக்கு போதனா முறை ஸ்கூல் ஒன்று 1917-ம் வருஷம் ஜூலை மாதம் முதல் தேதி முதற்கொண்டு ஆரம்பஞ்செய்ய கவர்ன்மெண்டார் சாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

∴ ∴ ∴

லண்டன் நகரில் ஒரு ஸ்திரீ நான்கு ராத்தல் எடையுள்ள ரொட்டித்துண்டை குப்பைத் தொட்டியில் எறிந்ததற்காக அவளுக்கு ஐந்து பவுன் அபராதம் விதிக்கப்பட்டதாம்.

## Review of Books.

### புத்தக விமர்சனம்.

**Ratna Prakash.**

ரத்தினபிரகாசம் :—தஞ்சைவாசியான ஸ்ரீமான் டி. பி. ஜெயசங்கர் தவே அவர்களால் இயற்றப்பட்ட "ரத்தினப் பிரகாசம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். இந்நூலில் ரத்தினங்களைப்பற்றிய பல விஷயங்களும் வெகு விஸ்தாரமாக கூறப்பட்டிருக்கின்றன. ரத்தினங்கள் உண்டாகும் இடங்களும், அவற்றின் தன்மைகளும், குணதோஷங்களும், ஜாதிபேதங்களும், அவைகளைப் பரீக்ஷிக்கும் முறைகளும், இன்னும் பல விஷயங்களும் விரிவாக நன்கு கூறப்பட்டிருக்கின்றன. இன்னும், இந்நூலாசிரியர், பல பழைய நூல்களை ஆராய்ச்சி செய்தும், ரத்தினங்களில் தமக்கிருக்கும் பழக்கத்தைக் கொண்டும் இந்நூலை வெகு திறமையுடன் இயற்றிப் பொது ஜனங்களுக்கும், ரத்தின வியாபாரிகளுக்கும் உபயோகப்படுமாறு வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது. இப் புத்தகத்தின் விலை அணா 8 தான். வேண்டுவோர் ஜே. தவே அண்டு கம்பெனி தஞ்சை என்று எழுதிப் பெறலாம்.

**Dravida Patrika.**

திராவிட பத்திரிகை :—பிரதிவாரந்தோறும் பிரசுரமாகும் திராவிட பத்திரிகை என்னும் ஓர் அரிய பத்திரிகையின் சில பிரதிகள் நமது பார்வைக்கு வந்தன. அதில் இராஜீய விஷயங்களும், இன்னும், தேச நிர்வாக சம்பந்தமான பல விஷயங்களும் வெகு தெளிவாக, எடுத்துரைக்கப்படுகின்றன. விவசாயம் வியாபாரம், கைத்தொழில் முதலான விஷயங்களைப் பற்றிய அருமையான வியாசங்கள் தக்கவர்களால் எழுதப்பட்டு வருகின்றன. தேசக்கல்வியின் முற்போக்குக்கான பல விஷயங்களும் நன்கு கவனிக்கப்பட்டு அதன் அபிவிருத்தியையே நாடி இப்பத்திரிகை உழைத்து வருகின்றது. இன்னும் இப்பத்திரிகையில்: அன்னிய நாடுகளின் அமைப்பும், நிலைமையும், குறிப்பான வர்த்தமானங்களும் நன்கு குறிக்கப்பட்டிருக்கின்றன. தேசக்ஷேமத்துக்கென்றே உழைத்துவரும் இப்பத்திரிகையை நமது அபிமானிகள் ஆதரிப்பது மிகவும் அவசியமாகும். இதன் வருடச்சந்தா ரூ 4, தான். வேண்டுவோர், சென்னை லிங்கிசெட்டித் தெருவிலுள்ள இதன் ஆபீஸுக்கு எழுதிப் பெறலாம்.

**Novel.**

நாவல் :—இது ஓர் மாதாந்தத் தமிழ்ப்புத்தகம். காரைக்குடியினின்று வெளியாகின்றது. இதில் அறிவைப் பரவச்செய்வதற்கான சில கதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதன் வருடச்சந்தா ரூபா 3 வேண்டுவோர், மானேஜர், நாவல் பப்ளிஷிங் கம்பெனி, காரைக்குடி என்று எழுதிப் பெறலாம்.


# ஜனோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. } பிங்களஞு ஆனிமீ JUNE, 1917. { சஞ்சிகை 6. No. 6.


## Co-Operation and Agriculture.

By Mr. P. Chinnaswamy Aiyar.

### கூட்டுறவும், விவசாயமும்.

இதற்கு முந்திய வியாசத்தில் ஐக்கிய நாணயச் சங்கங்களினால் குடியானவர்கள் தங்கள் விவசாயத் தொழிலுக்குவேண்டிய பணத்தைச் சுலபமான வட்டிக்குத் தேவையானபோது வாங்கிக் கொள்ளலாமென்றும், வருஷவாரியில் மாசூலிலிருந்து கொஞ்சங் கொஞ்சமாய்த் திருப்பிக் கொடுத்துக் கஷ்டமில்லாமல் தீர்த்துவிடலாமென்றும், கையில் ஏதாவது மிஞ்சி நிற்கும் தொகைகளை அப்போதைக்கப்போது வீண் செலவு செய்ய இடமில்லாமல் சங்கத்தில் டிபாசிட்டாகப் போட்டுவைத்து ஏதாவது ஒரு காரியத்திற்கு உபயோகப்படக்கூடிய பெருந்தொகையாகச் சேர்க்கலாமென்றும் எழுதியிருந்தேன்.

ஐக்கிய நாணயச் சங்கம் என்பதன் பொருளை நன்கு கவனிப்போமாகில், அச் சங்கங்களுக்கு இருக்கவேண்டிய லக்ஷணங்கள் ஏற்படுகின்றன. ஐக்கியம் என்கிற பதத்திற்கு ஒற்றுமை என்பது பொருள். பத்து நபர்கள் தனித்தனியாய்ச் செய்யக்கூடாத ஒரு காரியத்தை அந்தப் பத்துபேர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாய்ச் செய்தால் அந்தக் காரியத்தைச் சுலபமாய்ச் செய்துவிடலாமென்பது தெரிந்த விஷயம். உதாரணமாக, 10 நபர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 200 ரூபாய் கடன் வேண்டுமென்று வைத்துக்கொள்வோம். தனித் தனியாகக் கடன் வாங்கப்போனால் சாவுகாரியினிடத்தில் கடன் கிடைப்பது கஷ்டமாயிருக்கும். இந்தப் பத்து நபர்களும் ஒன்று சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஜாமீனாக நிற்க ஒப்புக்கொண்டு மொத்தமாய் 2000 ரூபாய் கடன் வாங்கினால், பணம் சுலபமாய்க் கிடைப்பதுமன்றி, சுவல்ப வட்டிக்கும் கிடைக்க ஏதுவாகிறது. ஏனென்றால், பத்துப் பேர்களுடைய சொத்துக்களும் அந்த மொத்தத் தொகைக்கு ஆதாரமாயிருப்பதனாலும், பத்து நபர்களின்பேரில் தனித் தனியாகப் பத்துப் பேரேட்டில் இருப்பதற்குப் பதிலாக ஒரே பேரேட்டில் இருக்கிற சவுகரியம் ஏற்படுவதனாலும், சாவுகார் நம்பிக்கையோடு பணம் கொடுக்கிறான். ஆகையால்தான், ஒரு ஐக்கிய நாணயச்சங்கம் ஏற்படுவதற்குமுன் 10 நபர்களுக்குக் குறையாமல் ஒருவர்க்கொருவர் ஒற்றுமையோடு ஒவ்வொருவரும் மற்ற நபர்களுடைய கடன்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டுமென்பது அவசியம். ஒரு சங்கத்திற் சேரக்கூடிய 10 அல்லது 15 நபர்களும் ஒரு ஊரில் குடியிருந்துகொண்டு, ஒவ்வொருவ

னுடைய நிலைமையும், யோக்கியதையும் தெரியாவிட்டால் ஒன்று சேரமாட்டார்கள். சாதாரணமாக, ஒரு கிராமத்திலிருக்கும் குடியானவனுக்கு அண்டைவீட்டுக்காரர்களுடைய நிலைமையும் யோக்கியதையும் நன்றாய்த்தெரிந்திருக்கும். ஆகையால்தான், ஒவ்வொரு கிராமத்திலும் தனித்தனியாகச் சங்கங்கள் வைத்துக் கொள்வது உசிதமென்று ஏற்படுகிறது. இப்படி சேருகிற பத்து நபர்களும் தங்களுக்கு வேண்டியதொகையை வெளியிலிருந்து கடன் வாங்கித் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளுகிறார்கள். அப்படி வாங்கும் தொகைக்கு ஒவ்வொருவனும் ஜவாப்தாரியாகிறான். எப்பொழுது இந்த ஜவாப் நியமம் ஏற்பட்டுவிடுகிறதோ அப்பொழுதே அதிற் சேர்ந்திருக்கும் நபர்கள் ஒவ்வொருவர்க்குள்ளும் பரஸ்பரம் நம்பிக்கையும் நாணயமும் இருக்கவேண்டியது அவசியமாகிறது. அதாவது நாணயமுடையவர்களும் அதாவது வாக்குத் தவறாமல் வாய்தா தேதிகளில் பாக்கியைச் செலுத்தக்கூடியவர்களும் அதனால் மற்றவர்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கக்கூடியவர்களும் ஒற்றுமையோடு சங்கமாய்ச் சேர்ந்து தங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துகொள்வதுதான் ஐக்கிய நாணயச் சங்கமென்று சொல்லப்படும்.

இப்படி ஐக்கியமும், நாணயமும் உடைய நபர்கள் பத்துப்பேர்கள் சேர்ந்து தங்கள் கிராமத்தில் ஒரு சங்கம் ஸ்தாபித்துக் கொடுக்கும்படியாக இதற்காக ஏற்படுத்தியிருக்கும் தங்கள் இலாகா ஐக்கிய நாணயச் சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு மனுப்போட்டுக் கொண்டால் டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களை அவர் அனுப்பி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார். அடியிற் கண்ட இடங்களில் மேற்படி அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ரார்கள் இருக்கிறார்கள்:—

மதராஸ்:- மதராஸ், செங்கல்பட்டு, தென்னாற்காடு ஜில்லாக்களுக்காக.

மதுரை:- மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சாவூர் ஜில்லாக்களுக்காக.

அனந்தபுரம்:- கடப்பை, கர்நூல், அனந்தபுரம், பெல்லாரி, சித்தூர், ஜில்லாக்களுக்காக.

கள்ளிக்கோட்டை:- கோயம்புத்தூர், மலையாளம், தென்கன்னடம், நீலகிரி முதலிய ஜில்லாக்களுக்காக.

சேலம்:- திருச்சினாப்பள்ளி, சேலம், வடஆற்காடு ஜில்லாக்களுக்காக.

ராஜமகேந்திரபுரம்:- நெல்லூர் முதலிய வட ஜில்லாக்களுக்காக.

சாதாரணமாக, ஒரு கிராமத்திற்கு ஒரு சங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு வேலை நடத்துவதுதான் உசிதம். அப்படி இல்லாமல் அடுத்து 1 மைல் அல்லது 2 மைல் வட்டத்திற்குள்ளிருக்கும் 2, 3, கிராமங்களை ஒன்றாய்ச் சேர்த்தும் ஒரு சங்கம் ரிஜிஸ்டர் செய்து கொள்ளலாம். ஏனென்றால், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சங்கத்தை ஸ்தாபித்துக்கொண்டு, சரியாக நடத்திக்கொண்டுபோகத் தக்க நபர்கள் அகப்படுவது கஷ்டமாயிருக்கலாம். முக்கியமாக, ஒரு சங்கத்திற் சேர்ந்திருக்கும் மெம்பர்கள் ஒருவருக்கொருவர் திரவிய சம்பந்தமான நிலைமை தெரிந்திருக்க வேண்டுமென்பதே, கடன் கொடுப்பதற்காக ஏற்படும் கிராம சங்கங்களின் அவசியமான கோட்பாடு. இவ்விதமான சங்கங்களை வேண்டிய இடங்களில் ஸ்தாபிக்கவும், கணக்கு முதலானவைகளைச் சரியாக வைக்கக் கற்றுக்கொடுக்கவும், சரியான வழியில் நடவடிக்கைகளைச் செய்யும்படியாகச் சங்கத்தார்களுக்குச் சொல்லவும், அவர்களுடைய சங்கத்தின் நிலைமையைக் கவனித்து, கணக்குகளை மேற்பார்வை யிடுவதற்காகவும் சர்க்கார் டிபார்ட்மெண்டார் இன்ஸ்பெக்டர்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

தற்காலம் இந்தச் சென்னை ராஜதானியில் சுமார் 2200 சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் சுமார் 7000 கிராமங்களுக்கு உதவிசெய்கின்றன. நம்முடைய ராஜதானியிலிருக்கும் 20,000 கிராமங்களில் சுமார் 7000 கிராமங்கள் தான் இந்த ஐக்கிய முறையில் பயனடைகின்றன என்றால், ஐக்கிய நாணயச் சங்கங்கள் இன்னும் இடங்களில் ஏற்படுத்து



வதற்காக இன்னும் செய்யவேண்டிய வேலையின் பரிமாணம் நன்றாய் விளங்கும். இதுவரையில் ரிஜிஸ்டராயிருக்கும் சங்கங்கள் அநேகமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்மூலமாகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இது முக்கியமாக பொதுஜன நன்மைக்காக ஏற்படுத்திய டிபார்ட்மெண்டாதலால், ஒவ்வொரு தாலூக்காவிலும் பரோபகார சிந்தையுள்ள பெரிய மனிதர்கள் தங்கள் கிராமங்களிலும், அடுத்த கிராமங்களிலும் ஐக்கிய முறைகளைப்பற்றித் தெரியப்படுத்திச் சங்கங்கள் ஸ்தாபித்து உதவிசெய்ய முன்வந்தால்தான் சீக்கிரத்தில் பாக்கியிருக்கும் கிராமங்களிலும் இந்த ஐக்கிய நாணயச்சங்கங்கள் பரவும். ஒவ்வொரு தாலூக்காவிலும், தக்க மனிதர்கள் பொது நன்மைக்காக உழைக்க முன் வருவார்களானால், சர்க்கார் அவர்களை "ஆனரெரி ஆர்கனைஸர்". அதாவது கௌரவத்திற்காகச் சங்கஸ்தாபகர்களாய் நியமிக்கத்தயாராயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தாலூக்காவிற்குள், தங்கள் கிராமங்களிலும் அக்கம்பக்கத்திலிருக்கும் கிராமங்களிலும் ஐக்கியக் கோட்பாடுகளை எடுத்துச்சொல்லி அந்தந்தக்கிராமக் குடியானவர்களிடத்திலிருந்து சங்கம் ஏற்படுத்துவதற்காக வேண்டிய மனு, ஸ்டேட்மெண்டு முதலியவைகளைத் தயார்செய்து அந்த இலாகா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கு அனுப்பி, கிராமங்களில் சங்கங்கள் ஸ்தாபிக்க ஏற்பாடுகள் செய்யலாம். அந்த ஆனரெரி ஆர்கனைஸர்களுக்காக வேண்டிய பாரங்கள் முதலியவைகளைப்பற்றியும், அவர்கள் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் அந்தந்த இலாகா அஸிஸ்டெண்டு ரிஜிஸ்ட்ராரவர்களுக்கெழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மேற்படி ஆனரெரி ஆர்கனைஸர்கள் வெளி கிராமங்களுக்குப்போய், சங்கங்கள் ஸ்தாபிப்பதற்காக ஏற்படும் செலவுகளுக்காக, படிமுதலானவைகளும்கொடுக்க சர்க்காரில் உத்தரவாயிருக்கிறது. நம்முடைய தேசத்தின் குடியானவர்களின் கஷ்டங்களை நிவிருத்திசெய்ய இந்த ஐக்கிய நாணயச் சங்கங்கள் முக்கிய சாதனங்களாயிருப்பதனால், மேற்படி ஆனரெரி ஆர்கனைஸர்களாக வேலைசெய்து ஜனங்களுக்கு ஒத்தாசை செய்வதற்கு ஒவ்வொருதாலூக்காவிலிருந்தும் தக்க நபர்கள் முன்வருவார்களென்று நம்பப்படுகிறது.

பூ. சின்னசாமி ஐயர்.

## Prevention of Infection.

## தொற்றுவியாதிகளைத் தடுப்பதற்கான முறைகள்.

ஜனங்களுக்குள் போதுமான சுகாதாரக் குறைவாலும், ஜாக்கிரதைக் குறைவாலும் தொற்று நோய்கள் பலபரவி, அவற்றின் காரணமாக ஏராளமாக ஜனங்கள் மாண்டு போகிறார்கள். தொற்று நோய்கள் பலவற்றுள் குடல் சம்பந்தமான நோய்களைத்தடுப்பதற்கான முறைகளுள் சிலவற்றைக் கீழே குறிப்பிடுவோம்:—

(1) நோய்கண்ட பிணியாளியை உடனே மற்ற பந்து மித்திரர்களினின்று பிரித்துத் தனியாக ஒரு அறைக்குள் வைக்கவேண்டும்.

(2) பிணியாளியிருக்கும் அறையானது நல்ல காற்றோட்டமுள்ளதாயிருக்கவேண்டும். அறையின் ஜன்னல்களைத் திறந்தே வைக்கவேண்டும். பகலில் அறைக்குள் போதுமான சூரிய வெளிச்சம் தங்கும்படியாயிருக்கவேண்டும்.

(3) அறைக்குள் வியாதிக் கிருமிகளைக் கொணர்ந்து சேர்க்கும் ஈக்கள் முதலியன வாராமல் தடுப்பதற்கு, அறையின் கதவை மூடியாவது அல்லது திரை போட்டாவது வைக்க வேண்டும்.

(4) பிணியாளி இருக்கும் அறையின் தரையைத் தினந்தோறும் லோஷன் முதலியனவற்றைக்கொண்டு சுத்தம்செய்யவேண்டும்.

(5) அறையில் அவசியம் தேவையான சாமான்களைத் தவிர வேறொன்றும் இருக்கலாகாது.

சாமான்கள் அதிகமிருக்குமாகில் பிணியாளிக்குப் பல அசௌகரியங்கள் நேரிடக்கூடும்.

(6) பிணியாளியைப் பராமரிப்பவர்கள், தங்கள் கைகால்களைச் சுத்திசெய்துகொள்வதற்காக அறையின் ஒரு மூலையில் லோஷன் வைத்திருக்கவேண்டும்.

(7) பிணியாளிக்கு உதவியாக அறையில் இரண்டு பேர்களுக்கு மேல் இருத்தல் கூடாது. இவர்கள் பிணியாளியோடு கூடவே இருக்கவேண்டும்; வீட்டிலிருக்கும் மற்றவர்களோடு கலக்கக்கூடாது. அவ்விதம் கலக்கநேரிடின், தங்கள் கைகால்களை முதலில் சோப்பைக்கொண்டு சுத்திசெய்து, பிறகு லோஷனைக்கொண்டு கழுவவேண்டும்.

(8) பிணியாளிக்காக உபயோகப்படுத்தப்பட்ட எல்லாப்பாத்திரங்கள் முதலியன மற்றவர்களுக்காக உபயோகப்படுத்தக்கூடாது. இப்பாத்திரங்கள் ஒரு முறை பிணியாளியால் உபயோகப்படுத்தப்பட்டபின், வெந்நீரைக்கொண்டு சுத்தஞ்செய்யப்பட்ட பிறகே மறுபடியும் உபயோகிக்கலாம்.

(9) பிணியாளியால் உபயோகிக்கப்படும் மலமூத்திரங்களை அப்புறப்படுத்தும் பாத்திரங்களை மற்ற வகைகளுக்கு எக்காரணத்தைக்கொண்டும் உபயோகிக்கக்கூடாது.

(10) பிணியாளி உபயோகிக்கும் படுக்கை, துணி முதலியவற்றைக் கண்டபடி எறியாமல் பரிசுத்தமாகவே வைத்திருக்கவேண்டும். இவைகள் உபயோகப்படுத்தப்பட்ட பிறகு, கிருமிகளை நாசமாக்க உபயோகிக்கும் திரவத்தில் 6-மணி நேரம் வரை ஊறவைத்துப் பிறகு துவைத்துச் சுத்தி செய்யவேண்டும்.

(11) பிணியாளியினுடைய மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் ஒழுகும் அல்லது கொட்டும் திரவத்தை பிரத்தியேகமாக ஒரு மெல்லிய ஆடையால் துடைத்து வெளியே ஜனசஞ்சாரமற்ற இடத்தில் எறிந்துவிட வேண்டும்; அல்லது தீயால் எரித்துவிடவேண்டும். அத்திரவத்தைப் பிணியாளி தன்னுடைய படுக்கைத் துணியைக்கொண்டாவது வேறு தான் உபயோகிக்கும் துணியைக்கொண்டாவது துடைக்கக்கூடாது.

(12) பிணியாளியோடு கூட இருப்பவர்கள் பிணியாளியால் வெளியிடப்படும் காற்றை ஒருபோதும் சுவாசிக்கக்கூடாது. இந்த அறையில் சுத்தக் காற்றில் வியாதிக்கிருமிகள் இருக்கக்கூடுமாதலால் பிணியற்றவர்கள் வெகுஜாக்கிரதையாக அங்கு இருத்தல் அவசியம்.

(13) அன்னியர்களைப் பிணியாளி இருக்கும் அறைக்குள் விடக்கூடாது. பிணியாளிக்கு நெருங்கின பந்துவாயிருந்தால், அவர்களைச் சற்று தூரத்திலிருந்து பார்க்கும்படி செய்யலாம்.

(14) அறையிலிருந்து பிணியாளியை வெளிப்படுத்தின பிறகு, அறையையும் அங்கிருக்கும் சாமான்களையும் கிருமிநாசகத் திரவத்தைக்கொண்டு நன்கு சுத்திசெய்யவேண்டும்.

## Moral Sayings.

### By a Pandit.

### நீதி மொழிகள்.

மூப்படைந்த பெற்றோரையும் கற்பு நெறி தவறாத மனைவியையும், குழந்தையான புதல்வனையும் நேமித்த காரியங்களைச் செய்தாயினும் போஷிக்கவேண்டுமென்று மநு கூறுகின்றார்.

மெய்யன்புடைய நண்பனிடமும், நற்குண முள்ள வேலையாளிடமும், நல்லொழுக்கமுள்ள மனைவியிடமும், இரக்கமுள்ள எஜமானிடமும் தனது துக்கத்தைத் தெரிவித்தால் நாம் குறையும். நல்லோன் நண்பனிடம் சந்தோஷமுள்ளவனாயும், அன்னியனிடம் நட்புள்ளவனாயும், துக்கமுள்ளவனிடம் அனுதாபமுள்ளவனாயும் இருக்கின்றான். கடல் சந்திரன் உதயமானதும் பொங்கி மகிழ்வது போல, சந்திரன் மறைந்தால் துக்கமும் அதற்கு அடையாளம்.



பசுக்களும் தமது வயிற்றை வளர்த்துக்கொண்டு ஜீவிக்கின்றன. அதனால் யாது பயன்? எவன் பிறர்நலத்திற்காகவே ஜீவிக்கின்றானோ, அவனுடைய பிறப்பே சிறந்தது.

சென்ற விஷயத்தைப்பற்றித் துக்கிப்பதும், வரும் விஷயத்தைப்பற்றிச் சிந்திப்பதும் அறியாமையாகும். இப்பொழுது நேரப்பவற்றைக் கொண்டு மகிழ்வதே மேலோர் வழி.

வாராதது என்றும் வாராது; முயற்சியின்றி வருவதும் போகாது; கல்வியை நெருங்கப்பெறாதவனுக்குக் கையிலிருந்து பொருளும் போய்விடுகிறது. சரீரமும் பொருளும் அழியக்கூடியவை. யமனே எப்பொழுதும் சமீபத்திலிருக்கிறான். ஆதலின், சௌந்தமாவது தருமஞ்செய்ய வேண்டும்.

கிருஷியையும், கல்வியையும், வியாபாரத்தையும், மனைவியையும், பொருளையும், இராஜ்ய ஸம்பத்துக்களையும் சிருநாகத்தின் முகத்தைக் காப்பதுபோல நன்கு காக்கவேண்டும். இராவணனென்பவன் ஒருசமயம் யுத்தத்தில் ஐராவதத்தின் இருப்புலக்கை போன்ற தந்தங்களைத் தனது கைகளால் முறித்தான்; அன்றியும், அவன் சிவபெருமானது 'பாசு' வென்னும் ஆயுதத்தின் முனையை ஒடித்தான்; பின்னும், அவன் சுத்த வீரனுடைய இராகவன் மனைவியைத் துன்பப்படுத்தினான்; அத்தகைய ராக்ஷஸனும் போர்க்களத்தில் கொல்லப்பட்டான். ஆதலின், விதியை வெல்லுவது இயலாது. தெய்வத்தால் காக்கப்படும் பொருளை நாம் காக்காவிடினும் அது அழிவதில்லை. தெய்வத்தால் கெடுக்கப்பட்ட பொருளை நாம் காத்தாலும் அது அழிந்துவிடுகிறது.

எவரும் தீயோரோடு சேர்க்கூடாது; ஏனெனில், அதனால் பல துன்பங்களுண்டாகின்றன: இராவணனோடு சேர்ந்த சமுத்திரம் பந்தனத்தையடைந்ததே இதற்கு அத்தாட்சியாகும். நல்லவரோடு சேர்வதே சிறந்தது. அது தீயனவென்று சொல்லப்படுவனவனைத்தையும் நீக்கி, நல்லனவென்று சொல்லப்படுவனவனைத்தையும் தரும்.

உலகில் யாவருக்கும் கொடுக்கும்வரையில் தான் பிரீதியுண்டாகின்றது. கன்று தாயின் பால் குறைந்துவிட்டால் தாயைத் தானாகவே விட்டுவிடுகிறதல்லவா?

மனைவியும், பொருளும், பூமியும், புதல்வரும், இன்பமும், துன்பமும் மீண்டும் வரும். ஆனால், சரீரம்போனால் மீண்டும் வாராது. ஆனதால், சரீரத்தை எவ்விதமாயினும் காப்பாற்றவேண்டும். அறிவாளி பயனற்றவைகளும், முடிவற்றவைகளும், செலவுக்கும் வருவாய்க்கும் ஸரியாயிருப்பவைகளுமான காரியங்களைச் செய்வது கூடாது.

செல்வத்தால் செருக்குற்றவனும் கல்வியறிவற்றவனுமான ஒரு புதல்வனைப் பெறுதலினும் கர்ப்பஸ்ராவம் ஏற்படுவதும், குழந்தை உண்டாகி இறந்து போவதும், பெண்குழந்தை பிறப்பதும், மனைவி மலடியாயிருப்பதும் காட்டில் வசிப்பதும் மேம்பட்டவை.

சமுத்திரத்தின் அலையையும் கங்கா யமுனா ஸங்கமத்தையும் பார்ப்பதனால் ஒருவன் பிரம்மஹத்தியிலிருந்து விடுபடுகிறான். ஆனால், மித்திரத்துரோகம் இதனால் நீங்குவதில்லை. மித்திரத்துரோகஞ்செய்பவன், நன்றிமறந்தவன், விசுவாசத்தைக் கெடுத்தவன் ஆகிய மூவரும் இருசுடருள்ளவரையில் நரகத்தில் வீழ்கின்றனர்.

எக்காரியத்தையும் நாம் விசாரியாமல் செய்வதுகூடாது. முன்னொரு சமயம் ஒரு ஸ்திரீ திர்க்காலோசனையின்மையால் ஒரு கீரியைக் கொன்றுவிட்டாள்.

மாதர்கள் பரபுருஷரோடு பேசுகின்றனர்: பிறரை விலாஸத்துடன் பார்க்கின்றனர்: மனதில் வேறொருவனைச் சிந்திக்கின்றனர்: ஆதலின், மாதர்களின் நிலைமை ஒருவகைத்தானதன்று. காகத்தினிடம் சௌசமும், காமியிடம் ஸ்தப வசனமும், கிழங்களிடம் வீரியமும், மதுபானியிடம் உண்மையறிவும், பாம்பினிடம் பொறுமையும், மாதர்களிடம் ஆசையின்மையும் இராவாம்.

பசுக்கள் வாசனையாலும், பிராமணர்கள் வேதத்தினாலும், மன்னவர்கள் ஒற்றர்களாலும், மற்ற

வர்கள் கண்களாலும் பார்க்கின்றனர். வருத்தமான காரியத்தை விருத்தி செய்கின்றவனாகவும், தீயகாரியங்களைத் தொலைக்கின்றவனாகவும், வரும்பொருளையுணர்ந்தவனாகவும் இருப்பவனே மந்திரியென்று சொல்லத்தகுந்தவன்.

அமைச்சனற்ற அரசும், காரியமற்ற தர்க்கமும், ஞானமற்ற வைராக்கியமும், வைசியர்களின் விசுவாசமும், அரக்கர்களின் அன்பும், திருடர்களின் பக்தியும், தீயோர்களின் நட்பும், பராதீனமான ஸ்வாதந்திரியமும், செல்வமற்றவனுக்குச் செருக்கும், சேவகனுக்குக்கோபமும், கிருபணனுடைய செல்வமும், விபசாரிணியின் பதிபக்தியும், மூர்க்கர்களுடைய சேர்க்கையும் வீணேயாம்.

உலகில் வறுமையினும் கொடியதொன்று வேறில்லை; ஏனெனில், வறுமை வந்துவிட்டால் சபையில் செல்ல வெட்கமுண்டாகின்றது; தனது பராக்கிரமும் குறைந்துவிடுகின்றது; விருந்தினரைக் கண்டால் வெட்கமுண்டாகின்றது; தனது மனைவியிடமும் அச்சமுண்டாகின்றது; அற்பரிணக்கமும் ஏற்படுகிறது; உயர்ந்த புத்தியும் குறைவடைகின்றது; உலகத்தவரும் பழிக்கத் தொடங்குகின்றனர்.

பாம்பை ஆட்டுகின்றவரும், யானைகளுக்கு உணவு ஊட்டுகின்றவரும், இரவில் சவாரி செல்கின்றவரும், வெள்ளத்தில் நீந்துகின்றவரும், பிறர்பொருளைக் களவாடுகின்றவரும், மன்னவனைப் பகைப்பவரும் தமதுயிரை இழப்பார்கள்.

தாம்பூலமற்ற முகமும், சந்தனமற்ற தேகமும், மன்னவனற்ற தேசமும், மக்களற்ற வீடும், தலைவரற்ற சபையும், ஐசுவரியமற்ற வாழ்க்கையும் வீணேயாம்.

ஒரு தோட்டத்தில் யாவரும் விரும்பும்படி பழங்கள் நிறைந்த மரம் அப்பழங்கள் உதிர்ந்தபின் விரும்பத்தகாததுபோல, இளமை அழிந்தபின்பு அவ்வுடல் விரும்பத்தகாதது. ஆதலால், இளமை காரணமாக மாதர்மேல் மோகமடையவேண்டாம். ஏனெனில், வேலைப்போன்ற கண்ணையுடைய காரிகையும் முடிவில் கோலையே கண்ணாய்ப் பற்றும் நிலைமையை அடைகின்றாள்.

கரும்பைக் குருத்திலிருந்து தின்றால் வரவர இனிமை அதிகமாவது போல, நல்லோர் நட்பு நாளுக்குநாள் நலங்கொண்டு வளரும். கரும்பை அடியிலிருந்து தின்றால் இனிமை குறைவது போல, தீயோர் நட்பு நாளுக்குநாள் குறைவடையும்.

தொடக்கத்தில் அற்பமாயிருந்து வரவர மிகும் மாலை நிழல்போல, நல்லோர் நட்பு தொடக்கத்தில் அற்பமாயிருந்து வரவர மிகும். தொடக்கத்தில் மிகுதியாயிருந்து வரவரக் குறையும் காலை நிழல்போல, தீயோர் நட்பு தொடக்கத்தில் அதிகமாயிருந்து நாளுக்குநாள் குறையும்.

உண்டாகாதவன், இறந்தவன், மூர்க்கன் இம்மூவருள் முதலிருவரும் மேம்பட்டவர்; பிந்தியவன் தாழ்ந்தவன்: ஏனெனில், முதலிருவரும் ஒரு தடவையே துக்கத்தைக் கொடுப்பர். பிந்தியவன் அடிக்கடி துக்கத்தை உண்டுபண்ணுவான்.

பாலை நன்றாகக் காய்ச்சினாலும் அதன் இனிமை மாறுவதில்லை; பொன்னை எவ்வளவு அடித்தாலும் மாற்றுக் குறைவதில்லை; சந்தனக்கட்டையை எவ்வளவு இழைத்தாலும் தன் வாசனை குன்றுவதில்லை; சங்கைச் சுட்டாலும் அதன் நிறம் மாறுவதில்லை. அதுபோல, நல்லோர் குணம் எப்பொழுதும் மாறுவதில்லை.

இளமைப்பருவம், பொருளுடைமை, பிரபுவாயிருக்கை, விவேகமின்மை இவற்றுள் ஒவ்வொன்றுமே தீமையை விளைவிக்கும். இந்நான்கும் ஒருவனிடம் சேர்ந்துவிட்டால் தீமையுண்டாகுமென்று சொல்லவும் வேண்டுமோ?

சந்திரனற்ற வானமும், தாமரையற்ற பொய்கையும், மந்திரியற்ற மன்னவனும், யானையற்ற சேனையும், புலவரற்ற சபையும், புதல்வனற்ற வாழ்க்கையும், தந்திகளற்ற வீணையும், அருளற்ற தருமமும் வீணேயாம்.

ஆசைக்கடிமையானவன் உலகனைத்திற்கும் அடிமையே. ஆசையை அடிமையாகக் கொண்டவனுக்கு உலகமே அடிமையாகின்றது.

ஜ. பண்டிதர்.



## Sandle-wood Industry in Mysore.

## மைசூரில் சந்தனக்கட்டைத் தொழில்.

மைசூர் இராச்சியத்தில், காடுகளில் ஏராளமாகச் சந்தனமரங்கள் வளர்ந்து வியாபித்திருக்கின்றன. இவை அங்கு ஒரு முக்கிய வியாபாரப் பொருளாகவும், இராஜாங்கத்தாருக்கு ஏராளமான வருமானத்தைக் கொடுக்கக்கூடியவையாயுமிருக்கின்றன. பிரதி வருஷத்திலும் காடுகளில் இச்சந்தனமரங்கள் சுமார் 2000 முதல் 3000 டன்கள் வரை விழுந்து போகின்றன. அவையெல்லாம் ஒரு இடத்திற்குக் கொண்டுபோகப்பட்டு ஏலத்தில் விடப்படுகின்றன. இதனால், மைசூர் கவர்ன்மெண்டாருக்கு ரூபாய் 20,00,000க்குமேல் வருமானம் கிடைக்கின்றது.

### வெளி ஏற்றுமதி.

உலகமுழுவதுக்கும் உபயோகப்படுத்தப்படும் சந்தனக்கட்டைகளெல்லாம் ஏறக்குறையத் தென்னிந்தியாவிலேயே உற்பத்தியாகின்றன. பத்தில் ஒருபாகம் பிரதி வருஷத்திலும் மைசூர் காடுகளினின்று கிடைக்கின்றது. மைசூரில் உற்பத்தியாகும் சந்தனக்கட்டைகள், சில ஐரோப்பியக் கம்பெனிகளால் வாங்கப்பட்டு, ஐரோப்பாவிற்கும் அமெரிக்காவிற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன; இன்னும், சைனாவிற்கும், ஜப்பானுக்குங்கூட ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

### இதன் உபயோகம்.

சந்தனக்கட்டையானது பல்வித வேலைகளுக்கு உபயோகப்படுகின்றது. தேவதாகாரியங்களுக்கும், இந்துக்களின் வீடுகளில் சுபகாரியங்களுக்கும் சந்தனக்கட்டை உபயோகப்படுத்தப்படுகின்றது. இம்மரத்தில் சித்திரவேலைகள் பல வெகு நேர்த்தியாகச் செய்யப்படுகின்றன. வாசனைத்திரவியங்கள் செய்யவும், மருந்து வகைகள் இறக்கவும் சந்தனக்கட்டையானது பெருவாரியாக உபயோகப்படுத்தப்படுகின்றது. ஐரோப்பாவில் இக்கட்டையை, பலவித வேடிக்கையான சித்திரப்பெட்டிகள் செய்யவும், எண்ணெயிறக்கவும் ஜனங்கள் உபயோகிக்கிறார்கள். சைனாதேசத்தில் சந்தனக்கட்டையைக்கொண்டு வேடிக்கையான வஸ்துக்கள் செய்யப்படுகின்றன. சந்தனத்தூள் கோயில்களிலும் வீடுகளிலும் தூபம் போடுவதற்காக உபயோகப்படுகின்றது.

### கைத்தொழில்.

மற்றைத்தேசங்களைக்காட்டிலும் மைசூர் ராஜ்யத்தில் சந்தனக்கட்டையின் விளைவு அதிகமாயிருந்தபோதிலும், அவை இங்கு உபயோகப்படுத்தப்படாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன; சந்தனம் கொஞ்சமாகத்தான் கோயில் காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது. அன்னிய நாடுகளிற்போல் சந்தனக்கட்டை சம்பந்தமான கைத்தொழில் ஒன்றும் இங்கு இல்லை. மைசூரில் சந்தனக்கட்டையைக்கொண்டு சித்திரவேலைகள் செய்யும் தொழிலானது நடந்து வருகின்றது. இது ஒரு ஜாதியாராலேயே செய்யப்படுகின்றது. இவர்கள் வெகு நேர்த்தியான போட்டோ ப்ரேம்களையும், பெட்டிகளையும், மற்றும் பலவித சித்திரங்கள் அமைந்த பொருள்களையும் செய்கிறார்கள். இவை பம்பாய் ராஜதானியில் செய்யப்படுவனவற்றைக்காட்டிலும் மிகவும் சிறந்தவையெனச் சொல்லப்படுகின்றன. மேலும், இச்சாதியார், மேல்நாடுகளில் செய்யப்பட்டு இங்கு இறக்குமதியாகும், பொருள்களைக்காட்டிலும் வெகு நேர்த்தியாகச் செய்யக்கூடியவர்கள். இத்தகைய தொழிலானது இங்கு நாளுக்குநாள் க்ஷீணித்து வருகின்றது. இதற்குக்காரணம்: இத்தொழிலைச் செய்யும் ஜாதியார்க்குப் போதுமான ஆதரவும், தொழில்செய்யப்பட்ட பொருள்களுக்குக் கிராக்கியும் இல்லாததேயாம். இப்படியே நாளுக்குநாள் இத்தொழில் நசிந்துபோகாமல் காத்து இதைச்செய்யும் ஜாதியார்க்குத்தக்க ஆதரவு கொடுப்பது நமது கடமையாகும்.

### தொழில் முயற்சி.

யுத்தம்காரணமாகத் தொழில்முயற்சியில் பல சௌகரியக்குறைவுகள் நேரிடக்கூடுமாயினும், அவற்றை பொருட்படுத்தாமல் மைசூர் கவர்ன்மெண்டார் தங்கள் ஸம்ஸ்தானத்தில் ஆங்காங்குப் பல புதிய கைத்தொழில்களை ஸ்தாபித்துவருகிறார்கள். சந்தனக்கட்டையினின்று தைலம் இறக்கும் தொழிலானது இங்கு ஸ்தாபிக்கப்பட்டு நன்கு வேலைசெய்து வருகின்றது. நாளுக்குநாள் இச்சமஸ்தானத்தின் முற்போக்கைக் கோருகிறோம்.

## Dr. Dadabhai Naoroji.

## டாக்டர் தாதாபாய் நௌரோஜி.

இந்தியாவின் மகாபுருஷரும் பழுத்த தேசாபிமானியுமான டாக்டர் தாதாபாய் நௌரோஜி இம்மாதம் 30உ யன்று காலமாயினர் என்ற செய்தியைக் கேட்டு ஆறாத்துயரமடைகிறோம். இவர் சாமான்யரல்லர்; மிக்க உக்காரகுணமுடையவர்; கசடறநன்குக் கற்றவர்; நமது தேசத்திற்கு ஒரு திலகம்போன்றவர்; தேசமுற்போக்கிற்குக் கல்வியேதான் ஆதாரம் என்பது இவருடைய கருத்து. இவர் சென்ற 70 வருடங்களாக நமது தேசத்தின் முற்போக்குக்கான பலதுறைகளிலும் உழைத்து நாம் உயர் பதவியையடைய நம்முடைய தலைவர்கட்கு ஒரு வழிகாட்டியாயிருந்தார் என்பதற்கு ஐயமில்லை.

டாக்டர் தாதாபாய் நௌரோஜி 1825-ம் வருஷம் ஸெப்டம்பர் மீ 4உ ஒரு பார்ஸிக குடும்பத்திற் பிறந்தார். இவருக்கு 4-வது பிராயம் ஆகும்போது இவருடைய தகப்பனார் இறந்துவிட்டார். இவர் பம்பாயிலுள்ள "எல்பின்ஸ்டன்" காலேஜில் கல்வி பயின்று, அங்கு உயர்தரக் கல்வியில் தேறினார். பிறகு அக்காலேஜிலேயே ஒரு போதகாசிரியராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் அவர் செய்த தேசோபகாரமான காரியங்களுக்கு அளவில்லை. ஆங்காங்கு மாணாக்கர்களுக்காகவும், பொதுஜனங்களுக்காகவும் பல சங்கங்களை ஸ்தாபித்தார். இவரது ஆக்ஞையில் பல பத்திரிகைகளும் நடைபெற்று வந்தன. இவர் இங்கிலாந்திற்குப் போனபின் இந்தியாவின் இராஜீய விஷயங்களில் நுழைந்து வேலைசெய்ய ஆரம்பித்தார். 1869-ம் வருஷம் வரை இவர் இங்கிலாந்திலேயே இருந்து, அத்தேசத்தார்க்கு இந்திய விஷயங்களைப் பிரசங்கங்கள் மூலமாய் எடுத்துக் காட்டினார். இதற்காகப் பல இடங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தார்.

பிறகு இவர் 1869-ம் வருஷத்தில் இந்தியாவுக்குத் திரும்பினார். பம்பாயில் இறங்ியவுடன் அந்நகரவாசிகள் இவரை மிகுந்த ஆரவாரத்துடன் வரவேற்று உபசரித்தார்கள். இந்தியாவின் வரவு செலவு விஷயமாய் விசாரணை செய்யப் பார்லிமெண்டாரால் ஒரு கமிடீ நியமிக்கப்பட்டது. அக்கமிடீயின் முன்னம் சாக்ஷியம் கொடுப்பதற்காக இவர் தெரிந்தெடுக்கப்பட்டார். அப்போது இந்தியர்களின் நிலைமை ஆங்கிலேயர்கட்கு மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியவர் இவரே.

இதன்பின் தாதாபாய் நௌரோஜிக்கு 1874-ம் வருஷத்தில் பரோடா சமஸ்தானத்தின் திவான் பதவி அளிக்கப்பட்டது. அப்போது அச்சமஸ்தானத்தின் நிலைமையானது மிகவுஞ்சீர்கேடான ஸ்திதியிலிருந்தது. 1884-ம் வருஷம் வரை சமஸ்தானத்தின் பல விஷயங்களையும் சீர்திருத்தி அபிவிருத்தியடையும்படி செய்தார். இதன்பிறகு திவான் பதவியை இராஜிநாமா செய்துவிட்டு, பம்பாயிலேயே கொஞ்சம் நாள் தங்கியிருந்தார். அச்சமயம் பம்பாய் முனிஸிபல் கார்பொரேஷனிலும், சட்ட நிரூபண சபையிலும் கொஞ்சகாலம் அங்கத்தினராகவிருந்து, தேசக்ஷேமத்திற்காகப் பல காரியங்களைச் செய்து வந்தார்.

இந்தியாவின் க்ஷேமத்திற்காக இந்தியாவிலிருந்தே காரியங்களைச் செய்வதைக் காட்டிலும், இங்கிலாந்திற்குச் சென்று அங்கு உழைப்பது நலமென்று எண்ணி, 1885-ம் வருஷத்தில் இங்கிலாந்திற்குப் பிரயாணமானார். இங்கிலாந்திற் சேர்ந்தவுடன் "ஹோல்பொர்ன்" என்ற மாகாணத்திற்குப் பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் ஒரு ஸ்தானத்தைப் பெற முயன்றார். இம்முயற்சியில் அவர் தோல்வியடைந்துவிட்டாலும், அவ்வுத்தமர் கொஞ்சமும் மனந்தளராமலும், சோர்வடையாமலும் மறுபடியும் "பின்ஸ்பரி" என்னும் மாகாணத்தார்க்குப் பிரதிநிதியாகப் பார்லிமெண்டில் அங்கத்தினராக அமர்ந்தார். இவர்தான் காமன்ஸ் ஸபையில் முதலாவது இந்தியராக ஸ்தானம் பெற்றவர். அது



வரை இந்திய விஷயங்களை நன்கு உணர்ந்திராத ஆங்கிலேயர்கட்கு இந்தியரின் நிலைமையை இடைவிடாது இவர் கூறிக்கொண்டே வந்தார். 1894-ம் வருஷம் ஹாலந்து தேசத்திலுள்ள ஹேக் என்னுமிடத்தில் கூடிய உலக சமாதான சபையிலும் ஒரு அங்கத்தினராக வீற்றிருந்தார். பிறகு, 1895-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட இந்திய திருவாகச் செலவைப்பற்றிய விசாரணை சங்கத்திலும் அங்கத்தவராக இருந்தார். இங்கிலாந்தில் 1895-ம் வருஷத்தில் பார்லிமெண்டுக்குப் புது எலெக்ஷன் நடைபெற்றது. அப்போது நமது தேசபிமானி ஒரு அபேக்ஷகராக நின்றார். போதுமான ஓட்டுகள் கிடைக்காமற் போனதால் தெரிந்தெடுக்கப்படவில்லை.

ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி ஒரு பெரிய காங்கிரஸ் அபிமானி. காங்கிரஸ் முதன் முதல் ஆரம்பிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்த உத்தம தேசாபிமானிகளில் நமது நௌரோஜி ஒருவர். இவர், காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருவதற்குள் நேர்ந்த பல இடையூறுகளையும் சிறிதும் பொருட்படுத்தாமல் தமது காரியத்திலேயே கண்ணாயிருந்தார். இவ்வளவு திறமையும், ஊக்கமும் பொருந்திய டாக்டர் நௌரோஜி 1886-ம் வருஷத்தில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்கு அக்கிராசனாதிபதியாக நியமிக்கப்பட்டார். இம்மகானின் ஒப்பற்ற குணங்களை எவராலும் எடுத்துரைக்க இயலாது. இவர் சென்ற ஐம்பது வருஷங்களாகத் தேசசேவைக்கே தமது காலம் முழுதும் செலவிட்டார்; தேச முற்போக்குக்கான பல வழிகளிலும் தாம் மனதார உழைத்தார். தோல்வியும் ஜயமும் எல்லோருக்கும் உண்டு; ஆனால், இவர் ஜயமடையும்போது சந்தோஷப்படுவதும், தோல்வியடையும்போது துக்கப்படுவதும் ஒரு போதும் இல்லை. ஒரு நல்ல காரியத்திற்காகப் பாடுபடும்போது, ஜயம் கிடைத்தாலும் அபஜயம் கிடைத்தாலும் இரண்டையும் ஒன்றாகப் பாவிப்பது இவருடைய சுபாவம். இந்தியர்கள் இவரை மீண்டும் 1896-ம் வருஷத்திலும், பிறகு 1906-ம் வருஷத்திலும் காங்கிரஸ் மகா சபைக்கு அக்கிராசனாதிபதியாக நியமித்தார்கள். இந்த 1906-ம் வருஷம் ஹூக்ளி நதிக்கரையிற் கூடிய காங்கிரஸ் மகா சபையில்தான் நமது நௌரோஜியால் முதன் முதல் ஸ்வராஜ்யம் என்ற பேச்சு வெளிவந்தது. பிறகு அது நாளுக்கு நாள் பலப்பட்டுக்கொண்டே வந்தது.

இந்தியாவின் மகா புருஷரான ஸ்ரீமான் தாதாபாய் நௌரோஜி எல்லோராலும் வணங்கப் பெற்றவர். அழியாப்புகழை எய்திய இவருடைய குணங்களை நாம் என்றென்றைக்கும் பின்பற்றி நடப்போமாக.

---

## Tamil Works and their Study.

By Mr. P. K. Sreenivasachariar.

*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## தமிழ்நூல்களும், அவற்றின் படிப்பும்.

"கல்வி கரையில; கற்பவர் நாள் சில;
மெல்ல நினைக்கிற் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே; நீரொழியப்
பாலுண் குருகிற் றெரிந்து."

என்பது நாலடியார். இதன்பொருள்:—கற்கத்தக்க நூற்பொருள்கள் அளவில்லாதன. கற்றற்கு உரிய மனிதரது ஆயுள்நாளோ சொற்பம். மற்றும், கூர்ந்து ஆலோசித்தால், நோய்கள் பல வென்பது புலப்படும். ஆதலால், நீரையொழித்துப் பாலைப்பருகும் அன்னப்பறவைபோல, நன்றாக ஆராய்ந்து தக்க நூல்களையே கற்க வேண்டும் என்பதாம். தமிழில் சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம், திருக்குறள், திருவாய்மொழி முதலிய இம்மை மறுமையுறுதியளிக்கும் நூல்கள் எண்ணிறந்தன இருந்தும், அவற்றைவிட்டு வீண் விநோதங்களைக் காட்டி வீண் காலங்களை முடிப்பவைவும்,

சிற்றின்ப விஷயங்களைப் பெருக்கிக் காட்டுவனவுமாகிய நூல்களென்று உண்மையில் சொல்லத்தகாத புஸ்தகங்களைப் படித்தல் தற்காலத்தில் சிறுவர் சிறுமியர்க்கும், மற்றும் கூறப்புகின் தக்க வயது வந்த பெரியவர்கட்குங்கூட இயற்கையாய் விட்டது. இதனைக்கண்டே நூல்களை வெளியிடுவோர்கள், இதுதான் லாபமடையத்தக்க வழியென்று கடைப்பிடித்து, உலகம் கெட்டொழிகிற விஷயத்தைக் கருதாமல், சுயப்பிரயோசனமொன்றையே நாடி, மற்றும் அத்தகைய நூல்களை வெளியிடுவோர்களாயினர். கிய நாவல்கள் வெளியிடுவோர் பலர். மற்றுஞ்சிலர், ஜனங்களிடத்திலிருந்து பொருளைப் பறித்தலை வேண்டிப் பித்தலாட்டமாக நல்ல நூல்களென்று தோற்றும்படி நூற்பெயர்களை ஆடம்பரமாகவும் பகட்டாகவும் புனைந்து வைத்து வெளியிடுகின்றார்கள். உலகில் சிற்றின்பத்தை நாடும் பாமரர்கள் பலர். ஆகலால், அவர்களிடத்தில் பொருளை மிகவெளிதில் பெறலாமென்று, சிற்றின்பவாசையை மூட்டும் பெயர்களைப் புஸ்தகங்களுக்கு இட்டுப் பலர் வெளியிடுகின்றார்கள். நூற்பெயர்களைக்கொண்டே பிரமித்துப் பலர் முற்கூறிய புஸ்தகங்களைப் பெற்றுக்கொண்டு, பொருள் நஷ்டமும் காலநஷ்டமும் உற்று, மற்றும் பற்பல கேடுகளும் அடைகின்றனர். சிற்றின்பத்தைப்பற்றிய நாவல்களையே அஹோராத்திரம் படிக்கும் ஜனங்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களை ஒருவகைப் பித்தர்கள் என்று சொல்லுவதில் தவறில்லை. சிலர் வீணாகத் தங்கட்கு மனவருத்தத்தையும் போராட்டங்களையும் மற்றுங்கவலைகளையும் மூட்டும் சோதிடம் முதலிய நூல்களிலேயே முக்காலேமுன்று வீசம் காலத்தையுங் கழிக்கின்றனர். இதனைக் குறித்துப் பெரியோர்,

"நிலையாமை, நோய், மூப்புச், சாக்காடென்றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்;-தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்." என்றும்,

"அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லாது
உலகநூ லோதுவ தெல்லாம்,—கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஉந் துணையறி வாரில்."

என்றுங் கூறினர். மானிடப்பிறவியெடுத்த நாம் அறம்புரிந்து இன்புற்று வாழப் பொருள் தேடவேண்டும். மறுமையில் வீட்டின்பம் பெறுதற்கான முயற்சியையுஞ் செய்யவேண்டும். இங்ஙனம் புருஷார்த்தம் நான்கையும் அடைவதற்காக அவற்றைக்குறித்து நலமுற உணர்த்தும் நூல்கள் பல இருக்கவும், அவற்றைக் கைவிட்டு; விருதாகாலக்ஷேபமாகப் பயனில்லாப் புஸ்தகங்களைப் படிப்பதை நம்மவர் வெறுத்தொழிக்கவேண்டும். கம்பராமாயணம் முதலிய செய்யுள் நூல்களைப் படித்தறியக்கத்தக்க தமிழறிவில்லாதவர்கள், அவை திருத்தமுற்ற வசன நடையாக இயற்றப்பட்ட நூல்களைப் படிக்கலாம். தற்காலத்தில், சொல்லிலக்கணமும், நடையழகும், பொருட்சிறப்பும் பொருந்திய வசனநடையில் எழுதுபவர்களைப் போற்றுவார் அருமை. எழுத்துப்பிழையில்லாத திருத்தமான வசனநடை நூல்கள் இவையென்று உணர்வார் மிகச்சிலர். நூல்களை இயற்றுபவர் வெளியிடுபவர்களிற் சிலர்க்கு றகரம், ரகரம்; ணகரம், னகரம், நகரம்; லகரம், ளகரம், ழகரம்; இகரம், யிகரம்; எகரம்; யெகரம்; முதலிய எழுத்துக்களை வேறுபடுத்தறிந்து இடமறிந்து வைத்தெழுதத் தெரிகிறதில்லை. அதனால், தமிழிற் புஸ்தகங்கள் பிழைகள் மலிந்தனவாயிருக்கின்றன. இவற்றைப் படிப்பவர்களும் எழுத்துப் பிழைகளைக் கற்றுக்கொள்பவராகின்றனர். இங்கிலீஷிற் பிரசுரமான நூல்களில் எழுத்துப்பிழையைக் காண்பது அரிது. அதற்கு நேர்விரோதமாகத் தமிழிற் புஸ்தகங்கள் இருக்கின்றன. ஆங்கிலர் தம் பாஷையில் ஓர் எழுத்துப்பிழைசெய்வானைக் காணின், அவனை அருவருத்துத் துச்சனாக எண்ணுவர்களெனக் கேட்டிருக்கிறோம். தமிழில் எழுத்துப்பிழை செய்வாரைக்குறித்து அறிந்து பேசுவாரே இலர் என்று கூறலாம். எழுத்துப்பிழைகள் நிறைந்த புஸ்தகங்கள் வெகுவாக விலையாய்விடுகின்றன. சுத்தப்பதிப்புப் புஸ்தகங்கள் அவ்வளவு விலையாவதில்லை. இதனால், தமிழரிற் பெரும்பாலோர் தமிழறிவின்றியிருக்கிறார்களெனத் துணிந்து சொல்லலாம்.



இக்காலத்தில் வெளியாகும் நாவல்கள் என்னும் கதைப் புஸ்தகங்களில் காற்பாகவளவேனும் சாஸ்திரசம்பந்தமான புஸ்தகங்கள் வெளிவருவதானால் நலமாகும். ஆயின், ஜனங்கள் அத்தகைய நூல்களைப் படிக்க அபிருசியுடையவர்களா என்பது சந்தேகம். ஆயினும், அவற்றைப் பாடபுஸ்தகங்களாக இராஜாங்கத்தார் குறித்துவிட்டால், ஒருவாறு அவை பரவ ஆரம்பிக்கக்கூடும். சீர்திருத்த வியவசாயம், இயந்திர நெசவுத்தொழில், தேகதத்துவம், வைத்தியம், வர்த்தகம், கணிதம் முதலிய முக்கிய விஷயங்களைப்பற்றிய தமிழ்நூல்கள் சொற்பமாகவேயுள்ளன. இவை பற்பல அறிஞர்களால் இயற்றப்பட்டு வெளிவரவேண்டும்.

---

# Village Sanitation.

## கிராம சுகாதாரம்.

இந்திய சமூஹத்தாருள் பலர் நம் கிராமாந்தரங்களிலேயே வசிக்கின்றார்கள். சுகாதார சம்பந்தமாய் ஆங்காங்குப் பட்டணங்களில் செய்யப்படும் சீர்திருத்தங்கள், கிராமாந்தரங்களில் கொஞ்சமும் கவனிக்கப்படுவதில்லை. இதன் காரணமாக ஏராளமான மரணங்கள் நேரிடுகின்றன. ஆதலால், சுகாதார சம்பந்தமாய்ச் செய்யப்படும் பற்பல சீர்திருத்தங்களும் முதன்முதலில் கிராமங்களிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும்.

### கல்வியே காரணம்.

கிராமாந்தரங்களில் சுகாதாரச்சீர்திருத்தங்கள் பேச்சில்மாத்திரம் சாத்தியமாயிருக்கின்றனவே யொழிய, அநுஷ்டானத்தில் மிகவும் பிரயாசையாயிருக்கின்றது. இதற்குப் பல காரணங்களைக் கூறலாம்: கிராமவாசிகளுக்குப் போதுமான கல்வியறிவு இல்லை. இதனால், அவர்கள் சுகாதாரசம்பந்தமாய் அநுஷ்டிக்கவேண்டிய பற்பல விதிகளையும் கைக்கொள்ள முடியாமலிருக்கின்றார்கள். அநேக கிராமங்களில் ஜனங்கள் தாங்கள் குடியிருக்கும் இடங்களிலேயே தங்கள் கால்நடைகளையும் கட்டிவைத்திருப்பதைக் காணலாம். இப்படி செய்வது எவ்வளவு கெடுதியை விளைவிக்குமென்பதையும், இது பற்பல வியாதிகள் பரவுவதற்குக் காரணமாயிருக்கின்றதென்பதையும் அறிவதற்கு இவர்களுக்குப் போதுமான கல்வியறிவு கிடையாது. சுகாதாரமுறையில் தங்களையும், தங்கள் வீடுகளையும், மற்றும் தெருக்கள் முதலியனவற்றையும் சீர்படுத்திக்கொள்ளப் போதுமான சௌகரியங்கள் இருந்தும் அவற்றைச் செய்ய அறிவும் ஊக்கமும் இல்லை. கலியாணம், தேர், திருவிழா முதலானவைகட்குச் சக்திமுடிக்கனமாய் ஏராளமான பணத்தைச் செலவழிக்க யுக்தி தோன்றுகிறதேயொழிய, தங்களைச் சீர்திருத்திக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் உதிப்பதில்லை. இவர்களுக்கு முதற்கூறியவையே, இரண்டாவதாகக் கூறியதைக் காட்டிலும் முக்கியமானவையும் பிரதானமுமாகத் தோன்றுகின்றன. இவ்வித விஷயங்களைச் சீர்திருத்தஞ்செய்ய ஒரேகருவிதான் உள்ளது. அது கல்வி.

### கிராம அமைப்பு.

கிராமங்களில் வீடுகள் முதலியன சுகாதார விதிகளுக்கேற்றவாறு அமைக்கப்படுவதில்லை. இதற்கு இரண்டு காரணங்களைக் கூறலாம்:— (1) அறியாமை. (2) சௌகரியக் குறைவு. முதலாவதாகச் சொன்ன அறியாமை நீக்கப்பட்டால், சௌகரியக்குறைவு இருந்தாலும் சீர்திருத்தங்கள் ஒருவாறு அநுஷ்டிக்கப்படலாம். கிராமங்களில் அநேகமாய் மண்சுவர்களைக்கொண்டே வீடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் அவ்வாறு அமைக்கப்பட்டாலும், இடம் விசாலமாயும் நல்லகாற்று தாராளமாய் உள்ளே போகவும், போதுமான சூரிய வெளிச்சம் உள்ளே தங்கவும், வேண்டிய ஜன்னல்கள் முதலியன அமைக்கப்பட்டால், அதனால் பல நன்மைகள் ஏற்படும். கால் நடைகளைக் குடியிருக்கும் வீட்டிற்குள்ளேயே கட்டாமல்,

அதற்காக ஒரு தனி இடம் ஏற்படுத்தி அதில் அவற்றைக் கட்டவேண்டும். வீட்டிற் சேரும் குப்பைகூளங்கள் முதலியனவற்றைத் தெருவில் கொட்டாமல் ஜன சஞ்சாரமற்ற ஒரு இடத்தில் கொட்டிவைக்க ஏற்பாடிருக்கவேண்டும். தெருக்கள் சுத்தமாகவும், மழைக் காலங்களில் தண்ணீர் தேங்காமலும் இருக்க வேண்டும்.

### சுகாதாரக் குறைவு.

கிராமத்திற்கருகில் எப்போதும் தண்ணீர்த் தேக்கமாவது, அல்லது பூமியிற் போதுமான சூரிய வெளிச்சம் படாமல் நிழல் தங்குதலாவது இருந்தால், அவற்றால் மலேரியா முதலான வியாதிகள் பரவும். தண்ணீர்த் தேக்கத்தால், கொசுக்கள் உற்பத்தியாகின்றன. அநேகமாக, கிராமங்களுக்கருகிலேயே நெல் வயல்கள் இருப்பதனால், அவற்றின் காரணமாய்க் கொசுக்கள் உற்பத்தியாகி மலேரியாவைப் பரவச் செய்கின்றன. ஆதலால், பயிர்செய்யப்படும் நிலங்கள், ஜனசஞ்சாரத்தைவிட்டுக் குறைந்தது நூறு கஜங்களுக்கப்பால் இருக்கவேண்டும். ஏனெனில், அங்கு உற்பத்தியாகும் மலேரியா கொசுக்கள் சுமார் நூறு கஜங்கள் தூரந்தான் செல்லக்கூடியவை. கிராமங்களில் ஏராளமாக வளர்ந்திருக்கும் சப்பாத்திகளையும், அதிகமாக நிழலைக்கொடுக்கக்கூடிய மரங்களையும் ஒழித்துவிடவேண்டும். வெய்யில் உக்கிரமாகக் காயும்போது, அதை ஜனங்கள் வெறுக்கிறார்கள். வெய்யிலினால் பல நன்மைகள் பெறப்படுகின்றன. வியாதிகளைப் பரவசெய்யும் கிருமிகள் இவ்வெய்யிலினால் நாசமடைகின்றன. சப்பாத்திகள் அடர்த்தியாக வளர்வதன் காரணமாக, கொசுக்கள் உற்பத்தியாவதுடன், பாம்பு முதலான விஷ ஜந்துக்கள் தங்கவும் இடமாகின்றன. இவைகள், கிராமத்தவர்களையும், கால்நடைகளையும் உபத்திரவிக்கின்றன. பலரும் இவற்றிற்கு இரையாகிறார்கள். கிராமவாசிகள் எல்லோரும் ஒருமிக்கச் சேர்ந்து, தத்தம் கிராமங்களிலுள்ள நீர்த்தேக்கங்களை ஒழித்துவிடுவதுடன், சப்பாத்திகளையுமெடுத்துச் சீர்ப்படுத்திக் கிராமத்தைச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியம்.

### சீர்திருத்தங்கள்.

கிராமங்களில் ஜனங்கள் சுகக்கேடில்லாமல் வாழ்வதற்கு அவர்கள் உபயோகிக்கும் குடி தண்ணீர் சுத்தமாக இருத்தல் அவசியம். இத் தண்ணீரானது கிணறுகளினின்றும், குளங்களினின்றும், ஆறுகளினின்றும் கிடைக்கின்றன. குழாய்க்கிணறுகளிலிருந்து கிடைக்கும் தண்ணீர் மிகவும் சுத்தமானது. இக்கிணறுகளை ஸ்தாபிக்க அதிகப்பணம் தேவையானதால், கிராமவாசிகள் அவற்றை அமைக்க முன்வரமாட்டார்கள். எனினும், இந்தியாவில் சிலபாகங்களில் கிராமவாசிகள் இக்குழாய்க் கிணறுகளை ஸ்தாபித்து வருகிறார்கள். இதற்கு அடுத்தவை தோண்டப்பட்ட கிணறுகள். இவற்றின் அமைப்பைப்பற்றியும். அவை சம்பந்தமாய்ப் பல விஷயங்களையும், சென்ற வைகாசி மாதத்து "ஜனோபகாரி"யில் 146, 147 பக்கங்களிற் காணலாம். குளங்களிலிருந்தும் குடி தண்ணீர் கொண்டுவரப்படுகின்றது. அது கிராமத்துக்கப்பால் நூறு கஜங்கள் தூரத்தில் வெட்டப்பட்டிருக்கவேண்டும். கிராமத்துக்கருகிலேயே இருக்குமாகில், அது அடிக்கடி அசுத்தமாவதற்கு ஹேதுவாகின்றது. இது காரணமாகப் பல வியாதிகள் பரவக்கூடும்.

கால்நடைகள் முதலியவற்றை ஜனங்கள் தாங்கள் குடியிருக்குமிடங்களுக்குப்புறம்பே கொஞ்ச தூரத்தில் தங்கும்படி செய்யவேண்டும். அவைகளுக்கென்று ஒரு தனி இடம் கட்டி, அதில் அவற்றைக் கட்டவேண்டும். கால்நடைகளைக் கிராமத்திற்குள் உலாவும்படி செய்வதனால், தெருக்கள் அசுத்தமாகக்கூடும்.

பிளேக் என்னும் தொத்து வியாதியைப் பரவச்செய்ய எலிகளே காரணமாயிருக்கின்றன. கிராமங்களில் சப்பாத்திகள் அடர்ந்து வளருவதனால் அவற்றில் இவை தங்கியிருக்கின்றன. ஆதலால், சப்பாத்திகளை ஒழித்து, பிளேக்குக்குக்காரணமான எலிகளை நிர்மூலமாக்குவது அவசியம்.

கிராமங்களில் சுகாதாரச் சீர்திருத்தங்களை ஒரே நாளில் செய்ய இயலாதாதலால், நாளா வட்டத்தில் அவை சித்திக்குமாறு முயற்சி செய்யவேண்டியது அவசியம்.



## Industrial Development in Madras.

## சென்னையில் கைத்தொழில் அபிவிருத்தி.

இந்தியாவின் ஜனத்தொகையின் பெரும்பாலோர் வியவசாயத்தையே தொழிலாகக் கொண்டு ஜீவித்துவருகிறார்கள். ஜனங்களுக்குப் போதுமான கல்வியறிவு இல்லாததனால், அவ்வப்போது நூதனமாகக் கண்டுபிடிக்கப்படும் பல விஷயங்களையும், நவீன ஆராய்ச்சிகளையும் அறிந்து அவைகளை அநுஷ்டிக்கமுடியாமலிருக்கின்றார்கள். தம்முன்னோர்கள் செய்துவந்த தொழிலையே பெரிதாகக்கருதி அதையே பின்பற்றிவருகின்றார்கள். இவ்வித நிலைமையில், சென்னையின் கைத்தொழில் எவ்வாறு அபிவிருத்தியடையக்கூடுமென்பது கவனிக்கத்தக்கது. முன்னொரு காலத்தில் வியவசாய தேசமாகவேயிருந்த ஜப்பான், கொஞ்சகாலத்திற்குள் எவ்வாறு இவ்வளவு முற்போக்கடைந்ததென்பதைக் கவனிப்போம்.

ஜப்பான்தேசத்தில் 1867-8-ம் வருஷத்தில் ஒரு பெரிய மாறுதலுண்டாயிற்று. அம்மாறுதலில், அவர்கள் தங்கள் தேசமுற்போக்கிற்கு வேண்டிய பற்பல விஷயங்களையும் கவனித்து, அவற்றிற்குத்தக்கவாறு சட்டங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். தங்கள் தேச கைத்தொழில்களை விருத்தி செய்யும்பொருட்டு, அன்னிய நாடுகளிலிருந்து அந்தந்தத் தொழில்களின் நிபுணர்கள் பலர் வரவழைக்கப்பட்டார்கள். தேச முற்போக்கிற்குக் கல்வியே ஆதாரமென்று அவர்கள் கருதி, அங்குப் பிரதிகிராமத்திலும் கட்டாயக்கல்வி ஏற்பாடு செய்யப்பட்டது. தொழில் அபிவிருத்தியில் அன்னியநாட்டு முறைகள் கையாளப்பட்டன. கவர்ன்மெண்டாரே ஒவ்வொரு தொழிலுக்கும் மாதிரித்தொழிற்சாலைகளை ஸ்தாபித்து, ஜனங்களுக்குத் தொழில் முறைகளைப் போதித்து வந்தார்கள். சொந்தமாகத் தொழில் நடத்துபவர்கட்கு யந்திரங்கள் முதலியன வாங்குவதற்குப் பணவுதவி செய்யப்பட்டது. பிறகு, 1890-ம் வருஷத்தில் பற்பல கைத்தொழில்களுக்கும் தொழிற்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு, ஜனங்களுக்குத் தொழிற்கல்வி ஊட்டப்பட்டு வந்தது. நாளாவட்டத்தில் அத்தேச ஜனங்களின் ஊக்கம் பலன்தர ஆரம்பித்து, 1902-ம் வருஷத்திற்குள் ஜப்பானிலிருந்து ஏறக்குறைய 5,000,000 முதல் 25,000,000 பவுண்டுகள் மதிப்புள்ள சரக்குகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இவையன்றி, ஜப்பான் கவர்ன்மெண்டார், தொழிற் பள்ளிக்கூடங்களுக்குப் பணவுதவி செய்தும், கைத்தொழில் ஆராய்ச்சிச் சாலைகளை ஸ்தாபித்தும், தொழில் நிபுணர்களைப் பற்பல மாகாணங்களுக்கு அனுப்பி ஜனங்களுக்குத் தொழில்களில் ஞானமூட்டியும், மாணாக்கர்களை அன்னியநாடுகளுக்கு நூதன தொழில்களைக்கற்றுவர அனுப்பியும் பல விஷயங்களையும் தொழில்அபிவிருத்திக்காகச்செய்து வருகிறார்கள்.

ஆதியில் ஒரு வியவசாய தேசமாயிருந்த ஜப்பானின் தற்போதைய அபிவிருத்தியையும், சென்னை இராஜதானியின் தொழில் அபிவிருத்தியையும் ஒப்பிடின், யானைக்கும் பூனைக்குமுள்ள வித்தியாசத்தையொக்கும். சொற்பகாலமாகச் சென்னை இராஜதானி தொழில்விஷயத்தில் கொஞ்சம் முற்போக்கடைந்திருப்பினும், அதை ஜப்பானோடு ஒப்பிட இயலாது. ஜப்பான் தேசம் அபிவிருத்தியடைந்த மார்க்கத்தை நாம் நன்கு கவனித்து, அதைப் பின்பற்ற முயல வேண்டும். இவ்விஷயத்தைத் தொழில் கமிஷன் ஊன்றிக் கவனித்துத் தக்கது செய்யுமென்று நம்பப்படுகின்றது.

சென்னை இராஜதானியைக்காட்டிலும் ஜப்பானில் தொழில் அபிவிருத்திக்குரிய சாதனங்கள் அநேகம் உண்டு. அங்கு ஏராளமாக உலோகப் பொருள்கள் இருக்கின்றன. அவற்றுள்: பொன், வெள்ளி, இரும்பு, தாமிரம், ஈயம், மாங்கனீஸ், கந்தகம் ஆகிய இவை முக்கியமானவை. ஆனால், சென்னையில் அவ்வளவு உலோகங்கள் கிடையா. மாங்கனீஸ், அப்ரகம், பொன், இரும்பு ஆகிய

இவையே இங்குக் கிடைக்கும், சேலத்திலும், இன்னும் பலவிடங்களிலும் இரும்பு கிடைக்கின்றது. மண்ணோடு கலந்திருக்கும் இரும்பை வேலைசெய்து பிரித்தெடுப்பதற்குப் போதுமான நிலக்கரி நமது இராஜதானியிற் கிடையாது. ஆனால், ஜப்பானிலோ, உலோகங்களுக்குத் தகுந்தவாறு வேலை செய்வதற்கு ஏராளமாக நிலக்கரி கிடைக்கின்றது. எத்தொழிலுக்கும் ஆதாரமான நிலக்கரி இல்லாமல் தொழில் அபிவிருத்தியைக் கோருவதிற் கொஞ்சமும் பிரயோஜனமில்லை. எனினும், சென்னையில் பற்பல தொழில்களை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளும், ஏற்கெனவே இருக்கும் தொழில்களும் அபிவிருத்தியடைந்து வருகின்றன. தொழிற்கல்வியைப் புகட்டுவதற்கான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு வருகின்றன. தொழிற் பள்ளிக்கூடங்களில் கல்விபெறும் மாணாக்கர்கள் தொழிற்சாலைகளுக்குப்போய் விஷயங்களை அநுபவபூர்வகமாய்க் கற்கவேண்டும். கைத்தொழில் அபிவிருத்தியில் ஜனங்களும் இராஜாங்கத்தாரும் ஒத்துழைக்கவேண்டும். ஒத்துழைப்பின்றி எக்காரியமும் சித்தியாகாது. ஜனங்கள் தொழில் முயற்சிகளில் தாராளமாகப் பணம்போட முன்வரவேண்டும். அவர்கள் பின்வாங்கினால் தொழில் முயற்சி பலந்தராது.

## Anger and its Evils.

## கோபமும் அதனாலாகிய தீமைகளும்.

(முன்தொடர்ச்சி)

இவ்வளவு தீயதான ஓர் குணத்தை ஜகதீசன் மனிதனிடத்து ஏன் அமைத்து வைக்கவேண்டும்? என்னும் வினா நம் ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வோர் காலத்தில் நிகழக்கூடும் அல்லவா? லௌகிக தருமத்தை நடத்திக்கொண்டுவரும் ஒருவனிடத்தில் கோபம் முற்றுமே இல்லையென்று வைத்துக்கொள்வோம். அவன் கூட்டுறவு கொள்ளும் வினையோரிடத்துப் பொய், களவு, கொலை முதலிய தீக்குணங்களிருக்கிறபடியினால், அவற்றினின்றும் அவன் தப்பிப் பிழைப்பதற்காவது அவற்றை அவர்களிடத்தில் இராமல் ஓட்டுவதற்காவது அவனிடத்திற் சினமிருத்தல் அத்தியாவசியம். அவன் தன்னுடைய அருமைப்புதல்வன் தீயகாரியங்களைச் செய்யக் கண்டகாலத்து, உடனே அவனைத் தண்டிக்க வேண்டியது தந்தையாகிய தன்னுடைய பெருங்கடமையல்லவா? அவனை அந்தப்படி தண்டிப்பதற்குச் சினம் சிறிது வேண்டியதல்லவா? அவனிடத்தில் சினம் முற்றுமே யில்லையானால், அப்புதல்வனைத் தண்டிக்க அவனுக்கு மனம் எழுதல் அரிது. இவ்விதமான சினத்தைத்தான் பெரியோர் 'மறக்கருணை' என்பர். ஆகவே, நடுவு நிலைமையுடனிருந்து இந்த விஷயத்தை யோசித்துப் பார்க்குமிடத்து, சினம் வரம்பு கடந்து சென்றால் ஜனசமூக வாழ்க்கைக்கும் சினங்கொள்வோனுக்கும் பெருங்கேட்டைத் தருமென்றும், ஏனைய தீக்குணங்களிருக்கிறபடியினால் அவற்றை அளவுகடக்க வொட்டாமைக்குச் சினம் சிறிதிருத்தல் ஜனசமூக வாழ்க்கைக்குக் கேடல்லவென்றும், எப்படிப்பட்ட சாதுவினிடத்திலும் சினம் முற்றுமே இல்லாமற் போகாதென்றும், அதைக் கூடியவரையில் தணித்துக்கொண்டே வருவதுதான் உத்தம புருஷனுடைய குணமென்றும் தெரியவருகிறது.

"ஜனவிநோதினி."

முற்றும்.

---

## ஔவை.

நம் அருந்தமிழ்மொழியில் சிறந்த நீதிநூல்களையும் தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம், பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ண பரம்பரையை அநுசரித்தும், வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. ச. ஸ்ரீநிவாஸாசாரியாரால் இனிய எளிய வசன நடையில் இயற்றப்பட்டது; சிறுவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக் கூடியது; வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா—6.

"ஜநோபகாரி" சந்தாதாரர்களுக்கு மாத்திரம் அணா 5.

மானேஜர், ஜநோபகாரி ஆபீஸ்,—வேலூர்.



# Pages for Ladies.

# ஸ்த்ரீகளுக்கான பக்கங்கள்.

## THE REARING OF CHILDREN.

## குழந்தைகளை வளர்த்தல்.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள் அடிக்கடி தேக அசௌக்கியத்தோடு கஷ்டப்படவேண்டிய சில காரணங்களைப்பற்றி ஸமீபத்தில் வெளிவந்த "ஜநாபிமானி"யில் பின்வரும் விஷயம் காணப்படுகின்றது:—

(1) குழந்தைகளைத் தனியாயிருக்கவிடாமல் வேறு ஜனங்களோடு இருக்கும்படி விடுவது.

(2) குழந்தைகளை அடிக்கடி எடுப்பதும், கண்டபோதெல்லாம் அவைகளை சிரிக்கச் செய்வதற்காக "கெ கெ" செய்வதும்.

(3) அழும்பொழுதெல்லாம் குழந்தைகளுக்குப் பால் முதலிய ஆகாரம் கொடுத்தல்.

(4) ஜனக்கூட்டமுள்ள இடங்களுக்குக் குழந்தைகளை எடுத்துப்போதல்.

(5) நல்ல சுத்தக்காற்று இல்லாத அறையில் தாய்மார்கள் குழந்தைகளுடனாவது, அல்லது குழந்தைகளுக்கு ரொம்ப ஸமீபத்திலாவது படுத்துத் தூங்குதல்.

(6) கண்டபோதெல்லாம் குழந்தைகள் வாயில் முத்தமிடுதல்.

இரண்டு வயது வரையில் குழந்தைகளை அதிக ஜாக்கிரதையாகக் கவனித்துவரவேண்டும். பெட்டைக்கோழி அடைகாப்பதுபோல் ஸதா குழந்தைகளினிடத்திலேயே இருக்கக்கூடாது. இதனால் குழந்தைகளைக் கவனியாமல் இருக்கவேண்டுமென்பதன்று. அனாவசியமாய்க் குழந்தைகள் அழுதால், அதைக் கவனியாமலிருக்கவேண்டியது முக்கியம். அப்படிக்கில்லாமல் "குழந்தை அழுகிறதே; அதை ஓயப்பிக்கவேண்டுமே" என்று சொல்லிக்கொண்டு, ஸதா குழந்தையும் கையுமாயிருந்தால், குழந்தைக்குப் பயங்காளித்தனம் அதிகமாய் உண்டாகிப் பின்னால் அவஸ்தைப்பட நேரிடும். குழந்தைகளைக் கண்டபடி "கெகெ" செய்வதனால் உண்டாகும் தீங்கைத் தாய்மார்கள் [illegible]விப்பதில்லை: இதனால் குழந்தைகளின் நரம்புகள் கெட்டுப்போகின்றன. அநேக குழந்தைகள் மெலிந்து பலஹீனமாயிருப்பதற்கு அம்மாதிரி அகாலங்களில் சிரிக்கச் செய்வதுதான் காரணமாகும்.

"குழந்தை அழுகிறதே; பால் கொடுத்தால் அழுகை நின்றுவிடும்" என்று அநேக தாய்மார்களும், பாட்டிமார்களும், குழந்தை அழும்போதெல்லாம் எதற்காக அழுகிறதென்று தெரிந்துகொள்ளாமல், பால் தருகிறார்கள். அந்தமாதிரி அழும்போதெல்லாம் பால் கொடுப்பது அதிகக் கெடுதியென்று எத்தனை தடவை சொன்னாலும் அவர்கள் கவனிக்கிறதில்லை.

சாதாரணமாக, குழந்தைகள் தேகாப்பியாசம் எடுத்துக்கொள்வதற்காக அழும். அதிக தீனி தின்று வயிற்றுவலி உண்டாவதாலும் சில குழந்தைகள் அழுவதுண்டு. இதை அறிந்துகொள்ளாமல் சில தாய்மார்கள், சற்று முன்புதான் பாலூட்டியிருந்தும், மேலும் மேலும் பாலைக் கொடுப்பார்கள். இதனால், குழந்தைக்கு அஜீர்ணம் கட்டி, மாந்தம் முதலிய வியாதிகளால் அது அவஸ்தைப்பட நேரிடுகிறது.

## HINTS FOR MOTHERS.

## தாய்மார்கள் அறியவேண்டிய விஷயங்கள்.

குழந்தைகளைச் சுத்தமான காற்றுள்ள இடத்தில் வைக்கவேண்டும். அக்காற்றுனது அழுக்குள்ள இடங்களிலிருந்து வீசாமலிருக்கும்படி பார்த்துக்கொள்வது அவசியம்.

குழந்தைகளுக்கு அதிக காரமாயுள்ள அல்லது தித்திப்பாயுள்ள வஸ்துக்களைத் தின்னக் கொடுக்கக்கூடாது. ஏனெனில், இதனால் குழந்தைகளின் ஜீர்ண உறுப்புக்களில் சில கோளாறுகள் நேரிடக்கூடும்.

எப்போதும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் குழந்தைகளுக்குச் சாப்பாடு போடுவதென்று வைத்துக்கொள்ளவேண்டும். அவைகளுக்கு இடைவேளைகளில் பக்ஷணங்கள் முதலியவை தின்னக்

கொடுக்கக்கூடாது. அப்படி கொடுத்தால் சாப்பாட்டு நேரங்களில் இவைகளுக்கு நன்றாகப் பசி யெடுக்காது.

குழந்தைகள் அதிகநேரம் தூங்கவேண்டும். அவைகள் தூங்கும் அறையானது சுத்தமாயும், நல்ல காற்றோட்ட முள்ளதாயு மிருக்கவேண்டும். சில குழந்தைகள் தூங்கும்போது முகத்தை மூடிக்கொள்ளுகின்றன; இது மிகவும் கொடிய வழக்கம். தாய்மார்கள் இந்தப்பழக்கத்தைத் தடுக்கவேண்டும். பள்ளிக்கூடம் போகும் குழந்தைகள் அதிகநேரம் தூங்கவேண்டியது அவசியம்.

சிறுவர்களின் கால்களும் பாதங்களும் எப்போதும் சூடாகவே இருக்கவேண்டும்.

தாய்மார்கள், குழந்தைகளைத் தங்களுக்குக் கோபம் வரும்போது அடிப்பதும், திட்டுவதும் கூடாது. இப்படி செய்வதனால் குழந்தைகளின் வளர்ச்சியில் பல கெடுதல்கள் நேரிடும்.

குழந்தைகள் அவ்வப்போது செய்யும் குற்றங்களைக்கவனித்து, அவைகளை அப்போதைக்கப்போதே சீர்திருத்திவிடவேண்டும்.

குழந்தைகளின் முன்னிலையில் தாய்மார்கள் எப்போதும் உண்மையே பேசி, அவர்களுக்கு வழிகாட்டிகளாயிருக்கவேண்டும்.

## KEEPING THE HOUSE CLEAN.

### வீட்டைச் சுத்தமாய் வைத்திருத்தல்.

புருஷர்களைக் காட்டிலும் ஸ்திரிகளே வீட்டில் எல்லா விஷயங்களையும் கவனிப்பதால், அவர்களுக்கே வீட்டைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளும்பொறுப்பு ஏற்படுகின்றது. அவர்கள் இது சம்பந்தமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்கள் வருமாறு:—

(1) வீடுகளில் அன்றன்று சேரும் குப்பைகளையும், அசுத்தமான கந்தை முதலியவைகளை அப்போதைக்கப்போது வீட்டுக்குப் புறம்பே அதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு தனியான இடத்தில் கொட்டிவைக்கவேண்டும்.

(2) வீட்டிலுள்ள எல்லாச் சாமான்களையும் அந்தந்த இடங்களில் சீராக வைத்திருக்கவேண்டும். படுக்கையறையில் சமையல் அறை சாமான்களையும், சமையலறையில் படுக்கையறைச் சாமான்களையும் வைக்கக்கூடாது. எந்த அறைக்குள்ளும் வஸ்திரங்களைக் கீழே போட்டு வைக்கக்கூடாது. அவைகளால் வியாதிக்கிருமிகள் சேரக்கூடும்.

(3) வீட்டிற்குள்ளேயே கால்வாய்களைக் கட்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இது சம்பந்தமாயும், இன்னும் சுகாதார சம்பந்தமாயும் பல விஷயங்கள் மற்றொருபக்கத்தில் "கிராம சுகாதாரம்" என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டிருப்பதைக் காணலாம்.

(4) வீடுகளில் சாக்கடைகளே வியாதிக்கிருமிகளை உண்டாக்கத் தகுந்த சாதனங்களாயிருக்கின்றன. ஆகலால், சாக்கடைகளில் அதிகமாக குப்பைகள் சேராதபடி அவைகளை அடிக்கடி வெளிப்படுத்திவிடவேண்டும். துர்நாற்றம் வீசாமலிருப்பதற்குப் போதுமான அளவு தண்ணீர் கொட்டிச் சுத்தம் செய்யவேண்டும்.

(5) அநேக வீடுகளில் குடிதண்ணீர், கிணறுகளிலிருந்தே எடுக்கப்படுகின்றது ஆகலால், அத்தண்ணீரானது மிகவும் சுத்தமாகவே யிருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில், அத்தண்ணீரை உபயோகிக்கிறவர்களின் தேக சௌக்கியம் கெட்டு அவர்கள் வியாதிக்குள்ளாவார்கள்.

(6) ஜலமலங்கள் கழிப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் கக்கூஸுகள் வீட்டில் ஒரு புறம் இருக்கவேண்டும். அவைகளைத் தினந்தோறும் இரண்டு முறைகளாவது சுத்தி செய்யவேண்டும். சொஞ்சம் விஸ்தாரமாகவும் அவைகள் கட்டப்பட்டிருக்கவேண்டும்.

## HOT-WATER DRINKING.

### வெந்நீர் குடித்தல்.

கீழே குறிப்பிடப்படும் நான்கு வகுப்பார்களும் வெந்நீரை குடிக்கக்கூடாது:—(1) இருதய எரிச்சலுள்ளவர்கள், (2) விரிந்த வயிறுள்ளவர்கள், (3) வயிற்றில் புண்ணுள்ளவர்கள், (4) வயிற்றுவலியுள்ளவர்கள் ஜனங்கள் தாக சாந்திக்காக வெந்நீர் சாப்பிடுகிறார்கள். குளிர்ந்த நீரைக்காட்டிலும் வெந்நீர் தாகசாந்தி செய்யும். இரவும், காபி முதலியவற்றைக் காட்டிலும் வெந்நீர் தேகத்திற்குச் சுறுசுறுப்பையுண்டாக்கும்.

## POPPY SEEDS.

### கஸ கஸா.

கஸ கஸாத் தோலைச் சிதைத்து ஜலத்தில் போட்டுக்காய்ச்சி அநேகம் வாயுக்களால் உண்டாகும் வீக்கங்களுக்கும், எரிவுகளுக்கும், புளுக்குக்களுக்கும், மற்றும் வேதனையைத் தரும் நோய்களுக்கும் ஒற்றடம் கொடுப்பது மிகவும் ஹிதமாயிருக்கும், அல்லது கஷாயத்தால் ஜலம்விட்டு இந்த அரைத்து சுத்தி வஸ்திரத்திற் கட்டியும் மேற்கூறிய நோய்களில் ஒற்றடங் கொடுப்பதுண்டு—வைத்திய கலாநிதி.



# Pages for Children.

## சிறுவர்க்கான பக்கங்கள்.

### HEALTH HINTS.

### சுகாதாரக் குறிப்புக்கள்.

சிறுவர்களே! "நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது நமது ஆன்றோர் பழமொழி. நாம் எவ்வளவு செல்வர்களாயிருந்தாலும், எவ்வளவு குணவிசேஷங்கள் பொருந்தியுள்ளவர்களாயிருந்தாலும், எவ்வளவு உயர்குலத்திற் பிறந்திருந்தாலும் நமக்குத் தேக ஆரோக்கியமில்லாவிடின், மேற்கூறியவையாவும் பிரயோஜனமற்றவையேயாம்; உலக இன்பம் நமக்கு வெறுப்பாயிருக்கும்; மனதுக்குக்கொஞ்சமும் சந்தோஷமிராது; வச்சம்பிடித்து எப்போதும் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்போம். உலக இன்பத்தை அநுபவிக்க நோயற்றவாழ்வு அவசியமாதலின், நமது பெரியோர் அவ்வாறு "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று கூறியிருப்பது மிகவும் பொருந்தும். நாம் நோயற்று வாழ்வதற்கு அவசியம் கவனிக்கவேண்டிய சில சுகாதாரக் குறிப்புக்களைக் கீழே எழுதுவோம்:—

நாம் எப்போதும் சுத்தியாகவே யிருக்கவேண்டும். அப்போதுதான் பல வியாதிகளால் நாம் பீடிக்கப் படாமலிருப்போம். நாம் நம்முடைய தேகத்தை அழுக்கில்லாமல் சுத்தியாக வைத்திருப்பதுடன், நாம் குடியிருக்கும் வீட்டையும், சுற்றுப்பக்கங்களையும், தெருவையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். நம்முடைய தேகத்தில் கோடிக்கணக்கான துவாரங்கள் இருக்கின்றன. அவற்றின்மூலமாய் வேர்வை வெளிவருகின்றது. அத்துவாரங்கள் அடைபட்டுப்போனால், வேர்வை வெளிவர இயலாது. வேர்வை ஜலத்தில் விஷ சம்பந்தமான நீர் கலந்திருப்பதனால், அது தேகத்துக்குக் கெடுதிசெய்யும். ஆதலால், நாம் நம்முடைய தேகத்தை அழுக்கில்லாமல் வைத்திருந்து, வேர்வையைத் தடையில்லாமல் வெளிப்படுத்தவேண்டும்.

* * *

நாம் அழுக்கோடு இருப்போமாகில், கட்டாயம் வியாதிக்கிருமிகள் நம்மை வந்தடையும். அழுக்குப்போவதற்காக நம்முடைய தேகத்தை சோப் முதலியவற்றைக்கொண்டு தேய்த்துக் கழுவவேண்டும். தேகத்தில் படிந்திருக்கும் அழுக்கில் ஒருவித கொழுப்பை இருக்கின்றது. அதை குளிர்ந்த ஜலம்விட்டு ஒழிக்க முடியாது. சோப் தேய்த்துக்கொண்டு வெந்நீரில் ஸ்நாநம் செய்யவேண்டும். இப்படி செய்வதால், அழுக்கு ஒழிவதுடன் வியாதிக்கிருமிகளும் ஒழிந்துவிடுகின்றன.

* * *

துர்நாற்றம் ஆரோக்கியத்திற்கு விரோதி. துர்நாற்றம் வீசும் இடத்தில் குடியிருக்கவாயினும், துர்நாற்றமுள்ள உடைகளை உடுக்கவாயினும் ஒருபோதும் கூடாது. அதனால் பல வியாதிகள் பரவக்கூடும்.

* * *

நாம் ஜீவிப்பதற்கு பிராணவாயு அவசியம். பட்டணங்களில் ஜனநெருக்கம் அதிகமாகையால் அங்குச் சுத்தமானகாற்று அசுத்தப்பட்டுப் போகின்றது. கெட்டகாற்றை வெளிப்படுத்த, வீட்டின் கதவுகள் முதலியவற்றைத் திறந்து வைக்கவேண்டும். அப்போது விஷக்காற்று வெளிப்பட்டு நல்லகாற்று உள்ளேபுகும்.

## LIFE'S 14 MISTAKES.

### நம் உயிர்வாழ்க்கையின் 14 தப்பிதங்கள்.

(1) நாம் எதுசரி, எது தப்பு என்று எண்ணுகிறோமோ அதனை மேலானதாக எண்ணி நிலைநாட்ட முயலுவது. மற்றெல்லோரும் அதையே பின்பற்றவேண்டுமென்று எதிர்பார்ப்பது.

(2) பிறருடைய சுகதுக்க அநுபவங்களை நம்முடைய சுகதுக்க அளவைக்கொண்டு அளக்க முயலுதல்.

(3) இவ்வுலகத்தில் எல்லோரும் ஒரேவிதமான அபிப்பிராயமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தல்.

(4) வாலிபப்பருவத்தில் வயோதிகப்பருவத்துக்குரிய அநுபவத்தையும், தேர்ந்த அறிவையும் தீர்மானமான புத்தியையும் எதிர்பார்த்தல்.

(5) பலவகையான குணமுடையவரை ஒரே விதமான குணமுடையவராகத் திருப்ப முயலுதல்.

(6) அற்பகாரியங்களில் ஒத்துப்போகாமை; அவற்றைப் பிரதானமாகக்கொண்டு வழக்கிடுதல்.

(7) நாம் செய்யும் ஒவ்வொரு தொழிலும் பூரணமாகச் சரியாயிருக்கவேண்டுமென்று எதிர்பார்த்தல்.

(8) எது சரிப்படுத்த முடியாமல் மிஞ்சிப் போய்விட்டதோ, அதற்காக நம்மையும் உபத்திரவப்படுத்திக்கொண்டு, பிறரையும் உபத்திரவப்படுத்தல்.

(9) எங்கெங்கே முக்கியமிருக்கிறதோ அங்கங்கே நம்மால் கூடுமானவிடத்தில் துர்க்கதியை நிவிர்த்திசெய்யாதிருத்தல்.

(10) அன்னியருடைய குறைகளை ஒரு பொருட்டா எண்ணுதலும் அவர்களிடத்து அநுதாபம் பாராட்டாமலுமிருத்தல்.

(11) நம்மால் செய்யமுடியாததை எவராலுமே செய்யாமுடியாதென்று எண்ணுதல்.

(12) காலதேசவர்த்தமானக் கட்டுக்குள்ளடங்கிய நம்முடைய மனது எதையுணருகிறதோ அதைமாத்திரமே நம்புதல்.

(13) தற்கால உயிர்வாழ்க்கையை பிரதானமாகக்கொண்டு, இது எப்போதும் இப்படியே நீடித்திருக்குமென்று எண்ணி, மற்ற ஆத்மலாப விஷயங்களை கவனியாதிருத்தல்.

(14) வெளியில் காணப்படுங் குணங்களால் ஜனங்களை மதித்து உள்ளகுணங்களைக் கவனியாதிருத்தல்.—லோகோபகாரி.

## FAMOUS STREETS IN THE WORLD.

## உலகத்தில் பெயர்போன்ற வீதிகள்.

ஒருநாளில், லண்டனிலிருக்கும் மேன்ஷன் ஹௌஸ் கார்னர் என்னும் வீதி வழியாய் 5 லட்சம் ஜனங்களும், 50 ஆயிரம் வண்டிகளும் போகின்றன. பாரிஸ் ப்ளேஸ்டி ஆபிராவின் வழியாய் 4,50,000 ஜனங்களும் 63,000 வண்டிகளும் போகின்றன. இதற்கு அடுத்தாற்போலுள்ளது நியூயார்க்கிலிருக்கும் பிராட்வே வீதி. இதன் வழியாய் தினமொன்றுக்கு 4,80,000 ஜனங்கள் கால்நடையாயும், 7,00,000 ஜனங்கள் வண்டிகளிலும் போகிறார்கள். இதற்கடுத்த மேட்ரிட்ஸ் ஸாகிரியன் வாசம் என்னும் வீதியின் வழியாய் ஒவ்வொரு தினமும் 3,6 ,000 ஜனங்கள் போகிறார்கள். பெர்லினிலுள்ள பிரிட்ரிச் ராஸ்ஸின் வழியாயும், பெட்ரோகிராட்டிலிருக்கும் விலாட்டிமிர்ஸ்கி வழியாயும் 3 லட்சம் ஜனங்களும், வியன்னாவில் கிறபென் என்னும் தெரு வழியாய் 2,75,000 ஜனங்களும் நடக்கிறார்கள்.

## A CAVE IN CALICUT.

## கள்ளிக்கோட்டையில் ஒரு குகை.

கள்ளிக்கோட்டைக்கருகில் ஒரு இடத்தில் ரோட்டுக்குக் கிரேவல் கற்களுக்காகக் கூலிக்காரர்கள் வேலை செய்துகொண்டிருக்கையில், ஒரு சதுரமான கல்வைக்கல் அவர்களுக்குத் தென்பட்டது. அவர்கள் அதை அப்புறப்படுத்திப் பார்த்ததில், நான்குபேர்கள் தங்கயிடமுள்ள ஒரு குகை அவர்களுக்குக் காணப்பட்டது. அதன் உட்புறம் சலவைக்கல்லால் தளவரிசைப் படுத்தப்பட்டிருந்தது. அங்கு ஒரு தீபம், ஒரு கோடாரி, ஒரு கத்தி முதலிய பூஜை சாமான்கள் வைக்கப்பட்டிருந்தனவாம். இந்த குகையானது மிகவும் புராதனமானதென்று நம்பப்படுகின்றது.



# Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

## The use of Toys in the Education of Children.

## குழந்தைகளும், விளையாட்டுக்கருவிகளும்.

குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகளின்மூலமாய் எவ்வாறு வித்தியாப்பியாசம் ஏற்படக்கூடுமென்ற விஷயமாய் "விவேகசிந்தாமணி" பின்வருமாறு எழுதுகிறது:—

சித்திர விசித்திர வேலைகளிற் சிறந்தவர்கள் விசேஷமாயுள்ள தேசத்தார் தங்கள் குழந்தைகளுக்கு விளையாட்டுக்கருவிகள், படங்கள் முதலியன யதேஷ்டமாதக் கொடுத்து வளர்ப்பவர்களாயிருக்கிறார்களென்பது அநுபவத்தால் அறிந்த விஷயம். சிறு குழந்தைகளுக்கு இவ்வுலக விஷயங்கள் அவர்கள் புத்திக்கெட்டாத பெரியனவாக இருக்கின்றன.

ஆகையால், குழந்தையின் பச்சைப்பிராயத்திற்குத் தக்கபடி விளையாட்டுக்கருவிகளால் அவர்களுக்கு ஒரு சிறு உலகம் சிருஷ்டித்துக் கொடுக்கவேண்டும். நல்ல ஆடையாபரணங்கள் அணிந்த ஒரு ஸ்திரீயைக் கண்டால் சிறிதும் கவனியாத குழந்தை சிறிய பொம்மை அல்லது மரப்பாச்சி ஜோடித்து வைத்திருப்பதைக் கண்டால் சந்தோஷம் பொங்கிக் குதாகலிப்பதும். பச்சைப்பிராயமுள்ள குழந்தைகளின் அறியாத தன்மைக்கும் உலக சம்பந்தமான பெரிய காரியங்களுக்கும் இடையே அதிபாசாளமான இடைவெளியிருக்கிறது. இந்த இடைவெளியைத் தாண்டிச்செல்ல விளையாட்டுக் கருவிகள் குழந்தைகளுக்கு ஒரு பாலம்போல் உதவுகிறது.

ஆகையால், குழந்தைகளுக்குப் பொம்மைகளும், சொப்புகளும், மற்ற விளையாட்டுக்கருவிகளும், படங்களும் விளையாடக்கொடுக்கவேண்டும். விளையாடக் கொடுப்பதன்றி, குழந்தைகளது விளையாட்டில் நாம் சிரத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும். நம்மவர்கள், குழந்தைகள் என்னவோ விளையாடிவிட்டுப் போகின்றன. உபத்திரவம் செய்யாமலிருப்பதே போதும் என்று இருப்பது வழக்கம். அப்படியிருப்பது சுத்தப் பிசகு. குழந்தைகள் விளையாடும்பொழுது அவர்களுக்கு நூதனமான எண்ணங்களும் கருத்துக்களும், சரி, தப்பு என்கிறவிவரங்களும் உண்டாகின்றன. இவைகளையெல்லாம் நாம் கவனிக்காவிடில், குழந்தைகளின் மனதை அறிந்து, அவர்கள் மனோவிருத்தியை ஒழுங்குபடுத்தும் மார்க்கத்தை இழந்துவிடுகிறோம்.

குழந்தைகள் பொம்மைவைத்து விளையாடுகையிலே நன்னடக்கை, சன்மார்க்கம் இவைகளை அறிந்துகொள்ளத் தொடங்குகின்றனர். அப்பொழுது, நாம் அவர்கள் விளையாட்டைக் கவனித்துக்கொண்டிருந்தால், அவர்கள் பிசகிப்போகும் தருணம் பார்த்து அவர்கள் மனதை நல்வழியில் திருப்பலாம்:

பொம்மை அல்லது மரப்பாவை வைத்து விளையாடும்பொழுது குழந்தைகளுக்குச் சரி தப்பு விவரமும், நல்லதில் விருப்பமும், கெட்டதில் வெறுப்பும், அனுதாபம், இரக்கம், ஆதரவு முதலிய குணங்களும் நன்னடக்கையிற்பற்றும் உண்டாகின்றன. குணங்களெல்லாம் அப்பொழுதுதான் முளைக்க ஆரம்பிக்கின்றன.

குழந்தைகளுக்கு கிரகபுத்தி அதிக ஜாஸ்தியாகையால், அவர்கள்முன் பெற்றோரது நடத்தை சிறிதும் வழுவற்றதாக இருக்கவேண்டும். குழந்தைகளை அலக்ஷியமாக நடத்துவதும், அவர்களிடத்து அநுதாபமின்றிப் பேசுவதும் மிகவும் கெட்ட குணங்கள்: இந்த நடத்தைகளையெல்லாம் குழந்தைகள் அறிந்துகொண்டு அவைகளை நன்றாகப் பற்றிக்கொள்ளுகின்றனர். குழந்தைகள் விவரம் தெரியாதவர்கள்தானே யென்று மூடமதிகளான பெற்றோர் உற்றோர், அவர்களிடத்து இல்லாத சாக்குப்போக்குக்களெல்லாம் சொல்லி ஏமாற்றுகிறார்கள். பிறகு குழந்தைகள் தாங்கள் ஏமாற்றப்படுவதைக் கண்டுகொண்டு இவர்கள் சமாதானத்தில் நம்பிக்கையிழந்தவர்களாகக் காட்டினால், குழந்தையின் புத்திக்கூர்மையைப்பற்றிக் கொண்டாடிச் சந்தோஷப்படுகிறார்கள். அன்றியும், தாங்கள்தம் குழந்தைகளுக்குக் கெட்ட உதாரணங்கள் காட்டிப் பொய், சூது, வினை முதலிய கெட்டகுணங்களெல்லாம் முளைப்பதற்கு வித்தாயிருக்கிறார்களேயன்றி. தங்கள்மூடத்தனத்தைப்பற்றி விசனிக்கிறார்களில்லை.

நமது குழந்தைகள் சிறுபிராயத்திலே பொய், புனைசுருட்டு; வினைசொல்லத் தெரிந்திருப்பவர்களாயிருப்பதற்குக்காரணம்: பெற்றோர்கள், விசேஷமாய்த் தாயார், அத்தை, பாட்டிமார்கள். குழந்தைகளிடம் பொய் சொல்லி அவர்கள் குழந்தைகளை ஏமாற்றிவரும் கெட்ட வழக்கத்தினாலேயே துர்க்குணம் உண்டாகின்றது. மிகவும் சிறிய ஒரு குழந்தையினிடத்து ஏதையேனும் இருக்கக்கண்டால், அக்குழந்தையின் தாய், பாட்டி, அத்தை அல்லது அக்குழந்தையோடு அதிகமாய்ப் பழகும் வேறு யாரோ அவர்களிடத்து அத்துர்க்குணங்கள் இருக்கின்றனவென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

நமக்குள் தாய்மார்கள் பச்சைப் பாலன்கள் மனதில் நாம் மேற்காட்டியபடி பொய், சூது, வினை முதலிய கெட்ட வித்துக்களைத் தாங்களே விதைத்துவிட்டுப் பிந்தி அவ்வித்துக்கள் முளைத்துக் களைக்கும்பொழுது குழந்தைகள் கெட்டவர்களென்று அவர்களைக் கண்டிக்கிறார்கள். இதனால் அவர்கள் தங்கள் அறியாமையைக் காட்டுவது மட்டுமென்றிப் "பண்டமொருபக்கம் பழியொருபக்கம்" என்கிற பழமொழிப்படி குற்றம் தங்க வீட்டிலேயேயிருக்க, வீணாய்க் குழந்தைகளைப் பிடித்து ஹிம்சிக்கிறார்கள்.

குழந்தைகள் விளையாடும்பொழுது ஊக்கமாய்ப் பார்த்துக் கவனித்துக்கொண்டு வந்தால், வேண்டியபொழுது நாமும் அவர்களோடு கலந்துகொண்டு விளையாட்டு மூலமாகவே அவர்களிடத்துக் காணும் துர்க்குணங்களை ஆரம்பத்திலே அறிந்துகொண்டு அவை குழந்தைகள் மனதிற் பதியாவண்ணம் எளிதில் அவைகளை மாற்றிக்குழந்தைகளின் குணத்தை நல்ல வழியில் திருப்பிவிடலாம். இப்படிச்செய்ய நம்மிடத்தில் நல்ல குணம் உண்மையிலிருக்கவேண்டும். அதில் நமக்கே பற்றின்றி யிருக்கையில், அதைக் குழந்தைகளுக்குப் போதிக்க யத்தனித்தால், நாம் கற்றுக்கொடுக்க யத்தனிப்பதைவிட, நாம் பாசாங்கு செய்வதையே குழந்தைகள் எளிதாகக் கற்றுக்கொள்ளும்.

ஒரு தீக்குணம் படிந்தபின் நீக்க யத்தனிப்பதினும் அது படியாமற் காப்பது எப்போதும் எளிதாகையால், குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு வாய்க்கப்பெற்றோர் அப்பொறுப்பைப் பிழையின்றி வகித்துச் சமாளித்து வருவதற்குவேண்டிய முயற்சி செய்யவேண்டும்.

## How to rid the house of Flies.

### வீட்டிலிருந்து ஈக்களை ஒழிக்கும் வகை.

தேக ஆரோக்கியத்திற்குப் பல கெடுதிகளைச்செய்து வரும் ஈக்களை நாம் குடியிருக்கும் வீடுகளிலிருந்து ஒழிக்க "வைத்திய கலாநிதி" யில் ஒரு நிருபர் சில முறைகளைக் கூறுகிறார். அவை வருமாறு:—

ஆரோக்கியமாயிருக்க வேண்டுமானால் முதலில் வீட்டிலுள்ள ஈக்களையெல்லாம் ஒழித்து விடவேண்டும். வீட்டுக்கதவுகளையும் சாளரங்களையும் நன்றாக மூடிவிட்டு, ஒரு சளகில் சிறிது நிலக்கரியைப்போட்டு அதில் தீயிடவும்; அதன்பேரில் கார்பாலிக் ஆஸிட் என்னும் திராவகத்தில் சுமார் இருபது துளிகள் விடவும். அத்திராவகத்திலிருந்து எழும்பும் புகையானது அறையிலுள்ள எல்லா ஈக்களையும் கொன்றுவிடும். இதற்கு மற்றொரு உபாயமும் உண்டு: அக்கிராகாரம் என்னும் சரக்கைப் பொடி செய்து எரிப்பது; இச்சரக்கு சுத்தமாகவும், புதிதாகவும் இருந்தால், இச்சூர்ணத்தை எரிக்கும்போது, இதிலிருந்து கூண்டு கூண்டாகப் புகை கிளம்பும்; இப்புகை ஈக்களின்மேல் படுவதற்கு முன்னமே, இதன் வாஸனையானது எல்லா ஈக்களுக்கும் ஒருவித மயக்கத்தை உண்டுபண்ணுகின்றது; ஆகவே, அறையிலிருந்த ஈக்கள் முழுதும் சோர்ந்து செத்துப்போனதுபோல் தரையில் விழுந்துவிடும். அவற்றை உடனே பெருக்கியெடுத்து, வீட்டுக்கு வெளியில் சற்றுத் தூரத்தில் எரித்து விடவும்.

ஈக்கள் வந்து உட்காருவதற்குத் திரைக்கதவுகள் ரொம்பவும் அனுகூலமான இடம்; திரையின் சட்டத்தைச் சுற்றிலும் இவை தொற்றிக்கொண்டிருக்கும். சுமார் இருபது அவுன்ஸ் அளவான பாராபின் (Paraffin) என்னும் ஔஷதத்துடன் ஒரு தேக்கரண்டியளவு கார்பாலிக் ஆஸிட் என்னும் திராவகத்தைக் கலந்து, திரைக்கதவுகளைச் சுற்றிலும் நன்றாகப் பூசிவிடவும்; இது உடனே ஈக்களைப்பற்றிக்கொண்டுவிடும்.

வீட்டில் குப்பைகளும அழுக்குக்களும் சிறிதும்சேராமல் நிர்மலமாயிருக்க ஏற்பாடு செய்துவந்தால், ஈக்கள் வாரமாட்டா, அவற்றைக் கொல்லவேண்டிய அவசியமும் இராது. அழுக்குக்களும் குப்பைகளுமே ஈக்களைப் போஷிப்பதற்கு ஸாதனமாயிருப்பவை. குதிரைச் சாணமும், மாட்டுச் சாணமும், அவற்றின் மூத்திரமும் ஈக்கள் போஷணையடைவதற்கு ஆதாரமானவை. தனவான்களுடைய வீட்டிற்கு அருகில் மாட்டுத் தொழுவங்களும் இருக்கக் காணலாம்; அநேகம்பேர் தமது வீட்டுக்குள்ளேயே மாடுகளைக்கட்டிக்கொள்கின்றனர். அவ்விதம் செய்யாமல் வீடுகளுக்கு வெகு தூரத்தில் குதிரை லாயத்தையும் மாட்டுத் தொழுவத்தையும் ஏற்படுத்திக் கொள்வதும் அவசியம். மேலும், குதிரைகளையும் மாடுகளையும் கட்டிவைக்கும் இடங்களில் ஹெப்பெல்ஸ் ஆண்டி ப்ளை ஸ்ப்ரே என்னும் திராவகத்தைத் தினந்தோறும் ஒரு முறையாவது தெளித்து வருவது நலம். தொழுவங்களில் சேரும் குப்பைகளையும் சாணம் முதலியவற்றையும் ஒரு பெரிய தொட்டியில் போட்டு, அதன் வாயை தந்திக் கம்பிகளாலான வலைபோன்ற மூடியினால் மூடிவைக்கவேண்டும். இப்படிச் செய்வதால் ஈக்கள் அத்தொட்டியினுள்போய் வளரவும், முட்டையிட்டு வேறு ஈக்களை விருத்தி செய்யவும் மார்க்கமிராது.

அழுகிப் பதனகெடக்கூடிய பழத்தோல் முதலிய எல்லாவற்றையும் அப்போதைக்கப்போது ஒரு தொட்டியில் போட்டு வாயை மூடிவைத்திருந்து, தூரத்தில் அதற்கென்று ஏற்பட்டுள்ள குழிகளில் கொட்டி மூடிவிடவேண்டும். அழுக்குக்களும் ஈக்களும் எப்பொழுதும் ஒன்றையொன்று விருத்திசெய்து மனிதவர்க்கத்திற்கு வியாதிகளைப் புகட்டும் கருவிகளென்பதை மறக்கக்கூடாது.



## Growth of Children.

### குழந்தைகளின் வளர்ச்சி.

குழந்தைகளிடம் அன்பு முதலிய ஸத்குணங்கள் இயற்கையிலேயே அமைந்திருக்கின்றன. அவைகளைத் தக்க விதத்தில் ஓங்கி வளரும்படி செய்யவேண்டியது பெற்றோர்களுடைய கடமைகளாகும். அநேகர் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளையும் பெண்களையும் சரிவரக் கவனித்து நல்ல வழியில் நடத்தத் தெரியாமையால், அவர்கள் பால்யத்திலேயே கெட்ட குணங்களை அடைந்து, பிற்காலத்தில் வாழ்க்கையில் கெட்டுப்போய்விடுகிறார்கள்.

சிறுவர்களுக்குத் தனித்திருப்பதில் ஸந்தோஷமே இராது. அவர்களுக்குக் கூட்டுறவில் அதிக பிரியம். தங்களுடைய வீட்டுச் சுபாசுபங்களில் தங்கள் கூட்டாளிகளும் பங்கு பெறவேண்டுமென்பது அவர்களது வாஞ்சை. அவர்களுக்கு ஒரு காரியம் ஸந்தோஷத்தைக் கொடுக்கிறதானால், அது தங்கள் தாயாருக்கும் ஸந்தோஷமாயிருக்குமென்று நினைப்பார்கள். ஆகையால், எந்த ஸந்தோஷம் வந்தாலும், விசனம் வந்தாலும், தாயாரிடம் சொல்ல ஓடுவது அவர்களது இயல்பு. அவ்விஷயங்கள் தாயாருக்கு மிக அற்பமானவைகளாயிருந்தாலும், பிள்ளைகளுக்கு அவை மகா விசேஷமானவையாகத் தோன்றும். ஆகையால், பிள்ளைகள் தங்களண்டை ஓடிவந்து சொல்லும் விஷயங்களைப்பற்றித் தாய்மார் அலக்ஷியமா யிருக்கக்கூடாது. அப்படிச் செய்வது பிள்ளைகளை விசனப்படுத்தும். தாயார் பிள்ளைகளின் விஷயத்தில் அநுதாபப்படுவது பிள்ளைகளுக்கு நிரம்ப மதிப்பாயிருக்கும். அவர்களைத் தைரியப்படுத்தும்படி ஒரு வார்த்தை சொன்னால், அல்லது ஏற்ற ஸமயத்தில் அவர்களைச் சற்று மெச்சிப்பேசினால், அவர்களுக்கு வெகு உத்ஸாகமுண்டாகும். அன்று முழுவதுங்கூட அவர்கள் அதனால் ஸந்தோஷமாயிருப்பார்கள்.

பிள்ளைகள் கூச்சல் போடுவதனாலும் அல்லது தங்களை அலட்டுவதனாலும் தாய்மார்கள் தொந்தரை பொறுக்கக்கூடாமல் பிள்ளைகளைத் துரத்தி அடிப்பது வழக்கம். அப்படிச் செய்யாமல், பிள்ளைகளின் சுறுசுறுப்பான கைகளும் மனமும் வேலை செய்துகொண்டிருக்கும்படி அவர்களுக்கு ஒரு லேசான வேலையை அல்லது விளையாட்டைத் திட்டஞ்செய்யவேண்டும். பிள்ளைகளின் விஷயங்களில் நெருங்கி அவர்களுடைய வேலைகளிலும் விளையாட்டுக்களிலும் கூட இருந்து அவர்களை நடத்தினால், பிள்ளைகளுக்குத் தாயின்மேல் அதிகப் பற்றுதலும் நம்பிக்கையும் உண்டாகும். தாயும் பிள்ளைகளின் துர்ப்பழக்கங்களைத் திருத்தி, அவர்களிடத்தில் ஸ்வயநயம் அல்லது கோபம் காணப்பட்டால் அதைத் தடுக்கலாம். தகுந்த ஸமயத்தில் தாயார் ஒரு எச்சரிப்பு வார்த்தை சொல்வது அல்லது கடிந்துகொள்வதானது மிகப் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். தாய் தன் பொறுமையினாலும், பிள்ளைகளின் நடத்தையை அன்போடு கவனிப்பதனாலும், பிள்ளைகளின் மனதைச் சரியான பாதையில் நடத்தி அவர்களின் நற்குணங்களை அபிவிருத்தி செய்யலாம்.

எல்லாம் தங்கள் இஷ்டப்படி நடக்கவேண்டுமென்று பிள்ளைகள் விரும்புவார்கள். பெற்றோர் இதற்கு இடங்கொடாதபடி அவர்களை நடத்தவேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளை உத்ஸாகப்படுத்தவும் ஸந்தோஷப்படுத்தவும் அதிகமான நேரத்தையும் கவனத்தையும் செலவிடுகிறார்கள். பிள்ளைகள் தங்களையே ஸந்தோஷப்படுத்திக்கொள்வதற்கும், தங்கள் ஸொந்த விவேகத்தையும் ஸாமர்த்தியத்தையும் அப்பியஸிப்பதற்கும் பழக்கவேண்டும். இப்படிச் செய்தால், அவர்கள் தங்கள் ஸ்வல்ப ஸந்தோஷங்களில் மனோரம்யமாயிருக்கக் கற்றுக்கொள்வார்கள். அவர்கள் தங்களுக்குண்டாகும் சிறு சோதனைகளையும் கஷ்ட நஷ்டங்களையும் தைரியத்தோடு சகிக்கப் போதிக்கப்படவேண்டும். அற்ப நோய்களையும் துன்பங்களையும் அதிகமாய்க் கவனிக்காதபடி அவர்களைப் பழக்கவேண்டும். மற்றவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும் வழிகளைத் தாய்மார் முதலில் கற்றுக்கொண்டு, அவற்றைத் தங்கள் பிள்ளைகளுக்குப் பிறகு சொல்லிக்கொடுக்கவேண்டும்.

பெற்றோர் பிள்ளைகளை அசட்டைசெய்யக்கூடாது. தாய்மார்களுக்கு அநேக வேலைகளும் கவலைகளும் இருப்பதனால், தங்கள் சிறுவர்களைப் படிப்பிக்கவும், அவர்களைப் பக்ஷமாய் நடத்தி அவர்களிடம் அநுதாபங் காட்டவும், தங்களுக்கு நேரமில்லையென்று நினைக்கின்றார்கள். பிள்ளைகள் தங்கள் ஸந்தோஷத்தையும், தோழமையையும், அநுதாபத்தையும் தங்கள் ஸொந்த வீட்டிலும், தங்கள் பெற்றோரிடத்திலும் அடையக்கூடாவிட்டால், அவர்கள் வெளியிலே மற்றவர்களிடத்திலே அவற்றை அடையத்தேடுவார்கள். அதனால், அநேகமாய் அவர்கள் மனதும் நடத்தையும் கெட்டுப்போகக்கூடும்.

அநேகம் தாய்மார்கள் தங்களுடைய யோசனைக் குறைவினால் தங்கள் பெண்களுக்குக் கொடுக்கவேண்டிய சிறு குற்றமில்லாத ஸந்தோஷ காரியங்களைக்

கொடாதிருக்கிறார்கள்; ஆனால், தங்களையும் தங்கள் பெண்களையும் வீணாய் அலங்கரிப்பதில் கவனமாயிருக்கிறார்கள். இப்படிப்பட்ட வீண் அலங்கரிப்புக்களைச் செய்து பெண்களை வளர்ப்பது, ஆசையையும் ஊதாரித்தனத்தையும் அதிகரிக்கச் செய்கிறதாயிருக்கிறது. சிறுவர் சிறுமியர் வளர்ந்து ஸ்திரீ புருஷர்களாகுங்காலத்தில், அவர்கள் வீண்டம்பமும் தீநடத்தையு முள்ளவர்களாவது நிச்சயம்.

பிள்ளைகள் செய்யும் துஷ்டச் செய்கைகளைத் தடுப்பதில் தகப்பன் ஒருபோதும் அலக்ஷ்யமாயிருக்கக்கூடாது. சிலர் பக்ஷத்தினால் பிள்ளைகளுக்கு அதிக இளக்காரம் கொடுத்து, அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யும்படி பார்ப்பதில் கண்டிப்பாயிருக்கிறதில்லை. இது உண்மையான அன்பு அன்று. தகப்பன் தன் வீட்டில் சுறுசுறுப்பு, நேர்மை, பொறுமை, தைரியம், உண்மை, பரோபகாரம் முதலிய நல்லொழுக்கங்களைப் பலப்படுத்தவேண்டும். பிள்ளைகளிடத்தில் என்னென்ன நற்குணங்களையும், நன்னடக்கைகளையும் காண விரும்புகிறோமோ, அவற்றையெல்லாம் நாமே அப்பியசிப்பதனால் நம்மிடத்திலிருந்து அவைகள் வெளிப்படவேண்டும். தகப்பன்மாரே! உங்கள் பிள்ளைகளை அதைரியப்படுத்தாதேயுங்கள். உங்கள் அதிகாரம் பக்ஷத்தோடும், உங்கள் பக்ஷம் திடமானதோடும் சேர்ந்திருக்கவேண்டும். உங்களுக்கு ஒழிந்த நேரங்களில் ஒரு பாகத்தை உங்கள் பிள்ளைகளுக் கென்று செலவிடுங்கள். அவர்களோடு பழகுங்கள்; அவர்கள் வேலையிலும் விளையாட்டிலும் ஸம்பந்தப்பட்டு நெருங்கியிருங்கள்; அவர்களுடைய அன்பை விருத்திசெய்யுங்கள். இவ்விதமாய்ச் செய்தால் உங்களுடைய வீட்டில் அதிக நன்மையுண்டாகும்.":—நிருபாலசத்தியம்.

## Evils of Smoking.

### புகை குடிப்பதனாலுண்டாகும் தீமைகள்.

புகையிலைப் புகையைக் குடிப்பதனால் வரும் தீமைகளை, ஒரு நிருபர் "வைத்தியமித்திரனில்" பின்வருமாறு எழுதுகிறார்:—

ஆதியில் புகையிலையின் சரித்திரத்தைப்பற்றிக் கவனிக்கின் அது 16-வது நூற்றாண்டில் அந்நியதேசத்திலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாய்ச் சில மேனாட்டுக் கிரந்தகர்த்தர்கள் மதிக்கின்றனர். இன்னும் சிலர், இது அமெரிக்காவிலிருந்து ஐரோப்பா கண்டத்துக்கு வந்து, பின் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாகக் கருதுகின்றனர். முதன் முதல் போர்த்துகேசியர்களால், 17-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதாய் நம்பப்படுகின்றது. ஆனால், நமது பூர்விக கிரந்தங்களை நோக்கும்பொழுது, முன்னமேயே நம் இந்தியாவிலும் இது இருந்திருப்பதாய் அறிகின்றோம்.

விஷ்ணுகிராந்த சாராவல்லி என்னும் கிரந்தத்தில் புகையிலையைச் சுருட்டிப் புகைபிடித்தால் தந்தநோய்களையும், முகரோகங்களையும் நீக்குமென்பது சொல்லியிருப்பதாலும், ருலார்நவதந்திரம் என்ற கிரந்தத்தில் ருத்திரன் பார்வதிக்கு உபதேசிக்கையில் எட்டுவிதமான லாகிரி வஸ்துக்களில் இதையும் ஒன்றாகச் சொல்லியிருப்பதாலும் இது முன் நம்மிந்தியாவில் இருந்திருப்பதாய் அறிகிறோம். இன்றைக்கும் இந்தியாவில் அநேக பாகங்களில் புகையிலை பயிராகின்றது. 1905-ம் வருஷத்தில் இந்தியாவில் மொத்தம் 10 லட்சம் எக்கர் புகையிலை பயிராகிவந்தது. அன்னிய நாடுகளுக்கும் 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சரக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. புகையிலையைக் கொஞ்சமாக உபயோகப்படுத்தினால், தொண்டையில் ஒருவிதமான உஷ்ணமும், வயிற்றில் ஒருவிதமான சூடும் ஏற்படுவதாய் அறிகிறோம். அதிகமாக உபயோகப்படுத்தினால், குமட்டல், வாந்தி, நரம்புகளுக்குப் பலவீனம், நாடியின் தூர்ப்பலம், முகம் வெளுப்பு, சில்லிட்ட வேர்வை, மயக்கம், பக்கவாதம் முதலான துர்க்குணங்களை உண்டாக்கும். மட்டுக்குமிஞ்சி உபயோகப்படுத்தினால் வைத்தியம் முதலில் ஏற்படுமென்றும், கண்களின் பார்வை வரவரக் குறையுமென்றும், பின்னும் உபயோகித்துக்கொண்டேயிருந்தால், கண்ணுக்குள்ளிருக்கும் பிம்பத்துக்கு ஒளிமழுங்கிவிடுமென்றும் நம்பப்படுகின்றது. இவைமாத்திரமல்ல மார்பு துடிப்பு, இருதய ரோகம், ரத்தநாடிகளுக்குப் பலவீனம், சுவாசக்குழல் சாபன ரோகம், சுவாசாசயத்திலும் உதடுகளிலும் புற்றுநோய், (Cancer) உண்டாவதோடு தீராத இருமலும் உண்டாய், க்ஷயம் முதலான வியாதிகளுக்கு ஏதுவாகின்றது. இன்னும், நிகோடைன் என்னும் விஷத்தன்முள்ள தைலசத்து புகையிலையில் இருப்பதனால், நரம்புகளையும் மஜ்ஜை என்ற தாதுவையும் இயற்கைக்கு அதிகம் உத்ஸாகப்படுத்துவதல்லாமல், மயக்கத்துக்கும் காரணமாகிறது. உதடும் பல்லும் கறுத்துப் போவதை நாம் அநுபவத்திலேயே கண்டிருக்கிறோம். இவ்வளவு துர்க்குணமுள்ள சரக்கைப் பணத்தைச் செலவிட்டு ஜனங்கள் வாங்கி உபயோகித்துத் தேகத்தைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள். ருஷ்யாவில் 1630-ம் வருஷத்தில் மதப்பிரசாரகர்கள் சுருட்டு உபயோகிப்பதை மதக்கொள்கைகளுக்கு விரோதமென்று மதித்து, அதை உபயோகிக்கிறவர்களைத் தண்டிப்பதற்காக, அவர்களின் மூக்கை அரிந்துவிடுவதாய்க் கண்டிப்பான உத்திரவிட்டிருந்தார்கள். ஒருவன் மூன்றுதரம் புகை பிடித்ததற்காகத் தண்டிக்கப்படும்பொழுது, அவனது மூக்கைப் பிளந்துவிடுவதோடு, ஸைபீரியாவுக்கும் அனுப்பிவிடுவதாயும் கண்டிப்பான உத்திரவு செய்திருந்தார்கள். பின்பு 1666-ம் வருஷத்தில் ருஷ்யா சக்கரவர்த்தி புகைபிடிப்பவர்கள் மரணதண்டனைக்கு உள்ளாவார் என்றும் உத்திரவு செய்திருந்தார். புகையிலைப்புகை குடிப்பதனால் தேகத்தில் பலவியாதிகள் உண்டாகக் கூடுமாதலால், அதைச் சிறுவர் முதல் பெரியோர் வரையில் யாவரும் விட்டொழிக்கவேண்டும்.



## Notes.

### குறிப்புக்கள்.

**North Arcot District Banking Union Ltd.,**

வடஆர்க்காடு ஜில்லா பாங்கிங் யூனியன் லிமிடெட்:- வடஆர்க்காடு ஜில்லாவிலுள்ள ஐக்கிய நாணய சங்கங்களுக்குப் பணவுதவி செய்வதற்காகவும், அச் சங்கங்களின் மேல்பார்வை முதலியவை செய்வதற்காகவும், ஒரு ஜில்லா பாங்கிங் யூனியன், சென்ற மே மாதம் 6-ம் தேதியன்று வேலூரில் ஸ்தாபிக்கப்பட்டு அத் தேதியில் வேலைதொடங்கப்பட்டது. ஜில்லா பாங்கியின் மூலதனம் இரண்டு லக்ஷம் ரூபாய். இந்தப் பங்குத்தொகை பங்கு ஒன்றுக்கு 50 ரூபாயாக 4000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்த 4000 பங்குகளில் 2000 பங்குகள் வடஆர்க்காடு ஜில்லாவிலுள்ள ஐக்கிய நாணயச்சங்கங்களுக்காகவென்றும், மற்ற 2000 பங்குகள் இதர தனி நபர்களுக்காகவென்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பங்குத்தொகை ரூபாயை மொத்தமாகவாவது, 3 மாதங்களுக்கொருதரம் 4 தவணைகளாகவாவது செலுத்தலாம். தனிப் பங்குக்காரர்களுக்கு 100 ஷேர்களுக்கு மேல் ஒருவருக்குக் கொடுக்கப்படமாட்டாது. தனிப்பங்குக்காரர்களுக்கு அவர்கள் செலுத்தியிருக்கும் பங்குத்தொகையின்பேரில் 100-க்கு 7½ வீதம் லாபம் முதலில் கொடுக்கப்பட்டுப் பிறகுதான் சங்க மெம்பர்களுக்கு லாபம் பிரித்துக்கொடுக்கப்படும். சாதாரணமாக, பங்குத்தொகையின்பேரில் 100-க்கு 9 வரையில் லாபம் கிடைக்குமென்று நம்பப்படுகிறது.

மாதாந்திர டிபாஸிட்டு, பிக்ஸட் டிபாசிட்டு முதலிய டிபாஸிட்டுகளின் மூலமாய்ப் பணம் வாங்கிக்கொள்ளப்படும். டிபாசிட்டுகளின்பேரில் கொடுக்கப்படும் வட்டி வீதங்களை அப் பாங்கி காரியதரிசியவர்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம். சாத்தியமான வரையில் வடஆர்க்காடு ஜில்லா வாசிகளுக்கே அப் பாங்கில் சேருவதற்கு அவகாசம் கொடுக்க உத்தேசித்திருக்கிறபடியால், பங்கு எடுக்க இஷ்டப்படுகிறவர்கள் சீக்கிரமாகவே பங்குகளுக்காக மனுச் செய்துகொள்ளவேண்டும். சுவல்பகளுக்காக ... 1-க்கு முதலாளிகளுக்கு ... 50 ரூபாயாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லாவித சர்க்கார் உத்தியோகஸ்தர்களும் பங்குகள் எடுத்துக் கொள்ளலாமென்று உத்தரவாயிருக்கிறது.

**Paper Pulp in India.**

இந்தியாவில் காகிதக்கூழ்:—ஐரோப்பிய யுத்தம் காரணமாக இந்தியாவில் காகிதப்பஞ்சம் ஏற்பட்டிருப்பது வெளிப்படை. நமக்குத் தேவையான காகிதங்கள் அன்னிய நாடுகளிலிருந்து வாராததனால், அவற்றை இங்கேயே நாம் தயாரித்துக்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. வருஷவாரியில், இந்தியாவிலேயே தயாரிக்கப்படும் காகிதங்களின் மதிப்பும், அவை போதாமல் அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதன் மதிப்பும் கீழே குறிக்கப்பட்டிருக்கின்றது:—

| | இந்திய மில்லுகளில் செய்யப்பட்ட காகிதங்களின் விலை மதிப்பு. | இறக்குமதி செய்யப்பட்ட காகிதங்களின் விலை மதிப்பு. |
|---|---|---|
| 1908 | பவுன் 505,818 | பவுன் 628,335 |
| 1909 | ,, 527,463 | ,, 666,835 |
| 1910 | ,, 543,436 | ,, 733,722 |
| 1911 | ,, 533,632 | ,, 774,128 |
| 1912 | ,, 513,736 | ,, 905,560 |

சென்ற 1913-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியோடு முடிவான வருஷத்தில், பிரிட்டிஷ் ஐக்கிய ராஜ்யங்கள், ஜெர்மனி, ஆஸ்டிரியா, நார்வே, ஸ்வீடன், ஹாலெண்டு முதலான தேசங்களிலிருந்து இந்தியாவில் இறக்குமதியான காகிதத்தின் விலை மதிப்பு 9,63,967 பவுன்களாகும். 1916-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ம் தேதியோடு முடிவான வருஷத்தில், 10 லட்சத்து 58 ஆயிரத்து 454 பவுன்கள் மதிப்புள்ள காகிதம் மேலே கூறிய தேசங்களினின்று இறக்குமதிசெய்யப்பட்டது. 1913-14-ம் வருஷத்தில் காகிதம் செய்வதற்கான கூழ்

முதலிய வஸ்துக்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட மதிப்பு விவரம் வருமாறு:—

| | | |
|---|---|---|
| ப்ரிட்டிஷ் ஐக்கிய ராஜ்யம் | ... | 44,233 பவுன்கள். |
| ஆஸ்டிரியா ஹங்கெரி | ... | 24,501 ,, |
| ஸ்வீடன் | ... ... | 20,636 ,, |
| ஜெர்மனி | ... ... | 20,247 ,, |

இவை தவிர, இன்னும் ரசாயனச்சரக்குக்கள் ஏராளமாகப் பிரதி வருஷமும் இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

காகிதம் செய்வதற்கான கூழ் இத்தேசத்திலேயே தயாரிக்க ஏராளமான இயற்கைப் பொருள்கள் கிடைக்கின்றன. அப்படியிருந்தும், அது அன்னியநாடுகளிலிருந்தே தருவிக்கப்படுகின்றது. பழைய காலத்தில் கந்தைகள், பழைய சணற்கயிறுகள் முதலியவற்றைக் கொண்டு காகிதம் தயாரிக்கப்பட்டு வந்தது. கொஞ்சகாலமாக இந்தியா கவர்ன்மெண்டு காட்டிலாகா அதிகாரிகள் மூங்கில், புல் முதலானவைகளைக்கொண்டு காகிதக் கூழ் செய்ய முடியுமா என்பதைப்பற்றி ஆராய்ச்சி செய்தார்கள். அவ்வாராய்ச்சிகளின் பலனாக, காகிதக்கூழ் செய்ய 18 வகைப்புற்கள் இருக்கின்றனவென்றும், அவற்றில் 8 வகைப் புல்லுகளில் உயர்ந்தவகைக் காகிதங்கள் செய்யலாமென்றும் கண்டுபிடிக்கப்பட்டது. பர்மாவில் மூங்கில்களிலிருந்து தேவையான கூழ் தயாரிக்கப்படலாமென்று சொல்லப்படுகின்றது.

பருத்தித்-தண்டுகளிலிருந்து காகிதக்கூழ் தயாரிக்கக் கூடுமென்று ஒரு ஜெர்மன் ரசாயன சாஸ்திரி ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கும் விஷயம் இந்தியாவுக்கு நன்மையை விளைவிக்கும். பருத்திச் சாகுபடி செய்யும் பிரதான நாடுகளில் ஒன்றான இந்தியா இவ்வாராய்ச்சியை மேற்கொண்டு, பயனடையுமென்று நம்பப்படுகின்றது. இவ்வளவு இயற்கைப்பொருள்களை உடையதாயுள்ள இந்தியா, இன்னும் இத்தொழிலில் பிரவர்த்திக்காமலிருப்பது விபரீதந்தான்.

## Education in India.

இந்தியாவில் கல்வியின் நிலைமை:—நமது தேசத்தில் கல்வியின் நிலைமையானது மற்றநாடுகளைக் காட்டிலும் மிகுந்த கேவலமான ஸ்திதியில் இருக்கின்றது. 1911-ம் வருஷத்துக் கணக்குப்படி, இந்தியாவில் 100க்கு 16 பேர்கள்தான் படித்தவர்கள். ஆடவர்களையும் ஸ்திரீகளையும் தனியாகப்பிரித்துக் கவனிப்பின், ஆடவர்களில் 100க்கு 11 பேர்களும், ஸ்திரீகளில் 100க்கு ஒருத்தியும் தான் படித்தவர்களாவார். அன்னியநாடுகளில் கல்வியின் நிலைமை எவ்வாறுள்ளதென்பது இதற்கு முந்திய சஞ்சிகைகளிற் காணலாம். கீழே குறிக்கப்படும் கணக்கில் இந்தியாவில் அந்தந்த மாகாணங்களில் 1000 பேர்களில் படித்த ஆண்மக்கள் எத்தனைபேர், பெண்மக்கள் எத்தனை பேர் என்பது விளங்கும்.

| மாகாணம் | படித்தவர்கள் 1000 இல் ஆண் | பெண் |
|---|---|---|
| இந்தியா முழுமையும் | 106 | 10 |
| பர்மா | 376 | 61 |
| திருவாங்கூர் | 248 | 50 |
| கொச்சி | 243 | 61 |
| பரோடா | 175 | 21 |
| வங்காளம் | 140 | 11 |
| சென்னை | 138 | 13 |
| பம்பாய் | 120 | 14 |
| பீஹார், ஒரிஸ்ஸா | 76 | 4 |
| பஞ்சாப் | 63 | 6 |
| மத்ய மாகாணம், பீரார் | 62 | 3 |
| ஐக்ய மாகாணங்கள் | 61 | 5 |

அந்தந்தத்தேசங்களில் கல்விக்காக ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு செலவிடப்படுகின்றதென்பது வருமாறு:—

| | | |
|---|---|---|
| யுனைடெட் ஸ்டேட்ஸ் | 16 ஷில்லிங் | |
| ஆஸ்ட்ரேலியா | 11 | ,, |
| இங்கிலாந்து | 10 | ,, |
| கானடா | 9·9 | ,, |
| ஜெர்மனி | 6·10 | ,, |
| ப்ரான்ஸ் | 4·10 | ,, |
| இந்தியா | 1 பென்னி. | |

மேலேகுறிப்பிட்டகணக்குக்களை உற்றுக்கவனிக்கும்போது, நாம் கல்வி அபிவிருத்தியில் எவ்வளவு தாழ்ந்திருக்கிறோமென்பதும், நமது கல்வியபிவிருத்திக்காக எவ்வளவு பணம் செலவிடப்படுகின்றதென்பதும் நன்குவிளங்கும். இந்தியா மிகவும் ஏழ்மையான தேசம். ஜனங்களுக்கு வெகு குறைவான வரும்படியே கிடைக்கின்றது. ஆதலால், அவர்களுக்கு இலவசமாய்க் கல்வி கற்பிக்கவேண்டியது அவசியமாகின்றது. இங்கிலாந்து, ப்ரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய தேசங்களில் கட்டாயக் கல்வி அனுஷ்டானத்தில் இருப்பது போல இந்தியாவிலும் இருக்கவேண்டும். நமது தேசத்தில் பரோடா, மைசூர் முதலான ஸம்ஸ்தானங்களில் கட்டாயக்கல்வி ஏற்பட்டிருக்கின்றது. அதேமாதிரி ப்ரிட்டிஷ் இந்தியாவிலும் ஏற்படவேண்டும்.



## Uses of waste Matters.

உபயோகமற்ற பொருள்களின் உபயோகம்:—உபயோகமற்றவையென்று பல பொருள்களை ஜனங்கள் குட்டையில் எறிந்துவிடுகின்றார்கள். சாஸ்திர ஞானத்தைக்கொண்டு பார்த்தால் அத்தகைய உபயோகமற்ற பொருள்களின் விசேஷத்தைத் தெரிந்துகொண்டு அவற்றைப் பணமாக்கிவிடலாம். உதாரணமாக: துருப்பிடித்த தகரங்களை உபயோகமற்றவையென்று கருதி அவற்றைக் குப்பைகளில் எறிந்துவிடுகின்றோம். அவ்வாறே, ஜெர்மானியரும் துருப்பிடித்த பழைய தகரங்களை உபயோகமற்றவையென்று வெளியே எறிந்துவந்தார்கள். ஜனங்கள் இவ்வாறு செய்வதை அதிகாரிகள் கவனித்து, தகரங்களின்மேலுள்ள துருவை நீக்கிச் சுத்தம் செய்து, அவற்றை உபயோகிக்கலானார்கள். ஜெர்மனியில், ஒரு முனிஸிபாலிடியார், இவ்வாறு பிரதிதினமும் ஜனங்களால் எறியப்படும் தகரங்களைச் சேர்த்து, அவற்றால் எழாயிரம் ரூபாய் லாபமடைந்ததாகச் சொல்லப்படுகின்றது. இதுதவிர, யுத்தத்திற்குமுன், உபயோகமற்றவையென்று கூறப்படும் சாமான்கள் ஏராளமாக ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டனவென்றும், அங்கு அவை மறுபடியும் உபயோகமுள்ள சாமான்களாகச் செய்யப்பட்டு மீண்டும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டனவென்றும் கூறப்படுகின்றது. ஆதலால், பிரதிதினமும் ஜனங்களால் உபயோகமற்றவையென்று எறியப்படும் வஸ்துக்களை முனிஸிபாலிடியார் பொறுக்கிச் சேர்த்து, அவைகளை உபயோகப்படுத்தி, தங்கள் வருமானத்தை விருத்தி செய்துகொள்ளலாமென்று மைசூர் பத்திரிகையொன்றில் ஒரு நிருபர் எழுதுகிறார்.

## Uses of Cashew Tree.

முந்திரி மரத்தின் பயன்:—முந்திரி மரத்திலிருந்து ஒருவிதமான பிசின் உண்டாகின்றது. அதை ஜனங்கள் சேகரித்து, அநேகவிதமாக உபயோகப்படுத்துகிறார்கள். அப்பிசினானது பல வர்ணங்களிலும் கிடைக்கும். சிவப்பு வர்ணமும் மஞ்சள் வர்ணமுமுள்ள பிசின்தான் அதிகமாகக்கிடைக்கின்றது. அவற்றினின்று நல்ல வார்னீஷ் செய்யப்படுகின்றது. இந்த வார்னீஷுக்கு பூச்சிகளைக் கொல்லும் சக்தியுண்டு. ஆதலால், இந்த வார்னீஷு பூசப்பட்ட இடங்களில் பூச்சிகளே சேரா. வீடுகளில் செல்லு, கறையான், முதலிய பூச்சிகள் சேராமலிருக்கும் பொருட்டும், மரச்சாமான்களும் புத்தகங்கள் முதலியனவும் பூச்சிகளினால் சேதமடையாதபடி யிருக்கும்பொருட்டும், ஜனங்கள் முந்திரியால் செய்யப்பட்ட வார்னீஷை உபயோகிக்கிறார்கள். முந்திரி மரத்தின் பட்டையிலிருந்து கிடைக்கும் பிசின், புத்தகங்கள் பயிண்டு செய்வதற்காக உபயோகப்படுத்தப்படுகின்றது. அந்தப்பட்டையிலிருந்தே இறக்கப்படும் பால் போன்ற திரவத்திலிருந்து அழியாத இங்கியொன்று செய்யப்படுகின்றது. இன்னும், முந்திரிப்பட்டையானது பற்பல ஔஷதங்கள் செய்வதற்கும் உபயோகப்படுகின்றது. தோல் பதனிடுவதற்கும் இப்பட்டை ஏராளமாக உபயோகப்படுகின்றது. முந்திரி மரம் எரித்துக் கரிக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது.

## Paper Industry in Ceylon.

ஸிலோனில் காகிதக் கைத்தொழில்:—ஸிலோன்வாஸியாகிய மிஸ்டர் சோமரத்ன என்பவர் காகிதத் தொழில் நிபுணராவர். இவர், ஸிலோனில் காகிதம் செய்வதற்கான இயற்கைப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றனவென்று கூறுகிறார். வைக்கோல், கந்தைகள், உபயோகமற்ற காகிதங்கள், உபயோகமற்ற சணற் கயிறுகள், பருத்தி, மாமரத்தின் கட்டைகள், கரும்புச்சக்கை ஆகிய இவைகளைக்கொண்டு காகிதங்கள் செய்யக்கூடுமென்பது இவருடைய அபிப்பிராயம். ஸிலோனில் மேலே குறிப்பிட்ட வைக்கோல், மாமரக்கட்டை, கரும்புச்சக்கை முதலியவைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு, அவை காகிதங்கள் செய்யப்படுவதற்கு உபயோகப்படுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஸிலோனில் காகிதத்தொழில் மிகவும் லாபகரமாயிருக்குமென்று மிஸ்டர் சோமரத்ன கூறுகிறார். இத்தொழிலை ஸ்தாபிப்பதற்கு குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் தேவையாயிருக்கும்.

## Characteristic of our Women.

நமது ஸ்திரீகளின் குணங்கள்:—சமீபத்தில், நார்த்வெஸ்டர்ன் யூனிவர்ஸிடியின் மெடிகல் ஸ்கூலைச் சேர்ந்த ப்ரொபஸர் W. S. ஹால் என்பவர், தமது மாணாக்கர்களின் முன்பாக, "மனைவியாகக்கொள்ள வேண்டிய ஸ்திரீகளின் குணங்களைப்பற்றி அரியதோர் பிரசங்கம் செய்தார். அது "வைத்திய கலாநிதி" யில் பின்வருமாறு காணப்படுகின்றது:—

"விவாகம் செய்துகொள்ளவேண்டிய பெண்ணின் தேகாரோக்கிய நிலைமை, அவளுடைய பரம்பரைஸம்பந்தமான குணங்கள், அவளுடைய படிப்பு, அவளுடைய வயது என்னும் இந்த நான்கு விஷயங்களும் கவனிக்கப்படவேண்டியவையாம். இவற்றுள், ஆரோ

க்கியக்குறைவுள்ள பெண்ணை முக்கியமாக விலக்கிவிட வேண்டும். அவ்விதப்பெண்ணை மணம் செய்துகொள்வது மனிதனுக்கு மிகப் பெரிய மனக்கவலைகளுக்கு இடமாகும். உங்களிற் சிலர் "அவ்வித ஆரோக்கியக் குறைவுக்குக் காலக்கிரமத்தில் பரிஹாரம் செய்துகொள்ளலாம் என்று சொல்லக்கூடும். அது பிசகு. ஸ்திரீகள் விவாகம் செய்துகொள்ளப்படுவதற்கு முன்னமேயே தங்கள் தேகாரோக்கியத்தை, நல்ல நிலைமையில் வைத்திருத்தல் வேண்டும். விவாகமான பிறகு அவ்விதம் செய்வது கஷ்டம்.

"ஒரு பெண், கம்பீரமான நடையுடைகளும், மனதைக் கவரும் கண்பார்வையும், இரமணீயமான உடலழகும் உடையவளென்பதைப் பார்த்துப் பிரமித்து அவளை மணப்பது மதியீனம்.

* * *

"பெண் பணக்காரியாயிருக்கிறாள் என்று அவளை விவாஹம் செய்துகொண்டு வீண்தொல்லைகளுக்கு உட்படவேண்டாம். ஒருத்திக்கு விசேஷமான திரவியம் இருக்கலாம், ஆனால், அவளாலும், அவளுடைய பணத்தாலும் உங்களுக்குக் கிருஹசௌக்கியமும் சௌகரியங்களும் ஏற்படுமென்று நம்பவேண்டாம்.

"பித்துப்பிடித்தவர்களாவது, அபஸ்மாரம் முதலிய [illegible] வியாதிக்காரர்களாவது [illegible] இருந்தால் [illegible] அக்குடும்பத்திற் பிறந்த பெண்களை நீங்கள் மணம்புரியாதீர்கள். விவாஹம் செய்துகொள்ளவேண்டிய பெண்ணின் பெற்றோர்களுடையவும், பாட்டனார் முதலியவர்களுடையவும் ஆரோக்கிய நிலைமைகளைக் கவனித்து விசாரித்தறிந்துகொள்வது நலம்.

"ஒருபெண் லாடின், கிரீக் இப்பாஷைகளையும் அறிந்தவள் என்று அவளையே விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று நிச்சயிக்கலாகாது. அவளுக்குக் கலாசாலையிற் படிக்கக்கூடிய ஒருவித யோக்கியதை இருந்தால், அதுமாத்திரம் உங்களுடைய சௌக்கியத்திற்குப் போதுமானதன்று; அவளுக்கு வீட்டில் சமைக்கவும், உடுப்புக்களைத் தைக்கவும், வீடுவாயில்களை ஒழுங்காகப் பார்க்கவும்; குழந்தைகளைப் பாதுகாக்கவும் தெரிந்தால், அதுதான் உங்களுடைய ஆரோக்கியாதிகளுக்கும் க்ஷேமத்திற்கும் உற்ற யோக்கியதையாகும்."

## A new medicine for Malaria.

மலேரியா ஜ்வரத்துக்கு ஒரு புதிய மருந்து:—சாதாரணமாக எவரும் மலேரியா ஜ்வரத்திற்கு கொயினா மாத்திரையை உபயோகித்து வருகிறார்கள். ஆனால், அதை உட்கொள்பவர்பலரும் குணமடைவதில்லை. இதற்குப் பதிலாக வேறு மருந்தொன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று டாக்டர் ஹொரேஸ் வில்லியம்ஸ் என்பவர் நெடுங்காலமாக ஆராய்ச்சிசெய்து சில விஷயங்களைக் கண்டுபிடித்திருப்பதாக அவர் "இந்தியன் மெடிகல் கெஜட்" என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கும் கடிதத்திலிருந்து தெரிகின்றது. அத்தேசத்தில் மலேரியா சுரம் ஆதிகாலந்தொட்டு உள்ளது. ஆதலால், பூர்விக வைத்திய நூல்களில் நிச்சயந்தமாய் அதற்கு மருந்து சொல்லப்பட்டிருக்கவேண்டுமென்று கருதி, தன் மனைவியின் உதவியைக்கொண்டு உருதுபாஷையிலுள்ள நூல்களை ஆராய்ச்சி செய்தார். அதன் பலனாக, அவர் பற்பல விதமான உப்புக்களையும், ஆரஞ்சு போன்ற கனிவர்க்கங்களில் ஒன்றின் சாற்றையும் கலந்து ஒருவித கஷாயம் செய்திருக்கிறார். மலேரியாவினால் பீடிக்கப்பட்ட 23 பேர்களுக்கு அக்கஷாயத்தைக் கொடுத்ததில் குணமடைந்தார்களாம். இவ்வாராய்ச்சியானது நமது இந்திய ஜன ஸமூஹத்திற்குப் பெரும் நன்மை விளைவிக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.



# Miscellaneous News.

## நாநாவித சங்கதிகள்.

இந்தியாவின் ஜனத்தொகை சர்க்கார் சம்ஸ்தானங்களை நீக்கி ஏறக்குறைய 24½ கோடி. இதில் 1915-16-ம் வருஷத்தில் ஆரம்பக்கல்வி பெற்றுவந்த சிறுவர்களின் தொகை 55,68,001. சிறுமிகளின் தொகை 11,01,951. அதாவது மொத்தத்தில் ஏறக்குறைய ஆரம்பக்கல்வி பெறுவோர்களின் தொகை 67 லட்சம் ஆகின்றது. இதன்படி மொத்த ஜனத்தொகையில் 100-க்கு 3 பேருக்கும் குறைவாகவே ஆரம்பக்கல்வி பெறுகிறார்கள்.

கிராமாந்தரங்களில் ஜனங்களுக்குச் சுகாதாரம், சௌக்கியம், விவசாயம், ஐக்கியம் முதலிய பல விஷயங்களைப் போதித்து, அவர்களின் பொது அறிவை விருத்தி செய்யக் கொச்சி ஸம்ஸ்தான அதிகாரிகள் பல ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். கல்வியறிவில்லாத ஜனங்களுக்கு இவ்விஷயங்களை வெகு தெளிவாகப் பிரசங்கங்களின் மூலமாய்த்தக்கவர்களைக்கொண்டு போதிக்கப்படுமென்று தெரிகிறது. அதைப்போல மற்றெல்லாவிடங்களிலும் செய்யப்படுமாயின், மிகுந்த நன்மை உண்டாகும்.

வங்காளத்தில் ஸிப்லிஸ் என்னும் வியாதியைப் பற்றிய சிகிச்சையைக்குறித்து ஓர் வியாசம் எழுதுவோர்க்குத் தக்கவெகுமானம் அளிக்கப்படும் என்று ஏற்பட்டிருந்தது. அந்த வெகுமதியைப் பெற அநேகம் பெரிய பட்டங்களைப்பெற்ற டாக்டர்கள் எல்லோரும் வியாசங்கள் எழுதியனுப்பினார்கள். ஆயினும், அஸாம் மாகாணத்திலுள்ள ஒரு தேயிலைத்தோட்டத்தில் வைத்திய உத்யோகஸ்தராயிருக்கும் டாக்டர் ராஜேந்திர குமார சேன் என்னும் வங்காளி வைத்தியரே இவ்வெகுமதியை அடைந்தனர். இவர் இங்கிலீஷ் வைத்திய பரீக்ஷைகளில் ஒன்றும் தேறாமலிருந்தும், அநேக ஐரோப்பிய டாக்டர்களைவிடச்சிறந்த வியாசத்தை எழுதியது அதிசயிக்கத்தக்கது.

ஜான். டி. ராக்பெல்லர் என்பவர் ஒரு ஏழைக்குடியானவனின் புத்திரர். காலை முதல் சாயங்காலம் வரை வேலைசெய்தால் 6 பென்ஸ் கூலிகிடைக்கும். இவ்வித ஸ்திதியிலிருந்த இவர் இப்போது உலகத்தவரால் மதிக்கப்பட்ட ஸ்திதியிலிருக்கிறார்.

ஆக்ஸ்போர்டு நகரில் வைத்திய சாஸ்திர விற்பன்னராகவிருந்தவரும். ஸர் வில்லியம் ஆஸ்லர் என்பவர், பிரிட்டிஷ் சைந்யத்தில் 98,000 பேர்கள் மேகரோகத்தால் கஷ்டப்படுவதாக ரிபோர்டிலிருந்து தெரியவருகிறதென்று கூறுகிறார்.

ஜெர்மனிக்கு பிரதான பட்டணமாகிய பர்லினுக்குப் போய்வந்த அமெரிக்கா தேசத்து டாக்டர் ஒருவர் கூறுவதாவது: பர்லினில் காக்கையொன்று ரூபாய் இரண்டணாவுக்கும், சிட்டுக்குருவியொன்று ஐந்து அணாவுக்கும் விற்கப்பட்டு வருகிறது. இது மிகவும் ஆச்சரியமேயாகும். இத்தேசத்தில் காக்கைகளைச் சீந்துவாரில்லை.

நள௵ ஜூன் மாதம் 9-ந்தேதியோடு முடிவான ஒரு வாரத்திற்குள் தென்னிந்தியா ரெயில்வே இருப்புப் பாதையில் பிரயாணிகளால் கிடைத்த வருமானம் ரூபாய் 396,197. சாமான்களினால் கிடைத்த வருமானம் ரூ. 304,901. ஆக மொத்தம் ரூ. 701,008.

நார்வேதேசத்தார்கள் அநேககாலமாய் ஸிமெண்டு, கல்தூள் முதலானவற்றைக்கொண்டு கப்பல்கள் கட்ட இயலுமா என்று ஆராய்ச்சி செய்து பார்த்ததில், அது முடியுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆதலால், கூடிய சீக்கிரத்தில் 50 ஆயிரம் டன் எடையுள்ள கப்பல்கள் அநேகம் கட்டப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கல்கத்தா புறாபந்தயச் சங்கத்தில் கொஞ்ச நாட்களுக்கு முன் ஒரு புறாப்பறத்தல் பந்தயம் நடத்தப்பட்டது. கோதர்மாவிலிருந்து கல்கத்தாவுக்கு 250 மைல் தூரமிருக்கும். மிஸ்டர் எல் ஓ. மார்லோவின் புறா ஜெயித்தது. அது நிமிஷத்திற்கு 1031 கஜம் தூரம் பறந்ததாகக் கணக்கு எடுக்கப்பட்டதென்று "இங்கிலீஷ்மான்" பத்திரிகை கூறுகின்றது

## Review of Books.

## புத்தக விமர்சனம்.

### Kalpatharu.

கல்பதரு:—இப்பெயர்கொண்ட ஒரு நவீன வாராந்திரப் பத்திரிகை சென்னையினின்று ஸ்ரீமான் கே ஆர். கிருஷ்ணமாசாரியார் அவர்களது ஆதரவின்கீழ் நன்கு நடைபெற்றுவருகின்றது. இதில் வெளியாகும் விஷயங்கள் எட்டுப்பாகங்களாப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்தின்கீழும் பல சிறந்த வியாசங்கள் எழுதப்பட்டுவருகின்றன. அவை, அவ்வவ்வகுப்பு ஜனங்களுக்கு உபயோகப்படுமாறு, இராஜாங்க சம்பந்தமான விஷயங்கள், ஆரோக்கியம், வியவசாயம், ஹிந்துலா, வியவசாயக்கூட்டுறவு, கல்வி ஆகிய பலவிஷயங்களாக அமைத்து, ஒவ்வொன்றின்கீழும் அறிவு வளர்ச்சிக்கான பல விஷயங்கள் எழுதப்பட்டுவருகின்றன. பொது ஜனங்களின் அபிவிருத்திக்கென்றே உழைத்துவரும் இப்பத்திரிகையை நமது நேயர்கள் ஆதரிக்க வேணுமென்று கோருகிறோம். இப்பத்திரிகையானது பிரதி சனிக்கிழமைதோறும் வெளியாகின்றது. இதன் வருடச்சந்தா இந்தியா, பர்மா, ஸிலோன் அடங்கிய உள்நாடுகளுக்கு ரூ. 8. வெளிநாடுகளுக்கு ரூ. 16. வேண்டுவோர் சென்னை 47, ராமசாமி தெருவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இதன் ஆபீஸுக்கு எழுதிப்பெறலாம்.

### Sathya Harischandra.

ஸத்திய ஹரிச்சந்திரன்:—இப்பெயர்கொண்ட நூலொன்று ஸ்ரீமான் பண்டிதர் M. M. நாராயணசாமி ஐயர் அவர்களிடமிருந்து வரப்பெற்றோம். இந்நூலில், பொய் சொல்லாமையே பூஷணமாகக்கொண்டு ஸத்தியத்தை நிலைநாட்டிய ஹரிச்சந்திர மகாராஜன் சரித்திரம் நாடக ரூபமாக எழுதப்பட்டுள்ளது. நாடகமானது மிகவும் தெளிவான நடையில் எழுதப்பட்டிருப்பதுடன், படிப்போர்க்குப் பற்பலநீதிகளைப் போதித்து ஸத்தியத்தை வற்புறுத்துகிறது. ஸ்திரீகளுக்குஞ்சிறுவர்களுக்கும் மிகுந்த பயனைக் கொடுக்கக்கூடியதாதலால், அவர்கள் இதைப் படிக்கவேண்டியது அவசியம். இதன் விலை அணா 6. வேண்டுவோர் மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர், என்று எழுதி வி பி [illegible]ப் பெற்றுக்கொள்ளலாம்.

## New Arrivals.

## புதிதாய்வந்த புத்தகங்கள்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் இயற்றியவை.

ரூ. அ. ப.

**மனம்போல் வாழ்வு. (இரண்டாம் பதிப்பு)** 0 8 0

இஃது இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் அடைவதற்குரிய நெறிகளை மிக்க தெளிவாகக்கூறுகின்ற ஓர் அரிய நூல். இப்பதிப்பு நன்கு சீர்திருத்தப்பெற்றும், ஜேம்ஸ் ஆலன் சரித்திரம் சேர்க்கப்பெற்றுமுள்ளது.

**அகமே புறம். (இரண்டாம் பதிப்பு)** 0 8 0

இஃது இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைவதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக்கூறுவது. இப்பதிப்பு ஜேம்ஸ் ஆலன் சரித்திரம் சேர்க்கப்பெற்றுள்ளது.

**வலிமைக்கு மார்க்கம்.** 0 8 0

இது மிக எளிய நிலைமையை எய்தியுள்ளோர் மிகவலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகளை யாவரும் எளிதில் கைக்கொள்ளத்தக்கவாறு மிக விரிவாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறுவது. இது நமது தமிழ் மக்களுக்கு இன்றியமையாத ஒரு நல்ல நூல்.

**மெய்யறிவு (மூலமும் உரையும்)** 0 8 0

இஃது அறமும், பொருள், இன்பம், வீடுகளையும் அவற்றை அடையும் வழிகளையும், பல உவமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் மிக விளக்கமாகவும் கூறுவது; பல தேசத்துப் பலகாலத்து நீதி நூல்களின் சாரம் எனத்தக்கது.

**பாடற்றிரட்டு. (அரும் பதவுரையுடன்)** 0 8 0

இது, ஆன்மஞானத்தையும் கடவுள் ஞானத்தையும் அடையச் செய்வனவும் மனிதரெல்லார்க்கும் பொதுவான ஒழுக்கங்களைப் போதிப்பனவுமாகிய அழகிய பலவகைப்பாக்கள் பல அடங்கியது.

**வள்ளியம்மை சரித்திரம். (அரும்பதவுரையுடன்)** 0 8 0

ஸ்திரீ புருஷர்கள் தத்தம் வாழ்க்கைத்துணையாரிடத்தும், உற்றோரிடத்தும், மற்றோரிடத்தும் அநுசரிக்க வேண்டிய முறைகளையெல்லாம் நன்கு அறிவதற்கு இது ஓர் சிறந்த நூல்.

மானேஜர் ஜனோபகாரி, ஆபீஸ்—வேலூர்.



MR. V. P. MADHAVA RAO, C.I.E.
மிஸ்டர் வி. பி. மாதவராவ், ஸி. ஐ. இ.

KOOPERT AND CO., TRIPLICANE.

# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. | பிங்களஹூ ஆடிமீ JULY, 1917. | சஞ்சிகை 7. No. 7.

## The Present position of our Vernaculars.

## நமது தேசபாஷைகளின் தற்காலத்திய நிலைமை.

இந்தியாவில் மற்ற தேசபாஷைகளைக் காட்டிலும் ஆங்கில பாஷையே சிறந்து விளங்குகின்றது. பள்ளிக்கூடங்களில் எங்கும் ஆங்கில பாஷையே தாய்ப்பாஷைகளைவிடப் பிரதானமாகக் கற்பிக்கப்படுகின்றது. பொது ஜனங்களும், தேச அபிவிருத்தி சம்பந்தமாயும் மத சம்பந்தமாயும் செய்யும் பற்பல காரியங்களையும் ஆங்கில பாஷையின் மூலமாகவே செய்கிறார்கள். தேசபாஷைகள் அவ்வளவாகக் கவனிக்கப்படுவதில்லை. முக்கியமாக இந்த வியாசத்தில் நாம், தேசபாஷைகள் இந்தியர்களால் எவ்வாறு மதிக்கப்படுகின்றன என்பதையும், தேசத்தின் அபிவிருத்திக்கு அவை எவ்வாறு அவசியமென்பதையும், இப்படி பலவிஷயங்களையும் பற்றிக் கவனிப்போம்.

### பாஷையில் அபிமானம் இல்லை.

இந்தியர்களில் அநேகர் தங்கள் தாய்ப்பாஷைகளை மிகவும் அலக்ஷியம் செய்கிறார்கள். அவர்கள் ஆங்கிலக் கல்வி பெற்றதனாலேயே தமக்கு எல்லாம் தெரிந்துவிட்டனவென்று கருதிக் கர்வப்படுகிறார்கள். தங்கள் வீட்டுக்கணக்குகள் முதலியவற்றை ஆங்கிலத்திலேயே வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். தாய்ப்பாஷைகளை உபயோகப்படுத்தினால் கௌரவக்குறைவு ஏற்படுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். தாங்கள் கற்கும் ஆங்கிலப்படிப்பு யாதொரு பிரயோஜனத்தையும் தராதென்றும், அதனால் நாளாவட்டத்தில் பலகேடுகள் நேரிடக்கூடுமென்றும் அவர்கள் அறிவதில்லை. இந்தியர்கள் ஆங்கில பாஷையில் பல யூனிவர்ஸிடி பட்டங்கள் பெற்றிருந்தாலும், அவர்கள் அப்பாஷைகளில் கசடறப்பேசவும் எழுதவும் முடியாது. அப்படியிருந்தும், அவர்கள் தங்கள் ஆயுள் முழுதையும் அன்னிய பாஷைகளைக் கற்பதிலேயே செலவிடுவது வியசனிக்கத்தக்கது.

### தேச அபிவிருத்திக்குத் தாய்ப்பாஷை அவசியம்.

நமது தேசத்தில் இந்தியர்களால் கூட்டப்படும் பற்பல ராஜீய சம்பந்தமான கூட்டங்களும், மதசம்பந்தமான கூட்டங்களும் அன்னிய பாஷைகள் மூலமாகவே நடைபெறுகின்றன. இவ்விதம் நடத்தப்பட்டால்தான் தமக்குக் கௌரவமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். தேசாபிமானத்தைக்கொண்டு இவற்றைச் செய்யும் இந்தியர்களுக்கு பாஷாபிமானமில்லாதது வியக்கத்தக்கது. இந்தியாவில் ஆங்கில பாஷை தெரிந்துள்ள இந்தியர்கள் மிகச்சில

இருக்கின்றனர். சுமார் 2,500 இந்தியர்களில் ஒருவன்தான் ஆங்கிலந் தெரிந்துள்ளவனாயிருக்கின்றான். ஆதலால், கோடிக் கணக்கான ஆங்கிலந் தெரியாத இந்தியர்களுக்குத் தேசபாஷைகளில் அறிவு வளர்ச்சிக்கான பிரசங்கங்கள் செய்யவேண்டுமேயொழிய. ஆங்கிலத்தில் செய்வதால் யாது பயன் உண்டாகக்கூடும்? தேசத்தின் தற்கால நிலைமையையும், அதன் முற்போக்குக்கான பல விஷயங்களையும், ஆங்கிலந் தெரியாத இந்தியர்களுக்கு அவரவர்கள் தாய்ப்பாஷைகளின் மூலமாகவே தெரிவிக்கவேண்டும். அப்போதுதான் தேசத்துக்குப் பல நன்மைகள் ஏற்படக்கூடும். மேலும், ஒருவன் அன்னிய பாஷையில் எவ்வளவு விற்பன்னனாயிருந்தாலும், அதன் மூலமாய் ஜனங்களின் மனதைக் கவர முடியாது; தமது எண்ணங்களையும் மிகவும் தெளிவாக வெளியிட முடியாது.

### ஒற்றுமையின்மை.

இந்தியர்கள் ஆங்கிலங்கற்பதனால் தங்களை ஒருவாறு பெருமைப்படுத்திக்கொள்ளுகின்றார்கள். அவர்கள் ஆங்கிலபாஷையைக் கல்லாதவர்களை மூடர்களென்றும், தாழ்ந்தவர்களென்றும் எண்ணுகிறார்கள். இதனால், ஆங்கிலம் கல்லாதவர்கள் ஒரு பிரிவினராகவும், அப்பாஷைகளைக் கற்றவர்கள் மற்றொரு பிரிவினராகவும் கருதப்படுகிறார்கள். இந்த இரண்டு வகுப்பினருக்கும் பரஸ்பரம் ஒற்றுமையின்றித் தேசாபிவிருத்திக்கான காரியங்கள் தடைப்படுகின்றன. முற்காலத்தில் படித்தவர்களும் படியாதவர்களும் ஒற்றுமையுடன் பல காரியங்களைச் செய்துவந்தார்கள். ஆங்காங்கு ஜனங்கள் படித்தவர்களிடம் போய்ப் பற்பல விஷயங்களையும் பிரசங்கங்கள்மூலமாய்க் கற்றுவந்தார்கள். அதனால், அவர்களுடைய ஞானம் பலமடங்கு விருத்தியடைந்துவந்தது.

### தாய்ப்பாஷையை ஆதரிக்கவேண்டும்.

மேலே சொல்லப்பட்ட இருவகுப்பினரும் ஒரே மனதுடன் தங்களாலியன்றவரை தத்தம் தாய்ப்பாஷைகளை அபிவிருத்தி செய்ய முயலவேண்டும். நாம் அன்னிய பாஷைகளில் எவ்வளவு காலம் உழைத்தபோதிலும், அவற்றில் பூர்ணஞானம் பெற இயலாது. நம்முடைய முழுகவனத்தையும் பிறபாஷைகளில் செலவிடுவதனால், தாய்ப்பாஷை கஷ்டித்துவிடுகின்றது. அன்னிய பாஷைகளில் கழிக்கும் நமது காலத்தை நம் தாய்ப்பாஷைகளில் செலவிட்டால், அவற்றில் நாம் பூர்ண பாண்டித்யமடைவோம். அதுவுமல்லாமல், பிற பாஷைகளைக் கற்றவர்களுக்கும், அவைகளைக் கல்லாதவர்களுக்கும் உள்ள வேற்றுமை அற்றுப்போம். நாம் நமது தேசகலைகளையும், சாஸ்திரங்களையும் கற்று, மற்ற ஜனங்களோடு யாதொரு வேற்றுமையுமின்றி ஸகஜமாகக் கூடியிருக்கவேண்டும்; அவர்களுக்கு தாய்ப்பாஷைகளின் மூலமாகவே அறிவு வளர்ச்சிக்கான பிரசங்கங்கள் செய்யவேண்டும்.

### பண்டிதர்களுக்குக் கௌரவமில்லை.

தேச பாஷைகளைக் கற்று அவற்றில் பூரண பாண்டித்யமுடைய பெரிய பண்டிதர்கள் மௌல்விகள் முதலானவர்கள் இக்காலத்தில் கல்விமான்களென்று மதிக்கப்படுவதில்லை. பல கலாசாலைகளிலும் தேச பாஷைப் பண்டிதர்களும்; ஆங்கிலத்தில் பாண்டித்யம் பெற்றவர்கள் என்று சொல்லப்படுபவர்களும் எவ்வாறு மதிக்கப்படுகிறார்களென்பதை நாம் அநுபவ பூர்வமாய்க் கண்டுவருகின்றோம். ஆங்கிலம் படித்தவர்கள் மாத்திரந்தான் கல்விமான்கள் என்று எண்ணப்படுவது சகஜமாயிருக்கின்றது. நமது ஜாதிய அபிவிருத்திக்கும் கல்வி அபிவிருத்திக்கும் தேச பாஷைகள் அவசியமாயிருப்பதால், அவற்றை நாம் வைக்கொள்ளவேண்டியது நமது முக்கியக் கடமையாகும்.

நாம் முன்னேற்றமடைவதற்கு ஆங்கிலக்கல்வி அவசியமென்று எண்ணுவது தவறு. நாம் காரணமில்லாமலே பல சமயங்களிலும் ஆங்கில பாஷையிலேயே நமது சொந்த ஜனங்களோடு பேசுகிறோம்; அவர்களுக்குக் கடிதங்களும் ஆங்கிலத்திலேயே எழுதுகிறோம். சாதாரணமாக, ஒவ்வொரு குடும்பத்திலும், ஆங்கிலபாஷை தெரிந்தவர்கள் ஒருபிரிவினராயும், மற்றவர்கள்



மற்றொரு பிரிவினராகவும் கருதப்படுகிறார்கள். விருந்துகளிலும், தோட்டக் கச்சேரிகளிலும் ஆங்கிலமறிந்தவர்கள், தங்களுக்கு ஆங்கிலமறியாதவர்களோடு யாதொரு சம்பந்தமுமில்லையென்று எண்ணுகிறார்கள். இதனால் பலவித மான தீமைகள் சம்பவிக்கின்றன. இந்தியச் சிறுவர்கள், ஆங்கிலக்கல்வி கற்றதனாலேயே தங்கள் புராதன இந்து வழக்கங்கள் யாவும் பொய்யென்று அவற்றை அலக்ஷியம் செய்கின்றார்கள். ஆங்கில பாஷையானது எவ்விதத்திலும் இந்தியர்களின் தாய்ப்பாஷையாக இருக்க முடியாது. வீடுகளில் ஸ்திரீகளுக்கு ஆங்கிலம் கற்கப் போதுமான சௌகரியங்கள் இல்லாததனால், அவர்கள் தத்தம் தாய்ப்பாஷைகளையே கைக்கொள்ளவேண்டியிருக்கின்றது. அவர்கள் சிரமப்பட்டுப் பிற பாஷைகளைக் கற்றாலும், அவற்றால் யாதொரு பயனையும் அடையாது போவதுடன், தேச பாஷைகளிலிருக்கும் அநேக நீதி சாஸ்திரங்கள் முதலானவற்றைக் கற்கச் சக்தியற்றவர்களாய்விடுகிறார்கள்.

---

## Evil effects of communal grazing.

## கால்நடைகளை ஊர்மந்தையுடன் மேயவிடுவதன் கேடுகள்.

இந்தராஜதானியில் அநேக கிராமங்களில் காலைவேளையில் ஊர்மாடுகள் மேய்ச்சலுக்குப் போவதற்குமுன் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மந்தையாய் அடக்கிவைக்கப்படுகின்றன. பிறகு மேய்ச்சல்தரைகளுள்ள இடங்களுக்கு ஓட்டிக்கொண்டு போகப்பட்டு, அங்கு மேய்ந்தவுடன் சாயங்காலத்தில் திரும்பவும் ஊருக்கு ஓட்டிவரப்படுகின்றன. இப்படி செய்வதனால், மந்தைமாடுகள் சில சிறபிள்ளைகளை பார்த்துக்கொள்ளுகிறார்கள். இதனால் வியவசாயிகளுக்குக் கஷ்டமில்லாததனால் அநேகர் இம்முறையை அநுசரிக்கிறார்கள். அதிக விலை கொடுத்து வாங்கிய வண்டி அல்லது கவலைமாடுகளை மேய்ச்சலுக்காக இம்மந்தைகளுடன் ஓட்டுவார்களா? காளைமாடுகள் மந்தைமாடுகளுடன் மேய்வதனால் இளைத்துப்போவதுடன், நடையும் சுறுசுறுப்பும் குறைந்துபோகின்றன. ஊர்மாடுகளையெல்லாம் மந்தையாய் ஒருமிக்கச்சேர்த்து மேய்ப்பதனால் வரும் கெடுதிகளைக் கீழே எழுதுகிறோம்:—

1. சாதாரணமாய்க் கிராமங்களில் மந்தைமாடுகள் மேய்வதற்குப் பொதுவான சில இடங்கள் உண்டு. அங்கு மந்தைமாடுகள் காலைமுதல் சாயங்காலம்வரை மேய்ந்துவருவது வழக்கம். மேய்ச்சல் தரைகளிலிருக்கும் புல்லு முதலியன எத்தனை மாடுகளுக்குப் போதுமோ அதைவிட அதிகமான மாடுகள் வந்து மேய்வதால், மாடுகளுக்குப் போதுமான தீனி கிடைப்பதில்லை; அவைகள் எப்பொழுதும் இளைத்தேயிருக்கின்றன. இந்த மேய்ச்சல் தரைகளைப் பாதுகாக்க எவரும் இல்லாததனாலும், அவை மாடுகளால் மிதிக்கப்பட்டு தரைகள் கெட்டியாய்விடுவதாலும் புல் அதிகமாய் முளைப்பதில்லை. இன்னும், மந்தைமாடுகள் மேய்ச்சலுக்குப் போகுமிடங்களில் அவைகளுக்குச் சுத்தமான தண்ணீர் போதுமானவளவு குடிப்பதற்குக் கிடைப்பதில்லை.

மந்தைமாடுகள் இளைத்துப் போவதற்கு மற்றொரு காரணம் உண்டு:—மாடுகளைக் காலைவேளையில் மேயவிட்டு வெய்யில் வேளையில் இளைப்பாறவிட்டால், அவற்றின் தேகம் நல்ல நிலைமையிலிருக்கும். அப்படிக்கின்றி, அவைகள் காலை பத்துமணிவரை மந்தைவெளியிலேயே தங்கியிருந்து பிறகு வெய்யில்வேளையில் மேயப்போவதால், சிரமபரிகாரம் செய்துகொள்ள நேரமில்லாமலும், பல சமயங்களில் சாயங்காலம்வரையில் குடிக்கத் தண்ணீரில்லாமலும் கஷ்டப்படுகின்றன.

2. பசுமாடுகள் கவலைமாடுகளைப்போல் அவ்வளவு வேலைசெய்யாவிட்டாலும், போதுமான அளவு சிரமபரிகாரம் செய்துகொள்ள வேண்டியது அவசியம். கறவைமாடுகளை அவற்றின் கன்றுகளோடு மந்தைமாடுகளுடன் மேய்ச்சலுக்

காக ஓட்டக்கூடாது. அப்படி ஓட்டுவதனால், பசுக்களுக்கு வேண்டியவளவு சிரமபரிகாரம் கிடைக்காமல் பாலின் அளவு குறைந்துவிடுகின்றது. நாம் பல பசுக்களை வைத்திருப்பதைக் காட்டிலும், செம்மையாய்ப் போஷிக்கப்பட்ட இரண்டுமூன்று பசுக்களை வைத்திருந்தால், இவை அவைகளைக்காட்டிலும் அதிகமான அளவு பால் கொடுக்கும்; புஷ்டியான கன்றுகளையும் அடையலாம். குறைந்த தீனியை உட்கொள்ளும் பசுவின் சாணத்தைக்காட்டிலும், நன்கு போஷிக்கப்பட்ட பசுவின் சாணம் எருவுக்கு நல்லது.

3. பசுக்கள் பலஹீனமாயிருந்தால், காலக்கிரமத்தில் பலன் தருவதில்லை, பலநாட்கள்வரை வறடாயிருக்கின்றன. மந்தைமாடுகளோடு பசுக்களையும் மேயவிடுவதனால், அவை பிரதிவருஷத்திலும் பலன்தராமல், இரண்டு மூன்று வருஷங்களுக்கு ஒரு முறையே கன்றுகள் ஈனுகின்றன. இது நமக்கு நஷ்டமேயாகும்; பாலும் சரியான அளவு கிடைப்பதில்லை; கன்றுகளும் தேகபலத்தோடு ஜீவித்திருப்பதில்லை. ஆதலால், பசுக்களை எப்போதும் ஊர்மந்தையுடன் மேயவிடாமல் தனியே நல்லபுல்லுள்ள இடங்களில் நிம்மதியாய் மேயவிடவேண்டும். இவ்விதம் செய்வோமானால், அவை வருஷத்திற்கு ஒரு கன்று ஈனும்; போதுமான அளவு பாலும் கிடைக்கும்.

4. ஒவ்வொரு மந்தையிலும் பருவம்வராத காளைகள் பல இருக்கக்கூடும். அம்மந்தைகளில் பசுக்களையும் மேயவிடுவதால், இவைகள் அக்காளைகளால் பொலியப்பட்டு மெலிந்த கன்றுகளையே ஈனுகின்றன. இதனால், நாம், நம் பசுக்களை மந்தைமாடுகளுடன் ஓட்டாமல் அவற்றை நல்ல பக்குவம்வந்த காளைகளுடன் பொலியச்செய்யவேண்டும்.

5. கறவைப்பசுக்களை வறட்டுப்பசுக்கள் முதலானவைகளோடு சேரவிடாமல் அவற்றைத் தனியே மேயவிடவேண்டும். கறவைப் பசுக்களுக்காகத் தனியே கொஞ்சம் நிலத்தை விட்டு, அதில் நிரம்பப் புல்முளைக்கும்படி செய்ய வேண்டும். இவ்வாறு புல் நிரம்ப வளருகிற வரை எந்தமாடுகளையும் அதில் மேயவிடக் கூடாது.

6. மாடுகள் ஒரேகூட்டமாய் மேய்வதால் வியாதிகள் வெகுசீக்கிரம் அவைகளுக்குள் பரவுகின்றது. அடைப்பான், கோமாரி ஆகிய இவைகளே மாடுகளுக்குள் பரவும் முக்கியமான வியாதிகள். இந்நோய்கள் பரவ ஆரம்பித்தால், நோய்கண்ட மாடுகளை உடனே மற்ற மாடுகளிடத்திலிருந்து பிரித்து, அவற்றைத் தனித்தனியே கட்டி வேண்டிய சிகிச்சை செய்யவேண்டும்.

## The Education of our women *

## நமது ஸ்திரீகளின் கல்வி.

இந்திய ஸ்திரீகளின் முன்னேற்றத்தை உத்தேசித்து ஒரு சங்கமானது மிஸ்ஸஸ் ஜினராஜதாஸாவினால் அடையாற்றில் ஸ்தாபிக்கப்பட்டு அதன் ஆதரவின்கீழ்க் கிளைச்சங்கங்கள் இந்தியா முழுதிலுமுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் கிராமத்திலும் ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்துடன், அந்தச் சீமாட்டி அநேக இந்திய பிரமுகர்களுக்கு அனுப்பியிருக்கும் அறிக்கை வெளிப்படை. இவர் அன்னிய தேசத்திற் பிறந்திருந்தும், இந்திய சகோதரிகளின் கேவலமான நிலைமையையும், அதனால் நமது தேசத்துக்கு உண்டாகும் பல தீங்குகளையும் பார்த்து அனுதாபங்கொண்டு, இவர்கள் முன்னேற வேண்டுமென்ற உன்னத நோக்கத்தினால் தூண்டப்பட்டு, இந்தச்சங்கத்தை எல்லாவிடங்களிலும் பரவச்செய்து, அதன்மூலமாய் ஸ்திரீகளை ஞானத்திலும், கல்வியிலும், தேசிய உணர்ச்சியிலும் புருஷர்களுக்குச் சமானமானவர்களாகச் செய்து அவர்களோடு தேசத்தின் அபிவிருத்திக்காக ஒத்துழைக்கும்படி செய்யவேண்டுமென்பதே இவருடைய நோக்கம்.

இப்பொழுது நமது தேசத்தில் இவ்விதமான சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டியது அவசியமாமென்னும் விஷயத்தைப்பற்றி நாம் யோசிக்க வேண்டும். நமது ஸ்திரீகளின் தற்கால நிலைமை மிகவும் கேவலமாயும், அன்னிய தேசத்தவர்களால் இகழப்பட்டதாயுமிருக்கின்றது. ஒவ்வொரு நாகரிகமடைந்த தேசத்திலும் ஸ்திரீகள் கற்றவர்களாயும், ஞானவதிகளாயும், தாராள நோக்கமுள்ளவர்களாயுமிருக்கையில், நம் தேசத்தில்மாத்திரம் அவர்கள் அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தினால் சூழப்பட்டு கண்ணிருந்தும் குருடர்களாயிருக்கிறார்கள். இந்திய ஸ்திரீகளில் பெரும்பாலோர்க்குக் கல்வியின் வாசனையே தெரியாது. பள்ளிக்கூடங்களிற் போய் பத்துப் பன்னிரண்டு வயதுவரையிற் படித்த சிறுமிகளின் ஞானம் நிரம்பவும் சொற்பமென்று சொல்லவேண்டும். ஆகையால், ஸம்பூர்ணமாய்க் கற்ற ஸ்திரீகள் இந்தியாவில் லக்ஷத்தில் ஒருவர் கூட இருக்கமாட்டார்கள். நம் ஸ்திரீகள் இந்தத் தாழ்வான நிலைமையில் வைக்கப்பட்டிருக்கும்வரையில் நம்முடைய தேசம் மற்றைத் தேசங்களுக்குச் சமானமாக முன்வரமாட்டாது.

கல்வியின் சிறப்பையும் அதனால் நமக்குண்டாகும் பிரயோஜனங்களையும் விவரித்து எழுத வேண்டியதில்லை. புத்தியிருக்கும் ஒவ்வொருவனுக்கும் கல்வியின் உபயோகங்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும். கல்வியை ஸாதாரணமாய் வெளிச்சத்திற்கு ஒப்பிடுவார்கள். எப்படி ஒருவனுக்குக் கண்ணிருந்தும் வெளிச்சமில்லாமற்போனால் குருடனாகிறானோ அந்த மாதிரி புத்தியிருந்தும் கல்வி கற்காமல்போனால் மூடனாகிவிடுகிறான் தவிர, நீண்டகாலம் ஒருவன் வெளிச்சமில்லாத வீட்டிலேயே வசித்துக் கொண்டுவந்தால் அவன் கொஞ்சநாட்களுக்கெல்லாம் பார்க்கும் சக்தியை இழந்துவிடுகின்றான். அதுபோலவே, ஒருவன் வெகுகாலம் கல்லாமலேயிருந்துவிட்டால், அவன் தன் புத்தியை ஒருவிஷயத்திற் செலுத்தி ஆலோசிக்கும் சக்தியை இழந்துவிடுகிறான். அதாவது, அவனுடைய புத்தி மழுங்கிப்போய்விடுகின்றது. ஆகையால், ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் ஸமமாக ஈச்வரனாற் கொடுக்கப்பட்டிருக்கும் புத்தியை ஒவ்வொருவரும் உபயோகிக்கவேண்டும். அப்படி செய்யாவிட்டால், அவரை நாம் அவமதித்ததாகும். கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கண்களால், நாம் எப்படி அவரால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் விநோதங்களைப் பார்த்து ஆனந்தப்படுகிறோமோ, நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் காதுகளால் அதிசிலாக்கியமான கோகிலம் முதலான பறவைகளின் கானங்களைக்கேட்டு எப்படி சந்தோஷப்படுகிறோமோ, நமக்குக் கடவுளின் கிருபையால் கிடைத்திருக்கும் அநேக அவயவங்களால் அவரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஸன்மார்க்கமுள்ள கருமங்களைச் செய்து நம்மிஷ்டங்களை நாம் எப்படி பூர்த்திசெய்து கொள்ளுகிறோமோ, அதே மாதிரி நமெல்லோருக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் புத்தியினால், நாம் மிகவும் விநோதகரமான இந்த ஜகத்தினுடைய சூக்ஷ்மங்களையும் ரஹஸ்யங்களையும் அறிந்துகொள்ள முயலவேண்டும். அதாவது, கல்வியினால் நம்முடைய புத்தியைத் தீக்ஷ்ணமாகச்செய்து ஞானத்தைப்பெறப் பிரயத்தனம் செய்யவேண்டும். இப்படியிருக்க, நமது தேசத்தில் புருஷர்கள்மாத்திரம் கல்வி கற்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டு, ஸ்திரீகளுக்குக் கல்வி கற்பிக்காமலிருப்பது இயல்புக்கு விரோதமாகும்.

ஆகையால், எல்லாஸ்திரீகளும் கல்வி கற்பதை ஈச்வரனால் நியமிக்கப்பட்ட கடமையென்று கருதவேண்டும். இதை நம்முடைய மதத்தில் முக்கியமான கொள்கையாக நாம் கருதவேண்டும். பூர்வீக காலங்களில் நம் முன்னோர்

* இந்த வியாசமானது, ஸ்திரீகளுக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றியும், பிரம்ம ஞான சங்கத்தில் வெகுபிரசித்தியடைந்தவரான மிஸ்டர். ஜினராஜதாஸாவின் மனைவியாகிய மிஸ்ஸஸ். டோரதி ஜினராஜதாஸா நமது பெண்மணிகளின் அபிவிருத்தியைக் கோரி செய்துவரும் பற்பல காரியங்களைப் பற்றியும் ஒரு அன்பரால் "சுதேசமித்திரனில்" எழுதப்பட்டது

கள் கல்வி ஒவ்வொருவருக்கும் இன்றியமையாததென்று அறிந்து புருஷர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் வித்தியாசமில்லாமல் கல்வி கற்பித்தார்கள். நம்முடைய பூர்விக சரித்திரத்தில் பண்டித சிரோமணிகளாய் விளங்கின அநேக ஸ்திரீகளைப்பற்றி நாம் படித்திருக்கிறோம். மைத்ரேயி, கார்க்கி முதலிய ஸ்திரீரத்தினங்களோடு வேதாந்த விஷயங்களில் புருஷர்கள்கூட ஸம்வாதம் செய்து தோல்வியடைந்திருப்பதாக நாமெல்லோரும் கேட்டிருக்கிறோம். தவிர, பெண்களும் பையன்கள்போலவே தங்களுடைய குருவின் ஆச்ரமத்தில் அநேக வருஷங்கள் தங்கியிருந்து வித்தையைக் கற்றுக்கொண்டு வந்ததாகச் சொல்லப்படுகின்றது. பெண்கள் கல்விகற்று முடிகிறவரையில் பிரம்மசாரிணிகளாயிருந்தார்கள். இவ்விதமான நல்ல வழக்கங்களெல்லாம் நம் தேசத்தைவிட்டு நீங்கினது நம்முடைய துர்ப்பாக்கியமே. இனிமேலாவது நம்முடைய தப்பெண்ணங்களையெல்லாம் கைவிட்டு, நம் முன்னோர்கள் காட்டியிருக்கும் மேலான வழிகளை அநுஸரிக்க நாம் பிரயத்தனம் செய்யவேண்டும். ஆகையால், மிஸ்ஸஸ் டோரதி ஜினராஜதாஸாவினால் செய்யப்படும் பிரயத்தனங்கள் நம்முன்னோர்களின் நோக்கங்களையே அநுசரித்திருப்பதனால், நாமெல்லோரும் இச்சங்கத்தை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

இந்திய ஸ்திரீகளுக்குக் கல்விகற்பித்தால், நம் தேசாசாரங்கள் முழுவதும் கெட்டுப்போய் நாமெல்லோரும் மேனாட்டார்கள் மாதிரி ஆகிவிடுவோமென்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். நம் வாலிபர்களுக்கு இப்பொழுது கற்பிக்கப்படுகிற மாதிரியே, நம் சிறுமிகளுக்கும் கல்வி கற்பிக்கப்பட்டால் இவர்கள் அபிப்பிராயப்படுவதுபோலவே முடியுமென்பதற்குக் கொஞ்சமும் சந்தேகமில்லை. இக்காலத்தில் அநுஷ்டிக்கப்படும் கல்வி ஏற்பாட்டினால் நம் வாலிபர்களுக்கு அநேக தீங்குகள் உண்டாகின்றனவென்பது எவரும் அறிந்ததே. ஏனெனில், நமது கல்விமுறை, நம் தேசீய தர்மத்தை யநுசரிக்காமல் பரதேசீய தர்மத்தை அநுஸரிக்கிறது. ஆதலால், நம் தேசீய வாழ்க்கைக்குத் தக்கபடி கல்விமுறை சீர்திருத்தப்பட்டுப் பெண்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும். நம்முடைய தேசீய ஆசாரத்தையும், சீலத்தையும், தர்மத்தையும் நாம் ஒருபொழுதும் கைவிடக்கூடாது. அப்படி நாம் செய்வோமானால், அது உலகத்துக்கே ஒரு பெரிய நஷ்டமாகும். நம் முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சநாதன தர்மமானது எல்லோராலும் புகழப்படும்பொழுது, இப்புண்ணியபூமியில் அவதரித்திருக்கும் நாமே இதைத் திரஸ்கரிப்பது மூடத்தனமாகும். ஸநாதன தர்மம் நம்முடைய ஸ்திரீகளால்தான் இதுவரையில் பாதுகாக்கப்பட்டுவந்தது. ஆகையால், இதை யனுஸரித்தே அவர்களுக்கு நாம் கல்விகற்பித்துப் போமாகில், இதன் சிறப்பு இப்பொழுது இருப்பதைவிடப் பதின்மடங்கு அதிகமாய் விளங்கும்.

இப்பொழுது நம் தேசீய தர்மம் நிரம்பவும் அழுக்கடைந்த இரத்தினம்போல் இருக்கின்றது. புருஷர்களும் ஸ்திரீகளும் ஒன்றுகூடி உழைத்தால்தான் இதை மூடிக்கொண்டிருக்கும் அழுக்கைப் போக்க முடியும். இப்படி ஒத்துழைப்பதற்கு இருவரும் ஸமமான ஞானத்தையும் சக்தியையும் பெற்றிருக்கவேண்டும். இக்காலத்தில் இந்த ஸமத்வம் இல்லாததனால், ஸ்திரீகளுக்குத் தகுந்த கல்வியைக் கற்பிக்கவும், ஞானத்தைப் புகட்டவும் வேண்டிய ஏற்பாடுகளை நாமெல்லோரும் செய்யவேண்டும். இப்படி நாம் செய்யாவிட்டால் நம்முடைய தேசதர்மமும் குலதர்மமும் நாளுக்குநாள் க்ஷீணித்துக் கடைசியாய் இருந்தவிடம் தெரியாமற் போய்விடும்; நம் முன்னோர்களால் நிரம்பவும் சிரமத்துடன் சேகரிக்கப்பட்ட முக்கியமான விஷயங்களெல்லாம் ஒருவருக்கும் பிரயோஜனமில்லாமற் போய்விடும். ஆகையால், உலக முழுவதுக்கும் உண்டாகக்கூடிய இந்தப் பெரிய நஷ்டத்தை ஒவ்வொரு இந்தியனும் தடுக்கக் கடமைப்பட்டவனாயிருக்கின்றான்.

சென்ற அநேக வருஷங்களாய் நம் தேசத்தை, ராஜாங்கவிஷயங்களிலும், ஆசார விஷயங்களிலும் சீர்திருத்த நாம் பிரயத்தனம் செய்துவரு



கிறோம். ஆனால் நம்முடைய முயற்சிகளெல்லாம் வீணாகி வருகின்றன. இதற்கு முக்கியமான காரணம், நம் ஸ்திரீகளின் அஞ்ஞானந்தான். அவர்களுடைய ஒத்தாசையில்லாமல் நாம் முன்னேறுவது அசாத்தியமென்பதை நாமெல்லோரும் அறியவேண்டும். ஆகையால், இத்தனை வருஷங்களாய் நாம் வீணாய்க்கழித்த காலத்தை ஸ்திரீகளின் நிலைமையை மேன்மைப்படுத்துவதில் கழித்திருந்தால் நம்முடைய நோக்கங்கள் அநேகமாய்க்கூடியிருக்கும். ஆதலால், எல்லா விஷயங்களைக்காட்டிலும் பெண்கல்வி யென்னும் விஷயம் மிகவும் முக்கியமாயிருக்கிறபடியால், அதற்காக நாமெல்லோரும் நம்மால் கூடியவரையில் உழைத்தால், நம்முடைய தேசம் நாகரிகமடைந்த தேசங்களில் ஒன்றாகக் கருதப்படும்.

இவ்வுலகத்தில் அவதரித்த எல்லா மகான்களும் தங்களுடைய தாய்மார்களின் வல்லமையினால்தான் தாங்கள் உன்னதமான பதவியை அடைந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகையால், தகப்பன் தாய் ஆக இவ்விருவர்களுக்குள், தாய் தன் குழந்தையை நல்லவழியில் நடத்தி நல்லொழுக்கமுள்ள மனிதனாகச் செய்வதில் முக்கிய காரணமாயிருக்கிறாள். இன்றைக்குப் பிறந்திருக்கும் குழந்தைதான் நாளைக்கு விளங்கப்போகிற பிரமுகன் ஆவான். ஆதலால், அதி பால்யத்தில் அவன் எப்படி வளர்க்கப்படுகிறானோ அம்மாதிரியே அவன் ஆயுள் பரியந்தம் இருப்பான். பால்யப்பருவத்தில் அவனுடைய சரீரத்தையும் மனதையும் நிரம்பவும் ஜாக்கிரதையாயும் புத்திசாலித்தனமாயும் தாய்மார்கள் பாதுகாக்கவேண்டும். இதற்குக் கல்வி மிகவும் அவசியமென்று நாம் சொல்லவேண்டியதில்லை. இக்காலத்தில் தாய்மார்களுக்குக் குழந்தைகளை ஸரியாய்ப் பேணும் வழிகள் கொஞ்சமேனும் தெரியா. குழந்தைகளுக்குத் தகுந்த ஆகாரமும், உடுப்பும், மற்ற சௌகரியங்களும் சாதாரணமாய்த் தாய்மார்களால் கொடுக்கப்படுவதில்லை. அதனால் அக்குழந்தைகளின் சரீரம் நாளுக்குநாள் பலஹீனப்பட்டு அநேக விதமான வியாதிகளுக்கு இடமாகின்றன; சில குழந்தைகள் இறந்தும் போகின்றன. இந்தியாவில் சிசுமரணம் எல்லாத் தேசங்களையும் விட நிரம்ப அதிகமென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

குழந்தைகளின் சரீரநிலைமை இப்படியிருக்க, அவர்களுடைய மனநிலைமை இதைவிடக் கேவலமாகிவிடுகிறது. சரீர ஆரோக்கியத்திற்கு ஆகாரம் வேண்டியதுபோல், மனம், புத்தி இவைகளின் ஆரோக்கியத்திற்கும் புஷ்டியான ஆகாரம் கொடுக்கப்படவேண்டும். இதைத் தாயார் தவிர மற்றயாரும் கொடுக்கமுடியாது. இவர்களால் கொடுக்கப்படும் ஆகாரம் அபத்தியமாயிருந்தால், குழந்தைகளின் மனதுக்கும் புத்திக்குங்கூட வியாதி வந்துவிடுகிறதென்பது நிச்சயம். அதாவது: குழந்தைகளுக்குத் தைரியம், தேசாபிமானம், மனவுறுதி, காருண்யம் முதலிய குணங்கள் ஏற்படாமற் சேவகம் சுயநலம் பாராட்டுகிறவர்களாயும், பயங்காளிகளாயும் துன்மார்க்கர்களாயும் ஆகிவிடுகிறார்கள். இவர்கள் தங்கள் தேசத்துக்கு ஒருவித நன்மையையும் செய்யச் சக்தியற்றவர்களாகிவிடுகிறார்கள். அதனால் தேசம் நாளுக்குநாள் க்ஷீணித்துவருகிறது.

இவைகளைத் தடுக்க ஒரே உபாயம்தானிருக்கிறது. அதாவது: ஸ்திரீகளுக்குத் தகுந்த கல்வி கற்பிப்பதுதான். தேக ஆரோக்கியம், சுகவழி, குழந்தைகளைப் பேணுதல் முதலான விஷயங்கள் அவர்களுக்கு முக்கியமாய்க் கற்பிக்கப்படவேண்டும். இவைகளை நன்றாயறியாமல் ஒரு ஸ்திரீயாவது இருக்கக்கூடாது. தவிர, அவரவர்களுக்குப் பிரியமாயிருக்கும் சாஸ்திரமும், கலையும் போதிக்கப்படவேண்டும். இந்த நோக்கங்களைக்கொண்டே மிஸ்ஸஸ் டோரதி ஜினராஜதாஸா இந்தியா முழுவதிலும் இந்திய ஸ்திரீகளின் சங்கங்களை ஏற்படுத்தி; இந்திய ஸ்திரீகளை ஒன்றுகூட்டி அவர்களுக்கு, உபந்யாஸங்கள் மூலமாயும், போதனை மூலமாயும் கல்வி கற்பிக்கப்படவேண்டுமென்கிற எண்ணத்துடன் செய்கிற முயற்சிகளை நாமெல்லோரும் ஆதரிக்க

அவருடன் கூடி ஒத்துழைக்கவேண்டும். நாம் அப்படி செய்தால்தான் நம்முடைய ஸ்திரீகள் மேன்மையான பதவியையடைந்து நமக்குத் தகுந்த உதவிகளாயிருப்பார்கள். அப்பொழுது தான் நாம் இத்தனை வருஷங்களாய்த் தனியாய்ப் பிரயத்தனம்செய்தும் அடையாமலிருக்கிற சீர்திருத்தங்களெல்லாம் நாமும் ஸ்திரீகளும் ஒன்றுகூடிச் செய்யும் முயற்சிகளால் அடையப்பட்டு, நம் தேசம் உன்னதபதவியை அடையுமென்பதற்குக் கொஞ்சமும் ஐயமில்லை.

---

# Hammir Singh.

By Mr. K. P. Seshadri Aiyangar,
*Teacher, Muthiyalpet High School, Madras.*

## ஹம்மீர் சிங்.

பதின்மூன்றும் நூற்றாண்டினிறுதியில் ஆப்கானியர்கள் இந்தியாவில் செழித்திருந்தார்கள். அவர்கள் ரஜபுதனத்திலுள்ள அநேக ராஜ்யங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். அது சமயம் சித்தூரும் அவர்களது ஆளுகையின்கீழ் அடங்கியது. சித்தூர் ரஜபுதனத்திற்கே சிரோநாயகமாய் விளங்கியிருந்தது; வீரத்திலும், பிரதாபத்திலும் சிறந்த ஹிந்து மன்னர்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வந்தது. அந்தச் சமயம் டில்லியில் பாதுஷாவாகவிருந்த அல்லாவுத்தீன் கில்ஜி சித்தூரை முற்றுகை போட்டுக் கொள்ளையடித்து, கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் ஜனங்களை படுகொலைசெய்து கவர்ந்துகொண்டான். சூரியனது புத்திரர்களான ரஜபுத்திரர்களிடமிருந்து அவனிடம் சித்தூர் சென்றது அதுதான் முதல்தடவை. அது தருணம் சித்தூரையாண்டு வந்தவன் ரத்ன சிங் என்பவன். அவன் தன் புராதன ராஜ்யத்தை வேற்றரசனிடமிருந்து காக்க யுத்தம்புரிந்து வீர சுவர்க்கத்தையடைந்தான் இறக்கும் சமயத்தில் தன் மைந்தர்களைப் பார்த்து, “அருங்கண்மணிகளே! நான் சொல்வதைக் கவனித்து நடவுங்கள்: நமது ராஜ்யம் நம்மவர் கையில் மீளவும் வரும்வரை விடாது சண்டைபுரியுங்கள்; முகம்மதியர்களை ராஜ்யத்தினின்றும் துரத்துங்கள். யுத்தத்தில் நம்மவர் இறப்பினும் சரியே! ரஜபுத்திரர்களான உங்களுக்குக் கடமை எதுவெனில், ராஜ்யத்தை மீண்டும் ஜயிக்கவேண்டும், நன்றாகப் பரிபாலிக்கவேண்டும். அப்பொழுதுதான் எனது உயிர் சாந்தத்தைப் பெறும். அதுவரை பெறாது. உங்களது தந்தை தான் இறக்குந்தருணத்திற் சொல்லியதை நீவிர் வேதவாக்காகக்கொண்டு எனது ஆவியைச் சாந்தியடையச் செய்யுங்கள்” என்றுரைத்துக் கண்மூடினான்.

அவனுக்குப் பிறகு அவனது புத்திரனை லக்ஷ்மண சிங் சிங்காதனமேறினான். அவன் தன் சகோதரனது மைந்தனை ஹரி சிங்குடன் சேர்ந்து அல்லாவுத்தீன் கில்ஜியை எதிர்த்துச் சண்டையில் இருவரும் உயிர்துறந்தனர். லக்ஷ்மண சிங்கின் இளைய புத்திரனை அஜை சிங்கும் தன் பிதாமகனது ஆக்ஞையை அநுசரித்து விரோதிகளுடன் யுத்தம் புரிந்தான்; அந்த யுத்தத்தில் தான் காயமுண்டான். வீரர்கள் அவன் காயமடைந்து விழுந்ததுகண்டு ஓடோடியும் வந்து அவனை கேயில்வாரா மலைக்குத் தூக்கிக்கொண்டு போயினர். அங்கே ஜெப்தி என்னும் வைத்ய சிகாமணி ஒருவன் இருந்தான். அவன் அஜைசிங்கின் ரணகாயத்தை மாற்றி ஆற்றினான். அந்தச் சமயம்முதல் ஜெய்தியின் ஸந்ததியார்கள் சித்தூர் மஹாராணாக்களால் மிகவும் மரியாதையாக உபசரிக்கப்பட்டு வந்தார்கள். மீவாருக்கு அஜை சிங் ராணாவானான்: ஆனால் பெயருக்குமாத்திரந்தான். மீவார் என்பது விஸ்தாரமான ராஜ்யம். ஆனால், அஜை சிங்கின் ராஜ்யம் கெயில்வாரா மலைப்போரத்தில் இருக்கும் பிரதேசந்தான். மற்றைப் பாகமெல்லாம் சுல்தானுடைய அதீனத்திலிருந்தது. தன் சேனைகளை அனுப்பி சுல்தானது பிரதேசங்களைக்



கொள்ளையடிக்கச்செய்தான். இவ்விதம் அஜை சிங் ஆப்கானியர்கள்மீது ஆவேஷம்பாராட்டி வந்தான்.

அல்லாவுத்தீன் கில்ஜி சித்தூரைப் பிடிக்கும் போதே, அதைதன் மூத்த குமாரனை கிஜிர்கான் (Kizir Khan) என்பவனுக்குக் கொடுத்துவிட்டான். அவனை பிறகு டில்லிக்கும் சுல்தானாக்கினான். அல்லாவுத்தீன் கொஞ்சகாலங் கழித்து சித்தூரைத் தன்னால் ஆளமுடியாதெனத் தெளிந்தான். பிறகு அதற்கு ஒரு ரஜபுத்திரனைத்தான் அமர்த்தியாளவேண்டுமென்று எண்ணித் தன் மூத்த குமாரனை கிஜிர்கானை டில்லிக்கு வந்துவிடும்படி ஏற்பாடு செய்தான். சோனிக்குரூ மால்தேவராய் என்னும் ரஜபுத்திரனை நியமித்து அவ்விராஜ்யத்தை ஆளும்படித் திட்டம் செய்தான்.

### முஞ்சனது அக்கிரமச் செய்கை.

அஜைசிங்கிற்கு இரண்டு புத்திரர்கள் உண்டு. மூத்தவன் ஸஜ்ஜன்சிங். இளையவன் கிஷன்சிங் அஜைசிங்கின் மனதில் எப்போதும் ஒன்றிருந்து அவனை வாட்டிக்கொண்டேவந்தது. அது தன் ராஜ்யத்தைப்பற்றியதே. இழந்த ராஜ்யத்தை எப்படி மீண்டும் அடைவது என்னும் எண்ணமே அவன்மனதில்ஆழ்ந்திருந்தது. அவ்விதம்ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்குங்காலையில், காத்வார் முஞ்சபாளீச என்னும் ராஜபுத்திரன் அஜைசிங்கின் பிரதேசத்திற் புகுந்து கொள்ளையடிக்கலானான். அந்தச்சமயம் ராணா மிகவும் நோயினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் தன் இருகுமாரர்களை அழைப்பித்து முஞ்சனை, தண்டிக்கச் சொன்னான். ஆனால், அவர்கள் அவனைத் தண்டிக்கத்தக்க ஆற்றலையுடையரல்லராயினர். முஞ்சன் தன் காரியமான கொள்ளையடித்தலை யாதொரு தடையுமின்றிச் சரிவரச் செய்யலானான். ராணாவின் வியாதிக்கு நெருப்பில் நெய்வார்த்ததுபோல இன்னும் அதிகமான சக்தியைக் கொடுத்தது.

### ஹம்மீர்சிங்கின் திறமை.

படுக்கையாகப் படுத்துவிட்டான் ராணா. தன் குமாரர்கள் க்ஷத்ரிய வம்சத்திற் பிறந்து பிரயோஜனமில்லாதிருப்பதைக் கண்டு பின்னும் வருத்தப்படலானான். மனத்துயரம் வியாதியை விருத்தியாக்கிக்கொண்டேவந்தது. அவன் நாளுக்குநாள் பலஹீனமடைந்தான். இவ்விதமிருக்குங்கால் ஒரு வீரன் மஹாராணாவை நெருங்கி, “ராணாஜி! உமது தமையனாரான ஹரிசிங்கின் புத்திரன் ஒருவனிருக்கிறான். அவன் தன் தந்தையைப்போல் பேரும் புகழும் எடுக்கக்கூடிய ஸ்திதியிலிருக்கிறான். சிங்கம் தன் கன்றுக்கு யானையை மத்தகத்தில் பிளக்கக் கற்றுத்தரவேண்டுமோ? அவன் தான் இந்த ஸமயத்தில் தங்களது வியாதிக்குச் சஞ்சீவி. அவனைக் கொண்டுவந்தீர்களானால் உமது வியாதி விளக்கைக்கண்ட இருள்போல் மறைந்துவிடும். அவன் இப்பொழுது அன்லா என்ற கிராமத்தில் இருக்கிறான். அவனது பெயர் ஹம்மீர்சிங். குலவிளக்காக விளங்குவான் என்பதிற் கொஞ்சமும் ஸந்தேகமில்லை. இழந்த ராஜ்யத்தை மீளவும் அடையக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவன் அவனே” என்று மிகவும் புகழ்ந்துரைத்தான். இதைக் கேட்கும்போதே அஜைசிங்கின் வியாதி ஒருவிதமாய்க் குணமடையும்போலிருந்தது. மிகவும் சந்தோஷசித்தனாய் உடனே ஆட்களைப் போக்கித் தன் தமையன் தனயனைப் பல்லக்கிலேற்றிக்கொண்டுவர அவன் ஆஜ்ஞாபித்தான்.

### முஞ்சனது மரணம்.

ராணாவின் எதிரில் பதின்மூன்று வயதுள்ள பாலகன் ஒருவன்வந்து நின்றான். ராணா அவன் நிற்கும் பான்மையையும், தேகக்கட்டின் வனப்பையும், மார்பு அகன்றிருத்தலையும், கண்கள் பிரகாசிப்பதையும் கண்டு மிகவும் சந்தோஷங்கொண்டான். மீவாரைச் சூழ்ந்துள்ள விரோதிகளை ஹதம் செய்யத்தக்கவன் இவனே யென உணர்ந்தான். இவனது தீரத்திற்கும் வீரத்திற்கும் இப்பொழுது ஒரு சமயம் வாய்திருக்கிறது. முஞ்சனைத் தண்டித்து வரும்படி ராணா ஹம்மீருக்கு ஆஜ்ஞாபித்தான். ஹம்மீர் மிகவும் களிகூர்ந்து சில படைவீரர்களுடன் முஞ்சனை எதிர்க்கச் சென்றான். காத்வாரிலுள்ள சேமாரிச் என்

கிராமத்தில் முஞ்சன் தன் சுற்றத்தாரோடு பேசிக்கொண்டிருக்கிறானென்பதை அறிந்து, கம்வீரன் நேராக அந்தவிடத்திற்குச் சென்றான். சில நாட்களுக்குள் கேயிர்வாராக் கணவாய் மூலமாய் ஹம்மீர் குதிரைமீது ஆரோகணித்துப் பின்னே படைவீரர்கள் வரக் காணப்பட்டான். அவனது சேணத்தில் முஞ்சனது தலை கட்டித்தொங்கவிடப்பட்டிருந்தது! எவ்விதம் அவன் முஞ்சனது தலையைக் கொய்தானோ நமக்கே விளங்கவில்லை.

## ஹம்மீர் மஹாராணாவாதல்.

மிகவும் வணக்கமாக வெற்றிபெற்ற முஞ்சன் தலையைத் தன் சிறிய தகப்பன் காலிணையின் கீழ் வைத்து, "எந்தையே! இது உமது விரோதியின் தலைதானா என்பதைச் சற்றுப்பார்த்துச் சொல்லவும்" என்று விநயமாகக் கேட்டான். அஜைசிங்கின் சந்தோஷத்திற்கு எல்லையுமுண்டோ? சந்தோஷவெள்ளம் இருகரையும் பெருகியோடியது அவனது இருதயத்தில். சிம்மாசனத்தினின்றும் இழிந்துத் தன் இருகைகளையும் விரித்து, அப்படியே ஹம்மீரை வாரியெடுத்துப் பன்முறை முத்தமிட்டனன். அப்பொழுதும் அவனது ஆசை அடங்கினபாடில்லையாம். லக்ஷ்மணசிங் இறந்துபோவதற்குமுன் ஹரிசிங்கின் புத்திரன்தான் அஜைசிங்கின்பின் பட்டம்பெறவேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதற்கிணங்க அஜைசிங் ஹம்மீர்தான் ராஜ்யத்தை மீட்கும் சக்திவாய்ந்தவன் தீரன், பராக்கிரமவான் எனத்தெளிந்து, தனது வீரகட்கத்தைப் பரிசாகக்கொடுத்துச் சிம்மாசனத்தில் உட்காரவைத்து, முஞ்சனது தலையினின்றும் சொட்டிக்கொண்டிருந்த இரத்தத்தைத் தொட்டு, அவனது நெற்றியினடுவில் திலகமிட்டான். 'சித்தூரைத் துலுக்கர்களிடமிருந்து தர்மமாக அபகரிக்கும் ஆற்றலையுடையவன் இவன்தான். இவனேதான் சித்தூர் என்னும் புராதன ராஜ்யத்திற்குத் திலகமாய் விளங்கக்கூடியவன்' என்று சொல்லிக்கொண்டே நெற்றியிற் பொட்டிட்டான்.

## அஜைசிங்கின் புத்திரர்கள்.

அஜைசிங்கின் இருபுத்திரர்கள் தம் தந்தையின்செயலைக் கண்டு மிகவும் கோபமுண்டவர்களாகி, அவ்விராஜ்ஜியத்தைவிட்டு வெளிக்கிளம்பிவிட்டார்கள். அவர்கள் மெயில்வாராவைவிட்டுத் தக்ஷிணத்திற்குச் சென்றார்கள். அவர்களது சந்ததியார்கள் ஸடாரா, கோலாப்பூர், தஞ்சாவூர், நாகப்பூர் முதலிய ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள்.

மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த தைரிய சிங்கம் எனப் பேர்பெற்ற சிவாஜி என்னும் பராக்கிரமசாலி இந்த ஸஜ்ஜன் சிங்கின் பரம்பரையைச் சேர்ந்தவன்.*

## ஹம்மீர் சிங்கு பிறப்பு.

மேவாரில் ஹம்மீர் செய்த ஆச்சர்ய தீரச்செய்கைகளைப்பற்றி விவரித்தோம். இனி அவனது பிறப்பு வளர்ப்பைப்பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம். அவன் தன் தந்தையான ஹரிசிங்கிடமிருந்து தைரியத்தையும், பராக்ரமத்தையும் பெற்றான்; தாயிடமிருந்து சாமர்த்தியத்தையும் ஸ்வேச்சாப் பிரியத்தையுங்கொண்டு அவதரித்தான்.

ஹரிசிங் ஒருசமயத்தில் தன்மித்திரர்களுடன் வேட்டைக்குச் சென்றான். அந்த வேட்டையில் ஒரு காட்டுப்பன்றியைத் துரத்திக்கொண்டே போனான். அது நெடுமொன்று பக்கத்திலுள்ள சோளக்கொல்லையில் பதுங்கிக்கொண்டது. அதுகண்டு ஹரிசிங் அதைவிட மனமில்லாமல்தானும் அந்தப்புலத்தில் குதிக்க விருந்தான். அப்பொழுது ஓரிளங்கன்னிகை எதிரில் வந்து, 'ராஜனே! என்புலத்தின் பயிரைப் பாழ்செய்யவேண்டாம். கொஞ்ச நாழிகைப் பொறுத்தால் நான் அப்பன்றியை வெளியிலோட்டி விடுகின்றேன்' என்று மெல்லிய குரலில் இனிமையாகச் சொன்னாள். அவன் அதற்குச் சரியென்றுடன்பட்டான். அவ்விளம்பெண் தன் வயோதிகத் தகப்பனாருக்குப் பதிலாக அப்புலத்திற்குக் காவலிருந்தாள். அருகிலிருந்த 10 அல்லது 12 அடி உயர

* அஜைசிங், ஸஜ்ஜன்சிங், டிலிப்சிங், ஸியோஜி, பூராஜீ, தேவராஜ், உகார்சேன், மாஹாஜீ, கெப்லூஜீ, ஜான்யோஜி, சட்டூஜி, சாய்பாஜி, சிவாஜி என்பது வம்ச பரம்பரை.



முள்ள சோளத்தட்டொன்றைப்பிடுங்கி அதைக் கூராக்கி, குருவியோட்டுவதற்காக ஏற்படுத்தியிருக்கும் பந்தலின் மேலேறி அப்பன்றியைக் குத்திவெளிப்படுத்தினாள்; தானும் அந்தசமயமே வெளிச்சென்றாள். அந்தப்பிரதேசத்தில் சாதாரணமாக ஸ்திரீகள் சாமார்த்தியமும் தீரமும் பொருந்தியிருந்தார்களேனும், இத்தருணியின் சாகசம் அவர்களெவர்க்கும் அதியற்புதத்தை விளைவித்தது. அருகேயிருந்த ஓர் ஓடையில் அவர்கள் வேட்டையாடின மிருகத்தைப் பதப்படுத்தி உண்ண ஆரம்பித்தார்கள். எல்லாரும் போஜனமுண்ணும்போது ஒவ்வொருவன் ஒவ்வொரு மாதிரி அப்பெண்மங்கையின் கைத்திறத்தைப்பற்றியும், மென்மையைப்பற்றியும் சீர்மொழிகளைப்பற்றியும் புகழ்ந்து கொண்டாடினான். திடீரென்று ஒரு களிமண் உருண்டை வெகுவேகமாகப் பாய்ந்துவந்து ஹரிசிங்கின் குதிரையின் காலில் தாக்கியது. அது எந்தப்பக்கத்திலிருந்து வந்ததென்று உற்றுப்பார்க்கையில், அதே கன்னிகையிடமிருந்துதான் என்று தெரியவந்தது. அந்தச் சுந்தரவனிதை பந்தலின்மீதிலிருந்தபடியே பார்த்திருந்தாளாகையால், தான் செய்தது தப்பென்றெண்ணி, அங்கிருந்து கீழிறங்கிக் குதிரையிருக்குமிடத்தையணுகி; ஹரிசிங்கைத் தன்னை க்ஷமிக்கும்படி வேண்டினாள்; அவனும் மன்னித்தான். அவனும் திரும்பித்தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். ஆகாயத்திற் பறக்கும் குருவிகள் சோளத்தைத் தின்னாமல் காவல் காப்பதுதான் அவள் வேலை. அவர்கள் அரண்மனைக்குச்செல்ல மீளுங்கால், திரும்பவும் அந்தநாயர்க்காரியைக் கண்டார்கள். அப்பொழுது அவள் தனது தலையில் பாற்குடத்தை வைத்துக்கொண்டிருந்தாள். தன் இருபக்கத்திலும் இரண்டு வெண்ணிறப் பசுக்களை ஓட்டிக்கொண்டு சென்றுகொண்டிருந்தாள். அப்பொழுது ஹரிசிங் விநோதார்த்தமாய் அவளைத் தாக்கிப் பாற்குடத்தைக் கீழே தள்ளவேண்டுமென்றெண்ணினான். அவனது ஸ்நேகிதன் இது செய்ய முன்வந்தான். அவன் வேகமாகத் தன்னை அணுகுவதைக் கண்டுகொண்ட சமர்த்தை, அவனைக் குதிரையின்மீதிருந்து கீழே தள்ளிவிட்டாள். அவன் அவமானங்கொண்டான். நின்றிருந்தவர்களெல்லாரும் அவனைப் பரிகசிக்கத் தொடங்கினர். அங்கு நில்லாது அக்காரிகை விரைந்து செல்லலானாள்.

அப்பாவையைக் கண்டதுமுதல், ஹரிசிங்கிற்கு மனம் நிம்மதியாயில்லை. அவளது மதுரமான வார்த்தையும், காம்பீர்யப் பார்வையும் சாகசமும், சாமர்த்தியமும் அவனை அவள் பக்கம் இழுத்துச்சென்றன. சுற்றுப்பக்கத்தில் அவளைப்பற்றி விசாரிக்க, அவள் ஓர் எளிய சந்தனோ வகுப்பைச் சேர்ந்த ராஜபுத்திரியென்று தெரிந்தது. அவன் இரவுமுழுவதும் தூக்கமின்றி ஏக்கத்தோடு காலங்கழித்தான்; மறுநாள் உதயத்திற்கு முன்னமேயே எழுந்திருந்து அரண்மனையில் ஒருவனை விடியற்காலைக்குள்ளாக அந்தப்பிரதேசத்துக்கு வந்து, அவளது தகப்பனைக் கூட்டிவர ஆளனுப்பினான். அவளது தந்தை கொஞ்சமேனும் பயமின்றித் தாராளமாக வந்து ஹரிசிங்கின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். ஹரிசிங்கின் சிநேகிதர்களெல்லாம் ஆச்சரியங்கொண்டார்கள். அவர்களது ஆச்சரியம், ஹரிசிங் அவனது புத்திரியைத் தனக்கு விவாகம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்கும்போது அக்கிழவன் மறுதளித்ததனால் பின்னும் அதிகரித்தது. அந்த வயோதிகன் தன் மனைவியிடம் இந்தச் சமாசாரத்தைச் சொல்ல, அவள் தன் பெண்ணை ராஜபுத்திரனுக்குக் கொடுக்கப் பூர்ணமனங் கொண்டிருப்பதாகச் சொன்னாள். அவ்வயோதிகன் விரைந்து ஹரிசிங்கிடம் சென்று, பெண்ணைக்கொடுக்கத் தனக்கு ஸம்மதந்தான் என்று சொன்னான். பிறகு இருவருக்கும் விவாகம் நடந்தேறியது. இந்த ஹரிசிங்குக்கும் சந்தனோ ராஜ புத்திரிக்குந்தான் ஹம்மீர்சிங் பிறந்தான். இவ்விரு சிங்கங்களுக்குப் பிறந்தது கோளரியாகவிராதுமற்றெதாகும்?

மஹாராணா லக்ஷ்மணசிங்கும் ஹரிசிங்கும் சமர்பூமியில் இறந்து வீரசுவர்க்கமடைந்தபிறகு, சந்தனோ ராணி தன் காலத்தை எங்கேனும்

கிராமத்தில் கழிக்கவெண்ணினாள். அவ்விதமிருந்தால் தன் குழந்தை பிழைக்கலாம் என்றும் நினைத்தாள். இல்லாவிட்டால் பகைவர்கள் இவன் ராஜபுத்திரன் என்று கொன்றுவிடுவார்கள் என்ற பயம் அவளிடம் குடிகொண்டிருந்தது. அவனுக்கு 13-ம் வயதும் வந்தது. சிறிய தகப்பனிடமிருந்து ஆட்களும் அவனை அழைக்கவந்தார்கள். பிறகு அவனது அற்புதச் செய்கைகள் அநேகம். அவைகளை நம்வாசகர்கள் முன்னமேயே அறிந்திருக்கிறார்கள்.

என்றைத்தினம் முடி சூட்டப்பெற்றானோ, அன்றைத்தினம் அவன் தனது காரியம் இவ்வளவு என்று உணர்ந்தான். தன் வீரத்தைக்காட்டவேண்டும்; இழந்த ராஜ்யத்தைக் கைப்பற்றவேண்டும் என்று பிரதிக்ஞை செய்துகொண்டான். பளீசாவின் ராஜதானியான பாச்சாலியோவைப் பிடித்தான்.

அஜை சிங் ஸ்ரீவாரின் அதிர்ஷ்டம் ஹம்மீர் சிங்கினிடந்தானிருக்கிறது என்று நிச்சயித்துக்கொண்டான். தனக்கு இனி அதைப்பற்றிக் கவலைவேண்டுவதின்று; இனிச்சந்தோஷமெய்தவேண்டும் என்று எண்ணினான். அஜை சிங் அவ்விதம் எண்ணி சில நாட்களுக்குள் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலகமடைந்தான். ஹம்மீர் சிங் அன்றைத்தினம் உறையினின்று வெளியிலெடுத்த கத்தியை வேற்றரசர்களைக் கொல்வதிலேயே உபயோகித்தான்.

(இன்னும் வரும்.)

கி. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

---

# Agriculture and Co-Operation.

BY MR. P. CHINNASWAMI IYER.

## வியவசாயமும், கூட்டுறவும்.

சென்ற சஞ்சிகையில் எழுதியிருந்தபடி ஒரு கிராமத்தில் ஒரு ஐக்கியநாணயச்சங்கம் ஏற்பாடு செய்யவேண்டுமானால், அந்த இலாகா ஐக்கியச் சங்கங்களின் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்களுக்கு மனுப்போட்டு, அவர் அனுப்பும் சிப்பந்திகளின்மூலமாய் வேலையைநடத்திக்கொள்ளவேண்டும். ஒருகிராமத்திற் சங்கம் ஸ்தாபிப்பதற்கு ஆரம்பிப்பதற்குமுன் சிலவிஷயங்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. சங்கமேற்பட்டு அதிற் சேர்ந்த மெம்பர்களின் உபயோகத்திற்காக வேண்டிய தொகையை வெளியிலிருந்து ஷை மெம்பர்களின் ஜவாப்புதாரியின்பேரில் கடன்வாங்கிக்கொள்ளவேண்டுமென்று சொல்லியிருந்தேன். ஆகையால், சேருகிற மெம்பர்கள் நாணயமுடையவர்களும் சொத்துப்பொறுப்பு உள்ளவர்களுமாக இருக்கவேண்டியது அவசியமாகிறது. சங்கத்திற் சேருகிறவனுடைய நோக்கம், தான் பட்டிருக்கும் கடன்களிலிருந்து நிவிருத்தியாகித் தனக்கு வேண்டிய சவுகரியங்களைச் சங்கத்தின்மூலமாய்ச் செய்துகொண்டு விருத்தியடையவேண்டுமென்றிருந்தால்தான், தனக்கும் மற்ற மெம்பர்களுக்கும் பிரயோஜனமுண்டு. அப்படியின்றி, சுவல்ப ஆஸ்தியும் அதிலிருந்து சுவல்பவரும்படியுமுள்ள ஒருவன், அதிகக்கடன் பட்டிருந்தால் அவனைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டு கடனிலிருந்து அவனை விடுவிக்கமுயல்வது அசாத்தியமாகும். ஒருவன் கழுத்துவரையில் சேற்றில் அமிழ்ந்திருந்தால் அவனைத் தூக்கிவிடுவது அசாத்தியம். அன்றியும், தூக்கிவிடப்போகிறவனுக்கும் அபாயமாவதுபோல, தலைக்குமேல் கடனை வைத்துக்கொண்டிருப்பவனைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டால், அவனால் ஏற்படும் நஷ்டத்திற்கு மற்றவர்களும் பாத்தியப்படுவார்கள். ஆதலால், மெம்பர்களைச் சேர்ப்பதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். நல்ல நடவடிக்கையில்லாத ஒருவனைச் சங்கத்திற் சேர்த்துக்கொண்டு அவனால் நஷ்டமடைந்து அவனைப் பிறகு சங்கத்திலிருந்து



நீக்குவது, கண்கெட்டபிறகு சூர்யநமஸ்காரம் செய்வதுபோலாகும்.

குடியானவனுக்கு ஏற்பட்ட கடன் சுவல்ப காலமாய் இருக்கும் கடனன்று; அநேகவருஷ காலமாய்; சிலகேசுகளில் தலைமுறை தலைமுறையாய் வளர்ந்துகொண்டுவந்த கடனாகையால், அவன் ஒரு சங்கத்திற் சேர்ந்து அதிலிருந்து பணத்தை வாங்கிக் கொடுத்துவிட்டால் கடன் தீர்ந்துபோகவில்லை. குப்பு செட்டியிடமிருந்த கடன் சங்கத்தின்பேரில் மாறியதேயொழிய வேறன்று. குடியானவன் நல்ல ஸ்திதிக்கு வரவேண்டுமானால், தான் பட்டிருக்கும் கடனிலிருந்து நீங்கிச் சௌக்கியமடையவேண்டுமானால், அவன் தனக்கிருக்கும் சுவல்ப ஆஸ்தியையும் சாவுகாரிக்கு விற்றுவிட்டுப் பரதேசியாய்ப் போகாமலிருக்கவேண்டுமானால், இரண்டே வழிகள்தான் உண்டு. அவனுக்குத் திடீரென்று ஒரு புதையல் அகப்படப்போகிறதுமில்லை; அதனால் கடன் தீர்ந்து அவன் பணக்காரனாய்விடப்போகிறதுமில்லை. முதலாவது, தன் செலவைக் குறைக்கவேண்டும். இரண்டாவது, தன் வரும்படியை அதிகப்படுத்தவேண்டும். தலைமுறை தலைமுறையாய்க் கலியாணம் முதலிய காரியங்களுக்குச் செய்துகொண்டுவந்த முறைகளை விட்டுவிட்டு, ஒருரூபாயில் ஒருமோதிரம் வாங்கி மாற்றிக்கொண்டு செலவைக் குறைக்க அவனால் முடியாது; வீட்டி வீட்டிலிருக்கும் பாட்டி கட்டையை எடுத்துக்கொள்வாள். இப்படிப்பட்ட செலவைக் குறைக்கக்கூடிய சீர்திருத்தங்கள் காலக்கிரமத்தில் ஆகவேண்டுமேயொழிய ஒருநாளில் அல்லது 10 வருஷங்களில் முடிகிற காரியமன்று. ஆகையால், அவனுக்கிருக்கும் மற்றொரு வழியாவது, வரும்படியை அதிகப்படுத்துவதேயாம். குடியானவனுடைய வரும்படி நிலத்திலிருந்தேதான் என்பது தெரிந்தவிஷயம். நிலத்திற்குப் போடவேண்டிய எரு தழை முதலியவைகளைப் போட்டுச் சாகுபடி செய்தால்தான், தகுந்த பலன்கிடைக்குமென்பதும் தெரிந்த விஷயம். நிலத்திற்கு வேண்டிய தீனி போடாமல் 40 கலம் விளையவேண்டுமென்றால் எப்படி கிடைக்கும்? ஆகையால், முதன்முதல் ஒருவன் சங்கத்திற் சேர்ந்தவுடன், தன் முன் கடனைத் தீர்க்கவேண்டுமென்கிற ஆவலைவிட்டு, விவசாயச் செலவுகளுக்காகக் கடன் வாங்கி விவசாயத்தை விருத்திசெய்தால், அதிலிருந்து கிடைக்கும் அதிகலாபத்தைக்கொண்டு கொஞ்சங் கொஞ்சமாய் முன்கடனையும் தீர்த்துவிடலாம். மிகவும் அவசரமான கடனைமாத்திரம் சங்கத்திலிருந்து வாங்கிக் கொடுக்கலாமேயொழிய, அவன் வாங்கக்கூடிய அளவுக்குச் சரியாய் முன்கடனுக்காக வாங்கிக் கொடுத்துவிட்டால், சமயத்தில் விவசாயத்திற்கு வேண்டிய பணம் சங்கத்திற் கிடைப்பது கஷ்டமாகிறது.

ஒரு சங்கம் திருப்திகரமாக வேலைசெய்து வருகிறதென்பதைக் கேட்கும்போது, அந்தச் சங்கத்தின் பஞ்சாயத்தார்களின் கெட்டிக்காரத்தனம் வெளியாகிறது. பஞ்சாயத்தார்கள், ஏழைகளுக்கு வேண்டும்போது அவர்களுடைய நிலைமையை அனுசரித்துக் கடன்கொடுத்தும், கடன்களை வாய்தா தேதிகளில் தவறாமல் வசூல் செய்தும், வாங்கிய கடன்தொகை சரியான வழியில் உபயோகப்படுத்தப்பட்டதாவென்று கவனித்து மெம்பர்களை விருத்திக்குக் கொண்டுவந்தும், சங்கத்தை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும். ஷை காரியங்களைச் சரியாகச் செய்யவேண்டுமானால், பரோபகார சிந்தையுடையவர்களும், கௌரவமுடையவர்களும், பிரதிப் பிரயோசனத்தை எதிர்பாராமலும் தாக்ஷிண்ணியமில்லாமலும் சங்கத்தின் விதிகளை அனுசரித்து நடவடிக்கைகளை நடத்தக்கூடியவர்களும்தான் பஞ்சாயத்தார்களாக நியமிக்கப்படவேண்டும்.

பிரதிப்பிரயோசனமில்லாத காரணத்தினாலேயே வேலையைச் சரியாகச் செய்யாத பஞ்சாயத்தார்கள் ஷை வேலைக்கு லாயக்கானவர்களல்லர். பஞ்சாயத்தார்கள் தாங்கள் வாங்கும் கடன்களைச் சரியாகத் தவணைத்தேதிகளில் கட்டிக்கொண்டுவருவதே இதரமெம்பர்களும் அதேமாதிரி செய்ய நல்ல வழியாகும். சங்கத்தின் விதிகளுக்கு விரோதமாய்ப் பஞ்சாயத்தார்களை

தவணைத்தேதிகளில் கட்டத்தவறினால், அவர்கள் எப்படி இதரமெம்பர்களின் பாக்கியைக் கேட்க முன்வருவார்கள்? இதனால் சங்கத்தின் பொதுவுபயோகத்திற்காகக் கடன் கொடுத்த ஸென்ட்ரல்பாங்காருக்குச் சரியான தேதிகளில் அசல்வட்டிகளைக் கொடுக்கத் தவறுதல் நேரிடுகிறது. அப்படி இரண்டுமுறை தவறினால், சங்கத்தினுடைய நாணயம் கெட்டுப்போகிறது. சங்கத்தின் நாணயத்தைக் காப்பாற்றவேண்டுமானால், மெம்பர்களில் ஒவ்வொருவரும் தங்கள் நாணயத்தைத் தவறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

பஞ்சாயத்தார்கள் செய்யவேண்டிய வேலைகளில் மிகவும் முக்கியமானது என்னவென்றால்; சங்கத்தைச் சேர்ந்த மெம்பர்களுக்குக் கடன் சாங்க்ஷன்செய்கிற வேலைதான். இந்த வேலையை அவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு ஜாக்கிரதையாகச் செய்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு சங்கம் க்ஷேமமடையும்.

கடன்சாங்க்ஷன் செய்வதில் பஞ்சாயத்தார்கள் கவனிக்கவேண்டிய அம்சங்களில் சிலவற்றைக் கீழே சொல்லுகிறேன்:—

கடன் உபயோககரமான காரியத்திற்காக வாங்கப்படுகிறதா என்பதைக்கவனிக்க வேண்டும். வாங்குகிற கடன் அவசியம்தானா, இந்தப் பணம் இல்லாமல் வேலை முடியாதா என்பதையும் கவனிக்கவேண்டும். ஒரு மெம்பர் தக்க ஜாமீனோடு கடனுக்கு மனுப்போட்டுவிட்டால் போதுமானது என்று பஞ்சாயத்தார்கள் நினைக்கக்கூடாது. ஒரு காரியத்திற்காகக் கடன் மனுப்போட்டபிறகு, அந்தக்காரியத்திற்கே கடன் தொகையை உபயோகப்படுத்துகிறானா என்பதைக் கவனித்து, துர்விநியோகப்படுத்தினால் உடனே வசூல் செய்துவிடவேண்டும். எப்பொழுது எல்லாவித உபயோகமான காரியங்களுக்கும் கடன் கொடுக்கலாமென்று விதிகள் இருக்கின்றனவோ; பொய்சொல்லி ஒரு காரியத்திற்காக வாங்கி மற்றொரு காரியத்திற்குத் தொகையை உபயோகிப்பது ஐக்கிய நாணயச் சங்கக்கோட்பாடுகளிலொன்றாகிய நாணயத்திற்கு விரோதமாகும். கடன் பட்வாடா செய்யும்போது, பஞ்சாயத்தார்கள் கடன் வாங்கும் மெம்பர்களைப் பார்த்து, வாங்கும் கடன் தொகையைச் சரியான வழியில் செலவழிக்க வேண்டுமென்றும், சிக்கனமாய்க் குடித்தனம் செய்து வருஷவாரியில் கொஞ்சங் கொஞ்சமாய் வரும்படியிலிருந்து கடனைத் திருப்பிச் செலுத்தத் தங்களாலானவரையில் பிரயத்தனஞ் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்தவேண்டும். ஜாமீன் பேரில் வெள்ளிலையாய்க் கடன் கொடுக்கிறதாயிருந்தால் ஜாமீனாக நிற்கும் நபர் யோக்கியர்தானா கடன் வாங்குபவரை நன்றாய்க் கவனித்து வாய்தா தேதிகளில் திருப்பிச் செலுத்தும்படி அவருக்கு அடிக்கடி போதிக்கத் தகுந்தவரா, சந்தர்ப்பம் நேரிட்டால் சங்கத்திற்கு நஷ்டம் வராதபடி ஜாமீன்தாரிடத்திலிருந்து வசூல் செய்ய முடியுமா என்னும் விஷயங்களை நன்றாய்க் கவனிக்கவேண்டும். சாதாரணமாக, ஜாமீன் கடன்கள் சொற்பகாலத் தவணைகளுக்கு மாத்திரம் கொடுக்கப்படவேண்டும். வருஷக்கணக்கில் வாய்தா கொடுக்கும்போது அடமானக்கடனாகவே கொடுப்பது உசிதம். நபர் ஜாமீன் பேரில் கொடுக்குங் கடன்களுக்கு ஜாமீனாக நிற்க ஒப்புக்கொள்பவர், கடன் வாங்குபவரின் பேரில் ஏற்படுத்திய போலீஸ் உத்தியோகஸ்தன் மாதிரியாகிறார். கடன் வாங்கும் மெம்பர் பணத்தை வீண்செலவு செய்கிறாரென்று தெரிந்தவுடனே, ஜாமீன்தார் தன்னுடைய க்ஷேமத்தை உத்தேசித்து ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். வாங்கப்பட்ட கடன் தொகைக்கு ஜாமீன்தாரரும் பொறுப்பாய் ஏற்படுகிறபடியால், உடனே அவர் சங்கத்துப் பஞ்சாயத்தார்களிடம் கடன்வாங்கின அந்த மெம்பரின் நடவடிக்கைகளைப்பற்றித் தெரிவித்து, துர்விநியோகப்பட்டது என்று ஏற்பட்டவுடனே, பஞ்சாயத்தார்கள், கடனாளிக்கு நோட்டீசுகொடுத்து வசூல்செய்துவிட ஏற்பாடுகள் செய்யவேண்டும். சொத்து அடமானமாக வாங்கிக்கொண்டு கடன் கொடுக்கும்போதும்



பஞ்சாயத்தார்கள் அதிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். சொத்தில் கடன்வாங்குபவருக்கு இருக்கப்பட்ட பாத்தியதை, இதரர்களுக்கு இருக்கப்பட்ட பாகம், முன் அடமானம், உயில் முதலிய வில்லங்கங்கள் இவைகளையெல்லாம் கவனிக்கவேண்டும். அடமானக்கடன் கொடுப்பதில் இன்னொரு அசந்தர்ப்பம் நேரிடுகிறது; என்னவென்றால், கடன்வாங்கும் மெம்பர், தான் சங்கத்திற்கு நஷ்டம் நேரிடாதபடி தகுந்த பொறுப்புக் கொடுத்துவிட்டபடியால், சாவகாசமாய்த் தான் இஷ்டப்பட்டபோது கடனைத் திருப்பிக்கொடுக்கலாமென்று நினைக்கிறான். பஞ்சாயத்தார்களும், தவணைத்தேதிகளில் கட்டாதவிஷயத்தில், ஆதாரம்தான் இருக்கிறதே யென்று நினைத்துக்கொண்டு தகுந்த நடவடிக்கைகளைச் சீக்கிரத்தில் நடத்துகிறதில்லை.

கையிருப்புத்தொகை அதிகமாய் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. வசூலாகும் பணத்தைச் செலவழிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். சங்கம் வாங்கியிருக்கும் வெளிக்கடன்களுக்காகத் திருப்பிச் செலுத்திவிட்டு, வேண்டும்போது மறுபடியும் வாங்கிக்கொள்வதுதான் மிகவும் உசிதமானது.

தவணைதவறியவர்களுக்கு மறுபடியும் சங்கத்தின் வசூலிலிருந்து கடன்கொடுத்து, வாய்தா தவறிய கடனுக்காக வரவு வைத்துக்கொள்ளும் "அட்ஜஸ்ட்மெண்டு" என்கிற வழக்கம் மிகவும் கண்டிக்கத்தக்கது. இப்படி பழைய வாய்தா தவறிய கடன்களுக்காகப் புதுப்பத்திரம் எழுதிப் புதுப்பிப்பதால் மெம்பர்களுடைய கடன் வருஷவாரியில் குறைந்துகொண்டு வருவது போய் அதிகரித்துக்கொண்டேவரும். கடைசியில் வசூலிக்கமுடியாத கேசுகள் அதிகமாய் விடும். மேலும், முன் தவறிய மெம்பர்களுக்கே மறுபடியும் "அட்ஜஸ்ட்" செய்வதற்குக் கடன்கொடுப்பதைவிட, அவர்களின் பாகமாகானு சகோதரர்கள், பெண்சாதி முதலியவர்களை மெம்பராகச்சேர்த்து அவர்களின்பேரில் கடன்கொடுப்பது அதிகப்பிசகு. இந்தவிஷயத்தில் பஞ்சாயத்தார்கள் அதிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும்.

முக்கியமாக பஞ்சாயத்தார்கள் யோக்கியர்களாயும், சங்கத்தின் வேலை தங்களுடைய சொந்த வேலையென்று பாவிக்கப்பட்டவர்களாயும் இருக்கவேண்டும், சங்கத்தின் பணம் தங்கள் சொந்தம்போல் கையாளுவதற்கு உபயோகப்படுத்தாமல் தங்கள் சொந்தப்பணத்தை வெளியிற் கொடுத்தால், எவ்வளவு ஜாக்கிரதையாய்க் கொடுப்பார்களோ அவ்வளவு ஜாக்கிரதையாய்ச் சங்கத்து விஷயத்திலும் இருக்கவேண்டும். சண்டை சச்சரவுகள் இராமல் உள்ளூரிலேயே மத்தியஸ்தர்கள் மூலமாய்த் தகரார்களைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். கணக்கு வகைராக்களைச் செவ்வையாய் அப்போதைக்கப்போது எழுதிவைத்துக்கொள்ளாமல், இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை எழுத உட்காரக்கூடாது. சங்கத்தின் விஷயமாய் ஏற்படும் சாதில்வார்செலவுகளைக் கூடியவரையில் அதிகப்படுத்தாமலிருந்தால்தான் க்ஷேமநிதி அதிகரித்துத் தெய்வாதீனமாய் ஏற்படும் நஷ்டங்களுக்கு உபயோகமாய் இருக்கும். டிபார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்கள் செய்யும் ரிமார்க்குகளைக் கவனித்து, செய்யவேண்டிய சீர்திருத்தங்களை உடனுக்குடனே செய்துகொள்ளவேண்டும். அடிக்கடி மேற்பார்வை செய்துகொண்டேயிருப்பது சங்கத்திற்கு க்ஷேமகரமேயன்றி வேறன்று. கடைசியாக, எல்லா மெம்பர்களும் ஒற்றுமையாய், அவரவர்கள் தங்களால் ஆகவேண்டிய வேலைகளைச் செய்துகொண்டுவந்தால், ஐக்கிய நாணயச்சங்கங்களினால் நமது குடியானவர்களுக்குத் தற்காலமிருக்கும் கஷ்டங்கள் நிவிருத்தியாகுமென்பதில் சந்தேகமேயில்லை.

பூ. சின்னசாமி ஐயர்.

# Tamil Prose Style.

By Mr. P. K. Sreenivasachariar.
*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## தமிழ் வசன நடை.

பழையகாலத்தில் எந்தப்பாஷையிலும் வசன நடை நூல்கள் அதிகமாகத் தோன்றினவென்று தெரியவில்லை. முன்னோர்கள் பெரும்பாலும் எளிதில் மனப்பாடஞ் செய்துகொள்ளும்படி செய்யுள்நடை நூல்களையே இயற்றியிருக்கின்றார்கள். தெய்வபக்தி மிகவுடைய முன்னோர்கள் இயற்றிய தோத்திர ரூபமான நூல்களெல்லாம் பெரும்பாலும் செய்யுள்நடையிலேயே உள்ளன. அவைதாம் முதலில் ஏற்பட்டவையென்று அறிஞர்கள் கருதுகின்றார்கள். அந்தத் தோத்திர ரூபமான செய்யுள்களையும் பெரும்பாலும் அந்தாதித்தொடையாக அமைத்திருத்தல் கவனிக்கத்தக்கது. அந்தாதியாவது—ஒரு செய்யுளின் ஈற்றுச் சொற்றொடரோ, சொல்லோ, அசையோ அடுத்த செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது. அங்ஙனம் பாடி ஒருநூலை முடிக்குங்கால், அந்நூலின் ஈற்றுச்செய்யுளின் இறுதி அந்நூலின் முதற்செய்யுளின் முதலாகப் பாடப்படும். இது மண்டலித்தல் என்று சொல்லப்படும். இப்படிப் பாடுதற்குக் காரணம், எளிதில் மனப்பாடமாக்கிக்கொண்டு பாராயணஞ் செய்வதற்கேயாம். இங்ஙனம் மனப்பாடஞ் செய்வதற்கு வசனநடை நூல்களாயிருந்தால்சாத்தியப்படாது. ஆகலால், முற்காலத்தில் வசன நடை நூல்கள் இயற்றப்படவில்லை யென்பர். நம் தமிழிலும் சங்கத்தார் காலத்திலும், அதற்குப் பிற்பட்டு நோக்குங்கால் நூறு வருடங்களுக்கு முன்னும் வசனநடை நூல்கள் மிகுதியாக இயற்றப்பட்டனவென்று தெரியவில்லை.

பெருந்தேவனார்பாரதத்தில் இடையிடையே உள்ள உரைநடைதான் தமிழில் தொன்றுதொட்டு வருவதென்பர். இதனால் இந்நூல் 'உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்' எனப்படும். அதாவது—வசனமும், பாட்டுமாகக் கலந்துவருவது. வடமொழியிலும் இங்ஙனம் கத்தியமும் பத்தியமுமாக விரவிவருகிற நூல் உண்டு. அது சம்பூ எனப்படும். தொல்காப்பியர் காலத்தில் உரைநடை யுண்டென்பது மாத்திரம் தெரிகின்றதேயொழிய, அத்தகைய நூல்களை அதிகமாகக் காண்பதற்கில்லை. தொல்காப்பியத்துச் செய்யுளியலில், "தொன்மைதானே உரையொடு புணர்ந்த யாப்பின் மேற்றே" என்ற சூத்திரத்தின் உரையில், ஆசிரியர் நச்சினார்க்கினியர், 'தொன்மையென்பது, உரைவிராஅய்ப் பழமைத்தாகிய கதை பொருளாகச்செய்யப்படுவது; அவை பெருந்தேவனாராற் செய்யப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன' என்று உரைத்தார். தகடூர் யாத்திரையென்னும் நூல் காணக்கிடைத்திலது. மற்றும் வசனநடையைக் காணவேண்டுமாயின், சிந்தாமணி, சிலப்பதிகாரம், தொல்காப்பியம், திருக்குறள், இறையனாரகப்பொருள் முதலிய நூல்களுக்கு வழங்கும் உரைகள்தாம் உள்ளன. இவற்குறித்த வசன நடையாகிய உரைகளெல்லாம் முற்காலத்துச் செய்யுள் நடைபோலவே மிடுக்காயும், இக்காலத்தாரில் தமிழறிவில்லாதோர் அறிதற்கு இயலாத திரிசொற்கள் மிக்கவையாயும், சந்தி முற்றியவையாயும் உள்ளன. இவற்றிற் பல இடங்களில் மோனை, பிராசம், எதுகை முதலிய செய்யுளில் வரும் சிறப்புக்களையெல்லாம் காணலாம். ஒரு பாஷை அபிவிருத்தியடையவேண்டுமாயின், அதில் உரைநடை நூல்கள் மிகுதியாக ஏற்படவேண்டும் என்பது பலருடைய அபிப்பிராயம். பலர் செய்யுள் நூல்களைப் படிக்க இயலாதவர்கள். ஆதலால், அவர்கள் பாஷையிற் பயிற்சியடைவதெங்ஙனம்? பயிற்சியடையாவிடின், அவர்கள், பாஷை அபிவிருத்தியடையும் வண்ணம் நூல்களை எங்ஙனம் இயற்றுவார்கள்? அத்தகையோர்க்கு முதலிற் படித்தற்காகும்படியாவது வசனநடை நூல்கள்



இருந்தால் பெருதவியாகும். உள்ள வசன நடை நூல்களும் செய்யுள்நடை நூல்களைப் போலவே கடினமாயிருப்பின், அவற்றாற் பிரயோசனமென்ன? ஆங்கிலத்தில் உரைநடை நூல்கள் அதிகமாயிருப்பதனாலேயே, அப்பாஷை நாளுக்குநாள் அபிவிருத்தியடைகின்றது.

கருத்தைச் செய்யுள்நடையில் தெரிவிப்பது கஷ்டம்; வசனநடையில் தெரிவிப்பது சுலபம். ஆயின், எளிய வசனத்தில் கருத்தைத் தெரிவித்தல் சுலபமேயன்றி, கடின வசனத்தில் தெரிவிப்பது சுலபமன்று. தமிழ்ப்பண்டிதரிற் பெரும்பாலோர் தாம் பழகியது செய்யுள்நடை நூல்களிலேயே யாதலால், அவர்களுக்குத் தமிழில் எளிய வசனநடையில் எழுதத் தெரிவதில்லை யென்பது பலருடைய அபிப்பிராயம். ஒருகால் அவர்கள் வசனநடையில் நூல்கள் எழுதினும், அருஞ்சொற்கள் நிரம்பி, கடின சந்திகள் கலந்து கடுநடையாகவுள்ளது. ஆங்கிலத்திற் போலத் தமிழில் சிறு குழந்தைகளுக்கென்றும், சிறிது படித்துத் தேறிய மாணாக்கர்களுக்கென்றும், மற்று அவர்களினுங் கற்றவர்களுக்கென்றும், பெண்களுக்கென்றும், பண்டிதர்களுக்கென்றும், சாதாரண பாமரர்களுக்கென்றும் உத்தேசித்து இயற்றப்பட்ட, விதம் விதமான வசனநடை நூல்களைக் காணுதல் அருமையாக இருக்கிறது. இப்பொழுது காணப்படும் வசன நடைகள் முக்கியமாக இரண்டேதான். அவை பண்டிதர்களின் வசனநடை, பாமரர் வசன நடை. வசன நடை பலதிறப்பட்டிருப்பின் அவை அந்தந்த இனத்தார்க்குப் பயன்தருவதன்றியும், ருசிகரமாகவும் இருக்கும். ஆங்கிலர்போல நம்மவர்கள் நூல்களை இயற்றுங்கால், அவை இன்ன இனத்தாரைக்குறித்து எழுதுகிறோம் என்று எண்ணி இயற்றுவதாகப் பெரும்பாலும் சொல்வதற்கில்லை. இப்பொழுதிப்பொழுது சிலர் இனம்பிரித்துக் குறித்துக்கொண்டு வசனநடை வகுக்கின்றனர். தொன்றுதொட்டுவரும் வசன நடை இக்காலத்துக்கு அவ்வளவாக உதவாது. அத்தகைய நடைக்குச் சில உதாரணங்கள் காட்டுவாம். அவற்றைக் குறித்து நோக்குங்கால், அவை இக்காலத்துக்கு எவ்வளவு உபயோகமாகும் என்பதை உணரலாம்:—

### பாரதம்பற்றிய பெருந்தேவனாரது வசனநடை.

"என்றிவ்வகை பேசி முற்றியபோரி லருச்சுனன் கையிற் பட்டேனாகிற் பாராட்டித்தூச சருவக்ஷத்திரிய நந்தானைமன்னரு மென்னை முன்னைந் சொல்லுந் தேர்ப்பாகன் மகனென்று சிதையவுரையாமற் செருக்களத்து வந்தென்னை யெடுத்துன் திருமடியில் வைத்துப் பார்வேந்தரும் படைமன்னருங் காணப் பரிந்துன்பொங்கு முலைப்பாலூட்டி யுன்பூந்தடங்கையாற் றழுவி யணைத்திருந் தன்மக்க ளிளங்குமாரராற் கடன் கழித்துப் பிறந்தநாளிற் செய்யாதவையெல்லாம் பிறந்தநாளில் யான் பெற்றேனாகவேண்டுமென்று மற்றந்த மாதாவை மறுத்து வரங்கொண்டு மனமகிழ்ந்த வங்காசனை நோக்கி யகன்றுமற்று சந்தோடித்து நின்ற குந்திதேவியை நோக்கி மின்றலைத்தார் மன்னவன் சொன்னான் பின்னையு மொருவரம் யாது வேண்டினையென்றில்."

### தொல்காப்பிய முதலிய நூல்களின் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் வசனநடை.

"தேவரெல்லாரும் யாஞ்சேரவிருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே யாண்டிருத்தற்குரியரென் றவரை வேண்டிக்கொள்ள அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு பின்னர் யமதக்கினியாருழைச்சென் றவர்மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு புலத்தியனாருழைச் சென்றவருடன்பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை யவர்கொடுப்ப நீரேற்றிரீஇப் பெயர்ந்து துவரைப்பதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழிக்கணரசர் பதினெண்மரையும் பதினெண்குடிவேளிருள்ளிட்டாரையு மருவாளரையுங்கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந் திராவணனைக் கந்தருவத்தாற் பிணித் திராவிடங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி நீசென்று குமரியாரைக் கொண்

டுவ்ருகவென வவரு மெம்பெருமாட்டியை யெங்ஙனங் கொண்டுவருவலென்றார்க்கு முன்னுகப் பின்னுக நாற்கோணீள மகல நின்றுகொண்டு வருகவென வவரு மங்ஙனங் கொண்டு வருவழி வையைநீர் கடுகிக் குமரியாரை யீர்த்துக்கொண்டுபோகத் தொல்காப்பியனார் • சட்டௌபிறந்துசென் றோர்வெதிர்ங்கோலை முறித்து நீட்ட வதுபற்றி யேறினார். அது குற்றமென் றகத்தியனார் குமரியாரையுந் தொல்காப்பியனாரையுஞ் சுவர்க்கம் புகாப்பிரெனச் சபித்தார். யாங்க ளொருகுற்றமுஞ் செய்யாதிருக்க வெங்களைச் சபித்தமையா னெம்பெருமானுஞ் சுவர்க்கம் புகாப்பிரென வவராகத்தியனாரைச் சபித்தார்."

### திருக்குறளின் உரையாசிரியராகிய பரிமேலழகரது வசனநடை.

"இந்திரன் முதலிய விறைபவர்பதங்களு மந்தமிலின்பத் தழிவில்வீடு நெறியறிந் தெய்தற்குரியமாந்தர்க் குறுதியெண வுயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருணான்கு. அவை யறம்பொருளின்பம் வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் றுறவறமாகிய காரணவ கையாற் கூறப்படுவதல்லதிலக்கண வகையாற் கூறப்படாமையி னூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமே யாம்."

### சிலப்பதிகார நூலின் உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் வசனநடை.

"இங்ஙன மியக்கி நடக்கக்கண்ட கோவலன், மதியை மயக்குவிக்குந் தெய்வ மிவ்வியக் காட்டினாளென் றம்மறையவன் கூறினுனதலான் மந்திரத்தா லிந்த வைவகைப்பட்ட சிலவாகிய வோதியையுடையாளைத் தெய்வமகள்மானிடமகளென்ப தறிவேனெனக் கருதி யவனுவிற் கூறிய மந்திர மந்தரிமந்திரமாதலானே யந்தியானிவ்வனத்திற் றிரிகின்ற வியக்கி. நின்றனை விரும்புதலான் மயக்கஞ்செய்யப் புக்கேன். யான் செய்த விப்பிழையை நின்மனைவிக்குங் கவுந்தியடிகட்கு மொழியாது போவாயாகவென்று சொல்லித் தானுந் தன்னிடமே போத."

இங்ஙனமே பழைய தமிழாசிரியர்களின் உரைநடைகளெல்லாம் உள்ளன. இவை பண்டிதர்கட்குப் பொருளாகி மகிழ்வூட்டி யின்பந்தருமே யன்றி மற்றையோர்க்குச் சிறிதும் பயன்தராவாம். இக்காலத்திற் செந்தமிழில் தக்க ஞானமுடையார் மிகச்சிலர். அவர்களுக்கு இம்மாதிரி உரைநடையெழுதுவதிற் பயனில்லை. பழையகாலத்து வழங்கிப் பிற்காலத்தில் வழங்குவதொழிந்த சொற்களை இக்காலத்து வசனநடையில் விலக்கவேண்டும். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல; கால வகையினனே" என்பது நன்னூற் சூத்திரம். முற்காலத்திலும் புலவர்கள் தங்காலத்து வழங்குஞ் சொற்களைத்தான் நூல்களிற் பிரயோகித்தனர்; வழங்காத பழைய காலத்துச் சொற்களையெல்லாம் அறவே விலக்கிவிட்டனர். அடியார்க்குநல்லார் முதலிய ஆசிரியர்கள் தாம் நூல்களுக்கு உரைவகுக்குங்கால், வழங்குதலொழிந்த சொற்களைக்காணுமிடத்து 'இவை இக்காலத்து வழக்காறொழிந்தன' என்று குறித்துக்காட்டுகின்றனர். அங்ஙனமிருப்ப, இக்காலத்து வழங்குதலொழிந்த முற்காலத்துச் சொற்களை வைத்து ஆநெவதிற் பயனென்ன? கருத்தை வெளிப்படையாகத் தெரிவிக்கற்கே மொழி யேற்பட்டது. அக்கருத்தைக் காட்டாத சொல்லைக் கையாளுதல் ஏன்? அங்ஙனமே கடினமான சந்திகளையும் விலக்கவேண்டும். நம் தமிழ்ப்பாஷையானது எளிய இனிய வழங்குகின்ற சொற்களாலாகிய சந்திமிதமான நடையுள்ள வசன நூல்களால் பெருமையும், பெருக்கமும் அடையவேண்டும். அர்த்தபுஷ்டியில்லாமல் ஆடம்பரமாகச் சொற்களை அடுக்கிவைத்தல் நன்றன்று. கருத்துச் செவ்வனே விளக்குவனவாயின், பிறபாஷைச் சொற்களையும் கையாளலாம். நம் தமிழர்கள் இவ்விஷயத்தில் குறுக்கநினைவில்லாதவர்கள். இதற்கு நிதரிசனம், இவர்கள் திசைச்சொற்களென்று பிறசொற்களையும் போற்றிச்சேரன்டிருக்கின்றமைகாண்க. (இன்னும் வரும்.)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.



# Mr. V. P. Madhava Rao, C. I. E.

# மிஸ்டர் வி. பி. மாதவராவ், ஸி. ஐ. இ.

இந்தியர்களுக்கு நிர்வாகத்திறமை இல்லையென்றும், அவர்கள் ஆளப்படும் ஜாதியாரேயல்லாமல், ஆட்சிசெலுத்தப் பிறந்தவர்களல்லரென்றும் சில ஆங்கிலேயர் இந்தியர்களால் சொல்லப்படுகின்றது. இவ்வார்த்தைகளைப் பொய்யாக்க இந்தியாவில் அவதரித்திருக்கும் உத்தம தேசாபிமானிகளுள் மிஸ்டர் வி. பி மாதவராவ் ஒருவராவர். அம்மகான், இந்தியாவில் பிரசித்திபெற்ற மூன்று சமஸ்தானங்களான மைசூர், படோடா, திருவாங்கூர் ஆகிய இவைகளில் திவான்பதவியை வகித்தவர். இவருடைய நிர்வாகத்திறமையானது இந்த மூன்று சமஸ்தானங்களிலும் செய்யப்பட்டிருக்கும் பற்பல சீர்திருத்தங்களை நோக்குமிடத்து நன்கு விளங்கும். இவர் பொதுஜனக்ஷேம அபிவிருத்தியில் மிகவும் அக்கரையுள்ளவர்.

## இளமைப் பருவம்.

விசுவநாத பட்டங்கர் மாதவராவ், தேசஸ்த பிராமண வகுப்பைச் சார்ந்த ஒரு மகாராஷ்டிர குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆதியில், மகாராஷ்டிர அரசர்கள் இந்தியாவில் ஆட்சிபுரிந்துவந்த காலத்தில், இவருடைய வம்சத்தார்கள் தஞ்சாவூரில் வந்து நிலைத்துவிட்டார்கள். இவர் 1850-ம் வருஷத்தில் தஞ்சாவூரிலே பிறந்தார். இவருக்கு மல்ஹாரிராவ் என்ற ஒரு சகோதரருண்டு; அவர் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டில் ஒரு உத்தியோகத்தைப் பெற்றிருந்தார். நமது மாதவராவ் கும்பகோணம்காலேஜில் கல்விபயின்று, 1869-ம் வருஷத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். அச்சமயம் அக்காலேஜின் தலைவராயிருந்த மிஸ்டர் போர்ட்டர் இவரைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்துபேசி, பிற்காலத்தில் இவர் மிக்க கீர்த்தி பெறக்கூடிய நிலைமைக்கு வரத்தக்கவரென்று குறிப்பிட்டதுண்டு.

## உத்தியோக ஆரம்பம்.

மிஸ்டர் மாதவராவ், தம்முடைய உயர்தரக் கல்வி முடிந்து பட்டம்பெற்றதும், மைசூர் சமஸ்தானத்தில், மகாராஜாவின் கார்டியன் ஆபீஸில் ஒரு குமாஸ்தா உத்தியோகம் பெற்றார். கொஞ்சகாலத்திற்குள்ளாகவே அங்கு அவருடைய வேலைத்திறமை வெளிப்பட, உடனே ராயல் ஸ்கூல் என்னும் பள்ளிக்கூடத்திற்குத் தலைமை உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். இந்த வேலையில் நெடுநாள் நமது ராயர் நிலைத்திருக்கவில்லை. உடனே ஸப் ஜட்ஜாயிருக்க நியமனம் பெற்றார். அச்சமயம் அங்குத்திவானுயிருந்த மிஸ்டர் ரங்காசார்லு, இவர் பிற்காலத்தில் இந்த சமஸ்தானத்தில் பல உயர்பதவிகளை வகிக்கக்கூடியவரென்று குறிப்பிட்டிருந்தார். மிஸ்டர் ரங்காசார்லுவுக்குப் பிறகு மைசூர் சமஸ்தானத்தின் திவானுவந்த K. சேஷாத்திரி ஐயர் காலத்தில் நமது மாதவராவ் பற்பல உத்தியோகங்களை வகித்தார். கடைசியாக இவர் நீதி இலாகாவிலிருந்து ரெவினியூ இலாகாவிற்கு மாற்றப்பட்டார். இந்தஇலாகாவில் கொஞ்சநாள் உழைத்த பிறகு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் என்னும் பதவியைப் பெற்றார்.

## பரோபகாரம்.

நமது ராயர் அவர்கள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜனரல் உத்தியோகத்தை வகித்திருந்த போது அந்த ஸமஸ்தானத்தில் ப்ளேக் நோயானது வெகு மும்முரமாய்ப் பரவிக்கொண்டிருந்தது. அப்போது அந்நோய்தடுக்க வேண்டிய தகுந்தவர்கள் எவரும் இல்லாததனால், இவ்வேலையும் தமது வேலையோடு ப்ளேக் கமிஷனர் வேலையையும் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவர், தாம் புதிதாய் ஏற்றுக்கொண்ட வேலையில் செய்த பலவித முயற்சிகளையும், சீர்திருத்தங்களையும் இங்குவிவரித்துக்குறிப்பிட்டு எழுதுவது சாத்தியமாகாது. ஜனங்களுக்குக் கொஞ்சமும் அசௌகரியங்கள் ஏற்படாமலும், அவர்களுடைய ஆவி, உடல் பொருள் இவைகளுக்கு நஷ்டமில்லாமலும் வெகு சாதுர்யமாய்ப் பல திருத்தங்களை இவர் கையாடினர்; ப்ளேக்வியாதி

காரணமான பல சுகாதாரக் கோளாறுகளைச் சீர்திருத்தம் செய்தார்; சுத்தமான காற்று, நல்ல வெளிச்சம் ஆகிய இவைகளில்லாத இடங்களில் வசித்துவந்தவர்களை வெளிக்கிளப்பிச் சுகாதாரமுள்ள இடங்களில் வசிக்கச் செய்தார்; ஜனநெருக்கமுள்ள இடங்களில் வசித்துவந்தவர்களை, அவ்விடங்களைவிட்டு வேறு நல்ல சுகாதாரமுள்ள இடங்களிற் போய்க் குடியிருக்கும்படி செய்தார்; மற்றும், ஜனங்களின் சௌகரியத்தைக்கோரிப்பல புதிய வீடுகளையும் கட்டி உதவி செய்தார்; இவ்வளவு சீர்திருத்தங்களையும் பொது ஜனங்களின் மனத்துக்கு எவ்வித அருவருப்பையும் உண்டாக்காமற் செய்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது.

### ரேவினியூ கமிஷனர்.

மைசூரில் ரெவினியூ கமிஷனர் என்னும் உத்தியோகமானது, இப்போதைய மகாராஜா சிங்காதனத்துக்கு வந்த பிறகு ஏற்பாடு செய்யப்பட்டதாகும். இந்தப் புதிய உத்தியோகத்துக்கு மிஸ்டர் மாதவராவே முதன்முதல் நியமிக்கப்பட்டவராவர். ரெவினியூ இலாகாவில் பல சீர்திருத்தங்களைச் செய்யவேண்டிய இந்த அபாரமான வேலையை இவர் ஒப்புக்கொண்டார்.

### திவான் பதவி.

பிறகு 1904-ம் வருஷத்தில் திருவாங்கூர் மகாராஜா, மிஸ்டர் மாதவராவைத் தமது சமஸ்தானத்து திவான் பதவியை வகிக்கக் கேட்டுக்கொண்டார். அதன்மீது, நமது ராயர் அந்த ஸமஸ்தானத்துத் திவான்பதவியைவகிக்க ஒப்புக்கொண்டார். கொஞ்சகாலமே இவர் அந்த ஸமஸ்தானத்துத் திவானாக இருந்து, பிறகு 1906-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் மைசூர் சமஸ்தானத்துத் திவான் வேலையை ஒப்புக்கொண்டு மைசூருக்கு திரும்பிவிட்டார். இந்த மூன்று வருஷகாலமே இவர் திவான் பதவியை வகித்துவந்தார். பின்பு 1914-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் இவர் பரோடா சமஸ்தானத்துத் திவான்பதவியை வகிக்க ஒப்புக்கொண்டு அங்குச் சென்றார்.

### சீர்திருத்தங்கள்.

மிஸ்டர் மாதவராவ் மைசூர் சமஸ்தானத்துத் திவான்பதவியை வகித்த மூன்றுவருஷ காலத்திற்குள், அந்த ஸமஸ்தானத்திற் பற்பல சீர்திருத்தங்கள் அவரால் செய்யப்பட்டன: மைசூர் சமஸ்தானத்திற்கு ஒரு சட்டசபை ஏற்படுத்தப்பட்டது. ஸிவில் சர்விஸ் விதிகள் பல புதுப்பிக்கப்பட்டன. நீதிசெலுத்தும் அதிகாரத்தையும் நிர்வாக அதிகாரத்தையும் தனித்தனியே பிரிக்கப்படுவதற்குப் பல முயற்சிகள் செய்யப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் சமஸ்தானத்தின் பல பாகங்களிலும் ஸ்தாபிக்கப்பட்டன. ராஜ்ய நிர்வாகத்தில் ஏற்படும் பற்பல அனாவசியமான செலவுகளைக் குறைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்துப்பாக்குமரங்களைப் பயிரிட்டுவந்த குடிகளைப் பல துன்பத்துக்குள்ளாக்கும் ஹலாத் என்னும் வரி எடுபட்டுப் போயிற்று. பொது சுகாதார இலாகா ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு, சுகாதார விஷயமாய்ச் செய்யவேண்டிய பல திருத்தங்களும் நன்கு கவனிக்கப்பட்டன. கல்வி அபிவிருத்தி சம்பந்தமாயும் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன: ஆரம்பப்படிப்பு ஜனங்களுக்கு இலவசமாக்கப்பட்டது. மதப்படிப்பும், சன்மார்க்கப்படிப்பும் பள்ளிக்கூடங்களில் கட்டாயமாய்க் கற்பிக்கப்படவேண்டுமென்றும், இயந்திரத் தொழிற் படிப்பும் கற்பிக்கப்படவேண்டுமென்றும் உத்திரவு செய்யப்பட்டது. இந்த ஸமஸ்தானத்தில் பற்பலகிராமங்களிலும் கிராம பஞ்சாயத்துக்கள் ஸ்தாபிக்க முயற்சிகள் செய்யப்பட்டன:

மிஸ்டர் மாதவராவ் திருவாங்கூர் சமஸ்தானத்துத் திவானாயிருந்தபோது அங்கும் பல சீர்திருத்தங்களைச் செய்தார்: அங்கு, மெடிகல் மெண்டு இலாகாவைச் சீர்திருத்திப் பல புதிய முறைகளை ஏற்பாடுசெய்தார்; கலால்வரி ஒன்றை ஏற்படுத்தி, அதன்மூலமாய் சமஸ்தானத்திற்கு 40 லட்சம் ரூபாய் அதிகமான வரும்படியை ஏற்பாடுசெய்தார்; நிலவரிகளைத் தானியமாகச் செலுத்தும், வழக்கத்தை நிறுத்தி, பணம்



மாகவே செலுத்த ஏற்பாடு செய்தார்; பொது ஜன க்ஷேமத்திற்கு அவசியமான ஸ்ரீ மூலம் என்னும்ஜனஸபை ஒன்றை ஸ்தாபித்தார்; இன்னும் சமஸ்தான சம்பந்தமாய் வைக்கவேண்டிய கணக்குமுறைகளையும். தேவாலய நிர்வாக சம்பந்தமாய்ச் செய்யவேண்டிய பல சீர்திருத்தங்களையும் செய்தார்.

### குணவிசேஷங்கள்.

மிஸ்டர் மாதவராவ் இந்தியாவின் பல பாகங்களிலும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்காங்கு தேசோபகாரமான பல வேலைகளைச் செய்துவந்தார். பற்பலவிடங்களில் மதசம்பந்தமாயும், இராஜீயசம்பந்தமாயும் நடக்கும் கூட்டங்களுக்குத் தாம் தலைமைவகித்து ஜனங்களுக்குப் பல நற்புத்திகளைப் புகட்டிவந்தார். அவருக்கு இந்துக்களுக்குள் சமஸ்கிருத பாஷையைப் பரவச் செய்யவேண்டுமென்ற ஆசையுண்டு. சமீபத்தில் கும்பகோணம் காலேஜ் தங்கஜூபிலி கொண்டாடப்பட்டபோது, அக்காலேஜின் பழைய மாணாக்கராகிய மிஸ்டர் மாதவராவே அந்த ஜூபிலிக்குத் தலைமை வகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டார். அச்சமயம், முன்பு அக்காலேஜில் தாம் கல்வி பயின்றுவந்தபோது பிரின்ஸ்பாலாயிருந்த மிஸ்டர் போர்ட்டரை வெகுவாகப் புகழ்ந்துபேசி, அவருடைய ஞாபகம் என்றாளும் இருக்கும்பொருட்டு அவருடைய பெயரால் ஒரு சமஸ்கிருத வெகுமதி கொடுக்கப்பட்டுவரும்படி ஏற்பாடுசெய்தார்.

நமது ராயர் அவர்கள் சமூக விஷயங்களில் மிகத் தாராளமான நோக்கமுடையவர். வருணப்பு வித்தியாசங்களைப் பாராட்டும் வழக்கம் இவரிடத்தில் இல்லை. மூன்று சமஸ்தானங்களிலும் திவானாயிருந்தகாலத்தில், மகமதியர்களென்றும், கிறிஸ்தவர்களென்றும், இந்துக்களென்றும் ஜாதிவித்தியாசம் பாராட்டினது இல்லை. இவர் சமஸ்தானத்தில் அதி உன்னதபதவியை வகித்திருந்தகாலத்திலும் எப்போதும் அதிகாரப்பிரியராயிருந்தது இல்லை. எப்படிப்பட்டவர்களையும் தம்வழிக்குக்கொண்டுவரும் சக்தி இவரிடம் அமைந்திருந்தது. இதனாலேயே அந்தந்த ஸமஸ்தானங்களில் பலவித சீர்திருத்தங்களையும் எளிதிற் செய்துமுடிக்க இயன்றது. கடைசியாகக் கூடிச் சென்ற சென்னைமாகாணத்துக் கான்பரென்ஸில் இவர் தலைமைவகித்து ஓர் அரியபிரசங்கம்செய்தார்.

சற்றேறக்குறைய 45 வருஷகாலம் பொது நலத்துக்கே உழைத்துவந்த நமது ராயர் அவர்களுக்கு, 65-ம் ஆண்டு இப்போது நடந்துவருகின்றது. இவர் இன்னும் பல காலம் பொது நலத்துக்கு உழைக்கப் போதிய ஆயுளையும் தேகவன்மையையும் கொடுக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

---

## The Ladies' Section.

## ஸ்திரீகள்-பகுதி.

### DUTIES OF OUR WOMEN,

### நமது ஸ்திரீகளின் கடமைகள்.

குல மங்கையராக இருக்க விரும்பும் பெண்கள் கணவன் வெளியிலிருந்து வரும்பொழுது எதிர்கொண்டழைத்தல், அவனோடு பேசும்போது அடங்கிப்பேசுதல், அவன் பாதங்களிலேயே பார்வையைச் செலுத்தல், ஆசனங் கொடுத்து உபசரித்தல், அவனுக்குத் தானே பணிவிடை செய்தல், அவன் தூங்கிய பிறகு தான் சயனித்தல், அவன் எழுந்திருப்பதற்கு முன் தான் படுக்கைவிட்டு எழுந்திருத்தல் ஆகிய முதலியவற்றை மேற்கொள்ளல் வேண்டும்.

மனைவி சரீரத்தின் அவயவங்களை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம் செய்யாமை, அழுக்கடைந்த உடை தரித்தல், நெற்றியில் திலகமில்லாமை, கண்ணுக்கு மையிட்டிக்கொள்ளாமை சந்தனம் புஷ்பம் முதலியவற்றைத் தரித்துக் கொள்ளாமை, பிறபுருஷருடன் கூச்சமின்றிப்

பேசுதல், நெடுங்காலம் பிறந்தகத்தில் வளர்தல், உரக்கப் பேசுதல், காரணமின்றி நகைத்தல், கணவன் வெளியூருக்குப் போயிருக்கும்போது தன்னை ஆபரணங்களால் சிங்காரித்துக்கொள்ளுதல், புருஷர்களின் முன்னிலையில் கூட்டங்கூடுதல், தலைமயிரை வாரிக்கொள்ளாமை, கற்பில்லாதவரோடு சேர்தல் ஆகிய பல குற்றங்களையும் செய்யாது ஒழித்தல்வேண்டும்.

“மனைவி” என்னும் பட்டத்தைப் பெற விரும்பும் பெண்கள், மாமி மாமன் முதலியோருக்குச் சிச்ருஷை செய்து அவர்களை மகிழ்விக்க வேண்டும்; கணவன் ஒரு சமயம் கோபித்து வைதாலும் பதில் சொல்வது கூடாது; தனது சேவக ஜனங்களிடம் அன்புள்ளவளாயிருத்தல் வேண்டும். இவைகளை அநுசரிக்காத ஸ்திரீகள் குலத்தைக் கெடுக்கவந்த கோடரியாவார்கள்.

ஸ்திரீகள், தங்கள் கணவன் செல்வனாயிருந்தாலும், வறிஞனாயிருந்தாலும், அரோக திடகாத்திரனாயிருந்தாலும், நோயாளியாயிருந்தாலும், அன்புள்ளவனாயிருந்தாலும், அன்பற்றவனாயிருந்தாலும், நல்லொழுக்கமுள்ளவனாயிருந்தாலும், புல்லொழுக்கமுள்ளவனாயிருந்தாலும், அறிஞனாயிருந்தாலும், மூடனாயிருந்தாலும்; அழகுள்ளவனாயிருந்தாலும், குரூபியாயிருந்தாலும், எப்படியிருந்தாலும் அவனைத் தெய்வமாகப் பாவித்து, அவனிடம் அந்தரங்கமான விச்வாசம் வைத்து அவனை மகிழ்வித்தல்வேண்டும். இவ்வாறு நடந்துவரும் ஸதிரீகள் தேவர்களும் கொண்டாடப்படுவர்.

குலஸ்திரீகள் கணவனிடம் பக்திபூண்டிருக்க வேண்டும்; தம்மை அடைந்தவர்களிடம் கருணைபாராட்டவேண்டும்; மாமியார்,மாமனார் முதலானவர்களை மனதார வணங்கவேண்டும். பெரியோர்களிடம் கௌரவமும் அபராதம்செய்தவனிடம் பொறுமையும் வைக்கவேண்டும். கணவனுடைய சரீரநிலைமை முதலியவற்றைத் தெரிந்துகொண்டு, இனிய பக்ஷியமான உணவுகளால் அவனைப் போஷிக்கவேண்டும். எப்பொழுதும் கடுகடுத்தவாறில்லாமல் மலர்ந்த முகமுடையவர்களாயிருத்தல் வேண்டும். கணவனுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்தல் வேண்டும். தம்மைக் கற்பினின்றும் வழுவாவாறு காத்துவரவேண்டும். கணவன் எப்பணியால் இன்புறுவானோ, அப்பணியால் அப்போதே அவரை மகிழ்வித்தல்வேண்டும்.

ஸ்திரீகள் எக்காரியத்தைச் செய்யினும் தமது கணவன் உத்தரவில்லாமற் செய்வது கூடாது. கணவர் உட்கார்ந்தபோதல்லாமல், தாம் அவருக்கு முன்பு உட்காருவது கூடாது. தமது கணவர் மனதில் விரும்பிய செயல்களைக் குறிப்பாலுணர்ந்து, அவர் கட்டளையிடுவதற்கு முன் செய்தல்வேண்டும்.

பெண்கள் பாலியத்தில் தம் தகப்பனது ஆஞ்ஞையிலும், யௌவனத்தில் தம் கணவனது ஆஞ்ஞையிலும், கணவனிறந்தபின் பிள்ளைகள் ஆஞ்ஞையிலும் இருக்கவேண்டுமேயொழிய, ஒரு பொழுதும் ஸ்வதந்திரமாயிருத்தல் கூடாதாம். பெண்கள் எப்பொழுதும் வீட்டுக்காரியங்களில் சாமர்த்தியமுள்ளவர்களாயும், வருவாய்க்குத் தக்க செலவு செய்கின்றவர்களாயும், கிடைத்ததைக்கொண்டு சந்தோஷிக்கின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

எந்தஸ்திரீ மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணத்தால் நாயகனுக்கு ஹிதத்தையே விரும்பிச் செய்கின்றாளோ, அவளே பெரியோரால் “ஸாத்வீ” என்று கூறப்படுகிறாள்.

காரியங்களைச் செய்வதில் பணிப்பெண் போலவும், உருவத்தில் திருமகள்போலவும், மந்திராலோசனையில் மந்திரி போலவும், அன்பில் தாய்போலவும், பொறுமையில் பூமிபோலவும் இருப்பவர்களே குல ஸ்திரீகளாவர்.

கணவனுக்கு இனியவளாயும், மிருதுபாஷிணியாயும், கோபம் முதலிய தீக்குணங்களை ஒழித்தவளாயும், நாணம், மடம் அச்சம், பயிர்ப்பு என்ற குணங்களை உடையவளாயும்,பிறர் வீட்டிற்குச் செல்லாதவளாயும், புன்மைவழியிலேயிப் புல்லரிடம் நீங்கி நன்மையிலும் ஆழ்ந்து நி



ற்கின்றவளாயுமிருப்பவளே கற்புடைய பெண்மணியாவாள்.

தான் குபேரனைப்போல் ஏராளமான சம்பத்தையுடைய குடும்பத்திற் பிறந்திருந்தாலும், பிரகஸ்பதியைப்போல் கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், இரதியைப்போல் பொற்பு வாய்ந்தவளாயிருந்தாலும், ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டால் அச்செல்வப்பெருக்கையும், கல்விப் பெருமையையும்,அழகையும் பாராட்டிச் செருக்கினால் கணவனை அவமானஞ்செய்யாமல், அவனைத் தெய்வமாக மதித்து, எவ்விதத்திலும் தவறாமல் அவனுக்கடங்கி நடத்தல் வேண்டும்.

ஒருசமயம் கணவன் துர்க்குணங்களால் துன்பங்களைச் செய்யக்கூடும். அச்சமயம் மனைவி அவனது குணத்தை நன்றாயறிந்து, அதைச் சீர்திருத்தும்படி செய்யவேண்டிய தந்திரங்களாகிய அன்பு, வணக்கம் முதலிய குணங்களாற் பாராட்டி, அவனுடைய துர்க்குணம் நீங்குமாறு கடவுளை அடிக்கடி பிரார்த்தித்துவருதல் வேண்டும். அவ்வாறின்றி அவனுடைய குற்றங்களை எடுத்துக்காட்டி எதிர்த்துப்பேசுவதனாலும், அவனுடைய குணங்களைப் பிறரிடம் சொல்வதனாலும் அடிக்கடி சண்டையும் உபத்திரவமும் உண்டாதுமேயன்றிச் சமாதானம் உண்டாகாது.

கற்புடைய பெண்களுக்கு, கணவர் வருத்தமடைந்தால் தாமும் வருத்தப்படுவதும், அவர் சந்தோஷித்தால்தாமும் மகிழ்வதும் நிலைபெற்ற தவமாகும்.

மனைவி, கணவன் கட்டளையை மறந்து ஒன்றும் சொல்லக்கூடாது. கணவன் தன் நண்பர்களோடேயாயினும் மற்றெவரோடேயாயினும் தனித்துப் பேசிக்கொண்டிருக்கையில் மனைவி அங்கே போய் நிற்பதும், மறைந்துகொண்டு ஒற்றுக் கேட்பதும் கூடாது. மனைவியும் புருஷனும் இல்லறமென்னும் வண்டியிற் பூட்டப்பட்ட மாடுகளைப்போல்வர். அச்சகடம் செல்லவேண்டுமாயின் இருவரும் சேர்ந்தே இழுக்கவேண்டும்; ஒருவரால் முடியாது.

## LIME FRUIT.

### எலுமிச்சம் பழம்.

எலுமிச்சம்பழமானது நமக்குப் பல வழிகளிலும் உபயோகப்படுகின்றது. இதை நாம் நமது சாப்பாட்டில் தாராளமாய் உபயோகிக்கிறோம். பற்பல நோய்களுக்கு மருந்தாகவும் இது உபயோகப்படுகின்றது: அன்னத்வேஷம், அரோசிகம் முதலியவற்றால் வருந்துகிறவர்கள் எலுமிச்சம்பழத்தை உபயோகித்து நோயைத்தீர்த்துக் கொள்ளுகிறார்கள். இரண்டுபங்கு ஜலத்தில் ஒருபங்கு எலுமிச்சம்பழம் ரஸம் விட்டு சிறிது ஸோடாஉப்பையும் சேர்த்துச் சாப்பிட்டால் வயிற்றுப்பசம், அஜீரணம் முதலியவை நீங்கும். இரண்டுபங்கு ஜலத்துடன் ஒருபங்கு எலுமிச்சம்பழம் ரஸத்தைச் சேர்த்துச் சாப்பிட்டால், அது தேகத்துக்கு ஸௌக்கியத்தைக் கொடுக்குமென்று மேனாட்டு வைத்தியர்கள் கூறுகிறார்கள். இன்னும், இது ஜீரணசக்தியை அதிகமாக்குகிறதென்றும், தேகத்திற்குள்ளிருக்கும் விஷப் பூச்சிகளை நீக்குகிறதென்றும், மலேக்காய்ச்சல், திமிர்வாதம்,தொண்டைப்புண் முதலிய வியாதிகளுக்குத்தக்க ஔஷதமாகின்றதென்றும் கூறப்படுகின்றது. சில பிரஸித்தி பெற்ற வைத்திய சாஸ்திரிகள், எலுமிச்சம்பழம் ரஸத்துக்கு வாந்திபேதியின் கிருமிகளையும், மற்றும் கேடுகளை விளைவிக்கும் இதர கிருமிகளையும் நாசமாக்கும் சக்தி உண்டென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸ்நானஞ்செய்யும் ஜலத்தில் நாலைந்து பழங்களைப்பிழிந்து அத்தண்ணீரில் ஸ்நாநம்செய்தால், சருமத்தில் அடைப்பட்டிருக்கும் அழுக்கு நீங்கித் தோல் சுத்தமடைகின்றது. பித்தத்தைச் சமனம்செய்யும் சக்தி இதற்குண்டு. பூச்சிக்கடி முதலானவைகளுக்கு இதன் சாற்றைக்கொண்டு தேய்த்தால் குணமுண்டாகுமென்று சொல்லப்படுகின்றது.

## DRESSING CHILDREN.

### குழந்தைகளுக்கு உடுப்புப்போடுவது.

குழந்தைகளுக்கு உடுப்புப்போடும் காரியத்தில் தாய்மார்கள் பல விஷயங்களைக் கவனிக்கவேண்டும். குழந்தைகளுக்குப் போடும் உடுப்

பெரிதாக எண்ணி, சந்தோஷத்துடன் காலங் கழித்து வந்தார். நமது திருவள்ளுவநாயனார் பல தொழில்களையும் விட்டு நெய்தற்றொழிலை மேற்கொண்டது, நெசத்தொழிலின் மேன்மையை பெற்றியன்றோ?

இவ்வாறு சிறுதொழிலைக்கொண்டு ஜீவித்து வரும் ஜான் பௌண்ட்ஸ், தம் சகோதரியின் குமாரன் ஒருவனையும் தம் பார்வையின்கீழ் வைத்துக்கொள்ள நேரிட்டது. இச்சிறுவனுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பு இவரையே சேர்ந்தது.

அக்காலத்தில் எளியவர்களுக்குக் கல்வியானது மிகப் பற்கொம்பாயிருந்தது. ஜீவனத்திற்கே கஷ்டமான ஸ்திதியிலுள்ள ஜான் பௌண்ட்ஸ், தம் மருமகன் கல்விக்காகச் சம்பளங்கொடுக்கவும், உடுப்புக்கள் புத்தகங்கள் முதலியன வாங்கவும் என்ன செய்வார்? இவர் சிறிது யோசித்து; "ஐயோ! என்னைப்போல் எத்தனை ஏழைக் குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கமுடியாமல் கஷ்டப்படுகின்றனவோ! கல்வியைவிட மனிதன் அடையவேண்டிய பேறு வேறுளதோ! என்வேலையின் இடையே எனக்குத் தெரிந்தவைகளைக் கற்பித்துக் கொடுக்கிறேன்" என்று தாமே தம் தொழில்செய்யுமிடத்தில் தம் சிறுவனுக்குக் கல்விகற்பிக்க ஆரம்பித்தார்.

பிறகு, ஒருவனுக்குச் சொல்லிக்கொடுப்பதும், ஒன்பது பேருக்குச் சொல்லிக்கொடுப்பதும் ஒன்றுதானே, இதில் என்ன கஷ்டம்? என்று நினைத்து, தெருவில் நாதனற்றுத் திரியும் சிறுவர்களையும், எளியவர்களின் பிள்ளைகளையும் கூப்பிட்டுவந்து, தம் சிறுவனுடன் சேர்த்துக்கொண்டார். இவ்விதம் சுமார் 40 பிள்ளைகள்வரை இவரிடம் கல்வி பெறுவதற்காகச் சேர்ந்தார்கள்.

இச்சிறுவர்களைப் பார்க்கும்போதெல்லாம், இவர்களின் கிழிந்த உடைகளுக்காகவும், ஊணின்றி மெலிந்துள்ள மேனிக்காகவும் இவர் மனமுருகிக் கண்ணீர்விடுவார்; தாமே அவர்களுக்கு வேண்டிய உடை முதலியன தைத்துக்கொடுத்து மகிழ்வார்; தம்மிடமுள்ள சுவல்பத் தொகையையும் ரொட்டி முதலியன வாங்கி இச்சிறுவர்களுக்குக் கொடுத்து உண்பிப்பார்; தம் செல்வமெல்லாம் இச்சிறுவர்களுடையதுதானென்று சொல்லுவார்; அவர்கள் வயிறாரவுண்டு குதூகலத்துடன் ஆடுவதைக்கண்டு அடங்கா மகிழ்ச்சியடைவார்.

பிள்ளைகள் சரியாகத் தம்மிடம் வாராவிட்டால், அவர்கள் வீட்டுக்குப்போய், இனிய வார்த்தைகள் சொல்லி, தின்பண்டங்கள் கொடுத்து அழைத்து வருவார்.

பிள்ளைகள் விளையாட இச்சைப்பட்டால் தாமே அவர்களுடன் சேர்ந்து நல்ல விளையாட்டுக்களை விளையாடி, அவர்களைச் சந்தோஷப்படுத்துவார். தூர்க்குணமுள்ள பிள்ளைகளுடன் விளையாடி எங்கே கெட்டுப்போகிறார்களோ என்ற பயம் அவரிடமிருந்தது.

சமயம் நேர்ந்தபோதெல்லாம் வேதபுஸ்தகத்திலிருந்து நல்ல கதைகளை இனிமையாய் அவர் சொல்லுவார். "குழந்தைகளே! நீங்களும் படிக்கக் கற்றுக்கொண்டால், இம்மாதிரி அநேக புத்தகங்களை வாசிக்கலாம்" என்று சொல்லி, அவர்களுக்குப் படிப்பில் உற்சாகமூட்டுவார்.

இதனால் பிள்ளைகள் தாங்களே படிக்க ஆசைப்படுவார்கள்; அடிக்கடி உபாத்தியாயரைக் கேள்வி கேட்டுக்கொண்டிருப்பார்கள்; உபாத்தியாயரைத் தங்கள் உயிர் நண்பராகவும், அன்புள்ள தந்தையாகவும் எண்ணி வந்தார்கள்.

இவர் ஓய்ந்த நேரத்தில், சட்டை தைக்கவும், செருப்புக்கள் செய்யவும் மாதிரியும். இன்னும் ஜீவனோபாயத்திற்கு வேண்டிய பல தொழில்களும் இவர்களுக்குச் சிறுகச் சிறுகக் கற்பிப்பார். நாளடைவில், இச்சிறுவர்கள் தங்கள் சட்டைகளைத் தாங்களே தைத்துக்கொள்ளவும், பிறர்க்கு உதவி செய்யவும் ஆரம்பித்தார்கள்.

இவ்விதம் ஊக்கத்திலும், ஐக்கியத்திலும், ஜீவகாருண்யத்திலும், தைர்யத்திலும் வல்லவர்களாய் அநேகம் குழந்தைகள் விருத்தியடைந்தார்கள். இவரால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடமும், போதனாமுறையும், இக்காலத்தில் மிகவும் சிலாக்கியமாக மதிக்கப்பட்டு வருகின்றன.

பாலர்களின் இயற்கை அபிவிருத்திக்கும் முற்போக்குக்கும் தமது சௌகரியங்களைக் கொஞ்சமும் பொருட்படுத்தாமல் தியாகம் செய்துவந்த மிஸ்டர் ஜான் பௌண்ட்ஸ், 1839-ம் வருஷம் இறைவன் திருவடியையடைந்தார்.



# Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### CULTIVATION OF ROSES.

### ரோஜா பயிர் செய்தல்.

சமீபத்தில் வெளிவந்த "ஜ்ஞாநமாணி" யில் ரோஜா பயிர் செய்வதைப்பற்றிய சில குறிப்புக்கள் காணப்படுகின்றன. அவை வருமாறு:—

நிழலும் மரவேர்களின் உபத்திரவமும் இல்லாத வெயிலான இடங்களில் ரோஜா நன்றாய்ப் பயிராகும். சம வெளிகளில் பயிரிடவேண்டுமானால், உஷ்ணமான காற்றுப் பயிர்மேல் வீசாத மறைவான ஒதுக்குப்புறங்களில், ரோஜாவைச் சாகுபடி செய்யவேண்டும். மலைப்பிரதேசங்களிலானால், குளிர்ந்த காற்று மிகவும் வீசாத ஒதுக்குப்புறங்களில் பயிரிடலாம்.

நிலம்.

நன்றாய் உழுது பண்படுத்தி வேண்டியவளவு எருப்போட்ட எந்தவகை நிலத்திலும் ரோஜா நன்றாக வளரும். ஆனால், செழுமையான அடைமண் நிலம் மற்றவைகளைவிடச் சிலாக்கியமானது; அதில் கொஞ்சம் களிமண் இருந்தால் இன்னும் நல்லது. நிலம் மணற்பாங்காக இருந்தால், போதுமான அளவு களிமண் சேர்க்கவேண்டும். கோடைக்காலத்தில் குளங்கள் வற்றியிருக்கும்போது, அவைகளின் அடியிலிருந்து சேற்றை எடுத்து மணல் நிலத்திற்குப் போடலாம்.

ரோஜாவைப் பயிரிடும் நிலத்திற்குச் சுண்ணாம்பு போடுவது நல்லது. முக்கியமாய் ஈரம் தங்கக்கூடிய நிலங்களுக்குச் சுண்ணாம்பு இடுவது அவசியமாகும். அதிகமாய் எருவிட்ட நிலங்களில் செடிக்குக் கெடுதலான திராவகங்கள் உண்டாகுமாதலால், சுண்ணாம்பை உபயோகித்தால், அது புளிப்பை மாற்றிக் கெடுதலைக் குறைத்துவிடும். மிதமிஞ்சி எருவிடுவது ரோஜாவின் வளர்ச்சிக்குக் கெடுதலாகும். ஒரே யிடத்தில் வெகுகாலம் ரோஜாவையே பயிரிடுவது சரியன்று. சில வருஷங்களுக்கு ஒருதடவை இடம் மாற்றி ரோஜாவைச் சாகுபடி செய்யவேண்டும்.

சாளைநிலம் ரோஜாவுக்குக் கொஞ்சமும் ஏற்றதன்று. ரோஜாவுக்கு வடிகால் இருக்கவேண்டியது அவசியமாகும், ஆகையால், மழை ஜலம் தங்கக்கூடிய எந்த இடத்திலும் ரோஜாவைப் பயிர் செய்யக்கூடாது.

நிலத்தைப் பண்படுத்தல்.

ரோஜா நடவேண்டிய நிலத்தைப் பாத்திகளாகப் பிரித்து, $2\frac{1}{2}$ அடி முதல் 3 அடி ஆழம் வரையில் கொத்தி மண்ணை வெளியில் எடுத்துப்போடவேண்டும். இப்படி இரண்டு மூன்று நாட்கள் வரையில் மண்ணைப் போட்டிருந்தால், வெயிலும் காற்றும் பட்டு மண் நல்ல நிலைமையை அடையும். பிறகு, பாத்தியின் அடியில் 6 அங்குல கனத்திற்கு நன்றாய் மட்கின சாணியெருவைப் போட்டு அதன்மேல், வெளியில் எடுத்துப் போட்டிருக்கும் மண்ணைப் போட்டு நிரவிவிடவேண்டும். பிறகு மண்ணைக் காலால் மிதிக்கவேண்டும், அல்லது, ஜலம் பாய்ச்சினால் மண்ணானது படிந்துவிடும். பின்னால் ரோஜா நட்டபிறகு மண் இறுந்துபோகாமலிருக்கவேண்டியது அவசியமாதலால், முன்னாடியே மண்ணை மிதித்தோ ஜலம்பாய்ச்சியோ சரிப்படுத்தவேண்டும். ரோஜாவை நட்டவுடன் அதன் வேர்களில் எருவிடுவது கூடாதாகையால், பாத்தியின் அடியில் எருப்போடலாமேயொழிய, மண்ணோடு எருவைக் கலப்பது கூடாது.

நடுதல்.

ரோஜா நடுவதற்கு அதிக மழையும் அதிக வெயிலுமில்லாத மாதங்களே ஏற்றவை. நட்டவுடன் அதிக மழை பெய்தால், செடிகள் அழிந்துவிடும். அதிகமாக வெயிலடித்தால், மிகவும் திடமான செடிகளைத் தவிர மற்றவைகள் பட்டுப்போகும்.

செடிகளை நடும்போது அவைகளுடைய வேர்களுக்குக் கெடுதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏதாவது வேர் ஒடிந்தும் நசுங்கியும் போயிருந்தால், அதைக் கத்தியால் நறுக்கி எறிந்துவிடவேண்டும். அதிகம் அடர்த்தியான செடிகளில் கிளைகளையும் தழைகளையும் நறுக்கிவிடுவது நல்லது. செடிகளைப் பெயர்த்து நடும்போது, வேர்கள் சுறுசுறுப்பாக வேலைசெய்யமுடியாமலிருப்பதனாலும், செடிகளின் பலம் குறைந்துபோயிருப்பதனாலும், அந்தச் சமயத்தில் அதிக இலைகள் இருப்பது நல்லதன்று.

செடியை அதிக ஆழமாகவாவது அதிக மேலாகவாவது நடாமல், நடுத்தர ஆழத்தில் நடவேண்டும். நட்ட பிறகு, செடியைச்சுற்றிலும் மண்ணை மிதித்துவிடவேண்டும். நட்டவுடன் யதேஷ்டமாக ஜலம் பாய்ச்சவேண்டும்.

எருவிடுதல்.

மிதமிஞ்சி எருவிட்டால் ரோஜாச்செடி அழிந்துவிடும். அழுகிப்போன தொழுவத்தெரு வேருடன் படவேகூடாது, நன்றாய் மட்கின எருவையே உபயோகிக்கவேண்டும். சில ரோஜாக்கன்றுகளில், ஜல்லிவேர்கள் அதிகமாகிறவரையில் அதிக எருப்போட—

பானது அதிக நீளமாயும் பளுவாயும் இருக்கக் கூடாது. இதனால் அவைகளுக்குச் சிரமம் ஏற்படும். குழந்தைகளுக்கு அதிக இறுக்கமுறடான உடுப்புகளை அணிவதால் அவற்றின் மெல்லிய தேகம் காயப்பட ஹேதுவாகின்றது.

குழந்தைகள் தம் கைகால் முதலியவைகளைத் தாராளமாய்வீச சௌகரியமிருக்கும்படி அவற்றின் உடைகள் தைக்கப்பட்டிருக்கவேண்டும்; தேகத்தின் எப்பாகத்தையும் இறுக்காமல் கொஞ்சம் தாராளமாகவே யிருக்கவேண்டும்.

குழந்தைகளின் உடுப்புக்கள் வெகு சீக்கிரத்தில் அழுக்கடையக் கூடுமாதலால், அவற்றை உடனுக்குடனே களைந்து சுத்தம் செய்யவேண்டும். குழந்தையின் கால்கள் குளிர்ந்துபோகா வண்ணம் கம்பளியால் செய்யப்பட்ட மேஜோடுகள் போடவேண்டியது அவசியமாகும்.

## CARE OF CHILDREN DURING NURSING.

### குழந்தைகளுக்குப் பாலூட்டும்போது கவனிக்கவேண்டியவை.

தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பாலூட்டும் சமயத்தில் தமக்கு எவ்வித மனக்கவலையும், வியசனமும், பயமும் இல்லாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில், தம் மனதில் உதிக்கும் கவலை, வியசனம், பயம் முதலியவைகளால் தம்முடைய பாலுக்கும் தோஷம் ஏற்பட்டு, அப்பாலை உண்ணும் குழந்தைகளுக்கு அஜீர்ணம், பேதி, மாந்தம், ஜ்வரம் முதலிய வியாதிகள் ஏற்படுகின்றன.

# The Boys' Section.

## சிறுவர் பகுதி.

### ADVICE FOR YOUNG.

### சிறுவர்க்கான புத்திமதிகள்.

பாலியத்திலேயே தீநடத்தைகளை ஒழித்து நன்னடக்கைகளைக் கைக்கொள்ளவேண்டும்; ஏனெனில், 'தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும்' என்ற பழமொழிக்கேற்ப இளமையிலேயே விதைக்கப்பட்ட நற்குண துர்க்குணங்களாகிற விதைகள், நன்றாக வேரூன்றிப் பெரிய விருக்ஷங்களாக வளர்ந்து நன்மை தீமைகளாகிய அதனதன் கனிகளையே கொடுக்கின்றன. முட்செடிகளில் திராக்ஷப்பழங்களும், முட்பூண்டுகளில் அத்திப் பழங்களும் காணப்படாமைபோல, பொய் சொல்லவும், புரளி பேசவும், எதிர்த்துத் திறகவும், ஏளனஞ்செய்யவும், சிறுவயதிலேயே தொடங்கித் துர்க்குணத்தில் வளர்ந்துவரும் பிள்ளைகளிடத்தில் பெரியவரான பின்னர் நற்குணங்களும் நற்கிரியைகளும் காணப்படுவது மிகவும் அரிது.

வேலையில் ஊக்கமும், விடாமுயற்சியும், தர்மசிந்தையும், எளியவரிடத்தில் இரக்கமும், ஒருவருக்கும் தீங்கு செய்யாமையும், ருஜுபுத்தியும், பெருந்தகைமையும், தூய்மையும், மெய்ம்மையும், பொறையும், தாழ்மையும், கீழ்ப்படிதல் முதலிய நற்குணங்களும், பாலியம் முதற்கொண்டு பழகிவந்த பிள்ளைகளிடமே காணப்படுகின்றன. ஆதலின், ஆதியிலேயே புல்லொழுக்கத்தைத் தவிர்த்து நல்லொழுக்கத்தை மேற்கொள்ளவேண்டும். கீழோர் நட்பு மட்பாண்டம்போல் ஏதேனும் அற்பகாரணத்தால் வெகு சுலபமாய் உடைந்துவிடும்; பிறகு பொருந்தாது. ஆனால், மேலோர்நட்போ பொற்குடம்போல் சீக்கிரம் உடையாததாயும், உடைந்தாலும் சடிதியில் பொருந்துவதாயும் இருக்கின்றது.

நாம் பெற்றோர்க்கு என்றும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ஏனெனில், யாரேனும் ஒரு அற்பமானபொருள் கொடுத்தால், அவரை ஜீவனுள்ளளவும் மறக்கக்கூடாதென்று பெரியோர் கூறுகின்றனர். நமக்கு உடல், உயிர், பூலோகவாழ்க்கை முதலியவற்றைக் கொடுத்த பெற்றோர்க்கு நாம் கைம்மாறுசெய்து தீர்த்துவிடுவது இயலாது.



மாணாக்கர்கள் ஆசிரியர்முன்பு உண்மையோடும் ஆசாரத்தோடும் ஒழுகவேண்டும். தாம் கல்விகற்பதை நிறுத்திவிட்டிருப்பினும், எக்காலத்திலும் குருவைக்கண்டால் எழுந்து வந்தனைவழிபாடுகள் செய்தல்வேண்டும். குருவானவர் அழியாத ஞானத்தை உண்டுபண்ணுகின்றமையின், அவரை என்றும் மறக்கக்கூடாது. அவர் வேண்டும் உதவியைத் தவறாமல் செய்துமுடிக்கவேண்டும்; ஏனெனில், ஞானத்தினும் சிறந்த செல்வம் வேறில்லை.

பிறர் உன்னிடம் எவ்விதமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அவ்விதமே நீயும் பிறரிடம் நடந்துவருதல் வேண்டும்.

நாம் எதையும் ஒளித்துவிடலாம்; ஆனால், நம்முடைய குணங்களை உலகத்தார் அறியாமல் ஒருபோதும் ஒளித்தல் முடியாது.

அன்பே கடவுளென்று அறியாதவன், கடவுளுடைய குணாதிசயங்களைச் சற்றும் உணர்ந்தவனல்லன். நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும், பொருளுடையதாயும், உண்மையாயும், அவசியமாயும், பிறருக்குத் துன்பத்தைக் கொடாததாயும் இருக்கல்வேண்டும். நாம் நமது இந்திரியங்களை அடக்கியாளப் பழகிவரவேண்டும்.

எவன் எக்காலத்திலும் பிறருடைய நன்மைக்காகத் தன் உயிரைவேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கின்றானோ, அவனே 'மகான்' என்று சொல்லப்படுவதற்கு அருகனாயிருக்கின்றான்.

தன்னைவிடத் தன் குடும்பம் பெரியது; தன் குடும்பத்தைவிடத் தன் ஊர்பெரியது; தன்னூரைவிடத் தன் தேயம் பெரியது; ஆதலின், எவன் தேச நன்மைக்காக உழைக்கின்றானோ அவனே மேலோன்.

இது அழிவது; இது அழியாதது என்று அறிந்தவன் க்ஷணத்ரயமாகிய மண், பெண், பொன் ஆகிய இவைகளில் சற்றும் ஆசை வைக்கமாட்டான்.

தற்புகழ்ச்சி செய்துகொள்வது ஒரு பெரிய குற்றமாகும். அதனால் நம்மிடம் ஏதேனும் பெருமையிருக்குமாயின், அதுவும் குறைந்துவிடுகின்றது. அதைக்கேட்பவருக்கும் நம்மிடம் மதிப்பு உண்டாவதற்குப் பதிலாக அருவருப்பும் மனவருத்தமு முண்டாகின்றன. ஆதலின், தற்புகழ்ச்சி செய்துகொள்வதை எவ்வாற்றாலாயினும் ஒழிக்கவேண்டும்.

நாம் பிறரைப்பற்றிப் பேசநேர்ந்தால், அவருடைய நற்குணங்களைப்பற்றிப் பேசவேண்டுமே யொழிய, துர்க்குணங்களை எடுத்துக் கூறுவது கூடாது. அவ்வாறு அவர்களை இகழ்ந்துரைப்பதனால் மனவருத்தமும் சண்டையும் நேரிடும்.

காலையும் மாலையும் கடவுளைத் துதிக்க வேண்டும். பின்பு, பெற்றோர், ஆசிரியர், மன்னவன், பெரியோர் இவர்களை வணங்கவேண்டும். குறித்தகாலத்தில் அந்தந்த வேலைகளைத் தவறாமற் செய்தல்வேண்டும். சோம்பலுக்கு இடங் கொடுக்கக்கூடாது.

### JOHN POUNDS.

### ஜான் பௌண்ட்ஸ்.

சிறுவர்களே! மனிதன் தன் கஷ்டஜீவனத்திலும் பரோபகாரம் செய்யவேண்டும். கல்வி கற்பிப்பதைக்காட்டிலும் வேறு சிறந்த தானம் உளதோ? அதுவே அஞ்ஞானத்தைப் போக்கக் கூடியது; நற்கதி யடையச்செய்வது; தேசத்தைச் செழிக்கச் செய்வது. இத்தகைய சிறப்புப் பொருந்திய கல்வியை நாம் நமது ஒழிந்த நேரத்தில் பிறர்க்குப் போதித்தல் வேண்டும். இதற்கு உதாரணமாக "ஜான் பௌண்ட்ஸ்" என்பவரது சரித்திரத்தைச் சொல்லுவோம்:—

இவர் சுமார் 100 வருஷங்களுக்குமுன் இங்கிலாந்து தேசத்தில் "போர்ட்ஸ்மௌத்" என்னும் நகரில் வசித்துவந்தார்; மிகவும் எளிய குடியிற் பிறந்தவர். தம் ஜீவன நிமித்தமாக யாதொரு உத்யோகமும் பார்க்க மனமில்லாதவராய், கைத்தொழிலே மேலென்று எண்ணி, செருப்புத்தைக்கும் தொழிலை மேற்கொண்டு, அதனாற் கிடைக்கும் சுவல்ப வரும்படியைப்

வேண்டிய அவசியம் இல்லை, புலபுலப்பான நிலத்தில் மாட்டெருவும், களிமண்பாங்கான நிலத்தில் குதிரை லாயத்து எருவும் சிலாக்கியமானவை. அதிகப்பொடி யாயிராமல், பெருந்தூளாக இருக்கும் எலும்புப்பொடி ரோஜாவுக்கு மிகவும் சிலாக்கியமானது. அது நிலத்தி லிடப்பட்ட பிறகு வெகுகாலம்வரையில் பயிருக்கு உதவிவரும். ரோஜாச்செடி நிலத்தில் ஸ்திரமாக ஏற் பட்டபிறகு செயற்கையெருக்களை உபயோகிப்பது நல்லது. இதனால் நல்ல புஷ்பங்கள் கிடைக்கும். அடியில் வரும் செயற்கையெரு சிலாக்கியமானது: ஸூபர்பாஸ்பேட் 12 பங்கு, நைட்ரேட் ஆப் ஸோடா 10 பங்கு, ஸல்பேட் அப் மாக்னீஷியா 2 பங்கு, அன்னபேதி 1 பங்கு, ஸல்பேட் அப் லைம் 8 பங்கு: இவைகளைக் கலந்து உபயோகிக்கவேண்டும். இதை உபயோகிக்கும் அளவு ஒரு சதுரகஜத்துக்கு ¼ ராத்தலாகும்.

பருவநிலைமை உஷ்ணமாயிராமல் குளிர்ச்சியாயிருக் கும்போது தான் ரோஜாவுக்கு எருவிடவேண்டும். உஷ் ணகாலத்திலும் மழைக்காலத்திலும் ரோஜா செழுமை யாக நன்கு வளரும்படி தூண்டக்கூடாது. இந்தக் காலங்களில் அது சுறுசுறுப்பாக வளருமானால், பிறகு பலவீனமடைந்து சீக்கிரம் பட்டுப்போகும்.

பெரிய புஷ்பங்கள் கிடைக்கவேண்டுமானால், வேர்களுக்குத் திரவ ரூபமான எரு இடவேண்டும். திரவரூபமான சாணியெரு இதற்குச் சிலாக்கியமானது. அதைப்பின்வருமாறு தயார் செய்யவேண்டும்: புதி தான சாணியை ஒரு தொட்டியில் போட்டு ஜலம் விட்டுக் கரைத்துத் தினந்தோறும் கலக்கி விட்டுக் கொண்டிருக்கவேண்டும். சாணிஜலம் வைக்கோல் வர்ணமுள்ளதாக மாறினவுடன், அது உபயோகிக் கத்தகுந்த நிலைமையை அடைகிறது.

திரவ எருவை வெயில் கடுமையாயிருக்கும் மத்தி யான வேளையில் உபயோகிக்காமல், மந்தாரமாயிருக் கும் பிற்பகலிலாவது சாயங்காலத்திலாவது உபயோ கிக்கவேண்டும்.

### கபாத்து செய்தல்.

ரோஜாச் செடியைத் தக்கபடி கபாத்து செய்து வந் தால், அதில் புதிதாய்த் தளிர்கள் உண்டாகி, பெரிய புஷ்பங்கள் உண்டாகும்; செடியும் பார்வைக்கு லக்ஷணமுள்ளதாகும். அதிக நாட்பட்டவையும், புஷ் பங்கள் பூக்காதவையுமான கிளைகளை நறுக்கி எறிந்து விடவேண்டும். நன்றாய் வளர்ச்சியடையாத மிருது வான கிளைகளையும் அப்புறப்படுத்தவேண்டும். ரோஜா பயிர் செய்பவர்களில் அநேகர் கிளைகளைக் கபாத்து செய்தவுடன், ரோஜாச்செடியின் கீழே உள்ள மண் ணைக் கொத்தி அப்புறப்படுத்தி, வேர்களைக் காற்றாட விடுவதுமுண்டு, பிறகு எருவிட்டு மண்ணைத்தள்ளி மூடிவிடுவார்கள். களிப்பான நிலங்களிலும், மழை ஜலம் அதிகமாக ஓடும் நிலங்களிலும் இந்த முறை சிலாக்கியமானது. வடிகாலுள்ளவையும் ஈரத்தாக்கா யிராதவையுமான தரைகளில் இவ்விதம் செய்ய வேண் டியது அவசியமன்று. நிலத்தைக் கொத்திவிட்டு எருவிட்டால் போதும். ஈரத்தாக்கா யிராதவையும், புலபுலப்பான மண்ணுள்ளவையுமான நிலங்களில், செடியின் அடியிலுள்ள மண்ணை எடுத்துவிட்டால், நுட்பமான சிறுவேர்கள் ஸூர்ய உஷ்ணத்தால் கெடுத லடைந்து, செடியின் வீர்யத்தைக் குறைத்துவிடும்.

### ஜலம் பாய்ச்சுதல்.

வளரும் காலத்திலும் புஷ்பிக்கும் காலத்திலும் ரோஜாவுக்கு ஜலம் ஏராளமாக வேண்டியிருக்கும். வற ட்சியான காலத்தில் நிலத்தின் தன்மைக்குத் தக்கபடி வாரத்துக்கு இரண்டுதடவையோ அதிகமாகவோ ஜலம் பாய்ச்சவேண்டும். குளிர்ச்சியான காலங்களில் வாரத் துக்கு ஒருதரம் ஜலம் பாய்ச்சினால் போதும். ஜலம் விட்டு ஊறினவுடன் மேல்மண்ணைக் கிளறிவிடவேண் டும், இதனால் ஈரம் போகாமலிருக்கும்; மண்ணில் காற்றோட்டம் ஏற்படும்.

### பூச்சிகள்.

ரோஜாவைப் பாதிக்கும் பூச்சிகள் இந்தியாவில் அதி கம் இல்லை. சுறையான்களைப் போக்கப் பினைலில் மருந்தை ஜலத்தில் ஸ்வல்பமாகக் கலந்து தெளிக்க வேண்டும். செடியில் கம்பளிப்பூச்சி முதலிய புழுக் கள் இருந்தால், கிரோஸின் கலந்த ஜலத்தைச் செடி யின்மேல் தெளிக்கவும். 2½ படி இளஞ்சூடான ஜலத் தில் 2 அவுன்ஸ் கிரோஸின் எண்ணெயைக்கலந்து உபயோகிக்கவும். மப்பு மந்தாரமான காலங்களில் ரோஜாச் செடிகளில் பூஞ்சாணம் உண்டாவதுண்டு. மிகவும் நிழலான இடங்களிலுள்ள செடிகளில் இதர காலங்களிலும் பூஞ்சாணம் உண்டாகும். இலைசுருண்டு போவதும், இலைமேல் வெண்மையான பொடி தூவின துபோல் காணப்படுவதும், பூஞ்சாணம் வந்ததற்கு அறி குறிகளாகும்.

பூஞ்சாணம் உண்டாகாமலிருக்க, செடியில் காற்றுத் தாராளமாய் வீசும்படி செய்யவேண்டும். பூஞ்சாணத் தைப் போக்கப் பின்வரும் மருந்தை உபயோகிக்கவும்: 2 ராத்தல் மயில்துத்தத்தை 12 படி ஜலத்தில் கரைக் கவும். 1 ராத்தல் புதுச்சுண்ணாம்புக்கல்லைத் தாளித் துப் பொடியாக்கி, 12 படி ஜலத்தில் கரைத்து அந்த



ஜலத்தை மயில்துத்த ஜலத்தில் கலக்கவும். இதைக் குழாயினால் செடிகளின்மேல் மழை பெய்வதுபோல வருஷிக்கவேண்டும். இந்த மருந்துக்கு 'போர்டோ மிக்சர்' என்று பெயர். இதை உபயோகிக்கும்போது அடிக்கடி கலக்கிவிடவேண்டும்.

## WISDOM AND IGNORANCE.

## அறிவும், பேதைமையும்.

ஞானத்தின் கொடைகள் கடவுளினது பொக்கிஷங் களாம். அவர் ஒவ்வொருவனுக்கும் அவனது அந்த ஸ்துக்குத் தக்கவாறும், அவருக்குத் தோன்றியபடியும் அளந்துகொடுத்திருக்கிறார்.

அவர் உனக்கு ஞானத்தை அளித்திருக்கிறாரா? அவர் உண்மையறிவினால் உன் மனத்தைப் பிரகாசிப்பித்திருக் கிறாரா? அப்படியிருந்தால், அறிவீனர்களுக்கு அந்த ஞானங்களைப் புகட்டி, அவர்களை விருத்திக்குக்கொண்டு வருவாயாக. ஞானவான்களிடத்தில் அவற்றைச் சொல்லி உன்னைத் திருத்திக்கொள்வாயாக.

உண்மையான ஞானம் மூடத்தனத்தைப்போல் அவ் வளவு செருக்கடைவதில்லை. ஞானி அடிக்கடி ஸந்தே கிக்கிறான்; அவன் எண்ணங்களை மாற்றிக்கொள்ளு கிறான். மூடன் சந்தேகிப்பதில்லை. எப்பொழுதும் ஒரே பிடிவாதமாயிருக்கிறான். அவனது அறிவீனம் எங்கும் படிகிறது.

ஒன்றுமில்லாதவனது வறட்டுக்கர்வம் வெறுப்புக்கிட மானது. அவனது அதிகப்பேச்சு மூடத்தனத்திலும் மூடத்தனமாம் என்றாலும், மூடர்களது அவமதிப் பான சொற்களை ஸஹித்துக்கொள்வதும், அவர்களது ஒவ்வா மொழிகளைப் பொறுமையுடன் கேட்டு அவர் களுடைய தளர்வுகளைக் கண்டு மனமிரங்குவதும் அறி வுடையோரது கடமையாம்.

ஆனால், உன் ஸ்வந்தவீண் மனோபாவங்களால் பொங்கிவிடாதே; உனது மேதக்க ஞானத்தைப்பற்றி யும் புகழ்ந்து பேசாதே; அதிதுல்பமான மனித அறி வென்பது குருட்டுத்தன்மையையும், அஞ்ஞானத்தையுந் தவிர வேறொன்றுமன்று.

ஞானி தன் குற்றங்களை உணர்கிறான்; அடங்கியிருக் கிறான்; தன் சொந்த அங்கீகாரத்துக்காக மிகவும் பாடு படுகிறான். ஆனால், மூடனோ, தன் மனமாகிய குளப் படி நீரில் மூழ்கி, அதனடியிற்கண்ட கூழாங்கற்களி னிடத்தில் சந்தோஷங்கொண்டு, அவற்றை வெளிக் கொணர்ந்து, முத்துக்களென்று காட்டி, தன்னொத்த கண்பார்வையது புகழ்ச்சியைப் பெற்றுத் தானுங் களிக் கிறான்.

ஒருபயனுமில்லாத விஷயங்களில் தனக்குள்ள திற மையை மூடன் விபரீத கூறிக்கொள்ளுகிறான்; ஆனால், எவ்விஷயத்தில் அறியாமை வெட்கத்துக்குக் காரண மோ, அவ்விஷயத்தில் அவனுக்கு அறிவிருக்கிறதில்லை.

ஞானவழிகளில் ஒழுகும்போதுகூட அவன் மூட காரியங்களுக்காகவே உழைக்கிறான். அவமானமும், காரியபங்கமுமே அவன் சிரமத்துக்கு வெகுமதியாக அவனுக்குக் கிடைக்கின்றன.

ஆனால், ஞானியோ தன் மனத்தைக் கல்வியினால் பண்படுத்துகிறான், அவனது கலைப்பயிற்சி அவனு க்கு ஆனந்தத்தைத் தருகின்றது. அவன் பொது ஜன த்துக்காக உழைப்பது அவனுக்குக் கீர்த்தியைச் சூட்டு கிறது. எனினும், நற்குணங்களை அடைவதே அவன் முதன்மையான படிப்பாகக் கருதுகிறான். தன் தெய்வ நிலையை அறிவதற்காகவே அவன்படிக்கிறான்.—'ஞான தீபிகை' என்னும் நூலினின்று எடுத்தது.

## DISEASES OF CHILDREN.

## குழந்தைகளின் வியாதிகள்.

டாக்டர் H. C. ஒலியூவியர், M. D., என்பவர் ஒரு வைத்திய பத்திரிகையில், குழந்தைகளுக்குச் சில வியாதிகளின் முக்கியமான குறிப்புக்களைப் பின் வரு மாறு எழுதுகிறார்:—

சந்நிபாதம்:—குழந்தை திடீரென்று வாயை நன்கு திறந்து வீரிட்டு அழும்.

வயிற்றுவலி:—கால்களை வயிற்றுப் பக்கமாக அடிக் கடி மடக்கிக்கொண்டு மீண்டும் நீட்டி நீட்டி அழும். முகம் சிவந்திருக்கும். அழுகை வெகு பலமாயிருக்கும். முகம் சுருங்கி வெறுப்புடையதாகத் தோற்றும்.

அபந்நியாஸ ஜ்வரம்:—(Pneumonia fever) அடி க்கடி துரிதமாகப் பக்கவாட்டில் சாய்ந்து படுக்கும். இரண்டு கால்களையும் ஒன்றாகத் தூக்கிப்போடும். முகம் கடுகடுப்பாயிருக்கும்.

ஈளை:—முகம் ஒருவாறு மினுக்கிக்கொண்டு வெறு ப்புக்குறியுடன் கூடியதாயிருக்கும். விலாப்பக்கத்து மாம்ச பேசிகள் இழுக்கப்பட்டு முரண்பட்டிருக்கும்.

இருதய வியாதி:—முகத்தில் தெம்பில்லாமல் கவலை மேலிட்டிருப்பதாகத் தோற்றும். கண்கள் விரி ந்து வக்கமிட்டிருப்பதாகக் காணும். முகத்தின் மாம்ச பேசிகள் ஒருவாறு நீண்டு முகத்தை நீளமாகச் செய் திருப்பதுபோலத் தோற்றும்.

மூளை வியாதிகள்:—முகத்தில் இயற்கைக்கு விரோ தமான பல விகாரங்கள் தோன்றும். கண்கள் மூடி யிருக்கும், தலை சாய்ந்திருக்கும். உதடுகள் ஒன்றோ டொன்று சேர்ந்துகொண்டு வாய் எளிதில் திறக்க முடி யாமலிருக்கும்.

நீடித்த அஜீர்ணம்:—வாந்தியும், குமட்டலும் அடிக் கடி உண்டாகும். இத்துடன் வயிற்று வலிக்குரிய குறி களும் காணப்படும்.—வித்தியாபாநு.

# Notes.
## குறிப்புக்கள்.

### Vernacular Medical School in Burma.

பர்மாவில் தேசபாஷையில் வைத்தியப்பள்ளிக்கூடம்:—பர்மா தேசத்து லெப்டினண்ட் கவர்னர் அங்கு ஆங்கிலந்தெரியாத இந்தியர்களுக்குத் தேசபாஷையில் வைத்தியக்கல்வி பயிலுவிப்பதற்குப் பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்க ஏற்பாடு செய்ய ஒரு கமிடியை ஸ்தாபித்திருக்கிறார். அக்கமிடியானது: அநுபவபூர்வமாய்க் கல்வி கற்பிக்கவேண்டிய சௌகரியங்களைப் பற்றியும், பள்ளிக்கூடத்தில் எத்தனை மாணவர்கள்சேர்த்துக் கொள்ளக்கூடு மென்பதைப பற்றியும், இதற்காக நேரிடும்பணச்செலவைப்பற்றியும், நிர்வாகத்தைப்பற்றியும், இவ்வளவு காலம் பயிற்சி செய்யப்பட வேண்டுமென்பதைப்பற்றியும் ஆராய்ச்சிசெய்து விஷயங்களை அறிவிக்கும். இம்மாதிரி பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க உத்தேசித்திருப்பது, மேனாட்டு வைத்திய சாஸ்திரத்தை ஏழைஜனங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டேயாம்.

### Improved Agricultural Implements.

சீர்திருந்திய வியவசாயக் கருவிகள்:—இந்தியாவில் நாளுக்குநாள் சீர்திருந்திய விவசாயக்கருவிகளின் தேவைகள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. அவை, சென்ற 10 வருஷங்களுக்குமுன் விற்றுவந்ததைக்காட்டிலும் இப்போது பதின்மடங்கு அதிகமாகவே விற்று வருகின்றன. இதற்குக் காரணம்: வியவசாய அபிவிருத்தி விஷயத்தில் கவர்ன்மெண்டார் காட்டி வரும் ஊக்கமும், கூலிகள் போதுமானவளவு அகப்படாமையுமே யென்று துணியலாம்.

### Use of Sugar in curing Wounds.

விரணங்களை ஆற்றுவதில் சர்க்கரையின் உபயோகம்:—விரணங்களை ஆற்றுவதில் சர்க்கரையின் உபயோகத்தைப்பற்றிப் பின்வரும் குறிப்பு "வைத்திய கலாநிதி" யில் காணப்படுகின்றது:—

வியாதிகளுடையவும், அவற்றின் சிகித்சைகளுடையவும் தத்துவங்களை ஆராய்ச்சி செய்வதற்கென்று ஏற்பட்டுள்ள "ஸொஸைடி ஆப் பாதலாஜிகல் ஸயன்ஸ்" என்னும் சங்கத்தில், டாக்டர் கிஹாஸ்ட் என்பவர், தாம் அநேக சமயங்களில், மிருகங்களுக்கு சஸ்திர சிகித்சை செய்கையில், அவற்றின் விரணங்களை உப்பு நீரால் கழுவி, அப்பால் சர்க்கரையை அந்த விரணங்களின்மேல் தூவி அவற்றை ஆற்றியதாகக் கண்டுபிடித்ததாய்ச் சில விஷயங்களைக் கூறினார். சர்க்கரையைத் தூவி வருகையில் சில நாட்களுக்கெல்லாம் விரணம் விரைவாக ஆறிவருவதைக் காணலாம். இதே சிகித்சையை மனிதருக்கும் சீழ்ப்பிடிக்கும் விரணங்களில் செய்து பரீக்ஷித்துப் பார்க்கவேண்டுமென்று டாக்டர் கிரோலெட் என்பவர் வற்புறுத்திக் கூறினார். அவ்விதமே மனிதருக்கும் இதை உபயோகித்துப் பார்த்ததில் நன்றாகப் பிரயோஜனப்படுவதாகத் தெரிய வந்தது. சர்க்கரைக்கு பூயாபஹம் (Antiseptic) என்கிற குணம் விசேஷமாய் உண்டென்பது வெகு காலத்திற்கு முன்னே நம்மவருக்குத் தெரிந்து அவ்வாறு செய்வது வழக்கத்தில் இருந்துவந்ததென்பதை மட்டும் கவனிக்கவேண்டும். சில நாட்களுக்கு முன்பு மேனாட்டு வைத்தியர்கள் சர்க்கரையை அயோடோபாரத்துடனாவது நாப்தலேனுடனாவது கலந்து விரணங்களுக்கு உபயோகித்து வந்ததுண்டு. மூன்று வருஷங்களுக்கு முன்பு டாக்டர். G. மாக்னஸ் என்பவர் பரீக்ஷார்த்தமாகச் சர்க்கரையை விரணங்களில் உபயோகித்து நற்குணங் கண்டிருக்கிறார்.

### Travelling Dispensaries.

சஞ்சாரம் செய்து வைத்தியம் செய்யும் ஆஸ்பத்திரிகள்:—சென்னை இராஜாங்கத்தாருக்கு ஸர்ஜன் ஜனரல் சிபார்சு செய்திருந்தபடி அவர்கள், ஊர்தோறும் போய் ஜனங்களுக்கு வைத்தியம் செய்யும் ஆஸ்பத்திரிகளைப் பரீக்ஷார்த்தமாக ஸ்தாபிக்க ஒப்புக்கொண்டார்கள். இவ்வாஸ்பத்திரிகள் சில தேர்ந்தெடுக்கப்பட்ட ஸிவில் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களின் மேற் பார்வையின் கீழ், கடப்பை, நெல்லூர், பல்லாரி முதலான ஜில்லாக்களில் மலேரியா வியாதிகள் பரவியிருக்கும் இடங்களுக்குப் போய் வேலை செய்யும்.

### The Industrial Commission.

கைத்தொழில் கமிஷன்:—கைத்தொழில் கமிஷன் மறுபடியும் ஸர் தாமஸ் ஹாலண்ட் அக்கிராஸனத்தின் கீழ் நவம்பர் மாதம் ஆரம்பத்தில் பம்பாயில் கூடும். நவம்பர் மாதம் முழுவதும் பம்பாய் இராஜதானியிலேயே வேலை செய்து பிறகு பஞ்சாபிற்குப் போகுவார்கள். அங்கிருந்து ஆஸாம் முழுவதும் சுற்றியபிறகு, பர்மாவிற்கு விஜயம் செய்வார்கள். அங்கு வேலை முடிந்தவுடன் மறுபடியும் டெல்லிக்குத் திரும்பி வந்து ரிபோர்டு எழுத ஆரம்பிப்பார்கள்.



# Miscellaneous News.
## நாநாவித சங்கதிகள்.

காலிபோர்னியாவிலிருக்கும் விட்டியர் என்னும் பட்டணத்தில் மிஸ்டர். எச் ஏ. உட்வொர்த் என்பவருக்குச் சொந்தமாயிருக்கும் ஒரு பேரி மாமானது நெருப்பு பனி முதலியவற்றால் நாசமடையாமலும், சொந்தக்காரருக்கு நஷ்டமில்லாமலும் இருக்கும்பொருட்டு 6,000 பவுனுக்கு இன்ஷியூர் செய்யப்பட்டிருக்கிறதாம். அந்த மரத்தில் பிரதி வருஷமும் சுமார் 640 பவுன் மதிப்புள்ள காய்கள் கிடைக்கின்றனவாம்.

∴ ∴ ∴

கல்வி யபிவிருத்தி விஷயத்தில் சுதேச சமஸ்தானங்கள் மிகவும் முற்போக்கடைந்து வருகின்றன. கோலப்பூர் சமஸ்தானத்தில் ஆரம்பக் கல்வியானது இலவசமாயும் கட்டாயமாயும் செய்யப்பட்டிருக்கின்றது. இதன் செலவுக்காக மகாராஜா அவர்கள் இவ்வருஷம் ஒரு லட்சம் ரூபாய் அதிகம் உத்திரவு செய்திருக்கிறார். இதைப் போலவே இன்னும் சில சமஸ்தானங்களிலும் ஆரம்பக் கல்வியானது கட்டாயமாயும் இலவசமாயும் ஆக்கப்பட்டிருக்கின்றது. இவ்விதமே பிரிட்டிஷ் இந்தியாவிலும் அநுசரிக்கப்பட்டால் மிகுந்த நன்மை உண்டாகும்.

∴ ∴ ∴

சுருட்டுப் பிடிக்கும் வழக்கமானது நமது நாட்டில் வெகு விரைவாய்ப் பரவிக்கொண்டு வருகின்றது. இதைத் தடுப்பதற்கு இராஜாங்கத்தாரால் பலத்த முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படாவிட்டாலும், ஆங்காங்குப் பொதுச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்படுவது அவசியமாகும். கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இத்தகைய சங்கத்தாரின் கூட்டமொன்றில் தலைமை வகித்த டாக்டர் C. ஸர்க்கார் யம். டி. என்பவர் சுருட்டுப் பிடிப்பதன் கெடுதல்களைப் பற்றிப் பேசுகையில்: அது நமது ஞாபக சக்தியை ஒழித்துவிடுகின்றதென்றும், தேக சௌக்கியத்தையும் மனோ சக்தியையும் கெடுக்கின்றதென்றும், இதனால் வரும் நோய்களைத் தீர்க்கத்தக்க மருந்துகளே இல்லையென்றும் குறிப்பிட்டார்.

∴ ∴ ∴

உலகத்தில் எங்கும் உபயோகிக்கப்படும் கற்பூரமானது ஜப்பான் தேசத்தில்தான் உற்பத்தியாகின்றது. அங்கு 1916-17-ம் வருஷத்தில் 20,000 மணங்கு கற்பூரமும், 40,000 மணங்கு கற்பூரத்தைலமும் உற்பத்தியாயினவென்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இந்தக் கற்பூர மரங்கள் ஜப்பானைச்சேர்ந்த பார்மோசாத்தீவில் தான் மிகுதியாக வளர்கின்றன. ஜப்பானைவிட அங்குக்கற்பூரம் அதிகமாக உற்பத்தியாகின்றது.

∴ ∴ ∴

அமெரிக்காவில் பிலடெல்பியா என்னும் ஊரிற்பிறந்த ... என்பவன் உலகத்திலிருக்கும் பிள்ளைகளுக்கெல்லாம் உயரமாயும் கனமாயும் இருக்கின்றானாம். அவனது உயரம் 6 அடி, 7 அங்குலம்; எடை 182 ராத்தல். அவனுக்கு வயது 15 தான் ஆகின்றதாம். இந்த சிறு வயதில் இவ்வளவு உயரமும் கனமுமிருப்பது ஆச்சரியமே.

∴ ∴ ∴

மேல்கனடாவில் வியவசாயத் தொழிலானது மின்சாரத்தின் உதவியைக்கொண்டே நடத்தப்பட்டு வருகின்றது. கட்டிடங்களும், களஞ்சியங்களும் மின்சார விளக்கினால் பிரகாசப்படுகின்றன. இன்னும் தானியங்களை அடிக்கும் யந்திரங்கள், நீர்பாய்ச்சும் யந்திரங்கள், பால்கடையும் மத்துக்கள் முதலியன மின்சாரத்தினாலேயே வேலை செய்கின்றன. பசுக்களிலிருந்து பால் கறப்பதற்கும் மின்சார சக்தியினால் ஓட்டப்படும் யந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

∴ ∴ ∴

கல்கத்தாவாசியாகிய சுரேந்திரநாத மசும்தார் என்பவர், 'மர்ச்சண்ட் ப்ரின்ஸ்' என்ற கப்பலுக்கு 4-வது இஞ்சினீயராக நியமிக்கப்பட்டிருக்கிறதாகச் சமாசாரம் எட்டுகின்றது. இங்கிலீஷ் கப்பலில் இந்தியருக்கு உத்தியோகம் கிடைப்பது இதுதான் முதல்தடவையாகும்.

∴ ∴ ∴

கல்வி யபிவிருத்தியின்பொருட்டு லண்டன் யூனிவர்ஸிடிக்கு ரடன் டாடா மறுபடியும் 1400 பவுன் நன்கொடையளித்திருக்கிறார். இதை லண்டன் யூனிவர்ஸிடி ஸெனெட் ஸபையார் மிக்க வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களென்று திராவிடாபிமானி பத்திரிகை கூறுகின்றது.

∴ ∴ ∴

நியூயார்க்கைச் சேர்ந்த ப்ரூக்லினிலிருக்கும் ஆலிவர் என்னும் கம்பெனியில் இரும்புவேலை செய்து கொண்டிருந்த கூலிக்காரர்கள் திடீரென்று தங்கள் வேலையை நிறுத்திவிட்டார்களாம். காரணம் என்னவென்று கேட்டதற்கு: அதிகாரிகள் தங்களை மரியாதையாய் நடத்தவில்லையென்றும், "கனவான்களே" என்று கூப்பிடுவதில்லையென்றும் பதில் சொன்னார்களாம்.

## Books and Reviews.
## புத்தகங்களும், விமர்சனங்களும்.

### The Light of Wisdom.

ஞானதீபிகை:—இப்பெயர்கொண்ட அரிய நூலொன்று, சென்னை 'பெண்கல்வி' ஆபீஸினின்று வரப்பெற்றோம். இப்புத்தகத்தின் குணாதிசயங்களைப்பற்றிக் கூறுமுன், இதன் பூர்வ சரித்திரத்தைப்பற்றிக் கொஞ்சம் ஆராய்வது அவசியமாகும். பதினெட்டாம் நூற்றாண்டின் மத்தியில் சீனாதேசத்தைச் சேர்ந்த கயாட்ஸோ என்னும் வித்வான் அத்தேசத்துச் சக்கிரவர்த்தியின் ஆஜ்ஞைப்படி பல சமஸ்கிருத நூல்களை ஆராய்ச்சி செய்து அதன் பயனாக இந்நூலைக் கண்டெடுத்தார். இது பலகாலம்வரையில் கவனிக்கப்படாமலேயேயிருந்தது. பிறகு, இதை மேற்குறித்த கயாட்ஸோ என்னும் வித்துவான் சீனா பாஷையில்மொழி பெயர்த்தார். பிறகு, 1749-ம் வருஷத்தில் இப்புத்தகமானது ஒரு கிறிஸ்தவப்பாதிரியால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இவ்வாறு பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு அந்தந்த தேசங்களில் கவர்ன்மெண்டாரால் பள்ளிக்கூடங்களில் சன்மார்க்கப் படிப்புக்காக உபயோகப்படுத்தப்பட்டு வந்தது இதன் மேன்மையைத்தெரிவிக்கும். இதை தமிழில் மொழிபெயர்த்தவர் மிஸ்டர். ம. வே., சிவசுப்பிரமணியராவர். இப்போது பாடசாலைகளில் சன்மார்க்கப் படிப்பு அவசியமாய்க் கற்பிக்கப்படவேண்டுமென்று கல்வி இலாகாத் தலைவர்களாலும் பொதுஜன பிரதிநிதிகளாலும் வற்புறுத்தப்படுகின்றது. இதற்கிணங்க, ஜனங்களுக்குள் பொதுவான உணர்ச்சிகளை அபிவிருத்தி செய்யவும், சன்மார்க்கத்தைப் போதிக்கவும், பட்சபாத உணர்ச்சி, தீய சிந்தனை, பேதபுத்தி முதலியவற்றை ஒழிக்கவும் தேச பாஷைகளில் 'ஞானதீபிகை' போன்ற நூல்கள் சொற்பமேயிருக்கின்றன. மற்றும் இந்நூலில், ஸ்திரீ புருஷர்கள் தத்தம் கடமைகளைச்செய்து முடிக்கவேண்டியவைகளைப் பற்றிப் பல விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இப்புத்தகம் மதத்வேஷமில்லாமல் எழுதப்பட்டிருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இதன் விலை அணா 12., வேண்டுவோர்: சென்னை, இராமசாமி தெருவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் 'பெண்கல்வி' ஆபீஸுக்கு எழுதிப் பெறலாம்.

### Athichoodi Moral Stories.

ஆத்திசூடி நீதி கதைகள்:—இந்நூலானது, சிறந்த வசன நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதில் ஒளவையார் அருளிச்செய்த ஆத்திசூடியில் உள்ள 'அறஞ்செய விரும்பு' ஆதியாய் "ஓரஞ்சொல்லேல்" என்பது இறுதியாக உயிர்வர்க்கமும் ஆய்தமும் முதலாக அமைந்த அமுதவாக்கியம் பதின்மூன்றையும் அதிகாரமாகக்கொண்டு, அவற்றின்கீழ் விளக்கமான பொருளும், அவற்றைக்குறித்த வியாசமும் பின்பு அவ்வந்நீதி வாக்கியங்களுக்கு ஏற்ற உதாரணமாக இதிஹாஸ புராணங்களிலிருந்தும் பைபிளிலிருந்தும் விரிவாக எடுத்தெழுதிய இனியகதைகளும் காட்டப்பட்டுள்ளன. இந்நூல் வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. விலை அணா 8. வேண்டுவோர்: மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர் என்று எழுதிப்பெறலாம்.

### Champakamalini.

சம்பகமாலினி:—இது, ஆங்கிலபாஷையில் பிரவித்திபெற்ற மகாகவியாகிய டெனிஸன் "துரைமகனார் இயற்றிய "ஏலேயின்" (Elaine) என்னும் அரிய செய்யுள் நூலின் கதைப்போக்கைத் தழுவி இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இதை இயற்றியவர் ஸ்ரீமான் ப. ம. வேணுகோபால் நாயுடு அவர்கள். இதில் ஆங்காங்குப் பற்பல அரிய பெரிய நீதிகள் காணப்படுகின்றன. நல்லபாஷாஞானம் தாக்கூடிய இந்நூல் வித்வான்கள் பலராலும் நன்கு மதிக்கப்பட்டது. விலை அணா 4. வேண்டுவோர்: ஜனோபகாரி ஆபீஸுக்கு எழுதிப் பெறலாம்.

### Auvai.

ஒளவை:—நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதி நூல்களையும் தனிப்பாடல்களையும் அருளச்செய்து உலகத்தை உய்வித்த ஒளவையாரின் திவ்விய சரித்திரம் பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அநுசரித்தும், வேலூர் ஊரீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் இனிய எளிய வசனநடையில் இயற்றப்பட்டது; எவரும் சிறுமியரும் எளிதிற் படித்தறிந்துகொள்ளக்கூடியது; வித்வான்கள் பலராலும் மெச்சப்பட்டது. நல்ல காகிதத்தில் அழகாக அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா 6. ஜனோபகாரி சந்தாதார்களுக்கு மாத்திரம் அணா 5க்குக் கொடுக்கப்படுகின்றது. வேண்டுவோர்: வேலூர் ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

### Karaikalammai Charithai.

காரைக்காலம்மை சரிதை:—கற்பிலும் சிவா பக்தியிலும் சிறந்த பெண்மணியும் சிவனடியார் அறுபத்துமூவரில் ஒருவரும், தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம், நம் நாட்டுப் பெண்பாலர் பலர் கையிலும் இருக்கத்தக்கது. விலை அணா 1. வேண்டுவோர் வேலூர், ஜனோபகாரி ஆபீஸுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.


# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. } பிங்களஹு ஆவணிமீ AUGUST, 1917. { சஞ்சிகை 8. No. 8.


## The Dignity of Indian Music.


BY MR. S. V. NATARAJAN.

*Editor "The Madras Fortnightly."*


## இந்திய சங்கீதத்தினது பெருமை.

சங்கீதத்தைப் பாடும் திறமாவது உணரக்கூடிய சக்தியாவது ஒரு மானிடப் பிறவிக்கேற்படுமாகில், அவை கடவுளால் மனிதர்க்கு அருளப்பட்டிருக்கும் சிலாக்கியங்களாகும். இவ்வுலகில் பலவித்தைகள் சிறந்தவையென்று சொல்வதில், நாலு, ஐந்து வித்தைகளே பிரதானமானவை. அவைகளாவன:—(1) ஸங்கீதம் (2) வெண்பா முதலியன இயற்றல், (3) சிற்பவேலை (4) சித்திரவேலை. இவைகளைப்போல் இன்னும் எவ்வளவோ அற்புதங்களை நாம் பார்த்தநுபவித்தும் வருகிறோம். மிகவும் வேலைப்பாடுகளமைந்த ஒரு கட்டிடத்தையாகிலும், கியாதிபெற்ற சிற்பவேலைக்காரனால் வரையப்பட்டஒரு சிலையையாகிலும், நாம் உயர்ந்தது அரைமணி நேரத்திற்குமேல் பார்த்து ஆனந்திக்கமுடியாது; ஏனென்றால், அலுப்புத்தட்டிவிடுகிறது. இவ்விதமலுப்பை விளைவில்கொடுக்கும் மற்றவித்தைகளைப்போல் சங்கீதவித்தையைக் கூறுவது மிகப்பிழையாகும் என்பது நமது துணிபு. சங்கீதத்தை, ஒருவரும் "அன்று கேட்டாகிவிட்டது" என்று கூறார்; நினைக்கவும் நினையார்.

ஆகாயவீதியிலுள்ள கிரகங்களனைத்தும் அதனதனுடைய நிலையிலேயே சுற்றிச் சுற்றி வருகின்றன வென்பது யாவரும் அறிந்தவிஷயமே. அவைகள், அவ்விதஞ் சுற்றிவருகின்றபோது, ஒரு இனிய இராகம் பிறக்கின்றதென்று கிரேக்கதேசத்தில் ஒரு புத்திமானாகிய தத்துவசாஸ்திரி பைதாகொரஸ் (Pythogoras) என்பவர் சொல்லுகிறார். நாம் 'ஸங்கீதம்' என்பதைப் பிரிப்போமானால்,— ஸம்யக்—கீதம் என்றாகிறது. அதாவது, 'நன்றான பாட்டு' என்பது சங்கீதமே. அதனை ஒத்து கிரேக்கசாஸ்திரி சொல்லுகிறார்போலும். இன்னமொன்று நாம் கவனிப்போம்: தெருக்களில் சிலபிள்ளைகள் பம்பரம் விடுகிறார்கள். அது கடுமையான வேகத்துடன் சுழலும்போது, அதினின்று பிறக்கும் இனிய குரலைக் கவனியுங்கள். அவ்விதமிருக்க, ஆகாயத்திலுள்ள கிரகங்கள் சுற்றும்போது இராகம் பிறக்கிறது என்பது நம்பத்தகுந்ததே.

சிலர், மனுஷியன் நீங்க, மிருகம் பக்ஷி முதலியவைகட்குச் சங்கீதத்தில் பிரியமில்லையெனக்

கூறுவதுண்டு. அது ஒவ்வாததாகும். மேனாடுகளில், சிலர், வேட்டையில் துப்பாக்கி ஈட்டி முதலிய ஆயுதங்களை எடுக்காமல் சங்கீதத்தொனியை வாத்தியங்களினாலோ, தமது வாயினாலோ வெளியிடுகிறார்கள். சங்கீதத் தொனியைக் காதில் வாங்கும் கொடிய சிங்கம் புலி முதலிய மிருகங்கள்கூட, பாடுகிறவன்சமீபத்தில் முகத்தைக் கீழே போட்டுக்கொண்டு படுத்துத் தம்மை முற்றிலும்மறக்கின்றன. பிறகு, பாட்டை நிறுத்தாமல், அவற்றிடம் இவன் போகவும், அக்கொடியவை இவனை ஒன்றுஞ்செய்யாதிருப்பதைப் பார்த்து, கூட்டில் உயிருடன் அடைத்துவிடப்படுகின்றன. தவிர, நம் நாட்டிலே கைகண்ட ஒன்றைக் கவனிப்போம்: கிடைமாடுகள் மேய்க்கும் இடையன், "பாடிக் கறக்கும் மாட்டைப் பாடிக்கற" என்று சொல்லுவான். பாடாதுபோனால், அம்மாடு கறவாது. இங்கிலாந்து, அமெரிக்கா பக்கங்களிலும் மாடு ஆடுகள் பாடியே கறக்கப்படுகின்றன. அநேகம் பக்ஷிகள் தமது இனிய குரலினால் தமது பெட்டையைக் கவருகின்றன. கொடிய பாம்புகள் 'புன்னாகவராளி' மாத்திரம் ஊதக்கூடிய மகுடி நாதத்தைக் கேட்டு மயங்கவில்லையா? சில மேனாட்டோர்கள் மரம், கல் முதலிய உயிரற்ற பொருள்களுங்கூடச் சங்கீதத்தைக்கேட்டு உருகுகின்றன என்பதைப் பத்திரிகைகளில் பலதடவை படித்திருக்கிறோம். ஆகையினால், கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட இயற்கைப்பொருள் யாவற்றுள்ளும் சங்கீத ஞானம் இருப்பதே, சங்கீதமானது யாவற்றினும் மேன்மைபெற்றது என்பதற்குப் போதிய சாக்ஷியாக இருக்கிறது. இவ்விதம் மிருகங்கள், பறவைகள், ஊர்வன முதலியவற்றிற்குச் சங்கீத விருப்பம் உண்டு என்பதை ஒருவாறு சொல்லி முடிப்போம்.

மானிட ஆத்மாவைப்பற்றி எடுத்துக்கொள்வோம். ஒரு குழந்தை பிறந்ததுமுதல் மனிதனாகியும், விருத்தனாகியும் பிறகு காலஞ்செல்லும்வரையில் சங்கீதம் அவனை விட்டபாடில்லை. குழந்தை பிறந்தவுடன் தான் இத்துங்க சமுத்திரவுலகில் தோன்றினேனேயென்று அலறி அழுவது ஓர்பாட்டேயாகும். அது பூமிஸ்பரிசம் செய்யும்போது தன்னைக்குறித்து வருந்தித்தான் அழுகிறது. ஆனாலும், அதை ஈன்றதாய் இனிய குரலாய் நினைக்கிறாள். திருவள்ளுவர் தமது குறளில் ஒன்று கூறியிருப்பது பாருங்கள்:

'குழலினிது யாழினி தென்ப தம்மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்."

என்றார். அதாவது தம் குழந்தைகளின் மழலைச் சொற்கேளாதவரே, புல்லாங்குழல், வீணை முதலிய இசை (சப்தம்) இனிதென்று கூறுவார்கள் என்பதாகும். பிள்ளையைப் பெற்றதாய் பெற்ற தினம்மாத்திரம் சந்தோஷிக்கவில்லை; எப்போதும் உத்ஸாகங்கொள்ளுகிறாள்: பிரதிதினமும் தாலாட்டுகிறபாட்டினால் தனது குழந்தையைத் தூங்கச் செய்கின்றனள். குழந்தை ஐந்தாறு வயதுவரையில் வாயில் வருவதெல்லாம் பாட்டாகவே உபயோகிக்கின்றது. தெருவோடு ஒருவன் போகும்போது, 'சங்கீதம்' என்பதே தனவிலுமறியாதவனானாலும், ஏதேனும் பாடிக்கொண்டே போகின்றான். அவ்விதம் பாடாவிடில், நடப்பது முடியாததுபோலும்.

எல்லாவற்றையும்விட, திருவள்ளுவர் மேன்மையாகச் சங்கீதத்தைப்பற்றித் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்: "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வந், செல்வத்து ளெல்லாந் தலை." என்றும், "செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள், அவியினும் வாழினு மென்?" என்றும் கூறியிருப்பதன் பொருள்: "எவ்விதச் செல்வமிருந்தாலும், செவிச்செல்வமே தலைமைகொண்டது." என்றும், "செவிச்சுவையை அறியாத மானுடன் இறந்தும், இருந்தும் ஒன்றே" என்றும் ஆகிறது. இதனாலே, சங்கீதம் யாவற்றினும் தலைமைகொண்டதென்பது நன்கு விளங்குகிறது. 'சங்கீத ஞானமில்லாதவன் மோட்சமடையமாட்டான்.' என்றும், 'அவன் மிருகப் பிறப்பிலும் கீழ்' என்றும் சிலர் சொல்லுவார்கள். அது வாஸ்தவமே. ஆங்கில நாடகக்கவியாகிய ஷேக்ஸ்பியர் யாது சொல்லியிருக்கிறார்?— "சங்கீத ஞானமில்லாதவன் மகாகல்நெஞ்சன். கொலை, ராஜத்துரோகம்



முதலிய கொடிய காரியங்களைச் சிறிதும் பாராது செய்வான்." வேதம் புராணங்கள் கூறுவதுபடி, மோட்சமடையச் சங்கீதம் அவசியந்தேவையே. மோட்சவாசிகளின் வேலை யாதெனில், இடைவிடாமல் பகவானைத் துதிப்பாடல் பாடுவதேயாம். நாளைக்கும் கிறிஸ்தவராது கோவிலில் கடவுளை நாதரூபமாகப் பஜிக்கின்றதை நாம் பார்க்கலாம். இவ்விதம் மேலே கூறியபடி இல்லாதவனுக்கு மோட்சஸ்தானம் இல்லையென்பது நாம் கூறவும் வேண்டுமோ?

'சங்கீத ஞானமில்லாதவனுக்கு மோட்சங் கிடையாது' என்று கூறுவதற்குச் சிலர், 'ஒவ்வொரு ஆன்மாவுமா சங்கீதத்தை அறிந்திருக்கிறது?' என்று ஒரு கேள்வி பிறப்பிக்கக் கூடும். சங்கீத ஞானமில்லாதவன் என்பதன் அர்த்தம், இவ்விடத்தில் சங்கீதத்தை வெறுப்பவன் என்று தொனிக்கிறது. சுயமாக ஞானம் சங்கீதத்தில் இல்லாதுபோனாலும், கேள்விச் சக்தியிருந்தால் போதுமானது. நாம் முதலில் இவ்வியாசத்தில், சங்கீத சம்பந்தமான அறிவு ஒரு மனுஷியனுக்கு உண்டாவது, கடவுளால் அருளப்பட்ட ஒரு பாக்கியமே என்று கூறினபடி, சுயம் சங்கீதத்தை உபயோகிக்கவோ, அல்லது பிறரால் கானம் செய்யப்படுவதைக் கிரகிக்கவோ, இவ்விரண்டு சக்திகளும் இல்லாவிடினும், அதைக் கேவலம் என்று விரோதிக்காமலே இருந்தால், அது ஒருபெரிய அறிவாகும். சங்கீதத்தைத் தான் பூஷிக்காவிட்டாலும், தூஷியாமலிருந்தால் போதுமானது.

ஒவ்வொரு ஆன்மாவும் சர்வேசுவரனது இரண்டு குணங்களாகிய (1) நாதப்பிரம்மம் (2) காரணப்பிரம்மம் இவைகளை முக்கியமாய் அறிய வேண்டும் என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. ஒருவன் நாதத்தின், (சங்கீதம்) மூலமாகப் பகவானை ஸ்தோத்திரஞ் செய்வானானால், விரைவில் கடவுள் அவன்முன் தோன்றுகிறார் என்று புராணங்கள் கூறுகின்றன. ஒருவன் சர்வேசுவரனை அடைவதற்கு இதிகாச புராணங்கள் கற்காதவனாக இருந்தாலும், "சிவா—ராமா" என்கிற நாமோச்சாரணங்களைத் தனது இங்கிதமான குரலைச் சங்கீதத்துடன் தன்னாலியன்றவாறு உறுதியுடன் சொல்லி வருவானாகில், நற்கதியை யடைவான். இவ்வளவு போச்சுபதை இதற்கு இல்லாவிடில், 'நாதப் பிரம்மம் காரணபிரம்மம்' என்று புராணங்கள் சொல்லுமா? மனிதனுக்கு ஆறுதலைச் செய்யவும், கடவுளை வழிபடவும் சங்கீதம் அவசியமே. தற்காலம் நடந்துவரும் கொடிய சண்டையில் போர்வீரர்கள் குதூகலிப்பதற்கு இச்சங்கீதமே காரணமாகும். சண்டைக்குதிரைகள் தம்காதில் பாண்டு வாத்தியங்களின் தொனி விழுந்தபிறகே சண்டைக்குத் தயாராக இருப்பதை அறிகின்றன.

இன்னும் இவ்விஷய சம்பந்தமாய் நாம் கவனிக்கவேண்டிய (1) சங்கீதாபிவிருத்தி, (2) இந்திய சங்கீதம் மற்ற தேசகீதங்களைவிடப் பெருமையுள்ளது, (3) அதை உபயோகிக்கும் விதம், (4) அதற்குக் குரு எவ்விதமிருக்கவேண்டும்? சிஷ்யக்கிரமம் எவ்விதம்? இவைகளைப் பற்றி பிறகு எழுதுவோம்.

எஸ். வி. நடராஜன்.

---

## Cultivation of Tapioca.

### மாவள்ளிக்கிழங்கு பயிர்செய்தல்.

இது முதன்முதல் தென் அமெரிக்காவிலிருந்து போர்ச்சுகீஸ் தேசத்தவரால் மலையாள தேசத்துக்குக் கொண்டுவரப்பட்டது. இதற்கு ஆள்வள்ளிக்கிழங்கென்றும் சவாரிக்கொட்டையென்றும் பெயர்கள் உண்டு. திருவாங்கூர் சம்ஸ்தானத்தில் இது ஏராளமாகப் பயிர்செய்யப்பட்டு, ஏழை ஜனங்களுக்கு ஆகாரமாக உபயோகப்படுகின்றது. இதில் அநேக விதங்கள் உண்டு. இதன் பச்சைக்கிழங்கில் ஒருவித விஷச்சத்து இருக்கின்றது; வேகவைத்தால் இவ்

விஷம் நீங்கிவிடும். இதை ஏழை ஜனங்கள் கவனியாமல் பசியின் கொடுமையால் பச்சைக் கிழங்குகளை அப்படியே தின்று மாண்டு போகின்றனர். இச்செடி மிகவும் அழகாயுள்ளதனால், ஜனங்கள் இதை அநேகம் பூந்தோட்டங்களில் வைத்துப் பயிர்செய்கின்றார்கள்.

நிலம்:—சமுத்திரமட்டத்திற்குமேல் 2000 அடி உயரத்திற்குள்ளிருக்கும் எந்தப்பூமியிலும் இப்பயிர் செய்யலாம்; பூமி நல்ல வடிகால் வசதியுள்ளதாக இருக்கவேண்டும். தோட்டக்கால் நிலங்களிலும் மணற்பாங்கான நிலங்களிலும் இப்பயிர் வளரும். மலைகளின்மேல் பயிராகும் கிழங்குகள், சமபூமியில் பயிரிடப்படுவனவற்றைக் காட்டிலும் ருசியுள்ளவையாயிருக்கின்றன.

நிலத்தைப் பண்படுத்தல்:—நிலத்தை ஒன்று அல்லது ஒன்றரை அடி ஆழம்வரை எழெட்டுத்தரம் உழவேண்டும். நிலத்தில் ஆங்காங்கு மேடு பள்ளங்களில்லாமல் சமமாக நிரவவேண்டும். மண்கட்டிகளிருக்குமானால் அவற்றை உடைத்துச் சமமாக்கவேண்டும். பிறகு, சிறுசிறு பாத்திகளாகக்கட்டி, அவற்றில் முழத்துக்கு ஒரு துண்டாக இக்கிழங்குகளை நடவேண்டும்.

உரமிடுதல்:—இதற்கு உலர்ந்த சருகுகள், அவுரித்தழை, சாம்பல், சாணம் ஆகிய இவைகளை எருவாக உபயோகிக்கலாம். ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 20 வண்டி எரு போதுமானது.

விதைப்பு:—விதைக்கும் காலமானது அந்தந்தப் பாகங்களுக்குத் தக்கவாறு இருக்கின்றது. மஞ்சகுப்பம் முதலான இடங்களில் ஆடியிலும் மார்கழியிலும் நடுகின்றார்கள். மலையாளம் முதலான இடங்களில் பங்குனி சித்திரை முதலான மாதங்களில் நடுகின்றார்கள். நன்றாக உழுது பாத்திகட்டப்பட்ட நிலத்தில் சாண்புள்ளதாகத் தறிக்கப்பட்ட இக்கிழங்குகளை முழத்திற்கு ஒன்றாகக் கொஞ்சம் சாய்த்து நடவேண்டும். நட்டபிறகு கொஞ்சம் சாணியை அவற்றின் தலையின்மேல் வைப்பது நல்லது. அமெரிக்காவில் ஏக்கர் ஒன்றுக்கு டன் இதில் கலப்பு பயிரும் செய்து லாபமடையலாம்.

நீர் பாய்ச்சல்:—இக்கிழங்கு மழையின் உதவியாலேயே பயிர் செய்யப்படுகின்றது. மழையில்லாத காலத்தில் வாரத்திற்கு ஒருதரம் தண்ணீர் பாய்ச்சினால் போதும். நட்ட ஒரு பக்ஷத்திற்கெல்லாம் வேர் ஊன்ற ஆரம்பித்து, சில இலைத்துளிர்கள் விட ஆரம்பிக்கும். செடிகளுக்கு நிழல் உண்டாகிறவரையில் கொத்தி எருவளைக்கவேண்டும்.

மாசூல்:—நட்ட எட்டு அல்லது பத்து மாதங்களுக்குள் கிழங்குகள் வெட்டப்படுகின்றன. சில ஆறுமாதங்களிலும், சில ஒன்றரை வருஷங்களிலும் வெட்டப்படுகின்றன. கண்டு முதல் ஏக்கர் ஒன்றுக்கு ஏறக்குறைய 1400 மணங் கென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. சிலோனில் ஏக்கர் ஒன்றுக்கு 10 டன் பச்சைக்கிழங்குகளும், அவற்றினின்று 2800 பவுண்டு மாவும் கிடைக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. இது, இரண்டடி முதல் மூன்றடிவரை நீளமும், அதிககனமாக இருக்கும் இடத்தில் மூன்று அங்குலம் முதல் ஐந்து அங்குலம்வரை கனமுமுள்ளது.

ஏழை ஜனங்களுக்கு ஆகாரம்:—திருவாங்கூரில் இக்கிழங்குகள் ஏழை ஜனங்களுக்கு ஆகாரமாக உபயோகப்படுகின்றது. மலைகளில் வசிப்பவர்கள் அவற்றைச் சமவெளிக்குக் கொண்டுவந்து, ஜனங்களுக்கு விற்று, அங்கிருந்து உப்பு, புகையிலை, துணி முதலியன வாங்கிப்போவார்கள். நான்கு பேர்களுள்ள ஒரு குடும்பத்தில் தினம் ஒன்றுக்கு இரண்டணா மதிப்புள்ள கிழங்குகள் ஆகாரத்திற்குப் போதும். இக்கிழங்குகள் அகப்படாத காலங்களுக்காக, கிடைக்கும்போதே நிரம்பச் சிறுசிறு துண்டுகளாக வெட்டி வெய்யிலில் உலர்த்தி வைத்துக்கொள்வார்கள்.

டப்பாக்கி அரிசி செய்தல்:—விஷமும் அற்பமாகக் கருதப்படும் இக்கிழங்கானது வேறுவிதமாகப் பணக்காரர்களுக்கு உபயோகப் படுகின்றது. இதிலிருந்து டப்பாக்கி அரிசி என்னும் ஒரு சத்து எடுக்கப்படுகின்றது. கிழங்கை நன்றாய்க் கழுவி மேல்தோல் உள்தோல் முதலியனவற்றை உரிக்கவேண்டும். பிறகு அதை உரலில் போட்டு தண்ணீரில்லாத உலக்கையால்



இடித்தால் நார் வேறாகவும் மாவு வேறாகவும் பிரிந்துவிடும். இதை அப்படியே ஒரு தொட்டியில் போட்டு ஜலம் நிரம்பவிட்டுக் கலக்கினால், நார் வெகு சுலபமாகப் பிரிந்துவிடும்; மாவு அடியில் தங்கும். தண்ணீரை இறுத்துவிட்டு மாவை எடுத்து உலர்த்தவேண்டும். உலரும்போது மண்தூசி அதன்மேல் விழாமல் பாதுகாக்கவேண்டும். மாவு நன்றாக உலர்ந்தால் சிறு சிறு கட்டிகளாகும். இக்கட்டிகளை உடைத்து வறுத்துக் கொண்டு, சூடாயிருக்கும் போதே சன்னமாகச் சுத்தமான நீரைத் தெளித்துக் குலுக்கினால், டப்பாக்கி அரிசி ஆகின்றது. இவ்வரிசி பவுண்டு ஒன்றுக்கு 4 அணா ஆக விற்கப்படுகின்றது. சாதாரண ஜனங்கள் இதை 'துப்பாக்கி அரிசி' என்று வழங்குகிறார்கள். இக்கிழங்கிலிருந்து ஒருவித சாராயமும் இறக்கப்படுகின்றது.

---

## Hammir Singh.

By Mr. K. P. Seshadri Aiyangar,
*Teacher, Muthialpet High School, Madras.*

## ஹம்மீர் சிங்.

(முன் தொடர்ச்சி.)

ஹம்மீரிடம் எதிரிகளை எதிர்க்கத்தக்க ஆயுதங்களும், வீரர்களும் இல்லாததனால், அவர்களுக்கு எவ்விதத்திலாவது கெடுதியை உண்டாக்கவேண்டுமென்று எண்ணினான்; கோப்புக்களையும், பயிர் நிலங்களையும், பாதைகளையும் பாழாக்கினான். பச்சைப்பசேலெனவிருந்த விளைநிலங்களெல்லாம் பார்ப்பதற்கு அருவருப்பைத் தரத்தக்க சேறாகவும், மேடுபள்ளமாகவும் மாக்கப்பட்டன. எங்குப் பார்த்தாலும் வெட்டவெளியாயிருந்தது: பாலைவனம் என்றே சொல்லவேண்டும்: அங்கிருக்கும் ஜனங்களுக்கு ஆகாரப்பொருள்கள் அகப்படுவது துர்லபமாயிற்று. மலைகளிலுள்ள கணவாய்களும் அடைக்கப்பட்டன. மீவார் ராஜ்யம் முழுவதும் மால்தேவனுக்கு ஜாகீராக அளிக்கப்பட்டிருந்தது. அதன் ராஜதானியும், அதிலிருக்கும் முஸல்மன் சேனையும் தவிர, மற்றவெல்லாம் பாலைவனமாக்கப்பட்டது. ஹம்மீர் செய்யும் அடாத செய்கைகளுக்கு மிகவும் அஞ்சி, அவன் உயிருடனிருக்கும் பரியந்தம் அவ்விராஜ்யத்தைத் தான் நேரில் ஆளப்பயந்து, ஒரு ஆளை நியமித்துவிட்டு, தன் பிதுரார்ஜிதமான ஜாலர் என்னும் இடத்துக்குச் சென்றான்; மால்தேவன் தன் மந்திரியை அந்தப் பிரதேசத்துக்குப் பிரதிநிதியாக்கினான். ஹம்மீர் என்றால் அவ்வளவு பயம் அவனுக்கு.

ஹம்மீர் சிங் சித்தூரைப் பன்முறை எதிர்த்தான்; எவ்வளவுதீரமும், வீரமும் பொருந்திய செய்கைகள் செய்தபோதிலும்; அந்தப்புராதன ராஜ்யத்தைக் கைப்பற்ற அசக்தனானான். அவனுக்குத் தன்னிடமிருந்த தளவாடங்கள் யாவும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிட்டன. அவனுடன் வந்த வீரர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வகையறியாது, அவனை விட்டுச் சென்றனர். தன்னிடம் பூர்ண நம்பிக்கையும், நன்றியும், சாமர்த்தியமும் பொருந்திய சில வீரர்களுடன் ஹம்மீர் சிங் தற்சமயம் சித்தூரைக் கைப்பற்றுவதினின்றும் விலகி, துவாரகைக்கு யாத்திரை சென்றான். அங்கே, சாரணர்கள் பிரதேசமாகிய சாத் என்னும் கிராமத்தைக் கண்டு, அதில் அன்றைத்தினம் தங்கினான். அந்தக்கிராமத்தில் பாருதி என்ற சாரண ஸ்திரீ இருந்தாள். அவளைத் தேவியின் அவதாரமென்றே அவ்வூரிலுள்ளவர்கள் எண்ணி, அவளிடம் பக்தியாக இருந்துவந்தார்கள். அத்தேவதாம்சம் பொருந்திய ஸ்திரீ, ஒவ்வொருவனுடைய பிற்கால நிலைமையைப்பற்றியும் முன்னமேயே எடுத்துச் சொல்லும் ஆசக்தி பெற்றவள். இச்சமா

சாரங்களைக் கேள்விப்படவே, ஹம்மீர் சிங்கும் அவ்வம்மையைத்தேடிச்சென்றான். மஹாராணு மிக்க கவலையுடனும், மனவருத்தத்துடனுமிருப்பதைப்பார்த்து "ஹே! வீராதிவீர! தற்சமயம் கெயில்வாராவிற்குத் திரும்பிச் செல். சித்தூரைக் கட்டாயம் அடைவாய்; கீர்த்தி பெறுவாய்; குலதிலகமாய் விளங்குவாய்; பித்ருவாக்கிய பரிபாலனஞ் செய்தவனாவாய்; உனக்குப் பெண்கொடுக்கவருவாரை மறுதலிக்காதே; அப்பெண்ணைக்கொள்ள மறுக்காதே. வலிய வரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத்தள்ளாதே: ஹே! ராஜபுத்ர! அப்பெண்ணின் மூலமாய்த்தான் நீ உன் புராதன ராஜ்யத்தைப்பெறப்போகின்றாய். அச்சீதேவியால்தான் பூதேவி உனக்குக் கிடைக்கப் போகின்றாள். ஹே! வீர சிங்கமே! நான் சொல்லிய விதம் நீ நட. பிறகு அநுபவத்தில் காணுவாய்!" என்றுரைத்தாள் தேவி.

"என்னம்மையே! எளிதில் அடைவாய் என்று திருவாக்களித்துவிட்டீரே! என்னிடமோ ஆயுதங்களில்லை; சேனைகளில்லை; குதிரைகளுமில்லை; அதற்கு வேண்டிய திரவியமும் கிடையாதே: இப்படியிருக்க, என்புராதன ராஜ்யத்தை எப்படி அடைவேன்?" என்றான் ஹம்மீர்.

"இளஞ்சிங்கமே! குதிரைகளைப்பற்றிக் கொஞ்சமும் உனக்குச் சிந்தனை வேண்டுவதில்லை. எனது குமாரன் பாருதியிருக்கின்றான். அவன் கெயில்வாராவிற்கு ஒரு பெரிய குதிரைக்கூட்டத்துடன் வருவான். அவனிடமிருந்து உனக்கு வேண்டிய குதிரைகளைப் பெற்று யுத்தம்புரி. அவற்றின் விலையைப்பற்றியும் பணத்தைப்பற்றியும், கிஞ்சித்தும் எண்ணமிடாதே. உனக்குப் பணம் எப்பொழுது அதிகமாகக் கிடைக்குமோ, அப்பொழுது கொடுப்பாயாக." என்றான்.

தேவியின் அம்சம்பெற்ற அவ்வம்மை சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் ஹம்மீரது மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடவே, அதே பிரகாரம் நடக்கவாரம்பித்தான்; கெயில்வாராவிற்குப்போகத் திரும்பினான். பாருதி தன் மகனிடம் 500 குதிரைகளைக் கெயில்வாராவிற்கு ஓட்டிச் செல்லும்படி கட்டளையிட்டாள். அவளது மகன் ஒரு பெரிய குதிரை வர்த்தகன். அவன்தன்னிடமில்லாத குதிரைகளுக்கு வாங்கி 500 ஆனதும், கெயில்வாராவிற்கு ஓட்டிச்சென்றான். ஹம்மீர் கெயில்வாராவிற்கு வந்து சேர்ந்தநாள்முதல், குதிரைக்காக எதிர்பார்த்திருந்தான்; பாருதியின் வார்த்தையில் பூர்ண நம்பிக்கையைக் கொண்டிருந்தான். குதிரைகளும் வந்து சேர்ந்தன. மிகுந்த சந்தோஷித்தனாய்ப் பாருதியின் மகனை வந்தனோபசாரங்களினால் வரவேற்றான்; அவனுக்குத் தன்னிடத்தில் ஓர் பெரிய உத்தியோகத்தை அளித்தான்; இதுவுமல்லாமல், அந்திரி முதலிய சில கிராமங்களை ஜாகீராகக் கொடுத்தான். இன்னமும், அவர்களது வம்சத்தினர் அந்த ஜாகீரைப் பெற்று அனுபவித்து வருகின்றனர்.

## ஹம்மீரின் விவாகம்.

மால்தேவனது புத்ரி ருதுவானாள். அவளை யாருக்கு விவாகஞ்செய்து கொடுப்பது என்று அவன் யோசித்துக்கொண்டிருந்தான். அவனது மந்திரி தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்: "பிரபோ! டில்லி சுல்தான் தங்களுக்கு மீவார் முழுவதும் ஜாகீராகவிட்டிருக்கிறான். இருந்தபோதிலும், அதிலிருந்து ஒரு காண்டிதானியமும், ஹம்மீர்சிங் இருக்கும் பரியந்தம் கைக்கு வாராது. இது திண்ணம். ஆகவே, தாங்கள் தங்களது திவ்யபுத்ரியை அவனுக்கு மனைவியாக்கிவிட்டால் நிரம்பவும் நல்லது. ஸ்திரீதனமாகச் சில உபயோகமற்ற பிரதேசங்களைக் கொடுத்துவிடலாம். மற்ற செழுமையும் மேன்மையுமுள்ள பிரதேசத்தை நாம் லாபகரமாக ஆண்டு நன்மையடையலாம்". என்று மந்திரி மால்தேவனுக்குப்புத்திமதிசொன்னான். அதற்கு அவன், "இதுவொரு நல்ல யோசனைதான்" என்று முழுமனதுடன் சம்மதித்துக்கொண்டான்.

தன்மந்திரியான மேடா ஜுஹாரத் என்பவனையும், சம்ஸ்தான புரோஹிதனை ஜயபாலையும் இன்னும் ஓர் சேனையையும் சேர்த்துப் பலவரிசைகளுடன் கெயில்வாராவிற்கு மால்தேவன் அனுப்பினான். அரவல்லி மலையோரத்தை அணுகியதும், அங்கிருந்து செய்தி சொல்லியனுப்பினர். அச்செய்தி என்னவெனில், மால்தேவன் மிகுந்த மரியாதையுடன் விண்ணப்பம் செய்து கொள்வது யாதெனில், "உமது தகப்பனும், பிதாமகனும், முகம்மதியர்களால் சமரபூமியில் வீழ்த்தப்பட்டார்களேயன்றி, மால்தேவனால் அல்ல. உமது ராஜ்யமும் மால்தேவனது ஆக்ஞைக்குட்பட்டது. ஆனாலும், அவனது புத்ரியை விவாகம் செய்து கொள்வதல்லாமலும், ஸ்திரீதனமாகச் சில பிரதேசங்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஹம்மீரது பிரதானிகள் இஃது ஒரு தந்திரம் என்று எண்ணினார்கள். சித்தூரைக் கைப்பற்றுவதில் எவ்வளவு பெரிய அபாயங்கள் வருவதாக நேருகின்றனவோ, அவைகளையெல்லாம் நிவிருத்தித்து வந்தான். ராஜபுத்திரன் எந்தச் சமயத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் அபாயத்தை எதிர்க்கவேண்டிவருமோ என்று கவலைப்படக்கூடாது: ஒருசமயம் தன் நாடுநகரத்தை விட்டு, பந்து மித்திரரை விட்டு, படுகாயமும் படவேண்டி நேரும்; அதற்கும் தயாராயிருக்க வேண்டும். மறுநிமிஷம் யுத்தத்தில் வெற்றி மாலைதரித்து யானைமீது பவனிவந்து சிங்காதனத்தில் அமர்ந்து மகுடம் தரிக்கவேண்டிவரினும் வரும்; அதற்கும் சித்தமாயிருக்க வேண்டுமென்பதை எண்ணித் திடப்படுத்திக் கொண்டான் ஹம்மீர். பாருதியின் சோதிடம் கவனத்திற்கு வந்தது. அதை உணர்ந்து அவ்வதுவை நிராகரிக்காமல் ஒத்துக்கொண்டான். புரோஹிதனும் மேடாவும் மிகவும் மர்யாதையுடன் ஹம்மீரை காந்தர்வவிவாகத்துக்கு வரும்படி வேண்டினார்கள். ஹம்மீரும் தன்பரிவாரத்துடன் துரகாரூடனாய்ச் சித்தூரை ஜயித்துவிட்டதாகஎண்ணிச்சந்தோஷமாக ஜாவாருக்குப்புறப்பட்டான். அங்கு விவாக மகோற்சவம் செவ்வனே நடந்தேறியது. மாக்ர, ஷேர்னல்லா, நீர்வா, காத்வாரி, பார்க், ஷியால்பட், மேர்வாரா, காத் என்ற எட்டு பாகாணங்களை ஸ்திரீதனமாகக் கொடுத்தான். ஹம்மீர்சிங் தன்பத்தினியான ஸாங்கிரியுடன் தன் ராஜ்யத்திற்குத்தம்பதிகளாக வந்து, அரண்மனையில் நுழைந்து, பூவும் மணமும் போலவும், நகமும்சதையும்போலவும், மனமொருமித்துச் சந்தோஷமாக வாழ்ந்துவரலானார்கள்.



ஸாங்கிரி மஹாராணி புத்திபுள்ளவள்; க்ஷத்ரிய ஸ்திரீகளுக்கிருக்கவேண்டிய ரோஷமுங்கொண்டவள்; தன் வாழ்க்கைக்கு வேண்டிய விதங்களை நன்கு அறிந்தவள்; தன் பிற்கால வாழ்க்கைக்கு உரிய நாதன் தன் பிராணபந்துவே என்பதை நன்கு தெரிந்தவள். ஒரு பெண்ணுக்கு மணமாகாதவரையில் தந்தை ரக்ஷகன் என்றும், விவாகமானபின் கணவனே ரக்ஷகன் என்றும், பிறகு புத்திரன் ரக்ஷகஸ்தானமென்றும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. அதன் பிரகாரம் இப்பொழுது ஸாங்கிரி தனக்கு ஹம்மீர்தான் ரக்ஷகஸ்தானம்என்பதை உணர்ந்தாள்; இனி,தன் நாதனுடன் சுகத்திலும் துக்கத்திலும் ஒன்றுயிருந்து நடக்கவேண்டுமென்பதை அறிந்தாள்; கணவனது மனம் கோணுதபடி நடந்துகொள்ள வேண்டியது கற்புடைய நங்கையர் பொறுப்பாதலால், ஹம்மீர் இஷ்டப்படி நடக்கவேண்டியவளாய்விட்டாள். இருவரும் சந்தோஷமாயிருக்கும் சமயத்தில், ஸாங்கிரி தன் நாதனுடன் பின்வரும் விதம் சம்பாஷிக்கலானாள்:—

ஸாங். நாதா! தங்களது விருப்பம் எவ்விதமோ அவ்விதமேதான் என் விருப்பமும். தமக்கு எது வெறுப்போ அதுவே எனக்கும் வெறுப்பு.

ஹம்மீர். அதுதான் நன்மங்கையர் லக்ஷணம். அவ்வித லக்ஷியம் உன்னிடம் அமைந்திருப்பது என் பாக்கியமே.

ஸாங். தாம் மீண்டும் சித்தூரையடைந்து ஆள வேண்டுமென்ற அவாவிருக்குப்பக்ஷத்தில் என்னால் ஆகவேண்டியவற்றிற்குத் தெரிவிப்பின் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

ஹம். என்ன! ஸாங்கிரி, வாஸ்தவத்திலா சொல்லுகிறாய்?

ஸாங். இதில் பொய்யுண்டோ? இல்லை: வாஸ்தவமாகத்தான்! விளையாட்டல்ல.

ஹம். தன் தந்தைக்கு எதிராகப் புத்திரி நடந்துகொள்வதோ? இவ்விதம் எங்கேனும் நடக்குமோ?

ஸாங். நடக்காமலென்ன! நாதனது மனதைத் திருப்தி செய்வதல்லவோ நங்கையர் நெறி!

ஹம். கண்ணே! எனக்கு எவ்விதம் சகாயம் செய்யப் போகிறாய்? சொல்: பார்ப்போம்.

ஸாங். பிராணேசா! என் தந்தையிடம் மேடா மோஜிராம் என்னும் மந்திரியிருக்கிறார். அவர் நிரம்பவும் சாமர்த்தியசாலி; யோக்யர்; ஸத்தியம் பிறழாதவர். அவரைக் கேட்டால் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்வார், என்ன! உங்களது முதாதையரின் ராஜ்யத்தை என் தந்தை ஏன் ஆள வேண்டும்? சொத்துக்காரர் நீங்களிருக்க.

என்று சொல்வதைக்கேட்டு மிகவும் உள்ளம் பூரித்தவனாகித் தன் பிரியபத்தினியைப் புகழ்ந்தான்; மறுநாள் உதயம் மால்தேவனிடம் சென்று, "பெரியோய்! தாங்கள் எனக்கு ஸ்த்ரீதனமாக அதிகமான பிரதேசங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அப்பிரதேசங்களைச் சரியாக ஆண்டுவரயோக்யதையுள்ளவன் என்னிடமில்லை. ஆகையினால் தாங்கள் தங்களிடமிருக்கும் மேதாமோஜிராம என்னும் நன்மந்திரியை எனது வேலையிலிருக்கும்படி அனுமதிக்கவேண்டும்" என்று வணக்கமாகக் கேட்டான். அதற்கு மால்தேவன் 'சரி இதுவும் நமக்கு நல்லகாலமே. நம்முடைய ஆள் ஒருவன் அந்தப் பிரதேசத்தில் இருக்கவேண்டுவது நன்மைதான்: விரோதமுண்டாகாமலிருக்கும். பலவிதத்திலும் நன்மையே' என்று ஆனந்தங்கொண்டு ஹம்மீர்சிங்கின் வினயத்தைப்பற்றிப்புகழ்ந்து கொண்டான். தன் பிரதான மந்திரியான மேதாமோஜிராமை அழைத்துவரச்செய்து அவனது வலதுகரத்தைப் பிடித்து ஹம்மீரின் வலதுகையில் வைத்து, "இதுவரையில் என்சொல்லை மீறாது நடந்துவந்தவிதமே இனி இவரிடம் நடக்கவேண்டும். நீ எனக்கு ஊழியனல்ல. நான் உனக்கு யஜமானனல்ல. இவருக்கு நீ ஊழியன். இவரே உன் யஜமானன். அவரது சுகத்தைநாடி உழைக்க வேண்டும்" என்று சொன்னான். மேதாமோஜிராம் மிகுந்த சந்தோஷமுடையவனாய் 'அவ்விதமே சித்தப்படி நடக்கக்காத்துக்கொண்டிருக்கிறேன்' என்று பதிலுரைத்து ராணாவுடன் சென்றான். வழியில் மோஜிராம் ராணாவைப் பார்த்து, "ராணாஜீ! இத்தச்சமயம் மால்தேவனிடமிருந்து என்னை வேண்டியதன் காரணமென்னை! அதைத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன். எனது முழுநம்பிக்கையைத் தங்கள்மீதே வைத்திருக்கிறேன். என்னிடமிருந்து எவற்றை அறிந்துகொள்ளவேண்டுமென்று எண்ணுகின்றீரோ, அவற்றையெல்லாம் வெகு சீக்கிரத்தில் அறிந்துகொள்வீர்கள்." என்று சொல்லும்போதே, ராணா தன் பிரதிஜ்ஞையையும், சித்தூரைத் தான் மீண்டும்பெற்று ராஜ்யபாலனஞ்செலுத்தவேண்டுமென்பதையும், அதற்கு என்னசெய்யவேண்டுமோ அதை யோசித்துச் செய்யவேண்டுமென்பதையும் மேதாமோஜீராமுக்கு வெளியிட்டான். இதைக் கேட்டது தான் தாமதம்: அப்பொழுது பாதிராத்திரியாயிருந்தபோதிலும், சித்தூர்க் கோட்டையை நோக்கி நடக்கலானார்கள்.

இவர்கள் பின்னால் சிறிய சேனையுமொன்று வந்துகொண்டிருந்தது. சித்தூர் கோட்டையை யடைந்தார்கள். கோட்டை வாயில் கதவு தாளிடப்பட்டிருந்தது. வாயில் காப்போரைக் கூப்பிட்டு மேதாமோஜீராம், "கதவைத்திறவுங்கள், நான் மேதாமோஜீராம் வந்துள்ளேன். சீக்கிரமாகத் திறவுங்கள்" என்றான். அவனது குரலால் அவனை நிச்சயித்துத் தெளிந்து கோட்டைக் கதவைத் திறந்தார்கள். அங்கே அடிக்கடி மோஜீராம் செல்வதுண்டு. அதிலுள்ள துலுக்கச்சேனைகளுக்குச் சம்பளம் கொடுக்கும் உத்யோகம் இவனிடமிருந்தது. ஆகவே, தடை சொல்லாமல் அந்நள்ளிருளில் கதவைத்திறந்து உள்நுழையவிட்டார்கள். ராணாவும் தன் சேனையுடன் கோட்டையினுள் புகுந்தான். துலுக்க வீரர்கள் தங்கள் கை கால்கள் கட்டப்பட்டுக் கோட்டைமதிற் சுவர்மீதிருந்தபடியே கீழ்வெளி



யில் தள்ளப்பட்டார்கள். மால்தேவனின் கொடியைக்கிழித்தெறிந்து தன் சூரியக் கொடியை ஆகாயத்திற் பறக்கும்படி ஹம்மீர்சிங் நாட்டினான்.

தன் மோஜீராமுடன் பேசிக்கொண்டிருந்த ஹம்மீர்சிங் இராவாகியும் வரவில்லையே யென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாளும் கழிந்தது. ஹம்மீர்சிங் சித்தூர்ப்பக்கம் போயிருக்கிறான் எனக் கேள்விப்பட அவனுக்குச் சந்தேகமுண்டாயிற்று. தன் குமாரர்களான ஜெய்ஸா, கிருதிபால், பான்பீர், ரான்திர், கெய்வான் என்னும் ஐவரையும் அழைத்துக்கொண்டு பெரிய சேனையுடன் சித்தூரை நோக்கிப் புறப்படலானான்.

சூரியப் பிரகாசத்தில் சூரியக்கொடி ஆகாயத்திற் பறந்துகொண்டிருந்தது. மலைகளிலும், காடுகளிலும் துலுக்கர்களது ஆட்சியில் இருக்க வொண்ணாதென்று கருதி வசித்துவந்த ராஜபுத்திரர்கள் சித்தூர் மீளவும் க்ஷத்ரியன் கையில்வந்து விட்டதென்றறிந்து, புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதேபோல் கூட்டங்கூட்டமாகச் சித்தூரைநாடி வந்தார்கள். கோட்டையைச்சுற்றிலும் ராஜபுத்திரர்கள் தங்கியிருந்தார்கள். பிரஜைகள் யாவரும் சந்தோஷசாகரத்தில் ஆழ்ந்தார்கள்; வீராவேசங்கொண்டு மால்தேவனை விட்டோமா என்றார்கள். 'ஹம்மீர் மஹாராணா வாழ்க! வெகுகாலம் வாழ்க!' என்று ஆரவாரித்தார்கள். அன்றைத்தினம் சித்தூர் சமுத்திரம்போல் பெருங் கோஷமாயிருந்தது.

மால்தேவன் தன் ஐந்து குமாரர்களுடன் சித்தூரை எதிர்த்துவருவதை ஹம்மீர் அறிந்துகொண்டு, யுத்தத்திற்குத் தயாராயிருந்தான். துப்பாக்கிப் பிரயோகம் ஏராளமாய் நடந்தது. மால்தேவன் தோல்வியடைந்து ஜாலாருக்குச் சென்றான்; சேனை ஆயுதம் முதலியவைகளைப் பலப்படுத்திக்கொண்டு இரண்டாம் தடவை படையெடுத்தான்; அப்பொழுதும் அபஜயமேயடைந்தான். மால்தேவன் தன்னால் ஹம்மீர் சிங்குடன் சண்டைபுரிய முடியாது என்று தெரிந்துகொண்டான்; அந்தச் சமயம் டில்லியில் பாதுஷாவாயிருந்த முகம்மது துக்லக் என்பவனிடம் சென்று முறையிட்டான். சுல்தான் அவனுக்குச் சகாயஞ்செய்து ராஜ்யத்தை மீட்டுக்கொடுப்பதாக வாக்குறுதிசெய்தான்.

முகம்மது துக்லக் ஓர் பெரிய சேனையுடன் கிழக்குமார்க்கமாய் மீவாருக்கு வரலானான்; எந்தப்பக்கம் பந்தோபஸ்து செய்யப்படாமலிருந்ததோ அந்தப்பக்கமாய்ப் புகுந்துவந்தான். அந்த சுல்தான் மிகவும் சமர்த்தன்; அறிவாளி. அவனைச்சிலர் பித்தனென்றும், அறிவிலியென்றும் சொல்லுவர். அது வாஸ்தவமன்று. அவனைப் படித்த மேதாவியென்றே சொல்லவேண்டும்.

அவன் படித்தவனாயிருந்தபோதிலும், அவன் செய்த செய்கைகள் வியப்பைத் தரத்தக்கனவாயிருந்தன. மகம்மது, தனது பிரதானபட்டணம், தன் இராஜ்யத்திற்கு மத்தியில் இருக்கவேண்டும்; அப்படியிருந்தால்தான் எல்லாம் சரிவரச்செய்ய முடியுமெனவறிந்து, தேவகிரியைத் தலைநகராக்கினான். தேவகிரி தேக சௌக்கியத்திற்கு ஏற்றதன்றென்று அறிந்து, மறுபடியும் டில்லிக்கு மாற்றிவிட்டான். ஒரு காலத்தில் பணத்திற்குப் பெருமுடை ஏற்படவே, தோல் நாணயங்களை இவன் ஏற்படுத்தினான். நாம்தினமும் தோல்நாணயங்களுக்குப் பதிலாகக் காகித நாணயங்களைக் காண்பழக்கம் செய்துவருகிறோம். தோல் நாணயங்களை ஏற்படுத்தியதனால் முகம்மது துக்லக் மடையனாகிவிடுவானோ? துணிகட்டாத ஊரில் ஒருவன் துணிபுடுத்திக்கொண்டிருந்தால் ஏளனம்செய்ய மாட்டார்களா? அதுபோல, அந்தக் காலத்தில் இல்லாத நூதன வழக்கத்தை அனுசரித்ததனால் அவனது அபாரபுத்தியை மெச்சவோரற்றுப் போயினர். இந்தக் காலத்தில் அவன் செய்துவந்ததெல்லாம் இப்போது சர்வசாதாரணமாக நடப்பதைக்காணும் நாம் அவனது செய்கைக்கு மெச்சுகின்றோம்.

ஹம்மீர் சிங் டில்லி பாதுஷா தன்னை எதிர்க்க வருவதாக முன்னமேயறிந்து யுத்தத்திற்கு ஆயத்தமாயிருந்தான். மும்முரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ஹம்மீர் முகம்மது துக்லக்கை

சிறை பிடித்தான். இதைத் தெரிந்துகொண்ட துலுக்கர்கள் சின்னபின்னமாகச் சிதறியோடினர். துக்லக் அரசன் சிறையில் ஆறுமாத காலம் இருந்தான். தன்னைச் சிறையினின்றும் மீட்க்க ஹம்மீருக்கு ஆஜ்மீர், நாகோர், ரான் தம்போர் முதலிய ராஜ்யங்களையும், 50 லக்ஷம் ரூபாயையும், 100 யானைகளையும் முகம்மது கொடுத்தான். அவற்றினைப் பெற்று ஹம்மீர் டில்லி பாதுஷாவைச் சிறையினின்றும் வெளிப்படுத்தினான்.

மால்தேவனின் புத்திரனான பான்பீர், ராணாவிடம் சேவகத்திலிருக்கச் சம்மதித்தான். அதற்காக அவனுக்குச் சில பிரதேசங்களை ஜாகீராக ஹம்மீர் அளித்தான். ஹம்மீர் ஜாகீரை அளிக்கும்போது, "பான்பீர், நன்றியுள்ளவனாயிரு. நீ ஒருகாலத்தில் ஆப்கானியனிடம் ஊழியம் செய்தவன். இப்பொழுதோ உன் இனத்தைச் சேர்ந்தவனை எனக்கு ஊழியனாக இருக்க விரும்பினாய். ஆகையால் சத்தியத்துடன் உழைத்து சுகமே வாழ்" என்றுரைத்தான். அவ்விதமே பான்பீரும், ஜாகீரைப்பெற்று, மிக்க நன்றியுடன் சேவகம் செய்து வந்தான். துலுக்கருது பிரதேசமான பான்ஸ்ராரை பான்பீர் எதிர்த்து, அதை ஜயித்து, ஹம்மீர் ராஜ்யத்துடன் சேர்த்தான். ராஜபுதனத்திலுள்ள ஹிந்துவரசர்கள் ஹம்மீருக்கு வேண்டும்போது சகாயம் புரியவும் கப்பங்கட்டவும் உடன்பட்டார்கள். ஹம்மீர்சிங் ராஜபுதனத்திற்கே சக்ரவர்த்தியாக விளங்கினான்.

தேசாம்சம் பொருந்திய பாருதியை ராணா மறக்கவேயில்லை; சித்தூரைப் பலப்படுத்தியவுடன், அவ்வம்மையை மிக்க மரியாதையுடனும் பக்தியுடனும் அழைத்து வந்து, அரண்மனையிலிருக்க வேண்டினான். அவளும் அவனது வேண்டுகோளுக்கிணங்கி அங்கேயேயிருக்க சம்மதித்தாள். அவ்வம்மை பாக்கியமடைந்த பிறகு அவளது ஞாபகார்த்தமாக ஒரு கோவிலைக் கட்டினான். அந்தக்கோவில் இன்றைக்கும் இருந்துவருகிறது. அதன்பெயர் அன்னபூர்ணி ஆலயம்.

மால்தேவன் சீக்கிரத்தில் இறந்து போனான். ஸாங்கிரி தன் நாதனிருக்கும் சித்தூரை அடைந்தாள். அவள் வரும்போது அவள் தாய் மூன்று வஸ்துக்களைக் கொடுத்தனுப்பினாள். ஒரு மண்டையோடு, மாலை, கட்கம். இம்மூன்றும் மந்தர சக்தியுள்ளவை என்று ஜனங்களால் நம்பப்பட்டிருந்தன. அவள் கொடுத்தனுப்பிய கட்கத்தை இன்றைக்கும் உதயபூரில் நவராத்திரி காலங்களில் ஜனங்கள் பூஜித்து வருகிறார்கள்.

ஹம்மீரின் கீர்த்தி வெகுதூரம் பரவிற்று. அரசர்கள் யாவரும் அவனிடம் நட்புக்கொள்ள வாரம்பித்தார்கள். ஹம்மீரது சித்தூர் வெகு சீக்கிரத்தில் விஸ்தீர்ணத்திலும் பலத்திலும் எல்லாவற்றிலும்மிக உன்னத ஸ்திதியையடைந்தது. ஹம்மீர் மூதாதையின் விருப்பத்தை நிறைவேற்றினான். வீராதி வீரனான ரத்னசிங்கின் ஆவியும் சாந்தத்தையடைந்தது. பழையராஜ்யத்தை மீண்டும் பெற்று ராஜபுத்திரன் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பான் என்பதை உலகத்தாருக்குச் செய்கையால் ஹம்மீர் நிதர்சனமாக்கினான். அவன் தீர்க்காயுளுடன் நிடசீராமமாகவிருந்து கடைசியில் வீரசுவர்க்கத்தை எய்தினான். அவனது சாமர்த்தியத்தையும், வீரச்செய்கைகளையும் பற்றி இன்றைக்கும் ஜனங்கள் கொண்டாடுகின்றனர். பலப்படுத்தப்பட்ட ராஜ்யத்தையும், விஸ்தீர்ணமான பிரதேசத்தையும் தன் மகன் கெய்த் சிங் என்பவனுக்கு அளித்தான். கெய்த் கி. பி. 1361-ம் வருஷத்தில் ராணாவாக முடிசூட்டப்பெற்றான்.

முற்றும்.

க. பி. சேஷாத்திரி ஐயங்கார்.



## The Rearing of Cattle.

### கால்நடைகளை வளர்த்தல்.

நமது தேசத்தில் கிருஷிகர்கள் தங்கள் தொழிலைச் சரிவரச் செய்வதற்குக் கால்நடைகளே ஆதாரமாயிருக்கின்றன. அவற்றின் உதவியாலேயே இவர்கள் தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்து, இன்னும் இதரமான பல வேலைகளைப் புரிகிறார்கள். மேலும், குடும்ப சம்ரக்ஷணைக்குத் தேவையான பால், தயிர், மோர் முதலியனவும், பயிர்களுக்கு வேண்டிய எருக்களும் இவற்றினின்றே கிடைக்கின்றன. கிருஷிகர்களுக்கு அத்யவச்யமான இக்கால்நடைகளை அவர்கள் சரிவரக் கவனிப்பதில்லை. இதற்குக் காரணம் அவர்களின் அறியாமையேதான் என்று கூறலாம். அநேக கிருஷிகர்களுக்குக் கால்நடைகளைப் போஷித்து அவற்றைக் காப்பாற்றும் வழி தெரியாததனால், அவைகள் அடிக்கடி வெக்கை, தொண்டை அடைப்பான், சப்பை நோய் முதலிய பல வியாதிகளுக்கு உட்பட்டு இறந்துபோகின்றன.

இக்காலத்தில் பல கிராமங்களிலும் கிருஷிகர்கள் தங்கள் கால்நடைகளுக்கு ஏதாவது வியாதி கண்டால், உடனே, அக்கிராமத்து இடையன் அல்லது வேறு மாட்டு வைத்தியனைக் கொணர்ந்து அவற்றிற்கு வைத்தியம் செய்கிறார்கள். இவ்வைத்தியர்கள் கால்நடைகளுக்குக் கண்டிருக்கும் வியாதி இன்னதென்று திட்டமாக அறியச் சக்தியற்றவர்களாய், தாம் தோன்றிகொட்டு அனுசரித்துவரும் ஒரே மருந்தைக் கொடுக்க முன்வருகிறார்கள். ஒரு சமயம் இம்மருந்து அவற்றிற்குப் பிடிபட்டால் சரி: இல்லாவிடில், அவை இறந்துபோவது நிச்சயம். ஆதலால், கிருஷிகர்கள் இத்தகைய வைத்திய உதவியை நாடாமல், கால்நடைகளைப் பராமரிக்கும் விஷயமாய் அறியவேண்டிய பலவற்றையும் தாங்களே கவனித்துவரவேண்டும். இவ்விதம் செய்து வந்தால், கால்நடைகளை வியாதியற்றிருக்கச் செய்யலாம்.

கிருஷிகர்கள் கால்நடைகளைப் பராமரிக்கும் விஷயமாய்க் கீழ்கண்ட விஷயங்களைக் கவனிக்கவேண்டும்:—

1. வெளியூர்களில் சந்தைகளில் வாங்கப்படும் மாடுகளை வீட்டிற்குக் கொணர்ந்தபிறகு அவற்றை மற்ற மாடுகளோடு கலக்கவிடக் கூடாது; தனியே சிலநாள் கட்டிவைக்கவேண்டும். அப்போது அவைகளுக்கு வியாதிக்குறிகள் எவையேனும் காணப்படுகின்றனவா என்று கவனிக்கவேண்டும்.

2. கால்நடைகளை நடத்திக்கொண்டுவரும் போது தினம் ஒன்றுக்கு 12-மைல்களுக்குமேல் நடக்கச் செய்யக்கூடாது; வழியில் மற்ற மாடுகளோடு கலக்கவாவது அல்லது வேறு தொழுவங்களில் கட்டவாவது கூடாது.

3. கால்நடைகளுக்கு வியாதி கண்டவுடனே அவற்றை மற்ற மாடுகளிலிருந்து பிரித்துத் தனியே கட்டித் தகுந்த சிகித்சைகளைச் செய்ய வேண்டும். இக்கால்நடைகளால் தின்னப்பட்டு மிகுதியான தீவனத்தை வேறு சுகமுள்ள மாடுகள் தின்னவிடக்கூடாது. அவற்றின் அருகில் வைக்கவும் கூடாது.

4. வியாதிப்பட்ட கால்நடைகளினால் கழிக்கப்படும் சாணத்தை ஒரு குழிதோண்டி அதில் புதைத்துவிடவேண்டும்.

5. கால்நடைகள் தொற்றுவியாதியால் இறந்தால், அவற்றை ஆழமாகக் குழிதோண்டிப் புதைத்துவிடவேண்டும்.

6. ஊரில் எங்கேனும் தொற்றுவியாதி ஆரம்பித்துமானால், கிருஷிகர்கள் தத்தம் கால்நடைகள் தங்கும் தொழுவங்களைச் சுத்தமாக வைத்திருப்பதோடு, மற்ற கால்நடைகளுடன் கலவாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும்

7. வியாதிகண்ட கால்நடைகளுக்குச் சிகித்சைகள் செய்யுமுன், அவைகளுக்குக் கண்டிருக்கும் வியாதி இன்னதென்று திட்டமாகத் தெரிந்தபிறகே வைத்தியம் செய்யவேண்டும்.

கால்நடைகளுக்கு அடிக்கடி வியாதி வருவதற்குக் காரணம், கிருஷிகர்கள் அவற்றை இயற்கைக்கு விரோதமாய் நடத்துவதேயாம். ஆதலால், கிருஷிகர்கள் அவற்றை அவ்வாறு நடத்தாமல் கீழ்க்கண்டவாறு பாமரிக்கவேண்டும்:—

1. கால்நடைகளுக்கு அளவுக்குமிஞ்சி வேலை கொடுக்காமல், அவற்றைச் சுத்தமான தொழுவங்களில் கட்டிப் பாதுகாக்கவேண்டும்.

2. அசுத்தமான வைக்கோலும், புல்லும், கால்நடைகளுக்கு வியாதியைத் தரக்கூடுமாதலால், அவற்றிற்குச் சுத்தமான தீனியைப் போட்டுச் சுத்தமான தண்ணீரையே குடிப்பிக்கவேண்டும். கால்நடைகளுக்கு அளவுக்கு மிஞ்சித் தீனி ஒருபோதும் போடுவதுகூடாது.

3. மாடுகளுக்குக் குடிக்கவைக்கும் தண்ணீர்த்தொட்டியானது சுத்தமான இடத்தில் வைக்கப்படவேண்டும். தண்ணீர் அசுத்தப்பட்டுப் போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

4. கால்நடைகள், அதிகமாக நெற்கதிர்களையாவது, கோதுமைகளையாவது, இளம்பயிராயுள்ள சோளத்தையாவது தின்னவிடக்கூடாது.

5. அசுத்தமாயிருக்கும் குளங்களிலாவது, குட்டைகளிலாவது, கால்நடைகளுக்குத் தண்ணீர் காட்டக்கூடாது.

6. மாடுகள் அசக்தியாயும், தேகசௌக்கியமில்லாமலும் இருக்கும்போது அவற்றை ஹிம்சித்து வேலை வாங்கக்கூடாது. அவற்றின் தேக அசௌக்கியத்தைக் குறிப்பால் உணர்ந்து, வேண்டிய சிகித்ஸைகளைச் செய்து இளைப்பாறவிடவேண்டும்.

7. ஊரில் தொற்று வியாதிகள் பரவியிருக்கும் சமயத்தில், கால்நடைகளை ஊர் மந்தையுடன் போகவிடக்கூடாது. கால்நடைகள் ஊர் மந்தையுடன் மேயவிடுவதனால் வரும் சில கேடுகளைப்பற்றிச் சென்ற மாதத்து “ஜனோபகாரி” யில் 191-ம் பக்கத்தில் வெளிவந்துள்ள வியாசம் இங்குக் கவனிக்கத்தக்கது.

மேலே குறிப்பிட்டுள்ள விஷயங்களைக் கிருஷிகர்கள் நன்கு கவனித்துத் தங்கள் கால்நடைகளைப் பாமரித்தால், நாளுக்குநாள் கால்நடைகள் அபிவிருத்தியடைவதோடு, அதனால் கிருஷியும் செழித்தோங்கும்.

---

## Collection of Moral Sayings.

BY PANDIT M. M. NARAYANASWAMI IYER.

### நீதி மொழித்திரட்டு.

முடியாத காரியம் எப்பொழுதும் முடியாது; முடியுங் காரியம் எப்பொழுதும் முடியும். நீரில் வண்டி போவதில்லை. ஓடம் கரையில் செல்வதுமில்லை.

தீயோரது சேர்க்கை மட்குடத்தைப்போல எளிதில் அழியக்கூடியது; பின்பு சேருவதும் கடினம். நல்லோர் சேர்க்கையோ பொற்குடத்தைப்போல அழியக்கூடாதது; ஒருசமயம் அழிந்தாலும், எளிதில் சேரக்கூடியது.

தூய்மை, கொடை, சௌரியம், இன்பதுன்பங்களைச் சமமாகப் பாவித்தல், தாக்ஷிண்யம், அன்பு, உண்மை ஆகிய இவை நண்பனுக்குரிய குணங்களாம். இரகஸ்யத்தை வெளியிடல், யாசித்தல், வன்னெஞ்சுடைமை, சஞ்சலசித்தமுடைமை, கோபம், பொய்ம்மை, சூது ஆகிய இவை நண்பனிடமுள்ள குற்றங்களாம்.

வீட்டிற்குவரும் விருந்தினர் குழந்தையாயிருப்பினும், யௌவனமாயிருப்பினும், கிழவராயிருப்பினும், மரியாதை செய்வது கடமையாம்; ஏனெனில், யாவருக்கும் அதிதி குருவாவர்.

அறிவுள்ளவன் பொருள் நஷ்டத்தையும், மனவருத்தத்தையும், வீட்டிற்சண்டைகளையும், தனக்கு நேர்ந்த அவமானத்தையும் வெளியிடக்கூடாது.



பொய்சொல்லிக் காரியஞ் சாதிப்பதினும் ஊமையாய் இருப்பது நன்று. பிறன்மனைவியைத் தழுவுதலினும் வீரியமற்றிருப்பது நன்று. கோட்சொல்லுவதினும் சாதல் நன்று. பிறர் பொருளைக் கொண்டு வாழ்வதினும் பிச்சை வாங்குதல் நன்று.

சேவித்தல் மானத்தையும், நிலவு இருளையும், மூப்பு அழகையும், ஹரிஹரகதை பாவத்தையும் அழிப்பதுபோல, யாசித்தல் நற்குணங்கள் யாவற்றையும் அழிக்கின்றது.

உலோபத்தால் புத்தி பேதமடைகின்றது. உலோபம் ஆசையை உண்டுபண்ணுகிறது. ஆசையால் பீடிக்கப்பட்ட மனிதன், இம்மையிலும் மறுமையிலும் துன்பத்தை அடைகின்றான்.

இன்சொல்லுடன் கூடின கொடையும், கர்வமற்ற ஞானமும், பொறுமையோடுகூடின சௌரியமும், நல்லாரிடம் கொடுக்கப்பட்ட பொருளும் உலகில் அருமையானவை.

முதலில் மன்னனைப் பெற்றபின்புதான் மனைவியையும் செல்வத்தையும் தேடவேண்டும். உலகில் அரசனில்லாவிடில் மனைவியும் பொருளும் எவ்வாறு கிடைக்கும்?

இயற்கையாயுண்டான நண்பனிடம் ஏற்படும் விசுவாஸம், தாயிடமும், மனைவிகளிடமும், சகோதரனிடமும், புதல்வனிடமும் ஏற்படுவதில்லை. எவன் புதல்வனிடமும், குருவிடமும், சேவகர்களிடமும், தரித்திரர்களிடமும், பந்துக்களிடமும் தயவைவக்கவில்லையோ, அவன் இவ்வுலகில் வாழ்வதனால் யாதுப்பயன்? காகமும் பலியாகக் கிடைத்த சோற்றை உண்டு நெடுங்காலம் வாழவில்லையா? அதனால் யாதுபயன்?

குதிரை, ஆயுதம், சாஸ்திரம், வீணை, வாணீ, மனிதன், பெண் இவர்கள் தம்மைப் பெற்றவனுடைய சாமர்த்தியத்திற்குத் தக்கபடி பெருமையையும் சிறுமையையும் அடைகின்றனர்.

துன்பத்தினின்றும் காப்பாற்றுகின்றவனே நட்புள்ளவனுவன்; நிர்மலமாயிருப்பதே காரியமாகும்; கணவன் சொற்படி நடப்பவளே மனைவியாவள்; நல்லோரால் கொண்டாடப்படுகின்றவனே அறிஞனுவன்; கர்வத்தை உண்டுபண்ணுதிருப்பதே செல்வமாகும்; ஆசையை ஒழித்தவனே சுகியாவன்; தீயொழுக்கமற்றவனே நண்பனுவன். தாண்டமுடியாத கடலைத் தாண்டுவதற்குக் கப்பல் இருக்கின்றது. இருளைப் போக்குவதற்கு விளக்கு இருக்கின்றது. காற்றைப் பெறுவதற்கு விசிறி இருக்கின்றது. மதங்கொண்ட யானைகளின் கொழுப்பை அடக்குவதற்கு அங்குசம் இருக்கின்றது. இவ்வாறு உலகில் ஒவ்வொன்றிற்கும் பரிகாரம் பிரமன் ஏற்படுத்தாமலிருக்கவில்லை. ஆனால், அத்தகைய பிரமனும் தீயோரின் எண்ணங்களை எடுப்பதில் விண் முயற்சியுடையவராயிருக்கிறார் என்று எண்ணுகிறேன்.

வயதில் பெரியோர் இல்லாத ஸபை ஸபையன்று; தர்மத்தை உபதேசிக்காதவர்கள் பெரியோரல்லர்; உண்மையில்லாதது தர்மமன்று; கபடமுள்ளது ஸத்தியமாகாது. இயற்கையிலேயே அறிவில்லாதவனுக்குச் சாஸ்திரங்களால் யாது பயன்? கண்களற்றவனுக்குக் கண்ணாடியால் பயனென்ன? துக்கம் சந்தோஷத்தையும், ஹேமந்தகாலம் சரத் காலத்தையும், சூரியன் இருளையும், நன்றிமறத்தல் புண்ணியத்தையும், இஷ்டவியோகம் பெறுதல் சோகத்தையும், நீதி ஆபத்தையும், அநீதி அதிகமான செல்வத்தையும் கெடுக்கின்றன.

தேவதைகளிடமும், குருவிடமும், பசுக்களிடமும், மன்னர்களிடமும், குழந்தைகளிடமும், பெரியோரிடமும், ஆதுரர்களிடமும் கோபத்தைச் செல்லாவாறு தடுத்தல்வேண்டும்.

மனிதன் கஷ்டதசையை அடைந்ததும் தெய்வத்தை நிந்திக்கின்றான்; தான் முற்பிறப்பில் செய்த துஷ்கர்மங்களைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பதில்லை.

ஆத்மா ஒரு நதியாம்; இந்திரிய நிக்கிரஹம் அதற்குப் புண்ணியக்ஷேத்திரமாம்; ஸத்தியம் ஜலமாம்; நற்குணம் கரையாம்; தயை அலைகளாம்; ஆகலின், அந்நதியில் ஸ்நானம் செய்ய

வேண்டும்; அந்தராத்மா நீரில் மூழ்குவதனால் சுத்தமடைவதில்லை.

பிறருடன் சேர்க்கை எவ்விதத்திலும் தள்ளத்தக்கது. அவ்வாறு தள்ள முடியாவிடில், நல்லோருடன் சேரவேண்டும்; ஏனெனில், ஸத்ஸங்கம் மருந்துபோல் ஹிதத்தைச் செய்யும்.

தீயோரால் கெடுக்கப்பட்ட மனமுடையவனுக்கு நல்லோரிடம் விசுவாசம் உண்டாவதில்லை. பாயஸத்தினால் தகிக்கப்பட்ட குழந்தை, தயிரையும் வாயினால் ஊதியூதி ஆறவைத்து உண்கின்றது.

முன்னொருசமயம் பிரமன் நூறு அசுவமேதயாகங்களையும் ஸத்தியத்தையும் தராசில் நிறுத்தார். அப்பொழுது ஸத்தியமிருந்த தட்டே தாழ்ந்தது. ஆதலின், யாவரும் உண்மையே பேசவேண்டும்.

எவனுக்கு எந்த ஸ்வபாவம் இருக்கின்றதோ, அதை எப்பொழுதும் மாற்றுவது முடியாது. நாயை அரசனாகச் செய்தால், அது செருப்பைத் தூக்குவதை விடுகின்றதா? என்ன?

நாயானது தனக்கு உணவுகொடுப்பவன் முன்னிலையில் தன் வாலை ஆட்டுகின்றது; பூமியில படுக்கின்றது; தன் வாயையும் வயிற்றையும் காலால் தொட்டுக் காட்டுகின்றது. ஆனால், ஒரு சிறந்த யானையோ, பாகனைக் கம்பீரமாய்ப் பார்க்கின்றது; அவன் பலதடவை நல்லவார்த்தை சொல்லி வேண்டிக் கொண்டபிறகுதான் உணவெடுக்கின்றது.

தன்னிலும் தாழ்ந்தவர்களுடன் சேருவதனால் புத்தி குறைவடைகின்றது. சமமானவர்களுடன் சேருவதனால் புத்தி ஸமமாயிருக்கின்றது. மேலானவர்களுடன் சேர்வதனால் புத்தி மேன்மையடைகின்றது.

காச்சக்கல் தங்கத்தின் ஸம்பந்தத்தினால் மரகதக்கல்லின் காந்தியை அடைகின்றது. அவ்வாறே மூர்க்கன் நல்லோரின் சேர்க்கையினால் பெருமையை அடைகின்றான். புதல்வனுக்குக் கல்வி பயிற்றாத பெற்றோர் பகைவராவர்; ஏனெனில், ஹம்ஸங்களின் மத்தியில் கொக்கு விளங்காமைபோல, ஸபை மத்தியில் கல்வியற்றவன் விளங்குவதில்லை. எல்லாம் தெய்வச்செயல் என்று தன் முயற்சியை விடக்கூடாது. முயற்சி செய்யாவிடில், எள்ளிலிருந்து எண்ணெயை எவ்வாறு எடுக்க முடியும்? பிராணியானவன் கர்ப்பத்திலிருக்கும்பொழுதே ஆயுளும், தொழிலும், பொருளும், கல்வியும், மரணமும் ஸ்ருஷ்டிக்கப்படுகின்றன.

பலசந்தேகங்களைப் போக்குகின்றதும், மறைபொருளைக் காட்டுகின்றதும், யாவருக்கும் கண்ணைப்போல் வழிகாட்டியாயுள்ளதுமான சாஸ்திரத்தை அறியாதவன் கண்ணிருந்தும் குருடனேயாவன்.

பொருள்கள் பலவற்றுள்ளும் கல்விப்பொருளே சிறந்ததாம்; ஏனெனில், அது கொள்ளை கொள்ள முடியாதது; விலைமதிக்கக் கூடாதது; நாசமடையாதது. கல்வியினால் வணக்கத்தையும், வணக்கத்தினால் பெருமையையும், பெருமையினால் பொருளையும், பொருளால் தர்மத்தையும், தர்மத்தினால் சுகத்தையும் அடைகின்றான் மனிதன். புத்திமான்கள் காவியம், சாஸ்திரம் இவைகளைப் பார்த்துக்கொண்டே காலத்தைப் போக்குகின்றனர். மூர்க்கர்கள் வ்யஸனத்தினாலும், தூக்கத்தினாலும், கலகத்தினாலும் காலத்தைப் போக்குகின்றனர். யாகம், அத்தியயனம், கொடை, தவம், ஸத்தியம், தைரியம், பொறுமை, உலோபமின்மை எனத் தர்மத்தின் வழிகள் எண்வகைப்படும்.

நல்லோர் குணமற்ற பிராணிகளிடத்திலும் தயை வைக்கின்றனர். சந்திரன் சண்டாளன் வீட்டிலும் தன் சந்திரிகையைக் குறைப்பதில்லையன்றோ?

சிறந்த பராக்கிரம முதலிய குணங்களுடன் எந்த மனிதன் ஒரு கணப்பொழுதாவது ஜீவித்திருக்கின்றானோ, அவனுடைய பிறவியே பயனுடையதென்று பெரியோர் கூறுகின்றனர்; ஏனெனில், காக்கைகூடப் பலவீடுகளிலும் போடுகின்ற சோற்றை உட்கொண்டு வெகுகாலம் வாழ்கின்றது; அதனால் யாது பயன்? எந்த ஒரு மனிதனால் வெகுபேர் பிழைக்கிறார்களோ, அவன்பிறவியே மேலானது. கேவலம் ஒரு பறவையாகிய கொக்கும் தன் மூக்கினால் வயிற்றை நிரப்பிக்கொள்ளுகின்றது; அதனால் பயனென்ன? உலகத்தில் பிறருக்கு அணுவளவேனும் பிரயோசனமின்றித் தன் காரியத்தையே பெரிதாக எண்ணித் தன்வயிற்றைமட்டும் நிரப்பிக்கொள்ளும் அற்பர்கள் ஆயிரக்கணக்காயிருக்கிறார்கள். ஆனால் எவன் அப்படியின்றிப் பிறருக்காகவே பிரயாஸைப்படுகின்றானோ, அவனே ஸாதுக்களில் முந்தியவன். ஸமுத்திரமத்தியிலிருந்துகொண்டு அதன் நீரைக் குடிக்கும் படவாமுகாக்கினியானது தன் வயிற்றை நிரப்பிக்கொள்வதல்லாது பிறருக்கு உதவிபுரிவதில்லை. மேகமானது அவ்வாறன்றி உவர் நீரை அருந்தி, உலகத்தின் தாபத்தை அடக்குகின்றது.

குதிரையின் கனைப்பையும், மேககர்ச்சனையையும், மாதர்களின் மனதையும், புருஷர்களின் பாக்யத்தையும், மழையில்லாமையையும், அதிக மழை பெய்தலையும் தேவர்களே அறியமுடியாதெனின், மனிதன் எவ்வாறு அறிய முடியும்? இவ்வுலகத்தில் இறந்த மாந்தர்க்குத் துணையாகச் செல்லவல்லது அறமொன்றேயொழிய, அன்னை, மனைவி, மக்கள், நண்பன், தாயத்தார் முதலியவர் துணையாகச் செல்லமாட்டார்கள். எவன் அறநெறியை அறியவில்லையோ, அவன் வல்லவனாயினும் வலியற்றவனே; தனவானாயினும் தரித்திரனே; கல்விகற்றவனாயினும் கல்லாதவனேயாவன்.

சபையில் மெய்நடுங்குவோனது கல்வியும், கொடாதவனது செல்வமும், போர்க்களத்தஞ்சுவோனது வல்லமையும், உலகத்தில் பயனற்றவை.

அழியுந்தன்மையுள்ள உடலுக்குக் காப்புச் செய்யாமல், அழியாத புகழையே காக்கவேண்டும். மனிதன் தன் பூதவுடம்பழிந்து இறந்தும், புகழுடம்பால் ஜீவித்திருக்கின்றவனேயாவன். யமன் அறிவாளி, மூர்க்கன், வலியான், எளியான், செல்வன், தரித்திரன் ஆகிய இவர்களிடம் சமமாகவே நடந்துகொள்ளுகிறான். ஆயுளோ, கணப்பொழுதும் நில்லாது குறைந்துகொண்டே வருகின்றது. ஆதலால், நிலையில்லாத உடல் இருக்கும்பொழுதே நிலையுள்ள புகழைத் தேடவேண்டும்.

உலகத்தோர் மேகத்தையேயன்றிக் கடலை விரும்பாததுபோல, கொடுப்பவனையேயன்றிச் செல்வனை விரும்பார்.

படிப்பவனைச் சொற்செல்வனாக்கமாட்டாத காவியத்தினாலும், ஒருவனைத் தன்வழிக்குக் கொணரமாட்டாத பலத்தினாலும், யாசகரின் குறையை நீக்கமாட்டாத தனத்தினாலும் யாது பயன்?

குணமொன்றையே கிரகிப்பவர்கள், குணவானிடத்தில் சிறிது துர்க்குணம் காணப்படினும், அதைக்கவனியாது குணத்தையே நோக்கிக் கொண்டிருப்பார்கள். சந்திரனைப்பார்க்க விரும்புகின்றவர்கள், அவனிடத்திலுள்ள களங்கத்தைப் பாராட்டுவதில்லையல்லவா?

ஒருவருடனும் நட்புக்கொள்ளாதிருப்பது நல்லது; நட்புக்கொண்டு பின்பு நீங்குதல் நல்லதன்று. கண்ணைப்பெற்று இழந்தவன் துக்கமுடையவனேயன்றி, பெறாதவன் அப்படிப்பட்டவனல்லன்.

அற்பவஸ்துக்கள்பல ஒன்றாகச் சேர்ந்தால், அச்சேர்க்கை கடத்தற்கரியதே. புல்லாற்செய்த கயிற்றினால் யானைகளுங் கட்டப்படுகின்றன.

ஒவ்வொருவருடைய மன நிலைமையையும் அளந்தறிவதற்கு வருத்தமே கருவியாயிருக்கின்றதேயொழிய மற்றவையல்ல. காற்று வீசாமலிருந்தால், பஞ்சுப்பொதிக்கும் மலைக்கும் பேதம் எவ்வாறு தெரியும்?

உலகில் மனிதர் விரும்பாமலிருக்கவுஞ் சுகமானது எப்படி தானாகவே வந்து சேருகின்றதோ, அப்படியே துக்கமும் வந்து சேருகின்றது. அதைக்குறித்துச் சிந்திப்பதனால் பயனென்ன?

எம். எம். நாராயணசாமி ஐயர்.

# Meena.

By Mr. K. P. Seshadri Aiyangar.

## மீனா.

வேலூரில் தோட்டப்பாளையம் என்ற ஒரு பகுதி உண்டு. அதில் வசிப்பவர்களில் பெரும்பான்மையோர் அவ்வூர் கலெக்டர் ஆபீஸில் உத்யோகத்தில் அமர்ந்திருப்பவர்கள். டிப்டி கலெக்டர் முதல் டலாயத்வரை அப்பகுதியில் மாளிகைகளிலும், கூரைவீடுகளிலும் வசித்து வந்தார்கள். அங்கே தட்டோடு வேய்ந்த வீடுகளும் இருந்தன. ஸ்ரீநிவாசர் கோயிலுக்கு எதிரில் ஒரு சிறியவீடு இருந்தது. அது பழைமையானதாயிருந்தாலும், பார்ப்பதற்கு அழகாயிருந்தது. ஒருநாள் இரவு சுமார் 9-மணியிருக்கும். அப்போது அவ்வீட்டின் ஓர் அறையின்மூலையில் ஒரு மேஜைமீது 'கிரோஸினுயில்' விளக்கொன்று மிகவும் பிரகாசமாய் எரிந்துகொண்டிருந்தது. அந்த மேஜையின்மேல் வைக்கப்பட்டிருந்த சாமான்களுக்குக் கணக்கேயில்லை. சிவப்பு நாடாவினாலும் வெள்ளை நாடாவினாலும் கட்டப்பட்ட காகிதக்கட்டுக்களும், விடுதியான காகிதங்களும், இன்னும் ரெவினியூ புஸ்தகங்களும், பென்ஸில்களும், மசிக்கூடுகளும், பேனாக்களும் அபரிமிதமாகக் கிடந்தன. எல்லாம் ஒரே கூளமாக இருந்தன. அம்மேஜையின்மேல் அவை வைக்கப்பட்டிருந்த சுவரின்மீது ஸ்ரீராமர் பட்டாபிஷேகப்படமும், அவ்வருஷத்திய காலெண்டரும், 'மெல்லின்ஸ்' ஆகாரத்தை உட்கொண்டு குண்டாயிருக்கும் ஓர் ஆங்கிலக் குழந்தையின் படமொன்றும் மாட்டப்பட்டிருந்தன. அவ்வறை மத்தியான வேளைகளில் உட்காருவதற்கும், சாப்பிடுவதற்கும், வந்தவர்களை உபசரிப்பதற்கும் உபயோகிக்கப்பட்டு வந்தது. அதே அறை இரவில் படுத்துக்கொள்வதற்கும் பிரயோஜனப்பட்டுவந்தது. இன்னும், அநேகம் தட்டுமுட்டு சாமான்களும், முறம், துடைப்பம் முதலியவைகளும் அதில் அடைக்கப்பட்டிருந்தன. அதில் கொஞ்சம் மீதியாயிருந்த இடத்தையும் நாடாகட்டில் அடைத்துக் கொண்டுவிட்டது. படுத்துக்கொள்ளும் அவ்வீட்டுக் கதிகாரி அதில் அக்கட்டிலிற்படுத்துக்கொள்ளாது இப்பொழுது மேஜையினெதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் தன்னிரு முழங்கைகளை மேஜையின்மீது ஊன்றிக்கொண்டும், தன் முகத்தைக் கைகளில் தாங்கிக்கொண்டுமிருந்தான். அப்பொழுது அவனைப் பார்த்தவர்கள் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருக்கிறான் என்று சொல்லாமலிருக்கமாட்டார்கள். வாஸ்தவத்திலேயே அவன் 'மெல்லின்ஸ்' குழந்தையைப் பார்த்து 'இவ்வளவு புஷ்டியும், தேகவனப்பும், வளர்ச்சியும் இக்குழந்தைக்கு உண்டாயிருக்கிறதே! அதே ஆகாரத்தைச் சாப்பிடும் நம் குழந்தைகள் குண்டாயிராமல் ஆனைவயிறும் சுரைக்குடுக்கையுமாக இருப்பானேன்?' என்று சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு குடும்பத்திற்கு அதிகாரி; கலெக்டர் ஆபீஸில் பெரிய குமாஸ்தா வேலையில் அமர்ந்திருந்தான். உத்தியோகத்தின் பெயர் மாத்திரம் பெரிதேயொழியச் சம்பளத்தில் ஒன்றும் அதிகமில்லை. அவன் பெயர் கிருஷ்ணய்யர். அவன் நாற்காலியில் உட்கார்ந்து ஆபீஸ்வேலையைக் கவனிக்க எண்ணினான். மனம் ஒன்றிலும் பிரவிருத்திக்கவில்லை; மனம் சஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தது. பக்கத்து வீட்டிலோ அல்லது எதிர்வீட்டிலோ மற்று எங்கிருந்தோ இரண்டு சேவல்கள் ஒன்றின்பின் ஒன்றாகக் கூவின. சிறிது நேரத்துக்கெல்லாம் இரண்டும் ஒன்றாகக் கூவின. பிறகு இரண்டும் உறங்கிவிட்டனபோலும். கொஞ்ச நாழிகைக்கெல்லாம் தெருவில் இரண்டு கழுதைகள் கேட்கவொண்ணாத அபஸ்வரத்துடன் கனைத்துச் சென்றன. ஒன்று விட்டு விட்டுக் கத்திற்று. மற்றொன்று ஓலமிடுவதுபோல் நீட்டின குரல் நீட்டினபடியே கத்திற்று.

கிருஷ்ணய்யர் உட்கார்ந்திருந்த அறைக்குப் பக்கத்திலிருந்த தாழ்வாரத்தில் ஒரு கைக்குழந்தை



அழ ஆரம்பித்தது. அதைச் சமாதானப்படுத்த அதன் தாய் பால் கொடுக்கலானாள்; அழுகையும் ஓய்ந்தது. குழந்தை அழுவதையுங் கவனியாது எதைப்பற்றியோ எண்ணமிட்டுக்கொண்டிருந்தான் கிருஷ்ணய்யன். அவனது மனைவி செல்லம் கைக்குழந்தையைத் தாலாட்டித் தாலாட்டித் தூங்கவைத்துவிட்டு, தலைமாடு கால்மாடாகப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்த மக்களைப் பாயில் வரிசையாகப் படுக்கவைத்து, பெரிய துப்பட்டியொன்றை விரித்து எல்லாரையும் போர்த்துவிட்டாள். தம் வேலையைச் சரியாகச் செய்துவிட்டோம் என்று திருப்தியடைந்தவளாய் மறுபடியும் ஒருதரம் குழந்தைகளைப்பார்த்துவிட்டுத் தன் அகமுடையான் பக்கம் செல்லம் திரும்பினாள். உள் நுழையும்போது தன் பெரிய பெண் மீனா தூங்குவதையும், அவளது பாவாடை சற்று விலகியிருப்பதையுங் கண்டு அதைச் சரிப்படுத்தினாள். அவள் தூங்கும்போது போர்த்துக்கொண்டிருந்த கம்பளியைத் தள்ளிவிட்டிருந்தாள். அதை யெடுத்துக் கழுத்துவரையில் போர்த்துவிட்டாள் செல்லம். மீனாவிற்குப் பன்னிரண்டு வயதிருக்கும். அவளைப் பார்த்துச் செல்லம் அனுவசியமாய் ஒரு பெருமூச்சு விட்டாள். சற்றுக்குனிந்து மீனாவின் மதிமுகத்தைப் பார்த்துவிட்டுத் தன் பிராணநாயகனிடம் சென்றனள்; சென்று நாற்காலியின் பின்புறத்தில் சற்றுநேரம் நின்றாள். அப்பொழுதும் கிருஷ்ணய்யன் யோசனையில் ஆழ்ந்திருந்தான்; மனைவி நிற்பதையுங் கவனிக்கவில்லை. சிலநிமிஷங்கள்வரை அவள் சும்மா நின்றிருந்தாள்; பிறகு, அவர் 'என்ன? என்ன? உங்களைத்தான் என்ன?' என்றாள். அதற்கும் அவன் மனோராஜ்யம் கலைபடவில்லை. ஆகவே, செல்லம் தன் கையை அவன் தோளின்மீது வைத்து, 'இப்படி ராத்ரியெல்லாம் தூங்காதே கண் முழிச்சா ஒடம்பு என்னத்திற்காம்? இப்படி ஏன் ஒழைக்கணும்? ராத்ரிலே வேலை செய்ய ஆபீஸ்லெ சம்பளம் கொடுக்கறாளா? இல்லையே. எழுந்திருந்து தூங்கப்போங்க" என்றாள். அவனது மனோராஜ்யம் கலைபட்டது; தன்மனைவியின் பக்கம் திரும்பிப்பார்த்தான். அவள் தன் நாயகனை, வேலையை விட்டு எழுந்திருந்து நித்திரைக்குச்செல்ல வேண்டினாள்.

'நான் ஒன்றும் வேலைசெய்யலையே. எனக்கிருக்கும்பாடு எதிரிலிருக்கும் ஸ்ரீநிவாசருக்குத்தான் தெரியும். அதையெல்லாம் எப்பொழுது ஒழிக்கப்போகிறனோ தெரியலை? செல்லா! முன்னையெல்லாம் செய்து வந்ததைப்போல இப்பொழுது வேலைசெய்ய முடியலையே!" என்றுரைத்தான்.

செல்லத்துக்கு இதன்காரணம் தெரியுமாகையால், அவள் ஏன் என்று கேட்கவில்லை. பிறகு அவனது முகத்தை உற்றுநோக்கி, "கொஞ்சமாவது ஒடம்பைப் பார்த்துக்கொள்ள வேண்டாமோ? இப்படி கவலைப்பட்டா முழுக்கக் கெட்டுப்போமே ஒடம்பு. நம்மால் தடுக்க முடியாததை அனுபவிச்சுத்தான் தீரவேண்டும். அப்படிக்கில்லாமே எண்ணமிட்டுக் கொண்டிருந்தா என்ன பிரயோஜனம்? சித்தூரார் சங்கதி ஏதாவது ஒங்களுக்குத் தெரியுமோ?" என்றாள்.

கிருஷ்ணய்யர்—இன்னிக்கி எம்பேருக்கு ஒரு காயிதம் வந்தது. அதிலே அவாளுக்கு ரெண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணையோடு நன்னா [illegible]யும் வரிசையும் கொடுக்க வேண்டுமென்று கண்டிதமாகச் சொல்வதாக எழுதியிருந்தது.

செல்லம்—அப்பா! அப்பா!! என்ன ஆசை! என்னபேராசை!! பெரும்பேராசையன்னா யிருக்கு!

கிருஷ்ணய்யர்—அவாளை வெய்பிறதில் ஒன்றும் பிரயோஜனமில்லெ. இப்போ கலியாணம் நடக்கறதைப் பார்த்தா அவா சொல்ற மாதிரி 2000 ரூபாய் எவ்வளவோ குறைந்ததென்றே தோன்றது. வாஸ்தவத்திலேயே அவா சொல்றதென்னன்னா, இவ்வளவு கொஞ்சமாக வரதக்ஷிணை கேட்பதற்கு இந்தச் சம்பந்தம் பிடிச்சிருக்கிறதென்றும், பையன் நம்ம மீனாவைப் பண்ணிக்க இஷ்டப்படுகிறானென்றும் எழுதியிருக்கா.

செல்லம்—மீனாகூட அவனைத்தான் ஆம்டிப்பாளுக்கிக்கொள்ள இஷ்டப்படுகிறாள்.

கிருஷ்ணய்யர்—ஏன்? அவள் ஏதேனும்சொன்னாளா?

செல்லம்—இல்லே. அவள் அதையெல்லாம் பத்திச் சொல்வதே யில்லேயே. சின்ன குழந்தையே பிடிச்சு ரொம்ப மனஜோஷித்தனமும், சங்கோசமும், ரோஷமு முடையவளாச்சே அவள். ஏன்? எங்கம்மா அவ்வயசிலேதான் என்னைப் பெத்தெடுத்தா. இன்னும் எவ்வளவு காலந்தான் மறைத்து வைக்கமுடியும்? மீனா தாரமாய் ரெண்டு வருஷமாயிவிட்டதாம். நான் உப்மா களறத்துக்கு மறவையிலே உப்பிருக்கானு பார்த்தேன்; உப்பில்லே. சுறண்டியை எடுத்துண்டு பக்கத்தாத்துக்குப் போனேன் உப்புவாயிண்டு வர்ரத்துக்கு. அங்கே அந்த முண்டை சுந்தரியும், திரிசுடுவி காருவும் இன்னு யாரோ இரண்டு கம்மினுட்டிகளும் நம்மளைப் பத்தியும் மீனாவைப்பத்தியும் பேசிண்டிருந்தா. நான் போனதும் சட்டென்று பேச்சை நிறுத்திவிட்டாள். இந்தமாதிரி நித்தியம் அந்த முண்டைகள்வாயிலே நாம்ப அறைபடறதும் போரும்; எண்ணாமிட்டுண்டு சாறதும் போரும். ஐயோ! 'ஓம்மலிட்ட வீடும் கம்மலிட்ட யிரும் பாழ்' என்றுசொல்வாளே. இப்படி கண்டபேர் கண்டபடி சொல்ல நமக்குக் காலமாச்சு.

கிருஷ்ணய்யர்—அவாள் கேட்கிறபடி வரதக்ஷிணை ரூபாய் 2000 வரிசையும் சேர்ந்தால் 4000 ரூபாய்க்கு மேலாகிவிடுமே!

செல்லம்—பையனுக்கு நம்ம மீனாமீது ஆசையிருந்ததன்னா, எதிர் ஜாமீன் பணத்தைக் குறைக்கமுடியாதா? மீனா மூக்கும் முழியுமா எப்படி இருக்கிறாள்? கதையும் பாட்டும் நன்னா தெரிந்தவளாச்சே! அவளைக் கல்யாணம் பண்ணிக்க நீ நான் என்னும் போட்டி போட்டுண்டு எத்தனையோ பிள்ளைகள் வருவாளே!

கிருஷ்ணய்யர்—அந்தப் பையனுக்கிருக்கிற ஆசையைப் பார்த்தால், எதிர்ஜாமீனே வேண்டாம் என்று சொன்னாலும் சொல்வான். அவன் தகப்பனார்தான் பெருத்த பேராசைக்காரன்; கண்டிப்பானவன்; பணம் என்று பேசுவான். தம்பிடிக்காக கடைக்காரனிடம் சண்டை போட்டு அடிபட்டுக்கொண்டும் தம்பிடியை விடாது வாங்கிண்டே வந்துட்டானாம். அப்படிப்பட்டவனாச்சே அவன்! பெரிய பிள்ளை பி. ஏ. கூட வாசிக்காதவனும், 3000 ரூபாய் வரதக்ஷிணை வாங்கினானும். இப்போ இளைய பிள்ளை பி. ஏ. பாஸ்பண்ணி யிருக்கான். அப்படியிருந்தும், 2000 ரூபாய் வரதக்ஷிணை கேட்டதுக்குக் காரணம் என்ன என்றால், அந்தப் பையன் மீனாவையே கல்யாணம் பண்ணிக்க இஷ்டப்படுகிறானாம்; பிடிவாதம் பிடிக்கிறானாம். வேறவழி ஒன்னையுங் காணோமே. நம்முடைய பித்ரார்ஜிதமான வீட்டையும் தோட்டத்தையும் விற்கவேண்டியதுதான். வேறே மார்க்கம் நமக்கில்லே.

செல்லம்—நம்ம ஆத்தையா வித்துடணமென்கிறங்கோ?

கிருஷ்ணய்யர்-அவ்வளவு ஏக்க இரையாதே. ஒருவேளை மீனா விழித்துக்கொண்டிருப்பாள்.

செல்லம்—இல்லே: அசந்து தூங்கிண்டிருக்காள். ஒன்னுந் தெரியாத ஸாதுவாச்சே அவள். ஒங்கள் சம்பளத்துக்குச் சரியா அந்த ஆத்திலும் தோட்டத்திலும் வந்திண்டிருக்குது. அதுகளை வித்துவிட்டா பாதிவருமபடி போயிடுமே. அப்பறம் அரைவயிர் சாதத்துக்குக்கூடத் திண்டாடும்படியாய் ஆய்விடும். இந்த மீனா ஒன்றுதானா நமக்குக்குழந்தை? பின்னும் காரு, நுகர், விசாலு இந்தக் குட்டிகளெல்லாம் கல்யாணத்துக்கிருக்குதுகள். போராக்குறைக்கு குஞ்சியயல் இருக்கான். அவனுக்குப் பிறைக்கறத்துக்குள நாலு ரெண்டெழுத்தாவது சொல்லிக் குடுக்கவேண்டாமா? இதுகளெல்லாம் நம்ம கழுத்தைச் சுத்திக்கொண்டிருக்கே. என்ன செய்யறது? நம்ம அந்தஸ்துக்குத் தக்கமாதிரி 'கந்தைக்கேத்த பொந்தையா' ஒரு பையனைப்பார்த்து மீனாவுக்குக் கல்யாணம் பண்ணனும். என்னமோ அந்தச் சித்தூர்ப் பையன் மீனாவின் மனசைக் கொள்ளைகொண்டுவிட்டான். இருந்தாலும் என்னபண்றது? இந்தப் பையனை விட்டுவிடவென்றால் என் மனசு கேக்கலே.



கிருஷ்ணய்யர்—செல்லா, எல்லாம் தெரிந்துதானிருக்கிறது. அதுதான் என்மனதிலே புகுந்துகொண்டு மூளையையெல்லாம் அனலிலிட்ட மெழுகுபோல் உருக்கிவிடுகிறது. இந்தப் பத்துமாத காலமாக என் சித்தம் ஸ்வாதீனத்திலில்லே. இனி காக்கக்கூடாதபடி வயதான பெண்ணை வைத்துக்கொண்டிருக்கும் நான்படும்பாடு தின்டாட்டமாயிருக்கிறது. நெருப்பில் விழுந்த புழுவைப்போல என் மனம் துடிக்கிறது. நல்ல தூக்கம் இல்லாமல் இரவெல்லாம் யோசித்து என் மூளை கலங்கிப்போகிறது. சீக்கிரத்தில் கல்யாணத்தை முடிக்காவிட்டால், பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் போகவேண்டும்.

செல்லம்—அதுதான் ஒன்னு குறைச்சல். சுருக்கா வேறே எங்கேயானா ஒருவரனைப் பார்த்துப் பண்ணிடவேணும்.

கிருஷ்ணய்யர்:—நீசொல்லுவதுபோல் இனிமேல் காக்கமுடியாது. சித்தூரார் இப்பவே சந்தேகப்படுகிறார்களாம், நம்மீனா பெரியவளாய் விட்டாளென்று. இன்னுங்கொஞ்சநாள் தாமதித்தால் நம்முடைய ரகஸியம் வெளிப்பட்டுவிடும். அவாளும் பெரிதான பெண்ணைத் தங்கள் பிள்ளைக்கு விவாகம் செய்துகொள்ள ஒப்பமாட்டார்கள். அப்புறம் நம்ப ஆத்துக்கு வைதீகர்களும் நல்லவாளும் வரமாட்டா: சாப்பிடவும் மாட்டார்கள். செல்லா! நான் இதுவரையில் ஒருபொய்கூடச்சொன்னவனல்ல; ஆபீஸில்கூட கலெக்டரைச் சந்தோஷிப்பிக்க இச்சகம்பாடினவனல்ல. அப்படியிருந்தவன் இப்போ இதற்குப் பொய்சொல்லவேண்டியிருக்கிறது. மீனா ரொம்பவும் சமர்த்து, ரோஷக்காரி, சங்கோசமுள்ளவள். நான் எவ்வளவு ப்ரேமையுடன் வளர்த்து, எவ்வளவு சந்தோஷத்துடனும் அக்கரையுடனும் அவளைப்படிக்கவைத்தேன்! அது ஸ்வாமிக்குத்தான் தெரியும். அவளது முகம் எவ்வளவு தேஜஸுடன் சொலிக்கிறதோ, அவ்வளவு மேன்மையாக அவளது மனசும் பரிசுத்தமாய்க் களங்கமின்றி இருக்கிறது. இதெல்லாம் எனக்குத் தெரிந்திருந்தும், அவளிடம் தெரியாததுபோல் நடந்துவந்தேன்; உன்னிடமும் இதைச்சொல்லாதிருந்தேன். மீனாவும்தான் நடித்துவந்த மாதிரியே என்னிடமும் நடித்துவந்தாள். இது எனக்கு எவ்வளவு அவமானமாயிருக்கிறது தெரியுமா? அந்த அவமானத்தைக் கொஞ்சங்கூடப் பொறுக்கமுடியாது. செல்லா! ஒவ்வொரு சமயத்தில் இந்தப் பாழாப்போன ஜாதியை விட்டுப் பிரஷ்டனாகிவிடலாம் என்று எண்ணுகிறேன்; பிரம்ம சமாஜத்திலாவது அல்லது அமெரிக்கன் மிஷினிலாவது சேர்ந்துவிடலாமென்றும் எண்ணுகிறேன். அந்த மதத்தில் இவ்விதத் தொல்லைகளும் தொந்தரையும் இல்லே.

செல்லம்—என்ன, மதப்பிரஷ்டனாகவா! ஐயோ! ஒங்களுக்கு புத்தியும் இப்படிப் போகுமோ? அந்த வார்த்தையை மறுபடியும் பேசாதேயுங்கோ. அந்தமாதிரி நீங்க பேசுவதைக் கேட்க எனக்கு மிகவும் பயமுண்டாகிறது. அந்த மதங்களிலேகூட எவ்வளவோ கஷ்டங்களும், தொந்தரைகளும் இருக்குமேயொழிய இராமல் போகாது. நம்முடைய பழைய கோயில்களையும், தெய்வங்களையும், மதத்தையும், ஜாதியையும், வீட்டையும், மனுஷாளையும் விட்டுவிட்டு எப்படி வேறேமதத்தில் சேர்வது? ஈச்வரன் ஸர்வசக்தியுமுள்ளவர். அவர் எப்படியாவது நமக்குச் சகாயம் செய்வாரே யொழியச் செய்யாமல் போகமாட்டார். நாம் எல்லாம் தெய்வத்தின்கீழ்க்குடியல்லவா? மரம்வைத்தவன் தண்ணிகொட்டி வளர்க்காதுபோவானோ? நீங்க வீட்டையும் தோட்டத்தையும் விற்றுவிட எண்ணிடவேண்டாம். ஒங்க ஒடம்பு நாளுக்குநாள் இளைத்துக் கறுத்துவருகிறது. நான் மனக்கவலையோடு நல்லவேளையாய் ஒடம்புக்கு ஒண்ணுமில்லாமல் பூமியில் நாமும் மனுஷ்யராய் நாடவேணுமே என்று ராத்திரியும் பகலுமா ஓயாதே கடவுளைத் தியானம் பண்ணிண்டிருக்கேன். வெள்ளிக்கிழமை வெள்ளிக்கிழமை தெளிவிரதம் கொண்டிருக்கேன். நாலு சுமங்கலிகளுக்கு வெத்திலே பாக்கு புஷ்பம் குங்குமம் கொடுத்து வருகிறேன். இப்படியேவா காலம் போயிடப் போறது? என்னமோ சொல்வாளாம்: 'மூப்பது வருஷம் வாழ்ந்தவனுமில்லே; மூப்பது வருஷம்

கெட்டவனுமில்லை' யென்று. நீங்களிருக்கும் வரை எனக்கென்ன குறைச்சல்? பயித்தியக் காரியாட்டம் சொல்றேனே! என்னதாயிருந்தாலும் நாமெல்லாம் மனுஷ்யாள்தானே. இன்னிக்கிருப்பாரை நாளைக்கிருப்பாரென்னுசொல்ல இடமில்லையே. அப்படியிருக்க, ஏதாவது உங்களுக்குக் கெட்டது நேர்ந்துட்டா ஈசுவரன் நமக்குக் கெட்டது வரவொட்டாமல் தடுக்கவேணும். அதை எண்ணும்போதே எனக்கு மயிர் கூசுகிறது; உடம்பெல்லாம் நடுநடுங்குகிறது. உடம்பு சரியில்லாமல் லீவு வாங்கிட நேர்ந்தால் அப்போ வீட்டையும் தோட்டத்தையும் விற்றுவிட்டால் என்ன செய்யறது?

கிருஷ்ணய்யர்—வேறு வழியில்லையே! சித்தூர்ப்பையனை மீனுவிற்கு விவாகம் செய்விக்க நான் என்ஜீவனை 'இன்ஷியூர்' செய்திருக்கிறேன். அது உனக்குந் தெரியுமே. என் தேகஸ்திதி ஒருமாதிரி இருந்தபோதிலும், அவ்வளவு சுருக்காக இறந்துவிடமாட்டேன்; நீ பயப்படவேண்டியதில்லை. மீனு அந்தப் பையனையேதான் மணவாளனாக அடையவேண்டுமென்று மனதில் வரித்துவிட்டாள். அவளுக்குத் தகப்பனான நான் அவளை வாழ்க்கையில் சந்தோஷமாகவிருக்க என்னென்ன சௌகர்யங்களைச் செய்துவைக்கவேண்டுமோ, அவைகளையெல்லாம் செய்துவைத்திருக்கிறேன். அவள் மனமொழி காயத்தால் அவனையே மணக்கவேண்டும் என்று எண்ணங்கொண்டிருக்க, அவளைக் கணவனுக்காது வேறு ஒரு அறிவிலியை, காதலிக்க வகையறியாதவனை, சிலாகிக்கத் தெரியாதவனை அகமுடையானாகச் செய்து, ஸதா அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் துக்கத்தை அனுபவிக்கப் பார்த்து நான் சகிப்பேனா? அவளுக்கு வயது 13 ஆகிறது. அறியாத குழந்தைபோல் பலவிதங்களிலிருந்தாலும், சில விஷயங்களில் முற்றிலும் தெரிந்த பெரியவளாயிருக்கிறாள். இந்தச் சித்தூர்ப் பையனை ரொம்பவும் மனப்பூர்வமாய்க் காதலிக்கிறாள் என்று நினைக்க இடமிருக்கிறது. அவனைத்தவிர்த்து வேறொருவனையும் விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படமாட்டாள்போல் தோன்றுகிறது. எனது மற்ற குழந்தைகளைக் காப்பாற்ற ஸ்ரீநிவாசன் தேகாரோக்யத்தையும் பலத்தையும் கொடுப்பார். தமது பெண்ணின் வாழ்க்கையைச் சந்தோஷமுடையதாகச் செய்வது பெற்றோரின் கடமை. எவ்வளவு பணம் செலவானபோதிலும் சரியே.

செல்லம்:—ஆமா நீங்கதான் அவள் சுகத்தைக் கவனிக்கிறவாபோலிருக்கு. உங்களைக் காட்டிலும் நான் எவ்வளவோ சுகத்தை அவளுக்கு உண்டாக்கவேணுமென்னு இருக்கேன். வீடு தோட்டம் இதுகள்மேலே எவ்வளவு ஆசை வைத்திருந்தீர்! பிறந்ததும் அந்த ஆத்திலே தான்; விளையாடினதும் அந்த ஆத்திலேதான். அப்படிப்பட்ட பெரியவா சம்பாதிச்சுவைத்த பழையவீட்டை, அதுவும் ஆப்வந்த வீட்டை யாருக்குத்தான் விற்றுவிட மனம்வரும்? அதை விற்றுவிட்டால், உங்களது தேகசுகமும் இப்பவிருக்கிறதைவிட இன்னும் கேவலமாய்விடுமோ என்று பயப்பட்டுக்கொண்டிருக்கேன். நான் உங்களை நன்றாயறிவேனே. நீங்க உங்களைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பதைவிட நான் அதிகமாயறிவேனே. இப்போதான் ரொம்ப தைர்யமாயும் அலக்ஷியமாயும் மீனுவின்மீதுள்ள அன்பினால் வாத்ஸல்யத்தாலும் வீட்டை விற்றாவது சித்தூர்ப்பையனைக் கல்யாணம் செய்துவிடவேண்டுமென்று சொல்றையளே. அதை விற்றுவிட்டபிறகு ஐயோ விற்றுவிட்டோமே! ஏனோ விற்றோமே! என்று ஏங்கித்தவிப்பீர்கள். நம்ப மீனுவும் இதற்குடன்படவேமாட்டாள் என்று நான் நிசமா சொல்வேன். ஏனென்றா, அந்த ஆத்துமேலே ஒங்களுக்கு ரொம்ப ப்ரீதி என்று அவளுக்குந் தெரியும். என்னா, என்னா, நீங்க ஆபீஸ் சம்பளம் போறலே போறலே என்னு எத்தனைதரம் சொல்லியிருக்கையள். அதற்காக அந்தவீட்டை வாடகைக்கு விட்டுவிட்டுக் கொஞ்சவாடகைக்கு இந்தப் போரும் போறாத புளிக்கூண்டிலே வந்து குடியிருக்கோமே, வீடில்லாத பிச்சைக்காரான்போல.



கிருஷ்ணய்யர்:—அடி செல்லா! அதெல்லாமிருக்கட்டும், நீ இப்போநடந்ததை ஒன்றுகூட மீனுவுக்குச் சொல்லப்போகிறாய். அவள் ரொம்ப ரோஷக்காரி; நினைத்ததை அப்படியே செய்யும் பிடிவாதக்காரி. தெரியுமோ? ரொம்ப நாமெல்லாம் பாரியோசனை செய்திடுவள். ஆசையினால், இந்த இரகஸ்யத்தை அவளிடத்தில் வெளிப்படுத்தாதே. பொம்மனாட்டிகளிடத்தில் ரகஸ்யம் சொன்னால், அது பகிரங்கத்துக்கு வந்துவிடும் என்று பெரியவாள் சொல்லுவா. அதுபோல ஆகிவிடுமோ?

செல்லம்:—ஆகாது. நிசமா நான்சொல்லவே மாட்டேன். என் வயத்திலே பிறந்த பெண்ணைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தளவாவது எனக்குத் தெரியாதுபோமோ? இந்தமாதிரியான விஷயங்களை, அவள் காது கேட்கும்படி பேசப்படாது.

கிருஷ்ணய்யர்.—ஒரு நிமிஷங்கூட இனிமேல் தாமதிக்கக்கூடாது; இப்பவே நிச்சயம் செய்துவிடவேண்டும். நமக்கு 2000 ரூபாய் என்னமோ ரொம்பவும் ஜாஸ்தியான பணம். ஆனால், நல்ல சம்பந்தம். 2000 ரூபாய் கொடுக்க முடியாதென்றால், அவாள் பெண் வேண்டியதில்லை என்பார்கள். ஆகவே, நம் வீடும் தோட்டமும் போகவேண்டியதுதான். கைநிறைந்த பணத்தைப் பிரமாதமாக எண்ணாமல், கண்ணிறைந்த கணவனையல்லவோ பெண்களுக்குப் பெற்றோர் பார்த்து விவாகஞ் செய்துவைக்கவேண்டும்? வீடுந் தோட்டமும் மீனுவின் கல்யாணத்துக்காக வரதக்ஷிணை கொடுப்பதற்கு விற்றுவிட வேண்டியதுதான்; நான் முன்னமேயே தீர்மானம் செய்துவிட்டேன். வேறே வழியொன்றும் எனக்குப் புலப்படவில்லை.

## II

வரதக்ஷிணை! ஹா! அந்தப் பெயரைக் கேட்கும்போதே, பெண்களின் பெற்றோர்கள் கோடையிடியைக் கேட்ட அரவம்போல் ஆகிறார்களே! வரதக்ஷிணை என்ற பெயரே அநேகம் எழில்மிகுந்த எந்திழைகளுக்கு எமனாகவிருக்கிறது.—விவாக காலங்களில் பிள்ளையைப்பெற்றவன் பெண்ணின் தந்தையிடமிருந்து இதுதான் சமயம் என்றெண்ணிப் பணத்தைப்பறிக்கிறான்; இதுவும் ஒரு வழக்கமாயிருக்கின்றது. பணம் பிடுங்கும் இவ்வழக்கம் அதிகமாக இங்கிலீஷ் படித்தவர்களிடந்தான் காணலாம். ஒரு பிள்ளை பி. ஏ. படித்துப் பாஸ்செய்திருந்தால், அவனது தந்தை பிள்ளை பாஸ்செய்ததனால் சந்தோஷப்படாமல், வரதக்ஷிணை அதிகமாக வாங்கலாம் என்று பணம் வருவதனால் ரொம்ப ஸந்தோஷப்படுகின்றான். அந்தப் பிள்ளைகள் தான் என்ன பிள்ளைகளோ? அறியோம். அதிகமாகப் படித்தால்மாத்திரம் பெரிய மனிதர்களாய்விடுவார்களா?

* "மற்றப் பிறவியின் மானிடப் பிறவியே
நற்றவ முளதென நவிலுவர் மேலோர்.
அத்தகை யான அரும்பிற வியினை
இத்தரை யில்நாம் எய்தப் பெற்றும்,
கல்வியும், நலமும், கலைகள் கூறும்
நல்வி வேகமும் நலக்கப் பெற்ற
அந்தணர் குலத்தில் அவதரித் தோமென
முந்தும் பெருமையால் மொழிந்திடும் நாமே,
மாமிசம் விற்கும் மாந்தரைப் போலத்
தாமச குணத்தால் தம்மைநாம் விற்றுச்
செல்வம் பெறுதல் சிறப்பிங் காமோ?
வல்ல புருடராய் மன்னிய நாமே,
மான மற்று, மதியு மற்று,
ஆனநல் வீரமும் அற்றுப் பெண்ணால்
செல்வந் தேடல் சிறப்போ? சிறப்போ?
இல்லா ளிடத்தில் இணைபிரி யாத
அன்பினை யன்றோ அடைதல் வேண்டும்?
துன்பினால் பொருள் கொளத் தொடங்குதல் நலமோ?"

* * *

மறுநாள் வெள்ளிக்கிழமை ராத்திரி ஒரு மணியிருக்கும். கிருஷ்ணய்யர் நாடா கட்டிலில் இப்படியும் அப்படியும் புரண்டபடியேயிருந்தார்; தூங்கும்போது என்னென்னவோ கெட்ட ஸ்வப்பனங்களைக் கண்டார். தாம் ரொம்பவும் வியாதியினால் அவஸ்தைப் படுவதாயும், வைத்தியர்கள் பிழைப்பது அசாத்தியம் என்று கை

* ஜட்சிலன்.

விட்டுவிட்டதாகவும், தன்னை பேண்ட்லண்டு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு போனமாதிரியாகவும், அங்கே தாம் இறந்துவிட்டதாகவும், எதிரில் செல்லம், குழந்தைகளெல்லாம் கையைப்பிசைந்துகொண்டு அழுவதாயும் இப்படியாகக் கெட்ட கனவைக் கண்டு படுக்கையிற் புரண்டுகொண்டேயிருந்தார்; தூக்கமும் நன்றாக வரவில்லை; கெட்ட கனவுகளும் விட்டொழிந்தபாடில்லை. செல்லம் தாழ்வாரத்தில் பாயின்மேல் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் பக்கத்தில் கைக்குழந்தையும் படுத்துக்கொண்டிருந்தது. மற்றைய குழந்தைகளெல்லாம் நன்றாக அயர்ந்து நித்திரை செய்துகொண்டிருந்தன. ஆனால், பேதை மீனுமாத்திரம் கண்ணோடுகண் மூடவேயில்லை; தன் தாய்தந்தையரின் சம்பாஷணையை ஒற்றுக்கேட்டுவிட்டாள். அதுமுதல் அவளது மனதில் ஏதோவொன்று அதிதீவிரமாய் வேலைசெய்துகொண்டிருந்தது. அவள் ரொம்பவும் ரோஷக்காரி. சித்தார்ப் பையன் மீனுவைப் பார்க்க வந்திருந்தபோது, அவன் பார்த்த பார்வையானது, அவளது ஹிருதயத்தில் கூரிய அம்புபோல் ஊடுருவிப் பாய்ந்தது. இருவரும் கண்களால்பேசிக்கொண்டார்கள்போலும்: "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின், வாய்ச்சொற்கள், என்ன பயனுமில."

தன் மனதைக் கவர்ந்துகொண்ட சித்தார்ப் பையனை அவள் நினைத்தமாத்திரத்தில் அவளை அறியாமலேயே அவள்முகத்தில் ஒரு தேஜஸ் உண்டாகும்; தன் பெற்றோரிடத்தில், அவனையே மணந்துகொள்ளவேண்டுமென்று சொல்ல எண்ணுவாள். தன் இருதய கமலத்தில் வசிக்கும் சித்தார்ப்பையனை அடைய அஸாத்தியமாய்விட்டால், கல்யாணமில்லாமல் காலங்கழிப்பது என்றெண்ணினாள். இந்த ஆலோசனைக்குத் தன் பெற்றோர்கள் இடங்கொடார்கள் என்று அவளுக்குத் தெரியும்; தன் தகப்பனார் கடைசியில் எவ்விதத்திலாவது தன்னைப்பற்றி வீட்டையும் தோட்டத்தையும் விற்றுவிடுவதாக யோசித்துவிட்டார் என்பதும் அவளுக்குத் தெரியும். அப்படிச் செய்துவிட்டால், தன் தகப்பனாருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் வரும் தரித்திரம் சொந்தமாகிவிடும். தன் தகப்பனது மனோதுக்கம் அதிகரித்துக் கடைசியில் இறந்துவிடுவாரென்றும், பிறகு குழந்தைகள் காப்பாற்றுவாரற்றுப் பரிதவிக்க நேர்ந்துவிடுமென்றும் எண்ணினாள். 'இவ்வளவும் எனக்காகவல்லவா! இந்தக் கஷ்டத்தை வராமல் தடுக்க என்ன உபாயம்?' என்றும் யோசித்தாள்; வெகுநாழிகை எண்ணினாள். ஒன்றும் அவள் மனதில் உதயமாகவில்லை; எப்பொழுதும்போலப் படுக்கையிற் படுத்துக்கொள்பவள்மாதிரி நடித்தாள். இரவெல்லாம் தூங்கவேயில்லை; இருகைகளாலும் கண்களைப் பொத்திக்கொண்டாள்; அப்பொழுதும் தூக்கம் வரவேயில்லை; கஷ்டத்தைத் தடுக்கவழி ஏதுவென்று அடிக்கடி நினைத்துவந்தாள். மணி யோசிக்கிறதில்கழியமாட்டேனென்கிறது; மணிக்கு 60 நிமிஷங்கள்போல் தோன்றவில்லை; 600 நிமிஷங்கள்போல் தோன்றிற்று. கிருஷ்ணையர் ஆபீஸ்வேலையைப் பார்த்துவிட்டுப் படுத்துக்கொள்ள ரொம்ப நாழிகையாகிவிட்டது. அவர்க்குத் தூக்கம் பிடிக்கவில்லை; கட்டிலில் புரண்டுகொண்டிருந்தார். மீனுவுக்கோ என்னசெய்வதென்று தோன்றவில்லை. பின்மாலை 2 மணிக்கு வீட்டிலிருந்தவர்கள் யாவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். அந்த ஸமயத்தில் மீனு சந்தடி செய்யாமலே எழுந்திருந்து கால்பெருவிரலால் நடந்துசென்று, அறையில் எரிந்துகொண்டிருந்த இராவிளக்கை அணைத்துவிட்டாள்; பிறகு அஸாத்தியமான அவஸரத்துடன் சத்தஞ் செய்யாமல் புறக்கடைப்பக்கம் சென்றாள்.

கிருஷ்ணையர்தான் முதன்முதலில் படுக்கைவிட்டெழுந்தார். அப்பொழுது சுமார் நாலு மணியிருக்கும்; இருட்டாயிருந்தது. விளக்கு எண்ணெய் இல்லாததனால் தானாகவே அணைந்துவிட்டதென்று நினைத்துப் பெரியவிளக்கை ஏற்றிவைத்துக்கொண்டு ஆபீஸ்வேலையைக் கவனிக்கலானார். இரண்டு கிராமங்கள் ஒன்றுக்கொன்று நீர்ப்பாசனவிஷயத்தில் விவாதப்பட்



டிருந்ததைப்பற்றிய சிக்கலான சிலவிஷயங்களைப் பரிசீலனைபண்ணிக்கொண்டிருந்தார். அந்தவிளக்கின் பிரகாசத்தினால் தூக்கங்கெட்டுச் செல்லமும் எழுந்துவிட்டாள்; வழக்கப்பிரகாரம் குழந்தைகளையெல்லாம் பாயில் எடுத்துவிட்டாள். மீனுவைப் படுக்கையிற் காணவில்லை.

"அடி மீனு! உங்கப்பா பக்கத்திலே படுக்கிறாயா என்ன? இவ்வளவுசுருக்கா என்னிக்கும் நீ எழுந்ததே கிடையாதே!" என்றாள்.

கிருஷ்ணய்யர்—என்ன செல்லா! கனாகாண்கிறையா என்ன? மீனு இங்கில்லையே.

செல்லம்—பின்னே எங்கே அவள்? பாயண்டை காணல்லையே, அவளை!

இதைக்கேட்டதும் அவர் சரேலென்றுநாற்காலியை விட்டெழுந்திருந்தார். கையில் விளக்குடன் பெற்றோர்கள் வீடுமுழுதிலும் தேடினார்கள்; புறக்கடைப்பக்கம் சென்றனர். என்ன ஆச்சர்யம்! கதவுதிறந்திருக்கிறதேயென்றுசொல்லிவிட்டு, வாசற்பக்கம் வந்து எதிர்வீட்டிலிருக்கும் துரைசாமி ஐயரையும், பக்கத்துவீட்டிலிருக்கும் ராகவையரையும் கூட்டிக்கொண்டு உள் நுழைந்தார். எல்லோரும் நேராகப் புறக்கடைப்பக்கம் சென்றார்கள்.

புறக்கடையில் பெரிய தோட்டம் உண்டு. அதில் கிழங்குப்பயிர்கள் பயிரிடப்பட்டிருந்தன. அத்தோட்டத்தினடுவில் பெரிய தூரவு ஒன்று இருந்தது. அந்தத் தூரவை முதன்முதலில் சோதித்தார்கள். பேதை மீனுவின் பிரேதம் அதினின்றும் எடுக்கப்பட்டது. அவளது புடவையில் ஒரு பெரிய பாறாங்கல் கட்டப்பட்டிருந்தது.

கி. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

## Tamil Prose Style.

BY MR. P. K. SREENIVASACHARIAR.

*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## தமிழ் வசன நடை.

தமிழ்மொழியில் பிறமொழிகளை எடுத்தாளலாகாது என்னும் கொள்கை இல்லை. தமிழில் எந்நூலாசிரியரும் அவசியமானபோது பிறதேசத்துச் சொற்களையும் கையாண்டிருக்கின்றனர். தமிழ்மொழியினர் ஸம்ஸ்க்ருதமாகிய ஆரியமொழியையும், தமிழ் மொழியினின்று தோன்றியவை யெனப்படும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பிற திராவிடமொழிகளையும் தழுவுதலன்றியும், வேறுபாஷைச் சொற்களையும் தழுவுகின்றனர். இவற்றை, தமிழ்க்கு இலக்கணமாகிய நன்னூல் முதலியவற்றில் வடசொல், திசைச்சொல் எனப் போற்றி விதியுரைக்கப்பட்டமையால் நன்கு விளங்கும். ஆதலாற் குறித்த பொருளை விளக்கவேண்டி இன்றியமையாத இடங்களில் செய்யுளிலும் வசனத்திலும் பிறபாஷைச்சொற்களைக் கையாளுவதில் தவறில்லை. சிறிதுகாலத்திற்குமுன் ஸர்வகலாசாலைச் சங்கத்தாரும், மாணாக்கர்கள், உரை நடையில் குறித்த பொருளை விளக்குவனவாயின், மற்ற பாஷைச் சொற்களையும் தழுவிக்கொள்ளலாம் என்று அப்படிப்பட்டவற்றிற்கு உதாரணமாகப் பலசொற்களைக் காட்டும் ஒருபட்டியையும் வெளியிட்டனர். பாஷை உலகத்தில் எங்ஙனம் நடைபெறுகின்றதோ அங்ஙனமே இயற்கையை ஒட்டியிருத்தல் வேண்டு மென்பது தமிழர்களின் கொள்கை: "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே" என்பது இலக்கணம். தமிழில் எந்தக்கவியும், தமிழில் மிக்க அபிமானமுடையவராயினும், பிறசொல்லைக் கைக்கொள்ளலாகாதென்ற குறுகிய நினைவும், துவேஷபுத்தியும் உடையவராகத் தெரியவில்லை. தமிழிற் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் தமது இராமாயணத்தில் ஓரிடத்தில் சுந்தரத்தெலுங்குமொழியாகிய "அக்கட" என்னும் சொல்லைப் பிரயோகித்தனர். இருநூற்

வருஷங்களுக்கு முன்னிருந்த சிரேஷ்டகவியாகிய குமாரகுருபரஸ்வாமிகள் தாம் இயற்றிய பிள்ளைத்தமிழ் ஒன்றில் "சலாஞ் செயற்கு ஏக்கறுக்கும்" என்று அனுக்குமொழியைப் போற்றிக்கொண்டனர். வில்லிபுத்தூரார் தமது மகாபாரதத்தில் "புராதனைகம வேதகீத புராணரூபம்" என்ற ஓர் நீண்ட வடமொழித்தொடரை ஓரிடத்தில் வைத்தனர். இங்ஙனமே மற்றும் இவர் பல வடமொழித்தொடர்களைப் பிரயோகித்துள்ளமை பிரசித்தம். ஆந்திரகவிகளில் ஒருவர் "அச்சதெலுகு ராமாயணம்" என்று ஒருநூல் இயற்றியிருக்கின்றாரென்று கேட்டதுண்டு. அந்நூல் பிரசுரமடையவே யில்லையாம். எங்ஙனம் பிரசுரமடையும்? விசாலமான இதயமுள்ளவர்கள் இதனைக்குறித்து நகைக்கின்றனர். பலருடன் கலந்து உறவாடாதவனுக்குப் பலம் உண்டாகுமோ? அவன் தனித்துநின்று பயன் பெறுமை அநுபவத்திற் கண்டதே. இங்கிலிஷ் பாஷையை "நவதானியபாஷை" என்று ஒருவர் ஒருசபையிற் சொன்னார். அங்ஙனம் சொன்னவர், உடனே "அவ்வண்ணம் அப்பாஷை பல பாஷை மொழிகளையும் போற்றிக்கொண்டிருப்பதனாலேயே, சர்வசக்தியும் வாய்ந்துள்ளது" என்றார். நம் தமிழ்மொழியும் பிறபாஷைச் சொற்களையும் சகோதரமாகப் பாவித்திருப்பதனால், ஆங்கிலமொழிக்கு அடுத்தபடியாகச் சொல்லும்படியிருக்கிறது. ஓர் கவிஞர், "கன்னித்தண்டமிழ்" என்றார்: காரணமென்னை? தமிழ் இன்னும் வளரும் தன்மையையுடையதாயும், இளமையையும் வலிமையையும் உடையதாயும் இருக்கின்றதென்பதாம். ஆயின், தமிழில் குறித்த பொருளை விளக்குவதற்குத் தக்க சொற்கள் வழக்கில் இருக்க, அவற்றை விட்டுப் பிறபாஷைமொழிகளை வழங்குபவர், பாஷைத்துரோகிகளேயாவர். அவர்களால் நம் பாஷைச்சொற்கள் அருகிப் பாஷை க்ஷீணதசையை அடைந்துவிடுமென்பது திண்ணம். தமிழில் சுதேசமித்திரன் போன்ற பிரசுரமடைந்திருக்கும் பத்திரிகைகள் சுத்தத்தமிழ்மொழிகளையே வழங்கி வேண்டும்போது வேறுமொழிகளையும் தழுவி எவ்விஷயத்தைப்பற்றியும் யாதொரு சிரமமுமின்றிக் குறித்த பொருளை நன்குவிளக்கியெழுதுகின்றனவன்றோ? அவை அவசியமானபோதன்றி மற்ற விடங்களில் வேறுசொற்களை ஆளுகின்றனவோ? காலதேசவர்த்தமானங்களால் நூதனச் சொற்களை ஆங்கிலம் முதலியவை கைக்கொள்ளுதல் போலவே, தமிழும் புதியசொற்களைப் படைத்துக்கொள்ளுகின்றமையைச் சுதேசமித்திரனைப் படிப்பவர் அறிவர்.

அத்தகைய சொற்களை விலக்கவொண்ணாது; விலக்கினாலும் தடைப்படமாட்டா. இது தத்துவம்.

இனி, தமிழில் வடமொழிகளையும், பிறமொழிகளையும்வைத்து வழங்குபவர்களில், அவற்றைச் சிலர் திரித்தும் சிலர் திரியாமலும் வைத்து வழங்குவதனால் அபிப்பிராயபேதம் உள்ளமை கவனிக்கத்தக்கது. தமிழில் ஸம்ஸ்கிருத வார்த்தைகளைத் திரித்து வழங்குவதற்கு நன்னூல் முதலிய இலக்கணங்களில் விதி அமைந்திருக்கிறது. திரியாமல் வழங்கலாம் என்பதற்கு விதி இல்லை. ஆயின், அவ்வப்பாஷைச் சொற்களைத் திரியாமல் அப்படியே சுயரூபத்துடன் வழங்கவேண்டுமென்பவர்கள், அவற்றிற்கு விகாரத்தைச் செய்வது நன்றன்று என்கின்றனர். பிராமணர்களல்லாதவர்களும், கிறிஸ்தவர்களும், சிறுபான்மை மகமதியர்களும் ஸம்ஸ்கிருத பாஷைச் சொற்களிற் பழக்கமும், அவற்றை விகாரமாக்காமல் சொல்லவும் எழுதவுங் கூடிய வழக்கமும் பெற்றிராமையால், அவற்றைச் சுயரூபத்துடன் வழங்குவதில் பெரிதும் இடர்ப்படுகின்றனர். நூல்களை இயற்றி வெளியிடுபவர்கள், மொழிகளைச் சிதைத்து வழங்குதல், சிதையாது வழங்குதல் என்னும் விஷயத்தில் யாரைத் திருப்திப்படுத்துவது? என்று மயங்குகின்றனர். இவற்றிற்கு உதாரணம் குறிப்போம்:—சிதைத்து வழங்குகின்றவர்கள் (வட சொற்களில்) பாஷையைப் பாடையென்றும், அவித்யா என்பதை அவிச்சையென்றும், பக்தியைப் பத்தியென்றும், விருஷபத்தை இடபமென்றும், பங்கஜத்தைப் பங்க



யமென்றும், ஸ்தோத்ரத்தைத் தோத்திரமென்றும், ஊர்வசியை உருப்பசியென்றும், தௌதவஸ்திரத்தைத் தோவத்திரமென்றும் கூறுகின்றனர்; எழுதுகின்றனர்; பிறவும் இங்ஙனமே. (பிறபாஷைச்சொற்களில்) இங்கிலீஷில் யூரோப்என்பதை ஐரோப்பா என்றும், ஏஷியா என்பதை ஆசியா என்றும், இங்கிலிஷ் என்பதை ஆங்கிலம் என்றும், ஹாஸ்பிடல் என்பதை ஆஸ்பத்திரி என்றும், ஆன் டிமாண்ட் என்பதை அண்டிமாண்டு என்றும், வில் என்பதை உயில் என்றும், மேட்ஓவர் என்பதை மேடோல் என்றும் வழங்குகின்றனர்; பிறவும் இங்ஙனமே. சிதையாது வழங்குவதற்கு உதாரணம்:—ம்ருகம், ப்ராணி, வ்ருத்தம், ஸ்தூலம், பிக்ஷா, ப்ராஹ்மணர் என்பனவும், பிறவும். இவற்றைப் பிராமணரல்லாதவர்கள் உச்சரிப்பதற்குப் படும் சிரமம் சொல்லிமுடியாது. 'ஆயினும், சொற்களைச் சரியாக வைத்து உச்சரிப்பதிலும் எழுதுவதிலும் சிரமம் இருப்பினும், அதைக்குறித்துத் தெரிந்தவர்கள் விகாரப்படுத்தி வழங்கிடலாமோ? வழங்குவதற்குச் சிலர் அல்லது பலர் கஷ்டப்படுவதைக் குறித்தே பாஷைச்சொற்கள் இயற்கையும் பரிசுத்தமும் பழமையுமான தம் சுயரூபத்தை இழக்கலாமா?' என்று வாதிக்கின்றனர். சிலர் இவ்விரு பக்ஷத்தாரையும் தழுவவேண்டுமென்று உச்சரிப்பதற்கு மிகவும் கடினமானவற்றை விகாரப்படுத்தியும், மற்றவற்றை இயற்கையுருவமாக வைத்தும் வழங்குகின்றனர். சில சொற்களைத் திரித்தாலும் ஆபாசமாகத் தெரிகின்றது. சிலவற்றைத் திரியாமல் சுயரூபமாக வைத்து வழங்கினாலும் நன்றாயில்லை. எவை வழக்கில் பிரபலமடைந்திருக்கின்றனவோ, அவற்றிற்குத் தடைசெய்யலாகாது என்பதே ஒப்பமுடியுங் கொள்கையாகலாம் என்பர் அறிஞர். பிராமணரல்லாதவர்கள் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ முதலியவற்றை அறியாதிருந்தால், வருந்தியாவது கற்றுக்கொள்ளவேண்டும்; இல்லாவிட்டால், பாஷை முதலிய சொற்களைப் பாடை முதலியனவாக வைத்து வழங்கினால் எவ்வளவு விகாரம்! இங்ஙனமே F. Z முதலிய பிறமொழிகளிலுள்ள உச்சாரணங்களையும் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்.

## Ladies' Section.

## ஸ்திரீகள் பகுதி.

### VEGETABLES AND FRUITS.

### காய்கறிகளும், பழங்களும்.

காய்கறிகளும் பழங்களும் நான்கு வகைப்படும். அவையாவன; (1) சர்க்கரை சம்பந்தமுள்ளவைகள், (2) பசுமை நிறமுள்ளவைகள், (3) அதிக ஜலசம்பந்தமுள்ளவைகள், (4) கொடுசுவையுள்ளவைகள். உருளைக்கிழங்கு, முள்ளங்கி, ஈரவெண்காயம், சர்க்கரைவள்ளி முதலானவைகள் தித்திப்பின் சம்பந்தமுள்ளவைகள். இவைகளும் வாழைப்பழம், கரும்பு முதலியவைகளும் சிலாக்கியமான ஆகாரம். கத்தரிக்காய், வெண்டைக்காய், அவரைக்காய், கொத்தவரங்காய் முதலியவைகள் பசுமைநிறமுள்ளவை. இவை தேகத்திற்குப் பலத்தைக் கொடுக்கும். வெண்டைக்காயில் பிராக்கினி என்று சொல்லப்படும் "பாஸ்பரஸ்" அதிகமாக இருப்பதனால், அதை அதிகமாகச் சாப்பிடலாம். வெள்ளரிக்காய், பூசணிக்காய், கொம்மட்டி, பலாக்காய், மாங்காய், பலாப்பழம், மாம்பழம், கெட்டிமுந்திரிப்பழம் முதலியவைகள் அதிக ஜலசம்பந்தமுடையவை. புளியங்காய், புளியம்பழம், எலுமிச்சங்காய், மஞ்சள், பச்சைக்கொத்துமலி, கருவேப்பிலை, மிளகு, ஓமம், மிளகாய் முதலியவைகள் தொடுசுவையுள்ளவைகள். பாதி பழுத்த காய்களையும், அதிகம் பழுத்த பழங்களையும் உட்கொள்ளக்கூடாது. அஜீர்ணமும், வயிற்றுப்போக்கும் உண்டாகும். மலச்சிக்கலால் கஷ்டப்படுகிறவர்கள், ஏராளமாகக் காய்கறிகளையும், பழங்களையும், கீரைகளையும் சேர்த்துக்கொள்ளலாம். வெகுநாளாய்க் காய்கறிகளை உபயோ

சித்து வந்தவர்கள், திடீரென்று அவைகளின் உபயோகத்தை நிறுத்தக்கூடாது. அப்படிச் செய்தால், இரத்தம் அசுத்தப்பட்டு, சொறி, கரப்பான் முதலான வியாதிகள் உண்டாகும்.
—சக்ரவர்த்தினி.

## ASAFOETIDA.

காயம்.

சாயமும், வெள்ளைவிவாஜனையுமுடைய தாயுமுள்ள காயத்தை ஔஷதமாய் உபயோகிக்கும் விஷயத்தைப்பற்றி "வைத்தியகலாநிதி" யில் எழுதப்பட்டிருப்பதாவது:—

சுமார் ½ அல்லது 1 பலம் காயத்தை 8 அவுன்ஸ் ஜலத்தில் சிறுகச்சிறுகத் தேய்த்துக் கரைத்து, ஒருவிதக் கட்டிப்பால்மாதிரி ஆனவுடன், வடிகட்டி, குப்பிகளில் வைத்துக்கொண்டு, ½ முதல் 1 அவுன்ஸ்வரையில் நடுப்பிராயத்தி லிருப்பவர்களுக்குக் கொடுத்துவரலாம். ஸூதக வாயுஸூதகமூர்ச்சை (Hystorical fits), நெடுநாட்களாகத் தொந்தரை செய்யும் இருமல், சுவாஸகாசம், வாயு, கடினமான விக்கல், குன்மவலி இந்தவியாதிகளை மேற்கூறிய திரவம் பலசமயங்களில் நற்குணமுண்டாக்குவதுண்டு. இந்தத் திரவத்தை இரண்டுமணி நேரத்திற்கு ஒருமுறை கொடுத்துவரலாம். ¼ பலம் சக்கைநன்றாகச் சிதைத்து, 4 ஆழாக்கு ஜலத்தில் சேர்த்து, ஒருஆழாக்காக வற்றவைத்து, வடிக்கட்டியெடுத்து, அதில் 1 அவுன்ஸ் கஷாயத்தில் மேற்கூறிய காயத்தின் திரவத்தையும் கலந்து உட்கொள்ளுவது நலம். வலி மிகவும் அதிகமாயிருந்தால், அரைக்குன்றிமணி எடை அபினியை அத்துடன் கலந்து உபயோகிக்கலாம்.

குழந்தைகளுக்குக் காணும் வயிற்றுப் பொருமல், குன்மவலி முதலியவற்றிற்கு, மேற்சொன்ன காயஜலத்தில் ஒரு தேக்கரண்டியாவது எடுத்து, சிறிது சருவாப்பட்டைத் தூளோடாவது, ஓமத்திராவகத்துடனாவது கொடுக்கலாம். தேகம் வெளிறிப்போயுள்ள குழந்தைகளுக்கு இந்த திரவத்தை ஒரு தேக்கரண்டியளவில் இரண்டொருமணிக்கொருமுறையாகக் கொடுத்துவந்தால், வியாதி சாந்தமாகும். குழந்தைகளை நெடுநாட்களாகப் பிடித்துவரும் இருமலுக்கு இது மிக உபயோகமாயிருக்கும்; ஆனால், இதைக் கொடுக்கும்போது ஜ்வரமிருக்கக்கூடாது அதிகவயதான குழந்தைகட்குக் காயஜலத்தைக் கிரமமான அளவில் அதிகமாகக் கொடுத்து வரவேண்டும். ஜ்வரம் இல்லாமலிருந்தால் கக்கிருமலால் கஷ்டப்படும் குழந்தைகளுக்கு வேளைக்கு ஒரு தேக்கரண்டி வீதம் தினத்திற்கு நாலைந்து முறை இந்தத் திரவத்தைக் கொடுத்துவருவதனால் நற்குணம் ஏற்படுவதுண்டு.

---

# Boys' Section.

## சிறுவர் பகுதி.

### ARIYAN MORAL STORIES.

### ஆரிய நீதிகதைகள்.

1. "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்,
நிலமிசை நீடுவாழ்வார்."

யாவரையும் சிருஷ்டித்த கடவுள் தாம் நினைத்ததெல்லாம் செய்யக்கூடிய சக்தியுடையவர்; அன்பால் தம்மைத் தியானிப்பவாது ஹ்ருதயகமலத்தில் அவரவர் நினைத்த வடிவத்தோடு சென்று வீற்றிருப்பார். அவர் யாவற்றையும் அறிந்தவர். அவர் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் இவற்றைச் செய்பவர். உடல், உயிர், கல்வி, செல்வம் முதலியவற்றை நமக்குக் கொடுத்துதவிய வரும் அவரே. அவர் பரமகருணாநிதி. இத்தகைய கடவுளது பாத கமலத்தைத் தியானஞ் செய்பவர், கல்வி, செல்வம் முதலியவற்றை எளிதிற் பெறுவர். ஆகலின், நாம் கடவுளைத் தினந்தோறும் தொழவேண்டும்.

உதாரணம்.

சில காலத்திற்குமுன் சீர்காழியில் சிவபாத ஹ்ருதயர் என்ற ஓர் பிராமணர் இருந்தார். அவர் மகாசிஷ்டர்; எப்பொழுதும் கடவுளை மெய்யன்போடு தொழுதுகொண்டு வந்தார். அவர் ஒருநாள் ஸ்நானம் செய்வதற்காகக் குளத்திற்குப் போகும்பொழுது, தமது புதல்வனாகிய மூன்றுவயதுள்ள பிள்ளையையும் தம்முடன் அழைத்துச்சென்றார். அப்பொழுது அவனுடைய பிள்ளையாருக்குமூன்றே வயதாயிற்று. சிவபாத ஹ்ருதயர் குளத்தை அடைந்ததும், தம் குழந்தையைக் குளக்கரையின்மேல் உட்காரவைத்து, தாம் ஸ்நானம் செய்வதற்காக நீருள் மூழ்கினார். குழந்தை தன் தந்தையைக்காணாமையால், "அம்மா! அப்பா!" என்று அழுதது. சிவபாத ஹ்ருதயர் நீருள் மூழ்கியிருந்ததனால் குழந்தையின் அழுகுரலைக் கேட்கவில்லை. குழந்தை, ஒருவரும் தன்னிடம் வாராததனால், மேன்மேலும் உரத்து அழத்தொடங்கிற்று. அந்தக் குழந்தையின் அழுகைக்குரலைக்கேட்டார் பரமசிவன். உடனே அவர், தமது மனைவியாகிய பார்வதியைப் பார்த்து, "காதலி! ஓர் குழந்தை 'அம்மா! அப்பா' என்று அழுகிறது. அதன் அழுகையை நீக்க எவரும் அதனிடம் செல்லவில்லை. நாம் உலகத்திற்கெல்லாம் தாயும் தந்தையுமா யிருப்பதனால், நாம் போய் அக்குழந்தையின் அழுகையை நிறுத்திவரலாம், வா!" என்று சொல்லி, பார்வதியையும் அழைத்துக்கொண்டு, அந்தக் குழந்தைக்கு எதிரில் வந்தார். பிறகு பார்வதி, ஒரு கிண்ணத்தில் பாலைக் கறந்து, குழந்தைக்குக் கொடுத்தாள். குழந்தை அப்பாலைக் குடித்துவிட்டு அழாமல் இருந்தது. உடனே பார்வதியும் பரமசிவனும் மறைந்துவிட்டார்கள். ஸ்நானம் பண்ணி முடிந்ததும், சிவபாத ஹ்ருதயர் தம்குழந்தையை அணுகிப்பார்த்தார். குழந்தையின் வாயில் பால் ஒழுகிக்கொண்டிருந்தது. அதைப்பார்த்து அவ்வந்தணர், 'உனக்கு யார் பால்கொடுத்தார்?' என்று தம் குழந்தையைக் கேட்டார். கடவுள் கொடுத்த பாலைக் குடித்ததனால், அக்குழந்தை, "கடவுள் தம்மனைவியோடு வந்து பால்கொடுத்துச் சென்றார்" என்று செய்யுளால் பதில் சொல்லிற்று. பிராமணர் அதைக் கேட்டுப் பரமசந்தோஷமடைந்து, கடவுளைப் பலவாறு துதித்தார். பின்பு அவர் குழந்தையை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனார். அதுமுதல் அக்குழந்தைக்கு, 'திருஞானசம்பந்தர்' என்ற பெயர் வழங்கிற்று. கடவுளின் கருணைக்கு அளவில்லை. அவரை வணங்குவோர் மேன்மைபெறுவது நிச்சயம்.

---

2. "சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு,
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று."

பூமியை ஒருவன் கையினால் அறைந்தால் தான் மேம்படுவதாக எண்ணுவதுபோல, கோபத்தைப் பொருளாகக் கொண்டவன் வருந்துவான். கோபத்தினால் கோள், துணிவு, துரோகம், பொறாமை, பிறன்குணத்தைச் சகியாமை, பிறர் பொருளை அபகரித்தல், காரணமின்றி அடித்தல், திட்டுதல் ஆகிய எட்டுத்துர்க்குணங்கள் உண்டாகின்றன. ஆதலின், இது துர்க்குணங்களில் தலைமை பெற்றது. வேரை அறுத்துவிட்டால் மரம் வளராமைபோல, கோபத்தை அடக்கிவிட்டால் ஏனைய தீக்குணங்கள் தாமே தணியும். கோபம் பலசமயங்களில் தீமையையும், சிலசமயங்களில் நன்மையையும் பயக்கும். ஆயினும், அதனை மிகுதியும் கையாடலாகாது. கோபமுள்ளவனுக்குத் தருமம் விளங்காது; தவமும் வீணாகிவிடும்; அவமானமும் நேரும். ஆதலின், அது தோன்றும்போதெல்லாம் அடக்கி வெளிப்படாமல் தணிக்கவேண்டும். கோபம் தோன்றியவுடனே தணிப்பவரே சிறந்தவராவர்.

உதாரணம்.

முன்னொருகாலத்தில் அம்பரீஷன் என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் மனுநீதி தவறாமல் தன் ராஜ்யத்தைச் செவ்வையாய் ஆண்டுவந்தான். அவனிடம் ஸகல நற்குணங்களும் நற்செய்கைகளும் குடிகொண்டிருந்தன. அவன் ஒருநாள் (துவாதசி தினம்) வழக்கப்படி அதிதிகளுக்கு விருந்துசெய்ய விருப்பங்கொண்டு, பல பெரியோர்களை வரவழைத்தான். அவ்வாறு வந்த பெரியோர்களில் துர்வாஸமுனிவரும் ஒருவர். துர்வாஸமுனிவர் ஸ்நானம் செய்து வருவதாக வேந்தனிடம் சொல்லிவிட்டு யமுனை நதிக்குச் சென்றார். அப்பொழுது பலபெரி

யோர் பசியுடன் காத்திருந்தனர். வெகு நேரமாகியும் துர்வாஸர் வரவில்லை. இன்னும் கொஞ்ச நேரத்திற்குள் துவாதசி போய்விடுகின்றமையால், அதற்குள் பாரணை செய்யாவிடில் விரதம் பங்கமடையும். ஆகலால், அம்பரீஷன் அங்கு வந்திருந்த பெரியோரிடம் அநுமதி பெற்றுக் கொஞ்சம் தீர்த்தத்தை அருந்தினான். அதற்குள் துர்வாஸர் வந்து, அரசன் தாம் சாப்பிடுவதற்குமுன் தண்ணீர் பருகியதை அறிந்து, பெரிதும் கோபங்கொண்டார். உடனே அவர் தமது சடையிலுள்ள சில கேசங்களைக் கிள்ளி, அம்பரீஷனைக் கொல்வதற்காக அவன்மேலே எறிந்தார். அதிலிருந்து ஒரு அரக்கன் உண்டாகி அரசனைத் துரத்தினான். அப்பொழுது, அம்பரீஷன் கலங்காச் சித்தத்துடன் திருமாலைத் தியானித்துத் துதிசெய்தான். உடனே மஹாவிஷ்ணு ஒரு சக்கரத்தை அனுப்பி, அரசனைக் காக்கும்படி ஏவினார். வந்தசக்கரம் அரக்கனைக்கொன்று, முனிவரையும் சென்றவிடமெல்லாம் சென்று துரத்திற்று; முனிவர் பயந்துவிட்டார். உடனே அவர் மஹாவிஷ்ணுவிடஞ் சென்று, "நான் கோபங்கொண்டது தவறு. என்னைப்பொறுத்துக் காக்கவேண்டும்" என்றார். திருமால், 'நான் மன்னிக்க முடியாது. அம்பரீஷனிடம் போம்' என்றார். அவ்வாறே முனிவர் அம்பரீஷனிடம் சென்று அவனை வேண்டினார். அப்பொழுது, அரசன் அந்தச் சக்கரத்தைப் போகச்சொல்லித் துதித்தான். உடனே சக்கரமும் அவரை விட்டுச் சென்றது. துர்வாஸர் கோபங்கொண்டமையாலன்றோ இவ்வளவு கஷ்டங்கள் உண்டாயின? ஆகலால், கோபத்திற்கு இடங்கொடுப்பது கூடாது.

## THE WAY TO HELP.
### உபகாரத்தின் விதி.

ஒரு ஆதரவுமில்லாத ஏழைகளே தருமத்திற்கு அருகர்கள். உண்டானவர்களுக்குத் தானம் கொடுத்தலினால் இதற்குச் சமானமான பலன் உண்டாகாது. ஒருதடவை விளைந்த பூமியில் மறுபடியும் விதைப்பதனால் இரண்டு பயிரும் கெடும்.

எப்படி பரம்சாணத்தை குப்பலாய்ப் போடும்பொழுது அஸஹியமாகவும் அதே சாணத்தினால் பூமியை மெழுகினால் பரிசுத்தமாகவுமாகிறதோ அப்படியே ஒரு பாக்கியவான் தன் தனத்தைப் பிறருக்குதவாமல் சேர்க்கிறபொழுது அவனை ஜனங்கள் லோபி என்பார்கள்; ஆனால் தன் சக்திக்கியன்றவளவு பிறருடைய வேண்டுகோளின்படி அதே தனத்தை உதவுகிறபோது இந்த கெட்ட பேர்போய் பரோபகாரி என்று கொண்டாடப்படுவான்.

விதைவிதைப்பவன் பூமியில் விதையைத் தெளிக்கிறான், அது விஸ்தாரமாய்ப் பயிராகிறது. அதேரீதியாய் தயவோடு ஏழைகளுக்கு தானம்செய்தல் நமக்குச் சந்தோஷமும் அவர்களுக்குத் திருப்தியும் உண்டாக்குகிறது. அதெப்படியென்றால்: எப்பொழுது ஏழைகளுக்குத் தானம்செய்கிறோமோ அவ்வளவும் கடவுளுக்குக் கடன் கொடுத்தமாதிரியாதலின் கடவுளும் நம்மிடத்தில் கிருபையுள்ளவராகவிருப்பார்.

ஆகவே நாம் பாத்திரமறிந்து பரிந்துகொடுத்து தருமம் செய்தல் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் திருப்திகரமான செய்கையாயிருக்கின்றது.—விவேகசிந்தாமணி.

---

### புதிதாய் வந்த புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஐரோப்பிய யுத்தம் ... ... | 1 | 8 | 0 |
| ஞானதீபிகை ... ... | 0 | 12 | 0 |
| ரத்தினப்பிரகாசம் ... ... | 0 | 8 | 0 |
| முகம்மது நபீ அவர்களின் உபதேசரத்நம் | 0 | 10 | 0 |
| ஸாதனை... ... ... | 0 | 6 | 0 |
| சாரங்கதர ஸம்ஹிதை ... ... | 3 | 0 | 0 |
| ஸ்வர்ணகாந்தி அல்லது இருமனைவிகள் | 1 | 0 | 0 |
| மனம்போல் வாழ்வு ... ... | 0 | 8 | 0 |
| அகமே புறம் ... ... | 0 | 8 | 0 |

மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.



# Review of the Press.
## பத்திரிகை ஆராய்ச்சி.

### PREVENTION OF CHOLERA.
### காலராவைத் தடுத்தல்.

காலரா நோயானது அசுத்தமான தண்ணீர் மூலமாகவே ஜனங்களுக்குள் பரவுகின்றது. இந்நோய் பரவியிருக்கும் காலங்களில் ஜனங்கள் தாங்கள் உபயோகிக்கும் தண்ணீரைச் சுத்தம்செய்த பிறகே உபயோகிக்கவேண்டும். காலராநோய் கண்ட பிணியாளியைப் பராமரிக்க வேண்டிய விதையமாய், ஸமீபத்தில் வெளிவந்த "வைத்தியகலாநிதி" யில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

1. நோய்கண்ட மனிதனைத் தனியாய்வைப்பது: அதாவது, அவன் இருக்குமிடத்தில் சிகிச்சைக்கு அவசியமானவர்களைத் தவிர வேறு எவரும் வரக்கூடாது.

2. ரம்பத்தூள், நெல்லுமி, அல்லது சுலபமாய் எரித்துவிடக்கூடிய வேறு எந்த வஸ்துக்களிலாவது வாந்தியையும் பேதியையும் வாரி, வேண்டுமானால் கிரோஸின் எண்ணெய் சேர்த்து, அவைகளை வீட்டிலோ அல்லது அதன் அருகிலோ எரித்துவிடுவது.

3. வாந்திபேதியோடு எவ்விதத்திலும் ஸம்பந்தப்பட்ட கந்தைத்துணி முதலியவைகளை எரித்துவிடுவது.

4. நோயாளிக்கு ஒத்தாசையாய் இருப்பவர்கள் மிகவும் சுத்தமாயிருத்தல். சுத்தம் செய்யும் மருந்து கிடைக்குமானால் கைகளைச் சுத்தம் செய்துகொள்வது.

5. நோய்கண்ட வீட்டை முடியுமானால் நன்றாக முழுவதும் சுத்தி செய்வது.

காலராகாலத்தில் ஒவ்வொருவரும் கீழ்க்கண்ட சுகாதார விதிகளைக் கவனிக்கவேண்டும்.

இடம்.

1. ஒவ்வொருவீடும் முழுவதும் சுத்திசெய்யப்படவேண்டும். அதாவது: எரு, அசுத்தஜலம், மாட்டுக்கொட்டாயிலுள்ள குப்பை இவைகளை அப்புறப்படுத்தவேண்டும்.

2. அப்படியே அப்புறப்படுத்தியுங்கூட நமுராயும், அசுத்தமாயும் இருந்தால், உலர்ந்த சுத்தமான மண் தெரிகிறவரையில் தரையைத் தோண்டவேண்டும்.

3. அப்படி தோண்டிய மண்ணை ஊருக்கு வெகுதூரம் எடுத்துச்சென்று வயல்களுக்கு எருவாக உபயோகிக்கலாம். சுத்தமான இடத்திலிருந்து புதுமண் கொண்டுவந்து தோண்டின தரையில் போட்டு நிரப்பவேண்டும்.

4. வீட்டை உள்ளேயும், வெளியேயும், வெள்ளையடிக்க நிர்வாகமில்லாத பக்ஷத்தில், உள்ளேமட்டுமாவது வெள்ளையடிக்கவேண்டும். படுத்துத் தூங்கும் அறையிலுள்ள தூண்களிலும் உத்தரங்களிலும் தொங்கியிருக்கும் துணியையும் மற்ற வேறு எல்லாவஸ்துக்களையும் எடுத்து எறிந்துவிடவேண்டும்.

5. எப்போதும் கூடியவரையில் சுத்தக் காற்று உலாவும்படி வீட்டுக் கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவைத்திருக்கவேண்டும்.

6. வீட்டுக் கக்கூஸை ஒரு நாளைக்கு இரண்டு தடவை சுத்தம் செய்து, அசுத்தம் கொஞ்சமேனுமில்லாமல் வைத்திருக்கவேண்டும்.

7. வீட்டுச்சாக்கடையை ஒருநாளைக்கு இரண்டு தடவை கழுவிவிடவேண்டும்.

8. ஆடுமாடுகளின் மூத்திரங்கள் தங்க அமைக்கப்பட்டிருக்கும் குழிகளையும் சாக்கடைக்குழிகளையும் அன்றன்று சுத்திசெய்யவேண்டும்.

நபர்.

1. தேகத்தையும் துணிகளையும் மிகவும் சுத்தியாய் வைத்துக்கொள்ளவேண்டும். மெலிந்திருப்பவர்கள் வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். தண்ணீரை உபயோகிக்கக் கூடாது.

2. ஆகாரம் சொற்பமாயும், ஆனால் பலத்தைக் கொடுக்கக்கூடியதாயும், நல்லதாயுமிருக்கவேண்டும்.

3. அஜீர்ணமுண்டாகக்கூடிய பதார்த்தங்கள், கீரைகள், பழங்கள் இவைகளை நீக்கவேண்டும்.

4. மிதமிஞ்சி மதுபானம் செய்தல், துர்ஸ்ஸம்போகம் இரவில் அதிகநேரம் விழித்திருத்தல், குளிரிலும் பனியிலும் அடிபடுதல் இவைகளை நீக்கவேண்டும்.

5. பழைய சோற்றை ஒருபோதும் உபயோகப்படுத்தக்கூடாது. பூச்சிகள் ஆகாரத்தின்மீது உட்காராமல் ஜாக்ரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும். வேகவைக்காத பதார்த்தங்களைப் புஜிக்கக்கூடாது. வேகவைப்பதற்குமுன் கொதித்துச் சுத்தியான வெந்நீரில் நன்றாக அவைகளைக் கழுவவேண்டும். வயிற்றுக்குக் கெடுதி உண்டாகாத அளவு சாப்பாட்டில் உப்பைத் தாராளமாய் உபயோகப்படுத்தவேண்டும்.

6. வீட்டில் அசுசியான தண்ணீரை வைத்திருக்கக் கூடாது; சுத்தமான ஜலத்தையே வைத்துக்கொள்ளவேண்டும்.

7. குடிதண்ணீர் வாய் அலம்பவோ, குடிக்கவோ உபயோகிப்பதற்குமுன், கொதிக்கும்படி நெருப்பில் காய்ச்சப்படவேண்டும்.

8. பேதிக்கு ஒருமருந்தும் சாப்பிடக்கூடாது.

9. அஜீர்ண சின்னங்கள் எவையேனும் இருந்தால், உடனே தக்க மருந்து சாப்பிட்டு அவைகளைத் தடுக்க வேண்டும்.

10. எவ்விஷயத்துக்கும் சிறிதும் பயப்படக் கூடாது. காலரா சமாசாரத்தைப்பற்றி அடிக்கடி நினைப்பதாவது பேசுவதாவது கூடாது.

## RHINOCEROS BEETLE.

## தென்னைமரத்து வண்டுகள்.

இரண்டு இனுசு வண்டுகள் தென்னை மரங்களையும் மற்றைப் பனைஇனுசுகளையும் பீடித்து அச்செடிகளுக்கு மிக்க நஷ்டத்தை உண்டாக்குகின்றன. அவைகளில் ஒன்று தமிழில் தென்னம் வண்டென்றும், மலையாளத்தில் செள்ளுவென்றும் சொல்லப்படும். அது தலையில் ஒரு கொம்பையுடைய கறுப்புவர்ணமுள்ள வண்டு. இது குருத்து ஓலைகளையும் மரத்தின் மண்டையிலுள்ள மட்டைகளையும் துளைத்து நாசமாக்கும். இளந் தென்னை மரங்களை இவ்வண்டுகள் துளைத்து அதிகம் நாசமாக்குவதைப்போல் முற்றின மரங்களைக் கெடுப்பதில்லை. இவைகள் செத்துப்போன அடிமரங்களிலாவது அல்லது எருக்குழிகளிலாவது முட்டைகளிட்டு அவைகளிலிருந்து வெளிவந்து, அழுகும் வஸ்துக்களைத் தின்று பெரியவையாகின்றன. இப்புழுக்கள் நாளாவட்டத்தில் மேற்சொன்ன வண்டாய் மாறுகின்றன.

தமிழில் செவ்வண்டென்று சொல்லப்பட்ட இன்னொரு ஜாதி வண்டு உண்டு. இது முன் சொன்ன கறுப்பு வண்டைவிடச் சிறியது. இதை அதனுடைய நீண்டவளைவுள்ள மூக்கால் கண்டறிந்துகொள்ளலாம். இதுபனைகளின் உச்சிகளில் சாதாரணமாய்த்தென்னம் வண்டாலாவது அல்லது பனைமரம் ஏறுகிறவர்களாலாவது செய்த காயங்கள்பட்ட இடங்களில் முட்டைகள் வைக்கும். இவற்றினின்று வெளிப்படும் புழுக்கள் உச்சி மரத்தைத் துளைத்துச் செடிகளைக்கொன்றுவிடும். இப்புழுக்கள் நார் இழைகளைக்கொண்டு ஒரு கூடு கட்டி அதில் ஸ்தம்பித்திருந்து சுமார் இரண்டுவாரங்களில் உருமாறி வண்டுகளாகின்றன.

இவற்றின் கெடுதல்களை மாற்றக்கூடிய வழிகள்.

(1) தென்னம்வண்டு, தான் அதிகமான கெடுதி செடிகளுக்குச் செய்யாவிட்டாலும், செவ்வண்டினால் உண்டாகும் நஷ்டத்துக்குக் காரணபூதமாயிருக்கிறது. இந்தத் தென்னம் வண்டை வெகு சுலபமாய் ஒரு வண்டெடுக்கும் இரும்பு ஊசி கொண்டு எடுத்துவிடலாம்.

(2) இவ்வண்டுகளை அப்புறப்படுத்தியபின் அவைகள் துளைத்திருக்கும் துளைகளைத் தாறினால் தடவி மண் கொண்டு மூடிவிடுவதுடன் பனையேறிகள் மரங்களில் செய்திருக்கும் காயங்களிலும் மேற்சொன்ன தாறைத் தடவவேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் செவ்வண்டுகள் மரங்களிலிருக்கும் காயங்களில் முட்டைகளை வைத்து நாசமாக்கிவிடும். இவ்வண்டுகள் மரங்களில் முட்டைவைத்தபின் மரங்களை இவைகளின் பாதையிலிருந்து சுலபமாய் நிவிருத்திக்க முடியாது.

(3) பொடிமணலும் உப்பும் சமபாகம் கலந்து ஒரு வருஷத்திற்கு இரண்டுதடவை மரங்களின் உச்சியில் மட்டைகளுக்கிடையே கொஞ்சம் போடலாம். இதனால் தென்னம் வண்டைத் துரத்திவிட ஏது உண்டு.

(4) செவ்வண்டினால் பீடிக்கப்பட்ட மரங்கள் திரும்பவும் பிழைக்கமாட்டா. ஆகையால், அவைகளைத் தாமதமின்றி வெட்டிவிடவேண்டும். இந்தப் புழுக்களோடு இந்த மரத்தின் உச்சியை நிர்மூலமாக்கிவிடவேண்டும். இல்லாவிட்டால் இதிலிருக்கும் புழுக்கள் பின்னால் வண்டுகளாக மாறிப் புது மரங்களை நாசமாக்கும்.

(5) தோப்பில் செத்துப்போன மரங்களை அப்போதைக்கப்போது வெட்டிக் கீறியுடைத்துக் காயப்போடவேண்டும். அவைகளை அழுகவிடவேகூடாது. ஏனெனில், அழுகும் பதார்த்தங்களிலும் இடங்களிலும் தென்னம் வண்டு பங்கிப் பெருகும். தோட்டத்துக்குள் எந்த விதமான வஸ்துவும் அழுகிக் குவிய இடங்கொடுக்கக் கூடாது.

(6) இன்னும், மேற்சொன்ன வண்டுகளை ஒரு சுலபமான தந்திரத்தினால் நாசமாக்கலாம்: அதாவது: தென்னந் தோப்புகளுக்கு மத்தியில் ஒரு அடி சவுக்கமுள்ள குழிவெட்டி, அதில் சாணித்தண்ணீரை அழுகவைத்து, இராக்காலங்களில் ஒரு வெளிச்சத்தையும் வைத்துக்கொண்டிருந்தால், இவ்வண்டுகள் அழுகிய நாற்றத்தை வாசனை பிடித்துக்கொண்டு வெளிச்சத்தண்டைவந்து குழியில் விழுந்தவுடன் அதைப்பிடித்துக் கொன்றுவிடலாம். இந்த உபாயத்தைக் கையாளுகிறவர்கள், மேற்படி குழியிலிருக்கும் அழுகல் வஸ்துவை வண்டுகள் பிடித்தானவுடன், அப்புறப்படுத்தி மண் கொண்டு மூடிவிடவேண்டும். இல்லாவிடில், அந்த அழுகல் வஸ்துவே அதிகம் புழுக்களுண்டாக இடங்கொடுக்கும்.—திருவிதான்.



# Notes.

# குறிப்புக்கள்.

### Sugar Industry in India.

இந்தியாவில் சர்க்கரைத் தொழில்:—இந்தியாவில் சர்க்கரைத் தொழிலானது அன்னியநாட்டு இறக்குமதியால் மிகவும் பாதகமடைந்திருக்கின்றது. ஜாவா தேசத்திலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் சர்க்கரையானது சென்ற 25 வருஷங்களுக்குள் சுமார் 70,000 டன்களிலிருந்து 800,000 டன்களுக்கு அதிகப்பட்டிருக்கின்றன. இதனால் தேசத்தின் பல பாகங்களிலும் கரும்பு பயிர் செய்யப்படுவதானது குறையத் தலைப்பட்டது. உலகத்தில் கரும்பு பயிர்செய்யப்படும் தேசங்களுக்குள், இந்தியா முதன்மையான ஸ்தானத்தை வகித்திருந்தும், தனக்கு வேண்டியவளவு சர்க்கரை செய்துகொள்ளக்கூடாமலிருக்கின்றது. இவ்விஷயத்தைப்பற்றி வியவசாய இலாகாதார் கரும்பு சாகுபடி செய்வதையும், அதன் அபிவிருத்தியையும்பற்றிப் பல ஆராய்ச்சிகளைச் செய்துவருகிறார்கள். சர்க்கரை செய்யும் விஷயமும் நன்கு கவனிக்கப்பட்டு, பல நூதன யந்திரங்களைக்கொண்டு தொழில் செய்யப்படுகின்றது. இவ்வித முயற்சிகளின் நோக்கம் தொழிலைப் பல துறைகளிலும் விருத்திசெய்து அன்னியநாட்டு இறக்குமதியைத் தடுப்பதற்கென்றே கருதவேண்டும்.

### The Consumption of Matches in India.

இந்தியாவில் தீப்பெட்டிகளின் செலவு:—இந்தியாவில் தீப்பெட்டிகள் ஏராளமாய்ச் செலவாகிவருகின்றன. சென்ற மார்ச்சு மாதத்தோடு முடிந்த 1916-ம் வருஷத்தில் 18¼ மிலியன் குரோஸ் அதாவது 160 கோடி தீப்பெட்டிகள் இந்தியாவிற்கு பற்பல அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதியாயிருக்கின்றன. இந்தியா முழுவதிலும் இந்தத் தீப்பெட்டிகளின் செலவைக் கணக்கிட்டுப் பார்க்கின், வருஷம் 1-க்கு ஒவ்வொருவரும் 8 தீப்பெட்டிகளைச் செலவிட்டிருப்பதாகக் கணக்கேற்படுகின்றது. அதாவது: மொத்த ஜனத்தொகையில் ஒவ்வொருவரும் பிரதிதினத்திலும் 1⅓ தீக்குச்சிகளை உபயோகித்திருக்கிறார்கள்.

### The Textile Industry.

நெசவுத்தொழில்:—நெசவுத்தொழிலினுடைய அபிவிருத்தியானது இந்தியாவிலும் இங்கிலாந்திலும் எவ்வாறுள்ளதென்பது கவனிக்கத்தக்கது. இங்கிலாந்தில் 1896-ம் வருஷத்தில் 660,000 நெசவுத்தறிகளும் 44,900,000 கதிர்களும் இருந்தன, அவை, 1916-ம் வருஷத்திற்குள் அதாவது: இருபது வருஷத்திற்குள் 808,000 நெசவுத்தறிகளும் 59,800,000 கதிர்களுமாக அதிகப்பட்டன. இந்தியாவில் 1896-ம் வருஷத்தில் 37,200 நெசவுத்தறிகளும் 3,933,000 கதிர்களும் இருந்தன. ஆனால், அவை, 1916-ம் வருஷத்தில் 110,000 தறிகளாகவும் 6,840,000 கதிர்களாகவும் அதிகப்பட்டன. மேலே சொல்லப்பட்ட கணக்கைக் கவனிக்கின்: இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நெசவுத் தொழிலின் அபிவிருத்தியானது எங்ஙனமுள்ளதென்பது நன்கு விளங்கும். இந்தியாவிலும், இங்கிலாந்திலும் 1896-ம் வருஷத்தில் நெசவுத்தறிகள் 1-க்கு 17 வீதமும் 1916-ம் வருஷத்தில் 1-க்கு 7 வீதமும், கதிர்கள் 1896-ம் வருஷத்தில் 1-க்கு 11 வீதமும், 1916-ம் வருஷத்தில் 1க்கு 8 வீதமுமாக விருத்தியடைந்திருக்கின்றன, இந்தியாவில் இவ்வளவு முற்போக்கு ஏற்பட்டிருப்பது சந்தோஷிக்கத்தக்கது.

### A New Agricultural Implement.

ஓர் நூதன வியவசாயக் கருவி:—அமெரிக்காவில் நூதன வியவசாயக் கருவியொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம். இந்தக்கருவியைக்கொண்டு உழும்போது நிலமானது உழப்பட்டுபோகின்றது. பரம்படித்தலையும், இன்னும்விதைப்பதற்கு நிலத்தைச்சீர்திருத்தவேண்டிய பல காரியங்களையும் ஒரே சமயத்தில் இது செய்துவிடுகிறதாம். இதைஏராளமான பூஸ்திதியுடையவர்கள் வாங்கி உபயோகித்தால் தக்க பலன் கிடைக்குமென்று அமெரிக்கா பத்திரிகையொன்று எழுதுகிறது.

### Indian Catton Industry.

இந்தியாவின் பருத்தித்தொழில்:—சென்றவருஷம் இந்தியா முழுவதிலும் 2,200,000 பேல்கள் பருத்தி செலவாயின அவற்றில்பம்பாயில்மாத்திரம் 1,100,000 பேல்கள் பருத்தி செலவாயிருக்கின்றன. இங்கிலாந்தில் லாங்கஷயர் வியாபாரிகளால் இந்தியாவின் பருத்தித் தொழிலுக்குப் பல அசௌகரியங்கள் ஏற்பட்டாலும், அதன்முற்போக்கானது நாளுக்குநாள் விருத்தியடைந்தேவருகின்றது. 1900-ம் வருஷத்தில் இந்தியா முழுவதிலும் 1,453,400 பேல்கள் பருத்தி செலவாயின. இவற்றினின்று 4,587,000 அந்தர்கள் நூலும் 98,000,000 பவுண்டுகள் துணியும் நெய்யப்பட்டன. 1910-ம் வருஷத்தில் 1,935,000 பேல்கள் பருத்தி செலவிடப்பட்டு, 5,600,000 அந்தர்கள் நூலும், 228,800,00 பவுண்டுகள் துணியும் உற்பத்திசெய்யப்பட்டன. 1915-ம் வருஷத்திலோ, பருத்தியின் செலவானது 2,100,000 பேல்களுக்கு அதிகப்பட்டது, இவற்றைக்கொண்டு 5,820,000 அந்தர்கள் நூலும் 277,000,000 பவுண்டுகள் துணியும் உற்பத்தியாயின. ஆகவே, 1900 வருஷம் முதல் 1915-ம் வருஷத்திற்குள் பருத்தித் தொழிலானது பல மடங்கு விருத்தியாயிருக்கின்றது.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 - NOV 1917
MADRAS.

## Miscellaneous News.

## நாநாவித சங்கதிகள்.

நிலக்கரி போதுமானவளவு இப்போது கிடைக்காததனால், ஆங்காங்குத் தொழிற்சாலைகள் பற்பல கஷ்டங்களுக்குள்ளாயிருக்கின்றன. அமெரிக்காவில் மிஸ்டர் R. கோல்பான்லவல் என்னும் நிபுணர் ஆங்குள்ள பல சிற்ப சாஸ்திர விற்பன்னர்களுக்குச் செய்த ஒரு பிரசங்கத்தில், சாதாரணக் கல், குப்பை, கூளம் முதலானவைகளுள்ள இடத்தை இருபது நிமிஷத்திற்குள் நிலக்கரிக் குப்பலாகச் செய்துவிடக்கூடுமென்று கூறினரென்றும், அவ்விதமே கொஞ்சம் நிலக்கரியும் செய்து காண்பித்தாரென்றும் சொல்லப்படுகின்றது. இது ஓர் ஆச்சரியமன்றோ!

⁂

விசித்ரமான நகரமொன்று அமெரிக்காவைச் சேர்ந்த காலிபோர்ணியாவில் கட்டப்படுகின்றதாம். அதை ஒரே இரவில் ரோம் ஆகவோ, லண்டனாகவோ, பாரிஸாகவோ, நியூயார்க்காகவோ மாற்றிவிடலாமாம். இது சினிமா வேடிக்கைக்காகக் கட்டப்படுகிறதாம். இதற்கு 20 லட்சம் அல்லது 40 லட்சம் டாலர் செலவாகுமென்றும் சொல்லப்படுகின்றது.

⁂

பரோடா மகாராஜா மிகுந்த செல்வமுள்ளவர். அவருக்குக் கோடிக்கணக்காக மதிப்புள்ள ரத்தினமாலைகள், வைரம், மரகதம் முதலியன இருக்கின்றன. அவரது கஜானாவில் ஒரு முத்துமாலை இருக்கின்றது. அது 10 அடி நீளமும் 6 அடி அகலமுமுள்ளது; முழுவதும் மிகவும் சிறந்த முத்துக்களால் பின்னப்பட்டு, மத்தியிலும் ஓரங்களிலும் வைரங்கள் வளைவாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் மதிப்பு 30 லட்சம் ரூபாய் என்றும், இதைச் செய்துமுடிக்க மூன்று வருஷங்கள் சென்றனவென்றும் சொல்லப்படுகின்றது.

⁂

உலகத்தில் மிகுந்த உயரமான கோந்துமரமொன்று ஆஸ்ட்ரேலியாவில் இருக்கின்றதாம். அதன் உயரம் சுமார் 450 அடி என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

⁂

நமது தேசத்தில் சுமார் 7 லட்சம் பேர்கள் பரதேசிகளாகவும், 4,222,241 பேர்கள் வெறும் பிச்சைக்காரர்களாகவும் காலங்கழிக்கிறார்களென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

---

வியாதிகளை நிவிருத்திக்கும்பொருட்டு நமது நண்பர் தமது அநுபவத்தினால் இந்த ஆவாரம்பூ பவுடரை காபிப்பொடிக்குப் பதிலாக உபயோகிக்கக் கண்டுபிடித்திருக்கிறார். இது பருகுவதற்கு வெகு ருசியுள்ளதாயும், பார்ப்பதற்கு கோகோ நிறமாயுமுள்ளது. ஒவ்வொருவரும் இதை வாங்கி உபயோகிப்பது அவசியமாகும். விலை டின் 1-க்கு அணா 8. வேண்டுவோர்: வி. எ. ஆர். ஸ்வாமி, சுதேச வைத்தியர், வெங்கடன்குறிச்சி, பரமக்குடி என்று எழுதிப்பெறலாம்.

## Books and Reviews.

## புத்தகங்களும், விமர்சனங்களும்.

### Swarnakanthi or The Two Wives.

ஸ்வர்ணகாந்தி அல்லது இருமனைவிகள்:—செங்கனிபுரம் S. V. நடராஜன் என்பவரால் இயற்றப்பட்ட "ஸ்வர்ணகாந்தி அல்லது இருமனைவிகள்" என்னும் நாடகமொன்று வரப்பெற்றோம். இது மிகுந்த எளிய தமிழ் நடையில், ஆடவரும் பெண்டிரும் வெகு இனிமையாய்ப் படிக்கத் தக்கவாறு எழுதப்பட்டுள்ளது. மாணிடர்கள் அவசியம் கைக்கொள்ளவேண்டிய பற்பல நீதிகளும் நாடக ரூபமாக வெகு தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன. ஆங்காங்குச் சமயத்திற்சேற்றவாறு பல சிறந்த பாட்டுக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. புத்தகம் உயர்ந்த காகிதத்தில் வெகுநேர்த்தியாக அச்சிடப்பட்டு, இரண்டு ஆப்டோன் படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை ரூ 1. வேண்டுவோர்: வேலூர் ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெறலாம்.

### The Book of Fun.

ஹாஸ்ய மஞ்சரி:—சென்னை ஜி. எ. வைத்யாரமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்ட "ஹாஸ்ய மஞ்சரி" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இதில் பலவிதமான வேடிக்கைக் கதைகளும், சம்பாஷணைகளும் அடங்கியுள்ளன. இவை அறிவு வளர்ச்சிக்கு ஒரு சாதகமாயிருக்குமாதலால், அனைவரும் இதைப் படித்தறிவது அவசியமாகும். இவ்வேடிக்கைகளையும் கதைகளையும் பல வகுப்புக்களாகப் பிரித்து அவ்வவ்வகுப்பாருக்குப் பயன்தரும்படி வெளியிட்டிருப்பது பாராட்டத் தக்கது. இதன் விலை அணா 6. வேண்டுவோர்: ஜி. எ. வைத்யாரமன் அண்டு கம்பெனி, 3 & 4 கொண்டி செட்டி தெருவு, சென்னை என்று எழுதிப் பெறலாம்.

### A Father's Affection.

பெற்ற மனம்பித்து:—இது, சென்னை ஜி. எ. வைத்யாரமன் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டு நமது பார்வைக்கு வந்துள்ளது. இது கிராமவாழ்க்கையின் இயல்பைத் தெளிவாக விளக்கிக்காட்ட எழுதிய ஒரு சிறியகதை. கதையின் போக்கும் சம்பாஷணைகளும் நகரவாசிகள் கிராமவாசிகள் ஆகிய இருதிறத்தாருக்கும் ஆச்சரியத்தையும் விடா நகைப்பையும் உண்டாக்குமென்பதில் ஐயமில்லை. விலை அணா 2. வேண்டுவோர்: ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4 கொண்டிசெட்டி தெரு, சென்னை என்று எழுதிப்பெறலாம்.

### Avaramboo Powder.

ஆவாரம்பூ பவுடர்—காபி பொடிக்குப் பதிலாக உபயோகிக்க வெகு நேர்த்தியாகத் தயார் செய்யப்பட்ட ஆவாரம்பூ பவுடரை, சுதேச வைத்யரான மிஸ்டர் வி. எ. ஆர் ஸ்வாமி என்பவரிடமிருந்து வரப்பெற்றோம். காபி குடிப்பதனால் வரும் பற்பல தீங்குகளையும் யாம் கூறாமலே நமது நேயர்கள் அறிவார்கள். இக்காபி குடிப்பதன் பலனாக உண்டாகும் பல கொடிய




# ஜனோபகாரி.

**(JANOPAKARI.)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. } பிங்கள௵ புரட்டாசி, ஐப்பசிமீ SEP. & OCT. 1917. { சஞ்சிகை 9 & 10. No. 9 & 10.


## The Industrial Development of India.

## இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்தி.

இந்தியாவில் இப்போது தொழிலின் அபிவிருத்தி சம்பந்தமாய்ப் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. தொழில் கமிஷன் ஒன்று கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட்டு இந்தியக் கைத்தொழில்களுள் பலவற்றையும் ஆராய்ச்சி செய்து வருகின்றது. சமீபகாலம்வரையிலும் யாதொரு முற்போக்கும் அடையாத ஜப்பான் தேசமானது இப்போது ஏராளமாகக் கைத்தொழிற் சாமான்களை இந்தியாவிற் கொணர்ந்து நிரப்புவது இந்தியத் தொழிலாளிகளுக்கு வெறுப்பாகவே யிருக்கின்றது. அவர்கள் எவ்வாறு தமது தொழில்களை அபிவிருத்திசெய்து கொண்டனரோ அவ்வாறே தாமும் முற்போக்கடைய இவர்கள் விரும்புவது ஸகஜம். ஆதலால், இந்தியாவின் பூர்வகாலத்துத் தொழில்களின் தற்கால நிலைமையைக் கவனித்து, அவற்றின் அபிவிருத்திக்குற்ற மார்க்கங்களைத் தேடுவது அவசியமாகும்.

### தொழில்களின் நிலைமை.

இந்தியாவில் ஆதிகாலந்தொட்டு நடந்துவரும் தொழில்கள் இப்போது பல கஷ்டங்களுக்குள்ளாயிருக்கின்றன. பருத்தித்துணி நெய்தல், பட்டு உற்பத்தி செய்தல் முதலிய பழைய தொழில்கள் நாளுக்குநாள் க்ஷீணித்துவருகின்றன. அவுரி பயிர் செய்யும் தொழிலானது அன்னிய நாட்டு இரஸாயனச் சாயங்களின் இறக்குமதியால் மிகவும் பாதிக்கப்பட்டு மிகுந்த தாழ்ந்த ஸ்திதியிலிருந்தது. இப்போது நடக்கும் யுத்தத்தின் காரணமாக அந்த இரஸாயனச் சாயங்கள் வாராததனால், இந்த அவுரிச்சாயத்துக்குக் கிராக்கி ஏற்பட்டு இத்தொழில் அபிவிருத்தியடைந்து வருகின்றது. ஆனால், சமாதானத்திற்குப் பிறகு அன்னிய நாட்டு இரஸாயன சாய இறக்குமதியால் இது வெகுவாகப் பாதிக்கப்படுமென்று நம்பப்படுகிறது.

இந்தியாவில் புதியவையாகச் செய்யப்படும் தொழில்கள் அன்னிய நாடுகளுடன் போட்டி போடமுடியாமலிருக்கின்றது. ஏனெனில், அவர்களிடம் தொழிலுக்குற்ற திறமையும், பண்டங்களை ஏராளமாகச் செய்வதற்கான முதலும், வியாபாரத்தின் அநுபவமும் பொருந்தியிருப்பதுதான் காரணம். அன்னிய நாட்டுத் தொழிலாளிகள் நமக்குத் தேவையான பண்டங்களைச் செய்ய இந்தியாவிலிருந்தே இயற்கைப்பொருள்களைக் கொண்டுபோய் அவற்றைப் பண்டமாக மாற்றி மீண்டும் இந்தியாவிற்கே அனுப்பிவிடுகிறார்கள்.

## தொழிலபிவிருத்திக்குற்ற கஷ்டங்கள்.

இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தி விஷயத்தில் பற்பல கஷ்டங்கள் தோன்றுகின்றன. தொழிலுக்கு வேண்டிய முதல் அகப்படுவது அரிதாயிருக்கின்றது. ஏராளமாகச் செல்வத்தையுடைய பலர் இருப்பினும், அவர்கள் தொழில் அபிவிருத்திக்காக முதல் போடத் தயங்குவது தொழிலின் முற்போக்குவிஷயத்தில் அவர்களின் அவநம்பிக்கையைத் தெரிவிக்கின்றது. தொழில் செய்ய ஏராளமாகக் கூலிகள் கிடைக்கக்கூடுமாயினும், அவர்கள் அதிகமான தொழிற் பயிற்சி இல்லாதவர்களாயிருக்கின்றார்கள். இந்தியாவில் பற்பல தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் கூலிகளில் 100-க்கு 3 பேர்கள் தொழிற்சாலையின் உயர்தர வேலைகளைக் கவனித்து வருகிறார்கள். 100-க்கு 27 வீதம் கூலிகளே தொழிற் பயிற்சியுடையவர்கள். மிகுதியானவர்கள் தொழிலில் மிகுந்த அனுபவமும் பயிற்சியும் பெறாதவர்கள். இவ்வாறு இந்தியாவில் கிடைக்கக்கூடிய கூலிகளில் பெரும்பான்மையோர் தொழிற் பயிற்சி இல்லாதவர்களாதலால், இது, தொழிலின் முற்போக்குக்கு ஒரு பெருந் தடையேயாகும்.

அன்னியநாடுகளிலிருந்து இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் ஏறக்குறைய எல்லாச் சாமான்களையும் இங்குக் கிடைக்கும் இயற்கைப்பொருள்களைக்கொண்டே செய்துகொள்ள வேண்டும். கீழே குறிக்கப்பட்டிருக்கும் கணக்குப்படி சென்ற 1911-12-ம் வருஷத்தில் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதிக் கணக்கைக் கவனித்தால், இயற்கைப் பொருள்கள் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டனவென்றும், தொழில் செய்யப்பட்ட பொருள்கள் எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டனவென்றும் விளங்கும்.

ஏற்றுமதியான இயற்கைப் பொருள்கள்.

| | | | |
|---|---|---|---|
| பருத்தி | ரூ. | 2,953 | லட்சம். |
| உரோமம் | ,, | 296 | ,, |
| பட்டு | ,, | 46 | ,, |
| சாயம் போடுவதற்கும், தோல் பதனிடுவதற்கும் தேவையான வஸ்துக்கள். | ,, | 116 | லட்சம். |
| எண்ணெய் வித்துக்களும், எண்ணெயும். | ,, | 2,777 | ,, |
| அரக்கு | ,, | 201 | ,, |
| தோல் முதலியன | ,, | 1,393 | ,, |
| தானிய வித்துக்கள் | ,, | 5,147 | ,, |
| எலும்புகள் | ,, | 116 | ,, |

இறக்குமதியான தொழில் செய்யப்பட்ட பொருள்கள்.

| | | | |
|---|---|---|---|
| பருத்திச் சரக்குக்கள் | ரூ. | 4,774 | லட்சம். |
| உரோமச் சரக்குக்கள் | ,, | 335 | ,, |
| பட்டுச் சரக்குக்கள் | ,, | 259 | ,, |
| பலவித வர்ணங்கள் | ,, | 71 | ,, |
| சாயச் சரக்குக்கள் | ,, | 123 | ,, |
| ஸோப்புகள் | ,, | 62 | ,, |
| தோலினால் செய்யப்பட்ட சாமான்கள் | ,, | 68 | ,, |
| சர்க்கரை | ,, | 995 | ,, |
| இரும்பும், எஃகும் | ,, | 2,201 | ,, |
| உலோகங்கள் | ,, | 1,408 | ,, |
| காகிதம் | ,, | 121 | ,, |
| கண்ணாடிச் சாமான்கள் | ,, | 150 | ,, |

இவ்வாறு, இந்தியாவில் கிடைக்கக்கூடிய இயற்கைப் பொருள்களைக்கொண்டு தேவையான சாமான்களைச் செய்துகொள்ள இயலாமல் அன்னிய நாடுகளிலிருந்து அவை இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

இவைகள் இந்தியாவினின்று ஏற்றுமதி செய்யப்பட்ட இயற்கைப் பொருள்களினின்று பண்டங்களாக மாற்றப்பட்டு மீண்டும் இங்கே அனுப்பப்படுவதனால், அந்த இயற்கைப் பொருள்களைப் பண்டங்களாக மாற்ற இந்தியாவில் போதுமான அளவு சௌகரியங்கள் இல்லையென்றும், தொழிலபிவிருத்தி விஷயத்தில் மற்ற நாடுகளைக் காட்டிலும் மிகத் தாழ்வான ஸ்தானத்தை இந்தியா வகித்திருக்கிறதென்றும் விளங்குகிறது.



## சீர் திருத்தங்கள்.

இந்தியாவில் தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய பல விஷயங்களும் மிகக் குறைவாயிருப்பதனால், போதுமான அளவு இராஜாங்கத்தாரின் உதவியைக்கொண்டே அவை சீர்திருத்தம் செய்யப்படவேண்டும். இந்தியத்தொழில்களுக்கு இந்தியர்களிடமிருந்தே போதுமான அளவு மூலதனம் கிடைக்கவேண்டும். அவர்கள் போடும் முதலானது மோசம்போகாமல், சௌகரியமான வட்டி கிடைப்பதாயுமிருந்தால், மூலதனம் கஷ்டமில்லாமல் கிடைக்கக்கூடும். பலர், தங்கள் பணத்தை நகைகள் செய்தும், நிலங்கள் வாங்கியும் சேமித்து வைக்கிறார்கள். ஆனால், கம்பெனிகளில் ஷேர்கள் வாங்கவும், தொழில்களிற் போடவும் முன்வருவதில்லை. ஆகலால், தொழில்விஷயமாய்ச் செய்யும் பல காரியங்களிலும் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படி இராஜாங்கத்தாரின் கூட்டுறவு வேண்டும்.

## கவர்ன்மெண்டாரின் உதவி.

இந்திய மூலதனத்தைக்கொண்டு செய்யப்படும் தொழில்களின் சாமான்கள், மேனாடுகளிற் செய்யப்படுவனவற்றைப்போல் முதலில் அவ்வளவு சிறப்பாக இருக்கக்கூடாததனால், பொதுவாக ஜனங்கள் அன்னியநாட்டுச் சாமான்களையே விரும்புவது ஸகஜமாயிருக்கின்றது. ஆகலால், இந்தியசாமான்களை முதன்முதலில் கவர்ன்மெண்டாரே முழுதும் வாங்கி முதலாளிகளுக்கு லாபத்தைக் காண்பிக்கவேண்டும். இவ்வாறு அத்தொழில் அன்னியநாட்டுச் சாமான்களோடு போட்டிபோட்டு நிலைநிற்கும்வரை சில காலம் கவர்ன்மெண்டார் தொழிற்பண்டங்களை வாங்கி உதவிபுரிந்து வரவேண்டும்.

## மாதிரித் தொழிற்சாலைகள்.

இந்தியாபோன்ற தொழில்அபிவிருத்தியடையாத நாடுகளில் கவர்ன்மெண்டார் ஒவ்வொரு தொழிலுக்கும் மாதிரிச்சாலைகளை ஸ்தாபித்து ஜனங்களுக்குத் தொழில் கற்பிப்பதுடன், தொழில் செய்யப்படும் சாமான்களின் கட்டுபடி, கிரயம், லாபம் முதலியவற்றைப் பற்றித் தெளிவாக அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். கவர்ன்மெண்டார் முன்நின்று வேலைகளை நடத்தினால்தான், பிறகு ஜனங்களுக்கு அவ்விஷயங்களில் நம்பிக்கை ஏற்பட்டு அவற்றைப் பின்பற்றக்கூடும். இம்மார்க்கமானது ஜப்பான் தேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டு அங்கு நல்ல பலனைக் கொடுத்திருக்கின்றது. அங்கு 1872-ம் வருஷம் முதற்கொண்டு பற்பல தொழில்களுக்கும் மாதிரிச்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு, ஜனங்களுக்குத் தொழிலபிவிருத்தியின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்தப்பட்டுவந்தது. இவற்றின் பலனாகத் தேசமுழுவதும் தொழிற்சாலைகள் ஏற்பட்டு, தொழிற்பண்டங்கள் உலகமுழுவதற்கும் அனுப்பப்பட்டன. இந்தியாவிலும் இம்முறை அனுஷ்டிக்கப்பட்டால் மிகுந்த பலனைக் கொடுக்குமென்பதில் ஐயமில்லை.

## உழைப்பு.

இந்தியக்கூலிகளுக்குக் கொடுக்கப்படும் கூலியானது கொஞ்சம் மலிவாயிருந்தபோதிலும், அதற்காக அவர்களாற் செய்யப்படும் வேலையானது கிராக்கியாகவேயிருக்கிறது. மேனாட்டுக் கூலிகளைப்போல் இந்தியக் கூலிகளுக்குக் கைத்தொழிலின் விஷயத்தில் அவ்வளவு பயிற்சி போதாது. ஏனெனில், இந்தியக் கூலிகளிற் பெரும்பாலோர் விவசாயிகளேயாதலால், அவர்களுக்கு விவசாயக் கருவிகளைத் தவிர வேறு கருவிகளைக் கையாடப் பழக்கமில்லை. இவர்களுக்கு நல்ல தொழிற்பயிற்சி கொடுக்கப்பட்டால் சிறந்த கூலிகளாவார்களென்பதில் ஐயமில்லை.

இந்தியாவின் தொழில்அபிவிருத்தி சம்பந்தமாய் அவசியம் கவனிக்கப்படவேண்டிய விஷயங்களை இங்குக் குறிப்போம். தொழிற் பள்ளிக்கூடங்கள் போதுமானவை ஒவ்வொருமாகாணத்திலும் ஸ்தாபிக்கப்படவேண்டும். இந்திய வியாபாரவிஷயங்களைக் கவனிக்க அன்னியநாடுகளில் பிரதிநிதிகள் ஏற்படவேண்டும். புதிதாக ஏற்படும் தொழிற்சாலையின் பண்டங்களை

கவர்ன்மெண்டார் வாங்கி ஆதரிக்கவேண்டும். பற்பல இடங்களிலும் மாதிரித் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து ஜனங்களுக்குத் தொழில் விஷயங்களை அநுபவபூர்வமாய்க் கற்பிக்கவேண்டும். இந்தியத் தொழிலாளிகள் எவ்விஷயத்துக்கும் கவர்ன்மெண்டாரையே எதிர்பார்க்காமல், எல்லாவற்றையும் தாமாகவே கவனித்து வரவேண்டும். தம்மிடத்தில் சரக்கெடுக்கும் ஆசாமிகள் கொஞ்சமும் மனம்வருந்தாதபடி அவர்களுக்குத் திருப்திகரமாகச் சரக்குகளை ஒழுங்காக அனுப்பிவரவேண்டும். இங்குக் குறிக்கப்பட்டிருக்கும் விஷயங்கள் கவனிக்கப்படுமாயின், மிகுந்த பலன் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை.

---

## Methods of Collecting Farm Manure.

## தொழுஎருவைச் சேர்க்கும் வழிகள்.

நிலங்கள் நல்ல மகசூலைக் கொடுப்பதற்கு அவற்றிற்கு எருவே காரணமாயிருக்கின்றது. நிலத்திலிருக்கும் எருச்சத்தானது அவ்வப்போது பயிரிடப்படும் பயிர்களால் கிரகிக்கப்பட்டுப்போக, பிறகு செய்யப்படும் பயிர்களுக்குப் போதுமான ஊட்டமின்றி அவை நல்ல பலனைக் கொடுக்காமற் போகின்றன. நிலங்களுக்குப் பலவிதமான எருக்கள் போடக்கூடுமாயினும், வியவசாயிகளுக்கு மிகஎளிதில் கிடைக்கக்கூடியது தொழு எருவேயாம். கிராமாந்தரங்களில் வியவசாயிகளிற் பலரும் இந்த எருவின் மேன்மையைச் சற்றும் கவனியாமல், கால்நடைகளினின்று கிடைக்கும் சாணத்தையும் மூத்திரத்தையும் வீணாக்குகிறார்கள். பிரதிதினமும் கிடைக்கும் சாணமானது வெட்டவெளியில் கொட்டிவைக்கப்படுகின்றது. இதனால், வெய்யில் காரணமாகக் காரமெல்லாம் ஆவியாய்ப் போய்விடுகின்றது. மற்றும் மழையினாலும் அதன் சத்துக்களெல்லாம் கரைந்து வெளியே போய்விடுகின்றது. தொழு எருவில் முக்கியமான அம்சமாகிய மூத்திரமும் சரியானபடி சேர்த்துவைக்க யாதொரு ஏற்பாடும் இல்லை. அது வெளியில் ஓடி வெறும் பூமியிலேயே வீணாய்ப்போகின்றது. இன்னும், சாணமானது வறட்டிகளாகத் தட்டி விற்கப்படுகின்றது. இவ்வாறு செய்வதைக் காட்டிலும், தொழு எருவாகச் சேர்ப்பது மிகவும் லாபகரமென்று வியவசாயிகள் அறியவேண்டும். கிராமாந்தரங்களில் வியவசாயிகள் தொழு எருவை எவ்வாறு லாபகரமாகச் சேர்க்கக்கூடுமென்பதை இங்கு விவரிப்போம்:—

தொழுவங்களில் விழும் சாணி, மூத்திரம், குப்பை முதலியவற்றை ஒரு குழியிற் சேர்த்து மட்கவைத்த எருவுக்குத் தொழு எரு என்று பெயர். மாடுகளைத் தொழுவங்களில் கட்டும்போது அவற்றின் கீழ் படுக்கைக்காக இலை, தழை, வைக்கோல் முதலியன போட்டு வைக்கலாம். இவ்வாறு போட்டு வைப்பதனால், கால்நடைகளால் கழிக்கப்படும் மல மூத்திரங்கள் இவைகளில் ஊறி எருவாக உபயோகப்படுகின்றது. தொழுவமானது எருச் சேர்ப்பதற்கு வேண்டிய சௌகரியங்களைக் கவனித்துக் கட்டப்பட்டிருக்கவேண்டும். தொழுவத்தின் தரையானது கெட்டியாயிருக்கவேண்டும். அதன் ஒருபக்கம் மேடாயும் ஒருபக்கம் பள்ளமாயுமிருக்கவேண்டும். தொழுவத்தின் இருபுறங்களிலும் மாடுகளைக் கட்டுவதாயிருந்தால், இதன் மத்தியில்மாத்திரம் கொஞ்சம் மேடாயும் போகப்போக தாழ்ந்ததாயுமிருக்கவேண்டும். இதை யனுசரித்தே கூரையும் போடப்பட்டிருக்கவேண்டும். கால்நடைகள் தொழுவத்திற் கழிக்கும் மூத்திரத்தைச் சேகரிப்பதற்குச் சரிவுகளின் கடைசியில் ஒரு கால்வாய் தோண்டி அதன் மூலமாய் மூத்திரத்தைக் கொண்டுபோய் அதற்காக வைக்கப்பட்டிருக்கும் ஒரு சட்டியில் விழும்படி செய்யவேண்டும். தொழுவத்தில் அவ்வப்போது சேரும் எருவைக் கொட்டிவைக்க அருகிலேயே ஒரு குழி



தோண்டி, அதில் அவற்றைப் பத்திரப்படுத்தவேண்டும். அக்குழியானது அடியிலும் பக்கங்களிலும் களிமண்ணால் பூசப்பட்டு, வெய்யிலினாலும் மழையினாலும் பாதகமேற்படாதபடி மேலே கூரையும் போடப்பட்டிருக்கவேண்டும். வெளிஜலம் குழிக்குள் புகாதபடி குழியின் விளிம்புகளில் கொஞ்சம் மேடு செய்யப்பட்டிருக்கவேண்டும். தினந்தோறும் விழும் சாணி, மூத்திரம், குப்பை முதலியனவற்றை இக்குழியில் போட்டு, காய்ந்த மண்ணை அதன்மேல் தூவவேண்டும். சட்டியிலிருக்கும் மூத்திரத்தையும் அதில் கொட்டிச்சரியாகக் கலந்து கெட்டியாகும்படி மிதிக்கவேண்டும். இவ்வாறு செய்துவந்தால், நாளுக்குநாள் குழி மேடாய்க்கொண்டு வரும். எருவும் மட்கும். இதற்கு ஊதாநிறம் வரும்போது எடுத்து உபயோகிக்கலாம். நன்றாக மட்காத எரு இருக்குமானால், அதை எடுத்துக் குழியின் அடியிற் போட்டுவிடலாம். குழியிலிருந்து இவ்வெருவை எடுக்கும்போது ஒரு காரமுள்ள காற்று வெளிவரும். அக்காற்றுக்கு எதிரே ஒரு மஞ்சள் துணியைப் பிடித்தால், அது சிவப்பு நிறமுள்ளதாய் மாறிவிடும். குழியிலிருக்கும் எருவானது அவ்வப்போது மிதிக்கப்படுவதனால், இந்தக் காரமான வஸ்து வெளியே போகாமல் காக்கப்படுகின்றது. சாணத்தைக்காட்டிலும் கால்நடைகளின் மூத்திரத்தில் எருச்சத்து அதிகம் இருப்பதனால், அது எருவுக்கு மிகவும் சிலாக்கியமானது. ஒரு ஜதை மாட்டிலிருந்து ஒரு வருஷத்திற்குச் சுமார் 7 டன் எரு கிடைக்கலாம்.

மற்றொரு விதமாயும் தொழு எரு சேர்க்கலாம். அம்முறை வருமாறு:—

மாட்டுத் தொழுவத்தின் தரையானது இரண்டு அல்லது மூன்றடி ஆழமிருக்கும்படி வெட்டப்பட்டு அடியிலும் ஓரங்களிலும் களிமண் பூசப்படவேண்டும். இந்தப் பள்ளத்தில் வெளிஜலம் வந்து விழாதபடி ஓரங்களில் கொஞ்சம் மேடு செய்யப்பட்டிருக்கவேண்டும். மழை வெய்யில் முதலியவற்றால் பாதகப்படாதபடி பள்ளத்திற்குமேல் ஒரு கொட்டகையும் போடப்பட்டிருக்கவேண்டும். இப்பள்ளத்தில் தினந்தோறும் சருகு, குப்பை முதலியன மாடுகளுக்குப் படுக்கையாகப் போடவேண்டும். இன்னும், தழை, சோகை, வைக்கோல், கூளம் முதலியவற்றையும் இதற்காக உபயோகப்படுத்தலாம். இவற்றையெல்லாம் சமமாகப் பரப்பி, மாடுகள் அங்குமிங்கும் திரிந்து குப்பைகள் அமுங்கும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால், எருவின் காரம் வெளிப்போகாமலிருக்கும். இதற்காகப் பள்ளமானது 10 அடி நீளமும், 6 அடி அகலமுமாக வெட்டப்பட்டிருப்பது நலம். எரு நன்றாக மிதிபடாவிட்டால், அவ்விடத்தில் நாற்றமுண்டாகி அதனால் மாடுகளுக்குச் சுகாதாரக் குறைவு ஏற்படும். ராத்திரி வேளையில் கால்நடைகளால் கழிக்கப்படும் சாணங்கள் முதலியவற்றை காலைவேளையில் பள்ளமுழுதும் பரப்பி அதன்மேல் புதுக்குப்பை கூளங்களைப் போடவேண்டும். இவ்விதம் தினந்தோறும் செய்துவந்தால், சுமார் மூன்று மாதங்களுக்குள் பள்ளம் நிரம்பிவிடும். படுக்கைக்காகப் போடப்படும் குப்பைகளை அதிகமாக உபயோகிக்கக்கூடாது. ஏனெனில், எரு நன்றாக மட்காததுடன், அதன் சத்தும் குறைந்துபோகும். பள்ளம் நிறைந்தவுடன் அவற்றை எடுத்து உபயோகப்படுத்தலாம். மேலே இருக்கும் மட்காதவைகளையெல்லாம் தனியே ஒரு பக்கமாக வைத்திருந்து, கறுத்த மட்கின எருவை வெளியேற்றினபிறகு மீண்டும் அதிலேயே கொட்டிப் பரப்பிவிடவேண்டும். இதன்பிறகு, முன்போலவே படுக்கைக்குப்பைகளை மேலே பரப்பி எருச்சேர்க்கலாம்.

இவ்வாறு எருச்சேர்க்கும் முறையில் மாடு 1-க்கு ஒரு வருஷத்திற்கு 5 டன் முதல் 7 டன் வரையில் எரு கிடைக்கும். வியவசாயிகள் சாணத்தை வறட்டிகளாகத் தட்டி விற்பதைக் காட்டிலும் இதில் மிகுந்த லாபமிருப்பதனால், இம்முறையைக் கைக்கொண்டு லாபமடைவார்களென்று நம்பப்படுகின்றது.

# Indians and the Railway Services.

BY MR. N. R. KEDARI RAO, B. A., (Hons), L. T.

## இந்தியர்களும், ரெயில்வே உத்தியோகங்களும்.

சில மாதங்களுக்கு முன்பு நான் ரெயில்வே விஷயங்களைப்பற்றி ‘ஜனோபகாரி’ யில் எழுதியிருந்தபொழுது, “ரெயில் வண்டிகளில் மிகவும் கடினமானவேலைகளைச்செய்வதுபெரும்பான்மையும்இந்தியராயினும், உயர்ந்தஅந்தஸ்தும், அதிகமான சம்பளமுமுள்ள பதவியிலிருப்பவர்கள் ஐரோப்பியரே” என்று கூறியிருந்தேன். இதைச்சீர்திருத்துவதற்கு என்ன உபாயம் என்றால், கவர்ன்மெண்டார் ரெயில்வே விஷயங்களைத் தாமே நேராகப் பார்த்துவரவேண்டுமே தவிர கம்பெனியாரிடத்தில் ஒப்பிக்கக்கூடாது என்றும் காட்டியிருந்தேன். நான் எழுதிய சின்னாட்களுக்குப் பிறகு பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் ரிபோர்ட்டு வெளிவந்தது. அதை வாசித்ததில், அவர்கள்கூட நாம் சொல்லியவாறே யோசித்திருக்கின்றனர் என்று வெளிவருகிறது. ஆகையால், அவர்கள் இவ்விஷயத்தைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார்கள் என்பதைச் சற்றே ஆய்ந்தறிவோம் :—

கவர்ன்மெண்டார் ஸ்டேட் ரெயில்வேஸ் (State Railways) ஸ்தாபித்து, தாமே அவ்விஷயங்களை நிர்வாகம் செய்ய ஆரம்பித்தது 1869-ம் வருஷத்தில்தான். அதற்கடுத்த வருஷமே, அதாவது 1870-ம் வருஷத்திலேயே ஸ்டேட் ரெயில்வேக்களில் இருக்கும் எல்லா உத்தியோகங்களும் இந்தியர்களுக்குக் கொடுக்கலாம் என்று சட்டம் செய்துவிட்டார்கள். சட்டம் செய்து இற்றைக்கு நாற்பத்தைந்து வருஷங்களுக்கு மேலானாலும், இப்போது 200 ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகங்களில் நூற்றுக்கு பதின்மர்தான் இந்தியர்கள்; 500 ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகங்களில் நூற்றுக்கு ஆறு பேர்தான் இந்தியர்கள்! ஆகையால், எல்லா உத்தியோகங்களிலும் நூற்றுக்கு ஐம்பது பேராவது இந்தியராயிருக்கவேண்டும் என்றும், இந்தச் சீர்திருத்தம் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற்றவேண்டும் என்றும் ரிபோர்ட்டில் கூறியிருக்கிறார்கள்.

டில்லியில் கவர்னர் ஜெனரலவர்களின் சட்ட நிர்வாக சபையில் ஸர். டின்ஷா எடில்ஜி வாச்சா அவர்கள் சென்ற பிப்ரவரியில் போட்ட கேள்விக்குக் கவர்ன்மெண்டார் பதில் சொன்னது என்னவென்றால்:—“முற்காலத்தில் கம்பெனியார் ரெயில்வேயின் மேற்பட்ட உத்தியோகங்களுக்கு இந்தியர்களை அமர்த்தவில்லை என்பது உண்மையே. ஆயினும், ஜி. ஐ. பி. ரெயில்வேயிலும், ஈஸ்ட் இண்டியன் ரெயில்வேயிலும் பெரிய உத்தியோகங்களுக்கு இந்தியர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்பதே எங்கள் அபிப்பிராயம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகலின், கம்பெனியார்களே ரெயில்வே விஷயங்களைப் பார்ப்பது நலம்” என்றுரைத்தார். ஆயினும், நாம் இம்மட்டோடு நிற்கக்கூடாது. கம்பெனியாரின் குத்தகை ஆய்விட்டபடியால், மறுபடி குத்தகைச்சீட்டைப் பெற்றுக்கொள்ள இம்மாதிரி சொல்லியிருக்கலாம். எல்லாக் கம்பெனியாரும் தம்மிடத்திலிருக்கும் உன்னத பதவிகள் எல்லாவற்றிற்கும் இந்தியர்களை அமர்த்துவோம் என்று ஒரு சட்டத்தைச் செய்யும்படி அவர்களை நிர்ப்பந்திப்பதே நமது கடமையாகும்.

இரண்டாவது :—ரெயில்வே நிர்வாக சபையில் ஐந்துவிதமான பிரிவுகள் உண்டு. அவையாவன :—மானேஜ்மெண்டு பிரிவு (Management Branch) போக்கு வரவுப் பிரிவு (Traffic Department), வண்டிகளின் பிரிவு (Wagon Department), சாமான் பிரிவு (Stores Department), பொதுப் பிரிவு (General Department). இவைகளில் ஒவ்வொன்றிலும் உத்தியோகஸ்தர்களை எம்மாதிரி தேர்ந்தெடுக்கவேண்டும் என்று பார்ப்போம் :—



மானேஜ்மெண்டு பிரிவில் இப்பொழுது பெரிய உத்தியோகங்களெல்லாம் ஐரோப்பியரே நிர்வகித்திருக்கிறார்கள். தாழ்ந்த பதவிகளில்தான் இந்தியர்கள் இருக்கிறார்கள். இந்தியர்களுடைய நடக்கை வழக்கங்களைத் தெரிந்து, அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுப்பது இந்தியர்களால்தான் ஸாத்தியம். ஆதலால், பெரிய உத்தியோகங்களில், அதாவது ஏஜண்ட், டெபுடி ஏஜண்ட், அஸிஸ்டெண்ட் ஏஜண்ட் முதலிய பதவிகளில் ஒன்றாவது இந்தியர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதே நமது கொள்கை.

போக்கு வரவுப் பிரிவில், 1907-ம் வருஷத்துக்குமுன், உத்தியோகஸ்தர்களெல்லாரையும் இந்தியாவிலிருந்தே நியமித்து வந்தார்கள். ஆயினும், 1907-ம் வருஷத்துக்கப்பால் ஐந்தில் மூன்று பாகம் இங்கிலாந்திலும். ஐந்தில் இரண்டு பாகமட்டுமே இந்தியாவிலும் தேர்ந்தெடுத்து வருகிறார்கள். இப்படிச் செய்வது சரியன்று என்று கமிஷனர்கள் யோசித்துப்பார்த்து, “சாதாரணமாக இந்தியாவிலிருந்தே உத்தியோகங்களுக்குத் தக்க மனிதர்கள் இல்லாமற் போனால்மாத்திரமே இங்கிலாந்திலிருந்து வரவழைக்கவேணும்” என்று சொல்லியிருக்கிறார்கள்.

இதற்குமுன்னே 1879-வது வருஷத்தில் கவர்ன்மெண்டாரே பெரிய உத்தியோகங்களுக்கு இந்தியரை நியமிக்கலாமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லி முப்பத்துமூன்று வருஷங்களுக்குப் பிறகுகூட ஸ்டேட் ரெயில்வேயில் 1000 ரூபாய் முதல் 2000 ரூபாய் வரையில் சம்பளமுள்ள உத்தியோகங்களில் ஒருவரேனும் இந்தியரில்லை. ஆகையால், தங்கள் வாக்கை நிறைவேற்றும்படி நாம் நிர்ப்பந்தித்தாலொழிய, கவர்ன்மெண்டார் கமிஷனர்களுடைய சொல்லையும் கவனிக்கமாட்டார்கள். ஆதலின், நமது கடமையாதெனில், இவ்விஷயங்களையெல்லாம் சட்ட நிர்வாக சபையில் எடுத்துப்பேசி, நமக்கு நியாயம் கிடைக்கும்படி வற்புறுத்துவதேயாம்.

மூன்றாவது:—வண்டிகளின் பிரிவு, அதாவது Wagon Department ல் இப்போது இங்கிலாந்திலிருந்தே எல்லா உத்தியோகஸ்தர்களையும் எடுக்கிறார்கள். ஏனென்றால், அவ்வுத்தியோகங்களுக்கு வேண்டிய அனுபவமும் தேர்ச்சியும் இந்தியாவில் கிடைப்பது அரிது என்று சொல்லுகின்றார்கள். இது நியாயமன்று. இந்தியாவில் இருக்கும் பல ரெயில்வே ஓர்க் ஷாப்களிலும் ரெயில்வே பள்ளிக்கூடங்களிலும் ஐரோப்பியர்களுக்கும், ஆங்கிலோ-இந்தியர்களுக்கும் தேர்ச்சிசெய்விக்கும்போது, இந்தியர்களுக்கு மாத்திரம் ஏன் அந்தத் தேர்ச்சியைக் கொடுக்கக்கூடாது? இவர்களுக்கும் தேர்ச்சிகொடுக்கும்படி நாம் முயல்வதே நன்மை என்று கமிஷனர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அப்படிச்செய்வதற்குக் காலதாமஸம் ஆகும் ஆதலால், கனம். ஜஸ்டிஸ். அப்துர் ரஹீம் என்பவர், அப்படித் தேர்ச்சி கொடுக்கும்வரையில், கவர்ன்மெண்டாரவர்கள் இந்தியர்களில் புத்திசாலிச்சிறுவர்கள் சிலரை ஸ்காலர்ஷிப் கொடுத்து, அதாவது உபகாரச்சம்பளம் கொடுத்து இங்கிலாந்துக்கனுப்பி, அவர்கள் வேண்டிய அனுபவத்தைப் பெற்றபிறகு, இந்தியாவுக்கு வரவழைத்து, இந்த மேலான உத்தியோகங்களில் அவர்களை அமர்த்தவேண்டும் என்று சொல்லுகிறார். நியாயமளிப்பதில் இந்த மஹானுபாவரைவிடத் தக்கவர் வேறெவர் உளர்? அவரது சொற்படி கவர்ன்மெண்டார் நடப்பதே உத்தமம் என்று நமக்குத் தோன்றுகின்றது.

நான்காவது :—சாமான் பிரிவு, அதாவது Stores Department ல் போக்குவரவுப்பிரிவைப்போன்ற விஷயங்களே சொல்லியிருக்கின்றன. இந்தியர்களில் நல்ல படிப்பும், சற்குணமும் உள்ளவர்களையே தேர்ந்தெடுக்கவேண்டும் என்கிறார்கள். இது நியாயம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டியதுதானே?

தவிரவும், பொது விஷயங்களைப்பற்றி கமிஷனவர்கள் சொல்லியது வருமாறு:—(1) இந்தியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் சம்பள விஷயத்தில் ஒருவிதமான வித்தியாஸமும் இருக்

கக்கூடாது. (2) எல்லா உத்தியோகங்களுக்கும் தக்க மனிதர்களை நியமிப்பதற்காக இந்திய கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தவேண்டும். அந்தக் கம்மிட்டியில் ஐந்துபேர் இருப்பது நல்லது. அவர்களில் இருவராவது இந்தியர்களாக இருக்கவேண்டும்.

இப்படிச்செய்வது கொஞ்சம் நன்மையை விளைக்குமாயினும், நல்ல பரீக்ஷைகளைக் கொடுத்த சிறுவர்கள் எல்லோரையும் ஒருவித வித்யாஸமுமில்லாமல் போட்டிப் பரீக்ஷை செய்து, அதில் முதன்மையானவரை எடுப்பதே ஸர்வோத்தமம் என்று நமக்குத் தோன்றுகிறது.

பின்னும், பெரிய உத்தியோகஸ்தரின் சம்பளத்தைப்பற்றி கமிஷனர்கள் இப்போது இருக்கிற சம்பளமே இருக்கட்டும் என்று நினைத்திருக்கிறார்கள். ஆனால், இப்போது இருக்கிற சம்பளமோ ரொம்ப ஜாஸ்தி என்பது நமது அபிப்பிராயம். ஏனெனில், இந்தியாவோ ஏழையான தேசம். அப்படியிருக்க, ஐசுவரியமுள்ள பல ஐரோப்பிய தேசங்களில் ரெயில்வே உத்தியோகங்களுக்கு என்ன சம்பளம் கொடுக்கிறார்களோ, அதைவிட மிகவும் அதிகமாக இந்தியாவில் கொடுக்கிறார்கள். உதாரணமாக: ஹாலண்டில் ரெயில்வேயில் உயர்ந்த சம்பளம் 900 ரூபாய்; ஸ்வீடனில் 1,381 ரூபாய்; நார்வேயில் 450 ரூபாய்; ஜெர்மனியில் 750 ரூபாய்; ஸ்விட்ஸர்லாண்டில் 781 ரூபாய்; பெல்ஜியத்தில் 469 ரூபாய்; பிரான்ஸில் 989 ரூபாய்; ஏழைப் பிரதேசமாகிய இந்தியாவிலோ 2,500 ரூபாய். இது நியாயந்தானே? இதைக்கேட்பார் எவருமில்லையோ?

மற்றும், ஐசுவரியமுள்ள ஐரோப்பிய தேசங்களில் ரெயில்வேயில் மிகத் தாழ்ந்த உத்தியோகஸ்தர்களின் சம்பளம் என்னவெனில்:—ஹாலெண்டில் 73 ரூபாய்; ஸ்வீடனில் 63 ரூபாய்; நார்வேயில் 55 ரூபாய்; ஜெர்மனியில் 69 ரூபாய்; ஸ்விட்ஸர்லாண்டில் 73 ரூபாய்; பெல்ஜியத்தில் 56 ரூபாய்; பிரான்ஸில் 47 ரூபாய்; ஏழையாகிய இந்தியாவிலோ ஏழு ரூபாய்; ஏழைகளின் கஷ்டத்தைச் சுவாமிதான் பார்த்துப் பரிகரிக்கவேண்டும்!

ஆகையால், “இந்திய ரெயில்வே விஷயங்களில் முக்கியமான சீர்திருத்தம் என்னவென்றால், ரெயில்வே உத்தியோகங்களில் எல்லாவற்றையும் இந்தியர்களுக்கே கொடுக்கவேண்டும்: மேலும், இந்தியர்களுக்கு வேண்டிய தேர்ச்சியும், அநுபவமும் வரும்பொருட்டுப் பலபல ஓர்க் ஷாப்களை ஏற்படுத்தி, அவற்றில் அவர்களுக்கு வேண்டிய விசேஷக் கல்வியைப் பயிற்றவேண்டும். அப்படிச் செய்தால், ரெயில்வே விஷயங்களைத் தவிர்த்தும், இந்தியாவின் தொழிற் கல்வியபிவிருத்திக்கு இது ஏற்ற சாதனமாகும்” என்று கனம் ஸர். எம். பி. செளபால் அத்தியற்புதமாகச் சொல்லியிருக்கிறார்.

“அக்கொண்ட் பிரிவிலும், இஞ்சினியரிங் பிரிவிலும் இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் அதிகமான வித்யாஸம் இருக்கக்கூடாது” என்று கனம் ஜஸ்டிஸ் அப்துர் ராஹிம் எழுதியிருக்கிறார்.

இவர்கள் சொல்லியிருக்கிறபடி யெல்லாம் செய்தால், ரெயில்வேயில் மொத்தச்செலவும் குறைந்து, வேலையும் சரிவர நடந்துவரும் என்பதற்கு ஆக்ஷேபமேயில்லை. ஒவ்வோரிடத்தில் இம்மாதிரி நடந்திருக்கும் தருணத்தில் நன்மை விளைந்திருக்கின்றது என்பதற்கு உதாரணங்களும் பல இருக்கின்றன. ஆகையால், வரவர இந்தியர்களை உன்னத பதவிக்கு உயர்த்துவார்கள் என்று நம்பியிருக்கின்றேன்.

என். ஆர். சேதாரி ராய்.



# Markandeyar.

By Mr. P. K. Sreenivasachariar,
*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## மார்க்கண்டேயர்.

“ஊழையும் உப்பக்கங் காண்பர்; உலைவின்றித்
தாழா துஞற்றுபவர்.”—திருக்குறள்.

“உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே:—உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங்கரி.”—நீதிநெறிவிளக்கம்.

மேன்மையான காரியத்தில் விடாமுயற்சியுடையோர் எவ்வகை நற்பலனையும் அடைவர்; எத்தகைய ஆபத்தினின்றும் அகல்வர். விதியையுங் கடக்கக்கூடிய அவரது மகிமை என்னே! அம்மேலோர்களின் திவ்வியசரித்திரங்களை அனைவரும் படித்து, அவர்களின் விடாமுயற்சியைக் கடைப்பிடிக்கவேண்டும்.

இங்கு இச்சந்தர்ப்பத்திற்கு நிதரிசனமாக மரணத்திற்கு ஏதுவாகிய ஊழை ஊக்கத்தால் விலக்கிக்கொண்ட மார்க்கண்டேயரென்னும் சிவபக்தரது வரலாற்றை* வெளியிடுவது பொருந்தும்.

வெகுகாலத்திற்குமுன் ஞான அநுஷ்டானங்களிற் சிறந்த மிருகண்டு என்னும் அந்தணர் மருத்துவதி என்பவளை மணஞ்செய்துகொண்டு இல்லறத்தை நல்லபடி நடத்திவந்தார். அவர்களுக்கு மகப்பேறு ஒன்றொழிய மற்ற பேறுகள் குறைவற இருந்தன.

“கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லான் மயக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடும் மகிழ்ச்சி மைந்தர்
இல்லாதவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்னும்?”

என்பவாதலால், மனைவாழ்க்கைக்கு மக்கட்பேறு வாய்க்காவிடின் மற்ற பேறுகள் ருசிக்குமா? அவர்கள் மகப்பேறில்லாக் குறையைக் குறித்து மனம் வருந்தி, சகல பாக்கியங்களையும் சாதித்துக் கொடுக்கும் திவ்விய க்ஷேத்திரமாகிய காசியை அடைந்து, திருப்பாற்கடற் போன்ற கங்கா நதியின் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, பரிசுத்தர்களாய்ச் சிவாலயத்துக்குச் சென்று, மஹாதேவருடைய திருவடிகளைத் தரிசித்துத் துதித்தார்கள். மற்றும், அவ்வந்தணர் அங்கோரிடத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்தார்.

மிருகண்டு இங்ஙனம் மைந்தனைப் பெறவிரும்பி இறைவனைப் பத்தியோடு தியானித்தபடியே ஓராண்டு அரும்பெருந்தவஞ்செய்ய, பரமசிவன் அவர்க்கு வேண்டும் வரமளிக்கும்பொருட்டுக் காட்சிதந்தருளினர். மிருகண்டு முனிவர் ஆனந்தபரவசராய் அப்பெருமானை வணங்கித் துதித்தார். அப்போது பரமேச்வரர் அம்முனிவரை நோக்கி, ‘நீ வேண்டுவது யாது?’ என்று வினவியருள, முனிவர், ‘அடியேன் மைந்தனைப் பெற விரும்பினேன்; அவ்வரமளித்தருள்க’ என்று பிரார்த்தித்தார். அக்காலையில், சங்கரமூர்த்தி அருளிச்செய்ததாவது:—

“முனிவனே! நிர்க்குணங்களே விஞ்சித் தத்துவஞானம் சிறிதுமின்றிப் பல உடற்குறைகளையுடையவனும், நூறுபிராயமளவும் மிக்க வியாதியை அநுபவித்துப் பிழைத்திருப்பவனுமாகிய புத்திரனொருவனைக் கொடுக்கவோ? அன்றி, சுந்தர தேகத்துடன் உடற்குறையொன்றுமின்றி நோய்களில்லாமல் எம்மிடத்துப் பக்தி விசுவாசமுடையவனாய் ஆயுள் பதினாறு பிராயமே பெற்றுப் பலகலைகளையும் பழுதறப்

* இது இங்குச் சுருக்கமாகக் குறிக்கப்பட்டது. இதனை எழுதியவர் மார்க்கண்டேய சரிதம் என்று விஸ்தாரமாகவும் ஓர் நூல் வசன நடையில் இயற்றியிருக்கிறார். அன்பர்கள் அதனையும் வாங்கிப் படிப்பது நலம்.

பயின்று வல்லவனான பாலனைக் கொடுக்கவோ?" என்றார்.

இதனைக் கேட்ட முனிவர் ஆலோசித்து நிச்சயித்து, ஸ்வாமியை நோக்கி, 'எமது தலைவனே! ஆயுள் குறைவா யிருப்பினும், நல்லறிவுடையவனாய், உடற்குற்றமொன்றுமில்லாமல், தேவரீரிடத்தில் பக்தியைப் பூண்ட பாலனையே அடியேன் பெற விரும்புகின்றேன்' என்றார். அப்போது மகேச்வரர், 'உனக்கு நீ வேண்டிய வண்ணமே வரம் அளித்தோம்'. என்று அந்தர்த்தானமாயினர். முனிவர் உள்ளத்தில் உவகையுற்று, அக்காசியிலேயே சிவபிரானைப் போற்றி வசித்துக்கொண்டிருந்தார்.

பிறகு, மருத்துவதி கருப்பவதியாய்ச் சுபமுகூர்த்தத்தில் ஓர் அருமந்த மைந்தனைப் பெற்றாள். அக்குழந்தைக்கு மார்க்கண்டேயர் என்று நாமகரணஞ் செய்யப்பட்டது. முனிவர் ஏழாம் பிராயத்தில் புத்திரனுக்கு உபநயனஞ்செய்து கலைபயிற்றி வருங்கால், அப்புத்திரர், மறைகளும் மற்றை நூல்களும் வெளியிடும் உண்மைப்பொருளை உள்ளபடி உணர்ந்து, முழுமுதற் கடவுள் சிவபிரானே யென்று எண்ணி, அவரது திருவடிகளைப் புகலிடமாக அடைந்தார். அவர் நாடோறும் பரமனைப் பரிவோடு பணிந்து, அவனடியார்களை ஆதரித்துத் தாழ்ந்து, தங்கள் குருவைத் தொழுது, முனிவர்களைப் பரவி, இருமுதுகுரவரின் இணையடி மலர்களைச் சிரமேற்பூண்டு, பிரமசரிய வொழுக்கத்தைப் போற்றிவந்தார்.

இவ்வாறு நடக்கின்ற காலத்தில், அவர்க்குப் பதினாறாம் ஆண்டும் வந்தது. அவ்வயது வந்ததையும் பார்த்து, அரிய மைந்தனையும் பார்த்து, அவரது அன்னையும் அப்பனும் அளவிலாத் துயரக்கடலில் மூழ்கி விம்மிவிம்மி அழுதனர். அதுகண்ட குமாரர் அதன் காரணத்தை வினவ, மிருகண்டு, 'கண்மணியே! நீமைந்தனாக எங்கட்குத் தோன்றியிருக்க, நாங்கள் இன்பமுறுவதன்றித் துன்பமுறுவதும் உண்டோ! ஆயினும், இறைவன் முற்காலத்தில் உனக்கு வயது பதினாறேயென்று அருளிச்செய்தார். அப்பிராயம் வந்துற்றதனால் அவலமுடையோம்' என்றார். அப்போது மார்க்கண்டேயர், 'நீங்கள் ஒன்றுக்கும் துயருறற்க; உயிருக்கு உயிராகிய பரமசிவன் உள்ளார். அவரைத் துதித்து அருச்சித்து, காலனது கடுவல்லமையைக் கடந்து பிழைத்து நும்மிடம் விரைவில் வந்தடைவேன்' என்று உறுதியுரைத்துத் தேற்றி, அவர்களை வணங்கி அனுமதி பெற்றுக் கிருகத்தைவிட்டுச் சென்று, ஸ்ரீமணி கர்ணிகை யென்னும் கோயிலினுட் புகுந்து, பக்திமிகுதியினாலாகிய ஆனந்தாதிசயத்தால் எலும்பு நெகிழ்ந்து உருகவும், ஆனந்தக்கண்ணீர் பெருகவும், புளகம் தோன்றவும் பிரதக்ஷிணம் புரிந்து, சிவபிரான் திருமுன்பே தண்டம்போல் விழுந்து வணங்கி, ஸ்வாமியின் திருவடி மலர்களைச் சூடி, அங்கோரிடத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து, அருந்தவத்தைச் சிறிதும் இடைவிடாது ஊக்கத்தோடு புரிந்தார். அதனால் இறைவன் அவர்முன் தோன்றிக் காட்சியளித்து, 'அன்பனே! நீ புரியும் தவத்திற்கு மிக மகிழ்ந்தோம். நீ வேண்டுவனவற்றைச் சொல்லுக' என்று திருவாய் மலர்ந்தருளினார். மார்க்கண்டேயர், 'ஸ்வாமீ! அடியேன் காலன்கையில் அகப்படாமல் அவனுக்குத் தப்பியுய்ந்து வாழும்படி தேவரீர் அடியேனெதிரில் எழுந்தருளிக் காத்தருள்க' என்று பிரார்த்தித்தார். பரமசிவன், 'நீ அந்தகனுக்கு அஞ்சேல், அஞ்சேல்' என்று அபயமளித்தார். மார்க்கண்டேயர், 'இனி யான் உய்ந்தேன், உய்ந்தேன்' என்று சொல்ல, சிவபிரான் மறைந்துபோயினர்.

பின்பு அம்மார்க்கண்டேயர்க்குப் பதினாறு வயதின் எல்லை சென்றடையவே, விரைவோடு ஒரு யமதூதன் வந்து அவரது இடைவிடாத பக்தியுள்ள பூசையைக்கண்டதும் அச்சங்கொண்டு, 'இவனை யான் அணுகுவதும் அரிது' என்று மீண்டு சென்று, காலன் கழலில் விழுந்து மார்க்கண்டேயரது உறுதியுற்ற தவத்தையும், பூசையையும், பக்தி விசேஷங்களையும் விளங்க உரைத்தான். அதனைக் கேட்ட யமன், சீறி வெய்துயிர்த்து, 'ஆயின், அச்சிறுவன் அழிவில்லாத கடவுளேயோ?' என்று கூறித் தன் கணக்கர்களை அழைத்து, அம்மைந்தரது ஆயுளைக் குறித்துக் கேட்க, அவர்கள் 'பதினாறும் வயதில் அவனுக்கு மரணம் நேரவேண்டுவதே' என்றனர்.

உடனே, அந்தகன் தன் அமைச்சனாகிய காலனென்பவனை விளித்து, 'காசிப்பதியில் ஓர் அந்தணச்சிறுவன் உள்ளான். நீ சென்று அவனை விரைய இங்குக் கொணர்க' என்றான். அவன் அங்ஙனமே காசிக்கு வந்துசேர்ந்து, முனிகுமாரர் புரிகிற சிவபூசையையும் சிவத்தியானத்தையும் நோக்கியவளவிலே, 'இவன் நம்முடன் வருவதேது?' என்று எண்ணி வருந்துகின்றான். ஆயினும், அவர்முன் சென்று தொழுதனன். அவர் காலனை நோக்கி 'நீ யார்?' என்று வினவ, அவன் உரைப்பான் :—

"நான் அந்தகனது அடியிணைகளுக்கு அடிமைபுரியும் காலன். உமக்குரிய பதினாறுபிராயமும் தேய்ந்து நேற்றே முற்றிற்று. ஆதலால், நீர் யமலோகத்திற்கு என்னுடன் வந்துசேர்தல் வேண்டும்" என்று சொல்ல, மார்க்கண்டேயர், "சிவனடியார் யமலோகத்திற்கு வரமாட்டார்கள்; சிவலோகமடைவார்கள். நான் சிவபிரானது அடியார்க்கு அடியேன். விரைவில் அப்பாற்செல்; அப்பாற்செல்" என்று மறுத்துரைத்தார். அவன் 'நன்று' என்று சொல்லிவிட்டுச்சென்று யமனை அணுகி நடந்தவற்றைச் சொன்னான்.

அது செவியுற்ற யமன், மனம் மிகத் துடிக்கவும், உடல் வியர்ப்புறவும், விழிகள் தழலைப் பொழியவும், புருவங்கள் கோணவும் கொதித்து, தன் வாகனமாகிய எருமைக் கடாவின்மேல் ஏறிக்கொண்டு பூலோகத்தைநோக்கி வருபவனானான். வந்தவன், காசியடைந்து, முனிமைந்தனுள்ள இடத்திற்குச் சென்று, சிவந்த மயிர்களையும், கறுத்த பயங்கரமான மேனியையும், சினம் பொங்கிச் சொலிக்கின்ற கண்களையும், கையிற் காலபாசத்தையும் தண்டத்தையும் சூலத்தையும் உடையவனாய் அவனுக்குக் கட்புலனானான். அப்போது மார்க்கண்டேயர் அவனது தன்மையை உற்றுநோக்கி, அதனாலே, அந்தகன் வந்து அணுகினன்போலும் என்று அறிந்து, பரமசிவனது திருவடிகளைத் துதித்து வணங்கினார்.

அதைக் கண்ணுற்ற கூற்றுவன், அவரை நோக்கி, 'சிறுவனே! உனது பேதைமை என்ன! நீ என்றும் இறவாமலிருக்க எண்ணியதும், அதனிமித்தம் சிவனை வழிபடுதலும் பயனில. ஊழின் ஒழுங்கை நீ அறிந்திலை. பிறப்பிறப்புக்களை அனைவரும் பெறவேண்டும். நீ நாடோறும் புரியும் பூசை, இனிவரும் பிறப்பை மாற்ற வல்லதேயன்றி, இப்பிறப்பை முடிக்கும்படி யான் உன்மீது வீசுங் காலபாசத்தையும் விலக்க வல்லதோ? என் ஆயுதம் மும்மூர்த்திகளானாலும் பழுதுபடாது. உனது உயிரைக் கவர்ந்துகொண்டன்றிப் போவேனோ? சிவனடியாராயினும், அவர்களையும் ஆயுளின் இறுதி வந்தடைந்தால் எனது உலகிற் சேர்ப்பேன். தடையின்றி என்னோடு வா' என்றான். அப்போது முனிமைந்தர் மொழிவார்:—

'சிவபிரானது சேவடியடைந்த அடியவர்க்கு அந்தமில்லை. ஒருகால் உண்டாயினும், அவர்கள் உன் உலகத்துக்கு வரமாட்டார்கள்; கைலாசத்திற்குச் செல்வார்கள். அடியவனான என்னை அணுகின், உனக்குத் தீங்கு உறும். என்முன் நில்லேல். அப்பாற் போ' என்றார். அதைக் கேட்ட யமன், கண்கள் கோபாக்கினி மூள, 'நீ எனக்கு அச்சங்காட்டுகிறாயா? நம் உயிரை யமன் கைக்கொள்ளமாட்டான் என்று எண்ணிவிட்டாயா?' என்று சொல்லிக் கர்ஜித்து, கரிய மலைபோல சிறுவராகிய அப்பெரியவரெதிரிலே சென்று நெருங்கி, அவர்மீது தன் பாசாயுதத்தை வீசியெறிந்து அதனால் அவரைப் பிடித்திழுக்கத் தொடங்கினான்.

இச்சமயத்திலே, அதனை அறிந்த மார்க்கண்டேயர் ஈசனை ஊக்கத்துடன் துதித்து, அவரது திருவடியிணையைத் தஞ்சமெனப் பற்றிப் பக்திபரவசராயினர். அப்போது, தேவர்களும்

மயங்கி இரங்கினர். காலபாசம் கழுத்திற் பொருந்தியிருக்கவும், சிவபிரானைச் சரணமடைந்து வழிபடுதலால், துன்பங்கொள்ளாமலேயிருக்கிற அவர்முன், சிவபிரான் அவர் பூஜிக்கும் இலிங்கத்தினின்று எழுந்தருளி, 'உன் துன்பங்களைத் தொலைக்கின்றோம். அஞ்சற்க' என்று அபயமொழியளித்து, 'இவ்யமனுக்குக் கொழுப்பு அதிகமாய்விட்டது. அதனால், நம் அடியவனான இம்மைந்தனுடைய உயிரை வாங்கப் பதைத்தான்' என்று திருவுள்ளங்கலங்கி வெகுண்டு, தமது இடத்திருவடியாற் சிறிது தூக்கி உதைத்தார். அவ்வளவில், யமன் காளமேகம் கீழ்விழுந்தாற்போல விழுந்து இறந்தொழிந்தான். சிவபிரான் உதைத்ததனாலாகிய அதிர்ச்சியால் பிரமன்முதலிய தேவர்கள் அஞ்சி நடுநடுங்கினர். யமன் பக்கத்திற் சூழ்ந்துநின்ற அவன்சேனைகளும், எருமைக்கடாவும் பட்ட பாட்டைப் பகரவொண்ணுமோ?

அக்காலத்தில், அப்பர்சிகாமணி, 'மைந்த உயிரைப் பாதுகாப்பதற்குப் பரமசிவன் உள்ளார். அவர் உள்ளபோது அந்த அந்தகன் என்செய்யமாட்டுவான்?' என்னுந்தந்தை அமைந்து வடமொழி சுலோகங்களால் சிவஸ்தோத்திரஞ்செய்து அச்சந்தவிர்ந்து பரமன் பக்கல் நின்றார். ஸ்வாமி, அப்போது அந்தப் பூத்ததென்னப் புன்னகைபுரிந்து மகிழ்ந்து, முனிகுமாரரை நோக்கி, 'குழந்தாய்! நீ நம்மைத் துதித்துப் பூஜையை இடைவிடாது முயன்றதனால், அந்தமில்லாத ஆயுளை உனக்கு யாம் அளித்தருளினோம்' என்று அருளிச்செய்து, அவ்வன்பர் வழிபடும் அவ்விலிங்கத்திலிடமாகவே மறைந்தருளினார்.

தேவர்களது வேண்டுகோளால் சிவபிரான் பிறகு யமனை உயிர்ப்பித்து, அவனுக்கு உறுதியுரைத்தார். அவனும் தான் புரிந்த பிழையைப் பொறுத்தருளும்படி வேண்டி விடைபெற்றுப் போயினன்.

மகன் என்னவானனோ? என்று பெருங்கவலையினால் மனம் இளகத் துயரத்தால் தங்கள் கண்களில் நீர்பெருக வாட்டமுற்றிருந்த தந்தை தாயருடைய தாள்களை, சிவாநுபவத்தாலாகிய ஆனந்தத்தால் கண்ணீர் பொழியப்பெற்ற மார்க்கண்டேயர் சென்று தழுவித் தொழுது, அவர்களது துக்கத்தை மாற்றினார். அவரது தந்தை "இவன் தந்தை என்னோற்றான்கொல்?" என்று தம் புதல்வரைப் பலரும் துதித்துப் புகழ்வதைக் கேட்டு ஆனந்தபரவசராயினர். தாயும், தன் மகனைப் பக்தசிரோமணியாதலால் சான்றோனெனப் பலரும் சாற்றுவதைச் செவியுற்று, "ஈன்ற பொழுதிற் பெரிதுவந்தாள்."

பரமேச்வரரது திருவருளைப் பெறுதற்குக் காரணமாகிய மார்க்கண்டேயரது இடைவிடாத தவமுயற்சியைத் தினம் நாம் அநுசந்தித்துப் புரிந்து உய்வோமாக.

---

## Collection of Moral Sayings.

By Pandit M. M. Narayanaswami Iyer.

## நீதிமொழித்திரட்டு.

அகஸ்தியர்க்குப் பிறப்பிடமோ மட்பானை; பரிஜனங்களோ மிருகங்கள்: ஆடையோ மரவுரி: காடே வசிக்குமிடம்; காய் கிழங்கு முதலியன உணவுகள்; இத்தகைய அகஸ்தியர் கடலைக் கையால் முகந்துண்டனர் என்றால், பெரியோர்களுக்குக் காரியசித்தி மகிமையினால் உண்டாகின்றதேயன்றிக் கருவியினாலன்று.

உலகத்தில் மனிதராய்ப் பிறந்தவர்களில், சிலர் அங்கஹீனர்களாகவும், சிலர் நோயாளிகளாகவும், சிலர் குருடராகவும், சிலர் மூடராகவும், சிலர் தரித்திரராகவும் இருப்பதற்குக் காரணம்: முற்பிறப்பில் அவரவர் செய்த வினையேயாம்.

வறுமையினாலே வெட்கமுண்டாகின்றது; வெட்கம் உண்டானதும் களை குன்றுகின்றது; களை



குறைந்ததும், போகிறவிடத்தில் அவமானம் உண்டாகின்றது; அவமானம் வந்ததும், துக்கம் வருகின்றது; மனதிற்குத் துக்கம் வந்ததும் புத்தி குறைகின்றது; புத்தி குறைவதனால் நாசம் வருகின்றது. ஆகையால், தரித்திரம் ஒருமனிதனை என்னகஷ்டத்திற்றான் கொண்டுவந்துவிடாது?

பித்ருக்களுக்குச் சிராத்தம் செய்யாமலும், தெய்வங்களைப் பூஜிக்காமலும், உறவினர் நண்பர்களை அடையாமலும் இருப்பவன்மூடனாவன்.

அழைக்கப்படாமல் பிறர்வீட்டிற் செல்கின்றவனும், கேட்கப்படாமல் அதிகமாகப் பேசுகின்றவனும், தகாதவரிடம் விசுவாசம்வைப்பவனும் மூடர்களாவர். தன்னிடம் குற்றங்களிருந்தும், பிறரிடமுள்ள குற்றங்களைக் கொண்டு பிறரை நிந்திக்கின்றவனும், கிடைக்கக்கூடாததை விரும்புகின்றவனும், தகாதவனுக்குப் போதிக்கின்றவனும், சேவிக்கத் தகாதவனைச் சேவிக்கின்றவனும், உலோபியிடம் யாசிக்கின்றவனும், கெட்டகாரியங்களைச் செய்கின்றவனும், பலவானை எதிர்க்கின்றவனும் மூடர்களாவர்.

வில்லாளி விட்ட அம்பானது ஒருவனைக் கொன்றாலும் கொல்லும்; விட்டாலும் விட்டுவிடும். ஆனால், புத்திமான் தீர்மானித்த ஆலோசனையானது, ராஜாவுடன் ராஜ்யத்தையே அழித்துவிடும்.. புத்தியினால் இது செய்யத்தக்கது; இது செய்யத்தகாதது என்பதை நிச்சயித்து, மித்திரன், உதாஸீனன், சத்துரு இவர்களை, சாமம், தானம், பேதம், தண்டம் இவைகளால் வசியஞ்செய்யவேண்டும். பஞ்சேந்திரியங்களையும் ஜயித்து, ஸந்தி, விக்கிரகம் முதலிய ஆறு உபாயங்களை அறிந்து, ஸ்திரீ, சூது, வேட்டை, குடி, கடுஞ்சொல், கொடுந்தண்டனை, தூஷணம் ஆகிய இவற்றை விட்டுவிட்டால் சுகியாவன்.

விஷம் தன்னைப் புசித்த ஒருவனையே கொல்லும்; பாணமும்ஒருவனையே கொல்லும். மந்திராலோசனை வெளிவந்தால், மன்னவனுக்கும் பிரஜைகளுக்கும் இராஜ்யத்திற்கும் கேடுண்டாகும்.

உருசியுள்ள உணவை ஒருவனாய் உண்பது கூடாது. ஒருவனாக யோசனைசெய்யக்கூடாது. ஒருவனாக நெடுவழி போகக்கூடாது. பலர் தூங்கும்பொழுது ஒருவனாய் விழித்துக்கொண்டிருப்பது கூடாது.

பொறுமையுள்ளவர்களுக்கு ஒரேகுற்றம் இருக்கின்றதேயொழிய, இரண்டாவது குற்றம் இல்லை; ஏனெனில், ஜனங்கள் பொறுமையுள்ளவனைச் சாமர்த்தியமற்றவன் என்று எண்ணுகின்றனர். இதைக் குற்றமாக எண்ணுவது கூடாது. பொறுமையே சிறந்த பலமாகும். சக்தியற்றவர்களுக்குப் பொறுமை குணமாம். சக்தியுள்ளவர்களுக்குப் பொறுமை அலங்காரமாம். பொறுமையென்னும் சத்தி கையில் இருக்குமளவும், துர்ஜனம் யாதும் தீங்குசெய்ய முடியாது. குப்பைகளற்றவிடத்தில் தீ விழுந்தால் தானே தணிந்துவிடுமன்றோ?

பிறர்பொருளைத் திருடுதலும், பிறன்மனைவியை விழைதலும், நண்பர்களைத் தள்ளுதலும் நாசத்தைக் கொடுக்கக்கூடியவை. உலகில் புருஷர்கள் உத்தமர், மத்தியமர், அதமர் என மூன்றுவிதமாயிருக்கின்றனர். அவரவர்களை அந்தந்தக் காரியங்களில் ஏவவேண்டும். மனிதன் தாய், தந்தை, அக்கினி, ஆத்மா, குரு ஆகிய ஐந்து அக்னிகளையும், பிரயாசைப்பட்டாவது திருப்தியடையச் செய்யவேண்டும்.

அறிவு, குடிப்பிறப்பு, இந்திரியநிக்கிரகம், சாஸ்திரம், பராக்கிரமம், மிதமாகப் பேசுதல், இயன்றவளவு கொடுத்தல், நன்றியுணர்வு ஆகிய எட்டுக்குணங்கள் புருஷனை விளங்கச்செய்கின்றன.

தேவர்கள், பித்ருக்கள், மனிதர்கள், பிரமசாரிகள், அதிதிகள் ஆகிய ஐவரையும் உலகில் ஒருவன் பூஜிப்பதனால் புகழை அடைகின்றான்.

ஆரோக்கியம், கடனின்மை, வியோகமின்மை, நல்லினஞ்சேர்தல், தன்னிச்சைபடி ஜீவித்தல், பயமின்றி வசித்தல் ஆகிய ஆறுகுணங்களும் பிராணிகளுக்குச் சுகத்தை உண்டுபண்ணுகின்றன.

எவன் தான் சுகத்தை அநுபவிக்கும்பொழுது சந்தோஷியாமலும், பிறர் துக்கப்படும்பொழுது மகிழாமலும், கொடுத்தபின் வருந்தாமலும் இருக்கின்றானோ, அவனே, 'ஸத்புருஷன்' என்று சொல்லப்படுகிறான். அறிவுள்ளவன் டம்பத்தையும், மோகத்தையும், த்வேஷத்தையும், தீவினையையும், ராஜத்துவேஷத்தையும் கோட்சொல்லுதலையும், ஜனஸமூஹத்தோடு விரோதத்தையும் மதங்கொண்ட துர்ஜனங்களோடு வாதஞ்செய்வதையும், தள்ளிவிட வேண்டும்.

எவன் தன்னை அடைந்தவர்களுக்கு உணவளித்துவிட்டுத் தானும் மிதமாய் உண்கின்றானோ, எவன் அமிதமான காரியங்களைச் செய்து மிதமாகத் தூங்குகின்றானோ, எவன் பகைவனுயினும் யாசித்தால் அவனுக்குத் தடையில்லாது கொடுக்கின்றானோ, அவனைத் துன்பங்கள் தொடர்வதில்லை.

தர்மம் ஸத்தியத்தினாலும், கல்வி அப்பியாசத்தினாலும், குலம் நல்லொழுக்கத்தினாலும், தானியம் அளவினாலும் காக்கப்படுகின்றன. தீவினை செய்தவன் துன்பத்தை அநுபவிப்பான். பாவத்தை எப்பொழுதும் செய்துகொண்டேயிருந்தால், அது அறிவை அழிக்கின்றது. அறிவிழந்தவன் தினந்தோறும் தீவினையையே செய்கின்றான். அதனால் நரகம் ஏற்படுகின்றது. ஆகலால், தீவினையை ஒருபொழுதும் செய்யக்கூடாது. நல்வினைசெய்தவன் சுகத்தை அநுபவிப்பான். நல்வினையை எப்பொழுதும் செய்துகொண்டேயிருந்தால், அது அறிவை வளர்க்கின்றது. அறிவாளி தினந்தோறும் நல்வினையையே செய்கிறான். அதனால் சுவர்க்கம் ஏற்படுகின்றது. ஆகலால், மனிதன் நல்வினையை செய்யவேண்டும்.

ஜீர்ணமான உணவும், மூப்படைந்த மனைவியும், வெற்றிபெற்ற வீரனும், மோக்ஷமடைந்த முனிவரும் கொண்டாடத்தக்கவர்களாயிருக்கின்றனர்.

சிங்கத்தினின்றும் ஒருகுணத்தையும், கொக்கினிடத்திலிருந்து ஒருகுணத்தையும், கோழியிடத்திலிருந்து நான்கு குணங்களையும், காக்கையினிடத்திலிருந்து ஐந்துகுணங்களையும், நாயினிடத்திலிருந்து ஆறுகுணங்களையும், கழுதையிடத்திலிருந்து மூன்று குணங்களையும் கிரகிக்கவேண்டும். காரியம் அற்பமாயினும் பெரிதாயினும், அதை முழுமுயற்சியோடு செய்வது சிங்கத்தின் குணமாம். இந்திரியங்களை அடக்கிக்கொண்டு, தேசம், காலம், பலம் முதலியவற்றை அறிந்து எக்காரியத்தையும் செய்வது கொக்கின் குணமாம். தக்க சமயத்தில் விழித்துக்கொள்ளுதலும், சண்டையில் பின்வாங்காமையும், கிடைத்தவற்றைப் பந்துக்களுக்குப் பங்கிட்டுக்கொடுத்தலும், தானே வலிய ஆக்கிரமித்தலும் கோழியின் குணங்களாம். தைரியமும், தக்கசமயத்தில் உணவுசேகரித்தலும், ஜாவதானமாயிருத்தலும், பிறரிடம் விசுவாஸமின்மையும் காக்கையின்குணங்களாம். கிடைத்தவிடத்தில் உண்பதும், அற்பவுணவைக்கொண்டு மகிழ்தலும், நினைத்த நேரத்தில் தூங்கி விழித்தலும், தலைவனிடம் விசுவாஸமும், சௌரியமும் நாயினிடமுள்ள குணங்களாம். தான் எவ்வளவு சிரமத்தை அடைந்திருந்தாலும் சுமையைத் தாங்குதலும், குளிர் வெப்பத்தைப் பொறுத்தலும், எப்பொழுதும் சந்தோஷமாயிருத்தலும் கழுதையினிடமுள்ள குணங்களாம். மேற்கூறிய இருபது குணங்களையும் கைக்கொள்பவன் எக்காரியத்திலும்வெற்றிபெறுவான்.

பொறுமையினுஞ் சிறந்த தவம் வேறில்லை. சந்தோஷத்தினுஞ் சிறந்த சுகம் வேறில்லை. ஆசையினும் மிக்க பிணி வேறில்லை. தயையினுஞ் சிறந்த தர்மம் வேறில்லை. ஔஷதங்களுள் ரஸாயனமும், உணவுகளுள் அன்னமும், இந்திரியங்களுள் நேத்திரமும், அவயவங்களுள் தலையும் முக்கியமானவை. பாம்பு, அரசன், புலி, பன்றி, குழந்தை, பிறர்நாய், மூர்க்கன் ஆகிய இவர்களைத் தூங்கும்பொழுது எழுப்பக்கூடாது. கண்ணால் பார்த்துப் பாதத்தை வைக்கவேண்டும். நீரைத் துணியினால் வடிகட்டிப் பருகவேண்டும். சாஸ்திரத்தால் சுத்திசெய்து வார்த்தைசொல்லவேண்டும். மனதால் நன்கு நிர்மானித்த காரியத்தைச் செய்தல்வேண்டும்.



துர்ஜனனுக்குப் பலவிதமாகப் போதித்தாலும், அவன் அவ்வழியைவிட்டு நல்வழிக்கு வரமாட்டான். வேப்பமரத்தை அடிமுதல் பாலாலும் நெய்யாலும் நனைத்தாலும், அது இனிமையை அடையாதன்றோ? உள்ளே அழுக்குள்ளவன் நீரில் எவ்வளவு தடவை ஸ்நானஞ் செய்தாலும் சுத்தமடையான். கள்ளுப் பானையை நெருப்பில் வைத்துக் காய்ச்சினாலும் சுத்தமாகாதன்றோ?

'ஸத்தியமே தாய்; ஞானமே தந்தை; தர்மமே சகோதரன்; கருணையே நண்பன்; சாந்தியே மனைவி; பொறுமையே புதல்வன்' என்றார் கிருஷ்ணபகவான்.

பிறதேசத்திலும் கல்வி நண்பனும்: வீட்டில் மனைவி தோழியாம்; நோயாளிக்கு மருந்து நண்பனும்; இறந்தவனுக்குத் தர்மம் நண்பனும்.

சந்தனமரத்தின் அடி சர்ப்பங்களாலும், சிகரம் பக்ஷிகளாலும், சாகை குரங்குகளாலும், புஷ்பம் வண்டுகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் நல்லோரின் ஐசுவரியம் பரோபகாரத்தின்பொருட்டே உதவுகின்றது.

சரீரத்தில் நடுக்கமும், வாயில் மலினத்தன்மையும், தீனத்தன்மையும், குளறிய சொல்லும் ஆகிய இந்தக் குறிகள், மரணகாலத்திலிருப்பனபோன்று யாசகனிடத்தும் இருக்கின்றன. சர்வ சற்குணங்களும் நிறைந்தவன், புத்திசாலி, சாது, மகாத்மா, சூரன், ஒழுக்கமுடையவன், பொறுமையுள்ளவன் முதலியயாவரும் 'தேஹி' என்னும் வசன உச்சாரணமாத்திரத்தினால் மிக்க தாழ்வை அடைகின்றனர். ஆகையினால், 'தேஹி' என்னும் வசனத்தைக் கூறுதொழிக.

தரித்திரமே! உனக்கு நமஸ்காரம், உன்னுடைய பிரசாதத்தினால் நான் மகாசித்தியை அடைந்துவிட்டேன். அது யாதெனின், நான் உலகமுழுதும் பார்க்கின்றேன்; ஆனால், என்னை ஒருவரும் பார்ப்பதில்லை; இஃதொரு மகாஸித்தியன்றோ? இவ்வுலகில் தனவான்களுக்கு அன்னியர்களும் பந்துக்களாய்விடுகின்றனர். தரித்திரனுக்குப் பந்துக்களும் அன்னியர்களாகிவிடுகிறார்கள்.

பொருளின்றி உறவினர்களின் கூட்டத்தில் உறைவதைவிட, புலி, யானை முதலிய ஜந்துக்கள் நிறைந்த வனத்தில் வாஸஞ் செய்தலும், மரத்தடியில் உறைதலும், பத்திர பலங்களைப் புசித்தலும், புல்தரையைப் படுக்கையாகக் கொள்ளுதலும், மரவுரியைத் தரித்தலும் மிக மேன்மையாம்.

ஆசையென்னும் ஒரு சங்கிலியானது மனிதர்களுக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாக இருக்கின்றது; எனெனின், சாதாரணமான சங்கிலியால் கட்டுண்டவன் ஓரிடத்தில் இருக்கின்றான். ஆசையென்னும் சங்கிலியால் கட்டுண்டவன் ஊரெங்கும் அலைகின்றான்; இச்சங்கிலியை அறுத்துவிட்டவுடன், முடவனைப்போல் ஓரிடத்தில் இருக்கின்றான். இஃதென்றோ ஆச்சரியம்! ஆசையென்னும் நதிக்கு மனோராஜ்யம் ஜலமாம்; திருஷ்ணை அலையாம்; ராகம் முதலையாம்; விதர்க்கம் பக்ஷிகளாம். மோகம் சுழியாம்; சிந்தை அதன் கரைகளாம். இது தைர்யமாகிற விருக்ஷத்தை நாசஞ்செய்வதாம்: இத்தகைய ஆழமுள்ள மகாநதியைச் சுத்தமான அந்தக்கரணமுடைய யோகிகள் கடந்து சந்தோஷத்தை அடைகின்றார்கள்.

சாது சங்கமானது கங்கையைப் போலச் சகல பாபத்தையும் நாசஞ்செய்யும்: சந்திரிகையைப்போல மனதிற்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும்; சூரியனைப்போல அந்தகாரத்தை (அஞ்ஞானத்தை)ப் போக்கும்; நிழலைப்போலச் சர்வதாபத்தையும் நீக்கும்; காமதேனுவைப்போலச் சகல அபீஷ்டங்களையும் கொடுக்கும். சத்துக்களின் சேர்க்கை புண்ணியத்தினாலேயே ஏற்படும்.

சாஸ்திரம் அநந்தம்; அறிந்துகொள்ளவேண்டியவையோ பலவுள; வாழ்நாளோ அற்பம்; இடையூறுகளோஎண்ணிறந்தன; ஆதலின், ஹம்ஸம் நீரோடு கலந்த பாலைக் கிரகித்துக்கொள்ளுவதுபோல, ஸாரமாயுள்ள பரம்பொருளையே உபாஸிக்கவேண்டும்.

எம். எம். நாராயணசாமி ஐயர்.

# Cultivation of Casuarina.

## சவுக்குப் பயிர்செய்தல்.

சவுக்கானது முதன்முதல் ஆஸ்டிரேலியாவிலிருந்து இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டது. இது இந்நாட்டில் பற்பல இடங்களில் பற்பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது. ஜலமிருக்குமிடங்களில் இது வளரக்கூடியதாயிருப்பதனால், ஏறக்குறையச் சமுத்திரக்கரையோரங்களில் எங்கும் ஏராளமாகப் பயிரிடப்பட்டிருப்பதைக் காணலாம். ஆற்றோரங்களிலும் மணற்பாங்கான நிலங்களிலுங்கூடப் பயிர் செய்யலாம். கொஞ்சம் களர் சம்பந்தமான நிலங்களிலும் பயிர் செய்யலாம்; இதனால், நிலம் சீர்திருந்துகின்றது. செடிகளிலிருந்து உதிரும் சருகுகள் அவற்றின் கீழேயே மட்குவதனால் நிலம் நாளுக்குநாள் செழிப்புள்ளதாகின்றது. இப்பயிரானது ஆகாயத்தை அளாவி வளருந்தன்மையுடையதால், இதை மணற்பாங்கான இடங்களிலேயே பயிர் செய்யவேண்டும். கெட்டியானதாயும் செம்மண்ணுள்ளதாயும் ஜல்லி நிறைந்ததாயுமுள்ள பூமியாயிருந்தால், அவ்வித நிலங்களில் இப்பயிரானது சீராக மேல்நோக்கி வளராமல் பலகிளைகளாகப் பரவி வளரும்.

### நிலம்.

சமுத்திரக்கரையோரங்களிலுள்ள மணற்பாங்கான இடம் மிகவும் நல்லது. கொஞ்சம் மணல் கலந்துள்ள நிலங்களிலும் பயிர் செய்யலாம். களர் நிலங்களிலும் வளரும்.

### விதை.

விதைகளை நல்ல முதிர்ந்த மரங்களிலிருக்கும் தேறின காய்களிலிருந்து எடுக்கவேண்டும். இவற்றை வெகு ஜாக்கிரதையாகப் பத்திரம் செய்து வைக்கவேண்டும்; ஏனெனில், எறும்புகள் இவற்றைக் கொண்டுபோவதுடன், இலேசாயிருப்பதனால், காற்றில் அடித்துக்கொண்டு போகவுஞ் செய்யும். ஆதலால், இவ்விதைகளைச் சௌகரியமாக ஒருபாத்திரத்தில் போட்டு மேலே வலையொன்றுகட்டி எறும்பு உள்ளே புகாதபடி பத்திரம்செய்து வெய்யிலில் காயவைக்கவேண்டும்.

### நாற்றங்கால்.

மேலே கண்டவாறு தயார் செய்யப்பட்ட விதைகளை, மணற்பாங்காயுள்ள நிலத்தைச் சிறுசிறு பாத்திகளாகக் கட்டி அவற்றில் தெளிக்கவேண்டும். இப்பாத்திகளானவை 10 அடி நீளமும் 5 அடி அகலமுமுள்ளதாயிருக்கவேண்டும். பாத்திகளில் மேடுபள்ளமில்லாமலும் கல் முதலியன இல்லாமலும் சீர்திருத்தம் செய்யவேண்டும். இப்பாத்திகளில் விதைகள் தெளிக்கப்பட்டவுடனே, அவற்றின்மேல் நன்றாய் மட்கின எரு, சாணம் முதலியவற்றைத் தூவவேண்டும். பாத்திகளிலுள்ள விதைகளை எறும்புகள் கொண்டுபோகக்கூடுமாதலால், முளை கிளம்பும்வரை பாத்திகளை ஈரமுள்ளவையாகவே வைத்திருக்கவேண்டும். சிலர் பாத்திகள் கட்டும்போதே மணலுடன் எருவையும் கலந்து கட்டிவிடுவதுண்டு. விதைத்த ஒரு வாரத்திற்கெல்லாம் முளை கிளம்பும். உடனே, அவை மழையினாலும் வெய்யிலினாலும் பாதகப்படாதபடி தென்னம் ஓலைகளினால் பந்தல் ஒன்று போடப்படவேண்டும். சாதாரணமாக ஒரு பவுண்டு விதையிலிருந்து சுமார் 3000 கன்றுகளை உற்பத்தி செய்யலாம். கன்றுகள் ஒரு அடி உயரம் வளர்ந்தவுடனே அவற்றைப் பிடுங்கி, நன்றாக எருவிட்ட வேறு பாத்திகளில் ஒவ்வொன்றுக்கும் இடையில் கொஞ்சம் இடம் விட்டு நடவேண்டும். இதற்குத்தான் பதியம் போடுதல் என்று பெயர். இவ்வாறு பதியம் போடும்போது கன்றுகளின்வேர்களைச் சுருட்டிக் குழியில்வைத்து மண்ணைமூடவேண்டும். ஏனெனில், அப்படியே நடுவோமானால், வேர்கள் இன்னும் கீழ்நோக்கி ஆழ ஊன்றி மறுபடியும் பெயர்க்கும்போது அவை அறுபட்டுப்போம். சிலர் கன்றுகளைப் பதியம் போடாமலே ஒன்றரை அடிவரை வளரும்படிவிட்டுப் பிறகு அப்படியே கொண்டுபோய் நட்டுவிடுவதுண்டு. இம்முறையானது நல்ல பலனைக் கொடுக்கத் தக்கதன்று. சில இடங்களில் கன்றுகள் இரண்டாந்தரமும் பதியம் போடப்படுகின்றது. கன்றுகளின் விலை அவற்றின் திடத்தைப் பொருத்திருக்கின்றது.



### கன்றுகளைப் பரிசோதிக்கும் விதம்.

சில இடங்களில் ஜனங்கள் இக்கன்றுகளை வாங்குவதில் ஏமாற்றப்படுகிறார்கள். வாங்கும் கன்றுகளின் வேர்களைக் கவனித்தால் உண்மை விளங்கும். பதியம் போடப்படாத கன்றுகளின் வேர்கள் யாதொரு வளைவுமில்லாமல் நீண்டிருக்கும். ஒருதரம், இருதரம் பதியம் போடப்பட்ட கன்றுகளின் வேர்களோ கொஞ்சம் வளைவாயும் முடிச்சு உள்ளதாயுமிருக்கும். இவைகளை நன்கு கவனித்துக் கன்றுகளை வாங்கவேண்டும்.

### நிலத்தைப் பண்படுத்தலும், நடுதலும்.

கன்றுகளை வைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்றாகப் பலதரம் உழவேண்டும். பிறகு, ஒரு அடி சதுரமும் ஒரு அடி ஆழமுமுள்ள குழிகள் 5 அடிக்கொன்று வெட்டப்படவேண்டும். சில இடங்களில் மூன்று அடிக்கொரு குழியும் ஆறடிக்கொரு குழியும் வெட்டுவதுண்டு. குழிகளை வெட்டியவுடன் கொஞ்சம் காற்றாட விடவேண்டும். பிறகு, சாம்பல் சாணம், வண்டல் முதலான எருக்களை உபயோகித்து, அவற்றில் ஒரு தடவையாவது பதியம் போட்ட கன்றுகளை நடவேண்டும். நடும்போது குழியில் ஈரம் இருக்கிறதாவென்பதைக் கவனிக்க வேண்டும். இக்கன்றுகளை எப்போதும் மழைக்காலத்தில் நடுவதுதான் உத்தமம். இவற்றிற்கு நிழலைக்கொடுக்க ஆமணக்குச் செடி போன்றவற்றைப் பயிராக்கலாம். அல்லது பனங்கொத்தையாவது கன்றுகளுக்கு அருகில் நட்டு நிழலைக்கொடுக்கும்படி செய்ய வேண்டும். சுமார் 5 அடிக்கு ஒன்றாக ஒரு ஏகராவுக்கு 2000 கன்றுகள்வரை நடலாம்.

### நீர் பாய்ச்சல்.

கன்றுகள் வைக்கப்பட்டிருக்கும் இடம் சமுத்திரக்கரையோரமாயிருந்தால், அங்குத் தண்ணீர் இறைத்துப் பாய்ச்சுவது முடியாது. ஆதலால், அங்கேயே ஒரு சிறு குட்டையைத்தோண்டி, அதினின்று தண்ணீர் மொண்டு வார்க்கவேண்டும். கன்றுகள் வேர் ஊன்றும் வரை தினத்திற்கு ஒரு முறை தண்ணீர் விடவேண்டும். ஒருவருஷம் கழிந்தபிறகு வாரத்திற்கு ஒரு தடவையும், இரண்டு வருஷங்கள் கழிந்தால் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவையும் தண்ணீர் கொட்டினால் போதும். மூன்றாவது வருஷம் முதற்கொண்டு தண்ணீர் தேவையில்லை. கொஞ்சமும் மழையேயில்லாவிடில், கொஞ்சம் நீர்ப்பாய்ச்சவேண்டியது அவசியம்.

### களை எடுத்தல்.

கன்றுகள் நட்ட மூன்றாம் மாதம் முதற்கொண்டு 9-ம் மாதம் வரை செடிகளைச் சுற்றிலும் களைகளில்லாமற் வெகு சுத்தியாக வைத்திருக்க வேண்டும். செடிகளைச் சுற்றிலும் தண்ணீர் நிற்கும்படியாய்ப் பாத்திகளைக் கட்ட வேண்டும். பிரதிவருஷமும் செடிகளைக் கபாத்து செய்து அவற்றை வளரவிடவேண்டும்.

### மாசூல்.

சமுத்திரக் கரையோரமாய் நடுவது 5, 6 வருஷங்களுக்குள்ளும், உள்நாட்டில் நடுவது 8 வருஷங்களுக்குள்ளும் வெட்டப்படுகின்றன. ஒரு ஏகரில் சுமார் 1,000 மரங்கள்வரை கிடைக்கக் கூடும். மரம் 1-க்கு 8 அணு முதல் ரூ. 1 வரை 1000 மரங்களுக்கு ரூ. 500 முதல் ரூ. 1000 வரை கிடைக்கும்.

### உபயோகங்கள்.

சவுக்கானது முக்கியமாக அடுப்பெரிக்க உபயோகப்படுகின்றது. இதன் சருகுகள் அடுப்பெரிக்க உபயோகப்படுவதுடன், செங்கல் சூளைகளுக்கும் உபயோகப்படுகின்றன. இதைச் சூளைகளுக்கு உபயோகிப்பதனால், செங்கல்கள் சிவந்த நிறத்தையடைகின்றன. சில, தூண்களாகவும், பந்தல்கள் கொட்டகைகள் முதலியனவற்றிற்குக் கால்களாகவும் உபயோகப்படுகின்றன. இம்மரத்தின் பட்டையிலிருந்து ஒருவிதச் சாயம் இறக்கப்படுகின்றது.

## Tirumalairayar.

(A. D. 1423—1446.)

By Mr. C. K. NARAYANASWAMY MUDALIAR,

## திருமலைராயன்.

"திருமலைராயன்" என்பவர், விஜயநகரவரசர் 2-வது தேவராயரது காலத்தில் தென்னாட்டில் அவரது பிரதிநிதியாக ஆண்ட ஓர் சிற்றரசர். "சாளுவம்" என்பது இவரது பூர்வ குடிப்பெயரும், விதரணராமன் என்பது இவர்க்கு வழங்கிய பட்டப்பெயருமாம் என, சாஸனங்களிற் காணப்படுகிறது: (Ep. Rep. 694 of 1905) திருமலைராயனது தந்தையின் பெயர்; சாளுவ கோப்பையன் என்பர். இவரும் இராயர்களுடைய பிரதிநிதியாகத் தென்னாடாண்ட அரசர். இவர் இம்மடி நரசிம்மன் என்றும், இராமராயன் என்றும் வழங்கப்படுவர். பிரான்மலை முதலியவற்றிற்கண்ட சாஸனங்களால், இவர் காலம் (1410) என்று தெரிகிறது: (Ep. Rep. 134, 151, of 1903) திருமலைராயன் ஜன்மதேசமும், பேசும் பாஷையும், தெலுங்காயிருந்தும், இனிமை மிகுந்து தனிசிறந்த தமிழ்ப் பாஷையை நன்கு பயின்றும், அபிமானித்தும் இருந்தாரென்பதற்கு, "புலவர் புராணமும்," "தனிப்பாடற்றிரட்டும்" தக்க சான்றுதரும். சேதிநாடாகிய திருக்கோவலூரைத் தனது பிறப்பிடமாகக்கொண்டு புலமைமிகுதியாற் புகழ் விளங்கிய "அதிமதுரக் கவிராயரை"த் தனது ஆஸ்தான வித்வானாகக்கொண்டு நாகூரிலிருந்து காரைக்காலுக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள "திருமலைராயன் பட்டணத்தில்" தமிழ் வித்வத்ஸபைகூட்டித் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தாரென்பதற்குக் கர்ணபரம்பரைச் செய்திகளும், "பாவலர் சரித்திர தீபகம்," "விநோதரசமஞ்சரி" முதலிய தமிழ் நூல்களும் ஆதாரமாகக் காணப்படுகின்றன. இங்ஙனம் தமிழபிவிருத்தியால் தலை சிறந்த திருமலைராயனது முழுவரலாறும் தெரிந்து மகிழ்வதற்கில்லை. பலருடைய ஆராய்ச்சியின் சாரங்களிற் கிடைத்த வரவு நோக்கில், எமக்குக் கிடைத்த விஷயம் மிகு சொற்பமேயாகும். கிடைத்தமட்டேனும் வெளியிட்டுவைப்பின் பிரயோஜனமாமென்று கருதி அதனை இதன் கீழ்த் தருகின்றோம்:—

கி. பி. 1565-ம் ஆண்டில் நடந்த தலைக்கோட்டை (Talaikota) யுத்தத்திற் புறங்காட்டிய விஜயநகரத்து உண்மை அரசர்களில் கடைசியான "ஹரிதிம்மராஜா" வென்பவன், எஞ்சிய சேனையைக் கைக்கொண்டோடி (ககனகிரியை) பெனுகொண்டாவைத் தலைநகராக்கிச் சிலகாலம் அரசாண்டு "சீரங்கராயன்" "ராமராஜா." "வேங்கடபதிராயன்" என்னும் மூன்று புதல்வர்களையும் விட்டு விண்ணெய்தினன். இம்மூவருள் முதலாமவனான சீரங்கராயன், தந்தையாண்ட பெனுகொண்டாவையும் (தெலுங்குதேசம்), இரண்டாமவனான இராமராஜா ஸ்ரீரங்கப் பட்டணத்தையும் (கன்னட தேசம்), மூன்றாமவனான வேங்கடபதிராயன் (சந்திரகிரியிலிருந்து) தமிழ் நாடுகளையும் அரசாண்டான். இவர்களில் சீரங்கராயன் மகப்பேறின்றி மண்ணுலகை நீத்தான். இராமராஜன், திருமலைராயனைப்பெற்று அவன் இளமை யெய்து முன்னரே சீரங்கராயனைப் பின்பற்றினான்.

இந்தத்திருமலைராயன் தன் சிற்றப்பன் தமிழ்நாட்டைப் பரிபாலிக்கும் வேங்கடபதிராயனிடம் வளர்ந்து வந்தான். இவனே ஆசுகவிச்சிங்கமாகிய காளமேகப்புலவரால் புகழ்ந்து பாடப்பெற்றவன். தனது இளம்பருவத்தைத் தமிழ்நாட்டில் மிகுதியும் கழித்தானாகையால், தமிழை நன்கு கற்கவும், அபிமானிக்கவும் ஏற்பட்டதெனக் கொள்ளவும் இடந்தருகின்றது.

இங்ஙனம், இவன் தன் சிற்றப்பனது பாதுகாப்பில் வாழ்ந்து வருகையில், மதுரையம்பதியில் நாயகர் வம்சத்தார் கலகஞ்செய்ய, அரசன் அதை அடக்கப் புலமைத்திறமையுடன் போர்த்திறமுஞ்சிறந்தமது திருமலைராயன்கீழ்ப் பெருஞ்சேனையொன்றைக் கூட்டி அனுப்பினான். திருமலைராயன் தந்தையின் சொல்லுக்கு மாறாக நன்றி சொல்லும் வஞ்சமனங்கொண்டு, மதுரை சென்றதும் மாற்றானிடம் பரிதானம் பெற்று, கலகத்தை அடக்காமல், தனக்காகத் துணைசேர்த்தனுப்பிய சேனையுடன், தன் தந்தையாண்ட ஸ்ரீரங்கப்பட்டணம் சென்றான். திருமலைராயனது இத்தகைய தீயொழுக்கம் வேங்கடபதிராயன்மனத்தைப் பெரிதும் வருத்தியதோடு, இவ்விழிசெய்கை எங்கும் தெரிந்து தமக்குக் குறையும் பார்ப்போர் கேட்போர்க்கு விஜயநகரராஜாங்கத்தின் பல எளிமையும் காட்டின. இச்சமயத்தில்தான் மைசூரில் முக்கியமானவர்களான உடையார் வம்சத்தார் தலையெடுத்தனர். இவ்வம்சத்தில் திருமலைராயன் காலத்தில் புகழோடிருந்தவன் "இராமராஜவுடையான்" எனபான். இவன் யுத்த தந்திரத்திலும், மதியூகத்திலும் மிகச் சிறந்தவன். திருமலைராயனுக்கும், இராமராஜவுடையாருக்கும் பாம்புக்கும் கருடனுக்கு மொப்ப என்றும் நட்பேகிடையாது. ஒருவரையொருவர் விழுங்கவேண்டுமென்றே அவாவியிருந்தனர். திருமலைராயன் உடையானை ஏதேனும் சூழ்ச்சியில் கொல்லவேண்டுமென்னும் உத்தேசத்தோடு, தசராமகோத்ஸவத்திற்கு வரவழைத்துப் பெரிதும் உபசரிக்க, இடையில் நேர்ந்ததொரு பிணக்கால் உயிர் தப்பினான். பின் இச்சதிச் செயலை உடையானுணர்ந்து திருமலைராயனை எதிர்த்தபோது, இவன் உடையானுடன் சமர் செய்வதற்கு ஆற்றாதுபுறங்காட்டி மறைந்தான்.

தனது தீயொழுக்கமும், நன்றிகொன்ற பாதகமுமே இங்ஙனம் தமக்கு விளைந்ததென வருந்திய திருமலைராயன், காந்துறைவதற்கு வசதியான இடம் எதுவென நிதானித்தபோது, தலைக்காடே சிறந்ததெனத் தெரிந்ததனால், அவ்விடத்தே தான்மட்டும் தனியே வசித்திருந்தனன் என்பர்.

"தலைக்காடு" என்பது, மைசூருக்குத் தென்கிழக்கே 28-வது மைலில் காவிரி நதியின் இடது கரையில் இருக்கிறது. இது புராதனமான பட்டணம். தல-காடு என்ற இரண்டு வேடுவர்களால் இத்தலத்திற்குத் தலக்காடு என்று பெயர் வந்ததாகக் கூறுவர். மேற் கூறிய இரண்டு வேடுவர்கள், காட்டு யானைகள் பூசித்துவந்த ஓர் மரத்தை வெட்டித்தள்ள, அதில் கோயில்கொண்ட விஷ்ணு விக்கிரகமும், யானைகள் இரண்டும் முனிவர்களாக மாறி அனைவரும் மோக்ஷ லோகத்தைச் சேர்ந்தார்களென்பது ஓர் கர்ணபரம்பரை. அதுதொடங்கி இத்தலம் தலைக்காடு என்ற பெயருடன் விளங்கிவருகின்றதென்பர்.

தற்காலம் தலைக்காட்டிலுள்ள வேதேச்வரர் கோவிலுக்கு எதிரில் கற்சிலையாய் நிற்கும் இரண்டுருவங்கள் மேற்சொன்ன "தல-காடு" என்ற இரண்டு வேடுவரின் ஞாபகார்த்த வடிவமென்றும், இதற்குத் "தனவனம்" என்பது வடமொழிப்பெயரென்றும் அங்குள்ளார் கூறுகின்றனர். இவ்வுண்மை எங்ஙனமாயினும் ஆகுக.

இத்தலக்காட்டை கி. பி. 11-வது நூற்றாண்டில் கங்கா குலத்து அரசர்கள் ஆண்டுவந்தனர். இதனால் இதற்குக் "கங்கை நாடு" என்ற பெயர் வழங்கிற்று. இது சங்கபாடி, நுளம்பாடி, வேங்கை நாடு, குடகு முதலிய மைசூரின் கீழ்ப்பாகமும், அதைச் சூழ்ந்த நாடுகளைத் தன்னுட்கொண்டதாய்க் காவிரிக் கரையிலுள்ள தாழைக்காட்டைத் (தலக்காடு) தலைநகராகக் கொண்டது. சோழராஜர்கள் ஆதிக்கம் பிரபலித்தபோது கங்கா அரசர்கள் வலிமை குன்ற, தலக்காடு "இராசராச சோழன்" ஆதீனப்பட்டது. தமது வெற்றியின் ஞாபகார்த்தமாக இதற்கு "ராசராசபுரம்" என்று பெயரிட்டனர். இதன்பின்னர் தாழை காட்டிற்கு அருகிலுள்ள கலியூரில் போசளராசனுடன் போர் புரிகையில், அவன் மந்திரியாகிய "நாகண்ணனைத்" தோற்கடித்து "மஞ்சக்கன்," "காலிகன்," "நாகவர்மன்" முதலான போசள வீரர்களைக்கொண்டு இராசராசன் தளகர்த்தனாகிய "அப்பிரமேயன்" வீரசுவர்க்கம் புகுந்தான்:

இதற்குச் சிலவருஷங்கட்கு அப்புறம் தலக்காட்டை "விஷ்ணுவர்த்தனன்" என்ற "ஹொய்சள" அரசன் பிடித்துக்கொண்டு, சோழவரசரை மைசூரிலின்றும் துரத்திவிட்டான். பின்னர், விஜயநகர அரசர் வசம் வர, அதனைத் தங்கள் சுவாதீனப்படுத்தினர். 1634-ம் வருஷத்தில் இது மைசூர் அரசரால் ஜயிக்கப்பெற்று, நாளிதுவரையும் அவர்வசமே இருந்துவருகிறது.

இனி, உடையானுக்குத் தோற்றோடிய திருமலைராயனது மனைவிவிஷயமாய் இராமராஜா நடந்துகொண்ட விவரம் பலவிதமாகவுள்ளது. அக்காலத்துப் புராணிகர் "திருமலையையங்கார்" என்பவர், திருமலைராயன்மனைவியை அவள் தன்கணவன்பாற் செல்லும் பொருட்டுப் பொருளும் துணையும் ராமராஜா தந்துதவினான் என்றும், அவள்பெயர் "ஸ்ரீரங்கநாயகி" என்றுங்கூறுகின்றார். ஆனால், அரண்மனைச் சரித்திரம் வேறொரு விருத்தாந்தங் கூறுகின்றது:— அவ்வம்மை "அலர்மேல் மங்கை" என்னும் பெயருடையவளென்றும், தன் நாயகனுக்குப்பின் "மலங்கிக் குளத்"திற்குச் சென்றனள் என்றும், அப்போது அத்தலத்தெய்வம் இரங்கநாயகிப் பிராட்டியார், கோவில்ஸ்தானிகன்மீது ஆவேசங்கொண்டு, திருமலைராயன் பட்டமகிஷியாலுள்ள நகைகளைத் தம் தன்னுடையதென்றும், உடனே கொடுத்தனுப்பாவிடின் பறிமுதல் செய்யப்படுமென்றுங் கூற, ராயன் மனைவி அப்பணிகள்யாவும் தன்னுடையவையென்றும், அம்மையின் அலங்காரங்காரணமாக அவ்வப்போது அனுப்பிவருவது வழக்கமென்றும் சொல்லி, நகைகளைக் கொடுத்தற்கு மறுத்ததனால், உடையான்முனிந்து கொல்லுவனோ என அச்சங்கொண்டு மலங்கிக் குளத்தில் வீழ்ந்து இறந்தாளென்றும் கூறுகின்றது. ஆனால், வழங்கிவரும் சதைகள் வரையில் ராயாது மனைவியைக் கேவலம் நகைகளுக்காக அச்சுறுத்தினானென்றும், ஒருகால் அழகிய அவள்பால் இச்சைகொண்டு இடுக்கண்பல விளைக்கவும் பொருந்தவளாகி இறக்கத் துணிந்தாளென்றும் துணிந்த காலையில், "இம்மலங்கித் தடாகம் நீரற்றொழிக. தலைக்காட்டில்மண்மாரி பொழிக, உடையான் புத்திரரடையாளுகி அழிக" எனச் சபித்து இறந்தாள் என்று, அம்மாற்றம் பொய்யாதவாறு அரசனது புத்திரர் நால்வரும் இறந்து விட்டனர் என்றும் தெரிகின்றது. இப்போதுங்கூட அரசவம்சத்தில் தசராப் பண்டிகையின் ஒன்பதாவது நாளில் வருந்தியிருந்த அம்மாதின் செயிர்த்த உயிர்த்தணிவின்பொருட்டுச் செய்யும் சடங்குகளும், இரங்கம்மாளைப்போன்ற ஓர் உருவம் அமைக்கப்பட்டு மைசூர் அரண்மனையிலுள்ள அந்தப்புரத்து ஸ்திரீகள் ஆராதித்து வருவதும் இச்சம்பவத்தை வலியுறுத்துகின்றன.

இவள் இறந்ததற்கு எது காரணமெனினும், தானே உத்திரவாதியென ஊகித்துணர்ந்த ராஜவுடையார் இந்தத் தசராச்சடங்கை அநுஷ்டானத்திற்குக் கொண்டு வந்திருக்கலாமென ஊகித்தறியப்படுகின்றது.

தலக்காடு இன்றும் ஒரு மைல் தூரம் வரையில் மணலால் மூடப்பட்டிருக்கிறது. இரண்டு கோவில்களின் கோபுரங்கள் மட்டும் தென்படுகின்றன. மணல் வருஷந்தோறும் 7 அல்லது 10 அடி உயரம் வளர்ந்துகொண்டு போகிறது. இந்த மணலுக்கு அடியில் 30 கோயில்கள் இருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. வைதேச்வரன்கோயில் ஒன்றுதான் மணலால் மூடப்படாமலிருக்கிறது. மணற் காட்டில் செடிகள் பயிர் செய்யப்பட்டிருக்கின்றன. ராவ்பகதூர் A. இரங்கசாமி ஐயங்கார் மைசூர் டிப்டி கமிஷனராக இருந்தபொழுது மணல் வளராமல் இருப்பதற்குத் தகுந்த பிரயத்தினங்கள் செய்து வந்தார். அது அவரால் முடியவில்லை.

நாம் தலைப்பில் விளக்கிய திருமலைராயன் தெலுங்கு நாட்டின் அரசன் எனினும், தன் சிற்றப்பன் பாதுகாப்பில் தமிழ் நாட்டில் வளர்ந்தவனாதலால், தமிழை தன்கோதி அபிமானித்திருந்தல்கூடுமென்று முன்னரே கூறியுள்ளோம். இவன் அரசாட்சி மற்றெல்லாச் சிற்றரசராட்சியினும் மேம்பட்டதாகலானும், இவன் தன் தமிழ் உணர்வாலும் பெருமையின் அறிகுறியாலும் "திருமலைராயன்பட்டணம்" என ஒரு நகரத்திற்குப் பெயரிட்டிருக்கலாம். அல்லது, ராயரிடம் தோற்றோடியகாலத்தில் தலைக்காட்டினின்றும் நீங்கித் திருமலைராயன் பட்டணம் என் ஓர் நகரை ஸ்தாபித்திருக்கலாம் என்று கொள்ளலாம்.

சி. து. நாராயணசாமி முதலியார்.



# Navarathri.

By Mr. K. P. Seshadri Aiyangar.

## நவராத்ரி.

நவராத்ரியென்பது ஹிந்துக்களுக்குப் பெரும் பண்டிகை. அப்பண்டிகை கன்யா மாசமென்கிற புரட்டாசி மாதத்தில் மஹாளய அமாவாசைக்கு அடுத்தநாளில் ஆரம்பிக்கின்றது. இவ்வருஷம் அப்பண்டிகை ஐப்பசி முதல் தேதி ஆரம்பித்தது. ஹிந்துக்களுடைய பண்டிகைகளில் ஒவ்வொன்றுக்கும் புராண ரீதியாக ஐதிஹ்யங்கள் இருக்கின்றன.

### இதன் வரலாறு.

'நவராத்ரி' என்ற பதத்திற்கு ஒன்பதுஇரவு என்று பொருள். இந்த நவராத்ரி என்னும் மஹோத்ஸவம் பரதேவதையான பராசக்திக்கே உரியது. ஆதியில் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் யுத்தம் அடிக்கடி நடந்துகொண்டிருந்தது. மஹிஷாஸுரன் என்னும் அதிசூரன் பிரஜைகளுக்கெல்லாம் மிகுந்த தொந்தரைகளை உண்டுபண்ணிவந்தான். அவனுடைய ஹிம்ஸையைப் பொறுக்கமாட்டாமல் தேவர்கள் தேவதேவனை மஹா தேவனிடம் முறையிட்டனர். பார்வதி பாகரான பரமேச்வரர் தேவியினால் இராக்ஷஸன் ஜயிக்கப்படுவான் என்று வாக்குக் கொடுத்தார். ஆகவே, தேவர்கள் பராசக்தியைப் பூஜைசெய்தார்கள். அவர்களது பக்திக்கு மெச்சிச் சக்தி தோன்றி, அசுரனை அழிக்கலானாள்.

'நவராத்ரி' என்னும் ஒன்பது இரவில் முதல் மூன்றுநாள் துர்க்கா தேவதைக்கு உரியன. அந்த மூன்றுநாளுக்குள்தான் மஹிஷாஸுரன் யமனுலகனுப்பப்பட்டான். அந்த அஸுரனை ஒழிக்கப் பராசக்தி துர்க்கையாகத் தோன்றி, அவனுக்கு மறலியாயினள். இடையிலுள்ள மூன்று தினமும், பக்தர்களுக்குப் பொருள் நலனும் திவ்விய மங்களமும் தரவல்ல ஸ்ரீ மஹா லக்ஷ்மீ தேவதைக்கு உரியன. கடையிலுள்ள மூன்று வைகலும், ஸகல கலாவல்லியும் சதுர்முகன்தன் நாவிலே ஸஞ்சரிக்கவிட்டிருக்கும் அவனது இல்லாளும், கலைமகளும், விஞ்ஞானத்தில் வல்லவளுமான ஸரஸ்வதீ தேவிக்கு உரியன. ஆராயின், இந்த மூன்று தேவிகளும் இராஜ இராஜேச்வரியின் அம்சமே.

### இதைக் கொண்டாடும் விதம்.

ஹிந்துக்களனைவரும் இந்தப் பண்டிகையை ஸந்தோஷமாய்க் கொண்டாடுவார்கள்; தங்கள் தங்கள் மனோபீஷ்டங்களை நிறைவேற்றிக் கொடுக்கும்படி ஸர்வேச்வரனை நித்திய மங்கள ஸ்வரூபனை வேண்டுவார்கள். இக்காலத்தில் ஸூர்ய நமஸ்காரஞ் செய்வதும், ராமாயணம் பாகவதம் முதலியவைகளை வெகு உத்ஸாகத்துடன் படனஞ் செய்வதும் சிரவணஞ் செய்வதும் வழக்கம்.

ஒவ்வொரு ஹிந்துவீட்டிலும் 'பொம்மைக் கொலு' ஒன்று வைக்கப்படும். ஏழை, பணக்காரன், சிறியவன், பெரியவன் என்ற பேதமில்லாமல் எல்லாராலும் கொண்டாடப்படும். மாலை வேளைகளில் சிறு பெண்மணிகள் கூந்தலை விசித்திரமாக வேய்ந்து பின்னலிட்டு, நல்லாடையுடுத்து ஆபரணம் பூண்டு கையில் குங்குமம் எடுத்துக்கொண்டு வீடுவீடாய் அழைக்கச் செல்வர். இம்மாதிரி அநேகர் சிறுமியர் குழாங்கள் வீதியில் சாயங்காலம் செல்லுவதைப் பார்க்க வெகு ரம்யமாயிருக்கும். ஆடைகளின் பிரகாசம் கண்களைப் பறிக்கும். ஆபரணங்களும் அப்படியே.

ஒவ்வொரு ஹிந்து ஆலயத்திலும் பகல்வேளைகளில் ஜனங்களுக்குத் திருப்தியாய் போஜனமளிக்கின்றனர். சுவாமிக்குத் திருமஞ்சனாதிகள் குறைவின்றிச் செய்யப்படுகின்றன. அந்த ஒன்பதுநாளும் ஓய்வின்றி வேதம் கோஷிக்கப்படுகின்றது.

விஷ்ணுவாலயங்களில் ஸ்ரீ மஹாலக்ஷ்மீ தேவிக்குத் திருமஞ்சனம் செய்யப்படும். ஸாயங்காலத்தில் அலங்கார பூரிதையாய் மண்டபத்தில்

எழிந்தருளச் செய்து, பாதநாட்டியத்துடன், கோலாட்டம், வீணை, புள்ளாங்குழல் முதலிய வாத்தியங்கள் அதிரம்மியமாய் வாசிக்கப்படும்.

### மைசூரில் கோண்டாடும் விதம்.

இந்தப் பண்டிகையை ஸ்வதேச ராஜாக்கள் மிகவும் ஆடம்பரமாய்க் கொண்டாடுவார்கள். ராஜபுதனத்திலுள்ள அரசர்கள் அந்த ஒன்பது நாளும் கொலுவில் வீற்றிருந்து ஜனங்களுக்குத் தரிசனம் கொடுப்பார்கள்; தக்ஷிணைகள் வழங்குவார்கள். கோலாஹலமாய் ஸந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்திருப்பார்கள். முன்னே சொல்லப்பட்ட மஹிஷாஸுரன் வசித்த இடம் மைசூர் நாடேயாகும். மஹிஷாஸுரபுர மென்றும் மஹிஷமண்டல மென்றும் மைசூர் கூறப்படுகிறது. இவ்விடத்தில் ஒவ்வொரு வருஷமும் நவராத்ரி உத்ஸவம் வெகு விமரிசையோடு நடந்தேறும். நாள்தோறும் ஸங்கீதக் கச்சேரிகளும், சதிர்க்கூட்டமும், ஹரிகதா காலக்ஷேபங்களும் நடக்கும். ஒவ்வொருநாள் ஹாஸ்யபாவ அபிநயமும் செவ்வையாக நடைபெறும். இதைக்கண்டு ஆனந்தமடையவும், மைசூர் மஹாராஜா கிருஷ்ண ராஜேந்திர உடையார் கொலுவிலமரும் நேர்மையைக்கண்டு நேத்திரானந்தமடையவும் அநேகர் ஹிமாசலத்தினின்று கன்னியாகுமரி வரையுள்ளவர்—பெண்டிரும், புருஷரும், பாலரும், விருத்தரும்—மைசூர் நாடிவருவார்கள்.

மைசூர் நாடு முழுவதும் 'தஸரா'' பண்டிகையென்றால் பெருங் கொண்டாட்டத்தினம். ஜனங்கள் யாவரும் ஸந்தோஷமாக இருப்பார்கள்.

### ஸரஸ்வதி பூஜை.

இந்நவராத்ரி ஒன்பதாம் நாள் வித்தைக்குரிய தேவதையான ஸரஸ்வதி பூஜை. இப்பூஜை பள்ளிக்கூடங்களிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும், இதை 'ஆயுதபூஜை' யென்றும் சொல்கிறார்கள். ஆயுதங்களை உபயோகித்து ஜீவனஞ் செய்யும் ஒவ்வொருவனும் தன்தன் ஆயுதங்களைப் பூஜிக்கும் நாள் அன்றுதான். ஸரஸ்வதியைப் பூஜித்துத் தமக்கு இன்னும் மேலான பதவி கிடைக்கவேண்டுமென்றும், இன்னும் அதிகமான வரும்படி கிடைக்கவேண்டுமென்றும், வித்தையில் வித்பன்னராகவேண்டுமென்றும் பலபல விதமாக வேண்டுவார்கள்.

### விஜய தசமி.

ஸரஸ்வதி பூஜைக்கு அடுத்தநாள் விஜய தசமி யெனப்படும். அன்றைத்தினந்தான் நூதனமாக வித்தைகளைக் கற்கத் தகுந்த நாள். ஆகவேதான் ஜனங்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஐந்தாவதாண்டு வருங்காலையில் விஜயதசமியன்று பள்ளிக்கூடத்தில் அக்ஷராப்பியாசம் செய்விக்கிறார்கள். விஜயதசமியன்று எத்தனையோ பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் வித்தியாப்பியாசஞ் செய்வதை இன்றும் காண்கிறோம். வித்தை கற்றுக்கொள்ள ஆரம்பம் செய்ய விஜயதசமிதான் ஏற்றநாள். இதன் ஐதிஹ்யம் மஹா பாரதத்தில் காணப்படுகிறது.

### அது வருமாறு.

பஞ்சபாண்டவர்கள் பன்னிரண்டு வருஷ காலம் பாஞ்சாலியுடன் பரதேசிகளைப்போல் கானகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தனர். பிறகு ஒருவருஷம் அஞ்ஞாதவாசம் செய்ய வேண்டியிருந்தது. அஞ்ஞாத வாசம் செய்த பிறகுவந்தால் துரியோதனன் அவர்களுக்குண்டான பாதி ராஜ்யத்தைக் கொடுத்துவிடுவதாக வாக்குதத்தம் செய்திருந்தான். அவனது வார்த்தைகளில் பூரணமான நம்பிக்கை வைத்துப் பாண்டு புத்திரர்கள் விராடராஜனிடம் மாறுபெயர் பூண்டு ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வேலைக்காரர்களாக அமர்ந்து காலங்கழித்தனர். விராடராஜனிடம் போவதற்குமுன் அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களையெல்லாம் ஒன்றாகக் கட்டி விராடதேசத்தினெல்லையிலிருந்த ஒரு பெரிய வன்னிமரப்பொந்தில் வைத்திருந்தனர். அந்த ஒருவருஷகாலம் சரியாய் முடிவுற்றது. அதற்குள்ளாகத் துரியோதனன் விராடனது ஆநிரைகளைப் பிடிக்கலானான். பிறகு ஒரு யுத்தம் ஆரம்பமானது. அப்பொழுது விராடராஜன் புத்திரனான உத்தரன் போர்க்குச் செல்ல உத்தேசங்கொண்டான்; உத்தரன் தன்னைப்பற்றி மிகவும் புகழ்ந்துகொண்டான். தனக்கு ஒரு தேர்ப்பாகன்வேண்டியிருந்தது. அந்தச்சமயத்தில் அங்கிருந்த ஸைரந்திரி (துரௌபதியின் மாறுபெயர்) 'பிருஹந்நளை (அர்ஜுனன் பேடியாயிருந்தபோது பெயர்) சாரத்தியம் செய்வதில் மிகப்பேர் பெற்றவள், அவளை அழைத்துப்போகலாம்' என்றாள். அவ்வார்த்தையைக் கேட்டு உத்தரன் பிருஹந்நளையுடன் யுத்தத்துக்கு ஆயத்தமானான். பிருஹந்நளை ரதத்தை ஓட்டிக்கொண்டு வன்னி மரத்தண்டை வந்தாள். அங்கு வந்தபோது சரியாக ஒருவருஷம் அஞ்ஞாதவாசமும் முடிந்துவிட்டது. ஆகவே, அருச்சுனன் சுய உருவங்கொண்டு, மறைத்துவைத்திருந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டான். அவைகளைத் தனக்குச் செவ்வையாக உபயோகிக்கத் தெரிகிறதாவென்றும், ஆயுதங்கள் கூராயிருக்கின்றனவா என்றும் பார்க்க அம்மரத்தின்மீதே ஆயுதத்தைப் பிரயோகித்தான் அம்மரத்தில் ஒருபிரம ரக்ஷஸ் இருந்ததைத் தன்னம்பினால் எய்துகொன்றான். பிறகு துரியோதனனுடன் சண்டையிட்டான் என்று பாரதம் கூறும்.

கி. பி. சேஷாத்திரி ஐயங்கார்.



## The Drum-Stick.

### முருங்கை.

முருங்கையானது விதைகளினின்று உண்டாக்கப்படலாம்; அல்லது, ஏறக்குறைய ஒரு அடி சுற்றளவுள்ள அம்மரத்தின் கிளையை வெட்டிக் கொணர்ந்து அதை நல்ல ஈரமுள்ள இடத்தில் நட்டும் பயிராக்கலாம். விதைகளினின்று உற்பத்தி செய்வதைக் காட்டிலும் இவ்விதம் செய்வதுதான் நல்லது. இம்முறையை அநுஷ்டித்தால், சுமார் ஒரு வருஷத்திற்குள் அது துளிர்த்துக் கிளைகளுண்டாய்ப் பலன் கொடுக்க ஆரம்பிக்கும்.

இம்மரமானது எவ்விதத் தாழ்ந்த பூமியிலும் பயிராகும். நிலம் அதிகவளமாயிருக்க வேண்டுமென்பது அவசியமன்று. களர் நிலங்கள் தவிர மற்றெல்லாவித பூமிகளிலும் தாராளமாய்ப் பயிர் செய்யலாம். அநேகமாய் ஒவ்வொரு வீட்டின் தோட்டத்திலும் சாக்கடை ஜலம் பாயுமிடங்களில் இம்மரங்கள் வளர்ந்திருப்பதைக்காணலாம். அவ்விடங்களில் வளர்வனவற்றிக்கு எருத் தேவையில்லை. மற்ற காய்கறிப் பயிர்களுக்குப்போல் அவ்வளவு கவனிப்பு இதற்குத் தேவையில்லை.

இதைப் பயிர் செய்ய மழைக்காலமே மிகவும் தகுந்தது. கோடைக்காலத்தில் மரத்தின் கீழ் மண் ஈரம் காயாமல் பாதுகாத்து வரவேண்டும். இவ்விதம் கோடையில் இரண்டு மூன்று மாதங்கள்வரை கவனித்துவருவது அவசியமாகும்.

மேலே குறிப்பிட்டபடி கன்றின் அடிமண் ஈரம் காயாமலும், ஆடுமாடுகள் அதைப் பாதகப் படுத்தாமலும், பாது காத்து வந்தால் ஏறக்குறைய ஒருவருஷத்திற்குள் நன்றாகத் துளிர்த்துக்கிளைகள் உண்டாய்ப் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். பிறகு இரண்டு மூன்று வருடங்களில் பெரிய மரமாகிவிடும். மரத்தைச் சேதப்படுத்தாமல் எப்போதும் பாதுகாத்துவந்தால் நல்ல பலனைக்கொடுப்பதில் ஐயமில்லை.

முருங்கையை ஒவ்வொரு வீட்டின் தோட்டத்திலும் சாக்கடைத் தண்ணீர் ஓடும் இடங்களில் நட்டால் நல்லபலனைக் கொடுக்கும். இப்படிப்பட்ட இடங்களில் அதிகமான மரங்களை வைத்துப் பயிராக்க இயலாது. விஸ்தாரமான இடங்களில் தோப்பாக வைத்துப் பயிர் செய்யலாம். ஆனால், அவ்வளவாகப் பலன் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறன்து. விஸ்தாரமாகப் பயிர் செய்வதாயிருந்தால், 15 அடிக்கு ஒரு மரமாக நடவேண்டும். இவை துளிர்த்து வளரும்வரை அதாவது ஒரு வருஷ காலத்திற்குள் இம்மரங்களின் இடையில் ஏதாவது கீரை இனுங்களைப் பயிர் செய்யலாம். மர

ங்கள் வளர்ந்து பூமியில் நிழல் தங்கினால் எந்தப் பயிரும் செய்ய இயலாது. ஏறக்குறையத் தனியாயிருக்கின்ற மரங்களே நல்ல பலனைக்கொடுக்கின்றன. இவை வருஷத்துக்கு இரண்டு முறை பூத்துக் காய்க்கின்றன. ஒவ்வொரு தடவைக்கும் ஒரு மரத்தில் சுமார் 2000 காய்கள் வரை கிடைக்கும்.

மரமானது வியாதிகளால் பீடிக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டும். மரத்தை அதிகமான ஈரமில்லாமலும் அதிகமாகக் காயாமலும் பார்த்துவரவேண்டும். ஈரம் முழுதும் வற்றும்படி அதிகமாய்க் காய்ந்துவிட்டால், ஒருவிதப் புழு அதைத் துளைத்துச் சேதப்படுத்துகின்றது. இதன்காரணமாக மரத்தினின்று பால் வடிந்து பிறகு அது பிரயோஜனமற்றுப் போகின்றது. இது தவிர, கம்பளிப்பூச்சிகள் மரத்தின் இலைகளைத் தின்று சேதத்தை விளைவிக்கின்றன. அச்சமயங்களில், மரத்தின் மேற்கிளைகளை வெட்டிவிடுவது உத்தமம். மரத்தை வருஷத்துக்கு ஒருமுறை கபாத்துச் செய்யவேண்டும்.

முறுங்கையும், அதன் பூ காய் முதலியனவும், ஜனங்களுக்குப் பற்பலவகைகளில் உபயோகப்படுகின்றன. பூ காய் முதலியனவற்றை ஜனங்கள் புசிக்கிறார்கள். மரத்தின் பட்டையானது வைத்தியர்களுக்கு வைத்தியச் சரக்காக உபயோகப்படுகின்றது.

---

## Night Schools.

By Mr. P. S. Natesa Iyer, B.A.

## இராப்பள்ளிக்கூடங்கள்.

இப்போது இந்தியாவில் கல்வியபிவிருத்தியானது மற்ற தேசங்களைக்காட்டிலும் மிகவும் பின்னடைந்திருக்கின்றதென்பது வெளிப்படையான விஷயம். ஜப்பானில் இப்போது கல்வி கற்றவர்கள் 100க்கு சற்றேறக்குறைய 90 பேர்கள் இருக்கின்றனர். ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலும் கல்வியின் ஊக்கமானது நிரம்பவும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றது. இவ்வாறு மற்ற தேசங்களில் மாத்திரம் கல்வியானது நாளுக்குநாள் அபிவிருத்தியாய்க்கொண்டுவர, நமது நாட்டில் மாத்திரம் அவ்வித ஊக்கம் ஒன்றுமில்லாமலிருப்பதற்குற்ற காரணங்கள் சிலவற்றை இங்குக் கூறுவோம்.

கல்வியென்பதனால், நாம், உயர்தரக் கல்வியைப்பற்றி இங்குக் கவனிக்கவில்லை. உயர்தரக் கல்வியைப்பற்றிக்கவனிக்கின், நமது தேசத்தில் நூற்றுக்கு ஐந்துபேர்கள்கூட இல்லையென்றே தெரியலாம். ஆதலால், நாம் இங்கு ஆராயப்புகுந்தது சாதாரணக் கல்வியேயாம். அதாவது நன்றாய் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளுதல், உள்ள கருத்தை ஒருவாறு தெளிவாக வெளியிடுதல், சிறிது கணக்குப்போடக் கற்றுக்கொள்ளுதல் முதலியன. இவைகூட அறியாமலுள்ளவர்கள் நமது தேசத்தில் கோடிக்கணக்காயுள்ளார்கள். நகரங்களைவிட்டு நாட்டுப்புறங்களுக்குப்போய்ப்பார்ப்போமாயின், எவ்வளவோ ஜனங்கள் போதுமான அளவு கல்வியறிவின்றிப் பலவழிகளிலும் மிக்க துன்பத்தை அநுபவிக்கின்றார்கள். காற்றைப்போல், ஒவ்வொருவனும் கல்வியைப்பெறச் சுதந்திரமிருக்கும்போது அவ்விதச் சுதந்தரத்தை அடையக்கூடாமலிருப்பது மிகவும் வியசனிக்கத்தக்கது.

இவ்வாறு பலகோடி ஜனங்கள் கல்வியறிவின்றி மூடர்களாயிருப்பதற்குற்ற காரணங்களைக் கவனிக்கின், அவை ஒன்றுடன் ஒன்று தொடர்ந்து பல காரணங்களாகப் புலப்படும். முதலாவது நமது ஜனங்களின் செல்வக் குறைவே. இந்தியாவில் பாதிக்கு மேலான ஜனங்கள் பொருட்செல்வமில்லாதவர்கள். ஆயினும், பள்ளிக்கூடங்களில் இலவசமாகக் கல்வி கற்பித்தலாவது அல்லது சம்பளம் குறைவாகவாவது இருந்தால் இவர்கள் தங்கள் பிள்ளைகளை அவற்றிற்கு அனுப்பிக் கல்வி பயிற்றக்கூடும். அவ்வாறன்றிப் பள்ளிக்கூடங்களில் எங்கும் சம்பளம் நாளுக்குநாள் ஏறிக்கொண்டே வந்தால், எவ்வாறு ஏழைமக்கள் கல்விப்பேற்றை அடைய இயலும்? எனினும், தாய்தந்தையர்களின் ஊக்கத்தினால், வருஷந்தோறும் ஏராளமாகப் பிள்ளைகள் கல்வி பயிற்றப்பட்டுவருகின்றார்கள்.



குடிகளின் கல்வியபிவிருத்தியைக் கவனிப்பது இராஜாங்கத்தாரின் முக்கியக் கடமையாகும். அவர்கள் கல்வியபிவிருத்தி சம்பந்தமாய் உழைக்கும் நிபுணர்களின் அபிப்பிராயங்களைக் கைக்கொண்டு அவை சித்திபெறும்படி செய்யவேண்டும். இந்தியாவில் கல்வி அபிவிருத்தியடையாததற்குக் காரணம், அது சம்பந்தமாய் உழைக்கும் நிபுணர்களின் அபிப்பிராயங்கள் ஆதரிக்கப்படாமையேயாம். ஸ்ரீமான் கோகலே தயாரித்த கல்விச் சட்டமானது இராஜாங்கத்தாரின் ஆதரவற்று அழிந்துபோய்விட்டது. அவ்வாறன்றி, அக்கல்வி முறையானது ஆதரிக்கப்பெற்றிருந்தால், கோடிக்கணக்கான ஜனங்கள் கல்விப்பேற்றையடைந்து அதற்குற்ற பயனை எய்துவரென்பதில் ஐயமில்லை.

இராஜாங்கத்தாரால் போதியவளவு கல்வியின் அபிவிருத்திக்கு ஆதரவு கிடைக்காவிடினும், நம்முள் படித்த சமூஹத்தார் கல்வியில்லாதவர்களுக்குக் கல்விபுகட்டி, அவர்களை முன்னுக்குக் கொண்டுவர முயற்சி செய்யவேண்டும். இதற்குப்பலருடைய கூட்டுறவு வேண்டும். தனவான்கள், ஏழைகள், உத்தியோகஸ்தர்கள், உத்தியோகஸ்தரல்லாதவர்கள் ஆகிய எல்லோரும் ஒருமிக்க உழைக்கவேண்டுமாயினும், எல்லோரும் செய்யக்கூடியது ஒருதன்மையானதன்று: தனவான்கள் தேவையான வளமாதனத்தை உதவிசெய்து பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்கலாம். அஃது இல்லாதவர்கள், கல்வி புகட்டும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளலாம். இவ்வாறு ஒவ்வொருவரும் தம்மாலான உதவியைச் செய்தால், கோடிக்கணக்காக அறிவிலிகளாயுள்ள நம்மவர்கள் வெகு சீக்கிரத்தில் முன்னேற்றமடைவர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை.

இவ்விதம் பரோபகாரமான காரியங்களைச்செய்ய முன்வந்திருப்பவர்கள், தாம் எவ்விடத்தில் பள்ளிக்கூடத்தை ஸ்தாபிக்க உத்தேசமோ அவ்விடத்திலும் அதற்கு அருகிலுமுள்ள பல கல்வியறிவில்லாதவர்களுக்குக் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் போதிக்கவேண்டும். கல்வியின்மையினால் நேரும் பலவிதத்தீமைகளையும் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டும். சிறந்த நீதிநூல்களையும், கைத்தொழில் வியவசாயம் முதலியவை சம்பந்தமான நூல்களையும், மற்றும் சமாசாரப் பத்திரிகைகளையும் படித்தறிந்துகொள்ளக் கூடாமலிருப்பது கல்வியறிவின்மையினாலேயேதானென்று அவர்களுக்குக் காட்டவேண்டும். மிகவும் ஏழையாயுள்ளவர்களுக்குப் புத்தகம் பலகை முதலியன இலவசமாய் வாங்கிக் கொடுக்கப்படுமென்றும் உறுதியுரைக்கவேண்டும்.

பள்ளிக்கூடமானது ஒரு குறித்த நேரத்தில் காலந் தவறாமல் தினந்தோறும் நடத்தப்படவேண்டும். உபாத்திமைத்தொழிலை மேற்கொண்டுள்ளவர்கள் வெகு உத்ஸாகத்தோடும் உண்மையோடும் பாடுபடவேண்டும். மாணாக்கர்க்கு எவை அவசியமோ, எவை அவர்களுக்கு உத்ஸாகத்தைக்கொடுக்குமோ, அவற்றைக் கவனித்துச் செய்யவேண்டும். பிள்ளைகளை அவர்களின் யோக்கியதைக்குத்தக்கபடி பிரித்து அவரவர்களுக்குத்தக்கபடி கல்வி கற்பிக்கவேண்டும். பண்டிகை முதலான விசேஷ தினங்களில் பிள்ளைகளுக்கு உத்ஸாகம் உண்டாகும்படி ஹிந்து மதத்துக்கேற்ப அவற்றைக் கொண்டாடலாம்.

பிள்ளைகளின் பொதுக்கல்வியை அபிவிருத்தி செய்யும்பொருட்டும், அக்கம்பக்கத்திலுள்ள உலக அநுபவம் வாய்ந்த சில பெரியோர்களைக் கொண்டு உபந்யாசம் செய்விக்கவேண்டும். இப்படி செய்தால், பிள்ளைகள் தங்கள் கல்வி விஷயத்தில் அக்கறை கொள்வதோடு, அவர்களின் அறிவும், ஒத்துழைக்கும் குணமும் அதிகரிக்கும்.

பள்ளிக்கூடம் தினந்தோறும் இரண்டு மணி நேரம் நடத்தப்பட்டால் போதுமானது. இக்காலத்தில் பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கைக்கு அவசியம் தேவையான விஷயங்களைக் கவனித்து அவர்களுக்குப் போதிக்கவேண்டும். பலவித தொத்து வியாதிகளைப் பற்றியும், அவர்கள் அவற்றினின்று எவ்வாறு காத்துக்கொள்ளக் கூடுமென்பதைப்பற்றியும், மற்றும் தேகசுத்த சாஸ்திரத்தைப் பற்றியும் தெளிவாகப் போதிக்கவேண்டும். பலவிதத் தொழில்களைப்பற்றிச் சுருக்கமாகப் போதிக்கவேண்டும். மாணவர்களின் தற்கால நிலைமை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் எவ்வாறு முன்னுக்கு வரக்கூடுமென்பதைக் காட்டவேண்டும். பல பெரியோர்களின் ஜீவிய சரித்திரங்களைச் சொல்லி, அவர்களால் கையாளப்பட்ட நற்குணங்களைப் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். மேலே குறிப்பிட்ட விஷயங்களையும், இவைசம்பந்தமாய் இன்னும்பல விஷயங்களையும், பள்ளிக்கூடம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு ஏற்ற பல விஷயங்களையும் பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். பள்ளிக்கூடமானது தினந்தோறும் தவறுதல் நடத்தப்படவேண்டும். அப்பொழுதுதான் கோரிய பலன் கைகூடிவரும்.

பி. எஸ். நடேச ஐயர்,

---

# Agricultural Education.
## வியவசாயக் கல்வி.

ஸிம்லாவில் சென்ற ஜூன் மாதத்தில் ஆரம்பித்துச் சிலநாட்களில் நடத்தப்பட்ட வியவசாயக்கல்விக் கான்பரென்ஸில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்கெனவேயுள்ள வியவசாயக் கலாசாலைகளின் தேவையை அநுசரித்தும், இனி ஏற்படுத்தப்போகும் வியவசாயப் பள்ளிக்கூடங்களைக் கருதியும் வியவசாயப்பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களை அதிகமாக நியமிப்பதே விசேஷமாகும்.

(2) வியவசாயக் கலாசாலைகளில் இப்போது வழங்கிவரும் நான்குவருஷப் படிப்பு முறைபோய் இரண்டுவருஷப் படிப்புத் திட்டத்தையும் சேர்த்துவிடலாமாவென்ற விஷயத்தை ஸ்தல கவர்ன்மெண்டாரே அநுபவத்தில்கண்டு நிர்ணயிக்கவேண்டும். நடுத்தர வியவசாயப் பள்ளிக்கூடங்களில் காலேஜ் வகுப்புப் பாடங்களனைத்தையும் சொல்லிவைக்கவேண்டுமென்றால், தகுந்த உபாத்தியாயர்களும் வேண்டியிருக்கும். நடுத்தரப்பள்ளிகளில் இப்போதுள்ள இரண்டு வருஷப்படிப்பைச் சமயோசிதமாய் அதிகப்படுத்தி, சாஸ்திரம் சொல்லிவைத்தல் முதலானவைகளில் பிள்ளைகள் விசேஷத்தேர்ச்சியடையுமாறு செய்வதும் ஸ்தல கவர்ன்மெண்டாரின் பொறுப்பேயாகும்.

(3) எவ்வகைப்பட்ட வியவசாயப் பாடசாலைகளிலும் படிக்கக்கூடிய மாணவர்களுக்கு உபாத்திவேலைப்பயிற்சி கொடுப்பதும் அவசியமாகையால், 2-வது பாராவில் குறிப்பிட்ட படிப்பெல்லையைக் கடந்தவர்களுக்கு உபாத்திவேலைப்பயிற்சி பெறுவதும் இன்றியமையாத யோக்கியதையாய் வைத்துவிடவேண்டும்.

(4) காலேஜ்வகுப்பில் படிப்போரும் உபாத்திமைப்பயிற்சிப் பெறுவது சாத்தியமாம்படி பிரத்தியேகமாய் உபாத்திமைப்பயிற்சிப் பள்ளிக்கூடங்களை காலேஜ்களோடு சேர்த்துவைக்க ஏற்பாடு செய்யவேண்டியது அவசியமன்று. பற்பல வியவசாய காலேஜ் தலைவர்களும் இவ்வாறே அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். வியவசாய உபாத்தியாயர்களுக்குப்போதனை முறைகள் கற்பிக்க மேலானவழி என்னவென்றால், மாணவர்களைத்தங்கள் படிப்பு முடிந்ததும் அதற்கென்று தெரிந்தெடுக்கப்பட்ட ஒருபோதனைமுறைப் பள்ளிக்கூடத்தில் பயிற்சி பெறும்படி கட்டாயப்படுத்துவதேயாகும்.



இதுபற்றி வியவசாயக் கல்விச் சாலைகளடங்கிய எல்லா மாகாணங்களும் தனித்தனியே ஒரு போதனாமுறைச் சாலையையும் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யவேண்டியதேயாகும். அந்தந்தப் பாஷைகள் பிரபலமாயிருக்குமிடத்தில் அத்தகைய பயிற்சிச்சாலைகளை ஸ்தாபித்தல் உசிதமாகும். வியவசாயப் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் பின்னிட்டு விசேஷமாய்த் தேவையானால் போதனாமுறைச் சாலைகளை அப்பால் அதிகப்படுத்திக்கொள்ளலாம்.

(5) விசேஷமாய்க் கிராமங்கள் உள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வியவசாயப் பள்ளிக்கூடங்கள் அவசியமாய் ஸ்தாபிக்கப்படவேண்டும். பரீட்சார்த்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் வியவசாயப் பண்ணைகள் இருக்குமிடத்திற்குச் சமீபமாகவே அப்பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தல் விரும்பத்தக்கதாகும். சாதாரண ஹைஸ்கூல்களில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறியவர்கள் வியவசாயக் காலேஜ்களில் சேர்ந்து உயர்தர வியவசாயப்படிப்புப் படிக்கக்கூடுமாகையால், கீழ்தர வியவசாயப் பள்ளிக்கூடங்கள் எதற்காக ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று ஆக்ஷேபிக்கப்படலாம். ஆயினும், பரிக்ஷார்த்தமாக அநுபவத்தில் பார்க்கபிறகுதான் அதுவிஷயமாய் எவ்விதமான முடிவுக்கும் வரக்கூடும்.

(6) வித்தியா இலாகாவின் கீழுள்ள நடுத்தரப் பள்ளிகளில் பலவகைகள் இருப்பதனால், 5-வது தீர்மானத்தில் கண்டிருக்கும் தேவைகள் கைகூடுமாறு பாடசாலைகளை ஸ்தாபிப்பதைப்பற்றி இப்போது வாதிப்பதில் பிரயோஜனமில்லை. இது விஷயமாய் என்னசெய்வதென்று கவர்ன்மெண்டு வியவசாய நிபுணரே எல்லா மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் குறிப்பைத்தயார்செய்து கொடுக்கவேண்டும். எது எப்படியிருந்தபோதிலும், வியவசாயப் பாடசாலைகள் இருக்குமிடமெல்லாம் வியவசாயப் பண்ணைகளாவது அல்லது உழுது பயிரிடப் பிரத்யேகமான நிலங்களாவது தயார் செய்யப்பட்டிருக்கவேண்டும்.

(7) மாகாண வியவசாய இலாகாக்களின் வேலை பெருகுந்தன்மை காட்டினால், அவ்வப்போது அந்தந்த ஸ்தலத்தின்தேவைகளுக்கேற்ப காலேஜ்படிப்பை ஸ்தலகவர்ன்மெண்டார் திட்டப்படுத்தவேண்டும். அவசரம் ஏற்பட்டபோது ஒவ்வொரு முக்கிய மாகாணத்திலும் வியவசாயக்காலேஜ் ஒன்று ஸ்தாபிக்கப்படவேண்டும்.

(8) வியவசாயக் காலேஜ்களை யூனிவர்ஸிடியோடு சேர்ப்பது என்பதைப்பற்றி ஸ்தல கவர்ன்மெண்டார் சௌகரியப்படி கவனித்துச் செய்து கொள்ளலாம்.

(9) பின்னிட்டு நிலங்களைச் சாஸ்திரப்படி பயிரிடுமாறு பிள்ளைகளை வியவசாயப்பள்ளிகளில் படிக்கச்செய்கிறோமாயினும், வியவசாய இலாகா உத்தியோகங்களுக்கு யோக்கியதையுள்ள மாணவர்களையும் பிற்பாடு தெரிந்தெடுப்பது சாத்தியமாகும்படி செய்யவேண்டும்.

(10) பிரைமரி பாடசாலைகளுக்கு திட்டப்படுத்தும் புத்தகங்கள் சுற்றியுள்ள கிராமாந்தரங்களின் நிலைமைக்கு ஒத்தவையாகவே யிருக்கவேண்டும்.

மேற்குறித்த ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் வியவசாயப்படிப்புச் சொல்லிவைக்க வேண்டிய அவசியமில்லையாயினும், பின்கண்ட சில முறைகளைப்பற்றிக் குழந்தைகளுக்குக் கற்பிக்க வேண்டும் :—

(i) இயற்கைப் பாடங்கள் கிராமாந்தர விஷயங்களுக்குப் பொருந்தியவையா யிருக்கவேண்டும். (ii) வாசித்தல், எழுத்துப் படம் முதலியவையும் கிராம விஷயங்களுக்கு ஒத்தவையாயிருக்கவேண்டும். (iii) கிராமாந்தரப் பள்ளிகளைச் சுற்றி இயற்கைப்பொருள்கள் அகப்படும்படியான தோட்டங்களை ஏற்பாடு செய்யவேண்டும். (iv) கிராமாந்தரப் பள்ளிக்கூடங்களுக்கு கிராமாந்தரத்தாரே உபாத்தியாயர்களாயிருக்கவேண்டும். (v) கிராமாந்தர உபாத்தியாயர்களும் உபாத்திமைப்பயிற்சி பெறக்கூடுமாறு பிரத்யேகமான சௌகரியங்களைச் செய்துகொடுக்கவேண்

டும். (vi) வியவசாய இலாகாதாரும் கிராமாந்தர உபாத்தியாயருக்கு விடுமுறைநாட்களில் விவசாய விஷயங்களைப் போதிக்கவேண்டும். (vii) வித்தியா இலாகாதார் கீழ்த்தர இன்ஸ்பெக்டிங் சிப்பந்திகளைக் கிராமாந்தர உபாத்தியாயர் ஜாப்தாவிலிருந்தே தெரிந்து எடுத்து நியமிக்கவேண்டும். (viii) வியவசாயப் பட்டதாரிகளை அல்லது சாஸ்திரபாடங்கள் படித்த பட்டதாரிகளை வித்யா இலாகாதார் ஜில்லா டிப்டி இன்ஸ்பெக்டர்களால் நியமிக்கப் பார்க்கவேண்டும்.

(11) கிராமங்களில் பரீக்ஷார்த்தமாய் வியவசாயப்பண்ணைகள் வைத்து ஜனங்களுக்கு அறிவூட்டினால்தான், படிப்பு வாசனையற்றவர்களும் வியவசாய முறைகளை ஒழுங்காய் அறிந்து கொள்ளுவது சாத்தியமாகும். சர்க்கார் பண்ணைகளில் இம்முறையை விசேஷமாய் அநுஷ்டிக்கவேண்டும்.—சுதேசமித்திரன்.

## Bits of Humour.
## வேடிக்கையான விஷயங்கள்.

"அப்பா, எனக்கு ஒரு ஊதுகுழல் வாங்கித் தரமாட்டீரா?

"எப்போதும் ஊதிக்கொண்டு தொந்திரவு செய்துகொண்டே யிருப்பாயே. ஆகையால் நான் வாங்கித்தரமாட்டேன்.

"இல்லையப்பா! நிச்சயமா இல்லையப்பா! எப்போதும் தொந்திரவு செய்வதில்லை. நீர் தூங்கப்பார்த்து ஊதுகிறேன்"

*
* *

நகரவாசி கோபத்துடனே "எல்லாம் உங்கள் சனியன்பிடித்த பத்திரிகையால்தான்"

பத்திராசிரியர்:—என்ன எல்லாம், ஐயா?

நகரவாசி:—என் வீட்டில் முந்தாநாளிரவு நடந்த களவைப்பற்றி பத்திரிகையில் எழுதவில்லையா நீர்?

பத்திராசிரியர்:—ஆமாம். உன்வீட்டில் களவு நடந்ததாகவும், பெட்டியில் வைத்திருந்த வெள்ளிச் சாமான்களெல்லாம் களவுபோனதாகவும், மேஜைக்குள்ளிருக்கும் பணப்பை மாத்திரம் திருடுபோகவில்லை யென்றும் எழுதியிருந்தேன். அது வாஸ்தவம்தானே?

நகரவாசி:—ரொம்ப வாஸ்தவந்தான்! ஆனதால்தான் நேற்றிரவு மறுபடியும் அந்ததிருடன் வந்து பணப்பையையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

*
* *

சப்பாசாஸ்திரி:—என்னடா சுந்திரா! தாப்பனார்தான் பெண்ணைக் கன்னிகாதானம் செய்துகொடுத்தாரோ?

சுந்திரன்:—கன்னிகாதானம் செய்யவில்லை. பத்தாயிரம் ரூபாய் தானம் செய்தார்; கூட பெண்ணையும் கொடுத்தார்.

*
* *

மாணுக்கன்:—ஐயா! எனக்கு ஒரு சந்தேகம். தயவுசெய்து அதை நிவர்த்திப்பீர்களா?

உபாத்தியாயர்:—தெரிவித்தால் சொல்லுகிறேன்.

மாணுக்கன்:—உலகம் வட்டமா யிருக்கிறதல்லவா?

உபாத்தியாயர்:—ஆம்.

மாணுக்கன்:—உலகம் வட்டமாயிருந்தால் உலகமுடிவு என்று சொல்லுகிறீர்களே அது எது?

உபாத்தியாயர் யோசித்துக்கொண்டிருக்கிறார்.

*
* *

பேனுகளில் சிலர் ஒருவர்க்கொருவர் தங்தம் காதலைப் பின்வருமாறு தெரிவித்துக்கொள்ளுகிறார்களாம்.

எழுதும் கவரின் தலைப்பக்கத்து வலது மூலையில் தபால் பில்லையை நேராக ஒட்டினால் அது, "நீ என்னைக் காதலிக்கிறாயா?" என்பதையும், அதற்குப் பதில் எழுதுபவர்கள், கவரின் தலைப்பாகத்து இடது மூலையில் ஸ்டாம்பை தலைகீழாக ஒட்டினால் "நான் உன்னை காதலிக்கிறேன்" என்பதையும் குறிக்கிறதாம்.

*
* *



## The Ladies' Section.
## ஸ்திரீகள் பகுதி.

### SLEEP.
### தூக்கம்.

சரீரமும் மனமும் ஆரோக்கியமாயிருக்கவேண்டுமானால் வேலைக்குப்பிறகு ஓய்வும் ஓய்வுக்குப்பிறகு வேலையும் மாறிமாறி இருந்துகொண்டேயிருக்கவேண்டும். சரீரத்தாலும் மனதாலும் உழைக்குங்காலத்தில் ஏற்பட்ட களைப்புக்கள் தீரவும், இரத்தம் சுத்தமாய்ச் சரீரம் முழுதும் நன்றாய் ஓடிப் புஷ்டியுண்டாகவும், தளர்வடைந்த அங்கங்களின் தளர்ச்சி நீங்கிப் பலப்பட்டுச் சுறுசுறுப்புண்டாகவும் தூக்கம் அவசியமானது.

தூங்கும் அறைகள் சப்தமில்லாமலும், வெளிச்சமில்லாமலும், காற்றோட்ட முள்ளதாயும், அதிக உஷ்ணமாவது குளிர்ச்சியாவது இல்லாததாயும் இருக்கவேண்டும். வயிறு நிரம்ப உண்டவுடனாவது, காபி, தேயிலை முதலான பதார்த்தங்கள் சாப்பிட்டவுடனாவது நித்திரைக்குப் போனால் சரியானபடி தூக்கம் வரமாட்டாது. வயிற்றில் ஆகாரமில்லாமல் பட்டினியாய்த் தூங்கலாகாது. அப்படிச் செய்தால் சரியான நித்திரை வராததுடன், ஹிருதயம், சுவாசாசயம் முதலான கருவிகள் வேலை செய்யப் போதுமான இரத்தபுஷ்டியிராது.

வலப்பக்கம் படுப்பதுதான் நல்லது. இடப்பக்கம் படுத்தால், வலப்பக்கச் சுவாசப்பை இடப்பக்கத்திலுள்ள ஹிருதயத்தை அமுக்கும். சரீரப்ரயாஸத்தால் வேலை செய்பவனைக் காட்டிலும் மன வேலைசெய்யும் மாணுக்கர் முதலானவர்க்கு அதிகத் தூக்கம் வேண்டும். புருஷர்களைப்பார்க்கிலும் பெண்களுக்கு அதிக நித்திரை வேண்டும்.

இரவுதான் நித்திரைக்குத் தக்க காலம். பகல் தூக்கம் இராத்தூக்கத்தைக் கெடுப்பதுடன் ஜீர்ணக் கருவியையும் பலஹீனப்படுத்தி விடுகின்றது. தூங்கும் போது முகத்தை மூடிக்கொள்ளலாகாது. அப்படிச் செய்தால், நாம் வெளிவிடும் கரியமிலவாயுவை நாம் மறுபடி உட்கொள்வதனால், நமது சுவாஸப்பைக்குக் கெடுதியும் நாளடைவில் இருமல் புகைச்சல் முதலான வியாதிகளும் உண்டாகின்றன.

இரண்டுபேர் அருகில் படுத்துத் தூங்கலாகாது. அப்படிச் செய்வதால் ஒருவன் வெளிவிடும் விஷவாயுவை மற்றொருவன் உட்கொள்ளுகிறான். ஒருவன் சத்தத்தால் இன்னொருவன் தூக்கமும் பங்கமாகின்றது; இருவருக்கும் கெடுதி விளைகின்றது.

தூக்கம் உண்டுபண்ணும் கஞ்சா முதலான லாகிரி வஸ்துக்கள் உண்பது நாளடைவில் தேகத்தைக் கெடுத்துவிடும். அதேமாதிரி அதிக சரீர உழைப்புக்கும் மன உழைப்புக்கும் பிறகு உடனேயாவது, மனக்கவலையுடனேயாவது தூங்கப் போகலாகாது.

∴ தூங்குமுன் கைகால்கள், முகம் இவைகளைக் கழுவிவிட்டு நித்திரைக்குப் போகவேண்டும். கல்வி.

### COW'S MILK FOR THE INFANTS.
### குழந்தைகளுக்குப் பசுவின்பால் புகட்டுவது.

குழந்தைகளைப் போஷிக்கப் போதுமான வளவு பால் தாய்மார்களுக்கு ஏற்படாவிடின், அப்போது அவர்கள் மற்றசெயற்கைப் பால்களை விட நல்ல பசுவின்பாலை அவற்றிற்குப் புகட்டுவது நல்லது. இது சம்பந்தமாய் நாம் கவனிக்க வேண்டிய சில விஷயங்கள் "விவேகபோதினி"யில் பின்வருமாறு காணப்படுகின்றன.

குழந்தைக்குக் கொடுக்கப்படும் பால், சுத்தமானதாயும், ஆரோக்கியமுள்ள பசுவினிடமிருந்து கறக்கப்பட்டதாயு மிருக்கவேண்டும். கறக்குமுன்னால், பசுவின் முலைக்காம்புகளை நன்றாய்க் கழுவித் துடைக்கவேண்டும். கறக்கிறவனுடைய கைகள் சுத்தமாகவும், பால் பாத்திரங்கள் வெந்நீரில் போட்டு எடுக்கப்பட்டனவாயுமிருக்கவேண்டும். பாலை ஊற்றிவைக்கும் பாத்திரங்களுக்குள் தூசி விழாதபடி, மூடிகள் இருக்கவேண்டும். எப்போதும், புதிதான பாலையே குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். கறந்தபின் 12 மணி நேரம் வைக்கப்பட்டிருக்கும் பாலை, ஒருபோதும் குழந்தைக்குக் கொடுக்கக்கூடாது. கொடுக்குமுன்னால், பாலைச் சுடவைத்துக் கொடுப்பது நல்லது.

சாதாரணமாக, பசுவின்பால் குழந்தைக்குச் சற்று தகாததாக இருக்குமாதலால், அதை வேண்டியவளவு கொதிக்கும் ஜலம்விட்டு விளாவிக் கொடுக்கவேண்டும். பிறந்தபின் ஆறு வாரங்கள் வரையில் 4 பங்கு ஜலத்துடன் ஒரு பங்கு பால் கலந்து கொடுக்கலாம். ஏழாவது வாரம் முதல் 12-ம் வாரம்வரையில் 3 பங்கு ஜலமும் ஒரு பங்கு பாலும் கலக்கவேண்டும். 13-ம் வாரம் முதல் 18-ம் வாரம் வரையில், இரண்டு பங்கு ஜலமும், ஒரு பங்கு பாலும் கொடுக்கவேண்டும். அப்பால் ஒன்பது மாதம்வரை பாலும் ஜலமும் சமமாக விருக்கலாம். ஒன்பது மாதங்களுக்கு மேல், ஜலக்கலப்பில்லாத பால் குழந்தைக்கு ஒத்துக்கொள்ளும்.

ஆகாரம் கலப்பதில் கீழே விவரித்திருக்கும் கலப்புப் பொருள்கள் பொருத்தமானவையா யிருக்கும்:—

பிறந்த முதல் மாதத்தில்

| | முதல் வாரம். | இரண்டாம் வாரம். | மூன்றாம் வாரம். | நான்காம் வாரம். |
|---|---|---|---|---|
| கொதிக்கும பால் | 2 | 3 | 4 | 5 |
| கொதிக்கும் ஜலம் | 5 | 6 | 7 | 8 |
| ஏடு | 1 | 1 | 1 | 1 |
| சுண்ணாம்பு ஜலம் | 1 | 1 | 1 | 1 |
| சர்க்கரை | ½ | ½ | ½ | ½ |

மேலே காட்டிய அளவு (Tea Spoon) தேக்கரண்டியின் அளவாகும். மொத்த அளவு ஒருவேளை ஆகார அளவாகும். பகலில் இரண்டு மணிக்கொருதரமும், இரவில் இரண்டு தரமும் குழந்தைக்கு ஆகாரம் கொடுக்கப்படவேண்டும்.

முதல் மாதத்துக்கு அப்பால் ஆகாரம்.

| | இரண்டாம் மாதம். | 3-மமாதம்முதல் 6-ம் மாதம் வரையில். | 6-ம் மாதம் முதல் 9-ம் மாதம் வரையில். |
|---|---|---|---|
| கொதிக்கும் பால் ... | 1 அவுன்ஸ் | 1½ முதல் 2 | 2½ முதல் 3 |
| கொதிக்கும் ஜலம் ... | 1 ,, | 1¼ முதல் 2 | 2½ முதல் 3 |
| ஏடு ... | 1 தேக்கரண்டி | 2 முதல் 4 | 2 முதல் 4 |
| சுண்ணாம்பு ஜலம் ... | 3 ,, | 4 | 4 |
| சர்க்கரை ... | 1 ,, | 1 முதல் 2 | 2 |
| பகலில் எவ்வளவு தரம் ... | 2½ மணிக்கொரு தரமாக 8 தரம். | 3 மணிக்கொரு தரமாக 7 தரம். | 3 அல்லது 4 மணிக்கொருதரமாக 6,7 தரம். |
| இரவில் ... | 1 ,, | 1 ,, | 2 ,, |

முதலிலிருந்தே ஏடு கொடுக்கக்கூடாது. ஜலம் கலந்த பால் சரியாக ஜீர்ணமானால், கொஞ்சம் கொஞ்சமாக ஏடு சேர்க்கலாம்.

இப்படி, ஜலம் கலந்த பசுவின் பாலை, குழந்தைகளுக்குக் கொடுப்பதில் கீழே விவரிக்கிற விஷயங்களைக் கவனிக்கவேண்டியது அவசியமாகும்.

(1) மலத்தில் தயிர் தெரியுமானால், பச்சைப்பால் அதிகமென்பது வெளியாகும். ஆதலால், இதைக் குறைத்துக் காலக்கிரமத்தில் அதிகமாக்கவேண்டும்.

(2) புளிப்பு நாற்றமுள்ள மலம், அதிகமான சர்க்கரையும் கொழுப்பும் இருப்பதைக்காட்டும். ஆதலால், சர்க்கரையைக் குறைக்கவோ நிறுத்தவோ வேண்டும்.

(3) வெளுப்பாயும் கெட்ட நாற்றமாயுமுள்ள மலம் அதிகக் கொழுப்பையும் ஏட்டையும் தெரிவிக்கும். ஆகலால், இவைகளை 3, 4 நாள்களுக்கு நிறுத்திவைத்துப் பிறகு கொஞ்சங்கொஞ்சமாகச் சேர்க்கவேண்டும்.

(4) ஆகாரம் உட்கொண்டவுடனே குழந்தை வாந்தி பண்ணுமானால், அது மிதமிஞ்சிய ஆகாரத்தையோ, இறுகிய துணியையோ, குழந்தையை அதிகமாகத் தூக்கிக்கொண்டு போவதையோ காட்டும்.

(5) சாப்பிட்டபின் ஒன்று அல்லது இரண்டுமணி நேரத்தில், புளித்துப் போய்க் கட்டிகட்டிய பாலோ ஜலமோ வாந்தியாகுமானால், அது பாலில் அதிகமான கொழுப்பு இருப்பதைக் காட்டும்.

(6) கொடுக்கும் ஆகாரத்தைக்கொண்டு குழந்தை திருப்தியடையாவிட்டால், முதலில் அவ்வாகாரத்தை அதிகமாக்கி அப்பால் அதன் சத்தை அதிகப்படுத்த வேண்டும்."

(7) அடிக்கடி ஆகாரத்தை மாற்றுவது குழந்தைக்குத் தீங்கை உண்டுபண்ணும்.

(8) குழந்தைக்கு வயிற்றுவலி யுண்டாகக்கூடியது சகஜம். அஜீர்ணத்தாலோ, பாலில் அதிகமான தயிர் அல்லது சத்து இருப்பதனாலோ, தாயாருடைய தேகசிரமம், மனத்துயரம், சீரில்லாத ஆகாரம் இவைகளினாலோ வயிற்றுவலி யுண்டாகலாம். அது உண்டானால், குழந்தையின் தலையைத் தூக்கி வைத்துக்கொண்டு, வெந்நீரை, ஒரு கரண்டியைக்கொண்டோ புட்டியிலிருந்தோ கொடுப்பதனால் நிற்கும். உஷ்ணமான பிளானல் துணியை வயிற்றின்மேல் போடலாம். மலப்பிரவிருத்தியாகும்படியும் செய்யலாம். அப்போது குழந்தைக்கு வாற்கோதுமைக் கஞ்சிமட்டுந்தான் ஆகாரமாகக் கொடுக்கவேண்டும்.

ஆகாரம் கொடுக்கும் விஷயத்தில் அதிக ஜாக்கிரதை வேண்டியதவசியம். கிரமமும் அளவும் தவறக்கூடாது. பால் சர்க்கரை முதலிய பொருள்களைக் கையினாலும் தொடக்கூடாது. அவைகளின்மீது தூசி விழாமலும், ஈ முதலியன உட்காராமலும் மூடிவைக்கவேண்டும். பொதுவாகக் குழந்தைக்குப் பொறுக்கக்கூடிய சூட்டோடேயே ஆகாரத்தைக் கொடுக்கலாம். ஆறிப்போன ஆகாரத்தைக் கொடாமலிருப்பது உத்தமம். ஆகாரம் கொடுப்பதற்கு "அல்லன்பரி" (Allenbury) பாட்டிலை உபயோகிக்கலாம்; அல்லது கிண்ணத்தையும் கரண்டியையும் உபயோகிக்கலாம். பாட்டிலை உபயோகிப்பதனால், மிதமிஞ்சிய ஆகாரம் உட்செல்வதற்கு மார்க்கமில்லை. ஆகாரம் கொடுத்தவுடன் எல்லாப் பாத்திரங்களையும் நன்றாய்க் கழுவிவைக்கவேண்டும். குழந்தையின் படுக்கையும் துணிகளும் வெகு சுத்தமாக இருக்கவேண்டும். தாய்மாரும், தாதிமாரும் அவ்விதமே சுத்தமாக இருக்கவேண்டும்.



## The Boys' Section.

## சிறுவர் பகுதி.

### ARIYAN MORAL STORIES.

### ஆரிய நீதி கதைகள்.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
என்னோற்றான்கொல் லெனுஞ் சொல்."

பெற்றோர் புதல்வர்மீது அன்புகொண்டு அருமைபாராட்டி வளர்ப்பதுடன், கல்வி கேள்விகளிற் சிறந்தவராகச் செய்துவருகின்றனர். அதற்குப் பிரதியாகப் புதல்வர் செய்யவேண்டிய உபகாரம் யாதெனின், 'இத்தகைய பிள்ளையையடைவதற்கு இவன்பெற்றோர் என்னதவஞ் செய்தனர்!' என்று யாவரும் கூறும் புகழை நிலைநிறுத்தவேண்டியதேயாம். நமது பெற்றோர்க்கு நாம் எவ்விதத்திலும் மரியாதைசெய்து, அவர்கள்மனம் கோணாமல் நடந்துவரக் கடமைப்பட்டிருக்கிறோம்; ஏனெனில், அதற்குக் காரணம், அவர்கள் நம்மிலும் வயதில் முதிர்ந்தவர்கள் என்பது மாத்திரமன்று; நாம் பிறந்தது முதல் நம்மைக் காப்பற்றக் கவலையெடுத்துக்கொண்டிருக்கின்றனர்; நமக்குத் துன்பம் நேர்ந்துழி, உள்ளன்போடு பாடுபட்டுக் காப்பாற்றியவர்களும் பெற்றோர்களேயாவர். ஆகலால், பெற்றோர்மனப்படி புதல்வர் நடந்துவரவேண்டும். இவ்வாறு நடந்துவரின், பேரும், புகழும், பெருவாழ்வும் உண்டாம்.

உதாரணம்:—சந்திரவம்சத்தில் யயாதி என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்குத் தெய்வயானை சர்மிஷ்டை என்று இரு மனைவியர் இருந்தனர். இவர்களில் தெய்வயானை சுக்கிராசாரியாரது மகள். சர்மிஷ்டை விருஷபபர்வனது மகள். அரசன் இவர்களை மணப்பதற்குமுன், சர்மிஷ்டை தெய்வயானைக்குச்செய்த ஒருதீங்கு நிமித்தம், சுக்கிராசாரியர் சினந்து, அரசனைப்பார்த்து 'நீ சர்மிஷ்டையைத் தெய்வயானையைப்போலவே சகல சுகங்களையும் பெறச் செய்யலாம். ஆயினும், சயனவிஷயத்தில் அவளை விலக்கிவைக்கவேண்டும்' என்றுகட்டளையிட்டிருந்தார். அரசன்இதற்கிணங்கியே மணந்தும், அவன் ஒருநாள் தெய்வாதீனமாகச் சர்மிஷ்டையுடன் சேர்ந்தான். அதனால், கொஞ்சகாலத்தில் சர்மிஷ்டை புருவென்னும் சிறந்த பிள்ளையைப் பெற்றாள். சர்மிஷ்டையினிடம் பின்னும் இரண்டுபிள்ளைகள் உண்டானார்கள். தெய்வயானைக்கு இருபிள்ளைகள் உண்டாயினர். தெய்வயானை தன் சக்களத்திக்குக் குழந்தைகள் உண்டாயிருப்பதை அறிந்து பொறாமைகொண்டு, தன் தந்தையிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்தாள். சுக்கிராசாரியர் தம்மை அவமதித்ததற்காக வெகுண்டு, யயாதியைப் பார்த்து, 'உன்யௌவனகர்வமே இதற்குக் காரணம். ஆதலால், நீ மூப்பை அடையக்கடவாய்' என்று சபித்தார். உடனே யயாதி தொண்டு கிழவனாகித் தன்மாமனாரை வேண்டவே, அவர், 'நீ ஒருவாலிபனிடம் மூப்பைக்கொடுத்து, வாலிபத்தை மாற்றிக்கொள்ளும் சக்தி உனக்கு வரட்டும்.' என்றார். உடனே யயாதி தன் மக்கள் ஐவரையும் வரவழைத்து, யாரேனும் தன் மூப்பை வாங்கிக்கொண்டு இளமையைக் கொடுக்கும்

படி வேண்டினான். மக்கள் நால்வரும் அதற்கிசையவில்லை. உடனே பூருவென்பவன் மனமகிழ்ச்சியுடன் அதற்கிசைந்து, தன் இளமையைக் கொடுத்துத் தந்தையின் மூப்பைப் பெற்றான். பின்பு யயாதி தன்மகனை வியந்து, சில காலம் செங்கோல்செலுத்தி, மனைவிகளுடன் சுகமாகக் காலங்கழித்தான். அப்பால் அவன், தவத்தில் விருப்பங்கொண்டு, பூருவிடமிருந்து மூப்பைப் பெற்று, அவனைப் புகழ்ந்து, 'உன் புகழுடம்பு சூரியசந்திரர்கள் உள்ளவரை இருக்கும்' என்று ஆசீர்வதித்துத் தன் இராஜ்யத்தில் அவனுக்குப் பட்டம் கட்டித் தவஞ்செய்யச் சென்றான். தன் ஸௌகரியங்களை இழந்தாயினும் பெற்றோரை மகிழ்விக்கவேண்டும்.

“தொன்மை மறவேல்.”

“விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியாதார்.”

நாம் பழைமையான சிநேகத்தை ஒருபொழுதும் மறக்கக்கூடாது. பழைய சிநேகத்தை மறப்பது புல்லாத தொழிலாகும். பூர்வபுண்ணிய வசத்தினால் உயர் நிலைக்கு வரும்பொழுது பலர் தோழமையை இகழ்கிறார்கள். இது மிகத் தவறாகும். இதனால் விரைவில் கேடுண்டாகும். பழைய நண்பர்களிடத்துச் சிநேகம் நீங்காதவரே யாவராலும் கொண்டாடப்படுவர். செல்வச் செருக்காலாவது, கல்விச் செருக்காலாவது, மற்றெக் காரணத்தினாலாவது பழைய நட்பை மறந்து, நண்பர்களை உதாஸீனஞ்செய்பவர், அவமானத்தையும் துன்பத்தையும் அடைவர். உதாரணம் :—

முன்னொருகாலத்தில் அக்னிவேசமுனிவரிடம் துரோணரும் துருபதனும் வில்வித்தையை அப்பியாசஞ்செய்துகொண்டிருந்தனர். அந்த இருவருக்கும் வரவர நட்பு வளர்ந்துகொண்டு வந்தது. அப்பொழுது ஒருநாள் துருபன் துரோணரைப்பார்த்து, 'நண்பரே! என் தந்தை எனக்கு ராஜ்யத்தில் பட்டாபிஷேகஞ் செய்துவைத்ததும் அதில் பாதிராஜ்யம் உமக்குக் கொடுப்பேன்: இது ஸத்தியம்' என்று சொன்னான். பின்பு வில்வித்தை முடிந்ததும் அவன்தன் தேசத்திற்குச் சென்றான். அப்பால் துரோணர் தம் தந்தையின் கட்டளைப்படி கிருபி என்பவளை மணந்துகொண்டார். பிறகு அவர்க்கு அசுவத்தாமா என்ற ஒரு புதல்வன் உண்டானான். துரோணர் ஒரு சமயம் வறுமையின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் வருந்தினார். அப்பொழுது துருபதன் வாக்களித்தது அவர் நினைவிற்கு வந்தது. உடனே துரோணர் தம் மனைவியுடனும் புதல்வனுடனும் துருபதனிடஞ் சென்று, “புருஷச்ரேஷ்டனே! நான் உனது பழைய நண்பனல்லவா?” என்று சொன்னார். உடனே துருபதன் அவரை முன்பு அறியாதவன்போல், சிரித்துக்கொண்டு, “பிராமணரே! உமக்குப் புத்தி சரியாயில்லைபோலிருக்கிறது! அதனால்தான் என்னை ஸ்நேகிதனென்று துணிந்து பேசுகிறீர்: உலகில் மனிதன் முதிரும்போது நட்பும் தளர்வடைகின்றது; ராஜாக்களுக்குப் பொருளற்ற மனிதரோடு சிநேகமேது?” என்று சொன்னான். உடனே துரோணர் சமீபத்தில் நிறைவேற்றக்கூடிய ஒரு பிரதிஜ்ஞையைச் செய்துவிட்டு, தம் மனைவி மக்களுடன் அஸ்தினாபுரம் வந்துசேர்ந்தார். பிறகு அவர் கௌரவ பாண்டவர்களைச் சிஷ்யர்களாக அங்கீகரித்து, அவர்களை அஸ்திர சஸ்திர வித்தைகளில் தேர்ச்சிபெறச்செய்து, குருதக்ஷிணைக்காகத் துருபதராஜனை உயிரோடு பிடித்துவரும்படி கட்டளையிட்டனர். பின்பு கௌரவர்கள் பாஞ்சால தேசத்தை அழித்துக்கொண்டு துருபதனுடன் உக்ரமாகப்போர்புரிந்தனராயினும் பின் அவர்கள் சளைத்துப்போய் ஓடத்தொடங்கினர். அப்பால் அர்ச்சுனன், தன் சகோதரர்களுடன் துருபதனோடு வெகு உக்ரமாக யுத்தஞ்செய்து, முடிவில் துருபதனை மந்திரியுடன் பிடித்துவந்து துரோணர்முன்பு நிறுத்தினான். உடனே துரோணர் 'வீரனே! உன் நகரம் என்னால் பிடிக்கப்பட்டது; பாலியத்தில் ஸ்நேகிதனாயிருந்த நீ, வாக்குக்கொடுத்ததை நிறைவேற்றாததுமன்றி, என்னையும் அவமதித்தாய்: அரசனாயிராதவன் அரசனுக்கு நண்பனாகான் என்று நீ கூறினாயன்றோ? அதனாலேதான் நான் உனது ராஜ்யத்தைப் பறிக்க முயற்சி செய்தேன். ஆயினும், உனக்கு



ஒருவரம் கொடுக்கிறேன். அதாவது: ராஜ்யத்தில் பாதியை நீயடை; விருப்பமிருந்தால் என்னை நண்பனாகவும் கொள்' என்றார். துருபதன், “நண்பரே! நான் செய்த பிழையை மன்னிக்க வேண்டும்; தங்களுக்கு இக்காரியம் பெரிதன்று; நான் உம்முடைய நட்பை எப்பொழுதும் விரும்புகிறேன்' என்றான். பிறகு துரோணர் துருபதனை விடுவித்து மரியாதைசெய்து, பாதிராஜ்யத்தையும் கொடுத்தனுப்பினார். பழைமையான சிநேகத்தை மறப்பதனால் தீங்கு நேரிடும் என்பதை அறிக.

“கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்றும்,
மாறாநீர் வையக் கணி.”

மக்களாயிருப்பவர் பெற்றோர் இதைச் செய்யென்று கட்டளையிடுவதற்கு முன்பே அவர்தம் குறிப்பையறிந்து, அவர்களுடைய விருப்பங்களைப் பூர்த்திசெய்தல் வேண்டும். ஒருவனுடைய வாழ்க்கை மேன்மையடைவதற்குக் காரணம், அவனுடைய மக்கள் அவனது குறிப்பை அறிந்து ஒழுகுதலாம். இல்வாழ்க்கைக்கு அணிகலமாக இருப்பவர் நன்மக்களாம். ஆதலால், அம்மக்களில்லாவிடத்து இல்வாழ்க்கை சிறந்து விளங்குவதில்லை. மக்களாய்ப் பிறந்தவர் யாவரும் தமது தாய், தந்தையர் கட்டளையிடுவதற்கு முன் அவர் விரும்பிய காரியத்தைச் செய்துமுடித்தல்வேண்டும். இத்தகைய நன்மக்களே பேரும் புகழும் பெருவாழ்வும் பெறுவார்கள். உதாரணம்:—

காசியபமுனிவர்க்கு, கத்ரு வினதை என இருமனைவியர் இருந்தனர். அவ்விருவரும் பாற்கடலில் உச்சைசிரவம் என்ற வெண்குதிரை உண்டானபொழுது, உல்லாஸமாக அவ்விடம் சென்றனர். அப்பொழுது கத்ரு, வினதையைப் பார்த்து, “தோழி! உச்சைசிரவம் என்ன வர்ணம்? உடனே சொல்” என்றாள். அதற்கு வினதை 'உச்சைசிரவம் வெண்மையானதுதான்; நீ என்ன நினைக்கிறாய்?' என்று சொன்னாள். பிறகு கத்ரு, 'நான் அக்குதிரையின் வால் கறுப்பென்று நினைக்கிறேன்; நம்மில் தோற்றவள் ஜயித்தவளுக்கு அடிமையாகவேண்டும்' என்றாள். அதற்கு அவ்விருவரும் சம்மதப்பட்டு, 'நாளைத் தினம் அக்குதிரையைப் பார்ப்போம்” என்று தத்தம் வீட்டுக்குச் சென்றனர். பிறகு கத்ரு சக்களத்தியை வஞ்சகஞ்செய்ய நினைத்து, தன் ஆயிரம் பிள்ளைகளையும் பார்த்து, 'நான் அடிமையாகாவண்ணம் நீங்கள் மைபோல் கறுத்த வால்மயிர்கள்போலாகி அக்குதிரையைச் சீக்கிரம் அடையவேண்டும்' என்றாள். சில ஸர்ப்பங்கள் அக்கட்டளையை ஏற்றுக்கொள்ளவில்லை. உடனே கத்ரு 'ஸர்ப்பயாகத்தில் நீங்கள் மரிப்பீர்கள்' என்று சாபங்கொடுத்தாள். கார்க்கோடனும் சிலஸர்ப்பங்களும் அதற்கிசைந்து சென்றன. மறுநாள் பொழுதுவிடிந்ததும் கத்ரு வினதை இருவரும் குதிரையைப் பார்ப்பதற்காகக் கடலைத் தாண்டிச்சென்றனர். பின்பு இருவரும் குதிரையருகேசென்று பார்க்கவே அது உடலெல்லாம் வெண்மையாயும், வால் கருமையாயும் காணப்பட்டது. உடனே கத்ரு வினதையை அடிமையாக நியமித்தாள். வினதையும் வருத்தத்துடன் அடிமைத்தன்மையை ஏற்றுக்கொண்டாள். அப்பால் சிறந்த தேஜஸையுடைய கருடன் வினதைக்குப் புதல்வனாகப் பிறந்தனர். பிறகு கருடன் தன் தாயாருடன் கத்ருவின் ஏவல்களைச் செய்துவந்தார். ஒருநாள் கருடன் வினதையைப் பார்த்து, 'நாம் ஏன் கத்ருவின் ஏவல்களைச் செய்யவேண்டும்?' என்று கேட்க, அவள், 'என் மாற்றாள் பந்தயம்போட்டு ஏமாற்றி என்னை அடிமையாக்கிக்கொண்டாள்' என்றாள். உடனே கருடன் ஸர்ப்பங்களைப் பார்த்து, 'எதைக் கொண்டுவந்துகொடுத்தால் என் தாயின் அடிமைத்தனம் நீங்கும்' என்றார், ஸர்ப்பங்கள், 'நீ அமிருதத்தைக் கொண்டுவந்து கொடுத்தால் அடிமைத்தனம் நீங்கும்' என்றன. பிறகு கருடன் தாயிடம் விடைபெற்றுக்கொண்டு தேவலோகஞ்சென்று, தேவர்களிடம் யுத்தஞ்செய்து, அக்னி, ஸர்ப்பம் முதலியவற்றைத் தாண்டி, அமிருதத்தைக் கொண்டுவந்து, ஸர்ப்பங்களின் முன்பு தர்ப்பையைப் போட்டு வைத்தனர். உடனே ஸர்ப்பங்கள் 'வினதையின் அடிமைத்தன்மை நீங்கிவிட்டது' என்று வாக்களித்தன. பிறகு அவைகள் ஸ்நானஞ்செய்துவருதற்குமுன் அமிர்தத்தை இந்திரன் கொண்டுபோய் விட்டான். ஸர்ப்பங்கள் தாங்கள் செய்த மோசத்திற்காகப் பிரதிமோசம் செய்யப்பட்டதென்றறிந்து வருந்தின. பின்பு வினதை தன் புதல்வனது சாமர்த்தியத்திற்கு மெச்சி, அவனை ஆசீர்வதித்தனள். பெற்றோரின் குறிப்பறிந்து நடப்பதே புதல்வர்க்குப் பெருமைதரும்.

# Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### STORY TELLING.

### கதை சொல்லுதல்.

ஸமீபத்தில் வெளிவந்த 'ஜனவிமானி' யில், குழந்தைகளுக்குக் கதைசொல்லுவதில் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய சில விஷயங்களைப்பற்றியும், இதனால் அவர்களுக்கு ஏற்படும் பிரயோஜனங்களைப்பற்றியும் ஒரு நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

(1) கதையானது அவர்களுடைய புத்திக்கு எட்டுவதாயும், அவர்கள் அறியக்கூடியதாயும் மிகவும் பெரிதாயிராமலும் இருக்கவேண்டும்.

(2) கதையைக் குழந்தைகள் நன்றாய்க்கேட்டமாத்திரத்தில், அதன்சாராம்சம் இன்னதென்று தெரிந்து, மறுபடியும் அவர்கள் சொல்லும்படியான எளிய நடையில் அவர்களுக்குச் சொல்லவேண்டும். சில சமயங்களில் திரும்பச் சொல்லவேண்டியிருக்கும். அதனால் பிசகு கிடையாது. சொல்லுவது அவர்களுக்குத் தெரிந்து அவர்கள் அதை பின்தொடர வேண்டுமென்பதுதான் முக்கியம்

(3) கதையைச் சொன்னமாத்திரத்தில் சிறுவர்களினுடைய மனதில் ஒரு புத்திமதி ஏற்படவேண்டும். இந்தப் புத்திமதியைக் கதைக்கு முன்னேயாவது, அல்லது கதைசொல்லி முடிந்த மாத்திரத்திலாவது, குழந்தைகளுக்குத் தெரிவிக்கக்கூடாது. அவர்களிடமிருந்து இதை வாங்கவேண்டும். முதன்முதலில் சொல்லத் தவறினாலும், உடனேயாவது சொல்லும்படி இரண்டொரு கேள்விகளைக் கேட்கவேண்டும். அப்படிக் கேட்டும் சொல்லத்தவறினால், கதையை அவர்கள் நன்றாய் அறியவில்லை என்பது ஏற்படும்.

(4) மேலும், கதைகள் சொல்லும் நீதியானது எப்பொழுதும் குழந்தைகளுக்கு வேண்டிய புத்தியைக் கொடுக்கக்கூடியதா யிருக்கவேண்டியது அவசியம். உதாரணமாக "பொய்சொல்லக்கூடாது; உண்மையே பேசவேண்டும்" முதலியனவைகள்.

(5) இந்தப் புத்திமதிகள் அவர்களால் அநுஷ்டிக்கக்கூடியவையாயும், அவர்களுடைய புத்திக்கு எட்டக்கூடியவையாயு மிருக்கவேண்டும். சிறுபிள்ளைகளுக்கு "ப்ரம்ம" ஸ்வரூபத்தைக் குறித்து உபதேசிப்பதில் பிரயோஜனமில்லை.

(6) நீதி வாக்கியங்களெல்லாம் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கக்கூடாது: இன்றைக்குத் தாயார் சொல்வதைக்கேட்கவேண்டுமென்றும் மறுநாள் அதற்கு விரோதமாயும் ஒரு கதை சொன்னால், பிள்ளைகளுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் இரண்டையும் விட்டுவிடுவார்கள். அல்லது அவர்களுக்குத் தோன்றியபடி செய்வார்கள்.

(7) அவரவர்கள் வயதுக்குத் தகுந்தபடி நீண்டதாயும், அனாவசியமான வர்ணனைகளினாலும், கதைக்குச் சம்பந்தமில்லாத வர்ணனைகளாலும், முக்கியமான விஷயத்திலிருந்து விலகிப் போகாமலும் இருக்கவேண்டும். அப்படிக்கில்லாவிட்டால், அனாவசியமான வர்ணனைகளில் பையன்களுடைய புத்தி சென்று கதையின் முக்கிய பாகத்தை அவர்கள் மறந்துவிடுவார்கள்.

(8) கதைகளைக் குழந்தைகளுக்குச் சொல்லுவதில் நன்மைக்கு நன்மையும், தீமைக்குத் தீமையும் பலனை அமைந்துள்ள கதைகளையே தெரிந்தெடுத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு உலகத்தின் அநுபவம் இன்னும் ஏற்படவில்லை. அவர்களுடைய மனது நமுதும் நல்ல எண்ணங்களுடன் கூடினதாயு மிருக்கும். நன்மை செய்தால்தான் நன்மை விளையும்; ஆகையினால் நாம் நன்மையையே செய்யவேண்டுமென்பது அவர்கள் மனதில் நன்றாய் ஏற்படவேண்டியது. இல்லாத விஷயத்தில் அவர்கள்மனது கலங்கி இஷ்டப்படி செய்யத் தொடங்கிவிடுவார்கள்.

கதையைக் கேட்டமாத்திரத்திலே குழந்தைகளினுடைய மனதில் அனாவசியமான பயமும், கெடுதலும் உண்டாகக்கூடாது. நாம் செய்யும் காரியங்களினுடைய லாப நஷ்டங்களை நாமே அநுபவிக்கவேண்டியது. நல்லது செய்தால் நல்லது விளையும், கெடுதல் செய்தால் கெடுதல் விளையுமென்பது தவிர, மற்றபடி கெட்ட நம்பிக்கைகளை அவர்கள்மனதில் உண்டாக்கக்கூடிய கதைகளைச் சொல்லவேகூடாது.

சில குழந்தைகளுக்குச் சில வகைக் கதைகளிலே தான் பிரியமிருக்கிறது. ஆகையினால் குழந்தைகளுக்கு எந்தக் கதைகளில் பிரியம் ஏற்படுகிறதோ அந்தமாதிரிக் கதைகளைச் சொல்லி அவர்களை உத்ஸாகப்படுத்தவேண்டுமே தவிர, நமக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் சொல்லுவது கூடாது.

குழந்தைகளுக்குப் பால்யவயதில் சொல்லும் கதைகள் சுகமும் உத்ஸாகமும் அதிகப்பட்டவையாயும் கஷ்டம் மிகவும் குறைந்தவையாயு மிருக்கவேண்டும். ஏனென்றால், உத்ஸாஹந்தான் குழந்தைகளின் தேஹவளர்ச்சிக்கு முக்கிய காரணமாயிருக்கிறது.



கதைகள் படிப்பதனால் ஏற்படும் பிரயோஜனங்கள் சில வருமாறு:—

(1) சிறுவர்களினுடைய பாஷாஞானத்தைக் கதைகள் அதிகப்படுத்துகின்றன. ஒரு கதையைப் பையன்களுக்குத் தெரியும்படி கறுப்புப் பலகையில் வியக்தமாய் எழுதிவிட்டால், அதைப் பார்த்துப் பிள்ளைகள் நன்றாய் அறிந்துகொள்வார்கள் கதையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆசையினால் பாஷையையும் அதன் வார்த்தைகளையும் நன்றாய் அறிந்துகொள்ளுகிறார்கள்.

(2) கதைகள் மூலயாக அநேக விஷயங்களைப் பிள்ளைகளுக்குச் சுலபமாய்க் கற்பித்துவிடலாம். காட்டு மிருகங்களைப் பற்றியும் செடி முதலானவைகளைப் பற்றியும், மற்றுமுள்ள அநேக விஷயங்களைப் பற்றியும் அவர்கள் அறிந்துகொள்ள இடமுண்டு

(3) சொன்ன கதைகளைத் திரும்பச் சொல்வதனால் அவர்களுக்குச் சொல்லும் திறமை விருத்தியாகின்றது.

கதை சொல்பவர்கள் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன:—

(1) அடுத்த வகுப்பில் அவர்கள் வாசிக்க வேண்டிய விஷயங்களை இப்பொழுது கதை ரூபமாய்ச் சொல்ல வேண்டியது. இதுதான் கான்ஸென்ட்ரிக் ஸிஸ்டம் (Consentric System) என்னும் ஏற்பாட்டின் கொள்கை.

(2) கதை சொல்லும் சமயத்தில் பையன்களின் முகத்தையே பார்த்துக்கொண்டிருக்க வேண்டியது, அவர்களுக்குச் சொல்லுவது விளங்குகிறதா என்று பார்த்துக்கொண்டே இருக்கவேண்டும்.

(3) கதைகளில் உண்டாகும் விஷயங்களை நன்றாய் நடித்துக் காட்டவேண்டும். சிரிக்கவேண்டிய சமயத்தில் சிரித்தும், அநுதாபம் காட்டவேண்டிய சமயத்தில் அநுதாபத்தைக் காட்டியும் சொல்லவேண்டும்.

(4) இப்படிச் செய்வதற்குக் கதைகளைப் புஸ்தகங்களிலிருந்து படிக்காமல், தானே சொல்லவேண்டும். சொல்லும் சமயத்தில் விநோதமாகக் காணப்படும் பேச்சு வழக்கங்களும் சைகைகளும் ஏற்படாமல் சொல்ல வேண்டும். ஏனென்றால், பிள்ளைகள் உபாத்யாயருக்கு ஏற்பட்டுள்ள சைகைகளையும் பேச்சுவழக்கங்களையும் கவனித்துக்கொண்டிருப்பார்கள். கதையை விட்டுவிடுவார்கள்.

(5) கதை சொல்லுபவர்கள் தெளிவாயும், பையன்களுக்கு விளங்கும்படியாயும் பேசவேண்டும். மத்தியில் பிள்ளைகளைக் கேள்விகள் கேட்கக்கூடாது. அப்படிச் செய்வதனால் முன் சொன்னதற்கும் பின் சொல்லப்போவதற்கும் உண்டான சம்பந்தம் மறந்துவிடும். ஆனால், பிள்ளைகள் யாராவது கேள்வி கேட்டால். அதற்குமட்டிலும் பதில் உடனே சுருக்கமாய்ச் சொல்லவேண்டியது. இல்லாவிடில், பையன்களுக்கு மேலே ஓடாது, அனாவசியமானவும், கதைக்குச் சம்பந்தமில்லாதவுமான கேள்விகளைக்கேட்கவிடக்கூடாது.

### METHODS OF TEACHING GEOGRAPHY TO CHILDREN.

### சிறுவர்களுக்குப் பூகோளசாஸ்திரம் போதிக்கும் முறைகள்.

உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குப் பூகோள சாஸ்திரத்தை ஜனசமூக சம்பந்தமாகவும், சரித்திர சம்பந்தமாகவும், சாஸ்திர சம்பந்தமாகவும் போதிக்கும் விஷயமாய் கவனிக்கவேண்டிய சில குறிப்புக்கள், "விவேக சிந்தாமணி"யில் பின்வருமாறு காணப்படுகின்றன

ஜனசமூக சம்பந்தமாய்ப் போதிப்பதில் கவனிக்க வேண்டியவை.

(1) ஒரு தேசத்தாரின் குணகுணங்களை அத்தேசத்தின் இயற்கை விசேஷணங்கள் எவ்வாறு பாதிக்கின்றனவென்று விளக்கவெடுத்துக் கூறவேண்டும். உதாரணமாக உஷ்ணப் பிரதேசங்களில் வசிக்கும் ஜனங்கள் சீதள தேசங்களில் வசிக்கும் ஜனங்களைவிட பலக்குறைவுபட்டு மனவலிமையற்றிருக்கிறதை யெடுத்துக் காட்டி அது என்ன காரணத்தினாலென்று விளங்கச் சொல்லவேண்டும். சீதள தேசத்திலுள்ள ஜனங்கள் அதுவும் கடற்கரை யோரமாயுள்ளவர்கள் அதிகப் பயிர் பச்சை யில்லாமையால் கடலில் சென்று அநேக அபாயங்களுக்குட்பட்டு மீன்பிடித்தல் முதலிய தொழில்களால் தங்கள் இறை தேடவேண்டியிருத்தலாலும் எப்போதும் குளிர், காற்று, பனிக்கட்டி, காட்டுமிருகங்கள் இவற்றால் விளையும் கொடுமைகளைச் சகித்தும் வென்றும் உயிர்வாழ வேண்டியது அவசியமாயிருப்பதாலும் அவர்கள் இக்காரணங்களால் தேகபலம், மனோவலிமை, கஷ்டங்களைத் தாங்கும்திறம் முதலிய அடைகிறார்கள். சீதள தேசங்களில் உள்ளவர்களுக்கு இயற்கையாயுண்டாகும் ஆபத்துக்கள் கஷ்டங்கள் உஷ்ணப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு இல்லாமையால் தேகபலமும் தைரியமுமின்றி அதிக உழைப்புக்கு ஆற்றாதவர்களாயிருக்கிறார்கள்.

(2) பூமியின் இயற்கையாலும் ஜனங்களின் குணங்கள் பாதிக்கப்படுமென்றும் அது எப்படி யென்றும் காட்டவேண்டும். நீர்வளம் நிலவளமில்லாத தேசத்திலுள்ளவர்கள் புஞ்சைபூமியை உழுது பயிர் செய்து அது கொடுக்கும் சொற்ப பலனைக்கொண்டு

ஜீவிக்க வேண்டியவர்களா யிருப்பதால் அவர்கள் அதிக உழைப்பும் ஊக்கமும் பொறுமையும் அந்நிய சகாயத்தை எதிர்பார்க்காத தீரமுமுள்ளவர்களாகிறார்கள். அப்படிக்கின்றி செழிப்பான பூமியில் வசிப்பவர்கள் அவர்களுடைய சொற்ப உழைப்பும் அவர்களுடைய தேவைக்கு மிஞ்சின பலனைக்கொடுப்பதால், ஊக்கமும் விடாமுயற்சியு மற்றவர்களாய் மனோதீரமற்று தாங்கள் தலையிடும் எந்தக்காரியத்திலும் அந்நிய சகாயத்தை எதிர்பார்க்கும் தன்மையாளர்களாகிறார்கள்.

(3) உஷ்ணப் பிரதேசங்களில் ஜீவவர்க்கங்களும் மூலவர்க்கங்களும் பிரகாசமாய் பலவர்ணங்களோடு விளங்குகின்றதனால் அப்படிப்பட்ட தேசங்களிலுள்ள ஜனங்கள் கண்ணுக்குப் பகட்டான வர்ணங்களிலும் அலங்காரங்களிலும் பிரியமுள்ளவர்களாக யிருக்கிறார்கள். சீதோஷ்ணம் சமகுணமாயிருக்கும் தேசங்களில் செடிகொடி மரங்கள் புஷ்பங்களும் பிராணிகளும் மங்கலான நிறமுள்ளவைகளா யிருப்பதால் அங்குள்ள ஜனங்களும் மங்கல் நிறமானவற்றையே அதிகமாக விரும்பி அவர்களுடைய உடை முதலியவற்றில் அவ்விதநிறத்தையே இச்சிக்கிறார்கள். உதாரணமாக இந்தியாவிலுள்ளவர்கள் பல வர்ணங்கள் பிரகாசிக்கும் உல்லாச உடைதரிக்கப் பிரியப்படுவது அவர்களைச் சுற்றியுள்ள இயற்கைக் காக்ஷிகள் பிரகாசமாய் கண்ணுக்குப் பகட்டாயும் மனதுக்கு உல்லாசமாயுமிருப்பதைப் பார்த்து உண்டானதென்றும், வெள்ளைக்காரர்கள் மந்தமான மங்கல்நிற உடைகள் தரிக்கப் பிரியப்படுவது அவர்கள் தேசத்தில் காணப்படும் இயற்கைக் காக்ஷிக்கு ஒத்ததாயிருக்கிறதென்றும் எடுத்துச் சொல்லவேண்டும்.

(4) நடையுடைகளில் மட்டுமன்றி பேச்சுவார்த்தைகளிலும் அந்தந்தப் பிரதேசங்களின் சுபாவ விசேஷங்களுக்குத் தக்கபடி மாறுதல்கள் காணப்படும். கண்ணுக்குப் பகட்டாய் மனதுக்கு உற்சாகம் கொடுக்கும்படியான காக்ஷிகள் ஸ்வபாவமாய்க் காணக்கூடிய இடங்களில் ஜனங்களுடைய பேச்சுவார்த்தைகளும் அவர்களுக்குள் வழங்கும் கிரந்தங்களும் அலங்காரங்களும் வர்ணனைகளும் நிறைந்து விளங்கும். இயற்கைக் காக்ஷி சாதாரணமாகவிருக்கும் சீதோஷ்ணம் சமகுணமாயிருக்கும் தேசங்களில் ஜனங்களுடைய பேச்சுவார்த்தைகளும் அவர்கள் செய்யும் கிரந்தங்களும் வீண் அலங்காரங்கள் ஒன்றுமின்றிச் சுத்தமாய் விஷயமென்னவுண்டோ அதைமட்டும் வெளியிடும் சுபாவமுள்ளதாயிருக்கும். இதை கிரந்தங்கள், காவியங்களின் மாதிரியைக் கொண்டும் சாதாரண பேச்சு வார்த்தைகளில் பொறுக்கியெடுத்த சில உதாரணங்களைக்கொண்டும் விளக்கிக்காட்டலாம்.

(5) ஒவ்வொரு தேசத்துக்கும் இயல்பாய் அமைந்துள்ள விசேஷ குணங்களால் அந்தந்தத் தேசத்திலுள்ள ஜனங்களின் குணாகுணங்கள் பாதிக்கப்படுவதன்றி, தேச அமைப்புக்களின் மாதிரியால் ஒரு தேசத்தார் இதர தேசத்தோடு எவ்வளவுதூரம் கலந்து பழக நேரிட்டதென்பது ஏற்படுகிறது. ஆகையால் உலகத்தார் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகுவதற்கு ஆஸ்பதமான வழிகள் பாதைகள் இவற்றை நன்றாக அறியவேண்டும். சமுத்திரத்தில் கப்பல் போகும் மார்க்கத்திலுள்ள தேசங்களும் 'காவன்கள்' என்னும் வியாபாரக் கூட்டத்தார் போகும் பாதையிலுள்ள தேசங்களும் பரதேசத்தார்களுடைய கூட்டுறவால் விசேஷ பலனடைந்து நாகரிக விருத்தியடைய ஹேதுவாயிருக்கும் இந்தச்சாதகத்தோடு அத்தேசங்களுக்குப் பாதகமுமுண்டு. வியாபாரவழியிலிருப்பதனால் அதிக ஆசையும் அதற்கேற்ற ஊக்கம் பராக்கிரமுமுள்ளவர்கள் அந்நாட்டில் தங்கள் அதிகாரம் செல்லவேண்டி அவைகளைக் கைப்பற்றப் பார்ப்பார்கள். மலைகள் பாலைவனங்கள் தேசத்துக்குள் எதிரிகள் வராமல் பாதுகாக்க சாதகமாயிருப்பதோடு அவை இதர தேசங்களோடு போக்குவரத்துக்கிடமின்றிச் செய்கின்றன. இப்படிப்பட்ட விசேஷங்களையெல்லாம் பிள்ளைகள் அறிய எடுத்துச்சொல்ல வேண்டும்.

சரித்திர சம்பந்தமாக நோக்குவதில் பின்வரும் அம்சங்களைக் கவனிக்கவேண்டும்.

(1) உறவாகவாவது பகையாகவாவது ஒரு தேசத்தாருக்கும் இதர தேசத்தாருக்குமுண்டான சம்பந்தங்கள். உதாரணமாக இந்தியாவிற்கும் 'கிரீஸ்' முதலிய தேசத்தாருக்கும் ஆதியிலிருந்த வியாபார சம்பந்தம், அதனாலுண்டான பலன், மகம்மதியர்கள் படையெடுப்பினால் ஹிந்து நாகரிகம் விருத்தியடைவது நின்று பின்னடைந்தது. பிறகு, ஐரோப்பிய வியாபாரிகள் மூலமாக இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்குமுண்டான சம்பந்தம். இந்துக்கள் சமுத்திர யாத்திரை செய்வதைவிட்டு தூரதேசங்களுக்குப்போய் அன்னிய தேசத்தாரோடு கலந்துறவாடாமல் தங்கள் தேசத்திலேயே நின்றதால் அவர்களுக்குண்டான பலக்குறைவு, கெடுதி முதலியன; இவை போன்றவைகளையெடுத்துச் சொல்லலாம். ஒரு இராஜதானியைப்பற்றிச் சொன்னால் அதற்கும் அதையடுத்துள்ள பிரதேசங்களுக்கு முண்டான சம்பந்தங்களைப்பற்றியும் மற்ற விசேஷங்களைப் பற்றியும் அதேமாதிரி சொல்லலாம்.

(2) உலகத்தில் நடந்த பெரிய யுத்தங்கள்; அவைகளாலுண்டான மாறுதல்கள். யுத்தமுறையில் முற்காலத்துக்கும் தற்காலத்துக்குமுள்ள வித்தியாசம், பூர்வ



காலப் படத்தையும் தற்காலபடத்தையும் ஒத்துக்காட்டி அவைகளிலுண்டான பெரியமாறுதல்களையும், தேச எல்லைகள் நமது பெற்றோர் அல்லது பாட்டனார் காலத்திலிருந்ததற்கும் அவை தற்காலமிருப்பதற்குமுள்ள வித்தியாசத்தைக்காட்டி ஒரு தலைமுறையிலுண்டான மாறுபாடுகள் இவ்வளவென்று எடுத்துக்காட்டவேண்டும்.

சாஸ்திர சம்பந்தமாக நோக்குவதில் பின்வரும் அம்சங்களைக் கவனிக்கலாம்.

(1) சீதோஷ்ண சக்கரங்கள் பலவற்றிலும் வசிக்கும் பிராணிகளைப் பற்றிய விவரங்கள்: உதாரணமாக ஐஸ்லாண்ட் 'தீவு' அதன் பூமி விசேஷணம், அங்கே பனிக்கட்டி யுறைந்திருப்பதும், அங்கே வசிக்கும் ஜனங்களின் ஜீவனவகை, அவ்விடத்திலுள்ள பிராணிகளின் பேர், குணம், மற்ற விவரங்கள் முதலியனவும் சொல்லவேண்டும். இப்படியே சீதோஷ்ணம் சமகுணமாயிருக்கும் தேசங்களில் விசேஷமாய் வசிக்கும் பிராணிகளும் அவைகளைப் பற்றிய விவரங்களும் உஷ்ண சக்கிரத்தில் விசேஷமாயுள்ள பிராணிகளின் பேர் முதலியனவும் மற்ற விவரங்களும்,. ஒவ்வொரு வகை தேசத்திலும் ஜனங்கள் வசிக்கும் மாதிரி முதலிய விவரங்களும் பிள்ளைகளுக்குத் தெரியும்படி செய்ய வேண்டும்.

(2) உஷ்ணம், சீதளம் இவைகளைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து, எரிமலைகள், கொதிப்புகள், பூகம்பங்கள் முதலியனவைப்பற்றியும். மலைகள், கொடுமுடிகள், ஆலாங்கட்டிக் குவியல்கள், பனிக்கட்டிகள் முதலியனவைப்பற்றியும் சொல்லிக்கொண்டு போகலாம்.

(3) வெளிச்சம், இருட்டு என்பதைத் தொட்டுக் கொண்டு மத்தியரேகையிலிருந்து வடக்கேயாவது தெற்கேயாவது போகப்போக பகல் இரவு இவற்றின் காலம் பருவ காலத்துக்குத் தக்கபடி மிக வித்யாசப்பட்டு வரும் விதமும் அதன் காரணமும் சொல்லிக்கொண்டு போகலாம்

(4) சமுத்திர யாத்திரை, திசை காட்டும் கருவி; நக்ஷத்திரங்களைப்பற்றி அந்தந்தத் தேசத்தில் விளங்கும் பழங்கதைகள், புராணங்கள் இவைகளைப்பற்றிச் சொல்லலாம்.

மேலே குறிப்பிட்ட அம்சங்கள் மட்டுமல்லாமல் இன்னும், ஒரு தேசத்தில் முக்கியமான கைத்தொழில்கள் என்ன, அவை எங்கே ஸ்திரமாக ஏற்பட்டிருக்கின்றன வென்றும் விஷயம் வரும்பொழுது அந்தக் கைத்தொழில்கள் குறித்த இடத்தில் ஏன் விசேஷமாக விருத்தியாகவேண்டும்; அவை அங்கே அபிவிருத்தியடைவதற்குக் காரணமாயிருக்கும் சாதகங்கள் எவை, அந்தச் சாதகங்கள் எப்படி மற்ற எல்லா விஷயங்களையும் விட அந்த இடத்தில் அதிகமாய் ஏற்பட்டிருக்கின்றன முதலிய விவரங்களைத் தெளிவாக உபாத்தியாயர் பிள்ளைகளுக்குப் போதிக்கலாம்.

---

## Notes.

## குறிப்புக்கள்.

### Paper Manufacture in India.

இந்தியாவில் காகிதச் செய்தல்:—சென்ற 1915-ம் வருஷக்கடைசியில் இந்தியாவிலிருந்த மொத்தக் காகிதச்சாலைகள் 11. அவற்றில் 4,665 பேர்கள் வேலைசெய்து வந்தனர். இச்சாலைகளில் 1915-ம் வருஷத்தில் 600,000 பவுன்கள் மதிப்புள்ள 30,361 டன்கள் காகிதம் செய்யப்பட்டது. இந்தியாவில் இப்போது 80,000 டன்கள் காகிதம் செலவாகின்றதென்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. இவற்றில் 50,000 டன்கள் அன்னியநாடுகளினின்று தருவிக்கப்படுகின்றன. இப்போது நடக்கும் யுத்தம் ஆரம்பமானபிறகு இந்தியத் தொழிற்சாலைகள் முன்னை செய்துவந்ததைவிட 5000 டன்கள் அதிகமாகச் செய்ய ஆரம்பித்தன.

இந்தியாவிலிருக்கும் காகிதச் சாலைகளுக்கெல்லாம் மிகப்பெரியது டிடாகர் பேபர் மில் கம்பெனி. இக் கம்பெனிக்காரர்களுக்கு டிடாகர்என்னுமிடத்திலும்கான்கிநாரா என்னுமிடத்திலும் ஆக இரண்டு தொழிற்சாலைகள் இருக்கின்றன. இந்த இரண்டு சாலைகளிலும் வருஷம் 1-க்கு 15,000 டன்கள் வரை காகிதம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இக்கம்பெனிக்கு அடுத்தபடியுள்ளது ராணிகஞ்சு என்னுமிடத்திலிருக்கும் பெங்கால் பேபர் மில். இச்சாலையில் பிரதிவருஷமும் 6,700 டன்கள் காகிதம் செய்யப்படுகின்றன. மூன்றாவதாக வருவது லக்நோவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அப்பர் இந்தியா பேபர் மில் கம்பெனி. இதில் வருஷந்தோறும் 2,500 டன்கள் காகிதம் செய்யப்படுகின்றது.

### Instruction in Ancient days.

முற்காலத்திய கல்விப் பயிற்சி:—மதுரை மாணவர் கல்விச் சங்கத்தின் மீடிங்கு ஒன்றில் மிஸ்டர் வி. பி. மாதவராவ் அக்கிராசனம் வகித்து பேசும்போது

முற்காலத்தில் இந்திய மாணவர்கள் எவ்விதம் கல்வி பயின்றார்கள் என்பதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்:—

குருவும் சிஷ்யர்களும் ஒரேயிடத்தில் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு வசித்துவந்தார்கள். உபாத்தியாயர்களே தங்கள் மேலான கல்வியறிவாலும், ஒழுக்க முறைகளாலும் மாணவர்களுக்கு வழிகாட்டிகளாக விளங்கினார்கள். பரிசுத்தமான வெளிகளில் வசித்து வந்ததால் அவர்கள் மூளைக்குச் சுறுசுறுப்பும் சரீரத்துக்குப் பலமும் சௌக்கியமும் ஏற்பட்டன. மாணவர்கள் குருவினிடத்தில் கொண்ட பக்தியாலும், ஐக்கிய பாவத்தாலும் அவர்கள் நல்லொழுக்கத்தையும், விரிவான உணர்ச்சிகளையும் பெற்றார்கள். பிறகு அவர்களுக்குக் கல்வியறிவும், சமஸ்கிருத பாஷை ஞானமும் தெளிவாக ஏற்பட்டன. இந்த ஏற்பாடுகளை நாம் இப்போது கையாளக்கூடுமா என்பதையும், அவை தற்காலத்திற்குப் பொருந்துமா என்பதையும் ஆலோசனை செய்து அவற்றைக் கைக்கொள்ளவேண்டும்.

## Colour Photography.

வர்ண போடோகிராப் — புகைப்படம் அல்லது உருவப்படம் எடுக்கும் விஷயத்தை பலரும் அறிவார்கள். இதில் உருவத்தின் பலவர்ணங்களும் அப்படியே விழுவதில்லை; ஆனால், இப்போது அமெரிக்காவில் ஒருவர்; வர்ண போடோ எடுக்கும் முறைகளைப் புதிதாகக் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிகின்றது. காலக்கிரமத்தில் இம்முறையைக்கொண்டு உருவம் எந்தவர்ணங்களைக் கொண்டிருக்கின்றதோ அந்த வர்ணங்களுடனேயே அவ்வுருவம் அமைக்கப்படும்.

## Prevention of Drink.

குடியைத் தடுத்தல்:—குடியினால் வரும் கேடுகளை வாய்விட்டுச் சொல்ல முடியாது. எவ்வளவோ ஏழை ஜனங்கள் தங்கள் சொற்பப் பொருள்களையும் குடிகாரணமாய் ஒழித்துவிட்டுத் தத்தம் மனைவி மக்களை உண்ணச் சோறின்றிப் பரிதபிக்கச் செய்கின்றார்கள். இத்தீமையை ஒழிக்கும்பொருட்டு மைசூர் மகாராஜ சமுகத்தார் ஓர் புதிய ஏற்பாட்டைச் செய்ய உத்தேசித்திருக்கின்றார்கள். இந்த ஏற்பாட்டின்படி குடியின் அபிவிருத்தியானது ஒருவாறு தடுக்கப்படுமென்று நம்பப்படுகின்றது. இந்த ஏற்பாடானது: குடிப்பவர்களில் ஒவ்வொருவரும் ஏதோ கொஞ்சம் பணம் செலுத்தி ஒரு குறித்த காலத்திற்குத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டுமாம். அவ்விதம் செய்து கொள்ளுகிறவர்கள் தினம் ஒன்றுக்கு இவ்வளவு அளவு சாராயம் வாங்கிக் கொள்ளலாமென்று ஒரு அனுமதிச் சீட்டு கொடுக்கப்படுமாம். இவ்வாறு குடிப்பவர்களுக்கு ஒரு பந்தம் ஏற்படுத்திக் குடியை அதிகமாகப் பரவச் செய்யாமலிருக்கும்பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பது மிகவும் மெச்சத் தக்கதே. இம்முயற்சி ஆரம்பத்தில் பலன் கொடுக்காவிடினும், பிறகு அதனால் நன்மையடைவோமென்பதில் ஐயமில்லை.

# Books and Reviews.

# புத்தகங்களும், விமர்சனங்களும்.

## Our Small Enemies.

நமது சிறிய சத்துருக்கள்:—கும்பகோணம் டாக்டர் எஸ். சந்திரசேகர் என்பவரிடமிருந்து "நமது சிறிய சத்துருக்கள்" என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இந்நூலில் ப்ளேக், காலரா, மலேரியா முதலான வியாதிகளைப்பற்றி விஸ்தாரமாக எழுதப்பட்டுள்ளன. இவ்வியாதிகளை உண்டாக்கக்கூடிய கிருமிகளைப் பற்றியும் அவை எவ்வாறு உற்பத்தியாகி மனிதர்களைத் தாக்குகின்றனவென்பதைப்பற்றியும் தெளிவாக எழுதியிருப்பது பலருக்கும் மிகுந்த உபயோகமாயிருக்கும். இவ்வியாதிகள் உண்டானகாலத்தில், அவற்றிற்கான சிகித்ஸைகளும், இன்னும் இவை சம்பந்தமாய்ப் பல விஷயங்களும் நன்கு இந்நூலில் கூறப்பட்டுள்ளன. ஒவ்வொருவரிடத்திலும் இப்புத்தகம் இருக்கவேண்டியது அவசியமாகும். இதன் விலை அணா 6. வேண்டுவோர் டாக்டர் எஸ். சந்திரசேகர், கும்பகோணம் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## Kalvi.

கல்வி:—மதுரையினின்று வெளியாகும் "கல்வி" என்னும் மாசாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் சில பிரதிகள் நமது பார்வைக்கு வந்துள்ளன. இது ஆர். எஸ். நாராயணசாமி ஐயர், பி. ஏ. பி. எல். அவர்களின் பத்திராதிபத்தியத்தின் கீழ் நடத்தப்பட்டு வருகின்றது. இப்பத்திரிகையில் நாம் அவசியம் அறியவேண்டிய பல விஷயங்களும் வெகு தெளிவாக எழுதப்பட்டு வருகின்றன. எத்திறத்தாருக்கும் இப்பத்திரிகையானது உபயோகமாகயிருக்குமென்பதில் ஐயமில்லை. இதன் வருஷசந்தா ரூபாய் ஒன்றுதான். வேண்டுவோர்: எஸ். நாகராஜய்யர், ப்ரொப்ரைடர், மதுரை டிரேடிங் கம்பெனி, மதுரை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## Valliammai Kummi.

வள்ளியம்மை திருக்கலியாணக் கும்மி:—இப்பெயர்கொண்ட ஒரு சிறு புத்தகம் நமது பார்வைக்கு வந்துள்ளது. இதில் ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் வள்ளியம்மையை மணந்த விவரம் கும்மிகளாக வெகு நேர்த்தியாகப் பாடப்பட்டிருக்கின்றது. ஸ்திரீகளுக்கு இப்புத்தகம் மிகவும் உபயோகமாயிருக்குமாதலால், அவர்கள் ஒவ்வொருவரும் இதை வாங்கிப் படிப்பது அவசியமாகும். இதன் விலை அணா ஒன்று. வேண்டுவோர்: A. குப்புசாமி ஐயர், ஆரணி (N. A. Dist.,) என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



The Rt. Hon'ble Mr. E. S. MONTAGU.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 22 DEC 1917 MADRAS


# ஜனோபகாரி.

**(JANOPAKARI.)**

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புத்தகம் 2. Vol. II. | பிங்களஞு கார்த்திகைமீ, NOVEMBER 1917. | சஞ்சிகை 11. No. 11.


## The Development of Mining Industry in Japan

### ஜப்பானில் சுரங்கத்தொழிலின் அபிவிருத்தி.

ஜப்பான் தேசத்தின் அபிவிருத்தியானது சென்ற ஐம்பது வருஷங்களுக்குமுன் இருந்தது போலல்லாமல், இப்போது பலதுறைகளிலும் முற்போக்கடைந்திருக்கின்றது. அந்தப் பற்பல தொழில்களும் நன்கு விருத்தியடைந்து நல்ல பலனைக் கொடுத்துவருகின்றன. இராஜாங்கத்தார் தொழில் முயற்சிகளை ஆதரிப்பதும், அவர்களுடன் ஜனங்களின் கூட்டுறவுமே இதற்குக் காரணமென்று சொல்லப்படுகின்றது. சுமார் ஐம்பது வருஷங்களுக்குமுன் இத்தேசத்தில் சுரங்கத் தொழிலானது மிகவும் தாழ்வான ஸ்திதியில் இருந்தது. அக்காலத்தில் இராஜாங்கத்தாருக்கு அங்குக் கனிஜப்பொருள்கள் என்னென்ன கிடைக்குமென்று தெரியாமலிருந்தது. மேலும், அவர்களுக்குப் பூகர்ப்ப சாஸ்திர சம்பந்தமாய் ஆராய்ச்சிகள் செய்ய அவ்வளவாகத் தெரியாமலிருந்ததனால், இத்தொழில் அபிவிருத்தியடைய ஹேதுவில்லாமலிருந்தது. ஆழமாகச் சுரங்கங்களைத் தோண்டிப் பொருள்களை எடுக்கப் பிரயத்தனம் செய்யப்படாமலேயே யிருந்தது. இத்தொழிலுக்காக உபயோகிக்கப்பட்டுவந்த ஆயுதங்களும் மிகச்சொற்பம்; அவை அபிவிருத்தி செய்யப்படாமலேயே யிருந்தன. வெடிகளை வைத்துக் கல்லுகளை உடைப்பதானது எவருக்கும் தெரியாமலேயே யிருந்தது. ஒவ்வொரு அற்பவேலையையும் மிக்க சிரமத்துடனேயே செய்துவந்தார்கள். இதனால், சுரங்கங்களினின்று கிடைக்கக்கூடிய வருமானம் மிகவும் சொற்பமாகவேயிருந்தது.

பிறகு கொம்மடோர் பெரி (Commodore Perry) என்பவர், ஜப்பான் தேசத்துக்கு வந்து பார்த்த பத்துவருஷங்களுக்குள் சுரங்கத்தொழிலானது காலக்கிரமத்தில் அபிவிருத்தியடையத் தொடங்கியது. அப்போது அத்தேசத்தை ஆண்டுவந்த மன்னவர், அன்னிய நாடுகளினின்று சுரங்கத் தொழிலின் நிபுணர்களை வரவழைத்து, அந்தப் பூகர்ப்பசாஸ்திர சம்பந்தமாய்ப் பல ஆராய்ச்சிகளைச் செய்யவும், ஜப்பானியர்களுக்குச் சுரங்கத் தொழிலை நூதன முறைகளில் போதிக்கவும் ஏற்பாடு செய்தார். இதற்காக அமெரிக்காவிலிருந்து இரண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, ஜப்பானைச் சேர்ந்த வடக்கேயுள்ள ஒரு தீவில் வேலை ஆரம்பிக்கப்பட்டது. இந்த நிபுணர்கள், அங்கு ஏராளமாகக் கனிஜப் பொருள்கள் இருக்கக்கண்டார்கள்; கல்லுகளை உடைக்க வெடிகளையே உபயோகப்படுத்தினர்

கள்; இன்னும் பல நூதனக்கருவிகளைக் கொண்டும் ஆராய்ச்சி செய்து வந்தார்கள்.

இதற்குப்பின், 1868-ம் வருஷம் முதற்கொண்டு தேசத்தில் தொழிலபிவிருத்தியின் அவசியமானது நன்கு பரவலாயிற்று. அமெரிக்கா, இங்கிலாந்து முதலான நாடுகள் இரும்பையும் நிலக்கரியையுங்கொண்டே தமது தொழில்களை அபிவிருத்திசெய்து முன்னுக்கு வந்திருப்பதனால், அவ்வாறே தாமும் முற்போக்கடையச் சுரங்கப்பொருள்கள் அவசியமெனக்கருதி, அத்தொழிலின் அபிவிருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்யலாயினர். இதற்காக அன்னியநாடுகள் பலவற்றினின்றும் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு, நூதன முறைகளில் தொழிலைச் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவர்கள் இத்தொழில் சம்பந்தமாய்ப் பல ஆராய்ச்சிகளைச் செய்து, அதை அபிவிருத்தி செய்ததுடன், பல ஜப்பானியச் சிறுவர்களையும் அன்னியர்களின் உதவியின்றித் தாங்களே எல்லாவற்றையும் கவனிக்கப் பழக்கிவந்தார்கள்.

கவர்ன்மெண்டார் சுரங்கத்தொழிலின் அபிவிருத்திக்காகப் பல தொழிற் பள்ளிக்கூடங்களை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார்கள். இதன்படி முதன் முதல் 1871-ம் வருஷத்தில் சுரங்க வேலைகளுக்கான எஞ்சினீர்களைத் தயார் செய்வதற்குத் தொழிற் கல்விச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. பிறகு பல யூனிவர்ஸிடிகளிலும் இத்தொழிலைப் பற்றிப் போதிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவை தவிர, தேசத்தின் பலபாகங்களிலும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றில் சுரங்கத் தொழில் சம்பந்தமான எல்லா விஷயங்களும் ஜப்பானியச் சிறுவர்களுக்குப் போதிக்கப்பட்டன. இவர்கள் நூதன முறைகளில் கல்வி பெற்றும், சமயம் வாய்த்தபோதெல்லாம் சுரங்கங்களிற் போய்ப் பழகியும் வந்தார்கள்.

சுரங்க வியவகாரங்களைக் கவனித்து வரும் இலாகாதார் டோக்யோவில் ஆராய்ச்சிச் சாலையொன்றை ஸ்தாபித்து, அதில் பல நிபுணர்களைக்கொண்டு கனிஜப்பொருள்களை ஆராய்ச்சி செய்து வந்தார்கள். இன்னும் அவர்கள் அமெரிக்கா முதலிய மேல்நாடுகளுக்கு ஜப்பானியச் சிறுவர்களைச் சுரங்கத்தொழிலுக்குத் தேவையான எஞ்சினியரிங் படிப்புப்படிக்க அனுப்பி வந்தார்கள்.

கவர்ன்மெண்டார் இவ்வாறு சுரங்கத் தொழில் கற்கும் மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங் கொடுப்பதும், அவர்களை அன்னிய நாடுகளுக்கு அனுப்புவதும் தவிர, தாங்களே பல சுரங்கங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றில் நூதன யந்திரங்களை ஸ்தாபித்து, பொது ஜனங்களுக்கு ஒரு வழிகாட்டியாகச் செய்து வந்தார்கள். இவ்விதம் கொஞ்சம் நாள் நடத்திவந்து, அவை நல்ல நிலைமையில் வந்தபிறகு, அவற்றை ஜனங்களிடம் ஒப்பித்துவிட்டார்கள். இவ்வாறு ஜனங்கள் வசம் கிடைத்த சுரங்கங்கள் ஏராளமான லாபத்தை கொடுத்து வருகின்றன.

ஜப்பான் தேசமானது அதிக மலைகளுடையதாதலால், அருவிகளும் நீர் வீழ்ச்சிகளும் அதிகமாயுள்ளன. இவற்றினின்று மின்சாரம் முதலான சக்திகளை உற்பத்தி செய்து, அவற்றைத் தொழில் முயற்சிகளுக்கு வெகு லாபகரமாக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

சுரங்கங்களில் வேலை செய்யும் கூலிக்காரர்களில் சுமார் 14 வயதுள்ள ஆண்கள் தினம் 1-க்கு ரூ. 1 வரையிலும், ஸ்திரீகள் 7 அணா வரையிலும்; 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் 5½ அணா வரையிலும், சிறுமிகள் 4 அணா வரையிலும் கூலி பெறுகிறார்கள்.

சுரங்கத்தில் வேலைக்காரர்களுள் எவராவது கிடைசென்று இறக்க நேரிட்டால், அவர்களுடைய மனைவி மக்களுக்கு முதலாளிகள் பண உதவி செய்வதன்றி, சுரங்க வேலை காரணமாக எவருக்காவது தேகத்தின் அங்கங்கள் சேதப்பட்டால், அப்படிப்பட்டவர்களுக்கு உதவிசெய்து அவர்களின் சிகிச்சைப் பொறுப்பையும் தாங்களே ஏற்றுக்கொள்ளுகிறார்கள்.

முதலாளிகளுக்கும் வேலைக்காரர்களுக்கும் மனஸ்தாபம் நேரிடுவது மிகவும் அபூர்வம்.



வேலைக்காரர்களின் நன்மையைக்கோரி அவர்களின் மக்களுக்காகப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, அவர்களுக்குக் கல்வி பயிற்றுகிறார்கள். இன்னும் கூலிக்காரர்களுக்கு வேண்டிய எல்லாச் சௌகரியங்களையும் முதலாளிகள் கவனித்து வருகிறார்கள்.

இதனால், சுரங்கங்களில் வேலை செய்யும் கூலிக்காரர்கள் நாளுக்கு நாள் அதிகப்பட்டுவருகிறார்கள். சுமார் இருபது வருஷங்களுக்குமுன் வேலைசெய்து வந்தவர்களைவிட இப்போது அதிகமானவர்கள் வேலை செய்து வருகிறார்கள். 1896-ம் வருஷத்தில் 118,517 பேர்கள் சுரங்கங்களில் வேலை செய்து வந்தார்கள். ஆனால், 1913-ம் வருஷத்தில் 262,163 பேர்களாக வேலை செய்து வந்தார்கள்.

ஜப்பானில் சுரங்கப் பொருள்களின் உற்பத்தி நாளுக்குநாள் அதிகப்பட்டு வருகின்றது. 1887-ம் வருஷத்தில் 10,000,000 பவுன் மதிப்புள்ள சுரங்கப் பொருள்கள் எடுக்கப்பட்டன. இதன் பிறகு, 1914-ம் வருஷத்திற்குள் இவை 15 மடங்கு அதிகப்பட்டன. அதாவது: 153,000,000 பவுன் மதிப்புள்ள சுரங்கப் பொருள்கள் வெட்டி எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் காலக்கிரமத்தில் இவற்றின் உற்பத்தி அதிகப் பட்டுக்கொண்டேயிருக்கின்றது. எத்தொழிலிலும் இராஜாங்கத்தாரின் ஆதரிப்பும் ஜனங்களின் கூட்டுறவும் இருந்தால், தொழில் சித்தி பெறுவதற்குச் சந்தேகமென்ன?

## The Nursing of Sick Animals.

## வியாதிப்பட்ட கால்நடைகளைப் போஷித்தல்.

வியவசாயிகள் தங்கள் தொழில்களைச் சரிவரச் செய்வதற்குக் கால்நடைகளே ஆதாரமாயிருக்கின்றனவாதலால், அவர்கள் அவற்றை வெகு ஜாக்கிரதையுடன் போஷித்துவரவேண்டும். கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் அதிக வேலையினாலோ, தொற்று வியாதியினாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தினாலோ அவை வியாதிப்பட நேர்ந்தால், அவற்றின் வியாதியை வெகு நுட்பமாகக் கவனித்து, அதற்கான சிகிச்சைகளைச் செய்யவேண்டும். செய்யப்படும் சிகிச்சைகள் வியாதிக்குத் தக்கபடியிருக்க வேண்டும். வியாதியின் தன்மையை அநுசரித்து மிதமான ஆகாரம் காலந்தவறாமல் கொடுத்தல், காலக்கிரமத்தில் சரியான அளவு மருந்து கொடுத்தல் ஆகிய பல விஷயங்களையும் வெகு சிரத்தையுடன் கவனிக்கவேண்டும்.

வியாதிப்பட்ட கால்நடைகள் குடிக்கும் தண்ணீரும், சுவாசிக்கும் காற்றும் மிகவும் சுத்தமாயிருக்கவேண்டும். அவைகளுக்கு வெகு சீக்கிரத்தில் ஜீர்ணமாகக்கூடிய ஆகாரத்தையே கொடுக்கவேண்டும். ஏனெனில், வியாதியின் காரணமாக ஜீர்ணக்கருவிகள் பலஹீனமடைந்திருக்கக்கூடும். அப்படி இலகுவில் ஜீர்ணிக்கமுடியாத ஆகாரத்தைக் கொடுப்போமாகில், இதனால் வியாதி அதிகரிக்க ஹேதுவாகும். ஆதலால், கால்நடைகள் சொஸ்தமாயிருக்கும்போது கொடுக்கப்படும் ஆகாரத்தையே வியாதிப்பட்டபிறகும் கொடுக்காமல், இலகுவில் ஜீர்ணித்துக் கொள்ளக்கூடிய ஆகாரத்தையே கொடுக்கவேண்டும்.

கால்நடைகள் வியாதிப் பட்டிருக்கும்போது, அவற்றிற்கு அதிகமான ஆகாரத்தை ஒரே தடவையில் வைப்பதைவிட ஐந்து அல்லது ஆறு மணிக்கு ஒருமுறை கொஞ்சங்கொஞ்சமாக வைப்பது நல்லது. சில சமயங்களில் இக்கால்நடைகளுக்கு வைத்த ஆகாரத்தை அவை உட்கொள்ளாவிடில், அதை அப்படியே வைத்திருந்து இரண்டாம்முறை கொண்டுவராமல் வேறு புதிதாகச் செய்த ஆகாரத்தையே வைப்பது உத்தமம்.

கால்நடைகள் வியாதிப்பட்டிருக்கும்போது, பலமான ஆகாரத்தை உட்கொள்ளாதிருப்பத

னால், அவற்றின் வியாதி தீரும்தருவாயில் அவற்றிற்குப் பசியின் தீபனம் அதிகமாயிருக்கும். அப்போது, அவை அருகிலுள்ள அனைத்தையும் தின்றுவிடும். இதனால், அவற்றிற்கு மறுபடியும் அஜீர்ணம் ஏற்பட்டு அவை மிக்க தொந்தரையை யடையும். விவசாயிகளும் தம் அறியாமையினால், வியாதியின் காரணமாக மெலிந்துள்ள தங்கள் கால்நடைகளுக்குப் புஷ்டியுண்டாகும்பொருட்டு அதிகமான ஆகாரத்தைப் போடுகிறார்கள். இது தவறு. இதனால் அஜீர்ணம் உண்டாய் மீண்டும் வியாதி ஏற்படக்கூடும்.

கால்நடைகளைக் கட்டி வைக்கும் இடமானது எப்போதும் சுத்தமாகவே யிருக்கவேண்டும். அவ்விடத்தில் சேரும் சாணி, குப்பை முதலியனவற்றை அவ்வப்போது வெளிப்படுத்தி மிகவும் சுத்தியாய் வைத்திருக்கவேண்டும். தொழுவங்கள் அசுத்தமாயிருந்தால், அங்குப் பரவியிருக்கும் காற்றும் அசுத்தப்பட்டுப் போகின்றது. இவ்விதம் அசுத்தமான காற்றை கால்நடைகள் சுவாசிப்பதனால், அவை பல வியாதிகளுக்குள்ளாகின்றன. முக்கியமாக வியாதிப்பட்ட கால்நடைகளை இவ்விதத் தொழுவங்களில் கட்டிவைத்தல் கூடாது. இதனால் வியாதி குறைவதுபோய் உக்கிரமேயாகும். ஆதலால் எப்போதும் வியாதிப்பட்ட கால்நடைகளை மிகவும் சுத்தமானதும் போதிய வெளிச்சமுள்ள இடத்திலேயே கட்டி வைக்கவேண்டும். கொஞ்சம் சூரிய வெப்பம் தங்குதலும் உத்தமம். ஏனெனில், சூரிய வெப்பத்தினால் விஷக்கிருமிகள் நாசமடைகின்றன; துர்க்கந்தம் ஒழிகின்றது; ஆகாயம் சுத்தமடைகின்றது.

சாதாரணமாக விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்கு இராக்காலங்களில் படுக்கைக்காக வைக்கோல் கூளங்கள், தழைகள் முதலியனவற்றை உபயோகித்தால் அவை எருவுக்கு ஆதாயமாகின்றதென்பதைச் சென்றமாதத்துப் பத்திரிகையில் குறிப்பிட்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் எருவின் லாபத்தைக்கருதி இவ்விதம் செய்யாவிடினும், வியாதிப்பட்ட கால்நடைகளுக்குச் சௌக்கியமுண்டாகும்பொருட்டாவது செய்வது அவசியமாகும். அவற்றிற்குப்போடும்படுக்கையானது மெத்தென்றிருக்கவேண்டும். காடுமுரடாயிருக்குமானால் கால்நடைகளுக்குக் காயமுண்டாகும்.

கால்நடைகளுக்குக் காய்ச்சல் முதலான வியாதிகள் உண்டானால், அப்போது அவற்றிற்குப் போர்வையை உபயோகிக்கவேண்டும். குளிர்ச்சியாயிருக்கும் சமயத்திலும் இவ்விதம் செய்ய வேண்டியது அவசியமாகும். பிரதிதினமும் அவற்றின் போர்வையை நீக்கி வைக்கோல் கொண்டு தேகத்தைத்தேய்த்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

வியாதிகண்ட கால்நடைகள் சில சமயங்களில் அசக்தியினால் ஒரே பக்கத்தில் படுத்திருப்பதுண்டு. அப்போது அவற்றை மெதுவாக மறுபுறம் புரட்டிவிடுவது நல்லது. மற்றும் மரத்துப்போன அங்கங்களைத் தடவிக்கொடுத்து இரத்தவோட்டம் உண்டாகும்படி செய்யவேண்டும். கால்நடைகள் வாயற்ற ஜீவனானபடியால், அவற்றின் தேவைகளை நாம் நன்கு கவனித்து, வேண்டிய சிகிச்சைகளைச் செய்யவேண்டும்.


### தமிழ்ப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஔவை | 0 | 6 | 0 |
| நம் அருந்தமிழ் மொழியில் சிறந்த நீதிநூல்களையும், தனிப்பாடல்களையும் அருளிச்செய்து உலகத்தை உய்வித்த ஔவையாரின் திவ்விய சரித்திரம். பல நூல்களைத் தழுவியும் புலவர்களின் கர்ணபரம்பரையை அனுசரித்தும் எழுதப்பட்டது. | | | |
| காரைக்காலம்மை சரிதை | 0 | 1 | 0 |
| கற்பிலும் ஈசுவரபக்தியிலும் சிறந்த பெண்மணியும், சிவனடியார் அறுபத்து மூவரில் ஒருவரும் தெய்வக் கவிஞருமாகிய காரைக்காலம்மை என்னும் புனிதவதியாரது இனிய சரித்திரம். | | | |
| விநோதரஸமஞ்சரி | 1 | 2 | 0 |
| த்ரேவி சரித்ரம் | 1 | 0 | 0 |
| கோபாலகிருஷ்ணகோகலே | 0 | 8 | 0 |

மானேஜர், ஜநோபகாரி ஆபீஸ், வேலூர்.




# Krishnadevaraya.

(A. D. 1484—1524.)

BY MR. K. P. SESHADRI AIYANGAR,
*Teacher, Muthialpet High School, Madras.*

## கிருஷ்ணதேவராயன்.

கிருஷ்ணதேவராயனது முதல் விவாகத்தைப் பற்றிச் சென்ற வைகாசி மாதத்திய பத்திரிகையில் விவரமாகச் சொல்லியாய்விட்டது. இந்தச் சமயம் அவனது இரண்டாம் விவாகத்தைப்பற்றிச் சற்று ஆராய்வோம்:—

முன்னமேயே ராயன் 1515 கி. பி. யில் தென்தேசத்திலுள்ள ராஜ்யங்களைக் கைப்பற்றப் புறப்பட்டான் என்று சொல்லியுள்ளோம். அவ்விதம் திக்விஜயம் செய்து, கொண்டவீடு, பெல்லம்கொண்டா, வினுகொண்டா, பெஜவாடா, கொண்டபல்லி, ராஜமஹேந்திரி இவைகளைப் பிடித்துக்கொண்டான்; விசாகப்பட்டணம் ஜில்லாவைச்சேர்ந்த பீமலிப்பட்டணம் என்னும் நகரத்துக்கு 10 மைல் தூரத்திலுள்ள போதனூர் என்ற இடத்தில் ஒரு பெரிய கல்தூண் நாட்டினான்; அதில் தான் பகைவரைக் கொன்று வெற்றிமாலை பூண்டு கைக்கொண்ட நாடுகளைப் பற்றிய விவரங்களைப் பொறிப்பித்தான்; அதே ஜில்லாவிலுள்ள வீரவல்லி தாலூகாவைச் சேர்ந்த வாடாதியையும் தன் ராஜ்யத்துடன் சேர்த்தான்; இந்தப் பிரதேசங்களையெல்லாம் தன் ஆளுகையின்கீழ் அடக்கியபின்னர், ஒரிஸ்ஸாவிற்குச் சென்றான்; அது அவன் பகைவனது ராஜ்யமானதால், அதன் ராஜதானியாகிய கட்டக் என்ற இடத்திற்குச் சென்று, அதை எரிக்கிரையாக்கினான். அந்தப் பிரதேசத்துக்குக் கலிங்கராஜ்யம் என்று பெயர். அதற்குப் பிரதாபருத்ரன் என்பவன் அதிபதி. அவன் தன் ராஜதானியைத் தீக்கிரையிடப் படுவதினின்றும் காப்பாற்றக் கிருஷ்ணதேவனிடம் சென்று, தன் மகளைக் கல்யாணஞ்செய்து கொடுக்கச் சம்மதிப்பதாகச் சொன்னான். கிருஷ்ணதேவராயன் மகிழ்ச்சிகொண்டு தீயை அணைத்துவிட்டான். தான் ஜயித்த நாடுகளெல்லாவற்றையும் கலிங்கனுக்குப் பிரியத்தினால் கொடுத்துவிட்டான்.

### கிருஷ்ணதேவனது புனர் விவாகம்.

பிரதாபருத்ரன் தன் புத்திரிக்கும் விஜயநகரவாசனுக்கும் விவாகம் செய்விக்கப்போவதாக யாவருக்கும் மணவோலை அனுப்பிவிட்டான். தன் குமாரத்தியிடமும் இச்சமாசாரத்தைச் சொல்லியிருந்தான். அவளுக்கு ஜாதியில் இழிஞனை கிருஷ்ணதேவனை மணக்க இம்மியும் இஷ்டமில்லை. தகப்பனோ, கட்டாயத்தின்மீது கல்யாணம் செய்துவிடுவான் போலிருந்தது. இவையெல்லாவற்றையும் நன்றாக யோசித்துப் பார்த்து, கடைசியில் ஒரு முடிவுக்கு வரலானாள். தான் கிருஷ்ணதேவனை முதலிற் கொன்றுவிட்டுத் தானும் தன் வாளுக்கு இரையாய் விடுவதுதான் நல்ல யுக்தியென்று தீர்மானித்தாள். தன்னுயிரினும் மேலாகப் பாவித்துவந்த தன் ஸ்நேகிதையிடம் இத்தீர்மானத்தைச் சொல்லி இரகசியமாக வைத்துக்கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டாள். அந்தத்தோழி தன் வீட்டை அடைந்ததும் அடையாததுமாகத் தன் ஸ்நேகிதையிடம் ராஜகுமாரியின் தீர்மானத்தை வெளியிட்டாள். அவள் தன் பிராண ஸ்நேகிதையிடம் சொன்னாள். இவ்விதம் அரசகுமாரியின் தீர்மானம் யாவருக்கும் தெரிந்துவிட்டது.

ஒரு விஷயத்தை இரகசியமாக வைத்துக்கொள்ள ஸ்திரீகளால் முடியாது. எது இரகசியமாக இருக்கவேண்டுமென்று எண்ணுகிறார்களோ அதுதான் முதலில் பகிரங்கமாகிவிடும். ஸ்திரீகளுக்கும் ரகசியத்துக்கும் வெகுதூரம்.

பிரதாபருத்ரனது புத்திரியின் தீர்மானம் திம்மரசுவின் காதிற்கும் எட்டியது. கிருஷ்ணதேவராயன் விவாகத்திற்காக மங்களஸ்நானஞ்செய்து

விட்டு, விரதக்கோலத்தை அனுசரித்துக்கொண்டிருந்தான். திம்மரசு இதற்கு என்னசெய்வதென்று ஆலோசிக்கலானான்; கிருஷ்ணதேவனிடம் சென்று இரகசியமாக அவனுடைய உயிர் ஆபத்திலிருக்கிறதென்றும், ராஜகுமாரியின் தீர்மானம் இன்னதென்றும், அதினின்றும் மீளவேண்டுமாயின் தான் சொல்லும் விதம் செய்யவேண்டுமென்றும் விவரமாகச் சொன்னான். தான் உரைக்கும் வண்ணம் செய்தால் ஜயிப்பது திண்ணம் என்று உறுதி கூறினான்.

பதினெண் வாத்யங்கள் தாம்தாம் என முழங்க; ராஜகுமாரியின் சங்குபோன்ற கழுத்தில் கிருஷ்ணதேவராயன் திருமங்கல்யதாரணம் செய்தான். மாலையும் அணிந்தது. இவ்விராஜதம்பதிகள் சயனிப்பதற்கு ஹம்சதூலிகாமஞ்சம் முதலியவைகள் அலங்காரம் செய்யப்பட்டன; அப்போது அப்பாஜி ஒரு சூழ்ச்சிசெய்தான். அது மிகவும் சிலாகிக்கத்தக்கதோர் யுக்தியே. கிருஷ்ணதேவனைப்போல் ஒரு பெரிய உருவம் செய்து, அதனுள்ளே தேனைக் கொட்டிவைத்தான். அப்பதுமையை மஞ்சத்தின்மீது படுக்கவைத்து, அதன்மீது போர்வைகளைப் போர்த்துவைத்துவிட்டு, தான் அம்மஞ்சத்தின்கீழ் என்ன நடக்கிறதோ பார்ப்போமென்று பதுங்கியிருந்தான். இவ்விதம் ஒளிந்துகொள்வதற்கு முன், சேடிகளிடம் ராஜன் அதிக சிரமமடைந்திருப்பதனால் அவருக்கு அதிகமாகத் தொந்தரை கொடுக்கவேண்டாம் என்று அப்பாஜி சொல்லிவிட்டிருந்தான். அந்தச் சேடிகளுக்கெல்லாம் ராஜகுமாரியின் இரகஸ்யம் தெரியாததலால், அரசன் தூங்குவது அவர்களுக்குச் சாதகமாயிற்று. மணமகள் ஆபரணாலங்க்ருதையாய் மெதுவாகச் சயனக்ருஹத்தை அடைந்தாள். பள்ளியறைக்குள் காலை வைத்ததும், தோழிகளெல்லோரும் சென்றுவிட்டனர். மணமகள் தனியாக அவ்வறையிலிருப்பதாக உணர்ந்தாள். தான் ஆடையினுள் மறைத்துவைத்திருந்த கட்கத்தை எடுத்து, கட்டிலின்மீது படுக்கவைத்திருக்கும் அரசப்பதுமையை அரசனென்றே எண்ணி, ஓரேவீச்சில் வெட்டிவிட்டாள். அதனுள்ளிருந்த தேன் வேகமாகத் தெறித்தது. அப்படித் தெறித்த தேனின் ஒரு துளி மணமகளின் வாயில் விழுந்தது. 'அந்தோ! பெரிய பாவியானேனே! மதம்பிடித்த யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப்போட்டுக் கொள்வதேபோல், நானே எனக்குக் கெடுதிகளைச் சம்பாதித்துக்கொண்டேனே! இவ்வளவு இனிமை பொருந்திய நாதனைக் கூடி வாழாமே, மந்தபுத்தியினால் கொன்றேனே! எனக்கு இந்தப் பாப கிருத்தியத்திற்கு எந்த லோகந்தான் கிடைக்குமோ! அறிகிலேன். ஐயோ! 'பெண்புத்தி பின்புத்தி' வாஸ்தவமே. என் நாதனை உயிருடன் காணப்பெறின், அவரது வாக்குக்கு எதிரிடையின்றி வாழ்வேன்' என்று சொல்லும்போது, திம்மரசு பதுங்கியிருந்த இடத்திலிருந்து மெதுவாக அவளை அணுகி, 'இனி கணவன் மீது பூர்ணமாக அன்புகொண்டு இனிது வாழ்ந்திருப்பதாக வாக்குறுதிசெய்தால், உன் நாதனை நான் உயிருடன் கொண்டுவருவேன்!' என்றான். அப்போது அவள் திடீரென்று எதிரில் ஒரு மனிதன் நிற்பதைக்கண்டு, சில நிமிஷநேரம் ஒன்றுந் தோன்றாது ஸ்தம்பித்து நின்றுவிட்டாள். பிறகு தன்னெதிரில் நிற்பவன் தன் மந்திரி என்று தெளிந்து, மிகவும் நாணியவளாய், 'இனி ஒருபோதும் இத்தகைய சாகசத்தைச் செய்யேன்; என்னுயிர் இவ்வுடலைவிட்டு நீங்கும் பரியந்தம் என் நாதனுக்குத் தொண்டு பூண்டொழுகுவேன். இக்ஷணமே என் நாதனும் துரையை நான் காணவேண்டும். எங்கிருக்கிறார் என்பதையாவது சொன்னால், நானாகவே சென்று காணலாம்' என்று தன் பிராணநாதனைக் காண மிகவும் மனங்கொண்டாள். அவளது வேண்டுகோளுக்கிரங்கி, அப்பாஜி பக்கத்தறையில் படுத்திருக்கும்படி செய்த கிருஷ்ணதேவனைத் தன்னுடன் பள்ளியறைக்கு அழைத்துவந்தான். தன் நாதனைக் கண்டதும், அவள் நமஸ்காரஞ்செய்து, தான் செய்த துஷ்கிருத்யத்திற்குத் தன்னை க்ஷமிக்க வேண்டினாள். ஸதிபதிகளிருவரும் ஒருவர்க்கொருவர் கொஞ்சமும் மனஸ்தாபமில்லாமல் ஒருமித்த மனத்தராய், உயிரொன்றும் உடலிரண்டுமாய் அன்னியோன்யபாவத்துடன் இருப்பதாக அப்பாஜிக்கு உறுதிமொழியளித்தனர். இவ்வுறுதிமொழியைக் கேட்டு அப்பாஜி வெளியே சென்றான். இதன்பிறகு ராஜதம்பதிகள் பூவும் மணமும்போல் மனமொருமித்த காதலராய் வாழ்ந்துவந்தார்கள்.



கிருஷ்ணதேவனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தனரென்னும் விஷயம், அவன் எழுதிய 'விஷ்ணு சித்தீயமு' என்னும் தெலுங்கு கிரந்தத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. முதல் திக்விஜயம் செய்யப் புறப்படும்போது, சிம்மாசலத்திற்குச் சென்று, அங்குள்ள தேவாலயத்திற்கு அநேக மானியங்கள் விட்டான். இதன் உண்மையை அத்தேவாலயத்திலுள்ள ஏழாவது கல்தூணில் பொறித்திருக்கும் சாசனத்திற் காணலாம்.

"மஹாராஜாதிராஜ பரமேச்வர, மூருராயர கண்ட, அரிராய விஜய பாஷெகு தப்புவராயர கண்ட, யவனராஜ்ய, சமஸ்த பாணுராசிய, வீரப்ரதாப, கிருஷ்ணதேவ மஹாராயலு விஜய நகரத்தை ராஜ்ய பரிபாலனம் செய்துகொண்டிருக்கும்போது, உதயகிரி, கொண்டவீடு, கொண்டபல்லி, ராஜமஹேந்திரி இவைகளை எதிர்த்து ஜயித்துப் பிறகு சிம்மாத்ரிக்குச் சாலி சகம் 1438 அதாவது 1516 கி.பி.யில் தாதுவருஷம் சித்திரை மாதம் கிருஷ்ணபக்ஷம் ஏகாதசி திதியில் விஜயம் செய்தார். அப்பொழுது, தன்மாதா நாகதேவம்மாவும் தன் பிதா வீரநரசராயரும் மோக்ஷசாம்ராஜ்யமடையவேண்டிப் பகவானுக்கு 991 நல்முத்துக்களாலாகிய பெரியதோர் ஹாரமொன்றையும், ஒருஜதை வைரவளையல்களையும், சங்கு சக்ரப்பதக்கங்களையும் 2000 வராகனெடையுள்ள பெரிய பொன் தட்டொன்றையும் பகவானது பாதாரவிந்தத்திற் சேர்த்தார். சின்னதேவி மூலமாக 500 வராகனெடையுள்ள ஒரு தங்கப்பதக்கமும் தன் இளையமனைவி திருமலதேவம்மா மூலமாக அதே யெடையுள்ள மற்றதோர் பதக்கமும் பகவானது சரணாரவிந்தங்களில் சமர்ப்பித்தார்."

மநுசரித்ரம் என்னும் கிரந்தத்தில் இவரைப் பற்றிய விஷயங்கள் செய்யுள்களால் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இவரது பிரபாவமெல்லாம் பாரிஜாதாபஹரணம் என்னும் நூலில் பரக்கக் காணலாம். இந்தப் பாரிஜாதாபஹரணம் என்னும் நூல், இவருக்கும் இவரது பத்னிக்கும் நிகழ்ந்த ஊடலைத் தணிக்க ஒரு புலவர் பெருமான் எழுதினார்; அதில் கிருஷ்ணதேவனது வெற்றியைப்பற்றியும் வீரதீர பராக்ரமச் செய்கைகளைப்பற்றியும் விரிவாக விஸ்தரிக்கிறார்.

கிருஷ்ணதேவனது தென்னிந்திய ராஜ்யம் மிகவும் விஸ்தாரமானது. அவ்வளவு விஸ்தீர்ணமுள்ள பிரதேசம் எந்த ராஜாக்களாலும் பரிபாலிக்கப்படவில்லை. கோல்கொண்டா, வாரங்கல் இவ்விரண்டுங்கூட அவனது ராஜ்யத்துக்குட்பட்டிருந்தன. தென்னிந்திய சக்ரவர்த்திகளில் முதன்மையானவனும், அதிவீரதீரபராக்ரமசாலியும், புத்திமானும் கிருஷ்ணதேவனே. அவன் சிறந்த ராஜதந்திரி; மனுநீதி தவறாது ராஜ்யத்தை ஆண்டுவந்தான்; சரியான சட்ட திட்டங்கள் ஏற்படுத்தியிருந்தான். தான் ராஜதானியில் இல்லாவிட்டாலும் ராஜாங்கம் சரிவர நடந்தேறிவந்தது. எந்த யுத்தரங்கத்திற்குச் சென்றாலும், அபஜயம் என்று திரும்பினவனல்லன் கிருஷ்ணதேவன். முற்றுகையிட்ட பிரதேசத்தைத் தன்வசம் சேர்த்துக் கொள்ளாமலிருந்ததேயில்லை. அவன் எவ்வளவுக்கெவ்வளவு பராக்கிரமசாலியாக இருந்தானோ, அவ்வளவுக்கவ்வளவு கல்வியிலும் நிபுணனாயிருந்தான்; அநேக பண்டித சிரோமணிகளை ஆதரித்துவந்தான். தெலுங்கு பாஷையை விருத்திசெய்வதில், ராஜ்யங்களைப் பிடிக்க எவ்வளவு பணஞ் செலவழித்தானோ, அவ்வளவுக்குமேல் திரவியத்தைச் செலவழித்தான். அவன் ஒரிஸ்ஸாவின் கஜபதிகளையும், அஸ்வபதியின் முகம்மதியர்களையும் தெலுங்கு நரபதிகளையும் ஒருங்கே வென்றான். ஆகவே, மூருராயரகண்ட என்ற கன்னடப் பட்டத்தைப் பெற்றான். அந்தக் கன்னடபதத்திற்கு மூன்று அரசர்களின் நாயகன் என்று அர்த்தம். கிருஷ்ணதேவனுக்கு அத்தகைய பட்

டப்பெயர்கள் அனந்தமுண்டு. அவன் விஜய நகரத்திற்கருகே துங்கபத்திரை நதிக்கு ஒரு அணைகட்டினான்; சமாதானமாயிருக்குங் காலத்திலும், சண்டையாயிருக்குங் காலத்திலும் தானே ராஜ்ய கார்யங்களைப் பார்த்துவருவான். அவன், தன் தகப்பனுக்கும் தனக்கும் மந்திரியாயும், தன் பிராணனை அநேகந்தடவைகளில் ரக்ஷித்தவனுமுள்ள அப்பாஜியினால் அதிகமான கௌரவத்தை அடைந்தான். அந்த அப்பாஜி தான் கிருஷ்ணதேவனது ஆயுள் முழுதும் மந்திரி ஸ்தானத்தை வகித்திருந்தான். ராயன் இறப்பதற்கு முன் ஆறுவருஷங்களுக்கு முன்தான் இம்மந்திரி காலஞ்சென்றான்.

### கிருஷ்ண தேவனது கவித்திறமை.

கிருஷ்ணதேவன் ஆந்திர பாஷையில் வல்லவன்; பற்பல காவ்யங்களை இயற்றும் ஆற்றலைப் பெரிதும் கொண்டவன். ஆகவே, அவனுக்கு "ஆந்திரபோஜன்" என்ற வேறொரு பெயரும் உண்டு. போஜன் எவ்விதம் சம்ஸ்கிருத பாஷையை ஆதரித்து விருத்தி செய்தானோ, அவ்விதம் கிருஷ்ணதேவன் தெலுங்கு பாஷையை ஆதரித்து விருத்தி செய்தான். அவன் சம்ஸ்கிருதத்திலும் கவிபாடும் திறமையைப் பெற்றவன். ஆனால், அவன் எழுதிய சம்ஸ்கிருத நூல்கள் இப்பொழுது காணக்கிடையா. அவன் சம்ஸ்கிருதத்தில் என்னென்ன செய்தானோ அதனைத் திண்ணமாகக் கூறவியலாது. ஆனால், தெலுங்கு பாஷையில் அநேக காவ்யங்களைச் செய்துள்ளான் என்பதை எவனும் மறுக்கத்துணியான் என்பது திண்ணம். பிரபந்தம் என்பது அவனது காலத்தில்தான் உண்டானது. அதுவரை பண்டிதர்கள் சம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்ட இதிகாசங்கள் புராணங்கள் இவைகளிலிருந்து மொழிபெயர்த்து வந்தார்கள். கிருஷ்ணதேவனது ஆஸ்தான வித்வானான அலஸானி பெத்தன்னா தானே தன் மனோகற்பனைப்படி காவ்யமெழுதத்தலைப்பட்டார். அவர் ஆந்திரகவிதா பிதாமஹர் என்ற பட்டப்பெயரைப் பெற்றார். அவர் ஆந்திர கவிகளுக்கெல்லாம் பிதாமகர் போல்வர். கிருஷ்ணதேவன் தனக்குச் சம்ஸ்கிருதம் ஆந்திரம் இவ்விரண்டிலும் தேர்ச்சியுண்டென்பதை, தான் ஆமுக்தமாலியதா என்ற விஷ்ணுசித்தீயமு என்னும் கிரந்தத்தில் அதிகமாகக் காட்டியிருக்கிறான்.

### கிருஷ்ணதேவனது மதாபிமானம்.

கிருஷ்ணதேவன் வைஷ்ணவனாயினும், பிறமத தூஷணை செய்யமாட்டான். சிவஸ்தலங்களுக்கும் அநேக மானியங்களை விட்டிருப்பதே அதற்கு அத்தாட்சி. அவனது சம்ஸ்தானத்தில் வேறு மதத்தினரும் இருந்தார்கள். நந்திதிம்மன்னா என்ற சைவனும், தூர்ஜடி மதன்னகாரி மல்லய்யா போன்ற வீரசைவர்களும் இருந்தார்கள். அவரது ஆஸ்தான பண்டிதர்கள் எட்டுப்பேர். அவர்களுக்கு அஷ்டதிக்கஜங்கள் என்றுபெயர். அவர்கள் அலஸானி பெத்தன்னா, நந்திதிம்மன்னா இராமராஜு ராமபத்ர, தூர்ஜடி, மாதய்யகாரிமல்லன்னா, பிங்களசூரன்ன, ராமராஜபூஷண, தெனாலிராமகிருஷ்ண என்பவர்கள்.

கி. ஸ்ரீ சேஷாத்ரி ஐயங்கார்.

---


| | |
|---|---|
| அன்புந்தும் அழிவோ? சோகரஸம் பொருந்திய ஒரு இனிய தமிழ் நாவல். | 0 4 0 |
| ராஜமணி ஓர் உயர்ந்த ஒப்பற்ற தமிழ் நவீனம். | 0 8 0 |
| லீலாவதி சுலோசனை ப. சம்பந்த முதலியார் இயற்றிய ஓர் இனிய நாடகம். | 0 12 0 |
| லெனோரா ஓர் இனிய நாவல். | 0 5 0 |
| ஸாரதா பண்டிதை விசாலாக்ஷியம்மாள் எழுதிய ஓர் நாவல். | 0 6 0 |
| அமலாதித்யன் ஷேக்ஸ்பியர் மகா கவி ஆங்கிலத்தில் எழுதிய 'ஹாம்லேட்' என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு. ப. சம்பந்த முதலியார் எழுதியது. | 1 0 0 |

மானேஜர், ஜநோபகாரி ஆபீஸ், வேலூர்.




# Some Evil Characters of Man.

BY MR. P. K. SREENIVASACHARIAR.

## மனிதனின் சில தீயகுணங்கள்.

பிறரைத் தூஷித்தல் என்பது மிகவும் அற்பமான காரியம். தம்மிடம் நற்குண முதலிய சிறப்புக்கள் இன்மையையும், பிறரிடம் அவை உள்ளமையையுங் கருதிப் பலர் பொறாமையால் தூஷிக்கின்றனர். பிறரிடம் சிறப்பைக்கண்டால் அவற்றை அடைவதற்கு உற்ற நெறிகளைப் பற்றுவதை விட்டுப் பிறரைத் தூஷிப்பதனால் அவை ஒருவனுக்குக் கிடைக்குமோ? ஒருவனிடம் குற்றமிருந்தாலும் அதைக் கெடுநினைவோடு எடுத்துச்சொல்லுபவன், முதலில் தன்னிடமுள்ள குற்றத்தை அறியானோ? ஒவ்வொருவனுக்குந் தன்னிடமுள்ள கேடுகள் தெரிந்திருக்கின்றன. அவற்றைக் கருதுங்கால், பிறரைத் தூஷிக்கக் கருத்து உண்டாகுமோ? ஒவ்வொருவரிடத்தும் குணதோஷங்கள் உள்ளன. இது பற்றியே,

"ஒருவ னறிவானு மெல்லா மியாதொன்றும்
ஒருவ னறியா தவனும்,—ஒருவன்
குணனடங்கக் குற்ற முளானும், ஒருவன்
கணனடங்கக் கற்றானு மில்."

என்றார் நாலடியாரில். உயர்ந்தோரிடத்தும் சில குறைவுகள் இருக்கலாம் என்பது குறித்து அந் நாலடியாரில் மற்றோரிடத்தில்,

"நெல்லுக் குமியுண்டு; நீர்க்கு நுரையுண்டு;
புல்லிதழ் பூவிற்கு முண்டு."

என்றார்.

பிறரிடத்திலுள்ள குணங்களைப் பலரறிய எடுத்துச் சொல்வதே பெருமையும், சிரேயஸுக்குக் காரணமுமாகும். ஒவ்வொருவனுக்கும் தன்னிடத்திலுள்ள குற்றங்குறைகளை வெளியிட்டுச் சொல்வது இன்னும் பெருமையாம். எப்போதும் பிறரிடத்திலிருக்குங் குற்றங்குறைகளை வெளியிடாமற் பாதுகாக்கவேண்டும். இங்ஙனம் தான் பிறரைத் தூஷியாமையோடு, பிறர் அங்ஙனம் தூஷியாதபடி அடக்கவேண்டும்.

"பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு:—பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்." என்றார்;

குமரகுருபர ஸ்வாமிகள் நீதிநெறி விளக்கத்தில்.

சிலர் மற்றவர்களோடு கூடியிருக்கையில் அவர்களோடு தேனும் பாலும் ஒழுக இனிமையாகக் குலாவிப் பேசியும், அவர்களைப் புகழ்ந்துங் கலந்துறவாடிவிட்டு, அவர்கள் அகன்றபின்னர் அவர்களைத் தூஷித்துப் பேசுகிறார்கள். இவர்களைப் போன்ற சனர்கள் வேறு யார்? இவர்கள் அபாயகார்களாதலால், தேவர்கள்கூட இவர்களிடத்து அச்சங்கொண்டு இவர்களால் தீங்கு நேராதபடி இமையாக்கண்ணர்களாயிருக்கிறார்களென்று, இவர்களது கொடுமையைப் புலப்படுத்தற்கு ஒரு புலவர் சாதுரியமாக வருணித்துரைத்தனர். அது வருமாறு:—

"முன்னின் றொருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்(று)
இழித்துரைக்குஞ் சான்றோரை யஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலை."

சிலர் பிறருடைய கௌரவத்தையும் பெரிய நிலைமையையும் பார்த்துப் பொறாமல், அவர்களை வையவேண்டுமென்று கருதியவர்கள், அங்ஙனம் வைதால் அவரால் தாம் தீங்கு அடையக்கூடுமென்று அஞ்சி, அவர்கள் இல்லாத இடத்தில் மற்றையோர் முன்னிலையிற் சொன்னாலும் அவர்களால் தீங்கு நேருமோ என்று அஞ்சி, அவர்கள்மீது தூஷணையாக அநாமதேயக் கடிதம் எழுதிவிடுகிறார்கள். இவர்களது தூஷணையில் அவர்களுக்கு நேர்வதொன்றும் இல்லை. இதனால் இவர்கள் வெளிப்படாவிட்டாலும், இவர்களது பயங்காளித்தனமும், அவிவேகமும், மனத்தாழ்மையும் நன்கு வெளிப்படுகின்றன. பலர் பரதூஷணையோடு ஸ்வஸ்தோத்திரமும் செய்கின்றனர். தம்மைத் தாம் பாராட்டிப் பேசுவத

னால் ஒருவர்க்குச் சிறிதும் பெருமை ஏற்படுவதில்லை.

"தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல், தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்;—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ(து)! இன்பம்
நயவாமை யன்றே நலம்."

என்றார் நீதிநெறி விளக்கத்தில். ஸ்வஸ்தோத்திரமும், பரநிந்தையுமில்லாதவர்களே சான்றோர்கள். ஒருவன் பிறரைத் தூஷித்தலால் தனக்கு மேன்மையைத் தேடவிரும்புதல் அறிவீனம். அதனால் அவன் தன்நோக்கத்திற்கு எதிரிடையான சிறுமையையே தேடிக்கொள்கிறான்.

தன்னுடைய குணங்களாலேயே பிறரைக்காட்டிலும் விசேஷமான மேன்மைபெற அவற்றைத் தேடவேண்டும். பெரும்பாலும் குணமில்லாத மனிதர்களே தம்மைத் தாம் பெருமைப்படுத்திக்கொண்டு, தங்களிடத்தில் குணங்கள் இன்மையாலோ குறைவினாலோ குணசாலிகளான பிறரை வைகிறார்கள்; தூஷிக்கிறார்கள். இவர்கள் தம்மைப்போன்ற துஷ்டர்களால்தான் கௌரவிக்கப்படுவார்கள். அவர்கள் சமூகத்தில் பெருமை பெறுவதே இவர்களுக்கு ஆனந்தம். தங்களை 'நீ சொல்வதெல்லாம் உண்மை; நியாயம்' என்று ஈனர்களாகிய அவர்களால் சொல்லப்படுகிறபோது, மிகவும் ஸந்தோஷமடைந்து, அவர்களில் தாங்களே குணமுடையவர்களென்று கர்விக்கிறார்கள். துஷ்டர்கள் துஷ்டர்களில் மேம்படுவதையே பெரிய ஜயமென்று கருதுகிறார்கள். குணங்கள் நிரம்பிய புலவன் ஒருவனையும் நிந்திக்காமலும், தன் பெருமையைப் பாராட்டாமலும் இருந்தாலும், அவனைப் புகழ் தேடி வந்தடைகின்றது. தூய்மையும் நல்ல வாசனையுமுள்ள மலர்களின் மணமானது, அவை சொல்லித் தெரிவிக்காவிட்டாலும், பெருமைபெறவில்லையா? அங்ஙனமே ஆகாயத்தில் நிர்மலனான கதிரவன் சொல்லாமலிருந்துகொண்டே விளங்குகின்றான். பொன்னும், முத்தும், பாலும், தேனும், பட்டும் முதலியன பெருமைபெறுதல் சொல்லித்தானா? அநேக அசேதனங்கள் பேசாமலிருந்துகொண்டே உலகத்தில் புகழ்பெற்று விளங்குகின்றன. மூடனானவன் குணமற்ற தன்னைப் புகழ்வதனால் உலகத்தில் விளங்குவதில்லை. மேலோரைப் பல்லாயிரம்பேர் காறித் துப்பி இகழ்ந்தாலும், அவர் மஹிமை குன்றுமோ? வித்துவானானவன் குழியில் வைத்து மறைக்கப்பட்டாலும் பிரகாசிப்பான். உண்மைக்கு மாறான கீழ்மையான வசைச்சொல் கம்பீரமாகப் பலரால் சொல்லப்பட்டாலும், நீர்க்குமிழிபோல் மாய்ந்துவிடும். ஒரு மேலோனைப்பற்றிய இசையானது பிறர்க்குக் கேளாமல் மெல்லச் சொல்லப்பட்டாலும், அடுக்கிய மூவுலகுங் கேட்கும். மௌட்டியமும் கொழுப்பும் மிக்க ஈனர்களது சொற்களெல்லாம் சாரமில்லாதவை. அவை வரம்பு கடந்து அதிகமாக இருக்கின்றன. அவை அவர்களுடைய கொடுமையைக் காட்டுகின்றன. மதிப்போ அவமதிப்போ, பெரியோர்களால் ஏற்பட்டால் மாத்திரமே கவனிக்கத்தக்கது. நயமறியாத மூடர்களின் தூஷணையையும் ஸ்தோத்திரத்தையும் அறிவுடையோர் கவனிக்காமல் உபேக்ஷிக்க வேண்டும். இது அவர்களைச் சிக்ஷிப்பதற்கு உரிய நல்ல சாதனம். இப்படி உபேக்ஷித்துப் பொறுத்துவிட்டால், அவன் வாழ்வுடையாமல் ஒழிவது திண்ணம். இதனை,

"எய்திருந்த அவைமுன்னர்ச் சென்றெள்ளி
வைதா னொருவ னொருவனை—வைய,
வயப்பட்டான் வாளா விருக்குமேல், வைதான்
வியத்தக்கான் வாழு மெனின்."

என்னும் நாலடியாரிலுங் காண்க. வரம்பு கடந்து பேசுபவரைத் தம் தகுதியால் வென்றுவிடவேண்டும்.

"மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்."

என்றார் திருவள்ளுவநாயனாரும்.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.



16144

# Cultivation of Papaya.
## பப்பாளி மரம் பயிர் செய்தல்.

பப்பாளி மரமானது உஷ்ணமாயுள்ள எல்லாத் தேசங்களிலும் பயிர் செய்யப்படுகின்றது. இது ஆதியில் அமெரிக்காவில் பயிர் செய்யப்பட்டு வந்ததென்றும், பிறகு மற்ற உஷ்ணப்பிரதேசங்களில் பரவிற்றென்றும் சொல்லப்படுகின்றது. இந்தியாவிலும் டெல்லி முதற்கொண்டு ஸிலோன்வரை எங்கும் பயிராகின்றது. இம்மரமானது இந்தியாவிற்கு எப்போது கொண்டுவரப்பட்டதென்று திட்டமாகச் சொல்லமுடியாது. ஆனால், இதன் விதைகள் 1626-ம் வருஷத்தில் இந்தியாவிலிருந்து நேபில்ஸ் என்னும் பிரதேசத்துக்கு எடுத்துக்கொண்டுபோகப்பட்டதென்றும், அதனால் இது சுமார் 300 வருஷங்களாக இந்தியாவில் பயிராகி வருகிறதென்றும் தெரிகின்றது.

பப்பாளி மரத்தை அழகுக்காகப்பலர் தோட்டங்களில் வைத்துப் பயிர் செய்கிறார்கள். இது 10 அடி முதல் 20 அடி வரையில் வளரும். தோற்றத்தில் பனைமரத்தை ஒத்திருக்கும். இம்மரமானது ஜனங்களின் சிரத்தையின்றி எங்கும் வளர்வதனால், அவர்கள் இதைப் பயிர்செய்யும் விஷயத்தில் அதிகமாக அக்கறைகொள்வதில்லை. ஆனால், கிரமமாக இதை நல்ல வளமுள்ள நிலத்தில் வைத்துப் பயிர்செய்வோமானால், நல்ல பலனைக் கொடுக்குமென்பதில் ஐயமில்லை. மரம், நட்ட ஒருவருஷத்திற்கெல்லாம் பலன்கொடுக்க ஆரம்பிக்கும்.

### இனங்கள்.

பப்பாளி மரத்தில் இரண்டு இனங்கள் உள்ளன. அவை ஆண்இனம் பெண்இனம். ஆண் இனத்திற்கும் பெண் இனத்திற்கும் ஆரம்பத்தில் ஒருவித வித்தியாசமும் தெரியாது. மரங்கள் பூத்தபிறகுதான் எது எந்த இனத்தைச் சேர்ந்ததென்பது விளங்கும். ஆண் மரத்தின் புஷ்பத்தண்டுகள் நீளமாய்க் கொத்துக்கொத்தாகச் சிறந்துத் தொங்கிக்கொண்டிருக்கும். பெண் மரத்தின் புஷ்பங்கள், தனித்தனியாயும், பெரியவையாயும் நீளமாயும், காம்புகள் குட்டையாயும் மரத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதுபோலத் தோன்றும். ஆண்இனங்கள் காய்ப்பதில்லை. பெண்இனங்களே காய்க்கின்றன. பெண்இனங்கள் காய்ப்பதற்கு, அவற்றின் புஷ்பங்களோடு ஆண்மரத்துப்புஷ்பங்களின் சேர்க்கை அவசியமாகும். பல பெண்மரங்களின் மத்தியில் ஒரு ஆண்மரம் இருத்தல் அவசியம். ஆண்மரங்கள் அதிகமாயிருக்குமானால், அவற்றைப் பிடுங்கி எறிந்துவிட்டு, அவ்விடங்களில் வேறுசில பெண் மரங்களை நடலாம்.

### நிலம்.

பப்பாளிமரமானது எங்கும் சாதாரணமாக வளரக்கூடியது. ஆனால், அதிகமான பலனைப் பெறவேண்டுமாயின், அம்மரத்தைத் தனியே வைத்துப் பயிர்செய்யவேண்டும்; நல்ல நீரோட்டமுள்ள நிலங்களில்வைத்துப் பயிர்செய்யலாம்; மணற்பாங்கான இடமும் சிறந்ததே. நீர் தேக்கமான இடங்களில் இதைப் பயிர் செய்ய இயலாது.

### நாற்றங்கால்.

விதைவிதைக்க உத்தேசித்திருக்கும் நிலத்தை நன்றாகக்கொத்தி, புல்பூண்டு முதலியவற்றை நீக்கிச் சுத்தப்படுத்தவேண்டும். பிறகு அதைச் சிறு சிறு பாத்திகளாகக் கட்டி, அப்பாத்திகளில் போதுமானவளவு உரம் வைக்கவேண்டும்.

### விதைவிதைத்தல்.

நாற்றுக்குத் தேவையான பப்பாளிவிதைகளை நல்ல பழங்களினின்று எடுக்கவேண்டும். நல்ல மணமும் உருசியுமுள்ள பழங்களினின்று கிடைக்கும் விதைகளே மிகச்சிறந்தன. மேற்கூறிய விதம் தயார்செய்யப்பட்ட பாத்திகளில் இவ்விதைகளை இலேசாகத் தூவவேண்டும். பிறகு அவை மண்ணில் மறையும்படிசெய்து, பிரதிதினமும் இரண்டுமுறை தண்ணீர் தெளித்துவரவேண்டும். இவ்விதம் செய்தால், பத்துப்பன்னிரண்டு தினத்தில் முளைகள் கிளம்பும். பிறகு

ஒருமாதகாலம் தண்ணீர் விட்டுக்கொண்டுவந்தால், செடிகள் ஐந்தாறு இலைகள் விட்டுக்கொண்டு ஆறு அங்குலம்வரை வளர்ந்துவிடும்.

### நாற்று நடுதல்.

கன்றுகள் ஆறு அங்குலம்வரை வளர்ந்தவுடன், நடப்படுவதற்கு ஏற்றவையாகின்றன. நடப்படும் இடத்தில் இரண்டடி நீளமும், இரண்டடி அகலமுமுள்ள குழிகள் தோண்டவேண்டும். அதிகமான ஆழம் இருக்கக்கூடாது. ஒவ்வொரு குழிக்கும் 15 முதல் 20 அடிவரை தூரம் இருக்கவேண்டும். ஒவ்வொன்றிலும் உரமும் மண்ணும் கலந்து கொட்டி, அவற்றில் கன்றுகளை நடவேண்டும். கன்றுகளின்கீழ்த் தண்ணீர் தங்கும்படி விடக்கூடாது. தண்ணீர் தங்குமானால், அவற்றின் வேர்கள் அழுகிச் செடிகள் சாய்ந்துவிடும்.

### பலன்தரும் காலம்.

கன்றுகள் நட்ட ஒருவருஷத்திற்குள் பலன் கொடுக்க ஆரம்பிக்கும். பிறகு மூன்று நான்கு வருஷங்கள்வரை நல்லபலனைக் கொடுத்துக்கொண்டிருக்கும். அதற்கப்பால் காய்கள் சிறுத்தும் உருசியற்றும் போகின்றன. ஆதலால், நாட்பட்ட மரங்களை வெட்டிவிடுவது உத்தமம்.

### விரோதிகள்.

பப்பாளிமரமும் சில சமயங்களில் ஒருவிதப் பூச்சிகளால் பாதகமடைகின்றது. மழைக்காலங்களில் இப்பூச்சிகள் மரத்தின் இலைகளைத் தின்று நாசத்தை உண்டுபண்ணுகின்றன. மரங்களின் அருகே புல்லுகள் அதிகமாக வளர்ந்திருந்தால், இப்பூச்சிகள் அங்குவந்தடைய ஹேதுவாகும். காக்கைகளும், காய்கள் பழுக்குந்தறுவாயில் அவற்றைக் கொத்தி நாசப்படுத்துகின்றன.

### உபயோகங்கள்.

பப்பாளிப்பழமானது சாப்பிடுவதற்கு மிகவும் உருசியாயிருப்பதனால், ஜனங்கள் அதை உண்ணப் பிரியப்படுகிறார்கள். இப்பழமானது ஜீர்ணத்தை உண்டாக்குகின்றது. ஆதலால், அஜீர்ணத்தால் வருந்துகிறவர்கள் இதைச் சாப்பிடவேண்டும். அநேகர் பப்பாளிக்காயைச் சமையலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். பப்பாளிக்காயினின்று கிடைக்கும் பாலை உட்கொண்டால், வயிற்றிலுள்ள கிருமிகள் நாசமாகின்றனவென்று சொல்லப்படுகின்றது. இன்னும் இப்பாலினின்று பப்பாயின் என்னும் சத்து எடுக்கப்படுகின்றது. இதற்குக் கடினமான ஆகாரத்தையும் ஜீர்ணிக்கச் செய்யும் சக்தியுண்டு. பப்பாளிக்காயைக் கத்தியினால் கீறி அதினின்று வடியும் பாலை ஒரு கண்ணாடியில் வடித்துக் காயவைத்தால், அது கெட்டியாகின்றது. பிறகு அது விற்பனைசெய்யப்படுகின்றது.

## Idle sick.

By Dr. S. Chandrasekhar.

## சோம்பல் வியாதி.

உலகத்தில் நவநாகரிகங்கள் விருத்தியடைந்து வருவதற்கொப்பப் பல புதுமையான வியாதிகளும் தோன்றி மனித சமூகத்திற்குப் பற்பல தீங்குகளைச் செய்து வருகின்றன. இதற்கு உதாரணமாக: மேற்கு இந்தியத்தீவு (West Indies) கூட்டத்தைச் சேர்ந்த போர்ட் ரிகோவில் (Porto Rico) சோம்பல் வியாதி என்னும் ஓர் நூதன நோய் தோன்றியுள்ளதாம். இது ஆப்ரிகாவிலும், மற்றும் சில இடங்களிலும் தோன்றியுள்ள தூக்க வியாதிக்கு ஒப்பானதாம். மகாமாரி (Plague), விஷபேதி (Cholera) மலேஜுரம் (Malaria) விஷசுரம் (Typhoid Fever) முதலிய மிகக் கொடிய பெருங்கொள்ளை நோய்களுக்கு பாக்டீரியா (Bacteria) என்னும் மிக நுண்ணிய சிற்றுயிர்க்கிருமிகள் ஆஸ்பதமாயிருப்பதுபோல, ஓர் வகை மூட்டுப்பூச்சி (Hookworm) யின் கடி இந்த வியாதி உற்பத்தியாவதற்குக் காரணமென்பது வைத்தியசாஸ்திரிகளின் துணிபாம். இந்தப்பூச்சி கடித்தவுடன் தேகத்தில் சோம்பல்பிடித்துக்கொள்ளுகிறது. கடிக்கப்பட்டவன் உற்சாகமற்று மந்தமுடையவனாகி வேலையை நினையாமற் படுத்துழல்வன். முதன்முதல் இந்த வியாதி போர்ட்ரிகோவில் மாத்திரம் பரவக் காணப்பட்டது. இப்பொழுது அது அவ்விடத்திலிருந்து இன்னுஞ் சில இடங்களுக்குப் பரவியிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அமெரிக்கா ஐக்ய தேசத்தின் தென் மாகாணங்களில் இப்போது இந்நோய் பரவும் விதம் அதிகரித்துவருகின்றது. அந்தப் பகுதியிலுள்ளவர்கள் இதுவரை ஏராளமாக இந்நோய்க்கு உட்பட்டிருக்கிறார்களெனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.



அமெரிக்கா ஐக்யமாகாணத்திலுள்ள கோடீசுவரரான ராக்பெல்லர் என்பவர், இந்நோயால் பீடிக்கப்படுவோர்க்கு ஏற்றசகாயஞ்செய்ய முன்வந்திருக்கிறார். இதன் மூலகாரணங்களைத் திட்டமாய் ஆராய்ச்சிசெய்து அதற்கான சாதனங்களைக் கவனிப்பதற்காக இவர் 30 லட்சம் ரூபாய் உதவிசெய்திருக்கிறார். இவருடைய உதவியின் காரணமாகவே, அமெரிக்காதேச வைத்தியர்கள், சிலகாலம் போதிய ஆராய்ச்சிகளைச்செய்து, தக்க சிகித்ஸையால் இந்நோய் நீங்குமென்று கண்டுபிடித்தார்கள்; இதற்கான மருந்துகளையும் தயாரித்துள்ளார்களெனத் தெரிகின்றது. இந்நோய்க்குச் செய்யவேண்டிய சிகித்ஸைகள் மிகவும் இலகுவானவையேயென அவர்கள் கூறுகிறார்கள். ஆகையால், இது தூக்க வியாதியைப்போல் அவ்வளவு கொடியதும், அசாத்தியமுமானதன்று என்பது வெளிப்படை. இந்நோய்க்குக் காரணமான ஓர்வகை மூட்டுப்பூச்சியின் விஷம் தேகத்திலின்று நீங்கியவுடன், நோயும் தானாகவே ஒழிகின்றது.

அழுக்குமிகுந்த இடங்களிலேயே இந்நோய் அதிகமாகப் பரவுவதனால், இதற்கு ஊத்தை வியாதி என்றும் ஒரு பெயருண்டு. இப்போது இது மேல்நாட்டிலும் கீழ்நாட்டிலும் சமமாகவே பரவிவருகின்றதென்று மேதாவிகள் கண்டிருக்கிறார்கள். இலங்கைத்தீவின் தோட்டங்களிலுள்ள இந்தியக்கூலிகளுள்ளும் இந்நோய் பரவியிருக்கக் காணப்பட்டது. தோட்டத்தலைவர்கள், இக்கூலிஜனங்களுக்குள் இது பரவியிருந்ததை முதலில் அறியாமல், வேலைசெய்ய முயற்சியற்றுச் சோம்பியிருந்த இவர்களை நிந்தித்து வந்தார்கள். சில சமயங்களில் கூலிகள் இக்குற்றத்திற்காகப் பகிரங்கமாகத் தண்டனையும் அடைந்துவந்தார்கள். இவ்வளவிற்குங் காரணம்: தோட்டமுதலாளிகள் இவ்வியாதியைப் பற்றி அறியாமலிருந்ததே. பிறகு டாக்டர் தோமஸ் என்பவர், அங்குச் சில பரீக்ஷைகளைச் செய்து, கூலி ஜனங்களுக்குள் சோம்பேறிகளாகக் காணப்படுவோர் உள்ளபடி சோம்பேறிகளல்லவென்றும், அது நோயேயென்றுங் கண்டுபிடித்து, அதைப்பற்றி ஒருபுத்தகமெழுதி வெளியிட்டார். இப்போது தோட்டத்தலைவர்களெல்லோரும் இந்நோயை நீக்குவதற்குப் பல முயற்சிகளைச் செய்துவருகிறார்கள். இவர்கள் ஜீவகாருண்யத்தை முன்னிட்டுச் சோம்பல் வியாதியால் சோம்பியிருக்கும் கூலிகளுக்குத் தக்கது செய்ய முன்வராமற்போயினும், தங்களது வேலைக்குத் தடைகள் ஏற்படாமலிருக்கும்பொருட்டாவது இவ்வியாதியைத் தொலைக்கத் தக்கவாறு முயற்சி செய்வார்களென நம்பப்படுகின்றது.

டாக்டர். எஸ். சந்திரசேகர்.

'ஜனோபகாரி'யைப்பற்றி இரங்கோன் சுதேசபரிபாலினி எழுதுவதாவது:—பொதுஜன பிரயோஜனமான விஷயங்களும், வியாபாரம், கைத்தொழில், வியவசாயம் முதலானவைகளைப்பற்றி அறிவையூட்டத் தக்க குறிப்புக்களும், நீதிமொழிகளும், நவீன சங்கதிகளும் செறிந்து நிறைந்திருக்கின்றன. பத்திரிகை முழுவதும் திவ்யமான எளிய தமிழ் நடையிலே எழுதப்பட்டு, படிப்பவரது கவனத்தைக் கவர்ந்ததாயிருக்கின்றது.

# Guhaperumal.

By Mr. P. K. Sreenivasachariar,
*Senior Tamil Pandit, Voorhees College, Vellore.*

## குகப்பெருமாள்.

ஸ்ரீராமபிரான் அயோத்திமாநகர் நீங்கிச் சீதாபிராட்டியாரோடும் இளைய பெருமாளோடும் வேதநூல் முற்றுங் கற்றுணர்ந்துயர்ந்த குற்றமற்ற அந்தணர்கள் சுற்றியுள்ள கங்கை யாற்றின் கரையை அடைந்தனர். கங்கைக் கரையில் வசிக்கும் தபோதனர் யாவரும், "நாம் தேடப்போன தெய்வம் குறுக்கே வந்தது" என்னுமாறு எங்கள் செல்வநிதி வந்தது என்று களித்து, இராமபிரானைக் காணுதற்குவந்து சமீபித்தனர். அப்போது, அவர்கள், பெண்களிற் சிறந்தவளும், அழகிய திருவுருவமுடையவளும், இன்சொல்வாய்ந்தவளுமாகிய ஜாநகியைத் தங்கள் கண்கள் படைத்த பயனைக்கண்டு உள்ளங்களிக்கின்றவர்களாய், அவர்களை எதிர்கொண்டுவந்து துதித்தார்கள்; அவர்களைக்கண்ட ஸந்தோஷத்தினால் இனிய இசை பாடினர். கோலேந்திய துறவிகள் ஆனந்தக் கூத்தாடினர்; வீரனும் தாமரைக் கண்ணனுமாகிய சக்கரவர்த்தி திருமகனைக் கண்ணினால் இனிய பாற்கடலின் அமுதம்போல் அருந்துவாராயினர். தங்கள் மனையினின்று நீங்கிய மக்களை நாடோறும் நினைந்துருகி அவர்களைக் காணுதவர்களாய்த் தேடும் தந்தைதாயர், அப்புதல்வர் வந்துசேர அவர்களை எதிரிற் கண்டால் எவ்வளவு அகமகிழ்ச்சி கொள்வார்களோ அவ்வளவு மகிழ்ச்சி கொண்டவர்களாய், காண்பதற்கினிய சிறந்த ஆச்சிரமங்களுக்கு அழைத்துக்கொண்டு சென்றடைவாராயினர்.

அவர்கள் தங்கள் கண்களிலிருந்து ஆனந்தத்தாற் பொழியும் புதுப்புனலால் அபிஷேகஞ்செய்து, மொழிகின்ற இன்சொற்களாகிய நிறைந்த நறுமலர்களைச்சூட்டி, அழிவில்லாத அன்பென்னும் அரிய அமுதத்தை ஊட்டி, வழிவந்த வருத்தத்தை வாட்டினார்கள். அவர்கள், பரிசுத்தமான காய்களும், கனிகளும், கிழங்குகளும் தேடிக்கொணர்ந்து, 'அப்பனே! நீ கங்காநதியில் நீராடி அக்கினி காரியமுடித்து அமுதுசெய்' என்று வேண்டினர். இராமபிரான் அவர்கள் பிரார்த்தனையின்படி சீதையைத் திருக்கரம்பற்றிக் கங்கையில் நீராட்டஞ்செய்தனன். கங்கையும் கைதொழுது, 'உலகத்தவர் நீக்கரிய சொல்லவொண்ணாத பாதகத்தை என்னால் நீக்குவர். நானும், என்னைத் தந்த உன்னால் இன்று அப்பாதகத்தின் நீங்கி உய்ந்தேன்' என்றாள். அப்போது, கங்கையும், தேவனாகிய பரமசிவனது அடர்ந்த சடைக்கற்றையில் உள்ள எருக்கு, கொன்றை ஆதி மலர்மாலையின் மணம் வீசாமல், சீதாபிராட்டியின் திருக்குழற் கற்றையிலுள்ள கஸ்தூரியினுடையவும் புதியநறுமலர்களினுடையவும் இனிய மணமே வீசுவாளாயினள். அக்கங்காநதியில் நீர்வெள்ளத்தில் முழுகித்தோன்றும் பிராட்டி, ஆதியில் திருப்பாற்கடலின் வெள்ளத்தினின்று அக்காலத்துத் திருவவதரித்தெழுந்தவள்போல் தெரிந்தாள். இராமபிரான் இங்ஙனம் கங்கைத்துறையில் நீராடி, வேதாந்த முணர்ந்த அந்தணர்களின் அகமடைந்து, ஞானிகள் உணரும் இறைவனைக் கைதொழுது, அக்கினிகாரியமாகிய ஔபாசனஞ்செய்து, பிறகு அந்த அறிஞரது அன்பிற்குத்தக்க விருந்தினனானான். ஒருகாலத்தில் தான் வருந்திப் பாற்கடல்கடையவந்த அமுதையும் 'நீங்கள் அருந்துங்கள்' என்று அமரர்களையூட்டினவன், இன்று மெல்லிய இலைக்கறியை விருந்தமுதாச் செய்து விளங்கினான். நல்லோர்கட்குச் செய்த உபகாரங்கள் அழியுமோ?

"நன்றி யொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
என்று தருங்கொ லெனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்."

அக்காலையில், ஆயிரம் தோணிக்குத் தலைவன், அழகிய குகன் என்னும் பெயருடையவன், பரிசுத்தமான அந்தக் கங்கை யாற்றின் துறையிலிருந்து ஓடம்விடும் பழையோன், பகைவரைக் கோபிக்கும் வில்லுடையான், கற்றூண் போலும் தோளுடையவன், ஒலிக்கும் உடுக்கையுள்ளவன், நாய்கள் சூழவிருப்பவன், தோற்செருப்பமர்ந்த பெரிய அடியுள்ளவன், இருட்டை உருட்டிவைத்தாற்போல் தோன்றும் கருநிறத்தையுடையவன், பெரிய சேனை நெருங்கியிருந்ததால் காளமேகம் இடியோடு எழுந்துவந்தாற்போன்ற பலமுள்ளவன், கொம்பு தத்தரி முதலிய கருவிகளை முழக்கும் முறைமை பொருந்தியவன்; பம்பை வாத்தியம் நிரம்ப வொலிக்கும் படையுடையவன், பகைவரது உயிரைத் தோய்ந்து செம்மையான அம்புகளையுடையவன், மதநீர் பாயப்பெற்ற கன்னமுள்ள களிறுகளின் கூட்டத்தைப் போன்றவர்களும், மரத்தைக் கிளைகள் போன்று அடர்ந்து நெருங்கியவர்களுமான சுற்றத்தாரையுடையவன், சல்லடங்கட்டிய தொடையுடையான், கங்கையாற்றின் ஆழங்கண்ட உயர்ந்தோன், அரையில் தொங்கவிட்ட அழகிய தோலுடையவன், விளங்கிச்சூழப்படி விட்ட புலிவாலுடையவன், பற்களைத் தொடுத்தாற்போன்ற பல பெரிய பலகறை மாலையுடையவன், கல்லைத் தொடுத்தாற்போன்ற வீரக்கழல்கட்டிய காலையுடையவன், இருட்டை நிரைநிரையாய்த் தொடுத்துவைத்தாற்போன்ற தலைமயிருள்ளவன், சிங்கத்தின் நெரிந்த புருவம்போலும் புருவமுள்ளவன், பனைமரத்தின் உள்ளே பொருந்திய வலிய செறும்புபோல விளங்கும் அடர்ந்த வலியமயிர் ஒழுங்காகப் பொருந்திய முன்கையுடையவன், இடம் அகன்ற பெரிய மார்பு என்னும் கல்லையுடையவன், எண்ணெய் தடவினாற்போல் தெரிகிற மினுமினுப்புள்ள இருட்டை யொத்த மேனியையுடையவன், இடைக்கச்சோடு இறுக்கிக்கட்டிய பகைவருடைய இரத்தக்கறை பொருந்திய ஒளிவீசும் வாளையுடையவன், விஷஸர்ப்பம்போல பகைவர் அஞ்சி நடுங்கத்தக்க நோக்கமுடையவன், பிசாசு போன்ற பேச்சையுடையவன், இந்திரனது வச்சிராயுதம் போன்ற வலிய இடையுடையவன், மதுமாம்ஸங்களையும் மீனையும் உண்ணுவதனால் நாற்றம் பொருந்திய நகையில்லாதமுகத்தையுடையவன், கோபமின்றியும் தீப்பொறிபறக்கப் பார்ப்பவன், யமனும் அஞ்சத்தக்க குமுறுங்குரலையுடையவன், கங்கையின் கரைப்பக்கத்தில்தோன்றும் சிருங்கிபேரமென்னும் நகரில் வாழ்பவன், தேனும் மீனும் உபகாரமாகக் கொண்டு, கங்கைக்கரையில் வந்திருக்கும் வள்ளலாகிய ஸ்ரீராமபிரானைக் காண வந்தடைந்தான். அவன் தன் உறவினர் அப்புறத்தில் நிற்க, கொடிய அம்புகளையும் வில்லையும் விட்டு, அரையிற் கட்டிய வாட்படையைத் துறந்து, இடைவிடாத அன்புபொருந்திய மனமுடையவனாய், ஸ்ரீராமபிரான் எழுந்தருளியுள்ள நல்ல தவத்தங்கும் ஆச்சிரமத்தின் வாயிலில் வந்து சேர்ந்து கூவினான். அவன் கூவுதற்கு முன்னம் (விரைவில்), இளையபெருமாள் சமீபித்து, 'நீ யாவன்?' என்று வினவினான். அதற்கு அவன், அன்போடு வணங்கி, 'தேவனே! உன் திருவடிகளைச் சேவிப்பதற்கு வந்தேன். நாய்போலும் அடியேன், ஓடம்விடும் வேடன்' என்று விநயமாய் மொழிந்தான்.

வாயில்காத்து நின்ற இளையபெருமாள், 'இங்கே நில்' என்றுரைத்து உட்புகுந்து, இராமபிரானைத் தொழுது, 'சொற்றவனே! பெருங்கூட்டமான உறவினரும் தானுமாக ஒருவன் உன்னைக் காணவந்திருக்கிறான். அவனைக் காணுங்கால், மனம் பரிசுத்தமானவனெனத் தெரிகின்றது: தாயினும்நல்லவன்; கங்கையாற்றில் உள்ள தோணிகளுக்குத் தலைவன். அவன் பெயர் குகன்' என்று விண்ணப்பஞ் செய்தான். அது திருச்செவிசார்த்திய இராமபிரானும் அன்புகூர்ந்து, 'நீ அவனை என்னிடத்தில் அழைத்து வா' என்று கட்டளையிட்டான். உடனே இலக்குமணன் குகனிடம் சென்று 'வருக' என்று சொன்னான். அவன் அன்பார்ந்து விரைவாக உட்புகுந்து, இராமபிரானைக் கண்ணுற்று கண்டு களித்துருகி, இருண்ட தலைமயிர் மண்ணிற் படியும்படி பணிந்து, விநயத்தால் உடல்

வளைத்து, வாயை மூடிக்கொண்டு ஒருபுறமாக ஒதுங்கி நின்றான். அப்போது சக்கரவர்த்திதிருமகன் 'இங்கே இரு' என்றுரைக்கவும், அந்தக் குகன் உட்காராமல், ஆதரத்தோடு, 'தேனும் மீனும் அமுதத்திற்குச் சமானமாகத் திருத்தமுறக் கொணர்ந்துள்ளேன். திருவுள்ளம் என்னவோ?' என்று கேட்டான். வீரன், அங்குள்ள ஞானத்தாலும் ஒழுக்கத்தாலும் வயதினாலும் பெரியோரான மாதவர்களை நோக்கிப் புன்னகை பூத்து விளம்புவானாயினன்:— 'மனமுவந்து அருமையாக அன்புமுதிர்ந்த ஆர்வம் விளங்கக் கொணர்ந்தவையென்றால், அவை அமுதினும் சிறந்தவையன்றோ? அன்போடு பொருந்தியவை யென்றால், பரிசுத்தமானவையே. ஆதலால்; எம்போல்வார்க்கும் உரியவையாம். நாம் இனிமையாக உண்டோம் அன்றோ'? என்று திருவாய் மலர்ந்து, ஆண்சிங்கம்போலும் வீரன் மற்றும் உரைத்தருள்வானாய், 'நாம் இங்கு இன்று தங்கியிருந்து நாளை கங்கையைக்கடந்து செல்ல உத்தேசித்துள்ளோம். நீ புதுமையான மிக்க நின் உறவினரோடு சென்று, உன்னூரில் இனிமையாக மகிழ்ந்து தங்கி, தோணியோடு நாளை விடியற்காலத்து வந்துசேர்' என்றான். இராமபிரான் இதுகூற, அன்பன் குகன் விண்ணப்பஞ் செய்வான்:—'இந்நிலவுலகம் விளக்கமுறும்படி அவதரித்துள்ள செல்வனே! உன்னை இங்ஙனம் கண்ட கண்ணை அறுத்துவிடாமல் கள்வனாகிய நான் இருக்கிறேன். ஐயனே! நீ வீற்றிருக்குமிடத்தைத் துன்பத்தோடு நோக்குதலால், உன்னை விட்டுப் பிரியேன். நினக்கு அடிமை செய்வேன்' என்றான். இராமபிரான் அக்குகன் கூறிய கொள்கையைக் கேட்டுச் சீதையை நோக்கித் தம்பியின் திருமுகத்தையும் நோக்கி, தீராத அன்புடையானென்று திருவுளங்கொண்டு, கருணையினால் மலர்ந்த திருக்கண்களையுடையவனாய், 'யாதினும் இனிய நண்பனே! ஆயின், இங்கு எம்மோடு இரு' என்றுரைத்தான்.

'மனுகுலத்தோன்றலே! திருநகர்நீத்தவிதம் தெரிவித்தருள்க' என்று குகப்பெருமாள் வினவ, கண்ணுங்கண்ணீருமாய்த் துன்பமுற்று நின்ற தம்பி எல்லாச்செய்தியையும் தெரிவித்தான். அன்பன்குகன் அப்போது துன்பமுற்று, இருகண்களினின்று நீர் அருவிபோலப் பெருக, 'நிலப்பாவை நோன்புநோற்றும் பேறுபெற்றிலள் போலும்! என்னே!' என்று வியசனமுற்றிருந்தான். அப்போது செங்கதிர்ச்செல்வனென்னும் சூரியன், விரிந்த இருட்பகையை ஓட்டித் திசைகளை வென்று மேலே நின்று ஒரு தனிச்சக்கரத்தைச் செலுத்தி உயர்ந்த புகழை நிலைநிறுத்தி நாளும் இருநிலத்தில் எவர்க்கும் உள்ளத்தில் இருந்தவன் [தசரதன்] போலவும், யுத்தத்தில் வலிமையொழிந்த வீரன்போலவும் மேற்றிசைசென்று அஸ்தமித்தனன். வீரன் இராமபிரான், அத்தினத்தில் மாலையில் சந்தியாவந்தன முதலிய நியமங்களைச் செய்து, மற்றும், தன் மரபிற்கு உரிய தேவதாராதனத்தையும் கருதிச்செய்து, பாற்கடலில் தோன்றிய அமுதம்போலும் சீதாபிராட்டியுந்தானுமாக இரவில் தரையாகிய படுக்கையிற்பரப்பிய காணற்புல்லிற் சயனித்திருந்தான். இலக்குமணன் வில்லேந்திக் காலைவரை கண்ணிமைக்காமல் காத்துநின்றான். யானைக்கூட்டம்போலச் சூழ்ந்துநிற்கும் உறவினரையுடையவனும், தோணிகளுக்குத் தலைவனுமாகிய அன்பன் குகன், அம்புதொடுத்த வில்லினனாய், வெம்பித் தவித்து அழிகின்ற நெஞ்சினனாய், கண்விழித்தவனாய்க் காத்துநின்ற தம்பியை நோக்கித் தலைவனது தன்மையை நோக்கி, கண்ணீர்பொழிய, நீரருவிபெருகப் பெற்ற குன்றுபோல நின்றான். சுவர்க்கம் முதலிய பரிசுத்தமான எவ்வுலகங்களையும் மறக்குமாற்றையே நினைத்தலுடைய வரம்பின்றித் தோன்றும் மிருகங்கள் போன்றபேதையர் இறக்கும்விதம் இதுவென்பான்போல முன்னாள் அஸ்தமித்த பிறவாத கதிரவன், பின்னாள் அவர்கள் பிறக்கும் விதம் இதுவென்பான்போல உதயமாயினன். சேற்றினின்று தோன்றிய செக்கச்செவேலென்றிருக்கின்ற தாமரைப்பூக்கள், உதயமான சூரியனது உருவத்தை நோக்கினதும் மலர்ந்தன. வேறொரு கருநாயிறுபோன்ற



ஐயன் இராமபிரானது திருவுருவத்தைக்கண்டு வஞ்சிக்கொடிபோலும் சீதையின் அழகிய திருமுகமென்னும் தாமரைப்புஷ்பமும் மலர்ந்தது.

இராமபிரான், சூரியோதய காலத்திற்கு அமைந்த சந்தியாவந்தனம் முதலிய செயல்களையெல்லாம் விரும்பிச் செய்து, அந்தணர் பின் தொடர்ந்துவரச் சென்று, சௌரியம் மிக்க நண்பனெனக்கொண்ட அன்பன் குகனைநோக்கி, 'ஐயனே! சிறந்த நாவாயொன்றை விரைவிற் கொணர்க' என்றுரைத்தான். அங்ஙனம் ஏவிய மொழியைக் குகன்கேட்டு, கண்கள் நீர்பொழிய, உயிர்துடிக்க, இராமபிரானது திருவடியிணையைப் பிரியமாட்டாதவனாய், நீலோற்பலமலர், காயாமலர், நீலக்கடல், காளமேகம்போலும் இராமபிரானைத்தேவியாரோடு திருவடிதாழ்ந்து, தன் கருத்தை விண்ணப்பஞ்செய்வான்:— 'ஐயனே! யாம் பொய்புறவில்லாதவர்கள். எங்கள் உறைவிடமும் வனமே. நாங்கள் ஒரு குறைவுமில்லாதவர்கள்; வலியவர்கள்; செய்தற்கு உரிய முறைப்படி குற்றேவல்செய்வோம். அடியோமை இம்முறையுறவென்னக்கொண்டு எம்மூரில் இனிது வாழ்ந்திரு. தேன் மிகுதியாக உண்டு. தினை உண்டு. தேவர்களும் உண்ணுதற்கான ஊன் மிகுதியாகக் கிடைக்கும். துணையாக நாய்கள்போலும் எமது உயிர்கள் உண்டு. விளையாடுதற்குக் கானகம் விஸ்தாரமாக உண்டு. நீராடுதற்குக் கங்கையும் உள்ளதன்றோ? நான் உள்ளவரையில் நீ இனிது என்னோடு இரு. எம்மிடத்திற்கு எழுந்தருள்க. மெல்லிய வஸ்திரம்போலும் தோல்கள் உள்ளன. சுவையுள்ள உணவுகள் உள்ளன. பலவகையுறுப்புக்கள் தொடர்ந்த மஞ்சங்கள்போலும் பறண்கள் உள்ளன. வசிக்கத்தக்க இனிய வீடுகள் உள்ளன. மிகுவேகமாக ஓடும் எங்கள் கால்கள் உள்ளன. வில்லைப்பூண்ட எங்கள் கைகள் உள்ளன. கவிந்த வானுலகத்தின்மேலுள்ள பொருள்களையேனும் விரைவிற் கொணர்வோம். ஏவல்செய்பவல்ல ஆர்த்துலக்ஷம் வில் வேடர்கள் என்னிடம் உள்ளார்கள். அவர்கள் தேவர்கள்போல வலியவர்கள். எங்கள் குடிசையில் ஒருநாளேனும் நீ வசிப்பாயெனில், அடியோம் உஜ்ஜீவித்தவர்களாவோம். எங்கட்கு இதனினும் மேலோர் வேறுவாழ்வு இல்லை' என்றான். ஐயன் அதனைக் கேட்டு, திருவுள்ளத்தில் நிறைந்த திருவருள் மிகுந்து, புன்னகைபூத்து, 'வீரனே! யாம் சிறந்த புண்ணியநதிகளில் நீராடி, பெரியோர்களை வணங்கிப் பூசித்து, விரைவில் எண்ணிவிடக்கூடிய சிலநாள்களில் இனிது உன்னிடத்தில் வந்துசேர்வோம்' என்றான். இராமபிரானது திருவுளக்குறிப்பை உணர்தல்வல்ல குகன், விரைவிற் சென்று, பெரிய தோணியொன்றைக் கொணர்ந்தான்.

இராமபிரான் அங்குள்ள அந்தணர்களையெல்லாம் 'விடையருளுமின்' என்று நியமனம் பெற்று, சீதாபிராட்டியோடும் இளையபெருமாளோடும் இனிமையாகத் தோணியில் ஏறி, 'நதியில் விரைவாகத் தோணியை ஓட்டு' என்று கூறினான். உடலிலுள்ள உயிர்போன்ற அன்பன் குகனும், பெரிய தோணியை விரைவில் ஓட்டினான். அலைதவழும் கங்கைநீர் வெள்ளத்தில் ஓடம் விரைந்து, அன்னநடையுடையதாய்ச் சென்றது. கங்கைக்கரையில் நின்ற அந்தணர்கள் அப்போது, துயரத்தால் அழலிற்பட்ட மெழுகொத்து உருகினார்கள். இன்சொல்லுடைய சீதையும், சூரியனையொத்த இராமபிரானும், சேல்மீன்கள் துள்ளி விளையாடப்பெற்ற பெரிய அக்கங்கையின் நீரைச் சிந்தி விளையாட, பெரிய கோலால் துழாவ உயர்ந்த அந்நாவாயானது, கால்களையுடைய பெரிய நண்டுபோல விரைந்து சென்றது. கங்கையென்னும் தெய்வமாது, காந்தி தழைந்த இரத்தினங்கள் ஒளிவீச, பரிமளம்வீசும் செந்தாமரை மலர்களினாற் சிவந்து ஒளிவிரிந்த தெளிந்த அலையென்னும் பெரிய நிமிர்ந்த கையால் ஏந்திக்கொண்டு, தான் ஒருத்தியே இனிமையாக அக்கரையில் ஏற்றினாள்போலும்.

ஐயன் அக்கரைத் திசையையடைந்து, அன்பன் குகனை முகம்நோக்கி, 'சித்திரகூடத்திற்குச்

செல்லும் வழியைச் சொல்' என்றுரைக்க, பக்தியினால் உயிரையும் தரக்கூடிய ஆர்வமிக்க அவன், இராமபிரானது திருவடியிணை தாழ்ந்து, 'உயர்ந்தோய்! எப்போதும் அடிமை ஓதுதற்கு உரியதொன்று உள்ளது' என்று கூறுகின்றான்:— 'நாயேன் உங்களுடனே வரும் பாக்கியம் பெறுவேனாயின்,—வழியைச்செப்பஞ்செய்யும் முறையில் வல்லவன்; இனிய கனியும், காயும், தேனும் ஆகிய இவற்றைத் தேடித் தவறாமல் தருதற்கு வல்லேன்; வசித்தற்கு உரிய இடத்தை அமைத்துக் கொடுப்பேன். ஒரு நொடியளவும் உங்களைப் பிரியேன்; தீங்குவகைகள் என்ன உண்டோ, அவையாவும் திக்காலொன்றாக ஓடும்படி செய்து அழித்து, பரிசுத்தமான பொருள்கள் நிரம்பிய கானகத்தை ஆராய்ந்து பார்த்து வருவதற்கு வல்லவன்; வேண்டிய பொருள்களைத் தேடித்தருவேன்; ஏவின காரியங்களையெல்லாம் செய்யவல்லவன்; இருட்டிலும் வழி செல்வேன்; மலைமேலும் கந்தமூலங்களைக் கல்லுவேன்; கவலைக்கிடமான பல நெறி கூடும் சந்திகளிலும், செல்லுதற்கு உரிய நெறியை அறிந்து செல்லுவேன்; தூரப்பிரதேசத்திற் பொருந்திய நீரை எடுத்துக்கொண்டுவர வல்லேன். என்னிடம் வில்லினம் உண்டு: எதற்கும் அஞ்சேன்; நின்திருவடிமலரைப் பிரிய மாட்டேன். திருவுள்ளம் உண்டாயின், என் சேனையையும் உடனே கூட்டிக்கொண்டு உன்னைத் தொடர்ந்துவந்து, இராப்பகல் விட்டு நீங்காமல் இருப்பேன்; எவரேனும் பகைவர்கள் உண்டானால், இறக்கும்படியாக நேர்ந்தால், முன்னே இறப்பேன். நான் யாதொருவசையும் இல்லாதவன்; நின்னுடன் வருவேன்' என்றான்.

அவனது உரையைக் குற்றமற்ற இராமபிரான் திருச்செவிசார்த்தி, மறுமொழி கூறுவானாகி, 'என் உயிரொத்த அன்பன் நீ. இதோ நிற்கும் என்தம்பி உன்தம்பி. இந்தச் சீதை உன் உறவினாள். கடலாற் சூழப்பட்ட இந்நிலவுலகமுற்றும் உன்னுடையது. நானும் உன் தொழில் உரிமையில் உள்ளவன். துன்பம் உள்ளதாயினன்றோ இன்பம் உள்ளது? அதுவன்றி, இனி, நெடுங்காலம் இடைவிட்ட பிரிவு உள்ளதென்று எண்ணாதே. யாம் முன்பு ஒருநால்வர் உடன்பிறந்தவர்களாயிருந்தோம். இனி, முடிவில்லாத அன்புடைய யாம் ஐவர் உடன்பிறந்தவர்களாக உள்ளவரானோம். கானகத்தில் வசிக்கும் நாளெல்லாம் என்னுடன் கூடத் தொடர்ந்து வந்திருந்து தன் உடலைப் பெரிய பகைவனைப்போற் கருதி வருத்தித் துன்பங்களை அநுபவித்தற்கு, உன்தம்பி இலக்குமணன் இருக்கிறான். என் உயிர்போல எனக்கு உரியவனே! நீ என் சொல்விதங் கடவாதே. யான் வடதிசைக்கு விரைவில் வருவேன். அந்நாளில் உன்னிடம் வருகின்றேன். அங்கு [அயோத்தியில்] உள்ள கிளைஞரைக்காத்தற்கு உன்தம்பி பரதன் அமைதியோடு உள்ளான். இங்கு உள்ள கிளைஞரைக் காத்தற்கு யார் இருக்கின்றார்? சொல். உன் கிளைஞர் என் கிளைஞரன்றோ? பெருந்துயருறுதல் தகுமோ? இந்த என் உறவினரை என்கட்டளையால் இனிமையாகக் காத்திரு' என்றான். அன்பன் குகன் இராமபிரானது ஆணைமொழியைக் கடக்கமாட்டாதவனாய்த் துன்பத்தில் நீங்காதவனாய், பிணியையுடையவனென்று சொல்லத்தக்க பிரிவையுடையவனாய், இராமபிரானிடத்தில் விடைகொண்டு நின்றான். ஐயனும் இளையபெருமாளும் அப்போது சீதாபிராட்டியோடு புறப்பட்டு, நெடுந்தூரம் வழிச் செல்வாராய், வனம்புகுந்து சித்திரகூடம் சேர்ந்தனர்.

இஃது இங்ஙனம் இருக்க. இராமபிரானைப் பிரிந்ததனாலடைந்த துயரத்தால் பொலிவிழந்த பரதாழ்வான், இராமபிரானைக் கானகத்தினின்று அயோத்திக்கு அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்று துணிந்து, நெடும்படை புடைசூழ, தன்னுடைய திருவரையில் மரவுரியுடைதரித்து, தன்பின் வரும் இளையவன் சத்துருக்கனனோடும் கோசலநாட்டை விட்டு, தாவரம் சங்கமம் என்னும் இருவகைத்தோற்றத்தில் அடங்கிய எல்



லாவுயிர்களும் தனது நிலைமையை நோக்கி இரங்குமாறு கங்கைக்கரையை அடைந்தான். இடமகன்ற பெரும்புனலையுடைய கங்கையாறு முழுதும், பெரியதோற்றமுள்ள கம்பீரமான யானைகளின் மதநீரருவி பாய்தலால், அப்போது அவ்யாற்று நீர், வண்டினத்துக்கு மாத்திரமேயன்றி, மற்றைமனிதர் முதலியவர்களுக்குக் குடிக்கவும், குடைந்துநீராடவும் உரியதன்றாயிற்று. குதிரைகளின் கால்களால் மேலெழுப்பப்பட்ட தூளிகள் போய்ச் சேரப்பெற்ற மேலுலகத்திலுள்ள தேவர்களின் முடிகளிலிருக்கும் வாடாத கற்பக மலர் மாலைகளும் நன்றாக உலர்ந்து வாடியிருக்கக்கூடும். இங்கு அங்ஙனம் குதிரைக்கூட்டம், வந்த இளைப்பினாலும், இராமபிரானைப் பிரிந்த துயரத்தாலாகிய நாவறட்சி மிகுதியாலும் மிகுதியாகப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, குடிக்க உரியதல்லாத அக்கங்கையின் நீரையும் இன்னதெனச் சுவைபாராமல் பருகினவையும், நீந்தும்பொருட்டு நின்றவையும், புழுதியின்மேல் புரண்டவையுமாயின. அப்பொழுது, அந்தக் கங்கையின் நீர்வெள்ளம், யானையின் மதநீர் புழுதி முதலியன விரவி நிறம் மாறியமையால், பாலையொத்த தனக்கு உரிய வெண்ணிறம் பொருந்தியதாயில்லை; அன்றியும், தொன்று தொட்டுத் தான் கலந்துவந்த நெடுங்கடலில் ஓடிச்சென்று சேரவுமில்லை; ஏனெனில், பரதாழ்வானது சேனையாகிய கடலே, அக்கங்கை நீர்ப்பெருக்கு அத்தனையும் உட்கொண்டுவிட்டது. ஆதலால், கானிற் சென்ற காளையின் பின்னே புறப்பட்ட பரதாழ்வானை அவ்விடத்தில் அப்பொழுது பின்தொடர்ந்துசென்ற சேனைகள் அறுபதினாயிரம் அக்ஷௌஹிணிகளென்று* பெரியோர்களால் தொகை குறித்துக் கூறப்படும்.

அந்தப்படை கங்கையைச்சேர்ந்த அந்தச் சமயத்தில், வில்வித்தைவல்ல கூற்றம்போலும் ஆற்றலுள்ள வேடர்கோனாகிய அக்குகன், அதனைக் கண்டு, ஸ்ரீராமனோடு போர்புரிதற்காகவே போலும் இங்ஙனம் படையெடுத்ததென்றெண்ணி, எடுத்த சீற்றமுடையவனாய், பெருந்தொகுதியாகவுள்ள வலிய அப்படையை, அதனால் மேலெழுந்த துகளால் கண்டறிந்தவனாய், அதனைத் துகள்போலவே எளிதாக எண்ணி, சினத்தால் சீற்றம் மிகவும், நாசியினின்று புகைமிக்குக்கிளம்பவும், வளைத்த புருவப்போர்வில்லை உடையவனாய், உயிர்களையெல்லாம் இறுதிக்காலத்தில் அவ்வவற்றின் உடலினின்று வாங்குதற்குக் கையிலே முக்கவருள்ள அயிற்படையேந்திக் காலன் தான் ஐந்துலக்ஷம் வடிவெடுத்தாற்போன்ற பயங்கரமான கரிய உருவமுள்ள சேனையை உடையவனாய், அரைப்பட்டிகையில் உடைவாளைக் கட்டி, உதட்டைக் கடித்துக்கொண்டு, வெட்டினாற்போற் பேசும் சொற்களை உடையவனாய், கண்கள் தீப்பொறி பறக்க, விழிகளைத் தீப்போலச் சிவக்க விழித்து, உடுக்கையென்னும் ஒருவகைப் பறையைக் கொட்டிக்கொண்டு, மற்றும் ஊதுகொம்புகள் பலவற்றை ஒலித்துக்கொண்டு, போர்த்தினவுகொண்டிருந்த நிலையில் போர் கிட்டியதென்று மகிழ்ச்சியால் பூரித்த "உடுக்கையிழந்தவன்கைபோல இடுக்கண்களைதலால்" நெருங்கிய அன்பர்போன்ற தோள்களை உடையவனாய், படையைக் கொம்பினாற் சுட்டிச்சுட்டிக் காட்டிக்கொண்டு, 'இப்படையெல்லாம் எலிகள்; இவற்றை அழித்தற்கு அரவம் யான்' என்று வீரவாதம் கூறிக்கொண்டு, உலகத்தில் வாழ்கின்ற வலிமை மிக்க கூரிய நகங்களையுடைய புலிகளெல்லாம் வந்து ஓரிடத்தில் ஒருங்கே திரண்டனபோலத் தன் பக்கத்தில் ஒருங்குவந்து கூடும்படி ஆரவாரம் மிக்க தன்சேனையை மகிழ்வுடன் கூவியழைத்தான்.

(தொடரும்.)

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

* அக்ஷௌஹிணி—யானை இருபத்தோராயிரத்து எண்ணூற்றெழுபது, தேர் இருபத்தோராயிரத்து எண்ணூற்றெழுபது, குதிரை அறுபத்தையாயிரத்து அறுநூற்றுப்பத்து, காலாள் லக்ஷத்தொன்பதினாயிரத்து முந்நூற்றைம்பது; ஆக, இரண்டுலக்ஷத்துப் பதினெண்ணாயிரத்து எழுநூறு கொண்டது.

# Some Facts Concerning Flies.

## ஈக்களைப்பற்றிய சில விஷயங்கள்.

ஈக்களை சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் நாம் பார்க்கிறோம். அவை நம்மை வந்தடைவதற்கான காரணங்களைப்பற்றியும், அவற்றால் என்ன தீங்குகள் நமக்கு நேரிடக்கூடுமென்பதைப் பற்றியும் பொதுவாகப் பலரும் அறியார்கள். இவ்வீக்களை ஜனஸமூகத்தினரின் பெரிய விரோதிகளென்றே கருதவேண்டும். வருஷந்தோறும் ஏராளமான ஜனங்கள் இவற்றால் பரவப்படும் வியாதிகளின் காரணமாக மாண்டு போகிறார்கள். ஆதலால் ஒவ்வொருவரும் இவ்வீக்களின் விஷயத்தில் மிக்க எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

ஈக்கள் எவ்வாறு அபிவிருத்தியடைந்து வியாதிகளைப் பரவச்செய்கின்றதென்பதைப்பற்றியும், அவற்றால் பொதுஜனங்கள் எவ்வாறு பாதகப்படுகின்றனவென்பதைப்பற்றியும் கீழே விவரிப்போம்.

ஈக்கள் எப்போதும் அழுக்கையே விரும்பும் ஓர் பிராணி. ஆதலால் அவை அழுக்கு அதிகமாயுள்ள இடங்களிலேயே வசிக்க விரும்புகின்றன. சாதாரணமாய் நமது வீடுகளில் அசுத்தமாயுள்ள இடங்களில் இவை பரவியிருப்பதைக் காணலாம். குதிரை லாயங்களில் சேரும் எருக்களில் இவை அதிக விருப்பத்துடன் தங்கியிருக்கின்றன. இன்னும் மாட்டுக்கொட்டில்களில் சேரும் குப்பைகளும் இவை தங்கியிருப்பதற்கு ஏற்றவை. இவற்றில் இவ்வீக்கள் ஏராளமாக அதிகரிக்கின்றன. வீடுகளில் மூலைகளிலும் மற்ற விடங்களிலும் அழுகின பதார்த்தங்களையும் குப்பைகளையும் சேரவிடுவதால், அவ்விடங்களில் ஈக்கள் உற்பத்தியாக ஹேதுவாகின்றன.

ஈக்கள் தடவை ஒன்றுக்கு 120 முதல் 150 முட்டைகள்வரை இடும். இவை சுமார் 10 தினங்களுக்குள் வளர்ந்து நல்ல பருவத்தையடையும். இவற்றில் அரைவாசி பெண் ஈக்களாக இருந்து அவை ஒவ்வொன்றும் 100 முட்டைகள்வரை இடுமானால், சுமார் நாற்பது தினங்களுக்குள் 12,627,550 ஈக்களாக அதிகரிக்கும்.

ஈக்கள் அநேகவித வியாதிகளைப் பரவச்செய்வதற்குக் காரணமாயிருக்கின்றன. எப்படியெனில், இவைகள் அழுக்குள்ள இடங்களிலும், அழுகின பதார்த்தங்களிலுமே வசித்துவருவதால், அங்குள்ள விஷத்தன்மையான கிருமிகள் இவற்றின் கால்களில் ஒட்டிக்கொள்ளுகின்றன. அப்படியே அவை நாம் உண்ணும் பதார்த்தங்களின்மேலும் மற்ற வஸ்துக்களின்மேலும் உட்காருவதால், அக்கிருமிகள் நமக்குள் தொத்திக்கொண்டு வியாதியை உண்டாக்குகின்றன. ஆகையால், வீடுகளில் எங்கும் குப்பைகளைச் சேர்த்துவைக்காமலும், நாம் உண்ணும் உணவு முதலியவற்றில் ஈக்கள் உட்காராமலும் பாதுகாக்கவேண்டும்.

ஈக்களானவை மனிதர்களின் அபாயகரமான விரோதி. இவற்றால் பரவச்செய்யப்படும் காலரா முதலிய வியாதிகளால் ஏராளமான ஜனங்கள் இறக்கிறார்கள். மனிதர்களைக் கொல்லும் சிங்கம் முதலிய காட்டுமிருகங்களை இவ்வீக்களுக்கு ஒப்பிடின், அக்காட்டுமிருகங்களை மிகச்சாதுவானவையெனக் கூறலாம்.

ஈக்கள் தமக்கு இரைதேடும்பொருட்டு அரை மைல்வரை யாதொரு சகாயமுமின்றி பறந்து செல்லக்கூடும். சில சமயங்களில் வண்டிகள் முதலியவற்றின் மூலமாய் மைல்கள் கணக்கான தூரங்களுக்கும் செல்கின்றன. இதனால் சிலர் தாமும் தம் வீடுகளும், அவற்றைச் சுற்றியுள்ள இடங்களும் சுத்தமாகவே யிருந்தாலும், அடுத்தாற்போலுள்ளவர்கள் அசுத்தமாயிருப்பார்களானால், அங்குப் பரவியிருக்கும் ஈக்கள் இவ்விடங்களுக்குவந்து வியாதிக்கிருமிகளைப் பரவச் செய்ய ஹேதுவாகும்.



ஈக்களை முற்றிலும் ஒழிப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் சுத்தியாயிருத்தல் வேண்டும்; நாம் வசிக்கும் வீடுகளைச் சுத்தியாக வைத்திருந்து குப்பைகளையும் அழுகின பதார்த்தங்களையும் அங்குச் சேரவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்; எங்குக் குப்பைகளும் அழுகின பதார்த்தங்களும் இல்லையோ, அங்கு ஈக்கள் இரா. அழுக்கே ஈக்களைப் போஷிக்கின்றன.

நாம் உண்ணும் ஒவ்வொரு உணவிலும் ஈக்கள்வந்து உட்காராமல் பாதுகாக்கவேண்டும். ஓட்டல்காரர்களும், இன்னும் மற்றவர்களும் இதைப்பற்றி எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

வீட்டில் ஈக்களின் தொந்திரவு அதிகமாயிருக்குமானால், அவற்றை ஒழிப்பதற்கு அவ்விடத்தில் ஒரு சூடான இரும்பின்மேல் 20 துளி கார்பாலிக் ஆஸிட் விட்டால், இதனால் எழும்பும் புகையின் காரணமாக ஈக்கள் இறக்கின்றன.

கொசுக்கள் மலேரியா சுரத்தை உண்டாக்குவதுபோல, ஈக்கள் அநேகவிதமான வியாதிகளைப் பரவச்செய்கின்றன. ஆதலால், இவற்றிற்கு ஆகாரமாயுள்ள குப்பைகளையும் அழுகின பதார்த்தங்களையும் அவ்வப்போது வெளிப்படுத்தி வீட்டைச் சுத்தியாய் வைத்திருக்கவேண்டும்.

ஈக்களைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கும் விஷயத்தில் கீழ்க்கண்டவற்றைக் கவனிக்கவேண்டும்:—

ஒரு வீட்டில் ஈக்கள் இல்லாமலிருக்குமானால், அந்த வீடு மிகவும் சுத்தியானதென்றே கருதவேண்டும்.

எப்போதும் ஈக்கள் வியாதிஸ்தர்களை அணுகவொட்டாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். அதுவும், தொற்றுவியாதியால் பீடிக்கப்படுபவர்களிடம் ஈக்கள் அணுகவேகூடாது.

வீட்டிலாவது வீட்டைச்சுற்றியுள்ள இடங்களிலாவது அழுகினபொருள்கள் இருக்கும்படி விடக்கூடாது.

நாம் உண்ணும் உணவுகளையெல்லாம் எப்போதும் மூடியே வைக்கவேண்டும்.

மாட்டுக்கொட்டில்களில் சேரும் குப்பைகளை அவ்வப்போது அப்புறப்படுத்தி, அவற்றை எப்போதும் சுத்தமாகவே வைத்திருக்கவேண்டும்.

வீட்டிலுள்ள அறைகளின் ஜன்னல்களில் திரைகளை உபயோகித்து ஈக்களை உள்ளே வரவொட்டாமல் தடுக்கவேண்டும்.

# The Ladies' Section.

## ஸ்திரீகள் பகுதி.

### CASTOR OIL.

### ஆமணக்கெண்ணெய்.

இது சிற்றாமணக்கெண்ணெய் என்றும், விளக்கெண்ணெய் என்றும் கூறப்படும். ஆமணக்குச் செடியானது இந்தியாவில் ஏராளமாகப் பயிராவதால், இந்த எண்ணெயானது எங்கும் கிடைக்கக்கூடியதாயிருக்கின்றது. இது இரண்டுவிதமாகத் தயார் செய்யப்படுகின்றது. ஒன்று பச்சை எண்ணெய், மற்றொன்று வறுத்த எண்ணெய். இவற்றில், துல்லியமாயும் வெளிறமாயிருப்பதே மிகச்சிறந்தது. மஞ்சள் நிறமாயிருப்பது மட்டமானது. ஆமணக்கு எண்ணெயைப் பேதியாவதற்கு எல்லோரும் சாப்பிடுகிறார்கள். இதனால் சோரவாதம், குன்மம், குடலேற்றம், பஞ்சேந்திரியங்களின் எரிச்சல், நீர்ச்சுருக்கு, ஔஷதங்களினால் உண்டாகும் வெப்பம் முதலிய பல வியாதிகளும் நீங்குகின்றன.

இந்த எண்ணெயை சிசுக்களுக்குப் புகட்டுவதனால் தேக சௌக்கியம் உண்டாகின்றது.

பிரசவித்த ஸ்திரீகளுக்கும் சிறந்த ஔஷதமாகின்றது. குழந்தைகளுக்கு 1 டீஸ்பூனும், பெரியவர்களுக்கு 1 அவுன்ஸும் கொடுக்கலாம். பால், காப்பித்தண்ணீர், ஓமவாடர், சுக்குக் கஷாயம், உப்புசேர்ந்த நீராகாரம், எலுமிச்சம்பழ ரசமும் சர்க்கரையும் சேர்ந்த கூட்டு, பிசின் இளகல் இவைகளில் ஏதேனும் ஒன்றுடன், எண்ணெயைக் கூட்டிக்கொடுக்க உபத்திரவமில்லாமல் பேதியாகும் என்று டாக்டர் எஸ். சந்திரசேகர் தமது * "சுதேச வைத்திய ரத்தினம்" என்னும் நூலில் கூறுகிறார்.

## MOTHER AND CHILD.

### தாயும், குழந்தையும்.

தாய்மார்கள் தம்தம் குழந்தைகளைப் பராமரிக்கும் விஷயமாய் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை "ஜனோபகாரி" பின்வருமாறு எழுதுகின்றது.

(1) குழந்தைகளுக்கு வயிற்றுல் போகும்போது பால் கொடுக்கக்கூடாது.

(2) குழந்தைகள் பால் குடிக்கும் பால்புட்டியில் வாயில் வைத்துக்கொள்ளும் குழாய் மிகவும் நீண்டிருக்கக்கூடாது.

(3) குழந்தை பால்குடித்தபிறகு அதைத் தொட்டிலில்விட்டு குலுங்கும்படி ஆட்டக்கூடாது.

(4) குழந்தை கத்தும்போதெல்லாம் அதற்குப் பால் கொடுக்கக்கூடாது.

(5) சூர்யாஸ்தமனத்திற்குப் பிறகு குழந்தையை வீட்டுக்குவெளியே கொண்டுபோகக்கூடாது.

(6) சிறுகுழந்தையை வெறுந்தரையிலும் மிகவும் காற்றோட்டமுள்ள இடத்திலும் உட்காரவிடக்கூடாது.

(7) தாயோடல்லது வேறொருவருடனும் குழந்தை படுத்துத் தூங்கக்கூடாது.

(8) மழைக்காலத்தில் அஜீர்ணபேதி அதிகமாகையால் அந்தக்காலத்தில் குழந்தைகள் தாய்ப்பாலை மறக்கும்படி செய்யக்கூடாது.

(9) மிகவும் புழுக்கமுள்ளதும் காற்றோட்டமில்லாததுமான அறையில் குழந்தையை விட்டுவைக்கக் கூடாது.

(10) வெந்நீரினுல் சுத்தம் செய்யப்படாத எந்தப் பாத்திரத்திலும் குழந்தைப்பாலை விட்டுவைக்கக் கூடாது.

## DRIED GINGER.

### சுக்கு.

உலர்ந்த இஞ்சியைக்கொண்டு வீட்டில் அவர்களே ஒருவித ஔஷதம் பின்வருமாறு தயார்செய்துகொள்ளலாம். சுக்கை ஒன்றிரண்டாக உடைத்து அதில் 3 பலம் எடை எடுத்து 20 அவுன்ஸ் பிராந்தியில் சேர்த்து, 10 நாட்கள் வரையில் ஊறவைத்து, அப்பால் த்ராவகத்தைமட்டும் வடிகட்டி ஒரு புட்டியில் போட்டுவைத்துக்கொள்ளவும். இதில் ஒரு தேக்கரண்டியளவோ அல்லது அதற்குச் சிறிது அதிகமாகவோ விரேசன ஔஷதங்களில் கலந்து கொடுக்கலாம்; இவ்வௌஷதம் வயிற்றில் சேர்ந்துள்ள புளிப்பைப் போக்குவதில் சிறந்த வீர்யமுள்ளது; அஜீர்ணத்தையும் வயிற்றுப்பொருமலையும் போக்குவதற்கு இதைமட்டுமோ அல்லது இவ்வித குணமுள்ள வேறு ஔஷத சரக்குகளுடன் கூட்டியோ கொடுக்கலாம்.

ஒருபலம் சுக்கை வருத்து உடைத்து, அரைப்படி ஜலத்தில்போட்டு, பாத்ரத்தின் வாயைமூடி ஒருமணிநேரம் காய்ச்சி வடிகட்டி யெடுக்கவும். இக்கஷாயத்தை வயிற்றுவலி; வயிற்றுப்பொருமல், வாந்தி, குடல் முதலியவற்றிலுண்டாகும் உளைதல் என்னும் இந்நோய்களில் 1 அல்லது 2 அவுன்ஸ் அளவாக ஒருமணிக்கு ஒருமுறை இளஞ்சூடாக உட்கொண்டுவந்தால் சீக்கிரத்தில் நற்குணமுண்டாகும். உவர்க்ஷாரம் என்கிற ஸோடாவுப்பை இக்கஷாயத்தில் சிறிதளவு சேர்த்தால் முன்கூறிய இதன் குணங்கள் அதிகமாகி, உபயோகிப்பவருக்கு வெகுசீக்கிரத்தில் சௌக்கியமேற்படும். குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டியளவு கஷாயம் போதுமானது.

சுமார் 6 அவுன்ஸ் ஜலத்தில் $\frac{1}{4}$ பலம் சுக்கை நறுக்கிப் போட்டுக் கொதிக்கவைத்து வடிகட்டி யெடுக்கவும்; இதை ஆமவாதமென்னும் ஒருவித கீல்வாயுவில் இரவில் படுக்கும்போது உஷ்ணமாகவே குடிக்கக்கொடுத்து, துப்பட்டியால் உடம்பைப் போர்த்துவிட விசேஷமாக வியர்வையுண்டாய் சிக்கிரத்தில் குணமுண்டாகும்.—வைத்திய கலாநிதி.

* சுதேச வைத்திய ரத்தினம். இது ஓர் அரிய வைத்திய நூல், டாக்டர். S. சந்திரசேகர் எழுதியது. விலை ரூ. 2—8—0. வேண்டுவோர்:- மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.



# The Boys' Section.

# சிறுவர் பகுதி.

## ARIYAN MORAL STORIES.

### ஆரிய நீதி கதைகள்.

" நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்."

ஒருவனுக்கு நல்லினஞ்சேர்வதினும் சிறந்த துணை இல்லை; தீயவினத்தினுஞ் சிறந்த பகையுமில்லை. மனிதர், நெல்லானது நிலத்தின் வளப்பத்தால் வளர்வதுபோல, தாம்தாம் சேர்ந்த இனத்தின்யோக்கியதையால் மேன்மைபெறுவர். சுழல்காற்று கப்பலின் பெருமையைக் கெடுத்துவிடுவதுபோல, அற்பர்சகவாசம் கௌரவத்தைக் கெடுத்துவிடும். மக்கள் இயற்கையில் குற்றமில்லாதவர்களாயிருந்தாலும், கெட்ட சகவாசத்தால் புத்திமாறிக் கெடுவார்கள். காட்டுத் தீயானது பற்றிக்கொண்டால், அக்காட்டிலுள்ள வாசனையுள்ள சந்தனமரங்களையும் எரித்துவிடுகின்றதன்றோ? ஆதலால் ஒருபொழுதும் அற்பரோடு சகவாசஞ்செய்வது கூடாது.

### உதாரணம்.

தசரத மஹாராஜாவின் பட்டமஹிஷிகளுள் கைகேயி என்று ஒருத்தி இருந்தாள். அவளுக்குச் சிறுபிராயம் முதல் மந்தரையென்று ஒரு வேலைக்காரி தொண்டுசெய்துவந்தாள். அவள் ஒருசமயம் 'புஷ்ய நக்ஷத்திரத்தில் தசரதர் இராமருக்கு இளவரசுப் பட்டஞ் சூட்டப்போகிறார்' என்று கேள்விப்பட்டாள். அப்பொழுது நகரமெங்கும் அலங்காரஞ் செய்யப்பட்டிருந்தது. உடனே அக்கூனி பொறாமையடைந்து, படுத்துக்கொண்டிருந்த கைகேயியினிடம் வந்து, 'புத்தியற்றவரே! எழுந்திரும், உமக்கு வந்திருக்கும் துக்கத்தை நீர் அதிருஷ்டமென்று நினைத்து மகிழ்கிறீர்; உமது அதிருஷ்டம் கோடைக்காலத்து வெள்ளம்போல் நிலைபற்றது' என்றாள். கைகேயி இதைக்கேட்டு, 'இப்பொழுது என்னகஷ்டம் வந்துவிட்டது?' என்றாள். உடனே கூனி, 'தசரதர் இராமருக்குப் பட்டஞ்சூட்டப்போகிறார்; அவர் உம்மைவஞ்சித்து, செல்வத்தையெல்லாம் கௌஸல்யைக்குக் கொடுக்கப்போகின்றார்; இதற்காகவே பரதனை மாமன்வீட்டுக்கு அனுப்பிவிட்டார். தசரதர் மிகவும் சூதுள்ளவர்; ஆகையால், நீர் இப்பொழுதே நன்மையைத் தேடிக்கொண்டு என்னையும் காப்பாற்றவேண்டும்' என்றாள். கைகேயி இதைக் கேட்டு, மகிழ்ந்து, 'மந்தரே! எனக்கு இராமனென்றும் பரதனென்றும் வேற்றுமை இல்லை. இந்தச் சந்தோஷ சமாசாரத்தை நீ என்னிடம் சொன்னதனால், நான் இம்முத்துசரத்தை உனக்கு வெகுமதியளித்தேன்' என்று முத்துமாலையைக் கொடுத்தாள். உடனே மந்தரை வெகு கோபத்துடன் அம்முத்து மாலையை வீசி எறிந்து, துக்கத்துடன் கைகேயியைப் பார்த்து, 'தாயே! உமக்குப் புத்தி சரியாயில்லை; துக்கத்தைக் கண்டு யாரேனும் மகிழ்வார்களா? புஷ்ய நக்ஷத்திரத்தில் இராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்யப்போகிறார்கள். பிறகு கௌஸல்யையின்முன் நீர் அடிமையைப்போல் நிற்கவேண்டும். உமது புதல்வனும் வேலைக்காரனைப்போல் கைகட்டிக்கொண்டு நிற்கப்போகிறான். இராமருடைய மனைவி முதலியோர் இஷ்டப்படி அதிகாரம் பண்ணுவார்கள். பிறகு பரதன் எங்கேயாவது ஓடிப்போக வேண்டியதுதான். இராமருக்குப்பின் அவர் புதல்வனுக்குப் பட்டம் கிடைக்குமேயொழிய, பரதனுக்கு ஒருபொழுதும் இராஜ்யம் கிடைக்கமாட்டாது. இராமர் இலக்ஷ்மணனிடம் அன்புள்ளவராயிருப்பதனால், இலக்ஷ்மணருக்குக் கவலையில்லை. இராமர் பரதருக்குத் தீங்கு செய்வாரென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. ஆகையால், நீங்கள் இப்பொழுது நன்றாய் ஆலோசித்து, உமது புதல்வருக்கு முடிசூட்டிவைக்க வழிதேடுங்கள்; உமது சத்துருவைக் காட்டுக்கனுப்பும் வழியை ஆலோசியுங்கள்' என்றாள். 'கரைத்தால் கல்லும் கரையும்' என்னும் பழமொழி பொய்க்காதல்லவா? கைகேயியின் மனம் மந்தரை சொல்லைக்

கேட்டு மாறியது. பிறகு கைகேயி முகம் துடிதுடிக்கப் பரபரப்போடு 'மந்தரே! நீதான் எனக்கு உண்மையான தோழி; எந்த உபாயத்தால் பரதனுக்குப் பட்டஞ்சூட்டி, இராமனைக் காட்டுக்கனுப்பலாம்?' என வினவினாள். அதைக் கேட்டுக் கூனி, முற்காலத்தில் சம்பராஸுரயுத்தத்தில் தசரதரை ரக்ஷித்ததற்காக, அவர் இரண்டுவரம் உமக்குக் கொடுத்திருப்பதாக நீரே என்னிடம் சொல்லியிருக்கிறீர்கள்; அவற்றுள் ஒருவரத்தினால் பரதனுக்குப் பட்டஞ்சூட்டும்படி கேட்கவேண்டும். மற்றொரு வரத்தினால் இராமனைப் பதினான்கு வருஷம் காட்டில் வசிக்கச்செய்யவேண்டும். நீர் இப்பொழுதே ஆடையாபரணங் களைந்தெறிந்து, அழுக்குத்துணியைக் கட்டிக்கொண்டு, சோபகிருகத்தில் படுத்துக்கொள்ளுங்கள்; தசரதர் வந்தால் பேசாமல் துக்கத்தை அதிகமாக்கிக்கொண்டு அழுங்கள்; இதுதான் உபாயம்' என்றாள். கைகேயியும் அவ்வாறே சோபகிருகத்தில் படுத்திருந்து, தசரதர் வந்ததும் வரங்களைக் கேட்டு வாங்கி, தன் பிடிவாதத்தை நிறைவேற்றி, யாவராலும் இகழ்ப்படும் இழிமையை அடைந்தாள். அற்ப சகவாசம் நல்ல மனமுடையவரையும் கெடுத்துவிடும்.

---

"தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்."

பாவங்கள் பின்பு தன்னை வருத்துவதை விரும்பாதவன், பிறரிடம் தீவினைகளைச் செய்யாதிருக்கவேண்டும். நாம் தீவினைகளை அறிந்து செய்யினும், அறியாமற் செய்யினும், அவை, நெருப்புச் சுடுமென்னும் ஞானமில்லாதவன் தொட்டாலும் தீ அவனைச் சுட்டுவிடுவது போலத் துன்பங்களைச் செய்யும். நாம் செய்த கர்மங்களின் பயனை எவ்விதத்திலும் அநுபவித்தே தீர்க்கவேண்டும். நாம் ஒருவருக்குக் கெடுதி செய்தால் 'தன்வினை தன்னைச்சுடும்' என்றபடி நமக்கே கேடு நேரிடும். ஆதலின், எக்காலத்திலும் பிறருக்குத் தீங்குசெய்வது கூடாது.

### உதாரணம்.

முன்னொருகாலத்தில் தசரதர் விவாகஞ் செய்து கொள்வதற்குமுன், வேட்டையாடுவதில் விருப்பங்கொண்டு அம்புவில்லுடன் ஸரயூநதிக்கரைக்கு வந்துசேர்ந்தார். பிறகு அவர் இரவில் அவ்வாற்றங்கரையில் நீர்குடிப்பதற்காக இறங்கும் காட்டெருமை, யானை முதலிய மிருகங்களைப்பாணத்தினால் அடிக்கத்தொடங்கினார். அப்பால் யானை தண்ணீர் குடிப்பதுபோல் சப்தம்கேட்டது. உடனே தசரதர் சப்தத்தை லக்ஷ்யமாக வைத்துப் பாணத்தைப் போட்டார். பிறகு 'ஐயோ! ஐயோ! என் பெற்றோருக்காக ஜலம் எடுக்கவந்த என்னை எவன் பாணத்தால் அடித்தான்? நான் ஒருவருக்கும் தீங்குசெய்யவில்லையே! இனி என் பெற்றோர் திக்கதியாயினரே!' என்று மனிதன் கதறும் சப்தம் கேட்டது. உடனே தசரதர் மனம்வருந்தி, சப்தம் வந்த இடத்திற்குச் சென்று பார்த்தார். அங்கே ஒரு முனிகுமாரன் கொட்டுண்ட குடமோ யுடையவனும், பாணத்தினால் அடிபட்டு இரத்தம் பெருகுகின்ற சரீரத்தை உடையவனும் இருப்பதைக் கண்டார். பிறகு அம்முனிகுமாரன் அவரைப் பார்த்து 'அரசனே! நான் உனக்கு என்ன பிழைசெய்தேன்? கண்ணில்லாத என் பெற்றோர் இனி என்ன செய்வார்கள்? அவர்கள் தாகத்தை எவ்வாறு பொறுப்பார்கள்? நீர் விரைவாகச் சென்று என்பெற்றோர்க்கு இச்செய்தியைத் தெரிவியும். உமது அம்பு எனது உயிர்நிலையைப் பிளக்கின்றது. உமக்குப் பிரம்மஹத்திதோஷம் நீங்கட்டும்' என்று சொன்னான். பின்பு தசரதர், ரிஷிகுமாரன் சுழல்வதைக் கண்டு, அவன் தேகத்தினின்றும் அம்பை இழுத்தெடுக்கவே அவன் இறந்தான். அப்பால் தசரதர் வெகுதுக்கத்துடன், அக்குடத்தில் நல்ல நீரை நிறைத்து எடுத்துக்கொண்டு, அந்த ரிஷிகுமாரன் காட்டின வழியாகச் சென்று, ஆசிரமத்தையடைந்து, குருடர்களும் துணையற்றவர்களுமான முனிகுமாரனுடைய பெற்றோரிடஞ் சென்றார். காலடியோசையைக் கேட்டு முனிவர் 'குழந்தாய்! ஏன் தாமதஞ்செய்கிறாய்? சீக்கிரம் ஜலத்தைக் கொண்டுவா என்றார்!' உடனே தசரதர், 'நான் க்ஷத்திரியன்; தசரதனென்று பெயருள்ளவன்; நான் அறியாமல் உமது புதல்வனை அடித்துவிட்டேன்' என்று நடந்த விஷயத்தை தெரிவித்தான். பின்பு பெற்றோர்கள் மிக வருந்தி வெகுநேரம் கதறினர். ரிஷிகுமாரன் திவ்யரூபத்துடன் வந்து, தன் பெற்றோரைச் சொற்பநேரத்தில் தேற்றிவிட்டு, ஸ்வர்க்கலோகஞ் சென்றான். அப்பால் முனிவர், தசரதரைப் பார்த்து, 'அரசரே! நீர் எனது ஒரேபிள்ளையைக்கொன்றுவிட்டீர்; இப்பொழுது எனக்கு நேர்ந்த புத்திரசோகத்தைப்போன்ற புத்திரசோகத்தால், நீரும் மாண்டுபோவீர்' என்று சாபமிட்டார். அப்பால் அம்முனிவர் சாபமிட்டபடியே, தசரதர் புத்திரசோகத்தினால் இறந்தனர். ஆதலால், பிறருக்கு அறிந்தேனும் அறியாமலேனும் தீங்குசெய்வது கூடாது.



---

## Review of the Press.

## பத்திரிகை ஆராய்ச்சி.

### DIET FOR BRAIN WORKERS.

### மூளையுழைப்புக்கு ஏற்ற உணவு.

ஸமீபத்தில் வெளிவந்த "வைத்திய கலாநிதி"யில் இவ்விஷயமாய் ஓர் வியாசம் காணப்படுகிறது:—

புத்தியை அதிகமாய் உபயோகித்து வேலைசெய்பவர், மூளையின் போஷணைக்குத்தேவையானதைவிடத் தசைநார்களைப் போஷிப்பதற்கு அநுகூலமான உணவுகளை உபயோகித்துவருவது பெரும்பிழையாகும். பெரும்பாலும் உட்கார்ந்த விடத்திலேயே புத்தியை உபயோகித்து வேலை செய்பவனுடைய தேகம் விசேஷமாய் உஷ்ணத்தையும் உரத்தையும் அபேக்ஷிப்பதில்லை; இவ்விதம் நீடித்தகாலம் மூளையை அதிகமாய் உழைத்து வேலைசெய்யும் புருஷரும், ஸ்திரீகளும், முக்கியமாய் உபாத்தியாயர்களும், சாஸ்திர ஆராய்ச்சி செய்பவரும், நூலாசிரியர்களும் மற்றவர்ஒருதினத்தில் தின்பதற்கான உணவை மூன்றுதினத்தில் உண்பார்கள்.

தினப்படி விகிதம்:—உடலையுழைத்து வேலைசெய்யும் யௌவனவயதிலுள்ள ஒரு மனிதனுக்குத் தினம் ஒன்றுக்கு 3000 காலரீஸ் (Calories) உணச்சத்து வேண்டியிருக்கும். இந்த அளவில் பத்தில் ஒருபங்கு உணவுச்சத்து பிரோடீட் அல்லது தேகப்போஷணையென்னும் கட்டட வேலைக்கும் சிதைந்துவரும் பாகங்களைப் பழுதுபார்ப்பதற்கும் உபயோகப்படும். மிச்சமுள்ளதில் மூன்றில் ஒருபங்கு கொழுப்பாகவும், மற்றது கறிப்பொருளாகவும் இருக்கும். கொழுப்பும், கறிபொருளும் பொதுவில் தேகத்தில் சூட்டையும், உழைப்பதில் ஊக்கத்தையும், உரத்தையும் உண்டுபண்ணக் கூடியவையாம்.

உட்கார்ந்தவிடத்திலேயே வேலைசெய்யும் தொழிலுள்ளவர்—மூளையை உழைத்து வேலைசெய்பவர் எல்லோரும் சற்றேறக்குறைய ஒரேவிடத்தில் உட்கார்ந்தவண்ணம் வேலைசெய்துவருவது வழக்கமாகையால்—தசைநார்களை யுழன்று அசையுமாறு ஓடியாடி வேலைசெய்பவருக்குத் தேவையான ஆகாரத்தின் அளவில் மூன்றில் இரண்டுபங்குக்குமேல் அபேக்ஷிப்பதில்லை.

ஒவ்வொருவருடைய தேகநிறைக்கும் பருமனுக்கும் தகுந்தவாறு ஆகாரத்தின் அளவும் வித்தியாசப்படும். உடம்பின் பருமனும் நிறையும் அதிகமாக (மேதஸ் என்னும் கொழுத்த தேகத்தைத் தவிர்த்து), உணவும் அதற்கேற்றவாறு அதிகமாய் எடுத்துக்கொள்ளவேண்டிவரும். வயதுக்குத் தகுந்தாற்போலும் இவ்வித ஏற்றக்குறைவு உண்டாகும். யௌவனப் பருவத்தைத் தாண்டி முதிர்வடைந்த நிலைமையிலுள்ள ஒரு மனிதன் சற்றேனும் மிதமிஞ்சியுண்பது உற்றதல்லவென்பது முக்கியமாய் கவனிக்கத்தக்கது.

ஆகாரத்தின் தன்மைகளும் அளவுகளும் வித்தியாசப்பட வேண்டிய வேறு சில நிலைமைகளையும் கவனிக்க வேண்டும். ஆனால் பெரும்பான்மையோர் அவ்விதம் கவனிப்பதில்லை; அவர்கள் வேண்டும்போல் தோன்றுவதையெல்லாம் புசிப்பார்கள்; எந்த நேரத்தில் வேண்டுமானாலும் சரி, எவ்வளவு வேண்டுமானாலும் சரி யோசனையாவது பகுத்தறிவாவது இல்லாமலே உண்பார்கள்.

நிலுவையிலிருப்பது என்ன? தேகத்தின் போஷணைக்குத் தேவையான அளவை மீறி, உணவுகளை, முக்கியமாய் பிரோடீட் என்னும் சத்துவமடங்கிய

ஆகாரங்களை மிதமிஞ்சி உபயோகித்தால், உடலுக்கு உபயோகப்படுவது போக நிலுவையிலுள்ள உணவின் அம்சம் கழிவுப்பொருட்களை வெளிப்படுத்துவதற்கான அவயவங்களால் வெளிப்படுத்தப்படும். நல்ல ஆரோக்கிய நிலைமையிலுள்ள தேகத்தில் ஏற்கெனவே இந்த அவயவங்கள் ஜீர்ணசமயத்தில் இரஸாயன முறைப்படி சில விஷகுணமுள்ள பதார்த்தங்களை முறிப்பதற்கும் அவற்றை அடியோடு வெளிப்படுத்துவதற்கும் விசேஷ வேலைகளைச் செய்யவேண்டியிருக்கின்றது. இதோடு தேவையான உஷ்ணத்தையாவது உரத்தையாவது உண்டுபண்ணக்கூடாத உணவின் அதிக அம்சங்கள் இடையிடையில் நிரம்பிப்போய், நிலுவையில் தேசத்தில் தங்கிப்போய் அநேகம் அவயவங்களுக்கு வீண் சிரமத்தைக் கொடுக்கக்கூடியவைகளாய் விடுகின்றன.

மூளையுழைப்பாளிகளின் நந்கு:—சிறிதளவு உணவும் தேகத்தில் நன்றாக ஊறி யுபயோகப்படாமற் போகும் ஸாதாரணமான நிலைமை மூளையுழைப்பாளிக்கே உண்டாகிற வழக்கம்; ஏனெனில் அவர்களுக்கு வேண்டியவளவு வியாயாமம் அல்லது தேக உழைப்பு கிடையாது. தினந்தோறும் தகுந்தவளவு வியாயாமம் செய்துவந்தால், தேகத்தின் உணவின் அம்சங்களில் அவ்வளவாய் நிலுவை யேற்படாமல் எல்லாம் ஜீர்ணமாய் உபயோகப்பட வழியுண்டு. உட்கார்ந்தவிடமே கதியென்று மூளையை யுழைக்கும் இம்மனிதர்களுடைய தேகத்தில் உணவின் அம்சங்கள் அநேகம் நிலுவை நின்று, தேகத்தினுள்ளேயே விஷத்தன்மைகளை யுண்டுபண்ணி, மலபந்தம் முதலிய பலவேறு கெடுதிகளுக்குக் காரணமாகின்றன. இறுதியில் உட்புற அவயவங்களில் அநேகம் பலங்குன்றி சிதைவடைந்துவிடும்.

தினந்தோறும் மலத்தைத் தாராளமாய் வெளிப்படுத்துவதற்கும், தேகத்தினுள் விஷத்தன்மையான செயல்களைச் செய்யாமலிருப்பதற்கும் தகுந்தாற்போல் மூளையுழைப்பாளிகள் உணவுகளை யுபயோகிக்கவேண்டும்.

குளிர்காலங்களிலும் மழைகாலங்களிலும் கோடைகாலத்தைவிட சிறிதளவு அதிகமான உணவை யுபயோகிப்பதில் கெடுதியிராது. மாம்ஸாஹாரங்களைத்தவிர்த்து சாகாஹாரங்களையே பலவிதமாகப் பக்குவம்செய்து உண்பதும் நல்ல குணமுண்டாக்கக்கூடியன. கனிகளும் சில கிழங்குகளும் மூளையுழைப்பாளிகளுக்குத் தகுந்தவையாம். மதுபானம், என்பது இவர்களுக்கு ஒருசிறிதும் தகாது. நன்றாகக் கனிந்த பழங்களின் சாறும், நன்கு விளாவிய மோரும் இவர்களுக்கு அநுகூலமான பானவகைகள். தினமொன்றுக்கு இவர்கள் எட்டு அல்லது பத்துக்கோப்பைத் தண்ணீர் உட்கொள்ளலாம். பிரோடீட் என்னும் தார்க்கியகாப் பொருட்களை மிதமாய் உபயோகிக்கவேண்டும்.

கோதுமை, தினை முதலிய சில அரிசிகளும், வெண்டைக்காய், பாகற்காய், காபேஜ் என்னும் கீரை, தாதுவளை, புடல், சாம்பர் பூசணி முதலிய காய்கறி தினுசுகளும் மெலாக்கிச்சிலி, சீமையிலந்தை, அன்ஜேசி முதலிய பழவகைகளும் இவர்களுக்குத் தகுந்த உணவுப் பொருட்களாம். காலையிலும் இரவிலும் பால் பருகுவதும் அவசியம்.

தினந்தோறும் இரண்டுவேளை அன்னமும், இரண்டுவேளை பாலும் உட்கொண்டு வந்தால் போதுமானது. அன்னமாவது பாலாவது உபயோகித்ததும், பழங்களைப் புசிக்கலாம்.

## SMALL-POX.
## வைசூரி.

இப்போது வெளியான "தமிழர் நேசன்" என்னும் பத்திரிகையில் டாக்டர் எஸ். முத்துலக்ஷ்மி அம்மாள் அவர்கள் எழுதியுள்ள "வைசூரி" என்னும் வியாசத்தில், அம்மை வார்த்தபின் அநுசரிக்கவேண்டிய முறைகளைப்பற்றி பின்வரும் விஷயங்கள் காணப்படுகின்றன.

அம்மை வியாதியினால் பீடிக்கப்பட்டவர்களை ஒரு தனி அறையில் வைக்கவேண்டும். நோயாளிக்கு வேண்டிய பாத்திரங்கள், உடைகள் தவிர மற்ற அநாவசியமான சாமான்கள் அங்கே இருக்கக்கூடாது. நோயாளியின் சௌகரியத்தைக் கவனிக்க, அருகில் செல்பவர், அம்மை குத்திக்கொண்டவர்களாகவாவது, அல்லது அம்மை ஒருதரமாவது வார்த்தவர்களாகவாவது இருக்கவேண்டும். நோயாளியின் படுக்கை, துணி முதலியவற்றை வீட்டிலுள்ள மற்றவர்களுடைய உடைகளோடு சேர்க்கக்கூடாது. இந்த வியாதியானது, நோயாளியைத் தொடுவதனாலும், நோயாளியின் துணியிலிருந்தும், அவன் சாப்பிடும் பாத்திரங்களிலிருந்தும் ஒட்டிக்கொள்ளுந்தன்மையுள்ளது. காற்றின் மூலமாகவும் பரவக்கூடியது. இதனால்தான் அம்மை வார்த்திருக்கிற வீட்டுக்குப் பிறர் போகக்கூடாது என்பது.

இரண்டாவது: அம்மை வியாதியை மற்ற வியாதிகளைப்போல் பாவித்தே வைத்தியம் செய்யவேண்டும். இது, விஷசுரம், க்ஷயரோகம் போன்ற வியாதியே தவிர வேறொன்றுமில்லை. அந்த வியாதிகளுக்கு வைத்தியம் செய்து, அநேகம்பேர் பிழைத்துக்கொள்வதுபோல இவ்வியாதியையும், நோயாளியின் இம்சையைக் குறைக்கக்கூடிய மருந்துகொடுத்து, கொஞ்சத்திற்கொஞ்சமாவது சரிப்படுத்தலாம். வைத்யர்கள் உத்தரவின்பேரில், பலத்தையும், தேகபுஷ்டியையும் கொடுக்கக்கூடிய ஆகாரத்தையும், மருந்தையும் கொடுக்கவேண்டும். அம்மை நோயால் இறந்தவர்களுடைய உடை, படுக்கை முதலியவற்றை எரித்துவிடுவது உத்தமம், இல்லாவிட்டால், அவற்றை கொதிக்கும் தண்ணீரில் போட்டு பிறகு நன்றாய் வெயிலில் உலர்த்தி பின்பு எடுத்து உபயோகித்துக்கொள்ளலாம். ஒருவீட்டில் ஒருவருக்கு அம்மை வார்த்தால் அவ்வீட்டிலுள்ள மற்றவர்கள் எல்லோரும் உடனே அம்மைக் குத்திக்கொள்ளவேண்டும். அப்படிச் செய்துகொள்வதனால் மற்றவர்களுக்கு அம்மை வார்க்காமல் தடுக்கலாம்.



# Notes.
# குறிப்புக்கள்.

### Some uses of Fig Tree.

அத்திமரத்தின் சில உபயோகங்கள்:—அத்திமரத்தின் விதை மிகச் சிறியதாயிருந்தாலும், அது முளைத்துச் செடியாகி பிறகு பெரிய மரமாகின்றது. இம்மரத்தின் மலர்களை எவரும் கண்டதில்லையென்றும், எவர் கண்ணுக்கும் புலப்படாமலே பூத்துக் காய்க்கின்றதென்றும் சொல்லப்படுகின்றது. அத்திப்பிஞ்சானது மூலவாயு, வயிற்றுக்கடுப்பு முதலியவற்றால் வருந்துபவர்களுக்குப் பத்தியக்கறியாக உபயோகப்படுகின்றது. இன்னும், அத்திக்காயை ஜனங்கள் விசேஷமாகச் சமையலுக்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதன் பழத்தை எல்லோரும் விருப்பத்துடன் சாப்பிடுகிறார்கள்; இது மிகுந்த குளிர்ச்சியைத் தரக்கூடியது. அத்திப்பாலானது நீரிழிவு முதலான வியாதிகளை நிவர்த்தி செய்யும். அத்திமரத்தின் வேரில் இறக்கப்படும் கள்ளில் சர்க்கரையையாவது அல்லது பேயன் வாழைப்பழத்தையாவது கலந்து தினந்தோறும் சூர்யோதயத்தில் உண்டுவந்தால், அஸ்திமேகம், மூர்ச்சை முதலான வியாதிகள் நிவர்த்தியாகும். அத்திமரத்தின் பட்டைகளும் சிறந்த ஔஷதச்சரக்காகவுபயோகப்படுகின்றன. இம்மரத்தின் இலைகள் வயல்களுக்கு எருவாக உபயோகப்படுகின்றன. அடிக்கட்டை வாகனங்கள் செய்வதற்கும், பலகைகள் வீட்டுக் கதவுகள் செய்வதற்கும் உபயோகப்படுகின்றன. கவனித்துப்பார்க்கின், அத்திமரத்தில் உபயோகப்படாதவை ஒன்றுமில்லையென்று திட்டமாய்க்கூறலாம்.

### Pencil Industry.

பென்ஸில் தொழில்:—இம்மாகாணத்தின்தொழில் இலாகாவின் முயற்சியால் நடத்தப்பட்டுவரும் பென்ஸில் தொழிலானது சற்று திருப்திகரமாகவே யிருக்கின்றதென்பதை அவ்வதிகாரியின் 1916—17 ம் வருஷத்து ரிபோர்டினின்று அறிகிறோம். பென்ஸில் செய்தவகையில் இலாகாவிற்கு நேர்ந்த செலவு ரூ 17,905-5-0. விற்பனை செய்தவகையிலும், கையிருப்பும் சேர்ந்து ரூ. 18053-3-11. போக லாபம் 148-8-11. இந்த லாபம் குறைவாயிருந்தபோதிலும் தொழில் அபிவிருத்திவிஷயத்தில் அதைரியப்படவேண்டிய அவசியமில்லை. ஆஸ்டிரியா, ஜெர்மனி முதலான இடங்களினின்று பென்ஸில்கள் வராததனால், இந்த பென்ஸில்களுக்குக் கிராக்கி ஏற்பட்டதாகத்தெரிகின்றது. மூன்று மாதகாலத்திற்குள் 40 ஆயிரம் டஜன் பென்ஸில்கள் செலவாயிருக்கின்றன. இவைகளை நயப்பாயும் பார்ப்பதற்கு அழகாயுமிருக்கும்படி செய்யவேண்டும். இதற்குப் போதுமானவளவு மரம் கிடைக்கவில்லையென்று சொல்லப்படுகின்றது. சுமார் 60 வகை மரங்கள்வரை பரீக்ஷிக்கப்பட்டும், தக்கபலன் கிடைக்கவில்லையென்று தொழில் இலாகா அதிகாரி கூறுகிறார். எனினும், அவர் அவ்விஷயத்தில் முயற்சித்துவருவதை இங்குச் சந்தோஷத்துடன் குறிப்பிடுவோம்.

### Lemou grass Oil.

மோப்புல் தைலம்:—இந்தப்புல்லானது திருவாங்கூர் ஸம்ஸ்தானத்திலுள்ள மலைச்சாரல்களில் வளர்கின்றது. அவ்விடங்களில் இப்புல்லினின்று இறக்கப்படும் தைலமானது வருஷம் 1-க்கு ரூ. 10,08,883 மதிப்புள்ள 47,051 காலன்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்தப் புல்லானது ஆறுமாதங்களுக்கு ஒருமுறை கொளுத்தப்பட்டு, பிறகு புதிதாக முளைக்கின்றது. அங்கு ஜூலை மாதம் தொடங்கி இப்புல்லினின்று

தைலம் இறக்கப்படுகின்றது. பெரும்பாலும் இத்தொழில் மாப்பிள்ளைமார்களாலேயே நடத்தப்பட்டு வருகின்றது.

**Paper Industry in Mysore.**

மைசூரில் காகிதத்தொழில்:—மைசூர் காடுகளில் காகிதக்கூழ் செய்வதற்கான மூங்கில்கள், புல்லுகள் முதலியன ஏராளமாக இருக்கின்றபடியால், அங்கு ஒரு காகிதத் தொழிற்சாலையை ஸ்தாபிக்க மைசூர் சம்ஸ்தானத்தார் உத்தேசித்திருக்கிறார்கள். இதற்காக 23 லட்சம் ரூபாயும் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். இப்போது யுத்தம் காரணமாக காகிதத்தின் விலை பலமடங்கு உயர்ந்திருப்பதனால், இச்சமயம் இவ்வித முயற்சி மிக்க பேருதவியாயிருக்குமென்பதில் ஐயமில்லை.

**Industrial Education in Madras.**

சென்னை மாகாணத்தில் தொழிற்கல்வி:—சென்னை மாகாணத்தில் தொழிற்கல்வியானது மிகவும் சொற்பமே. தொழில் இலாகாதாரின் 1916-17-ம் வருஷத்து ரிபோர்டுபடி இம்மாகாணத்தில் மொத்தம் தொழிற் பள்ளிக்கூடங்கள் 41 தான். இவற்றில் கவர்ன்மெண்டாரால் நடத்தப்படுபவை மூன்றே; மற்றவை பெரும்பாலும் கிறிஸ்தவப் பாதிரிமார் சங்கத்தாரால் நடத்தப்படுபவை. இங்கே குறிப்பிட்ட 41 பாடசாலைகளிலும் பயிற்சிபெற்றுவந்த மாணவரின் தொகை 1970. இவ்வளவு பெரிய தேசத்துக்கு இந்தச் சொற்ப பாடசாலைகள் எவ்வாறு போதும்? ஆங்காங்குப் பற்பலவிடங்களிலும் தொழிற்பாடசாலைகள் ஏற்பட்டால்தான் அதிகமான ஜனங்கள் தொழிற்பயிற்சி யடையக்கூடும். ஆதலால், தேசத்தின் பரப்பையும், ஜனங்களின் தேவைகளையும் நன்றாகக் கவனித்து அதிகமான தொழிற் பாடசாலைகளை ஏற்படுத்தி பெரும்பாலான ஜனங்கள் அவற்றில் பயிற்சிபெற சௌகரியங்களிருக்கும்படி செய்ய விரும்புகிறோம்.

**Import of Matches.**

தீப்பெட்டிகளின் இறக்குமதி:—சென்ற 1915-16-ம் வருஷத்தில இந்தியாவில் எவ்வளவு தீப்பெட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டனவென்ற கணக்கை "வர்தகமித்திரன்" பின்வருமாறு குறிக்கின்றது.

மொத்தம் இறக்குமதி 180 லட்சம் பெட்டிகள்; பெறுமானம் ரூ. 1,38,00,0000

100 குரோஸ் பெட்டிகளாக.

| | | |
|---|---|---|
| ஜப்பானிலிருந்து | 15, 278 | பெட்டிகள். |
| சுவீடன் | 2, 321 | ,, |
| நார்வே | 544 | ,, |
| ஸ்டிரெயிட்ஸ் | 96 | ,, |
| மற்றைய நாடுகள் | 26 | ,, |

ஆஸ்டிரியா, ஜெர்மனி—யுத்தம் காரணமாக இறக்குமதியில்லை.

குறிப்பு:—குரோஸ் 1-க்கு 144 பெட்டிகள்.

## Miscellaneous News.
## நாநாவித சங்கதிகள்.

அக்பர் இந்தியாவில் ஆட்சிசெலுத்திவந்த காலத்தில் அவரிடம் 3000 கப்பல்களும் 768 சண்டைக் கப்பல்களும் இருந்தனவென்றும், மாதம் 1-க்கு 29,282 ரூபாய் சம்பளம் பெற்று 923 போர்த்துகேசிய வேலைக்காரர்கள் இருந்தார்களென்றும் தெரிகிறது. அவர்கள் புதிய கப்பல்கள் கட்டுவதிலும், பழையனவற்றைச் சீர்திருத்தம் செய்வதிலும் வருஷம் 1-க்கு ரூ 843,452 செலவு செய்துவந்தார்கள்.

∴ ∴ ∴

ஐரோப்பாவில் எல்லா ஜாதியாரைக்காட்டிலும் ஆங்கிலேயர்களே அதிக விலையுள்ள சாப்பாடு சாப்பிடுகிறார்களாம். இங்கிலீஷ்காரன் ஒரு வருஷத்துக்கு 750 ரூபாய்க்கும், ஜெர்மானியன் 640 ரூபாய்க்கும், பிரான்ஸுக்காரன் 630 ரூபாய்க்கும் இத்தாலியன் 330 ரூபாய்க்கும், ருஷ்யன் 280 ரூபாய்க்கும் சாப்பிடுகிறார்களாம். ஆனால் இந்தியாவிலோ, சராசரி ஒவ்வொருவனும் 30 ரூபாய்க்குத்தான் சாப்பிடுகிறான்.

∴ ∴ ∴

வாழைக்காயிலிருந்து ரொட்டிசெய்யலாமென்று தெரிகின்றது. 63 பலம் வாழைக்காயினின்று 16½ பலம் மாவு எடுக்கக்கூடும். வாழைக்காய்களின் தோலை சீவிவிட்டு துண்டுதுண்டாக நறுக்கி வருத்து மாவாக்கிக்கொள்ளவேண்டும். இரண்டுபங்கு மாவுடன் ஒரு பங்கு கோதுமை மாவைக் கலந்து நல்ல ரொட்டி செய்யலாம். இதில் நல்ல உணவுச்சத்துக்கள் அடங்கியிருக்கின்றன.



∴ ∴ ∴

ஜான் ராக்பெல்லர் என்பவர் அமெரிக்காவில் பிரசித்திபெற்ற ஒரு கோடீசுவரர். அவருடைய வருஷ வருமானம் 2 கோடியே 300 பவுன். இக்கணக்குப்படி பார்த்தால், அவருக்குத் தினந்தோறும் 60,000 பவுனும், ஒவ்வொரு மணிதோறும் 2,289 பவுனும் என்று தெரியலாம். அவருடைய செல்வமானது நிமிஷந்தோறும் 38 பவுன் வீதம் பெருகிவருகின்றது.

∴ ∴ ∴

நாய்களுக்கு திருடர்களைப்பிடித்தல், சவாரி குதித்தல், ஜலத்தில் விழுந்தவர்களை எடுத்துக்கொண்டு வருதல் முதலிய பல தொழில்களைக் கற்பிக்க பாரிஸ் நகரத்திலும், ஸூரிச் என்னும் நகரத்திலும் பாடசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவாம். இத்தொழில்களை நாய்கள் சீக்கிரம் கற்றுக்கொள்ளுகின்றனவென்றும், ஆறுமாதகாலமே அவை பயிற்சி பெறுகின்றனவென்றும் சொல்லப்படுகின்றது.

∴ ∴ ∴

அமெரிக்காவானது மிகுந்த செல்வமுள்ள தேசம். இங்கு அவ்வப்போது பல நூதன விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. சமீபத்தில், 100 அடி நீளமுள்ள ரெயில்வே எஞ்சின் ஒன்று செய்யப்பட்டதாம். அது 250 ரெயில் வண்டிகளை இழுத்துச் செல்கின்றதாம்.

∴ ∴ ∴

அமெரிக்காவைச்சேர்ந்த நியூயார்க்கிலிருக்கும் ஒரு இலெக்ட்ரிக் கம்பெனியார் அத்தேசத்துக் கப்பற்படையின் உபயோகத்துக்காக ஒரு சோதனை விளக்கைச் செய்துகொடுத்திருக்கிறார்களாம். அதன் வெளிச்சம் 200 மைல் தூரத்திலுள்ள பொருள்களையும் தெளிவாகக் காட்டக்கூடியதாம்.

∴ ∴ ∴

இங்கிலாந்தில் பிரசித்திபெற்ற கதாசிரியராகிய ஹென்றி உட் என்னும் மாது ஈஸ்டு லின் என்னும் நாவல் ஒன்றை இயற்றியிருக்கிறார். இந்நாவலானது இதுவரையிலும் பத்து லட்சம் பிரதிகள் செலவாயிருக்கின்றனவாம்.

∴ ∴ ∴

ஹாவாய் தீவுகள் அமெரிக்காவுக்கு மேற்கே பசிபிக்கா சமுத்திரத்திலுள்ளன. அங்கு குழந்தைகளுக்கு நடக்கத் தெரிவதற்குமுன் நீந்தத்தெரியுமாம். எப்படியெனில், அவர்கள் தம் குழந்தைகளுக்கு முதன்முதல் நீந்தக் கற்றுக்கொடுக்கின்றனரும்.

∴ ∴ ∴

ஆஸ்டிரேலியாவில் நான்கு ஸ்திரீகள் நியாயாதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் மூன்று பேர்கள் கலியாணமானவர்கள். ஒருவர் விவாகமாகாதவர்.

∴ ∴ ∴

நிலத்தில் செல்லுவதல்லாமல், நீரிலும் செல்லக்கூடிய ஒரு மோட்டாரை ஆஸ்ட்ரியாவைச் சேர்ந்த வியன்னாவில் எல்கிரீர் என்னும் எஞ்சினியர் கண்டுபிடித்திருப்பதாக ஓர் பத்திரிகை கூறுகிறது.

∴ ∴ ∴

யானைக்கு வயது 200, ஒட்டைக்கு 40, குதிரைக்கு 30, மாட்டிற்கு 20, நாய்க்கு 12, பூனைக்கு 10, தவளைக்கு 15, கிளிக்கு 100, திமிங்கிலத்திற்கு 400.

## Books and Reviews.
## புத்தகங்களும், விமர்சனங்களும்.

**The Lives of Idaikadar and Thiruvalluvar.**

இடைக்காடர் சரித்திரமும் திருவள்ளுவர் சரித்திரமும்:—இப்பெயர்கொண்ட அரிய நூலொன்று இங்கர் ஸாலீஸ் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் அவர்களிடமிருந்து வரப்பெற்றோம். தெள்ளிய வசன நடையில் இயற்றப்பட்டுள்ள இந்நூலானது படிப்பவர்க்கு இன்பத்தையும், கல்வியறிவையும், நற்குண நல்லொழுக்கங்களையும் உண்டாக்குமென்பது எமது துணிபு. இன்னும் உரைநடை எழுதப்பயிலும் மாணாக்கர்க்கும் இந்நூல் மிக்க உபயோகமாயிருக்குமென்பதில் ஐயமில்லை. இந்நூலில் வரையப்

பட்டுள்ள சரித்திரங்கள் பெரும்பாலும் புலவர் புராணத்தில் அடங்கிய இடைக்காடர் சுருக்கம், திருவள்ளுவர் சுருக்கம் என்பவற்றைத் தழுவிய உரைநடையாக எழுதப்பட்டனவென இதன் ஆசிரியரின் முகவுரையினின்று அறிகிறோம். இதன் விலை அணா 4. வேண்டுவோர்: வேலூர், ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெறலாம்.

## A Garland of Songs.

தோத்திரப்பாமாலை:—இப்பெயர்கொண்ட தோத்திரநூலொன்று இங்கர் ஸ்ரீமான் வி. சுப்பையர் அவர்களிடமிருந்து வரப்பெற்றோம். இந்நூலில் எழுதப்பட்டுள்ள தோத்திரப்பாக்கள் படிப்பதற்கு மிக்க இனிமையாயும், இயற்கையாயும் அமைந்துள்ளன. பாக்களின் போக்கைக் கவனிக்கின் இவற்றைப் பாடியவர்க்கு பாடும்வன்மை இயற்கையிலேயே அமைந்துள்ளதென்பது புலப்படும். இத்தோத்திரங்கள் எல்லா சமயத்தாருக்கும் ஒப்புடைமையா யிருக்கும்பொருட்டு எழுதப்பட்டிருப்பது சிறப்பிக்கத்தக்கது. இதன் விலை அணா 6. வேண்டுவோர்: இதன் ஆசிரியரான வேலூர் போலீஸ் ஸ்கூல் வி. சுப்பையரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

## The Tamalian's Friend.

தமிழர் நேசன்:—தமிழ் நாட்டாருக்குள் தமிழ்ப் பாஷைமூலமாகவே நவீன கல்வியைப் பரவச்செய்வதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் "தமிழர் கல்விச்சங்கம்" என்னும் சங்கத்தின் சார்பாக வெளிவரும் "தமிழர் நேசன் என்னும் பத்திரிகையின் பிரதியொன்று வரப்பெற்றோம். இப்பத்திரிகையில் வெளியாயுள்ள ஒவ்வொரு விஷயமும் மிக்க அருமையாகவே காணப்படுகின்றது. விஷயங்கள் மிகவும் கற்றறிந்தவர்களாலேயே எழுதப்பட்டுவருகின்றன. பத்திரிகை முழுவதும் திவ்யமான நடையில் எழுதப்பட்டு படிப்பவரது மனத்தைக் கவரத்தக்கதாயிருக்கின்றது. இதன் வருஷ சந்தா ரூ 3. வேண்டுவோர்: சென்னை எறபாலு செட்டி தெரு நெ. 23 கட்டடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இதன் ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெறலாம்.

## Kalijuga Varthamani.

கலியுகவர்த்தமானி:—சென்னை பார்க்டவுனினின்று வெளியாகும் "கலியுக வர்த்தமானி" என்னும் பத்திரிகையின் பிரதியொன்று வரப்பெற்றோம். இது பிரதி சனிக்கிழமைதோறும் வெளியாகும் ஓர் சிறந்த வாரந்தரப் பத்திரிகை. இதில், ஆத்மலாப விஷயங்கள், மதசம்பந்தமான விஷயங்கள், தேச சமாசாரங்கள், யுத்தசம்பந்தமான விஷயங்கள், சுகாதார விதிகள் ஆகிய பல விஷயங்களைப் பற்றியும், ஹிப்னாடிஸம் மெஸ்மரிஸம் முதலானவைகளைப்பற்றியும் சிறந்த வியாசங்கள் எழுதப்படுகின்றன. இதன் வருஷ சந்தா ரூ 3. அன்னிய நாடுகளுக்கு ரூ 4—0—0.

## True Knowledge.

மெய்யறிவு:—இஃது அறம், பொருள், இன்பம் வீடுகளையும் அவற்றை யடையும் வழிகளையும் பல உவமானங்களோடு மிகச் சுருக்கமாகவும் மிக விளக்கமாகவும் கூறும் ஓர் அரியநூல். பலதேசத்துப் பலகாலத்து நீதிநூல்களின் சாரம் எனத்தக்கது. வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது. மூலமும் உரையுமுள்ளது. விலை அணா 8. வேண்டுவோர்: வேலூர், ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப்பெறலாம்.

## Swadesa Vaidya Ratnam.

சுதேச வைத்திய ரத்தினம்:—இதுவோர் சிறந்த வைத்தியநூல். இதில் பற்பல பூண்டுகள், காய்கனிகள், சரக்குகள் முதலியவற்றின் தன்மைகளும், அவற்றை உபயோகிக்கும் முறைகளும் அளவும் வெகு தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. வியாதிகளின் அட்டவணையும் சேர்க்கப்பெற்றுள்ளது. இது ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலருக்கும் மிக்க உபயோகமானது. இதன் விலை ரூ. 2—8—0. வேண்டுவோர்: வேலூர், ஜனோபகாரி ஆபீஸ் மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

---

| | | | |
|---|---|---|---|
| இராமாயண நீதிசுவிந்திரட்டு<br>எம். சுந்தர முதலியார் தொகுத்தது. | 0 | 2 | 0 |
| விவேகசிந்தாமணி<br>இது சிறுவர்களுக்கேற்ற பாடல்கள் கொண்டது. கவர்ன்மெண்டார் அங்கீகரித்தது. பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் தொகுக்கப்பட்டது. | 0 | 2 | 0 |
| திருவேங்கடசதகம்<br>சிறுவர்களுக்கேற்ற பாடல்களின் திரட்டு. குறிப்புரையுடன் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியரால் பதிக்கப்பட்டது. | 0 | 2 | 0 |
| தாரதாமசதகம் | 0 | 3 | 0 |

மானேஜர், ஜனோபகாரி ஆபீஸ், வேலூர்.

---


# ஜனோபகாரி.

(JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.


12 FEB 1918

புத்தகம் 2. Vol. II. பிங்கள ௵ மார்கழி ௴, DECEMBER 1917. சஞ்சிகை 12 No. 12.

## The Problem of Housing the Poor.

## ஏழைகள் குடியிருப்பதற்கு வீடுகளை நிர்மாணித்தல்.

கிராமாந்தரங்களிலும் நகரங்களிலும் ஏழைகள் குடியிருக்கும் வசதிகள் பெரும்பாலும் சுகாதாரமற்றவைகளாகவேயிருக்கின்றன. இவர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் மிகவும் சொற்பமேயாதலால், தங்கள் ஜாகைகளைச் சுத்தமாக வைத்துக்கொள்ளவும், சற்று நாகரிகமாக ஜீவிக்கவும் இயலாதவர்களா யிருக்கின்றனர். கிராமாந்தரங்களினின்றும் மற்ற இடங்களினின்றும் ஏராளமான ஜனங்கள் தத்தம் ஜீவனத்துக்காக நகரங்களுக்குச் செல்கின்றார்கள். ஆதலால், கிராமாந்தரங்களைக்காட்டிலும் நகரங்களில் ஏழைகளின் குடிவசதிகள் சீர்கேடடைய ஏதுவாகும். இவர்கள் நகரங்களில் பற்பல தொழிற்சாலைகளில் அமர்ந்து வேலை செய்வதால், தொழிற்சாலை முதலாளிகள் இவர்களின் சுகாதாரத்தைக் கவனித்து தக்க பரிஹாரங்களைத் தேடவேண்டியது அவசியமாகும்; ஏனெனில், தொழிற்சாலையின் வேலைகள் சிறப்பாக நடப்பதும், பாதகப்படாமலிருப்பதும் தொழிலாளிகளையே பொருத்திருக்கின்றன. தொழிலாளிகளின் தேகாரோக்கியத்தையும் நல்வாழ்வையும் முதலாளிகள் கவனிக்கத்தவறினால் தொழிலாளிகள் பல கஷ்டங்களுக்குள்ளாகி, அது காரணமாகத் தொழிற்சாலையின் வேலைகள் பாதகப்பட்டு முதலாளிக்கு நஷ்டமுண்டாவது நிச்சயம். ஆகவே, முதலாளிகள் தம்மிடம் தொழில்செய்யும் ஏழைகளின் சௌக்கியத்தையும் நல்வாழ்வையும் கருதி அவர்களுக்குத்தம்மாலான உதவியைச் செய்யவேண்டியது மிகவும் அவசியம். இப்படி செய்வதனால் முதலாளிகளுக்கு நஷ்டமேற்படுமென்று என்னுவது தவறு.

நகரங்களில் ஜனநெருக்கம் அதிகமாயிருக்குமானால், கவர்ன்மெண்டார் அவற்றை விசாலப்படுத்த ஏற்பாடுகளைச் செய்வதுண்டு. அப்பொழுது பல புதிய தெருக்களும் இன்னும் மற்ற சௌகரியங்களும் ஏற்படும். இவ்விதம் விசாலிக்கப்படும் பாகங்களில் ஏழைகளுக்கு ஜாகைகள் கிடைப்பதில்லை. கொஞ்சம் செல்வமுள்ளவர்களே அவ்விடங்களில் ஜாகைகளை வாங்கித் தங்களுக்கு இஷ்டப்படி வீடுகளைக் கட்டிக்கொள்ளுகிறார்கள்; இன்னும், நல்லமாதிரி வீடுகளைக்கட்டி வாடகைக்கு விடுகிறார்கள். இன்னும்சிலர், தங்கள்பணத்தைப் பூசொத்துக்களின் மேல் போடக்கருதி இப்படிப்பட்ட இடங்களில் வீடுகளை வாங்குகிறார்கள். ஆனால், ஏழைகளோ,

தமக்குக் கிடைக்கும் ஊதியம் ஜீவனத்துக்கே போதாததாயிருக்க எவ்வாறு அவ்விடங்களில் வீடுகளை வாங்கக்கூடும்? இவர்கள் அதிகமான வாடகை கொடுத்து அவ்விடங்களில் குடியிருக்க முடியாது.

சில நகரங்களில் கவர்ன்மெண்டார் பொது ஜன சுகாதாரத்திற்குப் பாதகமேற்படாமலிருக்கும்பொருட்டு, நகரத்திலுள்ள சில சுகாதாரமற்ற வீடுகளையும் சந்துகளையும் இடித்துப் புதிதாய் வீடுகளைக் கட்டியும், சிலவிடங்களை அப்படியே காற்றோட்டத்திற்காக விட்டும் வைக்கிறார்கள். இப்படி செய்வதனால், இவ்விடங்களில் முன்னே குடியிருந்தவர்கள் வேறு ஏற்கெனவே குடியுள்ள வீடுகளுக்குப்போய்ச் சேருகிறார்கள். இதனால் ஒரே குடித்தனத்திற்குப் போதுமான இடத்தில் இரண்டு மூன்று குடித்தனங்களாக இருக்க நேரிடுகின்றது. இன்னும் சிலவிடங்களில் அறை ஒன்றுக்கு ஒரு குடித்தனமாக இருக்கக்காணலாம். இப்படிப்பட்ட வீடுகளில் பகற்காலங்களில் புருஷர்கள் வெளியே போய்விடுவது காரணமாக அதிகக்கூட்டம் தெரியாவிட்டாலும், இராக்காலங்களில் ஜனநெருக்கத்தைக் காணலாம்.

வீடுகளில் அதிகமாகக் குடித்தனங்கள் இருப்பதனால், அங்கு வசிப்பவர்களின் தேகசுகாதாரமும் சன்மார்க்கமும் பாதகப்பட ஹேதுவாகின்றது. விவசாயத் தொழிலையுடையவர்கள் இத்தகைய கேடுகளினின்று சற்று விலகியிருக்கக் கூடுமாயினும், தொழிற்சாலைகளில் வேலைசெய்பவர்கள் எவ்விதத்திலும் இக்கேடுகளுக்கு ஆளாகாமலிருக்க இயலாது. வீடுகளில் அதிக குடித்தனங்கள் சேருவதனால் இன்னும் பலவிதக் கெடுதிகள் சம்பவிக்கின்றன. இப்படிப்பட்ட இடங்களில் அம்மை, காலரா, ப்ளேக் முதலான தொற்றுவியாதிகள் வெகு இலேசாகப் பரவக்கூடும்.

மேலேகுறிப்பிட்ட கஷ்டங்களை நிவிர்த்திக்க மார்க்கங்கள் எவை என்பதை ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டியது அவசியமாகும். முற்கூறியபடி, ஒரேவீட்டில் பல குடித்தனங்களாக இருந்து கஷ்டப்படும் ஏழைகள் தங்களுக்குச் சௌகரியமானபடி வீடுகளைக் கட்டிக்கொள்ள இயலாதவர்கள். இவர்களுக்குத் தொழில் செய்து கிடைக்கும் பணம் ஜீவனத்திற்கே போதாததாயிருக்க, மற்றைய சௌகரியங்களுக்குத் தமது முதலாளிகளையே எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. முதலாளிகளின் தொழிலின் முற்போக்கும் லாபமும் தொழிலாளிகளையே பொறுத்திருக்கின்றபடியால், இம்முதலாளிகள் அவர்களின் நல்வாழ்வைக்கோரியிருக்க வேண்டியது அவசியமாகும்.

தொழிலாளிகளின் நன்மையைக்கருதி கவர்ன்மெண்டார் அவர்களுக்குத் தனியே வீடுகளைக் கட்டிக்கொடுத்து, அவர்களின் சக்திக்கியன்றவாறு வாடகை வசூலிக்கலாம். இவ்விதம் கட்டப்படும் சுகாதாரவீடுகள் தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே இருக்கவேண்டும். சற்றுத் தூரமாயிருக்குமானால், அவர்கள் காலதாமதமில்லாமல் தொழிற்சாலைகளுக்குவரச் சௌகரியங்களை ஏற்படுத்தவேண்டும். இன்னும், இவ்வீடுகள் மற்ற ஜனசமூகத்தார்களினின்று சற்று விலகியிருப்பது நல்லது. ஒவ்வொரு வீட்டிலும் அதிகக் குடித்தனங்கள் இராமலும், தொற்றுவியாதிகளுக்கு இடங்கொடுக்காமலும் இருக்கவேண்டும். அப்போதைக்கப்போது சேரும் அசுத்தங்களை வெளியேற்றுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் இருக்கவேண்டும். ஜனங்களின் உபயோகத்திற்காகச் சுத்தமான தண்ணீர் குழாய்களின் மூலமாய் அவர்களுக்குக் கொடுக்கப்படவேண்டும். குடிவகைகள் முதலியன இவர்களுக்குச் சமீபத்தில் கிடைக்கும்படி இருக்கக்கூடாது. இவர்களின் பிள்ளைகள் படிப்பதற்கான பள்ளிக்கூடங்களைப் போதுமானவரை ஸ்தாபிக்கவேண்டும். இன்னும், இவர்களின் உபயோகத்திற்காக கோயில் முதலியவற்றையும் ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் இவர்கள் குடியேறியிருக்கும் பாகத்தை அடிக்கடி பார்வையிட்டு எல்லாம் நல்ல சுகாதார நிலைமையிலிருக்கச்செய்யவும், வாடகைகளை வசூலிக்கவும்



பொறுப்புவாய்ந்த ஒரு உத்யோகஸ்தரை ஏற்படுத்தவேண்டும். மேலே குறிப்பிட்டபடி தொழிலாளிகளுக்குச் சௌகரியங்களைச்செய்து கொடுத்தால், அவர்களின் தேகசௌக்கியம் நல்ல நிலைமையிலிருந்து தத்தம் வேலைகளைச் சரிவரச் செய்வார்களென்பதில் ஐயமில்லை. இந்த நிலைமையில் இவர்கள் தொழிற்சாலைகளில் சிறந்த வேலைகளைச் செய்யக்கூடியவர்களாயிருக்கின்றபடியால், இவ்வளவு சௌகரியங்களையும் செய்துகொடுத்த கவர்ன்மெண்டார் தொழிற்சாலை முதலாளிகளிடமிருந்து கொஞ்சம் பணவுதவியையும் பெறலாம். கூலிவேலை செய்பவர்கள் பெரும்பாலும் ஏழைகளானபடியாலும், அவர்களுக்குத் தக்க சுகாதாரமுள்ள வீடுகளைக் கட்டிக்கொடுத்து அவர்களின் தேகசௌக்கியம் சீர்கேட்டையாமல் பாதுகாத்து வருவதனாலும் அவர்கள் நன்மையடைவதோடு, அவர்களை அமர்த்திக்கொள்ளும் முதலாளிகளுக்கும் தொழிற்சாலை வேலைகள் சிறப்பாக நடந்தேறித்தக்க லாபம் கிடைக்க வழியுண்டு.

---

## The Curse of Echo.

By Mr. K. P. Seshadri Aiyangar,

## எதிரொலியின் சாபம். *

கிரீஸ் தேசத்தில் ஹெலிகன் என்னும் பர்வதமொன்று இருக்கின்றது. அதன் இரமணீயமான பள்ளத்தாக்கில் பரிமளமிகுந்த புஷ்பச் செடிகள் விசேஷமாக வளர்ந்திருந்தன. அங்கே ஒரு அப்ஸரஸ் இருந்துவந்தாள். அவளது பெயர்தான் எதிரொலி. அவள் தன் சகோதரிகளுடன் கைகோத்துக்கொண்டு பசும்புற்றரை மீதும் மலையினின்று சலசலவென்று சப்தித்துக்கொண்டுவரும் அருவிகளின் பக்கத்திலும் உலாவி விநோத வார்த்தைகளாடிப் பரிஹசித்துக்கொண்டிருப்பது வழக்கம். அவர்களெல்லாரைக்காட்டிலும் எதிரொலி சுறுசுறுப்புள்ளவள்; நடையில் அன்னத்தை யொத்தவள். அவளது மந்தஹாஸமோ மதனனையும் வசீகரிக்கும் தன்மையது. வாயைத் திறந்து ஒருவார்த்தைசொல்ல ஆரம்பித்தாலோ, தேன்மாரி பொழிவதை யொக்கும்! அத்தகைய இனிமையான மொழிகளைப் பேசத்தக்க தன்மை வாய்ந்தவள். கதை சொல்வதில் அவளுக்கு வேறு இணை கிடையாது. அவ்வளவு சமத்காரம் வாய்ந்தவர்கள் கிடைப்பது அருமை. ஆகவே, அவளது சகோதரிகள் அவளை ஏதாவது சில்விஷம் செய்யவெண்ணினால், அவளைக் கூப்பிட்டு, 'எதிரொலியே! வார்த்தையில் வல்லவளே! நீ சென்று ஹீராவுடன் அவளது லதாகிருஹத்திலுட்கார்ந்து அவள் என்றும் கேட்டிராத ஓர் அபூர்வமான கதையை அவளுக்குச் சொல். அவளது கவனம் முழுவதும் கதை கேட்பதிலேயே ஆழ்ந்திருக்கட்டும். நம்மைக் கண்டுபிடியாமலிருக்க இதுதான் நல்லவழி. நீ சொல்லும் கதை மிகவும் பெரியதாயிருக்கவேண்டும். அப்படி செய்தாயானால் உனக்குக் கூந்தலில் முடிந்துகொள்ள அத்யற்புதமான ஒரு மலர்ச்செண்டு கொடுப்போம்' என்று சொல்வார்கள்.

இதைக்கேட்டதும் எதிரொலி சந்தோஷமுடையவளாய்ச் சிரித்தாள். எதிரொலியின் சிரிப்பானது அப்பள்ளத்தாக்கு முழுவதும் கேட்கும்படியாயிருக்கும்.

"அவள் என் கதையைக் கேட்டு அஸ்வாரஸ்யம் அடையவாரம்பித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என எதிரொலி கேட்டாள்.

---

* இது கிரீஸ் தேசத்தில் வழங்கிவரும் புராதன கதை. பெரிய மண்டபங்களிலும், மைதானங்களிலும், கணவாய்களிலும் உரக்கக்கூப்பிடின் எதிரொலி பின் தொடர்ந்து உண்டாவதைக் கேட்கலாம். அந்த எதிரொலியைப்பற்றிய ஒருகதை இங்குத் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது.

"அப்படி அவள் உன் கதையினால் வெறுப்படையுங்காலம் வருமாயின், அப்பொழுது நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம். அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்" என்று அந்த அப்ஸரஸ் சகோதரிகள் பதில் சொன்னார்கள்.

எதிரொலி இம்மறுமொழியைக் கேட்டதும், மிக்க சந்தோஷத்துடன் ஹீராவின் பக்கத்திலுட்கார்ந்து கதைசொல்லச் செல்லலானாள். ஹீரா என்பவள் தேவர்களுக்கெல்லாம் அரசனான ஜீயஸ் என்பவனின் மனைவி. அவள் வெகுகடின சித்தமுடையவள்; அப்படியிருந்தபோதிலும் எதிரொலியை நகைமுகத்துடன் வரவேற்றாள். எதிரொலியைக் கண்டவர் யாவரும் சந்தோஷ சாகரத்தில் அமிழ்வர்.

"ஹே! அப்ஸரஸே! நீ இங்கு என்னிடம் வந்ததன் காரணம் என்ன? யாது விசேஷம்?" என்று ஹீரா அதிகார தோரணையாகக் கேட்டனள்.

"பெருமை வாய்ந்த ஹீராவே! உன்னிடத்தில் வெகுநாளாகப் பேசவேண்டுமென்று எனக்கு ஆசை உண்டு. அப்படிப்பட்ட ஆசையானது நெடுங்காலமாக எனக்கு உதித்திருக்கின்றது. இதற்குமுன் என்றும் கேட்டிராத ஓர் அபூர்வ கதையை நான் உனக்குச்சொல்ல விரும்புகிறேன்" என்று எதிரொலி விநயமாய்த் தன் மனத்திலுள்ளதை உள்ளபடியே கூறினாள்.

"ஆம் ஆம்: நீ சொல்லும் கதைக்கு முடிவென்பதே யிராது. சூரியனது உதயத்தைப் போல அந்தமே ஏற்படாது. நீ எண்ணிறந்த கதைகளைச் சொல்லுவாய். ஒவ்வொன்றும் கிழவனது தாடியைப்போல் நீண்டிருக்கும்" என்றாள் ஹீரா.

"தாயே! இதற்குமுன் நீங்கள் அநேகங்கதைகளைக் கேட்டிருப்பீர்கள். அவைகளெல்லாம் நான் சொல்லப்போகும் கதைக்குக் கொஞ்சமும் இணையாகாது. இதற்கு அவை எவ்வளவோ தாழ்ந்தவை" என்றாள் எதிரொலி.

"சரி: நீ சொல்லும் கதை இனிமையாயும் கேட்பதற்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதாயுமிருப்பின், ஆதிமுதல் அந்தம்வரை காதுகொடுத்துக் கேட்கிறேன்" என்றாள் சடினசித்தம் படைத்த ஹீரா.

ஹீராவின் பக்கத்தில் எதிரொலி வந்தமர்ந்து, அவளது வதனத்தை உற்று நோக்கியவாறே தன் கதையைச் சொல்லவாரம்பித்தாள். எதிரொலி வார்த்தையில் வரம்பெற்றவள். அவள் லோகத்தில் நடக்கும் விஷயங்களைக் கண்டும் கேட்டுமிருந்தாள். அவைகளையெல்லாம் அவள் பிறர்க்குச் சொல்லும் சக்திவாய்ந்தவள்; அபூர்வமான விஷயங்களெல்லாம் சேர்த்து நல்ல கதைகளாகத் தன்னிஷ்டப்பிரகாரம் உரைப்பாள். கதை சொல்வோர் யாவருமே கொஞ்சம் பொய்யையும் கலந்தே கூறுவார்கள். அவர்கள் அவ்விதம் கூறும்போது, தம்முடைய அநுபவத்தில் தெரிந்துகொண்ட உண்மையான விஷயங்களையும் அதனுடன் கலக்கிறார்கள். ஹீரா எதிரொலி சொன்ன கதையில் தன் முழுகவனத்தையும் செலுத்தினாள்; அந்தச் சமயத்தில் தன் அழுக்காற்றையும் மறந்துவிட்டனள். எதிரொலியின் வசீகர வார்த்தையினால் கதையில் நடக்கும் விஷயங்களை ஹீரா தானே நேரில் அநுபவிப்பதாகப் படும்படி தோன்றிற்று.

ஆனால், கடைசியில் ஹீரா, தன்னை அப்ஸரஸ்கள் பரிகாசம் செய்வதற்காக ஏற்படுத்திய சூழ்ச்சி இது என்று நிர்மானித்தாள். மற்றவர்கள் தன்னை ஏளனம் செய்ய எதிரொலியே முக்கிய காரணமென்றறிந்து, முகம் மிகவும் சிவக்க, உதடு துடிக்க, மின்னல்போல் திடீரென்று கோபந்தோன்ற முற்றாள்.

"இதுவரையில் வார்த்தையில் வரம் பெற்றிருந்த நீ எனக்குப் பரிபவத்தை உண்டுபண்ணினதனால், அந்த வரம் இன்றோடு போகக்கடவது. இனி, நீ ஊமையாகவிருந்து, ஒருவர் பேசி முடித்ததும் அவரது கடைசி வார்த்தைகளைத் திருப்பித்தான் சொல்லவேண்டும்" என்று ஹீரா சினத்தால் சபித்துவிட்டாள்.

'அந்தோ! அந்தோ!' என்று அப்ஸரஸ்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பரிதபித்து முறையிட்டனர்.



'அந்தோ! அந்தோ!' என்று எதிரொலியும் அவர்களின்பின் சொன்னாள். அதற்குமேல் ஒருவார்த்தையும் சொல்ல முடியவில்லை. ஹீராவிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று எவ்வளவோ பிரயாசப்பட்டும் வார்த்தைகள் வரவில்லை. எதிரொலிக்குப் பேசுந்திறமை அப்போதே போய்விட்டது. வேறொருவர் பேசுவதைத்தான் அவளுக்குப் பேசமுடியும். தானாகப் பேசவேண்டுமென்று முயற்சி செய்தாலும் அவளால் முடியாமற்போயிற்று.

## II

அந்த இரமணியமான பிரதேசத்தில் ஒரு இராஜகுமாரன் வேட்டையாடுவதன் நிமித்தம் வந்திருந்தான். அவன் பெயர் நார்ஸீஸஸ். அவன் வேட்டையாடிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் தன்னுடன் வந்த சிநேகிதர்களை விட்டுப்பிரிந்து மார்க்கந் தப்பிவிட்டான். அவன் மிக்க அழகு பொருந்தியவன்; யௌவனப் பிராயத்தினன்; கருநிறைந்த புருவத்தினன்; மாதையர் மனங்கவர் நோக்கத்தினன்; மலையும் மலைக்கும் வலிதிரு புயத்தினன். அவன் காமனையும் வாட்டும் அட்டழகு படைத்தவனாவான். வசந்த காலத்தில் புஷ்பங்கள் வாசனையும் அழகும் மிகுந்திருப்பது போல, அந்த யௌவன பருவத்தில் அவன் வனப்பிலும் தேஜஸிலும் அதிகரித்து விளங்கியிருந்தான். எவர் அவனைக் கண்டபோதிலும் நேசியாமலிரார். அவன் இரும்பைப்போல் கடினமான இருதய முள்ளவனாயிருந்தபடியால், பலரும் அவனை மனப்பூர்வமாக நேசித்து அடைய இயலாது பெருமூச்சுவிட்டனர். அதைக்கண்டும் அவன் கொஞ்சமேனும் இரக்கம் கொண்டானில்லை. அவன் இப்பூவுலகத்தில் பிறந்தபோது டீரீஸஸ் என்னும் சோதிட நிபுணர் அவனது பிற்கால வாழ்க்கையின் கூற்றைப்பற்றி முன்னமேயே எடுத்துரைத்திருந்தார். 'அவன் தன்னைத்தான் பார்க்காதவரையில் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வான்' என்று அவனது ஆயுர்ப்பாவத்தைக் குறித்துச்சொல்லியிருந்தார்; சோதிடம் பலித்துவிட்டது.

நார்ஸீஸஸ் உலகத்திலுள்ள பொருள்களெல்லாவற்றினையும் அலக்ஷியஞ்செய்தான்; புருஷர்களையும் பொருட்படுத்தினவனல்லன். அவன் அங்கனாமணிகளையும் கருதினவனல்லன். அவன் அதிசுந்தராங்கனானபடியால், அவனது அழகில் ஈடுபட்டு யாவரும் அவன் விரும்பியதைக் கொடுத்துவந்தனர். அவனுக்கு அன்பென்பதாவது, காதல் என்பதாவது, துக்கமென்பதாவது லவலேசமும் தெரியாது. ஒரு வஸ்துவின்மேல் அன்பும் விருப்பமும் ஏற்படுமேல், அப்போதே துக்கமும் வருத்தமும் கூடவே ஏற்பட்டுவிடும்.

நார்ஸீஸஸ், கானகத்தில் மேடுகளிலும் பள்ளங்களிலும் வீணாயலைந்து திரிந்தான்; தன் நேசர்களைக் கண்டானில்லை. அவன் திரிவதை அப்ஸரஸ்கள் கண்ணுற்றனர். அவனது எழில் மிகுந்த ரூபத்திற்கு அவர்கள் வசப்பட்டு அவன் செல்லுமிடங்களிலெல்லாம் செல்லலானார்கள். நார்ஸீஸஸ் நசிக்கக்கூடிய நரனானபடியால், அவனெதிரே செல்ல அவர்கள் வெட்கப்பட்டார்கள். மரங்களின் மறைவிலும் பாறைகளின் பக்கங்களிலும் ஒளிந்து ஒளிந்து அவனது மதனரூபத்தைக் கண்டுவந்தனர். அந்த அப்ஸரஸ்களோடு எதிரொலியுமிருந்தாள்.

நார்ஸீஸஸ், தான் வெகுதூரம் வழிதப்பி வந்துவிட்டோம் என்று தெரிந்துகொண்டு, இனி நடக்கத் தோன்றாதவனாய், தனது சிநேகிதர் பெயரைக் கூப்பிட ஆரம்பித்தான்.

"பர்ஸியஸ்! நீ எங்கிருக்கிறாய்!" என்று கூப்பிட்டான்.

"நீ எங்கிருக்கிறாய்?" என எதிரொலி பதில் ஒலித்தாள்.

நார்ஸீஸஸ் இந்தக் குரலைக்கேட்டதும் நின்றுவிட்டான்; குரல்வந்த இடத்தை உற்றுநோக்கினான். இதற்குள் எதிரொலியைத் தவிர மற்றைய தேவகன்னிகள் அவ்விடம் விட்டகன்றனர். நார்ஸீஸஸ் மீளவும் தன் நண்பனைக் கூப்பிடலானான்.

"நான் இங்கேயிருக்கிறேன்—காட்டில் நார்ஸீஸஸ்."

"காட்டில் நார்ஸிஸஸ்" என்றாள் எதிரொலி.

"இங்கே வா" எனக் கூவினான்.

"இங்கே வா" எனப் பதில் சொன்னாள்.

இந்த அதிசயமான குரலைக்கேட்டு, நார்ஸிஸஸ், அதிக ஆச்சரியமடைந்து, சுற்றுப்பக்கங்களிலெல்லாம் திரும்பிப்பார்த்தான்; ஒருவரையும் காணவில்லை.

"நீ சமீபத்திலிருக்கிறாயா?" எனக் கூப்பிட்டான்.

"சமீபத்திலிருக்கிறாயா?"என்றாள் எதிரொலி.

நார்ஸிஸஸ் ஒருவரையும் காணாததனால் மிகவும் வியப்படைந்து, குரல் வந்த திக்கையே நோக்கிச் சென்றான்.

எதிரொலி தன்பக்கம் அவன் வருவதை உணர்ந்து இன்னும் சற்றுத்தூரம் சென்றாள். அப்படிசெல்லவே, அவன் மறுபடியும்கூப்பிட்டபோது, அவளது குரல் இன்னும் வெகுதூரத்திலிருந்து வந்தது. அவள் எங்குச்சென்றபோதிலும் அவனும் அவளைப் பின்தொடர்ந்தான். அவள், தன்னைத் தப்பிப்போக வழிவிடமாட்டானெனத் தெரிந்துகொண்டாள். பிறகு இருவரும் எதிருக்கெதிரே பசும்புற்றரைமீது நின்றனர். அங்கு ஒரு பெரிய பொய்கையிருந்தது. அப்பொய்கையைக் கண்டதும் நார்ஸிஸஸ் சந்தோஷங்கொண்டு ஜலத்தினருகில் சென்று நின்றான். எதிரொலி அவன் பின்னால் ஒரு விருக்ஷத்தின்மீதுசாய்ந்தவண்ணமாக நின்றிருந்தாள். நார்ஸிஸஸ் ஜலத்தின் பக்கம் திரும்பியிருந்ததனால், அவள் தன் கண்களினின்று நீர் தாரை தாரையாகப்பெருக்கினாள்; அவனைப் பூர்ணமாக நேசித்தாள்; அவனிடத்தில் பேசவேண்டுமென்று எண்ணினாள்; ஆனால், ஒருவார்த்தையும் பேசமுடியவில்லை. திடீரென நார்ஸிஸஸ் எதிரொலியைத் திரும்பிப்பார்த்து,

"என்னைக் கூப்பிட்டவள் நீதானோ" என்று கேட்டான்.

"நீதானோ?" என்றாள் எதிரொலி.

"நான் முன்பே சொல்லியுள்ளேன்—நார்ஸிஸஸ்" என்றான்.

"நார்ஸிஸஸ்" எனப் பதிலுரைத்து அவனெதிரே தன்னிரண்டு கைகளையும் நீட்டினாள்.

"நீ யார்" என்றான் நார்ஸிஸஸ்.

"நீ யார்" என்றாள் எதிரொலி.

மிகவும் கோபமாய் "நான் முன்பே சொல்லவில்லையா?—நார்ஸிஸஸ்" என்றான்.

"நார்ஸிஸஸ்" என்று எதிரொலி மறுபடியும் சொல்லி, முன்போலவே விரித்த கை விரித்தபடியே நின்றாள்.

"ஏதோ சொல்: நீ யார்? என்னை ஏன் கூப்பிட்டாய்?" என்றான் நார்ஸிஸஸ்.

"என்னை ஏன் கூப்பிட்டாய்" என்று எதிரொலி பதில் சொன்னாள்.

இதைக்கேட்டதும் நார்ஸிஸஸ் மிகவும் சினங்கொண்டு, "நங்கையே! நீ யாராயிருந்தபோதிலும் சரி: நீ என்னை இக்கானகத்தில் வெகுதூரம் அலையவிட்டாய். இப்பொழுது என்னை நீ பரிகாசம் செய்யாதே" என்றான்.

"நீ என்னைப் பரிகாசம் செய்யாதே" என்று பதிலுரைத்தாள் எதிரொலி.

இவ்வார்த்தைகளை அவன் கேட்டதும் அதிக கோபமுடையவனாய், அவளை நிந்திக்க வாரம்பித்துவிட்டான். அவன் வையும் ஒவ்வொரு வசையையும் திரும்பவும் அவனுக்கே பிரயோகித்துவிட்டாள் எதிரொலி. கடைசியில், அவன், திரிந்த அலுப்பினாலும் கோபமுதிர்ச்சியினாலும் ஒன்றுந் தோன்றாதவனாய், அருகேயுள்ள புற்றரையின்மீது படுத்துக்கொண்டான். அவன் பக்கத்தில் கொஞ்சநேரம் எதிரொலி நின்றிருந்தாள். பிறகு, அவ்விடத்தைவிட்டு ஒரு பாறையின் மறைவில் போய் நின்றிருக்கலானாள். கொஞ்சநேரம் கழிந்தபின், நார்ஸிஸஸுக்குக் கோபம் சற்றுச்சாந்தமடைந்தது. நீர்வேட்கை அதிகமாயிருந்தபடியால் அருகிலிருக்கும் ஜலத்தை அள்ளிக்குடிக்கக் குனிந்தான். ஜலத்திற்கு நேரே கைகளை நீட்டினபோது தன்னை நோக்கும் ஒரு முகத்தைக் கண்டான். அப்படிப்பட்ட அழகிய முகத்தை ஒருநாளும் அவன் கண்டதேயில்லை. அவன் காதல் என்பதை எள்ளளவும்



உணராதவன். அம்முகத்தைப் பார்த்ததும் அவனுக்குக் காதல் மூண்டெரியத் தலைப்பட்டது, பெருமூச்சுடன் அதனெதிரே தன்னிரு கைகளையும் நீட்டினான். அந்த உருவமும் அவனெதிரே இருகைகளையும் நீட்டிற்று. எதிரொலி பாறையின் மறைவிலிருந்தபடியே பெருமூச்சுக்கு எதிர் பெருமூச்சுவிட்டாள். அந்த உருவம் தான் செய்ததை மீளவும் தனக்குச் செய்கிறதென்றும், அதுவும் பெருமூச்சு விடுகிறதென்றும், அது தன் காதலைத் தனக்குத் தெரிவிக்கிறதென்றும் நார்ஸிஸஸ் எண்ணிக்கொண்டு, "உன்னை நான் காதலிக்கிறேன்" என்று மெதுவாகச் சொன்னான்.

இதற்குப் பதிலாக பாறையில் மறைந்திருந்த எதிரொலி "நான் காதலிக்கிறேன்" என்றாள்.

பொருத்தமான இவ்வார்த்தையைக் கேட்கவே பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல நார்ஸிஸஸ் உள்ளம்பூரிக்க, அந்த உருவத்தைக் கையால் பிடிக்க யத்தனித்தான். அப்படி பிரயத்தனப்படும்போது நீர்நிலை தடுமாற்றமுற்றது; உருவம் கலைதலுற்றுவிட்டது. நார்ஸிஸஸ் குனிந்து அவ்வுருவத்தைப் பிடிக்கவெண்ணி ஜலத்தை எடுத்தான்; ஜலம் மாத்திரம் கையிலிருப்பதைக் கண்டான்; தான் மிகவும் ஆத்திரப்பட்டுவிட்டதாக எண்ணிச்சற்றுநேரம் காத்திருந்தான். நீர்நிலை கலைபடாமல் சரியாக இருக்க, அவனது அந்தமான முகம் மீளவும் தெரிந்தது. மறுபடியும் அதைப்பிடிக்க அவன் குனிந்தான். அப்பொழுதும் அவ்வுருவம் கைக்கு அகப்படாமல் தப்பிக்கொண்டது. பல தடவைகளிலும் அவன் அதைப் பிடிக்கப் பிரயத்தனப்பட, அவ்வுருவம் கைக்கு அகப்படாமலேயேயிருந்தது. கடைசியில், நார்ஸிஸஸ் மிகவும் மனவருத்தத்துடன், அவ்வுருவத்தைப் பிடிக்க எண்ணுவதை விட்டுவிட்டான்; தன் கண்களினின்றும் நீர் தாரைதாரையாகப்பெருக ஜலக்கரையிலுட்கார்ந்தபடியே நீரில் உருவத்தைப் பார்த்தான்; ஜலத்தினுள்ளிருந்த பிரதிபிம்பமும் கண்ணீர்வார வடியவிட்டது. இதைக் கண்ட நார்ஸிஸின் மனம் சகிக்கவில்லை. எவ்விதத்திலாவது அவ்வுருவத்தைஅடையவேண்டுமென்றும், இல்லாவிடில் இறக்கவாவது வேண்டுமென்றும்அவன்தீர்மானஞ்செய்துகொண்டான்; ஆகவே, கடைசித்தடவையாக முன்னே சாய்ந்தான்; ஆழத்திலாவது சென்று அவ்வுருவத்தை அடையலாமென்றெண்ணித் தடாகத்தினுள்குதித்துவிட்டான். அப்பொய்கையிலுள்ள பாசிக்கும், பாறைகளுக்கும் மத்தியில் நார்ஸிஸஸ் இறந்துகிடந்தானேயொழிய, தன் காதல் நிலையைக் கண்டானில்லை. அவனுக்குத் தன் முகந்தான் நீரில் பிரதிபலித்ததென்று தெரியாமற்போய்விட்டது. இச்சம்பவம் முன்னே சோதிடநிபுணன் சொன்ன வார்த்தையை மெய்யாக்கிவிட்டது. அவன் தன் முகத்தைத் தான் பாராதிருந்தும்வரை சுகமாகவே வாழ்ந்திருந்தான்.

எதிரொலி பாறையினின்று நடந்ததையெல்லாம் கவனித்துவந்தாள். நார்ஸிஸஸ் தடாகத்தில் குதிக்கும்போது அவள் வேகமாய் அவனைத் தடுக்க ஓடோடியும் வந்தாள். இதற்குள் அவன் தடாகத்தில் விழுந்து முழுகிப்போனான். அவன் நீரில் முழுகியதைக் கண்டதும் எதிரொலி பொய்கைக்கரையிலுள்ள புற்றரையின்மீது தன்னுயிர் போகுமளவும் அழுதேதீர்த்தாள். அவள் இறந்தாலும், அவளுடைய குரல்மாத்திரம் மிகுந்திருக்கும்படியான சாபம் உண்டு. ஆகவே, அவள் இன்றைக்கும் இருக்கிறாள்; உருவமற்ற குரலோடு பாறைகளிலும் குகைகளிலும் மண்டபங்களிலும் எப்பொழுதுமிருக்கிறாள். அவள் தன் காதலனைக்குறித்து புற்றரையின்மீது படுத்தபடியே கண்ணீர்பெருக்கினாளாதலால், அந்த இடத்தில் ஒரு பரிமள மிகுந்த புஷ்பம் ஒன்று முளைத்தது. அதை ஜனங்கள் நார்ஸிஸஸ் என்றழைக்கின்றனர். ஹெலிகன் பர்வதத்திலுள்ள தடாகத்தில் தன் முகத்திலுள்ள பிரதிபிம்பத்தைக்கண்டு சித்தப்பிரமைகொண்டு காதலித்து அதை அடைய இயலாது பொய்கையில் மூழ்கி உயிரைத்துறந்த அந்தப் பேதையான நார்ஸிஸை ஜனங்களின் மனதில் அப்பெயருள்ளபுஷ்பம் ஞாபகப்படுத்துகின்றது.

சி. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

# Un-cleanliness.

BY PANDIT P. K. SREENIVASACHARIAR.

## அசுசிகள்.

தேகமானது, "ஊறி உவர்த்தக்க ஒன்பது வாய்ப் புலனும் கோதிக் குழம்பலைக்கும் கும்பம்", "அழுக்குடம்பு", "புன்தோலால் வேய்ந்த புலால்வாய்க் குரம்பை" என்றவாறு வெறுக்கும்படி உள்ளது. இதனை இயன்றவரை சுத்தமாக வைத்துக்கொள்ளாவிடின், அஃதுடையவனுக்கும் பிறர்க்கும் மிக்க அருவருப்பும் கேடும் உண்டாகுமென்பதை வெளியிடவேண்டுமோ? பலர் தங்கள் உடலில் மாசுபோக நீராடுவதில்லை. சிலர் பலநாள் அல்லது சிலநாள்களுக்கு ஒருமுறையே நீராடுகின்றனர். அவர்களுக்கு உணவு எப்படி ருசிக்கின்றதோ அறியக்கூடவில்லை. நன்றாக ஸ்நாநஞ் செய்யாதவர்க்குத் தூக்கமும் இனிது வாராது. தீ நாற்றம் வீசும் அழுக்குப்படிந்த தேகத்துடன் சிலர், பலர்கூடிய இடத்திற்குக் கூச்சமின்றி வந்துவிடுதலும் செய்கின்றனர். அவர்களுடன் இருக்க நேரிட்டுவிட்டால் மற்றவர்கள்பாடு சொல்லத் திறமிலோம். சிலர் தம் தேகத்துப் புலை நாற்றத்தை இனிதாக உகந்தும் கொள்வார்களோ? சிலர் தம் பற்களைத் தக்கபடி சுத்தஞ்செய்யாமையால் அவை ஊத்தை வழிந்துகொண்டிருக்கப் பேச ஆரம்பித்துவிட்டால், துர்க்கந்தம் வீசுகிறது. சிலருடைய தலைமயிரில் பேனும் ஈரும் குஞ்சுகுளுவானுடன் வாழ்கின்றன. சிலருடைய வஸ்திரங்கள் பல நாள்களுக்கு ஒருமுறையேனும் நீரில் தோய்த்து அழுக்குப் போக்கப்படாமையால், சீலைப்பேனுக்கு ஸதா உறைவிடமாக உள்ளன. இவர்களை ஸகல ஜீவதாரான கடவுளுக்கு ஒருவாறு நிகரென்று கூறலாமோ? ஞானிகள் புலையுடலைத் துறக்க அதிமாகப் பிரயாசைப்படுகின்றனர். அஞ்ஞானிகளோ, புலையுடலில் இன்னும் புலையூனையிட்டு, துர்க்கந்தமான கள் முதலியவற்றையும் அருந்தி அதனைக் கேடாக்குகின்றனர். நாற்றத்துக்கு நாற்றங்கால், நாற்றக்களஞ்சியம் என்னத் தக்க இவர்களுக்குச் சுசி பொருந்திய மனைவியர் நேர்ந்தால், அவர்கள் என்ன பாடுபடுவார்களோ? சுத்தர்களான பிள்ளைகள் தோன்றியிருந்தால், அவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்களோ?

சிலர் அழுக்குப்போக நீராடாததனால் உடலில் மாசு சுமையாயிருக்க, அதனைப் போக்க வேண்டி விரல்களால் உடலில் தேய்த்து அழுக்குத் திரட்டி உருண்டையாக்கிப் பார்க்கின்றனர். அப்படிப் பார்த்துப் பிறகு எறிவார்கள் போலும்! சிலர் கத்தியாலே அழுக்கைச் சுரண்டி யெடுக்கின்றனர். கிராமாந்தரங்களில் நாம் பல இடங்களில் பார்த்த சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம்.

ஆண்களும் பெண்களும் ஒருவர்க்கொருவர் தலையைப்பார்த்து அதில் உள்ள பேன்களையும் ஈர்களையும் குத்திக்கொல்வதற்கென்று சில நேரம் உட்காருவார்கள். இங்ஙனம் பார்த்தெடுத்துக்கொல்லுதலில் சிலர் மிகவும் கைதேர்ந்தவர்கள். நொடிப்பொழுதில் பலவற்றைப் பார்த்தெடுத்துக் கொல்ல வல்லவர்களென்று சிலர் சிலரைக் குறித்துச் சொல்லக் கேட்டிருக்கிறோம். சிலர் தம் தலைமயிரில் ஈரும் பேனும் பார்த்தெடுக்கத் தமக்கு உற்றார் உறவினர் கிடைக்காவிட்டால், அவற்றினாலாகிய கடிபாதையைப் பொறுக்கமாட்டாமல் இருகைகளாலும் தலையைச் சொறிந்து கொள்ளும்போது அவர்களுடைய முகம் திவ்யமாக இருக்கும்!

இது நிற்க. சிறிது தெரிந்தவர்களும் கற்றவர்களும் நாகரிகரென்று தம்மை நினைத்துக்கொண்டும் சொல்லிக்கொண்டும் இருப்பவர்களுங்கூடச் செய்கின்ற சில அருவருப்பான செயல்களை வெளியிடாமலிருக்கக் கூடவில்லை. சிலர் ஜலதோஷம் வாராதிருப்பதற்குச் சிலநாள் நன்று செய்து பழகவேண்டுமென்பதை அறியாததனால், அடிக்கடி ஜலதோஷங்கொண்டு மூக்கி



லிருந்து சளி ஊற்றெடுத்துப் பெருக, அதனை உறிஞ்சுகின்றனர். சிலர் உறிஞ்சி உட்கொண்டுவிடுதலும் செய்கின்றனர். சிலர் தம் சளியைத் தாம் அருவருக்காததனால், பிறரும் அருவருக்கமாட்டார்களென்று எண்ணிப்போலும்! மன்னுயிரைத் தன்னுயிர்போல் எண்ணும் பரமகாருணிகர்களோ! பிறர் வீட்டுக்குப்போனால் அவ்விடம் சுத்தமாயிருப்பதைக் கண்டாலும் அசுத்தப்பிராணிகளாதலால் சளியைச் சிந்தி ஆபாசஞ் செய்கின்றனர்; அல்லது, சிந்தி அங்குள்ள சுத்தமான தூணிலோ, சுவரிலோ, மற்று அங்குள்ள மேஜை, நாற்காலிகளிலோ இவை போன்ற வேறு சாமான்களிலோ தொற்ற வைத்துவிடுகின்றனர். அவ்வறியாதவர்களின் இச்செயலை அறியாதவர்கள் அவ்விடங்களில் கை வைத்துவிட்டு அறிந்து அவ்வஸஹ்யத்தைக் குறித்துப் படும் பாடும், கொள்ளும் அருவருப்பும் நாம் சொல்லவொண்ணாதது. தம்மைகளையே குறித்துவிட்டால் நலமென்று அவர்கள் சொல்லவும் கேட்டிருக்கிறோம். சிலநாள் அக்கைகளால் உணவெடுத்து உட்கொள்ளவும் அவர்கள் விரும்பாமல் அருவருக்கின்றனர். சிலர் சளியைச் சிந்தித் தம் உடைகளில் பத்திரப்படுத்துகிறார்கள்; தங்கள் உடலிலேயே அதனைத் தேய்த்து ஒப்பனைத்துவிடுபவர்களும் உண்டு. இவ்வித அசுத்தப்பிராணிகள் பொடிபோடுகிறவர்களாயிருந்தால் "அயம் விசேஷ" என்று சொல்லும்படியிருக்கும்: அவ்வருவருப்பை விவரிக்க முடியாது. பிறரை அடித்தால் வைதால் உண்டாக்கும் நிலைமையிலும், தேகத்தின் புலால்நாற்ற வீச்சாலும் கண்டவிடங்களிலும் சளியைச் சிந்துதல் கண்பீளையைத் தீற்றுதல், காறியுமிழ்தல் முதலியவற்றினாலும் பிறர்க்குச் செய்யும் தீமை பொல்லாதது. சுத்தர்கள் முன்னையவற்றைப் பொறுப்பினும் பொறுப்பர்; பின்னையவற்றைப் பொறுக்கவேமாட்டார்கள். சிலர் வீடுகளில் சாக்கடைக்கால்கள் வெகுகோரம்: அசுசியால் ஈக்களும், எறும்புகளும், கொசுக்களும் சிலர் வீடுகளில் கோடானுகோடியாக உள்ளன. சிலர் வீடுகளில் குழந்தைகள் மலபாதை செய்துவிட்டாலும், வாந்திசெய்துவிட்டாலும் இன்னும் இவைபோன்ற அசுசிகளைச் செய்துவிட்டாலும் அவ்விடங்களையும் சுத்தஞ்செய்வதில்லை; குழந்தைகளையும் அலம்பிச் சுத்தஞ்செய்வதில்லை. மலம் வெகு நேரமாய் நாறிக்கிடக்கவும் வீட்டில் சாவகாசமாக உண்ணவும் உடுக்கவும் ஸல்லாபஞ்செய்யவும் எப்படி மனம் ரமிக்குமோ தெரியவில்லை. சில வீடுகளில் ஜனங்கள் அசுசியான உதவாத வஸ்துக்களையெல்லாம் குவித்துவைத்திருக்கின்றனர். சிலர் வீடுகளில் அழுக்குத் துணிகள் அங்கங்கு ஒழுங்கீனமாகக் கிடக்கும். தானிய உறைகளில் புஸ்தகங்களும், புளிப்பானையில் பட்டுவஸ்திரங்களும் ஆக இப்படியே அவ்வற்றிற்கு ஏற்ற இடங்களில் அவ்வப்பொருள்களை வைக்காமல் அவற்றை அவலக்ஷணமாக்குகின்றனர். சிலர் வீடுகளில் அழகான சுவர்கள் இருப்பினும் அவை சுத்தமாயிருக்க ரம்யமாகப் பார்ப்பதற்கு இடமில்லாதபடி, வாங்கும் தயிர் மோர் வெற்றிலை முதலியவற்றிற்கு கணக்கிடப் பொட்டுப்போட்டு வைக்கிறார்கள். இப்பொட்டுக்களின் இயல்பை விவரிப்பின் விநோதம். தயிர்க்காரன் தயிர்வார்த்தபிறகு தயிர்த்துளிகளைச் சாணித்தண்ணீர்கொண்டு மெழுகிய தரையில் அல்லது மண்தரையில் விட்டு நன்றாகக் குழைத்து அந்த அழுக்குக் குழைசேற்றைக் கொண்டு சன்னமிட்ட பளபளப்பான சுவரிலும் கூசாமல் போடுவான். அதைக் கூசாமல் பெண்கள் மாத்திரமேயல்லர்; ஆண்மக்களும் பார்த்திருப்பார்கள். இப்படி பொட்டுப் போட்டுப் போட்டுவிட்டுச் சுவர்களெல்லாம் மிகவும் அஸஹ்யமாக இருக்கும்.

சிலர் பிறருடைய உடைகளைத் தாம் உடுத்துக்கொள்வர்; தம் உடைகளையும் பிறர் உடுத்துக்கொள்ளும்படி உடன்படுவர். இங்ஙனம் செய்வதனால் அவரவர் தேக சம்பந்தமான சொறி, சிரங்கு, அழுக்கு, வியர்வை முதலியவை தொற்றுவதற்கு ஹேது உண்டாகின்றது. அன்றியும், பிறர் பாதரக்ஷை முதலியவற்றை உபயோகப்படுத்துவதனாலும் சிற்சில சமயங்களில் தீங்கு நேரலாம்.

சிலர் பலசமயங்களில் கைவிரல்களை வாயில் வைத்துக்கொள்வர். பிறகு அக்கைவிரல்களைத் தண்ணீரால் அலம்பிச் சுத்தஞ் செய்வதில்லை. இதனால் அவ்வெச்சில் தேகத்தில் படக்கூடும். அதனால் சருமத்தில் சொறி உண்டாகக்கூடும். எச்சிலில் ஒருவித விஷத்தன்மை இருப்பதனாலே எச்சில் தேகத்தில் படாதபடி ஜாக்கிரதையாக இருக்கவேணும். ஒருகால் எச்சில்பட நேரிட்டுவிட்டால், உடனே அந்தப் பாகத்தை நீரினால் சுத்தஞ் செய்யவேண்டுமென்று பெரியோர்கள் நியமித்திருக்கின்றனர். சிலர் கைவிரலை வாய்க்குள் வீணே வைத்துக்கொள்வதன்றியும், அவ்விரல் நகங்களைக் கடிக்கின்றனர். நகமானது விஷத் தன்மையுடையது. மேலும், நகத்திற்குள் அழுக்குச் சேர்ந்திருக்கவுங்கூடும். அந்நகத்தைக் கடிக்கும்போது அழுக்கையும் உடன் வாயிற் கொள்ளும்படி நேருமாதலால், அதனால் எவ்வளவு தீங்குண்டாகுமென்பது அங்ஙனம் கடிப்பவர் கவனிக்கவேண்டும்.

சிலருடைய வீட்டுப்பாத்திரங்கள் சுத்தமாக்கப்படுவதில்லை. சிலர் பாத்திரங்களைச் சுத்தம் செய்தாலும் உட்புறஞ் சுத்தஞ் செய்யாமல் "உட்சுவர் விட்டுப் புறஞ்சுவர் மண் பூசுவார் போல்" வெளிப்புறம் மாத்திரமே சுத்தம் செய்வார். உட்புறத்தில் உள்ள மாசு போகாவிடின் அதில் வைக்கும் உண்ணத் தக்கவையும் பருகத் தக்கவையும் தீங்கு தருவனவாகின்றன. அழுக்கு நிறைந்த உட்புறத்தில் பூச்சி புழுக்களும், விஷக்கிருமிகளும் தோன்றியிருக்கக் கூடுமாதலால், அவற்றினால் விளையக்கூடிய கேடுகளைக் குறித்து வெளியிடவேண்டியது அநாவசியம். கை, கைவிரல்கள் நன்றாக உள் நுழைந்து எளிதில் சுத்தஞ் செய்யக் கூடியபடி பாத்திரங்கள் வாயகன்றிருக்கவேண்டும். பிராமணரில் சில சாதியார் சிறுவிரலும் எளிதில் நுழையக் கூடாதபடி வாய் குறுகிய ஜலபாத்திரங்களையே ஸம்பிரதாயமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சம்பிரதாயம் ஓர் அந்த பரம்பரை யென்பது வழுவோ? இத்தகையோர் இவ்விதக் குருட்டுச் சம்பிரதாயத்தை விட்டிட்டால் நலம். நம் நாட்டில் காலரா முதலிய விஷ நோய்கள் விளைதற்கு இப்படிப்பட்ட அநாசாரங்கள் காரணமென்பது வெளிப்படை.

ஒருவன் பல மகளிரை மணந்து கூடுவதும், அங்ஙனமே ஒருத்தி பல புருஷர்களை மணந்து கூடுவதும் அநாசாரமாதலால், எவ்வளவு கேட்டுக்கு ஹேது என்பதை அறிவுடையோர் கவனிக்கக்கூடும். "ஆசாரத்துக்கு ஆசாரம்; சுகத்துக்கு சுகம்" என்பது ஓர் பழமொழி. நம் முன்னோர்கள் சுகத்துக்குக் காரணமானவற்றையெல்லாம் ஆசாரங்களென்றனர். அசௌக்கியத்திற்குக் காரணமானவற்றையெல்லாம் அநாசாரமென்றனர். இவ்விஷயம் ஊன்றி நோக்கினால் புலப்படும். உதாரணமாக: ஸ்நானஞ் செய்தல் முதலியன ஆசாரங்கள். உடுத்துக்களைந்த துணியைத் தீண்டுதல் முதலியன அநாசாரங்கள். பிறவும் இங்ஙனமே.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

## Castor Cultivation.

## ஆமணக்குப் பயிர்செய்தல்.

இது உஷ்ணமாயுள்ள பிரதேசங்களில் விளையக்கூடிய ஒரு தைலவித்துப் பயிர். ஆதியில் இது இந்தியாவிலும் வடஆப்பிரிக்காவிலும் பயிராகிவந்ததென்றும், பிறகு மற்றைய நாடுகளுக்குக் கொண்டுபோகப்பட்டதென்றும் சொல்லப்படுகின்றது. இதில் முக்கியமாக இரண்டுவகைகள் உள்ளன. அவை சிற்றாமணக்கென்றும், பேராமணக்கென்றும் பெயர்பெறும். சிலர், இந்த இரண்டு இனங்களும் ஒன்றேயென்றும், அவை சாதாரண பேதங்களினாலும், காலநிலை மழை முதலியவற்றின் காரணங்களினாலும் வித்தியாசப்படுகின்றனவென்றும் சொல்லுகிறார்கள். பயிரில் மற்றொரு வித்தியாசத்தையும் காணலாம். சிற்றாமணக்குத்தண்டு வெளுப்பாயும், பேராமணக்குத்தண்டு சிவப்பாயுமிருக்கும்.



### நிலம்.

சுத்த மணற்பாங்கான நிலம் இந்தப் பயிருக்கு உதவாது. கொஞ்சம் மணலும் களிமண்ணும் கலந்த நிலமே மிகவும் நல்லது. செம்மண் நிலங்களிலும் இதைப் பயிர்செய்யலாம். தோட்டக்கால் நிலங்களிலும் இப்பயிர் நன்றாய் வளரும். இஞ்சி, கரும்பு, மஞ்சள் முதலிய பயிர்களுடன் கலப்புப்பயிராக விதைக்கப்படுகின்றது.

### நிலத்தைப் பண்படுத்தல்.

பயிர்செய்யப்படும் பூமி மண்ணை நன்றாய்க் கீழ்மேலாகப் புரளும்படி உழவேண்டும். இப்படி செய்வதனால், பூமியின் கீழிருக்கும் புழுப்பூச்சிகள் மேலே வர ஏதுவாகும். அப்போது அவற்றைப் பறவைகள் கொத்தித்தின்றுவிடும். இப்பூச்சிகளை இவ்விதம் வெளிக்கிளம்பவிட்டால், பயிர்செய்யும்போது அவை பயிரைப்பாதகப்படுத்திவிடும். ஆமணக்குப் பயிரானது நிலத்தின் சத்தை வெகுசீக்கிரத்தில் உறிஞ்சி அதன் வளப்பத்தைக் குறைத்துவிடுமாதலால், இதற்குப் போதுமானவளவு நல்ல எருவிடவேண்டும். பிண்ணாக்கு, சாணி எரு, வண்டல் ஆகிய இவற்றை எருவாக உபயோகிக்கலாம். அநேகமாய் ஆமணக்கானது கலப்புப் பயிராகவே செய்யப்படுகின்றதனால், பூமியின் சாரம் அதிகமாய்ப் போய்விடுவதில்லை. ஆனால், இதைத் தனிநிலத்தில் பயிர்செய்தால், மறுபடியும் அந்நிலத்தில் ஐந்தாறு வருஷங்கள்வரை இப்பயிர்செய்ய இயலாது. இக்காலத்துக்கு இடையில் பயிர்செய்தால் தகுந்த மகசூல் கிடைக்காது. அந்நிலத்தில் வேறு தானியங்களைப் பயிர்செய்துகொள்ளலாம்.

### விதையின் அளவும், விதைத்தலும்.

ஆமணக்கு விதையை மற்றைப்பயிர்களுடன் சேர்த்து விதைத்தால் ஏக்கர் 1-க்கு $2\frac{1}{2}$ முதல் 4 ராத்தலும், தனியே விதைத்தால் 15 முதல் 20 ராத்தலும் போதுமானது. இவ்விதைகளை நடுவதற்குமுன் வெந்நீரில் 24 மணி நேரம் ஊற வைத்துப் பிறகு நட்டால் அவை சீக்கிரமாயும் சேதாரமில்லாமலும் முளைக்கும். விதைகளை வரிசையாய் $1\frac{1}{2}$ அடிக்கு ஒன்றாக நட்டு, அவற்றை மண்ணால் மூடிவிடவேண்டும். இவ்விதம் நடப்படும் ஒவ்வொரு வரிசைக்கும் குறைந்தது மூன்றடி தூரமாவது இருக்கவேண்டும். இதனால், செடிகளுக்கு இடையே நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் ஏற்பட்டு மிகுந்த மகசூலைக் கொடுக்க ஏதுவாகும். செடிகள் நெருக்கமாயிருக்குமானால், அவ்வளவாகப் பலன்தரா. ஆமணக்கானது சாதாரணமாய் ஜூன், ஜூலை மாதங்களில் பயிர் செய்யப்படுகின்றது.

### களை யெடுத்தல்.

செடிகள் சுமார் ஒரு அடி உயரம் வளர்ந்த பின், அவற்றில் அதிக வளமில்லாதவற்றைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். பிறகு, பூமியைக் கொத்திக் களைகளை எடுத்தல்வேண்டும். இதன்பிறகு மாதத்திற்கு ஒருமுறை நிலத்தைக் கொத்தி, களைகளில்லாமல் சுத்தமாக வைத்திருக்கவேண்டும். செடிகள் அதிக வீர்யமாய்த் தழைத்து வளர்ந்தால், அவற்றில் காய்கள் அதிகமாகப் பிடிக்கா: அந்தச் சமயத்தில், அச்செடிகளின் கொழுந்தைக் கிள்ளிவிடவேண்டும். அப்போதுதான் அவற்றிற்குப் பக்கக்கிளைகள் உண்டாகி காய்பிடிக்க ஆரம்பிக்கும்.

### பலன்தரும் காலம்.

ஆமணக்குச் செடியானது, நட்ட சுமார் 7-மாதம் முதல் 10 மாதத்துக்குள் பலன் கொடுக்கும். பழுத்துக் காய்ந்த காய்களை அவ்வப்போது பறித்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடின், காய்கள் வெடித்து விதைகள் சிதறுண்டு போகும். எல்லாச் செடிகளும் ஒரே காலத்தில் பலன் கொடுப்பதில்லையாதலால், அவ்வப்போது காய்த்துப் பழுக்கும் காய்களைப் பறித்துக்கொண்டுவிடவேண்டும்.

### நோய்கள்.

ஆமணக்குப் பயிர் நம் சில நோய்களால் பாதிக்கப்படுகின்றது. இதில் புழுக்கள் தோன்றி ஏராளமான சேதத்தை விளைவிக்கின்றன. அந்துப்பூச்சியென்னும் ஒருவிதப் பிராணிகள் இச்செடிகளினுடைய இலைகளின் கீழ் முட்டைகளிட்டு அவ்விலைகளின் ரசத்தை உறிஞ்சிவிடுகின்றன. இதனால் செடிகள் பட்டுப் போகின்றன. சம்பளிப்பூச்சிகள் இச்செடிகளின் இலைகளைத் தின்று நாசத்தை உண்டுபண்ணுகின்றன.

### மாசூல்.

செடிகளினின்று அவ்வப்போது சேகரித்த காய்களை ஒன்றாய்ச் சேர்த்து வெய்யிலில் காயப்போடவேண்டும்; வெய்யிலின் வெப்பத்தினால் காய்கள் வெடிக்க ஆரம்பிக்கும். இப்படி வெடிக்கும்போது விதைகள் சிதறிப் போகாமல் அவற்றைச் சுற்றிலும் தட்டியொன்று கட்டவேண்டும். காய்கள் காயும்போது அவற்றை மேல் கீழாகக் கிளறி வரவேண்டும். இவ்விதம் காய்கள் வெடித்தானபிறகு, மேலோடுகளைப் பிரித்தெடுத்துவிட்டு விதைகளைச் சேகரிக்க வேண்டும். சிலவிடங்களில் காய்களினின்று விதைகளை வேறுவிதமாயும் பிரித்தெடுக்கிறார்கள். காய்களை ஒரு மூலையில் கும்பலாய்க் குவித்து, காற்றுப் புகாவண்ணம் வைக்கோலைப் போட்டு மூடிவைப்பார்கள். பிறகு ஒருவாரம் கழித்துத் திறந்து பார்த்தால், காய்களின் மேலோடுகள் சற்று அழுகியிருக்கும். அவற்றை அப்படியே வெய்யிலில் இரண்டு நாட்கள் உலர்த்திச் சற்றுத் தட்டினால், மேலோடுகள் வெடித்து விதைகள் வெளிப்படும். ஆமணக்குப் பயிரை மற்றப் பயிர்களோடு கலந்து பயிர்செய்தால் ஏக்கர் ஒன்றுக்கு சுமார் 250 ராத்தல் மாசூல் கிடைக்கும். அதைத் தனிப்பயிராகச் செய்தால், சுமார் 500 முதல் 900 ராத்தல்வரை மாசூல் கிடைக்கும்.

### உபயோகங்கள்.

ஆமணக்கானது முக்கியமாய் எண்ணெய்க்காகவே பயிர் செய்யப்படுகின்றது. இதன் எண்ணெய் பேதிக்குச் சாப்பிடுவதற்கும், மருந்து செய்வதற்கும், விளக்கெரிப்பதற்கு விசேஷமாக உபயோகிக்கப்படுகின்றது. இந்த எண்ணெயைக் கொண்டு விளக்கேற்றினால், மண்ணெண்ணெய் போல் புகை படிவதில்லை. வறுத்தின எண்ணெயைக் காட்டிலும் பச்சையாகவே ஆட்டின எண்ணெயை விளக்கெரிக்க உபயோகித்தால், அதிகப் பிரகாசத்தைக் கொடுக்கும். இன்னும், கைத்தொழில் இயந்திரங்களுக்கும் தோல் பதனிடுவதற்கும் இந்த எண்ணெய் உபயோகப்படுகின்றது. இச்செடியின் இலைகள் கால்நடைகளுக்கும் பட்டுப்பூச்சிகளுக்கும் ஆகாரமாக உபயோகப்படுகின்றது. இதன் பிண்ணாக்கு நெல், கரும்பு, மஞ்சள் முதலான பயிர்களுக்குச் சிறந்த எருவாக உபயோகப்படுகின்றது. இச்செடியின் தண்டுகள் அடுப்பெரிக்க உதவுவன.

---

## Guhaperumal.

BY PANDIT P. K. SREENIVASACHARIAR.

## குகப்பெருமாள்.

(303-ம் பக்கத் தொடர்ச்சி.)

குகப்பெருமான் இங்ஙனம் யுத்தசன்னத்தனாய்க் கூறியளவில், பெரிய அவன் சேனைகள், ஒருங்குதிரண்டு, ஒல்லெனவொலிக்கும் போராரவாரத்துடனே, பிராணிகள் முடிந்துவிடும் யுகாந்த காலத்தில் பேரிடியோடு பெரிய மேகங்களும் கடுங்காற்றும் கிளம்பினாற்போலப் புறப்பட்டு அவனைக் கலந்து சூழ்ந்தன. அவ்வாறு சூழ்ந்ததும், அக்குகன் கங்கையின் வடகரையில் பரதாழ்வானுடனே வந்தடைந்த இடத்துக்கு நேரெதிராக அருகிலுள்ள கங்கையின் தென்கரையில் வந்துசேர்ந்தான்.



இங்ஙனம் வந்து தோன்றிய குகன், தன்னைச் சுற்றிவந்து தோன்றிய வேடர்களை நோக்கி, 'இராமனைத் தாக்கும் சூழ்ச்சியோடு வந்து ஊன்றிய பரதன் சேனையைக் கொன்று வீரசுவர்க்க மேற்புகற்கும், சிறந்த பெரிய இராச்சியத்தை என் உயிர்த்துணைவன் இராமபிரானுக்குக் கொடுத்தற்கும் தொடங்கியுள்ளேன். நீவிரும் உடன்படுவீராக' என்று சொல்லி, மற்றும், 'பறைகளை அடியுங்கள்; வழிகளையும் நீர்த்துறைகளையும் எல்லாப்பக்கங்களிலும் அழித்துவிடுங்கள்; தோணிகளில் ஒன்றையும் அவர்கள் ஆறுகடத்தற்கு ஓட்டாதீர்கள்; கங்கையாற்றின் கரையில் வந்தோர்களைப் பிடியுங்கள்; அழியும்படி வெட்டுங்கள்' என்று சொல்லி, மீண்டும் சொல்பவனாய், 'எனது ஆருயிர் நாயகனாகிய ஸ்ரீராமன் அரசாட்சி செய்யாமலிருக்கும்படி வஞ்சனையால் அரசையடைந்த அரசர் பரதரும் வந்தாரே! தீயை உமிழும் பகைவரிரத்தந்தோய்த்து சிவந்த அம்பென்பவை இவர் மேற் செல்லாவோ? இவர் தப்பிப் பிழைத்துப் போய்விட்டால், நாய்க் குகனென்று உலகத்தார் என்னை இகழ்ந்து பேசமாட்டார்களோ? இக்கங்கையாறு பேராழமுள்ளது; பெரிய அலைகள் மோதப்பெற்றது. இதை எனது உதவியில்லாமல் கடந்துபோகமாட்டுவரோ? நான் பெரிய யானைச் சேனையைக் கண்டு அஞ்சி விலகிப்போய்விடுவேனல்லனோ? 'உனக்கும் எனக்கும் தோழமை' என்று அவ்விராமபிரான் என்னைநோக்கிச் சொல்லியசொல் நன்கு மதிக்கத்தக்க சத்தியமான ஒரு சொல்லன்றோ? அந்நட்பிற்கேற்ப யான் நடவாவிட்டால், 'எளிய இவ்வேடன் இங்ஙனம் மானங்கெட வாழ்தலினும், இறந்துவிடலாகாதா? பரதனோடு பொருது அப்போரில் வெல்லும் ஆற்றல் இலனாயினும், இறந்தானுமில்லையே?' என்று என்னை ஏசமாட்டார்களோ? இப்பரதன் இராமனைத் தன் முன்னவனென்று நினைக்கவில்லை; வலிய புலியொத்த ஒரு பின்னவன் இலக்குமணன் சென்றனனென்று நினைக்கவுமில்லை. அவற்றைக் குறித்து என்றாயினும், இவன் என்ன என்னை இகழ்ந்தது? இவன் வலிமையெல்லாம் இந்த எனது எல்லையைக் கடந்தன்றோ? வேடர் விடும் அம்புகள் மன்னர்மார்பில் தைக்கமாட்டாவோ? பாபமும், நிலைபெற்ற பெரும்பழியும், இன்னார் பகைவரென்பதும், இன்னார் நண்பரென்பதும், இன்னது குற்றமென்பதும் ஆகிய இவற்றை, மண்ணுலகாளும் மன்னர் எண்ணுவரோ? ஆ! அது கிடக்க.

"என் ஆருயிர்த்தோழமையளித்த ஸ்ரீராமன் மேல் இவன் போர்க்குப்போவது, தன்சேனையையும் தன் அரிய உயிரையும் என்கையைப்புக்குத் தப்பிக் கொண்டு போனபின்பன்றோ? என் துணைவன் மரவுரியுடுத்து சடைமுடிதரித்து, நகர்நீத்து, வனத்தில் வசித்து காய்கனி கிழங்கு சருகுகளை உண்டுகொண்டு, குளிர் வெப்பம் முதலிய துன்பங்களைப் பொறுத்து, செய்தற்கரிய தவத்தைச் செய்துகொண்டிருக்க, இப்பரதன் பூமியை ஆள்வனே? என் உயிர் பெறுதற்கரிய அமுதமோ? என்றால் அன்று. இராமபிரானுக்குத் துணையாய்ப் பரதனை எதிர்த்து அதனால் சிறந்த புகழைப் பெற்றுப் பின் இறக்கமாட்டேனே? என்னோடு பொருந்தும் நட்பை உகந்தருளிய இராமபிரானுடன் நான் வனஞ்செல்லாமல் இங்கு இருந்ததே நலமாயிற்று. எனது கடமையை இன்றைக்கே கழிப்பேன். யானைகளும் குதிரைகளும் நெருங்கிய பெரிய சேனையினால் சூழ்தல் பொருந்திய இப்பரதனது வாள்வலி, கங்கையாற்றைக் கடந்த பின்பன்றோ? உக்கிரமுள்ள வேடர்களாக உள்ளவர்களே! நீர்த்துறையிலே இவர்களுக்கு ஓடம் விடுதலை விலக்கீரோ? பரதனும் பரதனது படையும் நம்மினும் வலியராயினும், இனி அவர்களால் இராமன் அழிதற்குமுன்னே எமது உயிர் போரில் அழிந்துபோவதும் நன்றன்றோ?

போன படைத்தலைவீர்க்கு ஒருவேளைப் போருக்காயினும் போதாத இந்தப் பரதனது சேனை கிடக்கட்டும். தேவர்களே திரண்டு எதி

ர்ந்தவர்களாயும், எனது கையில்லாகிய சாரமேகம் இடைவிடாத அம்பு மழை பொழியவும், எதிர்த்த அவர்களது குடல் குறைக்காற்றில் அகப்பட்டாற்போல் அலைபடவும், விளங்குகின்ற ஆயுதங்களுடனே சேனைகள் அழியவும், யானைச்சேனை தனித்தனியாய் அடிபட்டழியவும், இங்ஙனம் சேனைக்கூட்டத்தைச் சாய்க்காதிருப்பேனோ? முடிசூடக்குறித்த அந்நாளில் விரதம் முதலியன முடித்துப் பட்டாபிஷேகத்துக்குச் சித்தமாய் நின்ற, கொடுக்கும் கைகளுள்ள என் நண்பன் இராமன் அரையில் உடுக்கும்படி பெரிய மரவுரியை எடுத்து அவனுக்குக் கொடுத்தவளாகிய கைகேயியினது மைந்தனாகிய பரதனது பலத்தை என் அம்பாலே கொன்று இரத்தமாகக் குவித்த கொழுப்புமிக்கு வெளிப்படும் பிணக்குவியலைக் கங்காநதி இழுத்துக்கொண்டு ஓடிக் கடலில் அவற்றைச் சேர்த்து நிறைத்து அதனிடத்தைத் தூர்த்துவிடப் பார்ப்பேன். ஆடும் துவசங்களுடைய பரதனது சேனையைத் தாக்கியழித்துத் தருமாத்துமாவாகிய இராமபிரானை ஆளும்படி அவர்க்கு வேடர்கூட்டம் இராஜ்ஜியத்தைக் கொடுத்தது என்ற இந்தப் புகழை அடையமாட்டார்களோ? முறைப்படி தன்னுடையதாகிய நாட்டை மனமகிழ்ந்து கொடுத்துவிட்ட என் நாயகன் இராமனுக்கு இப்பரதர் நாம் ஆளும் காட்டையும் கொடுக்க உடன்படாதவராய், போர்புரியப் படையெடுத்து வந்ததைக் கேட்டீர்களா?

சிறந்த முனிவர்களுக்கு உறவாகி வனத்திடையில் வசிக்கின்ற என் தலைவனான இராமன் கோபிக்கக்கூடும் என்று மனதிற் சிறிதும் எண்ணாமலே போர்புரிதலுற்று அம்புகளை எய்தால், எதிர்த்து நிற்பது ஏழுகடற் படையென்றாலும், அது இப்பொழுது பசு மேய முனைந்தால் அதன்முன் சிறிய இளம்பயிர் அழிதல்போல அழிவுறாதோ? இராமபிரானிடத்து அன்புபூண்டவனாகிய குகன் வலிய பெரிய வில்லை உடையவனாய் மற்போரிற் சிறந்த தோள்கள் பூரித்து, இரும்பையொத்த மிக வலிய உடம்பை உடையவரான மற்றை வேடர்களின் முன்னிலையில் இவ்வார்த்தைகளைச் சொல்லிக் கங்கையின் தென்கரையில் ஊன்றி நின்றிட்டான். அவன் அங்ஙனம் நின்றதைத் தேர் செலுத்துவதில் வல்லவனாகிய சுமந்திரன், ஆண் சிங்கத்தையொத்த கம்பீர குணமுள்ள பரதனிடத்து வந்து பின்வருமாறு சில சொல்பவனானான்:—

"கங்கையாற்றின் இருகரைகளையும் தனக்குச் சொந்தமாக உடையவனும், கணக்கில்லாத படகுகளை உடையவனும், உங்கள் சிறந்த ஒப்பற்ற நாதனாகிய இராமபிரானுக்கு உயிர்த்தோழனும், உயர்ந்த தோள்களை உடையவனும், மதயானையைப் போன்றவனும், விற்பிடித்த சேனாசமுத்திரத்தை உடையவனும், மலையைக் கண்டாலொத்த வலிமையை உடையவனும், இராமன் பக்கல் எல்லையில்லாத அன்பை உடையவனும், வடிவத்தை நோக்குமிடத்து இரவைக் கண்டாலொத்த மிகக்கரிய அழகமைந்த மேனியை உடையவனும், குகனென்னும் பெயரைக் கொண்டவனுமாகிய வேடன் வழியெதிரே வந்து நின்றுள்ளான்: உன்னைக் காணவேணுமென்னுங் கருத்துடையான்போலும்" என்று சுமந்திரன் சொன்னான்.

அக்குகனது தன்மையைத் தன்முன்னே தன் நண்பனான சுமந்திரன் முன்பாகச் சொன்ன சொல்லைக் கேட்குமுன்னே, குற்றமில்லாத சிறந்த மனத்தையுடைய பரதன், மனமகிழ்ந்து உரைப்பானாய், 'எனது தலைவனான இராமன் முன்பு நட்பால் தழுவிக்கொள்ளப்பெற்ற அவன் மனத்துக்கு இனிய துணைவனானால், என்னை அக்குகன் வந்து காண்பதற்கு முன்னமே நானே போய் அவனைக் காண்பேன்' என்று சொல்லிப் புறப்பட்டான். புறப்பட்டவன், தம்பியாகிய சத்துருக்கனனுடனே, மேன்மேல் எழுகின்ற அன்போடு, மலை இடம்விட்டுப் பெயர்ந்து சென்றாற்போலக் கங்கைக்கரையை அடைந்து நின்றான். அவனை வேடர்தலைவனாகிய குகன் கண்டு, அப்பரதனது திருமேனியின் நிலைமையை உணர்ந்து நடுங்கிட்டான். மரவுரியை ஆடையாக உடுத்தவனும்; புழுதிபடிந்த உடம்



பையும், அழகிய கலையில்லாத சந்திரன்போல ஒளியிழந்த முகத்தையும், கல்லும் கண்டால் கனிந்துருகும்படி முதிர்ந்த துன்பத்தையுமுடையவனுமாகிய பரதனைக் குகன் கண்ணுற்று, தன் கையினின்று வில் நழுவிக் கீழே விழும்படி விம்மி, செயலற்று நின்றுவிட்டான். உடனே குகன், 'ஆண்மக்களிற் சிறந்த இப்பரதனும், எனது தலைவனாகிய இராமனை ஒத்திருக்கிறான். அயல்நின்றவனும் [சத்துருக்கனனும்], தம்பியான இலக்குமணனை ஒத்திருக்கிறான். இப்பரதன் தவத்துக்கு உரிய வேடத்தைச் சிறக்கக் கொண்டு நின்றான். இவன் படும் துன்பத்துக்கோ ஓர் முடிவில்லை: இராமன் சென்ற தென்திசையை நோக்கித் தொழுகின்றான். எம்பெருமானது பின்பிறந்தவர் பிழைபுரிவரோ?' என்று கருதினான். 'துன்பத்தையுடைமையால் கண் இமைக்கப்பெறாதவனும், அழியாத அன்பையுடைய இராமபிரான் தரித்துக்கொண்டுள்ள தவவேடத்தையே தானுங்கொண்டுள்ளவனுமாகிய இப்பரதனது மனக்கருத்து முற்றும் அவனருகிற் சென்று கண்டறிந்து வருகிறேன். நீங்கள் அதுவரையில் வழியைக் காத்திருங்கள்' என்று தன் படைவீரரை நோக்கிச் சொல்லி, கங்கைத் துறையில் ஒரு தோணியில் ஏறிக்கொண்டு வேறு துணையின்றித் தன்னந்தனியனாய்க் குகன் பரதனிடம் வந்தான்.

இங்ஙனம் குகன் தனியனாய்ப் பரதனெதிரில் வந்து, இராமனைத் திசைநோக்கித் தொழுகின்ற அவனைச் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினான். அவ்வளவில், தக்கோரது மனத்திலும் சிரத்திலும் சிறப்பாகத் தங்குகின்ற பெரும் புகழையுடையவனும், அழகிய அருளுள்ள பிரமனும் தன்னை வணங்கத்தக்கவனுமாகிய பரதனும், தனது அடியில் வீழ்ந்து வணங்கிய குகனை, மைந்தனைக் கண்டபொழுது தந்தைக்கு உள்ள களிப்பிலும் மிக்க களிப்பு உண்டாகத் தழுவிக்கொண்டான். அவ்வாறு பரதனால் அணைத்துக்கொள்ளப்பெற்ற குகப்பெருமாள், பரதனை நோக்கி, 'மேலோய்! இங்கு நீ வந்ததென்ன?' என்று வினவினான். அதற்குப் பரதன், 'உலகமுழுதும் அரசாண்ட எங்கள் தந்தை முன்புள்ள அரசாது முறையினின்றும் தவறிவிட்டார்: மூத்தோன் இருக்க இளையோனுக்கு அரசுகொடுக்க உடன்பட்ட அவ்வநீதியை நீக்கும்பொருட்டு உள்ளபடி அரசனாகிய என் மூத்தோனை அழைத்துக்கொண்டுபோவதற்கு வந்தேன்' என்று சொன்னான்.

பொய்யில்லாத உள்ளமுள்ள குகன், அச்சொல்லைக்கேட்டு, உயிர் தளிர்த்துக் களித்து மகிழ்ச்சி பொங்கி, உடல்பூரித்து, மறுபடியும் தரையில் விழுந்து, சித்திரத்தில் எழுதுதற்கு அரிய மிக அழகிய திருமேனியையுடைய பரதாழ்வானது சிவந்த திருவடித்தாமரைமலர்களிற் கைகளைப் பூட்டியவனாய்ச் சிலவார்த்தைகளைக் கூறுவான்:—'புகழோய்! உன் தாயின் சொல்லைக்கொண்டு உன் தந்தை உனக்குத் தந்த இராச்சியத்தை, கொடிய பாபத்தை விலக்குவதுபோல விலக்கிவிட்டு, கவலையை முகத்தில் தேக்கி, இங்குவந்தாய் என்றபொழுது, உனது இந்த ஒரு தன்மையைக் கண்டால், ஆலோசிக்குமிடத்து, ஆயிரம் இராமர் உன் ஒருவனுக்கு ஒப்பாவரோ? குணத்தால் உயர்ந்தோய்! ஏழைவேடனாகிய யான் உன்னைப் புகழ்வதெவ்வாறு? சூரியன் தனது கிரணசமூகத்தால் மற்றைச் சந்திரன் முதலியோரது ஒளிகளைத் தன்னுள் அடக்கும் விதம்போல, அரசர்கள் புகழும் பெருமையையுடைய உங்கள் குலத்தவரது புகழ்களையெல்லாம் உன்புகழாக்கிக்கொண்டாய்.'

குகன், இவைபோன்ற பொருத்தமான வார்த்தைகள் பலவற்றையும் சொல்லி, அப்பரதனிடத்தில் ஒப்பில்லாத அன்பைத் தகுதியாகச் செய்தான். அப்பரதனிடத்தில் அன்புவைக்காதவர் யார் உளர்? மனத்தால் கருதுதற்கும் அரிய நற்குணங்கள் காரணமாகவன்றோ இராமன்மீதும் முன்பு அக்குகனுக்கு அன்பு மிக்கது? கருணைக்கடலென்னத்தக்கவனும், செம்மைவழியிற் செல்லும் மனத்தையுடையவனுமாகிய பரதன், தென்திசை நோக்கி, தன் சிவந்த கைகளைக் கூப்பி, தமையனைத் தொழுது, 'எம் முன்னோன் எவ்விடத்தில் இங்கு முன்பு தங்கியிருந்தான்?'

என்று வினவினான். உடனே குகன், 'வீரனே! நானே அவ்விடத்தைக் காட்டுவேன். என்னுடன் எழுந்து வருக. அவன் தங்கியது இந்த இடத்திலாம்' என்று சொல்லிச் சுட்டிக்காட்டினான். என்று கூறியவுடனே, பரதன் மேகம்போல விரைவாகக் குகனுடன் சென்று, அவனாற் சுட்டிக்காட்டப்பட்ட, ஸ்ரீராமன் முன்பு எழுந்தருளியிருந்த, கல்லிடையே, பரப்பிய புல்லினாலாகிய படுக்கையைப் பார்த்துப் பதைத்து, தரையிலேவிழுந்து, கண்ணீர் முத்துமுத்தாகப் பெருக, அதனால் தரையை நீராட்டித் துயரக் கடலில் மூழ்கினான்.

கைகேயியின் மகனான என் நிமித்தமாக உனக்கு வனவாசமாகிய இத்துன்பம் நேர்ந்தது என்று முன் கைகேயியினால் அறிந்த அப்பொழுதும், உயிர் நீங்கினேனில்லை; விழுங்கும் காயும் அமுதம்போலக் கருதி உண்டு, படுத்தற்கு அரிய புல்லில் நித்திரை செய்தாய் என்று அறிந்த இப்பொழுதும் யான் உயிர் நீங்கினேனில்லை. ஆகலால், விளங்குகின்ற இரத்தினங்கள் பதிக்கப்பெற்று விலையுயர்ந்த கிரீடத்தைத் தரித்தலாகிய சிறப்பையும் யான் ஏற்றுக்கொள்ளச் சம்மதிப்பேன்போலும்!' என்று பரதன் கூறி, பின்னும், குகனை நோக்கி, 'இராமன் துயில்கொண்ட இடம் இதுவானால், அவனை விடாது பின் தொடர்ந்துவந்த இலக்குமணன் இராப்பொழுதைக் கழித்தது எவ்விடத்தில்?' என்று அன்பார்ந்த இனிய சொற்களால் வினவினான். அதற்குக் குகன், 'இராமனும் அவன் தேவியும் நித்திரைசெய்ய, இலக்குமணன், வில் ஊன்றிய கையுடனும், உஷ்ணமான பெருமூச்சுடனும், கண்கள் நீர்சொரிய, இராப்பொழுதின் முடிவெல்லையைக் காணுமளவும் கண்மூடாமல் காவல்செய்து நின்றான்' என்று கூறினான். இதைக்கேட்ட பரதன், 'இராமனுக்கு இளையோரென்று முன்னம் பிறப்பில் ஒத்துள்ள உற்பத்தியையுடைய எங்களுள், யான், எப்பொழுதும் முடிவில்லாத இராமனது அன்புக்கு ஏதுவாயினேன். அவ்விலக்குமணனே, அத்துன்பத்தைத் துடைக்கத் தனி நின்றான். அன்புக்கு ஒரு எல்லை உள்ளதோ? எனது அடிமைத் தன்மை அழகாயிருக்கிறது!' என்று தன்னை வெறுத்துக் கூறினான்.

பின்பு பரதன், அவ்விடத்திலே அன்றையிரவில், படுத்தற்கு அரிய புழுதியிலே படுத்திருந்து, பொழுது விடிந்தபின் குகனை நோக்கி, 'வேடர் தலைவ! இப்பொழுது எங்களைக் கங்கையாற்றின் அக்கரையை ஏற்றினையானால், அச்செய்கை, கொடிய துயரக்கடலினின்று கரையேற்றி இராமபிரானிடம் சேர்த்ததாகும்' என்று சொன்னான். குகன் அதைக்கேட்டு, அங்கீகாரமாக 'நன்று' என்று கூறி, புறப்பட்டுத் தன் சுற்றத்தாரைச் சேர்ந்து, 'இப்பொழுது நீங்கள் போய் ஓடங்களைக் கொண்டுவாருங்கள்' என்று கட்டளையிட்டான். உடனே, அவர்களாற் செலுத்தப்பட்ட வெவ்வேறு வடிவங்களையுடைய ஓடங்கள், வெள்ளி மலையான கைலாசமும், பொன் மலையான மகாமேருவும், புஷ்பகவிமானமும் போல வந்து சேர்ந்தன. அக்கரையிலுள்ளாரை இக்கரையிலும், இக்கரையிலுள்ளாரை அக்கரையிலுமாக ஏற்றியிறக்குகிற தன்மையினால், இவ்வுலகத்துள்ளாரை அத்தேவலோகத்திலும், அவ்வுலகத்துள்ளாரை இவ்வுலகத்திலுமாக ஏற்றியிறக்குதல் செய்கின்ற நல்வினை தீவினைகளை அவற்றிற்கு உவமையாக உரைக்கலாம். அம்மரக்கலங்கள், அன்னப்பறவைகள் நாணமடையும்படியான நடையையுடையவையாய், அக்கங்காநதி முழுவதும் வெற்றிடமில்லையாம்படி எங்கும் நெருங்கிச் சேர்ந்தன.

அங்ஙனம் நாவாய்கள் வந்து நிறைந்தபின் குகன் பரதனை நோக்கி, 'பெருந்தகையோய்! அளவில்லாத மரக்கலங்கள் வந்திட்டன. இனி, உன் கருத்து யாது?' என்று வினவினான். பரதனும், சுமந்திரனை நோக்கி, 'பெரியோய்! இச்சேனையை விரைவில் மரக்கலங்களில் ஏற்றி அக்கரை சேர்ப்பாய்' என்று சொன்னான். பரதனது ஏவலினால், தேர்வல்லோனாகிய அச்சுமந்திரனும், தாழ்ந்து தவறுமற் பார்த்து முறைமையாக இனம்பகுத்து ஏற்ற, இரத கஜ துரக பதாதிகளாகிய சேனாசமுத்திரமானது கங்கையாறு ஏறிற்று. கூட்டமாகிய மேகங்கள் இடிபொலிதலாகிய ஆரவாரம் மிக, புராதனகாலத்தில் கடனீரை நிரம்ப எடுத்துக்கொள்ளும் பொருட்டு நெருங்குவனபோலவும், கொடியோடு கூடிய மரக்கலங்கள் கடலில் பாய்மரத்தோடு செல்வனபோலவும், பெரிய யானைகள் சில, நீண்ட துதிக்கையை எடுத்து நீட்டிக் கங்கையில் நீந்திச் சென்றன. பெரிய யானைகள் தொகுதியாக இறங்கி நீரை மோதிக்கொண்டு நீந்திச் செல்லுதலால், தென்கரையின்மீது கங்கைவெள்ளம் ஏறிற்று. சங்குகளையும், சுறாமீன்களையும், முத்துக்களையும், மற்றை இரத்தினங்களையும் கொழித்துக்கொண்டு, மரக்கலங்கள் செல்லும் நீரையுடைய கடலும் வந்து அதனிடத்திற் பரவும்படி, மதயானைகள் நீர்வெள்ளத்தைத் தள்ளின. அப்போது, அக்கங்காநதியும் இராமனைக் காணவேணுமென்னும் விருப்பத்தை உடையதுபோலக் கரையைக் கடந்து அப்பாற் சென்றது.

கொடிஞ்சையும், தட்டையும், அச்சுக்களையும், சக்கரங்களையும், சிகரத்தையும், கொடியையும், மற்றும் கழற்றற்கூடிய எல்லாவுறுப்புக்களையும் முன்பு தொழிலாளர் பூட்டியிருந்த முறைப்படியே கழற்றிவிட, இவ்வாறு இரதங்களைக் குதிரைகளுடனே வெவ்வேறாக நாவாய்கள் ஏற்றிச் சென்றன. இங்ஙனம் ஏற்றிக்கொண்டு சென்ற ஓடங்களுக்கு, ஓருடம்பை விட்டு நீங்கியபின் அவ்வுயிரை மற்றோருடம்பிற் கொண்டு சேர்க்கிற ஊழ்வினையை உவமை கூறலாம்; மற்றும், கூடுவிட்டுக் கூடுபாய்தலாகிய பரகாயப்பிரவேசஞ் செய்பவர்களது உயிரையும் உடலையும் போற்றிவைத்திருந்து மறுபடி சேர்க்கிற ஊழ்வினையையும் உவமை கூறலாம். மரக்கலங்களில் ஏறிச்சென்ற குதிரைகள், அச்சம் திரண்டாற்போன்ற நெஞ்சமுடையவையாயிருந்தன. யாற்றில் நீந்திச்சென்ற குதிரைகள், காற்றுத் திரண்டு வடிவமெடுத்தாற்போன்ற நடை வேகமான கால்களை உடையனவாயிருந்தன.

ஓடங்கள் செல்லும் விசையினால் ஒன்றையொன்று மோத, அதனால் மாதர்கள் மனங்கலங்கினவர்களாய், அஞ்சித் திகைத்து இருபாலும் பார்த்தனர். அப்பொழுது அவர்களுடைய கண்கள், அசைகின்ற அக்கங்கை நீர் வெள்ளத்தால் தள்ளப்பட்டு நிலைகுலைய அங்கு மிக்கும் அஞ்சிக் கலக்கத்தோடு ஓடங்களின் மேற் பாய்ந்து செல்லுகிற கயல்மீன்களின் கூட்டத்தை ஒத்தன. இக்கரையிலேயுள்ள சேனைகளாகிய கடலை விரும்பி ஏற்றிக்கொண்டு அக்கரையிற் சேரும்படி விரைவிற் செலுத்தி வெறுமை மீண்டுவருகிற ஓடங்கள், கடலிற் புகுந்து நீரை மொண்டெடுத்துக்கொண்டு அதனை முற்றுஞ் சொரிந்துவிட்டு அக்கணத்திலேயே மீண்டும் நீர் முகந்துகொள்ளுதற்குக் கடலை நோக்கித் திரும்பிவருகின்ற மேகங்களைப்போன்றிருந்தன. சில ஓடங்களில் ஏற்றப்பட்ட மயிற்பீலியாலவட்டங்களின் நீண்ட காம்புகள் பாய்மரங்களையும், நீண்ட சீலையோடுகூடிய துவசங்கள் பாய்களையும் போன்றிருந்ததனால், அவ்வோடங்கள், மரக்கலங்கள்போற் காணப்பட்டுப் போயின.

கங்காநதி ஆகாயம்போலவும், அந்நதியிற் சிந்தியுள்ள முத்துக்கள் ஆகாயத்தில் விளங்குகிற நக்ஷத்திரங்கள்போலவும் தோன்ற, மகளிர் ஏறிய நாவாய்கள், தோழியர்கூட்டத்தாற் சூழப்பட்டுத் தேவமாதர் ஏறிச்செல்லும் விமானங்களையே ஒத்தன. துடுப்புக்கள் இரண்டு கால்கள்போலத் தோன்ற, கங்காநதியிலே கால்களால் நடந்தாற்போலச் செல்லுகிற ஓடங்கள், உத்தம மகளிரது பாதங்கள் தீண்ட உயிர்பெற்றவையே போன்றன.*

இவ்வண்ணம் படைவீரர் முதலியோர் நாவாயேறிச் செல்ல, வசிட்டர் முதலிய தூய முனிவர்கள், ஓடங்கள் கீழ்ப்பட்ட சாதியாரால் செய்யப்பட்டனவாதலால், அவற்றிற் பரிசித்து ஏறவில்லை. அவர்கள், தவயோகத்தின் சித்தி

* நல்லிலக்கணம் அமைந்த உத்தமமாதர் உதைத்தல் முதலியன செய்தால் அசோகமரம் முதலியன தளிர்த்துப் பூக்குமென்று நூல்களிற் கூறுதல்போல, இங்கு மகளிர்பாதம் படுதலால் மரத்தாலாகிய ஓடம் உயிர் பெற்றாற்போலும் என்று வருணிக்கப்பட்டது.

பெற்றவர்களாதலால், மனத்தில் இச்சித்த மாத்திரத்தால் செல்லுகிற ஆகாயசஞ்சாரத்தையே ஓடமாகக்கொண்டு விமானங்களில் ஏறி ஆகாய மார்க்கமாகச் செல்லுகிற தேவர்கள்போல அக்கரையிற் சென்றடைந்தார்கள். விண்ணுலகத்திலும் மண்ணுலகத்திலும் கீழுலகத்திலும் மற்றெல்லாவுலகங்களிலும் உண்மையாகத் தவறாமற் பலிக்கிற தொழில் தவமேயன்றிப் பிறிதொன்றும் உள்ளதோ? அப்போது, அறுபதினாயிரம் அக்ஷௌஹிணி சேனையும், அயோத்திசனங்களும், மாதர் கூட்டமும், கங்கை கடந்து சென்றன.

அதன்பின், கள்ளப்பொருளாசையை நீக்கி, அதனால், பூமியை முன்னம் ஆண்ட மற்றையரசர்களைக் கீழ்ப்படுத்தி அவ்வரசர்களெல்லோரினும் மேலேறியவனான பரதனும் ஓடமேறினான். தன்னைத்தானே ஒத்த தம்பியான சத்துருக்கினனும், கௌசலியை, கைகேயி, சுமித்திரையென்னும் தாய்மார் மூவரும், தேர்ப்பாகனான சுமந்திரனும், உண்மைத்தோழனான குகனும் ஆகிய இவர்கள், பரதன் ஏறிய ஓடத்தில் ஏறினார்கள். அவ்வளவில், துடுப்புக் கோல்களென்னும் கால்களினால் நாவாய் செல்லத்தொடங்கிற்று.

சுற்றத்தாரும் தேவர்களும் தொழும்படி சிறப்புற்றுநின்ற கௌசல்லையைக் குகன் நோக்கி, 'ஐயனே! இவர் யார்?' என்று பரதனைப்பணிந்து வினவினான். அதற்குப் பரதன், 'இவர் தசரத சக்கரவர்த்தியின் முதல்தேவி; மூவுலகும் படைத்த பிரமனை முன்பு படைத்த திருமாலாகிய இராமபிரானைத் தான் மகனாக ஈன்றதனால் பெறுதற்கு உரிய பாக்கியத்தை யான் பிறந்ததனால் இழந்த பெரியவள்'' என்று சொன்னான். அவ்வளவிலே, குகன், கௌசல்லையின் திருவடிகளில் ஸாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி அழுவானாயினன். கன்றைப் பிரிந்த காராம்பசுவின் துயரம்போன்ற, புத்திரனைப் பிரிந்த துன்பத்தையுடைய கௌசல்யை அவனைக் குறித்து 'இவன் யார்?' என்று வினவினாள். அதற்குப் பரதன், 'அம்மா! இப்பெரியோன், இராமபிரானுக்கு இனிய தோழன்; லக்ஷ்மணனுக்கும் சத்துருக்கினனுக்கும், எனக்கும் தமையனாகுந் தகுதியை உடையோன். இவன் பெயர் குகன்' என்று கூறினான். கௌசல்யை அதுகேட்டு, அவர்களை நோக்கி, 'மைந்தர்காள்! இனித் துயரத்தால் வருந்தாதீர்கள். இராமலக்ஷ்மணர் நாட்டை விட்டுக் காட்டைநோக்கிப் புறப்பட்டுச் சென்றதும், இத்தகைய அன்பார்ந்த துணைவனைப் பெற்றமையால் நலமேயாயிற்று. குகனென்னும் இப்பெருந்தகையாளனோடு கூடி நீங்கள் ஐந்துபேரும் ஒற்றுமையுடையவர்களாய், பெரிய இந்நிலவுலகத்தை நெடுங்காலம் பரிபாலித்து வாழ்ந்திருங்கள்' என்று ஆசீர்வாதஞ் செய்தாள்.

குகன், பின்பு, தருமதேவதையேயென்று சொல்லத்தக்க சுமித்திரை கௌசல்லையருகில் நிற்பதைப் பார்த்து, பரதனை நோக்கி, 'ஐயனே! அன்புருவமாய் விளங்குகின்ற இவரை இன்னாரென்று சொல்க' என்று கேட்டான். அதற்குப் பரதன், 'நல்வழிதவறாமல் தன் சத்தியத்தை என்றும் அழியாது நிலைத்துநிற்பதாகச் செய்துவிட்டு உயிர்நீத்த தசரதசக்கரவர்த்தியின் இளைய தேவி; இராமன்பின்னே பிறந்த தம்பியும் ஒருவன் உளன் என்று யாரும் அறியும்படி அவனை விட்டுப்பிரியாத இலக்குமணனைப் பெற்ற பெரியவள்' என்று கூறினான். குகன் அதுகேட்டு மனமுருகி அவளை நமஸ்கரித்தான்.

பின்பு, தன் கணவனாகிய தசரதன் இறந்து மயானத்திற் செல்லும்படியும், புத்திரனாகிய பரதன் துயரக்கடலில் மூழ்கும்படியும், கருணைக்கடலாகிய இராமபிரான் கொடிய காட்டிலே செல்லும்படியும், திருமால் தன் பேரடியால் அளவிட்ட உலகங்களையெல்லாம், தன் மனத்தில் எண்ணிச்செய்யும் கொடுமையினால் அளவிட்டவளான கைகேயியைக் குறித்து, 'இவர் யார்? சொல்' என்று குகன் பரதனைக் கேட்டான். அதற்குப் பரதன் கூறுவான்:—'துன்பங்களையெல்லாம் உண்டாக்கியவளும், உலகத்தையாகிய குழந்தையை வளர்க்கும் செவிலித்தாயானவளும், தனது பாழ்ப்பாவி வயிற்றிலே நெடுங்காலம் [பன்னிரண்டு மாதகாலம்] தங்கிக் கிடந்த எனக்கும் உயிர்ச்சுமை குறைந்து தேய்வடைய, எல்லாப் பிராணிகளின் உடம்புகளும் உயிரில்லாதனபோலாகக் காணப்படுகிற இவ்வுலகத்தில் இப்பொழுது தானொருத்தி மாத்திரமே துன்பக்குறிப்பில்லாத முகத்தையுடையவளுமான இவளை, இன்னாளென்று குறிப்பினால் அறியமாட்டாயாயின், வெளிப்படையாகச் சொல்வேன்; கேள்: இங்கு நின்ற இவள்தான் என்னை ஈன்றவளான கைகேயி'' என்று பரதன் சொன்னான். குகன் அதனைக் கேட்டு, மாவிரக்கமற்றவளான அக்கைகேயியையும் தாயென்றே கருதித் தன் நல்ல கைகளைக் குவித்து வணங்கினான்.



அன்னப்பேடு ஒன்று சிறகில்லாததாய் நீந்திக் கரையடைந்ததுபோல, அத்தோணியும் அக்கரை சேர்ந்தது. பின்பு, தோணியினின்று தாய்மார் இறங்கிச் சிவிகைகளில் ஏறிச் சென்றார்கள். பரதன், குகன் விட்டு நீங்காமல் தன்னுடன் வர, கண்ணீர் ஆறாய்ப்பெருக, கால்களால் நடந்துசென்று காதம்பல கடந்தான். குகன் பரதனோடு சென்று இராமபிரானைத் தரிசித்து, அவரது கட்டளையால் பரதனோடு தானுந் திரும்பித் தன்னூர்புகுந்து, வனவாசம் முடித்துக்கொண்டு இராமபிரான் எழுந்தருளுதலை எதிர்நோக்கியிருந்தான். இராமபிரான் முன் அவனுக்குச்சொன்னஉறுதிமொழிப்படியே தெற்கினின்று வடக்கே திரும்பியெழுந்தருளுங்கால் அவ்வன்பனைக் கண்டு அளவளாவினன். குகன் இராமபிரானைத் தொடர்ந்து அயோத்தியடைந்து, அங்கு ஸ்ரீராமன் திருமுடிசூடும் விபவத்தைக் கண்டு களிப்புற்று, அப்பிரானது நியமனத்தால் அரிதின் மீண்டு தன்னுறைவிடம் சேர்ந்து, ஸ்ரீராமனையே எப்போதும் தியானித்துக்கொண்டு நெடுங்காலம் வாழ்ந்திருந்து பின் நற்கதி சேர்ந்தான்.

இச்சரித்திரத்தினால், அன்பு முதலிய குணங்கள் இருப்பின், கீழோர்களையும் மேலோர் சமமாகக் கருதி ஏற்றுக்கொண்டு அன்பு கூர்வரென்பது புலப்படுதல் அறிக.

"ஏழை யேதலன் கீழ்மகனென்னா(து),
இரங்கி, மற்றவர்க் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கி யுன்தோழி;
உம்பி யெம்பி'யென் றொழிந்திலை; உகந்து,
'தோழன்நீ எனக்(கு)'இங்கொழி' என்ற
சொற்கள் வந்(து) அடியேன்மனத் திருந்திட,
ஆழிவண்ணா! நின் அடியிணை அடைந்தேன்,
அணிபொழில் திருவரங்கத் தம்மானே."

—திருமங்கையாழ்வார்.

முற்றிற்று.

பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர்.

---

## Insect Pests.

## பயிர்களை நாசமாக்கும் பூச்சிகள்.

குடியானவர்கள் பலவிதங்களிலும் கஷ்டப்பட்டு நிலங்களை உழுது பயிர்செய்கிறார்கள். பயிர்கள் எவ்வளவு செழிப்பாக ஓங்கி வளர்ந்தாலும், அவற்றைப் பூச்சிகள் அழித்து அவர்களுக்கு நஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன. சென்னை இராஜதானியில் இப்பூச்சிகளால் ஏராளமாக நஷ்டமுண்டாகின்றதென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, பயிர்களைப் பூச்சிகள் பாதிக்காமலிருக்கும்பொருட்டு அநுசரிக்கவேண்டிய முறைகளை ஒவ்வொருவரும் கைப்பற்றவேண்டும்.

இப்பூச்சிகளை ஒழிக்கப் பல வழிகள் உள்ளன. ஆனால், இவை வரும்முன்னே ஜாக்கிரதையாயிருந்து இவற்றைத் தடுப்பதுதான் விவேகம். பூச்சிப்புழு சாஸ்திரியாகிய மிஸ்டர் டி. பெயின்ப்ரிக் ப்ளெட்சர் என்பவர் இவ்விஷயமாய்ச் சில குறிப்புக்களை வெளியிட்டிருக்கிறார். அவை எல்லோராலும் சுலபமாய் ஏற்றுக்கொள்ளக்கூடி

யவையாயிருக்கின்றபடியால், அவற்றில் சில வற்றை இங்குக் குறிப்பிடுவோம்.

### சுத்தமான சாகுபடி.

சாகுபடி செய்யப்பட்டுள்ள பூமியிலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் இருக்கும் புல்பூண்டுகளைப் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். இப்படி செய்வதனால், பூச்சிகள் பயிரில் இறங்குவதற்கு ஒரு தடை ஏற்படும். பூமியில் பயிர் நன்கு முளைத்தபின் களையெடுக்கும்போது, நிலத்தைச் சுற்றிலுமுள்ள புல்பூண்டுகளையும் ஒன்று விடாமல் பிடுங்கி எறிந்துவிடவேண்டும். ஏனெனில், இப்புல்பூண்டுகளில் பூச்சி புழுக்கள் தங்கி அவற்றைத் தின்று ஜீவித்துவருகின்றன; அவற்றைத் தின்றபிறகு பக்கத்தில் வளர்ந்திருக்கும் பயிர்களுக்குத் தாண்டி அவற்றை நாசப்படுத்துகின்றன. இவ்விதம் பயிர்களை நாசமாக்கும் பூச்சிகளுள் நாவாய்ப் பூச்சியொன்று. இப்பூச்சிகள் வயலின் அருகில் முளைத்திருக்கும் புல் பூண்டுகளில் தங்கி அவற்றைத்தின்று ஜீவித்திருக்கும்; வயலிலுள்ள நெற்பயிர் கதிரின்றவுடன் அவற்றில் இறங்கிக் கதிர்களைச் சப்பிவிடுகின்றன. ஆதலால், வயலில் களை எடுக்கும்போது, பயிரைச்சுற்றிலுமுள்ள இடங்களிலிருக்கும் புல்பூண்டுகளைப் பிடுங்கிவிடவேண்டும்.

சாகுபடி செய்யப்பட்டுள்ள பூமியின் நாற்புறங்களிலும் திறந்த வெளியிருப்பது மிகவும் உபயோகமானதே; ஏனெனில், பயிராயிருக்கும் நிலத்திற்கும் வெளியேயுள்ள பூச்சிகள் திறந்தவெளியின் வழியாக நெற்பயிருக்கு வரும்போது, பக்ஷிகள் முதலியன அவற்றைக்கொன்று தின்றுவிடுகின்றன. இதனால் பயிர் சேதமடையாமல் காக்கப்படுகின்றது.

### பயிரின் அடித்தாளைக் கொளுத்தல்.

வியவசாயிகள் தான்யப்பயிர்களை அதாவது நெல் சோளம் கேழ்வரகு முதலிய பயிர்களை அறுவடை செய்தபிறகு பயிரின் அடித்தாள்களை அப்படியே விட்டுவைக்கிறார்கள். இந்த அடிக்கட்டைகளில் ஒருவிதப் பூச்சிகள் வந்து தங்கி, இதே நிலத்தில் மறுபடியும் பயிர் செய்யும்போது இப்பூச்சிகள் அப்பயிரை நாசப்படுத்துகின்றன. இதுவுமல்லாமல், அடுத்த வயலில் வளர்ந்து கொண்டிருக்கும் பயிரிலும் இறங்கி அதையும் நாசப்படுத்துகின்றன.

இந்த அடிக்கட்டைகளை அப்படியே வயலில் விட்டுவைப்பதனால் மற்றொரு கஷ்டமும் உண்டாகின்றது. வயலில் அடிக்கட்டைகளை அப்படியே விட்டுவைப்பதனால் கரையான்கள் அதிகமாக ஏறுவாகின்றது. இக்கரையான்கள் வயலிலுள்ள அடிக்கட்டைகளைத் தின்றபிறகு, இன்னும் வேண்டிய ஆகாரத்திற்கு அடுத்தவயலை நாசப்படுத்துகின்றன; அதே நிலத்தில் சாகுபடி செய்யக்கூடிய அடுத்த பயிரையும் நாசப்படுத்துகின்றன. இதனால், வியவசாயிகள் தான்யப் பயிர்கள் அறுவடையானவுடன் அவற்றின் அடிக்கட்டைகளை வெட்டி ஒன்று சேர்த்து எரித்துவிடவேண்டும். பிறகு இவ்விதத் தொந்தரைகள் ஏற்படமாட்டா. வியவசாயிகளுள் சிலர், நிலத்தில் அடிக்கட்டைகளை அப்படியே விட்டுவைத்தால், அடுத்தபயிருக்கு எருவாகுமென்று சொல்லுவார்கள். ஆனால், அந்த அடிக்கட்டைகளை அப்படியே எருவாக உபயோகிக்கும் லாபத்தைவிட, அவற்றை எரித்துப் பூச்சிகளை ஒழிப்பது அதிக லாபமென்று அவர்கள் கருதவேண்டும்.

மேலே கூறிய விஷயங்களில் வியவசாயிகளுள் ஒற்றுமை இருக்கவேண்டும். இல்லாவிடில், ஒருவர் அறுவடை செய்து அடிக்கட்டைகளை எரித்துவிட்டு மற்றொருவர் அவ்விதம் செய்யாமற்போனால், அடிக்கட்டை கொளுத்தப்பட்ட நிலத்தில் மறுபடியும் பயிர் செய்யும்போது பக்கத்திலுள்ள பூச்சிகள் மீண்டும் இவற்றில் வந்து பயிரை நாசமாக்கும்.

### பயிர் மாற்றல்.

மாற்றுப்பயிர் செய்வதனாலும் பயிர்களை அழிக்கக்கூடிய பூச்சிகளை ஒருவாறு வரவொட்டாமல் தடுக்கலாம். ஒரே பயிரை அந்தப் பூமியிலே தொடர்ச்சியாகச் செய்தால், ஒரு பருவத்தில் இருந்த பூச்சிகள் அடுத்த பருவத்திலும்



அப்பயிரைத் தின்று விருத்தியாகின்றன. பூச்சிகளை ஒழிக்கும் விஷயத்தில் வியவசாயிகளுடைய ஒற்றுமை வேண்டும். ஏனெனில், ஒன்றுக்கொன்று அருகேயுள்ள இரண்டு வயல்களில் ஒருவன் பயிரை மாற்றியும் மற்றொருவன் மாற்றாமலும் இருந்தால், பின்னே சொன்ன நிலத்தில் தோன்றியுள்ள பூச்சிகள் மாற்றுப்பயிர் செய்திருக்கும் பயிரை நாசமாக்கும்.

பூச்சிகளை ஒழிப்பதற்கு வியவசாய சாஸ்திரிகளால் மற்றொரு உபாயமும் சொல்லப்படுகின்றது: ஒரு நிலத்தில் மாகாலை அறுத்த பிறகு அந்நிலத்தில் சில பயிர்களை விதைத்துவிடவேண்டும். முந்தின பயிரில் இருந்த பூச்சிகளெல்லாம் இந்தப் பயிரில் வந்துசேரும். பயிர் நன்றாக வளர்ந்தவுடன் அதை அழித்துவிடவேண்டும். இவ்விதம் செய்வதனால், பூச்சிகள் முழுதும் அழிந்துபோய் மூன்றாவதாகச் செய்யப்படும் பயிருக்கு யாதொரு பாதகமுமில்லாமலிருக்கும். இம்முறையை வியவசாயிகள் மிக்க ஜாக்கிரதையுடன் கையாளவேண்டும். சிலர் இரண்டாவதாகச் செய்யப்படும் பயிரை அப்படியேவிட்டுவிடுகிறார்கள். இதனால், முன்னிருந்த பூச்சிகள் நன்கு விருத்தியாகி மூன்றாவதாகச் செய்யப்படும் பயிரை நாசப்படுத்துகின்றன. ஆதலால், வியவசாயிகள் இம்முறையில் மிகவும் ஜாக்கிரதை கொள்ளவேண்டும்.

### கலப்புப்பயிர் செய்தல்.

அநேக ஜில்லாக்களில் பலஜாதிப் பயிர்களும் ஒன்றாகக்கலந்து விதைக்கப்படுகின்றன. இப்படி விதைப்பதன் காரணமென்னவெனில், இரண்டொரு பயிர்களில் பலன் கிடைக்காவிட்டாலும் மற்றைப் பயிர்களினின்றாவது மாசூல் கிடைக்குமென்பதே. இன்னும், இதனால் பூச்சிகள் விருத்தியாவதும் குறைவுபடலாம். பலஜாதிப்பயிர்களைக் கலந்து பயிர் செய்வதனால், ஒரு ஜாதிப் பயிரைப் பிடிக்கும் பூச்சிகள் மற்றைப் பயிர்களைத் தின்னுததனாலும், தாம் தின்னும் பயிரைத் தேடிப் போவதற்கு அருகில் மற்றைப் பயிர்கள் தடையாயிருப்பதனாலும் அவை அதிகமாய் விருத்தியாக ஏதுவில்லாமற்போகின்றன. உதாரணமாக: வேர்க்கடலையும் கம்பும் கலந்து விதைத்த பயிரில் பூச்சிகள் இருப்பதைக் காட்டிலும் வேர்க்கடலைமட்டும் தனியே விதைக்கப்பட்ட பயிரில் அவை அதிகமாக இருக்கக்காணலாம்.

### உழுதல்.

சோடைக்காலத்தில் பூமியை நன்றாக உழுவதால், அதில் பூச்சிகள் விருத்தியாவதைத் தடுக்கலாம். பூமியை உழுவதற்கு மேற்புறத்தை மாத்திரம் சுரண்டக்கூடிய கலப்பை உதவாது. குறைந்தது 6 அங்குலம் ஆழத்திற்கு மண்ணை புரட்டி மடிக்கக்கூடிய இரும்புக் கலப்பைகள் அவசியமாகும். வெட்டுக்கிளிகள் பூமிக்குள் சொற்ப ஆழத்திலேயே தம் முட்டைகளை இடுகின்றன. கம்பளிப் பூச்சிகளும், இன்னும் பல பூச்சிகளும், பூமிக்குள் புகுந்து, கோடைக்காலமுழுவதும் அங்கேயே தங்கியிருக்கின்றன. மறுபடியும் மழைபெய்து அவை வேறு உருவம் மாறுகிறவரை வெளிக்கிளம்புவதில்லை. இந்தச் சமயத்தில் பூமியை உழுவோமானால், மேற்கூறிய புழுக்கூடுகளும் முட்டைகளும் தரை மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டு அவை வெய்யிலின் உஷ்ணத்தால் இறந்து போகும். இன்னும், சில பக்ஷிகளால் இவை கொன்று தின்னவும்படும். கொஞ்சம் புழுக்களும் பூச்சிகளும் பூமியின் அதிக ஆழத்தில் புதைந்துபோய்க் காலத்தில் வெளிவரக்கூடாமல் இறந்து போகின்றன.

### பாசனம்.

சில ஜில்லாக்களில் சில்வண்டு என்னும் பூச்சிகள் பயிர்களுக்கு ஏராளமான சேதத்தை உண்டு பண்ணுகின்றன. அவை பூமிக்குள் வளைதோண்டிக்கொண்டு ஜீவித்திருந்து இராக்காலங்களில் வெளியில் வந்து பயிர்களின் கொழுந்துகளை வெட்டித் தம் வளைக்குள் கொண்டுபோய்ப் பகற்காலங்களில் தின்னுகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் தண்ணீர் கட்டுவதால், இவ்வண்டுகள் வெளியே வருகின்றன; அப்போது கழுகு, காக்கை முதலிய பக்ஷிகள் அவற்றைக் கொன்று

தின்னும். சாதாரணமாய் வயல்களுக்குத் தண்ணீர் கட்டும்போது காக்கை கழுகுகள் வயலோரத்தில் வந்து கூடுவதை நாம் காணலாம். கொஞ்சம் கவனித்துப் பார்த்தால், வயலில் தண்ணீர் செல்லச்செல்ல நிலத்தின் வெடிப்புகளினின்று வெட்டுக்கிளிகள், வண்டுகள் முதலியன வெளிப்படும்போது, அவற்றை இப்பறவைகள் பிடித்துத் தின்பதைக் காணலாம்.

## The Ladies' Section.

### ஸ்திரீகள் பகுதி.

### FOOD FOR INFANTS.

#### இளங்குழந்தைகளுக்கு ஆகாரம்.

இளங்குழந்தைகளுக்கு இயற்கையான ஆகாரம் தாயின் முலைப்பாலே. அதுதான் அவற்றிற்கு மிகவும் சிரேஷ்டமானது. குழந்தைகளுக்கு மற்றைய பால்களைப் புகட்டுவதனால் பல நோய்கள் உண்டாகக்கூடும்; ஏனெனில், மற்ற பால் தினுசுகளில் சேர்ந்துள்ள பொருள்கள் தாய்ப்பாலில் இருப்பதுபோல இல்லாமல் வேறுபட்டிருக்கின்றன. இவ்விதத் தினுசுகளில் பல வியாதிகளை உண்டாக்கக்கூடிய கிருமிகள் வந்து சேர்ந்து குழந்தைகளுக்கு நோய்களை உண்டுபண்ணலாம். தாயின் பாலிலோ அவ்வித கிருமி ஒன்றும் இல்லை. மேலும், தாய்ப்பாலை குழந்தைகளுக்குப் புகட்டுவதனால் அவற்றின் தேகத்தினுள் வந்தடையும் கிருமிகளும் நாசமடைகின்றன.

தாய்மார்களுக்குப் பால் சரியானபடி ஏற்படாவிட்டால், சாதாரணமாய்க் குழந்தைகளுக்குப் பசுவின் பாலைக் கொடுக்கிறார்கள். குழந்தைகளுக்குப் பசுவின்பாலை அப்படியே கொடுப்பது உசிதமன்று. பசுவின்பாலில் அதன் கன்றின் வளர்ச்சிக்கு ஏற்றபடி பொருள்கள் அமைந்திருக்கிறபடியால், அது குழந்தைகளுக்குப் பொருந்தாது. மேலும், பசுவின் பாலில் [illegible] [illegible] பொருள்கள் இருக்கின்றன. [illegible] கொடுப்பானது [illegible] குழந்தைகளுக்குத் தீமையாகும். இன்னும், குழந்தையின் வளர்ச்சிக்கும் [illegible] [illegible] தாய்ப்பாலில் [illegible] கொடுக்கின்றன. தாய்ப்பாலில்லாமை [illegible] பசுவின் பாலைக் குழந்தைகள் பல வியாதிகளினால் பிடிக்கப்பட்டு இறந்துபோகின்றன. ஆனால், தாய்ப்பாலை அருந்தும் குழந்தைகள் இவ்வாறு இறப்பதில்லை. குழந்தைகளுக்குப் போதுமானவரை பால் தாயினிடத்தில் ஏற்படாவிட்டால், அப்போது நல்ல பசுவின் பாலை சமமாகப் பக்குவப்படுத்தி அவைகளுக்கு உபயோகிக்கவேண்டும்.

### PRICKLY HEAT.

#### வேர்வைக்குரு. *

வேர்வைக்குருவானது உஷ்ண தேசங்களில் வேனிற்காலத்தில் சாதாரணமாய் வரக்கூடிய நோய்களுள் ஒன்று. இது பளிங்குபோல் பிரகாசமுள்ள குண்டூசியின் தலையளவு சிறு கொப்புளமாக உண்டாகின்றது. இவ்வேர்க்குரு ஆஸ்கா சர்க்கரையைத் தூவியதுபோல் கும்பல் கும்பலாயாவது அல்லது ஒவ்வொன்றைப்போல் தனித்தனியாகவாவது மார்பிலும், கழுத்திலும், முகத்திலும், கையின் பின்புறங்களிலும் உண்டாகும். இது வேறு இடங்களிலும் வருவதுண்டு.

இந்த வியாதியில் அரிப்பு அதிகமாயிருக்கும். அரிப்புக்கு இதமாய்ச் சொரியச் சொரிய அச்சிறு கொப்புளங்கள் உடைந்து அதிலுள்ள நீர் வெளிப்படும். நீர் வெளிப்பட்டதும் எரிச்சல் எடுக்கும்.

[illegible]

* இவை, வேர்க்குரு என்பன ஒரே பொருளன. [illegible]



வியாதியைப் பலப்படுத்தும். அன்றியும், பனியன் என்று சொல்லப்பட்ட இறுக்கமான சட்டையை வேனிற்காலத்தில் தொடர்ச்சியாய் இரண்டு மூன்று நாட்கள் தரித்துக்கொண்டால், நான்காம்நாள் மார்பு முழுமையும் இவ்வியாதி உண்டாகும்.

வேனிற்காலத்தில் நாள்தோறும் சுத்தஜலம் கொண்டு தேகத்தை நன்றாய்க் கழுவி அசுத்தங்களை அடிக்கடி நீக்கவேண்டும். அப்படி செய்யாவிட்டால், அவ்வசுத்தங்கள் தேகத்தில் தங்கி வியர்வை நீர் வெளிப்படாவண்ணம் தடுத்துவிடும். அப்படித் தடுப்பதனால், வியர்வை வெளியாக இடமின்றி அழுக்கற்ற இடங்களை நோக்கிச்செல்லும். அந்த இடங்களில் இவ்வேர்வைக்குரு மிகவும் நெருங்க உண்டாகும்.

இவ்வியாதி சாதாரணமானதுதான். இது வலிமையாயர்களுக்கும், மிக்க சௌக்கிய தசையிலுள்ளவர்களுக்கும், வந்தால், சிறிது பாதையைத் தரும். பலவீனர்களும் சவலைக் குழந்தைகளுக்கும் கர்ப்பிணிகளுக்கும் இவ்வேர்வைக்குரு வருமாயின், அவர்களின் தூக்கத்தைக்கெடுத்து அவர்களை அநேக பிணிகளுக்கு ஆளாக்கிவிடும். மாரிக்காலம் வந்து குளிர்ச்சியடைந்ததும் வேர்வைக்குரு தானாகவே மறைந்துபோகும்.

#### சிகிச்சை.

வியர்வை அதிகமாக உண்டாகாதபடி தடுப்பதே முக்கிய சிகிச்சை. வியர்வையால் உண்டாகும் அழுக்கை நீக்க நாள்தோறும் தவறாமல் குளிர்ந்த நீரில் ஸ்நானம் செய்துவரவேண்டும். கம்பளி, ப்ளானல் முதலிய வஸ்திரங்களைத் தரித்தலாகாது. சுத்தமாகிய பருத்தி உடைகளையும், பட்டு உடைகளையும் தரிக்கவேண்டும்.

#### வீட்டு வழக்கம்.

1. சந்தனம் அரைத்துப் பூசுதல்.
2. சந்தனத்தோடு பச்சைக்கற்பூரம், குங்குமப்பூ, பன்னீர் ஆகிய இவைகளைக் கலந்து பூசுதல்.
3. வயதுசென்ற வேம்பின் வேர்க்கட்டையை அரைத்துப் பூசுதல்.
4. இளநீரைப் பூசுதல்.
5. பனைநுங்கிலிருக்கும் நீரைப் பூசுதல்.

(பெண் கல்வி)

## The Boys' Section.

### சிறுவர் பகுதி.

### ARIYAN MORAL STORIES.

#### ஆரிய நீதி கதைகள்.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தலரிது."

துறவு, மெய்யுணர்வு, அவாவின்மை முதலிய நற்குணங்கள் நிறைந்த முனிவர்களின் கோபத்தைத் தடுத்தல் இயலாது. ஆதலின், பெரியோரிடம் பிழைசெய்தல் கூடாது. பெரியோரிடம் பிழைசெய்வதனால், அவர் பொறுமையாயிருப்பதுபற்றி யாதொரு கேடும் வாராதென்றெண்ணிப் பிழைசெய்யக்கூடாது. பெரியோர் பொறு[illegible] [illegible] [illegible] அதனால் [illegible] [illegible] ஆகையால், [illegible] [illegible] பெரியோரிடம் [illegible] [illegible] கூடாது. அவ்வாறு [illegible] பேசினால், அது அவர்களை [illegible] [illegible] பேசுபவர்க்கும் துன்பத்தை விளைவிக்கும். 'பல்லக்கு ஏறுவதும் பல்லுப் போவதும் வாயால்தான்' என்று பழமொழி வழங்குவதனால் யாரிடமும் இனிய சொல்லையே சொல்லவேண்டும்.

#### உதாரணம்.

சந்திரவம்சத்தில் நகுஷன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் இவ்வுலகில் நூறு அசுவமேத யாகஞ்செய்து, இந்திர பதவி அடைவதற்குத் தகுதியுள்ளவனாயினன். அப்பொழுது இந்திரன் குருவை அவமதித்த தோஷத்தால் ஸ்வர்க்கத்தைவிட்டு, எங்கேயோ ஒரு தாமரைத்தண்டில் ஒளிந்துகொண்டிருந்தான். அதனால், தேவர்கள் அரசனற்றவராயிருந்தனர். உடனே தேவர்கள் நகுஷனை [illegible] [illegible] தங்களுக்கு அரசனாக்கிக்கொண்டனர். பிறகு நகுஷன் தேவர்களைப் பார்த்து, 'இந்திராணியை இங்கே அழைத்துவாருங்கள்'

என்று கட்டளையிட்டான். தேவர் இதை இந்திராணியிடம் தெரிவித்தனர். உடனே அக் கற்பரசியாகிய இந்திராணி, தேவகுருவிடஞ் சென்று 'என் கணவன் அருகேயிருக்கவும் வேறொருவன் என்னை பத்தினியாகக்கொள்ளுதல் நீதியோ?' என்றாள். அதற்குப் பிருஹஸ்பதி, 'சப்த முனிவரும் தாங்கிவரச் சிவிகைமீது ஒருவன் வந்தால், அவனே தேவராஜனும் உன் கணவனுமாவான்' என்று விடையளித்தார். இதைக் கேட்டு இந்திராணி, 'அப்போது நகுஷன் இங்கே வரட்டும்' என்று சொல்லியனுப்பினாள். தேவர்கள் இவ்விஷயத்தைத் தெரிவித்ததும், இந்திரனாகிய நகுஷன் பல்லக்கைச் சுமக்கும் முனிவர்களைப் பார்த்து அவர்களுடைய மகிமையைச் சிறிதும் கருதாமலும் இனித் துன்பநேரப் போவதைச் சிறிதும் ஆராயாமலும், காமத்தினால் இந்திராணியை விரைவில் அடையக் கருதி, 'விரைந்துசெல்க' என்று பொருள்பட, 'ஸர்ப்ப, ஸர்ப்ப!' என்றான். பல்லக்கின் முற்கொம்பு தாங்கி முன்சென்ற அகஸ்தியமுனிவர் சினந்து, "நீ ஸர்ப்பமாகுக" என்று சபித்தார். உடனே நகுஷன் பாம்பாகிக் கீழே குதித்தான். சிற்றறிவினர்க்குச் செல்வமின்றிப் பிறிதொரு பகையில்லையல்லவா? ஆதலால், செல்வச்செருக்கால் பிறரை ஒருபொழுதும் அவமதித்துப் பேசலாகாது. அவ்வாறு அவமதித்துப் பேசினால் விரைவில் தீங்கு நேரிடும்.

---

"பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

ஸத்தியத்தினுஞ் சிறந்த தர்மம் வேறில்லை. சரீரத்திற்கு ஸ்நானஞ்செய்வதனால் சுத்தி ஏற்படுவதுபோல, மனதிற்கு உண்மைபேசுவதால் சுத்தி ஏற்படுகின்றது. ஸத்தியமாகப் பேசுவதனால் இவ்வுலகில் புகழ் உண்டாகிறது. மறுமையிலும் இன்பமுண்டாகிறது. பொய் பேசுவதனால் இம்மையில் பொய்யருக்குத் துக்கபடி. நியாயாதிபதியால் தண்டனையும், அபகீர்த்தியும், அ[illegible]மும், பகைச்செலவும், அவமானமும், மறுமையில் கொடிய நரகவேதனைகளும் ஏற்படுகின்றன. இவ்வுலகில் பெரும்பாவங்கள் ஐந்தென்பர், அவை: பொய், கொலை, களவு, கள், காமம் என்பனவாமென்றும் ஆன்றோர் கூறுகின்றனர். அவற்றுள் பொய்யே தலைமையாயிருக்கின்றமையின், அதுவே முதன்மையான பாவம். ஆகலின் தனக்கு எவ்வளவு துன்பங்கள் நேர்ந்தாலும் பொய்யே பேசலாகாது. பொய்யில்லாத மனிதனே சிறப்படைவன்.

உதாரணம்.

முற்காலத்தில் ஹரிச்சந்திரன் என்று ஒரு அரசன் இருந்தான். அவன் உண்மையே பேசுகின்றவன்; அவனிடம் ஸகல நற்குணநற்செய்கைகளும் குடிகொண்டிருந்தன. அவனைப்பற்றி ஒருசமயம் வசிஷ்டர் தேவலோகத்தில் இந்திரன் ஸபையில் "ஹரிச்சந்திரன் ஸத்யம் தவறாதவன்; ஸகலநற்குணங்களும் அமையப்பெற்றவன்" என்று புகழ்ந்து பேசினார். அதனைக்கேட்டு அவ்விடமிருந்த விசுவாமித்திரமுனிவர், இந்திரனிடம், "ஹரிச்சந்திரன் வசிஷ்டர் கூறியது போல நல்லவனல்லன்; அவன் எப்பொழுதும் பொய்பேசுபவன்" என்றார். இந்திரன் விசுவாமித்திரர் கூறியதை நிரூபிக்கும்படி அவரிடம் சொன்னான். விசுவாமித்திரர் அவ்வாறே நிரூபிப்பதாகக் கூறிப் பூலோகத்திற்கு வந்து, தமக்கு ஓர் யாகநிமித்தம் சொற்பப்பொருள் கொடுக்குமாறு ஹரிச்சந்திரனை வேண்டினார். அரசன் அப்படியே கொடுத்தான். அன்று அம்முனிவர் 'நான் கேட்கும்போது கொடு' என்று சொல்லி, அவனிடத்திலேயே கொடுத்துச் சென்றார். அம்முனிவர் பின்பு ஹரிச்சந்திரனுடைய இராஜ்யத்தையெல்லாம் தந்திரமாக அபஹரித்துக்கொண்டு, முன்பு தான் கொடுத்த பொருளைக் கொடுக்கும்படி கேட்டார். அவன் என்னசெய்வான்? இராஜ்ய முழுவதையும் கொடுத்துவிட்டு வேறுபொருள் எங்கிருந்து கொடுப்பான்? ஒன்றும் தோன்றாமல் மௌனமாயிருந்தான். உடனே முனிவர் மன்னனைப் பார்த்து, "நான் உமக்குப் பொருள் கொடுக்க வேண்டியதில்லை' என்று ஒருபொய் கூறிவிடு;



உன் இராஜ்யத்தை உனக்கே கொடுத்துவிடுகிறேன்; இன்றேல், நீ என் இராஜ்யத்தில் காலடி வைக்கக்கூடாது; என் பொருளையும் எவ்வாறாயினும் கொடுத்துவிடவேண்டும்" என்றார். ஹரிச்சந்திரன் அதற்கு உடன்படாமல், "நான் தங்கள் இராஜ்யத்தை விட்டு இப்பொழுதே வெளியே போய்விடுகிறேன். உமது பொருளையும் சொற்பநாள் தவணையில் கொடுத்துவிடுகிறேன். நான் பொய்சொல்ல முடியாது" என்று கூறி, பால்மணம் மாறாத தனது புதல்வனையும் சூரியனையும் பாராத தனது மனைவியையும் அழைத்துக்கொண்டு, அப்பொழுதே வெளிக்கிளம்பி, பாலைவனத்தையும் கடுங்கானகங்களையும் கடந்து, பசியால் வருந்தி, மெலிந்து, இடையிடையே விசுவாமித்திரரின் தூதர்கள் செய்த பலவிதமான துன்பங்களையெல்லாம் அநுபவித்துக்கொண்டு முடிவில் காசிதேசத்திற்குச் சென்றான். பிறகு அவன் அன்புள்ள மனைவியையும் பிள்ளையையும் விற்றுத் தானும் ஓர் சண்டாளனுக்கு அடிமையாகி, கிடைத்த பொருளைக் கொடுத்து, விசுவாமித்திரர் கடனைத் தீர்த்தான். விசுவாமித்திரர் ஹரிச்சந்திரனைப் பொய்யனாக்க வேண்டுமென்று மறுபடியும் எவ்வளவோ கஷ்டப்பட்டார். அவரால் அது முடியவில்லை. கடைசியில் ஸர்வேசுவரன் ஹரிச்சந்திரனது ஸத்யநெறிக்கு மெச்சிப் பிரத்தியக்ஷமாகி இராஜ்யத்தைத் திரும்ப அவனுக்கே மீட்டுக்கொடுத்து அவனைப் புகழ்ந்து சென்றார்; மறுமையில் மோக்ஷத்தையும் அளித்தார். அதுமுதல் ஹரிச்சந்திரன் மனைவிமக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். ஆதலால், எப்பொழுதும் உண்மையையே பேசவேண்டும்.

## HINTS FOR YOUNG.

### சிறுவர் கவனிக்கவேண்டியவை.

ஒவ்வொருவரும் சிறுவயதிலேயே கல்வி கற்றுக்கொள்ளவேண்டும். பின்பு சம்சாரத்தில் விழுந்து வருத்தமடையும்போது, படித்தாலும் கல்வி நன்றாய்ப் புத்தியிலேறாது—அழுக்குப்படியாத துணியிலே சாயம் நன்றாக ஏறும், அழுக்குப்படிந்த துணியிலே நன்றாய் ஏறாது.

கல்வியறிவுள்ளவன் அழகில்லாவிட்டாலும் அவன் யாவர்க்கும் இஷ்டனாவான். கல்வியறிவில்லாதவன் அழகிருந்தும் யாவர்க்கும் இஷ்டனாகான்—வாசனையுள்ள விலாமிச்சைவேர் அழகில்லாதிருந்தும் யாவர்க்கும் இஷ்டமாகிறது. வாசனையில்லா முருக்கம்பூ அழகாயிருந்தும் ஒருவரும் இஷ்டப்படுவதில்லை.

உயர்குலத்திலே பிறந்தாலும், குணமில்லாதவனை ஒருவரும் சேர்க்கமாட்டார்கள். தாழ்ந்த குலத்திலே பிறந்தாலும், குணமுள்ளவனை அனைவரும் விரும்புவார்கள்—இனிய கரும்பிலே பிறந்த பூ வாசனையில்லாமையால் ஒருவராலும் கைக்கொள்ளப் படுவதில்லை. கசந்த அலரியிலே பிறந்த பூவில் வாசனையிருப்பதால் யாவரும் அதைக் கைக்கொள்ளுகிறார்கள்.

புத்தியுள்ளவன் தூரத்திலிருந்தும் ஒருவன் குணத்தை நன்கு அறிவான். மூடன் சமீபத்திலிருந்தும் மேலோர் குணத்தை அறியமாட்டான்—வண்டு தூரத்திலிருந்து வந்து தாமரைப் பூவின் தேனை யுண்ணும்; தவளையோ அதன் சமீபத்திலேயே எப்போதுமிருந்தும் அத்தேனை யுண்ணவறியாது.

பெரியோர்கள் உயர்நிலையிலிருந்து தவறினால் மிகுந்த வருத்தமடைவார்கள். சிறியோர்கள் உயர்நிலையிலிருந்து தவறினால் வருத்தமடையமாட்டார்கள்—யானை முதலிய பெரிய பிராணிகள் கீழேவிழுந்தால் பிழைப்பதரிது. எறும்பு முதலிய சிறிய பிராணிகள் விழுந்தால் சற்றும் துன்பமடையா.

எவரும் பெரியோர்க்கு வணங்கிநடந்தால் சுகம் பெறுவார்கள். எதிரிட்டு நின்றால் கேடு சம்பவிக்கும்—பிரவாகத்திற்கு முன் வணங்கின கோரைப்புல் மற்றும் தலையெடுத்துப் பிழைக்கின்றது. வணங்காமல் எதிர்த்து நிற்கும் விருக்ஷங்கள் முறிபட்டுப் போகின்றன.

ஒருவன் யாருடனும் இதமாகப் பேசினால் மரியாதை கிடைக்கும். கடினமாகப் பேசினால் அவமானங்கிடைக்கும்—கிளிப்பிள்ளை சந்தோஷமுண்டாகப் பேசுவதனால் யாவரும் அதோடு கொஞ்சுகிறார்கள். காக்கை கோபமுண்டாகக் கூவுவதனால் அதைக் கோலாலடிக்கிறார்கள்.

மேலோர்க்கு உபகாரம் செய்தால் அவர் பிரதியுபகாரம் செய்வர். கீழோர்க்கு உபகாரம் செய்தால் அவர் அபகாரமே செய்வார்—பசுவுக்கு இரைகொடுத்தால் மதுரமான பாலைத்தரும். பாம்புக்கு இரைகொடுத்தால் கொடிய விஷத்தையே தரும்.

உத்தமர்க்குச் செய்த உபகாரம் நன்றாய்ப் பிரயோஜனப்படும். மத்திமர்க்குச் செய்த உபகாரம் பிரகாசிப்

பது போல் தெரியும், அதமர்க்குச் செய்த உபகாரம் அப்பொழுதே மறைந்துபோம்—குப்பியிலே விழுந்த மழைத்துளி முத்தாகும். தாமரையில் விழுந்த மழைத்துளி முத்தைப்போல் பிரகாசிக்கும் மண்ணிலே விழுந்த மழைத்துளி அப்பொழுதே மறைந்துபோகும்.

உத்தமர்கள் ஆரம்பத்தில் ஒருநாள் உபகாரம் செய்தவருக்கும், மத்திமர் சிலநாள் விட்டுவிட்டுப் பலதரம் செய்தவருக்கும், கடையானவர் தினந்தோறும் விடாமல் உபகாரம் செய்தவருக்கும் பிரயோஜனத்தைத் தருவார்கள்—பனைமரம் விதைபோட்டு தொடக்கத்தில் ஒருநாள் ஜலம் விடுகிறவனுக்கும், தென்னைமரம் சில நாளைக்கொருதரமாகப் பலநாட்கள் ஜலம் விடுகிறவனுக்கும், பாக்குமரம் அநுதினமும் தவறாமல் ஜலம் விடுகிறவனுக்கும் பலனைக்கொடுக்கும்—ஆனந்தபோதினி.

# Review of the Press.

# பத்திரிகை ஆராய்ச்சி.

## THE USE OF CINEMATOGRAPH IN EDUCATION.

## படிப்பு கற்பிப்பதில் ஸினெமடோகிராப்பின் உபயோகம்.

இக்காலத்தில் ஸினெமடோகிராப் என்னும் கருவியின் மூலமாய்ப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் சிறுவர்களுக்கு அநேக விஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. அமெரிக்கர்கள் இப்போது இம்முறையை அதிகமாக அநுஸரித்து வருகிறார்கள். ரஷ்யாதேசத்தில் முன்னே பிள்ளைகளுக்கு ஸினெமடோகிராப் மூலமாய்க் கல்வி போதிப்பது கெடுதியுண்டுபண்ணுமென்று கருதிவந்த உபாத்தியாயர்கள், இப்போது அவ்வபிப்பிராயத்தை மாற்றி இம்முறையை அநுஸரிக்கத் தலைப்பட்டனர் பல கவர்ன்மெண்டு பாடசாலைகளிலும் இக்கருவியைக் கொண்டு பூர்வீக நாடகங்கள் சம்பந்தமாகவும், கல்வியறிவை வளர்க்கும் சாஸ்திர சம்பந்தமாகவும் விஷயங்களைப் பிள்ளைகளுக்கு போதித்து வருகிறார்கள். ஜப்பான் தேசத்தவர்களும் பிள்ளைகளுக்கு நீதிநூல்களைப் போதிக்க இக்கருவியை உபயோகிக்கிறார்கள். சில விஷயங்களைப் புஸ்தகங்களில் படித்தாலும், ஒருவர் சொல்லக்கேட்டாலும் பிள்ளைகளுக்கு அவைகள் சரியாக விளங்காமல் போய்விடும். உயிருள்ள வஸ்துக்களைப்போல் அசைந்தாடும் ஸினெமடோகிராப் படங்களைப் பார்ப்பதனால், அப்படிப்பட்ட விஷயங்களைப் பிள்ளைகள் வெகு ஸுலபமாகத் தெரிந்துகொள்ளுகிறார்கள். இவ்விஷயமாய் "ஜனமித்ரனி" பத்திரிகை எழுதியிருப்பதாவது :—

### கல்விசம்பந்தமான உபயோகம்.

பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கும்போது படங்களை வைத்துக்கொண்டு சொல்லிக்கொடுக்கவேண்டுமென்று எல்லோரும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால் ஸினெமடோகிராப்பை உபயோகிப்பதில் அநேக கெடுதிகள் உண்டாகுமென்றும், வெறுவிதமான படங்களை உபயோகிப்பதே நல்லதென்றும் சிலர் சொல்லுகிறார்கள். மற்றவகைப் படங்களைவிட இந்தக் கருவியில் வைத்துக் காண்பிக்கும் அசையும் படங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதில் மிகவும் உதவியாயிருக்கின்றன. புஸ்தகங்களிலோ சுவரிலோ இருக்கும் படங்களைப் பார்ப்பதைக்காட்டிலும், அசையும் படங்களைப் பார்ப்பதுதான் பிள்ளைகளுக்கு அதிக சந்தோஷத்தை உண்டுபண்ணும். அசையும் படங்களை அவர்கள் வெகு கவனமாகப் பார்ப்பார்கள். அவைகளை எத்தனை முறை பார்த்தாலும் அவர்களுக்குத் திருப்தி உண்டாகாது. அதிக வியாபாரம் நடக்குமிடத்தில் ஜனங்கள் போவதையும் வருவதையும், ஸாமான்கள் வாங்குவதையும் விற்பதையும் உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு வாய்மொழியாகச் சொன்னால், அது நன்றாக விளங்காது. அதையே அசையும் படங்களின் மூலமாகக் காண்பித்தால், அவர்கள் தாங்களே நேரில் அவ்விடத்திற்குப்போய் அவைகளைப் பார்ப்பதாக எண்ணிக்கொள்வார்கள். வேகமாகப் போகிற ஆகாயவிமானத்தைப் பற்றியோ, அதிக உயரத்திலிருந்து விழும் நீர்வீழ்ச்சியைப் பற்றியோ உபாத்தியாயர் பிள்ளைகளுக்கு எவ்வளவு கஷ்டப்பட்டுச் சொல்லிய போதிலும், அவை இப்படித்தான் இருக்கும் என்று பிள்ளைகள் அறிந்துகொள்ளமாட்டார்கள். அசையும் படங்களைப் பார்த்தால் நேரில் பார்ப்பதுபோல் தெளிவாகத் தெரியும்.

### சில ஆக்ஷேபணைகள்.

ஸினெமடோகிராப்பில் வைத்துக்காட்டும் படங்கள் அதிகவேகமாக அசைந்தோடுகிறபடியால், பிள்ளைகள் அவைகளை முழு கவனத்தோடு பார்க்கவேண்டியிருக்கிறது. அப்படிப் பார்ப்பது அவர்களுக்குக் கெடுதி உண்டாகுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஸாதாரணமான படத்தை ஒருமணி நேரம் வகுப்பில் மாட்டி



வைத்தாவது கறுப்புப் பலகையில் உபாத்தியாயர் சீமைச் சுண்ணாம்பினால் படமெழுதியாவது பிள்ளைகளுக்குக் காண்பித்தால், சிறுவர்கள் அவைகளைப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் விஷயம் வெகுகாலம் மறவாமல் இருக்குமென்று அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லுவது சில அம்சங்களில் சரியாக இருக்கிறது. ஆனால் கறுப்புப் பலகையிலோ காகிதத்திலோ எழுதிக் காண்பிக்க முடியாத விஷயங்களும் சில இருக்கின்றன. அவைகளைப் பிள்ளைகள் எப்படி அறிந்துகொள்ளுவது? சிறிய பட்டுப்பூச்சி புழுவடிவத்தோடு முட்டையைவிட்டு வெளியே வருவதையாவது, பின்னிருந்த கூட்டிலிருந்து பெரிய பட்டுப்பூச்சி வெளிக்கிளம்பி ஓடுவதையாவது படங்களின் மூலமாகப் பிள்ளைகள் அறிந்துகொள்ள வேண்டுமானால், அசையும் படங்களின் மூலமாகவே அவர்களுக்குக் காண்பிக்கவேண்டும். மேலும், எரிமலை கற்குழம்புகளையும் நெருப்பையும் கக்குவது, பூகம்பம், பூமியிலிருந்து உஷ்ணஜலம் வேகத்துடன் வெளிக்கிளம்பி வெகு உயரம் ஸ்தம்பம்போல் போவது முதலியவைகளை அசையும் படங்கள் தான் நன்றாய் விளக்கிக் காட்டும். நிலையான படங்கள் தெளிவாய் காட்டமாட்டா.

சிலர் இதை உபயோகிப்பது விஷயமாய்ச் சொல்லும் இன்னொரு ஆக்ஷேபம் என்னவென்றால் : பிள்ளைகளுக்கு இதனால் முயற்சி குறைவுபடுகிறதென்பதே. பிள்ளைகள் படத்தைப் பார்த்தால் போதுமென்று எண்ணி தங்களுடைய உற்றுப்பார்க்கும் சக்தி முதலியவைகளை அபிவிருத்தி செய்வதில்லை. ஆனால் மனோசக்திகளின் அபிவிருத்தியே முக்கிய நோக்கமாகக் கொண்ட பாடங்களுக்குத்தான் இந்த ஆக்ஷேபம் ஏற்குமேயொழிய, மற்றவைகளுக்கெல்லாம் இது ஏற்காது. படங்கள் உபயோகிக்கவேண்டிய பாடங்களிலெல்லாம் அசையும் படங்களை உபயோகிக்கலாம். மனதினால் மாத்திரம் பாவனை செய்து அறிந்துகொள்ளக்கூடாத விஷயங்களை அசையும் படங்களைப் பார்த்து ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். அந்தப் படங்களை அதிக கவனத்தோடு பார்த்தால் விஷயங்கள் நன்றாக மனதில் பதிந்துவிடுகின்றன. போதிப்பதற்கு வேறு கருவிகள் இல்லாதபோதுதான் ஸினெமடோகிராப்பை உபயோகப்படுத்தவேண்டும். தோட்டங்களில் பயிராகும் செடிகளைப்பற்றிச் சொல்லும்போது, அவைகளையே நேராகக் கொண்டுவந்து காட்டவேண்டும். அவைகளை அசையும் படங்களின் மூலமாகக் காண்பிக்கவேண்டிய அவசியமில்லை. எல்லா விஷயங்களையும் அறிந்துகொண்டபிறகு அந்தச் செடிகளை எழுதியுள்ள அசையும் படங்களைப் பிள்ளைகளுக்குக் காண்பித்தால், அவர்கள் தாங்கள் நேரில் கவனித்த விஷயங்களை மறக்காமல் ஞாபகப்படுத்திக் கொள்ளுவார்கள். தோட்டத்தில் இல்லாத செடிகளை அசையும் படங்களின் மூலமாகக்காண்பிப்பது நல்லது.

ஸினெமடோகிராப்பை அஜாக்கிரதையாகவும் அதிகமாகவும் உபயோகப்படுத்தினால் சிறுவர்களுக்குக் கெடுதி உண்டாகுமென்பது உண்மைதான். அதை ஜாக்கிரதையாக உபயோகப்படுத்துவதனால் ஒரு கெடுதியும் உண்டாகாது. நல்லதை விட்டுக் கெடுதலை மாத்திரம் கண்டு பிடிக்கப்போனால், ஒவ்வொன்றிலும் கெடுதல் கண்டுபிடிக்கலாம். ஆகவே, அசையும் படங்களில் நல்லவைகளைத் தெரிந்து எடுத்து அவைகளைத் தகுந்த காலங்களில் பிள்ளைகளுக்குக் காண்பிக்கவேண்டும். அப்படிச் செய்வதில் யாதொரு கெடுதியும் இல்லை.

### சில பாதுகாப்புகள்.

ஸினெமடோகிராப்பை போதிக்கும் முறையில் உபயோகிப்பதற்குமுன் பாடசாலை அதிகாரிகளைக் கலந்து யோசித்து, பிள்ளைகளுக்கு உபயோகமாகும் படங்களைத் தயார் செய்யவேண்டும். அந்தப் படங்களைக் காண்பிப்பதற்காக ஒரு உபாத்தியாயரைப் பிரத்தியேகமாக நியமிக்கவேண்டும். படங்களைக் காண்பிப்பதற்கு முன், இன்ன விஷயத்தைப்பற்றிக் காண்பிக்கப் போகிறோம் என்று பிள்ளைகளுக்குத் தெளிவாகச் சொல்லவேண்டும். படங்களை வைத்துக் காண்பிக்கும் உபாத்தியாயர் முக்கியமான இடங்களில் பிள்ளைகளை அதிகமாகக் கவனிக்கச் செய்யவேண்டும். படங்களை அதிக வேகமாக ஓடவிடக்கூடாது. ஒருதடவையில் இத்தனைபடங்கள்தான் காட்டவேண்டுமென்று ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். $1\frac{1}{4}$ மணி நேரத்திற்கு மேல் படங்களை காண்பிக்கக்கூடாது. இயற்கைப் பொருட்பாட சம்பந்தமான படங்களைப் பார்க்கும்போது பிள்ளைகளுக்கு ஒருவரும் ஒன்றுஞ் சொல்லக்கூடாது

## EARLY RISING.

## வைகறைத் துயிலெழுதல்.

சரீர சுகத்துக்கு நித்திரை இன்றியமையாதது. ஆயினும், இரவில் சீக்கிரம் படுத்துறங்கிக் காலையிற் சீக்கிரம் எழும் வழக்கத்தால் ஒருவனுக்குத் தேகாரோக்கியமும் திரவிய லாபமும், தெள்ளறிவும் உண்டாகுமென்பதை நாம் மறக்கக்கூடாது. இவ்வாறு பொழுது புலருமுன் எழுதலால் உண்டாகும் நன்மைகளையும், எழாது படுத்துறங்குவதால் நேரிடும் தீமைகளையும் "சக்கிரவர்த்தினி" பின்வருமாறு குறிக்கின்றது.

முதலாவது:—அதிகாலையில் விழிப்பதால், புத்திக்குத் தெளிவையுணர்த்துகின்ற "சுத்த நரம்பு" என்ற ஒருவித நரம்பினது த்வாரத்தில் நிறைந்திருக்கின்ற நீரானது கலங்கலின்றி பரிசுத்தமாயிருக்கும். பைத்தியம், கோபம் இவை நீங்கும். வாதமும், பித்தமும், சிலேஷ்மமும் தத்தம் இடங்களிலேயே பொருந்தும்.

இரண்டாவது:—காலைப்பொழுதிற்றான் இராத்தூக்கத்தின் பயனாக புத்தி கலங்கமற்றும் சரீரம் களைப்பற்றும் இருக்கும். அதுவே, படியாத விஷயங்களைப் படிப்பதற்கும், படித்த விஷயங்களைச் சிந்திப்பதற்கும் ஏற்ற தருணம். இதுபற்றியே வேதாத்தியயனம் பண்ணுவோர், பாடகர்கள், தேகப்பயிற்சி செய்வோர் முதலிய சகல வித்தியார்த்திகளும் சிரமப்பட்டு அதிகாலையில் எழுந்து தத்தம் வித்தையை முற்காலத்தில் கற்றார்கள்; இன்னும் கற்று வருகிறார்கள்.

மூன்றாவது:—மலஜலங்கள் கழிப்பதற்குத் தக்க தருணம் காலைவேளையே; அப்பொழுது நித்திரை செய்தால், அவை வெளியாகாமல் வயிற்றில் தங்கிவிடும்; இவ்வாறு தங்குவதால், பல வியாதிகள் உண்டாகும். அவற்றைக் காலாகாலத்தில் கழித்துவிட்டாலோ எவ்விதத் துன்பமும் வராது.

நான்காவது:—இருட்டு வேளையில் நாம் தூங்கியெழுந்தவுடன் சற்று பொருத்து மினுக்கு மினுக்கெனச் சிற்றொளிகாட்டும் விளக்கைப்பார்க்கின் நம் கண் கூசமாட்டாது. பிறகு விளக்கொளியை வரவரப் பெரியதாக்கினும், அது நம் கண்ணுக்கு எவ்வித அதிர்ச்சியும் உண்டாக்காது. இவ்வாறன்றி, விழித்தும் விழியாததும் திடீரென்று கொழுந்து விட்டெரியும் தீவர்த்தி ஒளியைப்பார்த்தால், கண்ணுக்கு எவ்வளவு கூச்சமும் அதிர்ச்சியும் உண்டாகின்றது. இந்த அற்ப வெளிச்சம் இவ்வளவு கேட்டைத்தருமாயின், எட்டு மணி வரைத் தூங்கிப் பிறகு சூரியனைக் கண்டால், அது கண்ணுக்கு எவ்வளவு கேட்டைத்தரும். ஆதலால், சூரியன் உதயமாகுமுன்னே எழுந்து சிறு வெளிச்சமுள்ள இளவெயிலை முதலிற் கண்ணுற்றால், கண் சிறிதும் கெடாது.

ஐந்தாவது:—கோழி, காக்கை, வானம்பாடி முதலிய பக்ஷிகள் அதிகாலையில் எழுந்து உல்லாசமாய் இனிய குரலுடன் பாடும்போது அறிவுடையோராகிய மனிதர் அக்காலத்தை தெய்வ ஸ்துதியிலும், இன்னும், பற்பல காரியங்களில் சித்திபெறுவதிலும் செலவு செய்யாமல், தமது சரீர சுத்த நரம்புக்கும் படிப்புக்கும் பயிற்சிக்கும் கேடுண்டாகத் தூங்குவது எவ்வளவு அசுத்தமான காரியம்.

ஆறாவது:—வைகறை தேவர்களுக்குரிய காலமாதலால், இதில் நித்திரை செய்யின் தேவசாபமுண்டாகும். அச்சாபத்திற்குள்ளாகாதபடி தக்க நேரத்திலேயே எழுந்திருத்தல் வேண்டும்.

ஏழாவது:—ஒவ்வொருவரும் மலஜலம் கழித்துப் பல் தேய்த்து முகம் கழுவி ஸ்நானம் செய்து பூஜை முதலியன முடித்து காலை உணவருந்துவதற்கே நேரமாகுமாதலால், இவர்கள் 7 மணி வரையில் தூங்கிப் பிறகு இவற்றை முடித்து எப்பொழுது தத்தம் தொழில்களுக்குப்போவது? தேகசௌக்கியத்தைப் பற்றிய மட்டிலாவது அதிகாலையில் எழுந்திருத்தல் வேண்டும். இதுபற்றியே ஒளவையார் "வைகறைத் துயிலெழு" எனக் கட்டளையிட்டுள்ளார்.

# Notes.

## குறிப்புக்கள்.

### Beggers in India.

இந்தியாவில் பிச்சைக்காரர்கள்:—இந்தியாவில் ஒருவித வேலையுமில்லாமல் ஏராளமான ஜனங்கள் பிச்சையெடுப்பதும், நாடுதிரிவதும், சோரம்போவதுமே தொழிலாகக் கொண்டிருக்கிறார்களென்றும், இவர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகப்பட்டு வருகின்றதென்றும், இதைத் தடுக்கக் கவர்ன்மெண்டார் சட்டங்கள் செய்யவேண்டுமென்றும் "வர்த்தகமித்திரன்" நீண்டதோர் வியாசம் எழுதியிருக்கிறது. இப்பத்திரிகை கூறும் விஷயங்களை ஒவ்வொருவரும் ஆழ்ந்து ஆலோசித்துத் தக்க சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகும். தர்மம் செய்யவேண்டுபவர்கள் கைக்கொள்ளவேண்டிய சில கொள்கைகளை மேற்படி பத்திரிகை எழுதுவதாவது:

"தர்மம் செய்ய எண்ணுபவர்கள், உதவியை உண்மையில் வேண்டுபவர்களுக்கு மாத்திரம் உதவி செய்வது என்னும் கொள்கையை வைத்துக்கொள்வதுடன், சரீர பலமுள்ளவர்களுக்கு அவர்களிடமிருந்து ஏதாவது ஒரு வேலையை வாங்கிக்கொண்டுதான் உதவிசெய்வது என்ற ஏற்பாட்டையும் வைத்துக்கொள்ளவேண்டும்."



ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள முக்கிய பிரமுகர்கள் ஒன்றுகூடி இலவசச் சாப்பாட்டுடன் ஒரு தொழிற்பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்து அதில் பிச்சைக்குவரும் சிறுவர்களையெல்லாம் வேலை கற்றுவரும்படி ஏற்பாடு செய்தால், பிச்சைக்காரர்களின் தொகை ஒருவாறு குறையுமென்பதில் ஐயமில்லை.

### Sugar crops of the world.

உலகமுழுவதும் கருப்பு உற்பத்தி:—சென்ற 1916-17-ம் வருஷத்தில் உலக முழுவதிலும் குச்சிக்கரும்பும் பீட்ரூட் கரும்புமாக எவ்வளவு சாகுபடி செய்யப்பட்டதென கீழ்க்கண்ட கணக்கால் தெரியலாம்.

குச்சிக்கருப்பு.

| | | |
|---|---|---|
| அமெரிக்கா | 5,494,250 | டன்கள். |
| ஆசியா | 4,596,174 | ,, |
| ஆஸ்டிரேலியா, பாலினேஷியா | 275,000 | ,, |
| ஆப்பிரிக்கா | 545,000 | ,, |
| ஐரோப்பா | 6,000 | ,, |
| மொத்தம் ... | 10,916,424 | ,, |

பீட்ரூட்.

| | | |
|---|---|---|
| ஐரோப்பா | 4,819,000 | டன்கள். |
| அமெரிக்கா ஐக்கியநாடுகள் | 775,000 | ,, |
| கானடா | 14,000 | ,, |
| மொத்தம் ... | 5,608,000 | ,, |

### Uses of Sugar.

சர்க்கரையின் உபயோகங்கள்:—சர்க்கரை ஆகாரமாக உபயோகப்படுவதல்லாமல், கைத்தொழில்களிலும் பற்பல விதங்களில் உபயோகப்பட்டுவருகிறது. அதை கந்தகத் திராவகத்தோடு சேர்த்துச் சுடவைத்தால், திராவகத்தின் குணம் மாறுபட்டுப்போய் மிருதுவான கறுப்புப் பசை உண்டாகின்றது. இதுதான் சாதாரணமாய் ஜோடுகளுக்கு உபயோகப்படும் கறுப்புப் பாலிஷாகும். இந்தப் பாலிஷானது மற்றெல்லாவித பாலிஷுகளைவிட உயர்ந்ததாயிருப்பதோடு, தோல் கெட்டுப்போகாதபடியும் வைக்கிறது. தோல்சாலைகளில் தோலைச் சுத்தஞ்செய்ய உபயோகித்த சுண்ணாம்பைப் போக்குவதற்கு சர்க்கரை ரொம்பவும் உபயோகப்படுகின்றது.

காப்பியிங் இங்கி என்று சொல்லப்படும், எழுதிய கடிதங்கள் முதலியவைகளுக்கு நக்கல்கள் எடுக்க உதவும் இங்கி செய்வதிலும், அச்சடிக்க உதவும் உருளைகள் செய்வதிலும் சர்க்கரை ரொம்பவும் உபயோகப்படுகிறது. டிரான்ஸ்பேரண்ட் ஸோப் என்று சொல்லப்படும் கண்ணாடிபோல் வெளிச்சம் ஊடுருவிச் செல்லக்கூடிய ஸோப்புகள் செய்ய உதவும் கிளஸரின் என்னும் பொருளும், ஆல்கஹால் சாராயமும் ரொம்ப விலையுள்ளனவாக யிருப்பதால், சர்க்கரையை அந்த மாதிரி ஸோப்புகள் செய்வதில் அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். ஸோப்பில் வெளிச்சம் ஊடுருவிச் செல்ல முடியாதபடி தடுத்துக்கொண்டிருக்கும் பொருள்கள் சர்க்கரை சேர்ப்பதால் நீங்கிவிடுகின்றனவாம்.

சர்க்கரை வெடிமருந்துகள் செய்வதிலும் உபயோகப்படுகின்றது. நைட்ரிக் ஆஸிட் என்னும் திராவகத்தில் சர்க்கரையைச் சேர்த்து, அதனால் ஏற்படும் கலப்புப் பொருள்களை வெடிமருந்துகளில் உபயோகிக்கிறார்கள்.

சர்க்கரைக்கு ஆகார குணங்கள் இருப்பதோடு, அதற்குக் குடலில் காஸ்டிரிச்ஜூஸ் என்றும், பாசகநீர் என்றும் சொல்லப்படும் ஆகாரத்தை ஜீர்ணம் செய்ய உதவும் ஒருவித ரஸத்தை அதிகரிக்கச் செய்யும். சாப்பாட்டுக்குப் பிறகு தித்திப்பான பானங்கள் குடிக்கும் வழக்கம் இதை உத்தேசித்துதான் ஏற்பட்டதென்று தோன்றுகிறது. ஆனால், சர்க்கரையை அதிகமாக உபயோகித்தால் குடலின் பாகங்களுக்கு எரிச்சலுண்டாகி மிகவும் காரமான ஜீர்ணரஸம் ஊறி தேகத்துக்குக் கெடுதியுண்டாக்கும்—ஜனோபிமானி.

### Village Panchayaths.

கிராம பஞ்சாயத்துக்கள்:—சென்ற 1917-ம் வருஷம் செப்டம்பர் மாதம் கடைசி வரையில் சென்னை இராஜதானியில் அநுஷ்டானத்திலிருந்த கிராம பஞ்சாயத்துக்களின் விவரம் வருமாறு.

| | |
|---|---|
| அனந்தபூர் | 58 |
| வட ஆற்காடு | 67 |
| தென் ஆற்காடு | 43 |
| பல்லாரி | 50 |
| செங்கற்பட்டு | 16 |
| சித்தூர் | 12 |
| கோயமுத்தூர் | 39 |
| கடப்பை | 1 |
| கஞ்சம் | 13 |
| கோதாவரி | 9 |
| குண்டூர் | 22 |
| கானை (தென்) | 1 |
| கிருஷ்ணா | 13 |
| கர்நூல் | 11 |
| மதுரை | 3 |
| மலபார் | 8 |
| நெல்லூர் | 13 |

| | |
|---|---|
| இராமநாதபுரம் | 8 |
| தஞ்சாவூர் | 25 |
| திருநெல்வேலி | 60 |
| திருச்சிராப்பள்ளி | 71 |
| விசாகபட்டணம் | 47 |
| மொத்தம் ... | 590 |

## Oil production in Barma.

பர்மாவில் எண்ணெயின் உற்பத்தி:—கீழ்க்கண்ட கணக்கில் பர்மாவில் பிரதிவருஷமும் எவ்வளவு எண்ணெய் உற்பத்தியாகின்றதென்பது தெரியவரும்.

| வருஷம். | காலன்கள். | ரூபா. |
|---|---|---|
| 1905 | 142,063,846 | 8,891,007 |
| 1914 | 254,652,963 | 14,146,293 |
| 1916 | 291,769,083 | 16,513,514 |

161441

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

### Chandrasekari.

சந்திரசேகரி:—சந்திரசேகரி என்னும் ஓர் இனிய தமிழ்நாவல் ஒன்றை சென்னை மிஸ்டர் இராஜு செட்டியார் அவர்களிடமிருந்து வரப்பெற்றோம். இந்நாவலானது மேற்படி செட்டியார் அவர்களாலேயே இயற்றப்பட்டது. பல நாவல்களை இயற்றியுள்ள இவர் இதை ரொம்ப இனிமையாயும், படிக்கப்படிக்க ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் உண்டாக்கும்படியாயும் எழுதியிருப்பது மிகவும் மெச்சத்தக்கது. ஆங்காங்குவிஷயங்களைச் சமயத்துக்கேற்றபடி சுருக்கியும், விரித்தும் சொல்லக்கூடிய சக்தியையும், வாசகர்களுக்கு இந்நூலைப் படிப்பதில் கொஞ்சமும் தெவிட்டாதபடி ஊக்கத்தை ஊட்டிவரும் சக்தியையும் இவர் பெற்றிருக்கிறார் என்பது உண்மையே. கதை எழுதப்பட்டுள்ள நடையைப் பற்றியும், ஒழுங்கைப்பற்றியும் நாம் ஒன்றும் குறைகூற வேண்டுவதில்லை. ஆனால், கதையில் அநாவசியமாய் எடுத்தாளப்பட்ட சில விஷயங்களைப்பற்றி மாத்திரம் இங்குக்கூற நாம்முன்வருகிறோம்.

பொதுவாகக் கதைகள் எழுதுவதன் உத்தேசம், பொதுஜனங்களுக்குள் அறிவைப் பரவச்செய்வதும், அவர்களுக்கு இக்கதைகளின் மூலமாகவே பல நல்லொழுக்கங்களைப் போதிக்கவுமேயாம். இக்கருத்தைக் கொண்டே நம் முன்னோர்கள் சன்மார்க்கத்தைப் போதிக்கவல்ல பற்பல நூல்களை இயற்றியுள்ளார்கள். தீயவொழுக்கங்களிற் புகுந்திருப்பவர்களுக்கு இப்படிப்பட்ட சன்மார்க்க நூல்கள் முதலியவற்றால், தீயொழுக்கங்களினால் அவர்களுக்கு நேரும் கெடுதல்களைப்பற்றியும், நல்லொழுக்கத்தால் வரும் எண்ணிறந்த நன்மைகளைப்பற்றியும் அவர்கள் மனதில் பதியும்படிசெய்து அவர்கள் சீர்திருத்தமுற எதுவாகும். இதுவன்றே கதைகள் எழுதுவதன் முக்கியக்கருத்து. இப்படிப்பட்ட கதைகளை நம் சிறுவர் சிறுமிகள் படிக்க ஏற்றவை.

இவற்றையெல்லாம் விடுத்து பிரஸ்தாப ஆசிரியர் தமது நாவலில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாரைப் பற்றி அவர்களுக்கு ஒழுக்கக்குறைவு முன்வந்தது எவ்வளவு அநியாயமானது. இப்படிப்பட்ட விஷயங்கள் நாவலில் எவ்வாறு பொருந்தும்? ஆசிரியர்களின் எண்ணங்களும் நடவடிக்கைகளும் அவர்களால் ஆக்கப்படும் நூல்களில் பிரதிபலிக்கின்றபடியால், நூல்களைக் கொண்டே ஆசிரியர்களின் குணங்களை மதித்துக் கொள்ளலாம். இன்னும், பிரஸ்தாப நாவலை நம் சிறுவர் சிறுமியர் படிப்பதனால் அவர்களுக்கு என்ன நன்மை உண்டாகுமென்பதை திட்டமாகச் சொல்லமுடியாது. பிரஸ்தாப ஆசிரியர் இப்போது கையாண்டுவரும் கொள்கையை மாற்றிப் பொதுஜனங்களுக்கு வாஸ்தவமாகவே நன்மை பயக்கக்கூடிய காரியங்களைச் செய்வாரானால், அப்போதுதான் அவர் தம் கடமையைச் செய்தவராவர்.

### Katahi Poongothu.

கதைப்பூங்கொத்து:—மிஸ்டர் வி. கு. நடராஜன் என்பவரால் இயற்றப்பட்ட "கதைப் பூங்கொத்து" என்னும் சிறிய நூலொன்று வரப்பெற்றோம். இது சிறுவர்களுக்கென்றே எழுதப்பட்டதாகும். இதில் சிறுவர்கள் வெகு எளிதில் படித்தறிந்துகொள்ளக்கூடிய சிறு கதைகள் எளிய தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இது உபாத்தியாயர்களுக்கும் உபயோகப்படும்படி ஆங்காங்குப் பொருத்தமான செய்யுள்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன; இதன் விலை அணா 2½. வேண்டியவோர்: வி. கு. நடராஜன், "ஆரியோதய முத்திராலயம்," மதுரை என்று எழுதிப் பெறலாம்.

### Ihaparasukam.

இகபரசுகம்:—இது முப்பது மகாத்மாக்கள் எழுதியுள்ள நூல்களினின்றும், உபநிஷத்துக்களினின்றும் சேர்த்தெடுக்கப்பட்ட 100 சுலோகங்கள் அடங்கிய ஒர் சிறிய நூல். இதிலடங்கிய ஒவ்வொரு சுலோகமும் அரிய கருத்தைக்கொண்டது. இது ஒவ்வொருவரும் படித்தறியவேண்டிய சிறு நூலாகும். இதன் விலை அணா 2. வேண்டியவோர்: வி. என். சாமராவ் அண்ட் கம்பெனி, வேலூர் என்று எழுதிப் பெறலாம்.

முடி

ஞானபோதினி [illegible]